பன்முகப் பார்வையில்

முனைவர் மு.வரதராசனாரின்

வாழ்வும் படைப்பும்

மு.வ.நூற்றாண்டு விழா தேசியக் கருத்தரங்க ஆய்வுக்கோவை



திருவண்ணாமலைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்நெறியகம்,
631/4, இடுக்குப்பிள்ளையார் நகர், இரண்டாவது தெரு, காஞ்சி சாலை, வேங்கிக்கால்,
திருவண்ணாமலை-606 604. பேசி : 94424 14069.

பன்முகப் பார்வையில்

மு.வரதராசனாரின் வாழ்வும் படைப்பும்

[மு.வ.நூற்றாண்டு விழா தேசிய கருத்தரங்க ஆய்வுக்கோவை]

பதிப்பாசிரியர்
அருள்வேந்தன் பாவைச்செல்வி
தே. இதயாள்பாவைச்செல்வி
சீனி. கார்த்திகேயன்
பாபு. கு. இராதாகிருட்டினன்
முனைவர் சு. சதாசிவம்
முனைவர் க. மோகன்காந்தி
பேரா. இரா. சங்கர்
முனைவர் வெ. நெடுஞ்செழியன்

திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கம்
(சங்கப் பதிவெண், 110/2003)
கைபேசி : 9442414069

செம்மூதாய் பதிப்பகம்
நெ. 17, தாகூர் தெரு
எம்.எம்.டி.ஏ. நகர், சிட்லபாக்கம்
சென்னை - 600 064.
கைபேசி : 9444200369/9444327963

நூல் விபரம்

தலைப்பு	:	பன்முகப் பார்வையில் மு.வரதராசனாரின் வாழ்வும் படைப்பும்
பொருள்	:	ஆய்வுக் கட்டுரைகள்
பதிப்பு	:	முதற்பதிப்பு, மார்ச் 2012
ISBN	:	978 - 93 - 81006 - 20 - 7
பதிப்புரிமை	:	திருவண்ணாமலை தமிழ்ச் சங்கத்திற்கே கைபேசி : 9442414069
மொழி	:	தமிழ்
தாள் அளவு	:	Hitech Maplitho ; டெம்மி
பக்கங்கள்	:	I - XXXV + 1 - 711
விலை	:	உரூ. 400 /=
வெளியீடு	:	செம்மூதாய் பதிப்பகம் நெ. 17. தாகூர் தெரு எம்.எம்.டி.ஏ. நகர் சிட்லபாக்கம், சென்னை - 600 064. கைபேசி : 9444200369 / 9444327963
கணினி	:	ஜே.ஆர்.பி. தட்டச்சு மையம் பழைய பெருங்களத்தூர், சென்னை - 600 063.
அச்சாக்கம்	:	கிருஷ்ணா ஆப்செட் பிரிண்டர்ஸ் ஜெய்ஹிந்துபுரம், மதுரை - 625 011. செல் : 94435 72100.

Ready
for Every Good Work

SACRED HEART COLLEGE
(Autonomous)
Tirupattur - 635 601, Tamil Nadu, S.India.

அருட்திரு. முனைவர் அ. மரியசூசை ச.ச.,
முதல்வர், தமிழ்த்துறைத் தலைவர்
தூய நெஞ்சகக் கல்லூரி (தன்னியல்)
திருப்பத்தூர் - 635 601

அணிந்துரை

தமிழ்மொழி வளர்ச்சியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட தமிழறிஞர்கள் பலரில் மு.வரதராசனாரும் ஒருவர். மு.வ.வின் நூற்றாண்டு விழாவைத் தேசியக் கருத்தரங்கமாகத் திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கம் கொண்டாடுவது சிறப்புக்குரியது. தமிழ்ப்பணியில் தம்மைப் பதின்மூன்று ஆண்டுகளாகப் பிணைத்துக் கொண்டு தமிழ்ப்பணி ஆற்றிவரும் திருவண்ணாமலைத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனர் அருள்வேந்தன் பாவைச் செல்வி போற்றுதலுக்குரியவர். தமிழ்மொழி, தமிழர் பண்பாடு, தமிழர் கலைகளை வளர்ப்பதில் தொடர்ந்து திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கம் சிறப்புறச் செயலாற்றி வருவது வாழ்த்துதலுக்குரியது. மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், பேரறிஞர் அண்ணா, இளங்கோவடிகள், தொல்காப்பியர் ஆகியோருக்கு விழாவெடுத்துச் சிறப்பித்த திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கம் தற்போது மு.வ.வின் நூற்றாண்டு விழாவினைத் தேசியக் கருத்தரங்கமாகக் கொண்டாடி மகிழ்வது தமிழ்மொழி வளர்ச்சிக்கு அடிகோலும் என்பது திண்ணம்.

தமிழகத்தின் வடார்க்காடு மாவட்டம் வாலாசாவிற்கு அருகில் வேலம் என்னும் சிற்றூரில் பிறந்து, திருப்பத்தூரில் 13 ஆண்டு காலம் வாழ்ந்து திருப்பத்தூருக்குப் புகழ் சேர்த்தவர் மு.வ. அவர்கள். சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதன்முதலில் முனைவர் பட்ட ஆய்வேட்டை "சங்க இலக்கியத்தில் இயற்கை" என்னும் தலைப்பில் சமர்ப்பித்த சிறப்பிற்குரியவர். தம் வாழ்நாள் முழுவதும் தமிழுக்காகவும் தமிழருக்காகவும் அயராது உழைத்த தமிழ்ப்பெருந்தகை மு.வ. சங்க இலக்கிய ஆராய்ச்சிகள் முதற்கொண்டு நாவல், சிறுகதை, நாடகம், கடிதம் என அனைத்துத் தளங்களிலும் ஆழ காலூன்றியவர். திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் எழுத்தராகப் பணியாற்றிய மு.வ. தம் விடாமுயற்சியாலும். தமிழ்ப்பற்றாலும் தமிழ்ப் பேராசிரியராக சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் தமிழ்த்துறைத் தலைவராக சென்னைப் பல்கலைக்

கழகத்திலும், துணை வேந்தராக மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்திலும் பணியாற்றி உழைப்பிற்கு இலக்கணமாக விளங்கியவர். எளிமையான தோற்றம். அன்பான பேச்சு மாணவர்களின் முன்னேற்றத்தில் அக்கறைப் போன்றவை மு.வ. அவர்களின் தனித்தன்மைகளாகும்.

தம்முடைய எளிமையான மொழி நடையாலும், தம் படைப்புகளில் இடம்பெறும் கதாபாத்திரங்களுக்குத் தூய்மையானத் தமிழ்ப் பெயர்களைச் சூட்டியும், தம் படைப்புக்களின் வழி அறச் சிந்தனைகளைப் போதிக்கும் விதமாகவும் மு.வ. படைப்புக்கள் அமைவது அவரின் தமிழ்ப்பற்றை உணர்த்துகிறது.

பல்வேறு தனித்தன்மைகளையும் ஆளுமைகளையும் சிறப்புகளையும் கொண்ட மு.வ.வின் படைப்புகள் குறித்துப் பன்முகப் பார்வையில் ஏறத்தாழ 150 ஆய்வாளர்கள் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கி சிறப்பித்திருப்பது தமிழ் கூறும் நல்லுலகிற்கு சிறந்ததொரு நூலாக அமையும்.

அன்புடன்

(முனைவர் அ. மரியசூசை ச.ச.,)

முனைவர் வே. நெடுஞ்செழியன்
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அரசு கலைக்கல்லூரி,
திருவண்ணாமலை 606 603.

மதிப்புரை

முனைவர் மு. வரதராசனாரின் நூற்றாண்டுப் பயணம் - ஒரு பார்வை

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியதாய் இருபதுக்கும் மேலான நூற்றாண்டுகளாய் ஓடிக்கொண்டடே யிருக்கிறது தமிழாறு. கார்காலத்தில் பெருக்கெடுத்தும் கோடையிலே ஊற்றெடுத்தும் மனிதம் என்னும் உள்ளீரம் காயாது உயிர்ப்புடனே பயணிக்கிறது. எல்லைகள் சுட்டி அணையிட முடியாதவாறு, திசைவெளியெங்கும் தாவிப் பாய்கிறது தமிழாறு. தமிழின பண்பாட்டு அடையாளங்களை அழிக்கும் வகையில் சந்தைமயப்படுத்தல் எனும் நகரநாகரிகம், தன்மீது கவிழ்ந்தபோது, எதிர்த்துநின்று, யாதும் ஊரே யாவரும் கேளிர் எனப் புறத்திலும், செம்புலப்பெயல்நீர்க் காதலில், சுட்டிஒருவர் பெயர்கொளப் பெறார் என அகத்திலும் உலகந்தழுவிய உயர்ந்த கோட்பாட்டை ஏற்றுத், தன் ஊற்றுக்கண்ணைக் காத்து நின்றது தமிழ். அதுவே நதிமூலமாய், நகர்மயத்தை உள்வாங்கி, மனிதத்தைப் புதுமைசெய்து அறம்பொருள் இன்பம் எனும் முந்நீர்மைகளால் காலந்தோறும் துறைபுகும் புறச்சார்புகளையெல்லாம் புறந்தள்ளி உலகசமுதாயம் என்னும் முந்நீருள் சென்று கலந்தவாறு அதன் இயக்கம் தொடர்ந்துகொண்டேயிருக்கிறது.

தமிழாற்றின் பண்பாட்டுப் பயணத்தின் பெற்றியை அறியாதார், தமிழாறு வற்றிப்போகும் என நாள் வரையறுக்கின்றனர். மெல்லத் தமிழினிச் சாகும் என்று யார் சொன்னாலும், எந்த உலக நிறுவனம் சொன்னாலும், அது பாரதியின் கூற்றின்படி பேதைமொழியே. கால இயக்கத்தோடு கைகோத்து நடக்கும் ஒரு மொழியை யாராலும் வீழ்த்திவிட முடியாது. எனினும், இறுமாப்போடு, இத்தகைய பேதைமைகளைப் புறந்தள்ளிவிடவும் கூடாது. உலகப்போக்கிற்கேற்றவாறு அதன் கரைகளை வலுப்படுத்தி, போக்கினை நெறிப்படுத்தி, சூழலை நிலைப்படுத்துவதன் மூலம் அதன் தகைசால் இயல்பினைக் காத்திடல் சான்றோர் கடன்.

தமிழாறு கலக்கின்ற சமுதாயக் கடலின் கலங்கரை விளக்கமாய் ஒளிவீசும் திருவண்ணாமலை ஓர் இலக்கியத் துறைமுகம். பண்டைத்தமிழ் இலக்கியங்கள் தொடங்கி இன்றைய முற்போக்கு இலக்கியங்கள் வரையிலான அனைத்துவகையான இலக்கியங்கள் மீதான ஆய்வுகளும்

விழாக்களும் கூட்டங்களும் நிகழ்ந்துகொண்டேயிருக்கின்ற ஓர் களம். அவற்றுக்கிடையே தமிழ்மொழி இனம் பண்பாடு குறித்துச் சிந்திக்கின்ற, செயல்படுகின்ற தனித்தன்மையுடையது திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கம். தொல்காப்பியம்-சங்க இலக்கியம் தொடங்கி, தமிழின் துறைதோறும் ஆய்வுநிகழ்த்துதல், சமயங்களின் தமிழ்த்தொண்டு குறித்து மாநாடுகள் நடத்துதல், தமிழறிஞர்களின் வாழ்வும் செயலும் குறித்துச் சான்றோர் சொற்பொழிவுகளை நிகழ்த்துதல் என்றவாறு காலம், சமயம் முதலியன கடந்து தமிழின-இலக்கியத்திற்கான பணிகளை ஆற்றுவதில் முன்னிற்கும் திருவண்ணாமலைத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனரும் தலைவருமாகிய திருமிகு அருள்வேந்தன் பாவைச்செல்வி அவர்களின் தொடர்ந்த செயல்பாட்டின் தொடர்ச்சியாக, அவர்தம் சீரிய முயற்சியில், தமிழறிஞர் முனைவர் மு.வரதராசனார் அவர்களின் நூற்றாண்டுவிழா தேசியக் கருத்தரங்கம் நடைபெறுகிறது.

காலந்தோறும் கணியன் முதல் திருவள்ளுவர், இளங்கோ, கம்பன், பாரதி எனத் தமிழைக் காத்துத் தம் வாழ்வை வரலாற்றில் பதிவு செய்த சான்றோர்களின் வரிசையில் இருபதாம் நூற்றாண்டின் ஆளுமை மிக்க அடையாளமாகத் தன்னை இணைத்துக்கொண்டவர் முனைவர் மு.வரதராசனார் ஆவார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் பரண்மீது அமர்ந்திருந்த கவிதையை இருபதாம் நூற்றாண்டில் மக்கள் பயன்பாட்டிற்கு இறக்கி வைத்தவர் பாரதி என்றால், இருவேறு உலகமாக இருந்த தமிழுலகை ஒருநீர்மையதாக மாற்றுதற்காக முயன்று, கடுநடையாயிருந்த உரைநடையை நெகிழ்வித்து எளியமையாக்கிப் பொதுமக்களிடம் கொண்டுபோய்ச் சேர்த்தவர்களுள் குறிப்பிடத் தக்கவர் மு.வ. 1012 ஏப்பிரல் 25ஆம் நாள் தோன்றிய மு.வ. 1935இல் தன் ஆளுமையுடன் தமிழ்ப்பணி வாழ்க்கையைத் தொடங்கினார். 1970களின் முற்பாதி வரை அவர் தமது எழுத்துத் திறத்தால் தமிழ்கூறு நல்லுலகத்தை நெறிமிக்க வாழ்வியல் நோக்கி வழிநடத்தினார். ஏறக்குறைய எண்பதுகள் வரை திருமணம் முதலான நன்னிகழ்ச்சிகளில் பரிசுப் பொருளாக மு.வ. முதலான சான்றோர்களின் புத்தகங்ளை வாங்கி வழங்கும் வழக்கம் தமிழகத்தில் கோலோச்சியதும், அதில் மு.வ.வின் பங்கு முதன்மையானது என்பதும் மறக்கவோ மறுக்கவோ முடியாது.

மு.வ. தமிழ்ச் சமுதாயத்தின் மொழிச்செயல்பாட்டில் இருந்த பண்டித இறுக்கத்தை நெகிழ்வித்தவர். தமிழ்ப் பேராசிரியர் என்ற நிலையிலிருந்து புனைகதைகளையும் கட்டுரைகளையும் புதிய இலக்கியத் துறைகளையும் தம் எழுத்துக்களமாகக் கொண்டு மனித வாழ்க்கையை நெறிப்படுத்துப் புகுந்தமையால், செய்யுள் ஒன்றே தமிழடையாளம் என்றிருந்த பண்டிதவட்டத்தின் போலிஅடையாளம் நொறுங்கியது; உரைநடை வீறுகொண்டது. மு.வ.வின் புனைவு எழுத்துகளில், மனிதவாழ்வின் போக்கு என்பது மனித மனங்கள் தீர்மானிப்பது என்ற அடிப்படையில், அவற்றின் விளைவுகளை நோக்கி வினாக்களை வடிவமைக்கும் விதத்தில் களம் கட்டமைக்கப்பட்டது. அவற்றுக்குச்

சான்றாதாரங்களாக விளங்கும் மனித மன விகாரங்களும் முறையற்ற வாழ்க்கைப்போக்குகளும் பாடுபொருளாயின. அவற்றின் விளைவுகளால் விளையும் படிப்பினையே குறிக்கோள்களாயின. சமுதாய நடப்பியலைக் காட்சிப்படுத்தி, குறிக்கோள் மிக்க வாழ்க்கைக்கு அடித்தளமிட்டார். அவருடைய அறிவியல் மற்றும் ஆராய்ச்சித் துறைசார்ந்த நூல்கள் அவ்வத்துறை குறித்த தெளிவையும் அவற்றின் வழித் தமிழ் மொழி இன வரலாற்று, பண்பாட்டு அடையாளங்களையும் எடுத்துரைத்தன.

அறம் என்ற பார்வையில் பழமையையே முன்னிறுத்தாமல் தொழிற்புரட்சிக்குப் பின்னான அறிவியல் சார்ந்த புறவுலக மாற்றங்களும் வாழ்வியல் சமத்துவம் நோக்கிய சிறார் உரிமை, பெண்ணுரிமை, அவற்றுக்கு அடித்தளமாய் அமையும் கல்வியுரிமை, அதன் விளைவான ஆண்பெண் சமத்துவம், ஏற்றத்தாழ்வு நீங்கிய சமுதாய சமத்துவம், பொருளாதார ஏற்றம் ஆகியவற்றை முன்னிறுத்தியும், நிலவுடைமைச் சமுதாயம் உருவாக்கியிருந்த அடிப்படையற்ற மூட நம்பிக்கைகளின் தகர்ப்பை வழிமொழிந்தும், மனித உடல் நோயின்றி வாழவும் மனித மனம் அமைதியுடன் திகழவும், மானுட வாழ்க்கை சுயநலம் தொலைத்துப் பொதுமை பேணவும், தேவையான அறங்களை மட்டுமே தன் குறிக்கோள்களாக முன்னிறுத்தினார். அதே நேரம் அவற்றால் விளையும் உடல்நலச்சீர்கேடு மற்றும் மனஅமைதிக்குலைவு, சமுதாய நல்லியக்கச் சீர்குலைவு ஆகியவற்றை அவற்றின் விளைவுகளாச் சுட்டிக்காட்டுவது மு.வ.வின் இயல்பு. இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்வதுதான் வாழ்வு - எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்பது வாழ்வன்று என்பதைத் தமிழர் மனங்களிலும்; அக்கொள்கையை எடுத்துரைத்த நூல்களைத் தமிழர் இல்லங்களிலும் கொண்டுபோய்ச் சேர்த்தார். முனைவர் மு.வரதராசனாரின் எழுத்துலகப் படைப்புகளையும் வாழ்வியல் பதிவுகளையும் அவருடைய நூற்றாண்டில் ஆய்வுக்கு உட்படுத்தும் வகையில் திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கம் முனைவர் மு.வ நூற்றாண்டு தேசிய கருத்தரங்கம் நடத்துதற்கு அழைப்பு விடுத்ததன் பேரில், பல்வேறு பல்கலைக்கழகங்களிலிருந்தும், கல்லூரிகளிலிருந்தும், தமிழ் அமைப்புகளிலிருந்தும் ஏறத்தாழ நூற்றைம்பது ஆய்வுக்கட்டுரைகள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், முதுகலை மாணவர்கள், மற்றும் தமிழ்ச்சான்றோர் எனத் தமிழ்கூறு நல்லுலகின் பல்வேறு பிரிவினரிடமிருந்தும் ஏறத்தாழ நூற்றைம்பது கட்டுரைகள் பெறப்பட்டுள்ளன.

கல்வி என்பது இடையில் விடைபெறுவதன்று; முயன்றால், இறுதிவரை உடன்வருவ்து என்பதையும், கல்வியை மதிப்பவர் வாழ்வில் மட்டுமன்று, வரலாற்றிலும் இடம் பெறுவர் என்பதையும் தன் விடாமுயற்சியால் நிலைநிறுத்தியவர் மு.வ. வாழ்க்கையை நேர்மையாகவும் அமைதியாகவும் ஆளுமையுடன் வாழ்வதற்கு அறமதிப்பீட்டிலான ஒரு கொள்கைப்பிடிப்பு தேவை என்பதை எழுத்துக்களில் வடிவமைத்ததோடு நடைமுறையில் வாழ்ந்தும் காட்டியவர்

மு.வ. எனவே, எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் இடைவெளியில்லாத அவரது வாழ்க்கையும், அவற்றையே தம் வாழ்வின் முன்னேராகக்கொண்டு உருவான அவர்தம் மாணவத் தலைமுறையும், அவர் பெற்றுள்ள பரிசுகளும் பாராட்டுகளும், அவர் பணியாற்றிய துறைகளும், அவர் மேற்கொண்ட பதவிகளும், அவருடைய வாழ்வியலின் பன்முகக் களங்கள். அவர் எழுதிய புதினம், சிறுகதை, சிறுவர் இலக்கியம், நாடகம், கடிதம், கட்டுரை, இலக்கிய வரலாறு, பயணக்கட்டுரை, வாழ்க்கை வரலாறு முதலிய துறைகள் மற்றும் இலக்கியத் திறனாய்வு, மொழியாராய்ச்சி, இலக்கிய ஆராய்ச்சி ஆகிய அறிவியல் சார் துறைகள் ஆகியன அவருடைய எழுத்துலகப் படைப்பாக்கத்தின் பன்முகங்கள். இத்தகைய பன்முகக் களங்களையும் தமது ஆய்வுக்குரியனவாகக் கொண்டு, சமுதாயவியல், பெண்ணியம், மொழியியல், திறனாய்வியல், இலக்கிய ஆளுமை, படைப்புத்திறன், நுட்பத்திறன் முதலான நோக்குகளில் மேற்கொள்ளப்பெற்ற ஆய்வுக்கட்டுரைகள் இங்கே நூலாக்கம் பெற்றுள்ளன. சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியின் ஆளுமையாக நின்று, சமுதாய மாற்றத்தை மரபெல்லை மீறாது வழிநடத்திய முனைவர் மு.வரதராசனாரின் எழுத்தும் வாழ்வும் இன்றைய வாழ்க்கைச் சூழலிலும் வழிகாட்டுதற்கும பயன்கொள்வதற்கும் உரியன என்பதைக் கருத்தரங்கக் கட்டுரைகள் எடுத்தியம்புகின்றன.

தேசிய கருத்தரங்கம் நிகழ்த்துதற்கு ஏற்ற இடத்தை ஆராய்கையில் திருவண்ணாமலையில் கல்விச்சேவையில் தமக்கெனத் தனிஅடையாளம் பெற்றிருக்கும் சண்முகா கலை அறிவியல் கல்லூரி நிறுவனம் அதற்கு முழு ஒப்புதல் அளித்தது. அந்த மகிழ்ச்சியின் தொடர்ச்சியாக, பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல், அந்நிறுவனக் குழுமத்தின் ஒருவரான திருமிகு சீனி கார்த்திகேயன் திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கத்தின் பொதுச்செயலராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற இனிய நிகழ்வு அமைந்தது. கருத்தரங்கன்றே கட்டுரைத் தொகுப்பை வெளிக்கொணரும் முயற்சியில் திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கத்திற்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்தது செம்மூதாய்ப் பதிப்பகம். கருத்தரங்க அமைப்புக்குழுவினரின் ஒத்துழைப்பு இந்நூலாக்கத்தின்கண் அளவிடற்கரியது. அவ்வாறே குறுகிய காலத்திற்குள் மெய்ப்புத்திருத்தம் செய்து கட்டமைக்க வேண்டிய சூழலில், எங்களோடு திருமிகு.பெ.கோ. கோவிந்தராசன், முதலான தமிழறிஞர்கள் துணைநின்றனர். திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கத் தலைவர், செயலர் மற்றும் பதிப்புக்குழுவினரின் இடைவெளியில்லாத அயராத உழைப்பாலும், விரைந்த முயற்சியாலும், உரிய நேரத்தில், கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பு உங்கள் கரங்களில் தவழ்வதற்குக் காரணமாக விளங்கும் அனைவருக்கும், கட்டுரைகளை வழங்கி அரங்கில் பங்கேற்க உள்ள உங்கள் அனைவருக்கும் திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கத்தின் சார்பிலும், பதிப்புக்குழுவினரின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE (CO-ED.)
Manalurpet, Road, Tiruvannamalai - 606 601.
Email : shanmugacollege@gmail.com

எஸ்.என். சௌந்தர்ராஜன்
செயலர் & தாளாளர்

வாழ்த்துரை

செம்மொழியாய் ஏற்றம் பெற்று, பல மொழிகளுக்குத் தாயாக விளங்குகிற தமிழ்மொழி காலந்தோறும் தமிழறிஞர்களால் வளமாக வளர்ந்துள்ளது. அவர்கள் வழங்கிய இலக்கியங்கள் வாழ்வியல் விழுமியங்களை எடுத்தியம்பியதோடு மட்டுமல்லாமல் வழிகாட்டும் இலக்கியங்களாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. வாழையடி வாழையென வந்த அத்திருக்கூட்ட மரபில் 20ஆம் நூற்றாண்டில் மு.வ. அவர்கள் பல வகையான இலக்கியங்களை வழங்கிச் சிறப்பித்துள்ளமை அனைவரும் அறிந்த ஒன்றாகும். அவ்வறிஞரின் பணிகளைப் பாராட்டும் வண்ணம் அவரது நூற்றாண்டு விழாவில், திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கம் மு.வ.வின் படைப்புகள் குறித்த தேசியக் கருத்தரங்கினை எங்கள் கல்லூரியில் நடத்தி ஆய்வுக் கோவையாக நூல் வெளியிட்டுள்ளதைப் பெருமைக்குரிய ஒன்றாகக் கருதுகிறோம். டாக்டர் மு.வ. அவர்களின் பணிகளைப் போற்றும் இந்நேரத்தில் திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கத்தின் பணிகள் மேலும் சிறக்க எங்கள் கல்வி அறக்கட்டளையின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

12-3-2012

திருவண்ணாமலை

எஸ்.என். சௌந்தர்ராஜன்

திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கம்

631/4 இடுக்குப்பிள்ளையார் நகர் இரண்டாவது தெரு, காஞ்சி சாலை, வேங்கிக்கால், திருவண்ணாமலை.

தோற்றம்

திருவள்ளுவராண்டு 2030, விடை (வைகாசி) 2 (16-5-1999) அன்று திரு.சா.அருள்வேந்தன் பாவைச்செல்வி அவர்களால் அவரது இல்லத்தில் கூட்டப்பெற்ற தமிழ் உணர்வாளர்கள் கூட்டத்தில் 'திருவருணைத் தமிழ்ச் சங்கம்' என்ற பெயரில் நிறுவப்பட்டது. புலவர் சா.தா. திருஞானம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த முதல் அமைப்புக் கூட்டத்தில், திரு.கா.பிச்சாண்டி, திரு.சீனி. கார்த்திகேயன், புலவர். ஜோ. தெய்வநீதி, புலவர் ம. கோவிந்தசாமி, புலவர். மு. சுப்பிரமணியன், அருணை நா. பாண்டுரங்கனார், திரு.மா.க. சிவக்குமார், திரு.உரு. தனசேகரன், திரு. அசன்பாசா, திரு.சை.கா. அமானுல்லா, திரு.அப்துல்லா, திரு. ஜினதாசு, திரு.பி.சந்திரசேகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இச்சங்கத்தின் முறையான தொடக்க விழா, தி.ஆ.2030 ஆடவை (ஆனி) 1 (24-06-1999) அன்று புலவர் மா. முத்துசாமி தலைமையில் நடைபெற்றது. பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் மருகரும் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத் தூய தமிழ்ச் சொல்லாக்கத்துறை தலைவருமான முனைவர் ப.அருளி அவர்கள், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சங்கத்தைத் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். முதுபெரும்புலவர் அ. பாண்டுரங்கனார் திரு.த.ரிச்சர்ட்டு பாசுகரன், திரு.உசேன் தாசன் ஆகிய முச்சமயச் சான்றோர் வாழ்த்தினர்.

பின்னர் தி.ஆ. 2033, கும்பம் (மாசி) 4 (16-2-2002) அன்று நடைபெற்ற மொழி ஞாயிறு பாவாணர் நூற்றாண்டு நிறைவு விழாவில் பங்கேற்ற முனைவர் ப. அருளியார் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க திருவண்ணாமலை தமிழ்ச் சங்கம்' என பெயர் மாற்றம் செய்யப்பட்டு, 21-04-2003 அன்று முறையாக மாவட்ட சங்கப் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டது.

நோக்கங்கள்

1. தமிழ்மொழி, பண்பாடு, கலை ஆகியவற்றை வளர்ப்பதன் மூலம் சாதி, சமய அரசியல் வேறுபாடுகளை நீக்கி தமிழர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துதல்

2. காலத்தின் கண்ணாடியாக விளங்கும் தமிழ் இலக்கிய இலக்கணங்களை

அதாவது சங்கத் தமிழ் தொடங்கி இன்றைய இணையத் தமிழ் வரை ஆய்ந்தறிந்து தமிழின் தனிப்பெருஞ்சிறப்புகளைத் தமிழர்கள் உணரவும் உணர்த்தவும் செய்தல்.

3. இலக்கியம் காட்டும் பொதுமை நெறிகளையும், குமுகாய நலக்கூறுகளையும் சாதி, சமய அரசியலுக்கு அப்பாற்பட்ட நிலையில் தமிழ் மக்களின் பொதுவான வாழ்வியல் சிக்கல்களை ஆய்ந்து கிடைக்கும் கருத்துக்களைக் கலையுரு தந்து மக்களிடம் கொண்டு செல்லல்.

4. இளைய குமுகாயத்தினரிடையே பொதிந்து கிடக்கும் இயல், இசை, நாடகத்தின் தமிழின் கூறுபாடுகளையும் நுண்கலைத் திறன்களையும் ஊக்குவித்து வெளிக்கொணர்தல்

5. சமயத் தமிழிலக்கியங்களையும் கடவுள் மறுப்பியக்கப் பகுத்தறிவு தமிழ் இலக்கியங்களையும் மீள்பார்வை செய்து மெய்ப்பபொருள் காண்பதன் மூலம் சைவ, மாலிய, சமண, புத்த, கிறித்துவ, இசுலாமிய சமயங்களால் வேறுபட்டு நிற்கும் நம்பும் நம்பா மதத்தைச் சார்ந்த தமிழர்களுக்குத் தமிழுணர்வை ஊட்டி, தமிழால் ஒன்றுபட செய்தல்

6. எல்லா சமயங்களுக்கும் பொதுவானதும் அனைத்து நிலை மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் தமிழர்தம் வாழ்வியல் நெறியுமான திருக்குறள் நெறியினைப் பின்பற்றவும், பரவவும் செய்தல்

7. தமிழ்நாட்டின் ஆட்சித்துறை, நீதித்துறை, கல்வித்துறை, இசைத்துறை, இறைவழிபாடு உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் வீடுகளிலும், வீதிகளிலும் வணிக நிறுவனங்களிலும் எல்லா நிலைகளிலும் தமிழ் பயன்படுத்தப்பட்ட வேண்டும் என்ற (தமிழக அரசின் கொள்கையினை) கருத்தியலைப் பரப்புதல்

பணிகள்

1. சங்க இலக்கியங்கள் தொடங்கி வளர்ந்து வரும் இன்றைய இலக்கியங்கள் வரையிலான அனைத்து இலக்கியங்கள் குறித்தும் கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், மாநாடுகள் நடத்துதல், இலக்கியங்களில் காணப்படும் குமுகாயக் கல்விப் பண்பாட்டுக்கூறுகளை ஆய்தல், கருத்தரங்க ஆய்வரங்க உரைகளை, கட்டுரைகளை நூல்களாக வெளியிடல்.

2. தமிழில் வெளிவந்த, கதை, கட்டுரை, சிறுகதை, பா, புதினம் போன்றவற்றைத் திறனாய்வு செய்தல், நூல் அறிமுகம் செய்தல், இயலும் போது படைப்பாளியையும் அழைத்து நேர்முகத் திறனாய்வை மேற்கொள்ளல்

3. படைப்பாற்றல் கொண்டோரின் படைப்புக்களை உலகறியச் செய்ய அரங்கேற்றம் செய்யும் வகையில் படைப்பரங்கம் நடத்துதல், தேர்ந்தெடுக்கப்படும் படைப்புகள் ஆண்டு மலரிலோ நூலாகவோ வெளியிடல், திறன் கொண்டோரின் துணைக் கொண்டு பாட்டரங்கம், பட்டிமன்றம், வழக்காடு மன்றம், நாடகம் மற்றும் இசை நிகழ்ச்சிகளை நடத்துதல்.

4. ஏற்புடைய காலங்களில் கதை, பேச்சு, பா, இசை, நாடகம், ஓவியம் நாட்டியம் மற்றும் சுவடியியல், கல்வெட்டியல், மொழிபெயர்ப்பியல் போன்ற தமிழின் கூறுபாடுகளை - நுண்கலைகளைப் பயிற்றுவிக்கும் வகையில் பயிற்சிப் பட்டறைகள் நடத்துதல்

5. தமிழ்ப்பண்பாட்டு விழாக்களான தமிழ்ப்புத்தாண்டு (சுறவம் முதல் நாள்) விழா, திருவள்ளுவர் திருநாள், தொல்காப்பியர் நாள் விழா, இளங்கோவடிகள் விழா, தமிழகப் பெருவிழா, தமிழ்ச்சான்றோரின் பிறந்த நாள், நினைவு நாள் போன்ற விழாக்களை நடத்துதல்.

6. நடுவண் மற்றும் தமிழக அரசின் நிறுவனங்களோடும் (சான்றாக, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகம், பல்கலைக்கழகங்கள் போல்வன) தனியார் தமிழாய்வு நிறுவனங்களோடும் தமிழ் அமைப்புகளோடும் இணைந்து மாநாடுகள், ஆய்வரங்குகள், கருத்தரங்குகள் விழாக்கள் நடத்துதல்

7. பள்ளி, கல்லூரி மாணவர்களின் தனித்திறன்களை வெளிப்படுத்தப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்குதல்

8. பல்சமயத் தமிழிலக்கிய மாநாடுகள் நடத்துதல்

9. தகுதிமிகு தமிழ்ச் சான்றோர்களுக்கு விருதுகள் வழங்கி பாராட்டிச் சிறப்பித்தல்

10. சிற்றிதழ் இணையதளம் போன்ற ஊடகங்கள் வழி தமிழ்ப் பணியாற்றல்

11. தாய்த்தமிழ்ப்பள்ளி தொடங்க முயற்சித்தல்

12. பல்கலைப் பயிலகம், பன்மொழிப் பயிற்றகம், ஆய்வு நூலகம், தேர்வு நெறிகாட்டு மையம் ஆகியன அமைத்தல்

13. தமிழ்ப்பணிகளோடு மக்கள் நலப்பணிகளை மேற்கொள்ளுதல்

இதுவரை. . .

இன்றும் வழிகாட்டும் சங்க இலக்கியங்கள்

தமிழ்ச் சங்கத்தின் பணிகள் எனத் தொடங்கும் போதே, சங்க இலக்கியக் கருத்தரங்குகள் நடத்துவது என்பதே இதன் தலையாய நோக்கம் என

வரையறுக்கப்பட்டது. அதனடிப்படையில் பழந்தமிழரின் பண்பாடு, வீரம், கலை, நாகரிகம் ஆகியன நமக்கு, இன்றும் வழிகாட்டுவன என்பதை உணர்த்தும் வகையில் திங்கள்தோறும் இன்றும் வழிகாட்டும் சங்க இலக்கியங்கள் என்ற பொருளில் தொடர்க் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. எட்டுத்தொகை நூல்கள் குறித்து நடத்தப்பட்ட இக்கருத்தரங்குகளில் திருச்சி மாவட்டம் அல்லூர் திரவள்ளுவர் தவச் சாலையின் நிறுவனர் இலக்கியச் செம்மல் முதுமுனைவர் இரா. இளங்குமரனார், தருமையாதீனப் புலவர். முனைவர் கு. சுந்தரமூர்த்தி, முனைவர் சரளா ராசகோபலன், வாணியம்பாடி பேரா.தி.மு.அப்துல் காதர், பேரா.வெ. நெடுஞ்செழியன், முனைவர் ஷேக்மீரான், பேரா. ச. முருகேசன், முனைவர் சா. முத்தழகு, பேரா. வேங்கடாச்சாரி, கள்ளக்குறிச்சி தமிழ்ச் சங்கத்தலைவர் புலவர் செ. வரதராசன் உள்ளிட்ட பெருமக்கள் கலந்து கொண்டனர்.

தமிழும் அரசியல் இயக்கங்களும்

தமிழக அரசியல் இயக்கங்கள் தமிழுக்கு ஆற்றிய பணிகளை ஆய்ந்திடும் நோக்கில் தமிழும் தேசிய இயக்கங்களும் என்ற தலைப்பில், இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்களும், தமிழும் திராவிட இயக்கங்களும் என்ற தலைப்பில் நாஞ்சில் சம்பத்து அவர்களும், தமிழும் தமிழ்த்தேசிய இயக்கங்களும் என்ற தலைப்பில் தோழர் பெ. மணியரசன் அவர்களும் சிறப்புரையாற்றிய கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

சமயத் தமிழிலக்கிய மாநாடுகள்

சமயங்களால் வேறுபட்டிரக்கும் தமிழர்களிடையே தமிழுணர்வை ஊட்டவும் தமிழால் ஒன்றிணைக்கவும் சமயங்களால் தமிழும் தமிழால் சமயங்களும் வளர்ச்சியுற்றதை ஆய்ந்தறியவும் சமயத் தமிழிலக்கிய மாநாடுகள் நடத்துவது என்பது தமிழ்ச் சங்கக் குறிக்கோள்களில் ஒன்று. அதன் அடிப்படையில் கிறித்தவத் தமிழிலக்கிய மாநாடு (கி.பி. 1999) சைவத் தமிழிலக்கிய மாநாடு (கி.பி. 2000) இசுலாமியத் தமிழிலக்கிய மாநாடு (கி.பி. 2004) சமணத் தமிழிலக்கிய மாநாடு (கி.பி. 2005) என நடத்தி மகிழ்ந்துள்ளது. திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கம் இம்மாநாடுகளில் கிறித்தவத் தமிழறிஞர்கள் முனைவர் சூ. இன்னாசி, முனைவர் ப.ச. ஏசுதாசன், முனைவர் மோசஸ் மைக்கேல் பாரடே, சைவத் தமிழறிஞர்கள் முனைவர் புரிசை நடராசன், பேரா. வில்சன் அமல்ராஜ், முனைவர் மு. சிவச்சந்திரன், முனைவர் மு.அ. மாணிக்கவேலு, இசுலாமியத் தமிழறிஞர்கள் அறிவியல் தமிழ்த்தந்தை மணவை முஸ்தபா, முனைவர் கவிஞர் அலிப்பூர் ரஹீம், முனைவர் மு. அம்சா, பேரா. உத்தமபாளையம் அப்துல் சமதி, திருமதி பர்வீன் சுல்தானா, கவிஞர் ஹாமிம் முஸ்தபா, சமணத் தமிழறிஞர்கள் மதுரை சொ. அனந்தராஜ், பு.தா. அறவாழி, முனைவர்

விசய வேணுகோபால், நெல்லை நெடுமாறன், புழல் ஜோ. ஜம்புகுமார், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வேர்கள்

தமிழுக்குத் தொண்டு புகழுடம்பெய்திய தமிழறிஞர்களையும், தமிழுணர்வாளர்களையும் இன்றைய இளைய குமுகாயம் அறிந்து கொள்ளும் பொருட்டும் அத்தமிழறிஞர்களின் வழித்தோன்றல்களைப் போற்றும் நோக்கிலும் வேர்கள் என்ற தொடர் நிகழ்ச்சியைத் தமிழ்ச் சங்கம் நடத்தி வருகிறது. தமிழியக்கத் தலைவர் பேரா.சி. இலக்குவனார் குறித்து அவரது மகன், முனைவர் சி.இ.மறைமலை, சிலம்புச் செல்வர் ம.பொ.சி. குறித்து அவரது பெயர்த்தி முனைவர் தி.பரமேஸ்வரி, தூயதமிழ் காவலர் கு.மு.அண்ணல்தங்கோ குறித்து அவரது மகள் திருமதி அ.நாவுக்கரசி செகந்தன், பாவலரேறு பெருஞ்சித்திரனார் குறித்து அவரது மகன் பொழிலன், புதுவைச் சிவம் குறித்து அவரது மகன் சிவ. இளங்கோ, முனைவர் வ.சுப. மாணிக்கனார் குறித்து அவரது மகன் வ.சுப.மா.தொல்காப்பியன், புதுமைப்பித்தன் குறித்து அவரது மகள் திருமதி தினகரி சொக்கலிங்கம், புலவர் குழந்தை குறித்து அவரது மகன் திருமதி கு. சமத்துவர், தோழர் ஜீவா அவர்களைக் குறித்து அவரது ம்கன் மணிக்குமார் ஜீவா, காரைக்குடி இராம. சுப்பையா குறித்து திரைப்பட இயக்குநர் எஸ்.பி. முத்துராமன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். நேரடி வாரிசு இல்லாத தமிழறிஞர்கள் குறித்து அவர்களோடு பழகியோர் அவர்தம் படைப்புகளை ஆய்ந்தோர் உரையாற்ற அழைக்கப்பட்டனர் அவ்வகையில் கவிஞர் வாணிதாசன் குறித்து புதுவை கல்லாடன், கா.சு.பிள்ளை குறித்து வழக்கறிஞர் முனைவர் மு. முத்துவேலு, கவிஞர் தமிழ்ஒளி குறித்து பேரா. முனைவர் வெ. கனகசுந்தரம், வேலா. அரசமாணிக்கம் குறித்து அவரது தோழர் முதுமுனைவர் இரா. இளங்குமரனார், ந.மு,வேங்கடசாமி நாட்டார் குறித்து திருச்சி முனைவர் கு. திருமாறன், வீரமாமுனிவர் குறித்து முனைவர் எட்வர்டு சாலமோன் ராசா, கா.சிவத்தம்பி குறித்து ஆய்வாளர் அ.மார்க்ஸ் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

பாவாணர் நூற்றாண்டு விழா (2001-2002)

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தொடக்கவிழா, நிறைவு விழா தவிர ஐந்து தொடர் கருத்தரங்குகளை நடத்தி மகிழ்ந்தது திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கம், இவ்விழாக்களில் புதுவை க.தமிழமல்லன், புதுக்கோட்டை இரா. பாவாணன், முனைவர் கு. திருமாறன், பாவலர் கடவூர் மணிமாறன், பெங்களூரு பேரா. கு. பூங்காவனம். முனைவர் ப. அருளி, முனைவர் இரா. திருமுருகனார், முனைவர் க. நெடுஞ்செழியன், முனைவர் ஆ.கு. ஆல்துரை,

பாவலர் கருமலைத் தமிழாழன், தமிழர் தேசிய இயக்கத்தலைவர் திரு. பழ. நெடுமாறன் உள்ளிட்ட பல தமிழறிஞர்கள் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா (2008-2009)

தமிழக முன்னாள் முதல்வரும் பேரறிஞருமான அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவை மாதந்தோறும் கொண்டாட எண்ணிய தமிழ்ச்சங்கம். ஏழு நிகழ்ச்சிகளை நடத்தியது. பேரறிஞர் அண்ணாவும் தந்தை பெரியாரும் என்ற தலைப்பில் முனைவர் மா. நன்னன் அவர்களும், பேரறிஞரும் பெருந்தலைவரும் என்ற தலைப்பில் போளூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.எஸ்.விசயகுமார் அவர்களும், பேரறிஞரும் பாவேந்தரும் என்ற தலைப்பில் இலக்கியத் தென்றல், ப. கண்ணன் அவர்களும், பேரறிஞரும் கலைஞரும் என்ற தலைப்பில் கவிவேந்தர் கா. வேழவேந்தன் அவர்களும், பேரறிஞரும் புரட்சித்தலைவரும் என்ற தலைப்பில் சொல்லின் செல்வர் வைகைச் செல்வன் அவர்களும், பேரறிஞரும் காயிதேமில்லத்தும் என்ற தலைப்பில் சிறுபான்மை புரட்சி இயக்க நிறுவனர் கா.லியாகத் அலிகான் அவர்களும் கருத்துரையாற்றினர்.

இளங்கோவடிகள் விழா

வைகாசி முதல் நாள் இளங்கோவடிகள் நாள் என தமிழறிஞர்கள் எடுத்த முடிவினை ஏற்ற தமிழ்ச்சங்கம், 13-4-2008 மற்றும் 15-5-2011 ஆகிய நாட்களில் இளங்கோவடிகள் நாளைக் கொண்டாடி மகிழ்ந்தது. இவ்விழாக்களில் முனைவர் சின். கோதிமொழியன், புலவர் ஜோ. தெய்வநீதி, முனைவர் வே. நெடுஞ்செழியன், பேராசிரியர்கள் வெ. இராமு, கோ. சாந்தமூர்த்தி, சண்முகப்பிரியா, பானு, பாவலர் ப. குப்பன், கு. சபரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தொல்காப்பியர் விழா

சித்திரை முழு நிலவு நாளைத் தொல்காப்பியர் நாள் என செம்மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவனமும், தமிழறிஞர்களும் அறிவித்ததைத் தொடர்ந்து தமிழ்ச்சங்கம் 28-04-2010 அன்று தொல்காப்பியர் விழாவை நடத்தியது. டாக்டர் வே. முத்துக்குமரன் முனைவர் ம.விபீடணபாகவதர், பேரா. இரா. சங்கர், போ. வரதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

6-3-2011 அன்று செம்மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவனத்துடன் இணைந்து கெதால்காப்பியர் விழாவைத் திருவண்ணாமலைத் தமிழ்ச் சங்கம் கொண்டாடி மகிழ்ந்தது. விழாவில் செம்மொழித் தமிழாய்வு நிறுவன அறிஞர்கள் முனைவர் ப. மருதநாயகம், முனைவர் கா.கோ. வேங்கடராமன். மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழக அறிஞர் அண்ணா இருக்கை

ஒருங்கிணைப்பாளர் முனைவர் வே. மாணிக்கம், மாவட்ட ஆட்சியர் முனைவர் மு. இராசேந்திரன் உள்ளிட்ட தமிழ் அறிஞர்கள் தமிழ் அமைப்புகளின் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தமிழ் பண்பாட்டு விழாக்கள்

சுறவம் (தை) முதல்நாளே தமிழ்ப் புத்தாண்டு என்ற கருத்தியலை ஏற்றுக் கொண்ட தமிழ்ச்சங்கம், புத்தாண்டு விழாவாகக் கொண்டாடியதோடு, இவ்விழாவைத் தமிழ்நெறி தந்த திருவள்ளுவர் விழாவாகவும், உழைப்பின் பெருமையை உலகுக்கு உணர்த்திய உழவர் திருநாள்விழாவாகவும் கொண்டு இனம், சாதி, சமயங்கடந்து கொண்டாடவேண்டும் என்பதை வலியுறுத்த பல்சமயத் தமிழர்கள் பங்கேற்கும் தமிழ்க்குடும்பப் பொங்கல் விழாவாகவும் கொண்டாடி வருகிறது. மேலும் தமிழறிஞர்களின் பிறந்த நாள் நினைவு நாள் பேன்ற சிறப்பு நிகழ்ச்சிகளையும் நடத்தி வருகிறது. இவ்விழாக்களில் முனைவர் அரு. கோபாலன், முனைவர் இறைக்குருவனார். திரு. பழ. கருப்பையா, தூத்துக்குடி புலவர் தமிழ்மாறன், புலவர் ஆ.ந. வாய்மை போன்றோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

மலைநகர் பாவரங்கம்

திருவண்ணாமலை நகரில் பாத்திறம் மிக்கோரின் ஆற்றலை வெளிக் கொணரவும் அவர்தம் படைப்பாற்றலை ஊக்குவிக்கவும், மலைநகர் பாவரங்கம் என்ற பாவரங்க நிகழ்ச்சியைத் தமிழ்ச்சங்கம் நடத்தி வருகிறது.

தமிழ்ப்பாவியல் பயிற்சிப் பட்டறை

திருவண்ணாமலைத் தமிழ்ச் சங்கம் தனது நிகழ்ச்சிகளினூடே பாவரங்கத்தையும், உடனடி பா போட்டிகளையும் நடத்தி வருகிறது. இந்நிகழ்வுகளில் பங்கேற்கும் மாணவ, மாணவியர்கள் மரபு பாவினைக் கற்றிடும் நோக்கில், தமிழ்ப்பாவியல் பயிற்சிப் பட்டறையை நடத்தியது.

நூல் வெளியீட்டு விழா

தமிழ்ச் சங்கத்தின் வாழ்நாள் உறுப்பினரும் இன்றைய பொருளாளரான சொல்லினியன் என்கிற பாவலர் சொ. சேகர் அவர்களின் அண்ணாமலையார் வெண்பா, தடி ஆகிய நூல்களின் வெளியீட்டு விழாவைத் தமிழ்ச்சங்கம் சிறப்புடன் நடத்தியது. மேலும் முனைவர் வா.மு.சே. ஆண்டவர் எழுதியப் பன்முகப் பார்வை எனும் நூல் அறிமுக விழாவையும் எடுத்தது.

அறக்கட்டளை விழாக்கள்

தமிழ்ச் சங்கத்தில் நிறுவப்பட்டுள்ள, தூய தமிழ்க்காவலர் கு.மு.அண்ணல் தங்கோ அறக்கட்டளை, தந்தை பெரியார் அறக்கட்டளை,

கலைஞர் அறக்கட்டளை, புலவர் சா.தா. திருஞானம் நினைவு அறக்கட்டளை, இசுலாமியத் தமிழிலக்கிய அறக்கட்டளை ஆகிய விழாக்களில் முன்னாள் அமைச்சர் மாண்புமிகு எ.வ.வேலு, முன்னாள் அமைச்சரும் வேலூர் தமிழ்ச சங்கத் தலைவருமான வி.ஐ.டி.வேந்தர், திரு.ஜி.விசுவநாதன், திருவள்ளுவர் பல்கலைக்கழக துணைவேந்தர் லெ. கண்ணன், திருச்சி என். செல்வேந்திரன், திரு. சங்கொலி. க. திருநாவுக்கரசு, திரு. கயல் தினகரன், சிறுபான்மை இணைஇயக்கத்தலைவர் லியாகத் அலிகான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டுள்ளனர்.

சிறப்பு நிகழ்ச்சிகள்

மொழி வழி மாநிலமாகப் பிரிக்கப்பட்டு தமிழ்நாடு அமைந்த நவம்பர் முதல் நாளைத் தமிழகப் பெருவிழாவாக கொண்டாட தமிழறிஞர்கள் தமிழுணர்வாளர்கள் எடுத்த முடிவின்படி ஆண்டுதோறும் தமிழ்ச்சங்கம் கொண்டாடி வருகிறது. மேலும், தமிழ்வழிக் கல்வி, தமிழ் வழிபாடு, தமிழர் சமயம், உலக முதன்மொழி - தமிழ், தமிழில் செய்தி ஏடுகளும் தொலைக்காட்சிகளும் சட்டத்தமிழ், அறிவியல் தமிழ் குறித்த சிறப்பு கருத்தரங்குகளையும் நடத்தியது. இவ்விழாக்களில் தோழர். தியாகு. பேரா.க.நெடுஞ்செழியன், புதுக்கோட்டை பாவாணன், பேரா. சுப. வீரபாண்டியன், முனைவர் மு. முத்துவேலு, முனைவர் கிருட்டினமூர்த்தி உள்ளிட்ட சான்றோர் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

மு.வ. நூற்றாண்டு விழா

இவ்வாண்டு முனைவர் மு.வ. நூற்றாண்டு விழா. அதனை முன்னிட்டு திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கம் தனது பணிகளில் ஒரு படி மேலே சென்றுள்ளது. பன்முகப் பார்வையில் மு.வ.வின் வாழ்வும் படைப்பும் எனும் பொருளில் தேசியக் கருத்தரங்கம் நடத்தவும் அக்கருத்தரங்கக் கட்டுரைகளை நூலாக்கிடவும் முனைவர் மு.வ.நம்பி அவர்களை அழைத்து அந்நூலை வெளியிடவும் முயன்று வென்றுள்ளது.

இவ்விழா சிறக்க, ஆக்கமும் ஊக்கமும் தந்து ஒல்லும் வகையான் உதவியாற்றிய எமது தமிழ்ச் சங்கத் துணைத்தலைவர் திருமதி கே. இதயாள் பாவைச்செல்வி அவர்களுக்கும் செயலாளர் திரு. சீனி. கார்த்திகேயன் அவர்களுக்கும் இணைச் செயலாளர் பாபு. கு. இராதாகிருட்டினன் அவர்களுக்கும் மெய்ப்புப் பணியில் பெரிதும் உதவிய இலக்கணப் புலவர் ஆய்வறிஞர் பி.கோ. கோவிந்தராசனார் அவர்களுக்கும் அட்டைப்பட வடிவமைப்பைச் செம்மையுற செய்த தந்த சூரியா டிஜிட்டல் உரிமையாளர் எமது இனிய உடன்பிறப்பு கே.கே.ஷா அவர்களுக்கும் கருத்தரங்க அமைப்புக்குழுவினர் முனைவர் வே.நெடுஞ்செழியன், முனைவர் க. மோகன் காந்தி, பேரா. இரா. சங்கர்,

இந்நூலைத் தன்னலம் பாராது பணியாற்றி நேர்த்தியாக வடிவமைத்து தந்த செம்மூதாய் பதிப்பக உரிமையாளர் முனைவர் சு. சதாசிவம் மற்றும் தமிழ்ச் சங்க பொறுப்பாளர்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றி.

கடந்த பதிமூன்று ஆண்டுகளாகத் திருவண்ணாமலை நகரில் நூற்றுக்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை நடத்தியதன் வழி, தமிழிய உணர்வுகளை மக்கள் முன் கொண்டு செல்லும் முன்னனி அமைப்பாக இயங்கி வரும், திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கம் தொடர்ந்து தன் பணியை ஆற்ற உறுதி பூண்டுள்ளது.

வாழ்க தமிழ்.

18-3-2012
திருவண்ணாமலை

தமிழுணர்வுடன்

(அருள்வேந்தன் பாவைச்செல்வி)

திருவண்ணாமலைத் தமிழ்ச் சங்கப் பொறுப்பாளர்கள்



அருள்வேந்தன் பாவைச்செல்வி
தலைவர்



சீனி.கார்த்திகேயன்
செயலாளர்



பாவலர்.சொ.சேகர்
பொருளாளர்



தே.இதயாள் பாவைச்செல்வி
துணைத்தலைவர்



இரா.மூர்த்தி
துணைத்தலைவர்

திருவண்ணாமலைத் தமிழ்ச் சங்கப் பொறுப்பாளர்கள்



புலவர் அ.கருணாநிதி
புரவலர்



பாபு.கு.இராதாகிருஷ்ணன்
இணைச்செயலாளர்



புரவலர். அ.பழனி
இணைச்செயலாளர்



மா.க.சிவக்குமார்
அமைப்புச்செயலாளர்



ச.விசயகுமார்
துணைச்செயலாளர்



இரா.வினோத்பாபு
செய்தி தொடர்பாளர்

திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கம்




மு.வ.நூற்றாண்டு விழா தேசியக் கருத்தரங்கம்




அறிஞர் அண்ணா அவர்களுடன்



ம.பொ.சி.,தி.க.சண்முகம் ஆகியோருடன்




பாரிஸ் உலகத் தமிழ் மாநாட்டில்



முன்னாள் முதல்வர் பக்தவசலம் அவர்களுடன்



டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்களுடன்




முன்னாள் ஆளுநர் கே.கே.ஷா அவர்களுடன்

திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கம்



மு.வ.நூற்றாண்டு விழா தேசியக் கருத்தரங்கம்



கல்லூரி விழாவில்



பதக்கம் பெறுதல்



சென்னை பல்கலைக் கழகத்தில்



பச்சையப்பன் கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியருடன்...



பெருந்தலைவர் காமராசர் அவர்களுடன்




எலிசபெத் அரசியுடன்

திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கம்



மு.வ.நூற்றாண்டு விழா தேசியக் கருத்தரங்கம்




நாவலர் அவர்களுடன்




மு.வ.வின் பெற்றோர்கள்



மு.வ.வின் பன்முகத் தோற்றம்



காரைக்குடி சா.கணேசன் அவர்களுடன்




தமிழ்த்தென்றல் திரு.வி.க.அவர்களுடன்

திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கம்



மு.வ.நூற்றாண்டு விழா தேசியக் கருத்தரங்கம்

மு.வ.வின் அரிய புகைப்படங்கள்



கருத்தரங்க அமைப்புக்குழு

1. முனைவர் வெ. நெடுஞ்செழியன்
   இணைப்பேராசிரியர்
   அரசு கலைக்கல்லூரி, திருவண்ணாமலை
   பேசி : 99439 99582

2. முனைவர் வா.மு.சே. ஆண்டவர்
   இணைப் பேராசிரியர்
   பச்சையப்பன் கல்லூரி, சென்னை
   பேசி : 94444 51750

3. முனைவர் க. மோகன் காந்தி
   தமிழ்த்துறைத் தலைவர் (பிரிவு 2)
   தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்
   பேசி : 97871 59730

4. பேரா. இரா. சங்கர்
   உதவிப் பேராசிரியர்
   சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி
   திருவண்ணாமலை
   பேசி : 944298 2309

5. பேரா. வெ. இராமு
   தமிழ்த்துறைத் தலைவர்
   சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி .
   திருவண்ணாமலை
   பேசி : 94438 86357

6. பேரா. கா.அப்துற்ரகீம்
   உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை,
   டாக்டர் ஜாகீர் உசேன் கல்லூரி
   இளையான்குடி - 630 702

7. முனைவர் மா.எட்வர்டு சாலமன் ராசா
   முதுகலைத் தமிழாசிரியர்
   டேனிகுமிசன் மேனிலைப்பள்ளி
   நெல்லிக்குப்பம்
   பேசி : 94436 69171

முனைவர் சு. சதாசிவம்
உரிமையாளர்
செம்மூதாய் பதிப்பகம்
நெ.17, தாகூர் தெரு, சிட்லபாக்கம்
சென்னை - 600 064
கைபேசி : 9444200369

பதிப்புரை

தமிழுக்குத் தொண்டு செய்த அறிஞர் பெருமக்களை அவர்களுக்குப் பின்வரும் தமிழ் ஆர்வலர்கள் நினைவு கூர்வது மரபும் வழக்கமுமாகும். அவ்வகையில் தமிழறிஞர் மு. வரதராசனார் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கம் 'பன்முகப் பார்வையில் மு.வரதராசனாரின் வாழ்வும் படைப்பும்' என்னும் தலைப்பில் தேசியக் கருத்தரங்கம் ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளது.

இக்கருத்தரங்கிற்கு ஏறத்தாழ நூற்றைம்பது ஆய்வாளர்கள் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளனர். இக்கட்டுரைகள் அனைத்தும் மு.வ. என்னும் பேரறிஞர் ஒருவரைப் பற்றி மட்டுமே அமைந்தவையாகும். இவை அனைத்தையும் தொகுத்து ஆவணப்படுத்தும் நோக்கில் திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்க நிறுவனர் திரு. அருள்வேந்தன் பாவைச்செல்வி அவர்கள் நூலாக்கம் செய்ய வேண்டும் எனத் தமது விருப்பத்தைத் தெரிவித்தார். அவரின் அவாவிற்கிணங்க எமது செம்மூதாய் பதிப்பகம் செய்துள்ளது. இந்நூல் தமிழ்க்கூறும் நல்லுலகிற்குக் கிடைத்த மேலும் ஒரு பொக்கிஷம் என்பதில் எவ்வித ஐயமில்லை.

18-3-2012 இவண்

சென்னை

(சு. சதாசிவம்)

பொருளடக்கம்

1. முவரதராசனார் - தரணி போற்றும் தமிழ்ப் படைப்பாளர்

த. கலைவாணி
முனைவர்பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
கொடைக்கானல்

சிறந்த கல்வியாளராக, படைப்பிலக்கியவாதியாக, ஆய்வறிஞராக, பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக என்று பன்முக நோக்குடையவராகத் திகழ்ந்த மாபெரும் தமிழறிஞர் பேராசிரியர்.டாக்டர்.மு.வ ஆவார். இருபதாம் நூற்றாண்டில் தமிழைப் பல்வேறு நிலைகளிலும் வளர்த்து தமிழர்க்கு என்றென்றும் வழிகாட்டியாக அமைந்தவர். சங்க இலக்கியம் முதல் இன்றைய இலக்கியம் வரை தமிழிலக்கியம் முழுவதிலும் ஒருசேரத் திளைப்பவர்களுள் மு.வ முதன்மையானவர்.'ஒரே மு.வ.வுக்குள் எழுத்தாளர், தமிழ்ப் பேராசிரியர், துணைவேந்தர், கலைஞர், சிந்தனையாளர், லட்சியவாதி, உலகியல் தெரிந்தவர், குடும்பத் தலைவர், உற்ற நண்பர் எனப் பலர் இருந்தனர்' என்று அகிலன் குறிப்பிடுகின்றார்.

படைப்பிலக்கியவாதியாக மு.வ

மு.வ அவர்களின் படைப்புகள் பல. புதினங்கள், சிறுகதைகள், நாடகங்கள், உரைகள் எனப் பல்வேறுபட்ட படைப்புகளின் வழியாக மு.வ அவர்கள் இன்றளவிலும் வாழ்ந்து வருகிறார் என்று கூறினால் அது மிகையாகாது. படைப்பிலக்கியம் குறித்து மு.வ அவர்களே ஒரு கருத்தரங்கில் கூறியுள்ளதாவது, 'வெறும் பயிற்சியாலும், உழைப்பாலும், திறமையாலும் மட்டிலும் படைப்பிலக்கிய ஆசிரியர்கள் உருவாகி விடுவதில்லை. இறைவனின் தனிப்பட்ட கருணையால் சிலருக்குப் படைப்பாற்றல் கிடைக்கிறதென நம்புகிறேன். படித்தவர்களும், பட்டம் பெற்றவர்களும் ஒரு சிலர் எழுதுகிறார்கள். இவை எதுவுமே இல்லாதவர்கள் சிலர் முன்பும் எழுதியிருக்கிறார்கள் ; இப்போதும் எழுதி வருகிறார்கள்; சிறந்த படைப்பிலக்கியங்களைத் தோற்றுவிப்பவர்களை இறைவனின் செல்லப் பிள்ளைகள் என்று எனக்கு நினைக்கத் தோன்றுகிறது. அவர்களைச் சமுதாயம் போற்றிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நான் கூடத் தொடர்ந்து துணைவேந்தராகப் பணி செய்வதைவிட, இந்தப் பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்று எங்காவது தனிமையை நாடிச் சென்று இன்னும் சில நாவல்களை எழுதவே விரும்புகிறேன். அதில்தான் எனக்கு முழுமையான மனநிறைவு எற்படுகிறது' என்று கூறியுள்ளார்.

தமிழும், தமிழரும்

மு.வ தம் படைப்புகளில் எங்கெல்லாம் தமிழைப் பற்றி, தமிழரைப் பற்றித் தம் கருத்தை வெளியிட முடியுமோ அங்கெல்லாம் தயங்காமல் எடுத்துரைப்பார். தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து ஒற்றுமைப்படுத்த வல்லது. தமிழ் ஆட்சி மொழியாகவும் கல்வி மொழியாகவும் ஆனால் தவிர, தமிழுக்கு எதிர்காலம் இல்லை என நம்பு. ஆட்சிமொழி என்றால் சட்டசபை முதல் நீதிமன்றம் வரையில் தமிழ் வழங்க வேண்டும். கல்வி மொழி என்றால் எவ்வகைக் கல்லூரிகளிலும் எல்லாப் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க வேண்டும். குறைகள் பல இருக்கலாம். குறைகளுக்காகத் தயங்காமல் ஆட்சிமொழியாகவும், கல்விமொழியாகவும் ஆக்க வேண்டும் என்று உணர்ந்திடு. இவ்வாறு பேசிக் கொண்டிருந்தால் போதாது. உன்னால் ஆனவரையில் செய். மணியார்டர், விளம்பரப் பலகை, விற்பனைச் சீட்டு (Bill) முதலிய எல்லாம் தமிழிலேயே எழுதுக. மராத்தியார், குசராத்தியர் முதலானவர்களிடம் இந்த வழக்கம் உள்ளது. இவற்றைத் தமிழில் எழுதினால், தபால்காரர், வியாபாரிகள், வாங்கும் மக்கள் முதலியவர்களைத் தமிழ்படிக்கச் செய்வதுபோல் ஆகும். நீ யாருடனும் தமிழிலேயே பேசு (உலகத்தார் எல்லாரும் அவரவர் தாய்மொழியில்தான் பேசுகிறார்கள்). தமிழ் தெரியாதவர்களிடத்தில் மட்டுமே பிறமொழிகளில் பேசு. திருமணம், வழிபாடு முதலியவற்றைத் தமிழில் நடத்து' என்று மு.வ 'தம்பிக்கு' என்னும் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழின உணர்வு

"தமிழ் இனம் எப்படிப்பட்ட சிந்தனையும். குறிக்கோளும், முயற்சியும், ஒற்றுமையும் கொள்ள வேண்டுமோ, அவற்றை உணர்த்துவதற்குரிய மாந்தர்களைக் கொண்ட களனும் காட்சியும் கருவும் கருத்தோட்டமும் கொண்ட காதைகளைப் படைத்து சமுதாயத்திற்கு வழிகாட்டியவர் அவர்" என்று மு.வ.வின் தமிழின உணர்வை க.அன்பழகன் படம் பிடித்துக் காட்டுகிறார். மொழி என்றும் வாழும் உயிருள்ளஒன்றுஞூ நாளும் வளர்ந்து நாட்டை வாழ்விக்கும் ஒன்று. மொழிதான் அனைத்துக்கும் அடிப்படையான ஒன்று. "மொழி உண்மையாக உள்ள ஒன்று ; அது கண்ணுக்கும் தெரியும் ; காதுக்கும் தெரியும், மூளைக்கும் தெரியும். மொழியால் இனம் அமைவதும் நாடு அமைவதும் நாட்டின் அமைப்புக்குத் துணையாக இருப்பதும் உலகம் அறிந்த உண்மைகள். இவற்றையெல்லாம் பொய் என்றும் வேண்டாதவை என்றும் உபதேசம் செய்கிறவர்கள் நம்மைப் பற்றி நல்லெண்ணம் இல்லாதவர்கள். அவர்களுக்கு நம்மிடம் வேலை இல்லை" என்று மு.வ. அவர்கள் 'தம்பிக்கு'என்னும் நூலில் கூறியுள்ளார்.

புதின எழுத்தாளராக மு.வ

தமிழ்ப் புதினங்களில் தமிழோடு புரியாத பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதி வந்த காலகட்டத்தில் தூயதமிழ்ச் சொற்களை அமைத்து, வேண்டிய மிக இன்றியமையாத இடங்களில் மட்டும் மக்களிடம் வழங்கப்பெறும் பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதி, தமிழ்ப்புதின இலக்கிய உலகிற்கு ஒரு திருப்புமுனை தரும் படைப்பாளராக உலவினார். புதினங்களில் உரைநடை எழுதுவதில் பிறமொழிச் சொற்களை மிகுதியாகக் கலப்பது மட்டுமில்லாமல், படிப்பவர் தலை சுழலும் வகை நீண்ட நெடிய தொடர்களை எழுதிவந்த மரபையும் உடைத்தெறிந்து சிறிய சிறிய தொடர்களை வைத்துப் புதினம் புனைந்தவர் மு.வ. நீண்ட நெடிய வரலாற்றுப் பாரம்பரியம் உடைய தமிழ் உரைநடை சீர்கெட்டிருந்த நிலையில், குறிப்பாக புதினங்களில் அவை புரையோடிப் போயிருந்த நிலையில் மு.வ உரைநடை வளர்ச்சிக்குப் புத்துணர்ச்சி எழுப்பினார் எனலாம். மு.வ அவர்கள் ஆண்டுக்கணக்கில் நாவல்களை எழுதுவது கிடையாது. பல மாதங்களாக மனதில் உருவாக்கி அதனை அப்படியே ஏழெட்டு நாட்களில் ஒரு முழு நாவலாக்கி விடக்கூடிய அற்புதமான படைப்பாளி ஆவார். அவ்வாறு எழுதக் கூடியவற்றிலும் ஒரு சில பிழைகளைத் தவிர வேறொரு குறையும் இருப்பதில்லை என்பது வியப்பிற்குரிய ஒன்றாகும். “காலந்தோறும் ஏற்படும் புதிய வளர்ச்சிகளை எல்லாம் ஏற்றுத் தனதாக்கிக் கொண்டு வளாந்து வரும் தமிழ்மொழிக்கு இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஏற்பட்ட தேக்கத்தைத் தமது படைப்பு முயற்சிகளாலும் பயிற்று முறையில் காட்டிய ஊக்கத்தாலும் தகர்த்து, நம் தாய்மொழி தனது இயற்கை வழியில் வளர்ச்சியுற உதவிய டாக்டர்.மு.வ அவர்களைத் தமிழுக்கு விடுதலை தந்தவர் என்று போற்றுவது முற்றிலும் பொருத்தமேயாம்“ என்று கண.முத்தையா அவர்கள் மு.வ நினைவு மலர் இதழில் குறிப்பிட்டுள்ளார்.

படைப்புகளில் மு.வ செய்த புதுமைகள்

1. மு.வ தம் படைப்புகளில் கதைமாந்தர்களுக்கு நல்ல தமிழ்ப் பெயர்களைச் சூட்டியுள்ளார்.
2. கொடிய பாத்திரங்களுக்குத் தமிழ்ப் பெயரைச் சூட்டியதில்லை.
3. பாத்திரப் பண்புகளைப் பெயர்களிலேயே அறியும்படிச் செய்துள்ளார்.
4. சிதைந்து போன ஊர்ப் பெயர்களையும் அதன் செவ்விய உண்மை வடிவத்தில் அளித்துள்ளார்.

5. இட்லி என்பதனை இட்டளி - ஆவியில் இட்டு அளிக்கும் உணவு என்று தமிழ்ப்படுத்துகிறார்.

6. பல ஆங்கிலச் சொற்களைத் தமிழ்ப்படுத்தி வழங்கியுள்ளார்.

(சான்று) ஒட்டல் - உணவுக்கடை, ஐஸ்புரூட் - பனிப்பழம்

இவை போன்ற சிறு சிறு புதுமைகளின்வழி தமிழ்மொழிக்கு சிறந்த படைப்பாளியாக வளம் சேர்த்துள்ளார்.

உ. பெண், கள்ளோ? காவியமோ? பெண், கள் அல்ல, காவியம்;

அ்.ஜெஸ்மின் ஹெர்லின்
ஆய்வியல் நிறைஞர்
தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
விழுப்புரம்.

முன்னுரை

இலக்கியம் மனிதனுக்குத் தரும் இன்பங்கள் பல மகிழ்ச்சியளிப்பதோடு மட்டும் அல்லாமல் அறிவூட்டுவதும் நன்னெறி புகட்டுவதுமாகவும் விளங்குகிறது. மனிதனின் அகவாழ்வுப் போராட்டங்களைப் புறவாழ்வோடு இணைத்துப் பேசுவதால் இலக்கியத்தை மனித அனுபவத்தின் வெளிப்பாடு என்று கூறினால் அது மிகையாகாது. அதிலும் குறிப்பாக நாவல் இலக்கியத்தைக் கண்டோமானால் சமுதாயக் கருத்துக்களே செறிவாக அதில் இடம் பெற்றிருக்கும், பல நடைகள் இலக்கியத்தில் உள்ளன. அவற்றில் தனித்தமிழ் .நடைக்கு வித்திட்ட பெருமைக்குரியவர் டாக்டர்.மு.வரதராசன் அவர்கள் அவரைப் பற்றிய சில வரிகள்.

படைப்பாளி

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற எழுத்தாளர். எண்ணப் பதிவுகளை எழுத்தில் கொண்டு வந்த சிறந்த நாவலாசிரியர். இவரின் நடை எளிய தமிழ் நடை கருத்தாழமிக்க சொற்களை இவரது படைப்புகளில் காணலாம். பன்மொழிப் புலவர். செல்லமாக 'மு.வ' என அழைக்கப்பெற்றவர். பெண் என்ற ஓவியம் மயக்கும் கள்ளாக அல்ல காவியமாகத்தான் இருப்பாள் என்ற கருத்தினை கள்ளோ?காவியமோ? என்ற நாவலில் திறம்பட கூறியுள்ளார்.

பாத்திரப் படைப்பு

எழுத்தாளன் சமூகத்திற்குத் தான் கூற விரும்பும் கருத்தினைத் தன் உயிரோட்டப் படைப்பில் உலவும் பாத்திரங்களின் வாயிலாகத்தான் கூறுவர். சமூகக் கருத்துக்களை மட்டும் கூறாமல் சில நேரங்களில் தனிமனிதனின் மாண்பினைப் போற்றும் விதமாகவும் நாவல் அமையும். அவ்வகையில் அருளப்பன், மங்கையர்க்கரசி, பெரியவர் (அருளப்பனின் தந்தை), முருகையா ஆகியோரின் படைப்பு சிறப்பு. இருப்பினும், மங்கையர்க்கரசி (மங்கை) யின் பாத்திரப் படைப்பே வியக்க வைத்தது.

கதைச்சுருக்கம்

கள்ளோ?காவியமோ? இந்நாவலில் மு.வ.அவர்கள் வழி நடத்திச் செல்லும் பாங்கே தனித்துவமானது. கதாபாத்திரங்களான அருளப்பனும், மங்கையும் தாங்களே தங்கள் கதைகளைக் கூறுவதுபோல் அமைந்துள்ளது.

மங்கை, தாய் இறந்து, தந்தை இருந்தும் இல்லாமல், அண்ணன் எங்கோ? நாடோடியாய் இருக்க, அத்தையின் பிடியில் முள் மேல் நடக்கும் வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறாள். ரயில் நிலையத்தில் இருந்த குடும்பம் தங்களுடன் சென்னை வருகிறாயா? என மங்கையிடம் கேட்டு அவளையும் அழைத்துக் கொண்டு சென்றனர். கூண்டுக்குள் இருக்கும் பறவையைத் திறந்து விட்டால் மகிழ்ச்சியடையாதா என்ன? சென்னைக்கு அழைத்துச் சென்ற குடும்பம் அவளை வேலைக்காரி போல் அல்லாமல் எழுத்தறிவினைக் கற்பித்து உலகினை அறிய வைக்கின்றனர். இளம் பிராயம் முடிந்து குமரிப் பருவம் வந்ததும் காதல் கொள்கிறாள் தன் வீட்டுச் சின்னவர் அருளப்பனிடம். அவனும் ஒரு வித உந்துதலின் பேரில் காதல் கொள்கிறான். இருவர் மனமும் ஒன்றாகியதை அறிந்த அருளப்பனின் தந்தை இருவருக்கும் மணம் முடித்து வைக்கிறார். இனிமையான இல்லறத்தில் பிரச்சனை. பிரிகின்றனர் இருவரும். குழந்தை தேன்மொழி அருளப்பனிடம் இருக்கிறாள். மங்கை பம்பாய் செல்கிறாள். அங்கு உணவு விடுதியில் மேலாளராக இருந்து, அதனை வளர்ச்சியுறச் செய்து, பின் அங்கு அருளப்பனைக் கண்டு சென்னைக்கு வந்து, தன் உயிர் போன்ற குடும்பத்தின் முன்னே உயிரினை இழக்கிறாள்.

மங்கை என்னும் நல்லாள்

மங்கை தன் தாயை இழந்து அத்தையின் நிழலில் சிக்குண்டு தவிக்கும் சிறு பெண். ரயில் நிலையத்தில் பெட்டிப் படுக்கையைச் சுமந்துச் செல்ல, பட்டணத்தில் வேலைக்காரியாக வர அழைத்த குடும்பமே தன் அடைக்கலமாகப் போகிறது என்பதை அறியாத பருவம்.

> *"ஒரு இன்பத்தை விட்டு மற்றொரு துன்பத்தை*
> *அடையும்போது மாறுதல் ஒரு வகை இன்பம்"*

என்பதை மு.வ.அவர்கள் மங்கையின் மூலம் நமக்குக் கூறுகிறார்.

> *"பறந்துப் போக வழி பார்த்துக் கொண்டு கூட்டில்*
> *அடைப்பட்ட கிளியாக இருந்தேன்"*

தற்போது மகிழ்கிறேன் என மங்கை கூறுவதிலிருந்து அவளின் துன்பத்தை அறியலாம்.

பெரியவர் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும், உலகில்

நடப்பவற்றை அறிய வேண்டும் எனக் கூறும்போது தான் வேலைக்காரி தானே தமக்கு எதற்கு? என எண்ணாமல் ஆர்வத்துடனும், கூர்மையுடனும் கற்றாள். இதன் மூலம் எந்நிலையில் இருப்பினும் ஆர்வம் இருப்பின் சாதிக்க முடியும் என்ற கருத்தை மங்கையின் மூலம் நம்முள் விதைக்கிறார் நாவலாசிரியர்.

குமரி ஆனபின் அருளப்பனின் மீது இருந்த மரியாதை காதலாக மாறுகிறது. அருளப்பனுக்குப் பெண் பார்க்கும் படலம் நடந்து கொண்டிருக்கும் தருவாயிலும், பெண் எப்படித் தன்னுடைய விருப்பத்தினை முதலில் கூறுவது எனும் நாகரீகத்தினைக் கடைபிடிக்கிறாள் மங்கை.

மங்கையை பெரியவரின் மகள் வீடு இருக்கும் பெங்களூருக்கு அனுப்பி வைக்கின்றனர். அங்கே அம்மகளோ,

“மாமியார் உடைத்தாள் மண் குடம்
மருமகள் உடைத்தால் பொன்குடம்”

என்ற பழமொழிக்கேற்ப மங்கையை வாட்டி வதைக்கிறாள். அந்நேரத்தில் கூட அமைதி காக்கிறாள் மங்கை, யாருக்காக? தான் விரும்பும் அருளப்பனின் குடும்பத்திற்காக மட்டுமே.

மங்கையின் மனவிருப்பத்தின்படியே மணம் முடிக்கிறாள் அருளப்பனை, திருமண வாழ்க்கை இன்பமாகச் சில ஆண்டுகள் கழிந்தப் பின் சிறு பிரச்சனை அவர்களுக்குள் ஏற்பட்ட போது அருளப்பனோ,

“அடிமைக்கு உரிமை வாழ்வு தகாது” என்று கூறி மங்கையின் மனதினை வேதனைப்படுத்தி அவளை வெறுக்கிறான், இருப்பினும் அவள்,

“வேலிக்கு வெளியே
தலையை நீட்டிய என்
கிளைகளை வெட்டிய
தோட்டக்காரனே!
வேலிக்கு அடியில்
நழுவும் என் வேர்களை
என்ன செய்வாய்?”

இந்தக் கவிதையில் உள்ளதுபோல் என்னதான் தன் அன்பை அவன் காண்பிக்க விடாமல் தடுத்தாலும் தன்னுள் இருக்கும் அவன் மீதான அன்பு விரிந்துக் கொண்டேதான் இருக்கும் என அவளின் உள்ளத்து நினைவினை நமக்கு எடுத்துரைக்கிறார் ஆசிரியர்.

“கதவை திறந்துக் கொண்டு உள்ளே வந்தார்
சாய்வு நாற்காலியில் கண்ணை மூடிக்கொண்டு
இருந்தேன் எழுந்திரு என்றார் போட்டுச் சாப்பிடுங்கள்”

என்றேன்.இச்சொற்களில் என்ன குற்றமோ? குற்றம் செய்யவில்லை என நான் போராடவில்லை. உடல்நோய் காரணமாகவே நான் நாற்காலியில் கண்ணை மூடிக்கொண்டிருந்தேன். அவரின் தோழர் வந்ததுக் கூடத் தெரியாது. தெரிந்தால் அவ்வாறு இருப்பேனா? என நம்மிடம் வினாக் கேட்கிறாள் மங்கை.

இந்நினைவோடு அருளப்பனையும், தன் மகள் தேன்மொழியையும் பிரிந்து பம்பாய் செல்கிறாள். அங்கு உணவு விடுதியில் மேற்பார்வையாளர், மேலாளர் பொறுப்பினை ஏற்று உணவு விடுதியினை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்கிறாள். ஆனாலும், பிறரின் இழிவான வார்த்தைக்கும், பார்வைக்கும் பலி ஆகிறாள். அதனைத் துச்சமென மதித்து முன்னேற்றப் பாதையில் செல்கிறாள் மங்கை.

அருளப்பனைப் பிரிந்து வரும்போது அவனுக்கு எழுதி வைத்த கடிதத்தில்,

"நான் எப்படியும் வாழ்வேன், உங்களுக்கு உரியவளாகவே சாவேன், நம்புங்கள்" என்ற வார்த்தையின் படி கற்பு பிறழாமல் நடக்கும் மங்கையை நம் நெஞ்சக் கூட்டில் அமர்த்துகிறார் பேராசிரியர்.

உணவு விடுதியில் தன் கணவனைக் கண்டு தன்னை மன்னிக்கும்படி கூறி அவனுடன் சென்னை வந்து குடும்பத்துடன் இணைகிறாள். ஆனால் தன் மகள் தன்னை **'அம்மா'** என அழைக்கவில்லை என மருங்கினாள்.

மங்கைக்குக் காய்ச்சல் ஏற்படுகிறது. உடல் நோய் மட்டுமல்ல, மனநோயும் சேர்ந்தே ஏற்படுகிறது. மங்கை இறக்கும் தருவாயில் குழந்தை **'அம்மா'** எனக் கூறுகிறது. தாயின் தேவை இதுதானே, தேவை நிறைவேறிய பின் மங்கை அமைதியடைகிறாள் இறப்பில். . .

அவளின் இறப்பில் **'உங்களுக்கு உரியவளாகவே சாவேன்'** என்ற அவளின் வார்த்தை நம் காதில் வருத்தத்துடன் ஒலிக்கிறது.

முடிவுரை

"தன் குடும்பத்தை விட்டு வெகுதூரம் வந்தும் அந்நினைவுகள் அவளை விட்டு அகலவில்லை தன் உடைமாறினாலும் தன் உள்ளத்தை அவள் மாற்றவில்லை தன் பெயரை மங்காபாய் என பிறர் மாற்றினாலும் மனம் மாறவில்லை மங்கைக்கு"

இதன் மூலம் அவளின் களங்கமற்ற வாழ்வை நம் மனதில் பதிவு செய்கிறார் மு.வ. மங்கை என்னும் மங்கா ஒளி மூலம் பெண் என்பவள் மதியினைக் கெடுக்கும் கள் அல்ல, கருத்துக்களை உள்ளடங்கியிருக்கும் காவியமே என்கிறார் டாக்டர் மு.வரதராசன் அவர்கள்.

3. முனைவர் முவரதுராசன் சிறுகதைகளில் பெண்கள்

பேரா.ஆ.மரிய சாந்தி
தமிழ்த்துறை
தூய மரியன்னை (தன்னாட்சி) கல்லூரி
தூத்துக்குடி-1.

முன்னுரை

மு.வரதராசன் எழில்மிக்க எடுப்பான தோற்றமுடையவர். புன்னகை பூத்துப் பொலிவோடு விளங்கும் முகத்தையும், அன்பும் அறிவும் சுழல்விளக்குப் போல் சுடர்விட்டுப் பொங்கும் கண்களையும் உடையவர். எண்ணங்களை எல்லாம் எழுத்தாக்கியவர். பண்பட்ட நெஞ்சம் உடையவர். இவர் 'பெண்மை வாழ்க' என்ற கட்டுரை நூலைப் படைத்தளித்துள்ளார். இவரது சிறுகதை தொகுப்புகளில் ஒன்று குறட்டை ஒலி. பதினொரு சிறுகதைகள் அடங்கிய இத்தொகுப்பில் பெண்கள் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளனர் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

பெண், நன்மையின் திசைகாட்டி

பெண் நல்லனவற்றைச் சுட்டிக்காட்டுபவளாக விளங்குகிறாள். 'அந்த மனம் வருமா?' என்ற சிறுகதையில், பெரியவரின் மனைவி விருந்தோம்பும் பண்புடையவராக இருக்கிறார். பெரியவர் இரவும் பகலும் பொதுக்காரியங்களில் முழு ஈடுபாடு கொண்டு உழைக்கும் அளவுக்கு, இவர் குடும்பத்தில் மிகுந்த பொறுப்புணர்வுடன் செயல்படுகின்றார். தன் மகனின் நண்பருக்குப் பெரியவரின் செயல்பாட்டைக் கூறும்போது,

ஊர்மக்களின் நலனுக்காக ஆடவர்கள் முழுநேரம் உழைக்கவும், வெளிக்காரியங்களில் அதிகம் ஈடுபடவும் இலைமறை காயாக இருந்து அதிகம் உதவுபவர்கள் பெண்களே! முதிர்ந்த வயதிலேயும் இளைஞரைப்போல் மிகுந்த சுறுசுறுப்புடன் ஊருக்காக உழைக்கும் பெரியவர் ஒருவர், தன்னலமற்றவராய், தனக்கென எதையும் வைத்துக் கொள்ளாமல் தாராள மனதுடன் தன்னிடம் உள்ளவற்றைப் பிறருக்குக் கொடுத்து மகிழும் பெருந்தகையாளராய் இருக்கின்றார். ஆறுவயதில் தாயை இழந்த இவரை இவரது தமக்கைதான் வளர்த்தெடுத்தார். இவரைக் குணக்குன்றாக உருவாக்கியுள்ளார். ஒரு பெண்ணால் எதையும் சாதிக்க முடியும். பெருந்தன்மை கொண்ட உயர் பண்பாளர்களை உருவாக்கித் தர முடியும். உலக உயிர்களை வாழ்விக்கும் வான்மழை போல் கைம்மாறு கருதாமல் உதவி செய்யும் சான்றோர்களை உருவாக்கித் தர இயலும் என்பதை மு.வ. தம் சிறுகதையில் படைத்துள்ளார்.

பெண்மணியே கண்மணி

பெண்குழந்தைகளுக்குத் தாயின் கருவறையே கல்லறை என்ற நிலை சமூகத்தில் நிலவுகிறது. 'சுடரின் நகைப்பு' என்ற சிறுகதையில் பெண் குழந்தை பெருமையாகப் பேசப்படுகிறது. பெண் குழந்தையின் இழப்பை முனைவர் மு.வ. பேரிழப்பாகத் தன் கதையில் சுட்டுகின்றார். இயற்கையிலேயே அழகு மிக்கோராகிய பெண்களுக்கு நகைகள் தேவையில்லை. அழகு பொம்மைகளாகத் தங்களை ஆக்கிக் கொள்வதால் சுதந்திரமற்ற நிலைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்பதைத் தம் கதையில் உணர்த்துகின்றார். நண்பர்கள் இருவர் உரையாடும்போது,

"இப்போதிருந்தே அவ்ளுக்கு ஒரு நகையும் போடாமல் வளர்க்கப் போகிறேன். பார், அவளுக்கு இருக்கும் இயற்கையழகே போதும், அழகியாக வளர்ந்தபின், அவளே நகையை வெறுக்கப் போகிறாள். பார்" (ப.28) எனச் சவால் விடுகின்றார். இதன் வழியாக, பெண்குழந்தையை எவ்வாறு வளர்க்க வேண்டும் என முனைவர் மு.வ. எடுத்துரைக்கின்றார். பெண் குழந்தைகளுக்குத் தேவையற்ற அலங்காரங்களைத் தவிர்த்து, சுயமதிப்பை அவர்கள் உணரும் வகையில் வளர்க்க வேண்டும். பட்டாடைகளாலும் நகைகளாலும் வரும் அழகை விட இயற்கையழகே போதும் என்ற மனநிலையை உருவாக்க வேண்டும்.

பெற்றோர்களும் மற்றவர்களும் பெண்குழந்தை இறந்தபோது இதயமே வெடித்துவிடுவதைப்போல் துன்புற்றனர். தாங்க முடியாத துன்பத்தின் எல்லையை அடைந்தனர். அலைபோல் துயரக்குரல் பொங்கிப் பொங்கி எழுந்தது. குழந்தையின் சாவை நினைக்கும்போது என்ன இயற்கை? என்ன கடவுள்? என்ன படைப்பு? என்ன வாழ்வு? என வினாக்கள் எழுகின்றன.

பழி சுமத்தப்பட்ட பத்தினி

உயர்ந்த உன்னதமான இடத்தில் வைத்துப் போற்றப்பட வேண்டியவள் பெண். தான் பெற்ற பிள்ளை இல்லை என்றாலும், தாயில்லாக் குழந்தையை அரவணைத்துப் பாலூட்டி, பெற்ற தாயினும் மேலாகப் பராமரிக்கும் உத்தமியின் பெயர் மாசுபடுத்தப்படுவதை இறந்த சித்தப்பா என்ற சிறுகதை சித்திரிக்கின்றது.

பெண்கள் மதிக்கப்பட்டால் நாடும் வீடும் ஒளிபெறும். பெண்கள் அவமதிக்கப்பட்டால் ஏற்படும் அவலநிலை இக்கதையில் வெளிப்படுத்தப்படுகிறது. பெண்ணின் இயல்பு உள்ளது உள்ளவாறு உணரப்படாதபோது அவளது மனம் துன்பத்திற்கு உள்ளாகிறது.

"மனைவி இறந்துவிட்டாள். குழந்தைக்கு அப்போது மூன்றுமாதம். அண்ணன் மனைவி நல்லவள். தன் குழந்தை நான்கு மாதம்

பெரியது. அதையும் அவ்வளவாகக் கவனிக்காமல் என் பெண்ணை எடுத்துவைத்துக்கொண்டு பால் கொடுத்து வளர்த்தாள். அந்தப் படுபாவி அண்ணனுக்கு இது பொறுக்கவில்லை. அண்ணியை அடிக்கவும் உதைக்கவும் தொடங்கினான். அதோடு நின்றிருந்தாலும் கவலை இல்லை. அண்ணியிடம் நான் பழகிக் கொண்டிருப்பதாக ஊரில் சிலரிடத்தில் சொல்லத் தொடங்கினான். அது என் காதுக்கு எட்டியது. என் உடம்பே குன்றிவிட்டது. என் குழந்தைக்குப் பால் கொடுத்துக் காப்பாற்றும் புண்ணியவதி ஒரு குற்றமும் அறியாத உத்தமி. என்னால் இந்தப் பழிக்கு ஆளாவதா என்று அன்றைய இரவே ஊரைவிட்டு ஓடிவந்து விட்டேன்" (ப.42).

தான் ஓடி வந்ததற்கான காரணத்தைச் சிற்றப்பா கலங்கிய கண்ணை உடையவராய் முத்தாவிடம் வெளிப்படுத்துகின்றார். பெற்றோரின் ஆதரவின்றி வளர்க்கப்பட்ட பெண், கணவன் வீட்டிலும் மாமியார் கொடுமைக்கு உட்படுத்தப்பட்டவளாய் கைக்குழந்தையோடு துரத்தி அனுப்பப்படுகின்றாள். குழந்தையின் வயிறு வாடி உலர்ந்திருப்பதோடு, அப்பெண்ணின் கண்களிலும் கண்ணீர் நிறைந்துள்ளது. எத்தகைய கொடுமைக்கு ஆளானாலும் பெண் அவ்வீட்டிலேயே வாழ்ந்தாக வேண்டும் என்ற கட்டாயத்திற்கு உட்படுத்தப்படுகிறாள். முத்தா தன் தங்கையின் துன்பநிலையைப் புரிந்துகொள்கிறான்..

"இந்தப் பெண் இரண்டு ஆண்டுகள் பொறுத்துப் பொறுத்து வாழ்ந்ததுபோல் உலகத்தில் வேறு யாருமே வாழ முடியாது" என்று ஊரார் சொல்கிறார்கள். இது அப்பாவின் செவிக்கு எட்டவில்லையே தங்கையின் குணம் இவருக்குத் தெரியாதா?" (பக்.36,37) என்று தனக்குள் கேட்டுக் கொள்கிறான். சித்தி படுத்தும் சித்திரவதையும் இக்கதையில் சுட்டிக்காட்டப்படுகிறது. ஒரு கண்ணில் வெண்ணெய் ஒரு கண்ணில் சுண்ணாம்பாகப் பார்க்கும் பார்வை, கால் வயிற்றுச் சாப்பாடு, வாய் திறந்தால் வம்பளந்து வலுச்சண்டைக்கு இழுக்கக் காத்திருக்கும் கொடுமை. இத்தகைய சித்தியிடம் ஆறுதல் தேடி வந்திருக்கும் அப்பெண் எவ்வாறு நிம்மதியாக வாழ முடியும்? பெண்ணின் துன்பம் நிறைசூழல் தந்தையால் புரிந்து கொள்ளப்படாத நிலையை இக்கதை படம்பிடித்துக்காட்டுகிறது. நல்மனம் படைத்த நங்கையர்கள் மேலும் மேலும் குற்றப்படுத்தப்படுகின்றனர் என்பது சுட்டிக்காட்டப்படுகிறது.

எல்லாரும் சமம்

"எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு நாம்
எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு"

பாரதியின் இப்பாடலடிகள் எல்லாரும் சமம் என்பதை உறுதிப்படுத்துகிறது.

'எல்லோரும் சமம்'' என்ற சிறுகதையில் ஆங்கிலோ இந்திய மங்கை உயர்வாகவும், வறுமையுற்ற நம்நாட்டுப் பெண் தாழ்வாகவும் மதிக்கப்படும் நிலையை மு.வ. அவர்கள் எடுத்துரைத்து, மக்களுக்கு விழிப்புணர்வைக் கொடுக்கின்றார்.

வெயிலில் செல்லும் ஆங்கிலோ இந்திய பெண்களைப் பார்த்து மிகுந்த இரக்கம் கொள்பவர்கள், உடுத்திய புடவையோடு எவ்வித ஆடம்பரமும் இன்றி, வறுமையில் வாடுகின்ற பெண்மீது வெறுப்புக் கொள்கின்றனர். கலங்கிய கண்ணை உடையவளாய் துயரத்தோடும் கவலையோடும் இருக்கும் இப்பெண்ணின் நிலைகண்டு அவர்களின் இதயத்தில் இரக்கம் சுரக்கவில்லை. வசதியாக இருப்பவர்கள். அதாவது, மேட்டிலே இருக்கின்றவர்கள் சிறிது கீழே இறங்க நேர்ந்ததற்காக உள்ளம் கசிந்து வருந்துபவர்கள், என்றென்றும் வறுமை என்னும் பள்ளத்திலேயே ஆழ்ந்து கிடப்பவர்களைக் கண்டு வருந்தாமல் இருக்கும் குறைபட்ட நிலையைச் சுட்டிக்காட்டுகின்றார். மு.வ.அவர்கள் பெண்ணை முதன்மைப்படுத்துகின்றார் மதிப்பளிக்கின்றார்.

"நான் எழுந்து இடம் விட்ட காரணம் பெண் என்ற ஒரு காரணம்தான். ஆங்கிலோ இந்தியப் பெண் வந்திருந்தாலும், வேறு எந்தப்பெண் வந்திருந்தாலும் நான் இடம் விட்டிருப்பேன். இந்தியப் பெண் தமிழ்ப்பெண் என்ற சிறப்புக் காரணங்களும் என் மனத்தில் அப்போது இல்லை'' (ப.60) என ஆடவர் ஒருவர் எடுத்துரைப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

பெண்ணின் இயல்பு

இரக்கமுடையவள் பெண். இரக்கமாகிய இயல்புநிலை இக்கதையில் உள்ள பெண்ணிடம் இல்லாமல் போனது, கையையும் காலையும் தூக்கத் தூக்கும் ஆடிப்பாவையைப் போல பெண்ணின் இயக்கம் ஆடவரின் பிடிக்குள் இருப்பதை மு.வ. எள்ளி நகையாடுகின்றார். ஒரு பெண் மெயில் வண்டியில் பயணம் செய்தபோது, குழந்தையைப் படுக்க வைத்துத் தானும் காலை நன்றாக மடக்கிப் படுத்துக்கொண்டாள். 'ஏன் அவ்வளவு துன்பத்தோடு படுத்துக் கொண்டிருக்க வேண்டும்? குழந்தையோடு நகர்ந்து இன்னும் கொஞ்சம் மேலே வரலாமே' என்று ஒருவர் கூறியவுடன் அப்படியே நகர்ந்து காலை நீட்டிக் கொள்கிறாள் அப்பெண். பயணிகள் பலர் நின்றுகொண்டு பயணிக்கும்போது அப்பெண் அவ்வாறு படுத்திருப்பது பலருக்கும் வெறுப்பையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்துகின்றது. அவள் எழ முயன்றாலும் எழாதே என்று கூறும் ஆடவரின் அடக்குமொழிக்கு அடங்கி விடுகிறாள். இருவரும் கணவன் மனைவியாக இருக்குமோ என்று பிறர் கணிக்கும் அளவுக்கு அவரது அக்கறை மிகுகிறது.

எந்தவொரு உறவும் தொடர்பும் அற்ற ஓர் ஆடவர் ஏன் இந்தப் பெண்ணை அடக்கி ஆள வேண்டும்? இப்பெண்ணும் சூழலைப் புரிந்து சுயமாக இயங்காதவளாய் அடங்கிப் போவது ஏன்? என்ற வினாக்கள் எழுகின்றன. பெண் சொந்தக்காலில் நிற்பது எப்போது? பெண்கள் சுய சிந்தனை உடையவர்களாய் சுய செயல்பாடு உடையவர்களாய் துணிந்து செயல்பட வேண்டும் என்பதை இச்சிறுகதை உணர்த்துகிறது.

ஆருயிர்களிடத்து அன்பு

“குறட்டை ஒலி” என்ற சிறுகதையில் வருகின்ற பெண் மிகுந்த அன்பும் இரக்கமும் உடையவளாய் இருக்கின்றாள். ஏழாவது குழந்தையை ஈன்றெடுத்த அவளது இல்லத்திலுள்ள நாயும் ஐந்து குட்டிகளை ஈன்றது. வெளியில் காலையில் போன நாய் மாலையாகியும் வீட்டுக்கு வரவில்லை. குட்டிகள் ஓயாமல் கத்திக் கொண்டிருந்தன. பால் வாங்கவும் முடியாத வறுமை நிலை.

“குட்டிகளின் ஒலி பொறுக்க முடியாத எல்லைக்குச் சென்றது” (ப.85). சின்ன மண்ணெண்ணெய் விளக்கின் ஒளியில் ஏழைப்பெண் குட்டிகளின் பக்கத்தில் உட்கார்ந்து, தன் மார்பிலிருந்து பஞ்சில் பால் எடுத்து நாய்குட்டிகளின் வாயில் வைத்து பசியாற்றினாள். நாய் குட்டிகளின் ஒலி அடங்கின. “அந்த இளங்குழந்தையின் தாய், சிறு விளக்கை எடுத்துக் கொண்டு எழுந்து நடந்தாள். விளக்கொளியில் அவளுடைய முகம், மலர்ந்த செந்தாமரையைப் போல் மகிழ்ச்சியோடு விளங்கியதைக் கண்டேன்” (ப.86) என்கிறார் மேல்மாடிக்காரர்.

வறுமையால் ஏற்பட்ட அவலம்

‘வாழும் வழி’ என்ற சிறுகதை ஓர் இளம்பெண்ணின் அவலநிலையைக் காட்டுகிறது. வறுமையின் காரணமாக வாழ்க்கைப் பாதிக்கப்படுகிறது. மாற்றுச் சேலை இல்லாத வறுமை நிலை சுட்டப்படுகிறது.

“எனக்கு ஒரே ஒரு மகளுங்க. பெண்டாட்டி போயி அஞ்சு வருசம் ஆச்சுங்க. அந்த மகள் வயசுக்கு வந்து விட்டாள் அவளுக்கு எப்படியாவது இந்தச் சித்திரையில் கல்யாணம் பண்ணி முடிக்கணும். அதுக்காத்தான் பழனி ஆண்டவரிடம் காலையிலே போய்ப் பிரார்த்தனை பண்ணிக்கொண்டு வந்தேனுங்க. மலையிலிருந்து வந்தபோது சந்தோசமா வந்தேனுங்க. வரும்போது எதிரிலே என் மகளைப் போல அறியாத பெண்களைப் பார்த்தேனுங்க. அவர்கள் நல்ல நல்ல கலர்கலரான துணிகள் போட்டிருந்தார்கள். என் மகளுக்கும் அதுபோல ஒன்று இருந்தால் நல்லபடி கலியாணம் பண்ணி வைக்கலாம் என்று நினைச்சேனுங்க. அவளுக்கு மாற்றுச் சேலையே இல்லைங்க” (ப.91) என்றான்.

உயிர்ப்பறவை பறந்தது

'இயற்கை பொல்லாதது' என்ற சிறுகதையில் இளநங்கை ஒருவரின் இறப்பு சுட்டப்படுகிறது. கிணற்றுக்குத் துணிகளை அலசுவதற்குச் சென்றவள் தவறி விழுந்து மரணமானாள். அவளைக் காப்பாற்றும் வாய்ப்பு கைநழுவி விட்டதை எண்ணி பலரும் பலவிதமாய் புலம்பி கதறி அழுகின்றனர்.

'அடி அக்கா குழந்தைகளைப் பார்த்துக் கொள் என்று இப்போது தான் சொல்லிவிட்டுப் போனாயே! அம்மாடி! மகளே உன் வாழ்வு இப்படியா முடிந்து போச்சு, மகளே! அடி! கண்ணம்மா சாப்பிட்டு வந்து என்னோடு பேசிக் கொண்டிருந்தாயே! அக்கா கிணற்றுக்கு வர மாட்டாயா என்று என்னையும் கூப்பிட்டாயே! வந்திருந்தால் உன்னைக் காப்பாற்றியிருப்பேனே!'' (ப.96) எனப் பலரின் வேதனையுணர்வு வெளிப்படுத்தப்படுகிறது. வாழ்க்கை நீரில் தோன்றி மறையும் குமிழிகள்போல் உள்ளதை எடுத்துரைத்து, ஒரு பெண்ணின் உயிர் இப்படி அநியாயமாகப் போய் விட்டதை எண்ணி மு.வ. வருந்துகின்றார். இக்கதையில் பெண்கள் மதிக்கப்படுகின்றனர். குடும்பத்தில் அன்புடன் பேணி காக்கப்படுகின்றனர். பெண்மணிகள் தம் வாழ்வின் கண்மணிகளாய் போற்றப்படுகின்றனர். பெண்குழந்தைக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டபோது பெற்றோர்களின் நிம்மதியற்ற நிலை வெளிப்படுத்தப்படுகிறது.

பெண்ணின் அறிவாற்றல்

"அக்கரைப் பச்சை" என்ற சிறுகதையில் மனைவி தன் கணவனுக்கு உண்மையை எடுத்துரைப்பவளாகவும், அறிவுரை பகர்பவளாகவும் இருக்கின்றாள்.

"நீங்கள் ஏமாந்தவர்கள், உங்களுக்கு யார் எப்படி என்று கண்டுபிடிக்கத் தெரியாது. உங்களோடு இரண்டு நாள் நல்லபடி பேசினால் நல்லவர் என்று நம்பி விடுவீர்கள். அப்புறம் பட்டுத் தெரிந்து கொள்வீர்கள்" (ப.119) என்கிறாள்.

தாய் வீட்டில் பெண் நல்லவளாக இருந்தால் புகுந்த வீட்டிலும் நல்லவளாக இருப்பாள் என்று சொல்ல முடியாது. புகுந்த வீட்டில் எப்படி வாழ்கிறாள். சுற்றத்தாரிடத்தில் எப்படிப் பழகுகிறாள் என்பதை அறிந்தால் உண்மை தெரியும். தன் கணவருடைய நண்பரின் மனைவியிடம் குற்றம் ஒன்றும் இல்லை. அவள் நல்லவள்தான் என்பதைக் குறிப்பிடுகின்றாள். பெண் கூர்த்த மதியுடையவளாய், ஆய்ந்து அறியும் திறம்படைத்தவளாய் இருக்கின்றாள்.

முடிவுரை

மு.வ. அவர்களின் சிறுகதைகளில் பெண்குழந்தைகள் அன்புடன் பேணிக்காக்கப்படுகின்றனர். பெண்கள் மதிக்கப்படுகின்றனர். பொருளாதார நிலையில் பெண்கள் தாழ்ந்த நிலையில் உள்ளனர். மிகவும் வறுமைக்கு உட்பட்டவர்களாய் இருக்கின்றனர். கணவன் மனைவி வயது பொருத்தமற்ற நிலை சுட்டிக்காட்டப்படுகிறது. பெண்களின் உயிர் இழப்பு பேரிழப்பாக உணர்த்தப்படுகிறது. குடும்பத்தில் பெண்கள் மிகுந்த பொறுப்புடையோராய் இருக்கின்றனர். நகையாசையற்ற நங்கையரை, விடுதலையடைந்த பெண்மணிகளை முனைவர் மு.வ. படைக்க விரும்பியுள்ளார் என்பதை அவரது சிறுகதைகளிலிருந்து அறிய முடிகிறது.

4. முனைவர் மு. வரதராசனாரின் கற்பனைத் திறன்

மு. சங்கீதா
விரிவுரையாளர்
சீனிவாசன் கலை அறிவியல் கல்லூரி
பெரம்பலூர்.

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர்.மு.வரதராசனார் அவர்களின் சீரிய தமிழ்த்தொண்டு முதன்மையான இடம் பெறுவதாகும். அவர் ஈடு இணையற்ற பெரும் எழுத்தாளராக விளங்கினார். உலகத் தமிழர்களின் உள்ளங்களைக் கவர்ந்த முதல் தமிழராக அவர் திகழ்ந்தார். மு.வ. அவர்கள் 85 நூல்களைச் சிறப்பான முறையில் படைத்து சாதனைப் புரிந்துள்ளார். அவற்றில் இலக்கியத்திறனில் 'கற்பனை' என்ற அமைப்பை ஏற்படுத்தி 'கற்பனை' என்பதை பல கோணங்களில் அமைத்துப் படைத்த விதம் சிறப்பிற்குரியது.

கற்பனை எல்லையற்றதாக உள்ளது. ஒவ்வொரு மனிதனிடத்திலும் ஒவ்வொரு விதமான கற்பனை நிறைந்துள்ளது. அக்கற்பனை குழந்தை முதல் தொடங்கி முதிர்ச்சி நிலை அடைந்தப்பிறகும் கற்பனையானது தொடர்கிறது. அந்த அளவிற்கு அவரது கற்பனை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மு.வ. அவர்கள் தமிழுக்குக் கிடைத்த மாபெரும் சொத்து எனலாம்.

குழந்தையின் கற்பனை

குழந்தையே ஒரு பாட்டு. ஒரு காவியம் என்று கூறலாம். இளங்குழந்தைக்குத் தூய உணர்ச்சி உள்ளது. சிறந்த கற்பனை உள்ளது. அதன் அசைவுகளிலும். ஒலிகளிலும் ஒழுங்கு உள்ளது. குழந்தையின் சிரிப்பில் அதன் விருப்புணர்ச்சி புலப்படுகிறது. அழுகையில் அதன் வெறுப்புணர்ச்சி புலப்படுகிறது. குழந்தை பிறந்தவுடன் அழும் அழுகையிலே முதல் உணர்ச்சிப் புலப்படுகிறது. தாயின் பாலைச் சுவைத்து உண்டு குழந்தை பெறும் மகிழ்ச்சியிலே மற்றொரு வகை உணர்ச்சி வெளிப்படுகிறது. அதன் உறக்கத்தில் காணும் கனவுகளிலும் இன்பதுன்ப உணர்ச்சிகள் புலப்படுகின்றன. கனவு காணும் குழந்தை உறங்கிக் கொண்டே சிரிக்கிறது. ; அழுகிறது. கனவின்போது அதன் முகத்தில் தோன்றும் மலர்ச்சியிலும் சுருக்கத்திலும் அதன் இன்ப, துன்ப கற்பனைகளையும் உணரலாம்.

குழந்தை உறக்கத்தின் போது சிரிக்கிறது. அதற்கு பெற்றோர்கள் நரி மிரட்டுகிறது என்பார்கள். கருநிறக் காக்கை அந்த குழந்தையின் கண்ணெதிரே 'கா.கா.கா' என்று ஒலிக்கும் போது அந்தக் குழந்தை என்னென்ன கற்பனைகள் காணுகிறதோ! வீட்ழல் இருக்கும் பூனையானது 'மியாவ். மியாவ்' என்று கத்தும் போது குழந்தையின் மனதில் தோன்றும் கற்பனைகள் பலவாகும். தாயானவர் குழந்தையைத் தாலாட்டுகின்றனர். ஆனால் அதன்பொருள் விளங்காத நிலையில் குழந்தையின் மூளையில் என்னென்ன கற்பனைகள் எழுப்புகிறதோ!

தாயின் கற்பனை

குழந்தை செய்கின்ற ஒவ்வொரு செயலையும் தாயானவள் பார்த்து ரசிப்பாள். ரசிப்பது மட்டுமில்லாமல் அவளின் மனதில் பலவிதமான கற்பனைகளும் எழக்கூடும். குடும்பத்தில் உள்ள அனைவரும் உணவு உண்ணும்போது குழந்தை செய்கின்ற செயல்கள் நமக்கு வியப்பளிக்கும்.

"படைப்புபல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்ப்படவிதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குனற இல்லைதாம் வாழும் நாளே" (புறநானூறு .188)

இச்செயலை மேலும் கற்பனை நயம்பட அமைத்துள்ள விதம் சிறப்பிற்குரியதாகும். குழந்தை வளரத் தொடங்கியவுடன் தாயானவள் மிகுந்த குழந்தையை நினைத்துக் கற்பனை காணுகின்றாள். தன் குழந்தை எதிர்காலத்தில் எவ்வாறு இருப்பானோ! என்று கற்பனை காணுகின்றாள்.

கற்பனை வித்து

கபிலர், அவ்வையார், கம்பர், சேக்ஸ்பியர், பாரதியார் முதலான கவிஞர்களின் கற்பனைகளைக் கண்டு இன்று வியந்து பாராட்டுகிறோம். அவர்களின் சிறந்த கற்பனைகளுக்கு உரிய வித்து அவர்கள் குழந்தையாய் இருந்த போதே அமைந்தது என்பதை எண்ணிப் பார்த்தல வேண்டும்.

சேக்ஸ்பியரின் இன்ப நாடகங்களின் வித்து அவருடைய குழந்தைப் பருவ சிரிப்பிலேயே இருந்தது. அவர் எழுதிய துன்ப நாடகங்களின் வித்து அப்பருவத்து அழுகையிலேயே அமைந்திருக்கிறது.

தளர்நடையிட்டுத் தடுமாறும் குழந்தையின் கால்களில் எதிர்கால ஓட்டப்பந்தயத்தின் அமைந்திருத்தல் போல். இளங்குழந்தையின் நரி மருட்டும் கனவில் அரிய பெரிய கற்பனைகள் எல்லாம் அமைந்து கிடக்கின்றன.

ஓர் ஆலமரம் எத்தனையோ பழங்களைத் தருகின்றது. ஒவ்வொரு பழத்திலும் எத்தனையோ சிறு விதைகள் உள்ளன. அத்தனைப் பழங்களின் விதைகளும் ஆலமரங்களாக முளைத்து வளர்வது இல்லை.

ஒருசில வித்துகள் தவிர மற்ற எல்லாம் மரமாகும். வாழ்வு பெறாமலேயே அழிந்து போகின்றன. எஞ்சிய ஒருசில வித்துகளிலும் இரண்டொன்றே தாய்மரம் பேரில் நிலைத்து நிற்கிறது.

அதுபோல இந்த உலகைப் படைத்தவனுடைய தன்மை எல்லோரிடத்திலும் வித்தாக அமைந்திருக்கிறது எனலாம். உலகம் அவனுடைய அலகிலா விளையாட்டு. உலகப்படைப்பே அவனுடைய அரிய கற்பனை.

மூவகைக் கனவுகள்

குழந்தைப் பருவத்தில் கனவு காணும் ஆற்றலைப் பெற்ற மனிதன் வளர்ந்த பிறகும் கனவுகள் பல காண்கின்றான். வளர்ந்த பிறகு அவன் காணும் கனவுகளை வகைப்படுத்தலாம். உறக்கக்கனவு, பகற்கனவு, கற்பனைக் கனவு, என்று அவற்றைக் குறிக்கலாம்.

உறக்கத்தில் காணும் கனவே பகற்கனவிற்கும், கற்பனைக் கனவிற்கும் அடிப்படையாகும். பகற்கனவிற்கும் கலைஞனின் கற்பனைக்கும் பெரியதொரு வேறுபாடு இல்லை. முன்னது கலைவடிவம் பெறாதது, ஆதலின் நிலைபெறாமல அழிவது. பின்னது கலைவடிவம் பெறுதலால் அழியாமல் நிற்பது வேறுபாடு இவ்வளவே ஆகும்.

கற்பனை சிறகு

கற்பனையின் சிறப்பை உணர ஒரு கதை கட்டலாம். பறவைகளையும். மனிதர்களையும் படைத்து மண்ணுலகத்தில் வாழுமாறு கடவுள் அனுப்பியபோது. நீங்கள் வேறு வேறு இடங்களில் சென்று வாழுங்கள். ஒரே இடத்தில் வாழ்ந்தால் போட்டியும், பூசலும ஏற்படும் என்றார். அப்போது பறவைகள் கடவுளை நோக்கி மனிதர்கள் பொல்லாதவர்கள் அவர்கள் எங்களைத் துன்பப்படுத்துவர், ஆதலால் மனிதர்களுக்கு மண்ணெல்லாம் சொந்தம் ஆகட்டும். விண்ணில் பறந்து திரியும் உரிமையை எங்களுக்கு மட்டும் கொடுங்கள் என்றதும் கடவுள் உடனே கொடுத்தார். பறவைகள் பறந்து திரிந்தன. ஆனால் மனிதர்கள் கேட்டான் எங்களுக்கு பறக்கும் சக்தியை கொடுக்கவில்லையே என்றார்கள். உன்மனமே ஒரு சிறகு பறவையை காட்டிலும்க் அதை விட வேகமாகவும், உயரமாகவும் பறக்க முடியும் என்றார். இதைக் கதையாகக் கொண்டு உணர்ந்தால் கற்பனையின் சிறப்பு விளங்கும்.

கனவை விரும்புதல்

பகலில் நனவில் கண்டதை அப்படியே இரவில் கனவிலும் காண்பதாக இருந்தால், பெரும்பாலோர் கனவு காண விரும்பமாட்டார்கள். மீண்டும் அவ்வாறே கனவு வந்தாலும் அக்கனவைத் தடுப்பதற்கு பல முயற்சிகளை மேற்கொள்வார்கள். உள்ளம் விரும்புமாறு கனவு அமைந்தால் அதை உவந்து போற்றுகிறார்கள்.

காதலர் வருவதாக ஒருவர் செய்தி கொண்டு வந்ததாகக் கனாக் கண்டாள் காதலி. அத்தகைய கனவு நல்ல கனவு ஆகையால், அதற்கு விருந்தாக ஏதேனும் உதவி செய்ய வேண்டும் என்று அவள் விரும்புகிறாள்.

"காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாது செய்வேன் கொல் விருந்து" (குறள். 1211)

இவ்வாறு உள்ளம் விரும்புமாறு காணும் வாய்ப்பு இருந்ததால் தான், கனவை விரும்புகிறார்கள். பகற்கனவு காண்போரும் உள்ளத்தை உள்ளவாறே காண்பதில்லை உள்ளம் விரும்புமாறு தான் காண்கின்றனர்.

இயற்கை

இயற்கையைப் பாடும் புலவர்களும் உள்ளதை உள்ளவாறே பாடுவதில்லை. உள்ளத்தில் சிறிது குறைத்தும் கூட்டியுமே பாடுகிறார்கள். அதனால் தான் பாட்டு என்பது கலையாகிறது.

இயற்கையைத் தீட்டிக் காட்டும் நல்ல ஓவியங்களை நாம் விரும்புகிறோம். அவை இயற்கையை உள்ளவாறு காட்டாமல் வேண்டாத பகுதிகள் பலவற்றை விட்டு அழகுணர்ச்சிக்கு வேண்டியவற்றை மட்டும் கொண்டு தீட்டப்படுவதால் தான் நாம் விரும்பிப் போற்றுகிறோம்.

இயற்கையைப் பாடும் பாட்டுகளும் அவ்வாறு அமைந்திருப்பதால் தான் போற்றுகிறோம்.

முல்லைப்பாட்டில் காட்டில் உள்ள எல்லாவற்றையும் புலவர் விளக்கிக் கூறவில்லை. அது அவர் நோக்கமும் அன்று. காட்டு வழியில் கார்கால மழையால் அழகுற்ற சில காட்சிகளை மட்டும் காட்டியுள்ளார்.

"செறியிலைக் காயா அஞ்சனம் மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடக் குவிமுகை அங்கை அவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கானம் நந்திய செந்நிலப் பெருவழி" (முல்லைப்பாட்டு 93-97)

புன்னைமரம் அரும்பெடுத்துள்ளது. அந்த அரும்புகளைக் காணும் கலைஞரின் கண்ணுக்கு முத்துக்கள் நினைவுக்கு வருகின்றன. புன்னை

அரும்புகள் நீண்டு அமையாமல், கூரிய முனையும் பெறாமல், முத்துக்கள் போல் உருண்டையில் வெண்மையாய் உள்ளன.

ஆதலின் கண்ணெதிரே காணும் புன்னை அரும்புகளையும் எங்கோ உள்ள முத்துக்களையும் தொடர்புபடுத்தி ஒப்பிட்டுக் காட்டுகிறார். புன்னை மரம் முத்துக்களை அரும்பாகப் பெற்றுள்ளன என்கிறார்.

'மண்ணா முத்தும் அரும்பிய புன்னை' (அகநானூறு. 30)

வேறுபட்ட இடங்களில் உள்ள பொருள்களை ஓரிடத்தில் கொணர்ந்து அழகுபடுத்திக் காட்டும் கற்பனை இது.

விரும்புமாறு காணுதல்

மனிதனின் கற்பனை இட்ட இடத்தில் கிடக்கும் கல் போன்றது அன்று. ஒளியும் காற்றும் நாடி மேன்மேலும் வளரும் செடிகொடி போன்றது. கலைஞரின் மனம் பொருள்களை மேலும் அழகுப்படுத்தி வெவ்வேறு பொருள்களைக் காண விழைக்கின்றது.

தேனீக்கள் எல்லா பூக்களையும் நாடித் தேன் உறிஞ்சி வருகின்றன. எந்த மரத்திலேனும் கூடுகட்டித் தேன் சேர்க்கின்றன. ஆனால் அவ்வாறே 'உள்ளவாறே' பாடற்கலைஞர்களுக்கு மனம் இல்லை. அவருடைய உள்ளம் உயர்ந்தவற்றை நாடுகிறது. உயர்ந்த பூக்களில் தேன் எடுத்து, உயர்ந்த மலையில் உயர்ந்த மரத்தில் கூடுகட்டி தேன் சேர்ப்பதைப்பற்றி எண்ணுகிறது. ஆகவே உள்ளம் விழைந்தவாறு கற்பனை அமைகிறது. தாழைப்பூக்களில் ஊதித் தேன் எடுக்கின்றன, உயர்ந்த மலையுச்சியில் சந்தன மரத்தில் கூடுகட்டிக் சேர்க்கின்றன என்கிறார்.

"தாமரைத் தண்தாது ஊதி மீமிசை
சாந்தின் தொடுத்த நீந்தேன்...." (நற்றிணை)

இது உள்ளவாறு அமைந்த கற்பனை அன்று, உள்ளம் விழைந்தவாறு அமைந்த கற்பனையாகும்.

கூட்டலும் கழித்தலும்

காடுகள் பாலையாக மாறிவிட்டன. அந்தக் காட்டில் இன்பம் என்பதே இல்லாமற் போய்விட்டது. மரங்களில் இலைகள் எல்லாம் தீய்ந்து விட்டதாலும் நிழல் இல்லாமல் பறவைகளும் துன்புற்றன. பெண்புறா வெப்பம் தாங்க முடியாமல் களைத்து வருந்தியது. அதைக் கண்ட ஆண்புறா தன் மெல்லிய சிறகை விரித்து அசைத்துக் காற்றெழுப்பி அந்த வெப்பத்தை ஆற்றி உதவியது. இதனை,

"இன்பத்தின் இகந்தொரீஇ இலைதீர்ந்த உலவையில்

துன்புறூவும் தகையவே காடென்றார் அக்காட்டுள்
அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவும் உரைத்தனரே!
(கலித்தொகை)

சுனையில் சிறிது நீரே இருந்தது. அதைக் குடிக்கச் சென்றன. இரண்டு விலங்குகள், ஆண்மானும் , பெண்மானுமாய்ச் சென்ற அந்த இரண்டு விலங்குகள் குடிப்பதற்கே போதாததாக இருந்தது.

இதை உணர்ந்த ஆண்மான் தான் குடிக்காமல் ஒதுங்கி நின்று பெண் மானைக் குடிக்குமாறு செய்ய எண்ணியது. ஆனால் பெண்மானும் அவ்வாறே எண்ணி ஒதுங்கி நின்றபடியால் வேறொரு தந்திரம் செய்தது. பெண்மானோடு தானும் சென்றது. இரண்டு வாயும் நீரில் இருந்தது. ஆனால் ஆண்மானோ, குடிப்பது போல் நடித்து நீரை உள்ளுக்கிழுத்து பருகாமல் உறிஞ்சிமுச்சி விட்டுக் கொண்டிருந்தது. பெண்மான் குடித்து நீர் வேட்கை தணிய வேண்டும் என்ற அதன் விருப்பம் நிறைவேறியது தான் நீரின்றி வருந்தும் அளவிற்குத் தியாகம் செய்தது.

"சுனையிற் சிறுநீரை எய்தாதென் றெண்ணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டிக் - கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சம் சுரம் என்ப காதலர்
உள்ளம் படர்ந்த நெறி" (ஐந்திணை ஐம்பது, 38)

இவ்வாறு நடப்பது இயலாத ஒன்று என்பது புலவரும் அறிந்ததே: ஆயினும் ஆண்மான் அன்பின் காரணமாக வேறு உதவிகள் செய்தலை அறிந்த அவருடைய உள்ளம் இவ்வாறு கற்பனை அமைக்க விழைந்தது.

புனைந்து கூறுதல்

ஆணும், பெண்ணுமாய் இரண்டு குரங்குகள் அன்பாக வாழ்ந்து வந்தன. அவை ஒரு குட்டியும் பெற்றன, ஆண்குரங்கு இறந்துவிட்டது. பெண் குரங்கு தன் துணையின் பிரிவுத்துன்பம் தாங்காமல், குட்டியைச் சுற்றத்தாரிடம் ஒப்படைத்து விட்டு மலைமீது ஏறி கீழே குதித்து உயிர் துறந்தாள். அந்தப் பெண்குரங்கு விதவையாக வாழ்ந்து துன்புற விரும்பாமல், இவ்வாறு தன் வாழ்வை முடித்துக் கொண்டதாகப் புலவர் ஒரு கற்பனையை அடைக்கின்றார்.

"கருங்கண் தாக்கலை பெரும்பிறிது உற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி

ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்த உயிர் செருக்கும்"
(குறுந்தொகை. 69)

இது உண்மை நிகழ்ச்சி அன்று, உள்ளதை உள்ளவாறு உரைத்த கற்பனை அன்று, உள்ளம் விரும்பியவாறு அமைத்த கற்பனையாகும்.

முடிவுரை

கற்பனை மனத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாவது என்பது, டாக்டர்.மு.வரதராசனார் அவர்களின் கருத்து. அதனாலேயே சிறுவர்க்கு கதைகள் பல சொல்லுதல் நல்லன என வலியுறுத்துகின்றார். கற்பனை மிகவும் சிறப்புக்குரியதாகும். மனம்பல பொருள்களைப் பற்றிய அறிவு பெறுகிறது. அந்த அறிவு திட்பமும் தெளிவும் வரைமுறையும் வளமும் உடையதாக வளர்வதற்குக் கற்பனை துணை செய்கிறது. கற்பனை ஒரு மனிதனைப் பல விதமான சிந்தனை, உணர்வுக்கு அடித்தளமாகின்றது என்பதை மு. வரதராசனார் குறிப்பிட்டுள்ளார்.

5. மு. வ. நாவல்களில் ஆண் - பெண் உறவு நிலைகள்

கு.அனிதா
சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்
புதுவை பல்கலைக்கழகம்.

இருபதாம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்களின் சீரிய தமிழ்த் தொண்டு முதன்மையான பங்கு பெறுகிறது. தமிழ்த்தாயின் செல்ல புதல்வனாக விளங்கிய மு.வ அவர்கள் ஈடுஇணையற்ற பெரும் எழுத்தாளராக விளங்கி தம் 62 வயதிற்குள் 85 நூல்களை எழுதி இணையில்லா புகழை தமிழ்ற்குச் சேர்த்தார்.

“எளிய நடையில் தமிழ் நூல்
எழுதிடவும் வேண்டும்
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச்
செய்வதுவும் வேண்டும்
தமிழொளியை மதங்களிலே
சாய்க்காமை வேண்டும்”

என்னும் பாவேந்தரின் வேணவாவினை நிறை வேற்றிக் காட்டிய வித்தகர்.

ஆண் - பெண் உறவு

சமுதாய வாழ்விற்கு அடிப்படையாக இருப்பது ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து வாழும் வாழ்வே குடும்பவாழ்வின் தொகுதிதான் சமுதாயம். எனவே ஆண் பெண் உறவு புதிய தமிழிலக்கியத்தின்பாடு பொருளாகிறது.

‘செக்ஸ்’ என்ற சொல் முதலில் ஆண் - பெண் வேற்றுமைத் தன்மையைக் குறிப்பதற்கே பயன்பட்டு வந்தது. இப்பொழுது அதை மட்டுமின்றி ஆண் - பெண் இடையே நிகழும் உறவு சம்பந்தப்பட்ட எல்லா விசயங்களையுமே குறிப்பதாகவும், சமூக வாழ்வில் அவ்வுறவு கொண்டிருக்கும் இயைபினைச் சுட்டுவதாகவும் மாறிவிட்டது. எனவே இச்சொல்லின் விரிவடைந்த அர்த்தம் இலக்கியத் துறையையும் தழுவி ஆண் பெண் உறவு சம்பந்கமாக எழுதப்படும் வி'யங்களையும் விளக்க வல்லதாக உள்ளது.

ஆண் பெண் இடையே உள்ள கவர்ச்சி இயற்கையின் ஆணையாக உள்ளது. எனவே உடம்பிற்கும், உள்ளத்திற்கும் ஊடே போராட்டம் நிகழ்ந்த வண்ணமே உள்ளது. இப்போராட்டம் எல்லார்க்கும் உண்டு. மனித வாழ்வின் தவிர்க்க முடியாத ஓர் அம்சமாக தீவிர ஆற்றல் பெற்ற ஒரு கூறாக இந்தப் போராட்டம் இருந்து வருகிறது. இப்படிப்பட்ட போராட்டத்தையும்

இவ்வுறவின் சிக்கல்களையும், அவ்வுறவு சமூகவாழ்வில் ஏற்படுத்தும் பாதிப்புகளையும் நுட்பமாக ஆராய்ந்து தம் படைப்புகளின் வழியாக டாக்டர் மு.வ அவர்கள் சித்தரித்துக் காட்டியுள்ளார். அண்மைக் காலம் வரை ஆண் பெண் உறவு என்பது பேசுவதற்குக் கூட அனுமதிக்கப்படாத விஷயமாக இருந்து வந்தது. நான்குபேர் ஒன்றாகக் கூடியிருக்கும் பொது இடத்தில் இதைப் பற்றிக் குறிப்பாகப் பேசுவது கூட பண்பாட்டுக் குறைவாகக் கருதப்பட்டது. 'காமம் என்ற சொல்லை சொல்லவும் அருவருக்கப்பட்டது. பின்னர் கருத்துலகில் ஏற்பட்ட புரட்சியின் விளைவான அக்கட்டுப்பாடுகள் எல்லாம் மெல்ல மெல்ல தகர்ந்து இலக்கியத்தில் எதைப்பற்றியும் எழுத உரிமை உண்டு. ஆண் - பெண் உறவு பற்றி எழுதுவதில் தவறேதும் இல்லை என்ற புதிய கோட்பாடு தழைத்து வருகிறது.

'மலரினும் காமம் மெல்லிது' என்று கூறுவார் திருவள்ளுவர். அதன் செவ்வியறிந்து காமம் நுதலிய நாவல்களைப் படைப்பது அரிய செயலே. அப்படிப்பட்ட அரிய செயலைத் திறம்பட வெளிப்படுத்தியுள்ளார்.

ஆண் - பெண் உறவை அதன் சிக்கலைக் கலை நோக்கோடு விமரிசிக்கும் டாக்டர் மு.வ வின் அல்லி, கரித்துண்டு ஆகிய இரண்டு நாவல்களையும் ஆய்வுக் களமாக இக்கட்டுரைக்குத் தேர்ந்தெடுததுள்ளேன். ஏன் என்றால் இவ்விரு நாவல்களும் கற்பனை கலவாதஇ தன் வாழ்வில் கண்டவர்களின் உண்மை வாழ்கையை உருகொடுத்து கருவாக்கியுள்ளார்.

'அல்லி' நாவலில் இப்படித்தான் வாழ வேண்டும் எனும் இலட்சிய நோக்கு உடையவள் டாக்டர் அல்லி ; எப்படியும் வாழலாம் எனும் எண்ணப்போக்கு உடையவன் சுப்புரத்தினம் இவன் ஒரு பொறியியல் வல்லுநன் இவ்விருவருக்கும் பெற்றோர்களின் மேற்பார்வையில் திருமணம் நடைபெறுகிறது. இவர்களின் திருமணவாழ்வில் முரண்பாடுகள் தொடர கணவன் பல நாட்கள் தொடர்ந்து வீட்டுக்கு வருவதில்லை.

அல்லி அப்பாவிடம் அடைக்கலம் அடைந்து மன நல மருத்துவ ஆராய்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பாலியல் வாழ்கையில் ஆண் பெண் உறவில் உண்டாகும் சீர்கேடுகளுக்குரிய காரணத்தை அன்றாடப் பணியில் சந்திக்கும் நோயாளிகளிடம் ஆராய்ந்து, ஆராய்ச்சியின் முடிவாக பாலியல் சிக்கலை விளக்கும் எது குற்றம் என்ற நூலை எழுதி அத்துறையில் வல்லுநராகிறாள். பின்னர் தன் கணவரை சந்திப்பதற்குள் அவன் இறந்துவிடுகிறான். இந்நாவலில் வரும் சுப்புரதினம் கவர்ச்சிக்கு அடிமையாகும் காம வாழ்கையை மேற்கொள்ளுகிறான். தன் மனைவி அல்லியிடம் அவ்வளவு ஈடுபாட்டுடன் இல்லறவாழ்வில் ஈடுபடாமல், வேற்று பெண்களை தேடிச் செல்கிறான். பின்னர் காலபோக்கில் மெல்ல

உண்மையை உணர்கிறான். பின்னர் அதனைத் தன்னுடைய நாட்குறிப்பில் எழுதுகிறான்.

"ஆசைக்கு ஓர் அளவில்லை. பணம் சேர்ப்பதில் மட்டுமல்ல உடலின்பத்திலும் அது தான் உண்மை ஆசை தீர என்று தொடங்கும் வாழ்கை அல்லற்படும் வாழ்க்கை. ஆசை தீர்வது என்றும் இல்லை. நோய்வந்தபின் ஆசை வளர்கிறது. இடம் கொடுத்தால் எந்நேரமும் வேட்கை ஏற்படுகிறது. அதை ஆண்மை என்று தவறாக எண்ணித் தன்னைத் தானே கெடுத்துக் கொள்வதே முடிவு" அல்லி.

மேலும் அல்லியின் அண்ணண் சோமசுந்தரம் என்ற கதாபாத்திரத்தின் வழியாக இன்றைய இளைஞர்களின் பிரச்சனையச் சுட்டிக் காட்டுகிறார்.

சோமு காமம் பற்றிய அறிவின்மையால் கெட்டழிகிறான். பாலியல் கல்வி பெற வாயிப்பில்லாத காரணத்தால் அது பற்றின விந்தையான கற்பனைகளில் ஈடுபட்டு அதன் மாயக் கவர்ச்சிக்குப் பலியாகிறான்.

> *"இளைஞர்களின் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருக்கவேண்டும்.வாழ்க்கையில் ஒரு பொழுது போக்கு இருக்கவேண்டும். ஒரு வெறி-கட்சிவெறி அல்லது சமயவெறி இருந்தாலும் மேலானதே. வெளியுலகத்தில் ஒரு போராட்டம் இருக்க வேண்டும். இல்லையானால் இளமை எண்ணங்கள் சும்மா இருக்க முடியாது. நாடி நரம்புகளின் ஆசையைப் பற்றி அலைத்து உடலைக் கெடுத்துவிடும் அந்த ஆசைக்கு இடமில்லாமல் இருப்பது இருபத்தைந்து வயது இளைஞன் இருக்க வேண்டுமானால் ஒரு குறிக்கோள் ஒரு வெறி இருந்து வெளியுலகம் அவனைக் கவர வேண்டும்." அல்லி - ப 118.*

என்று இளைஞர் சமுதாயத்திற்கு அல்லியின் மூலம் அறிவுரை கூறுகிறார். இக்கதையின் மூலம் நெறியோடும் முறையோடும் வாழ்வதற்கு வழிவகுப்பது திருமணம். திருமணத்திற்கு முன்பே புலனடக்கம் இல்லாமல் இன்ப வேட்கையில் ஈடுபடுவோர் எத்தணை அழகான அன்பான பண்பான வாழ்க்கைத்துணை வாய்த்தாலும் இல்வாழ்கையில் இன்பம் காணமாட்டார்கள். எதை எதையோ தேடி அலைவார்கள் என்பதை மு.வ அல்லியினுடைய வாழ்க்கையின் மூலம் தெளிவுறுத்தியுள்ளார்.

கற்பு - புதிய விளக்கம்

இன்றைய சமூக வாழ்வில் கற்பு என்ற தத்துவமே மறுபரிசிலனைக்கு உரியதாகிவிட்டது. பழங்காலத்தைப் போல பெண்கள் வீட்டுக்குள்ளேயே அடங்கி வாழ்வதில்லை. அவர்களும் கல்விகற்று ஆண்களோடு சரிநிகர் சமானமாக எல்லா வேலைகளிலும் ஈடுபடுகின்றனர்.

"உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும் செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந்தன்னென்ற தொல்லோர் கிளவி" தொல் - 1059.

என்பது தொல்காப்பியம். மகளிர்க்கு உயிரினும் சிறந்தது உயர்ந்தது அவர்களுடைய கற்பு என்று மரபு வழியாக சொல்லப்பட்டு வந்த ஒன்று. காலப் போக்கில் உள்ளத் தூய்மையைப் புறக்கணித்து உடல் தூய்மையையே 'கற்பு' எனப் போற்றும் அவலநிலை உண்டாகி விட்டதை மு.வ. அவர்கள் நன்கு உணர்ந்துள்ளார்.

"இன்று பொன்னே போல் போற்றுவதால் பயனில்லை. அது தமிழ்ச் சமுதாயத்தின் வளர்ச்சி முன்னேற்றத்திற்குத் தடையாக அமையும்" (பெண்மைவாழ்க. பக் 17 - 21)

என்பதை அவர் உணர்த்த விழைந்துள்ளார். பொன்னி நிர்மலா என்ற இரு பெண்களைப் படைத்து அவர்கள் எவ்வாறு வாழ்க்கையில் மரபுவழிப்பட்ட கற்புநெறியிலிருந்து தவற நேரிடுகிறது என்பதை மு.வ. அவர்கள் 'கரித்துண்டு' என்ற நாவலின் மூலம் காட்சிப்படுத்துகிறார்.

இந்நாவலில் வரும் ஒரு பகுதியில் கொண்டானை அல்லால் அறியாள் குலமகள் எனும் மரபு வழிப்பட்ட வாழ்கையில் ஈடுபட்ட செந்தாமரை தன் கணவன் இளங்கோவோடு கருத்தொருமித்து காதல் வாழ்க்கை நடத்தி வருகிறாள்.

இச்செந்தாமரை எனும் இல்லத்தில் தமிழ்நாட்டு ஆண்களைப் பற்றிக் கொண்டுள்ள கருத்தை "தமிழ்நாட்டு ஆண்களின் மனப்பான்மை வேறு" மற்ற நாட்டு ஆண்களைப் போல அவர்களை எண்ணிவிடாதே பொதுவாகவே ஆண்கள் மனைவி தேடும் போது. தூய்மை கெடாத கன்னிப்பெண் வேண்டும் என்று தேடுவார்கள் தமிழ் நாட்டு ஆண்கள் இந்த வகையில் மட்டும் மற்றவர்களை விட மிகவும் பிற்போக்கானவர்கள் என்பது என்னுடைய எண்ணம்'' - கரித்துண்டு ப.232. என்று வெளிப்படுத்துகிறார்.

இந்த நாவலில் வரும் பேராசிரியர் கமலக்கண்ணரின் வாழ்க்கைத்துணைவி நிர்மலா கல்கத்தாவில் பிறந்து, அந்த நகரத்தின் ஆரம்ப சூழலில் வளர்ந்து மேற்கு நாட்டு நாகரிகத்தைப் போற்றும் பெண்கள் கல்லூரியில் படித்து ஒழுக்கத்தின் உயர்வு தெரியாத பெண்களின் கூட்டத்திலே காலத்தை கழித்தவள். மேலும் மோகன் என்ற ஓவியனைச் சிலகாலம் மணந்து வாழ்ந்தவள். பின்பு வசதியின்மை காரணமாகவும் விபத்தில் மோகனின் கால்போனதை கூட பொருட்படுத்தாது வாழ்க்கையிள் வெறுப்புற்று அவனை விட்டு பிரிந்து பேராசிரியரை வாழ்கை துணைவராக அடைகிறாள். அவரோடு வாழ்ந்திருக்கும் போது தான் சென்னையில் அவனை மீண்டும் பொன்னி என்னும் பெண்ணுடன் பார்கிறாள். பழைய

நினைவுகளால் மீண்டும் மனப்போராட்டத்திற்கு ஆளாகி உண்மையை ஒரு கடிதம் மூலம் எழுதிவைத்துவிட்டு வீட்டைவிட்டு வெளியேறுகிறாள்.

நிர்மலா எழுதிவைத்துவிட்டுப்போன கடிதத்தின் மூலம் தன் மனைவியின் பழையகாலவாழ்க்கையை. முற்றிலும் உணர்கிறார் பேராசிரியர். மேலைநாட்டு நாகரிகத்தில் திளைத்துக் களித்த பேராசிரியர் கற்பு என்பதைப் புதிய சிந்தன ஒளியால் கண்டு தெளிவடைகிறார். இதுவே கரித்துண்டு காட்டும் கற்பின் புது விளக்கம்.

இன்றைய தமிழ்நாட்டு ஆடவரின் மனப்போக்கையும் சுட்டி இன்றைய சமுதாயத்திற்குக் கற்பைப்பற்றிய பத்தாம் பசலிக் கருத்து பொருந்தாது. என்பதைப் படிப்பவர் உணரும் வண்ணம் அவர் செய்கிறார். இறுதியாக பேராசிரியர் கமலகண்ணர் என்ற பாத்திரத்தின் வழியாக கற்பு என்றால் வாழ்நாள் முழுவதும் ஒருவன் ஒருத்தியாக உண்மையோடு வாழ்வது என்று சொல்வார்கள். அது பழங்காலத்திற்கு மிக பொருத்தம். பழங்காலத்தில் கைத்தொழில் வளர்ச்சி மட்டும் இருந்தது. அப்போது ஒரு நெறியும் அதில் நம்பிக்கையும் உறுதியாக இருந்தபடியால் ஒருவன் ஒருத்தி என்று வாழ்வது எளிதாக இருந்தது. இந்த காலத்தில் யந்திரத்தொழில் வேகமாக வளர்ந்து வருகின்றது. ஆராய்தலும் அனுபவித்தலும் மிகுதியாக உள்ள காலம் இது. ஆகவே ஒருவனை விட்டு இன்னொருவனுடன் வாழ்வதுதான் தவறு எப்போது எவனுடன் வாழ்கிறானோ அவனுக்குத் துரோகம் செய்யாமல் இருந்தால் போதும் அதுதான் கற்பு. (கரித்துண்டு 234-235)

இக்கூற்றின் மூலம் ஆண் - பெண் உறவுச் சிக்கலை டாக்டர் மு.வ அவர்கள் அறிவு ரீதியாக அணுகி விடைகாணுகிறார்.

முடிவுரை

இவ்வாறாக மு.வரதராசனார் தன்னுடைய நாவல்களில் பலவகைப்பட்ட ஆண், பெண் கதா பாத்திரங்களைப் படைத்து, அவர்களுக் கிடையே நடக்கும் இல்லறவாழ்நிலையின் சிக்கலை சித்தரித்து, அவர்களின் உறவு நிலையை விளக்கும் காட்சி இன்றைய சமூகத்தை அப்படியே நம்கண்முன் நிறுத்திவிடுகின்றது. முன்நிலையில் மாற்றம் வேண்டும் நெறிப்படுத்தப் பட்டமாற்றத்தால் இச்சமுகம் முன்னேற்றம் அடையும் என்ற நோக்குடன் ஆண் - பெண் உறவு நிலைகள் உணர்ச்சி நிலையில் அணுகாமல் அறிவு நிலையில் அணுகி வாழ்க்கைக்கு ஒரு புதிய அர்த்தத்தை ஏற்படுத்தியுள்ளார்.

6. மு. வ. வின் படைப்புகளில் சங்க இலக்கியச் செய்திகள்

த.தியாகராஜன்
தமிழ்த் துறை
உதவி பேராசிரியர்
தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி
பெரம்பலூர் - *621 212.*

முன்னுரை

சங்க காலத்தைப் பொற்காலம் என்றுக் கூறுவர் சங்க இலக்கியக் கூறுகளை இயற்கை, நாகரீகம், அஞ்சாமை, பரிசில் வாழ்க்கை, அருள் உணர்வு போன்றவற்றை உணர்த்தும். உணர்ந்த செய்தியை உரைத்தலுமே அக்கால இலக்கியத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. இதில் பெரும் பங்கினைச் செலுத்துபவையாக அக இலக்கியங்கள் ஆளுமை செய்கின்றது. அக வாழ்வில் சுவைமிக்கச் செய்திகள் களவு, கற்பு என்ற பிரிவின் மூலம் மிகுந்த சுவைபட சுவைக்க முடிகின்றது என்றால் அது மிகையாகாது. இத்தகைய இயற்கை நயம் மிக்க வாழ்வை மு.வ. அவர்களின் சொல், பொருள், நடை நமக்கு எளிமையாக புலப்படுத்துகின்றது. இவரின் மொழி ஆளுமைக்கு எடுத்துக்காட்டாகக் கூற வேண்டுமென்றால் இவரின் ஆராய்ச்சி நூலான சங்க இலக்கியங்களில் இயற்கை என்ற நூலையே குறிப்பிடலாம். இந்நூலோடு மற்றொரு நூலான 'தமிழ் நெஞ்சம்' என்ற நூலினையும் முதன்மையாகக் கொண்டு இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.

இயற்கை வாழ்வு

பழந்தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்தனர் என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். அத்தகைய இயற்கை வாழ்வை நம் கண்முன்னே நிறுத்துவதற்கு தலைவியின் காதல் வெளிப்பாடுகள் அக்கால இயற்கையோடு இணைத்துக் கூறப்படுகின்றது. அதனைப் பின்பற்றியே மு.வ.வும் 'விரிந்த மலர்களின் பட்டிதழ்களின் மென்மையைத் தொடாமல் தொட்டுணரும் அவர்கள் பொறியும் புலனும் கனிகளின் மணத்திலே: மலர்களின் மணத்திலே: இன்னும் இயற்கை அன்னை வழங்கும் எண்ணற்ற இன்ப விருந்துகளிலே திளைக்கும் அவர்களின் புலமை நெஞ்சம் மனித இனத்தின் பேராற்றல்களாகிய காதல், வீரம் ஆகிய இரண்டையும் ஊடுருவிப் பாய்ந்து பரந்துக்கிடக்கச் செய்யும் அளவுக்கு இயற்கையினிடத்து அவர்கள் எல்லையற்ற காதல் கொண்டிருந்தனர்' என்கிறார்.

பண்டையதமிழ் மக்கள் இயற்கையையும் மனித இனத்தையும் வேறு வேறாகப் பிரித்துப் பார்க்காமல் இரண்டையுமே ஒன்றிணைத்து பாடியும் அதன் துணைக் கொண்டும் வாழ்ந்தும் வந்திருக்கின்றனர் என்றால் அது மிகையாகாது. பண்டைய தமிழ்ச் சான்றோர்கள் இயற்கையைத் தனியொரு பொருளாகக் கருதாமல் அதனை காதல், வீரம் எனும் இரண்டு உயரிய குணங்களில் வைத்துப் பாடியிருப்பது மனித வாழ்க்கையைக் கூறுவதாக உள்ளது. "மனித வாழ்க்கையின் பல்வேறு கூறுகளையும் வருணித்துத் தெளிவு படுத்துவதற்காகவே பண்டைத் தமிழ்ச் சான்றோர் இயற்கையைப் பயன்படுத்தினர்'' என்று தமது ஆராய்ச்சியில் எடுத்துரைக்கின்றார்.

நாகரிகம்

"கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய தமிழ் குடி" என்று உரைக்கும் தமிழரின் தொன்மைச் சிறப்புகளும் நாகரிகமும் இன்றுவரை குறைபடவில்லை எனலாம். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்ததைவிட இன்று பல முன்னேற்றங்களைக் காண முடிகின்றது. அக்கால மனிதன் நாகரிக வளர்ச்சிக்கு வருவதற்கு முன் அவன் காடுகளில் வாழ்ந்தான். பின்னர் வேட்டையாடி உணவை அப்படியே உண்டான், பின்னர் மரங்களிலும், குகைகளிலும் வாழ்ந்தான் இப்படியாக அவனின் நாகரீகம் பண்பட்ட நிலை உருவாகியது. அத்தகைய நிலையில் மனிதன் தனக்கென்று இல்லமமைத்தும், ஆடை உடுத்தியும் இப்படியாகப் பல்வேறு நிலைகளில் தன்னை மாற்றி மொழியின் வளமையிலும் நாகரிகத்தை எடுத்தியம்பினான் என்பதை மு.வ கூறுகையில் "சிறு சிறு கூட்டமாய் அங்கும் இங்குமாய் அலைந்து வாடியது போய் பெருஞ் சமுதாயமாய்ப் பேரூரிசம் சிற்றூரிசம் அமைத்து வாழ்ந்தது நாகரிகத்தின் வளர்ச்சி என்பர். ஆயினும் எண்ணத்தெரிந்து அறிவைப் பெருக்கிக் கலைகளை வளர்த்துக் கருத்து வகையாக உயர்ந்த உயர்வே நாகரீகத்தின் மறுமலர்ச்சி எனலாம். எனவே ஊனும், உடையும், படையும், வீடும், ஊரும், நாடும் காண்பது நாகரீகம் அன்று அவை அனைத்தும் நாகரிக வளர்ச்சிக்கு உரிய கருவிகளே கருத்தின் உயர்வே உள்ளத்தின் உயர்வே நாகரிகம் எனலாம். அத்தகைய நாகரீகப் பெற்றியைப் பண்டைத் தமிழிலக்கியம் காட்டுகின்றது.

"ஊனும் ஊணும் முனையின் இன்தெனப்
பாலிற் பெய்தவும் பாகிற்கொண்டவும்
அளவுபு கலந்து மெல்லிது பருகி
விருந்துறுத் தாற்றி இருந்தானம் ஆக"

என்ற புறநானூற்று வரிகளின் மூலம் நாகரீகத்தை எடுத்துக் காட்டுகின்றார்.

அஞ்சாமை

நிலத்தில் யாருக்கும் அஞ்சாத செருக்குடன் வாழ்ந்தவர்கள் பண்டைத் தமிழர்கள் இவர்களின் வீரம் பலவாறு போற்றப்படுகின்றது. அஞ்சுதல் என்பது ஆண்மைக்கு அழகன்று எனவும் போரில் விழுப்புண்பட்டு இறப்பதையும், போர் செய்யாத நாட்களை வீண் நாட்கள் என்று எண்ணியும் வாழ்ந்து வந்துள்ளனர். புறப்புண்பட்டு தம் மகன் இறந்தான் என்று பிறர் கூறக் கேட்ட தாய் கையில் வாளுடன் போர்க்களத்திற்கு சென்று என் மகன் புறமுதுகிட்டு இறந்திருந்தானேயானால் அவன் பால் குடித்த மார்பை அருத்தெரிவேன் என உரைப்பது வீரத்தின் பால் பட்ட அஞ்சாமை எனும் எண்ணத்தால் வந்தது.

மேலும் இதே புறநானூற்றுப் பாடல்களுள் போரின் முதல் நாள் தம் தந்தையையும், அடுத்த நாள் தம் கணவனையும் இழந்த பெண் மூன்றாம் நாள் போர் முரசு ஒலிகேட்டு பால்மனம் மாறாத தம் புதல்வனை அழைத்து எண்ணைத் தேய்த்து தலைவாரி பூச்சூடி கையில் வேலினை கொடுத்து செருமுகம் நோக்கிச் செல்க என கூறும் மறப்பண்பு அஞ்சாமையை எடுத்துக் கூறுகின்றது.

மேற்கூறியவற்றை அஞ்சாமை என எடுத்துக் கூறினார். டாக்டர் மு.வ அவர்கள் புரவலர்களிடம் புலவர்கள் அஞ்சாமை என்ற பண்பை வளர்த்தப் பாடல்களை சான்றாக காட்டுகிறார். சோழன் குலமுற்று துஞ்சிய கிள்ளி வளவன் தன் காவல் மரம் வெட்டும் ஒலி கேட்டும் வாளாவிருந்த கிள்ளி வளவனை ஆலத்தூர் கிழார். புறம் 36ல் உன் செயல் நாணத்தக்கது என அறிவுரை கூறிய பாடலை மு.வ. அஞ்சாமைக்கு சான்றாக எடுத்துக் கூறுகின்றார்.

பரிசில் வாழ்க்கை

மன்னர்களை, வள்ளல்களை புலவர்கள் புகழ்ந்து பாடி அதன் மூலம் கிடைக்கும் பரிசினைக் கொண்டு வாழப்படும் வாழ்க்கை பரிசில் வாழ்க்கை எனப்படும். அக்கால கட்டத்தில் புலவர்கள் பழுமரம் தேடிய பறவை போல வள்ளல்களை நாடிவந்து தம் வாழ்க்கையை நடத்தி வந்தனர். மன்னர்களும் வள்ளல்களும் அப்பரிசிலர்களைத் தம் கண்ணைப் போல் காத்து வந்தனர். இந்நிலையை மு.வ. அவர்கள் ஈர்ந்தூரில் வாழ்ந்த தோயன் மாறன் என்பவனின் வாழ்க்கையினை எடுத்துக்காட்டி விளக்குகிறர்.

தோயன் மாறன் பரிசிலர்களின் பசியினைக் காணப் பெறாதவன். அவனிடமும் பசிதீர்க்க வழியில்லை எனவே படையெடுத்துச் சென்றாவது வளத்தினைத் தேடி பரிசிலரின் பசிதீர்க்க எண்ணிக் கொல்லனிடம் வேல்வடித்துத் தருமாறு வேண்டுகிறான் (புறம் 108)

குமணன் என்ற வள்ளல் தம் உயிரைக் கொடுத்தாவது புலவனின் வறுமையைத்தீர்க்க முனைகிறான் (புறம் 159) என்ற செய்திகளை மு.வ. எடுத்துக் காட்டுவதன் வழியாக அக்காலத்தில் வாழ்ந்தவர்கள் தம் உயிரைவிட பரிசிலரின் பசியினைத்தீர்ப்பதையே வாழ்வின் முக்கிய கடமையாக வாழ்ந்துள்ளனர் என்பதை தெளிவாக்குகிறார்.

அருள் உணர்வு

சங்க காலத்தில் அருள் உணர்வு நிறைந்திருந்ததனை பல்வேறு புலவர்கள், மன்னர்கள், வள்ளல்கள், வாயிலாக பல இடங்களில் நாம் உணர்ந்திருக்கின்றோம். தன்னலம் கருதாமல் எல்லா உயிர்களுக்கும் சமமான அறத்தை எடுத்தியம்புதலே அருள் உணர்வு எனப்படும். பிறருக்கு ஏற்படும் துன்பத்தினை தம் துன்பம் போல் ஏற்று அதனைப் போக்க முற்படுவது அற நெறியாகும். அத்தகைய குணமே அருள் உணர்வு என்பர். பழிக்கு பழி வாங்குதல் என்பது வீரமின்மை என்ற உணர்வு, அக்கால மக்களிடம் இருந்தது என்பதனை

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"

என்று குறளின் மூலமாக வள்ளுவர் எடுத்துரைப்பது சான்றாகும். பழிக்கு பழி என்ற எண்ணத்தின் மூலமாக ஏற்படும் மகிழ்ச்சி பகைவரை வெல்வதில்லை அவர்தம் தவறை உணரச் செய்தலே ஆகும்.

"தன் வெற்றியும் மகிழ்ச்சியும் பொருள் எனக் கொள்ளாது. எது நன்மை விளைவிப்பது என எண்ணுபவனே பொறுமை பூண்டான், அப்பொறுமை வாழயிலாக உலகில் நல்லறத்தை நிறுவி பூசலைக் குறைத்திடுவான் இயன்ற அளவு பகைவனைத் திருத்தும் முயற்சியால் வெற்றி பெறின் உலகில் கொடுமையையும் குறைத்திடுவான்" என்று மு.வ. கூறுவதிலிருந்து அருள் உணர்வு இத்தகைய தன்மையின் வாயிலாகவே கிட்டும் என்கிறார். இதனை

"நீயே, புறுவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை,
இவரே, புலன்உரு துண்மார் புன்கண் அஞ்சித்
தமதுபகுத் துண்ணும் தண்ணிழல் வாழ்நர்,
களிறுகண் டமூஉம் அழாஅல் மறந்த
புன்தலைச் சிறாஅர் மன்று மருண்டு நோக்கி
விருந்தின் புன்கணோ உடையார்
கேட்டனை யாயின்நீ வேட்டது செய்பமே (புறம் 46)

என்ற பாடலின் மூலமாக கோவிலூர் கிழார், மலையமானுக்கும் சோழன் குலமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனுக்கும் இருந்த பகை, மலையமான்

இறந்தபினனும், அவன் புதல்வர்களின் மீது கிள்ளிவளவனுக்கு இருந்த பகையுணர்வை தவறு என்று எடுத்துரைத்து தம் தவறினை உணரச் செய்துள்ளதை அருள் உணர்விற்குச் சான்றாக எடுத்துரைக்கின்றார்.

முடிவுரை

பேராசிரியர் மு.வ. அவர்கள் தம் உரைநடை நூலின் வழியாக சங்க கால மக்கள் வாழ்ந்த இயற்கை வாழ்வு குறித்தும் அவர்களின் நயத்தக்க நாகரிகம் குறித்தும் எடுத்துரைக்கின்றார். அதோடு பழந்தமிழர்கள் அஞ்சாமை எனும் வீரப் பண்போடு வாழ்ந்ததையும், புலவர்கள் மன்னர்களின் அச்சத்தை போக்கியதையும் எடுத்துரைக்கின்றனர். மேலும், பரிசிலரின் வறுமையைத் தீர்க்க மன்னர்களும் வள்ளல்கலும் தங்கள் வாழ்வையே தியாகம் செய்த பெருமைக்குரிய செய்தியினையும், அருள் உணர்வு பழிக்கு பழி கூடாது என்ற அறத்தினை உணர்த்துகின்றதையும் எடுத்துக்காட்டுவதன் மூலமாக சங்க கால இலக்கியச் செய்திகளின் சிறப்புகளை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

7. டாக்டர் மு. வ. வின் பார்வையில் சொல்லும் பொருளும்

பேரா.ஏ.இம்மானுவேல்
தமிழ்த்துறை
ஊரீசு கல்லூரி
வேலூர்.

முன்னுரை

சொல் மானிடர்களின் குறிப்பை உணர்த்துவதற்கும் தேவைகளைப் பெற்றிடுவதற்கும் தம் பட்டறிவால் இயற்கையின் துணை கொண்டு படைக்கப்பட்ட செய் நேர்த்தியுடையது. சொல்லின் ஆற்றல் பெரியதாகும். அத்தகைய மொழி, சொற்களின் வடிவில் வெளிப்படுகின்றன. அவ்வாறு வெளிப்படும் ஒவ்வொரு சொல்லுக்கு ஒரு பொருள் உண்டு என்பதில் சற்றும் ஐயமில்லை. தொல்காப்பியரும்இ

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (1)

என்னும் நூற்பாவின் வழி நின்று விளக்கிட, விளங்கிட முடியும். அவ்வாறாயின் வெளிப்படும் சொற்களுக்கு என்ன பொருள் என்பதனை முனைவர் மு.வ தெளிவுடன் கூறியுள்ளார். இக்கட்டுரையில் காண்போம்.

சொல் குறியீடு

"சொற்களின் பிறப்பை ஆராயும் போது அவற்றின் தொடக்கநிலையைக் குறித்து அறியலாம். பழங்காலத்தில் சொற்கள் குறியீடுகளாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. எனினும் அவ்வாறு பயன்படுத்திய முறைகளில் குறைகள் மிகவும் விரவி இருந்துள்ளதாக முனைவர் மு.வ.குறிப்பிடுகிறார் மேற்கோளாக "நாய்" என்ற சொல்லினை ஆராயும் போது, அவை "நா" (நாக்கு) என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது. நாக்கு பெற்றக் காரணத்தால் நாய் எனப் பெயர் பெற்றது நாக்கினைப் பெற்றுள்ள உயர்திணைக்கும் அஃறிணைக்கும் அப்பெயர். வழங்கப்படவில்லை என்பது இங்கு நோக்கிட தகுந்தது. (2) ஒடி அலைந்து திரியும் போது நாக்கினைத் தொங்க விட்டிருந்தலின் அப்பெயர் பெற்று இருக்கலாம். இத்தகைய நிலைகளில் சொல் தொடக்கத்தில் தன் பொருளை உணர்த்தும் தன்மையில் இல்லை என்று எண்ணிட முடியாது.

சொற்களின் பிறப்பு குறித்ததான ஆய்வினை விட சொற்களின் பொருள் என்ன என்பதை ஆய்வது மொழியியலுக்குப் பொருந்தும் என்பது அறிஞர்களின் பரவலான கருத்தாக அமைந்துள்ளது.

"மக்களின் வாழ்க்கையில் புதியன புகுதலால் மாறுதல் ஏற்பட, ஏற்பட புதிய கருத்துக்கள் புதிய கருவிகள் பரவப்பரவ, அவற்றினைக் குறிக்கப் புதிய சொற்கள் அம்மொழியிலேயே ஏற்படுதல். அதனால் பழைய சொல்லுலகத்தில் மாறுதல் ஏற்படல்" (3).

ஒரு சொல்லுக்குப் ஒரு பொருள்

உச்சரிக்கப்படும் சொற்களில் ஒரு சில சொற்களே ஒரே ஒரு பொருளை உணர்த்துகின்றன. ஏன் இத்தகைய மாற்றம் எனில் காலப்போக்கில் அச்சொற்களின் வடிவம் மாறி, சொற்கள் திரிபு பெற்று பல உருவங்களைக் கடந்து வருவதும் ஒன்று.

நாற்றம் என்பது பழங்காலத்தில் வாசனையைக் குறித்தது என்பதனைத் தமிழ்றிஞர்கள் யாவரும் அறிந்த ஒன்று. இன்று துர்நாற்றம் என்பதை மட்டுமே குறிப்பதாக அச்சொல் அமைந்துள்ளது. ஒரு பொருள் அழிந்து மற்றொரு பொருள் திரிபு பெற்று வருவதைக் காணமுடிகிறது.

'இலை' என்பதனைக் குறித்திடும் சொற்களாக இதழ், ஏடு ஈர்க்கு, ஒலை, தகடு, தண்ணடை, தமாலம், தோடு, பத்திரம், பல்லவம் பலாசம், பன்னம், பாசடை, பாசிலை, பாளை, மடல், முறி, போன்ற சொற்கள் இருந்துள்ளன. ஆனால் இன்று இலை என்கிற வடிவம் மட்டுமே வழக்கில் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

உயர் பொருட்பேறு

பழங்காலத்தில் இழிவான பொருளைக் குறித்து வந்த சொல் இப்பொழுது உயர்ந்த பொருளில் வழங்கப்பட்டு வருகிறது. 'களிப்பு' என்றும் சொல்லின் பொருள் கள் குடிப்பதால் மட்டுமே ஏற்படும்.

இக்கருத்தினைப் பாரதிதாசன் தன் அழகின் சிரிப்பு எனும் நூலில் வண்டுகள் கள்ளுண்டு களிப்பதையும் அதனால் ஏற்பட்ட மயக்கத்தினால் அவைகள் தள்ளாடுவதையும் குறிப்பிடுவதில் காணலாம்.

"தேனுண்ண வண்டு பாடும்!
தேனுண்ட பின் ஓர் கூட்டம்
தானோர்போல் தாவும்! வேறோர்
தனிக்கூட்டம் களியாட்டத்தை
வானிடை நடத்தும்! ஒன்று
மலர் என்னும் கட்டிலுண்டு
நானுண்டேன் நுறக்கம் கொள்ளும்
நானும்பொடி இறைக்கும் ஒன்று" (4)

மனத்தால் ஏற்படுவது மகிழ்ச்சி. இன்று மகிழ்ச்சியும் களிப்பும் ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இழிபொருட் பேறு

பழங்காலத்தில் உயர்ந்த பொருளில் வழங்கி வந்த சொல் இன்று இழிந்த பொருளை உணர்த்தினால் அது இழிபொருட் பேறு ஆகும். போர் என்ற சொல் பகைப்பட்ட இரு வேந்தர்களுக்கு இடையே நிகழ்ந்த சண்டையைக் குறிப்பிட்டது. ஆனால் இன்று வைக்கோல் போர் ஒன்றினை மாத்திரம் குறிப்பதாக உள்ளது.

சிறப்பு பொருட்பேறு

பழங்காலத்தில் பொதுவாக இருந்த ஒரு சொல் இன்று ஒன்றினை மட்டும் குறிப்பதாக உள்ளது

'வலிமை மிக்க அரசன்' என்பதன் பொருள். பல படைகளின் பலத்துடன் அரசன் விளங்கினான் என்பதாகும். இன்று உடல் வலிமையை மாத்திரம் குறிப்பதாக உள்ளது

பொதுப்பொருட்பேறு

ஒன்றினை மட்டும் குறித்த சொல், இன்று பொதுவாகக் குறிப்பது இந்த வகையில் அடங்கும். 'மரக்கால்' என்னும் மர அளவை இக்காலத்தில் உலோகத்தால் ஆன அளவைகளையும் குறிப்பதாக உள்ளது.

மென்பொருட்பேறு

வன்மையான சொற்களுக்குப் பயன்படுத்திய சொல்லை மென்மையான சொற்களுக்குப் பயன்படுத்தல்.

"அமர்க்களம்" என்னும் சொல் பழங்காலத்தில் நான்கு வகை படைகளினால் நிகழ்ந்த அழிவைக் குறித்தது. ஆனால் இன்று சிறுவர்களின் அரட்டை ஆரவாரத்துடன் ஏற்படும் தொல்லையை மட்டுமே குறிப்பதாக உள்ளது.

வன்பொருட்பேறு

மென்மையான பொருளில் வழங்கிய சொற்கள் இன்று வன்மையாக வெளிப்படல். "ஒழிவு" என்னும் சொல் வேலைகள் ஏதும் இன்றி இருப்பது. ஆனால் இன்று ஒழிந்துவிட்டார், அழிந்து விட்டார் என்பதை மாத்திரம் குறிப்பிடப்படுகிறது.

மங்கல வழக்கு

அமங்கலத்தை மங்கலமாகக் கூறுதல் மங்கல வழக்காகும். 'துஞ்சினார்' என்ற சொல் 'செத்தார்' என்ற பொருளை உணர்த்துக்கிறது.

இடக்கரடக்கல்

பண்பற்ற வார்த்தைகளைத் தவிர்த்து நாகரீகமான சொற்களைக் கூறுதல். 'கால் கழுவுதல்' என்ற சொல் இவ்வகையில் அடங்கும்

குழுவுக்குறி

ஒரு குறிப்பிட்ட கூட்டத்தினர் மட்டும் பயன்படுத்தப்படும் மொழி குழுவுக்குறி ஆகும்.

"நரிக்குறவர்" இன மக்களின் மொழி மற்றும் நீலகிரி பகுதி மலைவாழ்மக்களின் ஒரு பிரிவினரும் இவ்வகையில் அடங்குவர்.

ஆகுபெயர்

ஒன்றன் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்கு ஆகி வருவது ஆகுபெயர்.

'சோறு உண்டான்' என்பதில் சோறு மட்டுமின்றி அதனோடு தொடர்புடைய குழம்பு, கூட்டு முதலான வகைகளையும் உள் வாங்கி வந்துள்ளது.

முடிவுரை

சிலப்பதிகார வரியான 'பழமணல்' மாற்றுமின், புதுமணல் பரப்பு மின் என்பதற்கிணங்க புதுப்புது சொல்லும் அதற்குரிய பொருளும் தோன்றியுன் அவையனைத்தும் தமிழ் உலகிற்குக் கிடைக்கும் சொற்கொடை என்பதில் மாற்றமில்லை.

அடிக்குறிப்பு

1) தொல்காப்பியம். சொல். பெயரியல் :640

2) மு.வ மொழிநூல். பக்கம் 273

3) மேலது. 274

4) பாரதிதாசன், அழகின் சிரிப்பு.

8. மு. வ. விரும்பிய சமூகம்

சு. ருக்மணி
தமிழ் இணைப்பேராசிரியை
ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி
திருநெல்வேலி - 8.

சமூக சிந்தனை மிக்கோர் தாம் வாழும் சமூகத்தில் காணப்படும் குறைபாடுகளைக் கண்டு மனம் வருந்துவர். அவற்றைப் போக்குதற்கான வழிமுறை காண விரும்புவர். தங்கள் விருப்பங்களைத் தம் படைப்புகள் வழி வெளிப்படுத்துவர். பகைவனையும் நேசி என்ற ஏசுவின் விருப்பம், சங்கப் புலவரிடமும் காணப்படுகின்றது. அவ்விருப்பம் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற வரியில் தெளிவாக்கப்பட்டுள்ளது. அரசியல் நேர்மையாக நடத்தப்பட வேண்டும் என இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் வழி நிறுவிச் சென்றுள்ளார். மக்கள் பசியால் வாடக்கூடாது என்ற சிந்தனையை வள்ளுவர், ஔவை, கம்பன், வள்ளலார் எனப் பலரும் வலியுறுத்திக் கூறியுள்ளனர். பிற்காலத்தில் வாழ்ந்த நம் பாரதி 'தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என கோபமொழி பேசியுள்ளார். 'சமூகத்தில் காணப்படும் பொருந்தா மணம் மண்ணாய் போகவேண்டும்' என்கிறார் பாரதிதாசன்.

இன்றைய சமூகத்தில் காணப்படும் சாதி, மதம், ஊழல், நேர்மையற்ற அரசியல், பெண்கள், தலித்துகள் பற்றிய பிரச்சினைகளை இன்றைய படைப்பாளிகள் தம் படைப்புகளில் வெளிப்படுத்தி வருகின்றனர். தமிழகத்தில் வாழ்ந்து மறைந்த மிகச்சிறந்த படைப்பாளி, சிந்தனையாளர் மு.வ அவர்களும் தம் படைப்புகளில் சமூகச் சிந்தனைகளைப் பதிவு செய்துள்ளார். அவருடைய 'அந்த நாள்' நாவல் வழி அவர் விரும்பிய சமூகம் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

முதல், இரண்டாம் உலகப் போர்களினால் ஏற்பட்ட அழிவின் ஆழத்தை உணர்ந்த சிந்தனையாளர் இனி போர் கூடாது என்ற நோக்கில் ஐ.நா சபையை உருவாக்கினர். ஆனால் இன்றும் போரற்ற சமூகத்தை நம்மால் காணமுடியவில்லை. வல்லரசு நாடுகள் வலிமையற்ற நாடுகளைப் போரிட்டு அழிக்கவே முற்படுகின்றன. 'அந்த நாள்' நாவல் பர்மாவில் ஜப்பானியர் நிகழ்த்திய போரினால் அங்கு வாழ்ந்த தமிழர்கள் பட்ட வேதனைகளைப் படம்பிடித்துக் காட்டுகிறது. போர்க்கால கொடுமைகளைச் சுட்டுவதன் வாயிலாகப் போரற்ற சமூகம் ஏற்பட வேண்டும் என்ற தம் விருப்பத்தை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

ஜனநாயக அரசாங்கமெல்லாம் போர் வந்த மறுநாளிலேயே கொடுங்கோல் அரசாங்கமாக மாறி விடுகின்றன. போர்க்காலத்தில்

அரசாங்கத்தின் குறையை ஒருவரும் வாய் திறந்து பேசக்கூடாது. அரசாங்கத்திற்கு ஒருவரும் ஒன்றும் அறிவுரை சொல்லக்கூடாது. அரசாங்கம் சொல்வதெல்லாம் உண்மை என்று நம்ப வேண்டும். எதிரிகள் சொல்வதெல்லாம் பொய் என்று தள்ள வேண்டும். பொன்முடி கதாபாத்திரத்தின் வாயிலாக போர்க்காலத்தில் சர்வாதிகாரம் நிலைபெற்று விடுவதாக இங்கே குறிப்பிட்டுள்ளார். போரில்லா உலகம் தேவையென்ற ஆசிரியரின் விருப்பம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆண் மேலாண்மையை ஆசிரியர் விரும்பவில்லை என்பதற்கும் பொன்முடியின் உரை சான்றாக உள்ளது. பர்மாவில் போர் ஏற்பட்டதால் அங்குள்ள கம்பெனியில் பணிபுரிந்த ஆறுமுகம் தன் மனைவி பொன்முடியையும் மகளையும் தமிழ்நாட்டிற்கு திரும்பிப் போகுமாறு கூறுகிறான். மனைவியோ எல்லோரும் சேர்ந்து தாய்நாடு திரும்பலாம் எனக் கூறுகிறாள். அதனை ஆறுமுகம் ஏற்றுக் கொள்ள மறுக்கிறான். அப்போது, "போர்க்காலத்தில் நாட்டில் புகுந்த ஆட்சிமுறையை வீட்டில் புகுத்த வேண்டும் என்பது அவர் எண்ணமோ? இத்தனை நாளாக நான் அரசியாக வாழ்ந்தேன். அவர் அரசராக வாழ்ந்தார். அவருக்கு ஆலோசனை கூறும் மந்திரியாக இருந்தேன். நாட்டுப்போர் வீட்டிலும் புகுந்தவுடன் அவர் சர்வாதிகாரியாக மாறிவிட்டார். நான் கூறுவதைக் கேட்க மறுக்கிறார். குடும்பத்திலும், அரசாங்கத்திலும் வெறி பிறந்துவிட்டால் அறிவுக்கோ, பொறுமைக்கோ, ஆலோசனைக்கோ யாரும் இடங்கொடுப்பதில்லை" என பொன்முடி புலம்புகின்றாள். இக்கட்டான சூழலில் மனைவியின் ஆலோசனைகளை கேட்க மறுக்கும் ஆண் சமூகத்தை ஆசிரியர் வெறுக்கிறார் என்பதையே பொன்முடியின் புலம்பல் வெளிப்படுத்துகின்றது.

ஆணும் பெண்ணும் நெருங்கிப் பழகுதல் கூடாது என்ற சமூகக் கருத்தையும் ஆசிரியர் மறுக்கிறார். குணமாலை, ஆறுமுகம் கதாபாத்திரங்கள் ஆசிரியரின் எண்ணத்தை நமக்குப் புலப்படுத்துகின்றன. பர்மாவிலிருந்து தாய்நாடு திரும்பிவந்து கொண்டிருந்த ஆறுமுகம் தன் நண்பன் நீலமேகன் மனைவி குணமாலையோடு தங்கும் சூழல் ஏற்படுகிறது. ஆறுமுகம் மிக நாகரீகமாக நடந்து கொள்கிறான். இதைப்பார்த்த குணமாலை, "ஆண்கள் வெண்ணெய் போல, பெண்கள் நெருப்புப் போல. நெருப்பை அணுகியபின் வெண்ணெய் உருகாதிருக்க முடியுமா? ஆகையால் பெண்கள் கணவன்மாரைத் தவிர எந்த ஆண்களோடும் நெருங்கிப் பழகக்கூடாது" என அவள் அம்மா கூறியதை நினைவு கூர்கிறாள். ஆறுமுகம் குணமாலையை நிமிர்ந்து பார்க்கவும் தயங்குகிறான். "கற்புநிலை எனச் சொல்ல வந்தால் இருகட்சிக்கும் அதைப்பொதுவில் வைப்போம்" என்ற பாரதியின் கோட்பாட்டிற்கு இலக்கணமாகத் திகழ்கிறான் ஆறுமுகம். நெருப்பு போன்ற ஆறுமுகத்தின் பண்பட்ட தன்மையை நேரில் பார்த்த குணமாலை தன் தாய் கூறியது தவறு என்பதை உணர்கிறாள்.

இந்நிகழ்வைக் குறிப்பிடுவதன் வாயிலாக ஆணும் பெண்ணும் நெருங்கிப் பழகுதல் தவறு என்ற சமூகத்தின் எண்ணத்தைத் தவறு எனச் சுட்டிச் செல்கின்றார் மு.வ.

பெண்களைப்பழித்துக் கூறும் ஆண் சமூகத்தையும் மு.வ மறுக்கிறார். நீலமேகன் தன் மனைவி குணமாலையை மதிக்காமல் நடப்பவன். அவன் பர்மாவிலிருந்து தாய்நாடு திரும்பும்போது மனைவியை உடன் அழைத்து வரவில்லை. வழியில் ஒரு பெண்ணின் துணை கிடைக்கிறது. ஆறுநாட்கள் மட்டுமே அவளோடு ஏற்பட்ட நட்பின் காரணமாகப் பெண்ணைப்பழிக்கும் பண்பை அடியோடு விட்டுவிடுகிறான். எந்தப் பெண்ணையும் குறைகூற இனி நாக்கு துணியாது. ஆறுநாட்களில் என்னைத் தூய்மைப்படுத்தும் மனம் பெண்பிறவிக்கு இருக்கும்போது நான் எப்படி ஒரு பெண்ணைப் பழிக்க முடியும்? என நீலமேகன் கேள்வி எழுப்புகிறான். மனிதனை மனிதனாக்கும் பண்பு பெண்ணினத்திற்கே உண்டு என்ற தம் கருத்தை நீலமேகன் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். பெண்ணை, 'மாயப்பிசாசு' 'தையல் சொல் கேளேல்' 'பெண் புத்தி பின் புத்தி' எனப்பலவாறாகப் பழித்துக்கூறும் சமூகக் கோட்பாட்டை விரும்பாதவர் மு.வ என்பது இங்கே வெளிப்படையாகத் தெரிகின்றது.

நாட்டின் நலனுக்காகப் பயன்பட வேண்டிய விஞ்ஞானம் அழிவிற்காகப் பயன்படுத்தப்படுதலையும் மு.வ விரும்பவில்லை. விஞ்ஞானிகள் நாசவேலையில் பயன்படக்கூடிய ஆயிரத்தெட்டுப் புதுமைகளைக் கண்டறிந்துள்ளனர். அவர்களால் மூளையுடன் வாழும் உடம்புகளை அழியாமல் காக்க முடியவில்லை. ஆனால் மனிதனை அழிக்கப் பல வழிகளைக் கண்டறிந்துள்ளனர். வெகு தொலைவிலிருந்து கூடத் தாக்கும் கருவிகளை கண்டறிந்த விஞ்ஞானிகள் பல தற்காப்பு முறைகளையாவது வகுத்துக் கொள்ளக் கூடாதா? என நீலமேகன் வாயிலாக கேள்வி எழுப்புகின்றார்.

மலைச் சரிவுகளைக் கடந்து செல்ல மனிதன் இன்னும் எளிய வழிகளைக் கண்டறியவில்லை என்பதையும் சுட்டுகின்றார். பள்ளங்களில் கீரி, பாம்பு கூட விழுந்து மாய்வதில்லை. மனிதனோ நொடியில் விழுந்து மாய்கிறான். சிறு வழுக்குதல் கூட வாழ்க்கைப் பாதையையே முடக்கி விடுகின்றது என நீலமேகன் புலம்புகின்றான். அந்தப் புலம்பல் மு.வ.வின் புலம்பலாகவே உள்ளது.

'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு - அருந்தியது
அற்றது போற்றி உணின்''

என்றார் வள்ளுவர். உணவே மருந்து என்பதே நம் முன்னோர் கண்டறிந்த உண்மை. இக்கருத்தையும் பொன்போல் போற்றுபவர் மு.வ. நல்ல

உணவாலும் உடற்பயிற்சியாலும் நோயைப் போக்கிக் கொள்ள முடியாத நாக்கடிமைகள் சோம்பேறிகள், நோய்க்கு அரண்மனை கட்டுபவர்கள் என சற்று கோபமாகவே பேசுகின்றார். பொன்முடி நோயுற்றபோது அவள் கணவன் ஆறுமுகம் இவ்வாறு பேசுவதாகக் கூறியுள்ளார். ஆறுமுகத்தின் அறிவுரைகளை ஏற்று நடந்ததால் தன் உடல்நிலை சரி செய்யப்பட்டது என நினைவுகூர்கிறாள் பொன்முடி. உடல்நோயற்றிருப்பது முதல் இன்பம். மனம் கவலையற்றிருப்பது இரண்டாம் இன்பம். பிறர்க்கு உதவி செய்வது மூன்றாம் இன்பம். இந்த மூன்றும் தெரியாமல் முப்பதாயிரம் புத்தகங்களை படித்தால் என்ன? அவற்றைக் கொளுத்தி அந்த கரியை பூசிக்கொண்டு காட்டில் திரிந்தால் என்ன? என்ற கேள்விகளை ஆறுமுகம் வாயிலாக எழுப்பியுள்ளார். இக்கேள்விகள் அளவறிந்து உண்டு, உடற்பயிற்சி செய்து, உடல்நலம் பேணி, பிறருக்கு உதவி வாழும் வாழ்க்கையே உண்மை வாழ்க்கை என உணர்த்த பயன்பட்டுள்ளன. அத்தகையதோர் வாழ்க்கைக்கு இலக்கணமாக மு.வ திகழ்ந்தார்.

ஆக வீட்டிலும் வெளியிலும் அடக்குமுறை இல்லாத ஜனநாயகப் பண்பு வளர வேண்டும். குடும்ப வாழ்வில் ஆணும் பெண்ணும் சமம் என்ற சிந்தனை ஏற்படவேண்டும். வெளிஉலகில் ஆண் பெண் நட்புறவு செழிக்க வேண்டும். பெண்ணைப் பழிக்கும் சமூகம் மாறவேண்டும். ஆணுக்கும் கற்பு தேவை என்ற பாரதி கருத்தை ஆண்கள் கடைபிடிக்க வேண்டும். விஞ்ஞானம் மனிதனை அழிக்க பயன்படக்கூடாது. மனித இனம் நோயற்று வாழவேண்டும் என்பன போன்ற தம் விருப்பங்களை மு.வ 'அந்தநாள்' நாவலில் ஆணித்தரமாகப் பதிவு செய்துள்ளார்.

9. மொழிநூல் சுட்டும் இலக்கணக் கோட்பாடுகள்

சங்கர நாராயணன்.கி
ஆய்வாளர்,தமிழியல்துறை,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி - 12.

பேரா.மு.வரதராசனின் மொழிநூலில் இடம்பெற்றுள்ள குறிக்கத்தகுந்த இலக்கணக் கோட்பாடுகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

குற்றியலுகரம்

வல்லின மெய்களின் மேல் ஏறிவரும் உகரத்தினைக் குற்றியலுகரம் என்பர். இதற்கு மு.வ, தமிழில் வல்லின மெய்கள் ஈறாக வரும்போது குற்றியலுகரம் ஒலிக்கப்படும். இக்காலத்துப் பேச்சு மொழியிலோ, மெல்லின இடையின ஈறாக வரும் சொற்களிலும் குற்றியலுகரம் ஒலிக்கிறது என்கிறார். சான்று: மண்ணு, பொண்ணு. குற்றியலுகரத்தினை உகர வடிவினதாக எழுதாமல் அதற்குரிய மெய்யெழுத்தின் மேல் ஒரு புள்ளியோ, சிறு வட்டமோ வரையப்படும். பண்டையத் தமிழிலும் இக்காலத்தில் எழுதுவது போல் எழுதப்படாமல், புள்ளியிட்டு எழுதப்பட்டு வந்தது என்கிறார்.

ஆய்தம்

ஆய்தம் தொடக்கத்தில் ஒரு தனியொலியாகவும் தனிவடிவெழுத்து உடையதாகவும் இருந்திருக்க முடியாது என்கிறார். க, ச, ட, த, ப, ற என்னும் ஆறு வல்லொலிகளையும் மெல்லொலிகளாக்க அது வழங்கியிருத்தல் கூடும். காலப்போக்கில் அதன் இயல்பை உணராமல், தொல்காப்பியர் அதனைச் சார்பெழுத்து எனக் குறிப்பிட்டதையும் கருதாமல், அதற்கு ஒரு தனிவடிவம் தந்து எழுதத் தொடங்கியிருக்கலாம். அவ்வாறாயின் உயிரொலிகள் முதலொலிகளாக வழங்க, அவற்றுள் முன்னண்ண உயிர்களின் வகையொலிகளாகக் குற்றியலுகரமும், பின்னண்ண உயிர்களின் வகையொலியாகக் குற்றலியலுகரமும், அமைந்தது போல், மெய்களுள் வல்லினமாகிய ஆறு முதலொலிகளுக்கும் வகையொலிகளாக வருவனவற்றை உணர்த்த ஆய்தம் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை தெள்ளிதின் விளக்கி ஆய்தத்தின் சிறப்பினை மொழிநூலில் எடுத்துரைக்கிறார்.

அடிச்சொற்கள்

மு.வரதராசனார் ஓரசையாக உள்ள அடிச்சொற்களை இரண்டு வகைகளாகப் பாகுபாடு செய்கிறார்.

1. உயிரீறாக உள்ள அடிச்சொற்கள். அவற்றின் உயிர் பெரும்பாலும் நெடிலாக இருக்கும். சான்று: வா, போ, தா, ஈ

2. மெய்யீறாக உள்ள அடிச்சொற்கள். இவற்றில் உயிர் பெரும்பாலும் குறிலாக இருக்கும். சான்று: நில், சொல், கொள், எண், உண்.

சொல் வகை

ஒரு சொல்லின் பொருள், இடத்தை ஒட்டி வேறுபடுவதாகவும் இருக்கும். காலத்தை ஒட்டி வேறுபடுவதாகவும் இருக்கும். தன்மை, முன்னிலை, படர்க்கை என்றும், உயர்திணை, அஃறிணை, ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்றும், பிறவகையாகவும் இடத்தை ஒட்டி வேறுபடும் பொருளுடையது பெயர்ச்சொல் என்றும், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் முதலாகக் காலத்தை ஒட்டி வேறுபடும் பொருளுடையது வினைச்சொல் என்றும் பாகுபடுத்தி சொல்லின் வகைகளுக்குப் புதியதான விளக்கத்தினைத் தருகிறார்.

திணை - பால்

திராவிட மொழிகளில் திணை, பால் பாகுபாடும் எண் பாகுபாடும் தனிப்பட்டு வேறுநிற்பன அல்ல என்றும் திணை, பால் பாகுபாட்டிலேயே எண்ணும் கலந்து அமைவதைச் சான்றுடன் சுட்டுகிறார். உயர்திணை (பால் - ஆண்பால், பெண்பால், எண் - ஒருமை), (பால் - பலர்பால் - எண் - பன்மை), அஃறிணை (பால் - ஒன்றன்பால், எண் - ஒருமை, பால் - பலவின்பால், எண் - பன்மை).

விகுதிகள்

ஆர், கள் முதலிய விகுதிகள் திணை, பால்களை உணர்த்தும். கள் விகுதி முதலில் அஃறிணையில் இடம்பெற்று, நாளடைவில் பெருவழக்காகி, இன்று உயர்திணையிலும் இடம்பெற்று நிற்கின்றது என்கிறார். அவர் என்னும் சொல் தமிழில் உயர்திணையில் ஒருமையை உணர்த்தும் சொல்லாகவும் பயின்று வருவதாகக் குறிப்பிடுகிறார். பலர்பால் விகுதி அர் என்பதோடு பலவின்பால் விகுதி கள் என்பதும் சேர்ந்து பன்மையை உணர்த்துபவை. இவை சில விடங்களில் உயர்திணை ஒருமையை உயர்சொற் கிளவியாக உணர்த்தல் உண்டு என்கிறார். சான்று: தலைவர் அவர்கள்.

வேற்றுமை உருபுகள்

தமிழ்மொழியில் முதல்முதலில் வேற்றுமைப் பொருளை உணர்த்த முழுச்சொற்கள் வழங்கியிருக்க வேண்டும் என்கிறார். நாளடைவில்

அச்சொற்கள் மருவித் திரிந்து உருபுகள் என வழங்கும் நிலை வந்திருக்க வேண்டும் என்கிறார். இப்போதும் சில வேற்றுமைப் பொருளில் முழுச்சொற்கள் பயன்படுதலைச் சான்றுகளுடன் சுட்டுகிறார். கல்லால் எறிந்தான் - கல்கொண்டு எறிந்தான், அவனது பசு - அவனுடைய பசு. கொண்டு, உடைய என்ற வினைச்சொற்கள் மூன்றாம் வேற்றுமை மற்றும் ஆறாம் வேற்றுமைப் பொருளிலும் வந்துள்ளன. இவ்வாறு உருபுக்கு ஈடாக வருதலால் இதனைச் சொல்லுருபு என்கிறார் மு.வ. அவைபோலவே, ஐ, ஆல், கு என்னும் உருபுகளும் ஒரு காலத்தில் பெயர்ச்சொல்லாகவோ, வினைச்சொல்லாகவோ இருந்திருக்கும் என்கிறார். முழுச் சொற்கள் திரிந்தே உருபுகளாக மாறியுள்ளன என்கிறார்.

இலக்கண நூற்கள் முதலாம் வேற்றுமைக்கு உருபுகள் இல்லை என்கின்றன. ஆனால் மு.வ அவர்கள் முதலாம் வேற்றுமைக்கு உருபுகள் உண்டு என்பதனைப் பின்வரும் சான்று மூலமாக விளக்குகிறார். மரம் என்ற சொல்லிலுள்ள அம் முதல் வேற்றுமை உருபு ஆகும். ஐ முதலிய உருபுகளை ஏற்கும்போது அம் கெடுவதால் அந்த அம் என்பதே எழுவாய் வேற்றுமை உருபு என்று குறிப்பிடுகிறார்.

இடப்பெயர்களின் பன்மை

பேச்சுத்தமிழில் மகர ஈற்றின் பின்னர், கள்விகுதி சேர்ந்து வழங்கும் பெயர்கள் உள்ளன. (நாம் -கள் -நாங்கள்). தொல்காப்பியனார் கள் விகுதி அ.்.றிணைக்கே என வரையறுத்துக் கூறியிருப்பினும் இக்காலத்தில் அவ் விகுதி உயர்திணையிலும் பயின்று வழங்குகின்றன என்கிறார்.

எண்ணுப்பெயர்கள்

ஒன்று

ஒன்று என்னும் பெயர் ஒறு என்பதினின்றும் அமைந்ததாகும் என்கிறார். அச்சொல் ஒன்றுதல், ஒன்றினார் எனத் தன்வினையாகவும், ஒற்று எனப் பிறவினையாகவும் வழங்கப்படுவதாகும் என்கிறார். ஒறு என்பதே ஒன்றின் பழைய வடிவம், அடிச்சொல் என்றும் குறிப்பிடுகிறார்.

இரண்டு

உயிர் முதல்மொழி வருமிடத்து இரு என்னும் பெயரடையின் ஈற்றுயீர் கெட்டு முதலுயிர் நீளும் என்கிறார். எனவே ஈர் என்பது அதன் மற்றொரு வடிவமாகும் என்கிறார் மு.வ. இதன் அடிச்சொல் இர் என்பதாகலாம் எனவும், ஈர்தல் என்பது பிளத்தல், அறுத்தல், துண்டித்தல் என்னும் பொருளில் வழங்கியிருந்தது எனவும், பிறகு ஒன்று இரண்டாக அறுபடுதல் பற்றி, இரண்டு பொருள்களைக் குறிக்க வழங்கியிருக்கலாம்

எனவும் குறிப்பிடுகிறார்.

மூன்று

முறு என்பது பழைய வடிவமாகும். அடிச்சொல்லிலே றகரம் சேர்ந்ததாகக் கொள்ளவேண்டும் என்கிறார். இரு என்பதில் ரகர மெய் கெட்டது போல், முந்நூறு என்பதில் மூறு என்பதன் றகரமெய் கெட்டிருக்கும் என்கிறார்.

நான்கு

நல் என்ற ஒன்றே இதன் அடிச்சொல்லாகும். நல் என்பது மிகுதி, பன்மை, வண்மை என்னும் பொருளைத் தருவதாகும் என்பர். நாங்கு என்பதைவிட நான்கு பழையது. அதனினும் பழமையானது நால்கு என்பது. இது சங்க இலக்கியத்திலே காணப்படுகிறது என்கிறார்.

ஐந்து

அஞ்சு என்பது ஐந்து என்பதன் திரிபே. ஐது என்பதன் பகுதியான ஐ என்பதே அடிச்சொல்லாகும் என்கிறார்

ஆறு

எல்லாத் திராவிட மொழிகளிலும் பெயர்க்கும் பெயரடைக்கும் உள்ள வேற்றுமை மிகக் குறைவாகவே உள்ளது. எல்லா மொழிகளிலும் ஆறு என்பதே பெயர் பெயரடை, உயிருக்கு முன் ஆறு எனவே மெய்க்குமுன் ஆறு எனவே நிற்கின்றது. து. டு என்னும் விகுதிகள் இவ்வெண்ணிற்கு இல்லை என்கிறார். ஆறு என்பது புதுவழியறுத்தல், தனிப்பகுதி காணல் என்னும் கருத்துடன் ஒரு வகையில் உள்ள ஐந்து விரலையும் எண்ணி முடித்த பின், மற்றொரு கையின் விரலை எண்ணும் புது வழிக்கு வழங்கியிருக்கலாம் என்கிறார் மு.வ.

ஏழு

எழுமை என்பது தமிழில் வழங்கும் சொல். எழு என்பதன் ழகரம் அடிச்சொல்லைச் சார்ந்தது. எழு என்பது புதியதொன்று. புறப்படல், எழுதல் என்னும் பொருளில் இரண்டாம் வரிசையில் புதிய எண்ணிக்கை குறிக்க வழங்கியிருக்கலாம் என்கிறார்.

எட்டு

எண் என்பதனோடு டு விகுதி சேர்ந்தே எண்டு என்றும் எட்டு என்றும் பெயர்கள் அமைந்தன. அந்த எண் என்பதே பெயரடையாக எல்லா மொழிகளிலும் வழங்குகின்றது என்கிறார்.

ஒன்பது

ஒன்பது என்பதன் பொருள் பத்திலொன்று குறைவு. ஒன்று குறைந்த பத்து என்பதே பொருளாகும் என்கிறார். தொல் என்பதனோடு பத்து என்பது தொக்க தொகையே ஒன்பது எனக் கொள்வது பொருத்தமாகும் என்கிறார்.

பத்து

பன், பது என்னும் இரண்டிலொன்று அடிச்சொல்லாக வேண்டும் என்கிறார். எட்டு வரையில் எண்ணக் கற்ற மக்கள் மிகுதியானவற்றைப் பல என்றும் பன்மை என்றும் கருதியிருக்கலாம் என்கிறார். பன் என்பது அப்பொருளது ஆகலாம். பல்லும் துவும் இணைந்து ப..து, பத்து ஆகியிருக்கலாம் என்கிறார்.

நூறு

நூறு எனினும் நீறு எனினும் பொடி துகள் என்பவற்றைக் குறிக்கும். தொடக்கத்தில் எண்ணிக்கையுள் அடங்காத பெருந்தொகையினைக் குறிக்கப் பொடிபோல் பல எனக் குறித்திருத்தல் இயற்கையாகத் தோன்றுகின்றது என்கிறார். வாழிய மணலினும் பலவே என்று பல ஆண்டுகளைக் குறிக்கையில் மணலைக் கூறுதல் தமிழ் மரபு என்பது இங்கு கருதத்தக்கது என்கிறார்.

வினைச்சொற்கள்

வினைச்சொல்லின் அடிப்படையான அமைப்பினை மு.வ அவர்கள் பின்வருமாறு விளக்குகின்றார்.

1. அடிச்சொல்லோடு கு, து, வு முதலான உறுப்புகள் சேர்வதால் வினைச்சொற்கள் அமைகின்றன. (பெரு - பெருக) அவ்வாறு அமைந்த வினைச்சொற்கள் பகுதியாய் நிற்க, அவற்றோடு கால இடைநிலை முதலியன சேர்கின்றன.
2. திராவிட வினைச்சொற்கள் பெரும்பாலும் ஒட்டுநிலை ஆக அமைந்தவை. காலம், இடம் முதலியவற்றை உணர்த்தும் உறுப்புகள் அடிச்சொல்லோடு ஒழுங்கான முறையில் புணர்க்கப்பெற்றுள்ளன.
3. தமிழில் வினைச்சொல், துணைவினை முதலியவற்றோடும் திணைபால் விகுதியோடும் சேர்ந்து நீண்டு அமைந்த போதிலும் ஒரு சொல்லாகவே கருதப்படுகின்றது.
4. தமிழில் வினைச்சொல் காலம் உணர்த்துவதோடு, பெயர்ச்சொல் போல் திணை பால் முதலியவற்றை உணர்த்துவதும் உண்டு. காலம்

உணர்த்தும்போது கால இடைநிலை பகுதியை அடுத்துச் சேரும், திணை பால் உணர்த்தும்போது பால்காட்டும் விகுதிகள் சேரும்.

5. ஏவல் ஒருமை வினையோடு காலம் இடம் உணர்த்த உறுப்புகள் சேர்தல் இல்லை. அடிச்சொல்லே பெரும்பாலும் ஏவலொருமையாக வழங்குகிறது.

6. பெயர்ச்சொற்கள் வேற்றுமை ஏற்கும் முறை ஒன்றாயிருத்தல் போல, வினைச்சொற்கள் திணை பால் முதலிய உணர்த்தும் முறையும் ஒன்றாக ஒழுங்காக உள்ளது.

7. முற்று, எச்சம் என இருவகை பகுப்பும், இறப்பு, நிகழ்வு, எதிர்வு என மூவகைக் காலமும் ஏனைக் காலங்களை உணர்த்தத் துணை வினைகளைப் பயன்படுத்தும் முறையும், ஏவல் வியங்கோள் முதலியவற்றின் ஒழுங்கும் இம்மொழிகளுக்குச் சிறப்பாக உரியவையாகும் என்கிறார்.

8. பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லினையும் சேர்த்து ஒரு சொல் போல வழங்குவதும் உண்டு என்கிறார்.

9. முற்சேர்க்கையால் வினைச்சொற்களின் பொருளைச் சிறப்பித்தல் திராவிட மொழிகளில் இல்லை என்கிறார்.

தொகுப்புரை

மு.வ அவர்களால் எழுதப்பட்ட மொழிநூல் இலக்கணக் கோட்பாடுகளுக்கான அடிப்படையான விளக்கத்தினைச் சுட்டுவது ஒருவகையாகும். மற்றொரு வகையாக இலக்கணக் கோட்பாடுகளின் அடிப்படையில் மாற்றங்களை சுட்டும் போதும் அதைக் காரண காரியத்துடனும் சான்றாதாரங்களுடனும் விளக்குவதுதான் நூலின் சிறப்பாக அமைகின்றது எனலாம். முதலாம் வேற்றுமைக்கு உருபில்லை என்ற இலக்கணிகளின் கருத்துக்கு மறுப்பாக, உருபுண்டு என்பதை மரம் என்ற சொல்லின் வழியாகப் புலப்படுத்துகிறார். ஒவ்வொரு கோட்பாடினையும் மற்ற திராவிட மொழிகளோடு ஒப்பிட்டும், காலமாற்றத்தால் ஏற்பட்ட மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் தற்கால பேச்சு மொழி, எழுத்து மொழியின் அமைப்பிற்கேற்ப சுட்டும் பாங்கும் சிறப்பானதாகும். இலக்கணக் கோட்பாடுகளில் ஏற்பட்ட மாற்றங்களை மட்டும் கூறாமல், தற்கால

மொழியமைப்பில் அவை எவ்வாறாக உள்ளது என்பதையும் தவறாமல் விளக்கிச் செல்கிறார். உரையாசிரியர்கள், மொழியியலாளர் ஆகியோரின் கருத்தினைச் சுட்டி இறுதியில் தன்னுடைய கருத்தினையும் விளக்கி புதியவகை இலக்கணக் கோட்பாடுகளை உருவாக்கியமைக்கு மேற்சொன்ன இலக்கணக் கூறுகளே சான்றாக அமைகின்றன.

இலக்கணிகளால் உருவாக்கப்பட்ட இலக்கணக் கோட்பாடுகளை மேலும் ஆய்வு செய்வதற்கும், புதுமையான மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் இனம் காணுவதற்கான வழியாக இம் மொழிநூல் அமைகின்றது என்பதை இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

10. மு. வ. வின் புதினங்களில் சமுதாயச் சிந்தனைகள்

ஜெ. காமாட்சி
விரிவுரையாளர்
எம்.எம்.இ.எஸ். கலை அறிவியல் கல்லூரி,
மேல்விஷாரம்.

வேலம் என்னும் சிற்றூரில் பிறந்து திருப்பத்தூரில் தமிழாசிரியராக வாழ்வைத் தொடங்கி சென்னையில் தமிழ்ப் பேராசிரியராக மலர்ந்து, மதுரையில் துணை வேந்தராகப் பணியாற்றி நிறைவெய்திய வாழ்வு, டாக்டர் மு.வ. அவர்களுடைய வாழ்வாகும்.

மு.வ. அவர்கள் தொடாத துறை ஒன்றும் இல்லை. தொட்ட துறைகளை அழகுபடுத்தாமல் விட்டதில்லை.

மு.வ.வின் நாவல்களின் எண்ணிக்கை

மு.வ. அவர்கள் 13 நாவல்களை எழுதியுள்ளார்.

1. செந்தாமரை 2. கள்ளோ? காவியமோ? 3. பாவை 4. அந்தநாள் 5. மலர்விழி 6. பெற்றமனம் 7. அல்லி 8. கரித்துண்டு 9. கயமை 10. நெஞ்சில்ஒருமுள் 11. அகல்விளக்கு 12. வாடா மலர் 13. மண் குடிசை

சமுதாய கருத்துக்களை தன் புதினங்களில் வாயிலாக எடுத்துரைக்கிறார்.

1. செந்தாமரை

காதலின் பல்வேறு கோணங்களை சித்தரித்துக் காட்டுகிறது.

2. பெற்ற மனம்

தாய்மையின் ஆற்றலை புலப்படுத்துகிறது.

3. கள்ளோ காவியமோ?

பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற இன்னல்களை எடுத்து இயம்புகிறது.

4. கரித்துண்டு

கலை மனத்தின் உணர்வை புலப்படுத்துவது என்கிறார். கற்புக்கு மு.வ. தரும் விளக்கம் புதுமையானது மட்டுமன்று, புரட்சியானது என்கிறார். கற்பு என்றால் வாழ்நாள் முழுவதும் ஒருவன் ஒருத்தியாக உண்மையாக வாழ்வது. இக்காலம் ஆராய்ந்தாலும், அனுபவித்தாலும் மிகுதியாக உள்ள

காலம் இது. ஆகவே ஒருவனை விட்டு இன்னொருவனுடன் வாழும்படி நேரலாம். ஒருவனை விடாமல் இன்னொருவனுடன் வாழ்வதுதான் தவறு. எப்போது எவனுடன் வாழ்கிறாளோ அவனுக்கு துரோகம் செய்யாமல் இருந்தால் போதும் அதுதான் கற்பு என புதிய நோக்கில் கூறுகிறார்.

5. நெஞ்சில் ஒரு முள்

படிப்பு உடம்பை மட்டுமல்ல மனதையும் மென்மையாக்குகிறது என்கிறார்.

6. கயமை

அரசு அலுவலகங்களில் நடைபெறும் முறைகேடுகளை கண்டிக்கிறார்.

7. மண்குடிசை

மண்குடிசையையும், கல்வீட்டையும் சுட்டிக்காட்டுவதோடு, சமுதாயத்தின் சீர்கேட்டையும் குறிப்பால் உணர்த்தியுள்ளமையை உணர முடிகிறது. மு.வ. கலைஞராக காட்சியளிப்பதோடு சமுதாய மேம்பாட்டுச் சிந்தனையாளராகக் காணப்படுகிறார்.

சமுதாய சிந்தனை

உள்ளம் திருந்தினால் உலகம் திருந்தும் என்பது மு.வ.வின் அசைக்க முடியாத நம்பிக்கை. நாம் வாழ்வதற்கு மூன்று நன்றாக இருக்க வேண்டும் என வலியுறுத்துகிறார். அவை உள்ளம், உடம்பு, சுற்றுப்புறம். மு.வ. தம் நாவல்களில் ஆறு வகையான உத்திமுறைகளை கையாண்டுள்ளார்

1. தலைமை மாந்தர் தற்கூற்றுப்போக்கில் அமைந்தவை : அல்லி, நெஞ்சில்ஒருமுள், மண்குடிசை.

2. தலைமை மாந்தர் மாறி மாறிக் கதையை எடுத்துரைப்பது : கள்ளோ? காவியமோ?

3. தலைமை மாந்தருடன் நேரடித்தொடர்பு கொண்டோர் கதையை எடுத்துரைக்கும் பாங்கு : அகல்விளக்கு, வாடாமலர்

4. துணை மாந்தர் கதை கூறுவதுபோல் அமைந்தவை : மலர்வழி, கரித்துண்டு

5. கதைமாந்தர் பலரும் மாறி மாறிக் கதையை உரைப்பது : செந்தாமரை

6. ஆசிரியர் கூற்றில். படர்க்கை கூற்றில் அமைந்தவை : பாவை, பெற்றமனம், கயமை

நிறைவுரை

உலகிலுள்ள குறைகளைக் கூறி அவற்றை நிறைவாக்குவதற்கு உரிய முறைகளைக் கூறுவதோடு மட்டும் நின்று விடவில்லை. ஒரு புதிய உலகம் காணவும் விழைகின்றது அவர் உள்ளம்.

"வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லை நேர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லை பொய் உரை இலாமையால்
ஒண்மை இல்லைபல் கேள்வி ஓங்கலால்"

- கம்ப பால் நாட்டுப்படலம் 53

இது கம்பன் காண விழைந்த புதிய உலகம், டாக்டர் மு.வ. அவர்கள் காண விழைந்த உலகம் பொருட் போராட்டம் இல்லாத உலகம். பணவேட்டை இல்லாத ஒரு அமைப்பையே அவர் விரும்பினார், இதற்காக அவர் கையாண்ட உத்திகளில் ஒன்றே புதினமாகும்.

11. எடுத்துரைப்பியல் நோக்கில் மு. வ. வின் இலக்கிய மரபு

இரா. அசோக்குமார்
முனைவர் பட்ட ஆய்வாளர்
காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம்
இலாசுபேட்டை
புதுச்சேரி - 605 008.

மக்களால் பின்பற்றப்பட்டு வரும் வழக்கத்தை மரபு எனலாம். நாகரிகத் தோற்றம் முதலே மனிதகுலம் சில மரபுகளை மாற்றிக்கொள்ளாமல் வாழ்ந்து வருவதை அறியமுடிகிறது. ஒருவர் ஒரு செயலைச் செய்கின்றபோதோ அல்லது அச்செயல் தொடர்பாகப் பேசுகின்றபோதோ மற்றவர்கள் அவனுடைய பேச்சை வைத்தோ அல்லது செயலை வைத்தோ அது அவனுடைய இயல்பு என்று கூறுவதைக் காணலாம். அந்த இயல்பை பெரும்பான்மையாக மரபு வழிப்பட்டது எனக்கூறலாம்.

இம்மரபு வாழ்வியலோடு கூடியது. காரணம் வாழ்வியலின் வெளிப்பாடாக அமைந்து நிலைத்துநிற்பது இலக்கியம். இவ்விலக்கியத்திலும் மரபு பின்பற்றப்பட்டமையை இலக்கிய வரலாற்றின்வழி அறியமுடியம். இவ்விலக்கிய மரபுகளைத் தன் நுண்மான் நுழைபுலத்தான், கற்றனவும், கேட்டனவும், சிந்தித்து ஆய்ந்தனவும் கொண்டு “இலக்கிய மரபு” என்ற நூலை மு.வ. எழுதியுள்ளார். இந்நூலில் அவர்கூறும் கருத்துக்கள் பல்வேறு ஆய்வுச் சிந்தனைகளுக்குக் களமாக அமைகின்றன. எடுத்துரைப்பியல் நோக்கில் அவர் கூறும் செய்திகளை ஆராயும் முகத்தான் இக்கட்டுரை அமைகிறது.

எடுத்துரைத்தல் நோக்கு

இலக்கியத்தின் வடிவம் மாறுபட்டு வந்தாலும் முதல் கரு உரிப் பொருளால் கூறும்முறை வேறுபடாமல் பின்பற்றப்பட்டு வருவதை இலக்கிய மரபு என்று எடுத்துரைக்கும் நோக்கில் மு.வ. இந்நூலை அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஒரு கருத்தை எவ்வாறெல்லாம் எளிமையாக மற்றவர்களுக்கு எடுத்துரைக்கலாம் என்பதை அடிப்படையாகக் கொண்டதே எடுத்துரைத்தல் நோக்கு. ஒரே கருத்தைப் பல வழிகளில் எளிமையாக எடுத்துரைக்கலாம். இவ்வெடுத்துரைப்பியல் நோக்கின் சிறப்பினை மு.வ.வின் இலக்கிய மரபு நூல் முழுவதும் காணலாம். அவருடைய எடுத்துரைப்பியல் நோக்கு தமிழிலக்கிய மரபுகளை வெவ்வேறு நிலைகளில் அறிந்து கொள்வதற்கும் ஆய்வுச் சிந்தனையைத் தூண்டுவதற்கும் ஏதுவாக அமைகிறது.

எடுத்துரைத்தலில் கூறாது கூறல்

சான்றாக, "எல்லா மொழிகளின் இலக்கியங்களுக்கும் பொதுவாக கொள்ளத்தக்கனவும் சில உள்ளன. என்பதில் எல்லா மொழிகளுக்கும் பொதுவாகக் கொள்ளத்தக்கது என்றமையால் அது ஒவ்வொரு மொழியின் இலக்கிய மரபையே எடுத்துக்கூறுவதாக அமைகிறது. இது ஒரு கருத்தைக்கூறி அக்கருத்துவழி கருப்பொருளை விளங்கவைக்கும் கூறாதுகூறும் எடுத்துரைத்தல் நோக்காக அமைகிறது.

இலக்கியப் பாகுபாட்டை எடுத்துரைத்தல்

இலக்கியம் இருவகையாகப் பாகுபாடு செய்யப்படுகிறது. ஒன்று வடிவம். மற்றொன்று பொருள். இவ்வாறு பாகுபாடு செய்தாலும் புலவர்களின் மனநிலை பற்றி வேறு சில வகையாகவும் பாகுபாடு செய்யப்படும்.

இவ்வாறு வடிவம் பற்றிய பாகுபாட்டில் பாவகையில் அடங்குவனவற்றை நளவெண்பா, கலித்தொகை, நரிவிருத்தம், பரிபாடல், திருக்குறள், நாலடியார் முதலியனவும், எண்ணிக்கை அடிப்படையில் அடங்குவனவற்றை, "வெண்பாவும் கலிப்பாவும் கலந்து அந்தாதியாய் நூறு செய்யுள் வருவது இணைமணி மாலையாம். அதுவே இருபதுவரின் இரட்டைமணி மாலையாம். வெண்பா, கலிப்பா, அகவல் சேர்ந்து முப்பது செய்யுள்வரின் மும்மணிமாலையாம். மேற்கூறிய மூன்றோடு விருத்தமும் சேர்ந்து நாற்பது செய்யுள்வரின் நான்மணிமாலையாம். இவ்வாறே மும்மணிக்கோவை, நவமணிமாலை என்ற நூல் வகைகளும் உண்டு. ஒருபா ஒருப∴து, இருபா இருப∴து முதலிய சில நூல் வகைகள் செய்யுளின் எண்ணிக்கையால் பெயர் பெற்றது" என இலக்கிய மரபினை பாகுபடுத்தி எண்ணிக்கை அடிப்படையிலும் வடிவம் அடிப்படையிலும் எடுத்துரைக்கிறார்.

எடுத்துரைத்தலும் நடித்துரைத்தலும்

ஒருவர்க்கு ஒரு நிகழ்ச்சியைப் பற்றி விளக்கிக்கூறும் போக்கில் அமைந்த இலக்கியங்கள் எடுத்துரைப்பியல் இலக்கியங்கள் என்றும், ஒருவரோடு ஒருவர் பேசி மேடையில் நடிக்கும் போக்கில் அமைந்த இலக்கியங்களை நடித்துரைப்பியல் இலக்கியங்கள் என்றும் பாடுபொருளை மையப்படுத்திக் கோட்பாட்டு அடிப்படையில் எடுத்துரைக்கிறார். "மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம் முதலியன எடுத்துரை வகையைச் சார்ந்தவை. கலித்தொகை, அகநானூறு முதலியன நடித்துரை வகையைச் சார்ந்தவை"[3] என்று எடுத்துரைத்தலுக்கும் நடித்துரைத்தலுக்கும் சான்று காட்டுகிறார்.

கார்காலம் தொடங்குவதையும் முல்லை மலர்வதையும் தொடர்புபடுத்திப் பாடிய பாடல்கள் சங்ககாலத்தில் மிகப்பல இடம்பெறுகின்றன. ஆனால் இன்றைய சூழலில் அப்படிப்பட்ட பாடல்கள் அதிகம் இடம்பெறவில்லை என்பதற்குக் காலத்தைப் பற்றிய செய்திகளைக்கூறி விளக்குகிறார். "பழங்காலத்தில் மக்கள் தங்கள் வாழ்வோடும் தொழிலோடும் ஒட்டிக் கார்காலத்தை எதிர்பார்த்திருந்தனர். கார்காலத் தொடக்கத்தில் இயற்கை காட்டும் மாறுதல்களையும் மறவாது இருந்தனர். இன்று அந்த அளவிற்கு அறுவகைப் பருவங்களை மக்கள் கருத்தில் கொள்வது இல்லை. சித்திரை வைகாசி ஆனி என்றோ ஜனவரி பிப்ரவரி மார்ச் என்றோ மாதங்களைக் கணக்கிட்டு எண்ணும் வழக்கமே மக்களின் வாழ்வில் உள்ளது. அந்த மாதங்களின் தொடக்கத்தையும் இயற்கையின் மாறுதல்களைக் கண்டு யாரும் அறிவது இல்லை. ஒன்று இரண்டு என்று நாட்களைக் கணக்கிட்டு திங்கட் குறிப்புகளையும் ஆண்டு குறிப்புகளையும் பார்த்தே அறிகின்றார்கள். ஆதலில் கால வரவு பற்றிய கற்பனைகள் முன்போல் அமைவது இல்லை" என்று சான்று காட்டுகின்றார்.

கட்டுப்பாட்டை உடைத்தெறிதல்

பண்டைத் தமிழ் இலக்கியங்களிலிருந்து புத்திலக்கியங்கள் வடிவத்தாலும் கூறும் முறையாலும் வேறுபட்டிருக்கிறது என்பது இக்கால இலக்கியங்கள் வழி அறிந்துகொள்ள முடிகிறது. இப்படிப்பட்ட மரபுசார்ந்த இலக்கியக் கோட்பாடு தற்கால இலக்கிய மாறுபாட்டிற்குக் காரணமாக அமைவன என்பதற்கு "கற்றவர்கள் பலரும் கற்ற நூல்களின் பயிற்சியால் பழமையையே பெரிதும் நினைவில் கொண்டு வாழ்கின்றனர். பழைய இலக்கிய மரபுகளையே நினைவில் கொண்டுள்ளதால் அந்தப் பழமையில் ஊறியவராக உள்ளனர். அதனால் புதிய கலைஞர்கள் படைத்துத்தரும் இலக்கியங்களை அந்தப் பழைய மரபுகளைக் கொண்டு அளந்து காண்கின்றனர். வேறுபாடு கண்டதும் வெறுப்பு கொள்கின்றனர். ஒதுக்குகின்றனர். புதிய கலைஞர்களின் படைப்பு, வாழ்க்கையிலிருந்து நேரே முகிழ்த்த கலை என்பதையும் அவர்கள் மறந்துவிடுகின்றனர். இயற்கை உணர்வைப் பழைய மரபுகள் கொண்டு அளந்து கட்டுப்படுத்தல் கூடாது. இலக்கியம் பயிலாத மற்றவர்கள் இவ்வாறு குறுகிய நோக்கம் கொண்டு புதிய கலைஞர்களின் படைப்புகளை அளப்பதில்லை. அவர்கள் பழைய இலக்கிய மரபுகளை அறியாதபடி உதவியாகிறது. அவற்றை அறியாத காரணத்தால் தம் இயற்கையான உணர்வைக் கொண்டு புதிய நூல்களைக் கற்றுச் சீர்தூக்குகின்றனர். இலக்கியத்தில் ஊறிய பழைய மனம் கொண்டவர்களைவிட இவர்களே இவ்வகையில் நல்லவர்களாக உள்ளனர் எனலாம்"[5] என்று தற்கால இலக்கியவாதிகள் பழையு இலக்கியக் கட்டுப்பாட்டை உடைத்தெறிவதற்கான காரணங்களை மு.வ. எடுத்துரைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பொருந்தா மரபு

இலக்கியம் உயிரினங்களைப்போல் தோற்றமும் வளர்ச்சியும் வாழ்வும் உடையது. ஆகவே இவ்வாறுதான் இருத்தல் வேண்டும் என்று வரையறை செய்வது இலக்கியத்தின் வளர்ச்சிக்கு பொருந்தாமல் தடையாக அமைகிறது. தொடக்கத்திலிருந்து தொடர்ந்தும் மாறியும் வரும் இலக்கியம் அவ்வாறே வளர்ச்சிபெறக் கூடியதாகவும் அமைகிறது. எனவே, "பழைய நூல்களையும் அவற்றின் விதிகளையுமே போற்றி, புது நூல்களையும் அவற்றின் நெறியையும் வரவேற்காத மனநிலை எல்லாநாடுகளிலும் உண்டு. இறந்த காலத்தைப் போற்றி நிகழ்காலத்தை நெகிழவிடும் இந்த மனப்பான்மை இலக்கிய வளர்ச்சிக்கு பொருந்துவது அன்று", "காதலரின் களவொழுக்கம் ஒரு திணைப்புனத்தில் தொடங்குவதாகப் பாடுவது பழைய தமிழிலக்கிய மரபு. இனிப் பாடுவோரும் அந்த மரபைப் போற்றுவார்கள் என எதிர்பார்க்க இடமில்லை. வாழ்வு மாறியமைந்ததே இந்த மரபு மாறுவதற்குக் காரணம்" என்பது பொருந்தா மரபிற்கு சான்றாக அமைகிறது.

ஊடல் மரபினை எடுத்துரைத்தல்

தொல்காப்பியம்வழியும், சங்க இலக்கியங்களிலும் ஊடலின் திணையாக மருதநிலம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இவ்வூடல் பற்றி எடுத்துரைக்கும் மு.வ. "ஊடல் எங்கும் நிகழ்வதாகப் பாடக்கூடும். மருதநிலத்தின் பரத்தையர் இல்லாமலே ஊடலை அமைத்துத் திருவள்ளுவர் முப்பது குறட்பாக்களில் கற்பனை விருந்து அளித்துள்ளார். பாரதியாரின் கண்ணன் பாட்டும் குயிற்பாட்டும் காதல் பற்றிய கற்பனைகளுக்கு உயர்வும் புதுமையும் தந்துள்ளன'' என்று குறிப்பிட்டிருப்பது ஊடல் மரபு இலக்கியங்களில் இடம்பெற்றிருப்பதை உணர்த்துவதாக அமைகிறது.

அகம்- புறம் எடுத்துரைத்தல்

உள்ளத்தளவில் உணரப்படுவதாகிய காதல் பற்றிய பாடல்கள் அகம் என்றும், மற்றவர்க்குப் புலனாகும் வீரம், கொடை பற்றிய பாடல்களைப் புறம் என்றும் கூறலாம். காதலிக்கும் இருவர் செயலும் ஊரார்க்குத் தெரிந்துவிட்டால் அது புறமாகக் கொள்ளப்படும். பெயர் கூறாமையின் அது அகமாகவே கருதப்பட்டது. இக்கருத்திற்குச் சான்றாக, "காதல் பற்றிய பாட்டுகளிலும், காதலர் இன்னார் என்று அறியமுடியாதவாறு, இயற்பெயரோ இனப்பெயர் முதலியனவோ இல்லாமல் அமைந்த பாட்டுக்களே அகம் என்றும், அவ்வாறு பொதுவாக அமையாத காதல் பாட்டுக்கள் புறம் என்றும் கொள்ளப்பட்டன" என்றக் கூற்று சான்றாக அமைகிறது.

படைப்பினுள் படைப்பாளனை எடுத்துரைத்தல்

இலக்கியத்தின் அமைப்பு முறையில் சில படைப்பாளர்கள் தன் படைப்புகளில் சில இடங்களில் இடம்பெறவதும் உண்டு என்பதை, "காவியம் இயற்றிய புலவரே காவிய மாந்தருள் ஒருவராக வருதலை இராமாயணம், பாரதம், சிலப்பதிகாரம் ஆகியவற்றுள் காணலாம். வால்மீகி இராமயணக் கதையினுள்ளும், வியாசர் பாரதக் கதையினுள்ளும், இளங்கோவடிகள் சிலப்பதிகாரக் கதையினுள்ளும் வந்துள்ளனர்.

யானும் சென்றேன் என்னெதிர் எழுந்து
தேவந் திகைமேல் திகழ்ந்து தோன்றி
வஞ்சி மூதூர் மணிமண் டபத்திடை
நுந்தை தாள்நிழல் இருந்தோய் நின்னை
அரைசுவீற் றிருக்கும் திருப்பொறி உண்டென்று
உரைசெய் தவன்மேல் உருத்து நோக்கிக்
கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்தானைச்
செங்குட் டுவன்தன் செல்லல் நீங்கப்
பகல்செல் வாயில் படியோர் தம்முன்
அகலிடப் பாரம் அகல நீக்கிச்
சிந்தை செல்லாச் சேண்நெடுந் தூரத்து
அந்தமில் இன்பத்து அரசர் வேந்தென்று
என்திறம் உரைத்த இமையோர் இளங்கொடி

என்னும் சிலப்பதிகார அடிகளில் அதன் ஆசிரியர் இளங்கோவடிகளும் அக்காலத்தில் இடம் பெற்றமை காணலாம்" என்று கூறியிருப்பதிலிருந்து அறியமுடிகிறது.

இவ்வாறு இலக்கிய மரபுகளையும், அம் மரபுகளிலிருந்து காலந்தோறும் தமிழ் இலக்கியங்கள் பெற்ற மாற்றங்களையும் எடுத்துரைப்பியல் நோக்கில் மு.வ. தனது இலக்கிய மரபு எனும் நூலில் எடுத்துரைத்தமையை கூறாது கூறல், இலக்கியப் பாகுபாடு, எடுத்துரைத்தலும் நடித்துரைத்தலும், கால வரவு எடுத்துரைத்தல், இலக்கியக் கட்டுப்பாட்டை எடுத்துரைத்தல், பொருந்தா மரபு, ஊடல் மரபினை எடுத்துரைத்தல், அகம்- புறம் எடுத்துரைத்தல், படைப்பினுள் படைப்பாளனை எடுத்துரைத்தல் என்ற தலைப்புகளில் மு.வ.வின் எடுத்துரைப்பியல் நோக்கு ஆராயப்பெற்றிருக்கிறது.

௨. டாக்டர் மு. வ. (இலக்கியப் பன்முகச் சாரல்)

முனைவர் இல.செ.திருமலை
கௌரவ விரிவுரையாளர்
தமிழ்த்துறை
பச்சையப்பன் கல்லூரி
சென்னை-600 030.

தமிழ் இலக்கிய வரலாற்றில் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் இருபதாம் நூற்றாண்டின் சகாப்தம் என்று சொல்லுகையில் அது மிகையாகாது. அவரது சொல், எண்ணம், எழுத்து, வடிவம் ஆகியவை தமிழர்களுக்கும், தமிழிலக்கிய ஆய்வாளர்களுக்கும் ஒரு இடைவெளிக்குப் பிறகு (திருவள்ளுவர், கம்பர், இளங்கோவடிகள்) நிரம்பித் ததும்பி வழியும் தமிழ்க் குடமாக விளங்கிக் கொண்டிருப்பதை அவரின் இலக்கியப் படைப்புகளிலிருந்து அறிய முடிகின்றது. 'மு.வ.' என்ற வலிமைமிக்க செல்லப்பெயர் ஒலிக்காத தமிழ்திசை இல்லை என்னுமளவிற்கு உலகத் தமிழர்களின் உள்ளங்களைக் கவர்ந்த தமிழராக அவரை அடையாளம் காண முடிகின்றது.

இலக்கிய நிலைகளில் டாக்டர் மு.வ.

தமிழ்த்தாயின் தலைமகனாக விளங்கிய அவர் 62 வயதில் 85 நூல்களை எழுதி இணையில்லாப் புகழ்ப் பெற்று, பல் வகையான முதல் தரமான நூல்களைத் தந்த தமிழ் வள்ளலாக விளங்கி, இலக்கியப் படைப்பில் நாவல், சிறுகதை, சிந்தனைக்கதை, நாடகம், கட்டுரை நூல், இலக்கியம், சிறுவர் இலக்கியம், கடித இலக்கியம், பயண இலக்கியம், தமிழ் இலக்கிய வரலாறு, மொழி இயல், வாழ்க்கை வரலாறு, சிறுவர் இலக்கணம், மொழிபெயர்ப்பு நூல் என்ற வகைகளில் பல்வேறு கோணங்களில் தமிழரின் நாகரிகம், பண்பாடு, தனிமனித ஒழுக்கம், சமுதாய அக்கறை, மொழியின் அவசியம், ஒற்றுமையின் தேவை ஆகிய சமூக மேம்பாட்டுக் கூறுகளை வலியுறுத்தி தன் இலக்கியப் படைப்புகளின் வாயிலாக போதிக்கப்படுவதை அறியமுடிகின்றது. மு.வ. வின் அனைத்துப் படைப்புக்களும் அன்றாட வாழ்க்கையின் தடைகளைச் சீரமைத்துக்காட்டும் ஒரு எளிய நடைப்பழகும் கருவியாகவே இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், திருவள்ளுவரின் நீதிக் கருத்துக்களையும், புராணக் கதைகளின் கதாப்பாத்திரங்களைக் கொண்டும் நடைமுறையில் எவ்வாறு தனிமனித ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தை கொண்டுணர்த்துகிறார் என்பதற்கு 'பாவை' என்ற நூலில்,

"நல்ல வேலைக்குத் தடை செய்யக் கூடாதே. ஆயிரம் பொய் சொல்லியாவது. . . .

இது தான் இந்த அரிச்சிந்திர புராணம் சொல்லுவதா?
திருவள்ளுவரைவிட உலகத்தை அளந்து பார்த்த
பெரியார் வேறு யாரும் இல்லை" [1]

என்று புராணக்கதைகளின் வழி நின்று பொய்சொல்லா அரிச்சந்திரனின் நிலைப்பாட்டையும், உலகம் போற்றும் திருவள்ளுவரையும் தமது படைப்புகளில் எவ்வாறு படித்துக் காட்டுகின்றார் என்பது தெரியவருகிறது. அதுமட்டுமல்லாமல், நம்முடைய பயிற்றுமொழி தாய்மொழியாக இருந்தால் சாதனைகளையும் வெற்றிகளையும் எட்டுவது எளிது என்று அகல் விளக்கு என்ற நூலில்,

". . . . . . .
நம் மூளைக்கு நேர் வழி தமிழ்
அதை விட்டுவிட்டு ஆசிரியர்கள்
ஆங்கிலத்தில் தானே கற்றுக் கொடுக்கிறார்கள்?" [2]

என்ற அவரது கேள்வியானது, தாய் மொழியில் பயில்வதினால் ஏற்படும் ஈடுபாடு, அதனால் உண்டாகும் உள்வாங்கும் திறனை முழுமையாக பெறமுடியும். இப்படி கற்பிக்கும் வழி வேற்று மொழியில் இருக்கும்போது, நாம் கற்கும் வழியும் தவறாகத்தான் இருக்கும் என்று மு.வ. அவர்கள் மொழியின் பரிணாம வளர்ச்சியில் ஒவ்வொருவருக்கும் அவர்களின் வேர் மொழியின் வாயிலாக வளர்க்கப்படும் மரங்கள் செழிப்புள்ளதாகவும் வளமானதாகவும் இருக்கும் என்பதை அவர் படைப்புகளின் வழி நின்று அறிய முடிகின்றது.

பெண் சுதந்திரம், கட்டாயத்திருமணம் போன்ற சமூகச் சிந்தனைகளில் பெண்களைப்பற்றிய அக்கறை அவர் மனதில் ஓடாமல் இல்லை. பெண்கள் அடிமைத்தனத்திலிருந்து விலகி சுயமுடிவுகளையும், சுதந்திரமாக சமுதாய பிணைப்பில் சம உரிமையுடன் வாழ, 'அகல் விளக்கு' என்னும் நூலில்,

"பெண்ணாய்ப் பிறந்தவர்கள் எல்லாரும் திருமணம்
செய்து கொள்ள வேண்டும் என்று பெற்றோர்கள்
வற்புறுத்தக் கூடாது. தக்க கணவன் கிடைக்காத
பெண்கள் திருமணம் ஆகாமலே இருக்கட்டும்
என்று விட்டுவிட வேண்டும். நம் நாட்டில்
மணிமேகலை இல்லையா? ஆண்டாள்
இல்லையா?" [3]

என்று தொடரும் இந்நாவலில், திருமண நிர்பந்தம், பொருத்தமில்லா வரன் போன்ற அவல நிலைகளைப் போக்கவும், பெண்களுக்கான சமூக மதிப்பையும், தனி உணர்வுகளையும் சமன் செய்யும் நிலைப்பாட்டை அறிய முடிகின்றது. இப்படியாக அந்நாவலில் அம்மா-மகள், தம்பி-தங்கை,

மாமன்-அத்தை, தாய்-தந்தை ஆகிய உறவுகளின் யாதார்தமான பண்பாடு, கலாச்சார உறவு வழிமுறைகளை இலக்கியங்களின் வழி நின்று மரபுவழி தவறாமல் போற்றிப் புகழ்வதை கண் நிறுத்தி பார்க்க முடிகின்றது.

அது மட்டுமல்லாமல் இலக்கிய ஆராய்ச்சி என்னும் நூலில் அவரது படைப்பில் புத்தகங்கள் எவ்வாறு இருக்க வேண்டும்? என்ற கேள்விக்கு நல்ல இலக்கியமாக விளங்கும் தன்மை இருந்தால் சில ஆண்டுகள் கழித்துப் பெருவாழ்வு பெறுவது உறுதியாகும். இல்லையென்றால்

"புற்றீசல்கள் தாமே இறக்கை அற்று பறக்க முடியாமல்
விழுவது போல், புத்தங்கள் விழக் காரணம் என்ன?
அவற்றில் உள்ள பயன் குறைந்த கருத்துக்களே ஆகும்" [4]

என்று புத்தகங்கள் எவ்வாறு எழுத வேண்டும்? என்ற இலக்கணத்தையும் அவ்வாறு எழுத இயலாதவரை உயர்ந்த கொள்கையில் நம்பிக்கை கொள்ளாதவர்களாக, பண்பாடு அற்றவர்களாக, ஒழுக்கம் இல்லாதவர்களாக இருக்கும் காரணத்தாலேயே மட்டமான சுவைகளைக் கண்டு மயங்கி இந்தப் புத்தகங்களைப் போற்றுகின்றார் என்று இலக்கியம் படைக்கும் படைப்பாளிகளுக்கும் இவர் சொல்லுகின்ற சிந்தனை ஒரு சாட்டையாக அமைந்து, அது நெறிப்படுத்தியது என்றால் மிகையாகாது.

கல்வி நிலைகள்

வேலத்திலும் வாலாசாவிலும் தொடக்கக் கல்வியைக் கற்றார். பின் உயர்நிலைப்பள்ளிப் படிப்பை திருப்பத்தூரில் பயின்றார். அவர் முருகைய முதலியாரிடம் தமிழ்க் கற்றுப் புலவர் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றார். பின்னர் 1935 ஆம் ஆண்டு தமிழ்ப் புலவர் தேர்வு எழுதிச் சென்னை மாநிலத்திலேயே முதல்வராகத் தேர்ந்து ரூ.1000 திருப்பனந்தாள் பரிசு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் 1939 இல் பி.ஓ.எல் பட்டமும், 1944 இல் எம்.ஓ.எல், பட்டமும் பெற்றார். 1948 இல் சென்னைப் பல்கலைக் கழகத்திலேயே முதன் முதலாகத் தமிழில் டாக்டர் பட்டம் பெற்றவர் அவரே. 1972 ஆம் ஆண்டில் அமெரிக்காவிலுள்ள ஊஸ்டர் கல்லூரி அவருக்கு இலக்கியப் பேறறிஞர் (டி.லிட்) என்ற சிறப்புப் பட்டத்தை நல்கிப் பெருமைப்படுத்தியது. சிறப்புப் பட்டம் பெற்ற முதல் தமிழறிஞர் மு.வ. அவர்களே ஆவார்.

தொழில் நிலைகள்

டாக்டர் மு.வ. அவர்கள் 1928 இல் முதன்முதலில் தாலுகா அலுவலகத்தில் எழுத்தராகப் பணிபுரிந்து, 1935 ஆம் ஆண்டு முதல் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் 1939 முதல் 1944 ஆம் ஆண்டுவரை டாக்டர் அ.லட்சுமணசாமி

முதலியார் அவர்களின் நல்லுதவியுடன் தமிழ் விரிவுரையாளராகப் பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றினார். 1945 ஆம் ஆண்டு அக்கல்லூரியிலேயே தமிழ்த் துறைத் தலைவராகப் பொறுப்பேற்று, இடையே ஓராண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் துணைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அறிஞர் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களின் மறைவுக்குப் பிறகு 1961 முதல் 1971 வரை சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றினார். பின்னர் 1971 முதல் 1974 ஆம் ஆண்டுவரை மதுரைப் பல்கலைக் கழகத்தின் புகழ் மிக்க இணையற்ற துணைவேந்தராகப் பணிபுரிந்தார்.

பதவி நிலைகள்

டாக்டர் மு.வ. அவர்கள் பல்வேறு துறைகளிலும், பல பதவி நிலைகளிலும் களம் கண்டார். அவர் சென்னை, திருவேங்கடவன், அண்ணாமலை ஆகிய பல்கலைக் கழகங்களின் பேரவை (செனட்) அங்கத்தினராக இருந்தார். மேலும் அவர் கேரளம், மைசூர், உஸ்மானியா, பெங்களூர், ஆந்திரா, டில்லி, கேம்பிரிட்ஜ், மதுரை முதலிய பல்கலைக் கழகங்களின் பாடத்திட்டக் குழுவில் இருந்தார். அவர் இலங்கை, மலாயா, காசி, உத்கல் முதலிய பல்கலைக் கழகங்களோடு தொடர்பு கொண்டிருந்தார்.

அவர் புதுடில்லியில் உள்ள சாகித்திய அகாடெமி, பாரதிய ஞானபீடம், தேசியப் புத்தகக்குழு, இந்திய மொழிக்குழு, சென்னைப் பல்கலைக் கழகம் தயாரித்த ஆங்கிலம் - தமிழ் அகராதிக் குழு, நாட்டுப்புறப் பாடல்களும் நாட்டுப்புற நடனங்களும் பற்றிய குழு முதலியற்றில் அங்கம் வகித்தார்.

அவர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வு ஆணைக் குழுவிலும், ஆந்திரப் பிரதேச அரசுப்பணியாளர் தேர்வு ஆணைக் குழுவிலும், மத்திய அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவிலும், மகாராட்டிர சமிதி மண்டலத்திலும் பங்கு கொண்டிருந்தார்.

தமிழ்நாடு புத்தக வெளியீட்டுக்கழகம், ஆட்சி மொழிக் குழு, ஆட்சி மொழிச் சட்டக்குழு, தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழ்க் கலைமன்றம், தமிழிசைச் சங்கம், மாநில வரலாற்றுக் கழகம், தமிழ்க் கலைக்களஞ்சியம், தமிழகப் புலவர்குழு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் முதலியவற்றில் பங்கு கொண்டு சிறந்த தொண்டாற்றினார்.

மொழி நிலைகள்

டாக்டர் மு.வ. அவர்கள தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி முதலிய மொழிகளைக் கற்றுக் பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தார். அதுமட்டுமல்லாமல், அவர் ரஷ்யா, மலேசியா, சிங்கப்பூர், பாரீஸ் இலங்கை இங்கிலாந்து, பிரான்சு, ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி,

கிரேக்கம், எகிப்து, ஆப்பிரிக்கா, அமெரிக்கா முதலிய உலக நாடுகளை எல்லாம் சுற்றிப் பார்த்த முதல் தமிழ்ப் பேராசிரியராக விளங்கினார்.

எனவே, டாக்டர் மு.வ. அவர்களின் எண்ண ஓட்டம் இலக்கியத்தைச் சார்ந்த சமுதாயம், மொழியுணர்வு, வாழ்க்கை நெறி, சுதந்திரம், கலாச்சாரம், பண்பாடு, ஒழுக்கம் இவை அனைத்தும் பெரியோர்கள் சொன்ன (திருவள்ளுவர், கம்பர், இளங்கோவடிகள்) நெறிதவறாமல் இலக்கியங்கள் செதுக்கப்படுகிறதா? என்று மிகக் கவனத்துடன் சிந்திக்கும் இலக்கியப் பன்முகச் சாரல் டாக்டர் மு.வ. என்றால் அது மிகையாகாது.

மேற்கோள் தரவுகள்

1. பாவை, டாக்டர் மு.வ., தாயக வெளியீடு, பாரிநிலையம், ஜீலை 1779, ப-67
2. அகல் விளக்கு, டாக்டர் மு.வ., தாயக வெளியீடு, பாரிநிலையம், ஜீலை 1779, ப-131
3. அகல் விளக்கு, டாக்டர் மு.வ., தாயக வெளியீடு, பாரிநிலையம், ஜீலை 1779, ப-358
4. இலக்கிய ஆராய்ச்சி, டாக்டர் மு.வ. பாரிநிலையம், ஐஏ பதிப்பு-1967, ப-75

13. டாக்டர் மு. வ. வின் நாட்டுப்பற்றில் சமுகப் பார்வை

கோ.மோகன்
முனைவர் பட்ட ஆய்வு மாணவர்
தூயநெஞ்சக் கல்லூரி
திருப்பத்தூர்.

இருபதாம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும் தமிழ் இலக்கியப் பரப்பிலும் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு.வரதராசனார் அவர்களின் சீரிய தமிழ்த் தொண்டு முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்த்தாயின் தலைமகனாக விளங்கிய அவர் 62 வயதில் 85 நூல்கள் எழுதி புகழ்ப்பெற்றார். மு.வ. வின் நாட்டுப்பற்று என்னும் கட்டுரை நூலை அடிப்படையாகக் கொண்டு, இந்த ஆய்வுக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

உழவுத் தொழிலின் அவசியம்

'இன்றைய கடமை' என்னும் தலைப்பின் கட்டுரையில், இன்றைய சமுகச்சூழலில் கிராமப்புற ஏழை எளிய விவசாய மக்களின் ஆழ்ந்த அன்பு கனிந்த உபசரிப்பு முறையும், பாசத்திற்கும் போற்றுதலுக்கும் உரியதாக உள்ளது என்று மிகவும் அற்புதமான முறையில் எடுத்துச் சொல்கிறார். தான் தெரிந்தவராக இருந்தாலும் வரவேற்புத்தாள் இருத்தால் மட்டுமே தேநீர் கிடைக்கும் என்ற மனோபாவத்தை நகர்புறங்களில் வாழும் மக்கள் மத்தியில் காணமுடிகிறது. மனிதன் ஒரு இனக்குழுச் சமூகமாகக் கூடிவாழப் பிறந்தவன். ஆக, கூடி வாழ்வதற்கான உரிய பண்புகளை அவன் பெற்று இருக்கவேண்டும். இல்லையேல் மனிதன் கல்மனம் பெற்றவனாக மாறிவிடுவான்.

பிறருடைய பசியைப் பற்றி கவலைப்படாத வஞ்சகம் நிறைந்த மனிதனாக மாறிவிடுவான். இவ்வாறான சூழல்கள் நிகழும் பொழுது மற்றவர்களைத் துன்புறுத்திப் பொருளைப் பறித்து இன்பம் காணவேண்டும் என்ற சிந்தனையில் மனித சமூகம் தள்ளப்பட்டுவிடும். இவ்வாறான தீயபோக்கில் சமுதாயம் வளர்ந்து செல்லுமானால் இதனைக் காப்பாற்றச் சட்டமும் சர்வதிகாரியும் தேவையாகும். மனச்சான்று மக்கிப்போகும். சமுதாயத்தில் சர்வதிகார ஆட்சி தலையெடுக்கும். ஜனநாயகம் புதைக்கப்படும் என்று மு.வ தனது சமூக அக்கறையை வெளிப்படுத்துகின்றார். அதோடு மட்டுமல்லாமல் வளரும் பண்பாடுகளை மேலும் நிலைபெறச் செய்ய வேண்டுமானால் கிராமங்களில் வளர்ச்சியை மேம்படுத்தி உழவுத் தொழிலையும், உழவர்களையும் காப்பாற்ற வேண்டும்.

தமிழ்நாட்டில் நெசவுத் தொழிலாளருக்கு ஏற்பட்ட பட்டினி பஞ்சம் போன்ற கொடுமைகளைப் பட்டியலிட்ட மு.வ அதைப்போல, உழவுத்தொழிலுக்கும் உழவர்களுக்கும் ஏற்பட்டு விடக்கூடாது என்ற அக்கறையோடு சொல்லப்பட்டுள்ள கருத்துகள் அவர் தமிழ்ச் சமூகத்தின் மீதும், உழவர்கள் மீதும் கொண்டுள்ள பற்றை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன.

மக்களின் அடிப்படை உரிமைகளின் தேவை

கோணல் வளர்ச்சி என்னும் தலைப்பில் ஒரு செடியின் வளர்ச்சி தனது வளர்ச்சியின் போது பல்வேறு தடைகள் நிகழும் பொழுதும், செடியின் நேராக வளரும் இயல்பு மாறுமே தவிர, அதன் வளர்ச்சியில் எந்த ஒரு தடையும் ஏற்படுத்த முடியாது. அது போலவே மக்களின் அடிப்படை உரிமை வாழ்வும் அப்படிப்பட்டதே. ஒரு மனிதன் சுதந்திரமாகத் தனக்கான அனைத்து உரிமைகளையும் பெற்று வாழவே விரும்பும் சூழலில், அதற்கு எதிர்மாறான கடுமையான சட்டங்களும், எவ்வித அடக்குமுறைகளும் மக்களின் வாழ்க்கைப் பாதையை மாற்றுமே தவிர, அவனது வளர்ச்சி என்னும் சுதந்திர உரிமை வேட்கையைத் தடுக்க முடியாது என்று ஒரு ஆணித்தரமான செறிவூட்டப்பட்ட கருத்தை இங்குப் பதிவுசெய்கிறார்.

தன்னலம் மற்றும் சுயநலப்போக்கோடு வாழும் மக்களின் நிலைப்பாட்டையும் ஏழை மக்களின் கல்வி, மருத்துவம், சுகாதாரம் போன்றவற்றைப் பெறமுடியாமல் துன்பப்படும் சூழலையும்வர்க்கத்தின் சுயநலப்போக்குகளையும் பட்டியல் போட்டுக் காட்டுகிறார். உலகத்தில் தோன்றி வந்த பெருமக்கள் யாவரும் இந்தக் குற்றவுணர்வான செயல்களைச் செய்யவில்லை. ஏழைகளின் வாழ்வாதாரத்திற்காகவும், அவர்களின் உயர்வுக்காகவும் தொண்டு செய்யத் தலைப்பட்டார்கள். காந்தியடிகள் சுயநலச் சிந்தனையில் இருந்திருந்தால் ஆடம்பர வாழ்வும் அரச போகத்துடனும் வாழ்க்கை நடத்தியிருக்கலாம் ஆனால், ஏழ்மைக் கோலத்தையே மேற்கொண்டு எளிய வாழ்க்கை நடத்தினார். அப்படிப்பட்ட பெருமக்கள் இந்த மண்ணில் இருக்கும் காரணமே, இங்கே அன்பின் இரக்கத்தையும், பண்பின் வடிவங்களையும் நாம் காணமுடிகிறது. இத்தகையோர் சிலர் மட்டும் பிறந்து தொண்டு செய்வது மட்டும் போதாது. அனைவரிடத்திலும் அன்பும், இரக்கமும் தோன்ற வேண்டும். நாட்டில் வறுமை நீங்கும் போது தான் கோணல் அற்ற வளர்ச்சி நீங்கி நாடு நிலைபெறும் என்றும் ஏற்றத்தாழ்வற்ற சமூகத்தைக் காணவேண்டும் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற சமதர்மக் கோட்பாட்டுச் சிந்தனையை மு.வ. வெளிப்படுத்துகிறார்.

உழவனின் உழைப்புக்கேற்ற ஊதியம்

'நோயும் மருந்தும்' என்னும் தலைப்பிலான கட்டுரையில் நாட்டின் பெரும் பகுதி மக்களின் உழைப்பு உழவுத்தொழிலையே சார்ந்துள்ளது என்று எடுத்துக்காட்டுகிறார் மு.வ. அந்த வகையில் உழவர்களின் வாழ்க்கை பல்வேறு நிலைகளிலும், உணவு, உடை, இருப்பிடம் அற்ற நிலையிலும் சுகாதாரமற்ற வாழ்க்கையை மேற்கொள்ளும் சூழலையும் சுட்டிக்காட்டுகிறார். உழவுத்தொழிலில் விளையும் பண்டங்களை வியாபாரத் தரகு முதலாளிகளின் பொய்யும் புரட்டும் செய்து ஏமாற்றும் நிலையும், அவ்வாறு பெறும் கொள்ளை இலாபத்தில் திருவிழாக்காலங்களில் அவர்களின் பணப்பகட்டின் நிலையும், அணிகலன்கள் அணியும் ஆணவப்போக்கும் உழவர் கொண்டாடும் பொங்கல் திருநாளில் மண்பானை, புதிய அகப்பை, தூய பால், புதிய அரிசி, புதிய காய்கறிகள், புதிய பருத்தி ஆடை என ஏழ்மையிலும், இனிமையான உழவர்திருநாளான பொங்கலைக் கொண்டாடும் நிலைப்பாட்டைக் கூறுகின்றார். உழவர்களின் பண்டங்களை அரசே பெற்று விலை நிர்ணயிக்க வேண்டும். விலை இறக்கத்தின்போது பண்டங்களைக் கிடங்குகளில் சேமித்து, அவற்றிற்கு உரிய விலை கிடைக்கும் பொழுது விற்று, உழவரின் வாழ்வில் விளக்கேற்ற வேண்டும் என்றும், உழவர் பெருமக்களின் மீது உள்ள அக்கறையோடு உழவுத் தொழிலின் முக்கியத்துவத்தையும் தேவையையும் மு.வ. வெளிப்படுத்துகிறார்.

தேச ஒற்றுமைக்கு எதிரான மூலகாரணத்தை அறிந்து அழித்தல்

'நல்ல பாடம்' என்னும் தலைப்பிலான கட்டுரையில், குழந்தையின் உடலுக்கு சத்தான உணவுப் பண்டங்களைக் கொடுத்து இக்குழந்தைக்குச் சக்தி உருவாக்க வேண்டும் என்கிறார். இந்த எண்ணத்திற்கு முன்பு குழந்தையின் உடலில் உள்ள உபாதையை அறிந்து அவற்றிற்கு மருந்து கொடுக்க வேண்டும் என்றும், ஒரு பையனைப் படிக்க வைக்க அனைத்து வகையான வசதிகளையும் அவனுக்குக் கொடுத்து அவன் படிப்பதில்லை என்றும் பையனுக்குத் தேவையான கல்வி வசதியை செய்து கொடுப்பதை மட்டும் பாராமல் பையனின் மூளையில் பசியும், ஜீரண சக்தியும் சரியான முறையில் உள்ளனவா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்றும் பல உதராணங்களைக் கூறுகிறார் மு.வ. அரசியல்வாதிகளும், அறிஞர் பெருமக்களும் நாடு ஒற்றுமை பெறவேண்டும் ஒருமைப்பாடு காக்கப்பட வேண்டும் என்று மட்டும் சொல்வதனால் பயனில்லை. சமூகத்தில்

ஏற்றத்தாழ்வுகள் களையப்பட வேண்டும். பொருளாதார மேடுபள்ளங்களற்ற சமுதாயத்தை உருவாக்க வழிவகை செய்யவேண்டும்.

சாதி வேறுபாட்டைத் தொலைக்க வேண்டும் என்று பலர் செய்யும் முயற்சியும் தோல்வியைக் கண்டுள்ளது. அடுப்பங்கரையில் இருக்கும் சாதிப்பேய் தேர்தல்களம் வரையில் வருவதைச் சுட்டிக்காட்டுகிறார். குழந்தை நலம்பெற வேண்டும், பையன் படிக்க வேண்டும் என்பதற்கு மூலக்காரணத்தை எவ்வாறு அறியவேண்டுமோ அதுபோல நாட்டின் ஒற்றுமையைச் சீர்க்குலைக்கும் தீயசக்தியான, சாதி மதம், பொருளாதார ஏற்றத்தாழ்வு இவற்றைக் களைந்து நாட்டு ஒற்றுமையைப் பேண வேண்டும் என்று தான் நாட்டின் மீது வைத்துள்ள அக்கறையை மு.வ. பதிவு செய்கிறார்.

மக்களின் அடிமைத்தனமான பழக்க வழக்கங்கள்

'அடிமை மனம்' என்னும் தலைப்பில் ஒரு குழந்தைகளைத் திறமையானவர்களாகவும், அறிவும் ஊக்கமும் மிகுந்தவர்களாகவும் வளர்க்க வேண்டுவதன் அவசியத்தை மு.வ. எழுதுகிறார். தம்முடைய வெறுப்பையும் ஆத்திரத்தையம் அடக்க முடியாமல் குழந்தையைத் திட்டியும் அடித்தும் வளர்க்கிறார்கள். பின்பு அவற்றை நினைத்து வருந்தினாலும், பழக்கம் பொல்லாதது வேறு வழியில்லை என்று மனம் ஆறுதல் அடைகின்றனர். குடிப்பழக்கம் உள்ளவர்களின் வாழ்வும் இப்படித்தான். தீயசெயல்கள் மற்றும் துன்பம் தரக்கூடியச் செயலும் விளைவுகளும் நிகழும் பொழுது மட்டும் சிந்திக்கும் மக்கள் அவற்றைக் காலப்போக்கில் மறந்து அதே வாழ்வை மேற்கொள்கின்றன்றனர். அதேபோல் அண்டைநாடான ஜப்பானில் அடிக்கடி பூகம்பம் நிகழ்வதையும், எரிமலை அழிவு விளைவிப்பதையும் அறிந்திருந்தும் அழிவுகள் ஏற்பட்டு முடிந்த பிறகு மக்கள் அமைதியாக வாழக் கற்றுக் கொள்கின்றனர். ஆனால், அவற்றில் இருந்து விடுதலை பெற என்ன தீர்வுகளை நாம் காணவேண்டும் அவற்றிற்கான நிரந்தர வழி என்ன என்பதைச் சிறிதும் சிந்திப்பதில்லை.

மனிதர்களிடத்தில் பழக்கங்கள் நளடைவில் அடிமை மனமான சூழலை ஏற்படுத்திவிடுகிறது. ஆண்டான் அடிமை, நிலப்பிரபுக்கள், கூலித்தொழிலாளி எனப் பல்வேறு மட்டங்களில் உயர்வு தாழ்வு கற்பித்து மக்களின் மனதில் அடிமைத்தனமான எண்ணத்தை உருவாக்கும் சூழலைத் தகர்த்தெறிய வேண்டும். அடிமை மனம் நீங்குவதற்கு அறிகுறி நல்லோர்கள் கூறும் அறிவுக் கருத்துக்களை உள்வாங்கி உணர்ந்து திருந்துதலே ஆகும் என்று மு.வ. வெளிப்படுத்துகிறார்.

மக்களாட்சியின் தேவை

'சாட்டை' என்னும் தலைப்பில் மு.வ. எழுதியுள்ள கட்டுரையில், மனிதன் பல்வேறு நிலைகளிலும் வெற்றிப் பெறுவதற்கு சாட்டை எனும் கருவியே முதன்மையாகத் திகழ்ந்தது என்கிறார். அந்த வகையில் காட்டில் திரிந்த விலங்குகளைப் பழக்கித் தன் விருப்பம் போல் அவற்றை நடத்துவதற்கும், அடிமைப்படுத்துவதற்கும் சாட்டையைப் பயன்படுத்தினான் மனிதன். விலங்குகளை அடக்கி ஆளத் தொடங்கினான். உலக வரலாற்றில் நீக்ரோக்கள் அடிமைகளாக நடத்தப்படுவதும் அண்டை நாடான இலங்கையில் சொந்த நாட்டில் தமிழ் மக்களை இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்பட்டு அடிமைத்தனத்தையம், வெறுப்புணர்வையும் காட்டுவதையும் நாம் காணமுடிகிறது. அடிமைகளை மக்களாக மதித்து அவர்களுக்கு நல்வாழ்வு நல்கிய புரட்சிப் போராளிகள் தோன்றும் வரையில் இந்த கொடுமைகள் மாறவில்லை.

அடிமைகள் அற்ற மற்ற மக்களும் இந்த சாட்டைக் கொடுமைக்கு ஆளானது உண்டு. குற்றம் செய்தவர்களை நீதிமன்றங்களிலும் காவல் நிலையங்களிலும் சாட்டை துன்புறுத்தியது. சாட்டையைக் கொண்டு மக்களை அடக்கி ஆளும் பழக்கம் தடை செய்யப்பட்ட போதிலும் எண்ணளவில் அது இன்னும் உள்ளது என்றே கூறலாம். ஆக கையில் உள்ள சாட்டை மாறி கருத்துச் சாட்டையாகவும், கொம்பும் வாருமாக இருந்தது மாறி கட்சியும் ஒழுங்கு நடவடிக்கையுமாக, புது வடிவம் பெற்றுள்ளதையும் அவை மக்களின் கருத்துச் சுதந்தரத்தை அடக்கி ஆள்வதற்குப் பயன்படுத்தப்பட்டதாகவும் மு.வ. பதிவு செய்கிறார்.

பாராளுமன்றங்களிலும், சட்டசபைகளிலும் மக்களுக்காக மக்களின் நலனுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களால் மக்களின் கருத்துக்களையும், எண்ணங்களையும் பிரதிபலிக்க முடியாமல் போகின்றன. மக்களுக்கு எதிரான சட்டங்களை நிறைவு செய்யும் பொழுது அவற்றை எதிர்த்துக் கேட்கும் மனத் துணிச்சலைக் கட்சிக் கட்டுப்பாடு என்னும் சாட்டை தடை செய்து விடுகிறது. மேய்ப்பவனுடைய மனப்போக்கிற்கு மாறாக நடந்தால் மாடு அடிபடுகிறது. அவனுடைய மனப்போக்கிற்கு இயைந்து நடந்தால் அதே மாடு தடவிக் கொடுக்கப்படுகிறது. அதுபோலவே இன்றைய அரசியலும் கட்சி தலைவருக்கு முரணாகச் செயல்படாமல் தடவிக் கொடுக்கும் நிலையைக் காணமுடிகிறது. ஆகவே நடப்பது என்ன? ஒருசிலர் ஆதாயம் தேட மறைமுகமாக வழிவகை செய்கிறது. முடிமன்னன் அச்சத்தை ஊட்டியும், ஆசையை ஊட்டியும் சிலரை வயப்படுத்தி பலரை

மேய்த்தான். தடியெடுத்த சர்வதிகாரியும் இரண்டொருவருக்கு ஆசை ஊட்டி மற்றவரை அச்சத்தால் அடக்கி மேய்த்தான். மக்களாட்சி முறையிலும் தலைவன் ஒரு சிலருக்கு அச்சமும் ஆசையும் மாறிமாறி ஊட்டிப் பலரை மேய்கின்றான். ஆக, பாராளுமன்றத்திலும் சாட்டை மறைமுகமாக உள்ளது என்கிறார். பணத்தின் மதிப்பு ஒழிந்து உழைப்பின் மதிப்பு உயரும் நாள் வரையில் உண்மையான மக்களாட்சி மலர முடியாது. ஆக சாட்டை செல்வாக்கு ஒழிந்து முழுமையான மக்களாட்சி மலர வேண்டும் என்று மு.வ. வலியுறுத்துகிறார்.

மு.வ வின் நாட்டுப்பற்று என்னும் நூல் பல்வேறு வகையான தலைப்பில் சமூகத்தில் நடைபெறும் பல்வேறு வகையான தவறுதல்களையும் அவற்றை நெறிப்படுத்தத் தேவையான மருந்தான கருத்துக்களையும் இந்தச் சமூகத்திற்குப் பயனுள்ள வகையில் எடுத்துக் காட்டியுள்ளார்.

14. வறுமை குறித்து மு. வரதராசனாரின் சிந்தனைகள்

திருமதி. நா.தேன்மொழி
துணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
கே.எஸ்.எம். மகளிர் கல்வியியல் கல்லூரி
தெற்குத் தெரு, மேலூர் தாலுகா
மதுரை.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் புதின வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றியவர் மு.வரதராசனார். இளைஞர்களின் வாழ்க்கையைப் பண்படுத்தும் நோக்கில் 'கலை வாழ்க்கைக்கே' என்ற கொள்கை அடிப்படையில் மு.வ.புதினங்கள் எழுதியுள்ளார். டாக்டர் மு.வ அவர்கள் சமுதாயச் சிக்கல்களை உணர்ந்து, காரணங்களை ஆராய்ந்து, அந்த சிக்கல்கள் தீர வழிமுறைகளையும் தனது புதினங்களில் சுட்டிக்காட்டியுள்ளார்.

புலமை என்பது உயர்ந்த உணர்வு. எண்ணம் பெருகப் பெருகச் செயல் குறையும். எண்ணுந் தொழிலுக்கே காலம் போதாது ஏங்குபவர் புலவர். அத்தகையவர் செய்யுந் தொழிலுக்குக் காலத்தைச் செலவிட இயலாதவர். தங்காற்பொற்கொல்லன் வெண்ணாகனார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், மதுரைக் கொல்லன் புல்லனார், மதுரைக் கொல்லன் வெண்ணாகனார் முதலிய ஒரு சிலர் சில தொழிலில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் தொழில் செய்து பின்பு தமிழ்ப் புலமைப் பெற்றதும் தொழிலை விட்டுவிட்டு செய்யுள் பாடுவதிலேயே காலத்தை கழித்தனர். புலவர் பலர் கலைக்கனவில் காலங் கழிப்பர். அத்தகைய புலவரை அரசியல் தலைவர் மதித்து அவர்களுக்கு வறுமையின் நிலை ஏற்படாதவாறு மாதந்தோறும் அல்லது ஆண்டுதோறும் பெரும்பொருள் தந்து வாழ்வித்தல் வேண்டும்.

பழந்தமிழ்நாடு புலவர் வறுமையைக் கண்ட நாடு. ஆனாலும் புரவலர் வண்மையையும் அந்நாடு கண்டது. அதுவே நாகரிகம் வாழக் காரணமாக இருந்தது. புலவரின் வறுமை புரவலரின் நெஞ்சைக்கொல்லும் அளவுக்கு நாகரிகம் வளர்ந்திருந்தது.

வறுமை மிக்க புலவர் பலரிடையே "வெய்து உண்ட வியர்ப்பு அல்லது செய்தொழிலான் வியர்ப்பு அறியேம்" என்னும் செல்வ வாழ்வைப் புலவர் சிலர் அடைந்தனர். அவர் அந்நிலை அடையுமாறு ஆளுதலே ஆட்சி என்று கருதி 'எதுவும் வறுமை அன்று: புலவர் பாடாது என் நாட்டை விட்டு நீங்குதலே வறுமை' என்று உணர்ந்த புரவலரும் இருந்தனர்.

சுற்றிலும் உள்ளவர் வயிறு காய, தம் வயிறுமட்டும் குளிரும் நிலையைப்ப புலவர் விரும்புவது இல்லை. ஊரெல்லாம் பற்றி எரியத்

தனியே இனிது அமர்ந்து இன்னிசை பாடும் கல்நெஞ்சக் களியாட்டு இப் புலவர் வாழ்வில் இல்லை. தம் இன்பம் உலக இன்பமாகுமாறு காமுறுதல் கல்விச் செல்வத் தளவில் மட்டுமின்றி, பொருட் செல்வத்தளவிலும் கொண்டவரே உண்மைப் புலமை உடையவர்.

அறிவு என்னும் ஒன்றே மக்கட் பிறப்பின் சிறப்பியல்பு. மக்களாய்ப் பிறந்தவர் அறிவைத் தேடி உழைத்தல் வேண்டும். அறிவைப் பிறர்க்கு அளித்தல் வேண்டும். அறிவின் பயனாய் இன்புறல் வேண்டும். இதுவே மக்களின் வாழ்வு. இவ் வாழ்வில் சீர்பெற வாழ்பவரே புலவர் பெருமக்கள். உலகம் திருந்திய அரசியலைப் பெற்றால் மக்கள் அனைவரும் அறிவு வாழ்க்கை வாழ்வர்.

புலவர் அறிவு வாழ்க்கை வாழ ஏனைய மக்கள் வயிற்று வாழ்க்கை நடத்தும் நிலை உள்ளது. வயிற்றுக் கவலை பொல்லாதது. அது பிற நல்ல கவலைகளுக்கு இடம் தராதது. பசி வந்திட பத்தும் பறந்து போம்.

புலவர் பெருமக்களும் ஒருவகைச் செல்வரே ஆவர். அவர் அறிவுச் செல்வத்தை மிகுதியாகப் பெற்றுள்ளவர். வறியவருக்கும் செல்வருக்கும் வேற்றுமை மிகுந்துள்ளது போல அறிவிலார்க்கும் அறிஞர்க்கும் வேற்றுமை மிகுந்துள்ளது. பொருள் சிலரிடம் திரண்டிருத்தல் போலவே அறிவும் சிலரிடம் பெருகியுள்ளது. ஆகவே பொருள்வகையால் தலைசிறந்த செல்வர் போல அறிவில் புலவர் சிறந்து விளங்கினர்.

பொருளால் சிலர் செல்வந்தராய் இருக்கக் காரணம் கொடைப்பண்பு இல்லாமையே. அவர் தம்மிடம் உள்ளதைப் பகுத்து வழங்குவராயின் செல்வராய் வாழ இடமிராது. ஆகவே அறிவு வகையால் புலவர் சிலர் மட்டும் உயர்ந்தோராய் விளங்கக்காரணம் கொடைப் பண்பு இல்லாமை இல்லை, கொள்ளும் பண்பு ஏனையோரிடம் இல்லாமையே ஆகும். பொருட்செல்வம் உடையவன் ஈயாது வைத்துக் காத்து இன்பம் அடையலாம். அறிவுமிக்க புலவர் அவ்வாறு வைத்துக் காக்க வேண்டுமெனக் கனவிலும் நினைக்க மாட்டார். அவ்வாறு செய்தால் துன்பத்திலும் துன்பமாக உணர்வர். பிறர்க்கு கொடுத்து கொடுத்து வாழும் இயல்பே அறிவு. ஆகவே புலவர் கொள்வார் உளரோ, கொள்வார் உளரோ எனத் தம் அறிவைக் கூறிக் கொண்டிருந்தனர். பாட்டு எழுதிக் கொண்டிருந்தனர். நூல் இயற்றினர்.

அறிவைக் கொள்வார் பலர் இல்லாமைக்குக் காரணம் அலைக்கும் வயிற்றுக் கவலையே ஆகும். வயிற்றுக் கவலை உள்ளவரையில் அறவோரின் தொண்டும் பயன்படாது. அறநூல்களின் விளக்கமும் பயன்படாது. புலவர் வாரி வழங்கும் அனைத்தும் ஏற்பாரின்றி ஏங்கிக் கிடக்கும்.

உழைப்பவர்க்கு ஒருவர் உதவியும் வேண்டுவதில்லை. அவர்தம்

உழைப்பே அவர்க்கு உதவ வல்லது. உழைக்கும் ஆற்றல் உள்ளவரையில் அவர் வயிற்றுக் கவலை துறந்து வாழலாம்.

உழைப்பாளிகளின் வயிற்றுக் கவலையை அரசியல் அமைப்பு ஒன்றே மாற்ற முடியும். அரசியல் அமைப்பால் அத்தகைய மாறுதல் நேரத் தொடங்கியதும், உழைப்பாளிகளிடையே விழிப்பும் உரிமை உணர்வும் எழும்.

அறமும், அறிவும் ஓங்காதவாறு பெருந் தடை செய்யும் வயிற்றுக் கவலையைக் கொன்று ஒழிக்கப் பழந் தமிழகத்தில் உணர்வு மிக்க உரவோர் பலர் முயன்றுள்ளனர். இவ்வாறு மு.வ வறுமையைக் குறித்து தம் படைப்புகளில் தெளிவாக விளக்கியுள்ளார்.

15. மு. வ. வின் சிறுகதைகளில் சமுதாயச் சிந்தனைகள்

முனைவர் மா.கோபி
விரிவுரையாளர், தமிழ்த்துறை
பச்சையப்பன் கல்லூரி
சென்னை-30.

இலக்கிய உலகில் சிறுகதை தனி இடம் பெற்று நிலைத்து நிற்கின்றது. ஆலமரத்தின் விழுதுகளைப் போன்று எல்லோருடைய மனதிலும் சிறுகதை இன்று வேரூன்றி உள்ளது. சிறுகதை சமுதாயம் பற்றிய கருத்துக்களைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடியாகவும் விளங்குகின்றது. மு.வ. அவர்கள் தமது உணர்வுகளையும், கற்பனைகளையும், எளிமையாகவும், இனிமையாகவும், பிறருடைய மனதில் ஆழமாகப் பதியுமாறும் சிறுகதைகளை வடித்துள்ளார்.

மு.வ. வின் சிறுகதைகளான விடுதலையா மற்றும் குறட்டை ஒலி இவை இரண்டும் சமுதாயம் குறித்த கருத்துக்களை எழுத்துரைக்கின்றன. சமுதாயத்தின் பாடுபொருளாக பண்புநலன், உடல்நலம், விதவைக் கொடுமை, மனிதநேயம், மூடநம்பிக்கை, மாமியார் கொடுமை, கடவுள் நம்பிக்கை, நட்பு இவைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

பண்புநலன்

முதியோர் ஒருவர் தன்னுடைய பேரன் மீது மிகுந்த அன்பு வைத்துள்ளார். பள்ளி விழாவிற்காக தனது பேரனை அழைத்துக் கொண்டு பள்ளி சென்று தலைமையாசிரியரைச் சந்தித்து பேரனை ஒப்படைத்து விட்டு வீட்டிற்குத் திரும்பினார். மாலை நேரம் ஆகியும் தன்னுடைய பேரன் வீடு திரும்பாததை நினைத்து பாட்டி மனம் வருந்துவதை மு.வ.,

> *"உன் பாட்டி நல்ல மனம் அப்பா! அன்பு என்றால் அந்த அம்மா விடத்தில் தான் பார்க்க வேண்டும். அது போல் நான் பார்த்ததே இல்லை. ஒரு நாள் நீ காணாமல் போய்விட்டாய் அப்பப்பா! உன் பாட்டிபட்ட பாடு சொல்ல முடியாது. வாத்தியார் என்று நம்பித்தானே உன்னோடு அனுப்பினேன் என்று என்னைச் சரியான கேள்வி கேட்டார்கள் அந்த அம்மா"*
>
> *(மு.வ. விடுதலையா - ப.43)*

என்று முதியவர் ஒருவர் தன் பேரன் மீது வைத்துள்ள பாசத்தையும், பண்பையும் வெளிப்படுத்துவதை விளக்குகின்றார்.

உடல்நலம்

முதியவர் ஒருவர் வெற்றிலை, புகையிலை இவை இரண்டையும் கண்கண்ட தெய்வமாக காலை எழுந்தவுடன் தொழுவதும், இரவில்

அவற்றையே வணங்கி உறங்குவதும் வழக்கமாகக் கொண்டுள்ளார்.

"புகையிலை முதலியவற்றின் நஞ்சு தலைக்கு எட்டி மூளை நரம்புகளைத் தாக்கி பைத்தியமாக்கி விடும். புகையிலையும், காப்பியும் வழக்கமாக நாள்தோறும் வேலை செய்ய தூண்டிய இடம் மூளை தான். அதனால் தான் சுறு சுறுப்பும் ஊக்கமும் உண்டாக்கும் பெருமை அவைகளுக்குக் கிடைத்துள்ளது" (மு.வ. விடுதலையா ப.47)

இளைஞர்களோ அல்லது முதியோர்களோ புகையிலை உண்பதால் உடல் தளர்ந்த காலத்தில் மூளையைத் தாக்குகின்றன. அங்கே அழுக்கும், நஞ்சும் தங்குகின்றன. மூளை கெடுவதால் பைத்தியம் ஆகும் சூழல் உருவாகும். நினைவு திரும்பாமல் இறப்பதற்கும் புகையிலை ஒரு காரணம். வெற்றிலையால் கண்பார்வை பாதிக்கும். எனவே தீங்கான இவைகளை வெறுத்து ஒதுக்க வேண்டும் என்று உணர்த்துகின்றார்.

விதவைக் கொடுமை

ஒரு நாள் விடியற்காலை முதியவர் தனது கணவர் இறந்த அன்று தாலி அறுத்த தினத்தை நினைவு கூர்ந்தார். பெண்களுக்குத் தன்னுடைய கணவர் இறந்தவுடன் அன்றைய தினமே நடக்கும் முதல் நிகழ்வாக தாலி அறுப்பு நடைபெறுகின்றது. அத்தகையவற்றை மு.வ.,

"தாலியறுப்பு நாள் இந்த நாட்டுப் பெண்களுக்கு எவ்வளவு துன்பம் தருவது என எண்ணிப் பார்த்து நெஞ்சம் குழைந்தேன்"[3] (மு.வ. விடுதலையா. ப.54)

சமுதாயத்தில் கணவனை இழந்த பெண்கள் தம் வாழ்க்கையில் படும் துயரத்தினை எடுத்துரைக்கின்றார்.

மனிதநேயம்

நாம் இல்லாதவர்களுக்கு ஒரு பொருளைக் கொடுப்பது தான் கொடையாகும். மற்றவர்களுக்குக் கொடுக்கும் கொடையெல்லாம் பயனை எதிர்பார்க்கும் தன்மையை ஒத்தன என்றார் வள்ளுவர்.

"வறியார்க் கொன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து"[4] (குறள் - 221)

மு.வ. அவர்கள் தம் சிறுகதையில் முதியவர் ஒருவர் தன்னிடம் உள்ள ஆடையைப் பிறருக்குக் கொடுத்து உதவுவதை,

"அவரிடத்தில் எப்போதும் இரண்டு சொக்காய்
இரண்டு வேட்டிக்கு மேல் பார்க்க முடியாது. எனக்கு எதற்காக

ஐந்து ஆறு என்று சொல்வார். என்றார் யாரோ ஒருவர்
அங்கே நடுவீட்டில் பார்க்க வில்லையா?
படைப்பதற்கு உடுப்பு இல்லாமல் இரண்டோ மூன்றோ சுருட்டி வைத்தார்களே! இறந்து போவது தெரிந்திருந்தால்
அவர் அவற்றையும் யாருக்காவது எடுத்துக் கொடுத்து விட்டுத்தான் உயிர்விட்டிருப்பார். அந்த மனம் யாருக்காவது வருமா" [5] *(மு.வ. குறட்டைஒலி, அந்த மனம் வருமா. ப.27)*

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றான உடுத்தும் உடையைத் தனக்கென இரண்டு மட்டும் வைத்துக் கொண்டு தன் மகன் கொண்டு வந்து கொடுக்கும் ஆடையைப் பிறருக்குக் கொடுத்து உதவுவதிலே அவருடைய மனிதநேயம் வெளிப்படுகிறது.

மூடநம்பிக்கை

தாய்-தந்தையர் தன்னுடைய குழந்தையின் மீது பேரன்பு கொண்டுள்ளனர். சிறு வயது முதற்கொண்டே தன்னுடைய குழந்தைக்கு நகை மீது ஆர்வம் அதிகரிக்காமல் வளர்த்தனர். சிறுவயதிலேயே அக்குழந்தை இறக்க நேரிடுகிறது. இறந்த குழந்தையைப் புதைக்கும் போது சமுத்தாயத்தினரின் மூடநம்பிக்கை வெளிப்படுகிறது.

"கூட்டம் இடுகாட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது
என் பக்கத்தில் வந்த ஒருவர் கையில் கோழிக் குஞ்சு
வைத்துக் கொண்டிருந்தார்.
நான் அதை உற்றுப் பார்த்தவுடன் அவர் எனக்குக் காரணத்தை விளக்கத் தொடங்கினார். சனிப் பிணம் துணை தேடும் என்று அயல் வீட்டுப் பெண்கள் பிடிவாதம் பிடித்தார்களாம். பிணத்துக்குத் துணையாக ஒரு கோழிக் குஞ்சையாவது கொண்டுபோனால்தான் மற்றொரு சாவு இல்லாமல் தடுக்க முடியும் என்று எல்லோரும் வற்புறுத்தினார்களாம்" [6]

(மு.வ., குறட்டைஒலி, கடரின் நகைப்பு - ப.30)

இறந்த குழந்தையைப் புதைக்கும் போது கோழிக் குஞ்சையும் சேர்த்துப் புதைத்தால் தான் திரும்பவும் அந்த வீட்டில் ஒரு இறப்பு நிகழாது என்று சமுதாயத்தினர் கருதும் மூடநம்பிக்கையாக உணர்த்துகின்றார்.

மாமியார் கொடுமை

பெண்ணானவள் திருமணம் முடிந்தவுடன் பிறந்த வீட்டில் இருந்து புகுந்த வீட்டிற்குச் சென்று வாழ வேண்டிய சூழல் ஏற்படுகிறது. புகுந்த வீட்டில் தனது மாமியாரால் ஏற்படும் கொடுமையினை மு.வ.,

"நான் என்னப்பா அதிகாரம் பண்ணுகிறேன். மாமியார் கொடுமை செய்து கைக் குழந்தையோடு துரத்தியனுப்பியிருக்கிறாளே

இங்கே தாய் வீட்டிலும் நாம் கடுமையாக இருக்கலாமா என்று தான் சித்தியைக் கேட்டேன். வேறே ஒன்றுமே கேட்கவில்லையே அப்பா" [7]

(மு.வ., குறட்டைஒலி, இறந்த சிற்றப்பா, ப.35)

மாமியார் கொடுமை தாங்காமல் தாய்வீட்டிற்கு வந்த பெண் இங்கேயும் வேதனை அனுபவிக்க வேண்டுமா என்று தனது தங்கையை நினைத்து அண்ணன் மனம் வருந்துவதை வெளிப்படுத்தியுள்ளார்.

கடவுள் நம்பிக்கை

கடவுள் என்பவர் ஒருவரே என்றும் மனிதனை ஆக்குவதும், அழிப்பதும் கடவுளின் செயல் தான் என்று கடவுள் குறித்து விளக்கம் தருகிறார்.

"படைத்தவன் நோக்கம் எல்லாம் ஒன்று என்று உணரச் செய்வது தானே? மரணம் ஒன்று தானே அதைத் தெளிவாக்கி வருகிறது. ஆகையால் கடவுளின் உண்மையான சட்டம் மரணம் தான். மரணம் இல்லை யானால் கடவுளின் ஆட்சி இல்லை என்று ஆகும். எல்லா உயிரும் ஒன்று என்பதை வலியுறுத்தி உணர்த்தும் சட்டம் அது தான்" [8]

(மு.வ., குறட்டை ஒலி - இயற்கைபொல்லாதது, ப.101)

மரணம் என்பது மனிதனுக்கு இல்லை என்றால் உலகில் பல்வேறு இடையூறுகளைச் சந்திக்க நேரிடும். கடவுள் நம்பிக்கை என்ற ஒன்று இல்லாமலே போய் விடும், தீமை அதிகரிக்கும். எனவே இவ்வுலகில் வாழும் வரை மனிதர்களாகிய நாம் ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கோட்பாட்டோடு வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

நட்பு

நட்பு என்பது ஒருவர் மற்றொருவர் மீது வைத்திருக்கும் ஆழ்ந்த அன்பு ஆகும். அன்பு இல்லாதவன் வாழ்க்கை பாலைவனத்தில் உள்ள பட்ட மரத்தைப் போன்றது என்று திருவள்ளுவரே உணர்த்துகின்றார்.

"அன்பகத் தில்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று" [9] (குறள் - 78)

நட்பு குறித்து மு.வ. அவர்கள்,

"நீயும் நானும் பழகுவது போலவே
உன் மனைவியும் என் மனைவியும்
பழகுவார்கள் என்று எதிர்பார்க்க வேண்டா. நட்பு என்பது இயற்கையாக அமைய வேண்டும். செயற்கையாக ஏற்படுத்தினால் அது அமைந்து விடாது. தவிர பெண்கள் நம்மைப் போன்றவர்கள்

அல்ல. அவர்கள் உணர்ச்சி மிகுந்தவர்கள்
அவர்களாக விரும்பினால்தான் பழகுவார்கள்
இல்லையானால் நம் முயற்சி வீணாகும்" [10]

(மு.வ., குறட்டைஒலி, அக்கரைப்பச்சை, ப.112)

ஆண்களைப் போல பெண்கள் நட்பு அமைவதில்லை. பெண்கள் இயல்பிலே உணர்ச்சி மிகுந்தவர்கள். பிறரிடம் பழகும் போது உண்மையாக பழக வேண்டும் என்று விரும்புவார்கள். உண்மையான நட்பு தான் சிறந்தது என்று மு.வ.வும் உணர்த்தியுள்ளார்.

மு.வ. அவர்கள் சமுதாயத்தினர் தங்களது வாழ்க்கை நெறிமுறைகளை ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்று தனது சிறுகதைகள் மூலமாக உணர்த்தியுள்ளதை ஆய்வு முடிவுகளாக கண்டறியப்பட்டுள்ளது.

முதியோர் ஒருவர் தன்னுடைய பேரன் மீது வைத்திருக்கும் அன்பு குறித்து விளக்கியுள்ளார்.

வெற்றிலை, புகையிலை, காபி இவை உண்ணுவதால் மூளை பாதிக்கும், பைத்தியம் பிடிக்கும் என்று உணர்த்துகின்றார்.

கணவனை இழந்த பெண்ணாகிய விதவையின் துயர வாழ்க்கையினைச் சுட்டிக் காட்டுகின்றார்.

தன்னிடம் உள்ள ஆடைகளைப் பிறருக்கு கொடுத்து உதவும் முதியோரின் மனிதநேயப் பண்பை விளக்குகின்றார்.

மனிதன் மூடநம்பிக்கையில் மூழ்கிவிடாமல் அவற்றிலிருந்து விடுபட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாமியார் கொடுமை நீங்க தனது வீட்டிற்கு வரும் மருமகளை மாமியார் மகளாக நினைக்க வேண்டும் என்கின்றார்.

கடவுள் என்பவர் ஒருவரே என்றும் மனிதர்கள் எல்லோரும் ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கோட்பாட்டோடு வாழக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று உணர்த்தியுள்ளார்.

உண்மையான நட்பே உயர்ந்தது என்று கண்டறியப்பட்டுள்ளது.

16. மு. வ. வின் 'தமிழ் நெஞ்சம்' போற்றும் வயிற்றுக் கவலை

ம.தங்கராசு
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
பச்சையப்பன் கல்லூரி
சென்னை-30.

மனித வாழ்வில் ஒவ்வொரு வகையான மனிதர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் சிலர் பணம் படைத்தவர்கள், சிலர் பணத்துக்காகவும், பொருளுக்காகவும் போராடிக் கொண்டு இருப்பவர்களாக உள்ளனர். இவர்களில் சிலர் வயிற்றுக்கு உணவு கூட இல்லா நிலையில் உள்ளவர்களைப் பற்றியச் செய்திகளை அக்கால நடைமுறையில் இருந்த வாழ்வினை நமக்கு வயிற்றுக் கவலை என்னும் தலைப்பின் வழியாக மு.வ. அவர்கள் செல்வம் உள்ளவர்கள் எப்படியெல்லாம் வாழ்ந்தனர், புலவர்கள் தான் பெற்ற பரிசுப்பொருள் தன் புலமையால் பெற்ற செல்வங்களையெல்லாம் பிறருடைய வயிற்றுக் கவலையைப் போக்கிய புலவர்களின் வறுமையுற்ற வாழ்வின் தன்மையை இக்கட்டுரையின் மூலம் விளக்கப் பெறுகின்றன.

புலவர் பலர் வறுமையுற்று வாடும் வாழ்வினராக இருந்திருக்கின்றனர். அதன் காரணம் என்ன? என்பது பற்றிய சில செய்திகளை மூன்று காரணங்களைக் கொண்டு தெளிவிக்கப்படுகின்றன.

முதல் காரணம்

புலமை என்பது உயர்ந்த உணர்வு. அவ்வுணர்வு பெற்ற புலவர்கள் தொழிலில் விளங்கியுள்ளனர். தங்காற் பொற்கொல்லன் வெண்ணாகனார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், மதுரைக் கொல்லன் புல்லனார், மதுரைக் கொல்லன் வெண்ணாகனார் முதலானவர்களில் ஒரு சிலர் தொழிலில் ஈடுபட்டிருந்தனர் என்பது அவர்களின் பெயரின் அடை மொழிகளிளேயே தெரிகின்றது. இவ்வகைப் பட்ட புலவர்கள் தங்களின் தொழிலைக் காட்டிலும் புலமைக்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளமையும் புலப்படும் வகையில்,

"தொழிலும் கடமையும் உயர்ந்து பறக்கும் எண்ணங்களைத்
தடுத்துப் புலமைக்கு ஒருவாறு ஊறு செய்யும் போது,
புலமையின்பம் கண்ட புலவர், தொழிலை விடுவதற்குத் தயங்கார்"

என்று புலமையின் மீது கொண்ட பற்றினைப் புலவர்கள் தங்களுக்கு

வருவாய் கொடுக்கும் தொழிலையே விட்டமையும் தெரிய வருகின்றன. இவர்களை அன்றைய அரசியல் தம்மைப் புகழ்ந்து போற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டு அவர்களைப் பொன்னும், பொருளும் கொடுத்து போற்றி வந்தமையும் அறியமுடிகின்றது. உலகத்தில் கிடைக்கும் செல்வங்கள் அனைத்தும் பொது என்னும் கொள்கையினை நிலைநாட்ட செய்தவர்கள், தான் கொண்டு உழைப்பவனும், தோள் கொண்டு காப்பவனும், அறிவு கொண்டு ஆராய்ந்து எழுதுபவனும், உணர்வு கொண்டு உயரப் பறப்பவனும் ஆகிய அனைவருமே நாட்டு உழைத்து நலம் செய்வோரே என்பது அறிய முடிகின்றது. அன்றியும் புலவரின் வறமை என்பது மக்கள் கருத்திற்கு எட்டாத கற்பனையாக பழங்கதையாக வெறுஞ் சொல்லாக நின்றிடும், அதுவரையில் புலவர் உலகத்திற்கு இன்றியமையாதவர் என்பதை அரசியல் உணராது, தலைவர் சிலர் உணரலாம், அவ்வளவே கூடும். அதுவரையில் புலவர் கவலையற்று வாழ்பொருள் பெற அரசியல் உதவாது, வள்ளல் சிலர் உதவலாம், அவ்வளவே கூடும், அதனால் அந்நாள் வரையில் புலவர் பலர் வறுமையால் வாடுதல் இயல்பே ஆகும் என்று மு.வ. முதல் காரணம் வாயிலாக தெரிவித்துள்ளார்.

இரண்டாம் காரணம்

புலவரின் வயிற்றுக் கவலைக்குக் காரணமாக விளங்கியமையினைப் பழந்தமிழ் நாட்டில் நடை பெற்ற நிகழ்வுகளைக் கொண்டு விளக்கப் பெறுகின்றன. பழந்தமிழ் நாடு புலவர்களின் வறுமையைக் கண்ட நாடு, என்று சொன்னால் அது மிகையாகாது. புரவலரின் வண்மையையும் அந்நாடு கண்டது அதுவே நாகரிகம் வாழக் காரணமாக இருந்தது. புரவலரின் நெஞ்சைக் கொல்லும் அளவுக்கு நாகரிகம் வளர்ந்திருந்தது என்பதையும் அறிய முடிகின்றது. புலவரும், புரவலரும் எத்தகைய தன்மை கொண்டு விளங்கியுள்ளனர் என்பதை,

> *"எதுவும் வறுமை அன்று, புலவர் பாடாது என் நாட்டை விட்டு நீங்குதலே வறுமை என்று உணர்ந்த புரவலரும் விளங்கியிருந்தமை காண்கின்றோம்"*

என்ற செய்தியினைப் புரவலர் சொல்லக் கேட்கும் போது புலவரின் மேன்மையும் புலமையும் எத்தகையது என்று அறியலாகின்றது.

புரவலர்களிடம் இருந்து பெறப்பட்ட பரிசினையும், செல்வத்தையும் புலவர்கள் தானே வைத்துக் கொள்ளாது வறுமையில் இருப்பவருக்கும் வறுமைத் துன்பத்தால் இரப்பவர்க்கும் ஈதல் இயலாத வாழ்வே இன்மை வறுமை என்று உணர்ந்த உணர்வு சிறந்த நாகரிக உணர்வே அன்றோ? என்று பெரும்புலவர் நக்கீரனார் மனம் பெரும் நாகரிகம் மலர்ந்த மனமாக

மாறியமை அறியப் பெறுகின்றன. வறுமைத் துன்பத்தில் இருப்பவர்களைக் கண்டு அவருக்கு ஈதல் பெரும் நாகரிகம் என்று எடுத்துக்காட்டியுள்ளார்.

தமிழகம் இத்தகைய நாகரிக வளர்ச்சியைப் பெற்றிருந்தும், அறிஞர்க்குப் பொருட்கவலை தீரவில்லை என்பதைக் காட்டும் வகையில் பெருஞ்சித்திரனார் என்ற புலவர் ஒருவரின் வாழ்வே இதனை விளக்குகின்றன. அவருக்குக் கிடைத்த பரிசோ, பெரும் பொருள்கள் பெரும் செல்வங்கள் இத்துனை கிடைத்தும் அவரின் வறுமை தீரவே இல்லை என்ன காரணம் என்று ஆராய்ந்தால்.

குமணன் என்ற மன்னை சிறப்பித்து பாடிய பெருஞ்சித்திரனாருக்கு பலவகையான பொன்னும், பொருளும் அடங்கிய பரிசுப் பொருட்கள் கிடைக்கப் பெறுகின்றன. அப்பரிசுப் பொருட்களைக் கொண்டு வந்து கொடுத்து தம் துணைவியாரிடம் அதனை வைத்து பாதுகாத்துக் கொள் என்றோ, அதனை நீயே ஆடம்பரமாக வாழ பயன்படுத்திக் கொள் என்றோ, கணக்கு வைத்து சேர்த்துவை என்றோ கூறவில்லை அவர் அப்பரிசுப் பொருளைக் கொடு யாருக்குக் கொடு என்கின்றார் என்றால்,

"உன்னை விரும்புவோர்க்கும் கொடு, நீ விரும்புவோருக்கும்
கொடு, உன் சுற்றத்தார்க்கும் கொடு, நம்பசிதீரப்
பலநாள் கடனாகப் பொருள் கொடுத்தார்க்கும் கொடு,
இன்னார்க்கு என்று வரையறை செய்யாமல் கொடு,
என்னைக் கேளாமல் கொடு, யானும் கொடுப்பேன்
நீயும் கொடுப்பாயாக எல்லார்க்கும் கொடு வல்லவாறு
திறம்பட வாழ்தலைப் பற்றி எண்ணாதே, இது வள்ளல்
குமணன் நல்கிய வளம் என்றார்"

இத்தகைய புலவருக்கு எத்துணைச் செல்வம் வந்தாலும் அவரின் வறுமை தொலையுமோ? பெற்றதை உடனே பகுத்தளிக்கும் நெஞ்சத்தினரிடம் செல்வந்தான் நிலைபெறுமோ? இதுவும் புலவர் வறுமைக்குக் காரணம் அன்றோ? செல்வத்து பயனே ஈதல் எனப் பிறர்க்கு அறிவுறுத்தும் பேறு பெற்ற நக்கீரனார் வழிவந்தவர் அல்லவா, புலவர்கள் தமக்கு கிடைக்கப் பெற்ற பொருளைப் பிறருக்கு கொடுத்து வறுமையுற்ற நிலையினைக் காணப் பெறுகின்றன.

வறுமை இல்லா நிலை பெற வேண்டும் என்றால் நல்ல அரசு அமைய வேண்டும். அவ்வரசின் செயலால் எல்லா வளமும் பெற வேண்டும். அன்று வரையில் புலவரை வறுமை விடாது. புலவர் கொடுக்கும் பொருளைப் பெற எவர்க்கும் கையெழாத காலம் வேண்டும். புலவர் உணர்வும் செயலும் அத்தகையவை. சுற்றிலும் உள்ளவர் வயிறுகாய தம் வயிறு மட்டும் குளிரும் நிலையைப் புலவர் விரும்புதல் இல்லை. தம் இன்றைய உலகம் இனிமையுடன் வாழ வேண்டுமானால் கல்விச்

செல்வத்தளவில் மட்டுமின்றி பொருட்செல்வத்தளவிலும் கொண்டவரே உண்மைப் புலமை உடையவர்கள். ஆகையால், பெருஞ்சித்திரனார் போன்ற புலவர் எவ்வளவு பெறினும் வளமையுடன் வாழாது வறுமையை வரவேற்றதில் வியப்பு இல்லை என்பதை மு.வ.வின் இரண்டாவது காரணங்களின் மூலம் புலனாகின்றது.

மூன்றாவது காரணம்

மக்கள் வறுமையின்றி வளமான, செல்வமுடைய வாழ்க்கையை வாழ வேண்டுமானால், அறிவு என்னும் ஒன்றே மக்கட் பிறப்பின் சிறப்பியல்பாக விளங்குகின்றது. மக்களாய்ப் பிறந்தவர்கள் அறிவைத் தேடி உழைத்தல் வேண்டும் அறிவைப் பிறர்க்கு அளித்தல் வேண்டும், அறிவின் பயனால் இன்புறல் வேண்டும். இதுவே மக்களின் வாழ்வு இவ்வாழ்வில் சீர்பெற வாழ்பவரே புலவர் பெருமக்கள் என்று அறியப்படுகின்றன.

புலவர்கள் மக்களின் நலனைக் கருதியே வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை உணர்த்தும் வகையில் புலவர் அறிவு வாழ்க்கை வாழ, ஏனைய மக்கள் வயிற்று வாழ்க்கை நடத்தும் நிலை இருந்தது, வயிற்றுக் கவலை பொல்லாதது, அது பிற நல்ல கவலைகளுக்கு இடம் தராதது, பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் என்பது உண்மை மொழியே என்பது இங்கு உணர்த்தப்பட்டுள்ளது. பொருள் தேடுவோரின் நிலை எத்தகையவை என்பது பற்றியும் அறியப் பெறுகின்றன. இன்றைக்கு வேண்டும் பொருள் தேடுவோர், நாளைக்கும் வேண்டுமெனத் தேடுவோர், நூறாண்டு வாழ உதவும் பொருள் தேடுவோர். தம் மக்களின் மக்களும் என்றென்றும் வாழ உதவும் பொருள் தேடுவோர் ஆகிய அனைவரும் வயிற்றுக் கவலை உடையவரே ஆவார்கள்.

புலவர் பெருமக்களும் ஒருவகைச் செல்வரே ஆவர். அவர் அறிவுச் செல்வத்தை மிகுதியாகப் பெற்றுள்ளவர்கள். பொருள் வகையால் செல்வராய்ச் சிலர் விளங்கக் காரணம் கொடைப்பண்பு இல்லாமையே. அவர்கள் தம்மிடம் உள்ள பொருளைப் பகுத்து வழங்குவராயின் செல்வராய் விளங்க முடியாது. அறிவினை வழங்கும் கொடைப் பண்பு உடையவர் ஆவர். புலவர் கொள்வார் உளரோ, கொள்வார் உளரோ எனத் தம் அறிவைக் கூறித்திரிவர், பாட்டு எழுதித் திரிவர், நூல் இயற்றித் திரிவர், உண்மையைப் பறைசாற்றித் திரிந்துள்ளனர், கொள்வார் இல்லாத குறையே அறிவுத்துறையில் இலர் என்பதற்கு காரணம், அறிவைக் கொள்வார் பலர் இல்லாமைக்குக் காரணம் வயிற்றுக் கவலையே ஆகும். வயிற்றுக் கவலை உள்ளவரிடத்தில் அறிவோரின் தொண்டும் பயன்படாத நிலையினைக் காண முடிகின்றது. புலவர்களின் கொடைப் பண்பு வியக்கும் தன்மையாக அறியப்படுகின்றது.

உழைப்பினுடைய வயிற்றுக் கவலையைப் போக்க அரசியல் முன்வர வேண்டும். அவ்வாறு வரின் புலவரின் வறுமையும் மாறிவிடும். அறிவுத் தொண்டு செய்யும் புலவரின் அறத் தொண்டு மக்களை மேன்மையுறச் செய்தாலும் புலவரின் வயிற்றுக் கவலை தீரவில்லை என்பது வெளிப்படுகின்றன. உழைப்பாளிகளிடையே விழிப்பும் உரிமை உணர்வும் எழுதல் காணலாம். அவர் செல்வரை விடுத்துப் புலவரைப் போற்றுதலும் காணலாம். அறிவு மக்கப் பிறப்பின் சிறப்பியல்பு அன்றோ? ஆதலின் வயிற்றுக்கவலை அகன்ற பின்னர் அறிவு நாட்டம் தானே வந்து அமையும். அதுவரையில், புலவர் வாழ்வில் வறுமை இடம் பெறுதல் இயல்பு. புலவர் வறுமைக்கு இம் மூன்று பெரிய காரணங்கள் காணப்படுகின்றன. ஒன்று புலவர் உழைத்துப் பொருள் தேடுவதில் காலம் கழிக்காமல் எண்ணி எண்ணிப் புலமை தேடி வாழ்ந்த வாழ்வும், இரண்டாவது அவர்தம் வாழ்வின் பெருமை உணர்ந்த புரவலர் சிலர் பெரும் பொருள் நல்கினும் அதனை வைத்துக்காக்கும் வன்னெஞ்சம் இன்றி ஈத்து உவந்த எளிமையும், மூன்றாவதாக புலவரால் தமக்கு விளையும் நன்மையை உணர ஆற்றலின்றி, வரவு செலவு நோக்கிப் பயனின்மை கருதி அவரைப் புறக்கணித்த பொது மக்களின் வயிற்றுக் கவலை. இம்மூன்றனுள், முன்னவை இரண்டும் புலவர் பொருள் தேடாப் பெருமிதமும், கிடைத்த பொருளையும் தவறாது ஈயும் பெருவாழ்வும். திருத்த முடியாதவை அவை புலமையுணர்வோடு உடன் பிறந்த பண்புகள் என்பது அறியலாகின்றன.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற நிகழ்வுகள் புலவரும் புரவலரும் கண்ட கனவாய் முளைத்த முளை இன்று அரசியலமைப்பு எனும் நன்மரமாய் உலகனைத்தும் நிகழும் நல்லுதவி ஆற்றத் தொடங்குகின்றது. இனி. புலவர் வறுமையும் இராது, புரவலர் வாட்டமும் இராது. வயிற்றுக் கவலை மாய்ந்திடும், அறிவுக் கவலை மாண்புறும், மக்கட் பிறப்பும் மதிப்புறு வாழ்வு பெறுவார்கள் என்ற சிந்தனையைத் தமிழ்நெஞ்சம் நூலின் வாயிலாக வயிற்றுக் கவலையைப் போக்கும் சிந்தனையினைச் செம்மையான உணர்வுகொண்டு புலவரின் அறிவும் புரவலரின் மேன்மை தெள்ளத் தெளிவாக டாக்டர் மு.வ. அவர்களின் சிந்தனையில் சிறப்புறுகின்றன என்பது புலனாகின்றது.

17. மு. வ. வின் கதை மாந்தர்களும் அவர்களின் மூலம் காட்டும் வாழ்வியல் நெறிகளும்

சி. சக்திவேல்
முதுகலைத் தமிழ் முதலாமாண்டு
ஊரிசு கல்லூரி
வேலூர்.

தமிழ் நாட்டுப் பெர்னாட்ஷா என்ற பாராட்டைப் பெறுபவர் மு.வரதராசனார். இவர் நல்ல கருத்துக்களைக் கொண்டு இலக்கியநடையில் எழுதிய புதினங்கள் அனைத்தும் ஏதேனும் ஒரு குறிக்கோள் அடிப்படையில் எழுதப்பட்டவையாகும். இவர் அந்தநாள், மண் குடிசை, செந்தாமரை, கயமை, அகல்விளக்கு, அல்லி, மலர்விழி, கரித்துண்டு, வாடாமலர், கள்ளோ? காவியமோ?, பெற்றமனம் எனப் பல புதினங்களைப் படைத்தார். இவருடைய அகல்விளக்கு என்னும் நாவல் 1961-ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாடமி விருதைப் பெற்றது.

படைப்பிலக்கியத்தில் புதினம் சிறுகதை ஆகியவற்றில் பாத்திரப் படைப்பு இன்றியமையாதது. புதினம் படைப்பதில் கதைக் கருவிற்கும் பாத்திரங்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதுண்டு. பாத்திரப் படைப்பு புதினப் படைப்பு உத்திகளுள் முக்கியமான ஒன்றாகும். கால ஓட்டத்தில் அழியாத பாத்திரங்களைப் படைப்பதற்கு படைப்பாளியின் வாழ்க்கை அனுபவமே காரணமாகிறது. கற்போரைக் கண்ணீர் விடவும் சினம் கொள்ளவும் மகிழ்விக்கவும் வெறுக்கவும் செய்யும் பாத்திரப்படைப்பைப் படைக்கும் படைப்பாளியே வெற்றி பெறுகின்றான். டாக்டர் மு.வ. அவர்களின் பாத்திரப்படைப்பு பண்புகளின் தொகுப்பாக இருப்பார்கள். பெரும்பாலும் சில இலக்கண வரம்புகளுக்கு உட்பட்டே மு.வ.வின் பாத்திரப் படைப்பு அமையும். அவருடைய படைப்பில் உருவான கதை மாந்தர்கள் பற்றி சிலவற்றைக் காண்போம்.

அகல்விளக்கு

அகல்விளக்கில் முக்கிய கதை மாந்தர்கள் சந்திரன், வேலு. சந்திரனின் வாழ்க்கை ஆரம்ப நிலையில் வளர்பிறை போலவும் பின்பு தேய்பிறை போலவும் அழிந்தது. ஆனால் வேலுவின் நிலையே உயர்வும் இல்லாமல் தாழ்வும் இல்லாமல் சாதாரணமாக அமைகிறது. சந்திரனுடைய அழகிற்கு வெள்ளியையும் தகாத உறவுகளினால் எண்ணெய்யும் திரியும் கெட்டது என்றும் இதனால் வாழ்க்கையில் ஒளி மங்கி விட்டதற்குத் தொழுநோய் (ஒளியை) என்றும் உவமையாகக் கூறியுள்ளார். சந்திரன் தொழுநோயுடன் இருக்கும் போது கடைசியில் வேலுவைத்தேடி வந்தான்.

வந்த அவனை விரட்டி அடிக்காமல் தன்னுடன் வீட்டில் தங்க வைத்தான். தொழுநோயுடன் வந்த சந்திரனை அன்புடன் வரவேற்று வீட்டுத் தோட்டத்தில் தங்க வைத்து நன்றாக உபசரித்தான். இவ்வாறு மு.வ.அவர்கள் தான் கண்ட உண்மை நிகழ்ச்சிகளை பாத்திரமாக படைத்துள்ளார்.

செந்தாமரை

மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறாள் திலகம். அவள் தந்தை திடீரென்று இறந்துவிட துரதிஷ்டமே காரணம் என்று நினைக்கிறாள் அவள் தாய். பரிகாரம் தேட சாமியார்களை நாடுகிறாள். சித்தூர் செல்ல வீட்டை விட்டு ஓடுகிறாள். அங்கு ஓர் அம்மையாரின் ஆதரவு கிடைக்கிறது. அந்த அம்மையாரின் தம்பியை திலகம் மணந்து கொள்கிறாள். செந்தாமரை சேற்றில் மலர்ந்தாலும் அதன் தன்மை மாறுவதில்லை. அதைப்போலவே திலகமும் பண்பில் செந்தாமரைக்கு ஒப்பாக கருதப்படுகிறாள். இப்புதினத்தில் சமுதாயத்தில் நிலவிய மூடப்பழக்கங்கள் அடுத்தவருக்கு உதவும் பண்பு போன்றவை வெளிப்படுகின்றன.

அந்தநாள்

போரின் கொடுமையை மு.வ இப்புதினத்தில் விரிவாக கூறியுள்ளார். இரண்டாம் உலகப் போருக்கு முன் பர்மாவிலிருந்து ஆறுமுகம், பொன்முடி, வாணி மூவரும் தமிழ்நாட்டுக்கு வருகிறார்கள் வரும் வழியில் மூவரும் பிரிந்து விடுகிறார்கள். மூவரும் மூன்று திசைகளில் பயணிக்கின்றனர். ஆறுமுகம் மலேரியாவால் இறந்துவிடஇ வாணி உளவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டு பத்தாண்டுச் சிறைத்தண்டனை பெறுகிறாள் கணவனையும் மகளையும் இழந்து தாய் பொன்முடி மன அமைதி இழந்து தவிக்கிறாள் இந்நாவலில் போரின் கொடுமை அகதிகளின் வாழ்க்கை, பிரிவின் ஏக்கம், அமைதியின்மை போன்றவற்றை மு.வ. எடுத்துரைத்துள்ளார்

பாவை

கம்பூர் மணியக்காரரின் மகன் பழனியும் அவ்வூர் கள்ளுக்கடை வேலுப்பிள்ளையின் மகள் பாவையும் காதலிக்கின்றனர். இருவரின் தந்தையர்களும் நீண்ட கால நண்பர்கள். அந்தஸ்து குறுக்கிடுகிறது. பாவையை பழனியிடமிருந்து பிரித்து வேலூருக்கு அனுப்புகிறார் அவளுடைய தந்தை. வேலூரில் உள்ள மைத்துனன் மனைவியோ பாவையைத் தன் தம்பிக்கு மணமுடிக்கத் திட்டமிட்டு பாவையை பாலியல் பலாத்காரம் செய்யவும் தம்பியைத் தூண்டுகிறாள். வீட்டைவிட்டு ஓடி வந்து விடுகிறாள் பாவை. ஆற்காட்டில் கமலம் என்பரின் ஆதரவில் பழனியைக் காண்கிறாள். பின்பு பழனியின் தந்தை மாறிவிட்டதை வேலுப்பிள்ளைக் கூறக்கேட்ட பழனி தன் தாயைக் காண ஊருக்குச் செல்கிறான்.

இந்நாவலில் ஏழை, பணக்காரன் நிலையையும், காதல், பேராசை, உதவி போன்ற பண்பு நலங்களை சித்தரிக்கின்றார் மு.வ

கள்ளோ? காவியமோ?

அரக்கோணத்தில் சித்தியிடம் வளரும் சிறுமி மங்கை சித்தியின் கொடுமையால் வீட்டை விட்டு வெளியேறுகிறாள். சென்னையில் மணிவாசகத்தின் வீட்டில் வேலைக்காரியாகிறாள். மணிவாசகம் அவளை படிக்க வைத்து தன் மகன் அருளப்பருக்குத் திருமணம் செய்து வைக்கிறார். இருவருக்கும் இடையே சிறுபூசல் எழுகிறது மகள் பிறக்கிறாள் கணவனுக்கும் மனைவிக்கும் பிணக்கு ஏற்பட்டு இருவரும் பிரிக்கின்றனர். மங்கை பம்பாய் சென்று பணக்காரியாக மாறுகிறாள். ஒருநாள் அருளப்பர் மங்கையை பம்பாயில் சந்தித்து பேசுகிறான். மங்கை தன் மகளைக் காணவும் அவளுடன் பேசவும் விரும்புகிறாள். மகள் தேன்மொழி அவளை அம்மா என்றழைக்க மறுத்து விடுகிறாள். அதே ஏக்கத்தில் மங்கை நோய்வாயப்பட்டு படுக்கையில் விழ தாயின் துன்பத்தைக் கண்ட தேன்மொழி அம்மா என்று அழைக்க மங்கையின் உயிர் பிரிகிறது. இந்நாவலில் மு.வ மனிதாபிமானம், அன்பு, கல்வியின் உயர்வு, கணவன் மனைவியின் ஊடல், தாயின் ஏக்கம் போன்றவற்றை பிரித்து விளக்குகின்றார்.

கரித்துண்டு

இந்நாவலில் ஓவியர் மோகனின் புகழையும் அவருடைய திறமையும் கண்டு நிர்மலா காதலித்து திருமணம் செய்து கொண்டதையும் இருவரிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு நிர்மலா பம்பாய் சென்றதையும் அங்கு கமலக்கண்ணன் என்பவனை கணவனாகக் கொண்டு வாழ்ந்து வருவதையும் இறுதியில் மன்னிப்புக் கடிதம் எழுதி வைத்துவிட்டு மன அமைதிக்காக அங்கிருந்து வெளியேறுவதையும் காட்டுகின்றார்.

அல்லி

இப்புதினம் பாலுணர்வு காரணமாக வாழ்க்கை சிக்கலாவதை உணர்த்துகிறது. மனித வாழ்வில் தாழ்விற்கும் சீரிழவிற்கும் பாலுணர்வு காரணமாகிறது. அதுவே மனித வாழ்விற்கு ஆணிவேராகவும் அமைகிறது. இந்தக் கதைக் கருவைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் பாலுணர்வின் இயல்பையும் அதனை நெறிப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் நெறிப்படுத்தாவிட்டால் ஏற்படும் விளைவுகளையும் மு.வ அல்லி புதினம் வழி எடுத்துரைக்கிறர். மனம் உடல் சூழ்நிலை உணவு உடல்நலம் ஆகியவற்றில் வேறுபாடு மிக்கவர்களைச் சிலவற்றில் மட்டும் பொருத்தம் பார்த்து பிணைத்து விட்டால் வாழ்க்கையில் இன்பம் விளையாது என்பதையும் டாக்டர் அல்லி, சுப்புரத்தினம், அல்லியின் அண்ணன்

அவர்களின் மூலம் வெளிப்படுத்துகறார். தன் கருத்துக்களைக் கூறும் கதை மாந்தராக ஆசிரியர் அறவாழி படைக்கப்பட்டிருக்கிறார்.

பெற்றமனம்

இப்புதினத்தில் வறுமையின் கொடுமை, குழந்தை தத்துகொடுத்தல் தாயின் ஏக்கம், அதிக ஊதியம் பெற வேண்டி ஒய்வில்லாமல் உழைக்கும் கந்தசாமி இறத்தல், வேலூருக்குத் தன் மகனுடன் வரும் முனியம்மாள் கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு பதினைந்து ஆண்டு சிறைத்தண்டனை அடைகிறாள். மகனைத் தேடி அலையும் நிலையில் தன் மகன்கள் இருவரும் பகையால் இருப்பதைக் கண்டு வேதனை அடைந்து மயக்கமடைகிறாள். நிலைமையை அறிந்த தேன்மொழி தன் தத்துப்பிள்ளையான மணிவண்ணனிடம் முனியம்மா தான் அவனைப் பெற்ற தாய் என்ற உண்மையைக் கூறும்போது மணிவண்ணன் கதறுவதையும் கண்டு நம் கண்களில் கண்ணீர் சிந்த வைக்கிறது.

மு.வ அவர்களின் நோக்கம்

இவ்வாறு இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் புதின வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றியவர் மு.வ அவர்கள். இளைஞர்களின் வாழ்க்கையைப் பண்படுத்தும் நோக்கில் "கலை வாழ்க்கைக்கே" என்ற கொள்கை அடிப்படையில் மு.வ புதினங்கள் எழுதியுள்ளார்.

டாக்டர் மு.வ அவர்கள் சமுதாயச் சிக்கல்களை உணர்ந்து காரணங்களை ஆராய்ந்து அச்சிக்கல்கள் தீர வழி முறைகளையும் தனது புதினத்தில் சுட்டியுள்ளார். இவர் எழுதிய நாவல்களின் மூலம் எண்ணெற்ற வாழ்வியல் கருத்துக்களைக் கூறி மக்களின் மனதைப் பண்படுத்த முயன்றுள்ளார். அவருடைய கதைமாந்தர்கள் கற்பனை உருவாக்கம் அல்ல.

அவை செதுக்கப்பட்ட கற்சிலைகளைப் போன்றது. சமுதாயத்தில் நிலவும் உண்மைகளை எடுத்துரைத்துள்ளார்.

18. டாக்டர் மு. வ. வின் மலர்விழியில் சமுதாயச் சிந்தனைகள்

சு.கலைமணி
ஆய்வியல் நிறைஞர்
தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
விழுப்புரம்.

முன்னுரை

இந்நூற்றாண்டு கண்ட சான்றோர்கள் வரிசையில் முதன்மையாய் வைத்துப் போற்றப்படும் சமுதாயச் சிந்தனையாளர் டாக்டர் மு.வரதராசனார் ஆவார். சங்க இலக்கியம் முதல் இன்றைய இலக்கியம் முடிய தமிழிலக்கியம் முழுவதிலும் ஒரு சேரத் திளைப்பவர்களுள் அவர் முதன்மையானவர் தனி மனிதனின் வாழ்வு இனிமையாக அமைய வேண்டும் என்றால், சமுதாயம் நன்றாக அமைந்திருக்க வேண்டும். மனிதன், புற உலகின் சமூக சிக்கல்களைச் சந்திக்கவும் சமாளிக்கவும் வேண்டிய கட்டாய நிலைகளை அன்றாடம் சந்திப்பதைப் போலவே அக உலகின் குடும்பப் பிரச்சினைகளையும் சந்திக்க வேண்டிய பொறுப்புள்ளவன் ஆகின்றான்.

சமுதாய அமைப்பில் ஒருவனும் ஒருத்தியுமாய்க் கூடி மனைவியும் மக்கட்பேறுமாக வாழுகின்ற வாழ்க்கை குறிப்பிடத்தக்க முறையில் சிறப்பாகப் பேசப்படுவதையும், குடும்பம் என்ற வண்டியின் இரு சக்கரங்களாக அமைந்த கணவனும் மனைவியும் ஒத்த சிந்தனையும் காதலும் விட்டுக் கொடுக்கும் மனப்பண்பும் பெற்று விளங்கினால் வாழ்க்கை முரண்பாடுகளின் விளைவுகளைத் தவிர்க்கலாம் என்பதை நன்றாக உணர்ந்த டாக்டர் மு.வ.அவர்கள், தமது நாவல்களில் சமுதாய சிந்தனைகளை விளக்கியுள்ளார் அவற்றுள் 'மலர்விழி' நாவலின் வாயிலாக வெளிப்பட்டுள்ள சமுதாயச் சிந்தனைகளை அறியலாம்.

பாத்திரங்கள் வாயிலாக சமுதாய சிந்தனைகள்

'பொல்லாதவர் கொடியவர் என்று சிலரைச் சுட்டிக்காட்டி எல்லா தீமைக்கும் அவர்களே காரணம் என்று பழியை எல்லாம் அவர்கள் மேல் சுமத்துவது பொதுவான வழக்கம் அவர்கள் ஏன் பொல்லாதவர்கள் ஆனார்கள், ஏன் கொடியவர்கள் ஆனார்கள், என்று உணர்வதே அறிவு நெறி' என்று மு.வ.அவர்கள் இந்நாவலின் முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

அவர் முன்னுரையில் கூறியுள்ளபடி காஞ்சனையின் பணஆசை மட்டுமே அவளைத் தவறான ஒழுக்கத்தில் ஈடுபடச் செய்யவில்லை.

செல்வநாயகத்தின் ஆண்மை இன்மையும், காஞ்சனையின் புலன் வேட்கையுமே முதன்மைக் காரணங்களாக அமைகிறது. காஞ்சனை - நாகு உறவை அறிந்திருந்தும் செல்வநாயகம் தம் மனைவியைப் பிரிந்து வாழவில்லை.

காஞ்சனை-நாகு உறவு அவர்கள் இருவருக்கும் செல்வநாயகத்தை எதையோ கொடுத்து முடித்துவிட்டார்கள் என்ற கொலைப் பழியையும், பதினைந்தாயிரம் ரூபாய்க் கடனையும் ஏற்படுத்திவிடுகிறது. இப்பொருந்தா உறவு காஞ்சனையின் தற்கொலைக்கும் நாகு படையில் சேர்ந்து இளம் வயதிலேயே உயிர் இழப்பதற்கும் காரணமாகிறது.

முத்தையன், மணி ஆகிய இருவரும் செல்வநாயகத்தின் குடும்பத்தைக் கூர்ந்து நோக்குபவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். அக்குடும்பத்தின் நிகழ்ச்சிகள் அவர்களை மனத்தளவில் பாதிக்கின்றன. ஆனால் அக்குடும்பத்தில் உறவு ஏற்படுத்திக் கொண்டதால் பெரிதும் பாதிக்கப்படுகின்றவர்கள் மலர்விழியும் அண்ணாமலையும் ஆவர்.

நாகநாதன் மலர்விழிக்கு துரோகம் இழைத்துவிட்டு காஞ்சனையும் தகாத உறவு வைத்துக் கொண்டு செல்வநாயத்திற்கு துரோகம் இழைக்கிறாள், இறுதியில் எங்கோ மாண்டு போகிறாள். நன்றி கொன்றவனின் முடிவும், செல்வநாயகத்திற்கு துரோகம் இழைத்து காஞ்சனையின் கோர முடிவும் ஒரு படிப்பினையாகும்.

செல்வநாயகத்தின் வாழ்க்கை உயர்ச்சிக்கும் காஞ்சனையின் வாழ்க்கை வீழ்ச்சிக்கும் இன்னொரு காரணம் உண்டு. கலையின் தன்மைக்கு ஏற்றபடிதான் கலைஞரின் வாழ்க்கையும் அமையும், செல்வநாயகம் கவிதைக் கலையில் ஆர்வமும் பயிற்சியும் உடையவர், கவிதைக்கலை உடம்பை மறந்து மிக மிக உயரப்பறக்கும் உண்மைக் கலை அதனால்தான் செல்வநாயம் உயர்ந்தவராக விளங்குகிறார். காஞ்சனை அருமையான ஓவியக் கலையில் வல்லவள், ஓவியப் புலமை நிறைந்த அவரது வாழ்க்கையிலும் ஒழுங்கில்லாமல் தம் கணவருக்குத் துரோகம் செய்கிறாள் காஞ்சனை.

பண வேட்கை மிகுந்த சமுதாயத்தில் பெருநிலையில் உள்ளவர்கள் எல்லாம் எவ்வாறு இழிச் செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்பதையும், வறுமை ஒழிக்கப்பட்டாலன்றி மனித சமுதாயத்திற்குக் கடைத்தேற வழி கிடையாது என்பதை விளக்கும் வகையில் மு.வ.அவர்கள் இப்புதினத்தைப் படைத்துள்ளார் என்றே எண்ணத்தோன்றுகின்றது.

இரயில் நிலையத்தில் உட்கார்ந்திருந்த இளவயது வேசி ஒருத்தியைப் பலரும் சூழ்ந்து கொண்டு எள்ளி நகையாடுகின்றனர். இதைக்

கண்ட வேலய்யன், 'ஏழைப்பெண் கெட்டுப் போனால் நடுத்தெருவில் கைவீசித் திரிவாள்' ஆனால் செல்வாக்கான குடும்பத்துப் பெண் கெட்டுப்போனால் தன் மதிப்பு குறையாமலே மாடி வீட்டில் மறைந்து நடப்பாள். ஏழைப் பெண்ணின் கணவன் அடித்து உதைத்து ஊரறியச் செய்வான், ஆனால் செல்வச் சீமாட்டியின் கணவனோ காதல் வளர்ந்து விட்டது போல் நடிப்பான் என்று அண்ணாமலை கூறியதை நினைவு கூறுகிறாள்.

கலெக்டர் செல்வநாயகம் முத்தையனிடம் பேசிக்கொண்டிருந்த போது அவர் வாயிலாக மு.வ.பல சிந்தனைச் செல்வங்களை வெளிப்படுத்துகிறார்.

சிலருடைய மனம் பனைமரம் போன்றது, தன்னை நினைத்துக் கொண்டே நெடுக்க வளர்வது: ஈவு இரக்கம் அற்ற தன்மை மனம்: சிலருடைய மனம் அறுகம்புல் போன்றது: எங்கெங்கு பார்த்தாலும் படர்வது இரக்கம் உள்ள நல்ல மனம்: நல்ல மனங்கள் பெருகினால், உன்னைப் போன்றவர்கள் மிகுதியானால் வறுகைக்கே ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிடலாம் என்று கூறுவது சிந்திக்கத்தக்கது.

அண்ணாமலையின் தங்கை திருமணத்திற்குச் சென்றிருந்த முத்தையன் அண்ணாமலை மாமனாரிடம் பேசிக் கொண்டிருக்கும் போது அவரது இரண்டாவது மகள் மலர்விழியைக் கல்லூரியில் படிக்க வைத்திருக்கலாமே என்று முத்தையன் கேட்க,

நாம் நினைக்கறது போல் உலகம் இல்லை உலகத்தில் படித்த பெண்ணுக்கு மாப்பிள்ளை கிடைப்பது அரிதாக இருக்கிறது இவள் எட்டாவது படித்தபோது பலபேர் வந்து கேட்டார்கள் பத்தாவது படித்த போது சில பேர் வந்து கேட்டார்கள் இப்போது பாருங்கள் பெண் கேட்க தயங்குகிறார்கள் இன்னும் பி.ஏ. படித்து விட்டால் திருமணம் இல்லாமலே வாழும்படியாக நேர்ந்து விடுமோ என்று பயமாக இருக்கிறது அதனால்தான் படித்ததுபோதும் என்று நிறுத்திவிட்டேன் என்று அவர் கூறுவது யதார்த்தமானதுதான் இப்பொழுது கூட நன்கு படித்த பெண்களுக்கு வரன் அமைவது இல்லை சமமான பட்டதாரி மாப்பிள்ளை தேடுவதற்குள் பெண்ணுக்கு முப்பது வயது தாண்டிவிடுகிறது. பெண்ணுக்கு ஈடான படிப்புள்ள மாப்பிள்ளை கிடைக்காமல் இறுதியில் மளிகைக் கடைக்காரனோ, விவசாயம் செய்பவரோ மாப்பிள்ளையாக அமைந்து விடுகிறது. இதைவிட்டால் திருமண வயது தாண்டிவிடுமோ என்று அஞ்சவேண்டிய நிலை ஏற்படுகிறது.

நம் நாட்டில் அறிவும் ஆற்றலும் உள்ள ஆண்கள் குறைவு, அதனால் பெண்கள் அறிவும் ஆற்றலும் பெற்றுவிட்டால் திருமணத்துக்குக்

வழி இல்லை கூரைவீட்டுக்கு விலை கூறினால் பலர் வாங்க வருவார்கள் ஆனால் பெரிய மாடி வீட்டுக்கு வாங்க வருபவர் குறைவுதானே என்று எனக்குள்ளே எண்ணிக் கொண்டேன் என்று முத்தையன் எண்ணுவதாக வரும் வரிகள் அண்ணாமலையின் மாமனார் கூறியதற்கு ஒப்பாக உள்ளது.

பள்ளிக் கூடத்தைக் கண்டதும், புத்தகங்களைக் கண்டதும் மகிழ்ச்சியோடு படிக்க மாணவருக்கு ஊக்கம் பிறக்க வேண்டும் மாணவரின் மூளை பாலாறு போன்றது தண்ணீரே இல்லை எல்லாம் மணல்தான்: எங்கிருந்தாவது தண்ணீரைக் கொண்டுவந்து பாய்ச்ச வேண்டும் என்று எண்ணக்கூடாது பார்ப்பதற்கு மணல்தான் இருக்கும் தோண்டினால் நீர் சுரக்கும் தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாணவர் மூளையிலும் நிரம்ப அறிவு இருக்கிறது. அது ஒளி வீசுவதற்குப் பள்ளிக் கூடமும் ஆசிரியரும் வாய்ப்பு தரவேண்டும். இதுவே புதிய கல்வி முறை: மாண்டிசோரி கல்வித் திட்டம் என்று மு.வ.அவர்கள் மலர்விழி வாயிலாக சிந்தனைக்கு விருந்து படைக்கிறார்.

முடிவுரை

படைப்பாளி தனது படைப்பிற்கு முழுச் சக்தியை அளிக்கிறான். படைப்பாளிகள் கடவுளின் ஆற்றலை மிகுதியாகப் பெற்றவர்கள் அச்சக்தியைப் பகிர்ந்து கொண்டு சிறுகச் சிறுகப் படைப்புத் தொழிலைச் செய்ய அனுமதிக்கிறான். மு.வ.அவர்கள் சமுதாய சிந்தனைகளைப் பாத்திரங்களின் வாயிலாக வெளிப்படுத்தி நமது சிந்தனை உணர்வுகளைத் தூண்டுகிறார் என்றால் மிகையாகாது.

19. மு. வ. வின் மண்குடிசையில் கதைமாந்தர்

ர.சர்மிளா
ஆய்வு மாணவி
தூய நெஞ்ச கல்லூரி
திருப்பத்தூர்.

மு.வ. இளமையும் கல்வியும்

டாக்டர் மு.வ. அவர்கள் வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் 25.04.1912-ம் ஆண்டு முனுசாமி-அம்மாகண்ணு தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இவர் இயற்பெயர் திருவேங்கடம். இவர் 1 முதல் 5 வகுப்பு வரை வாலாஜா அடுத்த வேலத்தில் கல்விக் கற்றார். தனது ஊரான திருப்பத்தூரில் நகராட்சிப் பள்ளியில் உயர்கல்வியை 1928 ஆம் ஆண்டு முடித்தார். அதே ஆண்டில் இருந்து 1931 ஆம் ஆண்டு வரை திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் எழுத்தராக பணிபுரிந்தார். 1931 முதல் 1934 ஆம் ஆண்டு வரை இயற்கை மருத்துவம் பற்றிய நூலைப் படித்து ஈர்ப்பு கொண்டார். 1934-ல் நடந்த 'வித்துவான்' தேர்வு எழுதி முதல் நிலையில் வெற்றி பெற்றார். 1935-ம் ஆண்டு மேல்நிலைப் படிப்பில் மாநிலத்திலேயே முதலாவதாக தேர்ச்சி பெற்றார். அதற்காக திருப்பனந்தாள் மடத்தின் சார்பில் ரூ.1000 பரிசாக வழங்கப்பட்டது. இது இப்போதைய பண மதிப்பில் ரூ.7 லட்சமாகும்.

டாக்டர் மு.வ. எழுதிய நாவல்களில் இங்கு இடம் பெறுவது. 'மண்குடிசை' என்ற நாவலின் தலைப்பைப் பற்றி ஆய்வோம்.

கதை மாந்தர்கள்

மெய்யப்பன் (நாயகன்), ரேவதி (மனைவி), வெண்ணிலா (மகள்), கதிரவன் (மகன்), பாண்டியன், பொன்னுசாமி, குமரவேல் (நண்பர்கள்), குமரவேல் மனைவி மங்கை ஆகியோர் மண்குடிசையின் கதை மாந்தர் ஆவர்.

கல்லுக்குள் ஈரம்

கொலைக்கைதியாக சிறையில் இருக்கும் மெய்யப்பன். இந்திய விடுதலைச் செய்தியை அறிகிறான். அப்போது மனம் மகிழ்கிறான். மேலும் தமது விடுதலைச் செய்தியையும் அறிகிறான். ஆனால் மெய்யப்பன் பிரியப் போவதை எண்ணிச் சிறைச்சாலை நண்பர்கள் வருந்தினர். அதைக் கண்ட மெய்யப்பன் கொலைகாரன், திருடன், அடிதடி ஆசாமி இவர்களின் அன்பையும் கண்ணீரையும் கண்டு வருந்தும் காட்சி மூலம் குற்றவாளிகள்

உருவாவதில்லை. சந்தர்ப்பமும், சூழலும் ஒரு மனிதனை குற்றவாளியாக மாற்றுகிறது. அவர்களுக்கும் அனைத்து உணர்வுகளும் உண்டு என அறிய வைத்துள்ளார் ஆசிரியர்.

ரேவதி

"மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்"

மெய்யப்பன் விடுதலைப் பெற்று வீடு திரும்புகிறார். மனைவி ரேவதி கொலைகாரனின் மனைவி எனச் சமுதாயம் தன்னையும், கொலைக்காரனின் பிள்ளைகள் எனப் பிள்ளைகளையும் ஒதுக்குவதை எண்ணி அஞ்சி கணவனைத் துன்புறுத்துவடன், நச்சரித்துக் கொட்டுகிறாள்.

முற்போக்கு சிந்தனையுடைய பாண்டியன் தனது மனைவியின் கொள்கை ஏற்க மறுப்பதால் அவர்களுக்கிடையே பிரிவு ஏற்படும்.

ஆனால் விதிவிலக்காக குமரவேல் மனைவி மங்கை. கணவனின் அனைத்து நல்ல செயல்களிலும் துன்பத்திலும் பங்கு கொள்கிறாள். மனைவிக்குரிய இலக்கணத்தோடு மங்கை கதாபாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

இரயில் பயணத்தில்

குமரவேல்-மங்கை நல்லாள் - மெய்யப்பன் மூவரும் காசிக்கு பயணமாகின்றனர். அந்தக் காட்சியைக் கதை அமைப்பில் ஆசிரியர் இரயில் பயணத்தின் போது நாம் சந்திக்கும் நிகழ்வுகளையும் பல்வேறுபட்ட மக்களின் உரையாடல்களையும், கூட்ட நெரிசல்களையும் இரயில் பற்றாக்குறைகளையும், அரசின் அலட்சியப் போக்கையும், நம் நாட்டில் சினிமாக்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை என்பதையும் நம் கண் முன்னே காட்சிபடுத்துகிறார். இவை இன்றைய நடைமுறையில் இருப்பதையும் நம்மால் கண்கூடாகப் பார்க்கிறோம்.

தேசத் தலைவர்கள் பற்றிய சிந்தனை

காந்தியின் ஒத்துழையாமை இயக்கம் பாண்டியன் கதா பாத்திரத்திற்கு இணைக்கப்பட்டுள்ளது. உண்மை உணர்ந்தவர்களுக்கு எளிய வாழ்க்கை இன்பம் தரும். மேலும் காந்தி, விவேகானந்தர், இராமலிங்கர் போன்றோரின் கருத்துக்கள் வாழ்க்கைக்கு உகந்தவையாக உள்ளன என்பதைத் தெளிவாக கையாண்டுள்ளார்.

டெல்லியும் கங்கையும்

கங்கையின் புனிதத்தையும், அவற்றில் இயற்கை எழிலையும்,

அவற்றை மக்கள் எவ்வாறு மாசுபடுத்துகின்றனர் என்பதையும் கண்முன் படைத்திருக்கிறார்.

டெல்லிக்குச் சென்றதும் அங்குள்ள மக்களின் மொழி, உடை, உணவு அவர்களுடைய பண்பாடு என ஒவ்வொரு சிறு அசைவுகளையும் மிகவும் இனிமையாகக் கையாண்டுள்ளார். மேலும் நம் தமிழனம் எங்கும் பரவியுள்ளதையும் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்.

மனிதனுக்கு மாற்றம் தேவை

"மனம் பாதிக்கப்பட்ட மனிதர்களுக்கு மாறுதல் கிடைக்கும் போது அவற்றைச் சிறிதளவேனும் மறந்து இருக்க முடியும்". டெல்லியில் பணி செய்யுமிடத்தில் தஞ்சாவூர், காஞ்சிபுரம், சேலம், கோவையை சேர்ந்தவர்கள் நண்பராகின்றனர். அவர்கள் அனைவரும் வாழும் முறை, ஒவ்வொருவரின் தனித்தன்மைகள், கருத்துக்கள் போன்றவற்றின் மூலம் மனிதர்கள் அனைவரும் ஒவ்வொரு வகையானவர்கள் என்பதையும் அனைவரிடமும் அன்பு மட்டும் ஒரே மாதிரியானது ; வெளிப்படுத்தும் விதம் வேறு எனத் தெளிவாக காட்டியுள்ளார்.

மேலும் தொழிலாளர்களின் பிரச்சனையைப் பற்றியும், அதன் காரணமாக வேலையிழப்பதையும். வேலை இழந்ததனால் மனம் துவழாமல் டேராடுன் பயணம் செல்கிறார்.

பயணத்தில் பல்வேறு இடங்களில் இயற்கை அழகை ரசிப்பதும், பல்வேறு மனிதர்களை சந்திப்பதும் அமைக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் மெய்க்கண்டார்

பயணத்தின் போது ஸ்ரீநகரில் பேராசிரியரைச் சந்திக்கிறார். அவரிடம் தன்னுடைய நிலையை கூறும் நிகழ்வு மிகவும் மனதை கசக்கி பிழிகிறது. அவரின் நிலையைக் கண்ட பேராசிரியர் தனது ஆராய்ச்சியின் பயனாகக் கிடைத்த மருந்தை மெய்யப்பன் உடலில் செலுத்தி உருவம் மறையச் செய்தார். (அருவநிலை) இது தற்காலத்திலும், முற்காலத்திலும் இயலாத ஒன்று என்றாலும், அவ்வாறு இருந்தால் எவ்வளவு நன்மைகள் ஏற்படும் என்பதை ஆசிரியர் சுவைமிக்க உருவாக்கியுள்ளார்.

உருவமற்ற மெய்யப்பனின் செயல்கள்(அருவநிலை)

முதலில் மனைவி மக்களைக் காண்கிறார். பின் நண்பர்களைக் காண்கிறார். பின் (நண்பன்) பாண்டியனின் நிலையை அறிந்து, பாண்டியன் மனைவி ரேவதியைக் காணச் செல்லுகிறார். அங்கு, கணவனைப் பிரிந்து வாழும் பெண்ணின் உணர்வுகள் மாற்றம், அவலநிலை போன்றவற்றை ஆசிரியர் எடுத்தியம்பியுள்ளார்.

மேலும்.

தவறு செய்பவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

பேய், சூன்மயம், கடவுள் நம்பிக்கை போன்றவை தொடர்பான பல்வேறு நிகழ்வுகளில் மக்களின் நம்பிக்கைகளைப் பற்றி கூறியுள்ளார்.

சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும் சீர்கேடுகளைக் கூறியுள்ளார்.

சமுதாயத்தைச் சீர் செய்ய (இவ்வாறு) ஒரு சக்தி இருந்தால் எவ்வாறு இருக்கும் என்ற அபரிமிதமான கற்பனை மிகவும் வளமான பகுதியாக உள்ளது.

கேசவராயன் (எதிர்மறை கதாபாத்திரம்)

இந்த நாவலின் எதிர்மறைப் பாத்திரமான கேசவராயன் பணம் படைத்த, பதவியில் இருக்கக்கூடிய, உலகில் உள்ள தவறுகளின் ஒட்டுமொத்த உருவமாகச் சித்தரிக்கப்படுகிறது. அவைத் தற்காலத்தில் உள்ள பல அரசியல்வாதிகளைப் போலப் படைக்கப்பட்ட பகுதிகள் நடைமுறையில் உள்ளவாறு யதார்த்தமர்க அமைக்கப்பட்டுள்ளது.

தீயவர்களைத் திருத்தவும், தண்டிக்க வேண்டும். அவைத் தவறுகளுக்கேற்ற தீர்ப்புகள் எனவும், அனைத்து தரப்புகளிலும் தவறுகள் நடப்பதையும், பெரும்பான்மைக் குற்றங்கள் அதிகார வர்கத்தினர் மற்றும் சூழலின் காரணமாகவும் வழிகாட்டுதலின்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இன்மை உறவுகளைப் போற்றுதல் இன்மை, ஏமாளித்தனம், தன்னம்பிக்கையின்மை, போலித்தனமான கௌரவம் பகட்டான வாழ்க்கை போன்றவற்றின் காரணமாக சமுதாயத்தில் உள்ள சீர்கேடுகளுக்குக் காரணமாக விளங்குவதை டாக்டர் மு.வ. அவர்கள் ஒரு சிறந்த படைப்பாக உருவாக்கியுள்ளார்.

மெய்யப்பனின் கூற்று

உலகில் பொய் மலிந்துவிட்டது.
பொய்யர்களை, அடக்கப் போகிறேன்.
பொய்யர்களாய்த் துன்பப்படாதீர்கள்
உலகில் வஞ்சம் மிகுந்துவிட்டது.
வஞ்சகர்களை ஒடுக்கப் போகிறேன்.
வஞ்சர்களாய்த் துன்பப்படாதீர்கள்
லஞ்சம் கொடுத்தலும், வாங்குதலும் மிகுந்தவிட்டன
கொடுப்பாரையும் வாங்குவோரையும் ஒறுப்பேன்
லஞ்சத்தை ஒழித்து நேர்மையைப் போற்றுங்கள்
செல்வச் செருக்கும் பதவிச் செருக்கும் மிகுந்துவிட்டன

செருக்கு உடையவர்களுக்கு அஞ்சாதீர்கள்
அஞ்சிக் கோழை ஆகிறவர்களை ஒறுப்பேன்
பொல்லாதவனை நல்லவன் என்று புகழாதீர்கள்
பொய்யனை மெய்யன் என்று போற்றாதீர்கள்
இந்தப் பொய் வாழ்வு உங்களைத் துன்புறுத்தும்
ஒழுக்கம் இல்லாதவனுக்குப் பயபப்படாதீர்கள்
அவனுக்கு உயர்வு தந்து பாராட்டாதீர்கள்
உண்மைக்கு மாறாக வாய் திறக்காதீர்கள்
இது அருளாட்சித் தொடங்கும் காலம்
கடவுளாணை வந்துவிட்டது.
கண்கூடாகக் காண்பீர்கள்

முடிவுரை

மு.வ. அவர்கள் எண்ணத்தாலும் சொல்லாலும் செயலாலும், தமிழ்நாடு தமிழ்மொழி, தமிழர் நலம் எனத் தமிழர் வாழ்வு வளம் பெற வேண்டி எழுத்துத் தவம்புரிந்த இணையில்லாத் தமிழறிஞர்களில் ஒருவர்.

அவர் வழி நின்று முற்போக்கு இலக்கியம் படைப்போம். சமுதாயத்தைச் சீர்படுத்துவோம், தமிழரின் பண்பு மற்றும் கலாச்சாரத்தைக் காத்து அடுத்ததலைமுறைக்குப் பாதுகாப்பாய் நிலைக்கச் செய்வது நமதுபணி. டாக்டர்.மு.வ.அவர்களின் இலக்கியப் பண்பை வளர்ப்போம். நல்லதோர் சமுதாயத்தை உருவாக்குவோம். வாழ்க அவரது புகழ் வளர்க அவரது எளிமைப் பண்பு.

௨௦. மு. வ. வின் நாவல்கள்

நா. சங்கீதா
முனைவர்பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
கொடைக்கானல்

முன்னுரை

மு.வரதராசன் அவர்கள் 25.4.1912-ல் திரு.முனுசாமி முதலியார், அம்மாக்கண்ணு அம்மையாருக்கும் ஒரே மகனாய்ப்பிறந்தார். இவரின் இயற்பெயர் திருவேங்கடமாகும். இவர்.பி.ஓ.எல், பி.எச்.டி, டி.லிட் போன்ற பட்டம் பெற்ற பெருமைக்குரியவர் ஆவர். இவர் இராதா அம்மையார் என்ற பெண்ணை மணந்து இல்லற வாழ்வை மேற்கொண்டார். பிறகு பல துறைகளில் ஈடுபட்டு தனது பணியை ஆற்றினார். மேலும் பல விருதுகள் பெற்றார். பணியில் இருக்கும்போதே பல படைப்புகள் எழுதிய பெருமைக்குரியவர் ஆவர். இவர் நாவல் - 13, நாடகம் - 6 சிறுகதை - 2, சிந்தனைக்கதை - 2, கட்டுரை நூல் - 11, இலக்கியம் - 24, சிறுவர் இலக்கியம் - 4 என பல படைப்புகளும், இன்னும் பல நூல்களும் எழுதியவர் ஆவர்.

நாவல்கள்

மு.வஅவர்கள் செந்தாமரை, கள்ளோ? காவியமோ?, பாவை, அந்தநாள், மலர்விழி, பெற்றமனம், அல்லி, கரித்துண்டு, கயமை, நெஞ்சில் ஒரு முள், அகல்விளக்கு, வாடாமலர், மண்குடிசை போன்ற பல நூல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய நாவல்கள் பதின்மூன்றாகும். இவரின் நாவல்கள், காதல், குடும்பம், சமுதாயம், நெறிமுறைகள் போன்றவைச் சார்ந்த கருத்தாகவே காணப்படும்.

மு.வ அவர்கள் தான் நாவல் எழுதியதற்குக் கூறும் காரணமாவது, "எனக்கு நாடகத்தில் எப்போதும் ஓர் ஆர்வம் உண்டு, நாடகங்கள் படிப்பேன், பார்ப்பேன், எனக்குத் தோன்றிய கருவை அமைத்து ஒரு நாடகம் எழுதினேன், வெளியீட்டாளரிடம் அதைக் கொண்டு போனேன். அவர் நன்கு தெரிந்தவராக இருந்தாலும் எனது நாடக கருத்தைக் கொடுக்க தயங்கினேன். பிறகு அவர் கூறியது நம் நாட்டில் நாடகங்கள் விற்பனை ஆவதில்லை. பலர் படிப்பதில்லை என்றார். நான் அதை மனதில் ஏற்றுக் கொண்டு அந்நாடகக் கதையை, நாவல் கதையாக மாற்றி எழுதினேன்" என்று குறிப்பிடுகிறார்.

மேலும், நான் நாவல் யாருக்காக எழுதினேன் என்றால் "தமிழ்

மக்களுக்காக எழுதுகிறேன் எனப்பொதுவாகச் சொன்னாலும் சிறப்பாகத் தமிழ்நாட்டிலே சிந்தனை ஆற்றலுடனும் கற்பனை வளத்துடன் வளர விரும்புகின்ற இளைஞர்களுக்கும், குடும்பப் பெண்களுக்கும் எழுதுகிறேன் என்றார்.

மேலும், வாழ்க்கைய்யை வளப்படுத்திக் கொள்ளக் கலையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற கட்சியைச் சார்ந்தவன் நான். ஆகையினாலேதான் என் கதைகளில் கருத்தையும் சேர்த்து வருகிறேன் என்று கூறுவதன் வழி கலை என்பது வாழ்க்கைக்கும் பயன்படவேண்டும். அவ்வாறு பயன்படாத கலை சிறந்த கலையாக இருக்க முடியாது என்று குறிப்பிடுகிறார்.

நாவலின் சிறப்பு

டாக்டர் மு.வ அவர்கள் எழுதிய நாவல்கள் அனைத்துமே மிகவும் சிறப்புக்குரியதாகும். நாவலின் நடை, உத்திகள், பாத்திரப்படைப்பு, நாவலுக்குப் பெயரிடுதல் போன்ற அனைத்துமே இவரின் நாவலுக்குரிய சிறப்பாகக் கருதப்படுகிறது.

நாவலின் உத்திகள்

இவரது நாவல்களில் கதாபாத்திரம் பெரும்பாலும் தங்களைப் பற்றி தாமே கூறுவதாக அமைகிறது. செந்தாமரை, அந்தநாள் போன்ற நாவல்களில் இடம்பெறும் பாத்திரங்கள் தங்களைப் பற்றி தாங்களே கூறுவதாக அமைகின்றது.

கள்ளோ? காவியமோ என்ற நாவலின் கதை முழுவதும் மங்கையும் அருளப்பரும் கூறுவதுப்போலவே அமைகின்றது. மேலும் ஒரு நாவலில் இடம்பெற்ற பாத்திரங்கள் பிறிதொரு நாவலில் இடம் பெற்று அமையும். மு.வ.வின் துணைமைப்பாத்திரங்கள் கூட, ஒரு நாவல் முழுவதையும் கூறுவதாய் அமைகின்றன.

நாவலுக்குப் பெயரிடும் முறை

இளமையிலே தமிழ்மீது ஈடு இணையற்ற அன்பு கொண்டவர் அவர். ஆதலால் பெரும்பாலும் தனது நாவலுக்குத் தூய தமிழ்ப்பெயரே குறிப்பிடுவர். மேலும் நாவல்களில் இடம்பெறும் கதாபாத்திரங்களுக்கும் தூய தமிழ்ப் பெயர் வைப்பதே இவரின் சிறப்பாகும்.

நாவலின் மதிப்புகள்

மு.வ.வின் நாவல்கள் நாடகமாகவும், திரைப்படமாகவும் வெளிவந்து சிறப்பித்தது குறிப்பிடத்தக்கதாகும். இவரின் கள்ளோ? காவியமோ? என்ற நாவலைச் சிறப்பு மிகு புதினம் என்று சென்னை அரசு பாராட்டிப் பரிசு வழங்கியது. பாவை என்ற நாவல் லோகோபகாரி என்ற வார

இதழில் தொடர்கதையாக வந்தது. மேலும் அந்தநாள் என்ற நாவல் தமிழ் முரசு என்னும் பத்திரிக்கையில் தொடர்கதையாக வெளிவந்தது. அல்லி என்ற நாவல் டாக்டர் அல்லி என்றப் பெயரில் நாடகமாக நடிக்கப்பட்டது. இவ்வாறு மு.வ.வின் புதினங்கள் பெரும்பாலும் மிகச் சிறப்புப்பெற்று காணப்படுகிறது.

பிறமொழியில் மொழிபெயர்க்கப்பட்ட நாவல்கள்

மு.வ.வின் புகழ்மிக்க படைப்புகள் அனைத்தும் தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம், சிங்களம், ஆங்கிலம் முதலிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பெற்றமனம், அகல்விளக்கு, கயமை போன்ற நாவல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. கள்ளோ? காவியமோ? என்ற நாவல் சிங்களமொழியிலும், கரித்துண்டு இந்தி மொழியிலும், அகல்விளக்கு ர்'ய மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு பெரும்பாலும் பிறமொழிகளிலில் மொழிபெயர்க்கப்பட்ட எழுத்தாளர் என்ற பெருமைக்குரியவர் டாக்டர்.மு.வரதராசன் ஆவர்.

மு.வ.வின் பரிசுபெற்ற நாவல்கள்

மு.வ.வின் அகல்விளக்கு - என்ற நாவல் இந்திய ஜனாதிபதியின் சாகித்ய அகாடெமியின் பரிசினைப் பெற்றதாகும். கள்ளோ? காவியமோ? - என்ற நாவல் சென்னை அரசாங்கத்தின் பரிசுகளைப் பெற்றது. மேலும் கள்ளோ? காவியமோ? என்ற நாவல் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப் பத்திரங்களைப் பெற்ற சிறப்புக்குரியதாகும்.

முடிவுரை

மு.வ அவர்கள் பன்மொழிப் புலமை உடையவராவர். இவர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் கைதேர்ந்தவராய் விளங்கியவர். மேலும் தன்னுடைய வாழ்க்கைக்கு சிறந்த வழிகாட்டியாக காந்திஜி, திரு.வி.க, தாயுமானவர், வள்ளலார், விவேகானந்தர், திருநாவுக்கரசர் போன்றவரைக் கொண்டு தன் வழிகாட்டியாக அமைத்துக் கொண்டார். அனைவராலும் விரும்பக்கூடியவராவர். அன்பின் உருவமாகவும், எளிமை, தூய்மை, பொறுமை, விவேகம் போன்றவற்றை இவரின் மறுபெயராகக் குறிப்பிடலாம். இவரின் நாவல்கள் அனைத்தும் அனைவராலும் விரும்பி படிக்கக் கூடியவை. இளைஞர்களின் எதிர்காலத்தை மனதில் கொண்டு சிறந்த படைப்புகளைப் படைத்த பெருமைக்குரியவராக மு.வ.திகழ்கிறார் என்பது இவரின் படைப்புகளின் வழி புலனாவதை அனைவராலும் உணரமுடிகிறது.

உ. டாக்டர் மு. வ. -வின் மொழிநடை

முனைவர் இரா. தருமராசன்
உதவிப் பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
மீனாட்சி இராமசாமி கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, தத்தனூர் - 621 804

முன்னுரை

டாக்டர் மு.வ தமிழுலகிற்கு அளித்த நன்கொடை அளப்பிடற்கரியது. அவர் எழுத்துலகில் நாவல், சிறுகதை, நாடகம், கட்டுரை,இலக்கியத் திறனாய்வு, மொழிபெயர்ப்பு என பல்வேறு துறைகளில் பல்வேறு நூல்களை எழுதித் தடம் பதித்து தமிழுலகில் அனைவர் உள்ளத்திலும் நீங்காத இடம்பிடித்தவர். மு. வ. அவர்களின் படைப்பில் தனியான மொழிநடை, படிப்போர் உள்ளத்தை சலிப்புறச் செய்யாத கதை ஓட்டம், எளிமை, நுண்மை, சிறப்பு, நயம், இலக்கிய வளம், இனிமை இன்னோரன்ன பல நயங்களைக் காணலாம். அவருடைய மொழிநடையைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

எளிமை

எந்த இலக்கிய வகையாயினும் எல்லோருக்கும் புரியும் படியான எளிய இனிய மொழிநடை. எல்லோருக்கும் தெரியும்படியான வழக்குச் சொற்களை மிகுதியாக தேவையான இடங்களில் கையாளும் திறன் இவையாவும் அறிஞருக்குக் கைவந்த கலை. கற்றவர்கள் பயிலும் இலக்கியம் சார்ந்த பனுவலிலும், எழுத்துக் கூட்டிப் படிப்போரும் எளிதில் படித்து பொருளைப் புரிந்துணரும் வகையில் சொல் எளிமை, பொருள் எளிமை, அப்பொருள் உணர்த்தும் நயங்களும் எளிமை என தம் எழுத்தில் அனைத்து எளிமைகளையும் புகுத்தியவர். படிக்காத பாமரனும் எளிதில் கேட்டு புரிந்துணரும் நடை கொண்டது மு. வ- வின் எழுத்துக் கோர்வை.

நாகரிகம் வளர வளர மு.வ. வின் எழுத்து நடையும் வளரத் தொடங்கின. அவருடைய படைப்பிலக்கியங்களில் பெரும்பாலும் இன்பச்சுவையும், துன்பச்சுவையும் விரவியே காணப்படும். இதன் மூலம் மானிட சமுதாயத்திற்கு வாழ்க்கையானது இன்பமும், துன்பமும், துயரங்களும் விரவியது என்பதை உணர்த்துகின்றார். மேலும் அவர்தம் படைப்புகளில் இருவகை நடை காணப்படும். ஒன்று, கதைகளில் பயின்று வரும் கதைமாந்தர்களைப் பேசவிட்டு இவர் ஒளிந்திருப்பார். மற்றொன்று, கதைமாந்தர்களின் அங்க அடையாளங்களையும் செயல்பாடுகளையும் இவர் பேசிச் செல்வார். ஒரு சில படைப்பாளர்கள் இதில் ஏதாவது ஒரு உத்தியை

மட்டுமே கையாள்வர். ஆனால் மு.வ அவர்கள் இரண்டு உத்தியையுமே தம் படைப்பில் கையாண்டு கதையோட்டத்திலும் கருத்தோட்டத்திலும் எந்தவிதத் தடையும், நெருடலும் இல்லாமல் இலக்கியங்களை நடத்திச் செல்வார்.

மு.வ. திருக்குறளைப் பல நிலைகளில் ஆய்வு செய்தவர். ஆதலால் திருவள்ளுவரின் மொழிநடை அறிஞருக்கும் பொருந்தியிருந்தது. வள்ளுவர் எங்ஙனம் காமத்துப் பாலில், மேற்கண்ட இரு உத்தியையும் பயன்படுத்தியுள்ளாரோ அங்ஙனமே மு.வ-வும் தம் படைப்புக்களில் பயன்படுத்தியுள்ளார். மொழிநடை மட்டுமல்ல, கதை மாந்தர் பெயரும் எளிய தமிழ்ப் பெயரையேச் சூட்டி மகிழ்வார். உதாரணமாக 'பெற்ற மனம்' எனும் நாவலில் முனியம்மா, கந்தசாமி என்று இனிய தமிழ்ப் பெயரைச் சூட்டியிருப்பார்.

'அந்த நாள்' எனும் சிறுகதைத் தொகுப்பு படிப்போர் உள்ளத்தை வியக்கவும், சிந்திக்கவும், கருணை மலரும்படியான எளிய நடை கொண்டவை. அத்தொகுப்பில் வருகின்ற 'குணமாலை' எனும் சிறுகதையில், வைக்கோல் போரைக் கொளுத்தவும் உழவர்களுக்கு மனம் வந்ததே! சமைத்த சோற்றைச் சாக்கடையில் கொட்ட ஒரு தாய்க்கு மனம் வருமா? யார் கண்டார்கள்? வந்தாலும் வரும்! போர் வெறி யாரைத்தான் விடும்? நேற்று வாவ் நகரத்திலிருந்து நடந்து வந்த அந்த அம்மாள் சொன்னாள் அல்லவா? அடுப்பிலே கொதிவந்த சோற்றையும் பருப்புக் குழம்பையும் அப்படியே விட்டுவிட்டுக் கட்டின துணியோடு வீட்டை விட்டுப் புறப்பட்டு வந்துவிட்டாள் அல்லவா? என்ன செய்வாள் பாவம்! அந்நகரம் ஜப்பான்காரர் குண்டுக்கு அகப்பட்டுக் கொண்டது.

மேற்கண்ட சிறுகதை நடையில் ஆசிரியரே கேள்விகேட்டு, ஆச்சரியத்துடன் பதிலிறுப்பது போன்றதொரு உத்தி. சிலவிடங்களில் கேள்வி கேட்டு, அக்கேள்விக்கு விடை சொல்ல முடியாத நிலையில் சமுதாயத்தாரின் பார்வைக்குச் சென்று முடிவு கூறும் கலை மு.வ.- விற்கேயுரியது. கேட்போரும் பயிலுவோரும் புருவத்தை உயர்த்தும் வியப்பு பல இடங்களில் மேலிடும். ஆனால், மேற்சொன்ன சிறு பத்தியில் வந்துள்ள அனைத்து சொற்களுமே எல்லோரும் அறிந்த எளிமையான சொற்கள் தான். இத்தகைய எளிமைத்தன்மை அறிஞரின் படைப்பில் மிகுதி.

இனிமை

மு.வ. அவர்களின் படைப்பில் சொல் இனிமை, பொருள் இனிமை இருக்கும். எந்தெந்த இடங்களில் எந்தெந்த சொல்லை இடல் வேண்டுமோ அந்தந்தந்த சொல்லையிட்டு நடைக்கு இனிமை சேர்க்கும் உத்தி இவர்தம் படைப்புகளில் மிகுதி.

குறிப்பாக இலக்கிய வரலாற்றில் கம்பரையும் வான்மீகியையும் பற்றித் திறனாய்வு செய்து உரைக்கையில் பஞ்சவடியில் இருந்த சீதையை இராவணன் கவர்ந்து சென்றதை வால்மீகி சொன்ன முறை வேறு. கம்பர் சொன்ன முறை வேறு. இராவணன் சீதையைக் கைகளால் பற்றித் தூக்கிச் சென்றதாக வான்மீகி கூறுகிறார். தமிழ்ப் பண்பாட்டைக் கருதியும், தமிழ் மக்களின் மனத்தில் சீதைக்கு உயர்ந்த இடம் வாய்க்காமல் போகுமே என்று அஞ்சிய கம்பர், பர்ணசாலையில் இருந்த சீதையை அந்தக் குடிசை தரையோடு வருமாறு பெயர்த்து எடுத்துச் சென்று இலங்கையில் அசோகவனத்தில் சிறைவைத்தான். என்று எழுதுவதில் பர்ணசாலை என்று எழுதுவதற்கு மாற்றுச் சொல்லாக குடிசை என்று அழகு தமிழில் சுருக்கியெழுதும் நயம் இனிமை.

மக்கட் செல்வம் நிரம்ப உள்ளவனுக்குப் பொருட்செல்வம் இருக்காது. பொருட்செல்வம் மிகுதியாக உள்ளவனுக்கு மக்கட் செல்வம் இருக்காது. இது உலக இயல்பு. இத்தகைய தத்ரூபமான உண்மைகளைத் தமது கதைகளில் புகுத்தி கதைக்கு மேலும் இனிமை சேர்த்திருப்பார். இதனை 'குறட்டை ஒலி' எனும் சிறுகதையில் காணலாம்.

நுண்மை

டாக்டர் மு.வ. அவர்கள் எதையும் ஆழ்ந்தும் நுட்பமாக சிந்தித்து நோக்கும் நுழைபுலம் கொண்டவர். அவர்தம் படைப்புகளைக் கற்பார் உள்ளம் நெகிழ்ச்சி அடைவதோடு அறிவும் சிந்தையும் விளக்கமுறும். இதற்கு அவருடைய 'மொழி நூல்' என்னும் நூலைச் சான்றாகக் கொள்ளலாம். 'பெற்ற மனம்' என்னும் நாவலில் வீட்டு வேலை செய்து தன் மகனைப் படிக்கவைக்கும் முனியம்மாளின் வாழ்க்கைச் சூழலை நுணுகி அவள் படும் அல்லலை ஆசிரியர் சித்தரித்திருப்பார். ஒருவேளை சோற்றுக்கும் மகன் படிப்பு செலவிற்கும் அவள் படும் பாட்டை படிப்போர் உள்ளம் நெகிழ்ந்து கண்ணீர் மல்கச் செய்யும் கதை நுட்பம் கொண்டவை. முதலாளி வேலையை அதிகமாக வாங்கிக் கொண்டு அவ் ஏழை முனியம்மாவிற்குக் குறைந்த கூலி தரும் அவலம். அக்குறைந்த கூலியைக் கூட ஒழுங்காகக் கொடுக்காத கொடுமை. அதனால் அவள் தன் குழந்தையைப் பள்ளிப் படிப்பிலிருந்து நிறுத்தும் சமூகச் சீர்கேடு. இத்தகைய முதலாளி தொழிலாளியைச் சுரண்டும் அநீதி நெஞ்சைக் கொதிக்கச் செய்வன.

மேலும், 'குறட்டை ஒலி' எனும் சிறுகதையில் தென்பால் குடியிருப்பில் வசிக்கும் ஏழைக் குடும்பத்தின் மீது எதிர் பகுதி பணக்காரர் வீட்டுக் குடும்பம் முகம் சுளித்து அக்கம்பக்கத்தினரிடம் புகார் சொல்லும் நிலையை இக்கதையில் ஆசிரியர் நுட்பமாக அணுகி இருக்கின்றார்.

'வாணி' எனும் சிறுகதையில் ஆண் மகன் ஒருவனைப் பற்றிப் பேச்சில் குறிப்பிடுவதற்குக் கூட பெண்கள் தயங்கவேண்டியிருக்கின்றது. அதிலும் கன்னிப் பெண் இன்னொருவனைப் பற்றி வாய்திறந்து பேசுவதற்கு உரிமையில்லை. பேசினால் அவளுக்கும் அவனுக்கும் உறவு இருப்பதாக உலகம் முடிபோட்டுவிடுகின்றது என்ற கதைப் பகுதியில் சமூகத்தின் பார்வையை இக்கதையின் மூலம் ஆசிரியர் சித்தரிக்கின்றார். சாலையோரம் அண்ணன் தங்கை, கல்லூரி மாணவன் ஆசிரியை நின்று பேசிக்கொண்டாலும் கூட இச்சமுதாயம் அவர்களைத் தவறாகத்தான் பார்க்கும். இத்தகைய சமுதாய அணுகுமுறையினைக் கதைகளின் வாயிலாக சமுதாயத்திற்கே உணர்த்தும் பாங்கு படைப்பாளரின் நுண்ணிய சிந்தையின்பாற்படும்.

வந்த சொல்லே மீண்டும் வராமை

மு.வ- வின் எழுத்தில் ஒருமுறை பயின்று வந்த சொல் மீண்டும் வந்து வாசிப்பாளரைச் சலிப்படையச் செய்யும் என்ற பேச்சிற்கு இடம் இருக்காது. எவ்விலக்கிய வகையாயினும் வந்த சொல் திரும்பத்திரும்ப வருதல் இல்லை. புதியப் புதிய சொல்லாகவே இருக்கும். அச்சொற்களும் எளிமைத் தன்மை கொண்டதாகவே அமைந்திருக்கும். சிலருடைய எழுத்திலும் பேச்சிலும் மாறாக, ஆகையால், இவ்வாறு, போன்ற இம்மாதிரியான சொற்கள் தொடர்ந்து வந்து மொழி நடையில் விரிவுபடுத்த வந்த சொற்கள் இவை. இவ்வகையான சொற்களும் சில வேளைகளில் வாசிப்பாளரைச் சலிப்புக்கும் வெறுப்பிற்கும் ஆளாக்கும். ஆனால் மு. வ - வின் எழுத்துக்கள் அப்படிப்பட்டதல்ல. ஒரு கதையை எத்தனை முறை வாசித்தாலும் சலிப்போ, வெறுப்போ கொள்ளச் செய்யாத மொழிநடை அமைப்பைக் கொண்டவை.

முடிவு

வள்ளுவர் வாய்மொழி எங்ஙனம் எல்லா சமுதாயத்தினருக்கும் மதத்தினருக்கும் பொருந்தும்படியாகவும் ஏற்றுக் கொள்ளத் தக்கனவாகவும் இருக்கிறதோ அங்ஙனமே மு. வ- வின் எழுத்துக்கள் எல்லா சமூகத்தினரும் ஏற்றுக் கொள்ளும் படியான சமுதாயச் சிந்தனை படைத்தவை. யாரையும் புண்படுத்தாமல் நேரடியாக சமுதாயச் சிக்கலைச் சாடுபவை் எடுத்துரைப்பவை. அவருடைய மொழிநடையில் மேலும் பல பண்புகளும் நயங்களும் மண்டிக்கிடக்கின்றன. அவற்றையெல்லாம் விரிவாக அலசி ஆராய்ந்தால் பல பனுவல்கள் எழுதலாம்.

உஉ. 'குறட்டை ஒலி' சிறுகதையில் சமூகச் சிக்கலும் தீர்வுகளும்

க. இராமமூர்த்தி
விரிவுரையாளர்
தமிழாய்வுத்துறை
மீனாட்சி இராமசாமி கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, தத்தனூர் - 621 804

முகப்புரை

குறட்டை ஒலி சிறுகதையில் இருவேறு சமூக நிலைக் கலன்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. ஒன்று பொருளாதாரத்தில் விஞ்சியது, மற்றொன்று பொருளாதாரத்தில் நலிந்த குடும்பம். பொருட்செல்வம் இல்லா குடும்பத்தில் மக்கட்செல்வம் இல்லை. இந்த இருவேறு படிநிலை ஏற்றத்தாழ்வுகள் தொன்றுதொட்டு சமுதாயத்தில் இருந்து கொண்டுதான் வருகிறன்றன. இச்சிறு கதையில் சமூகச் சிக்கலையும், அச்சிக்கலுக்குண்டான தீர்வுகளையும் மறைமுகமாகச் சுட்டுகின்றார். சமுதாயச் சிந்தனையோடு தொடர்புடைய இத்தீர்வுகளை ஆய்ந்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கம்.

சமூக ஏற்றத்தாழ்வு

உறக்கத்தின் போது மனிதன் விடுகின்ற குறட்டை ஒலியை மையப்படுத்தி டாக்டர் மு.வ. கதைக்கு மூலமாகக் கொண்டு தம் கற்பனைக்கு விருந்தாக்கி சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகளை இச்சிறுகதையின் மூலம் பதிவுசெய்கிறார். சமுதாயப் பங்களிப்பில் அறிவியல் முன்னேற்றமும் பொருளாதார முன்னேற்றமும் ஏற்பட்டாலும் அந்தந்த சமூக முன்னேற்றத்தில் மாற்றங்களும் தொய்வுகளும் ஏற்றத் தாழ்வுகளும் இருந்து வருகின்றன. இதற்குரிய காரணத்தை ஆசிரியர் எண்ணம் போல் வாழ்வு என்ற முதுமொழிக்கிணங்க, கதையின் போக்கை முடிக்கின்றார். ஏழை, பணக்காரன் எனும் ஏற்றத்தாழ்வு அவனவன் செய்கைகளினால் ஏற்படுகிறது என்பதை ஏழைப்பெண் நாய்க்குட்டிகளுக்கு இரங்கி தாயில்லாது பசியில் வாடும் அக்குட்டிகளின் மீது அன்பு கொண்டு இரக்கம் காட்டும் உணர்வு வெளிக்காட்டுகிறது. இதனால் ஏழைகளுக்கு இயல்பாகவே இரக்க குணம் உண்டு. பணக்காரர்களுக்கு இத்தகைய குணம் மலர்வதில்லை என்பதை ஏழை, பணக்காரன் என்ற அந்த இருவேறு சமூகத்தினரும் மேற்கொள்கின்ற செயல்பாடுகளிலிருந்து ஆசிரியர் உணர்த்துகின்றார்.

கதையாசிரியர் படைத்த இருவேறு சமூக பங்களிப்புகள் ஒரே மாடியில் கீழ்ப்பகுதியில் குடியிருக்கும் எதிர் எதிர் இருகுடும்பச் சூழல்கள்

மற்றும் வாழ்க்கைச் சூழல்களைப் பிரதிபலிப்பதோடு, மூன்றாம் மனிதன் என்று சொல்கிறோமே அந்தமாதிரி மூன்றாம் குடும்பச் சூழலை ஆசிரியர் படைக்கும் நோக்கம் பருந்துப் பார்வை போல ஆசிரியர் தன் உள்ளத்தை நிலை நிறுத்துகின்றார். கீழ்த்தளத்தில் வசிக்கின்ற அந்த இரண்டு குடும்பங்களும் எதிர் எதிரே அவர்கள் வசித்தாலும், தினமும் காலை எழுந்தவுடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்ளும்படியாக அருகருகே வசித்தாலும் அவ்விரு குடும்பங்களுக்கும் பேச்சு வார்த்தை கிடையாது. இதற்கிடையில் கூட்டுக்குடும்பமாக வாழும் தென்பால் வசிக்கும் அவ் ஏழைக்குடும்பம் மேல் வடபகுதியில் வாழும் பணக்காரர் கொண்ட காழ்ப்புணர்ச்சிக்கு அந்நாய்க் குட்டிகளின் தொல்லை இரவு முழுதும் நீடித்ததால் என்று கூடச் சொல்லலாம்.

சகிப்புத்தன்மையின்மை

சமுதாயத்தில் வசிக்கின்ற எல்லோருக்கும் இத்தகைய தன்மை இருக்கும் என்று கூறமுடியாது. தான் விடும் குறட்டை ஒலியைக் கேட்டு சகித்துறங்கும் மனிதன் அண்டை வீட்டார் போடும் சத்தத்தையும், பிற உயிர்கள் இடும் சத்தத்தையும் அவர்களால் கேட்டு உறங்க முடியவில்லை. இதனால் தன் நிம்மதியே போய் விட்டதாகவே கருதுகின்றனர். இத்தகைய சகிப்புத் தன்மையில்லாதவர்கள் பிறரோடு சண்டை போட்டே பகையை உருவாக்கிக் கொள்கின்றனர். கீழ்த்தளத்தில் வடக்கு வீட்டுத் தம்பதிகள் செல்வச் செழிப்பில் இருந்தாலும் கூட, அவர்களுக்குக் குழந்தை இல்லை. தங்களுக்குள்ள குழந்தையில்லா துன்பச்சுமையைக் குறைக்க அவ்ஏழை வீட்டுக் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சமாட்டார்கள். அப்படிக் கொஞ்சுவதை அவர்கள் தங்கள் கௌரவக் குறைவாகவே கருதியிருக்க வேண்டும். இல்லையென்றால் பேச்சுவார்த்தையே இல்லையென்றால், அவர்களுடைய எண்ணத்தைப்பற்றி மேலும் எண்ண வேண்டியதில்லை. சமுதாயத்திற்குள்ளேயே இத்தகைய ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தி வாழத் தலைப்படுதல் சமூகச் சிக்கலாகவே ஆசிரியர் காட்டுகின்றார்.

தெற்கு வீட்டாரின் பிரச்சனைகளை வடக்கு வீட்டார் மேல் குடியிருப்பில் வசிக்கும் மூன்றாம் நபரிடம் அடிக்கடி மாடிப்படியேறி புகார் கூறி வருகின்றனர். புகாரைக் கேட்பவரும் சொல்பவரும் பொருளாதாரத்தில் வசதிபடைத்தவர்கள். இனம் இனத்தொடு சேரும்.பணம் பணத்தோடு சேரும். என்று சொல்வது போல இருகுடும்பத்தாரின் குடும்பச் சூழலை ஆசிரியர் கதையின் ஓட்டத்தில் சித்தரித்துக் காட்டுகின்றார்.

தீர்வுகள்

குழந்தைச் செல்வம் இல்லாத பொருளாதாரத்தில் மிகுந்தவர்களுக்கு குழந்தைகள் மீது ஆசை இருக்கிறதே தவிர. எதிர்

வீட்டு ஏழைக்குழந்தைகளுக்குப் பால்பவுடர், பிஸ்கட் போன்றவைகள் வாங்கிக் கொடுத்து உதவ வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடத்து வரவில்லை. இதனால் அவர்களுக்குக் குழந்தை பாக்கியம் இறைவன் கொடுத்துவைக்கவில்லை என்று சமுதாய உணர்ந்துவிட்டாலும் அம்மாதிரியான தம்பதிகள் எப்போது உணருவார்களோ என்ற சிக்கலுக்குரிய தீர்வை ஆசிரியர் மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிறார்.

அந்த ஏழை வீட்டு நாய் ஐந்து குட்டிகளை ஈன்று விட்டு மூன்றாம் நாள் அதனைக் காணவில்லை. பணக்காரகளுக்கு அந்நாய்க்குட்டிகளின் மீது ஆசை, பகற்பொழுதில் ஜன்னல் ஓரம் அமர்ந்தபடியே அக்குட்டிகளின் அழகை இரசிப்பர். அதில் வெள்ளை நிறக் கெடாக்குட்டி ஒன்றையெடுத்து வளர்க்கலாம் என்ற ஆசை எழுகிறது. ஆனால் இரவுப்பொழுதில் தாயில்லாக் குட்டிகள் பசியால் கத்தும் ஓலத்தைக் கேட்டு அவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. முகம் சுளித்து மூன்றாம் நபரிடம் ஏழைவீட்டுக் காரர்களின் தொல்லைகள் தாங்கமுடியவில்லை என்று அடிக்கடி புகார்கள் அரங்கேறுகின்றன. நாய் நன்றியுள்ள பிராணி என்று அக்குட்டிகளுள் ஒன்றை வளர்க்க ஆசை இருக்கிறது. ஆனால், அவைகள் தாயில்லாது பசியால் கத்தும் ஒலியைக் கேட்டு அவர்களால் சகித்து வாழமுடியவில்லை. அதனாலேயே அப்பணக்காரர்கள் வீட்டில் நிறைய நாய் பொம்மைகளும் பேசா குழந்தை பொம்மைகளுமே அலமாரிகளில் (அடுக்குகள்) நிறைந்துள்ளன.

ஏழை ஏழையாக

இந்த சமுதாயத்தில் ஏழை ஏழையாகவே இருக்கின்றான். பணம் படைத்தவனிடம் மென்மேலும் செல்வம் சேர்கின்றன. பட்ட காலிலேபடும் கெட்ட குடியே கெடும் என்பது போல சிலருடைய வாழ்க்கைச்சூழல் சோதனைக்குள்ளாகின்றன. நாய்க்குட்டிகளின் ஏக்கத்தையும் பசித்துன்பத்தையும் ஏழைக்குடும்பம் உணர்ந்து, எப்படியாவது தாய்நாயைத் தேடிக்கண்டுபிடித்து அதன் குட்டிகளோடு சேர்க்க எண்ணுகிறது. முனிசிபாலிட்டிக்காரர்கள் பிடித்துச் சென்றிருந்தால் நாளை எப்படியாவது பணம் கட்டி மீட்டுவந்து அதன் குட்டிகளைக் காப்பாற்ற ஏழை மனம் விழைகிறது. அதனால் இரவு முழுதும் தூங்காது விழித்திருக்கின்றனர். கைக்குழந்தை வைத்துள்ள அவ்ஏழைப்பெண்? அவள் பிள்ளைகள், வயதானப் பாட்டி என அனைவரும் அந்நாய்க்குட்டிகளின் பசியை எப்படிப் போக்குவது என்று எண்ணுகின்றனர். நேரம் ஆக ஆக தன்பிள்ளைகள், கணவன், பாட்டி என அனைவரும் உறங்கிவிட்டனர். ஏன்? ஏதிர் வீட்டுப்பணக்காரக்குடும்பமும் எல்லா ஜன்னலையும் இழுத்து மூடிவிட்டு உறங்குகிறார்கள். அந்த நள்ளிரவில் நாளைந்து குழந்தைகளை ஈன்ற தாய்மனம் உறங்காது மண்ணெண்ணை விளக்கை ஏற்றி ஒரு கொட்டாங்

குச்சியில் கறந்து பஞ்சைத் தொய்த்து அந்நாய்க்குட்டிகளை உறங்கவைக்கின்றாள். என்னே தாய்ப்பாசம். இக்காட்சியை வடக்கு வீட்டுக்காரர் குட்டிகளின் ஓலம் அடங்கியதைக் கேட்டு ஜன்னலைத் திறந்து ஒளிந்து பார்க்கின்றனர். இக்காட்சியைக் கண்ட அவர்கள் உள்ளம் என்று இரங்குமோ தெரியவில்லை.

சமுதாயம் மேடு பள்ளத்தைப் பார்த்து இயல்பு என்று ஒதுங்கிவிடாமல் அவ் ஏற்றத்தாழ்வுகளைச் சமன் செய்து சமத்துவத்தையும் ஒருமைப்பாட்டுணர்வையும் ஒற்றுமையினையும் காணவேண்டும். அப்பொழுதுதான் சமுதாயத்தில் ஒவ்வொரு தனிமனிதனும் தன் குறட்டை ஒலி பிறர் உறக்கத்திற்குப் பெரிய இடையூறு என்று உணரத் தலைப்படுவார்கள்.

23. மு. வ. -வின் புனைவுகளில் குறிப்புப் பொருள்

முனைவர். மீ. அஸ்வினி கிருத்திகா
தமிழ்த்துறை விரிவுரையாளர்
சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
பெரம்பலூர்-1

ஒரு படைப்பாளியை இனங்கண்டு கொள்ளத் துணை நிற்கும் தனித்தன்மைக் கூறுகளின் தொகுதியே மொழி.

மிட்டில்டன் மோரி

இலக்கியப் படைப்புக்கள் ஒவ்வொன்றும் ஓர் இடம், ஒரு பாத்திரம், ஒரு சூழல் போன்றவற்றுள் ஏதாவது ஒன்றினைப் பற்றி பேசும். இதில் படைப்பாளி தன் கருத்தினை வெளிப்படுத்துவதற்கு மொழி என்னும் கருவியைப் பயன்படுத்துகின்ற முறையே மொழிநடையாகும். தமிழ் இலக்கியத்தில் குறிப்புப் பொருள், உள்ளுறை, படிமம், இறைச்சி போன்றவை மொழி வெளிப்பாட்டு உத்திகளாக இடம் பெற்றுள்ளன. மொழி வெளிப்பாட்டுத்திறன் அடிப்படையில் படைப்பாளியின் ஆளுமைத்திறனைக் கண்டறியலாம்.

குறிப்புப் பொருள்:

ஒரு பொருள் மற்றொரு பொருளைக் குறித்து வரும் அதே சமயத்தில், பொருள் புலப்படுத்துவதில் தனிச் சிறப்புடையதாய் விளங்கும் என்பது அறிஞர் ரெனிவெல்லாக் கருத்து. இக்கருத்தின் அடிப்படையில் மு.வ தன் புனைவுகளில் குறிப்புப் பொருள் என்னும் உத்தியைக் கையாண்டுள்ள நிலையே இங்கு ஆராயப்பட உள்ளன.

மு.வரதராசனாரின் புனைவுகளில் பதின்மூன்று நாவல்களும், இரண்டு சிறுகதைத் தொகுதிகளும் அடங்கியுள்ளன. இப் புனைவுகளின் குறிப்புப் பொருள் மூலம்,

புனைவின் கரு விளக்கப்படுதல்

கதைமாந்தர்களின் குணநலன்கள்

சமுதாயக்கருத்து

ஆகிய மூன்று அடிப்படைக் கருத்தினை விளக்குவதற்காகக் குறிப்புப் பொருளைப் பயன்படுத்தியுள்ளார். இவை,

புனைவுத் தலைப்புக்கள்

கதைமாந்தர்களின் பெயர், கூற்று

சமுதாயக்கருத்து

ஆகியவற்றின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

புனைவுத்தலைப்புக்கள்

மு.வ கதையின் கருவினைக் கதைப்பாத்திரங்களின் மூலமாக விளக்குவதற்கு முன் கதையின் தலைப்பினையே குறிப்புப் பொருளாக்கியுள்ளார். இதனை தன் நாவல்களில்,

உலகம் பெண்ணைக் கள்ளாக நினைத்து மயங்கும் நிலையையும், காவியமாக்கி இறை நிலைக்கு கொண்டு சேர்க்கும் நிலையையும் கருவாகக் கொண்டு நாவலுக்குரிய தலைப்பினைக் 'கள்ளோ காவியமோ' என பெயர் சூட்டியுள்ளார்.

வயது முதிர்ந்தவருக்குக் குடும்பச்சூழல் காரணமாக இரண்டாந்தாரமாக வாழ்க்கைப் பட்ட பெண், தன் காதலனைச் சந்தித்தப் போது வழி தவறிப் போகும் அந்த நிகழ்வானது நெஞ்சை முள்ளாகக் குத்தும் நிலையையே 'நெஞ்சில் ஒரு முள்' - இல் படைத்துக்காட்டியுள்ளார்.

பித்தளை விளக்கு ஒளி விட்டு, எரிந்து சிறிது நேரத்தில் மங்கும் தன்மையுடையது. ஆனால் அகல் விளக்கு நேராக சுடர்விட்டு எரியும் விளக்கு என்பதை நல்லவர்கள், கெட்டவர்கள் என்ற மனிதர்களின் வாழ்க்கையினைக் குறியீடாக்கி 'அகல் விளக்கு' நாவலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏழையாய் நிற்கும் ஓவியனின், வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவது அவன் கையிலிருக்கும் 'கரித்துண்டு தனிமனிதனது வாழ்வு பலரும் போற்றத்தக்க வாழ்வாக இல்லாவிட்டாலும் பலருக்கும் படிப்பினையாக அமையும் என்பது' வாடா மலர்' வாழ்க்கையின் குறிப்புப் பொருளாக அமைகின்றது.

பகலில் மலரும் 'செந்தாமரை' காதலில் ஏற்படும் சிக்கலையும், இரவில் மலரும் 'அல்லி' காமச்சிக்கலையும் கருவாகக் கொண்டுள்ளன.

இதைப்போன்று சிறுகதைகளில் வடபகுதியினரின் செல்வநிலையும் தென்பகுதியினரின் வறுமை நிலையையும், குறட்டை ஒலியில் படைத்துள்ளார். பெரும்பாலான கதையில் ஏழை பணக்காரன் வேறுபாடு களையப்பட வேண்டும் என்ற சமுதாய நிலையை உணர்த்த 'குறட்டை ஒலி' இடம்பெற்றுள்ளது.

ஒவ்வொரு கதையிலும் வறுமையை மையமாக்கி குறையுடைய அரசியல் அமைப்பைச் சாதி சமூக அமைப்பிலிருந்து ஏழை மக்களுக்கு எப்போது விடுதலை கிடைக்கும் என்று வினா எழுப்பும் நிலையில் 'விடுதலையா?' கதையின் தலைப்பு இடம் பெற்றுள்ளது.

பெரும்பாலான கதைகளில் கதையின் முடிவிலும் தலைப்பு இடம் பெற்றுள்ளது. உதாரணமாக, 'ஒழிந்தான் கயவன்' (கயமை)

"என் படுக்கைக்கு வந்து படுத்தேன். ஏதோ சுமை இறங்கியது போன்ற உணர்ச்சி என் மனத்தில் இருந்தது. பெருமூச்சு விட்டுக் கை கால்களை நீட்டினேன். ஏப்ப ஒலி வந்து அதே திசையிலிருந்து குறட்டை ஒலி வந்து கொண்டிருந்தது" (குறட்டை ஒலி)

இவ்வாறாக, மு.வ புனைவுகளின் தலைப்புக்கள் புனைவின் கருப்பொருளைக் குறிப்பால் உணர்த்துவதை உணர முடிகின்றன.

கதைமாந்தர்கள்

கந்தமாந்தர்கள் பெயர்கள் குறிப்புப் பொருளாக அமைந்து, அவர்களது குணத்தினையும் விளக்கும் நிலையை சந்திரன், காஞ்சனா, செந்தாமரை, வசீகரம் ஆகிய கதைமாந்தர்கள் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார். உதாரணமாக நிலவு பொலிவாக தோன்றினாலும், களங்கம் கொண்டிருப்பது மாதிரியான குணநலனுடையவனுக்கு 'சந்திரன்' என்னும் பெயரும், சேற்றில் பிறந்தாலும் சிறப்புடைய 'செந்தாமரை' தாழ்குலத்தில் பிறந்து நல் ஒழுக்கத்துடன் வாழும் பெண்ணின் பெயராக அமைந்துள்ளன. மேலும் பெண்மையை உணர்ந்தவர்களுக்கு மங்கை, சாவித்திரி முதலான பெயர்களும் இடம் பெற்றுள்ளன. இலக்கியங்களை, இலக்கியப் பாத்திரங்களையும் கதைமாந்தர்களாக்கி, மாணிக்கவாசகர் (கள்ளோ காவியமோ), மணிமேகலை(அகல்விளக்கு), இளங்கோ (செந்தாமரை) என்று பதிவு செய்துள்ளார். இவ்வாறாக, மு.வ வின் இலக்கிய நினைவுகளும், சமூக மரபுகளும் சார்ந்தே குறிப்புப் பொருளைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

சமுதாயக்கருத்து

மு.வ நடத்திய எளிய வாழ்க்கையும், உயர்ந்த சிந்தனையும் அவர் காந்தி, வள்ளலார், தாயுமானவர், திரு.வி.க ஆகிய அறிஞர்களிடம் கொண்ட ஈடுபாட்டினைப் பெரும்பாலான புனைவுகளில் ஏதாவது ஒரு பாத்திரம் அறங்கூறும் நடுநிலை அறிவோடு அமைவது குறிப்பிடத்தக்கது. கரித்துண்டு, கயமை நாவல்களில் காந்தியக் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன.

பெரும்பாலான எட்டு நாவல்களில் பொதுவுடைமைக் கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன. உதாரணமாக,

"சேர்த்து வைக்கக் கற்றுக் கொண்டு அதன் சுவை கண்ட பிறகு மான் செந்நாயாக மாறி விடுகின்றது. மற்ற மான்களின் இரத்தத்தை உறிஞ்சி சுவைக்கின்றது"

(கரித்துண்டு நாவலில் - குமரேசன் கூற்று)

படைப்பாளரான மு.வ சமூக அக்கறையுடைய அறக்கருத்துக்களைப் புனைவுகளில் விளக்கும் போது வெளிப்படையாகவும், இலைமறைவாகவும் பதிவு செய்துள்ளார். இலக்கிய நயத்தோடு குறிப்புப் பொருளை விளக்கியிருக்கும் அவரது புனைவுகள் அழகியல் உணர்வோடு அறநிலையில் சிறந்து விளங்குகின்றன.

உடி. மு. வ- வின் மண் குடிசை காட்டும் சமூகம்

திருமதி க. காயத்ரி
தமிழ்த்துறை விரிவுரையாளர்
சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
பெரம்பலூர்-12.

முன்னுரையாக

இன்றைய உலகில் இன்றியமையாத இலக்கிய வகைகளுள் நாவலும் ஒன்றாகும். கவிதை, காவியம், நாடகம் என்பன கலைவடிவம் என்று கருதப்படுகிறது. அதுபோலவே, நாவலும் கலை தான் என்றனர் சிலர். வேறு சிலரோ நாவலுக்கு கலை மதிப்பு தர அடியோடு மறுத்து வந்தனர். ஆனால் இருபதாம் நூற்றாண்டில் நாவலும் ஓர் இலக்கிய கலைக்கு உதவும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. நாவல் வெவ்வேறு தன்மைகளைக் கொண்டிருந்தாலும் கலைக்குரிய அடிப்படை பண்புகளைச் சொல்லாமல் இல்லை. இது பற்றி பரந்த எல்லை உடையதாய் பன்முகப் போக்கு உடையதாய் வளர்கிறது. ஆதலின் ஈது கவிதையை விடவும் தவிர்க்க முடியாத விரும்பி ஏற்றுக் கொண்டே தீர வேண்டிய கலை வடிவம் ஆகிறது.

சமுதாயச் சிந்தனை

நம் நாட்டில் மூடப் பழக்க வழக்கங்கள் எவ்வாறு வாட்டி வதைத்துக் கொண்டு இருக்கின்றன என்றும், அவற்றிற்கு எல்லாத் தரப்பு மக்களும் எவ்வாறு அடிமைப்பட்டு கிடக்கின்றன என்றும் அவை நமக்கு ஏற்படுத்திய பாதிப்பையும், தாக்கத்தையும் இந்நாவல் நமக்கு தெளிவாக விளக்குகிறது.

பழங்காலம் தொட்டு தற்காலம் வரை துறவிகள் என்று பலர் இருந்தனர். அவரகள் மக்களுக்கு செய்யும் தொண்டுகள் கடமையாகக் கருதி செய்து வந்தார்கள். தற்போது உள்ள சில துறவிகள் மக்களை ஏமாற்றும் குணம் படைத்தவர்களாகவும், நிறைய பொருள் பதவி கிடைக்க வேண்டியும் ஆசைப்படுகிறார்கள் என்பதை மு.வ வின் வரிகளில் நாம் காண்போம்.

மெய்யுணர்வு என்று சொல்லி துறவிகள் சிலர் வாழ்க்கையை வெறுக்கும் படி செய்கிறார்கள். நானும் அப்படி வெறுத்த காலம் ஒன்று இருந்தது. அது மாறி விட்டது. குருவாக வருகிற சிலர் காலில் விழுவதுகாணிக்கை தருவது முதலான சடங்குகள் முதலியவற்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்வாறு மூட நம்பிக்கைகள் ஏழை முதல் பணக்காரர்கள் வரையிலும், படித்தவர்கள் முதல் படிக்காத பாமர மக்கள்

வரையிலும் அனைவரையும் விட்டு வைக்காமல் அனைவரையும், பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. மேலும் நம் மக்கள் பண்டிகை காலங்களிலும் திருவிழா காலங்களிலும் மூட பழக்கவழக்கங்களுக்கு எவ்வாறு அடிமைப்பட்டு சிக்கித் தவிக்கின்றனர் என்பதை ஆசிரியர் விளக்கும் விதமாக, "ஒரு திருநாள் - பண்டிகை வருகிறது அன்றைக்கு வீடு முழுவதும் தூய்மை செய்யலாம் எளிமையிலேயே தூய்மையைக் காணலாம். அமைதியாக நல்ல நூல்களைப் படித்து பெரியோர்களின் கருத்துக்களில் மூழ்கலாம். கடவுளையும், அவருடைய படைப்பின் அருமையையும் சிந்திக்கலாம். ஆனால் ஏழு, எட்டு தின்பண்டங்களைச் செய்து அவற்றைக் கடவுளுக்குப் படைத்தால், கடவுள் மகிழ்கின்றார் என்று எண்ணுவது மூட பழக்கம் அல்லவா? தின்பண்டங்களுக்கும் கடவுளுக்கும் தொடர்பு என்ன?" என்று மக்களின் அறியாமையைப் பற்றி கடுமையாகச் சாடுகின்றார்.

இரட்டை வேடம்

மக்களுள் பலர் எவ்வாறு இரட்டை வேடம் போடுகின்றனர் என்றும, தான் பின்பற்றுவது ஒன்றாகவும், மக்களுக்கு போதனைச் செய்வது வேறொன்றாகவும் இருக்கிறது என்பதை விளக்கும் விதமாக, "இங்கே கற்பின் பெருமையை மாலையில் இரண்டு மணிநேரம் பேசி விட்டுப் பிறகு வேசி வீட்டை நாடுகிறவர்களைப் பார்க்கிறோம். சாதிகள் இல்லையடி பாப்பா" என்று உருக்கமாகப் பாடி விட்டு மற்றவர்களை வேறு சாதியர் என்று வெறுப்பதை இங்கு பார்க்கிறோம். கிரகணம் என்பதை சந்திரன் நிழல் பூமியின் நிழல் என்று படித்து விட்டு ராகு என்றும் கேது என்றும் பாம்புகள் வானத்தில் திரிவதாகவும் நம்புகிறோம் என்று மண்குடிசையின் மூலம் அறியாமையை விளக்குகிறார்.

நம் நாட்டில் பல கோடி மக்கள் உண்ண உணவு இன்றியும், உடை இன்றியும் வறுமையில் வாடிக் கொண்டு இருக்கிறார்கள். வசதி படைத்த மக்கள் தான் சாப்பிட்ட சாப்பாடு செரிக்கவில்லை என்றும், தமக்கு பசி எடுக்கவில்லை சொல்லிக் கொண்டு மருத்துவரிடம் ஆலோசனைக் கேட்டும் மக்கள் எவ்வளவோ பேர் நம் மத்தியில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். மேலும் வசதி படைத்தவர்கள் தாம் உண்ணும் உணவு போக மீதி உணவுகளைக் கீழே கொட்டும் ஓர் அவல நிலையை நாம் நேரில் பார்த்து இருக்கிறோம். ஒரு வேளை உணவு கூட இல்லாமல் வயிறு சுருங்கி உடல் மெலிந்து ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் மக்களும் நம் மத்தியில் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள் வசதி படைத்தவர்கள் மட்டும் நிறைய படிக்க முடியும் ஏழ்மையில் சிக்கியவர்கள் படிக்க முடியாமல் வாழும் நிலையை மு. வ எடுத்துக் கூறும் விதமாக குல்மார்க் என்னும் இடத்தில் குதிரை செல்லும் பாதை ஜுப் வண்டி

போகக் கூடியது. அகலமானது அந்தப் பாதையில் அங்கங்கே எட்டு ஒன்பது வயதுள்ள சிறுமியர் சாணி பொறுக்கிக் கொண்டிருந்தனர். குதிரைகள் சாணம் இட்டு ஓட அவற்றின் பின் போட்டுயிட்டு ஓடி வந்து சாணத்தைப் பொறுக்கினர். அழுக்கும் கந்தலுமான அவர்களின் உடைகளும் அந்த அழகை மாசுபடுத்த முடியவில்லை பள்ளியில் படித்து ஓடி ஆட வேண்டிய சிறுமியர்கள் இப்படி குதிரைக்குப் பின்னால்திரியும் காட்சியைக் கண்ட பிறகு. முகமுடியுடன் பல இளம் பெண்கள் வருவதைக் கண்டேன். அவர்கள் உயரந்த உடை உடுத்தி ஆடம்பரமாக விளங்கியதையும், புத்தகங்கள் கையில் ஏந்தியதையும் கண்டேன். குதிரைக்காரனைக் கேட்ட போது அவன் ஒரு கட்டடத்தைக் காட்டி அந்த கல்லூரியில் படிக்கிறார்கள் பணக்காரப் பெண்கள் என்றான் வறுமையும் செல்வமும் எப்படி அறியாமையையும், அறிவையும் வழங்கி வரும் கல்வியின் நிலையைக் கண்டு வருந்தினேன் என்று கூறும் போது நம் கண்ணையும் கலங்க வைத்து விடுகின்றது.

முடிவுரை

இன்றுள்ள சமுதாயம் மண்குடிசை போன்றது அதில் எலிகள் வளைத்தோண்ட முடிகிறது. பெருச்சாலிகள் கடைக்காலையே தோண்டுகிறது. இவை எல்லாம் சேர்ந்து குடிசையை பாழாக்க முனைகிறது. மண்குடிசையாக உள்ள வரை இவைகளைத் தடுக்க முடியாது. சமுதாயம் அறநிலையில் திரிந்தும். மூடநம்பிக்கையில் ஆழந்தும் காணப்படுவதைச் சுட்டிக் காட்டும் மு.வ சமூக அக்கறையோடு அவற்றைச் சாடி சமூக விடுதலைக் குறித்த விழிப்புணர்வை தன்னுடைய நாவலில் முன் வைத்துள்ளார்.

25. மு. வ. வின் நாவல்களில் கதை மாந்தர்கள்

கி.க.கோவிந்தராஜ்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தூய நெஞ்ச கல்லூரி
திருப்பத்தூர்.

முன்னுரை

புலமை என்பது எதற்காக இருக்க வேண்டும். தான் புலமையாளன் என்பதை காட்டுவதற்காகவா? இல்லை புலமை என்பது ஒரு கருவி அந்தக் கருவியைக் கொண்டு இந்த சமூகத்தை மேம்படுத்த முடியும் என்று நினைக்கிறார்களே அவர்கள்தான் புலமையாளர்கள். அந்த புலமையின் ஊற்று மு.வ.தன்னுடையப் புலமையின் மூலமாக எண்பத்தைந்து நூல்களைப் படைத்து அதன் வழியாக தமிழுக்கும், தமிழ் சமுதாயத்திற்கும் மிகப் பெரிய இலக்கியப் பணி ஆற்றியுள்ளார். மனிதன் பிறந்தோம் இறந்தோம் என்று இல்லாமல் இடைப்பட்ட காலத்தில் என்ன செய்தோம் என்பதுதான் வாழ்க்கை அதுதான் மு.வ.வின் இலக்கியத்தோடு இணைந்த வாழ்வு.

மு.வ.வின் படைப்பு

இன்றைய சமுதாய வளர்ச்சியில் மக்களிடையே தோன்றுகிற எந்தப் பிரச்சனையையும் எதிர் கொள்வதற்கும், சமுதாயம் மறுமலர்ச்சியை பெறுவதற்கும் இலக்கியம் மிகப்பெரிய சாதனமாக இருக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் ஓர் ஈடு இணையற்ற இலக்கியப் படைப்பாளி மு.வ. என்பதற்கு அவருடைய படைப்புகளே சான்று.

மு.வ. அவர்கள் மரபை மதிப்பவராகவும் அதே சமயம் மரபைக் கண்மூடித்தனமாக பின்பற்றுபவராக இல்லாமல் மொழியைக் கையாளுவதில் ஒரு புதிய போக்கினையும் கொண்டிருந்தார். தற்காலக் காட்சிகளைத் தற்கால மொழியில் தீட்டி தருவதில் ஆர்வம் கொண்டிருந்தார். புறவுலகைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக மட்டும் இவர் இல்லாமல், புதிய உலகொன்றைப் படைக்கும் படைப்பாளியாகவும் இருந்திருக்கின்றார்.

மு.வ.வின் புதினங்கள்

இவருடைய நாவல்கள் அறிவுக்கு விருந்தாகவும், மூளைக்கு மருந்தாகவும் அமைகின்றன. நல்லவனாக மட்டும் இருந்தால் போதாது வல்லவனாகவும் இருக்க வேண்டும் என்பதை இவருடைய நாவல்கள் உணர்த்துகின்றன. தனிமனித உணர்வுகளுள் மனிதனைப் பெரிதும் அலைக்கழிப்பது பாலுணர்ச்சியின் விளைவான மனத்தடுமாற்றமே தம்

நாவல்களில் கையாண்டுள்ளார். சமூகத்தின் அவலநிலையையும், இளைஞர்களிடையே காணப்படும் சிக்கல்களையும் தம்முடைய புதினங்களில் கருப்பொருளாகக் கொண்டு செந்தாமரை கள்ளோ, காவியமோ, அந்தநாள், பாவை, பெற்றமனம், நெஞ்சில் ஒரு முள், கயமை, மண்குடிசை, அல்லி போன்ற புதிணங்களைப் படைத்துள்ளார்.

"இளைஞர்களிடையே காணப்படும் பலதரப்பட்ட சிக்கல்களைக் குறிப்பிடும் புதினம். அதற்கான தீர்வுகளையும் புதினங்களில் தர முற்படுகின்றார்"[1]. மு.வ.வின் புதினங்களில் நிகழ்ச்சி குறைவாகவும், சிந்தனை அதிகமாகவும் உணர்சிக்கு முதன்மையும், முக்கியத்துவமும் அளித்துள்ளார்.

"மு.வ.வின் புதினங்களில் நிகழ்ச்சிகள் மிகுதியாக இல்லை பேச்சும் சிந்தனையுமே மிகுதியாக உள்ளன. உள்ளத்தில் ஏற்படும் உணர்ச்சிக்கே முதன்மை அளித்துள்ளார்"[2]

பொருளாதார சிக்கலினால் பிச்சைகாரர்களும், வேசிகளும் உருவாகின்ற அவல நிலையையும், கணவன், மனைவி இருவரும் விட்டுக்கொடுத்து வாழ்வதால் ஏற்படும் மகிழ்ச்சியையும், புரிந்துக்கொள்ளாமையினால் ஏற்படும் துன்பத்தினையும் தம்முடைய புதினங்களில் புரிய வைத்துள்ளார். தமிழ் பற்றுதலின் காரணமாக தம்முடைய புதினங்களில் பறம்பு நிலையம் (அல்லி), கம்பர் இல்லம் (மலர்விழி), தென்றல் நிலையம் (அல்லி), அருட்பா மன்றம் (வாடாமலர்), திரு.வி.க.பூங்கா (அகல் விளக்கு), பாரிமுனை (கரித்துண்டு), கபிலர் தெரு (மலர்விழி), திருப்பள்ளித் தெரு (செந்தாமரை) எனக் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.

"மு.வ. அவர்கள் தமது புதினங்களில் திருக்குறள், பகவத்கீதை, கீதாஞ்சலி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குறுந்தொகை, நற்றிணை, தேவாரம், திருவாசகம், திருவருட்பா, நாலடியார், நாலாயிர திவ்விய பிரபந்தம், திருவாய்மொழி, கந்தர் அலங்காரம், பட்டினத்தார் பாடல்கள், பாரதியார் பாடல்கள், முதலிய நூல்கள் பற்றிய செய்திகளையும், பாடல்களையும் உரிய இடங்களில் கையாண்டுள்ளதைக் காணலாம்"[3]

மு.வ.வின் புதினங்களில் சொற்கள் எளிமையாகவும், இனிமையாகவும் இருக்கும். இதற்கு காரணம் "தாம் படித்த ஒவ்வொரு நூலிலும் உள்ள திரண்ட கருத்துக்களைக் குறிப்பேட்டில் எழுதி வைக்கும் பழக்கம் மு.வ.விற்கு உண்டு. இவ்வாறு ஒரு நூல் முழுமையும் ஆழ்ந்து படித்து அதன் திரண்ட கருத்தை நினைவில் வைக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தமையால் தான் பல சிறந்த ஆசிரியர்களின் கருத்துக்களைத் தம் சொத்தாக ஆக்கிக் கொள்ள இயன்றது"[4]

"வடிவில் எளிமை, நடையில் இனிமை பொருளில் தெளிவு, பயனில் நன்மை என்ற இலக்கணத்துக்கு ஒப்ப மு.வ. அவர்களின் புதினம் விளங்குவதைக் காணலாம்"[5]

மு.வ.வின் புதினங்களில் கதை மாந்தர்கள்

இவருடைய புதினங்களில் அனைத்து வகையான கதைமாந்தர்களையும் படைத்துள்ளார். ஒழுக்கமற்ற மனிதனையும், கொள்கையுடைய மனிதனையும், நெறி தவறிய மனிதனையும் படைத்துள்ளார்.

"பெண் பாத்திரங்களுக்குப் பெயரிடும் போது ஒரு முறையை மு.வ. அவர்கள் கையாண்டுள்ளார். அவரது பெண் பாத்திரங்களின் பெயர்கள் எல்லாம் அவரவர்களின் பண்புகளை விளக்கும் வகையில் அமைந்திருப்பதைக் காணலாம்"[6]

கொள்கையும் குறிக்கோளும் கொண்டு வாழும் பெண்களுக்கு திலகம், பாவை, செந்தாமரை சுடர்விழி, பொன்முடி, மங்கை, மென்மொழி, எனப் பெயர் வைத்துள்ளார். உயர்வு இல்லாமல் தாழ்வு இல்லாமல் வாழும் பெண்களுக்கு ராகு, ரேவதி, வள்ளி, சந்திரா, கனகா, அஞ்சலி, சொர்ணம் எனக் கதாபாத்திரமாக அமைந்துள்ளார்.

தம்முடைய புதினங்களில் விதவைப் பெண்ணையும், ஒழுக்கமற்ற பெண்ணையும், படிப்பு வாசனையே அறியாத பெண்ணையும், தவறு செய்துவிட்டு வாழ்நாள் முழுவதும் துன்புறும் பெண்ணையும், ஒழுக்கத்தில் உறுதியாக இருந்து இறுதி வரையில் நெறிபிறழாமல் எளிய வாழ்வு வாழும் பெண்ணையும் படைத்துள்ளார்.

குழந்தைகளுக்கு தூய தமிழில் பெயர் வைத்துள்ளதைக் காணலாம். திருவாய்மொழி, திருப்பாவை, மாதவி, நறுமலர், தேன்மொழி, அரும்பு, அறிவன் என்பனவற்றைச் சொல்லலாம்.

"மு.வ.வின் நாவல்களில் 'பாவை' தவிர மற்ற எதிலும் சாதிப் பெயரைக் குறிக்கும் பாத்திரப்படைப்பே இல்லை எனலாம். தொடக்கக் காலத்தில் 'பாவை' புதினத்தை எழுதியதால் 'வேலுப்பிள்ளை' என்றும் 'ஏகாம்பரச் செட்டியார்' என்றும் குறிப்பிட்டுள்ளார். அதற்குப் பிறகு வெளிவந்த நாவல்களில் சாதிப் பெயர்களே இல்லை"[7]

இவை எல்லாம் சாதிகளையும், மதங்களையும் களையெடுக்கப்பட வேண்டும் என்பதையும் உயர்வு, தாழ்வு இலலை என்பதையும் காட்டுகின்றன.

ஒழுக்கம், பண்பாடு, நாகரீகம் இல்லாமல் வாழும் பெண்களுக்கு

வசீகரம், சகசாம்பாள், சரளம்பாள், சியமளா எனவும் ஒழுக்கத்தை உயர்வாகவும் உயிராகவும், மதிப்பவர்களுக்கு இமாவதி என பெயர் வைத்துள்ளார். இவ்வாறான பாத்திர படைப்புகள் எதை உணர்த்துகின்றன என்று பார்க்கும் போது தம்முடைய அனுபவத்தின் வாயிலாக தாம் பாடம் கற்றுக்கொள்வதைவிட, இலக்கியத்தின் வாயிலாக, பாத்திர படைப்பின் மூலமாக தம்முடைய வாழ்க்கையை நெறிபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதையும், நீதியோடும், நேர்மையோடும், ஒழுக்கத்தோடும் வாழ வேண்டும் என்பதையும் பாத்திரத்தின் மூலமாக உணர்த்துகின்றார்.

"நாவலாசிரியர்கள் தாம் காணும் வாழ்க்கைகளிலிருந்தே நிகழ்ச்சிகளையும், பாத்திரங்களையும் பொறுக்கி எடுக்கின்றனர். டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் தம் நாவல்களில் இருவகை நோக்குகளை சிறப்பாகக் கையாண்டுள்ளார். தம்முடைய கருத்துக்களை கதை மாந்தர்கள் வாயாலேயே வரச் செய்வது அவரது நாவல்களில் காணும் தனிச்சிறப்பாகும்" [8]

முடிவுரை

"மு.வ.அவர்கள் இயற்றிய பதிமூன்று நாவல்களும் படிப்பவரின் சிந்தனையைத் தூண்டி கருத்து விளக்கம் செய்து, வாழ்வைத் தெளிந்திடத் துணை புரிக்னறன. வெற்றுரை, வீணான வருணனை, வரம்பற்ற கற்பனை, குழப்பமான சிந்தனை, தெளிவற்ற நடை, இவைகட்கு இடமற்றுப் படிப்பவரின் உள்ளத்தின் உண்மைகள், 'ஊன்றிப் படியச் செய்யும் திறமான நயமான நடை அவருடைய நடை என்று பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் சொல்வார்"

மு.வ.வின் சிந்தனை தெளிந்த நீரோடை போன்றது. அது அவருடைய புதினங்களில் பிரதிப்பலிக்கின்றது. எது பற்றிக் கருத்துக் கூறினாலும் படிப்போர் மனதில் பதியும்படியாக இருக்கிறது. அது ஒரு நல்ல மனித சமுதாயத்திற்கான அடிதள கட்டமைப்புக்கு அஸ்திவாரமாக அமைகின்றன.

"அதனால்தான் திருவள்ளுவரின் அறவுணர்வும், காந்தியடிகளின் அகிம்சை உணர்வும், காரல்மர்க்ஸின் சமவுடைமை சமுதாய உணர்வும் இணைந்ததொரு புது வகைச் சிந்தனை அவருடைய படைப்புகளில் ஆற்றல் மிகு உயிரோட்டமாக அமைந்துள்ளது" [9]

மு.வ. அவர்கள் இன்று நம்மை விட்டு பிரிந்திருந்தாலும் அவரது நூல்கள் வாயிலாக பேசுகிறார். அன்பு காட்டுகின்றார், அறிவுரை கூறுகின்றார், நம்மை வாழ்விக்கின்றார் என்றே கூறலாம்.

அடிக்குறிப்புகள்

1. சில புதினங்களில் சில பார்வைகள் ஹுச.இராதாகிருஷ்ணன் பக்.91
2. மு.வ.வின் நினைவு அலைகள், ஈ.ச.விசுவநாதன், பக். 23.
3. மு.வ.வின் புதின முத்துக்கள் - ஓர் ஆய்வு, செ.அ.கிரு‘ணமூர்த்தி
4. மேலது, பக். 28
5. மேலது, பக. 36
6. மேலது. பக். 27
7. மேலது, பக். 24
8. மேலது, பக். 24
8. மேலது. பக்கம் 36
9. மு.வ. படைப்பிலக்கியம், க, த. திருநாவுக்கரசு, பக்.30.

உ௬. அறிஞர் மு. வ. வின் பன்முக ஆளுமை

த.பூமிநாதன்
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
உருமு தனலெட்சுமி கல்லூரி
திருச்சி - 19.

முன்னுரை

அறிஞர் மு.வ.தமிழ் உலகில் தம் எழுத்து மாட்சியால் செங்கோல் செலுத்திய எழுத்து வேந்தர் ஆவர். *1950* மு.வ.வின் யுகம் என திறனாய்வாளர் கூறுவர்.

மு.வ.அவர்கள் எழுதிய திருக்குறள் தெளிவுரை தமிழ்ப்புத்தகம் விற்பனையில் இமயச் சாதனையைச் செய்து எழுபத்தைந்து நூறாயிரம் படிகள் விற்பனையாகி முதன்மை பெறுகிறது. அதற்குக் காரணம் அவர்தம் கருத்துத் தெளிவும் நடையும் எளிமையுமே ஆகும்.

"ஒரு தனி மனிதன் கொடுக்கக் கூடிய மிகப்பெரிய கொடையினைக் கொடுத்தோர் வரிசையில் மு.வ.முதன்மைப் பெறுகிறார். மரபு வழித்தமிழ்ப் பயின்று படைப்பிலக்கியத் துறையில் வெற்றி பெற்ற முதல் பேராசிரியர். நல்ல தமிழில் நாவல் எழுதி பல்லாயிரக்கணக்கானவரின் உள்ளம் கவர்ந்த முன்னோடி. எழுத்தினால் வாழலாம், பெரும் செல்வம் ஈட்டலாம், புகழ் பெறலாம் என மெய்ப்பித்த எழுத்தாளர்"[1]

மு.வ.வின் படைப்புகள்

1939 பாட்டுக்கள் நூல் வெளியீடு

1940 படியாதார் படும் பாடு நூல் வெளியீடு

1944 செந்தாமரை (முதல் நாவல்)

1945 கண்ணுடைய வாழ்வு

1949 திருக்குறள் தெளிவுரை

1950 ஓவச் செய்தி நூல் வெளியீடு

1959 இலக்கியத் திறன் நூல் வெளியீடு

1968 குறள் காட்டும் கதைகள் - நூல் வெளியீடு

1972 தமிழலக்கிய வரலாறு

1978 நல்வாழ்வு - (இலக்கிய நூல்)

நாவல்கள்

அகல்விளக்கு, வாடாமலர், கள்ளோ? காவியமோ, நெஞ்சில் ஒரு முள், செந்தாமரை, அந்த நாள், அல்லி, மண் குடிசை, பெற்ற மனம், மலர்விழி, கரித்துண்டு, கயமை, மணல் வீடு, பாவை, மண்ணின் மதிப்பு.

தொடக்க கால முயற்சிகள்

நூல் எழுதுவதில் மு.வ.முதலாவதாக ஈடுபட்டது *1939*-ம் ஆண்டில் தான். குழந்தைப்பாட்டுக்கள் என்பதே அவருடைய முதல் நூல். அது *1939*இல் கழக வெளியீடாக வெளிவந்தது. இதில் மு.வ. நம் நாட்டில் நிலவும் 32 குழந்தைப்பாட்டுகளைத் தொகுத்துத் தந்தார். நூலில் 'வாடாத பூ' என்னும் தலைப்பில் இடம் பெற்ற பாடல் கற்பவர் உள்ளத்திற்கு கலை விருந்து நல்குவதாகும்.

"வாடாத பூ அறிந்தேன்
வளருகின்ற இடம் அறிந்தேன்
வாடாத பூ படிப்பு
வளருகின்ற இடம் பள்ளிக்கூடம்" [2]

1940 ஆம் ஆண்டில் வெளிவந்த "படியாதவர் படும்படு என்னும் நூல் படியாதவர் வாழ்வில் நேரும் இடையூறுகளை கதை, கட்டுரை, உரையாடல் இவற்றின் வாயிலாக விளக்கும் முறையில் அமைந்தது. இந்நூலிற்கு தி.சு.அவினாசிலிங்கம் அளித்த முன்னுரை மிகப்பொருத்தமாக உள்ளது. அது "இதிலடங்கிய கதைகளும், கட்டுரைகளும், பாட்டுக்களும், கற்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் கல்வியறிவில் பெரிதும் விருப்பத்தை உண்டுபண்ணும்" [3] என்பதாகும்.

மு.வ. அவர்கள் *1945*-ல் ஆண்டில் எழுதி வெளிவந்த மற்றொரு நூல் "கண்ணுடைய வாழ்வு" என்பதாகும். முப்பது வயதான எழுதப்படிக்கத் தெரியாத ஒருவரும், ஐந்தாவது படிக்கும் சிறுவனும் உரையாடுவது போல் அமைந்தது இந்நூல். உடம்பைக் காப்பாற்றுவதில் உண்மையான முயற்சி வேண்டும். தக்க வழியில் நடக்க வேண்டும். கெட்ட எண்ணத்திற்கும், கெட்ட பேச்சிற்கும் இடம் தரக்கூடாது. சோம்பல் இல்லாமல் உழைக்க வேண்டும். உழைக்காத உடம்பு உரமாக இருக்காது. அளவாக உறங்கி ஓய்வு கொள்ள வேண்டும். அதுதான் நோயற்ற வாழ்விற்கு வழி என்று *1945*-ஆம் ஆண்டிலேயே உடலோம்புவதன் அவசியத்தை வலியுறுத்தி அறிவுரை வழங்கியுள்ளார்.

முதல் நாவல்

மு.வ. *1944*-ஆம் எழுதி வெளிவந்த 'செந்தாமரை' என்னும் நாவலே

முதன்முதலாக எழுத்துலகில் அவருக்கு வெற்றி பெற்றுத் தந்த படைப்பாகும்.

மு.வ.வின் முதல் நாவல் ஏமாற்றத்தையும், புறக்கணிப்பையும் தாங்கி வெளிவந்தது, கவலைக்கும் தொல்லைக்கும் இடம் தந்து வெளிவந்தது.

மு.வ. என்ற இரண்டெழுத்து "தமிழ்நாட்டு இளைஞர் ஒவ்வொருவரின் நெஞ்சிலும் தனியிடம் பெற்றது, அவரது நூல்கள் தமிழ் எழுத்துலகில் தனி ஆட்சி செய்தன. அவருடைய நூல்களுள் கள்ளோ? காவியமோ? (புனைகதை) ஓவச்செய்தி (இலக்கிய ஆராய்ச்சி) மொழியியிற் கட்டுரையும்" (மொழி ஆராய்ச்சி) என்ற மூன்று நூல்களும் தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றன.

திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் (இலக்கிய ஆராய்ச்சி) விடுதலையா? (சிறுகதைகள்) "மொழிநூல்" (மொழி ஆராய்ச்சி) என்ற மூன்றும் தமிழ் வளர்ச்சி கழகத்தின் பாராட்டுப்பெற்றன. "அகல் விளக்கு" (புனைகதை) 1961-ஆம் ஆண்டுக்கான தில்லி சாகித்திய அகாடமி பரிசைப் பெற்றது.

"மு.வ.வை சிறந்த 'கலைஞர்' என்றும் 'நாட்டை நல்வழியில் ஓம்பும் தொண்டர்' என்றும் தமிழ்ப்பெரியார் திரு.வி.க. புகழ்ந்து போற்றும் நிலை ஏற்பட்டது".[4]

'கலை கலைக்காக' அல்லது 'கலை வாழ்க்கைக்காக' என்ற கொள்கைகளில் மு.வ. கலை வாழ்க்கைக்காக என்ற கட்சியைச் சார்ந்தவர். கலை என்பது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு உதவ வேண்டும். அவ்வாறு உதவாதது கலை ஆகாது என்பது மு.வ.வின் அழுத்தமான கருத்து ஆகும்.

"கள்ளோ? காவியமோ? நாவலில் மங்கையின் வாழ்க்கையில் நிகழும் போராட்டங்களும் துன்பங்களும் படிப்பவர் நெஞ்சை உருக்குகின்றன. 'பாவை' நாவல் உரிமைக்கும், கண்மூடி வாழ்க்கைக்கும் இடையே நடக்கும் போராட்டமாக படைக்கப்பட்டிருக்கிறது. 'மண்குடிசை' ஒவ்வொரு மனிதனுக்கும் அகப்போராட்டம், புறப்போராட்டம் என்ற இரு போராட்டங்கள் இருப்பதைக் காட்டுகிறது.

"நெஞ்சில் ஒரு முள்' நாவல் வாழ்வின் தொடக்கம் முதல் இறுதிவரை கதாபத்திரம் 'வடிவு-இன்' வாழ்க்கை நுட்பமான அகப்போராட்டங்கள் மிகுந்தாக உள்ளது. 'எனக்கு மட்டும் என் இப்படி வாழ்க்கை அடிக்கடி போராட்டம் உள்ளதாக அமைந்தது என்று கலங்கினேன்' என்று அவளே நாவலில் ஓர் இடத்தில் தனக்குள் எண்ணப்பார்ப்பதும்

ஒரு நல்ல சான்றாகும்.

'கரித்துண்டு' மு.வ.வின் நாவல்களில் புகழ்பெற்ற நாவல். கதைத்தலைவனின் வாழ்க்கை இரண்டு பகுதியாக அமைந்து கற்பவருக்கு சுவை தருவதைக் காணலாம். முற்பகுதி வாழ்வில் அகப்போராட்டமும் பிற்பகுதி வாழ்வில் புறப்போராட்டமும் மிகுந்திருப்பதை காணமுடிகிறது.

இவ்வாறே 'மலர்விழி', 'அகல்விளக்கு', 'வாடாமலர்', 'அல்லி', அந்த நாள்' ஆகிய நாவல்களின் பலவகையான மனிதர்களைக் காண முடிகிறது. கதைத் தலைவர்கள் தலைவிகள் ஒவ்வொருவரும் நுட்பமான அகப்போராட்டத்திற்கும், புறப்போராட்டத்திற்கும் ஆளாகி வருந்துகிறார்கள்.

ஆங்கில அறிஞர் 'அர்னால்டு கெட்டில்' என்பவர் கூறும் கருத்து மு.வ.வின் நாவல்களில் இழையோடிருப்பதைக் காணலாம். அக்கருத்து, 'எந்தக் கோணத்தில் இருந்து பார்த்தாலும்' 20-ம் நூற்றாண்டு இலக்கியம் நிலையாமையும், நெருக்கடியும் பற்றிப் பேசும் இலக்கியமாகவே உள்ளது'.

முடிவுரை

மு.வ.வின் பெயர் புதிய தமிழிலக்கியத்தில் சக்தி வாய்ந்த பெயராக திகழுகிறது. மு.வ. வாழ்வு பயனுள்ள வாழ்வு, வியத்தகு வாழ்வு, புகழ்மிக்க வாழ்வு, பலர் பின்பற்ற தக்க வாழ்வு, சாதனையால் வரலாறு படைத்தவரின் வரலாறு இது. மு.வ. வாழக்கைக் கலைஞர், சமுதாய மருத்துவர், நடுநிலையான ஆராய்ச்சியாளர், உவமைக்கவிஞர் என பன்முக ஆளுமைகளை தமது படைப்புகளால் வெளிப்படுத்துகிறார்.

அடிக்குறிப்புகள்

1. முனைவர்.இரா.மோகன், அறிஞர் மு.வ. பதிப்புரை, ப.4
2. முனைவர் மு.வ, குழந்தைப்பாட்டுக்கள், ப.21
3. முனைவர் மு.வ., படியாதவர் படும்பாடு, ப.21
4. முனைவர் இரா.மோகன், அறிஞர் மு.வ., ப.31
5. மேலது, ப.64

27. பெற்ற மனம் - நாவலில் பெண்கதாப்பாத்திரங்கள்

ஜெ.கலாதேவி
ஆய்வியல் நிறைஞர்
தூய நெஞ்சக் கல்லூரி
திருப்பத்தூர்.

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும், தமிழ் இலக்கிய வரலாற்றிலும் ஈடு இணையற்ற பெரும் எழுத்தாளாராக விளங்கியவர் மு.வரதராசனார். தமிழர்களின் உள்ளங்களைக் கவர்ந்த முதல் தமிழராக அவர் திகழ்ந்தார். அவர் அருமை அன்னை அம்மாக் கண்ணம்மாளுக்கும், அறிவில் சிறந்த தந்தை முனுசாமி அவர்களுக்கும் செல்லப்பிள்ளையாக 25.04.1912 ஆம் ஆண்டு வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூரில் பிறந்தார். முதலில் அவருக்கு வழங்கிய பெயர் திருவேங்கடமாகும்.

உயிருள்ள படைப்புகள் 100 படைத்துள்ளார். 13 நாவல், 2 சிறுகதைகள், நாடகம், கட்டுரை நூல், கடித இலக்கியம் போன்ற பலநூல்களை எழுதியுள்ளார். செந்தாமரை, முதல் நாவலும் கள்ளோ? காவியமோ அவர் எழுதிய இரண்டாம் நாவல் ஆகும். இது இவருக்குப் புகழினைத் தேடித் தந்தது. இவர் 10.10.1974 ல் சென்னையில் மறைந்தார்.

முனியம்மா

கந்தசாமி ஏழைத் தோட்டக்காரனின் மனைவி முனியம்மா. இவள் ஏழ்மையில் இரு குழந்தைகளைப் பெற்றவள். தனது கணவரின் வருவாயில் வசதியற்ற நிலையில் வாழ்ந்தாலும் தனது வாழ்வை ஓரளவிற்கு நடத்தி சென்றாள். கணவர் வரிய நிலையில் வாடினாலும் தனது ஏழ்மையை கண்டு அவள் வாடியதில்லை. தமது இருமகன்களின் எதிர்காலத்தை எண்ணி எண்ணி ஏங்கினாள்.

தனது கணவர் கந்தசாமி வேலை செய்த இடத்தில் மரணமுற்ற போது தம்மக்களை எப்படிக் காப்பாற்ற போகிறோம் என்று தான் வேதனைப்பட்டாள். வறுமையில் தனது இரண்டாவது குழந்தையை தேமொழியிடம் தத்துக் கொடுத்த தன் கணவரின் செயலைக் கண்ட முனியம்மா, பிள்ளையை வளர்க்க முடியாமல் வேலூர் அம்மா தேமொழிக்கு தத்துக்கொடுத்ததை அவள் விரும்பவில்லை என்றாலும், தங்களது வருமை நிலையின்றி தமது குழந்தை செல்வநிலையில் வளரட்டும் என தம்மை தேத்திக் கொண்டாள். குடிசையில் வாழ்வு ஏழைகளுக்குப் புதியதல்ல. வறுமையில் வாழ்கையை நடத்தும் முனியம்மா தமது நிலையை எண்ணி

வருந்தாமல் தாம் பெற்றப் பிள்ளைகளை எப்படிக் காப்பாற்றப் போகிறோம் என வேதனைப்பட்டாள்.

தமது முதல் குழந்தை 'முத்தனன்' வளமாக வளர்க்க முடியாமல் போனாலும் வீட்டு வேலை செய்தாவது அவனை வளர்க்கத் தம்மால் முடியும் என உறுதி செயல்பட விழைந்தாள். முனியம்மாவின் தாய்மையுணர்ச்சி தாம் ஏழை என்றும் தம்மால் செல்வ செழிப்போடு வாழ முடியாது என்றாலும் தம் பிள்ளைக்காக உயிர் உள்ளவரை உழைத்து ஓயாமல் பாடுபட்டு வாழ்ந்தாள்.

இவள் வேலைக்காரனின் மனைவி பைத்தியக்காரி, பிச்சைக்காரி, குழந்தை திருடி, சமையல்காரி, கொலைக்காரி, குற்றவாளி, வேலைக்காரி என பலவேறு நிலைகளில் பலவாறு இகழ்நதாலும், பழித்து ஒதுக்கப்பட்டாளும், அவளுடைய தூய நெஞ்சத்தின் தாய்மையுணர்ச்சி ஒருபோதும் மாறவில்லை. கல்விச் செருக்கும் ஆடம்பரப் பெருமையும் இல்லாத ஏழைத் தாய்மாரின் எளிய நெஞ்சத்திலேயே தாய்மையுணர்ச்சி எப்போதும் எந்த நிலையிலும் மிகுதியாக நிலைத்து விளங்குகிறது.

இவளது இரண்டாவது மகனின் தகாத செயலால் மனம் வருந்தினாளே தவிர அவனை வெறுத்து ஒதுக்கிடாமல் அவன்மீது மிகுதியான பாசமும் தாய்மையுணர்வும் காட்டியே நடந்துக் கொண்டால். தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்ற முது மொழிக்கேற்ப தம் இரு மகன்களின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை எண்ணி வெதும்பினாள், வேதனைப்பட்டாள் தம் பிள்ளைகள் மீதுக் கொண்ட பாசத்தால் உலகமே இவர்கள்தான் என எண்ணி பெருமைப்பட்டுக் கொண்டாள். தம் பிள்ளைகளால் உலகமே கையளவு என குதுகலத்தோடு இருந்தாள்.

எல்லா உயிர்களுக்கும் இயற்கையாக தாய்மையுணர்ச்சி நிறைந்தாலும் ஏழை முனியம்மா பண்போடும் ஒழுக்கத்தோடும் வறுமையை ஒருபோதும் நினையாமல் தாம் பெற்ற பிள்ளைகளை பாசத்தோடும் நேசத்தோடும் இடையராது நடந்துக் கொண்டதை நினைக்கும் பொழுது உலகம் போற்றும் உன்னத தன்மை தாய்மையே என தெள்ள தெளிவாகிறது. ஏழையானாலும் வறுமையானாலும் பெற்ற பாசத்திற்கு இந்த உலகமே ஈடாகாது என்பதை முனியம்மாவின் சம்பவங்கள் இந்த உலகுக்கு தெளிவாக உணர்த்தி உள்ளது. உலகம் இவளை இகழ்ந்தும் பழித்தும் ஒதுக்கப்பட்டாலும் தாய்மையுணர்வு சிறியேதேனும் ஒதுங்கவில்லை! என்னே தாய்மை உணர்வு.

தேமொழி

வேலூர் மாசிலாமணி முதலி தெருவில் வசிக்கும் தேமொழி கல்லூரி ஆசிரியர் சீராளரின் மனைவி. போதிய செல்வ வசதி இருந்தும் தமக்கு வாரிசு என ஒரு குழந்தை இல்லை என்ற நிலை இவளுக்கு அவளது சென்னை பயணத்தில் ஏழை கந்தசாமி முனியம்மாவின் 2-வது குழந்தையைத் தேமொழி தத்தெடுத்துக் கொண்டாள்.

வறுமையில் வாடிய முனியம்மாவின் குழந்தையை தம் வாரிசாக தத்தெடுத்த தேமொழியின் கணவர் சீராளர் குழந்தையை ஏற்று வளர்த்து வந்தார்கள். தேமொழி அப்பிள்ளையை தத்துப்பிள்ளை என்பதை உலகுக்கு மறைந்து செல்லமாக வளர்ந்து வந்தாள்.

மான்விழி

தேமொழி வீட்டிற்கு பக்கத்து வீட்டு வேலைக்காரி மான்விழி ஏழை இளம் பெண். இவளை தேமொழியின் வளர்ப்பு மகனான மணிவண்ணன் ஒரு தலையாக காதலித்தான். ஆனால் மான்விழியோ மணிவண்ணனின் போக்கிரித் தனத்தையும் செல்வ செருக்கையையும் விரும்பாமல் அவனை வெறுத்து ஒதுக்கினாள்.

அச்சகத்தில் வேலை பார்க்கும் முத்தன், அதாவது முனியம்மாவின் முதல் மகனை நேசித்தால். ஏழ்மையில் வாழ்ந்தாலும் வேலைக்காரியாக இருந்தாலும் ஒழுக்கமாக நடந்துக் கொண்டாள். ஏழைக்குரிய பண்பாடு, எளிமையான இளமைத் தோற்றம் இவை பக்கத்து வீட்டு பையன் மணிவண்ணனை இவள்பால் ஈர்த்தாலும் வறுமையில் வளர்ந்த மான்விழி ஒருபோதும் அவனை விரும்பவில்லை. ஏழை பெண் ஒரு ஏழை பையனை விரும்பி (முத்தனை) அவனை மணக்க விழைந்தாள்.

மு.வ. பெண்களைப் பற்றிய சிந்தனைக் கருத்துக்கள்

மு.வ. அவர்கள் பெண்களை எப்போதும் உயர்வாக நினைப்பவர். இவர் பெண்கள் ஏழ்மையாக இருந்தாலும் மானத்தோடு வாழ்பவர்கள், நம்பிக்கையுடனும், மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனப்பான்மையுடையவர்கள் அவர் பெற்ற மனம் என்ற நாவலில் பெண் கதாபாத்திரங்களை அழகாகச் சித்தரித்துள்ளார் இவர் நாவலில் இடம் பெறும் பெயர்கள் தமிழ்ப்பெயர்களாகவே இருக்கும். இவர் தமிழ்மீது அளவு கடந்த பற்று உள்ளவர். இவரின் பெற்ற மனம் நாவலில் நமக்கு நல்ல சிந்தனையைக் கருத்துக்களை ஊட்டக் கூடியதாக உள்ளது.

முடிவுரை

உலகம் இடையறாமல் நடைபெறுவதற்கு அடிப்படையானது தாய்மையுணர்ச்சி. இது எல்லா உயிர்களுக்கும் இயற்கையுணர்ச்சியாக இருப்பதோடு சூழ்நிலைகளை வளர்ந்த செயற்கைப் பண்பாடாகவும் அமைந்துள்ளது. ஆகையால் இதை வெல்லுவது அரிது. தாய்மை உணர்ச்சியை மக்கள் வெல்லும் நாள் வருவதாயின் மக்களினத்திற்கே அழிவு நெருங்குவதாகும்.

கல்விச் செருக்கும் ஆடம்பரப் பெருமையும் இல்லாத ஏழைத் தாய்மாரின் எளிய நெஞ்சத்திலேயே தாய்மையுணர்ச்சி மிகுதியாக விளங்குகிறது. எதிர்கால உலகமே மற்றவர்களைத் திருத்தக்கூடும். ஏழை என்றால் அன்பு, பாசம், நேசம், பண்பு, ஒழுக்கம் என இயற்கையாகவே ஆண்டவன் அளித்துள்ளார். தன்பிள்ளைகள் என்ன தவறு செய்தாலும் அதைப் பொருத்துக்கொள்ளும் தன்மை பெற்ற தாய்க்கு மட்டுமே அமைகிறது என இந்தப□ பெற்ற மனம் என்றும் நாவல் நமக்கு விளங்க வைக்கிறது.

உ8. மு. வ. புதினங்களில் தமிழ் இலக்கிய அறிமுகம்

சு. சதீஷ்
இளமுனைவர் பட்ட ஆய்வாளர்
சுப்பிரமணிய பாரதியார் தமிழ்ப்புலம்
புதுவைப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி.

முன்னுரை

தமிழ்மொழி உணர்விலே ஆழ்ந்து, தமிழ்ப் பாட்டிலே தழைத்து, தகைசால் தமிழ்ப்பெரியார் திரு.வி.க.விடம் உள்ளம் ஒன்றி நின்று, தமிழறிஞர் யாவரிடமும் நேயம் பூண்டுத் தமிழ் மக்களுக்கும், இளைஞர்களுக்கும் தமது தொண்டை உரித்தாக்கித் தமிழ்ப் பணியாற்றிய செம்மலவர் என்ற சிறப்புக்குறியவர் மு.வ. இவர் தமிழர் நல்வாழ்க்கைக்கு வழி காட்டும் வகையில் இங்கே, இம்மண்ணிலே பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த சான்றோரைப்பற்றியும், அத்தகு சான்றோர் படைத்த இலக்கியங்களைப் பற்றியும் எடுத்துக்கூறுகிறார். இதன்வழி நமக்கு அவர்,நாம் போற்றிப் பின்பற்றத்தக்க நம் நல்ல பழம் பெருமையை எ்டுத்துக் கூறுவதுடன் அப்பெருமைக்குக் காரணமாக அமைந்த சான்றோரை நினைவுகூரும் விதமாகவும் தம் இலக்கியத்தைப் படைத்துச் செல்கிறார். மேலும் ஆறாத் தம் தமிழ்ப் பற்றையும் அங்கங்கே அவர் ஆற்றிக் கொள்கிறார். இந்த வகையில் மு.வ. தன் புதினங்களில் தமிழ் இலக்கியங்களை எவ்வெவ் வகையில் அறிமுகம் செய்துள்ளார் என்பதை இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.

சங்க இலக்கிய அறிமுகம்

மு.வ.அவர்கள் 'செல்வம்' என்றும் 'விருந்து' என்றும் அகத்திணைப் பாடல்களை அறிமுகப்படுத்தினார். 'தமிழ் நெஞ்சம்' எனப் புறநானூற்றுப் பாடல்களை அறிமுகப்படுத்தினார். 'ஓவச் செய்தி', 'கொங்குதேர் வாழ்க்கை' என அவர் சிந்தனையில் விரிவான விளக்கம் பெற்ற பாடல்களும் உள்ளன. இவ்வாறு சங்க இலக்கியத்தில் ஆழ்ந்து தோய்ந்த அவர் அதைத் தம் புதினங்களிலும் எடுத்து மொழிந்துள்ளார். 'சங்க இலக்கியம் என்ற கூண்டிற்குள் அடைபட்டுக்கிடந்த தமிழைப் பாமரர்களும் அறியும் வண்ணம் எளிய, இனிய, அழகிய தமிழில் எழுதி அனைவரையும் வியக்கச் செய்தவர் டாக்டர் மு.வ. ஆவார்' என்று நா.சொக்கநாதன் குறிப்பிடுவது இங்கு நினையத்தகுந்தது ஆகும்.

சங்க இலக்கியம் என்றாலே குறிப்பாக அகத்திணைப் பாடல்கள் என்றாலே அது காமம் பற்றியது என்ற கருத்து பரவலாய் நிலவியது.

இந்தத் தவறான எண்ணத்தைக் களைய மு.வ. பல வழிகளில் முயன்றுள்ளார். அவற்றில் ஒன்று தன்னுடைய புதினங்களில் சங்க இலக்கியத்தைப் போற்றுதல், எடுத்தாளுதல் என்பதாகும். 'பாவை' என்ற புதினத்திற்கு எழுதிய முன்னுரையில் கீழ் வருமாறு உரைக்கிறார்.

"தமிழில் உள்ள அகப்பொருள் இலக்கிய-இலக்கணத்தைப் பற்றிப் பேச்சு நிகழ்ந்தபோது நண்பர் ஒருவர், ஈதென்ன அய்யா!காலத்திற்கு உதவாத கருத்துக்கள்! களவொழுக்கம் என்றால் எனக்கு வெறுப்பாக இருக்கிறது.பகற்குறி, இரவுக்குறி, ஒருவழித்தணத்தல், அம்பல், அலர், இற்செறிப்பு பசலை,தோழி,உடன்போக்கு-இந்தப் பெயர்களே பிடிக்கவில்லை என்றார்.

காலத்திற்கு உதவாத கருத்துக்கள் அல்ல. இக்காலத்தில் விளங்காத சொற்கள் என்று வேண்டுமானால் சொல்லுங்கள். இன்றும் காதல் வாழ்க்கையின் தொடக்கம் பெரும்பாலும் அந்த நிலையில்தான் இருக்கிறது. களவொழுக்கத்தின் தினைப்புனம் முதலிய சூழல் மட்டுமே மாறியிருக்கிறது. உள்ளத்து உணர்வு நகரங்களில் மாறிவிட்டாலும் நாட்டுப்புறங்களில் பெரும்பாலும் அப்படியே இருக்கிறது என்று ஒரு கதையைப் புனைந்து சொன்னேன்.காலப்போக்கில் நேர்ந்துள்ள சிற்சில வேறுபாடுகளையும் சுட்டிக் காட்டினேன். அவ்வாறு அப்போது புனைந்த கதையே, பாவையாக எழுத்துருவம் பெற்றது" எனக் குறிப்பிட்டுள்ள அவர் பாவை மட்டுமின்றி இன்னும் பிற புதினங்களிலும் சங்க இலக்கியப் பொலிவினை புனைந்துரைத்துள்ளார்.

அகநானூற்றுப் பாடல்கள் ஒரு நல்ல காதல் வாழ்க்கைக்குப் படிப்பினைப் பாடல்களாக மு.வ.வினால் பல இடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளன. "அகநானூற்றையாவது படிக்கலாம் என்று அந்கப் புத்தகத்தை எடுத்து அப்படியே திறந்தேன். "ஆதிமந்தி போலப் பேதுற்று,இகுவேன் கொல்லோ" என்ற அடிகள் என் கண் எதிரே இருந்தன.ஆதிமந்தி பைத்தியமானதை எண்ணினேன்.காதல் முறிந்தால் அறிவே முறிந்து போகின்றது பைத்தியம் பிடிக்கின்றது.உள்ளம் கெட்டு உணர்வு கெட்டு உடலும் கெடுகின்றது.காதலுக்கு இவ்வளவு ஆற்றலா?" (ப.68) என்று செந்தாமரை புதினத்தில் எழுதிச் செல்கிறார்.

"ஒரு குறுந்தொகைப் பாட்டு நினைவில் இல்லை.ஒரு தலைவிதான் சொல்கிறாள்.தோழிக்குச் சொல்கிறாள்.தன் தாய் வீட்டுத் தோட்டத்துத் தேன் கலந்த பால் அவளுக்கு இனிக்கவில்லையாம்.கணவனுடைய நாட்டுக கலங்கல் நீர்தான் இனிக்கறதாம்.அந்தப் பாட்டு,வாழ்க்கையை எவ்வளவு நன்றாக எடுத்துக்காட்டுகிறது" (ப.122) என்று ஒரு காதலியின் செந்தாமரை எனும் புதினத்தில் குறிப்பிடுகிறார் மு.வ.இதே புதினத்தில் மற்றொரு

இடத்தில் "குறுந்தொகைக் காலத்தில் நான் இருந்திருந்தால்,மிளகுநீரில் உப்பு இடாமல் போனால் என்ன?சமைத்தவளின் அன்பைவிட வேறு சுவை ஏன்? என்று பாடியிருப்பேன்" (ப.123) என்று ஒரு கதாபாத்திரத்தின் மூலம் விமர்சிக்கிறார் மு.வ.

சங்க இலக்கியத்தில் உள்ள இயற்கைக் காட்சிகளையும் புதினங்களில் அங்கங்கே புனைந்து புதுவடிவத்தில் படைத்துள்ளார். "அவர்கள் போன வழியில் ஒரு சேவல் எதையோ கொத்தியபடியே பெருமிதத்தோடு ஒரு வகை ஒலி செய்தது. பெட்டைக்கோழி ஒன்று உடனே அங்கு ஓடிவர,கிக்கிக் என்று ஒலி செய்துவிட்டுச் சேவல் தன் தலையைத் தூக்கி பெருமித்தோடு பார்த்தது. பெட்டைக்கோழி அந்த இடத்தில் குத்தி ஒரு பெரிய பூரானைத் தன் அலகால் எடுத்தது.அந்தப் பூரான் குற்றுயிராய்த் துடித்து விழுந்து ஓடத் தொடங்கியது. கோழி மறுபடியும் அதைக் குத்தி எடுத்தது. சேவல் எதையோ தியாகம் செய்து மகிழ்வது போல் தலையை நிமிர்த்து நின்று பார்த்துக்கொண்டிருந்தது". (ப.307) என்று நற்றிணையில்(21) இடம் பெற்ற சேவல் ஒன்றின் பெருமித நிலையை மண்குடிசை புதினத்தில் பதிவு செய்கிறார்.

திருக்குறள்

திருவள்ளுவரும் வாழ்க்கை விளக்கமும் என்று திருக்குறளை வாழ்வியல் நூலாகச் சிந்தித்த அவர் தன் புதினங்களின்வழி,புதினக் கதை மாந்தர்களின்வழி அதனை நிலைநாட்ட முயன்றுள்ளார். 'கயமை' என்ற புதினமே குறளின் அதிகார விளக்கமாக அமைகிறது. கயமைக்கு அவர் முதலில் அமைத்த முன்னுரை, கயமைக் குறள் பத்துமே ஆகும். 'செந்தாமரை' புதினத்தில் கதைத் தலைவன் திருக்குறள் ஓதி திருமணம் செய்து கொள்ள விரும்புகிறான். 'என் திருமணத்தில் அந்தக் காமத்துப்பாலையும் மந்திரமாக ஓத வேண்டும். திருமணம் எளிய முறையில் நடக்க வேண்டும். வேறுபாடும் வேண்டா.மருதப்பனும் அவன் மனைவியும் போதும். மந்திரக்காரனும் தந்திரக்காரனும் வேண்டா. ஆடம்பரமும் ஆரவாரமும் வேண்டா.மருதப்பன் போதும்.திருக்குறள் ஓதுவான்.அவனுடைய மனைவி போதும்.ஆரத்தி சுற்றி வாழ்த்துவாள். இதற்குமேல் செய்தால் என் மனம் என்னைச் சுடும்.எம்.ஏ. படித்தும் கோழை என்று சுடும்' (ப.125) என்று எழுதியுள்ளார்.

கரித்துண்டில், திருவேங்கடம் நெஞ்சம் தன் மனைவியின் மூடநம்பிக்கைகளைக் கண்டு வெறுக்கத் துவங்கியபோது தன் ஆசிரியர் திருக்குறள் ஒன்றுக்குத் தந்த புதிய விளக்கம் ஒன்றால் தெளிவு பெற்றதாக வரும் பகுதியும் இங்கு சுட்டத்தக்கது. 'குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்' என்ற திருக்குறள் நினைவுக்கு

வந்தது. குறள் வகுப்பு நடத்தியபோது தமிழ் ஆசிரியர் அதற்குச் சொன்ன விளக்கமும் நினைவுக்கு வந்தது. “இது அரசியலுக்கு மட்டும் அல்ல குடும்ப இயலுக்கும் கொள்ளத்தக்கது. உங்கள் எதிர்கால மனைவியரிடம் குற்றம் காணும்போது குணத்தையும் காணுங்கள்.மிகைநாடி மிக்க கொள்ளுங்கள்” என்று ஆசிரியர் சொன்னது தக்க சமயத்தில் வந்து காத்தது (ப.40-41) என்று எழுதிச்செல்கிறார்.

தற்காலச் சமுதாய வாழ்வில் திருக்குறளைப் பினபற்றுவோர்க்கு ஏற்படும் சில தடுமாற்றங்களையும் மு.வ. குறிப்பிடத் தவறவில்லை. தொடர்பும் பழக்கமும் இல்லாதிருந்தாலும் உண்மையான நட்பு நீடிக்கும் என்று திருவள்ளுவர் கூறுகிறாரே என்றேன். “உயர்ந்த மக்கள் சிலருக்கு அது உண்மையாக இருக்கலாம்.ஆனால் சாதாரணமானவர்களுக்குத் தொடர்பும் பழக்கமும் இல்லாவிட்டால் நட்பு குறைந்து போகிறது. இளமையில் என்னோடு பழகிய நண்பர்கள் எங்கோ இருக்கிறார்கள். மறந்தே போய்விட்டேன்'' என்றார் என்று அகல் விளக்கிலே கூறுவார்.(ப267).இதே புதினத்தில் “உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்று சொன்னால் உலகில் எந்த வகையான மக்களைப் பார்த்து நடப்பது? முன் காலத்தில் நம்நாட்டு நாகரிகமே ஒரு கிராம அமைப்புப் போல் தெளிவாக,எளிமையாக இருந்தது.இப்போது நம் நாட்டு வாழ்க்கை ஒரு சந்தை போல் பெருங்கலப்பாக ஆரவாரமாக ஆகிவிட்டது. ஆகையால், இப்போது உலகத்தாரைப் போல் நடப்பது என்றால் யாரைப் பார்த்து நடப்பது” என்று கேள்வி எழுப்பிச் செல்கிறார்(ப.287).

கதை மாந்தர் உரையாடல்களிலும் மு.வ.ஆங்காங்கே திருக்குறள் அடிகளைக் கையாள்கிறார் “தொட்டனைத்தூறும் மணற்கேணி” (அகல் விளக்கு.ப.311), “யாகாவராயினும் நாகாக்க” (கயமை.ப.232), “நன்றல்லது அன்றே மறப்பது நன்று” (கயமை.ப.199), “இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்”(பெற்ற மனம்.ப.194), “ஏதிலார் பொதுநோக்கு நோக்குதல் காதலர் கண்ணே உள”(செந்தாமரை.ப.113), “நிற்க அதற்குத் தக”(மண்குடிசை.ப.47), “வேண்டாமை அன்ன விழுச்செல்வம்” (அகல்விளக்கு.ப.193), “பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை” (அகல்விளக்கு.ப.277) என்று பல குறள் தொடர்களை தம் புதினங்களில் கையாண்டுள்ளார் மு.வ.

தேவாரம் - திருவாசகம்

ஊனுருக்கும் உயிர்ப்பாடல் என்று மேனாட்டுக் கிறித்துவர் ஜி.யு.போப் போற்றிய திருவாசகம் சாவுப் பாட்டாக ஓதப்படுகிறது என்பதை தன் புதினத்தில் பதிவு செய்து அது தவறான கருத்து என்பதையும் கூறிச் செல்கிறார். இது என்ன புத்தகம்?என்ன பெயர்?என்றார்.திருவாசம்.

மாணிக்கவாசக சுவாமிகள் அதாவது திருவாதவூரார் பாடியது என்றார். புலவர்.தங்கசாமிக்கு உடனே நினைவு வந்துவிட்டது.அடடா! எங்கள் அப்பா இறந்து போனபோது இதைத்தான் தேடினார்கள்.எங்கும் கிடைக்காமல் கடைக்கப் போய் வாங்கி வந்து பாடினார்கள்.எல்லார் வீடுகளிலும் சாவு நடந்தால் இதைத்தான் பாடுவார்கள் என்ன அய்யா இது. நல்ல காலை வேளையில் நல்ல பாட்டாகப் பாடிக் கருத்துக்களைச் சொல்லாமல்,சாவுப் பாட்டைக் கொண்டுவந்துவிட்டீர்களே!உங்களுக்கு இதற்கு முன் நல்ல பாட்டுச்சொல்லிப் பழக்கம் இல்லையா?என்றார்.(கயமை:ப.126)

இவ்வாறு தவறான கருத்து கொண்டிருந்த தங்கசாமிக்கு விளக்கம் தருவது போலக் கனகலிங்கம் என்ற பாத்திரத்தின் வழி, அய்யய்யோ!அப்படி எண்ணாதீர்கள்.உங்கள் மாமா நாள்தோறும் அதைப் பாடச்சொல்லிக் கேட்கிறார்.சாவுக்கும் படிக்கலாம்.திருமணத்திற்கும் படிக்கலாம்.ஏசுநாதரின் பைபிள் போல□ என்று திருவாசகத்திற்குரிய பெருமையை நிலைநாட்டுகிறார் மு.வ.

தாயுமானவர் பாடல்கள்

திருக்குறளுக்கு அடுத்துபடியாக அவர் புதினங்களில் அதிகப்படியாக இடம் பெற்றிருக்கும் ஒரு நூல் தாயுமானவர் பாடல்கள் ஆகும். நடனமும் ஓவியமும் உடம்பை மறந்து உயரப் பறக்க முடியாத கலைகள்.இசையும் கவிதையும் அவ்வாறு பறப்பதற்கு உரிமைபெற்ற கலைகள்.இந்தத் தாயமானவரின் கலை,உடம்பை மறந்து மிகமிக உயரப் பறக்கும் உண்மைக் கலை.அதனால்தான செல்வநாயகம் அவ்வளவு உயர்ந்தவராக விளங்க முடிந்தது என்று மலர்விழி புதினத்தில் (ப.329) எழுதிச் செல்லும் மு.வ அவர்தம் மற்ற புதினங்களிலும் தாயுமானவர் பாடல்களை எடுத்தாண்டுள்ளார்.

ஓடும் செம்பொன்னும் ஒன்றாகக் கொண்டவர்கள்
நாடும் பொருளான நட்பே பராபரமே
என்று அகல்விளக்கிலும்(ப.293),கயமையில்(ப.264)
நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே மஞ்சன நீர்
பூசை கொள்ள வாராய்ப் பராபரமே

என்று தாயுமானவர் பாடல்களைத் தம் புதினங்களில் வழங்கியுள்ளார்.

இராமலிங்க சுவாமிப் பாடல்கள்

தாயுமானவர் பாடல்களைக் கையாண்டது போல இராமலிங்க சுவாமிப் பாடல்கள்களையும் மு.வ. தம் புதினங்களில் கையாண்டுள்ளார். "அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும் ஆருயிர்கட்கு எல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்" (மண்குடிசை ப.138) எனவும், 'ஊதூது சங்கே' (மண்குடிசை ப.156) எனவும் சில அருட்பா தொடர்களை

எடுத்தாள்கிறார்.இதுமட்டுமின்றி, 'பிள்ளைச்சிறு விண்ணப்பம்' (மண்குடிசை ப.156) எனத் தொகுதித் தலைப்பாகவும் சுட்டியுள்ளார்.

முடிவுரை

மேற்கூறிய நூல்களேயன்றி நாலடியார்(பாவை.ப.93),நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்(பெற்ற மனம்.ப.34), திருவாய்மொழி (அகல்விளக்கு. ப.319),கந்தர் அலங்காரம்(அல்லி.ப.300),பட்டினத்தார் பாடல்கள் (மண்குடிசை ப.165),பாரதியார் பாடல்கள்(மலர்விழி.ப.115)முதலிய நூல்களைப் பற்றிய செய்திகளையும் உரையாடல்களில் ஆங்காங்கே அமைத்துள்ளார் மு.வ.ஏதாவது ஒரு சீரிய செய்தியை,சிறந்த கருத்தை,உயரிய உண்மையைச் சமுதாயத்திற்கும்,சிறப்பாகத் தமிழ் இனத்துக்கும் அளிக்க வேண்டும் நோக்கத்திலேயே மு.வ. புதினங்களைப் படைத்துள்ளார்.

உ9. மு. வரதராசனாரின் பாவை நாவலில் பெண்ணிய பாத்திரப் படைப்பு

கு.கார்த்திகா
ஆய்வாளர்
தூயநெஞ்சக் கல்லூரி
திருப்பத்தூர். வேலூர் மாவட்டம்.

முன்னுரை

புதினம் என்பது பலநேரம் படிக்கக்கூடியவை. மனிதன் வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சியை ஒரு கோவைப்படுத்தி ஒரு தொடர்கதையாக வருவதே ஆகும். படிப்பவர் உள்ளத்தில் புதிய சிந்தனைகளைத் தூண்டும் வகையில் புதினங்கள் அமைகின்றன. கதை, புதினங்களின் உடம்பாக அமைகின்றது என்றால் பாத்திரங்கள், சூழல் அமைவதும் உடம்பில் உள்ள உயிர் போன்று காணப்படுகின்றது. ஒரு புதினத்தின் சிறப்பு, பாத்திரப் படைப்பில் நன்கு வெளிப்படும். புதின அமைப்பில் தனி மனித சமுதாயச் சிக்கல்களை எடுத்துரைக்கும் வல்லமை கொண்டது. அவ்வகையில் புதினம் எழுதுவதில் தனிச்சிறப்பைப் பெற்றவர் மு.வரதராசனார் ஆவார்.

எழுத்தாளர்

மு.வரதராசனார் ஒரு தலைசிறந்த புதின எழுத்தாளர் ஆவார். இவர் சிறுகதை, புதினம், சங்க இலக்கிய நூல்கள், கட்டுரைகள், நாடகங்கள், கடிதங்கள் என பல்வேறு நூல்களை இயற்றியுள்ளார். மக்கள் மனதை எளிதில் கவரக்கூடியது புதினமே எனத் தேர்ந்தெடுத்தார். இன்று வாழ்க்கையோடு நெருக்கமாக பல புதினங்கள் இவர் இயற்றியுள்ளார். இவர் படைத்துள்ள புதினங்கள் அனைத்தும் சமூகப் புதினங்களாக உள்ளன. படிப்பவரின் உள்ளத்தில் புதிய சிந்தனையைத் தூண்டக்கூடிய நிலையில் உள்ளன. தம் புதினங்களின் பண்டைத் தமிழ் இலக்கியங்களை அறிமுகப்படுத்துவதில் தனித்து நின்றவர். இவர் இயற்றிய 'பாவை' என்னும் புதினத்தைக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

மு.வரதராசனார் அவர் 'பாவை' என்னும் புதினத்தில் சங்க அகப்பொருள், களவொழுக்கத் துறைகளாகிய பகற்குறி, இரவுக்குறி, ஒரு வழித்தணத்தல், அம்பல், அலர், இற்செறிப்பு, பசலை, தோழி, உடன்போக்கு முதலியவற்றின் பின்னணியில் காலத்திற்கேற்பச் சூழ்நில மாற்றப்புனைவோடு படைக்கப்பெற்றது என்பதே அவரே தம் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

'காலத்திற்கு உதவாத கருத்துக்கள்' அல்ல, இக்காலத்தில் விளங்காத சொற்கள் என்று வேண்டுமானால் சொல்லுங்கள், இன்றும் காதல் வாழ்க்கையின் தொடக்கம் பெரும்பாலும் அந்த நிலையில் தான் உள்ளது. களவொழுக்கத்தின் தினைப்புனம் முதலிய சூழல் மட்டுமே மாறியிருக்கிறது. உள்ளத்து உணர்வு நகரங்களில் மாறிவிடலாம், நாட்டுப்புறங்களில் பெரும்பாலும் அப்படியே இருக்கிறது என்று கூறி ஒரு கதையைப் புனைந்து கூறியுள்ளார். அவ்வாறு புனைந்த கதையே 'பாவை'யாக எழுத்துருவம் பெற்றுள்ளது எனக் கூறியுள்ளார்.

கதைக்கரு

பாவை என்னும் புதினத்தில் காதலை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. மணியக்காரர் மகன் பழனியப்பனும், வேலுப்பிள்ளை மகள் பாவையும் இருவரும் ஒருத்தரை ஒருத்தர் விரும்புகின்றனர். இவர்களுடைய காதலுக்கு சாதி ஒரு முக்கிய தடையாக உள்ளது. இவர்களின் காதலை அறிந்த பெற்றோர்கள், பாவையை தன் உறவினர்கள் வீட்டிற்கு அனுப்பி விடுகின்றனர். பாவை தன் உறவினர்கள் வீட்டிலும் பல இன்னல்களுக்கு ஆளாகிறாள். பாவை இரவோடு இரவாக தன் உறவினர் வீட்டில் இருந்து வெளியேறுகிறாள். வரும் வழியில் அவளுக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் இவளுடைய துன்பத்தை அறிந்து உதவி செய்கின்றனர். பழனியை கடிதத்தின் மூலம் வரவழைவைத்து இருவரும் நகரத்திற்கு தன் நண்பன் வீட்டிற்கு அனுப்பி வைக்கின்றனர். பழனியை காணாமல் அவனுடைய அம்மா மிகவும் உடல் நிலை சரியில்லாமல் மோசமான நிலையில் காணப்படுகிறாள். இதை அறிந்த பழனி தன் தாயை பார்க்க ஊருக்கு சென்று விடுகிறான். இருவரின் வாழ்க்கைக் கடிதம் மூலமாகவே தொடர்கிறது. இவையே புதினத்தின் கதைக்கரு ஆகும்.

இரும்புக் கம்பிகளுக்கு அப்பால்

மணியக்காரர், வேலுப்பிள்ளையும் இருவரும் நண்பர்கள். வேலுப்பிள்ளை கள்ளுக்கடை வைத்து தொழிலை நடத்தி வருபவர். இவர்கள் இருவரும் வெவ்வேறு சாதியை சேர்ந்தவர்கள். மணியக்காரர் மனைவிக்கு பெண் பிள்ளை இல்லாததால், பள்ளிக்குப் போகும் பெண்களை அழைத்து அவள் அலங்கரிப்பாள். இவர்களில் ஒருத்தி பாவை. பாவையின் வீடு மேட்டுத் தெருவில் உள்ளது. இவள் வீட்டின் வழியாகத்தான் பழனி ஆற்றங்கரைக்கு செல்வான். அப்பொழுது அவள் வீட்டின் இரும்புக் கம்பி வழியாக பார்க்காமல் போக மாட்டான். ஒவ்வொரு நாளும் அவனுக்கு ஏமாற்றத்தையே தந்தது அந்த இரும்புக் கம்பி.

முதல் கவலை

பழனி ஒரு நாள் பாவையின் முகத்தைக் காண்கிறான். பாவையும் பார்க்கிறாள். இருவரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொள்கின்றனர். இவர்கள் ஊரில் குருவிக்காரர் இரவில் ஆடவார்கள். இவற்றைக் காண அதிகமான மக்கள் வருவர். குருவிக்காரர் கூட்டத்தைப் பார்க்க உயர்ந்தவர்கள், செல்வம் மிகுந்தவர்கள், பெருமையோடு வாழக்கூடியவர்கள் என நினைத்துக் கொண்டு இருப்பவர்கள், உழைத்து வியர்வை சிந்தும் மக்கள் பார்க்கும் இடத்தில், உழைப்பில்லாமல் வாழும் மக்கள் சேரக்கூடாது என நினைத்து அவர்கள் அவ்விடத்திற்கு செல்லமாட்டார்கள். குருவிக்காரர்கள் ஆட்டத்தை பார்க்கச் சென்ற பழனி ஆட்டத்தை பார்க்காமல், பாவையை காண செல்கிறான். இவ்விடத்தில் இவர்களுடைய காதல் மலர்கிறது. தன் தந்தை வந்ததை அறிந்த பாவை அவ்விடத்தில் இருந்து வந்துவிடுகிறாள். அவள் பழனியை விட்டுப் பிரிந்தது முகம் வாடிக்கொண்டிருக்கும். காதலால் பாவை தூக்கம் வராமல் இருப்பதைக் கண்டு நாம் திருமணத்தைப் பற்றி பேசியது தான் பாவைக்கு கவலை என நினைத்துக் கொள்கிறார். அவளுடைய தந்தை.

சங்க காலத்தில் இருந்தே காதல் வாழ்க்கை இருந்து வந்தாலும், இன்றைய சூழலில் வெகுவிரைவில் எடுத்துச் செல்லக்கூடியது சினிமாவும், ஊடகமும் ஒரு முக்கிய அடித்தளமாக உள்ளது. அவை ஒரு விளையாட்டு பொருளாகவே பயன்படுத்துகின்றனர். பெற்ற பிள்ளைகள் முகம் வாடி இருந்தால் பெற்றவர்களால் தாங்க முடிவதில்லை. பெற்றோர்கள் அவர்கள் மீது வைத்த நம்பிக்கையை உடைத்து எறிகின்றனர் பிள்ளைகள்.

இளமையும் முதுமையும்

பழனியும் பாவையும் காதல் புரிவது இவர்களுடைய பெற்றோருக்கு தெரியவருகிறது. இதனால் பழனியின் தந்தை அவனுக்கு வெளியூரில் பெண் பார்க்கச் செல்கிறார். இவர்களுடைய காதலுக்கு சாதி தான் எதிர்ப்பு தெரிவிக்கிறது. ஏகாம்பர செட்டியார் ஊரின் பிரச்சனையை தீர்த்து வைக்க கூடியவர். இவர் மீது ஊர்மக்களுக்கும் மிகுந்த நம்பிக்கை. செட்டியாரிடம், மணியக்காரர் பெண்பார்க்கும் வி'யத்தையும், பாவையை பழனி விரும்புவதையும் கூறுகிறார். பாவை சாதி வேறு, அவர்களுடைய தொழில் வேறு என்பதால் மறுக்கின்றனர். பழனியின் தாத்தா, அப்பா எல்லாம் ஒரு பெண்ணை மணந்தும், இன்னொரு பெண்ணை வைத்து வாழ்வது என்பது நடைமுறையில் இவர்களுக்கு இயல்பாக இருந்தது. இவர்கள் சாதிக்கு கட்டுப்பட்டும், ஒழுக்கம் கெட்டு வாழ்ந்தனர். அவ்வாறு அந்தத் தவற்றினை செய்யகூடாது எனவும், பாவைக்கு துரோகம் செய்யவும் பழனி முன் வரவில்லை. பழனிக்கு சாதி, குலம் இவற்றின் மீது நம்பிக்கை

கிடையாது. அன்றையக் காலக்கட்டத்தில் ஆணிற்கு வீரமும், பெண்ணிற்கு அழகும், கற்பும் சிறந்தது என எண்ணி திருமணத்தை நடத்தி வைத்தனர். இன்றைய சூழலில் மனிதன் தன்னுடைய சாதிக்காகப் பயந்து தன்னுடைய சுய மகிழ்ச்சியையும் இழக்கிறான். ஏனெனில் மகிழ்ச்சியை விட சாதிதான் உயர்ந்து நிற்கிறது. காலம் மாறினாலும் சாதி என்னும் உணர்வு என்றும் அழியாது.

தந்தையின் கவலை

செட்டியார் பாவையின் தந்தையை அழைத்து அவர்களுடைய காதலை சொல்கிறார். அதைக் கேட்டு அவருடைய மனம் வருத்தப்படுகிறது. வெவ்வேறு குலத்தைச் சார்ந்தவர்கள் இவை நடைமுறைக்கு ஒத்து வராது என கூறி மிகவும் கவலைக்கு உள்ளாகிறார். தன் பிள்ளை சின்ன குழந்தை, செல்லமாக வளர்ந்தவள். அவ்வாறு தவற்றினை செய்யமாட்டாள் என்று நினைத்து பாவை மீது மிகுந்த நம்பிக்கை வைத்தார். ஒரு நாள் பாவையும். பழனியும் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு மிகவும் கவலையில் ஆழ்ந்தனர். இதனால் அவளுடைய பெற்றோர் பாவையை சின்னம்மா வீட்டிற்கு அனுப்பி வைக்கின்றனர். அடுத்தவர்களுக்காக பயந்து என் மகளை எங்கோ விட்டு வந்து விட்டேன் என வருந்தினர். ஆனால் இது மணியக்காரருக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

காதலிப்பது ஆண், பெண் என்று இருந்தாலும், இவற்றில் அதிகமான பாதிப்பு பெண்ணிற்கே உள்ளது. பெண்ணைப் பெற்றோர்கள் மற்றவர்களுக்கும், சாதிக்கும் பயந்து வாழ்கின்றனர். பெண் தவறு செய்தால் ஊரில் உள்ளவர்கள் அலறி தூற்றுவர் ஆண்களுக்கு ஒரு பாதிப்பும் ஏற்படுவதில்லை.

சுயமையின் தோல்வி

பாவையின் சின்னம்மா, வஞ்சகமும் கொடுமையையும் நிறைந்த குணத்தை உடையவள். பாவையை எப்படியாவது தன் தம்பிக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும் என முடிவு செய்தாள். இவளுடைய தம்பியோ கொடுமைக்காரன், கொலைகாரன். இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டால் திருமணம் செய்து வைத்து விடலாம் என திட்டமிட்டாள். சின்னம்மாவின் முயற்சியால் அண்ணசாமி பாவையைத் தவறான வழியில் அடைய முற்பட்டான். ஆனால் அவனுடைய கனவு பலிக்கவில்லை.

ஒரு பெண்ணுக்கு அவள் சுற்றியுள்ள சூழ்நிலையே ஒரு காரணமாக இருந்தாலும். உறவினர்கள் மிகவும் முக்கிய காரணமாக இருக்கின்றனர். தன் பெண்ணாக நினைக்க வேண்டியவளை தன் சுயநல சூழ்ச்சியில் ஈடுபடுத்திக் கொள்ள முற்படுகிறன்றனர். ஒரு பெண்ணே

மற்றொரு பெண்ணிற்கு எமனாக வந்து நிற்கிறாள்.

அஞ்சா நெஞ்சம்

பாவையின் சின்னம்மா திட்டம் நிறைவேறவில்லை என்பதால் ஏமாற்றத்தை அடைந்தோம் என சினத்துடனும், வெறுப்புடனும் இருந்தாள். இதை அறிந்த பாவை மறுநாள் இரவு, மூங்கில் மேல் இருந்த இரண்டு ஆடையையும், அறிவாளையும் எடுத்துக்கொண்டு கை. கால், மூக்கு என எல்லா நகைகளையும் கழற்றி வைத்துக் கொண்டு வீட்டை விட்டு நகர்ந்து புறப்பட்டாள். எதிரில் பாம்பு வருவதைக் கண்டு

'எனக்கு இப்போது அச்சமெல்லாம் மக்களைப் பற்றிதான். என் உடலைத்தான் நீ அழிக்க முடியும். மக்களோ என் மானத்தையும் அழிக்க முயல்கின்றனர். பாம்பே! உனக்கா அஞ்சுவேன்!' என எண்ணிக்கொண்டு நடந்தாள்.

ஊர் வந்ததும் பெண் உடை தெரியக்கூடாது என்பதற்காக, புடவையைக் களைத்து ஆண் ஆடையான வெள்ளாடையை உடுத்திக் கொண்டாள். தன் கூந்தலை முன் கொண்டு அரிவாளால் அவற்றை அரிந்தாள். அறிந்தவுடன் மற்ற துணியை எடுத்து தலைப்பாகையை அணிந்தாள். நடைப்பாதையில் பேசியவர்களிடம் தைரியத்தை வரவைத்து பேசினால், பாவைக்கு தன் ஆடையைப் பற்றியே போராட்டமாக இருந்தது.

சமுதாயத்திற்கு பயந்தே ஒரு பெண் வாழ முற்படுகிறாள். இவற்றினால் பல இன்னல்களுக்கும், துன்பங்களுக்கும் ஆளாகிறாள். சமுதாயத்தில் உள்ளவர்களுக்கு பயந்தும் அவற்றில் இருந்து தன்னைக் காப்பற்றிக் கொள்ளவும், தன்னையே மாற்றிக் கொள்ளும் சூழ்நிலை ஒரு பெண்ணிற்கு அமைந்து விடுகிறது.

உண்மை உறவு

பாவை ஊருக்குள் சென்றதும் சாமிநாதன், கமலம் இருவரும் அடைக்கலம் கொடுக்கின்றனர். சாமிநாதன் மிகுந்த பக்தி கொண்டவர். கமலம் இளந்தாயாக இருப்பதால் இவர்களுக்கு வேலைக்காரி தேவைப்படுகிறது. பாவை கமலம் சொல்லும் வேலையை செய்து கொண்டே அவர்கள் வீட்டிலே இருந்தாள். பாவை பட்ட துன்பத்தைச் சொல்லி அவர்களிடம் அழுகிறாள். பாவையின் துன்பத்தைக் கண்டு இருவரும் உதவி செய்ய நினைத்தனர். இதனால் பழனி கடிதத்தின் மூலம் வரவைக்கின்றனர். இவர்கள் காதலுக்கு எதிர்ப்பு முக்கிய காரணமாக அமைவது நாட்டுப்புறத்தில் வாழ்பவர்கள் கண்மூடித்தனமாக இருப்பார்கள். செல்வாக்கு உடையவர்கள் சாதி வழக்கங்களுக்கு தான் இடம் உண்டு, எனச் சாமிநாதன் கமலத்திற்கு எடுத்துக் கூறுகிறான்.

தன் சொந்த உறவினால் ஒரு பெண்ணுக்கு தன் மானத்தை இழக்க நேரிட்டது. தெரியாதவர்கள் அடைக்கலம் கொடுத்து உதவியும் செய்கின்றனர். இப்படி நல்ல உள்ளம் கொண்ட மனிதர்களும் இந்தச் சமுதாயத்தில் காணப்படுகின்றனர்.

புதிய உலகம்

பழனி வீட்டை விட்டு சென்றது அவனுடைய தந்தைக்கு தெரிய வருகிறது. பழனி பாவையைக் காண ஊருக்கு சென்று அடைகிறான். பாவையை கண்டதும் அவனுக்கு புத்துயிர் பெற்றது போல் இருந்தது. பாவை மனதில் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சாமிநாதன் இவர்கள் இருவரையும் பட்டணத்திற்கு தன் நண்பன் வீட்டிற்கு அனுப்பி வைக்க முடிவு செய்கிறார். இவர்கள் நன்றாக வாழ வேண்டும் என்பதே அவர்களுடைய அன்பில் இருந்தும், உள்ளத்தில் இருந்தும் தெரிகிறது. இருவரும் பட்டணத்தில் சென்று அடைகின்றனர்.

சாமிநாதன் தன் நண்பன் வீடான கண்ணப்பன் வீட்டிற்கு அனுப்பி வைக்கிறார். இருவரும் கண்ணப்பர் வீட்டிற்கு சென்று அடைகின்றனர். இவர்க்ள் வந்த வி'யம் அவருக்கு மட்டுமே தெரியும். பாவைக்கு இந்தப் பட்டணம் புதிதாய் இருந்தது. புதிய உலகத்தைக் காண்பது போல் மகிழ்ச்சியில் இருந்தாள்.

நம்பிக்கை

வேலுப்பிள்ளையும், மணியக்காரரும் சமாதானம் ஆகின்றனர். நடந்தது, போனது போகட்டும் எல்லாம் மறந்து விடலாம் என்று கூறுகின்றனர். வேலுப்பிள்ளை இருவரையும் பார்க்க பட்டணத்திற்கு வருகிறார். பழனி தன் தாயக்கு உடல்நிலை சரியில்லாததை கேட்டு உடனே புறப்பட்டு செல்கிறான். பழனி மனம் மாறினால் தன் பெண் நிலை என்ன ஆகுமோ என கவலைப்படுகிறார். ஓர் ஆண் தவறினால் இன்னொரு திருமணம் நடக்கும், பெண் தவறினால் அவளுக்கு வாழ்க்கை கிடையாது என வருத்தப்படுகிறார். பழனி தன் தாயிடம் சென்று அடைகிறான். இவனின் குரலைக் கேட்டு அவளும் உயிர்த்தெளிகிறாள். இரு வீட்டாரும் பாவைக்கும், பழனிக்கும் திருமணம் செய்து வைக்க முடிவு செய்கின்றனர். இந்த செய்தியை கடிதத்தின் மூலம் பாவைக்குத் தெரிவிக்கிறான். இந்த நம்பிக்கை கொண்டு பாவையும் கடிதத்தை மடித்து வைத்து அந்த நாளை எதிர் பார்த்து வாழ்ந்து வருகிறாள்.

சமுதாயத்தில் காதல் புரிபவர்கள் பல இன்னல்கள் சந்திக்கின்றனர். சாதி, தொழில், பணம் என இவையே அவைகளுக்கு இடையூறல்களாக

உள்ளன. நகர்ப்புறத்தில் மாறிவிட்டாலும், கிராமப்புறத்தில் இந்த நிலை நீடித்துக் கொண்டே வருகிறது.

முடிவுரை

பாவை என்னும் புதினம் நாட்டுப்புற வாழ்க்கையும், நகர வாழ்க்கையும் முரண்பட்ட நிலையில் சித்தரிக்கப்பட்டு உள்ளது. புதினத்தில் சாதிப் பெயர்கள் இடம் பெற்றுள்ளது. பழைய மரபுகளும். புதிய கருத்துகளும், நகரத்திற்கும். கிராமத்திற்கும், இளமைக்கும், முதுமைக்கும் இடையே அமைந்து சிக்கலைச் சித்தரிக்கும் வகையில் அமைந்துள்ளது.

30. மு. வ. வின் நோக்கில் எழுத்து - சொல் - மொழி

மு. மாலா
ஆய்வாளர்
தூய நெஞ்சக் கல்லூரி
திருப்பத்தூர்.

முன்னுரை

மொழி என்பது மனித சமூகத்தின் கருத்து பரிமாற்ற கருவி. மனித மனத்தின் அறிவு வளர்ச்சிக்கான ஊற்றுக்கண். விலங்குகளையும், மனிதனையும் வேறுபடுத்துவதும் மொழியே மனிதனின் நாகரிக வளர்ச்சிக்கு முதன்மை பங்கு வகிக்கிறது. மொழியின் வரலாறும், மனித சமூகத்தின் வரலாறும் ஒன்றே எனலாம். மனிதனின் கருத்து பரிமாற்றம் மட்டும் செய்யும் கருவியல்ல, புதிய சமூகத்தை வளர்த்தெடுக்கும் ஆற்றல் மொழிக்கு உண்டு.

மொழியின் தோற்றம் வரலாறு குறித்து மு.வரதராசன் ‘எழுத்தின் கதை, சொல்லின் கதை, மொழியின் கதை’ எனும் நூலில் மொழி எவ்வாறு தோன்றி வளர்ச்சியடைந்திருக்கும் என்பதனை ஆயும்பொருட்டு எழுதியுள்ளார். அந்நூலின் கருத்தாக்கங்களே இக்கட்டுரையின் சாராம்சம் ஆகும்.

மொழி கொள்கைகள்

மொழி தோன்றிய் வரலாற்றினை கண்டறியும் நோக்கோடு பல மொழியறிஞர்கள் பல்வேறு கருத்துகளை மொழிக் கொள்கைகளாக பதிவு செய்துள்ளனர். அவைகள் *(1)* தெய்விகக்கொள்கை (Divine Theory), *(2)* ஒப்பந்தக் கொள்கை (Contract Theory) *(3)* தூண்டுணர்ச்சிக் கொள்கை (Instinct Theory) *(4)* குறிப்பொலிக் கொள்கை (Pooh-Pooh Theory) *(5)* ஒலிப்பொலிக் கொள்கை (Bow- Wow Theory) *(6)* மணியொலிக் கொள்கை (Ding dong Theory) *(7)* அயாவுயிர்ப்புக் கொள்கை (Yo-he-ho- Theory) *(8)* சைகைக் கொள்கை (Gesture Theory) *(9)* தொடர்புக் கொள்கை (Contact Theory) *(10)* உணர்வொலிக் கொள்கை (Emotion Theory) போன்றனவாம் (தேவரேயப்பாவாணர். *90-91*).

மொழியின் தோற்றம் பற்றிய ஆய்வில் மு.வ. கடவுள் கொள்கையை மறுக்கிறார். இயற்கை ஆற்றலை மக்கள் பயன்படுத்தி வளர்த்த முறைகளைப் பின்பற்றியே மனிதனின் பெரும் முயற்சியால் மொழியின் தோற்றம் உண்டானது. இது மனிதனின் நீண்டகால மனித முயற்சிகளுள் முக்கியமானது என்பதை ‘உயிர்த்தல் முதலியவற்றில்

மக்களின் எண்ணமும் முயற்சியும் குறைவு அதை தாமே இயற்கையாய் நடைபெறுவன என்று கூறத்தக்கன. மோழி அவ்வாறு தானே அமைந்து நடைபெறும் ஒன்று என்று கூறிவிடல் இயலாது. இயற்கையில் அமைந்த சில தேவைகளின் பொருட்டு இயற்கையால் அமைந்த ஆற்றலைக் கொண்டு உடையும், உறைவிடமும் மக்கள் தேடிக் கொள்வது போல் மொழியும் அவர்களால் கற்றுக் கொள்ளப்பெற்றது' (மு.வ:186) என்பார்.

மொழியின் கதை

மனிதன் முதன்முதலில் மொழி தோன்றிடாத போது சைகை மூலமே கருத்தினை உணர்த்தி வந்தான். இரவு, தொலைவு காரணமாக மனிதன் கருத்துகளை பரிமாறிக் கொள்ள முடியவில்லை. அத்தகைய காலகட்டத்திலேயே ஒலிபரிமாற்ற முறை மொழியாக உருவாகின. இச்செயலினை விலங்கு, பறவைகளிடம் கற்றே மனிதன் ஒலியெழுப்பினான் என்பதாம். மனிதனும் சங்கேத ஒலியை பயன்படுத்தி அந்தக் காலகட்டத்தில் அவனும் மிருகம் போல் பண்பற்ற, மொழியற்ற, நாகரிமற்ற மனிதனாகவே வாழ்ந்து வந்தான்.

'கோழிக்கும் மற்றப் பறவைக்கும் விலங்கிற்கும் உணர்ச்சி ஒன்றுதான் தெரியும். மனிதனுக்கு இன்னும் இரண்டுவகை ஒலிகளும் தெரியும். அதனால் தான் மனிதனுடைய பேச்சு நாகரிகமாக வளர்ந்திருக்கிறது. உணர்ச்சி ஒலி, போலி ஒலி, குறிப்பு ஒலி என்ற மூன்று வகையும் இருப்பதால் தான் மனிதனுடைய பேச்சு நன்றாகப் பண்பட்டு மொழியானது (மு.வ:97-98) என்பார்'. மொழியின் வளர்ச்சியே மனிதனை பண்படுத்தியது என்பதே இக்கருத்தின் வழியே உணரலாம்.

உணர்ச்சி மொழி

உணர்ச்சிகள் உந்துதலால் உருவான மொழி வெறுப்பு, மகிழ்ச்சி, அச்சம் முதலான உணர்ச்சிகளால் சிலவகை ஒலிகளை மனிதன் உண்டாக்கினான். மனிதன் முதலில் பாடினான் என்பதை யாரும் நம்ப இயலாத ஒன்று. மொழியின் ஓசை சீரான ஒலி நயத்தை உண்டாக்கி இசையினை பதிக்கும் சொற்களின் அழகினைக் கூட்டின. சங்கீத முறைப்படி அமைந்த பாடல் அல்ல அது. ஒலிகளின் ஓசை நயத்தால் உண்டான பாடல் எனலாம். இதனையே 'பழங்காலத்தில் செய்யுளே மிகுதியாக இருந்து வந்து. பிற்காலத்தில்தான் உரைநடை வளர்ந்தது. இதில் எதுகை, மோனை ஓசை இணைப்பு சொல் கோப்பு ஒன்றுக்கும் இடம் இல்லை. செய்யுளின் இவற்றிற்கு இடம் உண்டு. அதனால் பழங்காலத்தில் இலக்கியம் எல்லாம் செய்யுளாக இருந்து வந்தது. அதனாலேயே தலைமுறை தலைமுறையாக மாறாமல் இருந்து வந்தது. இல்லையானால் மொழி விரைவில் மாறி

மாறி யாருக்கும் தெரியாததாக ஆகிவிட்டிருக்கும் என்பார் (மு.வ:107)

இதன்வழியே பழங்காலத்தில் எழுதா இலக்கியம் இருந்தது எனவும் அவை இன்று நாட்டுப்புற பாடல்கள் என்னும் பெயரில் இன்றும் வழக்கில் உள்ளதைச் சான்றாக்கிக் கொள்ளலாம். மொழி உணர்ச்சிகளின் மொழியிலிருந்து பண்பட்ட அறிவு மொழியாக பயனித்தது எனலாம்.

சொல்லின் கதை

"தங்கள் காதால் கேட்ட ஒலியையே திருப்பிச் சொன்னார்கள் திருப்பிச் சொன்ன ஒலியே சொல் ஆகிவிட்டது" (மு.வ:73). மொழியின் தேடலில் முதல் கண்டுபிடிப்பு சொல் என்பதாம். சொல் எவ்வாறு உருவாகி இருக்கும் என மு.வ. ஆய்கையில் பறவைகள் விலங்குகள் எழுப்பிய ஒலிகளையே அந்தப்பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் அவை எழுப்பும் ஒலியின் வடிவத்தையே அவற்றிற்குப் பெயராக வைத்து அழைத்தனர். இதுவே மனிதனின் முதல் சொல்லாக இருந்திருக்கக்கூடும் என்பதாம். உதாரணமாக மின்மினி, காக்கை, போன்ற பெயர்களைக் குறிப்பிடலாம்.

உணர்ச்சி ஒலி

"வெறுப்பு, மகிழ்ச்சி, அச்சம் முதலான உணர்ச்சிகளால் சிலவகை ஒலிகளை மனிதன் உண்டாக்குகிறான். வெறுப்பு அடைந்தபோது 'சே' என்கிறான், மகிழ்ச்சியாக இருக்கும் போது 'ஓ ஓ', 'ஆ ஆ' என்கிறான். இவ்வாறு பிறக்கும் ஒலிகளே பிற்காலத்தில் சொற்களாக மாறி விடுகின்றன" (மு.வ:52).

இதே போல் அம்மா, அப்பா என்ற சொற்கள் குழந்தைகளின் வாயின் இணைத்து இணைத்து எழுப்பிய ஒலியே வார்த்தைகளாகக் கொள்ளப்பட்டதாகக் கூறுவார். மனிதனின் பழக்கவழக்கத்தில் ஏற்படும் சொல்லே பொருள் பொதிந்த சொல்லாக வளர்ச்சியடைந்தன என்பார்.

ஒருசொல் பலசொற்கள்

வேர்ச்சொல்லைக் கொண்டே மொழியில் அதற்குச் சம்மந்தமான ஒரு வகை சொற்கள் தோன்றின என்பர். "பழங்காலத்து இயற்கையான குரல்ஒலிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வாக்கியமாக இருந்தன. அந்த வாக்கியமே பெயர், அதுவே வினை என்று சொல்லக் கூடியவாறு இருந்தன என்பார்" (மு.வ:56). பெரும் வாக்கியங்களாக இருந்து வந்த ஒலி சொற்கள் பின்னர் தனித்தனிப் பொருள் உணர்த்தும் சொற்களாக பரிணமித்தன. அதில் முதலில் வேர்ச்சொல்லில் இருந்து வினை, தொழில் பெயர்கள் உருவாகின.

சொல் வழக்கு

சொல் முதலில் காரணத்தோடு ஏற்பட்டிருக்கும், பின்னர் நாளடைவில் அடையாளங்களாக வழங்குகின்றன. இதை 'மரபு' வழக்கு என்பர். ஒவ்வொரு பொருள், விலங்கு, பறவை மனிதனின் பெயர்கள் அனைத்தும் அவற்றின் தன்மை, உருவைக்கண்டே சொல்லப்பட்டது. பின்னாளில் அவை வெறும் அடையாளப் பெயராக ஆனது. 'நாய்' என்றால் நாக்கு நீளமான விலங்கு என்று பொருள். ஆனால் பின்னாளில் 'நாய்'என்பது விலங்கின் பெயர் மட்டுமே என அறியப்பட்டது.

மாறுபடும் வழக்கு

மொழிக்கு மொழி வழக்கு வேறுபடுகிறது. ஆங்கிலத்தில் Younger brother, Elder brother எனத் தன்னைவிட வயது மூத்த சகோதரனையும், இளைய சகோதரனையும் 'Brother' என்றே குறிப்பிடுக்கின்றனர். நுட-லநசஇ லுழரபெநச என்ற சொற்கள் வழக்கு அற்றுப் போயின. ஆனால் தமிழில் 'அண்ணன்', 'தம்பி' என உடன்பிறந்தான் என்ற சொல்லை வழங்காமல் 'அண்ணன்' 'தம்பி' என்ற சொற்களையே வழங்குகிறோம்.

"முன்பெல்லாம் 'நகர்' என்றால் பெரிய நகரத்தைக் குறிக்கும். தற்போது தெருவின் பெயர்கள் 'நகர்' என்றானது. 'பேசுகின்ற மக்கள் எப்படி மதிக்கிறார்களோ, அப்படித்தான் சொல்லும் வழங்குகிறது. மக்கள் எதை மதிக்கவில்லையோ, அது வழக்கில் இல்லாமல் போகிறது" (மு.வ:61) என்பார்.

சொல்லின் இசை

சொல் சீரான ஒலியமைப்பு ஓசையால் இசையை மனிதன் உணர்ந்திருந்தான். "பேச்சொலியில் (Phonetics) ஒலியன்கள், (Phonemies) சந்தியியல், Morphonemies உருபனியல், வாக்கிய அமைப்பில் (Syntax) என்று படிப்படியாக வெவ்வேறு நிலையில் மொழிகள்" இசை நயம் கூட்டுகின்றன. எனவே தான் மொழியியலாளர்கள் பேச்சு மொழியினை இசைவடிவில் ஆராயப்புகுகின்றன. (தெ.பொ.மீ:16)

உலகில் உள்ள எல்லா மொழியிலும் பல சொற்கள் இப்படி இசையோடு அமைந்திருக்கின்றன. தமிழ் சொற்களும் இப்படிப்பல உண்டு என்பார் (மு.வ:67) உதாரணமாக தமிழில் அல்ல என்ற சொல்லிற்கு மாற்றாக இல்ல என்ற சொல் வருவதற்கு பதிலாக இல்லை என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம். இல்லை என்ற சொல்லில் முன்னும் பின்னும் ஒலி 'இ' கரமாகவே வருவதால் இனிமை தோன்றுகிறது. சொல்லின் வடிவம் இசையமைதியிலேயே அமைந்துள்ளது. இவ்வாறே மக்கள் பயன்படுத்தும் பழமொழிகளும் இசை நயத்தோடு இருப்பதை காணலாம். "கிட்டாதயின்

வெட்டென மற என வழங்கும் பழமொழியின் இசைவடிவம் புலப்படும்". தெலுங்கு மொழி முழுவதும் அதிகமான இசை நிறைந்த ஒலியன்களை பெற்றிருப்பதால் அவை அதன் இனிமைக்கு சான்று என்பர். பாரதியின் சுந்தர தெலுங்கினில் பாட்டிசைத்து என்னும் வரிகள் புலப்படுத்தும்.

சொல்லின் இலக்கணம்

சொல் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதனை பண்பட்ட மனிதன் தெளிவான இலக்கணமாகப் பயன்படுத்தினான். மொழியின் அமைப்பு என்பது ஒலியன்கள், உருபன், சொற்கள் போன்றவைகளையும் இவற்றிற்கிடையே உள்ள உறவுகளையும் விளக்குவதாகும். இதைப் பொதுவாக மொழிக்கான இலக்கண அமைப்பு (எல்.இராமமூர்த்தி:21) என்பார்.

முன்னோர்கள் எப்படிச் சொற்களை வழங்கிவந்தார்கள் என்று நமக்கு தெரிவிப்பது இலக்கணம், பொருள் உள்ள சொற்களும், பொருள் இல்லாத சொற்களும் பயன்பாட்டு முறையில் இலக்கணம் வகுக்கமுடிகிறது. உதாரணமாக அண்ணன் தம்பியைக் கண்டான் என்பதில் யார் யாரைக் கண்டான் என்பதினை ஐ என்ற உருபு எழுத்து பொருளை உணர்த்தி நிற்கிறது. ஆனால் அதற்கு தனி பொருள் உணர்த்தும் தன்மையற்றது. சொல்லின் பொருள் புரிய இலக்கணப்படிப் பேசுதலே முக்கியம். படிக்காதவர்களும் நன்றாக இலக்கணப்படி பேசுகின்றனர். அவர்களின் மரபான வழக்கம் ஆகிவிட்டன என்பதனையே காட்டுகிறது.

கொச்சை மொழி (கிளை மொழி)

கிளை மொழி வழங்கும் இடம் பற்றி வட்டாரக் கிளை மொழி (Regional Dialect) என்றும், பேசுகின்ற மக்களின் சமூகநிலை பற்றிச் சமூகம் கிளைமொழி (Social Dialect) என்றும் கூறுவர். பேச்சு மொழியை வரிவடிவத்தில் அளிக்கும் போது அதனைப் பார்வை கிளைமொழி (Eye Dialect) என்பார். (சு.சக்திவேல்:291), வட்டாரத்திற்கு வட்டாரம், சாதிக்கு சாதி, தொழிலுக்குத் தொழில் வேறுபட்டாலும் கூட அவற்றிடையே பொதுத்தன்மை காணப்படும்.

(உ.ம்) வடக்கு கிளைமொழி எனக்சோசரம் (எனக்காக) சென்னை செங்கல்பட்டு,

பிராமண மொழி - உபவாசம் (படடினி)

அரிசன பேச்சுமொழி - பில்லு (புல்லு)

குறுமொழி (Slang)

குறுமொழி ஒரு கூட்டத்தாரின் மொழியாக காணப்படும். நகைச்சுவையோடு மகிழ்ந்து பொழுது போக்கும் போது குறுமொழி மிகுதியாக இடம் பெறுவது போலவே, பிறர்மேல் கொள்ளும் வெறுப்பும் குறுமொழிக்குக் காரணமாக அமைவது உண்டு (மு.வ:38)

குறுமொழி இலக்கணத்தில் பதிவாகியுள்ளன.

"இலக்கணமுடையது இலக்கணப்போலி
மருவு என்றாகும் மூவகை இயல்பும்
இடக்கரடக்கல் மங்கலம் குழூஉக்குறி
எனுமுத் தகுதியோடு ஆறாம் வழக்கியல்"(நன்னூல், 267)

இதில் குழூஉக்குறி என்பது குறுமொழியாகும். குறுமொழி வேறுவேறு காலகட்டத்தில் புதிதாகத் தோன்றி கொண்டேயிருக்கும் இது (உம்) இவன் லஞ்சம் வாங்கினான், அவனுக்கு அறுவடைக்காலம் என்பதாக அமைத்து பேசுவர்.

எழுத்தின் கதை

மொழி தோன்றிய வரலாற்றில் எழுத்தின் தோற்றம் மிக முக்கியமான ஒன்றாகும். மொழியின் வளர்ச்சிகளை பதிவு செய்து எழுத்தின் மூலமே என்பதை உணரலாம். எழுத்து பேச்சு மொழிக்கும் பின்னர் பிறந்ததாயினும் எழுத்து சொல்லைவிடப் பலம் வாய்ந்தது ஆதாரத்தைத் தன் வரலாறாக் காட்டும் வல்லமை கொண்டது எனலாம்.

"பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் வேறுபாடு தோன்றும் இடங்களில் எழுத்து மொழியின் தீர்ப்பு வலிமை மிக்கதாக விளங்குகிறது" (த.கோவேந்தன்:22) என்பார். பேச்சு கற்றுக் கொண்டது ஒரு காலம் அதற்கு நெடுங்காலத்திற்குப் பிறகுதான் எழுதக் கற்றுக் கொண்டோம்.

எழுத்து உருவாதல்

குழுவாக வாழ்ந்த மக்கள் தன் இனக் குறியீடுகளை கல்லில் மரத்தில் குறியீட்டை வேடர்களுக்கு, குடும்ப அடையாளங்கள் குறிக்கப்பட்டது. பழங்காலத்து எழுத்துகள் படங்களாக எழுதினர். பின்னர் மாறி மாறி எழுத்துகள் ஆகின. ஒலியின் அடையாளங்களாக விளங்கின.

உலகத்திலுள்ள மொழிகளெல்லாம் Turanian, Semitic, Aryan என முப்பெருங்கவைகளாகயடங்கும். இவற்றுள் ஒவ்வொரு மொழித் தொகுதியாகும். இவற்றுள் துரேனிய கலையில் திராவிடக் (Dravidian) கிளைக்குத் தலைமையாகக் கருதப்படுவது 'அமிழ்தினும் தமிழ் மொழியே' (தேவநேயபாவாணர் 1,2).

ஆப்பு வடிவ எழுத்துகள், சித்திர எழுத்துகள்

எகிப்து நாட்டில் சித்தர எழுத்துகளை வரைந்தனர். அவர்கள் கோயில், அரண்மனை, தூண்களில் கற்பாறைகளில் இது மிகவும் பழங்கால எழுத்துகள் எனலாம். மெசபடோமியாவில் களிமண்ணில் செய்த எழுத்துகளைத் தான் ஆப்புவடிவ எழுத்துகள் என்கிறோம்.

சித்தர எழுத்தில் பொருள் பற்றியபடம் நன்றாகப் பதித்து இருந்தன. ஆனால் மெசபடோபியாவின் களிமண்ணில் எழுதியதால் கோடு கோடுகளாக படம் அமையப்பெற்றன. எனவே இது சித்தர எழுத்தைப்போல நேரடியாக பொருளை உணர்த்தாமல் சொல்லை உணர்த்தும் அறிகுறியாக மாறிவிட்டது. இது ஆப்புவடிவ எழுத்தின் வரலாறு நம் தமிழ் மொழியும் ஆப்பு வடிவத்தினின்று தோன்றியதாகும்.

அரபி எழுத்துகள், சீன எழுத்துகள்

செமிட்டிக் மொழிகளில் எல்லாம் வலப்புறத்திலிருந்து இடதுபுறம் நோக்கி எழுதும் முறை உண்டு. செமிட்டி இனத்தைச் சேர்ந்த அரபி மொழி குபியா என்னும் பெயர் வழங்குகிறது. 'பாபிலோனியா மொழி, யூத மொழி, ஹீப்கு மொழி, பினிசிய மொழி, அரபி மொழி, எகிப்து மொழி, சுபினீசிய மொழி, எத்தியோப்பியா மொழி முதலியவை செமிட்டிக் (Semitic) இனம் எனக்கூறப்பட்டது' (மு.வ:237).

சீனமொழியில் முதலில் பொருள்கள் உருவகங்களையே எழுதி வந்த நிலைமை மாறி விட்டது. அந்த எழுத்தின் பொருள்களுக்கு அடையாளங்களாக நின்றுவிட்டன. சீன மொழியின் எழுத்துகளுக்கு 'உருவங்கள்' என்றே பெயர். சித்திரமும் மாறியதால் சீனமொழியில் எத்தனை பொருள்கள் தெரியுமோ அத்தனையுமே படமாக வரைந்தனர்.

எகிப்து மொழியில் சித்திர எழுத்துகள் எல்லாம் ஒலியின் அடையாளங்களாக மாறி விட்டன. அதனால் மொழியின் எழுத்துகளில் வேகமான மாறுதல்களும் ஏற்பட்டன. ஆனால் சீன மொழியில் அப்படிப்பட்ட மாறுதல் அடையவில்லை. சீனமொழியில் பொருள் பெயர் மாறினாலும் எழுத்துக்கள் மாறுவதில்லை. ஒலிக்கும் ஒலிமட்டும் மாறிவிடும்.

தமிழ் எழுத்துகள்

ஆஸ்திரேலிய பழங்குடி மக்களின் மொழிகள் திராவிட மொழிகளோடு தொடர்பு உடையன என்று கருதினர். போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. பழங்காலத்தில் தமிழர்கள் சீனர்களை போலவே சித்திர எழுத்துகளையே எழுதி வந்தார்கள். வடஇந்தியாவில் பிராமிபோல்

தென்னிந்தியாவில் பழங்காலத்தில் இருந்தே எழுத்தே, பழைய தமிழ் எழுத்து. அந்த எழுத்துகளையே கல்லில் வெட்டிச் செதுக்கி எழுதவும் பயன்படுத்தினார்கள். அவை வட்ட வடிவமாக இருந்தன. அதனால் வட்டெழுத்துகள் என்று சொன்னார்கள் (மு.வ:42). வட்டெழுத்து ஓரளவு மாறிப் புதுவகையான எழுத்து ஏற்பட்டது. தமிழ் எழுத்துகள் பனை ஓலை எழுத்தாணி கொண்டு எழுதுவதினால் வளைவும், சுழிகளும் இருக்கும்படியான எழுத்தாக மாறின. இப்படித்தான் எழுதப்படும் பொருளுக்கும் எழுதும் கருவிக்கும் தகுந்தபடி எழுத்து முறையும் அமைந்துவிடும்.

ஐ, ஔ ஒலி என இரண்டு எழுத்துகள் பின்னாளில் வந்தன. அதே போல புள்ளியில்லா எல்லா மெய்யும் என்ற தொல்காப்பிய சூத்திரத்தின் கீழ் கி, கீ முதலியன மேல்விலங்கு பெற்றன. கு, கூ முதலியன கீழ் விலங்கு பெற்றன. கெ, கே முதலியன கோடு பெற்றன, கா, வா முதலியன புள்ளி பெற்றன, அருகே பெற்ற புள்ளியை இக்காலத்து காலாக எழுதுவர். பக்கத்தில் இரண்டு புள்ளியுடன் உட்பெறு புள்ளியை வரைந்தெழுதினா. (மாறகல் கார்த்திகேயன்:119). எழுத்துகள் மொழியின் தேவைக்கேற்ப வளம்பெற்று வந்தன.

முடிவுரை

மொழி ஓர் அருமையான கலை. மனிதனின் அயராத உழைப்பின் பலன். இது மனித அறிவியல் வளர்ச்சியினைக் காட்டும் காலக்கண்ணாடி என்பதனை மு.வ.வின் மொழிக்குறித்த தோற்றம் மற்றும் வளர்ச்சி பற்றிய கருத்தியல் அடிப்படையிலான நோக்கினை இக்கட்டுரையில் காணலாம்.

37. மு. வ. வின் அந்தநாள் நாவலின் சமுதாயச் சிந்தனை

பா.அப்துல் ரஹிமான்
முழுநேரம் முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை
உருமு தனலட்சுமி கல்லூரி
திருச்சி-19.

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் மிகச்சிறந்த எழுத்தாளராக விளங்கியவர் டாக்டர் மு.வ. என்பதை யாரும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது. இவர் வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள வேலம் என்னும் சிற்றூரில் அருமை அன்னை அம்மாக்கண்ணம்மாளுக்கும் அறிவில் சிறந்த முனிசாமி அவர்களுக்கும் செல்லப்பிள்ளையாக 25.04.1912-ல் பிறந்தார். 1 இவரை வீட்டில் திருவேங்கடம் என்று அன்பாக அழைப்பார்கள். இப்பெயர் திருப்பதி வேங்கடவனின் நினைவாக வைக்கப்பட்டது. பின்னர் மரபு வழிப் பெயராகிய தாத்தாவின் பெயரை வரதராசன் என்று அழைத்தனர். அம்மையாருக்கு மூன்றாம் குழந்தையாய் பிறந்தவர் மு.வ.மேலும், ஆறு குழந்தைகள் பிறந்தன. அவற்றில் மூன்று இறந்தன. இறுதியில் அந்தக் குடும்பத்தில் இருந்த சிறுமியர் இருவர். சிறுவன் சிறுமிகளுக்கு இடையே வளர்ந்த சிறுவனே மு.வ.

டாக்டர் மு.வ. அவர்கள் வேலத்திலும் வாலாஜானிலும் தொடக்கக் கல்வியைக் கற்றார். திருப்பத்தூரில் உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்தார். 1939ல் பி.ஓ.எல் பட்டமும், 1944ல் எம்.ஓ.எல் பட்டமும் பெற்றார். 1948ல் சென்னைப் பல்கலைக் கழகத்திலேயே முதன் முதலாகத் தமிழில் டாக்டர் பட்டம் பெற்றார். 1972ஆம் ஆண்டில் அமெரிக்காவிலுள்ள பாஸ்டர் கல்லூரி அவருக்கு இலக்கிப் பேரறிஞர் (பி.லிட்) என்ற சிறப்புப் பட்டத்தை நல்கிப் பெருமைபடுத்தியது. அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் பி.லிட் என்னும் சிறப்புப் பட்டம் பெற்ற முதல் தமிழறிஞர் மு.வ. ஆனார். நூல் எழுதுவதில் மு.வ. முதல் முதலாக ஈடுபட்டது 1939-ம் ஆண்டு குழந்தை பாட்டுக்கள் என்பதே அவருடைய முதல் நூல். 1935-ம் ஆண்டு தம் மாமாவின் மகளான ராதா அம்மையாரை மணந்தார். தொடர்ந்து 1943, 1949 ஆகிய ஆண்டுகளில் இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தன.

அவர் 1928ல் முதன் முதல் தாலுகா அலுவலகத்தில் எழுத்தராகப் பணிபுரிந்தார். 1935ஆண்டு முதல் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். 1939 முதல் 1944ஆம் ஆண்டு வரை

தமிழ் விரிவுரையாளராகப் பச்சையப்பன் கல்லூாயில் பணியாற்றினார். 1945-ஆம் ஆண்டு அக்கல்லூரிலேயே தமிழ்த்துறைத் துறைத்தலைவர் ஆனார். இடையே ஓராண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் துணைப் பேராசிரியராகப் பணிப் புரிந்தார். அறிஞர் ரா.பி.சேதுப்பிள்ளையின் மறைவுக்குப் பிறகு 1961 முதல் 1971 வரை சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றினார். 1971 முதல் 1974- ஆம் ஆண்டு வரை மதுரைப் பல்கலைக் கழகத்தின் புகழ் மிக்க இணையற்ற துணை வேந்தராகப் பணிபுரிந்தார். 1944-ஆம் ஆண்டில் எழுதி வெளிவந்த செந்தாமரை என்னும் நாவலே முதல் முதலாக எழுத்துலகில் அவருக்கு வெற்றி பெற்றுத் தந்த படைப்பாகும். அந்த நாவல் மு.வ-வின் எழுத்து வாழ்வில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியே வெளி வந்தது. அமெரிக்காவில் உள்ள பாஸ்டர் கல்லூரி ஊழடடநபந ழக றுழழளவநச மு.வ.வுக்கு டி.லிட் Doctor of Letters என்ற சிறப்புப்பட்டம் வழங்கியது. வித்துவான் எம்.ஏ., எம்.ஓ.எல்., பி.எச்.டி. என்பன மு.வ. பெற்ற கல்லூரிப் பட்டங்கள் ஆகும். அந்தப் பட்டங்களுக்கு அப்பால் அவர் உலகம் புகழ் பெற்ற பெரிய கலைஞராக விளங்கினார். சென்னை, அண்ணாமலை ஆகிய பல்கலைக் கழகங்களில் பேரவை (செனட்) அங்கத்தினராக இருந்தார். கேரளம், மைசூர், உஸ்மானியா, பெங்களூர் மதுரை முதலிய பல்கலைக் கழகங்களின் பாடத்திட்டக் குழுவில் இருந்தார்.

அவர் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி முதலிய மொழிகளைப் கற்றுத் பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தார். அவர் ரஷ்யா, மலேசியா, சிங்கப்பூர். பாரீஸ், இலங்கை, இங்கிலாந்து, பிரான்சு, ஜப்பான், ஜெர்மன், இத்தாலி, கிரேக்கம், எகிப்து, அமெரிக்கா முதலிய உலக நாடுகளை எல்லாம் சுற்றிப் பார்த்த முதல் தமிழ்ப் பேராசியரியராக விளங்கினார். மு.வ.வின் ஆவி அமைதியாகப் பிரிந்தது. 1974 அக்டோபர் 10 ஆம் நாள் தமிழகம் அழுத நாட்களில் ஒன்றாயிற்று. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கிய வரலாறு என எடுத்துக்கொண்டால் அதில் பெரும் பகுதி மு.வ. வையே சாரும். இவர் தமிழ் நெஞ்சம் மணல்வீடு, வள்ளல் வாழ்க்கை விளக்கம், திருக்குறள் தெளிவுரை, ஔவச்செய்தி, கண்ணகி, மாதவி, முல்லைத்திணை, நெடுந்தொகை விருந்து, குறந்தொகை விருந்து, நற்றினை விருந்து, இலக்கிய நற்றினைச் செல்வம், குறுந்தொகைச்செல்வம், நெடுந்தொகைச் செல்வம், நடைவண்டி, கொங்குதேர் வாழ்க்கை புலவர் கண்ணீர் என்று பலவும் எழுதியுள்ளார்.

குழந்தைப்பாட்டுக்கள், இளைஞருக்கேற்ற இனிய கதைகள், படியாதவர் படும்பாடு, கண்ணுடைய வாழ்வு என்பன சிறுவர் இலக்கியம். அன்னைக்கு, தம்பிக்கு, தங்கைக்கு, நண்பருக்கு என்பன கடித இலக்கியமாக எழுதியுள்ளார். அறமும் அரசியலும், அரசியல் அலைகள்,

குருவிப்போர், பெண்மை வாழ்க, குழந்தை, கல்வி, மொழிப்பற்று, நாட்டுப்பற்று, உலகப்பேரேடு, மதிப்பு, நல்வாழ்வு என்பன கட்டுரை நூலாக எழுதியுள்ளார். இதன் காரணமாக பச்சையப்பர் மனச்சான்று, இளங்கோ, டாக்டர் அல்லி, மூன்று நாடகங்கள் காதல் எங்கே? போன்ற நாடகங்களை எழுதி இலக்கிய உலகுக்கு அளித்தார். விடுதலையா? குறட்டை ஒலி, எனச் சிறுகதைகள் பல எழுதி சிறுகதைகளில் வெற்றி கண்டார்.

செந்தாமரை 1946, கள்ளோ காவியமோ? 1947, பானை 1948, அந்த நாள் 1949, மலர்விழி 1950, பெற் றமனம் 1951, அல்லி 1952, வாடாமலர் 1952, கயமை 1956, நெஞ்சில் ஒரு முள் 1956, அகல்விளக்கு 1958, மண்குடிசை 1959, என்பன நாவல்களைப் பல ஆண்டுகளில் படைத்து சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் நல்ல பல அறிவுரைகளை அளிப்பதாகப் படைத்துள்ளார். தமிழ்ச் தாயின் தலைமகனாக விளங்கிய மு.வ. 62 வயதில் 85 நூல்கள் எழுதி இணையில்லாப் புகழ் பெற்றார். அந்த நாள் நாவல்களில் மூலம் சமுதாயச் சிந்தனைகளைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

சமுதாயச் சிந்தனை

டாக்டர் மு.வ. வின் சமுதாய நோக்கம்

டாக்டர் மு.வ.வின் எல்லா நாவல்களிலும் சமுதாயச் கருத்துக்கள் நிறைந்துள்ளது. அவர் தன்னடைய நாவல்களில் நிறை குறைகளைச் சுட்டிக்காட்டி அவற்றை போக்க வேண்டிய வழிகளையும் மறைமுகமாக விளக்குகிறார். சமுதாயம் திருந்த வேண்டும் என்ற உண்மையான ஆர்வத்தோடு காத்திருந்து அதற்கு வேண்டிய வித்துக்களைத்தூவிக்கொண்டு கடமையை அமைதியாகச் செய்து கொண்டிருக்க வேண்டும் என்னும் வழியே டாக்டர் மு.வ. மேற்கொள்கிறார்.

டாக்டர் இரா. தண்டாயுதம் தன்னுடைய நாவல் வளம் என்ற நூலில் 'நாவலாசிரியர்களின் சமுதாய நோக்கங்களை ஒரு வகையாகக் கூறலாம். முதலாவது சமுதாயத்தின் நலிவுகளைக் காட்டி இதற்கு இன்ன காரணம் என ஆராய்ந்து மருந்து இது எனக் காட்ட முனைவதாகும். டாக்டர் மு.வ.வின் நாவல்கள் இந்த வகையைச் சார்ந்தன என்று குறிப்பிடுகின்றனர். சமுதாய நோக்கில் இருவகை உண்டு. ஒன்று சமூக அமைப்பைப் பற்றிக் கோணல் ஆராய்ச்சி செய்யாமல் ஒரு பற்றும் இல்லாமல் நேராக நோக்கி உண்மையைக் காண்பது மற்றொன்று சமுதாயத்தில் குறைகளைக் கண்டு பொல்லாதவர், கொடியவர் என்று சிலரைச் சுட்டிக்காட்டி எல்லாத் தீமைக்கும் காரணம் அவர் என்பது, டாக்டர் மு.வ.வின் சமுதாய நோக்கு மெய்யுணர்வு பெற்ற ஒரு கலைஞரின் நேரான

நோக்கு என்கிறார் இரா.மோகன். மு.வ.வின் நாவல்களுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள வரவும் உரிமையும் பற்றி டாக்டர் இரா.தண்டாயுதம் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

“டாக்டர் மு.வ. வின் நாவல்களையும் சமுதாயத்தையும் தனித்தனியே பிரித்துப் பார்க்கவே இயலாத மிக மேலான அறிவு நிலையில் நிற்கும் சான்றோராயினும், சமுதாயத்தை எவ்வாறு கூர்ந்து வழிகளோடு இவர் நோக்குகின்றார் என்பதை இவருடைய நாவல்களே தெளிவாகக் காட்டும்” என்று இரா.மோகன் தன்னுடைய மு.வ.வின் நாவல்கள் என்ற நூலில் சுட்டுகிறார்.

சமுதாயச் சிக்கல்கள்

டாக்டர் மு.வ. அவர்கள் தன்னுடைய நாவல்களில் சமுதாயச் சிக்கல்களை மையமாகக் கொண்டுள்ளாா.

1. உலகம் பெண்களுக்குத் தரும் கவலைகள்
2. சமுதாயம் நல்லவர்களுக்குத் தரும் தொல்லைகள் இவ்விரண்டு சமுதாயச் சிக்கல்களே மு.வ.வின் நாவல்களில் பேரிடம் பெறுகின்றன.

அந்த நாளில் சமுதாயக் கருத்துக்கள்

ரங்கனில் உலகப் போரின் காரணமாக ஜப்பானியர்களின் படையெடுப்பு, குண்டு வீச்சு அதிகமானது. இதனால் அங்குள்ள மக்கள் அனைவரும் மணிப்பூர் வழியாக தாய்நாட்டுக்கு வருகின்றார்கள். அப்படி வந்தவர்களில் வாணியும் நாகப்பனும் குறிப்பிடத்தக்கவர்கள். ஒரு நாட்டிற்கும், வேறு நாட்டிற்கும் போர் என்றால் அதற்குப் பலியாவது பொதுமக்களே. இந்தப்போரை எப்படியாவது நிறுத்த வேண்டும். நாட்டில் இனிமேல் போரே நடக்காத வண்ணம் நடவடிக்கை எடுக்க வேண்டும் விடுதலை வேண்டும் என எண்ணி ஐந்தாம் படை என்ற அமைப்பை உருவாக்குகிறார். வாணிக்கு சிறு வயது முதற்கொண்டு விடுதலை கிடைக்காமல் வாழ்ந்து வந்தாள். குடும்பத்தில் தான் பெரியவளாகி வீட்டிலும் பெரியவர்கள் அவளை சுதந்திரமாக விடாமல் அடக்கி வைத்து வளர்த்து வந்தார்கள். நாளடைவில் அவளுக்கு விடுதலை கிடைத்தது. அதனாலோ என்னவோ தன்னுடைய மக்களுக்கும் விடுதலை கிடைக்க வேண்டுமென்று சபதம் கொள்கின்றாள்.

மக்கள் கூட்டம் வேட்டையாடும் போது அதைத் தடுக்காமல் காதலைப் பற்றி எண்ணிக்கொண்டு இருப்பது தவறு சமுதாயத்திற்காகப் பாடுபடவேண்டும் என எண்ணுகிறாள். நாடு தீப்பற்றி எரியும்போது, ஒரு

சந்தன மரம் வெந்து சாம்பலாவதைப் பற்றி வருந்திப் பயன் என்ன? ஒரு முல்லைக்கொடி கருகி அழிவதைப் பற்றி ஏங்கிப் பயன் உண்டோ? எரியும் செந்தீயைத் தணித்து அளிக்க முடியுமானால் அழிக்கலாம் என்று சமுதாய உணர்வைக் காட்டுகிறார். வாணியின் நாட்டிற்கு விடுதலை வேண்டும் என்ற உணர்வுக்கு நாகப்பனும் துணை செல்கிறான். இரண்டு பேருமே ஆரம்ப காலத்தில் அப்பாவிடத்திலும், மாமாவிடத்திரும் தன்னுடைய கருத்துக்களை கூற முடியாமல் தவித்தனர். இப்பொழுதோ சமுதயத்தில் இவர்களும் தனிப்பட்டவர்களாகி விட்டனர். அதனால் அவர்கள் சுதந்திரமாக இருந்து கொண்டு சமுதாயத்திற்குத் தொண்டு செய்ய நினைக்கின்றார்கள்.

பொன்முடி கணவனை இழந்து மகளையும் சமுதாயச் சிறைக் கைதியாக இருப்பதைப் பார்த்து தானும் சமுதாயத்தில் வாழ வேண்டும் என எண்ணுகிறாள். இதற்கு முன்னர் கணவன் இறந்த பின் நாம் வாழும் வாழ்க்கை தேவைதானா? என்று குழம்புகிறாள். நீலமேகனின் துணையால் மகளுக்காக சமுதாயத்தில் வாழ நினைக்கிறாள். மாதவி எவ்வாறு கோவலன் இறந்த பின் மகள் மணிமேகலைக்காக வாழுகின்றாளோ, அதுபோல தாமும் சமுதாயத்தில். வாழ வேண்டும் என்ற கதைப்பாத்திரத்தை மு.வ. அவர்கள் அமைத்திருப்பது மிகவும் சாலச் சிறந்தாகும். நீலமேகன், குணமாலையை வஞ்சிக்கின்றான். ஆறுமுகத்தோடு தொடர்பு வைத்துள்ளாய் என்று பழி சுமத்துகிறான். ஆனால் இருவரும் தூய்மையான அன்புள்ளம் கொண்டவர்கள் நேர்மையாக வாழ்க்கை மேற்கொண்டவர்கள், வாழமுடியாது இறந்து விடுகின்றனர். இதனால் விதிப்பயனோ என்னவோ ஆறுமுகத்துக்கு மகளாகப் பிறந்தவள் இளம் வயதில் காதலை வெறுத்து, வாழ்க்கையை விடுத்து சமுதாயத்திற்காகப் பாடுபடுகின்றார். டாக்டர் மு.வ. அவர்கள் அந்த நாளில் ஒரு பெண்ணின் மூலமாகச் சமுதாயத்திற்கு விடுதலை கிடைக்க எண்ணுகிறார். இவருடைய நாவலில் ஒவ்வொரு கதை மாந்தரும் நெஞ்சத்தை விட்டு விலக முடியாதது.

'அந்த நாள்' நாவலில் ஒவ்வொரு நிகழ்ச்சியும் சிந்திக்கத்தக்கது. குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவிற்கு எந்த நிகழ்ச்சியை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். சமுதாயத்தில் ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசம் இல்லாமல் ரங்கனில் நடைபெற்ற போரானது காட்டுகிறது. மாடி வீட்டிப் பெண்கள் எல்லாம் தலையில் முக்காடு போட்டுக்கொண்டு, மாட்டு வண்டியில் ஏறிக்கொண்டும், நடந்தும் சென்று கொண்டிருந்தார்கள். இதனை ஆறுமுகம் பார்த்துக்கொண்டு எப்படியெல்லாம் இருந்த குடும்பம் இப்படி ஆகிவிட்டது என்று மனம் நொந்து கொள்கிறார். இப்பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வராமல் சுகபோக அனுபவங்களை பெற்றிருக்கிறார்கள்.

ஒரு பெண் சமுதாயத்தில் முரடனாக விளங்கும் நீலமேகனை மனம் திருத்துகிறார். அவனும் மனம் திருந்திவிடுகிறான். இது நாள்வரை தாய் அன்பைப் பெறாத அவன் இந்த கைம்பெண்ணின் மூலமாக மனம் திருந்துவது குறிப்பிடத்தக்கது. நீலமேகனும், ஆறுநாள் பழக்கமான கைம்பொண்ணும் ஒருவரோடு ஒருவர் வழி நடந்து கொண்டு இருந்தனர். திடீரென்று மலைச்சரிவில் அவள் கால் தவறி விழுந்து இறந்து விடுகிறாள். இதைப் பார்த்த வண்ணம் இருந்து நீலமேகன் மனம் நொந்து கொள்கிறான். ஏன்தான் என்னை கடவுள் ஆட்டிப் படைக்கின்றான். எனக்குப் புதிய உலகத்தை காண்பித்தவள் அவள் சில வினாடிகளுக்குள் ஆண்டவன் அவளை அழைத்துக்கொண்டானே என வேதனையுறுகிறான். அவளே எனக்கு தெய்வமாவாள்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்

என வள்ளுவன் கூறுவது போல் அவனை ஆண்டவன் அழைத்துக்கொண்டு விட்டான் என நீலமேகன் நினைக்கின்றான். சமுதாயத்தில் உயர்ந்தோர். நல்ல பண்புடையோர் சீக்கரமே உலகத்தை விட்டு இறைவனிடம் சென்றுவிடுகின்றனர் அந்தக் கைம்பெண்ணும் அப்படிப்பட்டவள்தான். அவள் மிகவும் துணிச்சல் உள்ளவள். அவளும் உயிரோடு இருந்து வாணியோடு சேர்ந்திருப்பாளேயானால் சமுதாயத்தை மாற்றியே காண்பித்திருப்பார்கள். அப்படிப்பட்ட சமுதாய உணர்வு கொள்கைப் பிடிப்பு, நம்பிக்கை, திறமை போன்றவைகள் அவளிடத்தில் காணப்பட்டன. இந்தப் போராட்டமான சமுதாயமானது நல்லவர்களை வாழவிடாது. தீயவர்களை வாழவிடும். இதற்கெல்லாம் என்றாவது ஒரு நாள் ஆண்டவன் தீர்ப்பளித்து விடுவான். மனிதர்களே, மனிதர்களுக்கு தீர்ப்புக் கூற முடியவில்லை. காரணம் மறுநாள் தீயவர்களால் தீர்ப்புக் கூறப்பட்டவன், நல்லோர் என மதிக்கப்படுவன் காணாமற் போய்விடுவான். இதுபோன்ற சூறாவளிக் காற்றுக்கு இடையில் ஒன்றும் தெரியாத அப்பாவி மக்களும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இவர்களையும் ஆண்டவன் கவனித்து வருகிறான்.

டாக்டர் மு.வ. அவர்கள் அந்தநாள் நாவலில் இதுபோன்ற சமுதாயக் கருத்துக்களை உணர்த்துகின்றார். அந்த நாளில் மு.வ. அவர்கள் ஒருசில குறள்களையும் பயன்படுத்தியுள்ளார்.

1. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
   புன்கண்நீர் பூசல் தரும்.

2. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
   பற்றுக பற்று விடற்கு.

சிந்தனைகளில் தெளிவும் நடுநிலைமையும்

மு.வ. வின் சிந்தனைகளில் ஆங்காங்கே பெரும் புரட்சி காணப்படும் சீர்திருத்த ஆர்வம் காணப்படும், நல்ல நடுநிலைமை காணப்படும் வாழ்க்கைத் தெளிவு காணப்படும். நாடு, மொழி, சமயம், கல்வி, அரசியல், வாழ்க்கை, குழந்தை, பெண்மை, இப்படி எல்லாவற்றைப் பற்றியும் சிந்தித்து அவர் நூல்கள் எழுதியுள்ளார். அவர் சிந்தனை பாயாத வாழ்க்கைத் துறை - சமுதாயக் கூறு எது என்று தான் தெரியவில்லை. இந்த நூற்றாண்டில் தமிழ் தந்த சிந்தனையாளர்களிடம் அறிஞர்களிலும் டாக்டர் மு.வ. சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். இலக்கியம், மொழி, நாவல், சிறுகதை, நாடகம், திறனாய்வு முதலிய பல துறைகளில் இவருடைய அளப்பறிய ஆற்றல் வெளிப்பட்டிருந்தாலும், அவை சிந்தனை என்ற நூலிலேயே சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆராய்ச்சியானாலும், படைப்பாற்றலானாலும் அவற்றில் இவருடைய சிந்தனையே இருக்கும் என்று 'தற்காலத் தமிழ் இலக்கியம்' என்ற நூலில் டாக்டர் இரா.தண்டாயுதம் எழுதியுள்ளக் கருத்து இங்கு நினைவு கூறத்தக்கதாகும்.

மு.வ. அரசியலில் நேரடியாக இயங்கித் தொண்டாற்றவில்லை. கட்சிச் சார்பு இல்லாமல் பொதுவாக அரசியலைப் பற்றி இரண்டு நூல்கள் (அறமும் அரசியலும், அரசியல் அலைகள்) எழுதியுள்ளார். அவற்றில் இன்று உலகெங்கும் அரசியல் வாழ்க்கை ஊழலாக இருப்பதற்குப் பொதுமக்கள் அரசியலில் முன்னேறாததே காரணம் என்று உணர்த்தியுள்ளார். அறநெறியையும் அரசியலையும் பிரிக்காமல் பிணைத்து நோக்கி வாழ்க்கையோடு இணைத்துத் தொண்டாற்ற வேண்டும் என்று வழிகாட்டியுள்ளார் 'அறமும் அரசியலும்' என்ற நூலின் முன்னுரையில் அவர் எழுதியுள்ள பின்வரும் கருத்து உணர்ந்து போற்றத்தக்கதாகும்.

"தனி மனிதன் வாழ்க்கைக்கு உணவும் உறக்கமும் இருந்தால் போதும் மக்கள் பலர் கூடி வாழும் சமுதாய வாழ்க்கைக்கே அறம் கட்டாயம் வேண்டும். உடம்பின் நன்மைக்கு அறத்தின் அடிப்படை கட்டாயம் வேண்டும். அரசியலில் அல்லல் விளைப்பதற்கெல்லாம் முதல் காரணம் அறமாகிய அடிப்படையைப் புறக்கணிப்பதுதான் என்று உணர வேண்டும். கடவுள் எல்லா உயிர்களின் வாழ்வுக்கும் பொதுவான திட்டங்கள் வகுத்து பொதுமையான ஆட்சி புரியும் ஒரு பெருஞ்சக்தி என்று உணர வேண்டும். கடவுள் எங்கும் என்றும் உள்ளபெருஞ்சக்தியாய் எல்லாப் பொருளுமாய் எல்லா உயிருமாய் விளங்குதலை எண்ண வேண்டும். உடலுக்கு உயிர் எப்படியோ, அப்படிப் படைப்புக்குக் கடவுள், உடல் முழுதும் உயிர் இருப்பது போல், உலகமெங்கும் கடவுளின் சக்தி உள்ளது.

முடிவுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் தனக்குஎன ஓர் நடையை வகுத்துக்கொண்டு, எழுத்தாளராக விளங்கியவர் டாக்டர் மு.வ. அவாகள், தன்னுடைய சிதறிய முத்துக்களால் இலக்கியம் படிக்கும் அனைவராலும் போற்றப்படுபவர். பேராசிரியாராகவும், துணைவேந்தராகவும் பணியாற்றியவர், ஆனால் இறுதி நாள் வரையிலும் எழுத்தாளராகவே பணியாற்றினார். அதில் எவ்வித வெறுப்பும், சலிப்பும் இல்லாதவர். தமிழ் தாயின் தலைமகனாக விளங்கிய மு.வ. 62 வயதில் 85 நூல்கள் எழுதி இணையில்லாப் புகழ் பெற்றார். இவருடைய இலக்கியங்கள் அனைத்தும் ஆராய்ச்சிக்கு உரியவை. ஏழைக் குடும்பத்தில் பிறந்து எளிமையாக வாழ்ந்து தனக்கென ஒரு வடிவை ஏற்படுத்திக்கொண்டவர் என இக்கட்டுரையின் மூலம் தெளிவாக விளக்கியுள்ளார்.

அடிக்குறிப்புகள்

1. அந்த நாள், டாக்டர் மு.வ., 5, பாரிநிலையம், சென்னை -1
2. யான் கண்ட மு.வ., இரா.மோகன், 23,வெற்றிவேல் பிரிண்டர்ஸ், மதுரை-1
3. அந்த நாள், டாக்டர் மு.வ., 6, பாரிநிலையம், சென்னை -1
4. யான் கண்ட மு.வ., இரா.மோகன், 25, வெற்றிவேல் பிரிண்டர்ஸ், மதுரை-1
5. யான் கண்ட மு.வ., இரா.மோகன், 30, வெற்றிவேல் பிரிண்டர்ஸ், மதுரை-1
6. அந்த நாள், டாக்டர் மு.வ., 6, பாரிநிலையம், சென்னை -1
7. அந்த நாள், டாக்டர் மு.வ., 7, பாரிநிலையம், சென்னை -1
8. அந்த நாள், டாக்டர் மு.வ., 6, பாரிநிலையம், சென்னை -1

32. மு. வ. வின் பார்வையில் நாகரிகம்

முனைவர் சு. அரங்கநாதன்
விரிவுரையாளர்
தமிழியல் துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி -12

தமிழ் இலக்கியமும், அவ்விலக்கியம் குறித்த திறனாய்வுப் பாதையும் பன்னெடுங்கால வரலாற்றினை உடையது. இவ்வரலாற்றில் எத்தனையோ இலக்கிய வாதிகளும், படைப்பாளிகளும், திறனாய்வாளர்களும் தங்கள் பங்களிப்பை செய்துள்ளனர். அவரவர் சிந்தனைக்கும், திறமைக்கும் ஏற்ற வகையில் செயலாற்றியுள்ளனர். இச்செயலாற்றலில் பெரும் அதிர்வுகளையும், வீச்சையும் செவ்வனே செய்து தமிழ் இலக்கிய வரலாற்றில் நீங்கா சிரஞ்சீவியாய் இருப்பவர்கள் சிலரே. அச்சிலரில் மு.வ. முதன்மைபெறுகின்றார். அவர் ஒருதுறை சார்ந்தவரல்ல என்பதை அனைவரும் அறிந்ததே. அவர் பல்துறை வித்தகராக தமிழ் இலக்கியப் பரப்பில் வலம் வந்தவர். மு.வ. அவர்கள் படைப்பாளியாகவும், திறனாய்வாளராகவும், ஆய்வறிஞராகவும் பன்முகத் திறனாளியாக வாழ்கின்றார். அவரது எழுத்துலகில் முக்கிய இடத்தினைப் பெற்ற நூல் தமிழ் நெஞ்சம் எனும் கட்டுரைத் தொகுப்பு நூல். இந்நூலில் எட்டுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிலையில் தனித்தன்மை பெறுகின்றன. இக்கட்டுரைகள் அனைத்தும் பழந்தமிழ் இலக்கியத்தின் மாண்பினை எடுத்துரைக்கின்றது. இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள முதல் கட்டுரை நாகரிகம் என்பதாகும். இக்கட்டுரையின் மூலம் மு.வ. அவர்கள் முன்னிறுத்தும் நாகரிகம் என்னும் சொல்லிற்கான புரிதலை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இக்கட்டுரையின் தொடக்கமே வாழ்க்கை குறித்த ஒரு விசாலமான பார்வையாக இருக்கின்றது. தமிழ் சமூகத்தின் வரலாறு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது. இவ்வரலாற்றில் மக்கள் எந்த மாதிரியான முன்னேற்றத்தை அடைந்துள்ளனர் என்ற கேள்வியை எழுப்பி அதற்குப் பதிலையும் தருகின்றார் மு. வ. அவர்கள். எல்லாம் புறத்தில் நேர்ந்த முன்னேற்றம் (தமிழ் நெஞ்சம் - பக்கம் 5) இவ்வாக்கியத்தில் ஆசிரியர் மனித முன்னேற்றம் குறித்த ஆழமான, தீர்க்கமான விமரிசனத்தை முன்வைக்கிறார். மனித முன்னேற்றம் மேலோட்டமான முன்னேற்றம், அம்முன்னேற்றம் ஆழமான, நிரந்தரமான முன்னேற்றமாக இல்லை என்பதை தெளிவுபடுத்துகின்றார். இம்மேலோட்டமான முன்னேற்றம் எதனால் நிகழ்ந்தது

என்பதை அடுத்து பத்திகளில் விளக்குகின்றார். இதில் அறிவியலின் பயன்களையும் தீங்கினையும் முன்வைக்கிறார். போக்கு வரவுக் கருவிகளில் புதுமை பலகாண உதவியது அறிவியலே (தமிழ் நெஞ்சம் - பக்கம் 5) அறிவியல் தோற்றுவித்த விமான வெடிகுண்டும் நச்சுப் புகையும் அவற்றினும் கொடிய அணுகுண்டுமே இருநூறு கோடி மக்கள் இராப்பகலாய் நடுங்கவல்ல போர் நடைபெறக் காரணமாக இருந்தன. (தமிழ் நெஞ்சம் - பக்கம் 6) என்கிறார். இவ்வாறு அறிவியலின் தன்மையை விளக்கிய மு.வ. அவர்கள் அடுத்து மருத்துவ அறிவியலில் ஏற்பட்ட வளர்ச்சியினைப் பட்டியலிடுகின்றார். ஆனால் அறிவியலை முழுமையாகப் பாரட்ட முடியாது என்பதை உறுதியாகக் கூறுகின்றார்.

மக்கள் உயிரைப் போக்குவதில் இவ்வளவு விரைந்து தொண்டாற்றிய அறிவியல், மக்களின் உயிரைக் காக்குமளவில் அத்துணை உதவி ஆற்றியிருப்பின் ஒருவாறு நாகரிகம் வளர்ந்ததெனப் போற்ற முன்வரலாம் (தமிழ் நெஞ்சம் - பக்கம் 6) என்கிறார். இங்கே அறிவியலின் போக்கு நாகரிக நிலையை அடையவில்லை என்பதைத் தீர்மானமாகத் தெளிவுபடுத்தியிருக்கின்றார். இவ்வாறு அறிவியலின் போக்கினை விமரிசிக்கக் காரணம் என்னவென்பதையும் கூறுகிறார். அதாவது அறிவியலால் இழப்பீடுதான் அதிகம் என்கிறார். நாகரிகம் என்பது அறிவியலால் வளரவில்லை என்பதை சொல்லிவிட்டு, அடுத்ததாக நாகரிகத்தின் வளர்ச்சி, தொடக்கம் மற்றும் அதன் போக்கினையும் மாற்றங்களையும் சரியானதொரு இலக்கியச் சான்றுகளுடன் நிறுவுகின்றார். எந்த ஒரு கருத்திற்கும் சான்றாதாரம் முக்கியம் என்பதை மு.வ. அவர்கள் பின்பற்றுகின்றார். முதலில் நாகரிகம் அல்லாதது எது என்பதை உணர்த்துகின்றார். ஊணும் உடையும் படையும் வீடும் ஊரும் நாடும் காண்பது நாகரிகம் அன்று என்ற மு. வ. நாகரிகம் என்பது எண்ணத்தெரிந்து அறிவைப் பெருக்கிக் கலைகளை வளர்த்துக் கருத்து வகையால் உயர்ந்த உயர்வே நாகரிகத்தின் மலர்ச்சி எனலாம் (தமிழ் நெஞ்சம் - பக்கம் 7) என்கிறார். அதாவது நாகரிகம் கருத்தின் உயர்வே-உள்ளத்தின் உயர்வே நாகரிகம் (தமிழ் நெஞ்சம் - பக்கம் 7) என்கிறார். சங்கப்பாடல்களில் சுட்டப்படும் செல்வச் செழிப்பு, ஊண் சிறப்பு, உடைச்சிறப்பு, போன்றன சங்க மக்கள் திளைத்திருந்த ஆடம்பர வாழ்க்கை ஒரு புறமும், வறுமை, செல்வக் குறைபாடின்றி இருந்த பேரூர்கள் எனச் செல்வச் செழிப்பற்ற சங்க கால மக்களின் வாழ்க்கை ஒருபுறம் இருந்தது என்கிறார். இதற்கானச் சான்றுகளை சிறுபாணாற்றுப்படை, பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம், பொருநராற்றுப்படை, புறநானூறு, போன்ற இலக்கியங்களில் இருந்து நிறுவுகின்றார்.

மு. வ. அவர்கள் தனது கட்டுரைகளில் யாருக்கும் எந்த ஐயமும் ஏற்படா வண்ணம், யாரும் விமரிசிக்க இடமில்லாமல் கருத்துக்களைப்

பதிவு செய்வதில் வல்லராக இருந்திருக்கின்றார். பழந்தமிழ் அக இலக்கியங்களில் தலைவன், தலைவி இருவருக்குமான அகவாழ்வின் நிகழ்வுகள் முதன்மைப்படுகின்றன. இதேபோன்று புறவாழ்வில் அரசர்களின் கொடை, வீரம் போன்றன போற்றப்படுகின்றன. இக்கருத்துகளைத் தாண்டி மு.வ. அவர்கள் சங்ককாலச் சமூகம் சமநிலைச் சமூகம் இல்லை என்பதை அதே பழந்தமிழ் பாடற்சான்றுகளுடன் நிறுவுகின்றார். இவ்வேற்றத்தாழ்வுகளை மு.வ. அவர்கள் நாகரிகம் என்று ஏற்றுக்கொள்ளவில்லை. சங்க காலம் வளம்மிக்கது என்பதைச் சொல்ல பல்வேறு பாடற்சான்றுகள் இருக்கின்றன. ஆனால் அதில் சிறப்புடையதை, முதன்மையானதை, எளிமையானதை, அனைவருக்கும் எளிதில் புரியும் வரிகளைச் சான்றாகக் காட்டுகின்றார்.

வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளர்ந்தலை மயங்கிய (பட்டினப்பாலை 187-193)

இவ்வளமைமிக்க பேரூர்கள் ஒருபுறமும் வறுமைமிக்க மக்கள் ஒருபுறமும் என முரண்களை முன் வைக்கினறார். இதற்கான சான்றுகளை சிறுபாணாற்றுப் -படையிலிருந்து எடுக்கின்றார். சான்றிற்கு, ஒப்புக்காக ஒன்றிரண்டு வரிகளைக் குறிப்பிடாமல் வறுமை குறித்து வரும் பத்து வரிகளையும் சலிப்பில்லாமல், சோர்வில்லாமல், சோம்பல் இல்லாமல் குறிப்பிடுகின்றார்.

"ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்கல்
. . . .
குப்பை வேளை உப்பிலி வெந்ததை
. . . .
அழிபசி வருத்தம்" (சிறுபாணாற்றுப்படை 30-40)

இப்படிப்பட்ட செல்வச் செழிப்பு மிகுந்து காணப்பட்ட நிலையிலும், சிறந்த வீரத்தினையும், வள்ளன்மையினையும் உடைய மன்னர்கள் வாழ்ந்த அக்காலத்தில் வேந்தரின் படைவன்மையினையும், அழிக்கும் ஆண்மையினையும் பெருமையுடையன அல்ல என்று போற்றாது வாழ்ந்த அறிஞர் பெருமக்கள் குறிப்பிடும் கருத்தினையே நாகரிகம் என்கிறார். "அறிஞர் சிலர் ஒதுங்கி வந்தனர். அவர்தம் கருத்தில் தான் நாகரிகம் நிலவி நின்றது. அரசே, யானை, குதிரை, தேர், காலாள், என்னும் நாற்பெரும் படையால் பெருகிச் சிறந்திருக்கின்ற அரசு சிறப்புடையதெனக் கொள்ளல்

வேண்டா. அரசின் வெற்றிக்கு அடிப்படை இப்படைப் பெருமை அன்று, அறநெறியே என மதுரை மருதனிள நாகனார் என்ற புலவர், பாண்டியன் ஒருவனுக்கு அறிவுறுத்திய கருத்து நாகரிக விளக்கமாகும்" என்கிறார். இதற்குச் சான்றாக புறநானூறு 55, 197 ஆகிய பாடல் வரிகளைக் காட்டுகின்றார்.

இவ்வாறு தான் எடுத்துக்கொண்ட பொருளை நிறுவுதில் முழுமையான நிலைப்பாட்டினையும், அதற்கானச் சான்றுகளையும் அறைகுறையாக இல்லாமல் முழமையாகத் தரும் உன்னதமும் மு.வ. அவர்களின் தனித்தன்மையாகும். "நிகழ்ச்சிகளாகவும் அறிவுரைகளாகவும் துணிவுரைகளாகவும் பாடப்பெற்றுள்ள பாடல்களே நாகரிகத்தைத் தெளிவிக்கப் போதியன" என்று முடிவு சொல்லும் பாங்கு மு.வ. வின் ஆளுமைப்பண்பைக் காட்டுகின்றது. ஆனால் நாகரிகம் என்பது பழக்க வழக்கங்கள் சடங்குகள் இவற்றை ஆராய்வதால் புலனாகும் என்பது தவறு என்கின்றார்.

மு.வ. அவர்கள் தான் எடுத்துக்கொண்ட பொருளின் நேர் எதிர் நிலைகளை ஆராய்ந்து முடிவுகளைக் கூறுவதில் வல்லவர் என்பது வெளிப்படுகின்றது. ஓர் ஆய்வாளர் நடுநிலையாகச் செயல்படவேண்டும் என்பதற்கு ஏற்ப மு.வ. அவர்களின் கட்டுரைகள் அமைந்துள்ளதற்கு நாகரிகம் எனும் கட்டுரையே போதுமானது. நாகரிகம் என்பது மனிதனின் பக்குவத்தன்மை என்பதே தவிர சடங்கு, பழக்க வழக்கங்கள் போன்றவற்றைக் கொண்டு நாகரிகம் என்ற சொல்லை விளக்க முடியாது என்பது தெளிவாகின்றது. மு.வ. அவர்கள் நாகரிகம் என்பது மனிதர்களின் சமயம் சார்ந்த, அரசியல் சார்ந்த வளர்ச்சி அல்ல என்பதாகும். மாறாக அமைதியான மனிதநேயம் என்பதுதான் நாகரிகம் என்கிறார்.

33. அலைவுறும் அறிவியல் மு. வ. முன்வைக்கும் விமர்சனம்

முனைவர் ப. மெல்பா
விரிவுரையாளர்
தமிழியல் துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி - 12

முன்னுரை

நவீன தமிழிலக்கிய உலகில் பல்வேறு தளங்களில் தனது பதிவுகளைச் செய்தவர் மு.வ. நாவல், சிறுகதை, திறனாய்வு, மொழியியல் சார்ந்த ஆய்வுகள் என அவரது சிந்தனைப் புலங்கள் விரிகிறது. இப்புலங்களில் தமிழிலக்கியம் குறித்த இவரது திடகாத்திரமான அணுகுமுறை தமிழாய்வுகளில் முக்கியத்துவம் பெறுகிறது. இதுவரைத் தமிழிலக்கிய ஆய்வுகளில் பேசப்பட்ட கருத்தாடல்கள் இவரது பார்வையில் கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. இவ்வரிசையில் தமிழ்நெஞ்சம் என்ற கட்டுரைத் தொகுப்பு தமிழ் இலக்கியத்தின் மாண்பினையும், தமிழ் இலக்கியங்களில் சுட்டப்படும் தமிழர்களின் முன்னேற்றத்தையும் முன்னிலைப்படுத்துகிறது. இதற்கு எதிராகப் பலராலும் முன்னிலையாகப் பேசப்பட்ட அறிவியல் பின்னுக்குத் தள்ளப்படுகிறது. இவ் அறிவியல் பின்னுக்குத் தள்ளப்படுவதற்காக மு.வ. வைக்கும் கருத்தாடல்களை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

அறிவின் விளைவுகள்

அறிவியல் சிறந்த துறையாக எல்லோராலும் வரவேற்கப்பட்ட துறையாக, எல்லோராலும் வரவேற்கப்பட்ட முறையாகக் காணப்படுகிறது. அதன் புதுமைகளும் ஏராளம். இசையும் நாடகமும் பலர்க்கும் பயன்படுமாறு செய்யும் வானொலியும் (ரேடியோ), பேசும்படமும் (சினிமா) அறிவியலின் விளைவுகளே (ப.5). செய்திகள் வெகுசீக்கிரத்தில் உலகெங்கும் பரவவும், பல்லாயிரம் நூல்கள் பெருகத்துணை செய்ததும் அறிவியலின் விளைவுதான் இவ்வாறு பல நன்மைகள் செய்தாலும் பல தீமைகள் இருக்கின்றன என்பதைத் தனது நாகரீகம் என்னும் கட்டுரையில் பதிவு செய்துள்ளார்.

அறிவியலின் தீமைகள்

அன்று வாளும் வேலும் கொண்டு இருசாரர் போரிட்டுக் கொண்டு மடியும்போது யாரும் கலங்கியதில்லை ஆனால் அறிவியல் வளர்ச்சியினால்

துப்பாக்கியும், பீரங்கியும் கொண்டு போர் புரியும் போதும் பள்ளிக் குழந்தைகள் முதல் வயது முதிர்ந்த நோயாளிகள் வரை நடுங்கும் நிலை இல்லை. ஆனால் அறிவியலினால் தோற்றம் பெற்ற விமான வெடிகுண்டும், நச்சுப்புகையும், அணுகுண்டுகளும் உலகிலுள்ள அத்தனை மனிதரையும் நடுங்க வைக்கிறது. இவ்வாறு மக்கள் உயிரைப் போக்குவதில் இவ்வளவு விரைந்து தொண்டாற்றிய அறிவியல், மக்களின் உயிரைக் காக்குமளவில் அத்துணை உதவி ஆற்றியிருப்பின் ஒருவாறு நாகரிகம் வளர்ந்தெனப் போற்ற முன்வரலாம்(பக்.6) என்கிறார் மு.வ.

முற்போக்கை நினைவுறுத்தும் அறிவியல்

பெரிய மருத்துவ மனைகளில் சென்று நோக்கின் அறிவியலின் ஆக்க வேலைகளைக் காணமுடியும், மருந்துகளைப் புதிதாகச் செய்யும் முறை, உடலில் அவைகளைப் புகுத்தி குணமடையச் செய்தல், வியப்பு மிகுந்த அறுவை சிகிச்சைகளின் முன்னேற்றம், அறுவை சிகிச்சை செய்யும் கருவிகளின் பெருக்கம். மின்வலியால் நோய் வலியைத் தீர்க்கும் சிறப்புச் சிகிட்சைகள் என்று அறிவியல் பல முன்னேனற்றச் செயல்களைச் செய்வது முற்போக்கினை நினைவுறுத்துவதாக அமைந்துள்ளது. ஆனால் இவை அனைத்தும் பணம் படைத்த சிலருக்கே பயன்படுவதாக உள்ளது.

போர்களுக்காகப் பல அணுகுண்டுகள் தயாரித்து கோடிக் கணக்கில் செலவிடுவதில் ஒரு சிறு பகுதியைத்தான் மருந்துவத்திறகாக செலவிடுகின்றன. அறிவியலின் முன்னேற்றத்தால் நோயாளிகளும் அதிகமாகி மக்களின் உடல் வலியையும் குன்றுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு வருமுன் காக்கும் ஆக்கச் செயலுக்காக அதிகமாகச் செலவிடலாம். "பல்லாயிர உயிர்களைக் கொல்லும் கொலைக் கருவிகளைக் காண்பதில் எய்திய முன்னேற்றத்தையும் நோக்கி மருத்துவநிலையைக் கருவிகளின் முன்னேற்றத்தையும் நோக்கின் பின்னது சிறிதே எனத் தோன்றி விடும்" (பக்.7) எனக் கூறுகிறார் மு.வ.

அறிவியல் என்னும் கலை

பரிசில் வாழ்க்கை என்னும் கட்டுரை அன்று கலைகளை வெளிப்படுத்தும் பரிசில் பெறும் வாழ்க்கை மாறி அறிவியல் கலை வந்து விட்டதை எடுத்துரைக்சிறது. கட்டுரையின் ஒரு பகுதியாக இந்த அறிவியல் கலையே பதிவாகியுள்ளது.

பொருட்துரையில் முன்னேறிவிட்டதாகக் கூறும் மேலைநாட்டினர் எங்கும் இன்னிசையையும் நாடகங்களையும் வளர்த்தனர். "இந்தக் கலைகளுடன் விரைந்து வளர்ந்து சிறந்து விளங்கியது அறிவியல் என்னும் கலை" (பக். 78.79)வாழ்க்கை என்பது அடிப்படைத் தேவைகளுக்கான

முற்சியில் தொடங்குகிறது. ஆனால் அந்நிலை மாறி பொருளே வாழ்க்கையின் நோக்கமாகவும் மக்களின் நாட்டமாகவும் அமைந்துள்ளது. மேற்கு நாடுகள் உணவு, உடை முதலிய பொருட் கவலையினைக் கடந்தது போல் உரு பாவனைச் செய்து பொருள் துறையில் தாங்கள் முன்னேறி விட்டதாகக் கூறுகின்றனர்.

அறிவியல் கலையின் வியப்பு

மேலைநாடுகளில் அறிவியலின் வளர்ச்சியால் கலைகளில் பல மாருதல்கள் அடைந்துள்ளன. பல வியப்புக்குரிய செயல்களில் மாறுதல்கள் அடைந்துள்ளன. பேசும் படங்கள், வானொலி முதலியவை கலை அறிவைப் பலருக்கும் விரிந்த தளத்தில் பரப்பின. இவ்வாறு வளர்ந்த கலைகள் கிழக்கு நாடுகளுக்கும் பரவத்துவங்கியது. "எங்கெல்லாம் கலைகள் பல துறையிலும் பரவி கொள்ளுமிடத்துக் கொண்டும் கொடுக்குமிடத்துக் கொடுத்தும் மிக்க கலப்பும் வளர்ப்பும் பெற்றன." (பக். 79)

இனிய இசையமைப்பதில் தேர்ந்த கலைஞன் ஒருவன் பாடும் பாட்டை ஒரு வள்ளலின் அரசவையில் ஒருசிலர் மட்டுமே இருந்து கேட்டனர். ஆனால் அறிவியலின் வளர்ச்சியில் ஊர்தோறும், வீடுதோறும் கலைஞன் பாடியதை, இசைத்தட்டில் பின்னால் தேவைப்படும் போதெல்லாம், தேவையான இடத்திலெல்லாம் கேட்டு மகிழும் வாய்ப்பை மக்கள் பெற்றனர். மேலும் வல்லார் நாடகம் ஒன்றை நடித்து ஒலியும் பதியும் படக்காட்சியாக்கி அந்நாடகத்தை எங்கும் எவரும் எளிய செலவில் பார்த்து மகிழும் வாய்ப்புப் பெருகின. பெரும் பணக்காரர்கள் மட்டும் கண்டுகளித்த கலைகள் எளியவர்களுக்கும் பயனளிக்கும் விதமாக அறிவியல் கலை நாடெங்கும் பரவ ஆரம்பித்தன. அறிவியல் முன்னேற்றம் கலையைப் பொதுவுடைமையாக்கியது.

கலையைப் பொதுவுடைமையாக்கிய அறிவியல் முன்னேற்றம், இயந்திரங்களைப் பெருக்கி, வசதியையும் வாய்ப்பையும் ஒருசிலருக்கே உரியதாக மாற்றியது. மற்றவர்கள் வாழ்க்கைக்கான அடிப்படைக்கே திண்டாடு நிலையை ஏற்படுத்தியது. இதனால் நாட்டுக்கு நாடு ஏற்றத்தாழ்வுகள் பெருகியது. இரண்டு நாடுகளுக்கிடையே பூசல்களும் போர்களும் மூண்டன. இப்போர் பூசல்களுக்குக் காரணமான அறிவியல் துறைகேள அவற்றிலும் அளவற்ற முன்னேற்றத்தைக் கண்டு உதவியது. உலகை அழிக்க உதவியது(பக்.80)

கலைகளைப் பொதுவுடைமையாக்கி அறியல் நாகரிகம் வளர்த்த மேற்கு நாடுகள் வீழ்ச்சியுற்றன. அறிவியல் முன்னேற்றத்தால் கலை பொதுவுடைமையாய்ப் பரவிய போதும், வாழ்க்கையின் முதற்படியாகிய பொருட்கவலை தீரவில்லை. கலையுலகம் சமவெளியாகிவர வர

பொருளுலகம் மலையும், மடுவும் மிக்கதாகி வந்தது (பக்.81)பொருளினையே முதல் நோக்கமாகக் கொண்ட அவர்களுக்கு கலை ஒரு கருவியாகவே தோன்றியது. கலைகலைப் பொருட் போருக்குப் பயன்படுத்தினர்.பொருளின் பொருட்டுக் கலை இரையாகியது. அறிவியல் முன்னேற்றத்தால் கலை வளர்வது போல் தோன்றியது ஆனால் வளரவில்லை அலைவுறுகிறது.

முடிவுரை

மு.வ. அவர்கள் தமிழிலக்கயத் திறனாய்வாளர் மற்றும் படைப்பாளி மட்டும் அல்ல. அவர் சிறந்த அறிஞர். உலக நடப்புகளை கண்கானித்து அதனால் உலகில் ஏற்படும் நன்மை தீமைகளை ஆராய்வதில் வல்லவராக இருந்திருக்கிறார்.

பழந்தமிழ் இலக்கியத்தின் மாண்பினையும் அறிவியல் என்ற பெயரால் ஏற்பட்ட மனிதேய அழவினையும் தமிழ்நெஞ்சம் என்ற தனது கட்டுரைத்தொகுப்பு நூலில் தெளிவாக விளக்கியுள்ளார்.

இயற்கையைப் பாதிக்காத, மனிததன்மையுடைய மனித குலத்தின் முன்னேற்றத்தை முன்வைக்கும் தமிழிலக்கியத்தைப் போற்றுகின்றார். அதற்கு எதிர்நிலையில் முன்னேற்றம் என்ற நிலையில் கலையையும், பண்பாட்டினையும் ஏமாற்றும் அறிவியலை இத்தொகுப்பில் வெளிப்படையாக விமரிசிப்பது தெளிவாகத்தெரிகிறது.

மு.வ. அறிவியல் குறித்த தனது விமர்சனத்தில் அறிவியலின் நன்மை தீமைகளையும், அறிவியலை விடத் தமிழ் இலக்கியம் முன்வைக்கும் முன்னேற்றச் சிந்தனைகளை ஆக்கத்தன்மைகளை முதன்மைப்படுத்துவது இதன்மூலம் வெளிப்படுகின்றது.

34. டா. மு. வ. வின் புனைகதைத் திறன் (அகல் விளக்கை முன்வைத்து)

சு. சுந்தர்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
தெ.தி. இந்துக்கல்லூரி
நாகர்கோவில் - 2.

தம்முடைய அழகிய மணி மொழிகளையும், உயர்ந்த சிந்தனைகளையும் கலை வடிவாக்கித் தந்து இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற நாவலாசிரியராக விளங்குபவர் டாக்டர் மு.வ. தமிழகத்தின் ஏனைய நாவலாசிரியர்களுக்கும் மு.வ. வுக்கும் இடையே ஒரு குறிப்பிடத்தக்க வேற்றுமை உண்டு. மற்ற நாவலாசிரியர்களின் படைப்பிலக்கியம் படைப்பிலிருந்து திறனாய்வுத் துறைக்குப் போக, மு.வ. வோ ஆராய்ச்சி அறிஞராய்ப் புகழ்பெற்ற பின்னரே நாவல் துறைக்கு வந்தார்.[1] நாவலாசிரியராக அவர் பன்னிரண்டு நாவல்கள் எழுதியிருப்பினும் அவற்றில் அகல்விளக்கு என்ற நாவல்மட்டும் தனிச்சிறப்பு வாய்ந்த ஒன்று. அவருக்கு சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றுத் தந்த நாவல் இது. விருதினைப் பெற்றுத் தந்ததற்காக மட்டும் இந்நாவல் தனிச்சிறப்பு கொண்டதல்ல. நாவல் உத்திக்காவும், பாத்திர அமைப்புச் சிறப்புக்காகவும், வருணனைக்காகவும் கதைப்போக்கிற்காகவும், உரையாடல் மற்றும் கருத்துவளம் என ஒவ்வொரு நாவலம்சங்களுக்கும் பெயர்போனது அகல்விளக்கு. பேரா. இரா. மோகன், “மு.வ. வைப் படிக்க விரும்புவோர் முதலில் படிக்க வேண்டிய நாவலும் இதுவே”[2] என்று இந்நாவல் பற்றிக் கூறுவார்.

பாத்திரப்படைப்பும், உத்தியும்

அகல்விளக்கு நோக்கிலும், போக்கிலும் ஒரு புதுமையைக் கொண்ட நாவலாகும். வேலய்யன் என்ற பாத்திரத்தின் நினைவோட்டங்களாக நாவலின் கதை கூறும் உத்தி அமைந்துள்ளது. தமிழ் நாவல் வரலாற்றில் இம்முறையைப் புதுமையாகக் கையாண்டு வெற்றி கண்டவர் டா.மு.வ. அகல்விளக்கு நாவலில் வேலய்யன் என்ற பாத்திரமே கதை கூறுவதாயினும், இடையிடையே சந்திரன், சாமண்ணா, பாக்கியம், மாலன், கற்பகம், கயற்கண்ணி, மணிமேகலை ஆகியோர் தங்கள் வாழ்க்கையையும், பிற கதாப்பாத்திரங்களின் வாழ்க்கையையும் பற்றிப் பேசுகின்றனர். எனவே நாவலில் தத்தம் கதாபாத்திரப் பண்பும், பாத்திரப் பொருத்தமும் தெளிவாக உணரும்படி நாவல் அமைந்து,

வாசகரின் புரிதல் திறனுக்கு அதிக சிரமமில்லாமல் செய்துவிடுகிறது. டா.மு.வ.வின் நாவல்களைப் பொறுத்தமட்டில் கதாப்பாத்திரங்களின் பெயர்களே அவரவர்களின் பண்புகளை விளக்கும் வகையில் அமைந்திருக்கும். "கதை மாந்தர்கள் என் உள்ளத்தில் பிறந்து வளர்கிறார்கள். அவர்களுக்குப் பெயர் வைக்கும் பொறுப்பு எனக்கு ஏற்படும் போது அவரவர்களின் பண்புகள் உள்ளத்தில் நின்று தூண்டுதல் புரிகின்றன. அதனால் அப்படிப் பெயர்கள் அமைந்து விடுதல் உண்டு" [3] என்று அவரே இதைப் பற்றிக் கூறுவார்.

சந்திரன் வளர்தலும் உண்டு தேய்தலும் உண்டு. அதுபோல் அகல்விளக்கு நாவலில் சந்திரனின் பாத்திரமும் அமைக்கப்பட்டுள்ளது. அழகும், அறிவும், சுறுசுறுப்பும் இளமையில் சந்திரனிடம் காணப்பட்டது. ஆனால் போகப்போக அவனுடைய வாழக்கைப் போக்கு மாறிவிடுகின்றது. அழகும் அறிவும் தவிர அவன் வாழக்கையில் நல்லவை வேறு இல்லை. சந்திரனின் பாத்திரம் மு.வ.வின் பண்புக்கேற்ற பாத்திரப் பெயரமைப்பிற்கு நல்ல உதாரணமாகின்றது. நாவல்களைப் படைக்கும் பொழுது, நாவலாசிரியர் முதலில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம் பாத்திரப் படைப்பு ஆகும். நாவலில் நடமாடும் பாத்திரங்களை உயிர்த்துடிப்பு உடையனவாகச் செய்து, வெவ்வேறு நடையும் பேச்சும் எண்ணமும் பெறவைத்து, கதையின் வளர்ச்சியிலே அவை இணைந்து இழையுமாறு ஆக்கி, சிறந்த கதைப்பின்னலில் தொய்வு விழாதபடி இறுக்கமும் ஓட்டமும் நிலவச் செய்வது நாவலாசிரியரின் கடமையாகும். சிறந்த பின்னலோடு பாத்திரங்களும் நல்ல வகையில் ஒன்றுபட்டுப் பொருந்தி விளங்குவதை மு.வ.வின் நாவல்களில் நாம் காணலாம்.[4] அகல்விளக்கில் இத்தன்மை அதிகமாகவே வெளிப்படுகிறது.

உரையாடல் திறமும், கருத்துச் செறிவும்

சிறந்த நாவல்களில் நாம் பொதுப்படையாக அணுக வேண்டியது பாத்திரங்களின் உரையாடல்களாகும். புனைகதையில் தோன்றும் பல்வகைப் பாத்திரங்களின் பண்பு, மனம், குறிக்கோள் முதலியவற்றை இதன் துணைகொண்டே வாசகர்கள் உணர முடியும். உரையாடல்கள் பாத்திரங்களின் பண்பை விளக்குவதோடு நின்றுவிடாமல் கதையோட்டத்திற்கு உதவிகரமாக அமைந்தால் மட்டுமே ஒரு நாவல் வெற்றிகரமாக அமைய முடியும். அகல்விளக்கில் இது சாத்தியப்பட்டுள்ளது.

உங்கள் பையன் படித்துப் பட்டம் பெற்று நாளைக்கு ஒரு கலெக்டராக வந்தால், உங்களுக்கு எவ்வளவு பெருமை, ஊருக்கு எவ்வளவு பெருமை, எவ்வளவு பணம் கொடுத்தாலும் அதற்கு ஈடாகுமா? என்று இன்ஸ்பெக்டர் சாமண்ணாவின் நெஞ்சைத் தொடும்படி கூறியதும் அவர்

தம் மகனை, சந்திரனை மேற்படிப்பிற்காக அனுப்புகிறார் இந்த உரையாடல் மிக இயல்பாக இருப்பினும் கதை நடக்கப் பெரிதும் உதவுகிறது. அதைப்போல சந்திரனை ஊருக்கு கல்வி கற்க அனுப்பிவிட்டு ஊரில் அவனைப் பற்றிய பேச்சுக்கள், வேலய்யனை ஏமாற்றி விட்டு சந்திரன் இமாவதியோடு ஊர்சுற்றும் போது அவர்களின் உரையாடல்கள் என உரையாடல்திறன் மிக அழகாக அகல்விளக்கில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதுபோல் சந்திரன் கதையின் இறுதியில் தொழுநோயால் பாதிக்கப்பட்டு வாடுகையில் அவன் கூறும் சொற்கள் அர்த்தச் செறிவுடையன. இதில் மு.வ.வின் உரைநடைத்திறன் நம்மை மெய்சிலிர்க்கச் செய்கிறது.

> *"நீ மண் அகலாக இருந்த காலத்தில் நான் பித்தளை அகலாக இருந்தேன். சிறிது காலம் பளபள என்று மின்னினேன். என் அழகையும் அறிவையும் அப்போது எல்லோரும் விரும்பினார்கள். என்ன பயன்? வரவர எண்ணெயும் கெட்டது. திரியும் கெட்டது"*

என்றவாறு அமையும் உரையாடல் சந்திரனின் பண்பையும் வேலய்யனின் பண்பையும் சுட்டுவதாக அமைவதோடு கருத்துச் செறிவுடன் கட்டமைக்கப் பட்டுள்ளது.

நடை

கதைப்போக்கை விளக்கும் நாவல் இலக்கியத்தில், நடை ஒரு முக்கியமான அம்சமாகும். "தமிழ் நாவல் உலகில் தனித்த முத்திரையோடு நாம் சட்டென்று இனம் காணக்கூடிய நடை டா.மு.வ. வின் நடை சின்னஞ்சிறு வாக்கியங்கள் உள்ளத்தில் இருக்கும் சிந்தனைத் தெளிவை அப்படியே பிரதிபலிக்கும் தொடரமைப்புக்கள் சிக்கலான வி'யத்தையும் போக்கில் எளிமையாகப் புரிய வைத்து விடும் பண்பு இவையே மு.வ. நடையின் தனிச்சிறப்புக்கள்'' [5] என்று மு.வ.வின் நடை குறித்துக் கூறுவர். மா.இராமலிங்கம், இவர் கூறும் சிறப்பம்சங்கள் யாவும், மு.வ.வின் அகல்விளக்கில் வரும் ஒரே பத்தியில் இருப்பது கூற்றை உறுதி செய்யும்.

ஓர் ஏழை சாலையோரத்தில் ஒரு கோணிப்பையின் மேல் நெல்லிக்காய்களைக் கூறுகட்டி விற்றுக் கொண்டிருந்தாள் நெல்லிக்காய் வாங்கலாம் என்றேன். சரி என்று சந்திரனும் வந்தான். என் சட்டைப் பையிலிருந்து ஒரு காலணா எடுத்தேன். சந்திரனும் எடுத்து நீட்டினான். கடமைக்காக என்னிடம் எட்டுக் காய்களை எடுத்து தந்தாள். சந்திரனிடமும் அவ்வாறே கொடுத்தாள். பிறகு கொசுறு என்றேன். என்கையில் ஒரு சின்னக்காயைக் கொடுத்தாள். சந்திரன் கேட்கவில்லை. தனிக் கவர்ச்சி கொண்டு தொடரமைப்பில் ஒரு தனி ஆழம் தெளிவு பெற்றவை மு.வ.வின் நடை.

என் வாழ்க்கையே ஒரே கலங்கலாக இருக்கிறது. தண்ணீர்

கலங்கலாக இருந்தால் என்ன? நாட்டு எலி நகரத்து எலியோடு பழகாமல் இருப்பது நல்லதாம், நாளைக்கு வரும் பலாக்கனி இருக்கட்டும் இன்றைக்கு வேண்டிய களாக்கனி எங்கே? என்று அமைகின்ற உரையாடல்கள் நடையில் புதுமை கனிந்து நிற்கும் மு.வ.வின் நடைச்சிறப்பை வெளிக்காட்டுவன.

குறிப்புப் பொருள் உணர்த்தல்

"விழுமிய இலக்கியப் படைப்பில் குறிப்புப் பொருள் சிறந்த விருந்தாக அமையும். டா.மு.வ.வின் நாவல்களில் குறிப்புப் பொருள் சிறந்த முறையில் அமைந்து காணப்படுகின்றது" [6] நாவலில் அமையும் காட்சிகளும் சில உரையாடல்களும் வருணனையாக மட்டும் அமையாது ஏதோ ஓர் உண்மையை உணர்த்தும் போது குறிப்புப் பொருள் பிறக்கும். என்ற போதும் இதன் அமைவுச் சிறப்பு படைப்பாளியின் தனித்திறமையைப் பொறுத்தது. மு.வ. அகல்விளக்கில் குறிப்புணர்த்திப் பொருள் உணர்த்தலில் தனித்து நிற்கிறார்.

இளவயதில் சந்திரன் கல்விப் பசியை விட காமப்பசிக்கு அதிக அடிமையாகிறான். அவன் மனம் போனபடி வாழ்கிறான். பின்னாளில் தொழுநோய் வந்து அதீத காம உணர்வால் கெட்டழிகின்றான். இதனை நாவலின் கதைப் போக்கில் இரு உரையாடல் வழி குறிப்பாக உணர்த்தி விடுகிறார். மு.வ.

"வழியில் சைக்கிளில் சென்ற இருவரில் ஒருவன் டே! எப்போதும் இதில் வேகம் வேண்டாம் டா. வேகம் உன்னையும் கெடுக்கும். உன்னைச் சார்ந்தவர்களையும் கெடுக்கும்" என்றான். "விளையாட்டாக இருந்தாலும் விதிகளுக்குக் கட்டுப்பட வேண்டும் தெரியுமா?'' என்ற இரு உரையாடல்களும் சந்திரனின் பிற்காலத்ததை விளக்கி எச்சரிக்கும் குறிப்புணர்த்தும் உரையாடல்களே. இதனை ஆழ்ந்து வாசிக்கையில் வாசகர்கள் உணர்ந்து கொள்ள முடியும்.

வாழ்க்கைத் தத்துவம்

"சிறந்த நாவலாசிரியர்கள் தாங்கள் கூற விரும்பும் தத்துவங்களை அவைகளுக்கேற்ற பாத்திரங்களையும் உரையாடல்களையும், பின்னணிகளையும், நடையையும், கருவையும் ஏற்படுத்திக் கொண்டு, கதை சொல்லும் முகமாக அவற்றைப் பெற வைப்பர்" [7] அகல் விளக்கில் கூறப்படும் வாழ்க்கைத் தத்துவங்கள் அனைத்தும் மு.வ. சமூகத்திற்குக் கூறும் தத்துவச் சாரல்களே.

ஒருவன் எவ்வளவுதான் பணமும் அழகும் அறிவும் பெற்றிருந்தாலும் ஒழுக்கம் தவறினால் அவன் சமூகத்தால் ஒதுக்கப்படுவான்

என்பதற்கு உதாரணம் சந்திரன் நல்ல பண்பும் நன்னடத்தையும் கொண்டு, அன்பாக அமைதியாக வாழ்ந்தால் மேன்மை அடையலாம் என்பதற்கு வேலய்யன் உதாரணம். வாழ்வில் வெற்றி எய்த மூட நம்பிக்கைகளை நம்பி பயனில்லை என்பதற்கு மாலன் என்ற பாத்திரம் உதாரணம். அதே போல் உள்ளதில் ஆடம்பரம் இல்லாமல் வாழ்ந்தால் தான் சிக்கன வாழ்க்கையும், கவலையற்ற வாழ்வும் அமையும். ஆடம்பர மோகம் அழிவைத் தரும். அதனால் கணவன் மனைவி உறவு சீர்குலையும், பட்டாசையும், பொன்னாசையும் இன்றி மனதைப் பண்படுத்திக் கொண்டால் மகாத்மாவாக வாழலாம் என்று பலவகை தத்துவச் சிந்தனைகளை அகல்விளக்கு வழி உதிர்க்கிறார் மு.வ.

> *டா.மு.வ.வின் நாவல்களில் போதித்தலும் (Preaching) உண்டு! வாழ்க்கைப் பாடங்களை உணர்வோடு உணர்த்துதலும் (Conveying of moral lessons) உண்டு. மு.வ.வின் எடுத்துக் காட்டான பாத்திரங்கள் சிறந்த வாழ்க்கை உண்மைகளைப் போதிக்கின்றன. மு.வ.வின் நாவல்களில் கதைத் தலைமைப் பேறு பெற்ற மனிதன் நல்ல நல்ல வாழ்க்கை உண்மைகளைத் தெரிவிக்கின்றனர்" ‘*

இதற்கு மிகச்சரியான உதாரணம் அகல்விளக்கு ஆகும்.

மனித இயல்பைத் துல்லியமாக அறிந்து தெளிந்த அமைதியுடன் பல்வேறு குணாதிசயங்களுடன் மனித இயல்பை சித்தரிக்கும் பண்பு, ஆற்றொழுக்கு போன்ற நடை தூய சொல்லாட்சி, பகுத்தறிவு கொண்ட பார்வை, சாதுரியமான பேச்சை வெளிக்காட்டும் உரைநடைத் திறன் முதலியவற்றின் மூலம் தமிழ் நாவலுலகிற்குப் புதிய பாதை வகுத்தவர் மு.வ. இதற்கு என்றும் சான்றுகளாக அமைவன அவரது நாவல்கள்.

அடிக்குறிப்புக்கள்

1. இரா. மோகன், டா.மு.வ.வின் நாவல்கள், ப.26.
2. மேலது, ப. 17.
3. டா.மு.வ., விடுதலைக்குப் பின் தமிழ் நாவல்கள், ப. 37
4. பேரா: மு.வ., அ.மு.ப., கருத்தரங்கக் கட்டுரைகள், ப. 69
5. மா. இராமலிங்கம், நாவல் இலக்கியம், ப.170
6. இரா.மோகன் , டா.மு.வ.வின் நாவல்கள், ப. 103
7. டி.ஏசுதாஸ் (கட்டுரை), விடுதலைக்குப் பின் தமிழ் நாவல்கள், ப. 19
8. இரா. மோகன், டா.மு.வ.வின் நாவல்கள், ப. 142

35. மு. வ. வின் நடை உத்தி (பெண்மை வாழ்க) - ஓர் ஆய்வு

பீ.பெரியசாமி
உதவிப்பேராசிரியர்
திவ்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சேத்துப்பட்டு - 608 601.

மு.வ.வின் மொழி நடை ஆய்வு மேற்கொள்ளும் நிலையில், மொழி நடை பற்றி அவரது தெளிவான சில கருத்துக்களை இங்கு விளக்குவது அவரது மொழி நடை அமைப்பின் சிறப்பு இயல்புகளை விளக்குவதற்குப் பெரிதும் துணைபுரியும். மு.வ. அவர்கள் உரை நடை எவ்வாறெல்லாம் அமைய வேண்டும் என்று சில நடையியல் கோட்பாடுகளைத் தமது படைப்புகளில் தந்து விளக்கியுள்ளார்.

பேச்சு மொழி நடை

> *கூடியவரை பேசுவது போலவே எழுதுவதுதான் உத்தமம் என்பது என்னுடைய கட்சி. எந்த விஷயம் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது ஒரு தர்க்கம் ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிக்கை விஷயம் எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்து விட்டால் நல்லது (பாரதி நூல்கள்(கட்டுரைகள்) ப - 390)*

என்னும் பாரதியின் நடையமைப்பினை மு.வ. அவர்களும் பின்பற்றியுள்ளதை இவர் உரை நடையில் காணலாம். குறிப்பாக, 'பெண்மை வாழ்க' என்னும் நூலில் காணலாம்.

> *"பெண்களுக்கு இந்த நாட்டில் உரிமை இல்லை என்று குற்றம் சாட்டுவதற்கு முன் தீர எண்ணிப் பார்க்க வேண்டும். இது பொதுவான ஒரு குற்றச் சாட்டாக இருத்தல் கூடாது. படித்த குடும்பங்களில், முற்போக்கான குடும்பங்களில், செல்வாக்கான குடும்பங்களில் உரிமையினைப் பெற்றவர்களாக வாழ்கின்றார்கள்" (ப-34)*

என்று வார்த்தைச் சொல்லுகிற மாதிரியாகவே, பேச்சு மொழி நடையினைப் பரவலாக நூலெங்கும் இயற்றியுள்ளார்.

காலத்திற் கேற்ற நடை

காலம் மாறிக் கொண்டேயிருக்கிறது. காலத்திற்கேற்ப நடையும் மாறுகிறது. மாறவேண்டும் என்பது மு.வ.வின் கருத்து. காலம் மாற மாற மொழியமைப்பு மாறுகிறது. பழைய பதங்கள் மாறி, புதிய பதங்கள்

உண்டாகின்றன. புரியாத சொற்றொடர்களால் புலமை மிளிர எழுதுவது தேவையற்றது என்பதும் அவரது நடையியல் கொள்கைகளுள் ஒன்றாகும்.

வட மொழிச் சொற்கள்

கன்னிகா தானம், முடி, உதயம், ஜன்னல், சாதம், சாங்கியம், பங்கஜம்.

அடுக்குத் தொடர்கள்

வளர வளர (ப - 51), பல பல, படிப் படியாக (ப - 50), நினைத்து நினைத்து (ப - 53), மெல்ல மெல்ல (ப - 52), சில சில,வேண்டா வேண்டா (ப - 74), போதும் போதும் (ப - 77), வருக வருக, இன்னும் இன்னும் (ப - 77).

பேச்சு வழக்குச் சொற்கள்

அலுத்து ஓய்ந்து மடியும் பெண்கள் (ப - 30), வந்து உட்காந்து சாப்பிட்டார் (ப - 10), கெமால் பாட்சா (ப - 71), இவன் சாப்பாட்டு ஆசாமி (ப - 76), நைசா பேசி சொன்னார் (ப - 72), உத்தமிகள் பலர் உள்ளனர் (ப - 31).

எண்ணும்மை

வாய்ப்பும் வளமும் (ப - 19), உரிமையும் சிறப்பும் (ப - 18), சமையலறையிலும் தொழிற்சாலையிலும் (ப - 18), நாணமும் அச்சமும் (ப - 57), உயர்வையும் சிறப்பையும் (ப - 18), தயக்கமும் தடுமாற்றமும் (ப - 80), அங்கும் இங்கும் (ப - 18), கனவனும் மனைவியும் (ப - 25), இரவும் பகலும் (ப - 43), கோயிலும் கோபுரமும் (ப - 32).

சிறப்பும்மை

•களவும், கற்பும், சிறப்பும், வாழும், உயரும், செழிக்கும், வெல்லும், சிறக்கும்

சுட்டுச் சொற்கள்

அவன், இவன், அவள், இவள், அவர், இவர், அது, இது, அவர்கள், இவர்கள்.

வினாச் சொற்கள்

ஆடாமலிருக்க முடியுமோ? (ப - 17), வாழ்த்தாமலிருக்க முடியுமோ? (ப - 17), சொல்வது பொருந்துமோ? (ப - 18), இருப்பினும் பயன் என்ன? (ப - 18), வாய்திறந்து பேசக் கூடாதோ? (ப - 26),

அவ்வளவு வருந்தி விட்டேனா? (ப - 26), எனக்கு இப்போது வருமா? (ப - 51), ஏன் மறைக்கிறீர்கள்? (ப - 50), கேட்கவோ? (ப - 32), உரைக்கவோ? (ப - 12).

ஓகார இடைச் சொல்

ஓ என்பது ஓர் இடைச்சொல். அதற்குத் தனியே ஒரு பொருளும் இல்லை. பெயர் வினைகளோடு சேர்ந்து அது பல பொருள்களைத் தருகின்றது. (பிறழவோ விலகவோ (ப - 18), எங்கோ - வினாப் பொருள் (ப - 18), வள்ளுவனோ - வினாப் பொருள் (ப - 28), ஓ இது பாவம் - இழிவுப் பொருள் (ப - 40), கள்வனோ - வினாப் பொருள் (ப - 29), யாரோ - வினாப் பொருள் (ப - 18), எங்கோ - வினாப் பொருள் (ப - 18), எப்படியோ - வினாப் பொருள் (ப - 20)).

வினையெச்சம்

செய்யா - செய்யா விட்டால்(ப -21), மழை பெய்யா(ப -30), உழைக்கா விட்டால்(ப- 22)

செய்து

இருந்து (ப - 16), கடந்து (ப - 22), நடந்து (ப - 30)

செய - நடக்க (ப -17), படிக்க (ப -21), உணர (ப -31), ஓட (ப -34), பாட(ப - 60)

செயின்

உண்ணின் (ப - 41), எண்ணின் (ப - 42), செயின் (ப - 32)

செய்தென

கண்டென (ப - 33),நடந்தென (ப - 27),உண்டென (ப - 44), பார்த்தென (ப - 25),

செய்யியர்

உண்ணியர் (ப - 17)

பெயரடைகள்

இவை நூலில், பெயர்ச் சொற்களைச் சிறப்பிக்கின்றன.

ஆக்கப் பெயரடை

அழகான, அழகுள்ள, உயரமான, பெருமையுள்ள, இனிமையான, பண்புள்ள

தனிப் பெயரடைகள்

புது நெல், சிறு கரும்பூர், நெடுந் தொலைவு, நல்வரவு, கரிய நெடிய, நல்ல

கலப்பு வாக்கியங்கள்

நான் அவன் சொன்னதைக் கேட்டேன் (ப -27) இதில் 'நான் கேட்டேன்' என்பது ஒரு வாக்கியமாகும். 'அவன் சொன்னான்' என்பது மற்றொரு வாக்கியமாகும். இதில், 'நான் கேட்டேன்' - என்பது தலைமை வாக்கியத் தொடராக அமையும் போது, 'அவன் சொன்னான்' - என்னும் வாக்கியத்தில் உள்ள 'சொன்னான்' -என்னும் வினைமுற்று, தொழிற் பெயராக மாறி 'ஐ' - வேற்றுமை உருபு ஏற்றுச் சார்பு வாக்கியத் தொடராகின்றது. நான் அவன் சொன்னதைக் கேட்டேன் - ஆக, 'நான் கேட்டேன்' - என்னும் தலைமை வாக்கியத் தொடரில், 'அவன் சொன்னதை' என்னும் சார்பு வாக்கியத் தொடர் சேர்ந்து கலவை வாக்கியமாகிறது. மு.வ.வின் 'பெண்மை வாழ்க' என்னும் நூலில், இது போன்ற ஏராளமான கலவை வாக்கியங்கள் இடம் பெறுகின்றன.

தொழிற் பெயர்த் தொடர்கள்

நீங்கள் வந்தது எனக்குத் தெரியும், நீங்கள் அதைப்பற்றிச் சொன்னது நல்லது, நீங்கள் தந்தது எங்களுக்குத் தெரியும்.

கூட்டு வினை ஆக்கம்

தோல்வியடை (பெயர் + வினை), போராடு (பெயர் + வினை), கண்டெடு (வினை + வினை), ஏற்றுக்கொள் (வினை + வினை), பின்னடை (இடை + வினை), பின்பற்று (இடை + வினை)

முற்று வினை

வந்தான், வருகிறான், வருவான், ,பார்த்தான், படித்தான், உணர்ந்தான்.

செயப்படு பொருள் குன்றா வினைகள்

பழத்தை உண்டான், படையைப் பார்த்தான், உணவை உண்டேன், கனியைப் பறித்தான், மானைப் பிடித்தான்.

செய குன்றிய வினைகள்

நட, வா, இரு, சிரி, அழி

பெயரடை

அந்த நாடு, பார்த்த பையன், மூன்று நண்பர்கள், நல்ல மனிதர்,

வினையடை

காலம் உணர்த்துவது - பிறகு கூறுவார்

இடம் உணர்த்துவது - உள்ளே வந்தான்

முறை உணர்த்துவது - மெதுவாக சென்றார்

காலத் தொடர்ச்சி வினையடை - அடிக்கடி பேசினார்

விடையடைகள் சுருக்கிவரல் - ஆடைகளை அழகழகாக நெய்திருந்தனர்.

கால இடைநிலைகள்

இறந்தகால இடைநிலைகள்

செய்தான், கண்டான், கற்றாள், ஓடின, சென்றன, வென்றன, போனது

நிகழ்கால இடைநிலைகள்

செய்கிறான், வருகின்றனர், போகின்றான், தருகிறான், எடுக்கின்றான், உடைக்கிறான், உணர்கின்றான், வெல்கிறான்.

எதிர்கால இடைநிலைகள்

வருவான், பார்பான், செல்வான், செய்வான், அறிவான், உணர்வான், காண்பான்

தன்மை ஒருமை வினை முற்று விகுதிகள்

இருப்பேன், செய்வேன், வெல்வேன், காண்பேன், தருவேன்.

தன்மை பன்மை விகுதிகள்

கூறுவோம், பாடுவோம், வெல்வோம், வாழ்வோம்.

முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள்

ஆடினாய், பாடினாய், ஓடினாய், வாடினாய், கண்டாய், சென்றாய்.

முன்னிலை பன்மை வினைமுற்று விகுதிகள்

காண்பீர், உண்பீர், வருவீர்கள், சென்றீர்கள், வென்றீர்கள்.

படர்க்கை ஒருமை ஆண், பெண் பால் வினைமுற்று விகுதிகள்

அழுவாள், எடுதுவாள், உண்பாள், கூறினாள், கூறினான், வருவான், வருவாள்.

வியங்கோள் வினைமுற்று

வாழ்க, ஒழிக, வாழிய, தோழியர், உண்ணல்(எதிர்மறை), எண்ணற்க (எதிர் மறை)

எச்ச வினை

வந்த பையன், எழுந்த மாணவன், தந்த மனைவி.

எதிர்மறைப் பெயரெச்சம்

பெய்யாத மழை, செய்யாத வேலை, சொல்லாத செய்தி.

இரட்டைக் கிளவி

படபடவென, கடகட வென்று, மடமடவென, சுடசுட எடுத்தான், தளதள வென்று

இணைப்பு இடைச் சொல்

அவன் இங்கு வந்தான், அவள் இங்கு வந்தாள், அவனும் அவளும் இங்கு வந்தார்கள்.

பழமொழிகள்

களவும் கற்று மற (ப - 55), வருமுன் காப்போம் (ப - 56), கூழானாலும் குளித்துக் குடி (ப - 43), ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு (ப - 32), வேலியே பயிரை மேய்ந்தாற் போல (ப - 35).

ஆங்கிலச் சொற்கள்

மிஸஸ், ஜான், சினிமா நடிகைகள், பங்களில், ரயில்களில், பஸ், டாக்ஸி, போஸ்ட் ஆபிஸ்

தமிழ்ச் சொல்லோடு பிற மொழிச் சொல் இணைந்து வழங்கல்

பொது + சபை = பொதுச்சபை

அறிவு + விருத்தி = அறிவுவிருத்தி

தொழில் + கட்சி = தொழிற்கட்சி

மர + சாமான் = மரச்சாமான்

கை + சாக்கு = கைசாக்கு

இலக்கிய வழக்குச் சொற்கள்

அகிலம், தழும்பு, மாசு, அன்னம், மகவு, வாலி, குடில், கழனி, பரி, வதுவை, யாண்டு, புழை, புட்கள், பண்டு, ஞலாம்.

விளிச் சொற்கள்

கோழையே!, ஓ மனிதரே!, சகோதரிகளே!, இராமா!, பாலா!, முருகா!

சொல்நிலை (திருப்பிக் கூறல்)

மு.வ.தான் சொல்ல வந்த கருத்து மக்களிடம் சென்று சேர வேண்டும் என்பதற்காகவும், கருத்து விளக்கம் பெறுவதற்காகவும் இவ்வுத்தியினைக் கையாண்டுள்ளார். எத்தனை காலம், எத்தனை இடையூறு, எத்தனை கொடுமை, எத்தனை செயல், எத்தனை பாடம்.

இது தவிர, என்றும், அத்தனை, உண்டு, உம், நமது, இன்பம், துன்பம் போன்ற சொற்களையும் இவ்வுத்தியின் மூலம் பயன்படுத்தி உள்ளார்.

மேற்கோள் காட்டல்

ஒரு கருத்தைக் கூறும் போது அதனுடன் தொடர்புடைய மற்றொரு கருத்தையோ, பாட்டையோ, செய்யுளையோ மேற்கோளாகக் காட்டு முறை மு.வ.வின் 'பெண்மை வாழ்க' என்னும் இந்நூலில் காணப்படுகிறது. திருக்குறள், ஔவையார், சங்க இலக்கியங்கள் ஆகியவற்றை அதிகமாகக் கையாண்டுள்ளார். கட்டுரையின் தொடக்கத்திலும் இடையிலும் இறுதியிலும் மேற்கோள்களை எடுத்துக் காட்டுகிறார்.

"சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை" (ப - 63)

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
காமம் செப்பாது கண்டது மொழிமோ,
....
அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே" (ப - 89)
"குவளைக் குறுந்தாள்
நாண் மலர் நாறும் நறுமென் கூந்தல்" (ப - 90)

"ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப" - எனப் பல்வேறு நிலைகளில் மேற்கோள்களைக் காட்டியுள்ளார்.

எளிமையாக்கம்

மு.வ.வின் நடையின் உத்திகளுள் அதிகம் காணப்படுவது எளிமையாக்கமாகும். மு.வ.வின் படைப்புகள் அனைத்தும் மக்களிடம் பரவின. அவர்களது ஆர்வத்தினைத் தூண்டின. அதற்குக் காரணம் அவரது நடையில் காணப்படும் எளிமையேயாகும்.

கல்வியும் செல்வமும் இல்லாத ஏழைகள் பலராக உள்ள இந்த நாட்டில் அத்தகைய ஏழைக்குடும்பங்களில் பெண்கள் உரிமை அற்றவர்களாகவும் உரிமை குறைந்தவர்களாகவும் இருப்பது உண்மை. அதற்கு அடிப்படைக் காரணம் அந்த ஏழைக்குடும்பங்கள் நாகரீக நிலையை இன்னும் அடையாததே என்று சொல்ல வேண்டும் (ப -35)

ஆர்வம் தூண்டுதல்

கட்டுரை எழுதிக் கொண்டே வரும்பொழுது இடையில் கவனி, நிற்க, இனி என்னும் சொற்களைக் கையாள்கிறார் மு.வ. வாசகர்கள் படித்துக் கொண்டு வரும்பொழுது அவர்கள் சோர்வடையாமல் இருப்பதற்காகவும், இன்னும் ஏதோ ஒரு கருத்தை வலியுறுத்த விரும்புகின்றார் ஆசிரியர் என்பதை உணர்ந்து, தொடர்ந்து படிக்க வேண்டும் என்னும் ஆர்வத்தினைப் பெறுவதற்காகவும் இவ்வுத்தியினைக் கையாண்டுள்ளார் மு.வ.

விலங்கைத் தேடி அம்பும் கையுமாக வரும் வீரனை அந்த மகளிர் காண்பதற்கு முன்னே, வேட்டை நாய்கள் அவர்களை நெருங்குகின்றன. கூரிய பற்களும் சினத்தோடு உருத்து நோக்கும் கண்களும் உடைய பொல்லாத வேட்டை நாய்கள் நெருங்கியதும்,இளம் பெண்கள் இருவரும் எழுந்து அஞ்சி நடுங்குகின்றனர் (ப - 25)- இவ்வாறு அடுத்து அடுத்து எனத் தூண்டும் ஆர்வத்தை உடையதாக விளங்கும். சொல் தெரிவோடு பொருள் தெரிவுகளையும் கொண்டுள்ளது.

தொகுப்புரை

இவருடைய நடை தனிச்சிறப்பினை உடையது. எளிமையான, இனிமையான நடை அடியினைக் கொண்டது. இவருடைய படைப்புகள் நடையியல் கோட்பாடுகளைத் தழுவியது. எளிய பதங்கள், எளிதில் அறிது கொள்ளும் சந்தம் ஆகியவற்றை இக்கட்டுரை தெள்ளிதின் ஆராய்ந்துள்ளது. பேச்சுமொழி நடை, காலத்திற்கேற்ற நடை வட மொழிச் சொற்கள், அடுக்குத் தொடர்கள், பேச்சு வழக்குச் சொற்கள் அமைந்தமை

மற்றும் இலக்கண அடிப்படையில் இவரது நடை அமைந்த முறை எனப் பன்நோக்கில் இக்கட்டுரை உரைத்துள்ளது. இவரது நடையில் வாக்கியங்கள் அமையப் பெற்ற விதம், சொற் பாங்கு, தமிழ்ச் சொல்லோடு பிற மொழிச் சொல் இணைந்து வழங்கள், சொல் நிலை, இலக்கிய வழக்குச் சொற்கள் அமைந்தமை போன்றவற்றை எல்லாம் இக்கட்டுரை விளக்கியுள்ளது. இவருடைய நடையின் சிறப்பு அம்சமான, எளிமையாக்கம், ஆர்வத்தைத் தூண்டுதல் போன்றவற்றை இக்கட்டுரை ஆய்வு நெறி பிடித்து மெய்ப்பித்துள்ளமை புலனாகிறது.

36. அறிஞர் மு. வ. வின் கடிதங்களில் தமிழுணர்வு

முனைவர். சா. இன்குலாப்

தமிழ் இலக்கிய உலகில் கடித இலக்கியங்கள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளன. மனிதர்கள் தங்களின் எண்ணக் கருத்துக்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பினை கடிதங்கள் உருவாக்குகின்றன. நேரு தன் மகள் இந்திராவிற்கு எழுதியுள்ள கடிதங்கள் உலகவரலாறாக உள்ளது. மறைமலை அடிகளார் எழுதிய கோகிலாம்பாள் கடிதங்கள் புனைக் கதையாகப் புகழ் பெற்றுத் திகழ்கின்றது. அறிஞர் அண்ணா 'தம்பிக்கு' எழுதியுள்ள கடிதங்களை இளைஞர்களின் இயக்கப்பணிகளுக்கும், இலட்சிய வெற்றிக்கான கருத்துக்களை அளிப்பதற்கும் ஏற்ற இலக்கியவடிவமாகத் தேர்ந்தெடுத்துள்ளார். அவ்வகையில் தமிழறிஞர் மு.வ.வின் கடிதங்கள் சமூக, வாழ்வியல் சிக்கலைத் தீர்க்கும் வகையில் அமைந்துள்ளன. அன்னைக்கு, தம்பிக்கு,தங்கைக்கு, நண்பர்க்கு என்னும் நான்கு தலைப்புகளில் அமைந்துள்ளன. தங்கைக்கு தவிர மற்ற மூன்று நூல்களில் சொல்லப்பட்டுள்ள இனவுணர்வு, மொழியுணர்வுகுறித்து ஆயும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் இளைஞர்களிடையே உணர்ச்சி வயமாக உள்ளது. மாணவப்பருவத்தில் உலகத்தையே புரட்டிப் போடுவது போல் வேகம் கொண்டோராக இருக்கின்ற இளைஞர்கள் மணமக்களாக அன்பின் அது இருந்த இடம் தெரியாதவர்களாக மாறி விடுகின்றனர். வேகமான உணர்ச்சி கானாறு போல எதற்கும் பயன்படாமல் வடிந்து போகின்றது. ஆகவே தமிழினத்தின் சீர்குலைவிற்கான காரணங்களில் ஒன்றாக ஆக்க வேலைகள் புரிவதில் செயலற்றவர்களாக விளங்கியதே என்பார் (நண்பர்க்கு, பக் 72 - 73)

தமிழர்களை வேறுபடுத்துகின்ற காரணிகளாக சாதி, சமய வேறுபாடுகள் அமைகின்றன. சாதி பற்றிக் குறிப்பிடுகையில்.

> *"சாதி ஒரு பொய்,பொய்யின் அடிப்படையில் நிற்பது. அறிவு வளர வளர, நாகரிகம் வளர வளர சாதி இருக்குமிடம் தெரியாமல் மறைகிறது. சாதியால் உண்டாகின்ற போலி வேறுபாடுகளை ஒளிக்க முயற்சி உண்டா? (தம்பிக்கு,ப.28)*

என்பார். உலகில் உள்ள நாடுகளுடன் ஒப்பிடுகையில் மொழியின் அடிப்படையிலே பலநாடுகள் உருவாக்கப்பட்டு உள்ளன. இந்தப் பிரிவினையில் போலியும் பொய்யும், சாதியும் சடங்கும் இல்லை. ஆனால்,

நம்முடைய நாட்டில் சாதியின் வேர்கள் ஆழமாக வேரூன்றியுள்ளதைக் காண முடிகிறது.

நம்முடைய நாட்டில் சாதியும் மதமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக உள்ளன. மதக் கொடுமைகளும் மதங்களுக்கு இடையிலான சண்டைகளும் மனித வாழ்க்கையை படுகுழிக்குள் தள்ளுகின்றன. மதக் கொள்கைகளைப் புரிந்து கொள்ளாதோர் மதவெறியர்களாக மாறுகின்றனர். மு.வ.குறிப்பிடுவது போலப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் மதவெறிக்குத் துணையாகின்றன. இந்தியாவில் நடைப்பெற்ற மதக்கலவரங்கள், குறிப்பாக குஜராத் மதக் கலவரம் மதக் கொள்கைகளினால் மட்டுமல்ல. பொருளாதார ஏற்றத்தாழ்வும் காரணமாகக் கருதப்படுகின்றது.

பொருளாதார நீதியாக முஸ்லிம்கள் பலம் பெறுவதைக் காணச் சகியாத இந்துத்வா சக்திகள் கலவரத்தை உருவாக்கி சொத்துக்களை தீக்கிரையாக்கினர். உயிர்க் கொலையும் புரிந்தனர் என்பது நாம் அறிந்ததே.

சாதி சமய வேறுபாடுகளைக் களைந்து தமிழனை ஒன்றுபடுத்தும் சக்தியாக மொழிமட்டுமே அமைந்துள்ளது. இந்தியாவில் சிறுபான்மை இனத்தவராக தமிழ்மொழி பேசுலோர் உள்ளனர். அவர்கள் ஒற்றுமையும் கட்டுப்பாடும் கொண்டிருப்பார்களெனில் வன்மையான இனம் என்ற எண்ணம் உலகிற்கு ஏற்பட்டிருக்கும். இன்று தமிழினம் சந்திக்கின்ற பல்வேறு பிரச்சனைகளுக்கு ஓர் இறுதியான தீர்வை எட்ட முடியாத நிலையில் இருப்பதற்கு காரணம் பலகட்சி அரசியலும், அவர்களுக்கிடையே இல்லாத ஒற்றுமையும், பிரிந்து கிடக்கின்ற மக்கள் சக்தியுமேயாகும்.

தமிழனிடையே மேலோங்கியிருக்கின்ற தன்னல உணர்வு அவன் இனத்தைப் பாதிக்கின்றது. தான் தோற்றாலும் தன்னால் தோற்கடிக்கப்பட்ட தமிழனை எண்ணி எண்ணி மகிழக்கூடியவனாக இருக்கின்றான். தமிழரிடையே தன்னலம் மிகுதியாக உள்ளதா? என்று ஆய்வதற்கு மூன்று கேள்விகளை முன்வைக்கின்றார். (தம்பிக்கு,ப.38)

1. நான் தோற்றாலும் சரி, நம்மவன் எவனாவது வெற்றி பெறட்டும் என்ற உயர்ந்த எண்ணம்.
2. என்சொந்தக் கொள்கைப் புறக்கணிக்கப்பட்டாலும் தமிழினம் வளர்ந்து செழிக்கட்டும் என்ற உயர்ந்த நோக்கம்.
3. என்கட்சி அழிந்தாலும் பராவாயில்லை. தமிழ்நாடு வாழ்ந்து விளங்கட்டும் என்ற உயர்ந்த குறிக்கோள்.

இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள இம்மூன்று கேள்விகளும் இன்றைய காலத்திற்கும் பொருந்தக் கூடியனவாக இருப்பதைக் காண முடிகின்றது.

தமிழனிடம் தன்னலமே மிகுதியாக இருக்கின்றது என்பதையே இக்கேள்விகள் உணர்த்துகின்றன. நம்முடைய குறைகளை ஆராய்ந்து பார்க்கத் தவறியதன் விளைவே நாம் உயர்வதற்கு வழி பிறக்காமல் போய்விட்டது எனலாம்.

தமிழர்கள் தங்களுடைய சொந்த நாட்டில் மட்டுமின்றி பிழைக்கச் சென்ற நாடுகளிலும் கூலிகளாய், பிச்சைக்காரர்களாய் அலைந்து திரிகின்றனர். இது வெட்கப்பட வேண்டிய ஒன்று. மானம் என்பது தமிழர்களுக்கு இருக்குமானால் இவ்வாறு இருப்பார்களா? என்ற கேள்வியை எழுப்புகின்றார். உலகில் அடிமை முறை ஒழிந்த காலத்தில் ஐரோப்பிய பெருந் தோட்டத் தொழில்களுக்கு ஒப்பந்தக் கூலிகளாகத் தமிழர்கள் சென்றனர். அவர்களுடன் சென்ற சீனர்கள் சாதியம் போன்ற பிணிகளால் தாக்கப்படாதவர்களாக இருந்ததால் ஒற்றுமையுடனும் ஓரினத்தவர் என்னும் அடையாளத்துடனும் புலம் பெயர்ந்தனர். ஐரோப்பியச் சுரங்க முதலாளிகளிடமும், பெருந்தோட்ட முதலாளிகளிடமும் உறுதியாகப் பேரம் பேசினர். ஆனால், இந்தியாவிலிருந்து போனவர்கள் சாதியாலும், தீண்டாமையாலும் பிளவுபட்டு வலிமை குன்றி நினறனர். வெள்ளை முதலாளிகளின் சட்டத்திற்கும் அவர்கள் தந்த கூலிக்கும் கட்டுப்பட்டவராக உழைத்தனர். (பாலவர் இன்குலாப், தமிழர் இறையாண்மை மாநாட்டு மலர் ப.27)

சொந்த மண்ணில் பிழைப்பதற்கு வழி இல்லாத போது அயல்நாடுகளுக்குச் சென்ற தமிழர்களை சாதியும், தீண்டாமையும் விட்டுவைக்கவில்லை. இத்தகைய சமூகக்காரணிகளாலும் முறையான வேலையின்மையாலும் பாதிக்கப்பட்டவர்கள் வாழ வேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளாயினர். ஆதனால் மு.வ. குறிப்பிடுவது போன்ற அத்தகையதொரு மானம் கெட்ட செயலில் ஈடுபட்டிருக்கலாம் என்று கருத வேண்டியுள்ளது. வாழ்வதற்கான நிர்பந்தம் எல்லா மொழியினரையும் பிச்சைக்காரர்களாக்கியுள்ளது. இன்றுள்ள சூழ்நிலையில் வட மாநிலத்தைச் சேர்ந்தோர் தொடர்வண்டிகளில் பிச்சையெடுப்பதை நாம் காண முடிகின்றது.

தமிழர்கள் முன்னேற இயலாமல் போனதற்கான காரணிகளில் அவர்கள் கடமை, ஒழுங்கு இந்த ஒன்றில் சரியாக உழைக்காததே யாகும். உணர்ச்சி அளவில் ஊக்கமும்,வாய்ச்சொல்லில் வீரமும் மிகுந்தவர்களாக உள்ளனர். இத்தகைய நிலை மாற வேண்டும.. அதற்குத் தமிழன் தற்காப்பு எண்ணம் கொண்டவனாக விளங்க வேண்டும் சிறிது நேரம் உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கடித்துப் பிறகு வறண்ட பாலையில் திகைக்க விடும் போக்கை விட்டு அவர்களைக் கடமைப் பற்றுடைய செயல் வீரர்களாக ஆக்கவேண்டும். (தம்பிக்கு,ப.24) என்பார்.

தமிழர்களின் தலையெழுத்தைத் தீர்மானிக்கத் கூடிய அரசியல் கட்சிகள் மக்களிடம் பேசி மயக்கும் ஜாலவித்தைக் காரர்களாக உள்ளன. வெறும் உணர்ச்சி முழக்கங்களால் மக்களைத் திரட்டிப் பின்னர் கனவைப் போலக் கலையச் செய்கின்றனர். இதனைத் 'தம்பிக்கு' கடிதத்தில் குறிப்பிடுகையில்.

"பொதுமக்கள் களிமண்ணைப் போன்று திரண்டு கிடக்கிறார்கள். ஆள்பவர்கள் தங்கள் வசதிக்கேற்ப வேண்டிய உருவங்களைச் செய்து அவர்களை ஆள்கின்றனர்" (தம்பிக்கு, ப.17)

என்பார். மக்கள் தங்கள் நிலையை உணர்ந்து பார்க்க வேண்டும். ஆனால், மேடைப் பேச்சுகளின் மயக்கத்தில் நாட்டைப்பற்றியோ, மொழியைப் பற்றியோ கவலைப்படாதவர்களாக உள்ளனர். எடுத்துக்காட்டாக, பெரியாராலும் அண்ணாவாலும் கொண்டுவரப்பட்ட தனித் தமிழ்நாடு கோரிக்கையும், இந்தி எதிர்ப்பு போராட்டங்களும் பிற்காலத்தில் வந்த கழக அரசுகளால் நீர்த்துப் போகச் செய்யப்பட்டன. நடுவண் அரசில் பங்கு பெற வேண்டும் என்ற ஒற்றை எண்ணத்தின் விளைவால் அது ஏற்பட்டது. ஆட்சியாளர்களின் கருத்துப்படி நடுவண்அரசில் அங்கம் வகிப்பதால் மட்டும் நாம் உரிமை பெற்றவர்களாகி விட்டோம் என்று கருத இயலாது. தமிழகத்தின் உரிமைகள் மறுக்கப்பட்டும், தமிழர்களின் வாழ்க்கை பல்வேறு பிரச்சனைகளில் தீர்க்கப்படாமலும் முட்டுக்கட்டையாக இருக்கின்ற சூழ்நிலைகள் மாற வேண்டும்.

தமிழ் மொழியின் தொன்மையான வரலாறும் அதன் பல்வேறு சிறப்புக்களும் தமிழ்நாட்டின் ஆட்சிமொழி என்னும் தகுதியைப் பெற்றிருக்கிறது. இருப்பினும் கல்வி மொழியாக இல்லை. குறைகள் இருந்தாலும் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் மொழியாக தமிழ் மாற வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்ற வேண்டிய பொறுப்பு செய்தித்தாள்களுக்கு உள்ளன. மொழிப் பற்றும் இனப்பற்றும் இல்லாத செய்தித்தாள்கள், வார இதழ்கள் மலிவான செய்திகளை வெளியிட்டு பணம் சம்பாதிப்பதில் உறுதியாய் இருக்கின்றன. உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தன் ஒருபாடலில்.

தமிழனுக்கு உலைவைக்கும்
தமிழ்த்திரு ஏட்டை
தமிழனே படிக்கிறான்
தான்கெட்டகேட்டை

என்றவாறு பாடியுள்ளார். மக்கள் இத்தகைய நாளிதழ்களைப் புறக்கணிக்க வேண்டும். அப்பொழுதுதான் செய்தித்தாள்களை வெளியிடுவோர் தாமாகத் திருந்துவர். இதனை,

"தமிழ்மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் துரோகம் செய்யாமல் எழுதினால்தான் இங்கே செய்தித்தாள்கள் பரவ முடியும் என்ற நிலையை மக்கள் ஏற்படுத்த வேண்டும். காசகொடுத்து வாங்குவோரின் கைக்கு இந்த ஆற்றல் இருப்பதைக் காட்டிவிட்டால் போதும். அந்தச் செய்தித் தாள்கள் மறுவாரமே திருந்திவிடும்" (நண்பர்க்கு,ப.76)

என்பார். இன்று வெளியாகின்ற செய்தித் தாள்கள் கவர்ச்சிக்கும், திரைப்பட விளம்பரத்திற்கும், பக்திக்கும் தரக்கூடிய வாய்ப்பினை அறிவியல், பகுத்தறிவு முதலான செய்திகளுக்குத் தருகின்றனவா? என்பது ஆய்வுக்குரியது.

மனிதனின் எண்ணம், பேச்சு, எழுத்து இம்மூன்றிலும் மொழி உள்ளது. மொழி உண்மையாக உள்ள ஒன்று, மொழியால் இனம் அமைவதும்,நாகரிகம் அமைவதும் நாட்டின் அமைப்புக்குத் துணையாக இருப்பதும் உலகம் அறிந்த உண்மைகள், (தம்பிக்கு, ப.23). ஆகையால் மொழியால் ஒன்று பட வேண்டும் என்ற கருத்தை பல இடங்களில் வலியுறுத்துகின்றார்.

தமிழர்களுக்குப் பல கனவுகள்இருக்கின்றன. அவற்றைக் கனவுகள் என்று சொல்வதைவிட கடமை என்றே குறிப்பிடவேண்டும். தமிழர்களின் திருமணங்களில் திருக்குறள் ஓதுவது, கோயில்களில் தேவாரம் இசைப்பது, அதிகாரிகள் தமிழில் கையெழுத்துப் போடுவது உட்படதமிழகத்தில் உள்ள அனைத்தும் தமிழாகவே இருக்க வேண்டும் என்ற கனவைப் பல இடங்களில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழர்கள் ஆக்கப்பூர்வமான வேலைகளைச் செய்வதில் கடமையுணர்வும் உள்ள உறுதியும் கொண்டவர்களாக விளங்க வேண்டும். மக்களை வேறுபட்டவர்களாக பிரித்தாளுகின்ற எந்தச் சக்தியையும் இனங்கண்டு கொள்ள வேண்டும். தந்தை பெரியார் குறிப்பிடுகையில்

"மக்களை மக்கள் எந்தக் காரியத்திற்கு ஆக வேண்டுமானாலும் மன்னிக்கலாம். இணங்கலாம். ஆனால், அறிவைக் கெடுக்கும் காரியம் எவ்வளவு சிறிதானாலும் அது மன்னிக்க முடியாததே யாகும். தமிழர்களையும் நான் வேண்டிக் கொள்வதென்ன வென்றால் எந்தக் காரியத்திற்கு இணங்கினாலும் ஒத்துழைத்தாலும் அறிவைக் கெடுக்கும் காரியத்திற்கு மாத்திரம் கண்டிப்பாக ஒத்துழைக்கக் கூடாதென்றே வேண்டிக் கொள்கின்றேன்" (விடுதலை 4.4.1968)

என்பார், மேற்கண்ட கூற்றிலிருந்து சாதி, சமய தீண்டாமை வேறுபாடுகளைக் களைய முன்னெப்போதும் இல்லாத அளவிற்குத் தமிழினம் பாடுபடவேண்டியுள்ளது. தமிழகத்தின் அரசியல் கட்சிகளும் நாட்டுமக்களின்

நன்மைக்கே தோன்றியவை என்பதை உணர வேண்டும். மு.வ. வின் கூற்றுப்படி வீண் பேச்சுக்களைத் தவிர்த்து மக்கள் நலனில் அக்கறை கொள்ள வேண்டும். மேடையில் பேசிவிட்டு நாட்டுக்குத் தொண்டு செய்து விட்டதாக எண்ணுவது மூடத்தனம் ஆகும். பழங்காலத்தில் காலட்சேபங்கள், உபந்யாசங்கள் போன்று இக்காலத்தில் பொதுக் கூட்டங்கள், மாநாடுகள் என்று நடைபெறுகின்றன. கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு பேச்சுத் தேவை. ஆனால் அதையே ஒரு கலையாக்கி நாட்டுத் தொண்டு என்று கூறுவது தேவையற்றது (தம்பிக்கு, ப.57) என்பார்.

மு.வ.வின் கடித இலக்கியங்களில் திருக்குறளின் அறக் கருத்துக்களும், காந்தியின் அகிம்சைக் கொள்கைகளும் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. அறவழியின் மூலம் மாற்றங்களைக் கொண்டு வரமுடியும் என்ற நம்பிக்கையுடையவராகக் காணமுடிகின்றது. தமிழ் மொழி உணர்வும், தமிழ் நாட்டுப்பற்றும் கொண்டவராக விளங்கியுள்ளார். இருப்பினும் ஆடம்பரமற்ற அமைதியான, எளிமையான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதில் ஆர்வமுள்ளவராக வாழ்ந்து காட்டியுள்ளார்.

மேடைப் பேச்சுகள் ஆரவாரத்தன்மை கொண்டிருப்பதைக் கண்டிக்கும் அதே வேளையில் செய்தித் தாள்கள், வார இதழ்கள் மூலமாகப் பரவுகின்ற செய்திகளே மனிதன் மணத்தில் ஆழமாகப் பதியும் என்பதை வலியுறுத்துகினறார். அன்றைக்கு இருந்த அரசியல் சூழல், மக்களின் கல்வியறிவற்ற நிலையில் பெரியார், அண்ணாவின் மேடைப் பேச்சுகள் பாமரமக்களையும் போராடத் தூண்டியது. அது மட்டுமின்றி வாய்ப்பு மறுக்கப்பட்ட, கொடுமைக்குள்ளான மக்களுக்கு அப்பெரியோர்களின் பகுத்தறிவு பிரச்சாரத்தினாலும் போராட்டங்களினாலும் சிறிதளவேனும் மாற்றங்கள் நிகழ்ந்தன என்பது மறுப்பதற்கில்லை.

கல்விக்கான திட்டத்தில் பாடங்கள் அனைத்தும் தமிழிலேயே போதிக்கப்பட வேண்டும் என்பதானது படித்து முடித்ததும் வேலைக்கான உத்திரவாதத்தை அளிக்கக் கூடிய கல்வியாக இருக்க வேண்டும். தாய்மொழி வழிக் கல்வியால் உலகில் பல நாடுகள் முன்னேறியுள்ளன என்பது அசைக்க முடியாத உண்மை ஆகும். இருப்பினும் நம்முடைய ஆட்சியாளர்கள் இரு மொழிக் கொள்கைகளை ஒத்துக்கொண்டதின் விளைவே தமிழைப் பின்னுக்குத்தள்ளி விட்டது என்பதே உண்மை.

37. மு. வ. சுட்டும் நோயின் அறிகுறியும் தீர்வும்

முனைவர் ஜெ. ஜெயவாணி ஸ்ரீ
தமிழ்த்துறை
உதவிப்பேராசியர்
அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
கும்பகோணம்.

முன்னுரை

இலக்கியம் மனித வாழ்க்கையை அறிந்து கொள்ள உதவும் ஒரு கருவியாகும். மு. வ. வும் அவ்வகையில் மக்களுக்காகப் படைக்கப்படும் இலக்கியம் வாழ்வில் தன்னலத்தைப் பேணி பிறர்நலம் சிந்தித்து, பொதுநலம் காணும் உணர்வில் மனிதனுடைய உள்ளத்தை விரிவடையச் செய்திருக்கின்றார். தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற திருமூலரின் உயரியச் சிந்தனைக்கேற்ப மக்களும் விழிப்புணர்வு பெறக் கருதி நாவலின் மூலமாக கொடிய நோயின் குணத்தையும் அதற்குரிய தீர்வையும் பற்றி மு. வ. வின் வாயிலாக இக்கட்டுரையில் காண்போம்.

எலும்புருக்கி நோய்

மிகுந்த கவலையால் மனம் புழுங்கினால், மனத்தின் வேக்காடு நாடி நரம்புகளை அழித்துவிடும். அதன் விளைவு டி. பி. எனும் எலும்புருக்கி நோயாகும் என்கிறார் இந்த நோயின் அறிகுறியாக அல்லி எனும் நாவலில் குறிப்பிடும் போது ஒரு பக்க நுரையீரலின் முனையும் அல்லது இரண்டு பக்க நுரையீரலின் முனையும் பழுதுபடும் என்கின்றார். மேலும் ஒழுங்கில்லாமல் வாழ்ந்து இரத்தம் கெட்டு போனாலும் இவ்வகை நோய் வரும். இதனால் உடலின் சத்துப் பொருள் வீணாகும் நினைவாற்றல் குறையும் தெளிவான சிந்தனை இருக்காது உடல் நாளுக்கு நாள் தளர்ந்து விடும் என்றும், மூளை பைத்தியக்காரனின் மூளை போல் தெளிவற்ற நிலையில் இருக்கும். கண்ஒளி மங்கியது போல் இருக்கும். பின்னர் நாள்தோறும் காய்ச்சல் ஏற்பட்டுக் கொண்டே இருந்து உயிருக்கே ஆபத்தாக முடியும். ஆசைகளை அடக்குவதால் உடம்பு கெடும் என்று பலர் நம்பித்தான் இப்படிக் கெடுகிறார்கள். ஆசைகளை வளர்த்துக் கொண்டு அடக்கத் தெரியாதவர்களுக்கோ, குறைக்கத் தெரியாதவர்களுக்கோ உடம்பு ஒரு காலும் கெட்டு நோய் வராது என்று அல்லி எனும் நாவலின் மூலம் விளக்கிக் காட்டுகிறார்.

தொழு நோய்

ஒழுங்கு இல்லாத நடத்தையால் வரும் மோகத்தினால் தொழு

நோயாக முற்றுகிறது என்றும் இந்த நோய் வந்தவர்களுடன் உறவு வைத்து கொள்பவர்களுக்கும் இந்நோய் வரும் என்பதை அகல்விளக்கு எனும் நாவலில் குறிப்பிடும் போது இந்நோய் வரும்போது மூக்கில் திடீரென மினுமினுப்பு ஏற்படும். காதின் ஓரம் மாசுபடிந்தாற் போல் கொஞ்சம் கறுப்பாகவும், தடிப்பாகவும் இருக்கும் என்கிறார். மேலும் அகல்விளக்கு எனும் நாவலில் இந்நோய் உடம்பெல்லாம் பரவி முகத்தில் வீக்கமும் தடிப்பும் ஏற்படுத்தும். காதுகளையும் மூக்கையும் கெடுத்துப் பாழ்படுத்தும். மேலும் புண்ணாகி அரிப்பு வரும். காய்ச்சல், இருமல் தொடர்ந்து ஏற்பட்டு உயிருக்கே ஆபத்தாக முடியும் என விவரிக்கின்றார்.

மலச்சிக்கலின் விளைவு

அல்லி எனும் நாவலில் இந்நோயின் தன்மையைக் குறிப்பிடுகையில் பாலைக் குறைத்துக் குடித்து, பழத்தை அதிகம் சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் இருக்காது. மலச்சிக்கலை நீக்கினால் பாலுணர்ச்சியும் அதிகம் இல்லாமல் அளவோடு இருக்கும். கொழுப்பும் புளிப்புமான பொருள்களை அதிகமாக உண்டால் மலச்சிக்கல் ஏற்படும். ஆசையை அதிகமாகத் தூண்டும் என்கிறார். இந்நோயிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளும் வழியாக உடம்பை மென்மையாக்கிக் கொண்டாலும், வீண் தசையைக் குறைத்தாலும் ஆசைகள் அளவோடு இருக்கும்.

மனநோய்

நெஞ்சில் ஓர் முள் எனும் நாவலில், நல்ல சத்தான உணவும், காற்றோட்டமுள்ள வீடு, நல்ல நீர் இருந்தும் மனநோய் இருந்தால் உடல் மெலிந்து இளைத்துப் போகும். பசியும் இருக்காது என்பதை விவரிக்க அல்லி நாவலில் நோயாளிகளுக்கு மருந்துக்காகச் செலவு செய்வதை விட மிகுதியாக மனத்துக்காகச் செலவு செய்ய வேண்டும். நோயாளிகளை ஒவ்வொரு சிறு செய்தியும் நிகழ்ச்சியும் தாக்குகின்றன என மனநோயாளியின் நிலையை விவரித்துக் காட்டுகின்றார். ஆசாரக்கோவையில்,

> *“வைகறை யாமம் துயிலெழுந்து தான்செய்யும்*
> *நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து”*

என விவரிக்கிறது.

மேலும் நெஞ்சில் ஓர் முள் எனும் நாவலில், மனநோய்க்கு மருந்தாக தோட்டக் கலையும், குழந்தை வளர்ப்பும், நுண்கலைகளும் இல்லையானால் இந்த உலகம் முழுவதுமே பைத்தியக்காரக் கூட்டமாக மாறிவிடும். இம்மூன்றும் மனநோய்க்கு உரியது என விளக்குகிறார். ஒரு மனிதன் மனவளர்ச்சி பெற்றவனாக இருந்தால் தான் தனக்கு ஏற்படும்

சிக்கல்களுக்குத் தீர்வு காணமுடியும். தீர்வு காண இயலாத நிலையில் மனப்போராட்டங்கள் ஏற்படுகின்றன. இதனால் மனிதனுக்குப் பயம் பதற்றநிலையை ஏற்படுத்துகிறது என்பதில் மனப்பாதுகாப்பே உத்தியாக விளக்குகிறார்.

பொதுவாக மு.வ. வின் நாவலில் வரும் கதாபாத்திரங்களில் தோட்டக் கலையும், குழந்தை வளர்ப்பும், நுண்கலைகளுமே மனதிற்குப் பாதுகாப்பு என்ற நிலையை கையாண்டு இருக்கின்றார்.

மேகநோய்

முறையற்ற நடத்தை உடையவருக்கே இந்நோய் வரும். இந்நோய் உடையவருக்கு பாலியல் உணர்ச்சி அதிகமாக இருக்கும். இதனை அல்லி நாவலில் விளக்கும்போது இத்தன்மையை ஆண்மை என்று எண்ணித் தன்னைத்தானே கெடுத்துக் கொள்ளக் கூடாது. எலும்புருக்கி நோயாளிக்குப் பசி மிகுதியாக இருப்பதுபோல் தான் இதுவும். அளவுக்கு மேல் சாப்பிட்டு விட்டுத் தன் குடல் நன்றாகச் செரிப்பதாக எண்ணி ஏமாறுகிறான். எலும்புருக்கியை விட பொல்லாத நோய் மேகநோய் என எடுத்துக்காட்டுகின்றார்.

ஆண்மை இழப்பு

நெஞ்சில் ஓர் முள் எனும் நாவலில், பெண்ணாசை மிகுந்து ஒழுங்கில்லாமல் வாழ்ந்தால் பொல்லாத நோய் வரும். இதனால் ஆண்மை இழக்க நேரிடும். குழந்தை பெறும் வாய்ப்பும் இருக்காது என விளக்குகிறார்.

கர்ப்பம் கலைதல்

சங்க காலத்தில் கருச்சிதைவு ஒரு பாவச் செயலாகவும், அறத்திற்குப் புறம்பான ஒரு செயலாகவும், நீதி முறைக்கும் ஒழுக்கப் பண்பிற்கு மாறுபட்டதாகவும் சித்தரிக்கப்படுகிறது. மருத்துவர்களோ அல்லது மற்றவர்களோ கருச்சிதைவிற்கு ஊக்கம் கொடுக்கக் கூடாது. மீறினால் அறமே அவர்களைத் தண்டித்து விடும் என நம்பப்பட்டது. இதனை,

"மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
உய்தி இல்லையென அறம்பாடிற்றே" - புறம் 34

என்ற புறநானூற்று அடியால் விளங்கும். இதனையே கருத்தில் கொண்டு நெஞ்சில் ஓர் முள் எனும் நாவலில், உடம்பு பாழ்படும். சாகாத விசம் குடிப்பதும் கர்ப்பம் கலைப்பதும் ஒன்றே. மூன்று நான்கு ஆண்டுக்கு ஒருமுறை குழந்தைப் பெற்றுக் கொண்டால் உடம்பும் அழகும் நெடுங்கால் நிலைத்திருக்கும் என்கிறார்.

கர்ப்பப்பையில் புண்

கர்ப்பப்பையில் புண் ஏற்பட்டால் குணமான பெண்கள் மாலைவேளையில் எங்காவது இரண்டு மூன்று மைல் நடந்து போய் வருவது நல்லது என்றும் உடற்பயிற்சியும் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றார்.

குழந்தைகளின் வயிற்றுப்போக்கு

நெஞ்சில் ஓர் முள் எனும் நாவலில், வயிற்றுப்போக்கால் குழந்தைகள் அடிக்கடி துன்பப்படுவதற்கு ஈரல் மெலிந்திருப்பதே காரணமாகும். இவை தீர்க்கும் அறிகுறியாக குறிப்பிடும் போது பருப்பும் நெய்யும் மற்ற கொழுப்புப் பொருள்களும் குறைவாகக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றார்.

உடல் சூடு தனிய

நெஞ்சில் ஓர் முள் எனும் நாவலில், வாரத்திற்கு ஒருமுறை எண்ணெய் தேய்த்துக் குளித்தால் உடல் சூடுதணியும். உடல் சோர்வையும், தளர்ச்சியையும் போக்க மருந்தாக நெல்லிலேகியம் உட்கொள்வது நல்லது என்கிறார். வெங்காம வெய்ய விடாய்க்கிளநீர் தந்து . . . எனக் கோவை நூல் கூறுகிறது.

சிரங்கு

அகல் விளக்கு எனும் நாவலில் மு. வ. குறிப்பிடுகையில், பெரும்பாலும் தைப்பிறந்தால் சிரங்கும் பிறக்கும். மெலிந்த நுரையீரல் இருந்தாலும் அடிக்கடி சிரங்கு வரும் தக்க உணவை அளவாக உண்ணாததும் ஒரு காரணம் என விளக்குகிறார். மேலும் நமட்டுச் சிரங்கு என்பது குழந்தைகள் அதிகம் எழுதினாலோ அல்லது வேறு வகையில் உடலை வருத்தினாலோ வரும். பொறுக்க முடியாத அரிப்பு இருக்கும். அடுத்து யானைச்சிரங்கு பெரியளவில் வரும். இவ்விரண்டிற்கும் கந்தகத்தைத் தேங்காய் எண்ணெயில் காய்ச்சி எடுத்து, கோழியிறகை அதில் தோய்த்து சிரங்குகளில் தடவ வேண்டும் என அதற்குண்டான மருத்துவ குணத்தையும் விளக்குகிறார்.

தலைவலி

மு. வ. வின் அந்தநாள் நாவலில், நல்ல உணவும் உடற்பயிற்சியும் தலைவலியைப் போக்க சிறந்த மருந்தாகும். முதலில் எந்த தைலமும் கொஞ்சம் முகர்ந்தாலும் தலைவலி போய்விடும். பிறகு தடவினால் தான்

போகும். பிறகு வரும் நாட்களில் எவ்வளவு தடவினாலும் தேய்த்தாலும் போகாது. அதற்குத்தான் தீராத தலைவலி என்று பெயர். பின்பு கண்ணாடி வரும். பின் கண்ணும் போகும்.

சர்க்கரை நோய்

அகல் விளக்கு எனும் நாவலில் மு. வ. குறிப்பிடுகையில், இந்நோய் இருந்தால் முதுகில் அல்லது உடம்பின் வேறு பகுதியில் ஒன்று போக ஒன்று கட்டிவரும்.

உடல் பயிற்சியின்மை, அதிக உணவு, சுரப்பிகளின் கோளாறு, மன உளைச்சல் போன்றவற்றால் சர்க்கரை நோய் தோன்றுகிறது. இந்நோயின் தலைநகரமாக இந்தியா இன்று வர்ணிக்கப்படுகிறது. காரணம் சர்க்கரை நோயின் பாதிப்பு உலகளவில் இந்தியாவில் முன்னணியில் உள்ளது. வருந்த வேண்ழய செய்தி பரம்பரையாக தொடரும் வாய்ப்புள்ளதால் நாளைய தலைமுறையைக் காக்க வேண்டியது நம் கடமை.

நடைபயிற்சி குறைதல், பரம்பரை, கிடைத்த நேரத்தில் கிடைத்ததை உண்ணுதல், தைராய்டு சுரப்பிகளின் ஒழுங்கின்மைக் காரணமாக உடல் பருமனாகிறது. உடல் பருமனே பல நோய்களுக்குக் குறிப்பாக, சர்க்கரை நோய் தோன்ற காரணமாகியது. அசைவ உணவுகளைத் தவிர்த்தல், அளவறிந்து உண்பது, பச்சைக் காய்கறிகளை உண்பது, தகுந்த நடைபயிற்சி மேற்கொண்டால் உடல் பருமனைக் குறைக்க முடியும். கோறல் பிரிவினை எல்லாம் தரும் எனும் குறளும் இதற்கும் பொருந்தும். மேலும் சர்க்கரை நோய் இருதயத்தைப் பாதிக்கும். இதனால் மாரடைப்பு வர வாய்ப்பு அதிகமாகும். விரும்பிய அனைத்தையும் உடனே உண்ணுவதைத் தவிர்க்க வேண்டும். அதற்கு ஆசைகளைக் கட்டுப்படுத்த வேண்டும். இதனை அவா அறுத்தல் என்பதை 'அவாஇல்லார்க் கில்லாகும் துன்பம்' என்கிறார் வள்ளுவர். இதனை வலியுறுத்தும் விதமாக மு. வ. சர்க்கரை நோயாளிகள் அரியும் மற்ற மாவுப்பொருளும் இல்லாத உணவு உட்கொள்ள வேண்டும் என உணவு முறையையும் விவரிக்கின்றார்.

தேள்கடி

அல்லி எனும் நாவலில், தேளின் நஞ்சு நேராகப் பெரிய இரத்த நாடியில் சென்று கலந்து உடனே இதயத்தைத் தாக்கிவிடும். சிலவேளைகளில் உயிருக்கே ஆபத்தாகவும் முடியும். இந்நோய்க்கு மருந்தாக மார்பியா மருந்தை ஏற்றி ஊசி போட வேண்டும் என்கிறார்.

முடிவுரை

மு. வ. நாவல்களில் பல இடங்களிலும் பயன்தருகின்ற வகையில் மருத்துவக் குறிப்புகளை வலியுறுத்தியிருக்கின்றார். உறக்கமும், உழைப்பும் அளவாக இருந்தால் இளமையும் நீடிக்கும் என்பதை வலியுறுத்தியுள்ளார். மேலும் உணவுடன் உடற்பயிற்சியும் உடல் நலத்திற்கு முக்கியம் என்பதையும் வலியுறுத்துகின்றார். மனம் கெட்டால் உடம்பும் கெடும் என்றும் இதற்கு மனநலம் மிகவும் அவசியம் என்று கூறுகிறார். நல்ல காற்று, நல்ல வெளிச்சம், இயற்கை சூழல் இவற்றின் வலிமைக்கு எந்த மருத்துவமும் தேவையில்லை எனவும் வலியுறுத்தி காட்டியிருக்கின்றார்.

38. மு. வ. வின் சிறுகதைகளில் - குறட்டை ஒலி

முனைவர் ஜீ. சசிகலா
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
நூருல் இஸ்லாம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
குமாரகோயில்
தக்கலை - 629 180.

மு.வ. எனச் சுருக்கமாக அழைக்கப்பட்ட மு.வரதராசன் 20-ம் நூற்றாண்டின் புகழ் பெற்ற தமிழ் அறிஞர்களுள் ஒருவர் இலக்கியக் கட்டுரைகள், ஆராயச்சி நூல்கள் போன்றவை மட்டுமன்றிப் பல சிறுகதைகள், புதினங்கள் போன்றவற்றையும் எழுதியுள்ளார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் மூலம் முதல் முதலாக தமிழில் முனைவர் பட்டம் பெற்ற பெருமைக்குரியவர். அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் டி.லிட் என்னும் சிறப்புப் பட்டம் பெற்ற முதல் தமிழறிஞர் ஆவர். பெர்னாட்ஷா, திரு.வி.க, காந்தியடிகள், இரவீந்திரநாத் தாகூர் ஆகியோரது வாழக்கை வரலாறுகளை நூல்களாக வடித்துள்ளார். மு.வ.வின் அகல் விளக்கு எனும் நாவலுக்கு சாகித்ய அகாதெமி விருது கிடைத்தது, கள்ளோ காவியமோ, அரசியல் அலைகள், மொழியியல் கட்டுரைகள் ஆகிய மூன்று நூல்களுக்குத் தமிழக அரசின் விருது கிடைத்தது.

குறட்டை ஒலி - சிறுகதைகள்

மு.வ.வின் சிறுகதைகளில் ஒன்றான குறட்டை ஒலி சிறுகதை தொகுப்பில் வரும் சிறுகதைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு கருத்துக்களை விளக்குகின்றன. அவை மண்ணின் மணத்தோடு வாழ்கின்ற மனிதனின் வாழக்கை பற்றியும், வாழக்கையினுடைய தத்துவத்தைக் கூறுவதாகவும், பணக்கார வர்க்கத்தை கிண்டல் செய்வதாகவஜம், சமூகம் சார்ந்த தேடலையும், கிராமத்து மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியனவற்றையும், மனித நேயத்தையும், உளவியல் நெருக்கடியை கூறும் வகையிலும் அமைந்துள்ளன.

"அந்த மனம் வருமா"

மு.வ. வின் இக்கதை கிராமத்திலுள்ள 75 வயதான ஒரு பெரியவரின் வாழக்கை குறிப்புகளை அலசுகிறது.

ஒரு கிராமத்து சூழலில் மண்ணின் மணத்தோடு வாழ்கின்ற மனித்னின் வாழக்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை கூறுகிறது. நண்பனின் அப்பாவைப் பற்றி அவனது நண்பன் சொல்வது மாதிரி அமைகிறது. உழைக்கும் தன்மையும், கிராமத்தின் அமைப்பையும்,

அழுகையும் இக்கதை பதிவு செய்கிறது. மட்டுமல்லாமல், என் நண்பனின் தம்பியை என்றைக்கு பார்க்க போகிறேன் என்று 87 வயதான அக்கா அழுவதும் இதில் பதிவு செய்யப்படுகிறது.

சுடரின் நகைப்பு

இக்கதையில் பாசமாக வளர்த்த ஒரு குழந்தை இறந்துவிடுகிறது. இக்காட்சியைப் பார்த்த நண்பனின் மனநிலையிலிருந்து தொடங்குகிறது. சனிப்பிணம் தனியே போகாது என்று கோழியின் ரத்தத்தைத் தெளிப்பதும், நவதானியத்தை விதைப்பதுமாகிய நாட்டார் நம்பிக்கைகள் பேசப்படுகின்றன.

சுடுகாட்டிற்கு போகும் வழியில் நாய் இறந்து கிடப்பதும், அதைச்சுற்றி ஆண் நாய் ஓடிக் கொண்டிருப்பதும், சேவல் கோழியும், பெடைக் கோழியும் காதல் கொள்வதும் காட்சிப்படுத்தப்படுகிறது. சுடுகாட்டிலிருந்து திரும்பும் வழியில் இரண்டு கல்லூரி மாணவர்கள் காதல் ததும்ப பேசிக் கொண்டிருப்பதும் சித்தரிக்கப்படுகிறது. கதையின் கடைசி பகுதியில் ஆண்கள் எல்லோரும் வந்துவிட்டார்கள் அரிசியை உலையில் போடுங்கள் என கிழவி சொல்வது போலவும் அந்தக் குரலைக் கேட்டு 'சுடர்' தான் அழியபோவது தெரிந்தும் கூடச் சிரிப்பது போல கதை முடிகிறது.

குறட்டை ஒலி

மாடி வீட்டில் வாடகைக்கு குடியிருக்கும் ஒருவர் கதை சொல்வதாக அமைகிறது. கீழ்பகுதியில் பணக்கார தம்பதியினர் வாழந்து வருகின்றனர். அவர்களுக்கு 20 ஆண்டு ஆன பிறகும் குழந்தையில்லை. தென் பகுதியில் ஏழை கணவன் மனைவி, 6 குழந்தைகள், ஒரு பாட்டி, நாய் குட்டியுடன் வசித்தனர். சில நாட்களில் அவளுக்கு 7-வது குழந்தை பிறந்தது. நாயும் 5 குட்டிகளை ஈன்றது. வீடு முழுவதும் ஆரவாரம். திடீரென்று பெரிய நாயைக் காணவில்லை. குட்டிகள் தாய்ப்பாலுக்காக அழுது கொண்டிருந்தனர். யாரும் இதை பொருட்படுத்தவில்லை. 7 குழந்தை பெற்ற தாய் தன் குழந்தையின் அழுகையைப் பொருட்படுத்தாமல் ஒரு கொட்டாங்குச்சியில் தனது தாய்ப்பாலை ஊற்றி அதைப் பஞ்சினால் முக்கி நாய்களுக்கு கொடுத்தாள். ஏழையின் இரக்ககுணம் மனித நேயத்தோடு காணப்படுகின்றது.

வாழும் வழி

அமாவாசையார் பல நேரங்களில இரவுப் பொழுதில் தேவார திருவாசகப் பாடல்களைப் பாடுவார். கடந்த கால சிறப்புகளையெல்லாம் புகழ்ந்து பலரிடம் பேசுவார். நிகழ் காலத்தான் நன்றியுணர்வு பற்றி விவாதிப்பார். இன்று நாய்களுக்குக்கூட நன்றியுணர்வு இல்லையென்று

ஆதங்கப்படுவார். இவருடைய இறப்பு ஊரிலுள்ள அனைவரையும் வாட்டியது. இப்பாத்திரத்தின் மூலம் கிராமத்து மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகளையும் அறிய முடிகிறது.

எல்லோரும் சமம்

பஸ்ஸில் பயணம் செய்யும் போது மதிய வெயிலில் ஒரு ஆங்கிலோ இந்திய பெண்மணியும் அவளது 16 வயது மகளும் நடப்பதை பார்த்தும் பஸ்ஸில் உள்ளவர்கள் பரிதாபப்படுகின்றனர். அச்சமயம் ஒரு இந்திய பெண் கைக் குழந்தையோடு வந்ததும் எழும்பி இடங்கொடுத்தனர். எல்லோரும் சமமாக இருக்கும் சமயத்தில் இந்திய பெண்ணுக்கு ஒரு நியாயம், ஆங்கிலோ பெண்ணுக்கு ஒரு நியாயமா? என அவர் மனம் குமுறியது. அப்பெண் வறுமையில் வாடிய பெண் என்பதை அவளது வறுமையான தோற்றம் வெளிப்படுத்தியது. இக்கதை ஏழை பணக்காரர் என்ற வேறுபாடு இல்லை என்பது புலனாகிறது.

இறந்த சிற்றப்பா

இக்கதை மனித உறவுகளில் உள்ள நெருக்கடியைப் பேசுகிறது. தனக்கும் தனது அப்பாவுக்கும் இடையேயுள்ள கருத்து வேறுபாடு பற்றியும் இக்கதை பேசுகிறது. இவளது தங்கை திருமணமாகி ஒரு கைக் குழந்தையுடன் வாழா வெட்டியாகி தகப்பனின் வீட்டில் வாழும் போது ஏற்படும் உளவியல் நெருக்கடியைப் பதிவு செய்கிறது.

ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் கதைச் சொல்லி கப்பல் மூலம் இலங்கைக்குப் பயணப்படுகிறான். அங்குள்ள புத்த ஸ்தூபியும், அதைச் சுற்றியுள்ள வழிபாட்டு இடமும் மிகப் பெரிய அதிசயத்தை ஏற்படுத்துகிறது. அந்த வேளையில் ஒருவரிடம் உரையாட வாய்ப்பு அவனுக்குக் கிடைக்கிறது. அவர் தன்னுடைய குடும்ப கதையைப் பேசுகிறார். தனது மனைவி இறந்ததையும், மனைவி இறக்கும் போது குழந்தைக்கு நாலுமாசமாக இருந்ததையும் குறிப்பாக தன்னுடைய அண்ணி தன் குழந்தையைத் தன் குழந்தையை போலப் பார்த்ததால் அண்ணன் இருவருக்குமிடையே தொடர்பு இருப்பதாகச் சந்தேகப்பட்டதாகவும் மையக்கதை நகர்கிறது.

இந்தக் கதைக்குள் இலங்கையில் கதை சொல்லும் நபர் கதைச் சொல்லியின் சித்தப்பா எனவும், அவர் தனது அண்ணன் வீட்டில் குழந்தையை விட்டு விட்டு வந்ததாகவும் தெரிகிறது. ஒரு சினிமா தன்மையை மு.வ. இந்த கதையில் எழுதியிருக்கிறார். கதையின் களம் பாதி இலங்கையில் நடப்பதாகவும், மீதி தமிழ்நாட்டில் நடப்பதாகவும் உள்ளது.

வாழும் வழி

இந்தக் கதை ஒரு சம்பவத்தைத் திகிலுடன் சேர்த்துத் தொடங்குவது போல கதை தொடங்குகிறது. வையாபுரி குளத்தில் குளித்து விட்டு அவள் மரத்தில் காயப்போட்டிருந்த புடவையைக் குருவன் என்ற ஒருவன் இழுத்துக் கொண்டு ஓட எண்ணும் போது அவனை கையோடு பிடிப்பதாக கதை தொடங்குகிறது. இந்தக் கதைக்குள் குருவனுடைய நீண்ட பதிவு நடக்கிறது. ஊரில் உள்ளவர்கள் குருவனைப் போலிசீல் ஒப்படைப்பதற்கோ, இல்லை அடி கொடுப்பதற்கோ எண்ணுகிறார்கள்.

ஆனால் பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவர் பழநியாண்டவன் கோயிலுக்குப் போய்விட்டுத் திரும்ப வந்தவுடன் இந்தச் சம்பவத்தை அறிகிறார். அவர் ஒன்றுமே பதட்டப்படாமல் குருவனை கூப்பிட்டு விசாரிக்கிறார். குருவன் தனது கதையைச் சொல்லத் தொடங்குகின்றான். அவனுக்கு ஒரு மகள் இருப்பதாகவும், மகளுக்குத் திருமண வயது ஆகிவிட்டதாகவும், தனது மனைவி இறந்துவிட்டதாகவும் தெரிவிக்கிறான். நான் பழனியாண்டவன் கோயிலுக்கு போய் விட்டு வரும் வழியில் இந்தப் புடவையைப் பார்த்தேன். என் மகளுக்கு கொடுக்கலாம் என்ற ஆசையில் திருடிவிட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள் என்று கூறுகின்றான். ஊரிலுள்ள அனைவரும் மனைவியும் திருடனிடம் போய் நீதி கேட்கிறாயா என்று திட்டுகிறார்கள். அவன் மிக பொறுமையாக 100 ரூ கொடுத்து பிள்ளை வரம் வேண்டி பழனியாண்டவரிடம் செலவழிக்கும் போது ஏன் 20 ரூ கொடுத்து ஒரு புடவை வாங்கிக் கொடுக்ககூடாது என்று ஒரு கேள்வியை எழுப்புகிறார். ஆனால் இந்தக் கதைக்குள் ஆன்மீகம் சார்ந்த ஒரு தேடலோடு சமூகம் சார்ந்த ஒரு தேடலையும் மு.வ. நிகழ்த்திக் காட்டுகிறார்.

ஒரு மையக் கருவைக் குழப்பமில்லாமல் ஒரு நல்ல சிறுகதையாக படைப்பதற்கு அதிகத் திறமை இருக்க வேண்டும். சிறுகதை வடிவத்தில் தான் சின்னது! சின்னஞ்சிறுவனாக வாமண மூர்த்தியாய் வந்தவன், தன் காலடி மூன்றினால் மூவுலகையும் அளந்தது போல, ஒரு நல்ல சிறுகதையின் கீர்த்தியும் கூடப் பெரியதாகும்.

எதிர்காலம் இன்னும் எத்தனையோ எழுத்தாளர்களை, போராசிரியர்களை துணை வேந்தர்களைப் பெறலாம். ஆனால் மலர் போன்ற இரக்க நெஞ்சமும், மலை போன்ற கொள்கை உறுதியும் கொண்ட ஒரு பண்பாளர் அளவோடு நெறி வகுத்து வாழந்து காட்டிய ஒரு பெருந்தகையாளர் மு.வ. ஆவார்.

மு.வ.வின் சிறுகதைகள் பல்வேறு கண்ணோட்டங்களில் காணப்படுகின்றன. தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழ்க் கலை மன்றம், தமிழிசைச் சங்கம், மாநில வரலாற்றுக் கழகம் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் முதலியவற்றில் அங்கம் வகித்ததோடு அனைத்திலும் தன்னுடைய பணி முத்திரைகளைப் பதித்த தனிச்சிறப்புகளுக்குச் சொந்தக்காரர் மு.வ.அவர்களாவார்.

39. மு. வ. வின் குறுந்தொகைச் செல்வத்தில் தமிழரின் அகவாழ்வு

மோ.சங்கர்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தூய நெஞ்சக் கல்லூரி
திருப்பத்தூர் - 635 601.

மு.வ எனச் சுருக்கமாக அழைக்கபட்ட மு.வரதராசன் பிறந்த நாள் 25.04.1912 ஆகும். 20 ம் நூற்றாண்டின புகழ்பெற்ற அறிஞர்களில் இவரும் ஒருவர். இலக்கியக் கட்டுரைகள் ஆராய்ச்சி நூல்கள், போன்றவை மட்டுமின்றி எண்ணற்ற சிறுகதைகள் புதினங்கள் போன்றவற்றையும் எழுதியுள்ளார். இவர் 10.10.1974 அன்று இயற்கை எய்தினார்.

இவர் சென்னை, பச்சையப்பன் கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணிபுரிந்தார். மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தராகவும் பணியாற்றினார்.

பிறப்பு : வடஆற்காடு மாவட்டம் வாலாஜா அருகே உள்ள வேலம் என்னும் சிறிய கிராமத்தில் முனிசாமி முதலியார் - அம்மாக்கண்ணு தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். 1918 ஆம் ஆண்டு திருப்பத்தூர் தாலுக்கா அலுவலகத்தில் சிறிது காலம் பணியாற்றினார். 1935 ஆம் ஆண்டு தன் மாமன் மகளான ராதா அம்மாளை மணந்தார். 1935 - 1938 வரை திருப்பத்தூர் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். 1939 -ல் பி.ஓ.எல் தேர்ச்சிபெற்றார். 1944-ல் தமிழ் வினைச் சொற்களின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற தலைப்பில் எம்.ஓ.எல் பட்டம் பெற்றார். 1948 - இல் சென்னைப் பல்கலைக்கழகத்தின் மூலம் சங்க இலக்கியத்தில் இயற்கை என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதன் முதலாகத் தமிழில் முனைவர் பட்டம் பெற்றவர் என்ற பெருமை மு.வ க்கு உண்டு.

1939 - 1961 பச்சையப்பன் கல்லூாயில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார். 1945-ல் தமிழ்த் துறைத் தலைவராக அதே கல்லூரியில் பதவி உயர்வு பெற்றார். 1961 - 1971 வரை சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக பணியாற்றினார். 1971-ஆம் ஆண்டு மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராகப் பொறுப்பு வகித்தார்.

சென்னை, திருப்பதி, அண்ணா பல்கலைக் கழகங்களில் செனட் உறுப்பினராக பதவி வகித்துள்ளார். தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்.

மு.வ. வின் குறுந்தொகைச் செல்வம்

எண்ண எண்ண இனிக்கும் இனிய குறுந்தொகையைப் படிக்க படிக்க இன்சுவை ஊட்டும் அறிவுப் பெட்டகம் ஆகும். குறுந்தொகை 4 அடி முதல் 8 அடிவரையறை உடையது. குறுந்தொகை நூல் எண்ணற்ற பல ஓவியங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. இந்நூல் தலைவன், தலைவி வாழ்க்கை நிலையை ஓவியங்களாகச் சித்தரித்துள்ளது.

இந்நூல் தலைவன், தலைவி ஒருவரை ஒருவர் சந்திக்கும் இடம், காலம், சூழல் போன்ற நுண்ணிய கருத்துக்களை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. ஒருவர் மேல் ஒருவர் கொண்டிருக்கும் அளவற்ற அன்பும், நம்பிக்கையையும் வெளிப்படுத்தும் நூலாக குறுற்தொகைச் செல்வம் விளங்குகிறது. புலவர்பெரு மக்கள் தலைவன், தலைவி சந்திப்புடன் இயற்கையையும் பாடுபொருளாக்கியுள்ளனர். குறிப்பாக மலை, கடல், தாவரம், விலங்கு, பறவை ஆகியவற்றை உவமையாக எடுத்துக் கூறி தலைவன் தலைவியின் நாட்டின் வளத்தையும் எடுத்துரைக்கின்றனர்.

தலைவி தலைவனைக் காணாமல் பசலை நோயால் அவதிப்படும் வேளையில் தோழி தலைவியை ஆற்றுப்படுத்துவாள். விரைந்து தலைவன் வந்து உன்னை மணந்து கொண்டு செல்வான் வருந்த வேண்டாம் எனத் தோழி, தலைவியைச் சமாதானப்படுத்துவாள். எண்ணற்ற பல அரிய செய்திகளைத் தன்னகத்தே கொண்டு திகழும் குறுந்தொகைச் செல்வததைப் பற்றி சில செய்திகளை இங்கே பதிவு செய்வோம்.

தலைவன் தலைவி வாழ்க்கை நிலை நமக்கு ஒரு திரைப்படம் போல் இடம் பெறுகிறது. முன்பின் பழகியறியாத ஒருவனும் ஒருத்தியும் தக்க சமயத்தில் ஒருவரை ஒருவர் கண்டு பழகிக் காதல் கொண்டு மணப்பது உண்டு. அவ்வாறு காதல் கொண்ட தலைவன் தலைவியைப் பார்த்துப் பின்வருமாறு கூறுகின்றான்.

யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலம் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே (குறுந் 40)

என் தாயும், உன் தாயும் யார் யாரோ? என் தந்தையும் உன் தந்தையும் எந்த முறையில் உறவினர்? யானும் நீயும் இதற்கு முன் எவ்வகையில் ஒருவரை ஒருவர் அறிவோம்? செந்நிலத்தில் பெய்த மழை நீர் பரியா வண்ணம் கலத்தல் போல், அன்புடைய நெஞ்சம் பூ கலத்து ஒன்றுபட்டவவே என்கிறான் தலைவன்.

காதல் வளரும் தொடக்க நிலையில் காதலியின் உள்ளத்தைப் பண்படுத்தும் கடமை உடையவள் தோழி திருமணம் செய்து கொள்ளாமல் காதலன் நாள் கடத்திய போது தலைவி கவலையுற்றாள். அந்நிலையில் ஒருபுறம் தலைவனுக்கு கடமையை எடுத்துக் கூறியும் மறுபுறம் தலைவியின் உள்ளச்சோர்வையும் போக்கி வந்தாள்தோழி. தலைவியின் உள்ளச்சோர்வை நீக்க தலைவனுடைய பண்புகள் சிலவற்றை ஐயுற்றவள்போல பேசத் தொடங்கினாள். அவனை நம்புதல் தகுமோ என்று ஐயுறுவது போல் தோழி கூறிய சொல் காதலியின் உள்ளத்தில் எழுச்சியை விளைவித்தது. சோர்வு இருந்த இடம்தெரியாமல் அகன்றது. தலைவனுடைய நட்பை பற்றி நீ ஐயுறுதல் தவறு எனத் தலைவி தோழியிடம் கூறுகிறாள். நான் தலைவன் மேல் கொண்ட நட்பு பெரியது உயர்ந்தது, அளத்தற்கு அரியது என்றாள். கற்பொழுக்கத்திற்கு வித்தாகிய உண்மைக்காதல் அவள் உள்ளத்தே நின்றிருந்தமையால் அவ்வாறு கூறினாள் அவள் உள்ளத்தில் நிறைவு கூறிய சொற்களில் புலனாகுமாறு அமைந்தது. காதலனொடு கொண்ட உறவின் பெருமையை நினைத்த அவள் நெஞ்சத்தில் பெரிய நிலவுலகம் உவமையாக நின்றது.அந்த உறவின் உயர்வை நினைத்த போது வானம்தோன்றியது.அளத்தற்கறிய பெற்றியை நினைத்தபோது கடல்நீர் தோன்றியது.அவன்வாழும் மலையை நினைத்தபோதும் அவன் உள்ளம் பெருமிதம் எய்தியது. அந்த மலையில் இழைக்கப்படும் தேன் பெருந்தேனாக அவற்றை தந்த மலர்கள் உயர்ந்த குறிஞ்சி மலர்களாக அவளுடைய நினைவெல்லாம் சிறந்து விளங்கியது.கற்பு வழிபட்ட ஒரு பெண்ணின் உயர்ந்த நம்பிக்கையைப் புலவர் இவ்வாறு எடுத்துரைக்கிறார்.

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரளவின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" குறுந்-3

தலைவி தலைவன் மேல் கொண்ட காதலை முதலில் தோழியிடம் கூறுவாள். தலைவன் தலைவி உடன்பட்ட பிறகு களவு வாழ்க்கையை மேற்கொள்கின்றனர். இந்நிகழ்வு பெரும்பாலும் குறிஞ்சி நிலமாகக் காணப்படும் . இவளுடைய உடலில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டு செவிலித்தாய் மற்றும் நற்றாய் ஆகியோர் இவளை வீட்டில் அடைத்து வைக்கின்றனர்.வேற்று ஆடவனைத் திருமணம் செய்து வைக்க முற்படுகின்றனா.இதனால் தலைவி மிகவும் மெலிந்து காணப்படுவாள் வேலன் வெறியாட்டு நிகழும்.

தலைவியின் மெலிவுக்குக் காரணம் முருகனால் வந்த நோய் என்று பூசாரி வேலன் சொன்னான்.அதை நம்பி பெற்றோர் வெறியாட்டம் நிகழ்த்தினர்.தலைவி தெய்வத்தை வணங்க வேண்டிய நிலையில்

தோழிகுறுக்கிட்டு உண்மையை குறிப்பாக உணர்த்தி எல்லோரும் உணருமாறு செய்வாள். முருகனை வழிபடும் பூசாரியைப்பார்த்து இந்தப் பலி உணவை படைப்பதனால் இவளுடைய பசலைநோய்க்குக் காரணமானவன் இதை உண்பானோ என்று வேலனைக் கேட்டாள்

முருகு அயர்ந்து வந்து முதுவாய் வேல !
சினவல் ஓம்புமதி:வினவுவது உடையேன்
பல்வேறு உறுவின் சில் அவிழ் மடையொடு,
சிறுமறி கொன்று, இவள் நறுநுதல்நீவி
வணங்கினை கொடுத்தி ஆயின் அணங்கிய
விண்தோய் மாமலை சிலம்பன்
ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே (குறுந்-362)

இவ்வாறு குறிப்பால் புலப்படுத்துதல் அல்லாமல் செவிலி நேரே கேட்டலும் தோழி அவளுக்குவிடை அளித்தலும் உண்டு.

திருமணம் செய்து கொண்டு இல்வாழ்க்கை தொடங்கிய தலைவன் தலைவி குடும்பப் பாங்கு ஒரு பாடலில் வெளிப்படுகிறது. தலைவனுக்காக தலைவி தயிர்குழம்பு சமைத்தாள் தயிரை தன் மெல்லிய விரலால் பிசைந்து சேர்பன சேர்த்துத் தாளிக்கத் தொடங்கினாள். குறித்த நேரத்தில் விரைந்து தாளிக்க தவறினால் நறுமணமும் சுவையும் குன்றுமாதலின் தயிர் பிசைந்த கையைக் கழுவாமலே நெகிழ்ந்த தன் ஆடையை உடுத்திக் கொண்டு தாளிக்கத் தொடங்கினாள். தாளித்த புகை மேல் எழுந்து கண்ணில் பட்டது. புகைக்காகத் தயங்கி சிறிது பொறுத்தாலும் சுவைப் பயன்கெடும் என்று அஞ்சி, புகைக்கு இடையே உற்று நோக்கி துழாவிச் சமைத்து முடித்தாள். இவ்வாறு சமைத்த இனிய புளிச்சுவை உடைய குழம்பைக் கணவனுக்கு இட்ட போது அவன் நன்றாயிருக்கின்றது என்று பாராட்டியவாறே உண்டான். இந்தப் பாராட்டைக் கேட்ட தலைவி முகம் மலர்ந்தது. அந்த மகிழ்வு புன்முறுவலாக வெளிப்பட்டது.

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம், கழாஅது, உடீஇ,
குவளை உண்கண் குப்புகை கமழத்
தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிது எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே (குறுந் 167)

திருமணத்திற்கு முன் தன் தாய் செய்த உணவை மகிழ்ந்து போற்றாதவனாக இருக்கிறான். ஆனால் இன்றோ அன்பின் வெளிப்பாடு காரணமாக தலைவி தயிர்க் குழம்பை இனிமையுடையதாக கூறி உணவு உண்கிறான் தலைவன்.

முடிவுரை

சங்க கால இல்லற வாழ்க்கையில் அகத்திணைக் கோட்பாடுகள் மிக அழகாக எடுத்தியம்புகிறது. குறிப்பாக எட்டுத்தொகையில் நல்ல என்ற அடைமொழியைப் பெற்றுத் திகழ்கின்ற குறுந்தொகை நூல் சிறப்பானதொரு காதல் இலக்கியம் ஆகும். களவு முதல் கற்பு வரை வாழ்க்கை எவ்வாறு அமைந்துள்ளது என்பதையும் பிறசெய்திகளான பண்பாடு இயற்கை போன்றவையும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தச் செய்தி வருங்கால இளம் தலைமுறையினருக்கு ஒரு வழிகாட்டியாய் அமையும். சுற்றுச் சூழலை இயற்கையோடு ஒப்புமைப்படுத்தியுள்ளார். பண்பாடு என்பது ஒரு புதிய மாற்றத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. காதல் என்பது இன்று வேறு விதமான சூழலாக மாறிவருகிறது. அந்தச் சூழ்நிலையில் சங்க கால வாழ்வு சிறப்பானதொரு இடத்தைப் பெறுகிறது.

௰. பாவை நாவலில் சங்க இலக்கியத்தின் தாக்கம்

முனைவர் மா. சண்முகம்
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
அடைக்கலமாதா கல்லூரி
வல்லம், தஞ்சாவூர்.

தமிழ் இலக்கியத்தில் பேராசிரியர் முனைவர் மு. வரதராசனார் அவர்களின் பணி அளவிடற்கரியது. அவர் ஈடு இணையற்ற பெரும் படைப்பாளராக விளங்கினார். உலகத்தில் உள்ள தமிழர்களின் உள்ளங்களைக் கவர்ந்த முதல் தமிழராக வலம் வந்தார். அதனால் அவரை மு.வ. என்ற செல்லப்பெயர் கொண்டு அழைக்கத்தொடங்கினர். மு.வ. அவர்கள் சங்க இலக்கியத்தின் மீது மிகுந்த பற்று கொண்டவர். எனவே தான் அவரது நாவல்களில் சங்க இலக்கியத்தின் தாக்கம் நிரம்பக் காணப்படும். பாவை நாவலின் வழியாக சங்க இலக்கியத்தின் தாக்கம் சமுதாயத்தோடு தொடர்பு கொண்டுள்ள பாங்கினை பின்வருமாறு காண்போம்.

காதல்

கம்பூரில் வசிக்கும் மணியக்காரரின் மகன் பழனி. அதே ஊரைச்சார்ந்த வேலுப்பிள்ளையின் மகள் பாவை.

"யாரும் இல்லையா என்றான் பழனி"

"இன்னும் அப்பா வரவில்லை"

என்றாள். நேரம் குறைந்து சிறிது நேரம் நிறைந்தும் மாறி மாறி அவர்களை மயக்கின பழனி பெருமூச்சு விட்டு பாவை என்றான். பதில் இல்லை. பால்போல் படர்ந்த நிலவொளியில் விழுந்த வேப்பம் பழத்தைக் கையில் வைத்துக் கொண்டு அவனைப் பார்த்தாள். அவன் அவளைப் பார்த்தான். இந்நிகழ்வு சங்க இலக்கியத்தில் காணப்படும் தலைவன், தலைவி சந்தித்துப் பேசுவதை நினைவு படுத்துகிறார் மு.வ.

தொல்காப்பியர் கூறும்,

தன்னுறு வேட்கை கிழவன் முன் கிளத்தல்
எண்ணுங் காலைக் கிழத்திக்கில்லை (தொல் : 10640)

என்ற விதி இங்கு அரணாய்நிற்கிறது. மேலும் காதல் பற்றிக் கூற வந்த திருவள்ளுவரின் வாய் மொழியும் நோக்கத்தக்கதாகும்.

"கண்ணொடு கண் இணை நோக்கொக்கின் வாய்சொற்கள்

என்ன பயனும் இல (குறள் 1100)

இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்திக் காதலில் திளைக்கின்றனர். இரவு நேரத்தில் ஊரில் கூத்து நடக்கிறது. பழனி பாவையை சந்திக்க இரவு நேரத்தில் அவள் வீட்டின் வேலி ஓரத்தில் அவளைச் சந்தித்துப் பேசுகிறான். சங்க இலக்கியத்தில் தலைவியைச் சந்திப்பதற்கு இரவுக்குறியில் தலைவன் வருவதை நினைவுபடுத்துகிறார் மு.வ.

தலைவியை சந்திக்க தலைவன் இரவு நேரத்தில் வருவதை தொல்காப்பியர்,

"இரவுக்குறியே இல்லகத்துள்ளும்
மனையோர் கிளவி கேட்கும் வழியதுவே
மனையகம் புகா அக் காலையான" (தொல் : 1077)

என்னும் நூற்பா இரவுக்குறியின் தன்மையை வெளிப்படுத்தி நிற்கிறது.

காதலும் சாதிப்பிரிவும்

பழனியும் பாவையும் ஒருவரை ஒருவர் விரும்புவது இரண்டு குடும்பாத்தாருக்கும் தெரிய வருகிறது. இதனைத் தெரிந்து கொண்டு இரண்டு குடும்பத்தினருக்கும் வேண்டியவரான ஏகாம்பரச் செட்டியார் அறிந்து பழனியின் அப்பாவிடம் பேசுகிறார். அதற்கு வேலுப்பிள்ளை நாங்கள் வேறு சாதி இது ஒத்துவராது என்பதன் மூலம் ஆசிரியர்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' (புறம் : 192 : 1)

என்ற கணியன் பூங்குன்றனாரின் கவிதை வரிக்கு மாறாக வேலுப்பிள்ளையைப் பேசவைக்கிறார். ஊரார் பேச்சுக்கு இலக்காகிய பழனியும் பாவையும் ஒரே ஊரில் இருந்தால் தனக்குப் பாதிப்பு வரும் என்று தெரிந்து தனது மைத்துனி இருக்கும் வேறு ஊருக்கு அனுப்பி வைப்பது, தலைவி, தலைமகள் வீட்டில் இற்செறிப்பில் வைப்பதை ஆசிரியர் புலப்படுத்துகிறார். மைத்துனியின் தம்பி அண்ணாச்சாமி பாவையிடம் தவறாக நடக்க முற்படுகின்றான். இதைக் கண்ட பாவை வெகுண்டு எழுந்து பாரதிகண்ட புதுமைப்பெண்ணாக வேடமிட்டு இரவு நேரத்தில் வீட்டைவிட்டு வெளியேறுகிறாள். பல்வேறு இன்னல்களுக்குப்பின் ஆற்காடு சென்றடைந்து அங்குவசிக்கும் சாமிநாதன் கமலம் தம்பதியிடம் அடைக்கலம் புகுகின்றாள். இந்நிகழ்ச்சி யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கவிதையோடு ஒத்துப்போகிறார் மு.வ.

வேலூரில் பாவை

பாவையின் தந்தை வேலுப்பிள்ளை மணியக்காரர் மகனோடு தன் மகள் காதல் புரிவதால் பிரச்சனை வரும் என்று எண்ணி, தன் மைத்துனியின் வீட்டின் தன் மகளை இற்செறிப்பு செய்கிறார். இருப்பினும்

பாவையின் சின்னம்மாவின் தம்பி அண்ணாச்சாமியினால் பாலியியல் தொந்தரவுக்கு ஆளாகி இரவோடு இரவாக ஆண் வேடம் பூண்டு வீட்டை விட்டு வெளியேறுகிறாள். சாலைவழியாகச் சென்று ஆர்காட்டை அடைகின்றாள். அங்கு வேறு ஊரில் இருந்து தான் வந்ததாகக் கூறி சாமிநாதன் கமலம் தம்பதியின் வீட்டில் அடைக்கலமாகிறாள். அத்தம்பதியினரின் குழந்தையைப் பராமரிப்பது, வீட்டுவேலைகளைச் செய்து கொண்டு சிறிது நாள் கழிக்கின்றாள். பின்னர் கமலத்திடம் தன் நிலையையும், காதல் வாழ்வையும் வெளியிடுகிறாள். சாமிநாதன் விபரம் அறிந்து பழனியின் முகவரி கேட்டு கடிதம் எழுதவைக்கிறான். பழனியின் வருகையை எதிர் நோக்கிக் காத்திருக்கிறாள் பாவை. ஏகாம்பரச் செட்டியார் மேற்பார்வையில் கம்பூருக்கு பாவை எழுதிய கடிதம் வந்தது. நண்பன் கடிதம் எழுதியிருப்பதாய் கூறிவிட்டு ஆற்காட்டிற்குச் செல்ல ஆயத்தமானான் பழனி.

ஆர்க்காட்டில் பாவை

பாவை எழுதிய கடிதத்தின் பேரில் பழனி ஆர்க்காடு வந்து சேர்ந்தான். அங்கு சாமிநாதன் - கமலம் வீட்டில் இருக்கும் பாவையைச் சந்திக்கின்றான். சாமிநாதன் - கமலம், பழனி - பாவைக்கு நிறைய உதவிகள் செய்தனர். திரும்ப அவர்களுக்கு என்ன உதவி செய்யப்போகிறோம் என்று பாவை தன்னுள் பேசிக் கொண்டாள். ஆர்க்காட்டிலிருந்து சென்னைக்கு செல்லும் பேசின் பிரிட்ஜ் இரயில் நிலையத்தை அடைந்தான் பின்பு இரயில் நிலையத்தை விட்டு வெளியே வந்து கோமேஸ்வரன் பேட்டைக்குப் போக வேண்டும் என்று கேட்டு, காஞ்சிபுரம் பச்சையப்பன் முதல் தெருவுக்கு எவ்வளவு என்று பேரம் பேசினான். வண்டிக்காரன் முக்கால் ரூபாய் கொடுசாமி என்றான்.

சென்னையில் பாவையும் பழனியும்

சாமிநாதனின் நண்பர் கண்ணப்பர் சென்னையில் வசித்து வந்தார். பழனி - பாவை இருவரும் கண்ணப்பர் வீட்டிற்குச் செல்ல அவர் மனைவி மங்கையற்கரசி இனிது வரவேற்றாள். கண்ணப்பரின் குழந்தையோடு பாவை விளையாடி மகிழ்ந்தாள். கண்ணப்பர் அலுவலகத்தில் இருந்து வந்தவுடன் பழனி - பாவை இருவரிடமும் உரையாடி அவர்கள் பிரச்சனைகளை அறிந்து கொண்டார். தானே கம்பூருக்குச் சென்று இருவரின் பெற்றோரையும் சந்தித்து சமாதானம் செய்வதாகக் கூறினார். அதற்கு பழனி, ஏகாம்பரச் செட்டியாருக்கு தகவல் கொடுத்தால் போதும் என்றான். பழனி - பாவை மேல்கொண்ட காதல் எத்தகையது என்பதை கண்ணப்பரிடம் கூறிவியந்த படி கண்ணப்பர் பழனியை நோக்கி,

"எனக்கு அந்த வாழ்க்கை இல்லை என் மனைவியின் மனதை தொடமுடியவில்லை. அந்த பேறு எனக்கு கிடைக்கவில்லை. எங்களுக்கு நடந்த திருமணம் சாதி மணம், சடங்குமணம், பொன்னும் பட்டும் வாழ்த்திய மனம். அன்பு மனம் அன்று. அவளுடைய மனத்தை என் படிப்பும் கவரவில்லை. என் வருவாயும் கவரவில்லை. ஆனாலும் எப்படியோ வாழ்ந்து வருகிறோம்".

என்ற கண்ணப்பரின் கூற்றுப்படி அரை நூற்றாண்டிற்கு முன்பு இருந்த நடுத்தரவர்க்கத்தில் வாழ்க்கைப் போராட்டத்தை எடுத்து இயம்புகின்றார். இதன் மூலம் தனக்குக் கிடைக்காத அன்பு கலந்த வாழ்க்கை பழனி - பாவை இருவருக்கும் மட்டுமாவது அமைத்துக் கொடுப்போம் என்ற மன நிலையில் கண்ணப்பர் இருப்பது தெளிவாகின்றது. கடிதம் கிடைத்த பாவையின் அப்பா சென்னை வந்து பழனி ஊருக்குபோக வேண்டும் அவசியம் என வலியுறுத்தினார். கண்ணப்பர், வேலுப்பிள்ளையின் உரையாடலில் ,

"கோவிலும், கல்வி நிலையங்களும் பண வேட்டையால் கெடும் போது உள்ளமும் கெடுகின்றது".

நாம் வாழும் சமூகம் பணத்தை அடிப்படையாக கொண்டு திகழ்கிறது என்பதை விளக்குகிறார். ஆசிரியர் பழனி நல்லவன் மாறமாட்டான் என்று கண்ணப்பன் கூற பழனியும் கம்பூருக்குச் சென்று இறக்கும் தருவாயில் இருக்கும் தாயைக் காப்பாற்றி விட்டேன். விரைவில் வந்து விடுவேன் என்று பாவைக்கு கடிதம் எழுதுகிறான். அக்கடிதத்தைப் படித்து மீண்டும் மடித்து வைக்கிறாள் பாவை. விரைவில் பழனி பெற்றோரோடு சென்னை வந்து பாவையை மணம் செய்வான் என்று பதிவு செய்வதிலிருந்து சங்க இலக்கியத்தின் தாக்கம் வெளிப்படுவதோடு உண்மையான காதல் இறுதியில் வெற்றிபெறும் என்று கூறுகிறார் ஆசிரியர் மு.வ.

சங்க இலக்கியக் காதல் அன்றுமுதல் இன்று வரை எல்லோராலும் பாராட்டப்படுகிறது. ஏனென்றால் அந்தக் காதலில் உண்மைத் தன்மையும், இயல்பான வாழ்க்கையின் நெறிமுறைகளையும் காணமுடிகிறது . இந்நாவலில் பாவையின் காதலை இயல்பாக கூறும் மு.வ. அதற்குரிய பண்புகளைக் கொண்டவளாகப் படைத்துக் காட்டுகின்றார். நாவலில் வரும் கதை மாந்தர்கள் எல்லோரும் சங்க காலத்தில் உலாவரும் மாந்தராகவே காட்சி தருகின்றார். மு.வ. சங்க இலக்கியத்தின் மீது கொண்ட காதலினால் அதன் தாக்கத்தை இந்நாவல் மூலம் வெளி கொண்டு வருகிறார் என்று கூறினால் மிகையாகாது.

பூ. கரித்துண்டு நாவல் காட்டும் மனிதநேய அறச் சிந்தனைகள்

பொ. பிரகாஷ்
இளநிலை ஆய்வாளர்
தமிழ்த் துறை
பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி
கோயமுத்தூர் - 641 014.

முன்னுரை

இன்றைய கால கட்டத்தில் தனி மனித ஒழுக்கம் என்பது மிகவும் தேவையான ஒன்றாகவே விளங்குகின்றது. மனித நேயம், சிறந்த அறம் சிறப்புறும் பண்பாடு இவைகளைத் தனி மனித ஒழுக்கம் என்று குறிப்பிடலாம். அவைகளை மையமாகக் கொண்டே சங்க இலக்கியங்களும், நீதி இலக்கியங்களும் தோன்றின. பின்னர் தோன்றிய இக்கால இலக்கியங்களும் இக்கருத்துக்களை மையப்படுத்தின. மனிதன் மாண்புறத் துணையாகும் சிந்தனைகளை நாவல், சிறுகதை, கட்டுரைகள் ஆகிய வடிவங்களில் மையப்படுத்தி அறச்சிந்தனைகளைத் தற்கால வடிவங்களில் தந்த படைப்பாளர்களில் சிறந்தவராக விளங்கியவர் மு. வரதராசன் ஆவார். அவருடைய எண்ணற்ற நாவல்கள் மனித நேயத்தையும், அறக்கருத்துக்களையும் வெளிப்படுத்துவனவாகவே அமைகின்றன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு, கரித்துண்டு நாவல் காட்டும் மனிதநேய அறச் சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

அகராதி தரும் விளக்கம்

மனித நேயம், அறம் என்கிற இரண்டும், இரண்டு கண்கள் என்றே குறிப்பிடலாம். இவைகள் இரண்டிற்கும் வேறுபாடு என்பது சிறிய நிலையிலேயே காணப்படுகிறது. இதற்கு அகராதிகள் பல நிலையில் பொருள் விளக்கம் தருகின்றன. அறம் என்பதற்கு தருமம், புண்ணியம், இல்லறம், அறக்கடவுள் என்றெல்லாம் குறிப்பிடகின்றது. மனித நேயம் என்று வரும் போது அகராதிகள் பொருள் விளக்கத்தை புனைவதில்லை. தக்க நேரத்தில் தக்க உதவியினைச் செய்வது வறியவர்கள் என்று அறிந்த பின் அவர்களுக்கு உதவுவது ஆகிய அனைத்தும் மனித நேயமே என்று குறிப்பிடலாம்.

கரித்துண்டு நாவல் காட்டும் சங்க இலக்கிய நேயம்

கரித்துண்டு நாவல் வறுமை நிலையினைப் பற்றியே பெரிதும்

பேசுகின்றது. அதிலும் பலவகை மனித நேயக் கருத்துக்களை மு.வ. அவர்கள் பாத்திரப் படைப்பின் மூலம் வெளிப்படுத்துகின்றார். அதிலும் ஓவியர் மோகன் என்னும் பாத்திரப் படைப்பு, தனி மனித ஒழுக்கத்திற்கு, மனித நேயச் சிந்தனைக்குச் சிறந்த பண்புடைய பாத்திரமாகவே சித்தரித்து உள்ளது சிறப்பு வாய்ந்ததாகும்.

ஓவியர் தன் இரண்டு கால்களை இழந்த நிலையிலும் தனக்குத் தெரிந்த ஓவியங்களைக் கரித்துண்டுகளால் ரோட்டில் எழுதி அதில் வரும் வருமானத்தை வைத்துக் கொண்டு தன்னுடைய குடும்பத்தை நகர்த்தி வருபவர். அந்நிலையில் அவருக்கு ஒரு நாளைக்கு மூன்று ரூபாய் கிடைப்பதே அதிகம் என்ற நிலையிலும், தான் ஓவியம் வரையும் இடத்திற்கு வந்து தினமும் இரவு தங்கிச் செல்லும் ஒரு ஏழைக் குடும்பத்திற்கு அன்று கிடைத்த காசில் இருந்து ஏழைச் சிறுவனுக்கு எட்டணா ஒன்றும்.'. காலணா ஒன்றும் எடுத்துத் தருவது அவரின் மனித நேயத்தையும், சிறந்த அறத்தையும் காட்டுகிறது.

அந்தக் கண்களில் கருணை வடிவான பார்வை இருந்தது. காசு வீசியவர்களுக்கெல்லாம் அசையாத அவருடைய நெஞ்சம் அந்த ஏழைத் தாயின் குரலுக்கு அசைந்தது என்று உணர்ந்தேன். அவருடைய் கண்களில் இரக்கப் பார்வை அந்தச் சிறுவர்கள் மேலும், கைக்குழந்தை மேலும் சென்றது. முன் பின் எண்ணாமல் தயங்காமல் இடுப்பில் செருகியிருந்த காசுகளில் இரண்டு எடுத்து அந்த ஓவியர் பெரிய பையனுடைய கையில் கொடுத்தார். அந்த இரண்டு நாணயங்கள் என்ன என்று அவர் பார்க்கவில்லை. கரி. ப. 22

உதவி செய்கின்ற போது கணக்குப் பார்த்துச் செய்தல் கூடாது என்பதையும் 'இடக்கை கொடுப்பது வலக்கைக்குத் தெரிதல் கூடாது' என்பதையும் அந்த ஓவியர் வழியில் சிறந்த மனிதநேய அறக்கருத்தை விதைக்கிறார் மு. வ. அவர்கள்.

இதனை மையமாகக் கொண்டு சங்க இலக்கியத்தில் புறநானூற்றில் குமண வள்ளல் தனக்குக் கொடுத்த பொன் பொருள்களை எல்லாம் மனைவியிடத்தில் தந்து அனைவருக்கும் பங்கிட்டுத் தருமாறு கூறும் பெருஞ்சித்தரனார் பாடல் சிறந்த உதாரணம் என்றே கூறலாம். இங்கு ஓவியர் ஏழைக்கு உதவும் செயலும் புலவரின் செயலும் ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் அமைந்த மனித நேயச் செயல்களே.

"நின் நயந்து உறைநர்க்கும் நீ நயந்து உறைநர்க்கும்
பல் மாண் கற்பின் நின் கிளை முதலோர்க்கு
கடும்பின் கடும் பசிதீர யார் நின்
நெடுங் குறியெதிர்ப்பை நல்கியோர்க்கும்
இன்னோர்க்கு எண்ணாது என்னொ டும் சூழாது

வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனை கிழவோ யோ"
(பெருஞ்சித்திரனார் புறம் - 163)

என்ற பாடல் சிறந்த உதாரணம் என்று அறியலாம்.

நட்பில் மனிதநேய அறம்

நட்பு என்கிற ஒன்று தான் எந்த ஒன்றையும் எதிர்பார்த்து செய்வது இல்லை. ஆனால் ஒருமுறை அல்லது இருமுறை பார்த்த முகத்திற்கு இரவு நேர மழை என்றும் பார்க்காமல் திருவேங்கடம் அந்த ஓவியர்க்கு உதவி செய்வது சிறந்த நட்புடன் மனித நேயம் என்றே குறிப்பிடலாம்.

"பேசாமல் படுத்திருந்த என் உள்ளத்தில் சேத்துப்பட்டுப்
பள்ளத்தில் உள்ள ஓவியரின் குடிசை நினைவுக்கு
வரவே திடுக்கிட்டாற் போல் படுக்கையிலிருந்து
எழுந்து உட்கார்ந்து அய்யோ என்றேன்" கரி ப. 113
"மனைவியை எழுப்பித் தாழ்போட்டுக் கொள்ளச்
சொல்லிவிட்டு குடையை எடுத்துக் கொண்டு
கதவை திறந்தேன்
. . . . .
குடையை விரித்துப் பிடித்துக் கொண்டே
கிளம்பினேன்". கரி பக். 114

உதவி என்பது மனிதச் செயலாக இருப்பினும் தக்க நேரம் அறிந்து உதவுதல் என்பதே மனித நேயம். ஆனால் தன்னுடைய உயிரையே காப்பாற்றத் தெரியாத நிலையிலும் பிறருடைய உயிரைக் காப்பது சிறந்த மனிதநேய அறம் ஆகும். மழையில் ஓவியர் மோகன் வெள்ளத்தில் தவிக்கின்ற போது குந்தம்மாவின் கணவன் அவனைக் காப்பாற்றிக் கரை சேர்க்கின்றான். அதனைச் சிறந்த அறம் என்று குறிப்பிடலாம்.

"ஏன் கேட்கிறீர்கள் அந்தக் கதையை,
அவன் நீந்தத் தெரிந்தவன் அதனால் பிழைத்தான்
பொன்னி கைக்குழந்தையை எடுத்துக் கொண்டு
நடந்தான் அந்தப் பையனை நாங்கள் தூக்கிப் பிடித்துக்
கொண்டோம். அந்த முடவன் என்ன செய்வான்
பாவம் பாதி நீந்திக் கொண்டும் பாதி எங்களைப்
பிடித்துக் கொண்டும் வந்து சேர்ந்து விட்டான்" கரி.ப. 115

என்று மு.வ. சொல்லும் நட்பு நிலைகள் சிறப்புடையவை ஆகும். இந்நிலையைப் பார்க்கின்ற போது கோப்பெருஞ்சோழன். பிசிராந்தையார் நட்பே சிறப்புடையதாக அமைவதை இதற்குச் சான்றாகக் காட்டலாம். நாடு, இனம், மொழி, நிறம் இவைகளைத் தாண்டி வெளிப்படும் நட்பு சிறப்புடையது என்பதே பிசிராந்தையாருடைய நட்பு ஆகும்.

இவற்றைப் போலவே ஔவையாரும் அதியமானின் நட்பும் தனக்குக் கிடைத்த அரிய வகை (நீண்ட காலம் உயிர் வாழக்கூடிய) நெல்லிக்கனியினை அதியமான் ஔவையாருக்குத் தந்து தன்னுடைய நட்பின் வலிமையினை வெளிப்படுத்துகிறார்.

"பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கி
சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே" (ஔவையார் - புறம் - 91)

என்ற பாடலினைக் கொண்டு பார்க்கும் பொது நட்பினைக் காட்டிலும் அறச்சிந்தனைக் கருத்துக்களே விளங்குகின்றன. தன் உயிரைக் காட்டிலும், தமிழ் வளர்க்கும், தமிழ் மொழியினைப் பரப்பும் ஔவைக்கே உரியது அந்த நெல்லிக்கனி என்று அறிந்து அதியமான் அளித்த அதை சிறந்த அரசனுக்குரிய மனித நேயச் செயலாகும். இந்நாவலில் வரும் திருவேங்கடம் என்ற கதைப் பாத்திரம், தான் மட்டும் மழையில் நனையாமல், தன்னுடைய உயிரை மட்டும் காத்துக் கொள்ளாமல், தன்னுடைய நண்பனின் உயிரும் பெரிது என்று அறிந்து மழையில் கூட ஓவியரை அழைத்துச் செல்வதற்குப் போவது சிறந்த அறம் என்றே குறிப்பிடலாம்.

பசிப்பிணி நீக்கும் மனித நேய அறம்

பசி என்பது அனைத்து உயிர்களுக்கும் பொதுவான ஒன்றாகவே விளங்குகின்றது. அதனால் தான் பாரதி "தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்றான். ஏன் என்றால் பசி என்கிற கொடுமை மிகவும் கொடியது அதனால் தான் ஔவையும் "கொடியது கொடியது இளமையில் வறுமை கொடியது" என்றார். இந்தப் பசி என்கிற ஒன்றைப் போக்க வேண்டும். அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும் என்று எண்ணியே வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்று உரைத்த வள்ளலார் அவர்கள்

"அணையா நெருப்பு" என்ற ஒரு திட்டத்தை உருவாக்கிப் பசிக் கொடுமையினை நீக்குவதற்குப் பெரிதும் பாடுபட்டார். இவ்வகையில் தங்களால் முயன்றவரை பசியினை களைய அனைவரும் பாடுபட்டு உள்ளார்கள்.

ஓவியன் மோகன் வீட்டில் உணவு இல்லை என்பதை அறிந்ததும், தனக்கு இருக்கிறதோ? இல்லையோ? மற்றவர்களுக்குப் பங்கிட்டு உண்பதே சிறந்த நேயம் என்ற வகையில் அவர்களின் பசியினைப் போக்குவதற்குத் திருவேங்கடம் தன்னுடைய கையில் இருக்கும் இரண்டு ரூபாயினைத் தந்து அரிசி வாங்கிக் கொள்ளச் சொல்கிறான்.

"ஈயென இரத்தலும் இழிந்தன்று, ஈயேன் என்றல் அதனின்றும் இழிந்தன்று" என்பதைப் போல் மறுத்து விடுகின்றார். பின்னர் வற்புறுத்தி அவர் இடத்தில் தந்து அவர்களின் அன்றைய தினப் பசியினைப் போக்குகிறான்.

"பக்கத்தில் ஓர் இடத்தில் வீடு கட்டுகிறார்கள்
அங்கே சிற்றாள் வேலைக்குப் போயிருக்கிறார்கள்
அங்கே போய்க் காத்திருந்து வரும் போது
அரிசி வாங்கி வரும்படியாகப் பையினை
அனுப்பியிருக்கிறேன்" கரி. ப. 68.

ஓவியர் அவருடைய கையையும் பையன் கையையும் பார்த்துவிட்டு, 'அரிசி' என்றார். பணம் இல்லை என்று சொல்லி விட்டார்கள் என்றாள் பொன்னி.

"இரண்டு ரூபாய் எடுத்துப் பொன்னியின் கையில் நீட்டி வாங்கிக் கொண்டு வா அம்மா பொழுது போச்சு" என்றேன்.
கரி. பக். 69-70.

இதில் திருவேங்கடத்தின் மனித நேய அறச்சிந்தனையினைப் பார்க்க முடியும்.

ஓவியன் இந்த நிலையில் வாழ்ந்த போதும் பக்கத்து வீட்டுக் குடும்பம் உணவு இல்லாமல் வாடுகின்றதே என்று அறிந்து தன்னுடைய வீட்டில் இருந்து சமைத்துத் தரும்படி மனைவியிடத்தில் சொல்வது சிறந்த மனிதநேயச் செயலினைக் காட்டுகின்றது.

"மிகவும் நல்லவள் எனக்கு முதலில் எவ்வளவோ உதவி செய்து இடம் கொடுத்தவள் என்று சொல்லிவிட்டு தம் மனைவியை நோக்கி பொன்னி அரிசி இருக்கிறதா, இல்லையா, சாப்பிட்டார்களா இல்லையா, கேட்டுப் பார்த்து நம் வீட்டிலாவது கொஞ்சம் பொங்கி எடுத்துக் கொண்டுபோ, உனக்குத் தாய் வீடும் போல" கரி. ப. 33.

தனி மனித வாழ்க்கையில் பசி என்பது மிகவும் கொடுமை அதனைத் தீர்ப்பது மனிதனின் கடமை என்பதை மு.வ. ஓவியர் மூலமாகவும், திருவேங்கடம் மூலமாகவும் சொல்வது இயல்புடையது என்பதையே காட்டுகின்றது. இதனையே மணிமேகலைக் காப்பியமும் எடுத்துச் சொல்கிறது. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற அறக் கருத்தையும் வலியுறுத்துகின்றது. அவற்றைப் போலவே இந்நாவலும் வலியுறுத்துவதை இவ்விரண்டு (ஓவியர் திருவேங்கடம்) பாத்திரப் படைப்புகள் காட்டுகின்றன.

முடிவுரை

மனித நேய அறத்தையும், மனித உணர்வுகளையும் மதிப்பளிக்கக் கூடிய தன்மையில் இன்றைய மனித வாழ்க்கை அமையத்தக்கதாக இருத்தல் வேண்டும். பணம் ஒன்று மட்டுமே மனித வாழ்க்கையை முடிவு செய்வதாக இருத்தல் கூடாது. அவற்றைத் தாண்டி தருமத்தையும், மனித நேயத்தையும், அறச்சிந்தனையையும் மனிதனுக்கு உதவும் மகத்தான வாழ்க்கையாக அமைதல் வேண்டும் என்பதை மு.வ. தரும் மனிதநேயச் செய்தியாகக் கொள்ளலாம்.

டீஉ. மு. வ. அவர்களின் 'தம்பிக்கு' கடிதங்கள் செப்பும் அறச்சிந்தனைகள்

வே. விக்னேசு
தமிழ் நிறைகலை இரண்டாமாண்டு
பூ.சா.கோ. கலை அறிவியற்கல்லூரி
கோயம்புத்தூர்-14.

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் மையப்பகுதியில், தமிழைப் பல்வேறு நிலைகளிலும் வளர்த்துத் தமிழர்க்கு என்றென்றும் வழிகாட்டியாக அமைந்தவர் டாக்டர் மு. வரதராசனார் அவர்களாவார். தொல்காப்பியம் முதல் இன்றைய இலக்கியம் வரை தமிழிலக்கியம் முழுவண் ஒரு சேர ஊன்றித் திளைத்து இலக்கணம், இலக்கியம், மொழியியல், புனைகதை, சிறுகதை என்றின்ன கிளைகளாகப் பல்கியுள்ள தமிழின் துறைதோறும் தொண்டாற்றியப் பெருமகனார் பெருந்தகை மு.வ. ஆவர். அவ்வகையில் தமிழின் இலக்கிய வகைமையுளொன்றான 'கடித இலக்கியம்' என்ற வகையிலும் நான்கு நூற்களைப் படைத்து சிறப்பு பெற்ற பெருமை மு.வ. அவர்களையே சாரும். இந்நான்கு நூற்களுள் 'தம்பிக்கு' என்ற கடித இலக்கியத்தில் வெளியாகும் உயரிய சிந்தனைகளை இக்கட்டுரை சுருங்க விளக்க முற்படுகிறது.

தம்பிக்கு

மு.வ. அவர்களியற்றிய கடித இலக்கியங்களுள் 'தம்பிக்கு' என்ற கடித இலக்கிய நூலும் ஒன்றாம். இந்நூலுள் அண்ணன் வளவன், தன் தம்பி எழிலுக்கு வரையும் கடிதங்களாக எட்டு க்டிதங்கள் உள்ளன. இவையாவும் தமிழ்மொழிப்பற்று, தமிழினம், நாட்டுப்பற்று, சமுதாய நலன், அறம் சார்ந்த சிந்தனைகள் என்றின்ன உயரிய கருத்துக்களைப் பரக்கப் பேசுகின்றன. மு.வ. அவர்கள் அறத்தைப் போற்றியவர். அறவழியில் நின்ற பெரியோர்களை மதித்து அவர் வழியில் நின்றவர். வள்ளுவரின் திருக்குறளைக் கண்ணெனப் போற்றியொழுகியவர். இன்னகாரணத்தான் அறச்சிந்தனைகளையும், அறத்தில் மாறுபடாது நின்ற பெரியோரின் கருத்துக்களையும், திருக்குறளின் உயரிய குறள்களையும் சுட்டிக்காட்டி, தமிழினத்தின் தாழ்ச்சிக்குக் ஏதுவாய் சிலவற்றைச் சுட்டிக் காட்டி, தமிழினம் தழைத்தோங்க உரிய வழிமுறைகளை இந்நூல் முழுவண் மொழிந்துள்ளார்.

தமிழ்மொழிப் பற்று

பெருந்தகை மு.வ. அவர்கள் தமிழ் மொழியின் மீதும் தாய்

நாட்டின் மீதும் மிகுந்த பற்றுள்ளம் கொண்டவர். தமிழ்மொழிப் பற்று என்பது தமிழனாய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் இன்றியமையாது வேண்டத்தக்கது. தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து ஒற்றுமைப்படுத்த வல்லது. ஆயினும். தமிழர்களுக்கு தன்தாய் மொழி மீது உள்ள பற்றைவிடத் தன்னலமே அவனுக்கு இன்றியமையாததாகயுள்ளதென்பதை,

> *"தமிழனைத் தனியே பெயர் சொல்லிப் பரித்துப் பார் சீறி விழுவான். ஆனால் அவனுடைய நாட்டையும் மொழியையும் இனத்தையும் பழித்துச் சொல் பொறுமையோடு கேட்பான். காரணம் மேலே சொன்னதுதான். தன் மொழியைவிடத் தன் நாட்டை விடத்தானே முக்கியம் என்ற எண்ணம் தமிழனிடம் அவனை அறியாமல் ஊறிக்கிடக்கிறது". (தம்பிக்கு. ப. 40)*

என்ற வரிகளில் மு.வ. வருந்திக் கூறுவார். ஆதலின் தமிழனுக்குத் தன் தாய்மொழியின் மீதும். தாய் நாட்டின் மீதும் மிகுந்த பற்று வேண்டும். தன்னலத்தைக் கருதாது பொதுநலத்தைக் கருதும் தாய்மொழிப் பற்றே மிகவும் இன்றியமையாதது. அதுவே ஒவ்வொரு தமிழனுக்கும் வேண்டத்தக்கது.மேலும்,

> *"தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து ஒற்றுமைப்படுத்த வல்லது".*
> *(மேற்படி. ப. 60)*
>
> *"தமிழ் மொழி நல்ல மொழிதான் ஆனால் அதை வல்ல மொழியாகஆக்கினோமா, பெரும்பாலோர் போற்றும் மொழியாக ஆக்கினோமா" (மேற்படி. ப. 15)*

என்ற கூற்றின் மூலம் தாய்மொழியான தமிழே, தமிழனையொற்றுமைப்படுத்த வல்லதென்பதும். இந்த நல்ல மொழியை நாம் வல்லமையுள்ள மொழியாக மாற்ற எதுவுங் செய்தோமில்லை என்பதையும் வியந்து கூறுகிறார்.

இன்றைய மாறிவருங் சூழலில் தமிழன் தமிழ் மொழியில் பேசுவது என்பதையே இழுக்காகக் கருதும் நிலையுள்ளது. அந்நிலை மாறி, தனி ஒவ்வொரு தமிழனுக்கும் தமிழின் மீது மாறாத பற்றும் தீராதக் காதலும் வேண்டுமென்பது எண்ணியுணரத்தக்கது.

தமிழினம்

தமிழினம் நீண்ட நெடிய வரலாறும் உயரிய பண்பு மேம்பாடுமுடைய இனமாகும். நயத்தக்க நாகரிகம் கொண்ட தமிழினம். பண்டைய பழம்பெருமையைப் பேசிக்கொண்டேயிருப்பதால் பயனேதும் விளையப்போவதில்லை என்பதையும் நல்ல தன்மை ஒன்று மட்டும் நாம் வாழுதற்கு சாலாது, வல்லமையும் தேவையென்பதை,

> *"தமிழர்கள் நல்லவர்களாக மட்டும் இருந்து தனித்தனியாகவும் குடும்பம் குடும்பமாகவும் நாடு நாடாகவும் அழிந்தது போதும்.*

இனிமேல் வல்லவர்களாகவும் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். நல்ல தன்மையோடு வல்லமையும் சேரப் பெற்று வாழ வேண்டும்". (மேற்படி. ப. 15)

மேற்கண்ட வரிகளால் நன்கு தெற்றென விளக்குவார். மேலும் இதற்கு நல்ல உவமையையுங் காட்டுவார். அது,

"வல்லமை இல்லாத நல்ல தன்மை வாழாது தம்பி அது பொருட்பால் இல்லாத திருக்குறள் போன்றதுதான்" (தம்பிக்கு. ப. 16)

என்றுங் வுறுவார். இவை ஈண்டு நினையத்தக்கன. ஆதலின் நல்லவர்களாக மட்டுமிருந்தாற் போதாது வல்லவராகயிருத்தற் வேண்டுமென்ற கருத்து இன்றைக்கும் நம் வாழ்வில் பின்பற்றத் தக்கன என்பது வெள்ளிடை மலை.

தமிழனிடம் தன்னலமும். தன்னையே நினைக்கும் எண்ணங்களும் அதிகமுள்ளதென்பதையும், அவன் அங்ஙனமில்லாது தன் இனத்தை மனத்திற்கொண்டு, தன்னலத்தைப் புறந்தள்ளி தன் இனத்தின் மீது பற்று தேவையென்பதை,

"தமிழன் பொதுவாக தன்னலம் மிகுந்தவன் என்று உணரலாம். தனித்தனியே நாடிப் பொது நலம் மறக்கும் கூட்டம் எப்படி ஒற்றுமை அடைய முடியும், எப்படி முன்னேற முடியும், மற்ற இனத்தாரை விடத் தமிழர்க்குள் தன்னலம் மிகுதியா என்று நீ கேட்கலாம். ஆம் என்றே மறுமொழி சொல்லத் தோன்றுகின்றது". (மேற்படி. ப. 38)

என்று மு.வ. அவர்கள் வருந்திக் கூறும் பகுதி நம்மைச் சிந்திக்கச் செய்கின்றன.

மூடநம்பிக்கைகளைக் களைதல்

மு.வ. அவர்களுக்கு நமது சமயப் பழக்க வழக்கங்களில் மலிந்து கிடக்கும் மூட நம்பிக்கைகளின் மீதும் வெறுப்பு மிகுதியாக உண்டென்பர். அவ்வகையில் தாம் படைத்த பல்வேறு நூற்களில் மூடநம்பிக்கைகளை, தனக்கு ஒல்லும் வகையான் கண்டித்துக்களைய முற்பட்டுள்ளார். அங்ஙனமே இந்நூலிலுள்,

'நான் சொல்வது சடங்கு சமயத்தைப் பற்றியே அல்லாமல், கொள்கைச் சமயத்தைப் பற்றி அல்ல. கொள்கைச் சமயத்தைப் பற்றி நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேருக்குத் தெரியாது. பொதுமக்களுக்குத் தெரிந்ததெல்லாம் சடங்கு சமயமே. அதற்கும் உண்மைச் சமயத்திற்கும் மிகத் தொலைவு. சமய உண்மையை உணர்ந்தவர்களுக்குச் சடங்குகளில் பற்றும் இல்லை சமய

வேறுபாடும் அவர்களுக்குத் தெரியாது. 'கடவுள் எனக்குக் கட்டளை இட்டார். ஆகையால் மற்ற மதத்தாரைக் கொல்கிறேன் என்று ஓடும் ரயிலில் நின்று கத்தியை உருவுகின்றவனுக்கும் உண்மையான மதத்திற்கும் ஏதாவது தொடர்பு உண்டா"

(மேற்படி. ப. 28)

மேற்கண்ட வரிகள் மூடநம்பிக்கைகளையும் மதத்தின் பெயரால் ஒருவன் செய்யும் பாவங்களையும் எடுத்தியம்புவதாகவுள்ளன.

மேலும் மதத்தை மனத்திற் கொண்டு மனிதர்களுக்குள்ளே போலி வேறுபாடுகளையும் உயர்வு தாழ்வுகளையும் கருதுதற் கூடாதென்றும், அதனைக் களையவேண்டுமென்றும்?

"சாதி ஒரு பொய் சாதிவேறுபாடு பொய்யின் அடிப்படையில் நிற்பது. அதனால்தான் அறிவு வளர வளர நாகரிகம் வளர வளர, சாதி இருக்குமிடம் தெரியாமல் மறைகிறது".

(தம்பிக்கு, ப. 28)

என்ற கூற்றால் இயம்புகின்றார். அங்ஙனமே,

"சாதி சமய வேறுபாடுகளை மறக்கக் கற்றுக்கொள். மறக்க முடியாவிட்டால் புறக்கணிக்கக் கற்றுக்கொள். ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற செம்மொழியைப் போற்று"

(மேற்படி, ப. 4)

என்ற கூற்றில் சாதி சமய வேறுபாடுகளைக் களைந்து அனைவரும் தமிழினம் என்று ஒன்றுபட்டு வாழ்தல் வேண்டுமென்றும் விளம்புகிறார்.

குற்றம் உணர்வான் குணவான்

"உயரிய நாகரிகமும் பண்பு மேம்பாடுமுடைய, தமிழினம் தன்னுள் சில குறைகளையுங் கொண்டுள்ளதென்றும் அக்குறைகளைக் களைந்திடின் தமிழினம் மிகவும் மேம்பட்டச் சமூகமாக விளங்கும். ஆதலின், அக்குறைகளைச் சுட்டிக்காட்ட எழுந்ததே இந்நூலென்பதை,

"தமிழர்க்கு நல்ல பண்புகள் பல உண்டு. ஆயினும் பொதுவாகத் தமிழரின் வாழ்வுநலிந்துள்ளது" எனக் கூறலாம். காரணம் என்ன, தமிழரிடையே சில குறைகளும் இருத்தல் கூடும் அன்றோ, இந்த எண்ணமே இத்தகைய கடிதங்கள் எழுதத் தூண்டியது".

(மேற்படி. முன்னுரை)

இந்நூலின் முன்னுரையில் மு.வ. அவர்கள் விதந்து கூறுவதனால்

நன்குணரவியலும்.

தமிழன் தன் தாழ்வுக்குக் காரணம் திருக்குறளை மறந்தமையே என்றும் தமிழர்கள் திருக்குறள் கூறியபடி வாழவில்லையென்பதையும்,

"தமிழராகிய நாம் திருவள்ளுவரைப் பெற்றிருக்கிறோம் திருக்குறளைப் பெற்றிருக்கிறோம் நம்மில் சிலர் அந்த நூலைக் கற்றும் இருக்கிறோம். ஆனால் திருவள்ளுவர் கூறியபடி வாழவில்லை நல்ல தன்மை தேடுகிறாம் வல்லமை தேடவில்லை அதனால் தான் தாழ்வுறுகிறோம்". (தம்பிக்கு, ப. 15)

என்ற கூற்றால் உணர்த்துவாராயினார். மேலும் இங்ஙனம் தாழ்ந்த நிலையுள்ள, தமிழினத்தை உயர்த்துதற் பொருட்டே இந்நூலுள் பல்வேறிடங்களில் திருவள்ளுவனாரின் அறக்கருத்துக்களைப் பரக்க வலியுறுத்தி, இந்நூலைக் கற்போரை வளம் பெறச் செய்துள்ளாரென்பது நன்கு புலனாகும்.

முடிவுரை

இன்ன வகையான் கண்ணுற்று நோக்கின் அறத்தில் மாறாத நம்பிக்கையும், வள்ளுவத்தைக் கண்ணெனப் போற்றிய பெருந்தகையுமான மு.வ. அவர்களின் 'தம்பிக்கு' கடிதங்களின் வாயிலாக தமிழனுக்கு தன்னலத்தைவிட தமிழ்மொழிப் பற்றும், தாய்நாட்டுப் பற்றும் இன்றியமை யாததென்பதும், மூட நம்பிக்கைகளைக் களைந்து அறிவு நிலையில் நின்று எதையும் நாடுதல் வேண்டுமென்றும், இவையாவும் இன்றைய உலகில் தமிழர்கள் தன் வாழ்விற் பின் பற்றி நடக்கத்தக்கனவென்பதும் அங்கை நெல்லியென விளங்கும்.

43. மு. வ. அவர்களின் 'தங்கைக்கு' கடிதங்கள் சுட்டும் இல்வாழ்க்கை

மு. சத்தியராஜ்
தமிழ் நிறைகலை முதலாமாண்டு
பூ.சா.கோ. கலை அறிவியற் கல்லூரி
கோயம்புத்தூர் - 14.

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் இடைக்காலத்தில் தம் எழுத்துக்களால் இளைஞர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர் டாக்டர். மு.வ. ஆவார்.

தமிழ் இலக்கிய வகையுள் கடித இலக்கியம் என்ற இலக்கியமும் ஒன்றாகும். அவ்வகையில் மு.வ. படைப்பாக நான்கு நூற்கள் அமைந்துள்ளன. அவற்றுள் 'தங்கைக்கு' என்ற நூலும் ஒன்றாகும். அண்ணன் இல்வாழ்க்கையில் உள்ள தன் தங்கைக்கு எழுதும் கடிதங்களாக எட்டு கடிதங்கள் உள்ளன. இவை எட்டும் இல்வாழ்க்கையின் மேன்மையையும் கணவன் மனைவி இருவரும் நட்பு கொள்ளும் முறையையும் இல்லறத்தை நல்லறமாக நடத்துதற்கு இன்றியமையாத கருத்துக்களையும் விளம்புகின்றன.

இல்வாழ்க்கையில் நட்பு

கணவனும் மனைவியும் ஒத்த உள்ளன்புடன் ஒருவர் மீது ஒருவர் நட்பு கொண்டு ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு நடத்தும் இல்லறமே நல்லம் என்ற சிறப்பைப் பெறுகிறது.

ஒருவரொடு நட்புகொள்ளுதல் பற்றியும் நட்பின் மேன்மை பற்றியும் திருவள்ளுவனார் பலவாறு கூறியுள்ளார். அவை இல்வாழ்க்கையில் கணவனும் மனைவியும் பின்பற்றுதற்கும் உரியன. நல்லவர் நட்பு வளர்பிறைபோல் வளரும் என்கிறார் வள்ளுவர். கணவன் மனைவி இருவருக்கிடையேயுள்ள நட்பும்வளர்பிறை போல் வளர வேண்டும்.

கணவன் மனைவி இருவரும் நல்ல உயரிய பண்புடையவர்களாக இருப்பின் அவருடைய நட்பு வரவர இனிமை மிகுந்து கொண்டே போகும். இதனை,

> *"நீங்கள் நல்ல பண்புடையவர்களாக விளங்கினால், கோலெடுத்து ஊன்றும் கிழவனும் கிழவியுமாக முதுமையுற்ற காலத்திலும் உங்கள் அன்பின் சிறப்பு வளர்ந்து கொண்டே போகும். ஆகவே நல்ல பண்பை வளர்ப்பதுதான் வளர்ந்துள்ள நல்ல பண்பைக்*

காப்பதுதான் உங்கள் கடமை" (தங்கைக்கு, ப. 7)

என்ற வரிகளைக் கணவனும் மனைவியும் வாழ்வில் பின்பற்றி நடந்தால் இல்லறம் நல்லறமாக சிறக்கும் என்பதில் இம்மியளவும் ஐயமில்லை.

கணவன் மனைவியின் இல்வாழ்க்கை பொன்முலாம் பூசிய பொருள்போல் தொடக்கத்தில் மட்டும் நல்ல ஒளிவீசிவிட்டு காலப்போக்கில் மங்கிவிடுதல் கூடாது என்பதை,

> *"எவ்வளவு பழமையான போதிலும் சிறப்புக் குன்றாமல் ஒளிவிடும் வாழ்க்கைதான் நல்ல வாழ்க்கை என்று சொல்லுவேன். இக்காலத்துப் பலருடைய வாழ்க்கை பொன்முலாம் பூசிய பொருள்போல் தொடக்கத்தில் மட்டுமே நல்ல ஒளி வீசுகின்றது. பழமைப்பட்டுத் தேயத்தேய ஒளியிழந்து மங்குகின்றது".*
>
> *(தங்கைக்கு, ப. 8)*

மேற்கண்ட வழிகள் கணவனும் மனைவியும் இல்வாழ்க்கையில் பின்பற்றிடின் நலம் பல பயக்கும்.

இல்லறம் நல்லறமாக அமைய

கணவனும் மனைவியும் ஒன்றாக இணைந்து நடத்தும் இல்வாழ்க்கையில் அறிவுக்கு முதலிடம் தருதல் கூடாது. அன்பு ஒன்றிற்கே முதலிடம் கொடுத்து வாழ்தல் வேண்டும். அதுபோலவே உரிமை உணர்ச்சி அதிகமாக இருத்தல் கூடாது. விட்டுக் கொடுத்தல் என்ற ஒன்றே முதன்மையாக இருத்தல் வேண்டும். "ஒருவர் பொறை இருவர் நட்பு" என்னும் நாலடியாரின் பொன்மொழி இல்வாழ்க்கையின் மந்திரமாக விளங்க வேண்டும்.

> *"ஒருவேளை கணவனும் இன்னொருவேளை மனைவியுமாக விட்டுக் கொடுத்தல் தான் வாழ்க்கை எளிதாக நடக்கும்"*
>
> *(தங்கைக்கு, ப.13)*

என்ற வரிகளை மனதில் கொண்டு கணவனும் மனைவியும் இல்லறத்தை நடத்தினால் இல்லறம் நல்லறம் ஆகும். அவ்வாறு இன்றி விட்டுக்கொடுத்தல் இல்லாது, கணவனும் மனைவியும் உரிமையை முன்னே வைத்து அன்பிற்கு இடம்தராது போராடினால் வாழ்க்கை பிளவுபட்டுவிடும். இதனை,

> *"ஒருமுறை பிளந்து நின்ற பிறகு வெறுப்பையும் பகையையுமே மனம் வளர்த்துக்கொள்ளும். எதைக்கண்டாலும் எதைக் கேள்விப்பட்டாலும், அவற்றை எல்லாம் வெறுப்புக்கும் பகைக்குமே உருவாக்கிக் கொள்வார்கள்" (தங்கைக்கு, ப.13,14)*

என்ற வரிகள் இதனை மெய்ப்பிக்கின்றன.

இன்றைய நவீன உலகில் கணவன் மனைவி இருவரும் ஒத்த

உள்ளன்பு இன்றி அன்புக்கு முதலிடம் தராது உரிமையையே முன்னிறுத்திப் போராடுகின்றனர். எனவே இல்லறம் நல்லறமாக சிறக்காமல் நீதிமன்றத்தை அணுகி பிளவுபட்டு நிற்கும் வாழ்க்கையே அதிகம் காணமுடிகிறது. எனவே இன்றைய இளம் தலைமுறையினர் மேற்கண்ட மு.வ. அவர்களின் கருத்துக்களை மனத்திற்கு கொண்டு இல்லறத்தை நடத்தினால் இல்லறம் நல்லறமாகச் சிறக்கும்.

மனிதனிடம் அன்பு மனம், ஆணவ மனம் என இருவகை மனங்கள் உண்டென்று கூறுவர் உள நூலார்.

> *"நெருக்கடியில் நாம் என்ன செய்யவேண்டும் தெரியுமா, அன்பு மனத்தை ஆதரிக்க வேண்டும். ஆணவ மனத்தை கைவிட வேண்டும்". (தங்கைக்கு, ப.18)*

என்ற கருத்துக்களின் மூலம் மனம் செம்மையடைய இயலும். இல்லற வாழ்வில் சிறுசிறு பிணக்குகள் வருவதென்பது இயல்பு. அச்சூழ்நிலையில் உரிமைக்கு முதலிடம் தந்து அறிவை, தலையெடுக்கவிடக்கூடாது. இதனை,

> *"எந்த வாழ்க்கையிலும் சிறு சிறு பூசல் வரலாம் போகலாம். அவைகளுக்கு நிலையான இடம் தரக்கூடாது. சிறு பூசல் காரணமாகக் கணவனும் மனைவியும் பேசாமல் சில மணிநேரம் இருக்க நேரலாம். ஆனால் அடுத்தபடி அன்போடு பேசுவதற்கு வாய்ப்பை எதிர்பார்த்து இருக்க வேண்டும். வலியச் சென்று பேசுவதற்கு நல்ல மனம் தூண்ட வேண்டும். அவ்வாறு வலியப் பேசி விட்டுக்கொடுத்தவர் தோற்றுவிட்டவர் அல்ல அவர்தான் அன்பு வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்". (தங்கைக்கு, ப.19)*

என்ற வரிகள் எண்ணி எண்ணி வாழ்வில் பின்பற்றி நடக்கத்தக்கன.

வாழ்க்கை முறை

தமிழ்ச் சமூகமானது உயரிய பண்பாடும் நாகரிகமும் உடைய மேம்பட்டச் சமூகமாகும். தங்களுக்கென்று உயரிய கொள்கைகளையும் குறிக்கோள்களையும் கொண்டு வாழ்ந்த சமூகமாகும். ஆக வாழ்க்கையை இப்படித்தான் வாழ வேண்டும் என்ற ஒரு முறையும் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்ற முறையும் உள்ளது. இதில் முன்னையதே சாலச் சிறந்தது.

எண்ணங்களே வாழ்க்கை உயரிய எண்ணங்களே உயர்வைத் தரும். நல்ல இலக்கியம் எது எனக் கேட்டால் நல்லவராக வாழ்வதுதான் என்பன போன்றவை சான்றோர் வகுத்த வாழ்க்கை முறையாகும். இவற்றை உணர்ந்த மு.வ. அவர்கள் இல்வாழ்க்கைக்கென வாழ்க்கை முறைகளை இந்நூலுள் உரக்கப்பேசுகிறார். சான்றாக,

பிறர் உடம்பைப் புண்படுத்துவதற்கு உடல்வலி வேண்டும். பிறர் மனத்தை புண்படுத்துவதற்கு ஒருவகை வலியும் வேண்டியதில்லை. கோழையான ஒருவன்- மனவலியையும் சொல்திறனும் இல்லாத ஒருவன்-மற்றவர்களின் மனத்தைப் புண்படுத்த முடிகின்றது. ஆகையால் நாவால் பிறர் குறையைப் பேசுவதில் விழிப்பாக இருக்கவேண்டும்" (தங்கைக்கு, ப.67)

ஆக சொல்லின் கடுமையை உணர்ந்து எந்த வகையிலும் பிறருடைய மனத்தைப் புண்படுத்தாத சொற்களைப் பயன்படுத்த வேண்டும். மேலும்,

"உன் நாக்கால் பிறர் மனத்தைப் புண்படுத்தாதே பிறர் நாக்கு உன் மனத்தை ஒன்றும் செய்யாது என நம்பு" (மேலது. ப. 71)

என்ற வரிகள் வாழ்க்கையில் யாவரும் மனத்திற்கொண்டு நடக்கத்தக்கன. இங்ஙனமே,

"பலரைப் பற்றியும் தெரிந்துகொள். சிலரோடு மட்டும் பழகு. இருவர் மூவரொடு மட்டும் நெருங்கி நட்புக் கொள்". (மேலது, ப. 76)

என்பன போன்ற பல உயரிய கருத்துக்கள் மு.வ. அவர்களால் சுட்டப்படுகின்றன.

முடிவுரை

பெருந்தகை மு.வ. அவர்களின் 'தங்கைக்கு' என்னும் நூல் வாழ்வின் பல்வேறு உண்மைகளையும் உயரிய சிந்தனைகளையும் அறிவுறுத்துகின்றன. இல்வாழ்க்கையில் கணவனும் மனைவியும் கொள்ள வேண்டிய நட்பின் தன்மையையும் இல்லறம் நல்லறமாக அமைய வேண்டுதற்கு பின்பற்றத் தக்க நேரிய வழிமுறைகளையும் செவ்வனே சுட்டுகிறது. ஆக மு.வ. அவர்களின் 'தங்கைக்கு' என்னும் நூலை கணவன் மனைவி இருவரும் கற்று வாழ்வில் பின்பற்றிடின் இல்லறம் நல்லறமாக விளங்கும் என்பதில் இம்மியளவும் ஐயமில்லை.

டிடி. மு. வ. அவர்களின் 'நண்பர்க்கு' கடிதங்கள் காட்டும் கருத்துக்கள்

த. கார்த்திகேயன்
தமிழ் நிறைகலை முதலாமாண்டு
பூ.சா.கோ. கலை அறிவியற் கல்லூரி
கோயம்புத்தூர் - 14.

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் தமிழுக்கு, துறைதொறும் துறைதொறும் தொண்டாற்றிய பெருமை பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்களையே சாரும். பேராசிரியராய் பல்கலைக்கழகத் துணை வேந்தராகவும் நாவலாசிரியராகவும் எழுத்தாளராகவும் பணியாற்றி தமிழன்னையின் திருவடிகளுக்கு தொண்டு செய்வதவரும் அவரே. தமிழில் சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை ஒரு சேரத் திளைத்தவர் மு.வ. ஆவார். அவரின் பல்வேறு வகை படைப்புகளுள் கடித இலக்கியமும் ஒன்றாகும். அவர் எழுதிய நான்கு கடித இலக்கியங்களுள் 'நண்பர்க்கு' என்ற கடித இலக்கியமும் ஒன்றாகும். இக்கடித இலக்கியத்தின் வாயிலாக வெளிப்படும் கருத்துக்களைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

'நண்பர்க்கு'

மு.வ. அவர்களின் கடித இலக்கியங்கள் நான்கு நூல்களாக நால்வகைப் பொருண்மையின் அடிப்படையில் இயற்றப்பட்டுள்ளன. அவற்றுள் 'நண்பர்க்கு' என்ற நூலும் ஒன்றாகும். இந்நூலில் வளவன், எழில் என்ற இரு சகோதரர்களுக்கும் அவர்களின் குடும்ப நண்பனான 'நம்பி' எழுதும் கடிதங்களாக ஒன்பது கடிதங்கள் உள்ளன. இக்கடிதங்களுள் நம்பி வளவனுக்கு எபுதும் கடிதங்களாக நான்கு கடிதங்களும் நம்பி எழிலுக்கு எழுதும் கடிதங்களாக ஐந்து கடிதங்களும் உள்ளன. இவர்கள் மூவரும் மு.வ. அவர்களின் கற்பனைப் படைப்புகளே என்பதை,

> *"இவர்கள் எல்லோரும் கற்பனைப் படைப்புகளே"*
>
> *('நண்பர்க்கு', முன்னுரை)*

என்ற மு.வ. அவர்களின் கூற்றால் நன்குணரலாம். மு.வ. அவர்கள் அறத்திலும் இயற்கையின் மீதும் மாறாத நம்பிக்கை கொண்டவர். இந்நூலுள் உள்ள ஒன்பது கடிதங்களும் இளைஞர்கள் பின்பற்றி உணரத்தக்கனவாய் அமைந்துள்ளன. மு.வ. அவர்கள் தமிழர்கள் மீது கொண்ட பரந்துபட்ட பார்வையும் மூடநம்பிக்கைகளை எதிர்க்கும் போக்கும் அறத்தை வலியுறுத்த நற்சிந்தனைகளை இளைஞர்கள் மனதில் பதிய செய்த போக்கும் கிராமத்தின்

அடிப்படை வளர்ச்சியை மேன்மையுறச் செய்யும் அவர் கூறும் வழிமுறைகளும் உலகியலில் மனித மனத்தின் இயல்புகளையும் அன்பின் வலிமையையும் இக் கடிதங்கள் பரக்கப் பேசுகின்றன.

தமிழரின் பண்புகள்

பண்பாடுடைய சமூகமே உயரிய சமூகமாகப் போற்றப்படுகிறது. பண்பு என்பது இன்னது என்பதை

"பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்" என்ற மருதக்கலியின் வரிகள் பறை சாற்றும். அவ்வகையில் தமிழரின் சமுதாயம் பண்பாட்டில் மேம்பாடுடையதும் ஒழுக்கமுடையதும் ஆகும். இத்தகைய உயரிய சமூகம் இன்றைக்கு மாறி வரும் நவீன உலகில் தன்னுடையப் பண்பாட்டையும் மேம்பாடுடைய நாகரீகத்தையும் இழந்து வருகிறது. இதனை மு.வ. அவர்கள் மாற்ற முயன்று சில கடிதங்களுள் உயரிய கருத்துக்கள் பலவற்றைக் கூறிப் போந்தார்.

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு (குறள். 86)

என்ற திருக்குறளுக்கு விளக்கமாக பண்டைய தமிழர்கள் செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்க்கும் விருந்தோம்பல் குணமுடையவர்களாக மேம்பட்டு விளங்கினர். ஆனால் இன்றைய மாறிவரும் சூழலில் விருந்தோம்பும் தன்மையானது முற்றிலும் மாறிவிட்டது. இதனை,

> *"முன்னெல்லாம் இப்படி வருகின்றவர்கள் குறைவு. வந்த போதிலும் தாங்களாக உணவு கேட்பதில்லை. கேட்கக் கூசும் நா உடையவர்களாக இருந்தார்கள். ஊர் மக்களும் கேட்காமலேயே உதவும் ஈரநெஞ்சம் உடையவர்களாக இருந்தார்கள். இப்போதோ, அயலூரார் அடிக்கடி வருகிறார்கள். வந்து நா கூசாமல் கேட்கிறார்கள். கூட்டம் கூட்டமாக வந்து பிச்சை எடுக்கிறார்கள். நாள்தோறும் பலர் வருவதால் கிராம மக்களுக்கும் சலிப்பு ஏற்பட்டுவிட்டது". ('நண்பர்க்கு', ப.17)*

என்று மு.வ. அவர்களின் கூற்று எண்ணி உணரத்தக்கது.

அறச் சிந்தனைகள்

மு.வ. அவர்கள் அறத்தின் மீது மாறாத நம்பிக்கையும் அறவழியில் நடப்பதையே குறிக்கோளாகக் கொண்டவர். இதனை அவரது படைப்புகளில் வரும் 'அறவாழி' என்ற பாத்திரத்தின் மூலம் உணரலாம். இங்ஙனம் அறத்தில் மாறாத நம்பிக்கை கொண்ட மு.வ. அவர்கள். இக்கடிதங்களின் வாயிலாக, பல்வேறு அறச் சிந்தனைகளை உலகிற்குணர்த்தியுள்ளார். சான்றாக "வல்லவர்கள் அஞ்சாமல் கவலை இல்லாமல் வீரராய் வாழ வேண்டும்

என்றும், கெட்டவர்கள் மூலை முடுக்குகளில் நரியும் பாம்பும் போல் அஞ்சி ஒடுங்கி வாழ வேண்டும் என்றும் எண்ணுகிறவன் நான்" ('நண்பர்க்கு', ப. 61) என்ற வரிகளில் அறத்தில் நம்பிக்கை கொண்டவர்களும் மனச் சான்றுக்கு அஞ்சி ஒழுக்க வாழ்வில் நேரிய முறையில் வாழும் நல்லவர்கள் வீரராய் கவலையின்றி வாழ வேண்டும் என்றும் பிறரைக் கெடுக்கும் வஞ்சகமும் தீய எண்ணங்களும் பிறர் துன்பத்தில் இன்பம் காணும் கெட்டவர்கள் அஞ்சி ஒடுங்கி வாழவேண்டும் என்ற கருத்து உன்னி உணரத்தக்கது.

மு.வ. வகுத்த சட்டம்

சட்டம் என்பது ஒரு சமுதாயம் இன்னவகையில் தான் வாழ வேண்டும் என்றும் மனம்போன போக்கில் போகாமல் தடுக்கும் அரசியல் செயல்பாடே ஆகும். இதனை,

> *"சட்டம் என்பது என்ன, தனி மனிதன் எவ்வாறு தன் மனதை அடக்கி ஆள நோன்பு முதலியவற்றை மேற்கொள்கிறானோ, அதுபோல் ஒரு சமுதாயம் தன் மனம் போனபோக்கில் போகாமல் ஒழுங்காகக் கட்டுப்படுவதற்கு மேற்கொள்ளும் அரசியல் நோன்புதான் சட்டம் என்பது" (நண்பர்க்கு, ப. 74)*

என்ற வரிகள் மு. வ. அவர்கள் சட்டத்தின் மீது கொண்டிருந்த பார்வையைத் தெற்றென விளக்குகின்றன.

> *"சட்டமோ வேறு நெருக்கடியோ நல்லதை வற்புறுத்தினால்தான் ஒழுங்காக நடக்க முயல்கின்றனர்". (நண்பர்க்கு, ப. 74)*

இவை போன்ற வரிகள் நாம் மனதில் எண்ணி உணரத்தக்கன.

மு.வ. சுட்டும் உணவு முறை

மு.வ. அவர்கள் அறத்தில் மாறாத நம்பிக்கை கொண்டியங்கியதைப் போலவே இயற்கையிலும் மாறாத நம்பிக்கையும் கொண்டு இயற்கையைப் போற்றியொழுகியவர் தன் வாழ்நாள் முபுவதும் இயற்கை உணவுகளை உண்டு இயற்கை மருத்துவத்தையே கொண்டவர். அவரது முனைவர் பட்ட ஆய்வும் 'பழந்தமிர் இலக்கியத்தில் இயற்கை' என்ற பொருண்மையில் அமைந்ததும் ஈண்டு நினையத்தக்கது.

இங்ஙனம் இயற்கையைக் கண்ணெனப் போற்றிய மு.வ. அவர்கள் தமிழர்களுக்கான உணவு முறையில் சிற்சில மாற்றங்களை அடியிற் கண்டாங்கு மொழிவர்.

> *"நான் ஏன் கேழ்வரகை இவ்வாறு பகைக்கிறேன் என்பதைத் தெரிந்து கொள். கேழ்வரகு தனிப்பட்ட வகையில் எனக்கு ஒரு*

தீங்கும் செய்யவில்லை. ஆனால் என் ஊராரை சுற்றுப்புறத்தாரை பொதுவாகத் தமிழினத்தின் ஒரு பகுதியை அழகும் அறிவும் குறைந்த கூட்டமாகச் செய்கிறது என்று கண்டு தெளிந்த காரணத்தாலேயே அதை வெறுக்கிறேன்". (நண்பர்க்கு, ப. 123)

கிராமங்களில் மக்கள் கேழ்வரகு உணவை மிகுதியாக உண்கிறார்கள். இதனால் கிராம மக்கள் கூரிய அறிவில்லாமலும் முக அழகு இல்லாமலும் தோன்றுகின்றனர் என்பதை,

"முரட்டு வேலைகளைச் செய்து கொண்டு கேர்வரகு மிகுதியாக உண்கின்ற குடும்பங்களில் அறிவு வளர்ச்சி குறைவாக இருக்கிறது. இந்த ஆராய்ச்சி செய்வதற்குப் பெரிய ஆய்வுக்களம் வேண்டா. மக்களை நேருக்கு நேர் கண்டு அறிவதே போதும். கிராம வாழ்க்கையை நன்கு அறிந்துள்ள நான் அனுபவத்தால் கூறுகிறேன். இந்தக் குடும்பங்களில் கூரிய அறிவு இல்லை. முக அழகும் இல்லை. அறிவின் கூர்மைக்கும் முகத்தின் அழகுக்கும் தொடர்பு உண்டு". (நண்பர்க்கு, ப. 126)

என்ற மு. வ. அவர்களின் கூற்று கிராம மக்களுக்கு குறிப்பிட்ட ஒரு உணவு முறையை அதனால் ஏற்படும் சிறு தீமையையும் எண்ணாது உண்டு வாழ்ந்து வருவதை மாற்றி அவர்களைப் போற்றிய மு.வ., அதிலும் சற்று தீமை உண்டெனில் அவ்வுணவு முறையை கைவிட்டு தங்களுக்கு ஏற்புடையதும் உடல் நலத்தில் நன்மை அளிக்கத்தக்கதுமான உணவு முறைகளை பின்பற்ற வேண்டுமென வலியுறுத்திக் கூறுவது நம் வாழ்வில் பின்பற்றத் தக்கனவாய் அமைந்துள்ளன.

முடிவுரை

அன்பில் நெகிழ்வும் அறவில் தெளிவும் அறத்தில் மாறாத நம்பிக்கையும் கொண்ட மு.வ. அவர்களின் படைப்புக்களுள் கடித இலக்கியங்கள் தனித்தன்மை வாய்ந்தன. 'நண்பர்க்கு' கடிதங்கள் பல்வேறுபட்ட அறச் சிந்தனைகளையும் இயம்புகின்றன. இளைஞர்களை நல்வழிப்படுத்தும் நோக்கில் கூறப்பட்ட பல்வேறு கருத்துக்கள் இந்நூலுள் பரக்கக் கூறப்படுகின்றன. இவையாவும் இன்றைய இளைஞர்கள் வாழ்வில் பின்பற்றத்தக்கனவாய் அமைந்துள்ளன என்பது வெள்ளிடைமலை என விளங்கும்.

45. மு.வ. அவர்களின் 'அன்னைக்கு' கடிதங்களில் வெளிப்படும் அறச் சிந்தனைகள்

தி. ஈஸ்வரன்
தமிழ் நிறைகலை முதலாமாண்டு
பூ.சா.கொ. கலை அறிவியற் கல்லூரி
கோயம்புத்தூர் - 14.

முன்னுரை

மரபு வழித் தமிழ்ப் பயின்று படைப்பிலக்கியத் துறையில் வெற்றி பெற்ற முதல் பேராசிரியர் மு. வரதராசனார் ஆவார். தொல்காப்பியம் தொடங்கி இக்கால இலக்கியம் வரை தமிழ் இலக்கிய வகைகள் தொண்டாற்றி பெரும் புகழும் பெற்றவர் அவரே ஆவார். மு.வ. அவர்கள் படைத்த இலக்கிய வகைகளுள் கடித இலக்கியமும் ஒன்றாகும். அங்ஙனம் அவர் படைத்த கடித இலக்கியங்களுள் அன்னைக்கு என்ற நூலும் ஒன்றாகும். இந்நூலால் அறியலாகும் அறச் சிந்தனைகளையும் உயரிய கருத்துக்களையும் இக்கட்டுரை விளக்குகிறது.

கடித இலக்கியம் அன்னைக்கு

தமிழ்த்தாயின் தலைமகனாக விளங்கிய டிபருந்தகை மு.வ. அவர்கள் தமிழில் பல்வேறு வகைமைகளுள் 85 நூல்களை எழுதி இணையிலா புகழ் பெற்றார். அவரின் படைப்புகளுள் கடித இலக்கியங்களாக நான்கு நூற்கள் அமைந்துள்ளன. அவற்றுள் 'அன்னைக்கு' கடித இலக்கியமும் ஒன்றாகும். எழில் தன் அன்னைக்கு எழுதும் கடிதங்களாக எட்டு கடிதங்கள் அமைந்துள்ளன.

> *"பழைய தமிழகத்திலிருந்தே புதிய தமிழகம் தோன்றி வளர்ந்து வருகின்றது. பழைய தமிழகம் தாய் புதிய தமிழகம் ஒரு சேய் தாயிடமிருந்து சேய் கற்க வேண்டியவை பல உள்ளன. புதிய தமிழகம் பல வகையில் வேறுபட்ட வளர்ச்சி உடையது. ஆனாலும். பழைய தமிழகமே அன்னையின் அனுபவ அறிவுரைகளைப் புறக்கணிக்க முடியாது" (அன்னைக்கு முன்னுரை)*

என்று இந்நூலின் நோக்கத்தையும் பொருண்மையையும் மு.வ. அவர்களின் முன்னுரையில் உய்த்துணரலாம்.

இளைஞர்களின் மனநிலை

இளைஞர்களின் வாழ்வில் கல்லூரி வாழ்க்கை என்பது இன்றியமையாத ஒரு பருவம் ஆகும். அப்பருவத்தில் அவன் கற்றுக்

கொள்ளும் பாடமே வாழ்க்கைப் பாடமாகும். அதுவும் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்கள் பெரும் அனுபவ அறிவு என்பது மற்ற மாணவர்களுக்குக் கிட்டுவது இல்லை. அவ்வகையில் விடுதி மாணவர்கள் தங்களை நல்வழிப்படுத்திக் கொண்டு மனச்சான்றிற்குக் கட்டுப்பட்டு நேரிய முறையில் வாழ வேண்டும்.

> *"மாணவர்களே எதிர்கால இந்தியாவை அமைக்கப் போகின்றவர்கள் ஆளப் போகின்றவர்கள் எதிர்காலமே உங்கள் கையில் தான் இருக்கின்றது" (அன்னைக்கு. ப. 6)*

என்ற வரிகள் ஈண்டு நினையத் தக்கது.

மாணவர்கள் பாடநூல்களை மட்டும் கற்றுத் தேறுதல் ஒன்றையே குறிக்கோளாக எண்ணி செயலாற்றுவதொடு நின்ற விடாமல் வாழ்க்கையைப் பற்றிய புரிதலும் நாட்டுப் பற்றையும், மொழிப்பற்றையும் வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். மேலும் உலகியல் அறிவும் அரசியல் பற்றிய தெளிவும் மாணவர்களுக்கு இன்றியமையாதது ஆகும். இதனை,

> *"நீங்கள் மாணவர்கள் என்று இந்தக் கல்லூரிகளுக்கு வந்திருப்பது வெறும் புத்தகப் பூச்சிகளாய் இருந்துவிட்டுப் போவதற்காக அல்ல பயனற்ற பட்டங்களைப் பெற்றுவிட்டு அடிமைகளாய் அல்லல்படுவதற்கு அல்ல. அறிவும் உணர்வும் பெற்று உரிமையோடு வாழ்க்கையை நடத்தக் கற்பதற்காகவே". (மேற்படி, ப. 6)*

என்ற வரிகள் இதனை மெய்ப்பிக்கின்றன.

இளைஞர்கள் நாள்தோறும் செய்தித்தாள் வாங்கிப் படித்து அன்றைய உலக நிகழ்வுகளைத் தவறாது அறிந்து கொள்ளுதல் வேண்டும். இதனை,

> *"பத்திரிக்கை படிக்காவிட்டால் உலகம் தெரியாத முட்டாள் ஆகிவிடுவாய்" (மேற்படி, ப. 7)*

என்ற வரிகளில் மு.வ. வலியுறுத்திக் கூறுவது எண்ணத்தக்கது. இன்றைய மாறிவரும் நவீன உலகில் இளைஞர்களிடம் படிக்கும் பழக்கம் என்பது குறைந்து விட்டது. இந்நிலையில் மு.வ. அவர்களின் அறக்கருத்துகள் இளைஞர்கள் பின்பற்றத்தக்கன.

மு.வ. பார்வையில் தமிழினம்

பெருந்தகை மு.வ. அவர்கள் தமிழரையும், தமிழினத்தையும் பாதுகாக்க வேண்டியும் தமிழினம் பண்டைய காலத்தைப் போலவே உலகின் மிகச் சிறந்த இனமாக அமைய வேண்டும் என்ற எண்ணமுடையவர். அவ்வகையில் தமிழையும் தமிழினத்தையும் பாதுகாக்க வேண்டி கூறும்

கருத்துக்கள் இந்நூலுள் மிகப்பலவாய் உள்ளன. தமிழ் மாணவர்களுக்குள் தமிழர்கள் என்ற ஒற்றுமை உணர்வு இன்றியமையாதது என்பதை,

"இந்த விடுதியில் மலையாளத்து மாணவர்கள் தங்கிப் படிக்கின்றனர் ஆந்திர நாட்டு மாணவர்கள் தங்கிப் படிக்கின்றார்கள் அவர்கள் அன்பாகப் பழகுகின்றார்கள் ஒற்றுமையாக இருக்கின்றர்கள். இப்படி நாமும் இருக்க வேண்டும் என்று என்னுடன் உள்ள தமிழ்நாட்டு மாணவர்களுக்குச் சொன்னேன்" (அன்னைக்கு. ப. 8)

மேற்கண்ட வரிகளில் கூறுகிறார். தமிழர்கள் தங்கள் மொழியையும். நாட்டையும் கண்களெனப் போற்றி தம்முள் ஒற்றுமைப்படுதல் வேண்டும்.

தமிழர்கள் பிறர்படும் துன்பத்தைக் கண்டு வருந்தி தாமும் துன்பப்பட்டு அவர்களது துன்பத்தைப் போக்க கண்மூடி ஏமாந்து தன் பொருளை எல்லாம் இழந்து விட்டனர். இதனை,

"தான் உண்ணாமல் பிறர் வயிற்றையே நிரப்பிய பாவத்தால், தமிழன் கை தசை சுருங்கி மெலிந்துவாடி நீட்டவும் வலிமையிழந்து நிற்கின்றது. இந்த நிலை உற்றதனால் வாழ்க்கைப் போராட்டம் தமிழனையும் தாக்குவதாயிற்று". (அன்னைக்கு, ப.10)

என்ற வரிகள் நினைக்கத் தக்கன. இவ்வாறு தமிழர்கள் தன்னலம் கருதாது பிறர் நலத்தைக் கருதி. பிறருக்காக வாழ்ந்து இன்றைக்குத் துன்பக் கடலில் வாடுகின்றனர். மற்றவர்களிடம் பொருள் வளம் மிகுந்து வருகிறது. அவர்கள் தமிழர்களைத் தூற்றவும் பழிக்கவும் செய்கின்றார்களே ஒழிய தமிழர்களுக்கு உதவுவது இல்லை என்பதை,

"தமிழர்கள் வறுமைக்கடலில் தத்தளிக்கின்றார்கள். கரையேற முயல்கின்றார்கள். ஆனால் பிறர் என்ன செய்கின்றார்கள், நீந்தி வருகின்ற தமிழர்களின் மேல் கல் எறிகிறார்கள். அவர்களோடு சேர்ந்து கொண்டு சில தமிழர்களும் கல் எறிகிறார்கள். தமிழ்க் கல் வாழ்க என்று வாழ்த்துவதா" (மேற்படி. ப. 10)

என்ற அடிகளில் விளக்குகின்றார். ஆக தமிழர்களுக்குத் தற்காப்பு உணர்வு என்பது இன்றியமையாது வேண்டத்தக்கது. அவர்கள் பிறர் துன்பத்தைக் கண்டு இறங்கிய போதிலும் அவர்களுக்குத் தங்களைக் காத்துக்கொள்ளும் திறமையும் தங்களுக்குள் தமிழினம் என்னும் ஒற்றுமை வேண்டும் என்பதே மு.வ. அவர்கள் தமிழினத்தின் மீது கொண்டிருந்த உயரிய பார்வையாக அறியமுடிகிறது.

மூட நம்பிக்கை

மு.வ. அவர்கள் அறத்தில் மாறாத நம்பிக்கை கொண்டவர். மனச் சான்றிற்குக் கட்டுப்பட்டு உயரிய வாழ்க்கை வாழ்ந்தவர். மூட நம்பிக்கைப்

பற்றி அவர் கொண்டிருந்த கருத்துக்கள் இன்றைக்கும் பயனளிக்க வல்லன. கல்லாதவரிடத்தும் நாகரீகம் இல்லாதவரிடத்துமே மூட நம்பிக்கை இருப்பதாக நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால் பல நூல்கள் கற்று உயரிய நாகரீகத்தை உடையவர்களிடத்தும் மூட நம்பிக்கை இருக்கத்தான் செய்கிறது என்பதை,

> *"பல்லி சொல்வதைக் கேட்டுப் பதைப்பவர்களையும் பூனை குறுக்கே வரக் கண்டு கலங்குகின்றவர்களையும் மட்டுமே மூட நம்பிக்கை உடையவர்கள் என்று எண்ணி வந்தேன் இப்போதுதான் உண்மை தெரிந்து கொண்டேன். அடுக்கடுக்காக நூல்களை வாங்கிப் படித்தவர்களிடமும் பட்டமும் புகழும் பெற்றவர்களிடமும் மூட நம்பிக்கை வேறு வடிவில் வாழ்வதாக உணர்கின்றேன்".*
>
> *(அன்னைக்கு, ப. 19)*

என்ற வரிகளால் உணரலாம்.

மதத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு பலரும் தங்களுக்குள் வேற்றுமையை வளர்த்துக் கொண்டு பிரிந்து நிற்கின்றனர். எனவே கடவுள் பெயரைச் சொல்லிக்கொண்டு இறைகொள்கைக்கு மாறான செயல்களை செய்பவர்களை மதவாதிகள் என்று வழங்குதல் முற்றிலும் தவிர்க்கப் படவேண்டும் என்பதை,

> *"கடவுள் எல்லோருக்கும் பொதுத் தந்தை. எல்லாரிடத்திலும் உள்ளவர் என்பதை எள்ளளவும் நம்பாமல், கடவுளின் பெயரைச் சொல்லிக் கத்தியை உருவித்திரிகின்றர்களையும் நெஞ்சில் வஞ்சம் வளர்த்துத் திரிகின்றவர்களையும் மதவாதிகள் என்றும் ஆத்திகர் என்றும் சொல்வது குற்றந்தான். அவர்களை மதவெறியர் என்றும் சொல்லாமல் வெறியர் என்று சொல்ல வேண்டும்".*
>
> *(மேலது, ப. 31)*

என்ற கருத்துக்கள் வாழ்வில் பின்பற்றத்தக்கன.

முடிவுரை

இவ்வாறு நோக்கும்போது மு.வ. அவர்களின் 'அன்னைக்கு' கடிதங்கள் இன்றைய இளம் சமுதாயம் வாழ்வில் பின்பற்றி நடக்கத்தக்க கருத்துக்களையும் மு.வ. அவர்கள் தமிழ் இனத்தின் மீதும் தமிழர்கள் மீதும் கொண்டிருந்த உயரிய பார்வையையும் பறை சாற்றுகின்றன. மேலும் மு.வ. அவர்களின் அறநம்பிக்கையும் மூட நம்பிக்கையின் மீது அவர் கொண்டிருந்த கொள்கைகளையும் விளக்கவல்லன. ஆக மேற்கண்ட கருத்துக்களை இன்றைய தமிழ்ச் சமூகம் பின்பற்றி நடக்குமே ஆயின் நலம் பல பயக்கும் என்பது திண்ணம்.

46. மு. வ. வின் படைப்புக்களில் இயற்கையின் ஒப்புநோக்கல் பண்பு

முனைவர் பீ. ரகமத்பீவி
உதவிப் பேராசிரியை
சீனிவாசன் கலை அறிவியல் கல்லூரி
பெரம்பலூர்.

டாக்டர் மு.வ. அவர்கள் வாழும் நாளில் மிகச் சிறந்த தமிழ்ப் பற்றாளராகவும், சிறந்த உவமையாளராகவும் இருந்துள்ளார். அவரது படைப்புக்களை நோக்கும்போது ஒவ்வொரு கருத்துக்கும் பொருத்தமான உவமைகளைக் கொண்டு விளக்கம் தந்திருப்பது அவரது கற்பனைத் திறனையும், ஒப்புநோக்கும் திறனையும் எண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை. நான் இரசித்த சில மு.வ.வின் உவமை நயங்களைக் கீழ்க்காணும் கட்டுரையில் தந்துள்ளேன்.

டாக்டர் மு.வரதராசனார் அன்னைக்கு எழுதிய கடிதத்தில் தமிழன் காலப்போக்கில் அழிந்து கொண்டிருக்கிறான். அவனது எண்ணங்கள் மறைந்து கொண்டிருப்பதை அன்னமும், யானை இனமும் தமிழ்ப் புலவர்கள் எழுதிய இலக்கியத்தில் தான் உள்ளன. அதுபோல் தமிழன் அழிந்து போய்விடக் கூடாது.

> *"அப்படி வாழ்வு அழிந்து போவதைவிட எறும்பு போலவும் காக்கைப் போலவும் அழியாத வாழ்வு பெறுவதே நல்லது. எறும்பும் காக்கையும் எந்த இடத்திற்கும் காலத்திற்கும் சூழலுக்கும் ஏற்றபடி உண்டு வளர்ந்து வாழவில்லையா?"*
>
> *(அன்னைக்கு, ப.25)*

என்று இயற்கையை, மனிதனோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளார். மு.வ. தனது மூன்றாவது கடிதத்தில் மூட நம்பிக்கைப் பற்றிக் கூறுமிடத்து மூட நம்பிக்கைக்குப் பூனையையும், காக்கையும் கல்லாதவர்கள் தான் சகுனத்தடை என்கிறார்கள் என்றால் படித்துப் பட்டம் பெற்றவர்களும் மூடர்களாகவே உள்ளனர் என்பதைக் குறிக்க,

> *"கல்லாதவன் பல்லி சொல்வதை நம்பித் தன் வாழ்க்கையை அளப்பது போலவே, கற்றவன் பத்திரிக்கை சொல்லுவதை நம்பி ஏமாறுகிறான்" (அன்னைக்கு, 31)*

என்று குமுறுகிறார். மக்கள் தாங்களே தங்கள் வாழ்க்கைக்காக ஏற்படுத்திக் கொண்ட கொள்கைகளைக் கொண்டே விடுபட முடியாமல் அழிகிறான் என்பதை,

> *"பட்டுப்பூச்சி தானே நூல் உண்டாக்கித் தன்னையே சுற்றிக்*

கொண்டு தானே ஏற்படுத்திய அந்த வலைக்குள் தானே கிடந்து வருந்துகிறது அல்லவா? மனிதனும் அப்படியே தன் மூளைக் கொண்டு தானே அகப்பட்டு அழிகின்றான்" (அன்னைக்கு, ப.28)

மக்கள் தாங்களே சில தவறான எண்ணங்களுக்கு அடிமையாகி அழிந்து போவதை,

"இன்று உலகில் மக்கள் படும் தொல்லைக்குக் காரணம் என்ன? பூனைகளோ அல்லது புலிகளோ மாநாடு கூடி மக்களைக் கெடுக்கச் செய்த சூழ்ச்சியா? இது? அல்லது கழுகுகளும், புழுக்களும் பிணங்கள் போதா குறையை உணர்ந்து பிணங்களைப் பெருக்குவதற்காக ஏற்படுத்திய போர்களா? இக்காலத்துப் போர்கள்" (அன்னைக்கு, ப.28)

என்று இன்றைய போருக்கும், பூசலுக்கும் பூனை, புலி, கழுகு, புழுக்கள் காரணமில்லை என்று இயற்கை உயிர்களைச் சுட்டி எடுத்துக் காட்டுகிறார்.

உவமை

மு.வ. அவர்கள் செங்கோல் என்பதற்கு தந்திருக்கும் விளக்கம் முல்லைத் திணையில் வெகு அருமை. மனிதன் முதன் முதலில் கூட்டமாக வாழ்ந்தது முல்லைத் திணை. அங்கு அவனது தொழில் மாடு மேய்ப்பது. அதற்குக் கோல் வேண்டும், அந்தக் கோலே செம்மையான ஆட்சி செய்யும் தலைவனுக்கு அடையாளமாயிற்று என்பதை,

"அவன் ஏந்திய கோல் அவனுடைய குடிமக்கள் வணங்கும் கோலாக நின்றது, அவன் நல்லமுறையில் நேர்மையாக ஆளும் காலத்தில் அந்தக் கோல் செங்கோல் எனப் புகழப்பட்டது"
(முல்லைத் திணை, ப.20)

என்று அழகான விளக்கம் தந்துள்ளார். பழந்தமிழ்ப் புலவர்கள் பொய்யில் புலவர்கள் என்பதில் மு.வ.வுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்க வேண்டும். ஆகையினால்,

"நேரில் கண்டறிந்த இயற்கையின் எழிலையும் மக்களின் வாழ்க்கை முறையுமே பாட்டில் வடித்துள்ளனர். பாட வேண்டும் என்ற மரபுக்காக தாம் காணாதவற்றைக் கற்பனை செய்து பாடவில்லை. கண்டு உணர்ந்தவற்றிற்கே கலைவடிவம் தந்துள்ளனர்" (முல்லைத்திணை, ப.24)

என்று மு.வ. எனும் தனித்தமிழன், தமிழனுக்கு வக்காலத்து வாங்கியுள்ளார். கற்புமொழி என்பதை பலர் பலவாறு கூறி இருப்பினும் அதன் நிலைமையை.

"கற்பு என்பது கல்போன்ற திண்மை என்றும், இல்வாழ்க்கைக்கு உரியன கற்றுக் கற்ற நெறியில் நிற்றல் என்றும், பலவாறு

பொருள் கூறப்படும், ஆயினும் கற்பெனப்படுவது சொல்திறம்பாமை என்ற அவ்வையார் விளக்கமே உண்மையைத் தெளிவுபடுத்துகிறது" (முல்லைத் திணை, ப.23)

என்று முல்லைத் திணையில் அழகிய விளக்கம் தருகிறார்.

புலவர்களின் மனம் பற்றி

பொருள்களை உள்ளவாறு கண்டு அந்த அழகில் அமைதி அடைவதில்லை கலைஞரின் மனம். பொருள்களை மேலும் அழகுபடுத்தி இன்னும் சிறந்த உலகத்தைப் படைக்க முயல்கிறது. கலைஞனின் உள்ளம் பற்றிக் கூறுகையில்,

"அவருடைய உள்ளம் உயர்ந்தவற்றை நாடுகிறது. உயர்ந்த பூக்களில் தேன் எடுத்து, உயர்ந்த மலையில் உயர்ந்த மரத்தில் கூடுகட்டித் தேனீ சேர்ப்பதைப் பற்றி எண்ணுகிறது. ஆகவே உள்ளம் விழைந்தவாறு கற்பனை அமைகிறது. தாமரைப்பூக்களில் ஊதித் தேன் எடுக்கின்றன. உயர்ந்த மலையுச்சியில் சந்தன மரத்தில் கூடுகட்டிச் சேர்க்கின்றன" (இலக்கியத்திறன், ப.108)

என்று கவிஞனின் உள்ளம் உயர்வானதை நினைக்கும், தேடும், உயர்ந்த கருத்துக்களையே படைக்கும் என்பதை தேனீக்கு உதாரணம் கூறுகிறார். கலைக்கு மு.வ. தரும் விளக்கம் வெகு நேர்த்தியாக உள்ளது.

"ஒரு காலத்து அனுபவத்தை மற்றொரு காலத்தில் பெறுதலும் ஓரிடத்து அனுபவத்தைத் தன் இடத்ததாக உற்று உணர்தலும் மனித உள்ளத்தின் சிறப்பியல்பாக இருக்கக் காண்கிறோம். இந்தச் சிறப்பியல்பே கலைத்துறையில் வளர்ந்து பண்படும்போது கற்பனைத் திறனாக அமைகிறது" (இலக்கியத்திறன், ப.120)

என்று இலக்கியத் திறனில் விளக்குகிறார். மு.வ.வின் படைப்புக்களில் எண்ணற்ற ஒப்பு நோக்கு உவமை உதாரணங்கள் சொல்லிக் கொண்டே போகலாம்.

47. மு. வ. நாவல் காட்டும் சமூகப் பாதை

முனைவர் கு.செல்வி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
டாக்டர் என்.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரி
காளப்பட்டி சாலை
கோயம்புத்தூர் - 641 048.

மானிடன் வாழ்க்கை அன்பும் அறமும் சான்றது. பிற உயிர்களின் இன்ப துன்ப வாழ்வை விட மேன்மையானது. ஏனெனில் 'மக்கள் தாமே ஆற்றிவுயிரே', 'ஆற்றிவதுவே அவற்றொடு மனனே' என்னும் இலக்கணம் வகுக்கக் காரணமாய் அமைந்தவன். பகுத்தறியும் ஆற்றல் மிக்கவன். தனது இச்சைக்காக பிற உயிர்களைப் பலி கொடுக்கமாட்டான். அதனாலேயே மானிட வாழ்க்கை அன்பும், அருளும் நிறைந்த ஒன்று என்று இலக்கண, இலக்கியங்கள் சொல்கின்றன. ஆனால் தமிழ் இலக்கியங்களை உற்று நோக்கும் போது பறவை, விலங்கு போன்ற ஐந்தறிவு மிக்க உயிர்களின் வாழ்க்கையைக் கூட புலவர்கள் ஆய்ந்து நோக்கி அவை நன்மை பயப்பன எனில் மானுடம் கைக்கொள்ள வேண்டும் என்று சொல்லிச் சென்றுள்ளனர்.

ஒரு படைப்பாளன் காட்டும் வாழ்க்கைப் பாதையைச் சுட்டும் இலக்கணம். 'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே' (நன்னூல், நூ. 10) என்கின்றது. மு.வ. நாவல்கள் இத்தகைய இலக்கணத்திற்கு முற்றும் பொருத்தமானவை. இதில் 'கயமை' நாவல் மனிதனின் வாழ்க்கைப் பாதையில் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. ஒரு மனிதன் மனம் விரும்பும் இன்பத்தை நோக்கிச் சென்றால் அழிவு நேரும் என்பதை தெளிவாக விளக்குகிறது இந்நாவல். முவ.நாவல் காட்டும் சமூகப்பாதை.

பன்முக ஆற்றல் கொண்டவர் மு.வ. நாட்டில் நிலவும் ஒவ்வொரு நல்ல, அல்ல செயல்களை ஆய்ந்து அதற்கு எளிமையான தீர்வைக் கூறுவதாக தமது படைப்புக்களில் கருத்துக்களைப் பதித்தள்ளார். அந்நிய மொழிப் பயன்பாடு இந்நாவலில் காண்பது அரிது. பாத்திரங்களின் பெயர்களில் சில அவர்களின் குணத்தைப் படம்பிடிப்பன. 'கயமை' நாவலின் தலைமைக் கணக்கர் தான் நாவலின் முதன்மை நாயகன். எனவே அவரின் பெயர் 'ஆணவர்' ஆராயாமலே தலைமையை நம்பி செயல்படும் 'வெங்கோபர்' (வெறும் கோபரோ?) நற்குணம், நல்லொழுக்கம் மிக்க 'நல்லய்யன்' பெண்மைக்குரிய மென்மை கொண்ட 'மென்மொழி' உடல் கவர்ச்சி வார்த்தைகளில் கவர்ச்சியைக் காட்டி இறுதியில் காணாமலே போன 'வசீகரம்' எனும் பெண்மைக்கு அவமானம் தேடித் தந்தவள்

சகாயமாய் தன்னை மாற்றிக் கொள்ளும் 'சகாயம்' உண்மையைச் சொல்லும் 'கந்தன்'. வேடத்திற்கு வரும் மனிதர்களாய் மியார், தங்கசாமி, கனகலிங்கம் போன்ற பாத்திரங்கள்.

தமிழ் இலக்கியத்தில் இல்லாத ஓர் புதுமையைச் செய்தவர் மு.வ. ஏனெனில் மனிதத் தன்மையற்ற ஒருவனைத் தலைமைப் பாத்திரம் ஆக்கிய தன்மை சுட்டத்தக்கது. சகிப்புத்தன்மை, பொறுமை இவைகள் அனைத்தும் உரிய இடத்தில் நிலைத்து நிற்பது. 'பக்தி' என்ற வலைக்குள் அகப்படாமல் மக்களை ஏமாற்றுவது. கீழ்மைச் செயல் ஆகும்.

இந்த ஆத்திகம் மனிதனைப் பண்பட வைத்தது. இங்கு கூறும் ஆத்திகம் இன்றைய நிலையில் வேடதாரிகளாக மாறி ஏமாற்றுதல் மட்டுமே தெரிந்த ஆபத்தான ஆதிக்கம். மு.வ.வின் வாயிலாக,

> *"பழைய ஆத்திகரை விட நாத்திகராக இருந்து புதிய ஆத்திகராக மாறியவருக்கு எப்போதும் மதிப்பு அதிகம். மக்கள் எதை எதை நம்புகிறார்களோ அதை அதை நாமும் நம்புவது போல் நடிக்க வேண்டும்" (கயமை, ப.115)*

ஆணவரின் குணம், செயல் அனைத்தும் பிறரை அடக்கி ஆள நினைக்கின்றது. தான் மட்டுமே என்கின்ற கர்வம் அவரை ஆட்டி வைக்கின்றது.

எல்லோரும் அவருக்கு அடங்கிச் செல்கிறார்கள். குறையை வேண்டுமென்றே கண்டு கூறினாலும் பொறுத்துக் கொள்கிறார்கள். தரக்குறைவாகப் பேசினாலும் சகித்துக் கொள்கிறார்கள். இவர்கள் நாம் ஆட்டி வைக்கும் பொம்மைகள் என்கின்ற எண்ணம் மேலோங்குகிறது. ஆணவம் அழிவிற்கு மட்டுமே, உணரவில்லை ஆணவன். வருகின்ற உயர் அதிகாரிக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்கிறான். நடை, உடை, பாவனை, மொழி அனைத்திலும் மாற்றம், ஆராயாத அதிகாரிகள் இவர்களையே நம்புகிறார்கள்.

இந்தியாவில் உள்ள கல்வி நிறுவனங்கள் (பள்ளி, உயர்கல்வி) தொழில் நிறுவனங்கள் அரசு சார்ந்தவை, சாராதவை அனைத்திலும் ஆணவரைப் போன்ற மனிதர்கள் அசைக்க முடியாத செல்வாக்கும் பெற்றுள்ளனர். இந்திய நாட்டின் நிலை பாழாய்ப் போய்க் கொண்டுள்ளது. நல்ல அறிஞர்கள், உயர் சிந்தனையாளர்கள், நற்கல்வியாளர்கள் இவ்வுலகில் புறம் ஒதுக்கப்படுகிறார்கள். சிலர் வேண்டாம் வம்பு என்று ஒதுங்கிச் சென்று விடுகிறார்கள். கயமைகள் பெருகிக் கொண்டே செல்கின்றன. பணபலம், படைபலம் இரண்டும் இருந்தால் மட்டுமே ஒரு மனிதன் சாதிக்க முடிகிறது. பாரதி கூறுவது போல் 'சிறுமை கண்டு பொங்கும் மனம் வேண்டும்'. தனி மனிதன் ஒவ்வொருவரும் மனத்தூய்மை மிக்கவர்களாக

வேண்டும். இன்று நாட்டையே உலுக்கிக் கொண்டிருக்கும் ஊழலை ஒழிக்க மு.வ. காட்டும் பாதை.

> *"காற்று எப்படியோ அப்படித்தான் நன்மை, தீமையும். நல்ல காற்று தனியாகவும், கெட்ட காற்று தனியாகவும் ஒரு தெருவில் இருக்க முடியுமா? அது போலத்தான் உலகம். பணம் மேலோங்கியுள்ள வரையில் பணத்திற்குச் சட்டமும் நீதிமன்றமும் அரசாங்கமும் துணையாக உள்ள வரையில் எங்கும் ஊழல் இருந்தே தீரும். அது கோயிலையும் விடாது, கதரையும் விடாது. பதிவு நிலையமும் வங்கியும் என்றைக்கு உலகத்தில் பயன்படாமல் போகுமோ அன்றைக்குத்தான் பணத்தால் ஏற்படும் ஊழலும் இல்லாமல் போகும்" (கயமை, ப.153)*

என்பதை விளக்கிச் சொல்கிறார். நாவலின் தொடக்கத்திலேயே பெண்மை விரிவாக ஆராயப்பட்டு ஐந்து நிலைகளில் பேசப்படுகிறது. தனது ஒழுக்கமற்ற செயல் மூலம் தலைமையை தன் வசப்படுத்திக் கொள்கிறாள் வசீகரம். அலுவலகத்தில் பணிபுரியும் அனைவருக்கும் அருவருப்பானவள். அவளது எண்ணங்களால் தன்னுடன் பணியாற்றும் அனைவருக்கும் மிகுந்த துன்பத்தைத் தந்தவள். பிறரின் துன்பத்தில் குளிர் காய்பவள்.

இந்தப் பெண்ணை மு.வ. "அவளுடைய பிறவியே வேறு வகையானது" (கயமை, ப.188) என்கிறார். இதற்கு மாறாக உயர் பேரொழுக்கமும் இடையறா கல்வி கற்கும் ஆர்வம், நல்லறிவுத் திறம் கொண்ட மென்மையும் கொண்ட பெண்ணாக மென்மொழியைக் காட்டுகிறார். இவர்கள் இருவரையும் ஒப்புமைப்படுத்தும் திறம் சிந்திக்க வைப்பது.

> *"எல்லா மரமும் வாசற்காலாக கதவாக, கூரைக்கழியாக ஆக முடியாது. சில மரங்கள் தான் அப்படி அமைந்த வீட்டை உருவாக்கிக் காக்க முடியும். மற்ற மரங்கள் வெயிலில் உலர்ந்து தீயில் வெந்து கரியாகத்தான் வேண்டும். பிறக்கும் பெண்கள் எல்லாம் குடும்பத் தெய்வங்களாக வாழ்ந்து விளங்க முடியாது. சிலர்தான் அன்புருவான தாயாக முடியும். மற்றவர்கள் கண்டவர்களின் கையில் சிக்கிக் காமத் தீயில் வெந்து கருக வேண்டியதுதான்" (கயமை, ப.188)*

இவ்வாறு மிகச் சில வார்த்தைகளில் அடிக்கோடிட்டு விடுகிறார். உலகத்தின் இயக்கம் பணத்தின் இயக்கமாகவே உள்ளது. மக்களை ஏமாற்றும் குள்ளநரிகள் இருக்கும் வரை நாட்டைக் காக்க எத்தகைய தலைமையினாலும் இயலாது. இதனைக் கூறும் மு.வ.,

> *"தூங்கியவன் பணம் வைத்திருந்த காரணத்தால் திடுக்கிட்டு எழுகிறான். ஒருவன் பணத்திற்கு ஆசைப்பட்டு விழித்திருந்து முயற்சி செய்கிறான். மற்றொருவன் தன் கடமையையும் புறக்கணித்துப் பங்குக்குக் காத்திருக்கிறான். பணத்தின் தேவை*

குறைந்தால் அதன் ஆட்சி குறைந்தால் பண்டமாற்றுப் போல உழைப்பு மாற்று வந்தால் எல்லாரும் சீர்பட முடியும்" (கயமை. ப.307) என்கிறார்.

வேங்கடேசன், பிரகாசம் இரு பாத்திரங்களும் பொறுமையின் இருப்பிடமாய் எல்லா நேரங்களிலும் இருக்கிறார்கள். ஆனால் இறுதியில் விவேகத்துடன் சட்ட நுணுக்கங்களை ஆய்ந்துணர்ந்து செயல்பட்டு வெற்றி பெறுகிறார்கள். சட்டத்தில் இருக்கும் ஓட்டைகளால் அப்பாவிகள் தண்டிக்கப்படுகிறார்கள். குற்றவாளிகள் உல்லாச வாழ்வை அனுபவிக்கிறார்கள். ஆணவரின் கூடா நட்பு இறுதியில் கேடாய் முடிகின்றது. 'நகுதல் பொருட்டன்று நட்டல்' இதனை உணரவில்லை ஆணவர். அவர் மட்டுமல்ல உலகிலுள்ள பலர் இதனை அறியவில்லை. தற்காலிக இன்பத்திற்காக நிரந்தர இன்பத்தைத் தொலைத்து விடுகிறார்கள். வேங்கடேசன், பிரகாசம் இருவரும் உழைத்து உண்ண வேண்டிய சூழலை உடையவர்கள். ஆணவரை எதிர்த்தால் வேலை போய்விடும் போராடத் துணிவும், புத்திக் கூர்மையும் இருத்தல் மட்டும் போதாது. ஈடு செய்யும் குடும்பப் பொருளாதாரம் மிக அவசியம்.

ஆகவே சமூகத்தில் எதிர்கொள்ள வேண்டியவைகளை சிந்தித்தே செயல்படுவது நல்லது. 'செய்க பொருளை செருநர் செறுக்கறுக்கும் இவ்வரிகளே சாத்தியமானவை. செயல் செய்யும் முன் சிந்தித்துச் செயல்பட வேண்டும். அறிவில் தெளிவும் நுட்பமும் வேண்டும். அவை அத்தனையும் கைகூடி வரும் வரையில் அமைதி காக்க வேண்டும். மு.வ. கூறும் தீர்ப்புக்கான முறைமைகள் ஆராயத்தக்கது.

"கொலைக்குற்றம் செய்தவர் வாழும் தொகுதி, மற்றொன்று இரையானவர் வாழும் அல்லது தொழில் செய்யும் தொகுதி. செயலைக் கண்டவர் வாழும் தொகுதி இவைகளில் இருந்து வாக்காளர் பட்டியலில் இருந்து முப்பது பேரை எடுக்க வேண்டும். அவர்கள் அனைத்தையும் ஆராய்ந்து தீர்ப்புக் கூற வேண்டும்."

ஓர் நல்ல தீர்க்கதரிசியால் மட்டும்தான் இதனைக் கூற முடியும். எதிர்காலத்தில் வாக்காளர் பட்டியலின் தேவை குற்றம் களையும் முறை ஆகியவற்றை கூறும் பாங்கு நுட்பமானது. வெளிப்படையானது. இதன் வெளிப்பாடுதானோ தகவல் அறியும் உரிமைச்சட்டம்? மனித உரிமை அமைப்பு துப்பறியும் அமைப்புக்கள்? கயவன் (ஆணவர்) இறுதியில் தன் தவறுகளுக்காக வருந்தி இறக்கவில்லை. சமுதாயம் நம்மைப் பழிக்குமே என்றுதான் தற்கொலை செய்து கொண்டு இறக்கிறான். கனகலிங்கம் தங்கசாமியின் பணத்தால் மட்டுமே தான் வாழமுடியும். என்றெண்ணி அவனின் பணத்தைக் களவாடி சிறை செல்கிறான். எவனொருவன் தனது மனித குணத்தை விலக்கி உழைப்பின் மேல் நம்பிக்கையற்று, பிறர் காசில் சுகமாக வாழ ஆசைப்படுகிறானோ அவன்

இந்த உலகை விட்டு தூர எறியப்படுவான். சில நாள் முன்பு 'தலாய்லாமா' சொன்ன செய்தி.

> *"ஆன்மீகமும் ஊழலும் ஒரே நாட்டில் இருக்க முடியாது. இந்த இரண்டும் இந்தியாவில் இருப்பது தான் வியப்பளிக்கின்றது"*
> *(தினமணி, ப.6, 21-02-2012)*

இன்று ஏற்பட்டிருக்கக் கூடிய பண்பாட்டுச் சீரழிவுகளுக்குக் காரணம் நல்ல பண்புகளையும் ஆன்மீக ஒழுக்க விதிகளையும் மறந்ததே. ஆன்மீகம் ஏட்டிலும் நடை, உடையிலும் இருந்தால் பயனில்லை. வாழ்வில் கடைபிடிக்கப்பட வேண்டும். இவைகளை காரணங்களாக்கி ஆன்மீகம் பொய்த்த தோற்றுவிட்டது என்று கூறுவது அறியாமை. ஆன்மீகவாதிகளும் மூத்த தலைமுறையினரும் தோற்றுவிட்டனர். ஆன்மீகம் தோற்கவில்லை.

கயமை நாவலில் வரும் செய்திகள் அனைத்தும் நடைமுறையில் உள்ளவை. ஒவ்வொரு தனிமனிதனும் ஆராய்ந்து பேசப்படுகின்றான். எதிர்காலத்திட்டங்களை மிகத் துல்லியமாக எடுத்துரைக்கின்றார். இந்தியாவின் வளர்ச்சி போதாமைக்கு ஆணவர், வெங்கோபர், தங்கசாமி, கனகலிங்கம், வசீகரம் போன்ற புற்றுநோய் மனிதர்களே காரணம். இறக்கும் தருவாயில் உள்ளது நாடு. மேலைநாடுகளின் கைப்பிடியில் முற்றிலும் அமுங்கி விட்டோம். மீண்டும் ஒரு சுதந்திரப் போராட்டத்திற்கு தயாராக வேண்டிய நிலையிலுள்ளோம். மக்கள் நீதியைக் கையிலெடுத்து களைகளை அகற்றினால் மட்டுமே இந்தியப் பயிர் செழிக்கும். இதுவே மு.வ. காட்டும் சமூகப்பாதை.

48. திருக்குறள் மு. வ. கூறும் இல்லறம்

நா. பிரேமா
இளநிலை ஆய்வாளர்
தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
சேர்க்காடு, வேலூர் - 632 115.

முன்னுரை

தமிழர்கள் தங்களுடைய வாழ்க்கையில் காதல் வீரம் ஆகிய இரண்டினையும் மிக முக்கிய இடம் தந்து போற்றினர். அதனையே அகம் என்றும் புறம் என்றும் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையிலும். பத்துப்பாட்டிலும் பாடி வைத்தனர். தொன்றுதொட்டு மனித நாகரீகம் தொடங்கிய காலத்தில் இருந்து சமூக நலத்திற்கும் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் இன்பத்திற்கும் அடிப்படையும் ஆதாரமுமாய் இருந்து வந்திருப்பது வீடு எனப்படும் இல்லம். அவ்வில்லத்தில் இணைந்து இருப்பது இல்லறம். 'இல்லறமல்லது நல்லறமன்று' என்பது அவ்வை வாக்கு இல்லின் கண் கணவனும் மனைவியும் இருந்து வாழும் வாழ்க்கை இல்வாழ்க்கை. மு.வ. தன்னுடைய திருக்குறள் தெளிவுரை வழி உணர்த்தும் இல்லற தர்மம் பற்றி இக்கட்டுரையில் ஆய்நது காண்போம்.

கருதுகோள்

மு.வ. தன்னுடைய நூலான 'திருக்குறள் தெளிவுரை' என்னும் நூலின் வழி உணர்த்தும் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், விருந்தோம்பல் முதலிய இல்லற தர்மங்களை சிறிது ஆய்ந்து காண்பது.

திருக்குறளும், மு.வ.வும்

தெய்வப் புலவர் திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறளால் ஈர்க்கப்படாத உள்ளங்கள் இல்லை எனலாம். அதனால் தான் புதுப்புது உரையாசிரியர் தோன்றிக்கொண்டே இருக்கிறார்கள். திருக்குறளால் ஈர்க்கப்பட்டு அதற்கு 'திருக்குறள் தெளிவுரை' என்ற பெயரில் மு.வ. உரை சென்ற நூற்றாண்டில் செய்தார். அவ்வுரை எல்லோராலும் விரும்பி ஏற்றுக் கொண்டு பயின்று பயனடையும் படி எளிய உரையாக உள்ளது.

கற்பென்னும் பொருண்மை

முகத்தில் விளங்கும் இரண்டு கண்களைப் போல அகத்தில் (வீட்டில்) கணவனும் மனைவியும் விளங்குகின்றார்கள். கற்பு என்னும் ஒழுக்கம் பெண்ணுக்கே உரியது என்ற மனப்பான்மை சென்ற கால்

நூற்றாண்டில் நிலவியது. ஆண் என்றால் ஆயிரம் இடம் செல்வான் என்று ஆணின் போற்றா ஒழுக்கத்தை மக்கள் சூசகமாக குறிப்பிட்டனர். கற்பு என்று வந்தால் அதை இருவருக்கும் பொதுவில் வைப்போம் என்ற பாரதியின் சிந்தனையை இன்று தான் சமுதாயம் ஏற்றுக் கொண்டுள்ளது. கற்பு என்னும் பொருண்மை பெண்ணுக்கே உரியது என்ற மனப்பான்மை ஒழிக்கப்பட்டு ஆணுக்கும் அதுவே பொருந்தும் என்னும் நிலை உண்டாகி வன்புணர்ச்சி என்ற சொல்லாட்சி இன்று வழக்கில் கொள்ளப்படுகிறது.

'சிறைகாக்கும் காப்பு' மகளிரை காவல் வைத்துக் காக்கும் காப்பு முறை என்ன பயனை உண்டாக்கும்? அவர்கள் நிறை என்னும் பண்பால் தம்மைத் தாம் காத்து ஒழுகும் காப்பே சிறந்தது என பெண்களுக்குக் கற்பின் திறம் திருக்குறள் வழி மு.வ. விளக்குகிறார்.

வாழ்க்கைத் துணைநலம்

அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ வாழ்க்கைத் துணை எனப்படும் மனைவி அமைய வேண்டும். அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது. இல்வாழ்க்கை எனின் பொருள் சேர்க்கும் போது பகுத்து செய்ய வேண்டும். அவ்வாறு வாழும் வாழ்க்கையின் பண்பும் பயனும் அன்பும் அறனும் ஆக விளங்கும்.

'தற்காத்துத் தற்கொண்டான் பேணி' எனும் திருக்குறள் சொற்றொடருக்கு மு.வ. அவர்கள் கற்பு நெறியில் வாழ்க்கைத் துணையாக விளங்கும் பெண் என்பவள் தன்னையும் காத்து தன்னுடைய கணவனையும் காப்பாற்றி என்று உரை செய்கிறார். இங்கே பெண்களுக்குச் சிறப்பு செய்யப்படுகிறது. ஆண்தானே உயர்ந்தவன் என்றும் தன்னாலே தான் இல்லற வண்டி இழுத்துச் செல்லப்படுகிறது என்ற சிந்தனையும் கொண்டு செல்லும் போக்கை உடைத்து எரிகின்றார். பெண்ணுக்கும் சரிபாதி உரிமையைக் கொடுத்து பெண் என்பவள் ஆணையும் காப்பாற்றுகிறாள் என்ற பேருண்மையை விளக்கி இல்லறம் இனிதே நடக்க இயைபு செய்கிறார்.

நடுவுநிலைமை என்ற சொல்லாட்சி இந்த கற்பு என்னும் ஒழுக்கத்திற்குப் பொருந்தும் அல்லவா? 'ஆண்மை தவறேல்' என்றான் பாரதி தன்னுடைய ஓரடிப்பாவில்.

'பிறன்மனை நோக்கா பேராண்மை' என்றான் செந்நாப்போதார். காம மயக்கத்தால் பிறருடைய மனைவியை நோக்காத பெரிய ஆண்மை நிறைந்த ஒழுக்கமாகும் என்று ஆணுக்கும் கற்பெனும் பொருண்மையை மு.வ. திருக்குறள் வழி வற்புறுத்துகிறார்.

இல்லறத்தார் கடமை

அன்பினால் பிணைக்கப்பட்டு இல்லறம் கண்ட கணவன், மனைவி இவர்களின் கடமை தான் என்பதை நற்றிணைப் பாடல் வழி அறிவோம்.

"அல்லிலாயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின் மெல்லியல்"

இரவில் விருந்தினர் வந்தாலும் மனைவி கணவனுடன் மன மகிழ்ச்சியுடன் வரவேற்று விருந்து படைக்கும் கடமையை அறிவுறுத்துகிறது. இல்லறம் கண்ட கணவனும் மனைவியும் தாம் இணை சேர்ந்து இன்புற்று வாழ்ந்து நன்மக்களைப் பெறுவது மட்டும் தங்களுடைய கடமை அன்று.

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

இக்குறளுக்கு மு.வ. அவர்கள் தன் நூலாம் திருக்குறள் தெளிவுரையில், வீட்டில் இருந்து பொருள்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்யும் பொருட்டே ஆகும் என்றே விளக்குகின்றார். 'சுருங்கக் கூறி விளங்க வைத்தல்' என்பர் தமிழ்ச் சான்றோர். அவ்வாக்கியத்திற்கு ஏற்ப திருக்குறளைப் போலவே எளிமையாகவும் செறிவாகவும் இல்லறக் கடமையை வலியுறுத்தியுள்ளார். 'பசிப்பிணி என்னும் பாவி' என்று மணிமேகலை பசியின் கொடுமையை கூறுகிறது. இப்பசிப்பிணி ஆகிய துன்பத்தை போக்கும் இல்லறத்தார் பெறும் பரிசையும் குறள்வழியே விளக்குகிறார்.

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"

வந்த விருந்தினரைப் போற்றி, இனிவரும் விருந்தினரை எதிர்பார்த்திருப்பவன் வானுலகத்தில் உள்ள தேவர்க்கும் நல்ல விருந்தினனாவான். பொருள்களை வருத்திக் காத்துப் 'பற்றற்றேம்' என்பதற்கு 'பின்பு இழந்து' என்று மு.வ. எல்லோரும் அறியும் சொல்லில் குறிப்பிடுகின்றார். 'செல்வத்துப் பயனே ஈதல்' என்ற வாக்கிற்கு ஏற்ப செல்வத்தை தங்களுக்கு மட்டுமே சேர்த்து வைத்துக் கொள்ளாமல் விருந்தோம்பலும் இல்லறத்தார் கடமை என்பதை தன்னுடைய சிந்தனைக் கதையான கி.பி. 2000 என்ற நூலில் 'உணவு விடுதி' என்று தலைப்பிடாமல் 'விருந்து மனை' என்று எழுதியுள்ளார்.

நன்மக்களின் கடமைகள்

ஈருயிர் உடன்பட்டால் ஓர் உடன்பாடு மெய் தோன்றும் இது தமிழ் எழுத்திலக்கணம். கணவனும் மனைவியும் நல்ல மனத்தோடு சேர்ந்தால் அன்பின் குழவி நல்ல மக்கட்பேறு கிட்டும். இசைப்பாடல்கள் பாடும்போது

எல்லா இசைக்கருவியும் இசைத்தல் கூடாது. எந்தெந்த வரியினை பாடும் போது எந்தெந்த இசைக்கருவியினை இசைக்க நன்றாக இருக்கும் என்பதனை உணர்ந்து இசைக்கருவிகளை இசைப்போர் இசைப்பர். அதுபோல இல்லறத்தில் எந்தெந்த உறுப்பினர் எப்போது தன்னுடைய கடமைகளைச் செய்ய வேண்டுமோ அதை செய்தால் இல்லச் சங்கீதம் சிறப்பாக அமையும். இதைக் கருத்தில் கொண்டுதான் டாக்டர் மு.வ. அவர்களும் தனது கடித இலக்கியத்தில் தங்கைக்கு தம்பிக்கு அன்னைக்கு என்றெல்லாம் கடிதம் இயற்றுவதன் மூலம் இனிய எளிய எல்லோராலும் ஏற்று செயல்படுத்தக்கூடிய வகையில் சொற்களை அமைத்து கடமைகளை அடுத்த தலைமுறையினருக்கு விளக்கியுள்ளார்.

இந்த நாட்டில் சொன்னபடி செய்ய ஆள் இல்லை. ஆனால் கண்டபடி சொல்ல ஆள் ஏராளம். ஒவ்வொருவரும் ஆணையிடுவதற்கு விரும்புகிறார். அடக்கி ஒழுகுவதற்கு யாரும் இல்லை. அதனால் தன் வீழ்ச்சி நேர்ந்தது என்கிறார் விவேகானந்தர். இது மு.வ. தன்னுடைய கடித இலக்கியத்தில் காட்டும் சான்று. இச்சான்று நாட்டிற்கு மட்டுமல்ல வீட்டிற்கும் பொருந்தும். அவரவர் கடமையைக் காலம் அறிந்து செயல்பட்டால் இல்லறம் நிச்சயமாக நல்லறமாக இனிதே நடைபெறும்.

முடிவுரை

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமே பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ நூலிற்
பரித்தவுரை யெலாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி"

(பழஞ்செய்யுள்)

இச்செய்யுளுக்கு ஏற்ற நூலாகிய திருக்குறள் இருக்கிறது. அதற்கு நல்ல உரையாக பரிமேலழகர் உரை இருக்கிறது. எனினும் மேற்கொண்டு மு.வ. உரை செய்ய காரணம் என்ன? மனித வாழ்க்கை நாளுக்கு நாள் மாறுவது போல மொழியும் மாற்றம் பெறுகிறது. அம்மாற்றத்தை மனதில் கொண்டே மெத்தப் படிக்காத பாமரரும் புரிந்து கொள்ளும் வண்ணம் மு.வ.வும் உரை செய்தார். இதனை நயந்து கற்றால் வீடும் நாடும் நலம் பெரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை அன்றோ!

௫௯. கி. பி. ௨௦௦௦. . . எண்ணம் போல் வாழ்வு

க. குலோத்துங்கன்
இளநிலை ஆய்வாளர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
சேர்க்காடு, வேலூர் - 632 115.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்" (குறள். 665)

என்ற குறளுக்கேற்ப எண்ணியவர் உறுதியுடையவராக இருக்கப் பெற்றால் அவர் எண்ணியவற்றை எண்ணியவரே அடைவர் என்பது உறுதி. நிகழ்காலத்தில் எதிர்காலம் பற்றிய உயர்ந்த எண்ணமே நம்மை சிறந்த மனிதனாக்க முடியும்.

கி.பி. 2000 . . .

'கி.பி. 2000. . .' எனும் சிந்தனைக் கதை மூலம் மு.வ. அவர்கள் 'எண்ணமே வாழ்வு' என்ற உயரிய கருத்தினைத் தெளிவுபடுத்துகின்றார். காலத்தை நிகழ்காலம் நனவு என்றும் எதிர்காலம் கனவு என்றும் குறிப்பிடுகின்றார். எதிர்காலம் பற்றிய கனவு உடையவர் மட்டுமே வாழ்வில் உயர்ந்த இடத்தினை அடைய முடியும். தான் கனவில் கண்ட புதிய உலகை நமக்கு சிறந்த சிந்தனை மற்றும் உயர்ந்த எண்ணக் கருத்துக்களுடன் எடுத்துரைத்த மு.வ.வின் கி.பி. 2000. . . என்ற சிந்தனைக் கதையின் தொடர் நிகழ்வை ஆய்வுத் தலைப்பாகக் கொண்டு ஆராய்கின்றேன்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு கி.பி. 2000. . . ஆம் ஆண்டில் உலக அமைப்பு எவ்வாறு அமையும் என்ற கருத்தோட்டத்தினை முன் வைக்கின்றார் மு.வ.

நிகழ்வு - ஒன்று (கனவுக்கு முன்னர்)

சாலையோர குழந்தைகளின் வறுமை நிலையினையும் வீட்டில் வளரும் குழந்தைகளின் நிலையினையும் நினைக்கும்போது உலகம் எத்தனை வேறுபாடுகளைக் கொண்டுள்ளது என்ற கருத்தினை தெளிவாக்குகின்றார். இரண்டு இடங்களில் வளரும் குழந்தைகளும் உலகத்தின் சொத்தில் அருமையான ஒரு செல்வம் என்று கூறுகின்றார். பின், மறப்பு என்பதை இரண்டாகப் பிரித்து இயற்கை மறப்பு, செயற்கை மறப்பு என வகைப்படுத்துகின்றார். செயற்கையாக மறந்தாலும் கூட வறுமை நிலையில் உள்ள குழந்தைகளின் காட்சியானது அவர் மனக்கண்முன் தோன்றுவதாகக் காட்டுகின்றார் மு.வ. நண்பரின் கடிதம் படிக்கின்றார். கண்ணீர் வடிக்கின்றார்.

நிகழ்வு - இரண்டு (தூண்டுகோல்)

கடிதத்தில் தன் நண்பர் கூறுவதாக "குடும்பச் சேற்றில் நெளியும் புழுவாக இருக்கின்றேன்" என்ற வாக்கியத்தின் மூலம் உலகில் பெரும்பாலோர் இவ்வாறு தான் இருக்கின்றார்கள் என்ற உண்மையை விளக்குகின்றார். பலர் இதனை உணர்வதில்லை சிலரும் உண்மையைச் சொல்வதில்லை. மேலும் கடிதத்தில் கூறுவதாக "எனக்குப் போதுமான செல்வம் அளிக்காத கடவுள் எனக்குக் குழந்தைகளை மட்டும் ஏன் அளிக்க வேண்டும்?" என்ற நண்பரின் நிலையினை எடுத்துக்காட்டுகின்றார். கல்லூரி நாட்களில் தம் நண்பரைப் பற்றிய அனைவரின் மற்றும் ஆசிரியர்களின் எண்ணத்தை நினைத்து எண்ணிய எண்ணம் வீண் போகாது எண்ணியவர் திண்ணியவராக வேண்டும் என்று நினைத்துக் கொள்கின்றார்.

புதிய உலகம்

கனவில் ஒரு புதிய உலகத்தை நமக்குக் காண்பிக்கின்றார் மு.வ. இதில் வயல்கள், தொழிற்சாலைகள், பண்ணைகள் மற்றும் அடுத்த அமைப்பாக நகரம் என்ற புதிய உலகினை அறிமுகம் செய்கின்றார். அதில் நகரில் அமைந்த அரண்மனையின் அமைப்பினைக் கூறுகின்றார். "அளவளாவி" என்ற கருவியைக் கண்டுபிடித்தவர் ஒரு தமிழர் என்ற செய்தியினையும் இதன் மூலம் எவரும் எங்கும் செல்லாமல் இருந்த இடத்திலேயே அனைத்தையும் கண்டு மகிழ முடியும் என்பதனையும் குறிப்பிடுகின்றார். அடுத்ததாக பொதுவுடைமைப் பற்றி பேசுகின்றார். புதிய உலக அமைப்பு ஏற்பட்ட பின் அது அழியாமல் நிலைபெறுவதற்கு காரணம் இதுதான் என்னும் கருத்தினை முன்வைக்கிறார். இவர் கூறும் புதிய உலகமும் பாரதிதாசன் கூறிய புதிய உலக ஒற்றுமையும் ஒப்புநோக்கத் தக்கது.

பள்ளிக்கூடம்

உயர்ந்த கட்டடங்கள் அமைந்த இடம் தான் பள்ளிக்கூடம் என்று ஆசிரியருக்கும் மாணவர்களுக்குமான புரிதல்களைப் பற்றியும் விளக்குகின்றார். விளையாட்டு முறை கல்வியைக் குறிப்பிடுகின்றார். மாணவர்களுக்கான பரிசு மற்றும் தண்டனை பற்றி குறிப்பிடும்போது பரிசாக நாடகம் பார்க்க அனுமதியும் தண்டனையாக குற்றம் புரிந்தவர்களின் பெயர்களை அறிவிப்பு பலகையில் 'மனவலிமை இழந்தவர்கள்' என்ற தலைப்பில் அறிவிக்கின்றனர் என்பதையும் குறிப்பிடுகின்றார். விடுமுறை நாட்களில் மாணவர்கள் தொழிற்சாலைக்குப் போக வேண்டும்.

சிறு வயதில் தொழிற்சாலைப் பணி மகிழ்ச்சியாக இருக்காது படிப்பே மகிழ்ச்சி என்ற நிலைக்கு அவர்களைக் கொண்டுவரும் புதிய

சிந்தனையையும் கூறுகின்றார். இப்பள்ளிக்கூடம் முறையிலும் பாடத்திட்ட முறையிலும் மாணவர்களுக்குச் செய்முறை பயிற்சியின் தேவையினை அறிவுறுத்துகின்றார். ஏனெனில் "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நா பழக்கம்" என்பது பழமொழி. எவ்வகை தொழிலும் கல்வியும் பழக்கத்தின் மூலமே நேர்த்தி அடையும் என்ற அவர் கொள்கை உணர்த்தப்படுகின்றது.

வரலாறு

ஆசிரியர் மாணவர் விகிதம் பற்றிக் குறிப்பிடும் போது ஒரு பள்ளியில் இருநூறு மாணவர்களுக்கு மேல் சேர்க்கக்கூடாது. ஒரு வகுப்பில் இருபது மாணவர்களுக்கு மேல் இருக்கக் கூடாது என்ற புதிய கல்வி முறையினைக் குறிப்பிடுகின்றார். தொடக்கக் கல்வி நிலையில் வகுப்பில் குறைவான மாணவர்கள் இருப்பின் மிகச் சிறந்த கல்வியினைப் பெறலாம் என்ற உண்மையை விளக்குகின்றார்.

ஆசிரியர் பணி என்பது தொழிற்சாலை அல்லது பண்ணையில் ஐந்து அல்லது பத்து ஆண்டுகள் வேலை செய்து திறமைப் பெற்றவர்கள் படிப்பில் தேர்ந்திருந்தால் அவர்களுக்கு ஆசிரியர் பணி கிடைக்கும் என்பதைக் கூறி ஆசிரியர்களும் தொழில் சார்ந்த அறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டம் என்று கருத்தினைத் தெளிவுபட அறிவுறுத்துகிறார் மு.வ. இவர் கூறுகின்ற ஆசிரியர் மாணவர் எண்ணிக்கை கி.பி. 2000ஆம் ஆண்டு கடந்தும் சாத்தியமில்லாது இருக்கின்றது.

அரண்மனை

அரண்மனையில் அறிஞர்கள் பொதுத்தொண்டு செய்கின்றார்கள். மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் அனைவருக்கும் சேருமாறு கணக்கெழுதி தணிக்கைச் செய்து காப்பாற்றும் பொதுத் தொண்டர்கள் பற்றிக் குறிப்பிடுகின்றார். மனிதர்களில் குற்றம் செய்தவர்களை 'வாழத் தெரியாதவர்கள்' என்ற பகுதியிலும் அறிவாளி ஒருவருக்குப் பைத்தியம் பிடித்தால் அவர்களை 'வாழ முடியாதவர்கள்' பகுதியிலும் சேர்த்துக் கவனித்துக் கொள்வார்கள் என்று குறிப்பிட்டுப் போற்றத்தகுந்த முயற்சியினை கூறுகின்றார் மு.வ.

தேர்தல்

அரண்மனை நகரில் தேர்தல் முறையானது பழங்கால தமிழகத்தில் நடைபெற்ற குடவோலை முறையினை பின்பற்றி நடைபெறுவதாகக் கூறுவதோடு தேர்தலில் கல்லூரிக்கல்வியில் தேர்ச்சிபெற்றவர்கள் மற்றும் உலக அனுபவம் பெற்றவர்கள் மட்டுமே நிற்க முடியும் என்று கல்வியின் பெருமையினையும் தேர்தலின் முக்கியத்துவத்தையும் குறிப்பிடுகின்றார். மேலும் பணம் முதல் மற்றும் புகழ்முதல் ஆகிய இரண்டும் மனிதனைக்

கெடுக்கும் என்ற உண்மையினைக் குறிப்பிடுகின்றார். இன்றைய அரசியல்வாதிகளும், அரசும் இக்கருத்தினைச் சிறிது கூர்ந்து நோக்க வேண்டும். அப்படி செய்தாலாவது மாற்றம் ஏதேனும் நடைபெறலாம்.

பேரின்பம்

மனிதர்களுக்குக் கவலை தான் எமன். முதியோர்களுக்கு நடக்க வல்லமை குறைந்து விட்டால் 'அமைதி நிலையம்' என்ற பகுதியில் சேர்த்து கவனித்துக் கொள்கின்றனர். பேரின்பம் என்றால் குழந்தைகள் வளரும் இடம் என்று குறிப்பிடுகின்றார். முதியோர்கள் அமைதி நிலையத்தில் பாதி நேரமும் பேரின்பத்தில் பாதி நேரமும் குழந்தைகளுடன் விளையாடி ஆடிப்பாடி தீராத அன்பினைச் செலுத்துவதாக கூறி நமக்கெல்லாம் குழந்தையின் இன்பம் தெரியாது. இன்னும் வயதாத் தான் தெரியும் என்ற உண்மையினைக் குறிப்பிடுகின்றார் மு.வ.

கல்லூரி என்றால் ஏதோ படித்தோம், பட்டம் பெற்றோம் என்றில்லாமல் 1. தொழிற்சாலை ஆய்வு (Physics, Chemistry) 2. நூல் நிலைய ஆய்வு (Library) 3. உடலியியல் ஆய்வு (Physiology, Psychology) 4. பண்ணையியல் ஆய்வு (Botony, Zoology) 5. உலகம் பற்றிய ஆய்வு (Geography, History, Sociology) என ஐவகை ஆய்வினை மேற்கொள்பவர்களுக்கு மட்டுமே பட்டம் வழங்கப்படும் ஆய்வின் முடிவானது உலகப் பேரவையின் வெற்றிக்கு வழிகோலுவதாகவும் உலகப்பேரவை ஒன்றுகூடி உலகத்தை நடத்துகின்ார்கள். அதனால் எல்லாம் செம்மையாக நடைபெறுவதாகவும், மூலப்பொருள் பங்கீடும், போராட்டமும் தீர்ந்ததாகவும் குறிப்பிடுகின்றார் மு.வ. இவ்வகையான ஆய்வினைச் செய்து பின் படிப்பது என்றால் இக்கால மாணவர்களால் இயலுமா? என்பது வியப்பு. அவர் கூறும் காரணம் சரியானது. ஆனால் நடைமுறைக்கு சாத்தியப்படுமா என்பது தெரியாது.

விழிப்பு

உலகப் பேரவை நடத்தும் 'எதிர்காலம்' என்னும் பொருள் பற்றி ஒரு சொற்பொழிவு நடைபெறுவதாகவும் சொற்பொழிவு நடக்கும் கூட்டத்திற்கு நுழைந்து போது சொற்பொழிவாளரின் முகத்தில் நண்பனின் இளமை நோக்கும் முதுமைத் தளர்வும் கலந்திருக்கக் கண்டதாகவும், 'அவர் என் நண்பரோ என நோக்கினேன் முதுமை கண்டு மயங்கினேன் என்று கூறும் போது அன்பர்களே கிறிஸ்து பிறந்து இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன என்று அவர் தொடங்கிய தொடக்கம் கேட்டு மருண்டு நிற்பதாகவும் கூறுகின்றார். அப்பொழுது கையில் இருந்த பத்திரிக்கையின் மேற்புறத்தை நோக்குவதாகவும் அதில் நாளுக்கும் திங்களுக்கும் பிறகு 2000 என்ற எண் இருந்ததாகவும் குறிப்பிடுகின்றார். கண்மீது கை இருக்க விழித்துக் கொண்டதாகவும் கண்ட கனாவை

வாழ்த்துவதாகவும் கூறுகின்றார்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்" (குறள், 666)

என்ற குறள் நினைவிற்கு வருகின்றது.

முடிவுரை

நம்பிக்கையும் தெளிவும் பெற்று உணர்ந்து எண்ணத் தொடங்கி விட்டால் உலகம் சீர்படுவது உறுதி. 'எண்ணமே வாழ்வு', எண்ணம் சீர்பட்டால் உலகம் சீர்ப்படும். தனிமனிதனில் தொடங்கி சமூகம் உலகம் வரை பரவிய தனது கருத்தினை மிகத் தெளிவாக மு.வ. எடுத்துக் கூறுகின்றார். தன் கருத்தினை கனவு நனவு என பாகுபடுத்தி கனவில் தான் கண்டது நனவில் நடைபெறும் நாள் வெகுதொலைவில் இல்லை. அது மிக விரைவில் என்று புலப்படுத்துகின்றார். இது பாரதி சுதந்திரம் அடையும் முன்பே ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்தச் சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று பாடுவது போன்று உள்ளது. உயர்ந்த எண்ணமும் தொலைநோக்கு பார்வையும் கொண்ட ஒரு படைப்பாளனால் மட்டுமே இதைப் புரிந்து கொண்டு செயல்பட முடியும். இன்றைய சுய முன்னேற்ற நூல்களுக்கெல்லாம் ஒரு நம்பிக்கையாக இத்தொகுப்பு அமைந்துள்ளது.

50. மு. வ. வின் குறட்டை ஒலி தொகுப்பில் கதைபோக்கும் சமூகப்பார்வையும்

முனைவர் க. நாகேஸ்வரி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)
தெ.தி. இந்துக் கல்லூரி
நாகர்கோவில்.

தமிழ்மொழிக்கு மு.வ. அவர்களின் இலக்கிய பங்களிப்பு பெருமைக்குரியதாகும். அவரது படைப்புகள் எளிமையான மொழி நடையும், சமூக முற்போக்கு சிந்தனைகள் கொண்டதாகவும் அமைந்துள்ளன. 20-ம் நூற்றாண்டில் தமிழ்மொழி வரலாற்றில் டாக்கடர் மு.வ. அவர்களின் தமிழ்த்தொண்டு முதன்மையான இடம் பெறுவதாகும்.

அவரது சிறுகதைத் தொகுப்புகள் இரண்டு. அதில் குறட்டை ஒலி சிறுகதைத் தொகுப்பே இவ்வாய்வுக் கட்டுரைக்கு எடுத்தாளப்பட்டுள்ளது.

குறட்டை ஒலி - கதைகளும் சமூகப்பார்வையும்

மு.வ.வின் குறட்டை ஒலி தொகுப்பில் 11 சிறுகதைகள் அடக்கப் பட்டள்ளன. அந்த மனம் வருமா?, சுடரின் நகைப்பு, இறந்த சிற்றப்பா, அமாவாசையார், எல்லோரும் சமம், யாரோ தெரியாது, உலகம் பொய், குறட்டை ஒலி, வாழும் வழி, இயற்கை பொல்லாதது, அக்கரைப்பச்சை எனும் 11 கதைகள் இவ்வாய்வுக் கட்டுரையில் இடம் பெறுகின்றன. சமூக சீர்கேடுகளும், சீர்திருத்தங்களும் அவரது கதைகளில் எவ்வாறு அமைந்துள்ளது என்னும் நிலையில் ஆய்வு அமைகிறது.

தாய்மை மனம்

குறட்டை ஒலி சிறுகதையில் தங்கள் குழந்தைகளைப் போலவே நாய்க்குட்டிகளுக்கும் உணவளித்து அதில் வெளிப்படும் தாய்மை உணர்வானது ஏழை வீட்டில் குடிகொண்டுள்ளதே தவிர வசதி வாய்ப்புகள் படைத்த எதிர் வீட்டு தம்பதியினரிடம் இடம் பெறவில்லை. வசதி வாய்ப்புகள் படைத்திருந்தும் அவர்களுடைய இல்லம் போன்றே மனமும் இருள் சூழ்ந்ததாகக் காணப்படுகிறது. ஆனால் ஏழை வீட்டில் உண்ணுவதற்கு உணவு இல்லாத பொழுதிலும் தனது வறுமையான குடும்பச் சூழலிலும் நாய்க்குட்டிகளைத் தாயன்போடு காத்த தாயின் உள்ளம் வெளிப்படுகிறது.

இக்கதையில் வறுமையால் ஆட்கொள்ளப்பட்டபோதிலும் ஏழை பெண்ணின் தாய்மை உண்மை அன்புடையது என்ற கருத்து வெளிப்படுகிறது.

கொடை மனம்

கிராமத்தை நாடிவரும் நகரவாசிக்கு இயற்கை வளங்களும் ஊரின் இயல்பான தோற்றமும், ஈர்ப்பினை உருவாக்குகிறது. அந்த நகர வாசியினது நண்பரின் தந்தையின் குணநலன்களே இதில் எடுத்துரைக்கப்படுகிறது. இடைத்தர வர்க்கக் குடும்பமாக இருந்த போதிலும் தன் பயனுக்குப் போக மீதமுள்ள பொருள்களைத் தானமாக கொடுக்கும் பழக்கம் இவரிடம் இருந்தது. இவர் இறந்த பின்பும் இவரது குணநலன்கள் மட்டும் இவரை சார்ந்த ஊர் மக்களிடம் நிலைத்து நின்றன.

அந்த மனம் வருமா? என்னும் இச்சிறுகதையில் தனிமனிதன் தன் குணநலனால் உயர்வடைவான் என்ற கருத்துநிலை தெளிவுறுத்தப் படுகிறது.

மூடநம்பிக்கைகள்

'சுடரின் நகைப்பு' சிறுகதையில் பொன் ஆசை கொள்ளாத பெண்களே என் இல்லத்து பெண்கள் என்று அடையாளம் காட்டுவதற்காக ஒரு நண்பர் மற்றொரு நண்பனிடம் தனது மனைவிக்குப் பொன்னின் மீது ஆசை இல்லாமல் மாற்றுவேன் என்று சபதமிட அதில் தோற்று, தன் மகளைப் பொன்னாசை இல்லாத பெண்ணாக வளர்க்கப் போவதாக கூறுகிறார். இதில் காந்தியின் கருத்துக்கள் கூறப்படுகின்றன. ஆனால் அந்த மகளையே இழக்கும் நிலை உருவாகுகின்றது. அந்த குழந்தை இறந்த தினம் சனிக்கிழமை என்பதால் அண்டை வீட்டு மக்களின் எண்ண மாறுபாடுகளால், "சனி பிணம் தனியே போகாது" என்ற பழமொழியை கூறி எதுவும் அறியாத கோழிக்குஞ்சினைப் பலியிடும் கருத்து வெளிப்படுகிறது. இன்னொரு இறப்பு நிகழக் கூடாது என்பதற்காக நவதானியங்கள் தூவி செல்லும் நிகழ்வும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இச்சிறுகதையில் உயிரின் இழப்புக்காக இன்னொரு உயிரையும் கொல்லும் நிகழ்வு மூடநம்பிக்கையாக வெளிப்படுகிறது. இயற்கையில் நடக்கும் இறப்பிற்காக பிரிதொரு உயிர் பலியிட்டால் இனிவரும் இறப்பு தடுக்கப்படும் என்னும் மூடநம்பிக்கை இக்கதையில் வெளிப்படுத்தப்படுகிறது.

இரக்கமில்லா மனம்

'இறந்த சிற்றப்பா' என்ற சிறுகதையில் இரண்டு குழந்தைகளை வளர்க்கும் தாய் இறந்து போக மாற்றான் தாய் ஒருத்தியின் கொடுமைக்குள் பிள்ளைகள் தள்ளப்படுகின்றனர். திருமணமாகாத மகனும், அவனும் உடன்பிறவா சகோதரி படும் துயரத்தையும் அவர்களது தந்தை கண்டு கொள்வதில்லை. மாற்றான் தாயும், அவளது பிள்ளைகளும் இவர்கள் இருவரையும் மனிதநேயமில்லா முறையில் அவமதித்தனர்.

தந்தையின் ஆதரவை இழந்த மகன் தனது வேலையின்மையின் காரணமாக முதலாளியின் துணையுடன் இலங்கைக்குப் பயணிக்கின்றான். இலங்கையில் தனது சித்தப்பா என்பதை அறியாமலேயே தனது நிலையை அவரிடம் தெரிவிக்கின்றான். அவர் அவனது அங்க அடையாளங்களைக் கொண்டு மயங்கிய நிலையில் இருந்த மகனை அடையாளம் கண்டு கொள்கிறார். தான் பிறந்த தேசம் விட்டு வந்தமைக்குதனது சகோதரனே முக்கிய காரணமெனக் கருதுகிறார். தன் தாய் போன்ற அண்ணியை வார்த்தைகளால் காயப்படுத்தி கொலை செய்த நிகழ்வை கூறுகின்றார். இறுதியில் தனக்கு ஒரு உறவு கிடைத்ததை எண்ணி இருவரும் மகிழ்கின்றனர்.

பெண்ணின் நடத்தையைச் சந்தேகிக்கும் மனோபாவமும், சுயநலமும் கொண்ட ஒரு தனி மனிதனால் பாதிக்கப்படும் கதாபாத்திரங்களின் வாழ்க்கை நிலை இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றது.

உதவும் மனப்பான்மை

'எல்லோரும் சமம்' என்னும் சிறுகதையில் ஆங்கிலோ இந்திய பெண்களின் வாழ்க்கை நிலை வறுமையில் வாடுவதைக் கண்டு வருத்தப்படும் ஆண்கள் (பயணிகள் இருவர்) இந்தியப் பெண்ணின் வறுமையை எள்ளி நகையாடுகின்றனர். அப்பெண்ணின் துயரநிலையை அறியாதவர்களாய் குறை கூறும் நிலை வெளிப்படுகிறது. அப்பெண்ணின் தோற்றம் அவள் வறுமையின் பிடியில் ஆட்பட்டிருப்பதையும், ஏதோ ஒன்றை இழந்த நிலையையும் காட்டுகிறது.

'யாரோ தெரியாது' சிறுகதையில் தனது உறவுகள் என்றும், உறவுகள் இல்லாதவர் என்றும், தனக்கு உதவி செய்பவர்கள் என்றும், எதிர்பாராமல் தனிநபர் ஒருவர் பெண்ணுக்குத் தரும் முன்னுரிமையும், உதவும் மனப்பான்மையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

'வாழும்வழி' என்னும் சிறுகதையில் தன் மகளுக்கு இதுபோன்ற பட்டுச்சீலை இருந்தால் திருமணம் நடைபெறும் என்ற நோக்கில் மரத்தில் காயப்போட்டிருந்தது என்று எண்ணி திருடிச் செல்லும் வேளையில் அது அப்பெண்ணிடமிருந்து பறிக்கப்படுவது அறிந்து பதைபதைத்தார் அம்மனிதர். அவரது குறையை அப்பெண்ணின் கணவரே தீர்த்து உதவும் நிலைக் காட்டப்பட்டுள்ளது.

இம்மூன்று சிறுகதைகளிலும் வறுமையில் வாடிய பெண்ணுக்கும், உறவு முறையில்லாத பெண்ணுக்கும் ஏற்படும் அவலநிலைகள் எடுத்துக் கூறப்படுகின்றன. தனது சுயநலத்துக்காக திருடியவனின் குறையைக் கேட்டு நீக்கிய ஆணின் உதவிய மனப்பான்மை இங்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. பெண்களின் நிலைக்குக் குரல் கொடுப்பதாகக் கதைபோக்கு அமைகின்றது.

புலனுகர்வு தன்மை

'அம்மாவாசையார்' சிறுகதையில் அமாவாசையார் கதாபாத்திரம் தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்வதாகவே அமைகிறது. அவர் காணும் பஞ்சாயத்துத் தலைவர், அரசு பணியாளர், ஆசிரியர் ஆகிய மூவரது வாழ்வும் முதியவரோடு இணைந்து காணப்படுகிறது. இவர்கள் இல்லாத நாளில் அவரது இறப்பு நிகழ்கிறது. அதை எண்ணி வருந்தி செல்லும் மனங்களுக்கு, அவரது பிள்ளைகள் பிறரை ஏமாற்றியும், உண்ணாமலும் உறங்காமலும் அவர் சேர்த்து வைத்த சொத்து, பணம், நகைகளின் மீதே அதிக ஆர்வம் காட்டுகின்றனர். அவரது இழப்பை எண்ணி வருந்தவில்லை.

அச்சிறுகதையில் உயிரின் இழப்புக்கு வருந்தாமல் பணத்திற்கும் சொத்துக்களுக்கும், நகைகளுக்கும் கொடுக்கும் முக்கியத்துவம் மனிதநேயம் ஒழிந்த மனநிலையை எடுத்தியம்புகிறது.

'உலகம் பொய்' சிறுகதையில் நண்பர்கள் இருவர் பாரதியின் வாழ்வையும் வரலாற்றையும் விமர்சிப்பவர்களாய் இருக்க, ஒருவரது பணம் தொலைந்து போகும் நிலை காட்டப்பட்டுள்ளது. அத்தகைய சூழலில் தனது நிலையைக் காவல் நிலையத்தில் அறிவித்து தனக்கு யார்மீதெல்லாம் சந்தேகம் என்பதைத் தெரிவிக்கின்றார். உழைத்தது தொலைந்து போனது எண்ணி அவர் மனம் வருந்துகிறது. நண்பருடன் அவர் அடுத்த பயணத்தை மேற்கொண்டார். அந்த இடத்தில் கனவில் தான் தொலைத்த பணம் கிடைத்தது எண்ணி மகிழ்கிறார். தான் கண்டது கனவு என்பதையறிந்து மகிழ்ந்தாலும், தான் சந்தேகித்தது தவறு என தன் குற்றத்தை அவர் எண்ணி கொள்ளவில்லை.

இச்சிறுகதையில் பாரதியின் புரட்சியை விரும்பும் மனிதர்கள் தங்களின் வாழ்வில் அவரது கருத்தைப் பின்பற்றுவதில்லை. தங்களின் தவறினை உணராத இயல்பான நிலையில் காணப்படுகின்றனர். மனித நேயம் மறந்த நிலை வெளிப்படுகிறது.

இயற்கையோடு இயந்த வாழ்க்கை

'இயற்கை பொல்லாதது' சிறுகதையில் தன்னுடைய விருப்பத்தினைப் புத்தகத்தின் மீது செலுத்தியதால் ஒரு உயிரை இழந்த நிலை வெளிப்படுகிறது. பிரிதொரு உயிரின் இறப்புக்காக வருந்திய மனிதர் தன்னால் ஒரு வாயில்லா உயிர் அழிக்கப்பட்டதை எண்ணி வருந்துகிறார். அவரது வழிப்பயணத்தில் ஒரு பெண் இறந்த நிகழ்ச்சியும், மரங்களை வெட்டும் நிகழ்வும் கடிகாரத்தின் தொடர் ஓட்டத்தினையும் அம்மனிதர் தன் வாழ்வோடு இணைத்து காணும் பாங்கு விளக்கப்பட்டுள்ளது.

'அக்கரை பச்சை' சிறுகதையில் வரும் கிராமத்து அதிகாரியான கதாபாத்திரம் தன்னுடன் பணியாற்றும் சக ஊழியர்களின் பேச்சைக் கேட்டு நகரத்து அலுவலவலகத்துக்கு இடமாற்றம் மூலமாக செல்கிறார். அங்கு அவருடன் பணியாற்றும் சக ஊழியர் ஒருவர் அவரது கவலையைப் போக்குகின்றார். அவரது வாழ்வில் நடந்த சில நிகழ்வுகளால் இருவரிடையே பிரிவு நிலை ஏற்படுகிறது. நகரத்து நண்பரின் இருமனைவியர் அவரது முதல் மனைவியுடன் வாழ்கின்ற வாழ்க்கை குறித்தும் அறிய நேரிடுகிறது. அவரது ஏமாற்று நிலையை அறிந்த பின் தன் நண்பரின் நிலை குறித்து வருந்துகிறார்.

இச்சிறுகதை தன் சுயநலத்துக்காக வாழும் மனிதனின் வாழ்க்கை நிலை காட்டப்படுகிறது. தன் சுயநலத்துக்காக இளம் பெண்ணைத் திருமணம் செய்து முதல் மனைவியின் உறவு கிடைத்ததும் கைவிடும் நிலை காட்டப்பட்டுள்ளது. தன் சுயநலத்துக்காக பிரிதொருவர் வாழ்வைச் சிதைக்கும் நிலை காட்டப்பட்டுள்ளது.

இயற்கையில் ஏற்படும் இழப்பிற்கு மனிதனும் ஒரு காரணமாக அமைகின்றான். தன்னை மறந்த நிலையில் ஒரு உயிர்பலிக்கு காரணமாக திகழ்ந்த நிலை சுட்டிக்காட்டப்படுகிறது.

நிறைவுரை

இவ்வாய்வுக்கட்டுரை 'குறட்டை ஒலி' தொகுப்பில் இடம்பெறும் சமூக மாற்றங்களை வெளிப்படுத்துவதாக அமைகிறது. தாய்மை மனம், கொடை மனம், உதவும் மனப்பான்மையின் வழியாக சீர்திருத்தங்களையும், மூட நம்பிக்கைகள், இரக்கமில்லா மனம், புலனுகர்வு தன்மை, இயற்கையோடு இயைந்த வாழ்க்கையின் வழியாக சமூக சீர்கேடுகளும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. மக்களின் வாழ்க்கை நம் சமூகத்தில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதைக் காட்டுவதாகவே மு.வ. அவர்களின் கதைப்போக்கு அமைந்துள்ளது.

51. மு. வ. வின் 'கள்ளோ? காவியமோ?' நாவல் தரும் கருத்துகள்

முனைவர் தி.கல்பனாதேவி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கம்பன் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
திருவண்ணாமலை.

உலகம் சுற்றிய முதல் தமிழ்ப்பேராசிரியர், பன்மொழிப்புலவர் முனைவர். மு.வரதராசன் அவர்களின் உயிருள்ள படைப்புகள் பல.

1. குறள் கருத்துகள் - குறள் வழி நிற்றல்

முருகையா புதிய திருக்குறள் நூல் இரண்டு எடுத்து அருளப்பன், மங்கையின் கைகளில் கொடுத்தார். பிறகு 'அறன்வலியுறுத்தல், இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம்' என்ற மூன்று அதிகாரங்களை மெல்லப்படித்தார். அருளப்பன் 'அறிவுடைமை' அதிகாரத்தில் 10 குறள்களும், மங்கை 'அன்புடைமை' அதிகாரத்தில் 10 குறள்களும் படித்தனர். (மேலது ப.94)

காதல், கள் பற்றிய கருத்து. காதல் என்பது கள்ளை விடக் கொடியது என்னும் எண்ணம் உண்டாகின்றது. கொடிய கள் கள்தான். திருவள்ளுவரும் சொன்னார் அல்லவா? இந்தக் கள் கண்டாலும் மயக்கம் ஊட்டுவது நினைத்தாலும் போதை ஏறுவது. அவர் சொன்னது போல பொல்லாதக் கள் தான். (மேலது ப.95)

குடிமை

அருளப்பன் தன் மனப்புலம்பலில் புலம்பிய போது நான் கற்ற திருக்குறளையும் மறந்து விட்டேன். திருவள்ளுவரை திருவள்ளுவர் வழிகாட்டும் வான் பொருளாக நம்பியிருந்தும் அவர் வலியுறுத்திய குடிமையை உணரத்தவறினேன் என்று குறிப்பிடுகின்றார். (மேலது ப.97) ஆசிரியர் முருகையா அறிவுரைப்படி வீடுவந்து சேர்ந்த அருளப்பன் உறக்கம் வராது படுக்கை அறையில் புரளும் பொழுது 'குடிசையில் பாம்போடு உடன் வாழும் வாழ்க்கையைத்' திருவள்ளுவர் உவமையாகக் கூறியது நினைவுக்கு வந்தது என்கின்றார். (மேலது ப.107) மங்கை தனக்கு அறிவுரை கூறவந்த முருகையா ஆசிரியரிடம் திருவள்ளுவர் கூறிய கற்பு பற்றி வாதிடுகின்றாள். நிறை காக்கும் காப்பை இந்த நாடி நரம்புகளின் பெயரால் தகர்க்க முடியுமா? இதனால்தான் 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள?' என்று அந்த உலகப் பெருந்தலைவரும் கேட்டார். மேலும் கற்பு என்னும் திண்மை எங்களுக்கு இயல்பாக அமைகின்றது. அந்தப் பெருமை இயற்கை

எங்களுக்கே கொடுத்த பெருமை. உலகப் பேரறிஞர் திருவள்ளுவர் எவ்வாறோ உணர்ந்து வெளிப்படுத்தி விட்டார்.

ஒருவர் பொறை இருவர் நட்பு

அருளப்பன் - மங்கை இருவரது திருமண வாழ்வில் மனக்கசப்பு ஏற்பட்டவிடத்து ஆசிரியர் முருகையா அனைத்து பிரச்சனைகளையும் கேட்டுவிட்டு அருளப்பனிடம் கொஞ்சம் பொறுத்திருந்தால் இவ்வளவு மூண்டிருக்காது. 'ஒருவர் பொறை இருவர் நட்பு' என்று குறள் கருத்தினை வலியுறுத்துகின்றார். (மேலது ப.100) மங்கை தன் வீட்டிற்கு மீண்டும் கோபத்திலிருந்து திரும்பிவந்த கணவனின் காலினைப் பற்ற, அவரோ, கோபமுடன் தள்ளிவிட, அப்போதும் அவள் தனக்கு ஆசிரியர் மேற்கூறிய அதே குறளினை மீண்டும் நினைக்கின்றாள். ஒரே குறள் மீண்டும் மீண்டும் கையாளப் பெறுகின்றது. (மேலது ப.129)

2. இலக்கியச் சிந்தனைகள்

அருளப்பன் காதல் பற்றிய செய்தியினைத் தெரிவிக்கும் போது தமிழ் நூல்கள் கற்றதனால் பெற்ற உயர்ந்த எண்ணம் என்கின்றார். (மேலது ப.67) தனிக்குடித்தனம் வைக்கும் போது அருளப்பனின் தந்தையைப் பாராட்டுமிடத்து ஆசிரியர் முருகையா பாராட்டி சிலப்பதிகாரத்தில் கோவலனும், கண்ணகியும் இப்படித்தான் வாழ்க்கை நடத்தியதாகத் தெரிகிறது. பெரிய புராணத்தில் காரைக்கால் அம்மையார் வாழ்க்கையிலும் இது தெரிகிறது என்கின்றார். (மேலது ப.92)

குறுநில மன்னர்கள்

குறுநில மன்னர்களான பாரி, பேகன் பற்றிய செய்திகளை இதுதான் உலகம் இங்கே பலருக்குக் கடமைப்பட்டு வாழ்கின்றோம். 'பாரியும், பேகனும் கடமைகளை மறந்து சில பொழுது வாழ்க்கையின் எல்லையைக் கண்டார்கள். முல்லையைக் கண்டதும் பாரி அதன் அசைவு தவிர அனைத்தையும் மறந்தான். மயிலைக் கண்டதும் பேகன் அதன் நடுக்கம் - ஆடல் - தவிர மற்ற எல்லாவற்றையும் மறந்தான்' என்று நண்பன் அருளப்பனுக்கு உலகியற் பற்றி அறிவுரை கூறிய செய்தி. (மேலது ப.69)

உண்மையான காதல் - அருளப்பன் கூற்று மங்கையைப் பற்றிய உணர்வு

'முன்பெல்லாம் அவள் எனக்கு இனிய உரைநடையாக இருந்தாள். இப்போதுதான் உணர்வு மிக்க பாட்டாக வாழ்கிறாள்' (மேலது ப.64) அருளப்பன் இலக்கிய மாநாடுகள், இலக்கிய மேடைப் பேச்சுகள் நிகழ்த்துவதற்காக பல இடங்களுக்கும் சென்று வந்துள்ளார் என்பதையும்

இந்நூலில் பல இடங்களில் தெரிவிக்கப் பெற்றுள்ளது. குறள் தொடர்பான கருத்தரங்குகள், மேடைப்பேச்சுகள் முதலியன நிகழ்ந்தன. (மேலது பக்.146-148)

தேன்மொழி பெயர்க்காரணம்

குழந்தையின் குரல் தேனினைப் போன்று இனிமையாகவும், குயிலின் ஓசையைப் போன்று இனிமையாகவும் இருந்ததால் மங்கை இந்தப் பெயரினைத் தேர்ந்தெடுத்தாள். அதற்கு அருளப்பன் பெயரும், வினையுமான மொழியே தாய்மொழி என்று தாயின் மொழியாக அழைக்கப்படும் போது தாய் வைத்த பெயர் வாழட்டும் என்று விட்டுக் கொடுத்ததாக மங்கையிடம் சொன்னேன் என்ற இந்தச் செய்தியின் வழி இலக்கிய, இலக்கணங்கள் இந்நாவலில் இழையோடுவதை அறியலாம். (மேலது ப.159)

3. மேல்நாட்டறிஞர் கருத்துகள்

3.1. பெர்னாட்ஷா

காமத்துக்கும் காதலுக்கும் உள்ள வேறுபாடு பற்றி பெர்னாடஷா கூறிய கருத்து:

"Love is an appetite, which like all other appetites is destroyed for the moment by its gratification; no profession, promise or proposal made under its influence should bind anybody." (மேலது ப.96) அருளப்பன் பெர்னாட்ஷாவை மீண்டும் எண்ணிப் பேசும் போது பெர்னாட்ஷாவை பழித்தேன் அவள்மேல் வெறுப்பு மிகுந்தும் பெர்னாட்ஷாவை புகழ்ந்தேன். பெண்களைப் பழித்திடும் பாடல்களைத் தேடித்தேடிப் படித்துப் போற்றினேன் என்று இவ்விதம் குறிப்பிடுகின்றார். (மேலது ப.143)

3.2. ஷேக்ஸ்பியர்

இந்நாவலில் காதல் காமம் பற்றிய சிந்தனையை எண்ணிய போது அருளப்பன் குறிப்பிடுவது. புலவர்கள் நாடகம் காண்பது போல் உலகைக் காண்கிறார்கள். 'நாடகமே உலகம்' என்று ஷேக்ஸ்பியரும் கூறவில்லையா? என்கின்றார். (மேலது ப.96)

4. தமிழ்நாட்டறிஞர் கருத்துகள்

4.1. தாயுமானவர்

தனிக்குடித்தனம் சென்ற பிறகு ஆசிரியர் முருகையா வாழ்த்துச்

சொல்லும் போது, தாயுமானவர் - கிளிக்கண்ணியினைப் படித்து முடித்தார். (மேலது ப.94) அருளப்பன் மனம் புலம்புதலுக்கு ஆசிரியர் முருகையா அறிவுரை கூறுகையில் 'ஒவ்வொரு வேளை அன்புக்குச் சோதனைக்காலம் நடக்கும். அப்போது அறிவைத் தொலைவில் வைத்துவிட வேண்டும். கூர்ந்த அறிவெல்லாம் கொள்ளை கொடுக்க வேண்டும் என்று தாயுமானவர் சொன்னது கடவுள் அன்பரின் வாழ்க்கைக்கு மட்டுமல்ல' என்று கூறுகின்றார். (மேலது ப.103)

4.2. பட்டினத்தார்

காதல், காமம் பற்றி அருளப்பன் சிந்திக்கும் போது பெர்னாட்'ா, ஷேக்ஸ்பியர் அவர்களின் கருத்துகளினை எண்ணும் போது இக்கருத்தினையும் குறிப்பிடுகின்றார். காட்டாற்றின் அழகைப் பாராட்டிய புலவர்கள் இந்த அச்சத்தையும், அலறலையும் ஏன் பாடத் தவறினார்கள்? தங்கள் தவறுதலை பிறர் அறியக்கூடாது என்று தயங்கினார்களா? அப்படியானால் தங்கள் தவறுதலைச் சொல்லி உலகம் உணருமாறு வெளிப்படுத்திய பட்டினத்தார் போன்றவர்களைப் பாராட்ட வேண்டும் அல்லவா? என்கிறார். (மேலது. பக்.96-97)

Dr. மு.வரதராசன் அவர்கள் 'கள்ளோ காவியமோ' எனும் இந்நாவலின் வழி சிறந்த கருத்துப்பதிவுகளைத் தந்துள்ளார் என்பதனை இக்கட்டுரையினால் நாம் தெளிவாக அறிகின்றோம்.

52. மு.வ.வின் கடித இலக்கியங்கள்

கு.சீனிவாசன்
உதவிப் பேராசிரியர்
சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி
திருவண்ணாமலை.

முன்னுரை

இருபதாம் நாற்றாண்டில் முனைவர் மு.வ. அவர்களின் பேரிலக்கியங்கள் இலக்கிய வானில் தனி ஓர் இடத்தைப் பெற்று விளங்குகின்றன. புதினங்கள், நாடகங்கள், கட்டுரைகள், வாழ்க்கை வரலாறு, சிறுகதைகள், ஆங்கில நூல்கள் ஆகியவற்றில் தனி முத்திரையைப் பதித்த இவர், கடித இலக்கியத்திலும் தன்னுடைய முத்திரையைப் பதித்துள்ளார். 'கடிதம்' என்பது மனதைத் திறந்து பேசும் இலக்கியக் கலை. எண்ணங்களின் வெளிப்பாடு, உறவுகளையும், உணர்வுகளையும் தொடுகின்ற பாலம். இவ்வுலக நடவடிக்கைகளைத் தெரிவிப்பதற்கும், பின்பற்றுவதற்கும் ஏற்ற இலக்கிய வடிவமாக கடிதஇலக்கிய உத்தியைத் தேர்ந்து கொண்டார். இவர் அன்னைக்கு, தம்பிக்கு, தங்கைக்கு, நண்பர்க்கு என்ற தலைப்புகளில் மடல்கள் எழுதி உள்ளார். தம்பிக்கு எனும் நூல் கூறும் கருத்துக்களை இக்கட்டுரையில் காண்போம்

நன்மையும் வன்மையும்

உலகத்தில் நிலைத்து வாழ வேண்டுமெனில் நல்லவனாக இருக்கவேண்டும். அதே சமயத்தில் வல்லவனாகவும் இருக்கவேண்டும். நல்ல தன்மை மட்டும் உடையவர்கள் எத்தனையோ பேர் கலங்கிக் கண்ணீர் வடித்து மாய்ந்திருக்கிறார்கள், மாய்ந்தும் வருகின்றார்கள். வல்லமை பெற்றவர்களும் எதிர்பாராத வகையில் நசுக்குண்டு அழிகின்றார்கள். ஆம் குடும்பங்கள் முதல் நாடுகள் வரையில் இதற்குச் சான்றுகளாக கண்டுள்ளோம். தமிழ் நாட்டில் இருந்த பழங்காலத்து நல்லரசுகள் கலங்கி அழிந்ததை வரலாறுகளில் காண்கின்றோம். ஜெர்மனி, ஜப்பான் போன்ற வல்லரசுகள் அழிவுற்றதைக் கண்கூடாகக் கண்டுள்ளோம். அது மட்டுமல்லாது பல்வேறு கருத்துக்களைக் கூறி நம்மை தெளிவு படுத்துகிறார். வாழ்க்கையில் ஒன்றை மட்டும் போற்றுகின்றவர் உருப்படுவதில்லை. எனவே தான் வள்ளுவப் பெருந்தகையும் அறநெறியும் வேண்டும், பொருள் வளமும் வேண்டும், இன்ப வாழ்வும் வேண்டும் என்கிறார். நல்லவனாக இருக்கும் அதே வேளையில் வல்லவனாகவும் இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் போட்டி நிறைந்த உலகத்தில் நாம் வாழ முடியும். நம்முடைய மொழியையும் வாழ வைக்கமுடியும். வள்ளுவனின் அருங்குறளை நாம் அனைவரும்

கற்று இருக்கிறோம். ஆனால் வள்ளுவன் கூறியபடி வாழவில்லை. நல்ல தன்மை தேடுகிறோம். வல்லமை தேடவில்லை. அதனால்தான் தாழ்வுறுகின்றோம். இந்த உலகமாது வல்மை மிக்க மாமியார் போல் உள்ளது. நம்முடை தமிழ்நாடோ நல்ல மருமகளாக உள்ளது. அதனால் தற்கொலையோ மனவேதனையோ எதிரே வந்து நம்மையும், நம்முடைய நாட்டையும் தாக்காமல் காப்பாற்றும் அளவிற்கு வல்லமை உடையவர்களாக மாற வேண்டும்.

தமிழ்ப்பற்று

தமிழ்நாட்டில் திருக்குறள் ஓதாத திருமணம் செல்லுபடி ஆகாது எனவும், அத்திருமணத்திற்கு அங்கீகாரம் கொடுத்தல் கூடாது எனவும் சூளுரைக்கின்றார். தேவாரம், திருவாசகம், பிரபந்தம் முதலான தமிழ்மறைகளை, ஓதாத கோயில்கள் தமிழ்நாட்டில் திறந்திருக்கக் கூடாது என்றும், அதிகாரிகள் தமிழை மதிப்பவர்களாக இருக்க வேண்டும் இல்லையெனில் அவர்களின் பதவியினைப் பறிக்கப் படுதல் அவசியம் என்றும், தமிழில் உத்தரவு அனுப்பத் தெரியாத பட்டதாரிகள் தமிழ்நாட்டில் இருக்கக்கூடாது என்றும், தமிழ் நாட்டில் கவர்னரும் தமிழில் கையெழுத்து இடுதல் வேண்டும். இது போன்ற மிகச் சிறந்த நல்லெண்ணங்களை எடுத்துரைக்கின்றார். அது மட்டுமல்லாது அலுவலக மொழியாகவும், நீதிமன்றங்களில் வழக்காடு மொழியாகவும், கல்வி பயிற்று மொழியாகவும் எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற நிலை உருவாகவேண்டும் என்பது அவருடைய அவாவாக உள்ளது.

சாதி ஒழிப்பும் சமய மறுப்புக் கொள்கையும்

'சாதிகள் இல்லையடி பாப்பா' என்ற பாரதியின் பொன் மொழிக்கு ஏற்றார் போல் சாதி வேறுபாடு முதலியவை ஒழிய வேண்டியவைகளே. இவை உண்மையானவை அல்ல. பொய்யானவை. அவற்றை ஒழிப்பது நம் கடமைதான். சாதி வேறுபாடு பொய்யின் அடிப்படையில் நிற்பது. அதனால்தான் அறிவு வளரவளர நாகரிகம் வளரவளர சாதி இருக்குமிடம் தெரியாமல் மறைகிறது.

சாதி பெயரைச் சொல்லியும், மதத்தின் அடிப்படையில் கடவுள் பெயரைச் சொல்லியும் நம் நாட்டில் நடைபெறும் கொடுமைகளை முற்றிலும் ஒழிக்க வேண்டும். கடவுள் எனக்குக் கட்டளை இட்டார், ஆகையால் தான் மற்ற மதத்தினரைக் கொல்கிறேன் என்று சொல்பவனுக்கும் உண்மையான மதத்திற்கும் ஏதாவது தொடர்பு உண்டா? முற்றிலும் இல்லை. எனவே மதங்களின் பெயரால் நடக்கும் அத்துனை அநீதி செயல்களுக்கும் முற்றிலும் புள்ளி வைத்தல் வேண்டும். இன்று கனவில் வந்து 'மாரியாயி

ஆட்டுக்கடா பலி கேட்டாள்' ஆகையால் இந்த ஆட்டை வெட்டப்போகிறேன் என்று அந்த ஆட்டுக்கு மாலை சூட்டுகிறவனுக்கும் மதத்திற்கும் ஏதாவது தொடர்பு உண்டா? எனவே போலி சமயக் கொள்கைகளை ஒழித்திடல் வேண்டும். உயர்ந்த சாதியான் ஊர்மக்கள் என்றும் தாழ்ந்த சாதியான் சேரி மக்கள் என்றும் இந்த வேறுபாட்டை முற்றிலும் ஒழித்திட வேண்டும். இந்த மக்களுக்குள் இரத்தம், தசைநார் நரம்பு முதலிய எந்த வகையாலும் உடம்பால் வேறுபாடு இல்லை என்றும் உடல் நூல் உறுதிபடுத்துகின்றது. எனவே இந்த போலிச் சமயக் கொள்கையையும் சாதி பிசாசையும் முற்றிலும் ஒழித்திடல் வேண்டும் என்பது அவரின் கூற்றாக உள்ளது.

தமிழனுக்கு அறிவுரை

தமிழர்களில் பெரும்பாலோர் தன்னலமிக்கவர்களாக இருக்கின்றனர். முதலில் தன்னையே நினைப்பவனாக தமிழன் இருக்கிறான் என்பதற்குச் சான்றாகச் சிறிய கதையினைச் சொல்லி விளக்குகிறார். தமிழன் ஒருவன் அதிகாரி ஆனான், நான் அதிகாரி என்ற எண்ணமே அவனுக்கு எப்போதும் இருக்கிறது. அலுவலகத்தை விட்டு வெளியே வந்த பிறகும் நான் அதிகாரி என்ற மிதப்பிலே இருக்கிறான். பொது இடங்களிலும், விருந்து முதலிய நிகழ்ச்சிகளிலும், குடும்பத்தில் மனைவி மக்களின் முன்னும் அதிகாரியாகவே விளங்குவான் போலும். ஆனால் ஆங்கிலேயன் அப்படி அல்ல. அலுவலகத்தில் கடுமையாக நடந்து கொள்வான். விளையாட்டு கழகத்தில் தோழன் போல் பழகுவான். விருந்தில் களித்து மகிழ்வான். கோயிலில் அமைந்து ஒழுங்குவான். காரணம் அவன் மனம் இடத்திற்கும் வேலைக்கும் சூழ்நிலைக்கும் நெகிழ்ந்து மாறி அமைகின்றது. அவன் உள்ளத்திலும் தன்னலம் உண்டு. ஆனால் குறைவு. அதனால்தான் அவனால் நெகிழ்ந்து தோழனாக மனிதனாக அன்பனாக மாறி அமைய முடிகின்றது. தமிழனுடைய தன்னலமோ, இடம் வேளை சூழ்நிலை மொழி நாடு எதுவும் ஊடுருவி இடம் பெறாதவாறு இறுகியுள்ளது. அதனால் தமிழரில் அதிகாரி எங்கும் அதிகாரியாகவே இருக்கின்றான். கட்சி ஆள் எங்கும் கட்சி ஆளாகவே இருக்கின்றான். எனவே தன்னத்தை விட்டுவிட்டு நம்மவர்கள் மாற வேண்டும். அப்பொழுதுதான் ஒற்றுமை என்ற பலம் ஏற்பட்டு நம் முன்னேற்றத்திற்குப் பாலமாக அமையும் என்கின்றார்.

தமிழர் மானம் மிகுந்த இனத்தார். மானமே உயிரினும் சிறந்ததெனக் கொண்ட தனிக் கூட்டம் என்று ஒரு காலத்தில் புகழின் உச்சியில் இருந்த இனம். இன்றோ வெளிநாடுகளில் கூலிகளாக உள்ளனர். அண்டை மாநிலங்களிலோ படு மோசம் பெங்களூரிலோ எந்த வகையான கூலி வேலையும் செய்து அரை நிர்வாணமாய்த் தெருக்களில் திரியும் கூட்டம் போல் காணப்படுகின்றனர். மும்பையில் சாய்க்கடைக் குப்பங்களில் பொத்தல் குடிசைகளில் வாழ்கின்ற கூட்டமாகவும், இரவும் பகலும்

மூலைமுடுக்கெல்லாம் ஓயாமல் பிச்சைகேட்டுத் தொல்லைப்படுத்தும் கூட்டமாக வாழ்கின்றனர். ஆனால் ஆங்கிலேயரில் இங்கே எத்தனை பேர் கூலிகளாக வேலை செய்கின்றனர். ஜப்பானியரில் எத்தனை பேர் இங்கே விறகு வெட்டுகிறார்கள்? குசராத்தியர், வங்காளியர்கள் முதலியவர்களில் எத்தனை பேர் இங்கே பிச்சை எடுக்கிறார்கள். அரேபியர்கள் எத்தனைப் பேர் வீட்டுப் பணிப்பெண்களாக வேலை செய்கின்றார்கள். தமிழ்நாட்டில் காவல் புரியும் தொழிலுக்குக் கூர்க்கரையே பலரும் வைத்திருக்கிறார்கள். பம்பாயில் வாழும் செல்வத் தமிழரும் தங்கள் வீடுகளுக்குக் காவல் புரிய அவர்களையே வைத்துச் சம்பளம் தருகின்றார்கள். தமிழர்கள் பலர் தொழில் இல்லாமல் பிச்சை எடுக்கும் நிலையில் இருக்கும் போது இப்படி ஏன் பிற நாட்டினரை இங்கு வேலைக்கு வைத்துச் சம்பளம் தருகின்றார்கள். ஏனெனில் இவ்வளவு பொறுமையாகவும், பணிவாகவும் தமிழர்கள் இந்த வேலையைச் செய்ய வருவதில்லை என்பது நிசத்தமான உண்மை. ஆகவே பணிவும், பொறுமையும், ஒற்றுமையும் இருந்தால்தான் ஜப்பானியர், சீனர், ஆங்கிலேயர், குசராத்தியர் போல் முன்னேற முடியும். உலக அரங்கில் நம் நாட்டிலே பல்வேறு பணிகள் இருக்கையிலே வெளிநாடுகளிலும், அண்டை மாநிலங்களிலும் கூலிகளாக வேலை செய்வது என்பது சங்கடத்திற்குரியது. அதே உழைப்பினைக் கூலி வேலையினை நம் நாட்டில் சொந்த மண்ணில் செய்தால் நம்மவர்க்கும் பெருமை, நாமும் மகிழ்ச்சியுடன் வாழலாம் உறவினர்களுடன். எனவே உழைப்போம்! உயர்வோம்! நமது மண்ணிலே!

முடிவுரை

மு.வ. அவர்கள் 'தம்பிக்கு கடிதங்கள்' என்ற தலைப்பில் எழுதியுள்ள கருத்துக்கள் அனைத்தும் பொன் மொழிகளாக உள்ளன. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற புகழ்மிக்க சொல்லுக்கு ஏற்றார் போல் வாழ்தல் வேண்டும் என்கிறார். சாதிகளின் பிறப்பிடமா? வளர்ப்பிடமா? கல்விச்சாலை என்ற வினாவினைக் கேட்டு சாதியினை இந்தச் சமுதாயத்தில் முற்றிலும் ஒழித்திடல் வேண்டும் என்கிறார். இன்சொல், பணிவு, பொறுமை உழைப்பு மானம் போன்ற பெரிய பண்புகளோடு வாழ்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். அதுமட்டுமல்லாமல் தன்னலமின்றியும், வல்லமையோரும் நல்லவர்களாகவும் வாழ்தல் வேண்டும். இவ்வாறு வாழ்ந்தால்தான் வாழ்க்கையில் முன்னேறி மொழியினையும் நாட்டினையும் பாதுகாக்க முடியும் என்கிறார்.

53. மலர்விழி நாவலில் இடம் பெற்றுள்ள 'இலக்கிய சுவை'

முனைவர் ஆ.சந்திரன்
உதவிப் பேராசிரியர்
சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி
திருவண்ணாமலை.

முன்னுரை

'புதின இலக்கியம்' என்பது தமிழிற்குப் புதியது. அது மேலை நாட்டினரிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒன்று என்பது தமிழ் இலக்கிய வரலாறு கூறும் செய்தி. பண்டைத் தமிழன் அத்தகைய இலக்கிய வகையை அறியாமல் இருந்தாலும், 'வாசகருக்குக் கதை சொல்லும்' முறையைப் பழங்காலம் முதல் மேற்கொண்டு வந்துள்ளான் என்பது இலக்கியங்கள் மூலம் தெளிவாக அறியமுடிகின்றது. அதாவது, கதை சொல்லுதல் என்பது தமிழன் அறிந்த ஒன்று. அதாவது, நாம் நன்கு அறிந்த 'கதை சொல்லும்' தன்மையிலேயே நவீனம், நாவல், புதினம் எனற பெயர்களில் அழைக்கப்படும் இவ்விலக்கியம் அமைந்துள்ளது எனலாம்.

இவ்வகை இலக்கியம் படைத்து புகழின் உச்சியைத் தொட்டவர்கள் தமிழில் ஏராளம். அவர்களில் ஒருவர் மு.வ என்று சிறப்புடன் அழைக்கப்படும் மு. வரதராசனார். அவரது படைப்புகளில் ஒன்று மலர்விழி என்ற நாவல். 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற உயரிய உணர்வு கொண்ட மு.வரதராசனார். இந்நாவலில் தான் சுவைத்து மகிழ்ந்த 'இலக்கிய இன்பத்தைப்' பற்றி வாய்ப்பு கிடைக்கும் இடங்களில் எல்லாம் அழகாகப் படம் பிடித்துக்காட்டியுள்ளார். இது நாவலின்கண் இடம்பெற்றுள்ள பாத்திரங்கள் சுவைக்கும் இன்பமாக அமைந்துள்ளது. இவ்விலக்கிய இன்பம் எவ்வாறு அமைந்துள்ளது? என்பதைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.

முத்தையன்

'மலர்விழி' என்ற பெண்ணின் கதையை (இந்நாவல்) வாசகருக்குச் சொல்லும் கதைச் சொல்லியாக விளங்குபவர் முத்தையன். வாசகர் இப்பாத்திரத்துடன் சேர்ந்து இக்கதையில் பயணம் செய்வது போல் இந்நாவல் படைக்கப்பட்டுள்ளது. பிற பாத்திரங்கள் சுவைக்கும் இன்பத்தைக் கண்டு மகிழ்வதுடன், தானும் அவ்வின்பத்தை அனுபவிக்கத் துடிப்பதாக 'முத்தையன்' பாத்திரத்தை மு.வரதரானார் அமைத்துள்ளார்.

'இந்தப் படத்தைக் கண்டதும் என் உள்ளத்தில் ஒருவகை ஒளி வீசியது என்றே நம்புகிறேன். நான் அப்போது பெற்ற புதிய உணர்ச்சி

இத்தன்மையானது என்று கூற முடியவில்லை.. .. அதற்குக் காரணம் படங்களுக்கு உள்ள கவர்ச்சியே தவிர, என் கலைப் பயிற்சி அல்ல' என்று முத்தையன் தன்னுடைய உண்மையான பண்பினைப் பற்றி அறிமுகம் செய்துகொள்வதிலிருந்து இந்நாவலின் கதை ஆரம்பமாகின்றது.

கலெக்டர் செல்வநாயகத்தின் வீட்டில் முத்தையன் முதன்முதலாக 'அகநானூறு' என்ற புத்தகத்தைக் காண்கின்றான். அதனைத் தொடர்ந்து "அழகான இல்வாழ்க்கைப் படம் ஒன்று மிகச் சிறந்த முறையில் சட்டம் இட்டு மாட்டப்பட்டு இருப்பதும், கணவன் மகிழ்ச்சியோடு சுவைத்து உண்ணும் காட்சியும், மனைவி, எதிரே இருந்து புன்முறுவல் பூக்கும் காட்சியும் படத்தில் காண்கின்றான். படத்தின் தலைப்பில் நுண்ணிதின் மகிழ்ந்தன்று என்று மிகப் பழைய ஏதோ ஒரு பாட்டில் அரையடி எழுதப் பட்டிருந்தது" (ப.20). முத்தையன் காண்கின்ற அக்காட்சி அவனை கவர்ந்திழுக்கின்றது. செல்வநாயகத்தின் மீது அவனுக்கு நல்ல எண்ணம் தோன்றுகின்றது. அவருடைய வழியைப் பின்பற்ற ஆரம்பிக்கின்றான். இவ்வாறு கலைப்பயிற்சி இல்லாத முத்தையன் பண்டைத் தமிழரின் இல்வாழ்க்கை ஓவியங்களைப் பார்த்தும், பாடல்களைக் கேட்டும் அடைந்த இன்பம் பற்றி மு.வரதராசனார் அழகாகச் சித்தரித்துள்ளார்.

செல்வநாயகத்தின் (இலக்கிய) வழியைப் பின்பற்ற ஆரம்பித்த முத்தையன், தான் மீண்டும் அவரைச் சந்திக்கும் போது பொழுதுபோக்கிற்கு என்ன செய்கின்றாய்? என்று கேட்டால் என்ன செய்வது என்று நினைத்து, ஏற்கனவே மனப்பாடம் செய்திருக்கும் திருக்குறளுடன், கோடையிலே தனித்தனி முக்கனி விளக்கறியா இருட்டறை முதலான சில அருட்பாக்களை மனப்பாடம்(ப.39) செய்துகொள்கின்றான் என்று முத்தையன் இலக்கியங்களைப் படித்து அடைந்த சுவையைப் பற்றிக் கூறியுள்ளார்.

"செல்வநாயகம் கலித்தொகை நயம் என்னும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார். அச்சொற்பொழிவிற்கு முத்தையன் சென்றான். அவனுக்கு அச்சொற்பொழிவு சுவையாக இருந்தது. இடையிடையே கலித்தொகையிலிருந்து சில பாட்டுகளையும் பாடினார். பேசிய தெல்லாம் காதலைப் பற்றியே இருந்தது. அந்தப் பேச்சைத் தொடர்ந்து கேட்க முத்தையனால் முடியவில்லை. அதற்குக் காரணம் அவர் சொன்ன வாக்கியங்கள் எல்லாம் அவனையும் சாவித்திரியையும் பற்றியே சொன்னவை போல் இருந்தது. அதனால் அவருடைய பேச்சைக் கொஞ்ச நேரம் கவனித்த அவனுக்குச் சாவித்திரியின் நினைவு வந்துவிட்டது. திரும்பத் திரும்ப அதே நிலையில் இருந்த படியால், முழுப் பேச்சைக் கேட்காமல் அங்கிருந்து வெளியேறிவிடுகின்றான்" (ப.137) என்று முத்தையன் காதல் உள்ளம் பற்றி அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. அத்துடன்,

"யாயும் ஞாயும் யார் ஆகியரோ

எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல் நீர்ப் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" (குறுந்தொகை.40)

மற்றும்

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாயச்சொற்கள்
என்ன பயனும் இல" (குறள்.1100)

என்பது போன்று முத்தையனின் காதல் இந்நாவலில் (37,147,197-98) சித்தரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மு.வரதராசனார் இலக்கியத்தை (ஓவிய வடிவில்) கண்டும், கேட்டும், படித்தும் அடைந்த இன்பத்தை முத்தையன் என்ற பாத்திரம் மூலம் அழகாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

செல்வநாயகம்

"கற்க கசடறக் கற்றவை கற்றப்பின்
நிற்க அதற்குத் தக" (குறள்.391)

என்பது போல் வாழும் நபராகக் கலெக்டர் செல்வநாயகம் பாத்திரத்தை மு.வரதராசனார் படைத்துள்ளார். தமிழ் இலக்கியத்தின்கண் இருக்கும் ஆழ்ந்த இன்பச் சுவையைப் பற்றிச் சித்தரிக்கும் பாத்திரமாக விளங்கும் இவர் ஏழைப் பிள்ளைகள் பலர் கல்விசெல்வம் பெற துணைபுரிகின்றார். இவரிடம் உதவிப் பெற்றவரிகளில் ஒருவன்தான் மேலே பார்த்த முத்தையன்.

முதல் சந்திப்பில் செல்வநாயகம், முத்தையா, நீ பத்தாவது படித்திருக்கின்றாய் அல்லவா? போதும். தமிழில் திருக்குறள், புறநானூறு, படித்து வா! ஆங்கிலத்தில் தாகூர், டால்ஸ்டாய் படித்து வா! அதன் பயன் இப்போது தெரியாது. என்னைப் போல் வயதான பிறகுதான் தெரியும். முதலில் தொல்லையாக இருக்கும். இருந்தாலும் விடாதே. பிறகு அது உன்னை விடாது" (ப.35) என்று இலக்கியம் படிப்பதினால் உண்டாகும் இன்பத்தைப் பற்றி அழகாகக் கூறுகின்றார்

மற்றொரு முறை சந்திக்கும்போது முத்தையன் செல்வநாயகத்திடம், தான் பொழுது போக்கிற்காக அருட்பா படித்துவருவதாகக் கூறுகின்றான். "படி, படி என்ன அருமையான பாடல்கள். தனித்தனி முக்கனி, கோடையிலே, பார்த்தாலும் நினைத்தாலும், அப்பா நான் - இவைகளுக்கு ஈடான பாட்டுக்கள் உலகத்தில் ஏது அப்பா? உயர்ந்த உள்ளங்களின் உயர்ந்த நிலைகள்! இது தான் தமிழிலக்கியம். எத்தனை உயர்ந்த உள்ளங்கள். எவ்வளவு உயர்ந்த நிலைகள். ஒவ்வொரு பாட்டும் நம்மை எவ்வளவோ உயர்த்திவிடுகின்றதே! உலகத்தில் இவ்வளவு ஏது தம்பி! எல்லாத்

துறையிலும் பாட்டு, எல்லா வயதினருக்கும் பாட்டு, எல்லா நிலைமைக்கும் பாட்டு, எதற்கும் பாட்டு- தமிழில்தான் தம்பி!" என்று செல்வநாயகம் தான் சுவைத்து மகிழ்ந்த இலக்கியத்தின் சிறப்பு குறித்து முத்தையனுக்கு விரிவாகக் கூறுகின்றார்.

இவ்வாறு மு.வரதராசனார் தான் சுவைத்து மகிழ்ந்த இலக்கியத்தை செல்வநாயகம் என்ற பாத்திரம் மூலம் அழகாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

காஞ்சனை

செல்வநாயகத்தின் மனைவியான காஞ்சனை சிறந்த இல்லத்தரசியாக விளங்குகின்றாள். கலை உள்ளம் கொண்ட அவள் ஓவியம் வரைவதில் சிறந்து விளங்குகின்றாள். அவள் வரைந்த இல்வாழ்க்கை, கானல்வரி, தாயுமானவர் முதலிய ஓவியங்களை நாம் முத்தையன், மலர்விழி மூலம் அறிந்து கொள்ளமுடிகின்றது. அவற்றுள் முத்தையன் காணும் பின்வரும் காட்சியை மட்டும் பார்ப்போம்.

"படத்தில் ஒரு கடற்கரை தீட்டப் பட்டிருந்தது. திரை பக்கமாக அழகன் ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவன் எதிரே அழகி ஒருத்தி யாழ் வைத்துப் பாடிக்கொண்டிருந்ததாகத் தெரிந்தது. படத்தில் மேல்புறத்தில் சிறிய அளவில் கால்சிலம்பு ஒன்று தனியே பளப்பளப்பாகத் தீட்டப்பட்டிருந்தது" என்று சிலம்பின் அழகிய ஓவியம் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. இவ்வாறே பிற ஓவியங்களும் அமைந்துள்ளன. இவ்வாறு ஓவியக்கலையில் சிறந்து விளங்கும் பாத்திரமாக காஞ்சனை பாத்திரம் இவருடைய இலக்கிய ஆளுமையை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது.

ரயில் பயணி

இந்நாவலில் இடம்பெற்றுள்ள ரயில் பயணி மூலமும் தன்னுடைய இலக்கியச் சுவையை வெளிப்படுத்த மு.வரதராசனார் தவறவில்லை. "எழுந்து சாணம் தெளிப்பது முதல் இரவில் அயர்ந்து படுக்கும் வரையில் நொடிப் பொழுது ஓய்வு இல்லை. நான் சரியாகத் தூங்கிப் பதினான்கு வருசம் ஆகவில்லையா? இந்த ஆறு குழந்தைகளையும் இரவில் அழும்போதெல்லாம் எழுந்து எழுந்து ஏணையில் போட்டு ஆட்டுவதிலேயே பாதித்தூக்கம் போய்விட்டது. அதனால்தான் நம்பெண்ணையாவது நல்ல இடத்தில் கொடுத்தால் கொஞ்சம் நாகரிகமாக இருக்கும். என்னைப் போல் மண்ணிலும் கல்லிலும் மேட்டிலும் காட்டிலும் உழைக்காமல் சுகப்படவேண்டாவா?" (ப.73) என்று ரயிலில் பயணம் செய்யும் ஒரு ஏழையின் ஏக்கத்தைப் பதிவுச்செய்யும் இடத்தில் இராம-இலட்சுமணன் கதையைக் கூறும் கம்பராமாயணத்தினைப் பற்றிக் கூறியுள்ள மு.வ, இக்கூற்றினைக் கேட்ட முத்தையன் வீட்டிற்குச் சென்ற பின்னர் ப்தினான்கு

ஆண்டுகளாக முழுத் தூக்கம் தூங்காத அந்த ஏழைத் தெய்வத்தை நினைத்துப் பார்ப்பதாக (ப.74,77) இரண்டு இடங்களில் அச்செய்தியைப் கூறியுள்ளார்.

அத்துடன், "கடகம் சோறு போடுமா? என்று அப்பெண் விவேகானந்தரின் சிந்தனையையும், காந்தியின் ஒழுக்கத்தையும் கொண்டுள்ளாள்" (ப.74) என்றும் முத்தையன் நினைவுகளாக அப்பெண்ணின் இலக்கியச் சுவை பதிவுச் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு இந்நாவலில் இடம்பெற்றுள்ள சாதாரண பாத்திரங்கள் கூட அவருடைய இலக்கியச் சுவையைக் கொண்டுள்ளன.

மலர்விழி

மு.வரதராசனார் தன்னுடைய இலக்கியச் சுவையைக் கூறுவதற்கு ஏற்ற பாத்திரமாக 'செல்வநாயம்' போன்றே 'மலர்விழி' பாத்திரத்தையும் அமைத்துள்ளார்.

சிலப்பதிகாரத்திகாரம், மணிமேகலை ஆகிய இரண்டு நூல்களின் சிறப்புகளைப் பற்றியும், அவற்றினை நாம் தற்காலத்திற்கு ஏற்ப எப்படி பொருள்கொள்ளவேண்டும் என்றும் இப்பாத்திரம் மூலம் மு.வரதராசனார் விரிவாக விவரித்துள்ளார். அவற்றில் முக்கியமான சில செய்திகளைப் பற்றிக் காண்போம்.

"அந்தம்மாவை காஞ்சனையை- நான் ஏன் பழிக்க வேண்டும்? இதோ கையில் இருக்கும் இந்தச் சிலப்பதிகாரத்தைப் படித்த காரணத்தால் தானே நான் இவ்வளவு பேசுகின்றேன்" தன் வாழ்வினையே கேள்விக்குறியாக்கிய காஞ்சனையின் தீயச்செயல் கண்டு வருத்தம் கொள்ளாதவளாக மலர்விழியைச் சிலம்பு மாற்றுகின்றது.

சாவித்திரி

இந்நாவலின் பேசாத பாத்திரமாக முத்தையனின் காதலியான சாவித்திரி பாத்திரம் படைக்கப் பட்டுள்ளது. அவள் மலர்விழியுடன் ஒன்றாக ஆசிரியர் பயிற்சி படிக்கின்றாள். இவளை நாவலின் இறுதியில் பேசவைக்கும் மு.வரதராசனார் தன்னுடைய புதுமையான இலக்கியச் சிந்தனையை அவள்மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

"இப்போது சிலப்பதிகார வாழ்க்கையைக் கடந்து விட்டு மணிமேகலை வாழ்க்கைக்கு வந்துவிட்டேன் கலை காதல் எல்லாப் படிகளையும் கடந்துவிட்டு அறம், துறவு, அமுத சுரபி, இவைதான் என்னுடைய வாழ்க்கை என்று முடிவிற்கு வரும" (ப.292) மலர்விழிக்கு இந்தக் காலத்தில் பசிப்பிணி மிகுதி. அன்னதானம் வேண்டியிருந்தது. இப்போது மக்களிடம் உள்ளது அறியாமை நோய்தான். அறிவு

வழங்கவேண்டும். அதற்கு வேண்டிய அமுத சுரபி உன்னிடம் இருக்கின்றதே. அதுதான் உன் மூளை. வாரி வாரி அறிவைப் பிள்ளைகளுக்குக் கொடு. பசி தீரட்டும் என்று சாவித்திரி (முத்தையனின் காதலி) மூலம் தன்னுடைய சிலம்பு, மணிமேகலை பற்றிய சிந்தனையை வெளிப்படுத்தியுள்ளார்.

மலர்விழி நாவலில் இடம்பெற்றுள்ள நூல்கள்

இந்நூலில் திருக்குறள், அகநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, நாலடியார், புறநானூறு, கலித்தொகை, குறுந்தொகை தாயுமானவர் பாடல்கள், திருவருட்பா, கம்பராமாயணம், பெண்ணின் பெருமை, பொதுமை வேட்டல், போன்ற நூல்கள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

கம்பர் இல்லம் என்று உணவு விடுதியின் பெயரில் கம்பராமாயணம் உணவு போன்று அவ்வுணவினை அனைவரும் உண்ணவேண்டும் என்று கம்பனின் சுவையை நுட்பமாகக் கூறியுள்ள மு.வரதராசனார், கபிலர் தெரு, ஆண்டாள் தெரு, தாயுமானவர் தெரு என்று தெருக்களின் பெயர்களிலும் தன் இலக்கிய சிந்தனையை வெளிப்படுதியுள்ளார். ஆங்கிலத்தில் தாகூர், டால்ஸ்டாய் படிக்கவேண்டும் என்கின்றார்.

முடிவுரை

பொதுவாக படைப்பாளர்கள் தாங்கள் கற்றறிந்த இலக்கியங்களின் கண் இடம்பெற்றுள்ள சுவையான செய்திகளைத் தங்களுடைய படைப்புக் களில் தேவைக்கேற்ப பயன்படுத்துவர். இத்தகைய ஒரு நிலை சங்கப் பாடல்களிலிருந்தே ஏற்பட்டிருப்பதை அறியமுடிகின்றது. சங்க இலக்கியம் முதல் இன்றைய நவீன இலக்கியம் வரையான ஆழ்ந்த புலமையைக் கொண்டுள்ள மு.வரதராசனார் சுவைத்து மகிழ்ந்த சிறந்த இலக்கியப் படைப்புகளைப் பற்றி இந்நாவலில் இடம்பெற்றுள்ள பாத்திரங்கள் மூலம் கூறியுள்ளார். இது இந்நாவலின் தொடக்கம் முதல் (வாய்ப்பு கிடைக்கும் இடங்களிலெல்லாம்) இறுதிவரை பல இடங்களில் அமைந்துள்ளது. சொல்லப் போனால் இவ்விலக்கியங்கள் பற்றிய செய்தியை நீக்கினால் இந்நாவலில் எஞ்சி நிற்பது ஒன்றும் இருக்காது என்ற அளவிற்கு இந்நாவல் அமைந்துள்ளது எனலாம்.

54. பெற்ற மனம் புதினத்தில் இலக்கிய ஆட்சி

தா. பாவு
உதவி பேராசிரியர், தமிழ்த்துறை
சண்முகா தொழிற்சாலை கலை மற்றும்
அறிவியல் கல்லூரி
திருவண்ணாமலை.

முன்னுரை

அமிழ்தினுமினிய தமிழ்மொழிக்கு கிடைத்த ஓர் அற்புதம் மு.வ. "தொண்டு செய்வாய் தமிழுக்குத் துறைதோறும் துடித் தெழுந்தே" என்னும் பாவேந்தர் பாரதிதாசனின் கருத்துக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர். ஒரு மொழியின் சிறப்புக்களை உய்த்துணர உறுதுணை புரிபவை அம்மொழியிலுள்ள இலக்கியங்கள்தாம். இலக்கியம் வளர்ந்தெழுவதற்கு நிலைக்களனாக உதவும் பொருட்கள் மக்களும் இயற்கையுமே. இவ்விரண்டினையும் விடுத்து, எவராலும் இலக்கியம் படைக்க இயலாது. மக்களின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டே இவரது படைப்புகள் அமையும். கலையழகு இவரது படைப்புகளில் மிளிராவிட்டாலும் கருத்து வளத்திற்கும், இலக்கிய செழுமைக்கும் இவரது படைப்புகளில் குறைவில்லை. அந்த வகையில் பெற்ற மனத்தில் இவர் கையாண்டுள்ள இலக்கியங்கள் குறித்து எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கம்.

அற இலக்கியங்கள்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அறக்கருத்துக்களைப் போதிக்கும் நூல்கள் பதினொன்று. சங்க காலத்தில் அகம் புறம் என்ற பிரிவில் இலக்கியங்கள் அமைந்தன. அம்முறையில் இருந்து முதன் முதலாக அறம், பொருள், இன்பம் என்ற முறையில் வாழும் முறையை உலகிற்கு எடுத்தியம்பிய பெருமை வள்ளுவருக்கே உரியது.

"மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற" குறள்

என்ற வள்ளுவரின் வாய்மொழியினை எளிய முறையில் மனதில் தூய்மை உடையவராக வாழ்தல் வேண்டும் என்று எடுத்துக் கூறுவது இனிதாகும்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்" - குறள்

என்னும் குறள்வழி தமக்கு துன்பம் செய்பவருக்கும் மீண்டும் துன்பம் செய்யாமல் நன்மையைச் செய்தல் வேண்டும் என்பதை உணர்த்துகிறார்.

நீருக்கு தனியே சுவையும் நிறமும் இல்லை. அது ஊறுகின்ற

மண்ணின் தன்மைக்கேற்ப நிறமும் சுவையும் பெறும். அதுபோல் மனிதர்களுக்கு அவரவர்கள் சார்ந்திருக்கின்ற இனத்திற்கேற்றபடி குணங்கள் மாறுபடும் என்பதை,

"நிலத்துஇயல்பால் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
இனத்து இயல்பதாகும் அறிவு" - குறள்

இக்குறளினை மையமாக வைத்து 'இனத்து இயல்பதாகும் அறிவு' என்று எடுத்துக்காட்டுகிறார்.

ஒருவன் பெற்றெடுத்த தாய் பசியால் துன்பப்படுகிறாள் என்றாலும் அவளின் அப்பசியினைப் போக்குவதற்குப் பெரியோர்கள் பழிக்கு ஆளாகக் கூடிய இழிவான செயல்களைச் செய்யக் கூடாது என்ற கருத்தினை,

"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுங் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை" குறள்

என்று வள்ளுவத்தின் வழி விளக்கியுள்ளது சிறப்பு.

தனிமனிதன் அறிந்த பழமொழியைக் கொண்டே பாடம் புகட்டும் உத்தி முறையில்,

''உணற்(கு) இனிய இன்னீர் பிறி(து) உரிஇல் என்று
கிணற்(று) அகத்துத் தேரைபோல் ஆகார் - கணக்கினை
முற்ற பகலும் முனியா(து) இனிதோதிக்
கற்றலின் கெட்டலெ நன்று- பழமொழி நானூறு

என்ற இப்பாடலின் வழி நூலாசிரியர் கிணற்றுத் தவளையாக வாழும் இவ்வியல்பினை விடுத்தால் சமுதாயத்தில் சிறந்து வாழலாம் என்பதை உணர்த்துகிறார்.

பக்தி இலக்கியம்

தம்முள் வேறுபட்ட சமயங்களெல்லாம் ஒன்றுபட்டு வளர்த்த பெருமை உயர் தமிழுக்கே உரியது. எனவே தான் சமயந்தோறும் நின்ற தையல் என்ற தமிழைச் சிறப்பித்து சொல்வதுண்டு. தமிழ் பக்தியின் மொழியாகும். இத்தகைய இறைபக்தியினைச் சமயங்கள் பரப்பின. அந்த வகையில் சமயச் சான்றோர்களின் வழிகாட்டுதலில் நடப்பதே நம் கடமை.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை" (தேவாரம்)

இறைவழி நின்றால் என்றுமே துன்பம் இல்லை என்று அப்பர் சுவாமிகள் வுறுகிறார். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற தாரக மந்திரத்தை

ஒவ்வொரு நாளும் தம் வாழ்வில் பின்பற்றி வாழ்ந்தவர்கள் திருநாவுக்கரசர், விவேகானந்தர், காந்தியடிகள். இவர்களைப் போல அன்பை வளர்த்து தொண்டு செய்தல் வேண்டும். இறைவன் எங்கும் எல்லாரிடத்தும் எல்லா ஏழைகளிடத்தும் இருப்பதாக நம்பிக்கை கொண்டு இயன்ற உதவியினை மனிதர்களுக்குச் செய்தால் நன்மை அடையலாம்.

"படமாடும் கோயிற் பரமற்கொன்றீயில்
நடமாடும் கோயில் நம்பர்க்க.:தாகா
நடமாடும் கோயில் நம்பர்கொன்றீயில்
படமாடும் கோயில் பரமற்க.:தாமே" - திருமந்திரம்

இப்பாடலின் வழி திருமூலர் மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று கூறுவது சிறப்பு.

புறத்தில் ஒன்றுமாக அகத்தில் ஒன்றுமாக நினைத்து மனிதர்கள் வாழும் வாழ்வானது தீமையைத் தரும். அத்தகைய வாழ்வினை மனிதர்கள் நீக்குதல் வேண்டும்.

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவார்
உறவுகலவாமை வேண்டும் - தெய்வமணிமாலை

வள்ளலார் சுவாமிகள் வழி தனது படைப்பில் நல்நெறி முறையினை வாழ்வில் கடைபிடிக்க வேண்டும் என்றும், மனித வாழ்க்கையின் உயர்வினை உலகிற்குக் காட்டுவது சிறப்பு.

காப்பிய இலக்கியங்கள்

இலக்கியத்திற்கு இலக்கணம் இயம்புவோர் 'அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே' என்பர். இவ்விலக்கணம் முழுமையும் அமையப்பெற்ற இலக்கியங்கள் 'பேரிலக்கியம்' எனப்படும் கவிதை இலக்கியங்களுள் பேரிலக்கியமாகத் திகழ்வது காப்பியமாகும். அதனைப் பெரிதும் வளர்ச்சியுற்ற கலை வடிவம் எனலாம். இத்தகைய கலை வடிவத்தில் இடம் பெறுபவை சிலம்பும், மேகலையும் ஆகும். தனக்கு ஒரு தீமையினைத் தலைவன் செய்தால் அதற்குப் பிறிதோர் தீமையினை தலைவி செய்யாதிருத்தல் அறம். இத்தகைய உயர்வான வாழ்வின் கருவூலத்தை எடுத்தியம்புவது கண்ணகியின் வாழ்வு. மணிமேகலை வாழ்வை மையமாக வைத்து மேலும் சிலவற்றை ஒப்பு நோக்குகிறார்.

"மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே"
அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவா திதுகேள் மண்ணுயிர்க் கெல்லாம்

உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டதில்"
- மணிமேகலை

என்று மணிமேகலை காப்பியம் பசிப்பிணித் தீர்த்தலே அறம் என்பதை வலியுறுத்துகிறது. மணிமேகலை வழியில் அறச்செயலினைச் செயலாற்ற வேண்டும் என்று தமது படைப்பில் நூலாசிரியர் கூறுகிறார்.

இக்கால இலக்கியம்

இலக்கியம் ஒரே நிலையில் இருப்பதன்று. வளர்ச்சி அடையும் தன்மை உடையது. உயிரோடு வாழும் மனிதர்களையும் அவர்தம் செயல்களையும் குறிப்பது. சமுதாயம், அரசியல், சமயம், பொருளாதாரம் ஆகியவற்றின் நிலைகள் காலந்தோறும் மாறிக்கொண்டு வருகின்றன. இத்தகைய மாற்றத்திற்கு உட்பட்டு மாறி வருபவை 20 ம் நூற்றாண்டு இலக்கியங்கள். முண்டாசு கவிஞர் பாரதியாரின் வரிகளைத் தமது படைப்பில் ஆசிரியர் கையாண்டுள்ள திறம் போற்றுதற்குரியது.

"'வந்தே மாதரமென்போம் - எங்கள்
மாநிலத் தாயை வணங்குது மென்போம்
ஒன்றுபட் டாலுண்டு வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்" -பாரதியார்

மக்கள் இனம், மொழி, மதம் கடந்து ஒற்றுமையோடு வாழவேண்டும். அத்தகைய வாழ்வால் என்றுமே உன்னத நிலையினை அடையலாம். உழவுத் தொழிலின் உயர்வினை உணர்த்தும் விதமாக பல்வேறு இடங்களில்,

"'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட் டோமென்று
உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம் - வெறும்
வீணருக் குழைத்துடலம் ஓயமாட்டோம்" -பாரதியார்

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று உழைக்கும் வர்க்கத்தின் மூலம் உழைப்பின் பயனையும், உழைப்பின் உயர்வையும் எடுத்தியம்புகிறார்.

திங்களோடும், செழும்பரிதி தன்டினாடும், மங்குல் கடல் உடுக்கள் இவற்றோடும் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய தமிழ்மொழி போல் இனிமையுடைய மொழி உலகில் இல்லை. இத்தைகய உயர்தமிழின் இனிமை மற்றும் மேன்மையினை,

''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்

இனிதாவ தெங்கும் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை டிகாரு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்" -பாரதியார்

என்ற பாட்டுக்கொரு புலவன் பாரதியின் உயர் கொள்கையின் மூலம் அருளப்பர் என்ற கதாபாத்திரத்தின் வாயிலாக மேலை நாடுகளிலும் தமிழ் பரவும் செயல் நோக்கத்தக்கது. ஒரு மொழி வாழ வேண்டுமானால் அந்த மொழியைப் பேசும் மக்கள் உலகத்தில் செல்வாக்கோடு உயர்ந்து நின்றால்தான் முடியும். தமிழர் வாழ்வு உயர்ந்தால்தான் தமிழ் சிறப்படைய முடியும். தன் இளமைப் பருவத்தில் திரு.வி.க. அவர்களோடு வாழ்ந்தவர் நூலாசிரியர். இவரது கவிதையின் மூலம்,

"வெங்கதிரும் தண்மதியும் வேலவநின் கோயில்
வேலைமலை காடுவயல் வெண்மணல்நின் கோயில்
பாங்கருவி ஓடைகளும் பூக்களும்நின் கோயில்
பொன்வண்டு பொலிபறவை ஆண்மான்நின் கோயில்
மங்கையரும் குழவிகளும் மகிழ் தரும் நின் கோயில்
மான்கலைகள் ஓவியங்கள் மறைகளும் நின் கோயில்
இங்கடியன் உளங்கோயில் கொள்ள இசை வாயோ
ஏழைமகன் உய்யஅருள் எழிலியற்கைத் தேவே -திரு.வி.க

மலையின் மாண்பினைப் பற்றி அவர் காட்டும் இயற்கை வனப்பு சிறப்பிக்கத்தக்கது. தன்னலம் கருதாமல் மற்றவர்களுக்குத் தொண்டு செய்வதையே தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவர் திரு.வி.க. "தொண்டே எனது வாழ்க்கை" என்று வாழ்ந்தவர்.

முடிவுரை

பல்வேறுபட்ட படைப்புகள் தமிழ் இலக்கியத்தில் தோன்றினாலும், தனக்கென்று தனி இடத்தைத் தமிழ்நெடும் பரப்பில் என்றுமே பிடித்துள்ள இலக்கியம் 'புதினம்' ஆகும். புதினத்தில் கதைக்கோப்பும் பாத்திரங்களும் ஒன்றுபட்டவை. பாத்திரங்களின் செயல்களாலும், உரையாடல்களாலும் கதை இயங்கி வளர்ச்சி அடையும். அப்பாத்திரங்கள் வாயிலாக பல்வேறு கால இலக்கியங்களை ஆசிரியர் கையாண்டு எளிய தமிழில் ஏற்ற இடத்தில் எடுத்தியம்புவது மிகவும் சிறப்பாகும்.

55. மு. வ. வும் கையறு நிலையும்

வி.மோகனராஜ்
உதவிப் பேராசிரியர்
சண்முகா தொழிற்சாலை
கலை அறிவியல் கல்லூரி
திருவண்ணாமலை.

முன்னுரை

கற்பனையுலகில் இன்ப துன்பங்களை விளையாட்டாகக் கொண்டு மகிழும் புலவர்கள் நனவுலகத்தில் மற்றவர்களைப் போல் இன்ப, துன்பங்களால் ஏக்கமும் வாட்டமும் உறுகின்றனர். ஆனாலும், மற்றவர் உறும் இன்ப, துன்பத்திற்கும் புலவர்கள் உறும் இன்ப, துன்பத்திற்கும் பெரிய வேறுபாடு உள்ளது. மற்றவர்களின் இன்ப துன்பங்கள் குளத்தின் அலை போல ஆனால் புலவர்களின் இன்ப, துன்பங்கள் கடலின் அலைகள் போன்றவை, கற்பனையுலகத்தில் இன்ப துன்பங்களுக்காக மனதைப்பறிகொடுத்து வாழ்ந்ததால் நெஞ்சம் விரிவுடையதாகவும், ஆழமுடையதாகவும் விளங்குகிறது. இவ்வாறு நெருங்கியவரின் பிரிவை தாங்கமுடியாது, ஆற்றாமையை வெளிப்படுத்திய நிலையை கையறுநிலை (அ) (Elegy) என்பர். இத்தகு கையறுநிலையை 'புலவர் கண்ணீர்' படைத்த மு.வ.வின் பார்வையில் காண்போம்.

புலவர்களின் கண்ணீரும், பிறருக்காக கலங்குதலும்

மற்றவரின் கண்ணீர் வெறும் மண்ணில் ஊரிப்போக, புலவர் கண்ணீர் நினைந்து நினைந்து உருகும் பெருந்துயரமாக மூண்டு நெஞ்சையெல்லாம் நைந்துருகச் செய்கிறது. புலவர்கள் அணுவை மலையாக்க வல்லவர். மலையை அணுவாக்க வல்லவர் சிறிய உணர்ச்சியைப் பெரிதாகக்காட்டும் பூதக் கண்ணாடியாகவும் விளங்குவர், பெரியதொரு பயனைச் சிறியதாக காட்டும் நிழற்படக் கருவியாகவும் விளங்குவர்.

'அணுவைத்துளைத்து ஏழ்கடலைப்புகட்டி குறுகத்தறித்தக் குறள்' என்பது போல புலவர்களின் கையறு நிலையை, ஒப்பாரியாகவும், சோக கீதமாகவும் மு.வ. நயம்பட கையாண்டுள்ளார். கையறு நிலை எவ்வாறு உச்சமடைகிறது என்றால், ஒரு சிறிய கொடியில் காய்த்த காய் பெரிதாக வளர்ந்தாலும் தாங்கும். ஆனால் அந்த கொடியின் மீது அதே எடை உள்ள கல்லை கட்டினால் உடனே அறுந்து விடுகிறதோ அதுபோல் துன்பமானது, பிரிவானது, இயற்கை, ஆனால், அது உடனே நிகழ்ந்த போது ஆற்றாது கையறுநிலையாக வெடிக்கிறது என்கிறார் டாக்டர் மு.வ.

கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும்

கோப்பெருந்சோழன் என்ற பெருமன்னன் புலவர் பலரால் பாடப்படும் சிறப்புப் பெற்றவன். பிசிராந்தையாரிடம் கோப்பெருந்சோழனின் சிறப்பைக் கேட்டபோது,

"என் தலைவன் யாரென்று வினவினால் வருந்தும் பாணர் சுற்றத்தின் பசிக்கெல்லாம் பகையாகி உறையூரிலே உள்ள சோழனே என்பேன்" என்றார் (புலவர் கண்ணீர் - பக்-99), அதே சோழனிடம் பிசிராந்தையார் பற்றி வினவிய போது,

"கேட்டல் அளவே அல்லாமல் ஒருவரை ஒருவர் காணாமல் ஆண்டுகள் பல கழிந்ததால், குற்றமறப் பழகிய நட்பு உடையவராயினும் அந்நட்பிற்கு ஏற்றவாறு நடத்தல் அரிது என்று நீங்கள் ஐயம் கொள்ள வேண்டாம் அறிஞரே! என் நண்பன் குறையற்றவன் இனியன்" (புலவர் கண்ணீர் 81) என்று மொழிகிறான். இதையே 'புலவர் கண்ணீர்' என்ற நூலில் மு.வ.சுட்டிக்காட்டி, அதன் மூலம், நட்பிற்கு இலக்கணமாகத் திகழ்ந்த இருவரின் மன உணர்வுகளை நேரிடையாக அனுபவித்த நிலையை அடைய முடிகிறது. பிசிராந்தையாரே நேராக நம்மிடம் உரையாடிய உணர்வு தோன்றுகிறது.

பெருஞ்சாத்தனும் கீரத்தனாரும்

ஒல்லையூர் கிழான் மகன் பெருந்சாத்தன் இறந்த போது கீரத்தனார் பாடிய கையறு நிலையை மு.வ. அவர்கள் காட்சிப்படுத்துகின்ற போது,

"முல்லைக் கொடியே இந்த ஒல்லையூர் நாட்டில் தலைவன் பெருஞ்சாத்தன் மாய்ந்த பிறகு உன் மலர்களை ஏவலாட்கள் சூடார், மகளிர் கொய்யார், நல்ல யாழின் கொம்பாலே வளைத்துப் பறித்துப்பாணனும் சூடான், பாடினியும் அணியாள், வீரர் பலரை வென்ற சாத்தன் மாய்ந்த பிறகு நீ ஏன் இவ்வாறு மலர்கிறாய்?" என்றார் முல்லைக் கொடியின் இயற்கை நிகழ்வைக் கீரத்தனார் தற்குறிப்பேற்றமாகப் பாட அதை மு.வ. குயிலிசையோ, குழலிசையோ மகிழ்ச்சியாக உள்ளபோது மகிழ்விக்கும், துயரத்தில் அதுவே கடுமை உடையனவாகத் தோன்றும் அது போலத்தான் கீரத்தனார் தலைவனைப் பிரிந்து வாடும் போது முல்லை மலர் மகிழ்ந்திருப்பது கண்டு பொறுக்க முடியாது கலங்குகின்றார் என சுட்டிக் காட்டுகிறார்.

கிள்ளி வளவனும் கோவூர் கிழாரும்

உறையூரில் ஆட்சி நடத்திய கிள்ளி வளவன் குளமுற்றம் என்ற இடத்தில் இறந்த காரணத்தால் சோழன் குளமுற்றத்து துஞ்சிய வளவன்

என்று குறிப்பிடப்படுகிறான்.

அவன் இறந்தபோது கோவூர் கிழார் பாடியதைக்குறிப்பிடும் மு.வ. சேரனோடு போர் செய்து பெருவெற்றி பெற்றவன் வளவன். நல்ல ஆழமான அகழி, அவற்றில் செருக்கோடு திரியும் முதலைகள், நள்ளிரவில் நகர்க்காவலர் விளக்கோடு சுற்றிவருதல், அந்த விளக்கொளியில் அவர்களின் நிழல் அகழிநீரில் விழுதல், முதலைகள் தம் இரை என்று எண்ணி அந்நிழலைப்பற்றுதல், செம்பால் இயற்றினாற்போன்ற மதில்கள். இவை அத்தனையும் பகைவனுக்கு இடம் கொடுக்குமாயின் அவற்றை அழிக்க வல்ல வீரன் என சித்தரிக்கின்றார்.

புலவரும் அவர்தம் ஆலோசனையும்

மேலும் வளவன் கருவூரை முற்றுகையிட்டுப் பகைவனுடைய கடிமரம் வெட்டி எறிந்த போது அவனுக்கு அஞ்சி வெளி வராமல் பகை வேந்தன் நெடு மதிலுக்குள் ஒளிந்திருந்த நிலையை ஆலந்தூர் கிழார், "இத்தகைய பகைவனோடு போர் செய்தல் நாணத்தக்க தாகும்" என்றார். மன்னனும் போரை வீரம் கருதி கைவிட்டான்.

மற்றொரு சமயம் மலையமான் திருமுடிக்காரி மீது கொண்ட பகையால் அவனுடைய மக்களை யானை மிதித்து கொல்லுமாறு ஆணையிட்ட போது கோவூர் கிழார் குறுக்கிட்டு அம்மக்களின் ஏதுமறியாத் தன்மையை சுட்டிக் காட்டி மன்னனின் சினத்தைத் தணித்தார்.

இப்படிப்பட்ட ஆலோசனையைப் பெற்று செங்கோலாட்சி நடத்திய வளவன் மாய்ந்த போது, இறுதிச் சடங்கு நடத்த தேவையான தாழியை ஒரு குயவன் செய்து கொண்டிருந்தான். அவனிடம் தன் ஆற்றாமையும்,துயரத்தையும் வெளிப்படுத்துகிறார். ஐயூர் முடவனார் என்னும் புலவர், எளிய மக்களாய் பிறந்து ஒரு சிறிய எல்லைக்குள் வாழ்ந்து மாண்டு மறையும் மற்றவர்களை மூடும் தாழிக்கும், பெரு வாழ்வு வாழ்ந்து உலகமெலாம் புகழ்பரப்பிய கிள்ளி வளவனை மூடும் தாழிக்கும் வேறுபாடு இருத்தல் வேண்டும் என்றார். ஆனால் அது கடினமான செயல் என்கிறார்.

"மட்கலம் செய்யும் வேட்கோவே உன் நிலை இரங்கத்தக்கது வானளாவ புகழ் பெற்ற கிள்ளி வளவன் தேவருலகம் அடைந்தானாகையால் அவனுடைய உடம்பை மூடும் தாழியைச் செய்ய விரும்பினால் உலகமே சக்கரமாக, பெரிய மலையையே மண்ணாகக் கொண்டு வனைந்தால் தான் முடியும், ஆகையால் அது உன்னால் சிறிதேனும் இயலுமோ?" என்கிறார்.

வளவனைப் பற்றி நப்பசலையார் கூறும் போது துணுக்குற்று. "எல்லாருடைய உயிரையும் வவ்வும் எமன் கிள்ளி வளவனுடைய உயிரை

எப்படித்தான் வவ்விச் சென்றானோ? பகைவரெல்லாம் நடுங்கும்படியாக வீரப்போர் பல செய்து வென்ற சோழ வேந்தனை எமன் எளிதில் அணுகியிருக்க முடியாதே! எத்தகைய வீரனும் அணுக முடியாத இந்த வீரத் தலைவனை எமன் நேரே அணுகியிருத்தலும் இயலாதே! மற்றவர்களிடம் எமன் செய்யும் முயற்சிகளை என் தலைவனிடம் செய்திருத்தல் இயலாது, இவனுடைய உயிரைத்தாக்க வந்திருந்தாலும், சினம் கொண்டு நெருங்கியிருந்தாலும் அந்த எமன் தப்பி பிழைத்திருக்க முடியாது. யாரும் அணுக முடியாத எம் வேந்தனைப் பரிசிலர் மட்டுமே அணுகி அவனுடைய அருளை பெறுவது வழக்கம். அதைக்கண்ட எமன் அந்த தந்திரத்தையே கையாண்டு இருக்க வேண்டும்" என்கிறார்.

"பாடுநர் போல கைதொழுது ஏத்தி
இரந்தன்று ஆகல் வேண்டும்."

என மன்னனின் பிரிவால் வருந்திப்பாடும் நப்பசலையாரின் கூற்றை படம் பிடித்துக் காட்டியுள்ளார் மு.வ.

முடிவுரை

இவ்வாறு சங்ககால மன்னர்களும் அவர்களை அணுகிவாழும் புலவர்களும் கொண்ட நெருக்கத்தையும், அவர்களின் பேரன்பினையும் மு.வரதாசரனார் அவர்கள் 'புலவர் கண்ணீர்' என்னும் தலைப்பில் தொகுத்து அனைவரையும் சங்க காலத்திற்கே அழைத்துச் சென்று, (ELEGY) கையறு நிலையை அனுபவிக்க வைத்து, ஒப்பாரி பாட வைக்கும், அளவிற்குத் துன்பச்சுவையையும். கலைச் சுவையாக பருக வைத்திருக்கிறார் டாக்டர் மு.வ. இவரின் நூற்றாண்டு விழா கலங்கரை விளக்கமாகத் திகழ, மு.வ. வின் படைப்புகளைப் போற்றிக் கற்போம்!, கற்பிப்போமாக!

56. மு. வரதராசனாரின் மொழிநூல்

வே.வளர்மதி
தமிழியல் முதலாமாண்டு
தூய நெஞ்சக்கல்லூரி
திருப்பத்தூர்

முன்னுரை

மு.வரதராசன் இவருடைய இயற்பெயர் திருவேங்கடம். தந்தை முனிசாமி, தாய் - அம்மாக்கண்ணம்மாள் இவர்களுக்கு 25.04.1912 ஆம் ஆண்டில் திருப்பத்தூரில் பிறந்தார். குடும்ப மரபு காரணமாக தாத்தாவின் பெயரையே வைத்து வரதராசன் என்று அழைத்தனர்.

தொழில்

1948 இல் சென்னை பல்கலைகத்தில் முதன்முதலாக தமிழில் டாக்டர் பட்டம் பெற்றார். அமெரிக்காவில் 1972- வில் இலக்கியப் பேரறிஞர்(பி.லிட்) சிறப்புப் பட்டம் பெற்றார். இவர் எழுத்தாளர், ஆசிரியர், துறைத்தலைவர், துணைவேந்தர் என்று பல இடங்களில் பணி செய்துள்ளார்.

மொழி

தமிழ் மொழியில் செந்தமிழ் கொடுந்தமிழ் என்ற இரு பாகுபாடுகள் உள்ளன. செந்தமிழ் புலவர்களால் இலக்கியத்திற்கு உரியதாக போற்றப்படுகின்றன. கொடுந்தமிழ் மக்களின் பேச்சு வழக்கில் காணப்பட்ட மொழி தமிழ் மொழியாகும்.

தமிழ் சொல்லின் திரிபு

தமிழ், திரமிட, திரவிட, தமிள, த்ரமிள என்பனவாகும். வரதராசன் அவர்கள் மொழி நூலில் பல தலைப்புகளின் கீழ் மொழியினுடைய நூலின் அமைப்புகளைப் பற்றி விளக்கியுள்ளார்.

அவை, ஒலிவகை, உயிரொலிகள், மெய்யெழுத்துக்கள், ஒலியளவு, ஒலியழுத்தம், ஒலியசைமுறை, சொல்லின் திரிபு, அடிச்சொற்கள், பெயர்ச்சொல், வேற்றுமை, மூவிடப்பெயர், எண்ணுப்பெயர்கள், வினைச்சொல், வினை வகை, சுட்டு, சொல்லும் பொருளும், சொற்றொடர் ஆகியனவாகும். இவற்றில் பெயர் சொல்லைப்பற்றி பார்ப்போம்.

பெயர்ச்சொல்

மொழியின் பகுதிகள்

ஒலி, ஒலிக்கூறி, பொருளிசை, சொல், சொற்பொருள், சொற்றொடர், சொற்பிறப்பு ஆகியன மொழியினுடைய பகுதிகளாகும்.

மொழி ஆராய்ச்சி

பேசுகின்ற மொழிகள் அனைத்தும் ஒலியால் ஆனவை. இருப்பினும் பொருளுடைய சொற்கள்தான் வாக்கியமாகி பின்பு மொழியாகின்றன.

சொல்லின் பொருள்

1. ஒரு சொல்லின் பொருள் இடத்தையும் காலத்தையும் ஒட்டியே வேறுபடும்.
2. ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால், உயர்திணை, அஃறிணை இடத்தை ஒட்டியும் வேறுபடும்.
3. இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் காலத்தை ஒட்டியும் வேறுபடும்.

பெயர்ச்சொல்

"பெயர் எனப்படுபவை தெரியுங் காலை
உயர்திணைக் குரிமையும் அஃறிணைக்குரிமையும்
ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்
அம்மு உருவின தோன்ற லாரே"

பெயர் சொல்லானது அஃறிணைப் பெயர், உயர்திணைப் பெயர், விரவுப்பெயர் என்று வரும்.

(உதாரணம்)

கண்ணன்	-	உயர்திணை
மாடு	-	அஃறிணை
வெள்ளை	-	விரவுப்பெயர்

திராவிட மொழிகளில் திணை, பால், எண், இடம், இவற்றை பெயர்ச் சொல் உணர்த்தும்.

திணை, பால்

திராவிட மொழிகளில் பொருள்களின் இயற்கைத் தன்மையைக் கொண்டே பால் வகுக்கப்படுகிறது.

திணை - உயர்திணை

ன்ஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல் (ஆண்பால்)
ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல் (பெண்பால்)

நன்னூல் கூறுவன

"மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை" பவணந்தியார்.

எண்

திராவிட மொழிகளில் ஒருமை, பன்மை என்று எண் இரண்டாகும். திணை பால் பாகுபாடு எண் பாகுபாடு என்று தனிப்பட்ட முறையில் இல்லை. திணைப்பால் பாகுபாட்டிலேயே எண்ணும் உள்ளன.

	திணை	பால்	எண்
1	உயர்திணை	ஆண்பால்	ஒருமை
	உயர்திணை	பலர்பால்	பன்மை
2	அஃறிணை	ஒன்றன்பால்	ஒருமை
	அஃறிணை	பலவின்பால்	பன்மை

உயர்திணையில் உள்ள பாகுபாட்டிற்கும் அஃறிணையில் உள்ள பாகுபாட்டிற்கும் வேறுபாடு உண்டு.

உணர்த்தும் முறை

இந்தோ ஐரோப்பிய மொழிகளில் சொற்களில் காணப்படுகின்ற ஒருமையும், பன்மையும் தெளிவாக இருக்கின்றன. தற்போது ஆங்கிலத்தில் காணப்படுகின்ற ஒருமை பன்மை பண்டைய இந்தோ ஐரோப்பிய மொழிகளில் இல்லை. பெரும்பாலும் ஒருமை பன்மை வேறுபாடு காணப்படுவதில்லை. முன் பின் வரும் சொற்களாலும், சொல்லப்படுகின்ற கருத்தின் வாயிலாகவும் ஒருமை பன்மை உணரப்படும்.

இந்நூலில் மொழியினுடைய பகுதி, ஆராய்ச்சி, வேறுபாடு, வாக்கிய அமைப்பு என்று பலவற்றைக் கூறியுள்ளார். பிற மொழிகளின் சொற்களையும் ஆராய்ந்துள்ளார். மொழிகளின் பால் திணை பால் பாகுபாட்டையும் எண் பாகுபாட்டையும் என்று சிலவற்றைப்பற்றி திராவிட மொழிகளில் கூறியுள்ளார்.

தன்னுடைய நூலில் அவர் கூறிய அனைத்தும் எளிய நடையில்

அனைவருக்கும் புரியும் வகையில் உள்ளன. படிப்பறிவற்றோர்க்கும் கூறினால் போதும் அவர்கள் புரிந்து கொள்வார்கள்.மேலும் நம்முடைய மொழிச் சொற்கள் பிற மொழிகளின் பாலும் கூறப்படுகின்றன.

தீர்வு:

மக்களுக்கு திணை, எண், பால் பாட்டை நன்கு விளக்கியுள்ளார். இவைகள் அனைத்தையும் இன்னும் பல செய்திகளையும் வரதராசனார் நூல்களின் வாயிலாக அறிந்து கொள்வது அனைவருக்கும் அவசியமாகும்.

57. மு. வ. வின் தம்பிக்குக் கடிதம் இலக்கிய வாயிலாக வெளிப்படும் நற்சிந்தனைகள்

மு. பிருந்தாவனம்
முதுகலை முதலாமாண்டு (தமிழ்த் துறை)
தூயநெஞ்ச கல்லூரி
திருப்பத்தூர்.

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஈடு இணையற்ற பெரும் எழுத்தாளராக விளங்கினார். உலகத் தமிழ்களின் உள்ளங்களைக் கவர்ந்த தமிழராக அவர் திகழ்ந்தார்.மு.வ,என்ற செல்லப் பெயர் ஒலிக்காத தமிழ் இல்லங்களும் நம் உள்ளங்களும் இல்லை எனலாம். அவரது கடித இலக்கியமாகிய தம்பிக்கு என்ற நூலினைக் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

அறிவுரை

நன்மை வன்மை இரண்டும் இருந்தால்தான் இந்த உலகில் வாழ்க்கை உண்டு. நல்ல தன்மை மட்டும் உடையவர்கள் எத்தனையோ பேர் கலங்கிக் கண்ணீர் வடித்து மாய்ந்திருக்கிறார்கள், மாய்ந்து வருகிறார்கள். வல்லமை மட்டும் பெற்றவர்களும் எதிர்பாராத வகையில் நசுக்குண்டு அழிகிறார்கள். குடும்பங்கள் முதல் நாடுகள் வரையில் இதற்கு சான்றுகள் இருக்கிறது. தமிழ் நாட்டில் இருந்த பழங்காலத்து நல்லரசுகள் கலங்கி அழிந்ததை வரலாறுகளில் காணவில்லை? ஜெர்மனி ஜப்பான் முதலான வல்லரசுகள் அழிவுற்றதைக் கண்கூடாகக் காணவில்லை?

ஒற்றுமை தமிழர்கள் நல்லவர்களாக மட்டும் இருந்து தனித்தனியாகவும் குடும்பம் குடும்பமாகவும் நாடு நாடாகவும் அழிந்தது போதும்.இனிமேல் வல்லவர்களாகவும் வாழக்கற்றுக் கொள்ள வேண்டும். நல்ல தன்மையோடு வல்லமையும் சேரப் பெற்று வாழ வேண்டும் என மு.வ. அவர்கள், தம்பிக்கு கடித இலக்கியத்தில் கூறிப்பிட்டுள்ளார்.

தம்பிக்கு கடித இலக்கிய வாயிலாக அறிவுரை வழங்கியுள்ளார் மு.வ.

திருக்குறள் ஓதாத திருமணம் தமிழ் நாட்டில் செல்லுபடி ஆகாது

தேவாரம், திருவாசகம், பிரபந்தம் முதலான தமிழ்மறை ஓதாத கோயில்கள் தமிழ் நாட்டில் திறந்திருக்கக் கூடாது. தமிழ் அனுப்பத்தெரியாத பட்டதாரிகள் தமிழ் நாட்டுக்கு அதிகாரிகளாக இருக்கக்கூடாது.

தமிழர்கள் ஏமாந்து போகக் கூடாது. கொள்கை எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் சொல்கின்றவர்கள் யார் என்ற ஆராய்ச்சியும் செய்ய வேண்டும்: யாழின் கொம்பு வளைவானது : அம்பு நேரானது . ஆனால், யாழை வெறுத்து அம்மைப்போற்றுவது அறியாமை அல்லவா? திருவள்ளுவர் தான் இந்த உண்மையைச் சொன்னவர்.

தமிழரின் கனவு

உலகம் ஒரு குடும்பமாய் அன்பாக வாழக் கற்றுக்கொள்ளும் வரையில் தமிழனுக்குத் தற்காப்பு உணர்ச்சி கட்டாயம் வேண்டும். தமிழரின் திருமணங்களில் திருக்குறள் ஓதுவது கனவு கடமை. அதிகாரிகள் தமிழில் எழுத வேண்டியதும் கனவு அல்ல.காந்தியடிகளின் கருத்துப்படி மொழிவாரி மாநிலம் கட்டாயமாக ஏற்படும் போது கவர்னர் தமிழில் கையெழுத்து இடுவதும் அல்ல இது எல்லாம் நடக்க வேண்டும். தமிழச் சமூகத்திற்கு மு.வ வின் அறிவுரைகள் மேற்கோள் பக்கம் 26.

பத்திரிக்கைகளும் கட்சிகளும் செய்யும் விளம்பரங்களும் பிரச்சாரங்களும் மலிந்துள்ள உலகம் இது. பெரும்பாலோர்க்கு சொந்தமாக கண் காது இல்லை. பத்திரிக்கைகளும் கட்சிகளும் காட்டுவதையே மெய்யென்று காண்கிறார்கள்.

அரசியல் தலைவர்கள் ஒருசிலர் ஏதோ காரணம் பற்றி தன்னல நோக்கத்தோடு சொல்லும் கருத்தையே இந்த படித்த மக்கள் இயந்திரங்கள் திரும்பித் திரும்பி சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்.

தாய் மொழிப் பற்று

வழிவழியாக வைதிகமாக இருந்த குடும்பத்தில் பண்டித நேரு இருபதாம் நூற்றாண்டில் புதுப்புதுப் பழக்க வழக்கங்களில் மூழ்கிவிடுகிறார். இவர் லண்டன் பாராளுமன்றத்தில் பேசும்போது முதலில் பத்து நிமிடம் தம் தாய் மொழியில் தான் பேசுவார். தாகூரையும் காந்தியடிகளையும் விட உலக ஒற்றுமையை நாடியவர்கள் உண்டோ. ஆனால் அவர்களைவிட தாய் மொழியில் பற்றுக் கொண்டவர்களும் இல்லை அல்லவா. இந்த அறிஞர்களைவிட்டு நீங்காத மொழிப்பற்று தமிழரை மட்டும் விட்டு நீங்க வேண்டும் என்று சொன்னால் தகுமா.

உலகியல் நடைமுறை

தேர்தல் காலங்களில் தமிழரைக் கண்டு மற்றவர்கள் சிரிக்கிறார்கள். ஓர் இடத்திற்கு பத்துப் பதினைந்து பேர் நின்று போட்டியிடுவார்கள். கடைசியில் தமிழரல்லாத ஒருவன் தன்னைச் சார்ந்தவர்களின் ஒட்டுகள் எல்லாவற்றையும் சிதறாமல் ஒரு சேரப் பெற்று இத்தனை தமிழரையும் தோற்கடித்து விடுவான்.

பிறர் தமிழ் நாட்டுக்கு வருதல்

பிறர் நாட்டில் இருந்து தமிழ் நாட்டிற்கு வருபவர்கள் பதவி பெயர் புகழ் அடைவதுண்டு. ஆதலால் தமிழ்நாட்டிற்கு வருவதைப் பலர் விரும்புகின்றனார்.

ஆற்றாமை

மூவாயிரம் ஆண்டுகளாகஇருந்துவருகின்ற தமிழ் மொழியை சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வந்த ஆங்கிலம் கொஞ்ச கொஞ்சமாக அழித்துக் கொண்டே இருக்கிறது.

தீர்வு:

தமிழ் நாடு உயர வேண்டும் என்றால் ஏழை என்றும் அடிமை என்றும் இல்லமால் இருக்க வேண்டும்.உழவு தொழில் மேம்பட வேண்டும். நம் நாட்டைப் போற்றுவதற்காக மற்றவருடைய நாட்டை பழிக்காதே.

நம் நாடு முன்னேற நம் நாட்டு மக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை வாங்க வேண்டும். அப்படி இருந்தால் தான் தாய் நாடு மற்றும் தமிழ் மொழி முன்னேற்றம் அடைய முடியும்.

சாதி சமய வேறுபாடுகளை மறக்கக் கற்றுக் கொள்.மறக்க முடியாவிட்டால் புறக்கணிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற செம்மொழியைப் போற்ற வேண்டும்.

வாழ்க தமிழ் வளர்க தமிழ்

58. மு. வரதராசனார் உணர்த்தும் நல்வாழ்வு நெறி

பேரா.மா.மரியதெரசம்மாள்
உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை
கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிரிர் கல்லூரி
திருச்செந்தூர்.

முன்னுரை

முனைவர்.மு.வரதராசனார் அவர்கள் பல்துறை அறிவு உடையவர்கள், நாவல், உரைநடை, ஆராய்ச்சிக் கட்டுரைகள் என பல துறைகளில் அவரது புலமையை வெளிப்படுத்தியுள்ளார். நாவல் துறையில் ஈடுஇணையற்ற புகழ்பெற்றவர். இவரது எழுத்துக்கள் மனத் தூய்மையையும், மொழித் தூய்மையையுமே வெளிப்படுத்துவன. இவர் மக்கள் வாழ்வாங்கு வாழ வகுத்து கொடுத்த நல்லநெறிகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தெய்வவழிபாடு

கடவுள் வழிபாட்டில் சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடாமல் கடவுள் நெறியைக் கடைபிடிப்பதில் முதன்மை தரல் வேண்டும்.

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில் புகும் அரசே"

என்று இராமலிங்க வள்ளலார் பாடிய பாடலை உணர்ந்து அன்பை வளர்த்து வழிபடவேண்டும். கடவுளின் அருளைக் கருத வேண்டும். ஆற்ற இருக்கின்ற கடமைகளுக்கு வழிகாட்டி அறிவும் ஆற்றலும் தருமாறு வேண்டி, இறை பாடல்களைப் பாடி அன்றாடம் இருமுறையாவது செய்து வந்தால் மனதிற்கு அமைதியும் ஆற்றலும் கிடைக்கும் என்கிறார். மு.வ.

நம்பிக்கை

மனிதன் தான் வாழும் வாழ்வில் நல்லது செய்தால் நன்மை கிடைக்கும். தீமை செய்தால் தீமை விளையும் என்பதை நம்ப வேண்டும். சமுதாயத்தில் தீமை செய்பவர்கள் பலர் வசதி படைத்தவர்களாகஇ உயர்ந்த அந்தஸ்து உடையவர்கள் போல காணப்படலாம் ஆனால் அவர்கள் விரைவில் அழிவது திண்ணம் என்று உணர வேண்டும். காட்டிலே மற்ற விலங்குகளைக் கொன்று தின்று வாழும் சிங்கம், புலி முதலிய விலங்குகள் செருக்கோடு அலைந்தாலும் பகலில் வெளிவருவதில்லை. பகல் பொழுதின் சுகத்தை அனுபவிப்பதில்லை. ஆனால் மான் முதலிய மற்ற விலங்குகளுக்கு தீமை செய்யாத விலங்குகள் பகலின் சுகத்தை அனுபவிக்கிறது. தீயவர்கள்

தலைநிமிர்ந்து திரிகிறார்கள். நல்லவர்கள் அஞ்சிவாழ்கிறார். இது மாற வேண்டும் அறநெறியில் நல்வழியில் பலருக்கு நம்பிக்கை ஏற்பட்டால் தான் இந்த இயல்பான நிலை ஏற்படும்.

உடம்பைப் போற்றல்

கடவுள் ஒவ்வொருவருக்கும் ஓர் உடம்பைத் தந்து உடம்புக்குள் நல்ல புலன்களைப் படைத்து மனத்தையும் படைத்திருக்கிறார். எனவே உண்ணும் உணவு, உழைக்கும் உழைப்பு, உறக்கம், இன்ப நுகர்வு முதலியவற்றில் அளவு வேண்டும். மனம் போனபடி உண்டு உறங்கி இன்பம் நுகர்தலும் உடம்பையும் உள்ளத்தையும் நோய்கள் வாட்டும் என்கிறார் மு.வரதனாசனார்இ இதனையே,

"இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்"

என்றார் திருவள்ளுவர் பெற்ற உடம்பை நெடுங்காலம் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் காப்பாற்ற வேண்டும் என்றும்,

"உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்.
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பினுள் உத்தமன் கோயில்கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே"

என்று உடம்பினைக் காப்பாற்ற வேண்டிய கடமைகளை திருமூலரும் வலியுறுத்துகிறார்.

எளிமை

கடவுள் நெறியில் ஆர்வம் உடையவர்கள் துறவறத்தை மேற்கொள்வார்கள். துறவிகள் மிகவும் எளிமையான வாழ்வு வாழ்கிறார்கள். துறவிகள் மட்டுமல்ல இல்லறத்தில் வாழ்பவர்கள் எளிமையாக வாழலாம். அதாவது தங்களுக்குள்ள செல்வத்தைப் பிறருக்குக் கொடுத்து ஆடம்பர செலவு செய்யாமல் சிக்கனமாக வாழ்ந்தால் அது எளிமையான வாழ்வாக அமையும். மகாத்மா என்று மக்களால் பாராட்டப்பட்ட காந்தியடிகள் எளிமையாக வாழ்ந்தார். எளிமையை அறமாக எண்ணினார். ஆடம்பர வாழ்வு பாவம் என்று கருதினார். எவ்வளவு உயர பறந்தாலும் வானம் எட்டாததாய் இருப்பது போல ஆடம்பரங்களில் இன்பம் எட்டாததாயே நிற்கும். ஆசைக்கு அளவில்லை என்கிறார் தாயுமானவர். ஆதலால் எளிமையே அமைதியான வாழ்வு தரக்கூடியது என்று மு.வரதனாசனார். கூறுகிறார்.

உரிமையும் கடமையும்

நாம் இந்தப் பெரிய உலகத்தில் ஒரு சிறு மூலையில் ஒரு

குடும்பத்தில் வாழ்கிறோம். நாம் உரிமை பெற்று வாழவேண்டுமானால் நமது கடமையை ஒழுங்காகச் செய்ய வேண்டும். கடமை செய்ய தவறுபவர்களுக்கு உரிமை கிடைக்காது.

உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போன்றவை. உரிமையை மட்டும் விரும்பி கடமையைப் புறக்கணித்தால் குழப்பம் தான் மிஞ்சும். குடும்பத்தில் பெற்றோர் பிள்ளைகள் தங்களது கடமைகளை ஒழுங்காக செய்தால் உரிமைகள் தானே வந்து சேரும். பாரதியார் பெண்ணுக்கு உரிமை வேண்டும். சுதந்திரம் வேண்டும் என்றால் அந்தப் பெண் தனது கடமையைப் பண்போடு செய்தாளானால் உரிமை பெற்று வாழலாம். எனவே உரிமை என்பது அடுத்தவரிடம் சென்று பெறுவதில்லை தன்னிடம் தான் தமக்குள்ளே உரிமை உள்ளது அது கடமையை ஒழுங்காகச் செய்யும் போது கிடைக்கும்.

புலனடக்கம்

புலனடக்கம் என்பது மனிதன் தனது ஐம்புலன்களான கண், காது, மூக்கு, வாய், மெய் ஆகியவற்றை தனது நிலையிலே அலைய விடாமல் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தேவையான தீமையற்ற சில இன்பங்களைத் தந்து புலன்களைத் தன் வசமாக ஆளுதல் ஆகும். புலன்கள் நமக்கு குற்றேவல் செய்ய வேண்டும். புலன்களுக்கு நாம் தலைமை தாங்கி ஆள வேண்டும். அதுதான் நல்வாழ்வுக்குத் தேவையானது.அகல் விளக்கு நாவலில் மு.வ ஒழுக்கத்திற்கு எடுத்துக்காட்டாக சந்திரன் என்னும் பாத்திரத்தைப் படைத்து சிறப்பித்துள்ளார்.

மனவலிமை

நாம் மனதைச் செம்மைப்படுத்தி நல்ல நெறியில் ஒழுக செய்வதே மனவலிமை ஆகும். மற்றவர்கள் கூறும் இழிசொற்களைப் பொறுத்துக் கொள்ளும் பொறுமையே சிறந்த மனவலிமை உடையது ஆகும். கோபம் கொள்ளாதிருக்க, பொய் சொல்லாதிருக்க மனதில் வலிமை வேண்டும். நல்ல செயல்களைச் சிறப்பாக செய்ய மனவலிமை வேண்டும். எனவே தீமைகள் நடக்காமலிருக்க நமது மனதை ஒருமைப்படுத்தி வைத்தலே சிறந்த மனவலிமையாகும். இதனைக் கடைபிடித்தால் மனிதன் சிறப்பாக வாழலாம் என்று மு.வ. கூறுகிறார்.

பண்பாடு

மனிதன் மனத்தைப் பண்படுத்தும் நல்லோருடன் சேர்ந்தும் நல்ல நூல்களைக் கற்றும் பண்பாட்டை வளர்க்க வேண்டும். சமுதாய மாறுதல்களால் மனம் இயந்திரமாக மாறி விடாமல் தனித்தன்மையை மனிதன் இழக்காமல் வாழ நம்பிக்கை கொண்டு மனதைப் பண்படுத்தி பண்பாட்டோடு வாழவேண்டும் அப்போதுதான் அவனது வாழ்வு சிறக்கும் என்கிறார் மு.வ.

பொதுமைஅறம்

வாழ்க்கையின் அடிப்படையாக அறமே. எல்லோரும் கடவுளின் மக்கள், கடவுளின் குடும்பத்தினர் என்று உணர்வது தான். அந்த பொதுமை அறம் சமுதாயத்தில் விளங்குமாறு செய்வதே நல்வாழ்வுக்குத் தேவை. அவ்வாறு செய்து சமுதாயம் திருந்துமாறு செய்து விட்டால் தனிமனிதரின் மனங்கள் உயர்ந்து விடும். பற்றும் ஆசையும் குறைந்து விடும். நல்வாழ்வு வாழ்தல் எளிதாகும். உலகம் கடவுளின் ஆட்சிக்கு உட்பட்டது என்றும், பிறந்த ஒவ்வொருவரும் தம்தம் கடமையைச் செய்து சமுதாயத்தில் தமக்கு உள்ள பங்கை நிறைவேற்ற வேண்டும் என்றும் தெளிவு பிறந்த நெஞ்சில் தவறான ஆசை வளர இடம் இல்லை. வீணான பற்று மிகுவதற்கும் இடம் இல்லை. பொய்மையானும், பொறாமையானும் ஒரு பயனும் இல்லை என்று அவை கைவிடப்படும். அந்த நல்லநிலை வந்தால் தன்மனிதர் நல் வாழ்வு வாழ்தல் எளிதாகும். தனி மனிதன் தம் நெஞ்சத்தில் இத்தகு பொதுமைப்பண்பை வளர்த்து கொண்டு நல்வாழ்வு வாழ முயலவேண்டும். உலகம் இப்படி இருக்கிறதே என்று வெறுத்துக் காட்டுக்கு ஓடும் துறவு தேவையில்லை. உலகம் இப்படி திருந்த வேண்டும் என்ற ஆசையை உள்ளத்தால் கொண்டு, நல் வாழ்வில் பற்றுக்கொண்டு வாழ்தல் வேண்டும்.

நீந்துக

வாழ்க்கையில் உள்ள இயற்கை விதி மனம் பரந்து உயர்ந்து நிற்பதே ஆகும். அதை உணர்ந்து வாழ இயலாமையால் பலர் குறுகி தாழ்ந்து துன்புறுகிறார்கள் நெறி தெளிந்து மனத்தை உயர்த்த வல்லவர்கள். பிறவிக்கடலை நீந்துவோராய் வாழ்ந்து அமைதியும் இன்பமும் காண்கிறார்கள். அவர்களின் வாழ்வே மற்றவர்கள் பின்பற்றத்தக்க நல்வாழ்வு ஆகும்.

முடிவுரை

இவ்வாறாக தமது படைப்பு வழி நல்வாழ்வு கருத்துக்களுக்கு முக்கியத்துவம் தந்து மக்கள் நன்முறையில் வாழ வழிகாட்டிய டாக்டர்.மு.வ. அவர்கள் வழி வாழ்ந்து வாழ்வோம்! சிறப்போம்!

59. மு. வ. படைப்பில் கிபி. 2000

த.குமுதவள்ளி
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
பெரம்பலூர்.

எழுத்தாளர் மு.வ தமிழில் இருவேறு நோக்கில் பாராட்டுதற்கு உரியவர். இலக்கியப் படைப்பாளர் நோக்கு ஒன்று, இலக்கியத் திறனாய்வர் நோக்கு மற்றது. இலக்கியத் திறனாய்வாளர் நோக்கில் அவர் எழுதியத் திறனாய்வுக் கொள்கை பற்றிய நூல்கள், இலக்கியம் தொடர்பான திறனாய்வு நூல்கள் என்பன அடங்கும். படைப்பிலக்கிய நோக்கில் பார்த்தால் அவர் இயற்றிய புதினங்கள், நாடகங்கள், சிறுவர் இலக்கியங்கள், கடித நூல்கள், கி.பி.2000 (சிந்தனைக்கதை) ஆகியன இடம்பெறும். மு.வ. எழுதிய கி.பி.2000 (சிந்தனைக் கதை) பற்றி இக்கட்டுரையில் நோக்குவோம்.

கி.பி. 2000 (சிந்தனைக்கதை)

மு.வ. எழுதிய நூல்களில் இது ஒரு தனிச்சிறப்புடையது. இங்கு மு.வ.வின் இன்றைய நினைவும் நாளைய கனவும் உள்ளன. சிந்தனையும், கற்பனையும் இணைந்து இந்த நூலை நடத்திச் செல்வதால் இதனைச் சிந்தனைக்கதை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

> *"இந்தக் கனவில் காண்பது ஒருவகை அரசியல், பொருளியல், சமூக அமைப்பின் உருவெளியே, சட்ட விளக்கங்களும் அல்ல, புள்ளி விவரங்களும் அல்ல, எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கை கொண்டு உணர்வதற்கும், தெளிவு கொண்டு எண்ணுவதற்கும் ஒரு தூண்டுகோளாகத் தொடங்கி விட்டால், படிப்படியாக உலகம் சீர்படுவது உறுதி. எண்ணமே வாழ்வு. எண்ணம் சீர்ப்பட்டால் உலகம் சீர்ப்படுவது உறுதி. ஒருவர் இருவர் எண்ணிப் பயன் இல்லை. மக்கள் பெரும்பாலோர் எண்ண வேண்டும். அவ்வாறு எண்ணும் நாள் என்று வருமோ, அன்றே புத்துலகம் பிறந்து விடும். அதுவே புத்துலகத்தின் திறவுகோல். அந்தத் திறவுகோலைத் தேட வேண்டுவது ஒவ்வொருவருக்கும் கடமையாகும். அந்தக் கடமையை நினைவூட்டுதலே இந்த நூலின் நோக்கம் ஆகும்" (மு.வ.முன்னுரை கி.பி. 2000 பக்.17)*

கி.பி 2000, 1947 இல் வெளியிடப் பெற்றது. ஆங்கிலத்தில் உடோபியன் நாவல் என்ற சிந்தனைப் புதினப் போக்குடையது. இது தனி மனிதர். ஆட்சித்தலைவன் என்றில்லாமல் 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்னும் பாரதி கண்ட கனவுக்கு ஏற்ப எல்லோருக்கும் ஆணுக்கும், பெண்ணுக்கும்

ஆட்சி நடத்த உரிமை, ஒத்த உயர்வு இந்தக் கனவு உலகில் உள்ளது. எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை. எல்லோரும் கூடி வாழ்கிறார்கள். கூடி உழைக்கிறார்கள். தேர்தல் பண்டைய குடவோலை முறையில் நிகழ்கிறது. முதியோர் ஓய்வு கொள்ளும் அமைதி இல்லம், குழந்தைகள் வாழும் பேரின்பம் என்னும் சோலை, உலகை நடத்தும் உலகப் பேரவை. இவை எல்லாம் இந்த கி.பி. 2000 கனவில் இடம்பெறுகின்றன." [2](மு.வ.(மு.வரதராசன்)பக்.68)

கனவுக்கு முன்னர்

கி.பி. 2000 சிந்தனைக் கதையில் மு.வ அவர்கள் கனவு காண்பதற்கு முன்னர் வறுமையில் வாடும் மனிதர்களைக்கண்டு அதனை மறக்க முடியாமல் கடினப்படுகிறார். பிறர் துன்பம் கண்டு வருந்துபவனே மனிதன் என்ற வரிகளுக்கு மு.வ. அவர்கள் வாழ்ந்திருக்கிறார். வறுமையைக் கண்டு

> *"வறுமையால் வாடி வதங்கும் வாழ்க்கைகளைக் கண்டால் உள்ளம் உருகுகின்றது, கண்ணீர் பெருகுகின்றது. உடல் குழைகின்றது' என்கிறார்." (கி.பி. 2000 பக். 202)*

மற்றவர்களின் துன்பத்தினைக் கண்டு உள்ளத்தால் மிகவும் வருந்துகின்றார் மு.வ.

தூண்டுகோல்

தூண்டுகோல் இத்தலைப்பின் மூலம் தான் ஏழ்மை நிலையில் இருந்தாலும் ஏழ்மையில் வருந்தும் தன் நண்பனுக்கு உதவும் மு.வ. உள்ளம் தெரிகிறது.

> *"நீ எனக்குக் கேட்காமல் அனுப்பிய முப்பது ரூபாய்க்காக மிகவும் நன்றி பாராட்டுகிறேன். நீயும் என்னைப்போல் ஏழை. உன்னிடமிருந்து உதவி பெறுவதற்கு எனக்குத் தகுதியில்லை" (கி.பி. 2000 பக்.35)*

என்று மு.வ.வின் நண்பர் அவருக்கு எழுதிய கடிதம் மூலம் மு.வ.வின் உள்ளம் புரிகிறது. தான் ஏழையாக இருந்தாலும் ஏழை நண்பனுக்கு உதவ வேண்டும் என்பதனை நாமும் வாழ்வில் கற்றுக் கொள்ள முடிகிறது.

புதிய உலகம்

மு.வ. கனவு காண ஆரம்பித்த பின் கனவு உலகம் அதாவது புதிய ஓர் உலகத்திற்கு செல்கிறார். அக்கனவில்

> *"உலகத்தில் மக்கள் எல்லோரும் வாழ வேண்டும். ஆதலால் எந்த வேற்றுமையும் மறந்து அன்பைப் பாராட்டுங்கள்"* [5]

(கி.பி.2000 பக் 47)

என்று குறிப்பிடுகின்றார். இதன்மூலம் மு.வ.வின் அன்பான உள்ளம் வெளிப்படுகின்றது.

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு"[5] (குறள் பண்புடைமை 994)

அன்போடு நல்லனவற்றையும், நேர்மையானவற்றையும் செய்து பிறர்க்காக வாழ்கின்ற பெரியோரின் சிறந்த பண்பை, அவர் தமக்கென வாழாத் தமைமையை உலகம் போற்றிக் கொண்டாடும் என்ற குறளுக்கு ஏற்ப மு.வ. வாழந்திருக்கின்றார். பிறர் நலன் கருதி உலகில் எல்லோரும் வாழ வேண்டும் என்கின்ற அவர் உள்ளம் அவர் படைப்பின் கனவு மூலம் நமக்கு புரிகின்றது.

மு.வ.வின் பெண்ணியம்

தாம் வாழ்ந்த சமுதாயத்தில் பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டதும், பெண்கள் அடக்கி ஆளப்பட்டதும் அவர்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாததனால் தன் படைப்பில் பெண்களுக்கு உரிமைகள் வழங்கி படைக்கப்பட்டிருப்பது காண முடிகிறது.

"பெண்கள் படித்தல் ஆகாது என்பது இயற்கை நோக்கமாயின், பெண் மக்கட்கு படிப்பு வருதல் கூடாது. பெண் மக்கள் , ஆண் மக்களைப் போலவே கல்வி பயின்று, தேர்தலில் வெற்றி பெறுவதையும் , பட்டம் பெறுவதையும், நூல்கள் எழுதுவதையும் மேடைகளில் பேசுவதையும், கல்லூரிகளிலும், மற்றக் கழகங்களிலும் தலைமை தாங்கி வினைகள் முடிப்பதையும், பிறவற்றையும் கண்ணாரக் காண்கிறோம்".

(பெண்ணின் பெருமை பக். 47)

இதுபோல மு.வ. தனது கனவில் பெண்களுக்கான உரிமை வழங்கிய சமுதாயத்தைக் காண்கிறார்.

"இந்தத் தேர்தலில் கண்ட இன்னொரு புதுமை என்னவென்றால், அந்த இருபது பேரில் பன்னிரெண்டு பேர் பெண்பாலார். தேர்தலிலும், மற்ற இடங்களில் போல, பெண் பாலார்க்கும் முழு உரிமை இருத்தலைக் கண்டேன்"[6] (கி.பி. 2000 பக்.90)

தொழிலாளர் கல்வி

உழைப்பவர்கள் வெறும் உழைப்பவர்களாக மட்டுமில்லாமல் கல்வி கற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்பது மு.வ. கண்ட தொழிலாளர் சமுதாயம் இதனையே பாரதியும் விரும்பியுள்ளார்.

"தொழிலாளிகளே கல்விப் பயிற்சி செய்யுங்கள் உங்களுக்கும், உங்கள் மக்களுக்கும் கல்வியறிவு மிகுவதற்குள்ள வழி செய்யுங்கள்" ⁹ (பாரதியார் கட்டுரைகள் பக் - 302)

இதுபோலவே மு.வ.தனது படைப்பில் தொழிலாளியைக் கல்வி கற்பவனாகப் படைத்திருக்கின்றார்.

"பதினைந்து வயதுக்கு மேல் குறைந்தது ஐந்து ஆண்டுகள் தொழிற்சாலையில் தொழிலாளியாக இருந்தால்தான் கல்லூரியில் சேர இடம் கிடைக்கும். அதிலும் தொழிற்சாலையில் திறமையாகத் தொழில் செய்திருந்தால்தான் கல்லூரி படிப்பு உண்டு"[10] (மு.வ. கி.பி.2000 பக்.80)

கல்வி முறையில் புதிய நோக்கு பார்த்து தன்னுடைய படைப்பில் வெளிக் கொணர்ந்துள்ளார் மு.வ.

இன்று கி.பி.2000 வந்துவிட்டது. ஆனால் மு.வ. கண்ட கனவு பலிக்கவில்லை. அவர் கூறியது போல மக்களுள் பலர் நம்பிக்கையும், தெளிவும் கொண்டு எண்ணத் தொடங்காததே அதன் காரணம் ஆகும்.

அடிக்குறிப்புகள்

1. மு.வரதராசன், கி.பி.2000, சென்னை 1947ப.17
2. பொன்.சௌரிராஜன், இந்திய இலக்கியச் சிற்பிகள் மு.வ.சென்னை.2001 ப. 68
3. மு.வரதராசன், கி.பி.2000 சென்னை 1947 ப-202
4. மு.வரதராசன், கி.பி.2000 சென்னை 1947.ப-35
5. மு.வரதராசன், கி.பி.2000 சென்னை 1947 ப.47
6. ஞா.மாணிக்கவாசகன், திருக்குறள், சென்னை 1991 கு.எண்.994
7. திரு.வி.க., பெண்ணின் பெருமை.சென்னை 2006.ப-47
8. மு.வரதராசன், கி.பி.2000 சென்னை 1947.ப-90
9. இராஜசேகரன், பாரதியார் கட்டுரைகள், சென்னை 2011ப-302
10. மு.வரதராசன், கி.பி.2000 சென்னை 1947.ப-80

60. மு. வ. சிறுகதைகளில் தொடரமைப்பு

முனைவர் ம.சரளாதேவி
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
தூய நெஞ்சக் கல்லூரி
திருப்பத்தூர்
வேலூர்-635601.

இன்றைய காலத்தில் கருத்துப் பரிமாற்றத்திற்கு மிகவும் முக்கியமான கருவியாகத் திகழ்வது மொழியாகும். மொழியை எளிமையான முறையில் கையாண்டால்தான் எந்த ஒரு செய்தியும் மக்களை விரைவில் சென்றடையும் என்பதை உணர்ந்த மு.வரதராசனார் தம்முடைய 85 படைப்புகளிலும் மிகவும் எளிமையான தொடர்களைப் பயன்படுத்தியுள்ளார். அவற்றில் மு.வ. வின் இரண்டு சிறுகதைத் தொகுதிகளான 'விடுதலையா?', 'குறட்டை ஒலி' ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ள தொடரமைப்பினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மு.வ.வின் மொழிப்பற்று

தமிழ் மொழியின் மீது பற்று கொண்டவர் என்பதை நிரூபிக்கும் வகையில் மொழிப்பற்று, நாட்டுப்பற்று, தமிழ்நெஞ்சம், மொழிநூல், மொழியின் கதை, மொழி வரலாறு, மொழியியற் கட்டுரைகள் போன்ற தமிழ்மொழி தொடர்புடைய பெயர்களைத் தம் நூல்களுக்குச் சூட்டியுள்ளார்.

> *"மு.வ. நெஞ்சில் தமிழ் நிலைத்த இடம் பெற்றிருந்தது. எனவே, அவர் நடையில் தமிழ்மொழிக்கு ஆக்கம் தேடும் முயற்சியும், தமிழ்ச் சமுதாயத்திற்கு ஊக்கம் தரும் முயற்சியும் இயைந்திருந்தன."(பொன். சௌரிராசன், மு.வ. புதினங்களில் தமிழ் -தமிழினம், ப.31)*

மு.வ. தமிழுக்குப் பல படைப்புகள் மட்டும் தரவில்லை. தமிழின் தன்மை கெடாத வகையில், பல நல்ல தமிழ்ப் படைப்பிலக்கியங்கள் தோன்றவும், படைப்பாளர்கள் தோன்றவும் மறைமுகமாகக் காரணமானவர் என்பது முற்றிலும் உண்மை.

மு.வரதராசனாரின் தொடரமைப்பு

மொழியின் மீது பற்று கொண்ட மு.வ. தன்னுடைய கருத்துகள் மக்களை நேரடியாகச் சென்றடைய வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, மக்கள் புரிந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் தொடர்களை அமைத்துள்ளார்.

தொடர் என்பது ஒரு முழுக்கருத்தைத் தெரிவிக்கும் சொற்களின் கூட்டமைப்பாகும். ஒரு தொடரில் இரு வேறுபட்ட கருத்துகள் இருத்தல் கூடாது. பொருள் மயக்கம் இன்றி, கருத்தைத் தெளிவாகக கூறுவதே தொடரின் சிறப்பாகும் என்பதைத் தொல்காப்பியர் (சொல்.11) தெளிவுபடுத்தியுள்ளார்.

"ஒவ்வொரு ஆசிரியருக்கும் மொழியைப் பயன்படுத்துவதில் சில மடக்குக் கூறுகள் உண்டு. குறிப்பிட்ட சொற்கள், தொடர் அமைப்புகள், ஒலிக்கோலங்கள் ஆகியவற்றை ஒவ்வொரு ஆசிரியரும் திரும்பத் திரும்பப் பயன்படுத்திக் கொண்டிருப்பது உண்மையாகும். இக்கூறுகள் அடிக்கடி அவருடைய படைப்பில் பயின்று வந்து கொண்டேயிருக்கும்.'' (ஜெ.நீதிவாணன், நடையியல், ப.47)

அந்த வகையில் மு.வ. எளிமையான சிறு தொடர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார். நீண்ட தொடர்களைக் கதையின் ஓட்டத்திற்கு ஏற்பப் பயன்படுத்தியுள்ளார். இதனால் ஓரளவு படித்தவர்களும் படித்துப் பயன்பெறும் தன்மையில் அவருடைய தொடர்கள் அமைந்துள்ளன என்பதை அறியலாம்.

"மு.வ. வின் நடையில் எளிமை உண்டு இனிமை உண்டு திண்மை உண்டு தெளிவு உண்டு சிந்தனைக் கோர்வை உண்டு இவற்றால் தமிழுக்கெனத் தனித்தன்மை உடைய அனைவருக்கும் விளங்கும் ஒரு நடையைத் தோற்றுவித்து வளர்த்த பெருமைக்கு அவர் உரியவராவர்." (பொன். சௌரிராசன், மு.வ. புதினங்களில் தமிழ்-தமிழினம், ப.29)

ஆழ்ந்த அறிவும், தமிழில் புலமையும் மிக்கவர் மு.வ. தான் கண்ட காட்சிகளையும், நிகழ்ச்சிகளையும் மையப்படுத்திப் புதிய சொற்களைக் கையாண்டுள்ளார். மக்கள் விரைந்து ஆர்வத்துடன் படிக்கக் கூடிய சிறுகதைகளில், மக்களைக் கவரும் தொடர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

சிறிய தொடர்கள்

சிறிய தொடர்கள் பெரும்பாலும் எழுவாய், பயனிலை என்ற அமைப்பிலோ அல்லது எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்ற அமைப்பிலோ அமைந்துள்ளன.

1. திருவேங்கடம் நடந்தான்.(விடுதலையா?, ப.19)
2. சிலர் பூசை செய்கிறார்கள்.(விடுதலையா?, ப.73)
3. பெரியவர் உள்ளே சென்றார்.(குறட்டை ஒலி, ப.20)

4. துணி தோய்க்க இறங்கினாள்.(குறட்டை ஒலி, ப.112)

ஒரு தொடரின் பொருள் அத்தொடரிலேயே முடிவடைவதற்குச் சிறிய தொடர்கள் பயன்படுகின்றன. மு.வ. தம் சிறுகதைகளில் சிறு சிறு தொடர்களை அதிகம் பயன்படுத்தியுள்ளதன் நோக்கம் படிக்கும் திறனைத் தூண்டுவதற்காகும்.

வினாத் தொடர்கள்

தாம் அறியாத ஒரு செய்தியை அறிந்து கொள்ளும் பொருட்டுக் கேட்பதற்கு உதவுவது வினாத்தொடராகும்.

> *"வினா-விடை உத்தி உரையாசிரியர்கள் காலம் தொன்று தொட்டு இருந்து வருகிறது. வினா-விடை உத்தியானது மக்களைச் சிந்திக்கத் தூண்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது." (வ.ஜெயா, பாரதி மொழி நடை, ப.228)*

தொல்காப்பியர் வினா எழுத்துகள் ஆ, ஏ, ஓ, எ, யா போன்றவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

1. நம்முடைய தேசத்திற்கு என்ன பெயர்? (விடுதலையா? ப.10)
2. அவனை எங்கே தேடுவது? (விடுதலையா? ப.65)
3. என்னிடம் பணம் ஏது? (விடுதலையா? ப.65)
4. இங்கே யார் உன்னை வரச் சொன்னது? (விடுதலையா? ப.76)
5. இந்த வயதில் உனக்கு இந்த வேலை ஏன் அப்பா? (விடுதலையா? ப.83)
6. தகப்பனார்க்கு எவ்வளவு அனுப்புகிறாய்? (குறட்டை ஒலி, ப.24)
7. எனக்கு இன்னும் ஆயுள் வளர வேண்டுமா? (குறட்டை ஒலி, ப.26)
8. தங்கை எப்படி இங்கே நாள் கழிக்கப் போகிறாள்? (குறட்டை ஒலி, ப.39)
9. தமிழ் நாட்டில் உங்கள் ஊர் எது? (குறட்டை ஒலி, ப.41)
10. இதுவும் உங்கள் காலம்தானே? (குறட்டை ஒலி, ப.57)
11. உன் பெண்டாட்டி பிள்ளைக்குத்தான் ரயிலில் நீண்ட பலகை போட்டிருக்கிறார்களோ? (குறட்டை ஒலி, ப.75)

என்ன?, எங்கே?, ஏது?, யார்?, ஏன்?, எவ்வளவு?, ஆ?, எப்படி?, எது?, ஏ?, ஓ?, போன்ற வினாவைக் குறிக்கும் வடிவங்களைத் தொடர்களில் பயன்படுத்தியுள்ளார்.

வினாக்களை எழுப்பி அதற்கு விடை கூறும் பொழுது சிறுகதைகளைப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுகின்ற வகையில் அமைகின்றன. அதனால் வினாத் தொடர்களை மு.வ. அதிகம் உருவாக்கியுள்ளார்.

அடுக்குத் தொடர்கள்

ஒரு சொல் இரண்டு, மூன்று முறை அடுக்கி வந்து வினைகளைச் சிறப்பித்து வராமல் விரைவு, அச்சம் முதலிய பல பொருள்களை உணர்த்தி, தனித்தனியாகப் பிரித்தாலும் பொருள் தரக்கூடியது அடுக்குத் தொடராகும்.

> *"விரைவு, மகிழ்ச்சி, அச்சம், சினம், துன்பம், அசைநிலை, இசைநிறை இவற்றை உணர்த்த ஒரு சொல்லே அடுக்கடுக்காகத் தொடர்ந்து வரும். அதனை அடுக்குத் தொடர் என்பர்."(கவி.யோகி சுத்தானந்த பாரதியார், நல்ல தமிழ் எழுதுவது எப்படி?, ப.199)*

1. இனிப்புப் பொட்டலம் வரும் வரும் என்று சிறுவர்கள் பலரும் காத்திருந்தார்கள்.(விடுதலையா?, ப.17)

2. நாழிகைக்கு ஒருமுறை இருமுறை அலைபோல் துயரக்குரல் பொங்கிப் பொங்கி எழுந்தது.(குறட்டை ஒலி, ப.29)

அடுக்குத் தொடர்கள் கருத்திற்கு அழுத்தத்தைக் கொடுப்பதுடன், சொற்களில் உயிரோட்டத்தையும் உண்டாக்கும் வகையில் அமைகின்றன.

உவமைத் தொடர்கள்

உவமைக்கும் பொருளுக்கும் இடையில் போல, போன்ற, அன்ன, ஒப்ப, உறழ, கடுப்ப போன்ற உருபுகள் வெளிப்பட்டு வருவது உவமைத் தொடராகும்.

1. அந்த ஊர் நகர மன்றத்தின் பழைய தலைவர் தேர்தலில் தோற்றுவிட்ட மறுநாள் மானம் காத்து மறைந்து வாழ்ந்தது போல் அன்று காலையில் அந்தப் பிரம்பு அவர்கையில் இருந்தது.(விடுதலையா?, ப.6)

2. திருமண வீட்டுக்குப் போவதும் தம் வீட்டுக்குத் திரும்புவதுமாக இங்கும் அங்குமாகவே குட்டி போட்ட நாய் போல் அலைவார்.(குறட்டை ஒலி, ப.51)

மு.வ. தம் சிறுகதைகளில் தேவையான இடங்களில் உவமையை எடுத்துக்காட்டியிருப்பது கதையின் புரிதிறனுக்கு மேலும் சிறப்பு சேர்க்கின்றது. அறக்கருத்துகளை எடுத்துரைக்கும் வகையிலும் உவமைகள் அமைந்து தொடர்களுக்கு இனிமை சேர்க்கின்றன.

வினையெச்சத் தொடர்கள்

மு.வ. வின் சிறுகதைகளில் பெயரெச்சத் தொடர்களைக் காட்டிலும், வினையெச்சத் தொடர்களே அதிகம் காணப்படுகின்றன.

மூன்று காலங்களையும் காட்டித் தன்னிலையில் கருத்து முற்றுப் பெறாமல், வினையைக் கொண்டு முடியும் வினைவடிவே வினையெச்சத் தொடராகும்.

1. எட்டாம் வகுப்பிலேயே இரண்டு முறை தவறி எப்படியோ ஒன்பதாவது வகுப்பிற்கு வந்து விட்டான்.(விடுதலையா?, ப.86)
2. ஏப்ப ஒலி வந்த அதே திசையிலிருந்து குறட்டை ஒலி வந்து கொண்டிருந்தது.(குறட்டை ஒலி, ப.98)

தொழிலையும் காலத்தையும் காட்டி, பால் காட்டாது வினை எஞ்ச நிற்பது வினையெச்சத் தொடராகும். இத்தகைய தொடர்கள் கருத்துகளைத் தொடர்ந்து சொல்லிக் கொண்டே செல்வதற்கு வழிவகுக்கும் என்பதனால் இத்தகைய தொடர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

மரபுத் தொடர்கள்

தமிழ் இலக்கியங்களில் மரபுத் தொடர்கள் அழிந்து வரும் இக்காலச் சூழலில் மரபுத் தொடர்களைப் பயன்படுத்தி அவற்றிற்குப் புத்தாக்கம் கொடுத்துள்ளார்.

1. கலெக்டர் ஆபீசின் எதிரே போய்ச் சேர்ந்ததும் ஒருத்தனும் வாலாட்டக் கூடாது.(விடுதலையா?, ப.12)
2. பெரியவர் உள்ளே சென்றார். நண்பன் அவருடைய பெற்றோரைப் பற்றியும் மூதாதையரைப் பற்றியும் அறிந்த கதைகளை எல்லாம் அளந்தான்.(குறட்டை ஒலி, ப.20)
3. எவ்வளவோ பாடுபட்டு யார்யாருக்கோ சொல்லி எவர் எவரையோ காக்கை பிடித்து, கொடுப்பதும் கொடுத்துத் திருப்பத்தூர் சப் கலெக்டர் ஆபீசிலிருந்து வேலையை மாற்றிக்கொண்டு சென்னை செக்ரடரியேட் ஆபீசுக்கு வந்து சேர்ந்தேன்.(குறட்டை ஒலி, ப.121)

பெரும்பாலும் மரபுத் தொடர்கள் சமுதாயம் சார்ந்தவையாகவோ, உடல் உறுப்புகள் சார்ந்தவையாகவோ, அஃறிணை உயிர்கள் சார்ந்தவையாகவோ அமைகின்றன. மரபுத் தொடர்கள் ஒருவரின் செயல்பாட்டினை மறைமுகமாக வெளிப்படுத்தும் வகையில் உருவாக்கப்படுகின்றன.

ஆங்கிலத் தொடர்கள்

மு.வ. வின் சிறுகதைகளில் ஆங்கிலச் சொற்களைக் கொண்ட தொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆங்கிலச் சொற்கள் கற்றறியாதவர்களும் பயன்படுத்தும் சொற்களாக உள்ளன. கதைத் தன்மைக்கு ஏற்ப ஆங்கிலம் பயன்படுத்தியுள்ளார். ஆங்கிலச் சொற்களை ஒரு சில இடங்களில் தமிழ்ப்படுத்தியும் எழுத முயன்றுள்ளார்.

1. ஒருநாள் வேலனிடத்தில் பத்து ரூபாய் நோட்டு ஐந்து பார்த்தோம் யாரோ சட்டைப்பையில் **பணப்பை(மணிபர்ஸ்)** வைத்துக்கொண்டு போனதாகவும், அதை அந்த ஐந்தாறு பேரில் ஒருவன் கத்தரித்து இன்னொருவன்கையில் கொடுத்ததாகவும், அது அப்படியே கை மாறி மாடர்ன் கபேயிலிருந்து **சென்ட்ரல் ஸ்டேஷன்** வரையில் வந்ததாகவும், அது வேலன் கைக்கு வந்தபோது, அதிலிருந்து ஐந்து நோட்டு எடுத்து வைத்துக்கொண்டதாகவும் சொன்னான்.(விடுதலையா?, ப.62)

2. நாகரிக மாதர் வீட்டை விட்டு வெளியே செல்லும் போது, பணமும் **முகப்பூச்சு** முதலியவைகளும் **கைக்குட்டையும்** வைத்து எடுத்துச் செல்லும் நாகரிகப்பை அவர்களுடைய கையில் இல்லை.(குறட்டை ஒலி, ப.64)

அதிக அளவு ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தும்போக்கு நிலவிவருகின்றது. இதனை வெளிப்படுத்தும் வகையில் மு.வ. தம் தொடர்களில் ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். மக்கள் பயன்படுத்தும் மொழியில் கருத்துகளைச் சொன்னால்தான் ஏற்றுக்கொள்வர் என்பதன் அடிப்படையில் இத்தொடர்கள் இடம்பெற்றுள்ளன.

மு.வ. தம்முடைய சிறுகதைகளில் பெரும்பாலும் ஒரே மாதிரியானத் தொடர்களைப் பயன்படுத்தாமல் சிறிய தொடர், வினாத் தொடர், அடுக்குத் தொடர், உவமைத் தொடர், வினையெச்சத் தொடர், மரபுத் தொடர், ஆங்கிலத் தொடர் போன்ற வெவ்வேறான தொடர்களைப் பயன்படுத்தியுள்ளதன் நோக்கம் கதைகளைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுவதற்கும், தொடர்ந்து படித்து முடிக்க வேண்டும் என்ற உள்ளுணர்வினை உண்டாக்குவதற்குமாகும். இதனால் மு.வ. வின் சிறுகதைகள் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மை.

61. மு. வரதராசனின் மொழியியல் பார்வையில் கள் விகுதிகள்

மு. வைகுண்டசெல்வி
முனைவர் பட்ட ஆய்வாளர்
தெ.தி. இந்துகல்லூரி
நாகர்கோவில்.

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும், தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தமிழ்ப்பேராசிரியர் டாக்டர் மு.வரதராசனார் அவர்களின் சீரியதமிழ்த் தொண்டு முதன்மையான இடம் பெற்று திகழ்கிறது. மு.வரதராசனின் 'மொழியியற்கட்டுரைகள்' என்னும் கட்டுரை நூலில் கள் விகுதிகளின் இடமும், பகுத்தறிவு படைத்தவர்களாகிய மக்கள் பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் 'கள்' விகுதிகளை எவ்வாறு பயன்படுத்தி வருகின்றனர் என்றும் சங்க காலப் புலவர்கள் மற்றும் இலக்கண ஆசிரியர்கள் எவ்வாறு பயன்படுத்தினர் என்பதையும் இக்கட்டுரையில் ஆராயலாம்.

திணைப் பாகுப்பாடும் கள் வகுதியும்

பழங்காலத்தில் கள் விகுதியைப் பயன்படுத்தும் முறைக்கு ஒரு வரையறை இருந்தது. ஆனால் இக்காலத்தில் அந்த வரையறை இல்லாமல் போய்விட்டது என்பது மு.வ.அவர்களின் கருத்தாகும்.

உயர்திணைக்கு கள் விகுதி ஆகாது என்றும், அது அ∴றிணைக்கே உரியது என்றும், அ∴றிணையிலும் சில இடங்களிலேயே உள்ளது என்றும் தொல்காப்பியனார் இலக்கணம் வகுத்திருக்கிறார். இக்காலத்திலோ அ∴றிணை, உயர்திணை என்ற வேறுபாடு இல்லாமல் கள் இடம்பெற்று விட்டது.அ∴றிணையை விட உயர்திணையிலேயே கள் விகுதி மிகுதியாக பயன்படுவது போல் தோன்றுகிறது என மு.வ அவர்கள் கூறியுள்ளார்.

"கள்ளொடு சிவனும் அவ்வியந் பெயரே
கொள்வழி உடைய பலவறி சொற்கே" *(தொல். சொல்.169)*

என்பது தொல்காப்பியம் இதனால் உயர்திணையில் கள் இடம் பெறாது என்றும், அ∴றிணையிலும் சில இடங்களிலே அது உள்ளது என்றும் தொல்காப்பியனார் கூறியது தெளிவாகிறது.

தொல்காப்பியத்திலே மக்கள் என்னும் சொல் உள்ளது. உயர்திணை விளக்கும் இடத்திலே அச்சொல் அமைந்துள்ளது.

உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே (தொல். சொல்.1)

மக்கள் என்று கூறியதோடு அல்லாமல், சுட்டிக் கூறும்போது அவர் என்ற உயர்திணைப் பலர்பாற் சொல்லாலேயே சுட்டியுள்ளார். ஆகவே அவர் என்பதற்கு ஈடான உயர்திணைச் சொல்லாக மக்கள் வழங்கியது தெளிவாகிறது.

உயர்திணையை அஃறிணையாக வழங்கல்

மனிதர்க்கு உரிய பகுத்தறிவு இல்லாத உயிர்களும், உயிரில்லாப் பொருள்களும் அஃறிணை என்பது இலக்கணம். பகுத்தறிவே மனிதரின் சிறப்பியல்பாகச் சுட்டப்படுவது, குழந்தைகள் போதிய பகுத்தறிவு வளர்ச்சி பெறாத நிலையில் இருத்தலால் , அஃறிணையாகக் கருத இடம் உண்டு. இன்றும் குழந்தைகள் தூங்குகின்றன என்றும் குழந்தை தூங்குகின்றது என்றும் எழுத்திலும் பேச்சிலும் குழந்தையை அஃறிணையாக வழங்குதலை மு.வரதராசனார் கூறியுள்ளார்.

திங்கள் என்னும் சொல், இன்று பேச்சுமொழியில் அப்பொருளை அவ்வளவாக உணர்த்தாமல் கிழமையை உணர்த்த பயன்படுகிறது. அதுபோல் அஃறிணையாகிய குழந்தைகளை உணர்த்த ஏற்பட்ட மக்கள் என்னும் சொல் காலப்போக்கில் உயர்திணையாகிய மனிதரை உணர்த்துவதாயிற்று.

தொல்காப்பியர் கூறும் விகுதிகள்

தொல்காப்பியனார் காலத்தில் அதற்குச் சிறிது முற்பட்ட காலத்தில் வளர்ந்த மனிதரைக் குறிக்க ஒரு சொல் தேவையாயிற்று. உயர்திணை ஆண்பாலுக்குச் சொல் அமைத்த போது ஆண்பால் விகுதியாகிய ஆன் சேர்த்து மக+அன்+மகன் என்று ஆக்கினர். உயர்திணைச் சொல் அமைத்த போது பெண்பால் விகுதியாகிய அள் சேர்த்து மக ͅஅள் ͅமகள் என்று ஆக்கினர். உயர்திணை ஆண்பாலுக்கு மகன் என்பது பெண்பாலுக்கு மகள் என்பதும் கொள்ளப்பட்டதுபோல பலர்பாலுக்கு மகார் என்பதே கொள்ளப்பட்டிருக்க வேண்டும். அதுதான் ஒழுங்கான முறை என்பது மு.வ- வின் கருத்தாகும் பின்னர் மகார் என்பதை விட்டு மக்கள் என்பதையே பயன்படுத்துகின்றனர்.

'கள் விகுதி அஃறிணைக்கு உரிய' என்ற விதி எழுதிய கையாலேயே உயர்திணைக்கு உரியதாக மக்கள் என்னும் சொல்லை எடுத்தாள நேர்ந்தது.

உழவரும், புலவருமே மொழியின் வாழ்விலும் வளர்ச்சியிலும்

செல்வாக்கு உள்ளவர்கள் என்பது மொழியியல் அறிஞர்களின் கருத்தாகும். உழவரே நாட்டு மக்களுள் பெரும்பாலோர் ஆவர். ஆதலின் மக்கள் என்ற சொல் உயர்திணையில் இடம் பெற்றது அவர்களாலேயே எனலாம். இது போல புலவர்கள் செய்யும் தவறுகளும் வேரூன்றி வாழ்வு பெறுகின்றன என்பது மு.வரதராசரின் கருத்தாகும்..

புலவர் பெயரில் விகுதிகள்

நக்கீரனார், மாமூலனார், நல்லந்துவனார், அம்மூவனார், மாங்குடி மருதனார், மருதனிளநாகனார் முதலான புலவர்களின் பெயர்களில் அன் விகுதியும் உள்ளது. அதன் மேல் ஆர் விகுதியும் சேர்ந்தது. நக்கீரன், மாமூலன், நல்லாந்துவன் முதலிய பெயர்களே இயல்பானவை. ஆண்பால் விகுதியாகிய அன் இவற்றில் இலக்கணப்படி அமைந்துள்ளது. அதன் மேல் பலர்பால் விகுதியாகிய ஆர் சேர்ந்தது செய்முறை. புலவர்களை மற்றவர்களைப் போல் கருதாமல் வேறுபடுத்திச் சிறப்பிக்க ஆண்பால் விகுதியுடன் பலர்பால் விகுதியைச் சேர்த்துள்ளனர் என்று மு.வ தனது மொழியியற்கட்டுரைகளில் கூறியுள்ளார்.

புலவர்களை வேந்தர்களுக்கு ஆசிரியராக இருந்து கற்பித்து வந்தமையால், வேந்தர்களும் புலவர்களை அவ்வாறே ஆர் விகுதி சேர்த்து உயர்த்து கூறலாயினர். அச்சிறப்பு வேந்தர்க்கு அமையவில்லை. பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடி மருததனார் பாடியது, அவனை அவர் பாடியது என்று வேந்தன் அன் விகுதியோடு நிற்க, புலவர் ஆர் விகுதியும் பெற்று உயர்ந்தார்.

பெண்பாற் புலவர்களின் பெயருடனும் இவ்வாறே ஆர் விகுதி சேர்க்கலாயினர். அவ்வையார் வெள்ளிவீதியார், ஆதி மந்தியார், காக்கை பாடினியார் முதலிய வழக்குகள் பெண்பால் உணர்த்தும் இகர விகுதியோடு பலர்பால் உணர்த்தும் ஆர் விகுதி சேர்ந்து அமைவதும் வழக்கமாயிற்று.

தனியே குறிக்கும் போது இவ்வழக்குகள் இடம்பெற்றனவே தவிர, செந்தமிழ் மொழியில் செய்யுள் இயற்றும் போது, செந்தமிழ் இலக்கணம் வழுவாமல் பழைய முறைபடியே ஆர் விகுதி இன்றியே பெயர்களைக் குறித்தனர்.

"மாங்குடி மருதன் தலைவனாக (புறம் -72)
பரணன் பாடினன் மற்கொல் (புறம் -99)
விளங்குபுகழ் கபிலன் (புறம்-53)"

என்ற பழங்காலச் செய்யுட்களில் உள்ளன. செய்யுள் வழக்கு எளிதில் மாறாததாகும்.

உரையாசிரியர் பெயரில் விகுதிகள்

உரையாசிரியர்களும், செந்ததமிழ்ச் செய்யுள் போல் மாறுதலுக்கு எளிதில் இடம் தராதவர்கள் சேனாவரையனார், அடியார்க்கு நல்லனார், நச்சினார்கினியனார், பரிமேலழகனார் என்று அவர்களின் பெயர்களில் அன் விகுதியுடன் ஆர் விகுதி சேர்க்கும் வழக்கம் இடம்பெறவில்லை. இளம்பூரணர், சேனாவரையர், அடியார்க்கு நல்லார் என்று அன் விகுதியை நீக்கி ஆர் மற்றும் அர் விகுதியை வழங்கினர்.

உயர்வு கருதி தோன்றும் கள் விகுதிகள்

புலவரின் உயர்வை குறிப்பதற்குத் தொடங்கிய கள் விகுதிகள் படிப்படியாக வேந்தர், அமைச்சர் முதலானவர்களின் உயர்வு குறிக்க வளர்ந்து வேந்தர்கள் மன்னர்கள், அமைச்சர்கள் என மாற்றம் பெற்றன என்றும் பொருள், இடம், குணம், தொழில் முதலியவைகளால் அமைந்த நாட்டார்கள், நல்லவர்கள், வேடர்கள் முதலிய சொற்களிலும் உயர்வு கருதி கள் விகுதி தோன்றிற்று என மு.வரதராசனார் கூறியுள்ளார்.

முடிவுரை

அ∴றிணைப் பெயர்ச் சொற்களில் ஒதுக்கிடம் பெற்றும், ஒரு வகைச் சிறப்பும் இல்லாமல் இருந்த கள் விகுதி, பலவகைப் பெயர் சொற்களிலும், முறைப் பெயர்களிலும், மூவிடப் பெயர்களிலும் இடம் பெற்று ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்பது போல் இருக்க இடம் செல்வாக்குப் பெற்று பெருவாழ்வு வாழ்கின்றது என்பதை மொழியியற்கட்டுரைகள் என்னும் நூலில் மு.வரதராசனார் தெளிவாகக் கூறியுள்ளார்.

௬௨. மு. வரதராசனாரின் பார்வையில் பெண்களின் நிலையும் பழக்க வழக்கங்களும்

அ. மேரி ஸ்டெல்லா ராணி
முனைவர் பட்ட ஆய்வாளர்
தெ.தி. இந்து கல்லூரி
நாகர்கோவில்

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும், தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர். மு.வரதராசனார் அவர்களின் தமிழ்த் தொண்டு சிறப்பான இடத்தை பெறுவதாகும். அவர் பல படைப்புகளைப் படைத்து, மக்கள் சமுதாயத்தில் எவ்வாறு வாழவேண்டும் என்ற உயரியக் கருத்தினை படைத்தது பெருமைக்குரிய ஒன்றாகும். அவர் எழுதியக் கட்டுரைகளில் 'பெண்மை வாழ்க' என்ற கட்டுரையில் பெண்களின் நிலையையும், பழங்கால மக்களின் பழக்கவழக்கங்களையும் அயல்நாடுகளில் வாழும் மக்களின் வழக்கவழக்கங்களையும் தெள்ளதளிவாக நமக்கு எடுத்துக் காட்டியுள்ளார் அவற்றைப் பற்றி இக்கட்டுரையில் பார்ப்போம்.

பெண்மை

பெண்மையின் நிலையினைப் பற்றி பல கவிஞர்கள் எழுதியுள்ளனர். குறிப்பாக பாரதியார் பெண்மை வாழ்க என்று கூறினார். பெண்மை வாழ்ந்தால் தான் அன்பு, அறம், ஆண்மை எல்லாம் வாழ முடியும் என்றும், வீட்டிலே தொடங்கும் பெண்விடுதலையே நாட்டிலே, அரசியல் விடுதலைக்கு கருவியாகின்றது. அப்படிப் பட்ட சூழ்நிலையில் பெண்கள் போதிய உரிமை வாழ்வு பெறவில்லை என்ற நோக்கில் தான் சிந்தித்து சில வழி முறைகளை மு.வரதராசனார் தம் கட்டுரைகளில் கூறியுள்ளார்.

பழங்கால மக்களின் வாழ்வியல்கூறுகள்

பெண்கள் எழுத்தறியக் கூடாது என்று தலைமுறைகள் பலகழிந்தன. பெண்கள் உயர்நிலைக்கல்வி, பட்டப்படிப்பு படிக்கக்கூடாது என்று பலர் நடுங்கினர். பழங்காலத்தில் நாட்டுப்புறங்களில் பெரும்பாலோருக்கு எழுத்தறிவு உயர்நிலைப்பள்ளி, கல்லூரி, நூல்நிலையக் கல்வி என்பது தெரியாது.பண்டிகை, நோன்பு, திருவிழா முதலியவைகள்பழங்கால மக்களுக்குத் தெரிந்தவை. அறிவும் ஆராய்ச்சியும் அற்ற பழங்கால மக்களின் பொழுதுபோக்காகவே இவை மாறியுள்ளன.

சங்கக்காலத்தில் பெண்களின் நிலை

கி.பி இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட இலக்கியங்களை ஆராய்ந்தால் பெண்கள் நன்கு மதிக்கப்பட்டிருந்தனர். முப்பதின்மருக்கு மேல் பெண்பாற் புலவர்கள் இருந்துள்ளனர். அவர்களில் ஔவையார் சிறந்த பெண்பாற் புலவர். மேலும் பூத பாண்டியன் தேவியைப் போல் அரச குடும்பத்தைச் சார்ந்த பெண்கள் புலமை நிறைந்தவர்களாக காணப்பட்டனர். சங்கால பெண்கள் இசைக் கலையிலும், நடனக்கலையிலும், பற்பல துறைகளிலும், ஆண்களோடு நிகரான திறமும் அறிவும் ஆற்றலும் பெற்றிருந்தனர். என்று நாம் அறியலாம்.

இடைக்காலத்தில் பெண்கள் நிலை

பெண்ணுடம்பை குறை கூறுவோரின் கொள்கை வேறு. அது வெறுப்பும் அறியாமையும் அடிப்படையாகக் கொண்டதவறான கொள்கையாகும். ஆகவே பெண்மையைவிடப் பெண்ணுள்ளமே சிறந்தது. இடைக்காலத்தில் துறவறத்தில் பெருமையை நிலை நாட்டும் ஆர்வத்தால் சிலர் இந்தத் தவறான கொள்கையை மேற்கொண்டுநூல்களிலும் எழுதியுள்ளனர். ஆணுடம்பைப் பழிக்காமல் பெண்ணுடம்பை மட்டும் பழித்து பேசியதே அவர்களின் தவறானக் கருத்தாகும். ஆனால் நாட்டில் சான்றோர் ஒரு சிலர் பெண்ணுள்ளத்தைப் போற்றிக் கொண்டிருந்தலே ஆகும். ஆகவே நாட்டில் உள்ளோர் பெண்ணுள்ளத்தை உயர்வுடையதாக நாடும் காலம் வந்தால் அந்த காலம் எல்லாச் சிறப்பும் உடைய பொற்காலம் ஆகும் என்று இடைக்கால பெண்கள் நிலைக் குறித்து மு.வ. கூறுகிறார்.

பழங்கால பெண்களின் நிலை

பழங்காலத்திலும் பெண்களுக்கு இந்த நாட்டில் உரிமை இல்லை என்று குற்றம் சாட்டுவதற்கு முன் தீர எண்ணிப் பார்க்க வேண்டும் இது பொதுவான ஒரு குற்றச்சாட்டாக இருத்தல் கூடாது.

இன்றைய காலத்தில் பெண்கள் நிலை

உயர்வு தாழ்வு கற்பிப்பதால் படித்த பெண்களின் திருமணம் எளிதாக இல்லை. உயர்நிலைப் பள்ளியில் படித்த பெண்களில் பெரும்பாலோர்க்குத் திருமணம் ஆவதற்கும், ஆகாமலிருப்பதற்கும் இதுவும் ஒரு காரணமாகும். பெண்ணானவள் இல்வாழ்க்கைக்குப் படிப்பு தான் காரணம் என்று நினைத்து இன்றைய காலத்தில் குறைவாக படித்த ஆணை மணக்க விரும்புவதில்லை. பெண்களின் பண்புகளில் நாணம் சிறப்பாக போற்றப்படுகிறது. பெண்களுக்கு இயல்பாய் அமைந்தள்ள குணம் நாணம். பெண் தன்மைக்கே அதுதான் உயிர் ஆகவே திருவள்ளுவர் பெண்ணைப்

பார்த்து திருநூல் நல்லவர் நாண் என்று குறிப்பிடுகிறார்.

நாணம் வரவரக் குறைந்து வருகிறது. காலப்போக்கில் படிப்பும் நாகரிமும் வளர வளர வளர நாணம் குறைந்து வருகிறது.

மேற்கு நாடுகளில் பெண்கள் நிலை

பெண்களுக்கும் நாணம் குறைவு. ஆனால் பெண்கள் பழக்கத்தால் எத்தனையோ இயற்கை உணர்ச்சிகளை ஒரு சிலர் கட்டுபடுத்தி அடக்கி ஆள்கிறார்கள். ஆனால் ஒரு சில பெண்கள் நாணம் தோன்றாதவாறு தம் இயற்கையான உணர்ச்சிகளை அடக்கி ஆள்கிறார்கள்.

தமிழ்நாட்டில் பெண்கள் நிலை

தமிழ்நாட்டில் நாணம் உடைய பெண்ணுக்கு கவர்ச்சியும், மதிப்பும் மிகுதியாய் இருக்கின்றன. அதனால் இந்த நாட்டில் இன்னும் பெண்கள் நாணம் உடையவர்களாக வாழ்கிறார்கள்.

வடநாட்டில் உள்ள பழக்க வழக்கம்

வடநாட்டில் பெண்களைச் சிறைகாக்கும் காப்போடு அல்லாமல் முக முடியிட்டு மறைக்கும் மறைப்பும் புகுந்தது. பெண்களின் அழகைப் பிறர் பார்த்தால் கவர்ந்து கொள்வார்கள் என்று எண்ணி இப்படிபட்ட நிலைமையை உருவாக்கினார்கள்.

இன்றைய கால பெண்களின் பழக்கவழக்கங்கள்

பெண்கள் கல்லூரி, சினிமா, நாடகம், கோயில் என பல பொது இடத்திற்குச் செல்லும் போது தன்னை மிகுதியாக அலங்கரித்துக் கொள்கிறார்கள். ஒளிமிக்க வைர நகைகளையும், விலையுர்ந்த பட்டாடைகளையும் அணிவதும் இன்று வழக்கமாக கொண்டுள்ளனர். மேலும் மிஸ் இங்கிலாந்து, மிஸ் இந்தியா, மிஸ் உலகம் என்று பல வேறு நாடுகளிலும் நாடுகளுக்குப் பொதுவாக உலகத்திலும் அழகிகள் போட்டி நடத்துகின்றனர்.

மேலும் இன்றும் சில நாடுகளில் பெண்கள் பர்தா என்னும் முகமூடி வழக்கத்தை கையாண்டுள்ளனர். பிற ஆண்கள் தம்மைப் பார்க்கக் கூடாது என்று எண்ணி முகத்திரை இட்டுப் போற்றுதலும் அதைப் பிறர் முன் நீக்க நாணம் கொள்ளுதலும் ஒரு சராரிடையே நாகரீகமாகக் கருதப்படுகிறது.

சீனம் மற்றும் தமிழ் நாட்டு பழக்கவழக்கங்கள்

சீன நாட்டிலுள்ள பெண்கள் தம் பாதத்தைப் பிறர் கண்ணுக்குத்

தெரியாமல் மறைத்து போற்றும் பழக்கம் இருந்தது. இந்த நாட்டில் ஒரு பெண் தன் மார்பை மறைப்பதில் எவ்வளவு விழிப்போடு தன்னைக் காத்து கொள்கிறாளோ, அது போல சீன பெண் தன் கணவன் தவிர வேறு யாரும் கான முடியாது. காலில் அணிந்துள்ளதைப் பிறர் முன் அவள் கழற்றவே மாட்டாள். அவ்வாறு கழற்றுவதற்கு மிகமிக வெட்கப் படுவாள். மானம் போவதாக உணர்வாள். பாதத்தில் ஏதேனும் ஒரு புண் வந்தால் பெண் மருத்துவரிடமே போவாள்

ஆகவே தான் சீனக் கவிஞர் ஒருவர் காலைக் குறுக்கி மறைத்து அழகு படுத்தாத பெண் நாட்டிறகே அவமானம் இழைப்பவ்ள் என்று பாடியுள்ளார்.

மேற்கு நாடுகளில் பெண்கள் நிலை

திருமணமானவுடன் தங்கள் பிறப்புரிமையே இழந்து விடுகிறார்கள். திருமணம் ஆவதற்கு முன் முனியம்மாவாக இருந்த ஏழைப் பெண் இந்த நாட்டில் முனியம்மாகவே இருக்கிறார்.

ஆனால் மேற்கு நாடுகளில் திருமணத்திற்கு முன் லில்லி என்று இருந்தவள் திருமணமான பின் மிஸஸ் ஜாண் ஆகிறாள். இப்படிப்பட்ட கொடிய அடிமைச்சின்னம் இந்த நாட்டில் இல்லையே என்றார்

பழந்தமிழ் நாட்டில் உரிமையின் அடையாளம் மட்டும் சுட்டிக் காட்டாமல் அன்பின் சிறப்பைக் கொண்டே காதலர்களின் வாழ்க்கையைப் போற்ற வேண்டும் என்று மு.வ கூறுகிறார்.

பழங்காலத்திலுள்ள பழக்கவழக்கங்கள்

வில் முறித்துத் திருமணம் செய்து கொள்ளுதல் முதல் ஏறு தழுவித் திருமணம் செய்து கொள்ளுதல் வரையில் எல்லாம் உடல் வலிமையின் சிறப்பைக் காட்டுகின்றன. மேலும் போரில் பகைவர்களைக் கொன்று குவித்து வென்று வந்தவனுக்குத் தான் பெண் கொடுப்பார்கள். என்ற பழக்கவழக்கங்கள் பெண்களின் ஆழமான சிந்தனைக் கருத்தை வலியுறுத்துகின்றன.

உடல் வலிமையை விட அறிவே சிறந்தது

அன்றைய கால மக்கள் உடல் வலிமையை விட அறிவே சிறந்தது என எண்ணி இசை முதலான கலைகளில் தேர்ந்த கலைஞர்களை அரசிகளில் குமரிகளும் திருமணம் செய்ய துணிந்தனர். எ.காட்டாக . சோழன் மகள் புலவரின் மகனாகிய அம்பிகாபதியை விரும்பி வாழ்வை முடித்ததும் இதற்குச் சான்றாகும். அக்காலத்தில் பெண்கள் கற்க வேண்டிய கல்வி வேறாகவும், ஆணின் கல்வி வேறாகவும் இருந்தன.

மு.வ காட்டும் வழிமுறைகள்

எந்த நாட்டில் பெண்மைக்கு மதிப்பும் பெருமையும் இருக்கின்றனவோ அந்த நாடு முன்னேற்றம் பெற்ற நாடு ஆகும் என்கிறார்.

பெண்மைக்குச் சிறுமையும் இழிவும் கற்பிக்கும் நாடு, அடிமைநாடு அல்லது பிற்போக்கான நாடு ஆகும் என்கிறார்.

பெண்ணுடம்பு, பெண்ணுள்ளம் இந்த இரண்டும் ஆணுக்குக் கவர்ச்சியானவை என்று கூறுகிறார்.

எந்த நாட்டில் பொதுவாகப் பெண்கள் தம் உடம்பில்ஆண்களுக்கு மகிழ்ச்சி ஊட்டுவதையே முதன்மையாகக் கொள்கிறார்களோ அந்த நாடு பிற்போக்கான நாடு என்று கூறலாம் என்கிறார்.

எந்த நாட்டில் ஆண்கள் பெரும்பாலோர் பெண்களை அழகுப் பொம்மைகளாகமட்டும் கருதாமல் வாழ்க்கைத் துணைவியராக அன்பு உள்ளங்களாகக் கருதுகிறார்களோ அந்த நாடே முற்போக்கான நாடாகும் என்கிறார்.

முடிவுரை

டாக்டர் மு.வ அவர்கள் தமிழ் நாட்டு வரலாறு பெண்மைக்கு பெருமை தரும் வரலாறாக இருக்கிறது என்று கூறுகிறார். இன்றும் ஒரு சில நகரங்களில் பெண்கள் உரிமையும், சிறப்பும் பெற்றும் விளங்குகிறார்கள் ஆனால் பெண்கள் சிலர் படித்தும்பட்டபெற்றும் பதவி பெற்றும் இருப்பதைப் பார்த்துப் பெண்மை வாழ்கின்றது என்று எண்ணுவது தவறு ஆகும்.

பெண்கள் அந்த வீட்டையும் இந்த வீட்டையும் பார்த்துக் கண்மூடி வாழ்வு நடத்த முயலக் கூடாது. தக்க வழக்கங்கள் எவை, தகாத வழக்கங்கள் எவை என ஆராய்ந்து கொள்ளலும் தள்ளலும் வேண்டும் . வீணான ஆடம்பரங்களில் ஆசை கொள்ளாமல் பெண்மையின் சிறப்பியல்புகளை அன்பும் அமைதியும் உயர்ந்து விளங்குமாறு வாழ்ந்தால் பெண்களின் நிலை சிறப்புறும் என்று அழகாக பெண்மை வாழ்க கட்டுரையில் கூறியுள்ளார்.

63. மு. வ. புதினங்களில் பெண் மாந்தர்

முனைவர் ஜெ.ஆனந்திபாய்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி
திருச்செந்தூர்.

புதினம் என்று சொல்லப்படும் நீண்ட நெடுங்கதைகளைத் தூய தமிழில் நல்ல கருத்துக்களோடு கூற முடியும் என்று கூறிய மு.வ.வின் புதினங்கள் வாழ்க்கையின் உண்மையை உரைக்கும் தன்மை உடையவை. இவரது கதைகளில் கலை நயங்களையும், வாழ்க்கை அனுபவங்களையும் உணர முடியும். இத்தகையத் தன்மை உடைய இவரது புதினங்களில் படைக்கப்பட்டுள்ள பெண் மாந்தர் பாத்திரப் படைப்புகளின் நிலையினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கற்பு

கற்பு என்பது பற்றி காலந்தோறும் பொருள் மாறுபட்டு வருகின்றது. பொதுவாக கற்பு என்பதற்கு ஒழுக்கம் என்று பொருள் கொள்ளலாம். இக்கற்பு பற்றி தொல்காப்பியரும்,

"கற்பெனப் படுவது கரணமொடு புணராக்
கொள்குறி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்ப கொள்வதுமே"[1].

என்கிறார். மேலும் இத்தகையக் கற்பிற்கு

"மகளிர் கற்பு, உறுதி, தலைவனும் தலைவியும் முறைப்படி மணந்து இல்லறம் மேற்கொள்ளும் ஒழுக்கம், கற்பு எனப்படுவது சொல்தவறாமை"[2]

என்று தமிழகராதியும் பொருள் தருகின்றது. இக்கால பெண்களின் கற்பை, இல்வாழ்க்கை சமையலறையில் பெண்கள் என்ற நிலையில் படம் பிடித்துக் காட்டுபவர் மு.வ. தொடக்கக்காலத்தில் இருந்து, கணவன் மனைவி இருவரில் மனைவிக்கு மட்டுமே கற்பு வலியுறுத்தப்பட்டது. இன்றைய சமூகத்தில் பெண்களிடத்தில் மட்டும் கற்பை எதிர்பார்ப்பது தவறு எனும் மு.வ.வின் கருத்தை,

"ஆணெல்லாம் கற்பை விட்டு தவறு செய்தால்
அப்போது பெண்மையும் கற்பழிந்தி டாதோ"[3].

என்றும், மேலும் இந்தக் கற்பு ஆண், பெண் இருவருக்கும் சமம் என்பதை,

"கற்பு நிலையென்று சொல்ல வந்தார் இரு
கட்சிக்கும் பொதுவில் வைப்போம்"[4].

என்ற பாரதியின் கருத்தோடும் ஒப்பிடலாம்.

இக்கற்பு பற்றிய சிந்தனைகளை மு.வ.வின் கரித்துண்டு, அகல் விளக்கு, கள்ளோ? காவியமோ? கயமை, பெற்ற மனம், மலர்விழி எனும் புதினங்களில் காண முடிகின்றது.

"எப்போது எவனுடன் வாழ்கிறாளோ அவனுக்கு துரோகம் செய்யாமலிருந்தால் போதும் அது தான் கற்பு"

(கரித்துண்டு, பக். 239-240)

வீட்டிலிருக்கும் பெண்களின் கற்பை மணற்பாங்கான நிலத்திற்கும், வேலை செய்யும் பெண்களின் கற்பைச் சேற்று நிலத்திற்கும் ஒப்பிட்டு பெண்களின் கற்பு நிலை பற்றி தனது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இல்வாழ்க்கை

இல்வாழ்க்கை என்பது ஆண், பெண் என்ற இருவரின் அன்பு பிணைப்பாகும். இதனையே,

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அற".

என்கிறார் வள்ளுவர்.

இந்த அன்பே இல்வாழ்க்கையின் அடிப்படை. கணவன், மனைவி இருவருக்கும் இதில் பொறுப்புண்டு. நண்பர்களும், உறவினர்களும் இவர்களது வாழ்க்கையில் சிலசமயம் தடைக்கற்களாக மாறி விடுகின்றனர் என்பது மு.வ.கருத்து. இல்வாழ்வில் நேர்மை, நியாயம் பற்றி வாதிடக் கூடாது என்பதை,

"இல்வாழ்க்கையில் நியாயம், நேர்மை இவற்றை மதிக்கலாமா? அது என்ன? வம்பர்கள் வழக்காடும் இடமா? அது ஒரு கோயில். அங்கே அன்பு, ஆர்வம் இவைகளே இடம் பெற வேண்டும்"

(கள்ளோ? காவியமோ? ப. 81)

என்று வலியுறுத்துகின்றார். இல்வாழ்வில் அன்பிற்கு மட்டுமே இடம் கொடுக்க வேண்டும். அறிவிற்கு இடம் கொடுக்கக்கூடாது என்றும், இல்வாழ்க்கையில் பெண்களின் பங்கு மிக முக்கியம் என்றும் குறிப்பிடுகிறார்.

மனைவிக்கு உரிமை

ஆணும் பெண்ணும் இல்வாழ்க்கையில் இணைந்து வாழ்ந்தால் மட்டும் போதாது. உலக விவரங்களை அறிந்து கொள்ளவும், நன்மை, தீமை பற்றி ஆராயவும் மனைவிக்கு உரிமை வழங்க வேண்டும். தமிழ்

நாட்டில் பெண்ணுரிமை அளவில் அதிகமாகப் பேசப்பட்டாலும் குடும்ப வாழ்வில் அவர்களுக்கு உரிமை வழங்கப்படவில்லை என்கிறார் மு.வ.

"இருவரும் ஒருங்கே உண்பதும், உறங்குவதும் பெருமை அல்ல. ஒருங்கே எண்ண வேண்டும். எண்ணத்தில் ஒத்து இருந்தால் அது குடும்ப இன்பம்" (கள்ளோ? காவியமோ? ப.100)

என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் மனைவிக்கு உரிமை கொடுப்பதில் ஓரிரு குடும்பங்கள் கெட்டாலும் நாடு நலம் பெறும் இந்தத் தவறுகளை மன்னிக்கலாம் என்பதை,

"மனைவிக்கு உரிமை கொடு. உரிமையில் தீமை நேர்ந்தாலும் கவலைப் படாதே. ஆங்கில நாட்டைப்பார். அவர்களுடைய முன்னேற்றத்துக்குக் காரணம் அங்கே இருக்கும் குடும்ப உரிமைதான்" மலர்விழி ப.146

என்று தனது புதினத்தில் விளக்கியுள்ளார்.

சமையலும் பெண்களும்

பெண்கள் பிற வேலைகளைச் செய்வதைக் காட்டிலும் உணவைச் சமைக்க பெரும் பகுதி நேரத்தைச் சமையல் அறையில் கழிக்கின்றனர். உணவின் சுவையறிந்த நாம் அதைத் தயாரிக்கும் பெண்களின் மனதை அறிவதில்லை. இதனை,

"தமிழ் நாட்டு சமையல் அறைகளே, எங்கள்

தாய்மார்களுக்கு விடுதலை அளியுங்கள்" (பெற்ற மனம் ப.248)

என்று தமது படைப்பில் குறிப்பிட்டு உள்ளார். தமிழ்நாட்டு பெண்கள் சமைக்கும் உணவு வகைகளைப் பற்றி தனது கயமை புதினத்தில்

"நெய்ச்சோறு, எலுமிச்சஞ்சோறு, தேங்காய்சோறு, சர்க்கரைப் பொங்கல், என சோற்றில் பலவகை நெய் இட்டளி, சப்பாத்திக் குருமா, பணியாரம், பப்படம், காரெட் சீவல், புதினாத் துவையல் எனத் துணையுணவு பல வகை" (கயமை பக்106-107)

விளக்கியுள்ளார். பெண்கள் சுவையான உணவைச் சமைப்பதில் நேரத்தைச் செலவிட்டு தம்மை தாமே அடிமைப்படுத்திக் கொள்கின்றனர் என்ற எண்ணமுடையவர்

முடிவுரை

தமிழகப் பெண்கள் முன்னேற்றமடையாத நிலைக்கு பெண்களின் கற்பு, இல்வாழ்க்கையே அடிப்படைக் காரணம் என்பதை மு.வி.வின். புதினங்களில் ஆணித்தரமாக உணர முடிகின்றது.

64. கரித்துண்டு நாவலில் பெண் கதாபாத்திரங்களின் தனித்தன்மைகள்

சு.கவிதா
முதுகலைத் தமிழிலக்கியம், இரண்டாமாண்டு
தூய நெஞ்சக் கல்லூரி
திருப்பத்தூர்- 635 601.

கரித்துண்டு நாவலை எழுதிய மு.வரதராசனார் அவர்கள் தமிழ் மொழியின் மீது ஆர்வம் கொண்டவர். தமது வாழ்க்கையை தமிழுக்காகவே அர்ப்பணித்தவர். இவர் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற பல மொழிகளில் புலமை வாய்ந்தவர். இவர் எழுதிய நாவல்கள் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. நான் எடுத்துக்கொண்ட தலைப்பான கரித்துண்டு நாவல் இந்தி மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. கரித்துண்டு நாவலில் உள்ள பெண்களைப் பற்றி இக்கட்டுரை கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ் ஆராய்கிறது.

1. பொன்னியின் வறுமை நிலை, 2. குந்தம்மாவின் அறிவு, 3.நிர்மலாவின் பகட்டான வாழ்க்கை, 4. நிர்மலாவை மாற்றிய திருக்குறள், 5. கடிதத்தில் மோகனைப் பற்றி கூறியது

1. பொன்னியின் வறுமை நிலை

பொன்னி ஓவியரின் மனைவி ஆவாள். இவளுடைய கணவர் ஓவியர் தன் இரண்டு கால்களையும் இழந்தவர். ஓவியக்கலையில் திறமை வாய்ந்தவர். ஓவியக் கலையையே தொழிலாகக் கொண்டவர். பொன்னி தன் கணவர் சம்பாதித்து வரும் பணத்தைக் கொண்டு ஒரு குடிசையில் வாழ்க்கை நடத்துகிறாள். ஓவியம் எழுதுவதால் வரும் பணத்தைக் கொண்டு கஞ்சி குடிக்கிறார்கள். மற்ற செலவுகளுக்காகப் பொன்னி கூலி வேலைக்குப் போகிறாள். இவளுக்கு இரண்டு குழந்தைகள். பெரியவன் தன் முதல் கணவருக்குப் பிறந்தவன். இரண்டாவது பச்சிளம் குழந்தை ஓவியருக்குப் பிறந்தவன். பொன்னியின் முதல் கணவன் லாரியில் அகப்பட்டு இறந்துவிட்டான். அதற்குப் பின்பு பொன்னி குந்தம்மாளின் மூலம் ஓவியருடன் வாழ்க்கை நடத்துகிறாள். இருவரும் ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தி வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

பொன்னி தன் கணவரான ஓவியர் மீது அன்பு கொண்டவள். எந்நிலையிலும் வெறுக்காதவள். கணவரைப் பற்றி பிறரிடம் புகழ்ந்து பேசுவாள். “தான் முதல் கணவரோடு இருக்கும்போது அரைவயிறு சாப்பாடு தான், ஆனால் இவரிடம் வந்த பிறகுதான் மூன்று வேளையும் சாப்பிடுகிறேன். அவருக்கு இல்லையானாலும் எனக்கு கொடுத்து விடுவார்”

என்று புகழ்ந்து பேசுவாள். ஓவியரும் பொன்னியுடன் சேர்ந்த பிறகுதான் மூன்று வேளை சாப்பாடு சாப்பிடுகிறார். இருவரும் சம்பாதிக்கும் பணத்தைக் கொண்டு சிக்கனமாக வாழ்ந்து வருகின்றனர்.

2. குந்தம்மாவின் அறிவு

குந்தம்மா ஒரு ஏழைப்பெண். ஓவியர் ஆரம்பக்காலத்தில் தமிழ்நாட்டிற்கு வரும்போது இருக்க இடமும் உண்ண உணவும் கொடுத்து அண்ணனாக ஏற்றுக் கொண்டாள். குந்தம்மாவும் பொன்னியும் ஒரே இடத்தில் கூலி வேலை செய்து வந்தார்கள். இருவருக்கும் நல்ல பழக்கம். அப்போது பொன்னியை ஓவியருடன் சேர்த்து வைத்து வாழ்க்கையைத் தொடங்கி வைத்தாள். குந்தம்மாவுக்கும் அவளுடைய கணவனுக்கும் அடிக்கடி சண்டை வரும். குந்தம்மா ஓவியரிடம் வந்து பிரச்சனையைக் கூறுவாள். "குந்தம்மாவின் கணவனும் நல்லவன் தான். அவன் வேலை செய்யும் கம்பெனியில் ஆட்களைக் குறைத்துவிட்டார்கள். ஆதனால் வேலை போய்விட்டது." வறுமையின் காரணமாக குடும்பத்தில் பிரச்சனைகள் ஏற்படுகின்றன என்பதைக் குறிப்பிடுகின்றார்.

ஒரு நாள் குந்தம்மாவின் கணவன் கம்பெனி வேலையாக மூன்று நாட்கள் வெளியூர் போகிறான். ஓவியர் குந்தம்மாவின் படத்தை வரைகின்றார். வரையும்போது குந்தம்மாவின் அழகு ஓவியரை தவறான பாதைக்கு அழைத்துச் சென்றது. குந்தம்மாவைத் தொடப்போகும்போது, அண்ணா என்று அலறி எழுந்தாள். "வேண்டாம் அண்ணா என்று காலில் விழுந்து கேட்டுக்கொண்டாள்". ஓவியரை நல்ல மனிதனாக மாற்றிய பெருமை குந்தம்மாவைச் சாரும். குந்தம்மாவிற்குக் குழந்தை பிறந்து இறந்துவிட்டது. குழந்தை வயிற்றில் இருந்த போது கண்ட மருந்துகளைச் சாப்பிட்டதால் குழந்தை இறந்துவிட்டது. குந்தம்மாவின் புருஷன் இரண்டு வாரமாக காய்ச்சல் வந்து துன்பப்பட்டான். சரியான நேரத்தில் ஓவியர் பணம் கொடுத்து உதவினார். பணம் இல்லாதவர்களிடத்தில் கொடுக்கும் மனம் இருக்கிறது என்பதைப் பதிவு செய்துள்ளார்.

3. நிர்மலாவின் பகட்டான வாழ்க்கை

நிர்மலாவின் முதல் கணவர் மோகன். இவர்கள் இருவரும் காதல் திருமணம் செய்துகொண்டு கல்கத்தாவில் வாழ்ந்து வந்தனர். இருவரது வாழ்க்கையும் இரண்டாண்டு காலமாக சந்தோஷமாகப் போனது. நிர்மலா அக்கம் பக்கம் வசதியாக வாழ்பவர்களைப் பார்த்து நாமும் வசதியுடன் வாழ வேண்டும் என்று ஆசைப்படுகிறாள். ஆனால் மோகன் ஓவியம் எழுதுவதைத் தவிர வீட்டுக்கணக்கு, வரவுசெலவு போன்ற எதைப்பற்றியும் கவலைப்படுவதில்லை. இதனால் இருவருக்கும் வாழ்க்கையில் விரிசல் ஏற்பட்டது.

ஒரு நாள் மோகன் சாலையைக் கடக்க முயன்ற போது அடிபட்டு இரண்டு கால்களையும் இழக்கிறான். இந்தச் சூழ்நிலையிலும் நிர்மலா கணவரைச் சென்று பார்க்கவில்லை. நிர்மலா ஆடம்பர வாழ்க்கை வாழ எண்ணுகிறாள். இதனால் மோகன் மீது வெறுப்பு தோன்றுகிறது. ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் வெறுப்பே இருவரையும் பிரித்து விடுகிறது. இந்நாவலில் நம்மைச் சுற்றி இருப்பவர்களும், நண்பர்களும் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்பதை ஆசிரியர் உணர்த்தியுள்ளார். நிர்மலாவிற்கு தவறான நண்பர்களும் சுற்றத்தாரும் அமைந்ததால் தான் ஆடம்பர வாழ்க்கையை மேற்கொள்ள விரும்புகிறாள். அது மட்டுமல்ல, வங்காள நாட்டின் கலாச்சாரத்தைப் பின்பற்றுவதால் இந்த மாற்றம் அவளுக்குள் ஏற்படுவதாக இந்நாவலில் குறிப்பிடப்படுகிறது.

4. நிர்மலாவை மாற்றிய திருக்குறள்

நிர்மலாவின் வீட்டிற்கு பக்கத்தில், செந்தாமரையும் கணவன் இளங்கோவும் வசித்து வந்தனர். நிர்மலாவிற்குச் செந்தாமரையின் நட்பு கிடைத்தது. செந்தாமரை திருக்குறளைக் கொடுத்து படிக்கச் சொன்னாள். நிர்மலாவிற்கு திருக்குறள் படிப்பதில் ஆர்வம் ஏற்பட்டது. இளங்கோவும் பேராசிரியர் கமலக்கண்ணனும் ஒரே பள்ளியில் படித்தவர்கள். அவர் இளங்கோவைச் சந்திக்க வரும்போது நிர்மலாவும் பேராசிரியரும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. இருவரும் காதல் வயப்படுகின்றனர். திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றனர்.

நிர்மலா இரண்டு நிபந்தனைகளை விதிக்கின்றாள். "ஒன்று பந்தலில் நடைபெறும் திருமணமோ, பதிவு நிலையத்தில் நடைபெறும் திருமணமோ இருக்கக் கூடாது, திருமணம் ஆனவர்கள் போல வாழவேண்டும். இரண்டாவது ஒரு தனியறை வேண்டும். அதில் யாரும் நுழையக்கூடாது" என்று இரண்டு விதிமுறையைக் கூறுகின்றாள். பேராசிரியர் சரி என்று ஒப்புக் கொள்கின்றார். பேராசிரியரும் இரண்டு நிபந்தனைகளை விதித்தற்கு ஏன் எதற்கு என்று கேட்காமல் ஒப்புக்கொண்டார். ஒருநாளும் விதியை மீறியதில்லை. திருக்குறள் நிர்மலாவின் மனதை மாற்றுகிறது. அவள் செய்த தவற்றை உணர வைக்கிறது. இதனால் பேராசிரியருக்குக் கடிதம் எழுதி வைத்துவிட்டு வீட்டை விட்டு வெளியேறுகிறாள்.

5. கடிதத்தில் மோகனைப் பற்றிக் கூறியது

மோகன் ஓவியக் கலையில் சிறந்தவர். "என் கலையை காசுக்கு விற்கும் ஆள் அல்ல நான் என்று இறுமாப்போடு" சொல்லிவிடுவார். அவர் அடிபட்டு மருத்துவமனையில் இருக்கும்போது எனக்கு இரண்டு கடிதங்கள் வந்தன. அவரைச் சென்று நான் பார்க்கவில்லை. இரக்ககுணம் இல்லாதவளாய் நடந்து கொண்டேன். என் மனம் கல்லாக மாறியது.

அவருடைய இன்றைய நிலைக்கு நானும் ஒரு காரணம். ஒரு உயர்ந்த கலைஞரின் வாழ்க்கையை பாழ்படுத்திவிட்டோமே என்று என் மனம் வருந்துகிறது.

"மோகன் என் கலைஞர் என்று உரிமை பாராட்டுவதற்கு இடம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அவருடைய வாழ்வில் உள்ள வறுமையைப் போக்க ஏதாவது முயற்சி செய்யுங்கள். அவருடைய வறுமை என்று விடக்கூடாது. அதைக் கலைக்கு வந்த நோயாகக் கருதித் தீர்க்க முயலவேண்டும் என்று என் நெஞ்சம் விழைகின்றது" என்று நிர்மலா பேராசிரியருக்குக் கடிதத்தில் குறிப்பிடுகின்றாள். நிர்மலா கலையை விரும்பக் கூடியவள். கலைஞர்களை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வாறு கூறியுள்ளார்.

மதிப்பீடு

இந்நாவலில் மு.வ. அவர்கள் திருக்குறளை முதன்மைபடுத்தியுள்ளார். நிர்மலாவின் மனமாற்றத்திற்குக் காரணம் திருக்குறள். உலகப் பொதுமறையான திருக்குறள் தீய வழியில் செல்பவர்களை நல்வழிப்படுத்தும் என்பதை உணர முடிகிறது.

பெண்கள் ஆடம்பர வாழ்க்கையை விரும்பினால் வாழ்க்கை திசைமாறிப் போகும் என்பதை நிர்மலா என்ற கதாபாத்திரத்தைக் கொண்டு விளக்கியுள்ளார்.

ஏழையாக இருந்தாலும் கணவன் மனைவியிடையே அன்பு இருந்தால் வாழ்க்கை மனநிறைவுடன் அமையும் என்பதைப் பொன்னியின் கதாபாத்திரத்தைக் கொண்டு அறிய முடிகிறது.

பெண்களும் கலையை விரும்பக் கூடியவர்கள். கலைஞர்களைக் காக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள் என்பதை இந்நாவலில் குறிப்பிட்டுள்ளார்.

65. மு. வ. வின் பெண் குறித்துப் புரிதல்கள்

அ. தமிழரசி
முதுகலைத் தமிழ்த்துறை
தூய நெஞ்சக் கல்லூரி
திருப்பத்தூர். வே.மா . 635601.

பெண்மை வாழ்ந்தால்தான் அன்பு, அறம், ஆண்மை எல்லாம் வாழமுடியும் என்பதை உணர்ந்து பெண்மை வாழ்க என்றார் பாரதியார். காதல் இதழுக்கும் மற்றும் சில இதழ்களுக்கும் அவ்வப்போது எழுதிய கட்டுரைகள் சிலவற்றைத் தொகுத்து பெண்மை வாழ்க என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார் மு.வ. அவருடைய பெண்மைப் பற்றிய முற்போக்குச் சிந்தனைகளின் போக்கு குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

நமது நாடும் பெண்மையும்

"ஆண்கள் பார்க்கும் எல்லா வேலைகளையும், ஆண்கள் செய்யும் எல்லாத் தொண்டுகளையும் பெண்கள் செய்ய முடியும். ஆனால் நகைப்பைத்தியம், துணி அலங்காரப் பைத்தியம், அணிந்து கொண்டு சாயல் நடை நடக்கும் அடிமை இழிவு சுய மரியாதை அற்ற தன்மைப் பைத்தியம் ஒழிய வேண்டும்" என்பார் பெரியார். ஒரு சில நகரங்களில் பெண்கள் சிலர் படித்து, பட்டம் பெற்று, பதவிப் பெற்றும் இருப்பதைப் பார்த்துப் பெண்மை வாழ்கின்றது என்று ஏமாந்து நிற்கக் கூடாது. சமையலறையிலும், தொழிற்சாலைகளிலும், வயல்களிலும் உழைத்து அலுத்து ஓய்ந்து மடியும் பெண்களே பெரும்பான்மையான தமிழ்ப் பெண்கள் என்பதை மறந்து விடக்கூடாது. பெண்கள் வீணான ஆடம்பரங்களில் ஆசைக் கொண்டு பகட்டான ஆடை அணிகலன்களுக்கு ஏங்கி அலையக்கூடாது. பெண்மையின் சிறப்பியல்புகளான அன்பும் அமைதியும் உயர்ந்து விளங்க முயல வேண்டும் எனத் தனது கருத்தைப் பதிவு செய்கிறார் மு.வ.

பெண்மைக்கு மதிப்பு

சங்க காலத்தில் பெண்களுக்கு மதிப்பு இருந்ததாகப் பலரும் கூறுகின்றனர். ஒரு சில பெண்கள் உயர்வு பெற்றிருந்ததை வைத்து பெண்ணினம் உரிமை பெற்று வாழ்ந்ததாக்க் கூறுவது ஆராயப்படவேண்டிய ஒன்றாகும்.

அழகும் ஆற்றலும்

ஆண், அழகை நாடி ஒரு பெண்ணை மணந்து கொள்ளுதலும், பெண் ஆணிடம் ஆற்றலை எதிர்பார்த்து மணந்து கொள்ளுதலும் சங்க காலத்தில் நடைபெற்று வந்த முறையாகும்.

"கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்" (கலித்தொகை, முல்லைக்கலி2)

உடல் வலிமையைச் சிறந்த ஆற்றலாகக் கருதிய காலம் மெல்ல மாறி, அறிவின் ஆற்றலைப் போற்றும் காலம் எழத் தொடங்கியது.

அன்பு-அன்பு
அழகு-ஆற்றல்

என்னும் பொதுவிதியைக் கொண்டு ஆராய்ந்தால் அன்பையும் அன்பையும் முதலில் நாடுவதா? அழகையும் ஆற்றலையும் முதலில் நாடுவதா? என்பதில் வேற்றுமை உள்ளது. எவ்வாறு ஆராய்ந்தாலும் ஆண் பெண் சேர்ந்து வாழும் வாழ்க்கைக்கு அடிப்படையாக உள்ளவற்றில் அன்பு முதலிடம் பெறுதலும், அழகும் ஆற்றலும் அதற்கடுத்து சிறப்பிடம் பெறுதலையும் மு.வ. தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

பலர் காணத் தோன்றுதல்

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப" (தொல்) - களவியல் 8

அச்சம், நாணம், மடம் ஆகிய இம்மூன்றும் தினந்தோறும் தோன்றுவதே பெண்களுக்கு உரியது என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

"பிணைஏர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணிஎவனோ ஏதில தந்து" திருக்குறள். 1089

தலைவியின் அழகில் மயங்கிய தலைவன், தலைவிக்கு இளமானின் மருண்ட பார்வையும் நாணமுமே இயற்கை அழகாக இருப்பதால், வேறு செயற்கை நகைகள் எல்லாம் தேவையில்லை என்று மனம் குளிர்ந்ததாகத் திருவள்ளுவர் கூறுகிறார்.

"நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்" -பாரதியார்

நாணம் பெண்களின் முன்னேற்றத்திற்கு இடையூறாக இருக்கும் என்பதால், நாய்களுக்குத் தான் நாணம் வேண்டும் என்கிறார். பறவைகளிலும் விலங்குகளிலும் பெண்ணுக்கு நாணம் இல்லை. அதனால் நாணம் இயற்கையானது அன்று. தாய், உடன்பிறந்தார், சுற்றுப்புறத்தாரைப் பார்த்துப் பெண்கள் கற்றுக் கொள்ளும் பண்பு என்கிறார் மு.வ.

"மலர் அன்ன கண்ணாள் முகம்ஒத்தி ஆயின்
பலர்காண தோன்றல் மதி" -திருக்குறள். 1119

தலைவன் நிலவிடம் நிலவே, மலர் போன்ற கண்களையுடைய என் தலைவியின் முகத்தை ஒத்திருப்பாய் என்றால், நீயும் பலர் காணத் தோன்றாதே என்கிறான்.

நாணம் - கற்பிதம்

பண்டைக் காலத்திலிருந்து பெண்மை, தாய்மை, மென்மை, கற்பு என்பது எப்படிப் பெண்களுக்குக் கற்பிதமாக இருந்ததோ அதே போல் தான் நாணம் என்பதும் கற்பிக்கப்பட்ட ஒன்றாகும். அயல்நாடுகளிலும் நம் நாட்டின் மேற்கத்திய நாடுகளிலும் உள்ள பெண்களிடம் ஆண், பெண் வேறுபாடு இல்லாமல் பழகுவதால் நாணம் என்பது குறைந்து வருகிறது.

உறுதிப்பாடா? உடன்பாடா?

இருதலைப் புள்போல் ஓர் உயிராய் இயைந்த காதலரை எதுவும் பிரிக்க முடியாது. நெருப்பினும் கொடிய வறுமையும் அவர்களுடைய உறுதியைக் கெடுத்திட முடியாது. பிரிபவர் எல்லோரும் காதலர் அல்லாதாரே. உடன்பாடு இல்லாதவர் வாழும் இல்லற வாழ்க்கையில் கணவனும் மனைவியும் உட்பகைக் கொண்டு 'குடங்கருள் பாம்போடு உடனுறைதல்' என்ற உவமைக்கு ஏற்ப போராட்டமாக வாழ்க்கை நடத்துகின்றனர்.

குடும்பத்தை விட்டு . வெளியேற உலகம் இடம் தரவில்லை, உள்ளிருந்து வாழ உள்ளம் இடம் தரவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழும் வாழ்க்கையை இல்லற வாழ்வு என்பதா? அறம் இல் வாழ்வு என்பதா? என்ற வினாவினை மு.வ. எழுப்புகிறார்.

திருமணம்

"திருமணம் என்பது வெறும் விளையாட்டன்று. ஒவ்வொரு பாதியாய் வளர்ந்து வரும் இரண்டு உயிர் ஒன்றி முழுத்தன்மை எய்திக் கடனாற்றுவதற்கு அவைகளை அன்புக் கயிற்றினால் இயற்கை பிணிப்பது திருமணம்" என்று திருமணத்திற்கு அழகான விளக்கம் தருகிறார் திரு. வி.க. போலிக்காதல், இதுகாதல் என்று பிரித்தறிய இயலாத சூழலில் திருமணம் என்ற பந்தத்தின் மூலம் உலகத்தின் உடன்பாட்டைப் பெறுவதே திருமணத்தின் முக்கிய நோக்கமாக உள்ளது. எனவே, திருமணம் என்பது இருவர் வாழ்க்கையை உறுதிப்படுத்தும் முறை என்பதை விட இருவர் வாழ்க்கைக்கு உலகம் உடம்படும் முறை என்பதே பொருந்தும் எனப் பதிவு செய்கிறார் மு.வ.

குறிக்கோள்

'ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப' -தொல் 1038

எனக் காதலின் தொடக்கத்தைத் தொல்காப்பியர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"காமம் சான்ற கடைக்கோட் காலை

ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" - தொல், 1138

என இல்வாழ்க்கையின் நிறைவினைப் பற்றியும் தொல்காப்பியர் கூறி உள்ளார். ஊடல் கவர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு தொடங்கிய திருமண வாழ்க்கை உள்ளத்து அன்போடு வளர்ந்து நிறைந்து வாழ்வின் ஒரு முழுமையை முதுமையில் ஏற்படுத்துகிறது எனப் பதிவு செய்கிறார் மு.வ.

இயற்கையான மணம்

பெண்களின் கூந்தல், நுதல் போன்றவை இயற்கையாக மணம் வீசக் கூடியவை எனப் பல சங்க இலக்கியப் பாடல்கள் கூறுகின்றன.

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி!
காமம் செப்பாது கண்டது மொழிமோஒ
அரிவை கூந்தலின்
நறியவும் உளவோநீ அறியும் பூவே" - குறுந் 2

"குவளைக். . . . .
குறுந்தாள் நாண்மலர் நாறும்
நறுமென் கூந்தல்" . . . . . . -குறுந் 270

'குவளை நாறும் கூந்தல்' -நற்றிணை 262

'தேங்கமழ் புதுமலர் நாறுமிவள் நுதலே' -அகம் 78

பெண்களுக்குக் கூந்தல் அடர்த்தியாக வளர்வது தலையில் சுரக்கும் இயற்கை மணத்தைக் காத்துப் பரப்புவதற்காகவே என்று இன்றைய ஆராய்ச்சியாளர்கள் கூறியிருப்பதாக மு.வ. தனது நூலில் பதிவு செய்துள்ளார். ஒவ்வொருவரின் உடலும் இயற்கையிலேயே மணம் வீசும் இயல்புடையது என்பது தான் உண்மை.

அழகைப் பாதுகாத்தல்

ஆணின் கண்ணிற்கும் கருத்திற்கும் கவர்ச்சி தரும் தன் உடற் பகுதிகளைப் பெண் போற்றி மறைப்பது எல்லா நாகரீக நாடுகளிலும் வழக்கமாக இருந்து வருகிறது. இஸ்லாமியர்கள் பர்தா என்னும் முகமூடி வழக்கத்தை இன்றளவும் கடைபிடிக்கின்றனர்.

"கண்ணம்மா - என் காதலி - முகத்திரை களைதல்"

என்ற பாரதியார் பாடிய பாட்டில் இதைக் குறிப்பிடுகிறார்.

"தில்லித் துருக்கர் செய்த வழக்கமடி - பெண்கள்
திரையிட்டு முகமலர் மறைத்து வைத்தல்" - பாரதியார்

சீன நாட்டில் பெண்ணழகு பாதத்தில் இருப்பதாகக் கருதப்பட்டு வருகிறது.

"காலைக் குறுக்கி மறைத்து அழகுபடுத்தாத பெண் நாட்டிற்கே அவமானம் இழைப்பவள்" என்று சீனக் கவிஞர் ஒருவர் பாடியிருக்கிறார். இவ்வாறு, உடல்பாகங்களை மறைத்தல், நாணம் கொள்ளுதல் எல்லாவற்றிற்கும் மனம்தான் காரணம் என்கிறார் மு.வ.

மதிப்புரை

பெண்ணிற்குப் பெருமை தருவதே தாய்மை தான். பிள்ளைப்பேறு பற்றி மு.வ. தனது பெண்மை வாழ்க நூலில் குறிப்பிடவில்லை.

திருமணமுறையில் மேற்கு நாடுகளைப் பின்பற்றும் குடும்பங்களே முன்னேற்ற வழியில் நடப்பவை என்ற மு.வ. வின் கூற்று நமது நாட்டுக் கலாச்சாரச் சூழலுக்குப் பொருத்தமானதன்று.

திருமண வாழ்க்கைக்கு அடிப்படையானது அன்பே எனப் பதிவு செய்துள்ள மு.வ. வின் கருத்து பாராட்டுக்குரியதாகும்.

காதல், கல்யாணம் பற்றிய செய்திகளை அதிக அளவில் குறிப்பிட்டு, கைம்மைக்கொடுமை, சொத்துரிமை, அரசியலில் பெண்களின் நிலையைப் பற்றிக் குறைவாகப் பதிவு செய்திருக்கிறார்.

பெண்மைக்குச் சிறுமையும் இழிவும் கற்பிக்கும் நாடு, அடிமை நாடு அல்லது பிற்போக்கான நாடு என்று கூறி நம்மை ஆழமாகச் சிந்திக்க வைக்கிறார் மு.வ.

பண்டிகை, நோன்பு, திருவிழா போன்ற நாட்களில் பெண்கள் படும் துன்பங்களையும் வலிகளையும் விரிவாக எடுத்துக் கூறி உள்ளார்.

ஆணும் பெண்ணும் சம உரிமையோடு வாழ வேண்டியதின் அவசியம் பற்றி எடுத்துரைத்துள்ளார்.

பெண்கள் தம் உடம்மைக் கருவியாகக் கொண்டு ஆண்களைக் கவர்கின்ற வரைக்கும் அடிமையாக வாழ நேரும். தம் உள்ளத்தைக் கருவியாகக் கொண்டு ஆண்களைக் கவர முடியுமானால் ஒத்த உரிமையோடு உயர்வு பெற முடியும் என்ற மு.வ. வின் கருத்து ஆண் பெண் சமத்துவ உரிமைக்கு வழிவகுப்பதாக உள்ளது.

ஆக, மு.வ.வின் படைப்புகள் முழுவதிலும் உள்ள பெண்பற்றிய பதிவுகளை ஆய்விற்குட்படுத்தினால் பெண்களைக் குறித்த அவரது பார்வை தெளிவாக வெளிப்படும் என்ற சிந்தனையை விதைத்து விட்டுச் செல்கிறது இவ்வாய்வுக் கட்டுரை.

66. நல்வாழ்வின் தேவை குறித்து மு.வ.வின் சிந்தனைகள்

மா. மகேஸ்வரி
தமிழ்த்துறை முதலாமாண்டு
தூயநெஞ்சக் கல்லூரி
திருப்பத்தூர், வே.மா - 606635.

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும், தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு.வரதராசனார் அவர்களின் சீரிய தமிழ்த்தொண்டு முதன்மையான இடம் பெற்றுள்ளது. அவர் மனத்தால் கூடப் பிறர்க்குத் தீங்கு எண்ணாமல் சான்றோராக வாழ்ந்தவர்.

மனவலிமை வேண்டும்

நம் வாழ்க்கையில் பல கூறுகள் உள்ளன. அவற்றுள் முக்கியமானவை உலகம் சுற்றுபுறம் மற்றும் உடம்பால் அமையும் பகுதி, வாழ்க்கைப் பகுதி, மனதால் அமையும் பகுதி மூன்றும் மனித வாழ்விற்கு முக்கியமானவைகளாகும். உலகத்தை விட , சுற்றுபுறத்தைவிட மனிதன் மிகச் சிறியவன். இயற்கை நியதிகளான காற்று, மழை, வெள்ளம், எரிமலை, புயல், பூகம்பகம் இதை விட மனிதன் மிகமிமகச் சிறியவனாக இருக்கின்றான். இதனையும் தாங்கிக்கொள்ள மன வலிமை வேண்டும். அதுவே நல்வாழ்விற்குச் சிறந்ததாகும்.

வழிபாடு

வாழ்க்கையில் நடைபெறக் கூடிய அனைத்தும் அதாவது, முதலில் இருந்து முடிவு வரை கடவுளைச் சார்ந்தவை என அறிந்து அதன் வழியில் சிந்தனையைச் செலுத்துதலே வழிபாடு ஆகும். சிலர் உருவ வழிபாட்டை எதிர்க்கின்றனர்.பெரும்பாலோர் கோயில் அமைத்து வழிபாடு செய்கிறார்கள்.கடவுள் நெறி உள்ளத்தில் பதிவது ஒன்றுதான் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். உயிருள்ள, உயிரற்ற எல்லா உயிர்களின் வாழ்வுக்கும் பொதுவானத் திட்டங்கள் வகுத்துப் பொதுவாக ஆட்சிப்புரியும் ஒரு பெரும் சக்தி கடவுள் என்று உணர வேண்டும்.மனம் போன போனக்கில் விட்டு விடாமல் தீமையிலிருந்து விலகி நல்ல செயலில் மனதைச் செலுத்துவதே அறிவு ஆகும்.இதனைத் திருவள்ளுவர்

"சென்ற இடத்தால் செலவிடாது, தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு." (குறள்-422)

நம் கட்டளைப்படி மனம் இயங்கவேண்டும். உடல் உழைக்க வேண்டும். உடலுக்குத் தலைமைத் தாங்கி நடத்த வேண்டும். ஒவ்வொரு நாளும் கடவுள் வழிபாடு செய்தால் நன்மை பயக்கும். அமைதி நல்கும், காலையில் கடமைகள் தொடங்குவதற்கு முன், இரவில் கடமைகள் ம்முடித்தபிறகு கண்மூடி மனதை ஒருமைப்படுத்தி வழிபடல் வேண்டும். அன்றாடம் செய்து வந்தால் மனத்திற்கும், உடலுக்கும், ஆற்றலும். அமைதியும் கிடைக்கும்.

உடம்பைப் போற்றல்

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஓர் உடம்பைத் தந்து, உடம்புக்குள் நல்ல புலன்களைப் படைத்து மனதையும் படைத்து இருக்கின்றார். உடம்மைக் கொண்டு வாழ்தற்கு உடலுறுப்புகளையும் ஒவ்வொருவருக்கும் தந்திருக்கிறார். நல்வாழ்விற்கு உடம்பைப் போற்றல் வேண்டும்.

பழம், காய், பருப்பு, அரிசி, கோதுமை, பால் போன்றவை மட்டும் மனித உம்டம்புக்கு ஏற்ற சில உணவுகள் ஆகும். இவற்றை மட்டுமே மனித உடம்பில் குடலின் மூலம் நாம் உண்ட உணவு செரிமானமாகிறது. எவ்வளவு மிகுதியாகச் சாப்பிட முடியுமோ அந்த அளவிற்கு சாப்பிடக்கூடாது. குறைவாகச் சாப்பிடுவதே நம் வாழ்விற்கு நல்லது. திருவள்ளுவர் அளவறிந்து உண்க என்கிறார். நிறைய உண்பதால் துன்பம், நோய் வரும் என்றும் குறைவாக உண்பதால் இன்பம் வரும் என்றும் கூறுகிறார்.

செரிக்கும் அளவை அறிந்து உண்ணாமல் சுவை மிகுதியால் அதிகம் உண்பவனுக்கு அளவில்லாத நோய்கள் உண்டாகும் இதனை,

"இழிவு அறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய்" - குறள். 946

என்கிறார் திருவள்ளுவர்.

எளிமை ஓர் அறம்

நல்வாழ்விற்கு எளிமையையும் ஓர் அறமாகக் கருதி வாழ வேண்டும். காந்தியடிகள் மிக எளிமையான வாழ்க்கை வாழ்ந்த சான்றோர் என்பது உலகறிந்த செய்தியாகும். ஆடம்பரத்தைப் பாவம் என்றும் கருதியவர் காந்தியடிகள், நம் வாழ்வில் எளிமை வேண்டும். மற்றவர்களின் ஆடம்பத்தைக் கண்டு மனம் தளரக்கூடாது. எளிமை வாழ்க்கையினால் எந்தவித பயனும் இல்லை என்று எண்ணிச்சோர்வு கொள்ளக் கூடாது. எளிமையிலே செம்மையைக் காண முடியும். ஆடம்பரத்தில் அவ்வாறு காண இயலாது.

எவ்வளவு உயரப்பறந்தாலும் வானம் எட்டாமல் நிற்பது போல ஆடம்பரங்களில் இன்பம் எட்டாததாய் நிற்கிறது. 'ஆசைக்கு ஓர் அளவில்லை' என்கிறார் தாயுமானவர். எளிமையான வாழ்க்கை என்பது நம் பூமியில் இருக்கக்கூடிய புல்தரை போன்றது. எப்பொழுதும் நாம் வாழும் பகுதியிலும் அல்லது நம் எல்லைக்குள் இருக்கும் போதும் என்று சொல்லக் கூடிய வார்த்தை எளிமையில் தான் பெற முடியும்.

"போதும் என்ற மனமே
பொன் செய்யும் மருந்து"

என்ற பழமொழி எவ்வளவு பெரிய உண்மையை விளக்குகிறது.

நம் வாழ்வில் எளிமை ஓர் அறமாக இருக்க வேண்டும். எளிமை என்பது சிக்கனம் என்பதை அடிப்படையாகக் கொண்டு அறநெறியாகப் போற்றப்பட வேண்டும். எளிமை என்பது நல்வாழ்விற்கு மிக அவசியமான ஒன்றாகும்.

பொதுமை அறம்

நாம் அனைவரும் கடவுளின் மக்கள். கடவுளின் குடும்பத்தினர், என்று உணர்வதுதான் பொதுமை அறம் எனப்படும். அதனையே, நம் வாழ்க்கையின் அடிப்படையான அறம் என்று சொல்லலாம். பிறப்பு இறப்பு, உறக்கம் பசி, இரவு பகல், ஆண் பெண், இவையனைத்தும் பொதுவாக உள்ளன. கடவுளின் படைப்பில் பொதுமை நிலவுவதை உணர்ந்து ஆறுதல் அடைய வேண்டும்.

இராமலிங்க அடிகளார், பசியும், பட்டினியும் இல்லாமல் கொலையும், இல்லாமல் அமைதியாக வாழ வேண்டும் என்று விழைந்த பெருந்தகையாவார். இன்பம் துன்பம் சினம் உவகை முதலிய உணர்ச்சிகள் எல்லோருக்கும் பொதுவாக அமைந்திருத்தலைக் காணலாம். நடைமுறையில் மக்கள் அனைவரும் தம்மவர் என்று கருதும் மனப்பான்மையே பொதுமை அறம் எனப்படும்.

பண்பாடு

நல்வாழ்வு வாழ வேண்டும் என்று விரும்புவோர் தாமாக விடாமுயற்சி மேற்கொண்டால் தான் வெற்றிபெற முடியும். நல்வாழ்வு மனத்துக்கு அமைதியும் இன்பமும் தரும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுவிட்டால், பிறகு எவ்வளவு இடர்பாடுகள் வந்தாலும் அவற்றைக் கடந்து முன்னேறமுடியும். எந்த மாதிரியான சூழ்நிலையில் நாம் சிக்கினாலும் ஒரு சில நல்ல நூல்களின் துணைக்கொண்டு பண்பட்டு விளங்க முடியும்.

முடிவுரை

நாம் வாழும் இந்த காலம் பல வகையில் முன்னேறி இருக்கிறது. வசதிகளைப் பெருக்கிய முன்னேற்றங்களில் ஆபத்துக்களும் உள்ளன. நாம் நல்வாழ்வு வாழ்வதற்கு, உடம்பைப் போற்றல், வழிபாடு, பொதுமை அறம், பண்பாடு இவை அனைதத்தும் மிக அவசியமாகும். இவை அனைத்தும் நல்வாழ்விற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

67. மு. வ. வின் புதினங்கள் புலப்படுத்தும் அறம்

ரெ. சாந்தா
உதவிப் பேராசிரியர்
கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி
திருச்செந்தூர்.

முன்னுரை

விடுதலை இந்தியாவின் முதன்மைத் தமிழ்ப் பேரறிஞர்களுள் ஒருவராய் திகழ்ந்த மு. வரதராசனார் அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் அறத்தினைப் போற்றி வாழ்ந்தவர். எனவே அவர் தம் படைப்புகளிலும் அவற்றைப் புலப்படுத்தினார். அவ்வாறு அவர் புலப்படுத்திய அறக்கருத்துக்களை அவரது புதினங்கள் வாயிலாக விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மு.வ-வின் புதினங்கள்

இலக்கியவாதியாகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்த மு.வ பன்முகங்களை உடையவராய் திகழ்ந்தார். இலக்கிய வரலாறு, மொழியியல், சிறுகதை, நாடகம் எனப் பலதுறைகளில் தடம் பதித்த இவர் பல புதினங்களை எழுதியுள்ளார். அவை, செந்தாமரை,, கள்ளோ காவியமோ? அந்தநாள், மலர்விழி, பெற்றமனம், அல்லி, கரித்துண்டு, கயமை, நெஞ்சில் ஒரு முள், அகல்விளக்கு, மண்குடிசை, வாடாமலர் போன்றவையாகும்.

அறப்பார்வை

அறம் என்பது வாழ்க்கைக்குத் தேவையான சட்டங்களைக் குறித்ததாகும். மனிதன் இன்பமாக வாழ்வதற்கு அறவழியில் வாழ்வதே அடிப்படையாகும். இக்கருத்தை மு.வ. அவர்கள்,

"அறம் என்பது வாழ்க்கைச் சட்டம். அதன் வழியில
நின்று வாழ்வதே இன்ப வாழ்வு"
(திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் ப-301)

என்று தம் நூலில் குறிப்பிடுகிறார். இத்தகைய அறநிலைப்பாடுகளை மு.வ. அவர்கள் தம் புதினங்களில் பல பாத்திரங்கள் வாயிலாகப் புலப்படுத்துகிறார்.

அறம் - உயிர்

அறவழியில் பலருக்கு நம்பிக்கை ஏற்பட்டால் தான் தீயவர்கள் தலைநிமிர்ந்து நடக்கும் நிலைமாறும் எனும் கருத்துடைய மு.வ. அறத்தைத்

தன் உயிரினும் மேலாக, உன்னத கடவுள் நிலையில் வைத்துப் போற்றுகிறார். இதனை,

"நான் அறத்தை உயிராக, தெய்வமாகப்
போற்றுகின்றவன்"

என்று அல்லி எனும் நாவலில் வரும் அறவாழி வாயிலாகப் பேசுகிறார். மேலும்,

"திருவள்ளுவர் வகுத்த நெறியை விட்டு
அப்பால் செல்வதென்றால் உயிர் போகும்
போராட்டமாக இருக்கும்"

என்று அல்லி நாவலில் வள்ளுவர் புலப்படுத்திய உலக அறநெறி போற்றுகிறார்.

இல்லற அறம்

திருமண பந்தம் என்பது அறவழியல் செல்லும் போதுதான் இல்லற வாழ்வானது சிறக்கும் இதனையே வள்ளுவர்,

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்கிறார். இத்தகைய அன்பும் அறனும் நிறைந்த இல்வாழ்க்கையை இலக்கியப் பாத்திரங்கள் வழிப்புலப்படுத்துகிறார். இக்கருத்தை 'அகல்விளக்கு' எனும் நாவலில் வரும் வேலய்யன் என்பவன், சந்திரன் - வள்ளி இருவரின் இல்லற வாழ்வு குறித்து தம் மனைவியிடம் பேசுவதாக கூறுகிறார் மு.வ.

"கோவலனுடைய தவறு நன்றாகத் தெரிந்திருந்தும்
எதிர்த்துப் பிரிந்து வாழ்வதைவிட அந்தத் தவறான
வாழ்வுக்குத் துணையாக இருந்து சாவதே நல்லது
என்ற துணிவு கண்ணகியிடம் இருந்தது"

என்று கூறி அதன்வழி இல்லற வாழ்விற்குத் தேவையான அன்பினைப் புலப்படுத்துகிறார்.

சமூக - அறம்

மு.வ - வின் நாவல்கள் சமூகத்துடன் பிணைப்புற்று காணப்படுகிறது. எனவே அவர் புலப்படுத்தும் சமூக அறங்கள் சமூகத்தின் ஏற்றத்தாழ்வு நிலைகளுக்குக் காரணங்களை ஆய்வதாக அமைந்திருந்தன எனலாம்.

'கரித்துண்டு' எனும் புதினத்தில் சமூகத்தின் வறுமை நிலை பற்றிக் கூறுகிறார். வறுமை ஒழிந்தால் தான் வையக வாழ்வில் அமைதி நிலவும்

என்று கூறுகிறார். இதில்,

"ஊருக்கு ஒரு காந்தியும், திருவள்ளுவரும்,
புத்தரும் பிறந்தாலும், இந்த உலகத்தைத்
திருத்த முடியாது. சீர்ப்படுத்த முடியாது.
ஆனால் வறுமையை ஒழித்து விட்டால் தான்
காந்தியமும், திருக்குறளும் - அன்பும் நெறியும்
வாழ முடியும்"

என்று குமரேசன் கூற்றாகக் கூறுகிறார். மேலும் நாகரிகம் மிக்க இச்சமூகத்தின் போக்கைக் குறிப்பிடும் போது,

"இது ஊழல் உலகம், ஏழையாக வாழத்
துணிந்தவர்கள் மட்டுமே நல்வழியில் உறுதியாக
நிற்கலாம். என்னால் முடியாது முயல்களிடத்தில், மான்களிடத்தில்
புல்லைக் கொண்டு போகலாம். புலியிடத்தில்
ஓநாயிடத்தில் கத்தியும், துப்பாக்கியும் இல்லாமல்
போய்ப் பயன் என்ன? இந்த நாகரிக
உலகமே பொல்லா காடு..... இந்த
உலகத்தில் என்னைப் போன்றவர்களுக்கு வேறுவழியில்லை"

என்று தானப்பன் எனும் பாத்திரம் குழந்தைவேலிடம் கூறுவதாய் அமைந்துள்ள விதம் இன்றை வாழ்வியல் நிலைகளைப் படம் பிடிக்கிறது. இத்தகைய தீய நிலைப்பாடு மாற நல்லவர்களின் பழக்க வழக்கம் தொடர வேண்டும் என யதார்த்த சமூக அறம் பேசுகிறார். மு.வ. அவர்கள். மேலும் கரித்துண்டு நாவலில்,

"ஏழைகளுக்கு வயிற்றுரிமை கொடுக்காமல் வாக்குரிமை
மட்டும் கொடுத்துப் பயன் என்ன?"

என்று சமூக அவலத்தைப் படம் பிடிக்கிறார்.

பொதுவுடைமை - அறம்

அறநிலைப்பாடு என்பது அனைத்து உரிமைகளும் அனைவருக்கும் கிட்ட வேண்டும் என்ற பொதுவுடைமை சார்ந்ததே ஆகும். இக்கூறுகள் இவரது கள்ளோ? காவியமோ? எனும் புதினத்தில் வரும் அருளப்பன், மங்கை வாயிலாகப் புலப்படுத்துகிறார். இதனை,

"எல்லாக் குழந்தைகளுக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும்
இல்லையானால் எல்லாக் குழந்தைக்ளுக்கும் ஒரே
வகையான சில பொருள்களே கிடைக்க வேண்டும்.

அதுவும் முடியாதென்றால் எல்லாக் குழந்தைகளும் எதுவும் கிடைக்காமல் ஏங்க வேண்டும். ....

பொதுவுடைமை வந்தால் இந்தக் குறை தீரும் அல்லவா?"

என்று பொதுவுடைமை அறம் பகர்கிறார்

முடிவுரை

மேற்கூறிய அறக்கருத்துக்கள் வாயிலாக, மு.வ. அவர்களின் அறமனப்பான்மை புலனாகிறது. மேலும் சமூக மாற்றங்களுக்கு எழுத்து துணை செய்ய வேண்டும் என்ற அவரது எண்ண ஓட்டமும் புலனாகிறது எனலாம்.

68. குறுந்தொகைச்செல்வம் காட்டும் வாழ்வியல் கூறுகள்

அர. அன்பழகி
ஆய்வியல் நிறைஞர்
தமிழ்த்துறை
தூயநெஞ்சக்கல்லூரி
திருப்பத்தூர்.

முன்னுரை

டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் ஒப்பற்ற மாமனிதர். அவர் தமிழிலக்கிய உலகிற்கு மிகப்பெரும் தொண்டாற்றியுள்ளார். அவரின் ஒவ்வொரு படைப்பும் உள்ளம் கவருவதாகவும். தன்னுடைய தனித்தமிழ் நடையோடு மக்களுக்குப் பயனுள்ளதாகவும் கொடுத்துள்ளார். அவரின் 'குறுந்தொகைச்செல்வம்' என்னும் நூலின் பெருமைகளைப்பற்றயஜம் வாழ்வியற் கூறுகள் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

குறுந்தொகைச்செல்வம்

குறுந்தொகை என்னும் சங்க இலக்கிய நூலானது எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகும். இந்த நூல் முழுவதும் தலைவன். தலைவியின் இல்லற வாழ்க்கை பற்றியும். திருமணத்திற்கு முன் இருந்த உறவினைப்பற்றியும் மிக அழகாக எடுத்துக்கூறுகின்றது.

குறுந்தொகைச்செல்வம் எனும் மு.வரதராசனாரின் நூலில் தலைவன். தலைவியின் களவு, கற்பியல் வாழ்க்கை பற்றியும் பரத்தையிற் பிரிவு, பொருள்வயிற்பிரிவு எனும் பிரிவில் தலைவியின் மனநிலையும் தலைவனின் மனநிலையையும், தோழியின் வழிநடத்துதலும் மிகவும் எளிமையான முறையில் எடுத்துரைக்கிறார்.

தலைவன் தலைவியின் களவு வாழ்க்கை

அள்ளூர் நன்முல்லையார் என்ற புலவர் நெருஞ்சியைப் பார்த்தபோது அவருடைய நெஞ்சக்கிழியில் அது ஓவியமாக பதிந்துவிட்டது. அதை,

"புன்புலத்து அமன்ற சிறிஇலை நெருஞ்சிக்
கட்கின் புதும்லர் முள்பயந்தாங்கு" (குறுஞ். 202)

என்ற பாடலில் அள்ளூர் நன்முல்லையார்க்கு நெருஞ்சி மலர் புதுமையுடையதாக விளங்குகின்றது. கண்ணுக்கு இனியதாகவும்

விளங்குகிறது. 'கட்கின் புதுமலர்' எனப்பாராட்டுகின்றார். அவருடைய உள்ளம் இதனோடு நிற்கவில்லை கண்ணுக்கினிய இந்த மலர் வாடியதும் இன்னா செய்யும் முள் தோன்றுவதை உணர்கிறார். இதிலிருந்து தலைவன், தலைவியின் களவு வாழ்வில் துன்பம் விளைவதே வாழ்க்கை எனும் உண்மையை விளக்குகிறார்.

மற்றொரு பாடலில் காதல் கொண்ட தலைவன் மணந்துவாழும் ஒருத்தியின் உள்ளம் புலவரின் நினைவுக்கு வருகின்றது. முதலில் இனிய செய்து பிறகு இன்னா செய்யும் காதலனை நினைந்து அவள் வருந்துகிறாள் காதலனின் செயலை அந்த நெருஞ்சி மலர் எடுத்துக்காட்டுகிறது. வருந்தும் காதலி சொல்லும் சொல்லாக புலவரின் பாட்டு அமைகிறது.

"நோம்என் நெஞ்சே நோம் என் நெஞ்சே
புன்புலத் தமன்ற சிறியிலை செருஞ்சிக்
கட்கின் புதுமலர் முள்பயந் தாஆங்கு
இனிய செய்தநம் காதலா
இன்னா செய்தல் நோம்என் நெஞ்சே" குறு. 202

என பாடியுள்ளார்.

தலைவன் தலைவியின் கற்பு வாழ்க்கை

ஒருவனுக்குத் தன் வாழ்க்கையை உரிமையாக்கி அவன் வழியே தன் வழி என வாழும் காதலி. கண்மூடித்தன்மை உடையவள் அல்ல. தொடக்கத்தில் அவனுடைய பண்புகள் இன்ன இன்ன என ஆராய்ந்து உணர்ந்தே காதல் கொண்டாள். ஆகையால் அவனைப்பற்றி அசைக்க ஒண்ணாத நம்பிக்கை அவள் உள்ளத்தே ஏற்பட்டது. அத்தகைய நம்பிக்கை இருந்ததால்தான் கற்பு எனும் நல்ல ஒழுக்கம் இயல்பாக அமைந்தது. 'ஒருமை மகளிரே போல' என உவமையாக்கி போற்றப்படும் பெருமை வாய்ந்தது.

காதலனோடு கொண்ட உறவின் பெருமையை நினைத்த அவள் நெஞ்சத்தில் பெரிய நிலவுலகம் உவமையாக நின்றது. அந்த உறவின் உயர்வை நினைத்தபோது வானம் தோன்றியது. அளத்தற்கரிய பெற்றியை நினைத்தபோது கடல்நீர் தோன்றியது. அவன் வாழும் மலையை நினைத்த போதும் அவள் உள்ளம் பெருமிதம் எய்தியது. அந்த மலையில் இழைக்கப்படும் தேன் பெருந்தேனாக. அவற்றைத் தந்த மலர்கள் உயர்ந்த குறிஞ்சி மலர்களாக அவளுடைய நினைவெல்லாம் சிறந்து விளங்கியது. கற்பு வழிபட்ட ஒரு பெண்ணின் உரமான நம்பிக்கையைப் புலவர் தேவகுலத்தார் இவ்வாறு எடுத்துரைத்தார்.

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று

நீரினும் ஆரள வின்றே சாரற்
கருங்கோற் குறி சிப்பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"

களவு கற்பில் தோழியின் பங்கு

குறுந்தொகையில் வரும் தோழி அனுபவம் மிக்கவளாகவும், தலைவன் தலைவியின் உள்ளங்களை நன்கு உணர்ந்தவளாகவும் இருக்கிறாள்.

தலைவனுக்குத் தோழி திருமணம் செய்துகொள்ளாமலே வாழும் காதல் வாழ்வில் பல இடையூறுகள் உடையது என்பதை ஒருவகை காட்சியாலும். திருமணம் செய்துகொண்டு வாழும் காதல் வாழ்வு இடர்பாடு அற்றது என்பதை மற்றொரு வகைக் காட்சியாலும் அவனே உணர்ந்து தெளியுமாறு எடுத்துரைக்கிறாள்.

மூங்கிலை வேலியாக உடைய வேரிலே காய்கொள்ளும் பலாமரங்கள் வளர்ந்த மலைச்சாரல் உடைய நாட்டின் தலைவனே! திருமணம் செய்துகொள்ளும் செவ்வி உடையவனாக ஆகுக. யார் அதனை அறியவல்லவர். மலைச்சாரலில் சிறிய கிளைகளில் பெரும்பழங்கள் தொங்குவதுபோல இவள் உயிர் மிகச்சிறியதாக உள்ளது. இவள் கொண்ட காதலோ பெரியதாக உள்ளது என தலைவனுக்கு அறிவுறுத்தினாள்.

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி
யார.்.தறிந்திசி னோரே சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கிவள்
உயிர்த்தவ சிறிது காமமோ பெரியது"

வரைவு கடாதல்

தலைவன் தலைவியின் களவ வாழ்வில் காதல் கொண்டுபின் அந்த அன்பை இல்லறவாழ்வின் மூலம் பெற வரைவை மேற்கொள்கின்றனர். பெற்றோர், தங்கள் காதலை ஏற்காதபோது உடன்போக்கையும் பெற்றோரின் சம்மதத்துடன் திருமணச்சடங்கின் மூலம் இல்லறத்தில் இணைவர்.

மடலேறுதல்

தலைவன் தன்னுடைய காதலைத் தலைவி ஏற்காதபோது பனங்கருக்கினால் செய்யப்பட்ட கூர்மையான பகுதியின்மீது அமர்ந்து கொண்டு. தலைவியின் படத்தினை வரைந்து அதை தெருவெங்கிலும் காண்பித்து இவள்தான் நான் விரும்பும் பெண் இவளைத் திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறேன் என்று தன் எண்ணத்தை

வெளிப்படுத்துவான். இதை,

"ஏறிய மடல்திறம் இளமைதீர்திறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇ"

என்ற பாடலின் மூலம் அறியலாம்.

பரத்தையிற்பிரிவு

தலைவன், தலைவியைப் பிரிந்து பரத்தையின் வீட்டில் சில நாள் தங்கியிருந்து. பிறகு தன் வீட்டிற்குத் திரும்பினான். அதற்குமுன் தலைவியின் மனம் வெறுத்து ஊடல் கொள்ளாதிருப்பதற்காக சிலரிடம் சொல்லியனுப்பினான். அவன் சார்பாக வந்தவர்களை நோக்கி தோழி நியாயமான சொற்களால் தலைவன் கேட்டு வருந்தும் வகையில் கூறினாள்.

காலையில் எழுந்து தேரை ஆயத்தம் செய்து பரத்தையரை நோக்கி தேடிச்சென்ற தலைவன் மிக விளக்கமானத் தோற்றத்தொடு இருக்கிறான் என்று அவனுடைய மனைவி மனம் வருந்திகிறாள்:.

"காலை எழுந்து கடுந்தேர்ப்பண்ணி
வாலிழை மகளிர்த் தழீஇய சென்ற
மல்லல் ஊரன் எல்லினன் பெரிதுஎன
மறுவரும் சிறுவன் தாயே
தெறுவது அம்மஇத் திணைப்பிறத் தல்லே"

குடியைப் பழிப்பதுப் போல் தலைவனுடைய தீய நடத்தையைக் கடிந்துக் கூறினாள்.

பொருள்வயிற்பிரிவு

'உன்னைப்பிரியமாட்டேன்' என்று தலைவிக்கு அறிவுறுத்தும் தலைவன் வெளிநாட்டிற்குச்சென்று பொருள் தேட முனைந்து பிரியும்போது அவள் உள்ளத்தில் மதிப்பான வாழ்க்கையை காட்ட கடமையைப்போற்றுதல் அவனுடைய பண்பு அவனுக்காக வீட்டில் வாழ்பவள் மனைவி அவனுக்குப் பலவழியிலும் துணையாக இருந்து உதவுபவள் அவள். ஆடவர்க்குக் கடமையே உயிர். மகளிர்க்கு அந்த ஆடவரே உயிர்.

"வினையே ஆடவர்க்கு உயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர். . ." குறு. 135

தலைவன், தலைவியின் அன்பு வாழ்க்கை

தலைவனும் தலைவியும் திருமணம் செய்து இல்வாழ்க்கை தொடங்கிய ஒரு குடும்பத்தில் மனைவி தயிர்க்குழம்பு சமைத்தாள். முற்றிய தயிரைத் தன் மெல்லிய விரலால் பிசைந்தாள். சேர்ப்பன சேர்த்து தாளிக்க

தொடங்கினாள். குறித்த நேரத்தில் விரைந்து தாளிக்கத் தவறினால் நறுமணமும். சுவையும் குன்றுமாதலின் தயிர்பிசைந்தக் கையைக் "கழுவாமலே நெகிழ்ந்த தன்ஆடையை உடுத்திக்கொண்டாள். உடனே தாளிக்கத் தொடங்கினாள். தாளிப்புப் புகை மேல் எழுந்து கண்ணில் பட்டது. புகைக்காகத்தயங்கி சிறிது பொறுத்தாலும் சுவை பயன் கெடும் என அஞ்சிப் புகைக்கிடையே உற்றுநோக்கி துழாவிச் சமைத்து முடித்தாள். இவ்வாறு சமைத்த இனிய புளிச் சுவையுடையக் குழம்பை கணவனுக்கு இட்டபோது நன்றாய் இருக்கின்றது எனப் பாராட்டினான்.

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழா அது உழுஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான் துழந்து அட்ட தீம்புளிப்பாகர்
இனிடிதன கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே" குறு. 167

முடிவுரை

இவ்வாறு இந்நூலில் அகப்பொருள் சார்ந்த செய்திகள் மிகவும் அழகாக எடுத்து கூறுகிறார். தலைவன், தலைவியின் அன்பு வாழ்க்கை வாழ்வது வரை டாக்டர் மு. வரதராசனார் எடுத்துரைக்கிறார்.

69. டாக்டர் மு. வ. அவர்களின் தங்கைக்கு எண்ணங்களின் பதிவு

கு.அந்தோணிராஜா
விரிவுரையாளர், தமிழ்த்துறை
இலொயோலா கல்லூரி
வேட்டவலம்
திருவண்ணாமலை மாவட்டம்-606 754.

டாக்டர் மு.வ. அவர்கள் நல்ல தூய சிந்தனையாளர். அவர் எழுதிய நூல்களைப் படிப்போர் அவர் அந்நூல்களில் தந்துள்ள கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் புதிய சிந்தனைகளை அவர்கள் முன் வைப்பார். ஆரவாரமற்ற அமைதி நடை, அணுகி ஆராயும் மனம். எளிய தூய அற வாழ்வையே எழுத்தில் வற்புறுத்தும் திறம். தமிழ், தமிழர், தமிழ்நாடு எனும் துடிப்பு அவர் எழுத்துகளில் எங்கும் காணலாம். இத்தகு தமிழறிஞரான மு.வ. அவர்களின் கடித இலக்கியமான 'தங்கைக்கு' என்னும் நூலில் அவரது கருத்து விளக்க ஆற்றலையும் அவர்தம் மனத்தில் முகிழ்க்கும் எண்ணங்களை மற்றவர்க்குப் புலப்படுத்தும் திறனையும் திறனாய்வு செய்யும் நோக்கில் இவ் ஆய்வுக் கட்டுரை அமைகிறது.

நூலின் நோக்கம்

மு.வ. எழுதி 1950-ஆம் ஆண்டில் வெளிவந்துள்ள **'தங்கைக்கு'** எனும் நூலே, அவர்தம் கடித இலக்கிய வரிசை நூல்களில் முடிமணியான நூலாகத் திகழ்கிறது. **'அன்புள்ள தங்கை'** என்று தொடங்கி, **'உன் அன்புள்ள அண்ணன் வளவன்'** என்று நூலில் அமைந்துள்ள எட்டு மடல்களும் முடிகின்றன. 80 பக்கங்கள் கொண்ட இந்நூல் முழுதும் 'வையத்துள் வாழ்வாங்கு வாழ' மகளிர் போற்றிப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் யாவை? என்பது நன்கு உணர்த்தப்படுகின்றன. திருமணம் ஆன ஒரு பெண், தன் வாழ்க்கையில் வழுக்கி விழாமல், தன் வாழ்வை வளப்படுத்தி வாழ வகைசெய்யும் முறையில் இந்நூல் அழகுற அமைந்து பொலிகின்றது. நேருக்குநேர் நின்று உள்ளத்தின் உணர்ச்சியுடன் பேசிக் கொள்வது போன்று இக்கடிதங்கள் அமைந்துள்ளன.

அன்புடை மகளிர் மாண்பு

இளமையிலிருந்தே நீ அறிவும் திறமையும் அன்பும் பணிவும் உள்ள பெண்ணாக விளங்கியதைக் கண்டிருக்கிறேன் அல்லவா? "பிறரிடம் கொள்ளும் விருப்பு வெறுப்புக்களில் பிடிவாதம் காட்டாதே. இதில் பிடிவாதம் பெருந்தீங்கு உண்டாக்கும். 'பெண்கள் பிடிவாதமானவர்கள்; நினைத்ததை

முடிக்காமல் விடமாட்டார்கள்' என்று பழிச்சொல் இருக்கிறது. அதை மாற்றிவிடு. அன்புக்காக விட்டுக்கொடுப்பவர்கள் பெண்கள் என்பதை உன் வாழ்வில் புலப்படுத்து.

காலத்திற்கேற்ப புதிய நோக்கில் பெண்களைப் பார்த்து, பழமையிற் கொள்ள வேண்டியனவற்றைக் கொண்டு, புதுமையில் போற்றி நிற்க வேண்டுவனவற்றையும் டாக்டர் மு.வ. அவர்கள் விடாது குறிப்பிடுகின்றார் என்பதனை நூலின் பலவிடங்களிலும் காணலாம்.

இல்வாழ்க்கை

இல்வாழ்க்கை பலசரக்குக் கடைபோல் ஆகிவிட்டது. ஒரே பொருளை விற்கும் கடைபோல் இல்லாமல் பல பொருள்களையும் கவனித்து விற்கும் திறமையில்லாவிட்டால் பல சரக்குக் கடையில் வாழ முடியுமா? நாம் பலருடைய வாழ்க்கையில் கலந்திருக்கிறோம்; பலர் நம்முடைய வாழ்க்கையில் கலந்திருக்கிறார்கள். ஆகையால் கடமைகள் பலவாகிவிட்டன. இந்தக் காலத்தில் ஒரு இன்பத்தையோ ஒரு குறையையோ எண்ணித் தலை மேல் கை வைத்து உட்கார்ந்து விட்டால், யாரும் முன்னேற முடியாது. எதற்கும் தயங்கி நிற்காமல் ஓடுகின்ற கடிகாரம் போல் கடமைகளை அஞ்சாமல் செய்கின்றவர்கள் தான் இந்தக் காலத்தில் தலைமைப் பதவிக்குத் தக்கவர்கள். குடும்பத் தலைவியும் இப்படி இருந்தால்தான் வாழ்வு நன்றாக நடக்கும். யாராவது தன்னைக் குறை கூறினார்கள் என்றால், அதையே எந்நேரமும் எண்ணிக்கொண்டிருப்பது யாராவது நோயால் வருந்துகிறார்கள் என்றால், எந்நேரமும் அவர்களையே நினைந்து உருகுவது; இவ்வாறு வாழ்வது கூடாது.

இல்வாழ்க்கைக்காகப் பொறுமை; ஆனால் அந்தப் பொறுமையால் இல்வாழ்க்கை கெடுவதானால் என்ன செய்வது? உடம்புக்காகத் தான் உணவு; அந்த உணவால் உடம்பு அழிவதானால் பட்டினியைப் போற்ற வேண்டாமா? எனக் கூறுவதன் மூலம் இல்வாழ்க்கையானது இன்பம் துன்பம் நிறை குறை போன்றவற்றை எல்லாம் உள்ளடக்கியது. அதற்கேற்றபடித் துவண்டுவிடாமல் வாழ்வதே சிறந்தது என உணர்த்துகிறார்.

முன்னோர் கண்ட நன்னெறி

இல்வாழ்க்கை இனிதே நடைபெறுவதற்கு முன்னோர் வகுத்துச் சென்றுள்ள வாழ்வியல் அமைப்பினைப் பின்வருமாறு வகையுறப் போற்றியுள்ளார் டாக்டர் மு.வ. அவர்கள்.

"அந்தக் கால நிலையை ஒட்டி இல்வாழ்க்கை சீராய் நடைபெறுவதற்காக முன்னோர் சில திட்டங்கள் அமைத்திருந்தனர். ஆண்

உடல்வலி மிகுந்தவன்; ஆகையால் அவன் வெளியுலகில் அலைந்து பொருள் தேடுக என்று அமைத்தனர். பெண் உடல்வலி குறைந்தவள்; ஆக்க வேலையில் ஆர்வம் நிறைந்தவள்; ஆதலால் வீட்டிலிருந்து அமைதியைக் காத்து வருக என்று அமைத்தனர். அலைவுக்கு ஏற்றது ஆண் உடல், அமைதிக்கு உரியது பெண் உடல் என்று அவர்கள் வகுத்த முறை இயற்கையோடு இயைந்த முறையாக இருந்தது. அதற்கு ஏற்றவாறே ஆண் வயதில் மூத்தவனாக இருக்குமாறும் பெண் இளையவளாக இருக்குமாறும் ஏற்படுத்தினர். இன்றைக்கும் உலகில் பெரும்பான்மையோர் இதையே போற்றி வருகின்றனர். "முன்னோர்களின் அறிவுரைகள் எத்துணை மேன்மை மிக்கது, அதை மறந்து உரிமைப் பேச்சு பேசுவதில் பயனென்ன?" என்று, முன்னோர்கள் கண்ட வாழ்வியல் நெறியை விளக்குகின்றார்.

அறிவுரைகள்

வாழ்க்கை வெற்றி பெறுவதற்கான அறிவுரைகளை நூலில் ஆங்காங்கே பொதித்து தந்துள்ளார். சான்றாக,

ஆடம்பரம், ஆரவாரம், ஆணவம்

"திருவள்ளுவரின் அறத்துப்பால் நெறியையும், காந்தியடிகளின் எளிய தூய நெறியையும் நம்பினால் எவ்வளவோ தொல்லைகளை எளிதில் தீர்த்துக் கொள்ளலாம். தனி வாழ்க்கையைப் பொறுத்த மட்டில்தான் இதைச் சொல்கிறேன். நெறியை முழுவதுமாக நம்பாவிட்டாலும், ஆடம்பரமற்ற ஆணவமற்ற அமைதியான வாழ்க்கை நல்லது என்பதையாவது நம்புவார்களானால் போதும். ஆடம்பரம், ஆணவம், ஆரவாரம் இவை தாம் இந்தக் காலத்து நாகரிகத்தின் உயிர் நாடிகள். தனி வாழ்க்கையில் மனம் பயன்படுவதற்கு இவைகள் தடைகள் என்பது என் கருத்து."

தன்மானம்

"தனக்கென்று மிகுதியாகப் புகழ் தேடிக் கொள்வது பொல்லாத தன்னலம்; தன்மானத்தைப் பெரிதாக எண்ணுதல் அதைவிடக் கொடிய தன்னலம். கணவன் மனைவி என்று இருவர் சேர்ந்து வாழத் தொடங்கிய பிறகு தனியே புகழ் தேடுவதும் தனியே மானம் போற்றுவதும் தவறானவை.

புகழ் மானம் மாயை

"கணவன் புகழைக் கண்டு மகிழும் மனம் இல்லாத மனைவி, மனைவியின் மானத்தைத் தன் மானமாகக் கருதாத கணவன்-இவர்கள் சேர்ந்து வாழத் தகுதி உடைவர்களா? உடம்பு பணம் இவற்றில் சுற்றத்தாரும் அயலாரும் தலையிடுவது குறைவு. ஆனால் புகழ் மானம் ஆகிய துறைகளில் தாய்வீட்டார், மாமி வீட்டார், நண்பர்கள் உட்பட எல்லாரும்

தலையிட்டு அவரவர்கள் பங்குக்குத் தூபம் போட்டு இல்வாழ்க்கைக்குத் தீமை செய்வதை நீ எங்கும் பார்க்கலாம். இந்தத் தொல்லைகள் இல்லாமல் அமைதியாக வாழ வழி சொல்லட்டுமா? புகழ் மானம் ஆகியவற்றையும் ஆடம்பரப் பொருள்களாகக் கருதி ஒதுக்கி எளிய வாழ்க்கையை நாடு. ஒழியட்டும் அந்த மயக்க உணர்ச்சிகள்.

குழந்தைகளிடம் பழகும் முறை

"குழந்தைகளுக்கு அறநூல்களைத் திணிப்பதைவிட, அறிவுரைகளைக் கூறுவதைவிட, அவர்கள் பின்பற்றத் தக்க வழியில் நாம் வாழ்வதுதான் நல்லது என்று உள நூல் தெளிந்த அறிஞர்கள் கூறுவார்கள். அறவுரைகளும் அறிவுரைகளும் வற்புறுத்தி ஊட்டும் உணவு போன்றவை; அவை நன்றாகச் செரிப்பதில்லை. பெரியோரின் நடத்தை அப்படி அல்ல; குழந்தைகள் தாமே விரும்பி உண்ணும் பழம் போன்றது அது. அது எளிதில் உள்ளத்தில் பதிந்துவிடும் என்பார்கள். ஆகவே, பெண்கள் குளிர்ந்த உள்ளத்தோடு மலர்ந்த முகத்தோடு இனிய சொற்களோடு குழந்தைகளிடம் பழகுவார்களானால், அதுவே குழந்தைகளுக்குக் கற்பிக்கும் சிறந்த கல்வியாகும். அதுவே பெரிய தொண்டு; எத்தனையோ பேரைத் திருத்தும் ஒப்பற்ற தொண்டு; பத்திரிகைகளும் கட்சிகளும் புகழ் வேண்டாத அரிய தொண்டு.

மனைவி போற்ற வேண்டிய நெறிகள்

இல்வாழ்க்கையில் நிறைந்த பயனான வெற்றி காண்பதற்கு மனைவி ஒருத்தி கடைபிடிக்க வேண்டிய கோட்பாடுகளாக டாக்டர் மு.வ. அவர்கள் பின்வருமாறு சில கருத்துக்களை வற்புறுத்தி விளக்குகிறார்.

"கணவனோடு வாழும் ஒருத்திக்குக் கணவனுடைய அன்பே முதன்மையானது; மக்கள் இரண்டாம் நிலையினர்; கணவன் பெற்றோரும் தன் பெற்றோரும் மூன்றாம் நிலையினர்; நண்பரும் உறவினரும் நான்காம் நிலையினர்; புகழும் மதிப்பும் ஐந்தாம் நிலையின; கலையும் பொழுதுபோக்கும் ஆறாம் நிலையின; தெருவாரும் ஊராரும் ஏழாம் நிலையினர்; இப்படியே மற்றவற்றையும் மற்றவர்களையும் முறைப்படுத்தி வைத்துக் கொள்ளலாம்."

"அன்புக்காக விட்டுக்கொடுத்து இணங்கிட, உரிமைக்காகப் போராடி காலம் கழிக்காதே என்று நான் சொல்வேனேயானால், அது உனக்கும் உன்னைப் போன்ற பெண்களுக்கும் மட்டும் சொல்லும் அறிவுரை என்று எண்ணாதே. என்னுடன் பழகும் நண்பர்களான ஆண்கள் பலர்க்கு இதையே

நான் சொல்லியிருக்கிறேன. 'ஒருவர் பொறை இருவர் நட்பு என்னும் நாலடியாரின் பொன்மொழி இல்வாழ்க்கையின் மந்திரமாக விளங்கவேண்டும்; ஒருவேளை கணவனும் இன்னொரு வேளை மனைவியுமாக விட்டுக் கொடுத்தால்தான் வாழ்க்கை எளிதாக நடக்கும்."

நடைச் சிறப்பு

டாக்டர் மு.வ. அவர்கள் கையாளும் நடை எளிமையானது; இனிமையானது; சிக்கலற்றது; தூய்மையும் தெளிவுங் கொண்டது; திட்பமும் நுட்பமும் செறிந்து விளங்குவது. "உங்கள் அன்பான இல்வாழ்க்கை வளர்பிறைபோல் வளர வேண்டும் என்று விரும்புகின்றேன். அது என் வாழ்த்துதலில் இல்லை; நீங்கள் வாழும் முறையில் இருக்கிறது."

"அன்புக்காக விட்டுக் கொடுத்து இணங்கி நட, உரிமைக்காகப் போராடிக் காலம் கழிக்காதே." "அம்மா! நீ கணவனுடைய மனம் அறிந்து நடந்து கொள்வதில் வல்லவனாக இருக்க வேண்டும். மனம்தான் வாழ்க்கை. மனம் அறிந்து மகிழ்விக்கத் தெரியாத பெண்கள், அழகு பண்பு திறமை எல்லாம் இருந்தும் வாழ்க்கையில் ஏமாந்து துன்புறுகிறார்கள். அழகும் பண்பும் திறமையும் குறைவாக இருந்தாலும் மனம் அறிந்து நடக்கத் தெரிந்த பெண்கள் வெற்றி பெறுகிறார்கள்."

முடிவுரை

'கருத்துக்களே ஆற்றல்மிக்க படைக்கலன்கள்' என்று டாக்டர் மு.வ. அவர்கள் எண்ணியதனை இக்கட்டுரை உணர்த்துகிறது. அவர் 'நினைத்ததை எழுதாமல் நினைத்து எழுதுபவர்' எனக் கலைஞர் கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு டாக்டர் மு.வ. அவர்கள் தம்முடைய 'தங்கைக்கு' எனும் கடித நூலில், இல்வாழ்க்கையில் பெண்கள் அன்புடைய மகளிராய்த் திகழவேண்டும், இன்ப துன்பங்களை ஏற்று பொறுமையுடனும் முன்னோர் கண்ட நெறி வழுவாமல் காத்து ஆடம்பர ஆசையில் மூழ்காமல், வளர்க்கும் பிள்ளைகளுக்கு முன் உதாரணமாய்த் திகழவேண்டும், என்பது போல பல கருத்துக்களை விளக்குமிடங்களில் ஏற்ற சான்றுகளையும் நிகழ்வுகளையும் எடுத்துக் கூறி தன் மன உணர்ச்சிகளைப் படிப்பவர் மனத்தில் பதிய வைக்கிறார்.

70. மு. வரதராசனாரின் முல்லைத் திணைப் பற்றிய சிந்தனைகள்

முனைவர் க.மோகன்காந்தி
தமிழ்த்துறைத் தலைவர், பிரிவு-2
தூய நெஞ்சக் கல்லூரி(தன்னியல்)
திருப்பத்தூர், வே.மா.635 601.

'தமக்கென முயலா நோன்தாள், பிறர்க்கென முயலுநர் உண்மையானே' என்னும் புறநானூற்றுத் (182) தத்துவத்திற்கிணங்க தமக்கென வாழாமல் தமிழுக்காகவும் தமிழருக்காகவும் வாழ்ந்த சில தமிழறிஞர்களில் மு.வரதராசனாரும் ஒருவர்.

இவர் சங்கத் தமிழரின் வாழ்வியலைக் குறுந்தொகை விருந்து, நற்றிணைச் செல்வம், ஓவச்செய்தி எனப் பல நூல்களில் ஆராய்ந்துள்ளார். 'முல்லைத் திணை' என்னும் நூல்வாயிலாக சங்கத் தமிழரின் வாழ்வியல் விழுமியங்களை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

காடும் காடு சார்ந்த நிலம் முல்லையாகும். மாயோன், காலம்காலம், மாலைக் காலம், வினைக் காரணமாகப் பிரிதல், ஆற்றியிருத்தல், ஆநிரை மேய்த்தல், இனக்குழு வாழ்க்கைப் போன்றவை முல்லை நிலத்தின் முக்கிய அடையாளங்களாகும். சங்கத் தமிழரின் நில அடிப்படையிலான வாழ்வியலில் மிகவும் இன்பமான இடமாக முல்லை நிலம் விளங்கியுள்ளது. குறிஞ்சி நிலம் போன்று போராடும் வாழ்க்கை இல்லாமலும் மருதம், நெய்தல் நில மாந்தர்களைப் போன்று கடின உழைப்பு இல்லாமலும் முல்லை நில மாந்தர் வாழ்ந்தனர். காதலில் இன்பத்தை நுகர்ந்தும், ஆநிரை மேய்த்தும் இன்பமாக வாழ்ந்த மக்கள், ஏறு தழுவலையும், போருக்காக வெகுண்டெழுவதையும் தம் கடமைகளாகப் போற்றினர். முல்லை நிலம் தமிழர் வாழ்வியலில் பெற்றிருந்த செல்வாக்கினை இக்கட்டுரை இரண்டு தலைப்புகளின் கீழ் ஆராய்கிறது. 1. அரசுரிமையும் போரும் 2. முல்லை நில வாழ்வியல் என்பனவாகும்.

1. அரசுரிமையும் போரும்

தமிழ் மாந்தர் வரலாற்றில் நாகரிகத்தின் பிறப்பிடமாக முல்லை நிலத்தை மு.வ போற்றுகிறார். 'மக்கள் ஓர் இனமாய்க் கூடிச் சமுதாயமாய் அமைந்தது முதன் முதலில் முல்லை நிலத்திலாகும்' (ப.19) என்னும் கூற்றுத் தமிழரின் இனக்குழு வாழ்க்கையின் தொடக்கத்தை நினைவூட்டுகின்றது. இந்நிலமே அரசுரிமை உருவாக ஏதுவாக அமைந்த இடம் என்னும் சிந்தனையை மு.வ. முன் வைக்கிறார். அரசுரிமை உருவாக்கத்தின் சான்றாக அரசன் கையிலிலுள்ள செங்கோலும் ஆயன்

கையில் ஆடு, மாடுகளுக்குத் தழைகளைக் கொய்ந்து தரும் வளைந்த கோலும் ஒற்றுமைப்படுத்தப்படுவது ஏற்புடையதாக உள்ளது. மேலும் முல்லை நிலத் தலைவி, வினைக் காரணமாகப் பிரிந்த தலைவனுக்காக ஆற்றியிருப்பதும் போர்ப் பிரிவேயாகும்.

'வஞ்சி தானே முல்லையது புறனே' - தொல்.பொருள்.61

என்னும் நூற்பா பகைவேந்தர் மேல் போரெடுத்துச் செல்லும் நிகழ்வைக் குறிக்கிறது. முல்லைப்பாட்டு, சங்க இலக்கியத் தொகைப் பாடல்கள் பலவும் முல்லை நிலத் தலைவன் பெரும்பாலும் போர்க்காரணமாகப் பிரிந்ததாகவே கூறுகின்றன. மேலும் 'மாடு' என்ற சொல் செல்வத்தைக் குறிக்கும் சொல்லாகும். ஆநிரைப் போற்றல் முல்லை நிலத்தின் தொழிலாக இருப்பதால், வேற்று நிலத்தார் முல்லை நில ஆநிரைகளைக் கவர வந்தது போருக்கு வித்திட்டது எனலாம். இன்றைக்கும் ஆநிரைக் கவர்தல், மீட்டல் முல்லை நிலத்தில் நடந்ததற்கானத் தொல்லியல் சான்றுகள் காணக் கிடைக்கின்றன. அடர்ந்த வனப்பகுதிகளைக் கொண்ட செங்கம் காடுகள், தருமபுரி காடுகளில் எண்ணற்ற நடுகற்கள் கிடைப்பது முல்லை நிலப் போரை உறுதிப்படுத்தும் ஆதாரங்களாகும். அவ்வகையில் தமிழரின் அரசுரிமைத் தோற்றம் முல்லை நிலத்தில் என்பது உறுதியாகிறது.

போர்க் காரணமாகப் பிரிவும் தலைவன் கார்காலத் தொடக்கத்தில் தலைவியை வந்தடைவதாகக் கூறுகிறான். இக்கூற்றுத் தமிழர் மழைக்காலத்தில் போர்ப் புரிவதில்லை என்பதை உறுதிப்படுத்துகிறது. "நாட்டின் காரணமாகப் போர்க்காலத்தில் வீரப்போர் புரிய வேண்டும் என்ற அழைப்பு வந்தபோது மகிழ்ச்சியோடு எழுந்தார்கள் பெரும்பாலும் திருமணமாகிக் குழந்தை பெற்றவர்களே போர் வீரராய்த் திரண்டு எழுந்தார்கள்" (ப.22) என்று மு.வ கூறும் செய்திக்கு வலுவூட்டும் விதத்தில் புறநானூற்றில் நெட்டிமையார் பாடல் சான்று பகர்கிறது.

"ஆவும், ஆனியற் பார்ப்பன மாக்களும்
. . . . .
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம் அம்பு கடிவிடுதும்" - புறம்.9:1-5

என்னும் பாடலடிகள் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமி பெருவழுதி திருமணமாகி, புதல்வர் பெறாதவரைக் கொல்லமாட்டான் என்றுரைக்கிறது. இதன் மூலம் பிள்ளைப்பேறு பெற்றவரே ஆண்மையின் அடையாளமாகப் போற்றப் பெற்றுள்ளனர் என்பது உறுதியாகி நிற்கின்றது. எனவே போர் புரிய திருமணமாகிப் பிள்ளைப்பெற்ற முல்லை நில ஆண்கள் சென்றனர் என்பது உறுதியாகிறது. போருக்கு வெகுண்டெழும் கணவன்மார்களை வீரத்துடன் வழியனுப்பி, ஆற்றியிருத்தல் பெண்களின் வீரமாக

மதிக்கப்பெற்றது. இறுதியாகப் போரில் வெற்றி பெற்றுத் தலைவன், தலைவியைக் காண முல்லை நிலத்தின் வழியே வந்தடைகிறான்.

2. முல்லை நில வாழ்வியல்

தலைவன், தலைவியின் முல்லை நில வாழ்வியல் கூறுகளை மு.வ அழகுறப் புலப்படுத்துகிறார். முல்லை நிலத்தில் மழைப்பெய்த ஆறு திங்களுக்கு மட்டுமே வேளாண்மைச் செய்வர். பிற மாதங்களில் ஆடு, மாடுகளை மேய்க்கும் தொழில் மட்டுமே உண்டு. (ப.21) என்று மு.வ கூறுகிறார். மேலும் அக்காலங்களில் முல்லை நில வாழ்வியலின் மிக முக்கிய அடையாளமான ஏறு தழுவல் நடைபெறும். ஆயர் குலப் பெண்ணை மணம் புரிய எண்ணும் ஆய இளைஞன் வீரம் பொருந்தியவனாக இருக்கவேண்டும். கொல்லும் கொம்புகளையுடைய காளையைத் தழுவ அஞ்சும் இளைஞனை ஆயப்பெண் இப்பிறவியல்ல அடுத்த பிறவியிலும் மனத்தால் கூட எண்ணமாட்டாள். இதனை,

"கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்" - முல்லைக் கலி.2

என்ற பாடலடிகள் முல்லை நிலத்தாரின் திருமணம் பற்றிய கொள்கைகளை வெளிப்படுத்துகின்றன.

முல்லை நிலத்தின் வேளாண்மையும் ஆநிரை மேய்த்தலும் சிறப்பாக நடைபெற்றுள்ளது. ஒரு நாள் இரவு பெருமழைப் பொழிந்தது. மறுநாள் உழவர் ஏரைப்பூட்டி நிலத்தை உழுது வரகினைப் பயிராக விதைத்தனர். உழவுத் தொழில் புரிந்த உழவர் பெருமக்கள் ஓலைக் குடையைத் தலைமேல் பிடித்துக் கொண்டு தொழில் செய்தகாட்சி, கலைமான் கூட்டம் அங்கெல்லாம் சுற்றித் திரிவதுபோல் இருந்தது. அகநானூற்றுப் (64) பாடலை மு.வ.மேற்கோளாகக் காட்டுவது முல்லை நில வேளாண்மைக்குச் சாலவும் பொருந்தி நிற்கிறது. ஏனெனில் மழைக்காலம், வரகுப்பயிர், கலைமான் கூட்டம் ஆகியவை முல்லை நிலத்தின் பெரும் பொழுதையும், கருப்பொருட்களையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

ஆயர்களின் எளிய ஆநிரை மேய்க்கும் தொழில் எவ்வித ஆர்ப்பாட்டமும் இன்றி அமைதியாக நடைபெற்றது. ஆயர்கள் பகலில் பெய்த மழையினால் துன்புற்ற பசுக் கூட்டத்தோடு மாலையில் ஊரை நோக்கித் திரும்புவதை,

" . . . . .கோடல்
பெரிய சூடிய கவர்கோல் கோவலர்
எல்லுப்பெயல் உழைந்த பல்லா னிரையொடு

நீர்திகழ் கண்ணியர் ஊர்வியன் பெயர்தர"- அகம்.264

என்னும் பாடலடிகள் ஆயர்களின் வாழ்வியலில் ஆநிரை மேய்த்தல் தொழில் முதன்மைப்படுவதை வெளிப்படுத்துகிறது.

ஆய்ச்சியர்த் தொழில்

ஆயர்கள் வேளாண்மை, ஆநிரை மேய்த்தல், போர்ப்புரிதல், ஏறுதழுவுதல் முதலிய வினைகளோடு தொடர்பு கொண்டுள்ளதைப் போன்று ஆய்ச்சியர் பால் பொருட்களை விற்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தது, முல்லை நில மாந்தரின் வாழ்வியலில் பெண்களுக்குத் தரப்பட்டிருந்த முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது.

ஆநிரைகளின் மிகுந்த எருக்களை உடைய முல்லை நிலத்து ஊர் ஒன்றில் விடியற்காலத்தே எழுந்து, முன் நாள் இரவு 'புரை' ஊற்றி வைத்தப் பால் தயிராக மாறியிருக்க, அத்தயிரை மத்துக் கொண்டு கடைந்து மோரையும், வெண்ணெயையும் பிரித்தெடுக்கிறாள் ஆயமகள் ஒருத்தி. பின்னர் மோரைப் பானையில் ஊற்றித் தலையில் சுமந்து சென்று வேற்று நிலங்களில் விற்று அதனால் கிடைத்த பொருட்கள் மூலம் தம் சுற்றத்தோடு உண்கிறாள். ஆனால் நெய்யை விற்ற பணத்தைக் கொண்டு தமக்குத் தேவையான தங்க ஆபரணங்களை வாங்காமல் தம் தொழில் பெருக்கத்திற்குத் தேவையான எருமைகளையும் பசுக்களையும் பெறுகிறாள். இதன் மூலம் பண்டமாற்றம் மற்றும் பொருள் கொடுத்து வாங்கும் வணிக முறையை நம்மால் அறியமுடிகிறது. தொடக்க கால வணிகம் முல்லை நிலத்தில் தோன்றியது என்பதையும் முதல் வணிகர், குறிப்பாக முல்லை நிலப் பெண்கள் என்பதையும் இதன் மூலம் உணர முடிகிறது. இதனை,

"இடுமுள் வேலி எருப்படு வரைப்பின்
நள்ளிருள் விடியல் புள்ளெழப் போகிப்
புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி
ஆம்பி வான்முகிழ் அன்ன கூம்புமுகை
உறைஅமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட்டு இரீஇ
நாள்மோர் மாறும் நன்மாமேனி ஆய்மகள்
அளைவிலை உணவின் கிளையுடன் அருந்தி
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்
மடிவாய்க் கோவலர் குடி" - பெரும். 154-165

என்னும் பாடலடிகள் முல்லை நிலப் பெண் மாந்தர்களின் தொழில் சிறப்பைப் புலப்படுத்துகின்றன.

கற்பு வாழ்க்கை

ஆற்றியிருத்தலும் இருத்தல் நிமித்தமும் என்பவை முல்லைத் திணையின் உரிப் பொருள்களாகும். போர் அல்லது வினைக் காரணமாகச் செல்லும் தலைவன் திரும்பி வருவதாகக் கார்காலத்தை முன்வைத்துச் செல்வது மரபு. இன்பம் துய்க்க மனிதன் மட்டுமின்றி மான், வண்டுகள் போன்ற உயிரிகளுக்கும் இதுவே ஏற்ற காலம் என்பதை முல்லை நிலப்பாடல்கள் உணர்த்துகின்றன.

தலைவன் சொல்லிச் சென்ற கார்காலம் வந்ததால் தலைவி மிகவும் வருந்துகிறாள். தோழியர் ஆற்றுப்படுத்துகின்றனர். பெருமுதுப் பெண்டிர் விரிச்சி என்னும் நற்சொல் கேட்கின்றனர். பின்னர் தலைவன் விரைந்து வந்து தலைவியைச் சேரும் செய்திகளை மு.வ எடுத்துரைக்கிறார். முல்லை நில வாழ்க்கையின் தொடக்கம் முதல் இறுதிவரையுள்ள அனைத்துச் செய்திகளையும் ஒரு தொடர் சங்கிலிப்போல மு.வ வெளிப்படுத்துகிறார். தலைவன் வராத காரணத்தினால் முல்லைப் பூக்கள் பற்களைக் காட்டிச் சிரிப்பது போல் உள்ளதாகக் குறுந்தொகைப் பாடல் ஒன்று கூறுகிறது. இதனை,

"பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுகை இலங்கெயி றாக
நகுமே தோழி நறுந்தண் காரே" - குறுந்.126

மேலும் தலைவி கார்காலத்தை முல்லைப் பூக்கள் மலர்ந்ததைக் கண்டு தெளிந்து வருந்துகிறாள். இதனை,

"அவரோ வாரார் முல்லையும் பூத்தன
. . . . .
ஆடுடை இடைமகன் சென்னிச்
சூடிய எல்லாம் சிறுபசு முகையே" - குறுந்.121

என்னும் பாடலடிகள் கார்காலத்தில் தலைவியின் மன உளவியலை வெளிப்படுத்துகின்றன. தலைவியின் துயரால் தோழியும் செவிலியரும் வருந்தும் நிலையை அறிய முடிகிறது. செவிலியர் தலைவன் வருகையையும் விரிச்சி கேட்டு நிற்பதை,

"அரும்பவிழ் அலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப" - முல்லை. 10-11

என்னும் பாடலடிகள் குறிஞ்சி நில வேலன் வெறியாட்டுப் போலக் குறிக்கேட்டு நிற்பதை அறிய முடிகிறது. 'முல்லைத் திணை' என்னும் நூலின் வாயிலாக முல்லை நில வாழ்வியலை மு.வ தெளிவுற எடுத்துரைக்கிறார். முல்லைத் திணைப் பற்றிய மு.வ வின் மதிப்பீடு

சிறந்த ஆய்வாக அமைகின்றது. குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கையின் பல்வேறு அங்கங்களைச் சங்க நூல்களில் இருந்து தேர்வு செய்து உயிரோவியமாகத் தமிழ்ச் சமூகத்திற்குப் பண்டைய தமிழரின் பெருமையை உணர்த்துகிறார். மு.வ வின் எழுத்துக்கள் தமிழர் உள்ள வரை நிலை நிற்கும் பேற்றைப் பெறும் என்பது திண்ணம்.

71. முனைவர் மு. வரதராசனாரின் வாழ்வும், படைப்பும்

ப. சுகன்யா தேவி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
வேளாளர் மகளிர் கல்லூரி (சுயநிதிப்பிரிவு)
திண்டல், ஈரோடு.

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும், தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தமிழ் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்களின் சீரிய தமிழ்த்தொண்டு முதன்மையான இடம் பெறுவதாகும். அவர் ஈடு இணையற்ற பெரும் எழுத்தாளராக விளங்கினார். உலகத் தமிழர்களின் உள்ளங்களைக் கவர்ந்த முதல் தமிழராக அவர் திகழ்ந்தார். 'மு.வ.' என்ற செல்லப் பெயர் ஒலிக்காத தமிழ் இல்லங்களும், நல் உள்ளங்களும் இல்லை எனலாம்.

குடும்ப வாழ்வு

'மு.வ.' அவர்கள் அருமை அன்னை அம்மாக்கண்ணம்மாளுக்கும் அறிவில் சிறந்த தந்தை முனிசாமி அவர்களுக்கும் செல்லப்பிள்ளையாக 25.04.1912ஆம் ஆண்டு வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரிலே பிறந்தார். அவரது தாய்வழிப்பாட்டி அவரை அன்புடன் வளர்த்தார். முதலில் அவருக்கு வழங்கிய பெயர் திருவேங்கடமாகும். 'தாத்தாவின் பெயரை இடுதல்' என்னும் மரபுப்படி வழங்கிய பெயரே 'வரதராசன்' என்பதாகும். அவர் 1935ஆம் ஆண்டு தம் மாமா மகளான ராதா அம்மையாரை மணந்தார். அவருக்கு ஆண் மக்கள் மூவர் உள்ளனர். அவர்கள் முறையே திருநாவுக்கரசு, நம்பி, பாரி ஆகியோர் ஆவர். அம்மூவரும் மருத்துவத்துறையில் மணிகளாகத் திகழ்கின்றனர்.

மு.வ. வேலத்திலும் வாலாசாவிலும் தொடக்கக் கல்வியைக் கற்றார். உயர்நிலைப் பள்ளிப்படிப்பை அவர் திருப்பத்தூரில் பயின்றார். முருகைய முதலியாரிடம் தமிழ் கற்றுப் புலவர் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றார். பின்னர் அவர் 1935ஆம் ஆண்டு தமிழ்ப்புலவர் தேர்வு எழுதி சென்னை மாநிலத்திலேயே முதல்வராகத் தேர்ந்து ரூ. 1000.:.- திருப்பனந்தாள் பரிசு பெற்றார். அவர் 1939இல் பி.ஓ.எல். பட்டமும், 1944ல் எம்.ஓ.எல். பட்டமும் பெற்றார். 1948இல் சென்னை மாநிலத்திலேயே முதல்வராகத் தேர்ந்து ரூ. 1000.:.- திருப்பனந்தாள் பரிசு பெற்றார். 1948இல் சென்னைப் பல்கலைக்கழகத்திலேயே முதன் முதலாகத் தமிழில் டாக்டர் பட்டம் பெற்றவர் அவரே. 1972ஆம் ஆண்டில் அமெரிக்காவிலுள்ள ஊஸ்டர் கல்லூரி அவருக்கு இலக்கியப் பேரறிஞர் (டி.லிட்) என்ற சிறப்புப்

பட்டத்தை நல்கிப் பெருமைப்படுத்தியது. அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் டி.லிட் என்னும் சிறப்புப் பட்டம் பெற்ற முதல் தமிழறிஞர் 'மு.வ.' அவர்களே ஆவார்.

தொழில்

மு.வ. 1928இல் முதல் தாலூகா அலுவலகத்தில் எழுத்தராகப் பணிபுரிந்தார். 1935ஆம் ஆண்டு முதல் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். 1939 முதல் 1944ஆம் ஆண்டு வரை டாக்டர் அ.லட்சுமணசாமி முதலியார் அவர்களின் நல்லுதவியுடன் தமிழ் விரிவுரையாளராகப் பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றினார். 1945ஆம் ஆண்டு அக்கல்லூரியிலேயே தமிழ்த்துறைத் தலைவர் ஆனார். இடையே ஓராண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துணைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அறிஞர் ர.பி. சேதுப்பிள்ளை அவர்களின் மறைவுக்குப் பிறகு 1961 முதல் 1971 வரை சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றினார். 1971 முதல் 1974ஆம் ஆண்டு வரை மதுரைப் பல்கலைக் கழகத்தின் புகழ் மிக்க இணையற்ற துணைவேந்தராகப் பணிபுரிந்தார்.

மு.வ. பங்கேற்ற துறைகள்

மு.வ. அவர்கள் பல்வேறு துறைகளில் ஈடுபாடு கொண்டிருந்தார். அவர் சென்னை, திருவேங்கடவன், அண்ணாமலை ஆகிய பல்கலைக் கழகங்களின் பேரவை (செனட்) அங்கத்தினராக இருந்தார். மேலும் கேரளம், மைசூர், உஸ்மானியா, பெங்களூர், ஆந்திரா, டில்லி, கேம்பிரிட்ஜ், மதுரை முதலிய பல்கலைக் கழகங்களின் பாடத்திட்டக் குழுவில் இருந்தார். இலங்கை, மலாயா, காசி, உத்கல் முதலிய பல்கலைக் கழகங்களோடு தொடர்பு கொண்டிருந்தார்.

மு.வ. புதுடில்லியில் உள்ள சாகித்திய அகாடெமி, பாரதிய ஞானபீடம், தேசிய புத்தகக்குழு, இந்திய மொழிக்குழு, சென்னைப் பல்கலைக்கழகம் தயாரித்த ஆங்கிலம் - தமிழ் அகராதிக்குழு, நாட்டுப்புறப் பாடல்களும், நாட்டுப்புற நடனங்களும் பற்றிய குழு முதலியவற்றில் அங்கம் வகித்தார்.

அவர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவிலும், மகராட்ரா சமிதி மண்டலத்திலும் பங்கு கொண்டிருந்தார்.

தமிழ்நாடு புத்தக வெளியீட்டுக் கழகம், ஆட்சி மொழிக்குழு, ஆட்சி மொழி சட்டக்குழு, தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழ் கலைமன்றம், தமிழிசைச் சங்கம், மாநில வரலாற்றுக் கழகம், தமிழ்க் கலைக் களஞ்சியம், தமிழகப் புலவர் குழு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் முதலியவற்றில்

பங்கு கொண்டு சிறந்த தொண்டாற்றினார்.

பன்மொழிப் புலமை

மு.வ. தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி முதலிய மொழிகளைக் கற்றுப் பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தார்.

உலகம் சுற்றிய முதல் தமிழ்ப் பேராசிரியர்

மு.வ. ரஷ்யா, மலேசியா, சிங்கப்பூர், பாரீஸ், இலங்கை, இங்கிலாந்து, பிரான்சு, ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி, கிரேக்கம், எகிப்து, ஆப்பிரிக்கா, அமெரிக்கா முதலிய உலக நாடுகளை எல்லாம் சுற்றிப் பார்த்து முதல் தமிழ்ப் பேராசிரியராக விளங்கினார்.

தோற்றப் பொழிவு

எழில் மிக்க எடுப்பான தோற்றம், புன்னகை பூத்துப் பொலிவோடு விளங்கிய முகம், அறிவு முதிர்ச்சிக்கு அடையாளமான அகன்ற நெற்றி, அன்பும், அறிவும் சுழல் விளக்குப் போல் சுடர் விட்டுப் பொங்கும் கண்கள், எடுப்பான கூரிய மூக்கு, உடல் நலம் காட்டும் அழகான பற்கள், நீண்ட மெல்லிய கைகள், பெண்மையின் மென்மை ஓடும் உடல், எண்ணங்களை எல்லாம் எழுத்தாக்கிய பரந்த நெஞ்சம் உடையவராக மு.வ. விளங்கினார்.

தனிப்பண்புகள்

அவர் மனத்தால் கூடப் பிறருக்குத் தீங்கு எண்ணாமல் சான்றோராக வாழ்ந்தார். ஒன்றனை இழந்தாலோ அல்லது ஒன்று தொலைந்துவிட்டாலோ அதற்காக அவர் கவலைப்பட்டதில்லை.

காரணம், அதனால் பயன் இல்லை என்பது அவரது கருத்து. வீணாக வருந்தும் நேரத்தை வேறு ஆக்க வேலைக்குக் பயன்படுத்த வேண்டும் என்பதே அவரது கொள்கை. அவர் கடமையை ஒரு போதும் மறந்ததில்லை. செய்வன திருந்தச் செய்தார், காலத்தைப் பொன்போல் போற்றினார்.

உலகக் குடிமகனின் பெருவாழ்வு

மு.வ.வின் எண்ணத்தால் எழுத்தால், செயலால், சொல்லால், பலருக்கு 'நல்வாழ்வு' தந்து உலகக் குடிமகனாக உயர்ந்தார். சுருங்கக் கூறின் அவர்,

அன்பில் நெகிழ்வு, அறிவில் தெளிவு,
ஆக்கத்தில் ஊக்கம், வாழ்வில் எளிமை,
கொள்கையில் உறுதி, இயற்கையில் ஈடுபாடு,

துன்பத்தில் துணைநிலை, புலமையில் ஆழம்,
ஆராய்ச்சியில் நடுநிலைமை, இல்லத்தில் துறவு,
பதவியில் பகட்டு இன்மை, புரட்சியில் முதன்மை,
பண்பில் சால்பு, அறத்தில் நம்பிக்கை
புகழில் மயங்காநிலை, செல்வத்தில் செருக்கின்மை,
விளம்பரத்தில் விருப்பின்மை

தமிழில் தமிழ் நெஞ்சம் கொண்டவர் ஆவார். நம் நெஞ்சம் மறவாத தமிழ் நெஞ்சத்தின் பெருவாழ்வு இதுவே.

மனச்சோர்வை நீக்கும் மருந்து

அறிவுத் துறையில் மிக மேம்பட்டவர்களும் சில நெருக்கடியின் போது கலைத்துறைத் துறையே மருந்தாக நாடிப் பயன் பெறுகின்றனர். அத்தகையவர்களுக்குப் பாட்டு நல்கும் இன்பமும், அமைதியும் எத்தகையன என்பதை ஜான் ஸ்டுவர்ட்மில் என்பவரின் வாழ்க்கை விளங்கும். 1928ஆம் ஆண்டில் அவருக்க வயது இருபத்திரண்டு. அறிவின் உழைப்பால் மிக சோர்ந்த மனநிலையில் அப்போது இருந்தார். வாழ்க்கையில் ஊக்கம் இழந்தவராய் மிகக் கலங்கியிருந்தார். அந்த நிலையில் வோர்ட்ஸ் வொர்த் என்ற ஆங்கிலக் கவிஞரின் பாட்டுத் தொகுதி ஒன்றைப் படிக்கத் தொடங்கினார். தம் மனச் சோர்வை அது மாற்றும் என்ற நம்பிக்கையோடு படிக்கவில்லை. ஆனால் அந்த நூலால் வியக்கத் தக்க வகையில் இவர் ஊக்கமும், ஆறுதலும் பெற்றார். என் மனநிலைக்கு வோர்ட்ஸ்வொர்த் பாட்டுகள் மருந்தாக இருந்தன. காரணம் என்ன? அவை புறத்து அழகை விளக்கவில்லை. அகத்து உணர்ச்சியையும், அந்த உணர்ச்சியோடு இயைந்த கருத்தையும் அழகின் எழுச்சியோடு எடுத்துரைத்தன. உணர்ச்சிகளின் பண்பாடாக அவை இருந்தன. அத்தகைய பண்பாட்டையே என் மனம் நாடியது. அவற்றில் அகமகிழ்ச்சிக்கு உரிய நல் விருந்து எனக்குக் கிடைத்தது. அவற்றை எல்லாரும் பெற்று நுகரலாம். போராட்டமோ, குறைபாடோ அங்கு இல்லை. மனிதனுடைய உடல்நிலையும், சமுதாயச் சூழ்நிலையும் சீர்படச் சீர்பட அவை மேலும் சிறந்து அமையக் கூடியன. வாழ்க்கையின் பெரிய பொல்லாங்கு எல்லாம் தவிர்க்கப்பட்ட பிறகு, பெறத்தக்க நிலையான இன்பம் எவ்வாறு இருக்கும் என்பதை அப்பாட்டுகளால் யான் அறிந்தேன். அவற்றின் பயனாக உடனே யான் முன்னிலும் நன்னிலை எய்தி மகிழ்ச்சியுற்றேன் என்று அவர் நம் வாழ்க்கை வரலாற்றில் குறித்துள்ளார்.

காலத்திற்கு காலம் வளர்ந்து வரும் தமிழிலக்கியத்தில் டாக்டர் மு.வ. வைப் பெரிதும் கவர்ந்தவை. சங்க இலக்கியங்கள் சங்க இலக்கியத்தைப் பற்றிய டாக்டர் மு.வ.வின் நூல்களை மூன்று வகையாகப்

பகுக்கலாம். அறிமுகம், பயிற்சி, ஆராய்ச்சி என்ற அம்மூன்று பகுப்புக்களும் சங்க இலக்கியத்தைக் கற்பதில் மூன்று படிகளாகவே விளங்குகின்றன எனலாம். முதல் வகையான நூல்களில் சங்க இலக்கிய உலகில் நடமாடுவதற்கு வேண்டிய பயிற்சி தரப்படுகிறது. சூழ்நிலையை ஆராய்ந்தறிந்த பிறகு, ஒவ்வொன்றைப் பற்றியும் ஆழ ஆராய்ந்து கண்ட முடிவுகள் மூன்றாவது வகை நூல்களில் இடம் பெற்றுள்ளன.

மறைவு

உயிரோவியங்கள் பல படைத்துப் பிறர் உள்ளங்களைக் கவர்ந்த அவரது உடல் 10.10.1974ஆம் ஆண்டு சென்னையில் மறைந்தது.

இளங்கோவடிகள் போன்ற புலவர்களின் உடல் மறைந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் அவர்களுடைய எழுத்துக்கள் உள்ளவரையில் இந்த உலகில் அவர்களுக்குப் புகழார்ந்த வாழ்வு உண்டு.

கலைகளுள் எழுத்துக் கலைக்குத் தனி ஆற்றல் உண்டு. காலம் கடந்து வாழும் பண்பு எழுத்துக் கலைக்கே மிகுதியாகும். எனவே டாக்டர் மு.வ. அவர்களின் புகழ் என்றுமுள தென்தமிழ் போல் விளங்கும். அவரது இன்பத்தமிழ் நூல்களின் வாயிலாக, செந்தமிழ்த் தேனைப் பருகும் வாய்ப்பு எங்கும், எவர்க்கும் என்றும் உண்டு. அவை அவரது புகழ் விளக்குகளாய் மங்கா ஒளி வீசி என்றென்றும் விளங்கும்.

72. கள்ளோ? காவியமோ? - மங்கை பாத்திரப்படைப்பு.

பெ.சுரேஷ்குமார்
உதவிப்பேராசிரியர்
சண்முகா தொழிற்சாலை
கலை மற்றும் அறிவியல் கல்லூரி
திருவண்ணாமலை

"நீ யாராக இருந்தாலும் உழைப்பால் அறிவால் வெற்றியடைவாய்" என்னும் மேலை நாட்டு கவிஞன் பினாச்சியோ சொன்ன மொழிகள் யாருக்கு பொருந்துகின்றதோ இல்லையோ அப்படியே பேராசிரியப் பெருந்தகை மு.வ அவர்களுக்கு முற்றிலும் பொருந்தும். 1928இல் சாதாரண அலுவலக எழுத்தாளராகப் பணியில் சேர்ந்து பல்கலைக் கழகத்தின். துணைவேந்தர் வரை உயர்வதற்குக் காரணியாக அமைந்தது அவரின் உழைப்பும் அறிவுத்திறனும் என்று சொன்னால் அதில் இருவேறு கருத்தில்லை.

படைப்பு உலகின் சிறந்த படைப்புஎது? என்றால் வாசிப்பிற்குப் பிறகும் படைப்பின் மய்ய கருத்தோ (அ) கதாபாத்திரமோ நம் சிந்தனையை விட்டு நீங்காது இருக்க வேண்டும் என்பார்கள். இக்கருத்தினை அரண் செய்வது போல பேரா.மு.வ.இயற்றிய கள்ளோ? காவியமோ? நாவலில் அமைந்துள்ள மங்கை என்னும் கதாபாத்திரத்தை நான் காண்கிறேன்.

மங்கையின் வாழ்க்கை நிலை

உலகத்தில் ஏழைகளாகப் பிறக்கின்ற ஒவ்வொருவரும் தன் இருப்பை நிலை நிறுத்தி கொள்ளவும் (அ) வாழ்வாதாரங்களை உயர்த்தி கொள்வதற்கும் பல்வேறு போராட்டங்களையும் கேலிமொழிகளையும் எதிர்கொள்ள வேண்டிய நிலை உள்ளது என்பதனை.

> *அதோ போகிறதே அது ஒரு சனியன்! என்று சொல்லிக் கொண்டே வந்தாள் யாருக்காக அடங்கி இப்படி மானங்கெட்ட சோறு தின்று வயிறு வளர்க்க வேண்டும்? என்று என் மனம் கொதித்தது ரயில் நிலையம் போய்ச் சேருகிற வரையில் எனக்குள் பெரிய போராட்டம் (கள்ளோ? காவியமோ பக்20)*

என்று தன் அத்தை வசைமொழிகளைக் கூறுகிறாள். தனக்கு ஏற்பட்ட துன்பங்கள் கவலைகள் அனைத்தும் "கொடுங்கோல் வேந்தன் ஒழிந்து விடுதலையை எதிர்பார்க்கும்" மக்களைப் போல ஒவ்வொரு நாளும் அத்தையின் பல்வேறு வசைமொழிகள் நீங்க வேண்டும் என எதிர்பார்த்த எனக்கு இரயில் நிலையத்தில் என்னைப் பார்த்து வீட்டு வேலைக்கு வருகிறாயா என்று அழைத்த உடனே இனம்புரியாத மகிழ்ச்சி ஏற்பட்டு

துன்பங்கள் தொலைந்தன என்கிறாள். வாழ்க்கையில் ஒரு துன்பத்தை விட்டு மற்றொரு துன்பத்தை அடையும் போது மாறுதல் ஒருவகை இன்பம் உண்டாகிறது. அல்லவோ அதுபோல அத்தையின் துன்பங்கள் நீங்கி எனக்கு இன்பத்தையும் ஆறுதலையும் அளித்தது இவர்களின் பாசமிகு மொழிகள் என்கிறாள்.

வீட்டு வேலைக்கார பெண்ணாக வரும் மங்கை அறிவார்ந்த ஒரு பெண்ணாகத் தன்னை நிலை நிறுத்தி கொள்கிறாள் அரக்கோணத்தில் தான் இருந்த நிலைக்கும் சென்னையில் இருக்கும் நிலைக்கும் நிறைய வேறுபாடுகளை உணர்கிறாள். சென்னைக்கு வந்தப்பின் ஒவ்வொரு நாளும் நான் எவ்வளவோ கற்றுக் கொண்டேன் ஒவ்வொரு வேலையிலும் புதிய புதிய அறிவுகளைப் பெற்று வந்ததோடு இவ்வுலக வாழ்க்கையில் ஒவ்வொரு துறையில் தனக்கு அறிவு வளர்ந்தது என்கிறாள். சூழல்கள் மனிதனை எப்படி மாற்றுகின்றன என்பதற்கு உதாரணமாக விளங்குவதாக கூறுகிறாள்.

மங்கை கல்வி பெறுதல்

பெண் என்பவள் சமுதாயத்தின் உற்பத்திகான ஒரு சக்தியாக இருக்கக்கூடிய ஓர் இயந்திரமாக வாழ்ந்து வந்ததோடு, அவள் கணவன் அலுவலகம் முடித்து வரும் போது அவனுக்கு மணமிக்க காபியை போட்டுத்தரக்கூடியவளாகவே இச்சமூகம் பார்த்துவந்தது என்றால் மிகை இல்லை. இப்படிப்பட்ட சமூகத்தில் இருந்து மாறபட்ட ஒரு பெண்ணாக மங்கை படைத்துக் காட்டுகிறார். தான் வேலை நேரம் போக ஒய்வு நேரத்தில் எதிர்வீட்டு பெண் கனகம் மூலம் கல்வியைக் கற்றுக் கொள்கிறாள். தான் கல்வி கற்றுப் புலமையை வளர்த்துக் கொண்டதற்கு அன்னமா அம்மையாரும் அந்த பெரியவரும் காரணம் என்பதாகக் கூறுகிறாள். மேலும் பெண்கல்வி மங்கையின் மூலம் வலியுறுத்தும் பேரா.மு.வ. "பெண்கள் முன்னேற வேண்டும் பெண்கள் முன்னேறா விட்டால் நாடு இப்படியேதான் இருக்கும் பெண்களுக்குத் தான் படிப்பு வேண்டும். இன்னும் இரண்டு தலைமுறைகளுக்கு ஆண்களுக்குப் பள்ளிக் கூடங்கள் இல்லாமல் மூடிவிட்டாலும் குறை இருக்காது. எல்லாப் பெண்களும் படித்த காலத்தில் தான் இந்த நாட்டில் அறியாமை ஒழியும் பெண்களுக்கு, நல்லறிவு வந்தால் தான் மூடநம்பிக்கை நாட்டை விட்டு ஒழியும்" என்கிறார்.

மங்கை மணம் - முற்போக்கு தன்மை

புரட்சி, சீர்திருத்தம் என்று முழங்கி வருகின்ற சிலர் தனக்கு அப்படியான ஒரு வாழ்க்கை நிலை ஏற்படும் போது அவற்றை யாரும் கடைப்பிடிப்பதில்லை. ஆனால் அருளப்பனின் தகப்பனார் அப்படி இல்லாமல் "தனக்கு வேண்டியது தன் மகனின் வாழ்க்கையே தவிர

உலகத்தின் அறியாமை அல்ல, கண்மூடித்தன சுற்றமும் அல்ல, என்று தான் இளமையில் கடற்கரையில் விவேகானந்தரைப் பார்த்ததாகவும் அந்த சீர்த்திருத்தகாரர் இந்த நாட்டுக்குப் புத்துயிர் கொடுத்தவர் அவரைக் கண்ட அந்தப்பேறு எனக்கு உண்டு அல்லவா அதற்காகச் சீர்த்திருத்த முறையில் ஒரு நல்ல வகையில் செய்து வாழலாமே? அவரைப் பார்த்துக் களித்த கண் இதையும் கண்டு மகிழட்டுமே" என்று சீர்த்திருத்த திருமணமாக மங்கை- அருளப்பன் பதிவுத் திருமணம் செய்து கொண்டு இருவரும் உலகப்பொதுமறை நூலை எடுத்து அறிவுடைமை, அன்புடைமை என்னும் குறளைப்படித்து மகிழ்ச்சியோடு வாழத்தொடங்கினர்.

பெண் உடலியல் கூறும்-மங்கையும்

உலகில் உயிரினங்களைப் படைத்து அவற்றை இயக்கக்கூடிய (அ) வேலைகளைச் செய்யவைக்கவல்லவன் இறைவன் என்று நம்புகின்றோம். அவ்வாறு உயிரினங்களை இயக்கும் இறைவன் ஒவ்வோர் உயிரின செயல்பாடுகளையும் மிக சரியாக வரையறைகளையும் மாறுபாடுகளையும் உண்டாக்குகிறான்.

பெண்களுக்கு உடல்சார்ந்த மாறுபாடுகள் ஏற்படுகிறபோது சில நடைமுறைச்சிக்கல் ஏற்படுகின்றன,அவற்றில் ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்பதனைத் தான் அறியவில்லை என்பதாகக் கூறும் மங்கை "நன்னெறியில் வாழவல்லவர்கள் நாடி நரம்புகளுக்கு அடிமையாக மாட்டார்கள்" என்று நம்பினேன் ஆனால் இக்கருத்து பொய்க்கும் வண்ணம். யானை அறிந்திருந்தும் பாகனையே கொல்லும் என்ற கதையாக அமைந்து விட்டது. தன் உடலில் ஏற்படும் மாறுபாடுகள் என்பதாகும்.

ஆண் உடல் நாள்தோறும் முறைபிறழாமல் தோன்றிக் கதிர்பரப்பி மறையும் சூரியன் போன்றது. பெண் உடல் மாதந்தோறும் வளர்ந்து ஒளி பரப்பும் சந்திரன் போன்றது அல்லவா? இந்த உண்மையை நன்றாக அறிந்த அவர் ஒரு பெண்ணின் உடல் நிலையில் ஏற்படும் மன மாறுதல்களை எண்ணிப் பொறுக்க கூடாதா? இயற்கையின் பல அமைப்புகளை எண்ணி எண்ணி வியந்து பாராட்டி வந்த அவரால் இயற்கை என் உடம்பில் விளைவிக்கும் மாறுதல்களை எண்ணி பொறுக்க முடியாமல் போயிற்றே என்கிறாள். இதனால் தன் இல்லறவாழ்வில்,பிரிவு ஏற்பட்ட தன் வாழ்க்கை மிகப்பெரிய துன்பமயமான வாழ்வாக மாறிப்போனது என்று கூறுகிறாள்.

மணவாழ்க்கை - வெறுப்பு

மணவாழ்க்கை எப்போதும் இன்பமுடையதாக வைத்துக்கொள்ள அனைவராலும் இயலாத செயலாகவே அமைந்து விட்டது. இதற்குக்

காரணம் 'சரியான புரிதல் இன்மையே'.எனலாம். ஆனால் சங்க இலக்கிய காதலி (அ) மனைவி தன் கனவனையும் அவன் அன்பையும் எண்ணி வியந்து கூறும்போது 'இம்மை மாறி மறுமை யானும் நீயாகி என் கணவனை, நானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே' எனக்கூறும் பழந்தமிழ் இலக்கியத்திற்கு மாற்றாகவே மங்கையின் மணவாழ்க்கை அமைந்துள்ளது.

தன் மணவாழ்க்கை என்பது வெங்காயம் போன்று உள்ளிருந்தே புரைபரையாக அழுகி வந்ததோ? அல்லது நெடுகாலம் வாழ்ந்த வாழ்வெல்லாம் அழுகாமல் வாடாமல் கெடாமல் தோன்றும் வெங்காயத்தின் மேல் தோல் தானே என்று தன் நிலைக் குறித்து வருந்துகிறாள் மேலும் தொடர்ச்சியாக என்னோடு அவர் வாழவதால் ஏற்பட்ட வெறுப்புதானோ என்கிறாள்.

> *வேளைக்கு வேளை பணம் கொடுத்து ஒரே விடுதியில் உண்டாலும் உணவில் வெறுப்பு தோன்றுவதில்லையாம் ஆனால் முதலிலேயே மொத்தப் பணம் கொடுத்து ஒரு மாதம் உண்ணத் தொடங்கின் மூன்றே நாளில் உணவின் மேல் வெறுப்புத் தோன்றுகிறதாம். இந்த உணவை இன்னம் இருபத்தேழு நாள்கள் உண்டு தொல்லைப் பட வேண்டுமே என்ற தீரா வெறுப்புத் தோன்றுகிறதாம் விடுதிக்குள் கால் வைத்து நுழையவும் மனம் வருவதில்லையாம் இந்த குடும்வாழ்க்கை அவருக்கு அப்படித்தான் தொல்லையாகி விட்டதோ? இருக்கலாம் வாழ்நாள் முழுவதும் இவளோடு பிணைக்கப்பட்டு கழிக்க வேண்டுமே என்று சுமையாக உணர்ந்திருக்கலாம். (மேலது பக்கம்-134)*

மங்கை தன் மீது கணவராகிய அருளப்பருக்கு ஏற்பட்ட வெறுப்பை கூறுகிறார்.

கணவரைப் பிரித்துச் சென்ற மங்கை மும்பையில் குமார்லால் என்பவரின் அறிமுகம் கிடைத்து இருவரும் 'அம்ருத் கபே' என்ற உணவு விடுதியைத் திறந்து அதன் மூலம் வருவாய்களைப் பெருக்குகின்றனர் இதில் கிடைத்த பணத்தில் அறிவற்று கிடைக்கும் மக்களை அறிவார்ந்த மக்களாக மாற்றி எண்ணி 'இலக்கிய இதழ்' தொடங்குகிறார்கள் இந்த இதழ் முழுக்க முழுக்க இலக்கியங்களைப் பேசுவது, போலி விளம்பரங்களை வெளியிடுவதில்லை என்ற உறுதியோடு வெளியிட்டு வந்தனர். இவற்றிலும் கணிசமான தொகை கிடைத்தது.

பெண்களுக்குச் சமூகத்தில் இருப்பது போன்ற சமூகசிக்கல்களும் மங்கைக்கும் நேர்கின்றன. கயவரும், காமுகரும் தன்னை நெருக்கும் போது அவர்களை கொலை செய்யத் துணிந்தவளாக வீரமிக்க தமிழச்சியாக அடையாளப்படுத்தியுள்ளார்.

பிள்ளை நினைவும்-ஏக்கமும்

தான் நடத்தும் விடுதியில் வந்து உணவு உட்கொண்ட கனவன்

மனைவி பிள்ளையைக் கண்டவுடன் தன் பிள்ளையாகித் தேன்மொழியின் நினைவுவர அக்குழந்தையை வாங்கி தன் மடியில் வைத்து குழந்தைக்கு தேவையானதை தானே ஊட்டிவிட்டு அவர்கள் உட்கொண்ட உணவுகளுக்கு பணம் வாங்காமல் அனுப்பி வைத்து

> *ஓடும் இரயிலில் இருந்து கொண்டு எவ்வளவு நேரம் பறக்கும் கிளியைப் பார்த்து களிக்க முடியும்? என் தோள்மேலும் என் கைமேலும் என் தொடைமேலும் இருந்து பழகிக்கொஞ்சிய என் கூட்டுக்கிளியை நினைத்துக் கவலைகொண்டேன்*
>
> *(மேலது பக்கம்-203)*

என்கிறாள்

மாங்கை-அருளப்பன் இணைவு

மும்பையில் மொழியில் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற அருளப்பன் தன் நண்பரோடு சேர்ந்து அம்பருதா கபே உணவகத்திற்கு வந்து உணவு உட்கொள்ளும் போது தன் கணவனைப் பார்க்கிறாள் அவரிடம் முகவரி கேட்டுபெறுகிறாள் மறுநாள் தன் கார் ஓட்டுநரை அனுப்பி தன் கணவரை அழைத்துவர சென்னாள் கார் ஓட்டுனருடன் கணவன் வந்து இறங்குகிறான். பிரிந்திவர் கூடினால் பேசவும் வேண்டுமோ என்பதற்கேற்ப தன் கணவனோடு பேசாமல் நின்றாள்.

கணவனோடு இணைந்து சென்னை திரும்பும் மங்கையை தன் மகள் தேன்மொழி தன்னை அம்மாவாக ஏற்றுக்கொள்ள மறுக்கிறாள். மிகப்பெரிய மனஉளைச்சலுக்கு ஆளாகும் மங்கை 'நிமோனியா காய்ச்சல்' வந்து நுரையீரல் பாதிக்கப்பட்டு இறந்துபோகிறாள். பிரபஞ்சன் கூறுவதுபோல் "இந்தியப்பெண்கள் தங்கள் கணவருக்காகவும் குழந்தைகளுக்காகவும் மட்டுமே வாழ்கிறார்கள்" என்ற கூற்று முற்றிலும் பொருந்தும் பெண்ணாக வாழ்ந்து இறந்து போகிறாள்.

முடிவாக

பெண்களின் அவையங்களை வர்ணனைச் செய்து படைப்புகளை உருவாக்கும் நிலையில், தன் தனித்த அடையாளங்களால் வாழ்வில் உன்னதநிலையை அடைகின்ற பெண்ணாக மங்கையைப் படைத்துகாட்டி பெண்களுக்கான அத்தனை தவிப்புகளையும் இனம் காட்டி பெண்ணென்பவள் பிறருக்குப் போதை தரும் கள்ளு,அல்ல காவியங்களை படைக்கக்கூடிய பெண் என்பதாகப் படைத்துக்காட்டியுள்ளார்.

73. மு. வ. ஓர் கல்வியாளர்

தி. வரதன்
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
சண்முகா தொழிற்சாலை
கலை அறிவியல் கல்லூரி
திருவண்ணாமலை.

சாக்கரடிசுவைப் போன்றும், கான்பூசிய சுவைப் போன்றும் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களைப் போன்றும் தன்னைச் சுற்றி எப்போதும் மாணவர் கூட்டத்தோடு இணைந்த வாழ்வையே மேற்கொண்டார் மு.வ.என்ற இரண்டெழுத்துக்குச் சொந்தக்காரர் மு.வரதராசனாராவார். அவருடைய அந்த இரண்டெழுத்து மாணவர்களின் 'முன்னேற்ற வரலாறு' ஆகவும் மாணவர்களை 'முன்னுக்கு வருக' என்று அழைக்கும் தாரக மந்திரமாகவும் மாறிய உண்மையை நாம் யாவரும் அறிந்ததே. கல்வியைக் கற்றுத் தருபவர்கள் ஆசிரியர்கள் என்றும் ஆசிரியருக்கெல்லாம் கற்றுத்தருபவரை ஆசிரியருக்கெல்லாம் ஆசிரியர் என்றும் அழைப்பர். அவ்வகையில் மு.வ.ஆசிரியராகவும் ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியராகவும் சிறப்புற்று விளங்கினார். அதோடு மட்டும் அமையாது தன்னை ஒரு கல்வியாளனாகவும் பரிமளிக்கச் செய்தார். இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கம் மு.வ.வின் கல்வியியல் பார்வை குறித்து ஆய்வதே ஆகும்.

கல்வியின் இருவகை

கல்வியை இரு பெரும் பிரிவுகளில் மு.வ.அடக்குகிறார் அவை கலைக் கல்வி, அறிவியல் கல்வி என்பதாகும். இலக்கியம், இலக்கணம், மொழி, ஓவியம், சிற்பம், இசை என்பன போன்றவற்றைக் கலைக்கல்வி என்ற வரிசையில் அடக்குகிறார். வாணிகம், அறிவியல், வானநூல், பூத நூல், கணக்கு நூல் போன்றவற்றை அறிவியல் கல்வி என்றும் வகைப்படுத்துகிறர்.

"இருவகை கல்வியும் மாணவர்கள் பயில வேண்டும் என்பது மு.வ. வின் எண்ணம். கலைகள் கற்பவர்கள் அறிவியலிலும் அறிவியல் கற்பவர்கள் கலைகளும் ஓரளவு கற்க வேண்டும். ஏன் எனில் மனித வாழ்வில் இரண்டும் இரண்டு கண்கள் போன்றவை ஒன்று குறைந்தால் அது வாழ்க்கைக்கே குறையாகிவிடும். அறிவியலால் மூளைக் கூர்மை மிகும். கலையினால் உள்ளப் பண்பாடு ஏற்படும். மூளைக் கூர்மையும் உள்ளப் பண்பாடும் ஆகிய இரண்டுமே மக்களுக்கு வேண்டும். ஆகவே

அறிவு நல்ல முறையில் வளர்ச்சி பெற்ற பண்பை ஒருவன் பெறாவிட்டாலும் பண்பைப் பெற்று அறிவுக் கூர்மையை ஒருவன் பெறாவிட்டாலும் அவனுக்கு தீங்கு உண்டாகும் என்று மு.வ. கருதுகிறார்.

கல்வியின் நோக்கம்

கல்வியின் நோக்கங்களாக மு.வ வரையறுப்பன மூன்று i) அறிவை பெறுதல் ii) பண்பை வளர்த்தல், iii) சுய சிந்தனையைத் தூண்டுதல்.

அறிவை பெறுதல்

கல்வியின் முதன்மையான நோக்கமாக அறிவைப் பெறுதல் கருதப்படுகின்றது. அறிதோறு அறியாமை கண்டற்றால் என்பார் திருவள்ளுவர். அறியாமையை இனங்காண்பதே அறிவுதான் நம்மிடம் உள்ள குறைகளை நீக்கவும் மூட நம்பிக்கைகளை அகற்றவும் உண்மையை அடையாளம் காணவும் உதவி செய்வது கல்வியின் நோக்கமாகும்.

பண்பை வளர்த்தல்

அன்புடமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடமை என்னும் வழக்கு. குறள் 992

உலக உயிர்கள் யாவற்றையும் அன்புடன் நேசித்தல், நல்ல குடியிலே பிறந்தோம் என்ற உணர்வினை உடையவனாக இருத்தல் ஆகிய இரண்டும் பண்புடமை என்னும் நெறி என்று உலகம் வழங்கி வருகிறது என்கிறார் திருவள்ளுவர். அத்தகைய பண்பை நாம் உடைமையாகப் பெறுவதற்கு பெரிதும் துணைபுரிவது கல்வியாகும்.

"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்" (கலித்தொகை - நெ.கலி)

என நெய்தற்கலியும் சிறப்பித்துக் கூறுகிறது. உலக ஒழுக்கங்களை அறிந்து அதற்கேற்றவாறு ஒழுகும் ஒழுக்கத்தைத்தான் பண்பு என்று அது கூறுகிறது. அப்படிப்பட்ட பண்பை வளர்த்துக் கொள்ள உதவுவது கல்வியின் இரண்டாவதான நோக்கமாக மு.வ. வரையறைச் செய்கிறார்.

சுய சிந்தனையைத் தூண்டுதல்

நினைவுத் திறன் மட்டுமே அறிவுத்திறன் என்பதை முழுமையாக மு.வ மறுக்கின்றார். சுய சிந்தனை இல்லாமல் மனப்பாடம் செய்து முழு மதிப்பெண்ணும் பெற்றவனைக் காட்டிலும் குறைந்த மதிப்பெண் பெற்ற சுய சிந்தனை உடையவன் மதிக்கப் படவேண்டியவன் என்பது அவருடைய கருத்து.

ஆசிரியர்

ஆசிரியரை 'அப்பா' என்றழைக்கும் மரபு மு.வ.விடம் இருந்துதான் தொடங்கியது என்று தமிழறிஞர் உலகம் பெருமிதத்தோடு கூறுவதை நாம் காண்கிறோம் பொதுவாக ஆசிரியர்களை மூன்று வகையில் அடக்கலாம்.

1) மாணவர்களை மகனாக, மகளாக கருதி நடத்தும் ஆசிரியர்கள், 2) மாணவர்களை மாணவர்களாகக் கருதி நடத்தும் ஆசிரியர்கள், 3) மாணவர்களை எதிரியாகக்கருதும் ஆசிரியர்கள். அந்த வகையில் மாணவர்களை மகனாக, மகளாகக் கருதும் அணுகுமுறையைக் கையாண்டு மாணவர் உள்ளங்களை வென்றவர். அவர் மாணவர்கள் உலகையே வென்றார்கள். அறிவுத்திறத்தாலும் நற்பண்பினாலும் உலகில் நல்ல பதவியும் பயனும் பெற்று வாழ்கிறார்கள் என்பதை வையம் நன்கு அறியும்.

ஆசிரியர்கள் நற்பண்பும் ஒழுக்கமும் அறிவுக் கூர்மையும் மிக்கவர்களாக இருத்தல் வேண்டும் என்பது அவருடைய உறுதியான கருத்து.

திருக்குறள்

ஓதி யுணர்ந்தும் பிறர்க்கு ரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையர் இல் - (குறள் 834)

எனும் திருக்குறளின் மூலம், ஆசிரியர்களுக்கு இருக்கவேண்டிய நற்பண்பு இருத்தல் வேண்டும் என்று திருவள்ளுவர் கூறுகிறார். அதே கருத்தையே மு.வ.வும் வழிமொழிகின்றார்.

மாணவர்கள் அறிவும் ஆற்றலும் ஒழுக்கமும் பயனும் உடையவர்களாகவும் விளங்க கற்பிக்கும் ஆசிரியர்களே முன் மாதிரியாகத் திகழ வேண்டும் அதோடு மட்டும் அல்லாது மாணவன் நற்பயன் அடைய மேலும் ஐந்து ஆசிரியர்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார் மு.வ.

1. செல்வமும் செல்வாக்கும் உள்ளவர்கள்
2. சிறந்த மேடைப் பேச்சாளர்கள்
3. பத்திரிக்கை ஆசிரியர்கள்
4. நடிக்கும் கலைஞர்கள்
5. அரசியல் பதவியில் உள்ளவர்கள்

ஆகிய ஐந்து திறத்தாரும் நல்ல எடுத்துக்காட்டுகளாக விளங்கினால்தான் மாணவருலகம் திருந்த முடியும் மாணவர்கள் அவர்களையே பெரிதும்

போற்றுகிறார்கள். அவர்களைப் போல் வாழ்க்கையில் உயர வேண்டும் என்ற ஆசையும் மாணவர் பெரும்பாலோரின் உள்ளத்தில் உள்ளது (கல்வி - பக்கம் 98) எனவே ஆசிரியரை எடுத்துக்காட்டாக எடுத்துக் கொண்டு மாணவர்கள் ஒழுகுவது குறைந்துள்ளது ஆகவே சமூகச் சூழலில் உள்ள இந்த ஐந்து திறத்தாரும் நல்லொழுக்கமும் பண்பாடும் உடையவர்களாக எப்போதும் விளங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

ஆசிரியரிடம் உள்ள குறைகள்

திறமையற்ற சில ஆசிரியர்கள் கல்விப் பணியில் இருப்பதை யாம் மறுக்க முடியாது உயர்பதவிகளில் உள்ள அலுவலர்கள் ஒரு சிலத் திறமையற்று இருப்பது போல இத்துறையிலும் அவ்வாறு அமைவது உண்டு திறமையும் நற்பண்பும் இல்லாதவர்களை மாணவர்கள் எடுத்துக்காட்டாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்றும் மு.வ கூறுகிறார். திறமை படைத்த பலர் இத்தொழிலுக்கு வராமைக்கான காரணத்தையும் மு.வ.கூறுகிறார். பணமே வாழ்வின் பிரதானம் என்றாகிவிட்ட உலக சூழல்தான் இதற்குக் காரணம். வேறு வேலை கிடைக்காதவர்கள் ஆசிரியர் தொழிலுக்கு வருகிறார்கள் என்ற குறையும் உள்ளதை நாம் மறுக்க முடியாது என்கிறார் ஆகவே ஆசிரியர்களின் வாழ்க்கைக்கு தேவையான ஊதியத்தை அரசு அளிக்கும் போது திறமையான ஆசிரியர்கள் கல்வித் துறைக்கு கிடைப்பார்கள். அப்போது அந்தக் குறை தீரும் அனைவரும் மனம் வந்து அப்பணியைச் செம்மையாகச் செய்வார்கள் என்று கூறுகிறார்.

மாணவர்கள்

மாணவர்கள் உயர்வடைய ஒழுக்கமும் முதன்மையானது என்பதை மு.வ வலியுறுத்துகிறார்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் - (குறள் 131)

என்று திருவள்ளுவர் கூறுவது போல மாணவர்கள் கல்விக் கூடம் மற்றும் கல்விக் காலங்களில் மட்டும் அல்லாது வாழ்வின் எல்லைவரை பெறுவது அறிவும் கடைபிடிப்பது நற்பண்பாகவும் இருத்தல் வேண்டும் என்று கருதுகின்றார்.

"நாம் வாழும் காலம் சிக்கலான காலம் இக்காலத்தில் அன்புடைய பெற்றோர்களும் மக்களோடு நெருங்கிப் பழகி அன்பாக வளர்ப்பதற்கு வாய்ப்புக் குறைவு பெற்றோர்களுக்கு வெவ்வேறு கடமைகள் மிகுந்து விட்டன. வீட்டில் இருந்து வாழும் நேரம் குறைந்து விட்டது தேர்வுப் பாடங்களுக்காக மாணவர்களையம் சம்பளத்திற்காக ஆசிரியர்களையும் கல்விக் கூடங்கள் ஒன்று சேர்க்கின்றன, பிரித்து விடுகின்றன. ஆகவே

மனங்களைப் பண்படுத்தும் ஆற்றல் ஆசிரியர்களுக்கும் முன்பு போல் இல்லை" (நல்வாழ்வு பக்கம்-69) ஆகவே பாரதி கூறுவது போல கற்பது கேட்பது கருதுவது ஆகிய நிலைகளில் செம்மையடைய கவனம் செலுத்த வேண்டும் என்கிறார்.

கல்வியின் பயன்

1. அறிவு பெறுதல்
2. அறிவின் மூலம் ஞானத்தை வளர்த்தல்
3. ஞானத்தின் மூலம் புதிது புதிது காணுதல்
4. தீமையை அகற்றுதல்
5. பயன்மரமாய் வாழ்தல்

ஆகிய கருத்துக்களை கல்வியின் பயன்களாக மு.வ.தம் படைப்புகளில் வரையறத்துக் காட்டுகிறார்.

74. மு. வ. வின். சங்க இலக்கிய ஆய்வுகள்

முனைவர் ம.செல்வராசு
இணைப்பேராசிரியர்
கணேசர் கலை அறிவியல் கல்லூரி
மேலைச்சிவபுரி.

இருபதாம் நூற்றாண்டு இலக்கியப் படைப்பாளர்களில் குறிப்பிடத் தகுந்தவர் மு.வ. தன் படைப்பால் தமிழ் மாணவர்களை மட்டு மல்லாது பிற துறையைச் சார்ந்தவர்களையும் தன் பால் ஈர்க்கும் ஆற்றல் பெற்றவர். தமிழ்ப் பேராசிரியர்களில் திறனாய்வளாராகவும், படைப்பாளராகவும் உள்ளவர்கள் ஒரு சிலரே, அவர்களில் தலையாயவர் மு.வ. தனக்கென ஒரு வாசகர் வட்டத்தை ஏற்படுத்தியவர். இளையவர் முதியவர் என் இல்லாமல் அனைவரும் மு.வ.வின் வாசகர் வட்டத்திற்குள் உள்ளனர். மு.வ.வின் படைப்புகள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாய் அமைவன. மனதைப் பண்படுத்துவன அமைதியையும் ஆற்றலையும் கொடுக்க வல்லன.

பழமைக்கும் புதுமைக்கும் இடையே போட்டி நடைபெற்ற காலத்தில் இரண்டையும் அரவணைத்து அதில் வெற்றியும் கண்டவர் மு.வ. "பழமையில் புதுநினைவு பாய்ந்தெழுந்தாற் போன்று அவருடைய எண்ணமும் எழுத்தும் விளங்கின" [3] என்பர் க.த.திருநாவுக்கரசு படைப்புலகில் அவருக்குக் கிடைத்த வெற்றியைப் போன்று ஆய்வுலகிலும் அவருக்கு மிகப்பெரிய வெற்றி கிடைத்தது.

மு.வ.வின் சங்க இலக்கிய ஆய்வு மொத்தம் பதிநான்கு அவை முல்லைத்திணை, நெடுந்தொகை விருந்து, குறுந்தொகை விருந்து, நற்றிணை விருந்து, இலக்கிய ஆராய்ச்சி நற்றிணைச் செல்வம், குறுந்தொகைச் செல்வம், நெடுந்தொகை செல்வம், கொங்கு தேர் வாழ்க்கை, புலவர் கண்ணீர், இலக்கியத் திறன், இலக்கிய மரபு, இலக்கியக் காட்சிகள், சங்க இலக்கியத்தில் இயற்கை ஆகியன. பண்டிதர்களிடம் இருந்த சங்க இலக்கியத்தைப் பாமரரும் எளிதில் புரியும் வண்ணம் அவருடைய ஆய்வு உள்ளது. மற்ற சங்க இலக்கிய ஆய்வாளர்களுக்கும் மு.வ.விற்கும் பல வகைகளில் வேறுபாடு உண்டு. மற்றவர்கள் சங்க இலக்கிய நயத்தை மட்டும் போற்றினர். மு.வ. சங்க இலக்கிய நயத்தை பொது மக்களுக்னெ ஆய்ந்தார். தன்னுடைய சங்க இலக்கிய ஆய்வு நோக்கத்தை நெடுந்தொகை விருந்து என்ற நூலின் முன்னுரையில் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். "பொது மக்களின் உள்ளத்தில் இடம் பெறாமல்இ புலவர் நெஞ்சில் மட்டும் வாழும் வாழ்வு போதாது. பொது மக்களின் புறக்கணிப்பு இலக்கியத்தின் எதிர்கால வாழ்வுக்கு இடையூறாகும்"[4]. சங்க இலக்கியம் அனைவருக்கும் பொது. அதன்

சுவையை, இன்பத்தை பயனை அனைவரும் நுகரவேண்டும் என்ற நோக்கத்தில் மு.வ.வின் சங்க இலக்கிய ஆய்வுகள் அமைந்திருத்தலைக் காணலாம்.

மு.வ.வின் சங்க இலக்கிய ஆய்வுகள் எளிமையாக "விளக்குதல், நயம்-பாராட்டுதல், உவமைகளை" விளக்குதல் ஆகிய மூன்று விதமான பண்புகளைக் கொண்டிருக்கின்றன.

1. எளிமையாக விளக்குதல்

ஒரு சங்க இலக்கியப் பாடலை எடுத்துக் கொண்டு அதை மற்றவர்களுக்கு கதை கூறும் நோக்கில் அதன் கருத்தைச் சொல்வது மு.வ.விற்கு கைவந்த கலை, இக்கலையே ஆய்வைப் படிக்கிற அனைவரும் எளிமையாக புரியும் படி அமைந்தது. மேலும் அப்பாடலுக்கு ஒரு தலைப்பைப் பொறுத்தமுடன் சொல்வதும் சிறப்பு. அகம் - 140 "வது பாடலுக்கு அவர் கொடுத்திருக்கிற தலைப்பு காதல் நோய் என்பது. தலைவன் வயல் வளம் நிறைந்த மருத நிலத்தைச் சார்ந்தவன். தலைவி கடல் வளம் நிறைந்த நெய்தல் நிலத்து பரதவர் குடியில் பிறந்து வளர்ந்தவள். அவளுடைய தந்தை உப்பு வாணிகம் மாட்டு வண்டியில் உப்பைக் கொண்டு சென்று உள்நாட்டில் விற்றுவருபவன். உப்பங்கழியில் தந்தை விளைக்கும் உப்பை மக்களும் சில நாட்களில் பக்கத்து ஊர்களுக்குச் சுமந்து சென்று தெருக்களில் பண்டமாற்றாக விலை கூறி வருவது வழக்கம் அவ்வாறு விற்கச் சென்ற நாட்களில் ஒரு நாள் தெருவில் அவளைக் கண்டு காதலுற்றான். காதலால் வருந்தி வாடிய அவன் நிலையை அவனுடைய நண்பன் உணர்ந்தான். காரணம் என்ன என்று கேட்டான். தலைவன் அப்போது அவனிடம் பின்வருமாறு கூறுகிறான்.

"பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்
இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி
. . . .
கைபூண் பகட்டின் வருந்தி
வெய்ய உயிர்க்கும் நோய்ஆ கின்றே" (- அகம் - 140)

இப்பாடலின் கருத்தைக் கூறவரும் மு.வ. கருத்துக் கூறுவதற்கு முன் பாடல் எழுந்த சூழலைப் படிப்பவர்களுக்கு, கதையாகக் கூறிவிடுகிறார். கதையைப் படித்து கருத்தைப் படிக்கும் போது சுவையாகவும் மனத்தில் பதியும் படியும் உள்ளது. மேலும் சிறு சிறு தொடர்களைப் பயன்படுத்தியிருப்பது சிறப்பாகவும் எளிமையாகவும் உள்ளது.

நயம் - பாராட்டுதல்

சங்கப் பாடலை எடுத்துக் கொண்டு அவற்றின் நயங்களைச்

சிறப்பாக கூறுவார் மு.வ. குறுந்தொகை - 49 ம் பாடலுக்கு அவர் தரும் தலைப்பும் நயமும் பொருத்தமுடன் காணப்படுகிறது. பாடலின் தலைப்பு மறுமையில் ஆகுக.

தலைவன் பரத்தையிடமிருந்து திரும்பிய பின் தோழியின் உதவியால் தலைவியின் ஊடலைத் தணிக்க முயன்றான். முயற்சியால் வெற்றியும் பெற்றான். தலைவியின் அன்புக்கு உரியவனாக மகிழ்ந்திருந்தான். ஆயின் அப்போதும் தலைவி அவனுடை குற்றத்தை மறக்க வில்லை. வாய்ப்பு கிடைக்கும் போதுஅதை அன்புடன் எடுத்துரைத்துத் திருத்த வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தாள். தலைவன் முன் போல் மகிழ்திருந்தபோது அவனிடம் வரம் கேட்பது போல் கூறினாள். இப்பிறப்பில் மனைவியாக இருக்க முடிந்ததே அல்லாமல், மனத்தைக் கவரும் காதலியாக இருக்க முடியவில்லையே என்று வருத்த குறிப்பைப் புலப்படுத்தி மறுமையிலேனும் அவ்வாறு அமைய வேண்டும் என்றாள். மனத்தைக் கவரும் காதலியாக இல்லாத காரணத்தால் தலைவன் தன்னை விட்டுப் பரத்தையை நாடினான் என்பதைக் குறிப்பாக உணர்த்தினாள்.

"தலைவ! இப்பிறப்பு மாறி மறுபிறப்பு வாய்த்தாலும்
நீ என் கணவனாகவே அமைவாயாக யான் உன்
நெஞ்சத்திற்கு இயைந்த காதலியாக அமைவேனக".

"........ சேர்ப்ப!
இம்மை மாறி மறுமை ஆயினும்
நீஆ கியர்என் கணவனை
யான்ஆ கியர்நின் நெஞ்சுநேர் பவளே" (குறு-49)

இப்பாடலில் தலைவி தன்னை விட்டுப் பிரிந்து பரத்தையிடம் சென்ற கணவனைக் கோபித்துக் கொள்ளாமல் தன்னுடைய இயலாமையையும் கணவனின் மனத்திற்கு உகந்தவளாகத் தான் இல்லை என்பதையும் நினைத்து தன்னை நொந்து கொள்பவளாகவும் அடுத்த பிறவியிலாவது தலைவன் மனதிற்குப் பிடித்தவளாக (நெஞ்சு நேர்பவள்) வாழ வேண்டும் என்ற எண்ணத்தைக் கூறுவதாக உள்ளது என அதன் நயத்தை எடுத்துக் கூறுகிறார்.

உவமைகளை விரிந்துரைத்தல்

புலவர்கள் ஒரு பொருளைக் கண்டதும் அதனோடு ஒப்புமை உடைய மற்றோரு பொருளையும் அகக் கண்ணில் கொணர்ந்து ஒப்பிட்டு மகிழ்வர் இத்தகைய அனுபவமே அவர்களின் பாட்டுகளில் உவமைகளாக அணிபெற நிற்கும். இவ்வுவமைகள் எல்லோர்க்கும் தெரிந்த பொருளாகவும் அந்தந்த நிலத்தில் காணப்படும் கருப்பொருளாகவும் அமைந்திருப்பதைக்

காணமுடிகிறது. பண்டைய புலவர்கள் இயற்கையை தனியொரு பொருளாகக் கருதாமல் மக்களின் வாழ்வோடும் வளர்ச்சியோடும் கலந்த பொருளாகக் கொண்டு அவற்றை உவமைகளாகக் காட்டியுள்ளனர். அவர்கள் கூறிய உவமையை மு.வ. படிப்பவர்களுக்குப் புரியும் படியாகவும் அவற்றின் சிறப்பையும் எடுத்துக் கூறியுள்ள விதம் போற்றுதற்குரியது.

"..... மல்கி
கயல் உமிழ் நீரின் கண்பனி வார" (அகம் - 169)

கண்ணைக் கயலுக்கு உவமை கூறுதல் இலக்கிய மரபு. சங்கப் பாட்டுகளில் பல இடங்களில் காணப்படுகிறது. ஆயின் முதல் முதலாகக் கற்பனையுடன் ஒப்புமை கண்ட புதுமைச் சுவை அந்தப் பழம் பாட்டில் புலனாகிறது. கயல்மீனை இயற்கையான நிலையில் காண வேண்டுமானாலும் நீரை விட்டுப் பிரித்துத் தனியே காணல் இயலாது. நீரில் மூழ்கிப் பிறழ்ந்து செல்லும் நிலையே அதன் இயற்கையான நிலை நீரில் மூழ்கிப் பிறழ்ந்து செல்லும்போது அதன் வாயிலிருந்து நீர் உமிழப் பட்டுத் தோன்றும் அதன் உடல் முழுவதும் நீரால் நனைந்து தோன்றும். கயல் போன்ற வடிவும்இ கருமையும் ஒளிவிட்டுப் பிறழும் பிறழ்வும் உடையது. கண் மின்னுதலால் மீன் என்று அது பெயர் பெற்றது. ஒளியே கண்ணின் சிறப்பு. ஆகவே கயலைக் கண்ணுக்கு ஒப்புமை கண்ட சான்றோர் நீரில் மூழ்கி நீர் உமிழ்ந்து செல்லும் கயலை நீரால் நனைந்து நீர்த்துளிக்கும் கண்ணுக்கு உவமையாக்கிப் பொருத்தினர்.

மேற்கண்ட பாடலின் உவமையை எடுத்து விளக்கிய மு.வ. மீனின் பெயர்ப்பொருத்தம், கண்ணின் சிறப்பு கயல் மீனின்கண்ணிற்கும் தலைவியின் கண்ணிற்கும் உள்ள ஒற்றுமை ஆகியவற்றை மு.வ. எடுத்துக் காட்டியுள்ள விதம் நினைந்து நினைந்து போற்றுதற்குரியதாகும். மு.வ. வின் சங்க இலக்கிய ஆராய்ச்சி வெற்றிக்கு மேலே கூறிய மூன்று காரணங்களும் பொருத்த முற அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

முடிவுகள்

1. சங்க இலக்கியம் குறித்த மு.வ.வின் ஆய்வுகள் புலவர்களின் நாவிலே இருந்த சங்கத் தமிழைப் பொது மக்களின் பார்வைக்கு எடுத்துச் சென்றது.
2. கதை கூறும் நோக்கில் சிறு சிறு தொடர்களாக சிறு சிறு பத்திகளாக படிப்பவர் மனத்தில் நிலைத்து நிற்கும் படியாக மு.வ.வின் சங்க இலக்கிய ஆய்வுகள் அமைந்திருந்தன.
3. உவமையையும் பொருளையும் பொருத்திக் காட்டியிருப்பது மு.வ.வின் தனித் திறமையை எடுத்துக் காட்டுகிறது.

75. மு. வ. வின் தமிழ்நெஞ்சம் சுட்டும் வாழ்வியல் அறம்

முனைவர் இ.காளீஸ்வரி
விரிவுரையாளர், தமிழ்த்துறை
கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி
திருச்செந்தூர்.

வீட்டு வாழ்வுச் செம்மையாக இருந்தால் தான் நாட்டு வாழ்வும் செம்மையாக விளங்கும். வீட்டு வாழ்விற்கு அன்பும், அறமும் வேண்டும். நாட்டு வாழ்விற்கும் அன்பும், அறமும் இன்றியமையாதவை. வீடுகள் பல கொண்டே நாடு அமைவது. சிறு வீடுகளில் அமைதியும் இன்பமும் இல்லையானால் பெரிய நாட்டிலும் குழப்பமும், துன்பமும் மிகும். இவ்வுண்மையை உணர்ந்தே தமிழ்ச் சான்றோர் இல்லறம் விழுமியது என்று போற்றி அதனை நடத்தும் இருவரையும் தலைவராகப் பாராட்டி தலைவன், தலைவி என்றனர். வீட்டு வாழ்க்கை திருந்தல் வேண்டும் என்பதே தமிழ்நாட்டு அறவோர் எழுதிய அறநெறிக்கெல்லாம் அடிப்படையாக விளங்கியது.

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை" (குறள்: 47)

என்று திருவள்ளுவர் அறத்துப்பாலில் தெளிவுறுத்தியதைக் காணலாம். அவ்வகையில் அறமே வாழ்க்கையின் உயர்நிலை என்பதை உணர்த்த மு.வ.வின் 'தமிழ் நெஞ்சம்' சுட்டும் வாழ்வியல் அறம் இவ்ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

கடையெழு வள்ளல்களின் ஈதல் அறம்

தனது வெற்றியையும், மகிழ்ச்சியையும் பொருள் எனக் கொள்ளாது, எது நன்மை விளைவிப்பது என எண்ணுபவனே பொறுமை குணம் உடையவன் ஆவான். அப்பொறுமை வாயிலாக, உலகில் நல்லறத்தை நிறுத்தி பூசலைக் குறைத்திடுவான் என்பது உலக நியதியாகும்.

கடையெழு வள்ளல்களின் உணர்வு உயரிய நோக்கமுடையது. ஊருக்கெல்லாம் இன்பம் செய்வதையே வாழ்வாகக் கொண்டு திகழ்ந்தவர்கள். அவருள், முல்லைக் கொடியின் கொழுகொம்பு பெறாத திகைப்பைக் கண்ணால் கண்டபின் தன் செல்வநிலையையும், வாழ்வையும் மறந்து அதற்கு உதவுதலே உணர்வாய்த் தான் ஊர்ந்து வந்த தேரை அங்கு அம்முல்லைக் கொடிக்கு உரியதாக நிறுத்தி வந்தான் 'பாரி' என்னும் வள்ளல். இரவலர்க்குக் குதிரைகளை வழங்கி நாட்டையும் நல்கியவன்

'காரி' என்னும் வள்ளல். நீலநிறப் பட்டாடையை ஆலமர்ச் செல்வனுக்குக் கொடுத்து வேண்டிய பொருள்களையும், ஊர்களையும் வந்தவர்க்கெல்லாம் வழங்கி எல்லாம் இழந்தவன் 'ஆய்' என்னும் வள்ளல். பெறுதற்கு அரிதாய் வாழ்நாள் வளர்ச்சிக்கு உரியதாய் பெற்ற நெல்லிக்கனியையும் தான் உண்ணக் கருதாமல் ஔவை நெடிது வாழ விழைந்து கொடுத்து மகிழ்ந்தவன் 'அதியமான்'. நண்பர் தம் இல்லறம் நடத்துவதற்கு வேண்டுவன நல்கிப் புகழ் பெற்றவன் 'நள்ளி'. கூத்தர் தம் கலை வாழ அவர்களுக்கு நாடு கொடுத்துக் களித்தவன் 'ஓரி'. மயில் ஆடி அகவியதைக் கேட்டுக் குளிரால் நடுங்கிக் கூவியதாக உணர்ந்து தன் போர்வையை அதற்கு கொடுத்தவன் 'பேகன்'.

பேகனின் கைவண்மையைப் புகழ்ந்த பரணர் 'எவ்வளவு இயலுமோ அவ்வளவும் ஈதல் நல்லதே' என்பது பேகன் கோட்பாடு. அவன் வண்மை மறுமை நோக்கியது அன்று பிறர் வறுமை நோக்கியதே ஆகும் என்பதை,

"உடாஅ போரா ஆகுதல் அறிந்தும்
படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகம்
எத்துணை ஆயினும் ஈத்தல் நன்றென
மறுமை நோக்கின்றோ அன்றே
பிறர் வறுமை நோக்கின்று அவன்கை வண்மையே"-

(புறம்: 141)

கைவண்மை மிக்க இத்தகைய வாழ்வு வாழ்ந்த பேகனிடம் ஒரு குறை வந்துற்றது. அது அவனது இல்லறத்திற்கு இழுக்குத் தரும் குறையாய் நின்றது. அதனை உணர்ந்த புலவர் மனம் குழைந்து வருந்தினார். அருள் நெறிக்கு வழியாய், அன்பு வாழ்விற்கு அடிப்படையாய் அமைந்த இல்வாழ்க்கை உண்மையாகவே சிறந்து விளங்கும்.

புலவர்கள் புலப்படுத்தும் மனைஅறம்

அன்புடன் வாழ்வதே இல்வாழ்க்கையின் பண்பு. அறத்தைப் போற்றி வாழ்வதே இல்வாழ்க்கையின் பயன். அறநெறியில் இல்வாழ்க்கை நடத்தினால் போதும் வேறு வழியில் போய்ப் பெறத்தக்க பயன் ஒன்றும் இல்லை. அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ்கின்றவனே வாழ முயல்கின்றவர்கள் எல்லோருள்ளும் தலையானவராவர்.

பரணர், பேக! யாம் யாழிசைத்து உன் கானம் பாடி உன் வாயிலிற் சென்று நின்றோம். நெய்தல் மலர் போன்ற கண்களில் நீர் சொரிய, அணிகலன் நனைய ஓயாது அழுதாள். அழுகையைக் கண்ட யாம், அம்மா! நீ எம் நண்பன் பேகனுக்கு உறவோ? என்று தொழுது வினவினோம். அந்த அம்மையோ, காந்தள் முகை போன்ற அழகிய விரலால் கண்ணீரைத்

துடைத்துக் கொண்டு, 'யாம் அவனுக்கு உறவு அல்லேம். அவன் வேறு ஒருத்தியின் அழகை நச்சி வாழ்ந்து வருகிறானாம் என்றுரைத்தாள்' என்றார் புலவர்.

"யாம் அவன் கிளைஞரேம் அல்லேம் கேள்இனி
எம்போல் ஒருத்தி நலன்நயந்து என்றும்
வருஉம் என்ப வயங்குபுகழ் பேகன்
ஒல்லென ஒலிக்கும் தேரொடு
முல்லை வேலி நல்லூ ரானே" (புறம்: 144)

என்று தன்னைக் கைவிட்டுத் துறந்த கொடுமையைக் கடுமை சிறிதுமில்லா நற்சொல்லால் எடுத்துரைத்த கண்ணகியின் உரை கொண்டு அவளது அன்பின் பெற்றியையும், அறிவின் திறத்தினையும் புலவர் புலப்படுத்தினார்.

அரிசில்கிழார் என்னும் புலவரும் பேகன் அளித்த பரிசிலை மறுத்து 'உன் செல்வமாகிய அணிகலன்கள் பெறுதலை யாம் விரும்பவில்லை. என்னை விரும்பிப் பரிசில் நல்குவாய் ஆயின் கூறுவது கேட்க' என்று கண்ணகியின் துயரைப் போக்கி அன்பு செலுத்துமாறு வேண்டினார்.

"பரிசில் நல்குவை ஆயின், குரிசில்! நீ
நல்கா மையின் நைவரச் சாஅய்
அருந்துயர் உழக்கும்நின் திருந்திழை அரிவை
கலிமயிற் கலாவம் கால்குவித் தன்ன
ஒலிமென் கூந்தல் கமழ்புகை கொளீஇத்
தண்கமழ் கோதை புனைய
வண்பரி நெடுந்தேர் பூண்க நின்மாவே" (புறம் : 146)

கண்ணகியின் துயரம் எல்லாம் பேகன் அருளின்றித் துறந்த காரணத்தால் ஆகியதே என்பதைப் புலவர் தெளிவாக்கக் கருதி, "நீ அருள் செய்யாத காரணத்தால் நைந்து மெலிந்து அருந்துயர் உழக்கின்றாள்" என்றார். நீ தேர் ஏறிச் செல்ல வேண்டும். அத்தேர்க்குக் குதிரை பூட்டுக. நீ சென்று அருளினால் அத்துணைவி தன் துயர் மறத்தல் திண்ணம். இங்கிருந்து இல்லத்திற்குத் தேரேறிச் செல்லுதலே தம் பரிசிலென வேண்டினார்.

கான மயிலைக் கண்டிரங்கி அருளிய அருட்செயல் ஒன்றே அவனது வாழ்க்கை சிறப்பிற்குச் சான்றாக அமையும்.

"செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே" (புறம் : 189)

என்று புலவர் நக்கீரனார் செல்வரை நோக்கி அறிவுறுத்துபவராய், செல்வர் சிலராகவும் வறியவர் பலராகவும் இருப்பினும் குறையில்லை. அச்சிலர் இப்பலருக்கு உதவ வேண்டும் எனச் சான்றோர் கருதினர். புலவர் பெருமக்கள் பேகனிடம் இவ்வாறு உரைத்த வேண்டுகோள்களில் பேகன் இழைத்த பெருங்குற்றத்தை நயமான வகையிலும், தெளிவான முறையிலும் கரவாமல் எடுத்துரைத்தத் திறம் போற்றத்தக்கது.

வாழ்வியல் அறம்

நாகரிக வாழ்வு என்பது எளியது. இன்று சான்றோர்க்கே அது எளிதின் அமைவதாக உள்ளது. ஏனையோர் அரிதின் முயன்று பெறத்தக்க செல்வமும் அதுவே. சான்றோர் பொதுநலம் விழைந்து நெறிமுறை அறிந்து அறத்தொண்டு ஆற்றி வாழும் வாழ்விற்குத் துணையாக நிற்பது அவர்தம் நடுநிலை பிறழாத நெஞ்சமே ஆகும். இதனை வள்ளுவர்,

"கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி" (குறள் : 115)

என்கிறார். நடுநிலை நெஞ்சம் சான்றோர்க்கு அணி செய்தலை உணர முடிகின்றது.

குமணனைப் பாடிப் பெரும் பரிசில் பெற்றுக் கொணர்ந்த பெருஞ்சித்திரனார் தம் துணைவியிடம் "உன்னை விரும்புவோர்க்கும் கொடு. நீ விரும்புவோர்க்கும் கொடு. நம் பசி தீரப் பல நாள் கடனாகப் பொருள் கொடுத்தார்க்கும் கொடு. இன்னார்க்கு என்று வரையறை செய்யாமல் கொடு. என்னைக் கேளாமல் கொடு. யானும் கொடுப்பேன் நீயும் கொடுப்பாயாக!" என்றார்.

"இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவோன்
திருந்து வேல் குமணன் நல்கிய வளனே" (புறம் : 163)

என்று பெருஞ்சித்திரனார் போன்ற புலவர் எவ்வளவு பெறினும் வல்லாங்கு வாழாது வறுமையை வரவேற்றதில் வியப்பில்லை.

உலகம் முழுவதும் இனிது வாழ்ந்தால் அன்றி ஒரு தனிநாடோ, ஒரு தனி ஊரோ, ஒரு தனிக் குடும்பமோ இன்பமாக வாழ்தல் இயலாது. ஒரு நாள், சில நாள் இன்பமாக வாழினும் உலகத் துன்பம் விடாது தொடர்ந்து பற்றி அலைத்தல் திண்ணம். ஆதலின் குடும்பமும், ஊரும், நாடும் வாழ வேண்டும் என்று அறிவும் அறமும் வகுத்த நெறியில் நின்று தொண்டு செய்ய விரும்புபவர்கள் கணியன் பூங்குன்றனாரின்,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா" (புறம் : 192)

என்ற உலக உண்மையைப் பின்பற்றி அதன் வழி நடக்க வேண்டும்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்னும் உண்மையை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கை நிலைகளைச் சமமாக அமைத்தல் வேண்டும். இது ஒன்றே உலகத்தின் ஒன்றுபட்ட அமைதியான இன்ப வாழ்வுக்கு வழியாகும்.

76. நெடுந்தொகைச் செல்வத்து உயிரினங்கள்

முனைவர்.சு.தாமரைச்செல்வி
தமிழ்த்துறைப்பேராசிரியர்
அக்ஸிலியம் கல்லூரி, காட்பாடி
வேலூர் - 6

முன்னுரை

இயற்கை வியப்பிற்குரியது. நம்மை இன்பத்தில் ஆழ்த்துவது. நம் துன்பத்தைப் போக்குவது மனத்தெளிவு பெறச்செய்வது, நோயுற்றோரை ஆரோக்கியமானவராய் மாற்றுவது இயற்கை. அவ்வியற்கையுடன் இணைந்து வாழும் இயல்புடையன மலைவாழ் உயிரினங்கள். நம்வாழ்வைப்பற்றி எண்ணவும் அமைதியான வாழ்வு வாழவும் முடியாத இக்காலத்தில் இயற்கையை இரசித்து அதில் வாழும் உயிரினங்களின் வாழ்க்கை முறையை நுணுகி ஆய்ந்து போற்றும் பண்பு போற்றுதற்குரியது.

யானை

அச்சந்தரக்கூடியத் தோற்றம், நன்மை பயக்கும் தும்பிக்கையின் அருள். அசைந்தாடி வரும் அழகு கொண்ட இவ்யானைகள் இல்வாழ்க்கை நடத்தி மகிழ்கின்றன. பெண்யானை கன்று ஈன்று, பசி தீர மூங்கிலைத் தின்னும் போது, ஆண்யானை அன்புடன் நெருங்கி வந்து அதனைத் தடவுகின்றதாம். அயர்வுத் தீர பெண்யானை வாழைமரங்களும் நிறைந்த மலைப்பகுதியில் உறங்குகின்றதாம். இதனை

". . . மடப்பிடி
மழைதவழ் சிலம்பில் கடுஞ்சூல் என்று
கழைதின் யாக்கை விழைகளிறு தைவர
வாழையஞ் சிலம்பில் துஞ்சும்" (அகம் -328)

என்ற அகநானூற்று வரிகள் உணர்த்தும். இவ்யானையின் குடும்பம் மக்களின் குடும்பமாகவே புலவருக்குத் தென்படுகிறது. கணவன், மனைவி குழந்தை ஈன்றெடுத்தபோது காட்டும் பரிவு, அன்பு இங்கு எண்ணத்தக்கது. கணவனின் அரவணைப்பில் மனைவி நிம்மதியாய் உறக்கம் கொள்ளும் இல்லற இன்பம் இவ்யானைக்குடும்ப காட்சியில் இடம் பெற்றுள்ளது. புலவரின் சிந்தனை இல்லறத்தில் ஒருவர் மீது ஒருவர் காட்டும் நேசம் உயர்ந்தது என்பதை சுட்டுகிறது.

யானையின் அச்சம்

வலிமை மிகுந்த யானையிடம்கூட அச்சம் உள்ளது. பலாமரத்து காய்களை, பழங்களை குரங்குகள் கவர்ந்து செல்லாமல் இருக்க குறவர்கள்

குடிசை அமைத்து தங்கிப் பாதுகாக்கின்றனர். அவர் குடிசையருகேயுள்ள வேங்கை மரங்கள் பூக்களைச்சொரிந்து குடிசையை மறைத்துள்ளது. அது வேங்கை போலத் தோன்ற யானை அஞ்சி அப்பக்கம் வராமல் செல்கின்றது.

"விழுக்கோள் பலவின் பழுப்பயன் கொண்மார்
குறவர் ஊன்றிய குரம்பை புதைய
வேங்கை தாஅய தேம்பாய் தோற்றம்
புலி செத்து வெரீஇய புகர்முக வேழம்
மழைபடு சிலம்பில் கழைப்படப் பெயரும்" (அகம்-12)

என்ற பாடல் வரிகள் சுட்டும். வலிமையுடையோர் ஒரு சிறு கல் தடுக்கி விழுகையில் அதைக்கண்ட சிறுவர்கள் ஒளிவு மறைவு இல்லாமல் வெகுளியாக நகுவது உலகத்து இயல்பு. யானைக்கும் அடிசறுக்கும் என்று கூறுவது இங்கு எண்ணத்தக்கது. அழகின் சிரிப்பு என்ற கவிதையில் குரங்கு தன் வாலை பாம்பென நினைத்து தாவி ஓடுவது போன்று வேங்கை மரப்பூக்களை பார்த்து யானை வேறு திசை நோக்கி சென்றது வீரம் பொருந்தியோர் சிறு பூச்சிகளைப் பார்த்து பயம் கொள்கிறார்கள் என்பதும் எண்ணத்தக்கது.

இசைமயக்கம்

தினைப்புனத்தில் மேய வந்த யானையை கானவனின் மனைவி விரட்ட முயற்சிக்கிறாள். யாழ் எடுத்து குறிஞ்சிப்பண் பாடி மெல்ல அசைந்து தலை கோதிக்கொண்டே நகர்ந்து வருகிறாள்.

யானைகள் இசைக்கு மயங்கி நித்திரைக் கொள்கின்றன. தினைப்புனம் காக்கப்பட்டது. இக்காட்சியை

"உளைமான் துப்பின் ஓங்குதினைப் பெரும்புனத்துக்
கழுதில் கானவன் பிழிமகிழ்ந்து வதிந்தென
உரைத்த சந்தின் ஊரல் இருங்கதுப்பு
ஐதுவரல் அசைவளி ஆற்றக் கைபெயரா
. . . .
மறம்புகல் மழகளிறு உறங்கும்" (அகம்-102)

என்ற பாடல வரிகள் உணர்த்தும். வலிமை கொண்ட யானையே இசைக்கு மயங்குதல் போல பலம் கொண்ட மனிதர்கள் கூட இசைக்க மயங்குகின்றனர் என்பது நோக்கத்தக்கது.

வறட்சியால் வாடுதல்

வளமான மலையில் வாழ்க்கை நடத்தும் யானைகளின் வாழ்வும் வறண்ட மலைப்பகுதியில் தண்ணீருக்குத் தேடி அலையும் பாலை நில யானைகளின் வாழ்வும் புலவரின் கண்களில்படுகிறது. துன்பநிலையில்

கூட அவற்றின் அன்பு மாறவில்லை. நீர் வேட்கையால் வாடிச்சுனையில் நீரைத்தேடி வருத்தும் காட்சியும், மழை பெய்யுமா என்று ஏங்கித் தவிக்கும் காட்சியும் மனத்தை உருக்கும் தன்மைக்கொண்டது. கானல் நீரை நிஜநீர் என நினைத்து ஓடி ஓடி அலைந்து திரிந்து பார்த்து வருத்தமடைகிறது. இதனை

"வெம்மை தண்டா எரிஉகு பறந்தலைக்
கொம்மை வாடிய இயவுள் யானை
நீர்மருங்கு அறியாது தேர்மருங்கு ஓடி
அறுநீர் அம்பியின் நெறிமுதல் உணங்கும்" (அகம்-29)

என்ற அகப்பாடல் தெள்ளிதின் உணர்த்துகிறது. இன்று மக்களிடம் கூட தண்ணீரைத் தேடி அலைவது, விலை கொடுத்து வாங்குவது, என்ற அவல நிலை உள்ளது. இயற்கையை மாசுப்படுத்தி நீரை வற்றச்செய்து குறிஞ்சி, முல்லை நிலமெல்லாம் பாலையாய் மாறி நீர்இன்றி வறண்டுகிடப்பது எண்ணத்தக்கது.

புலி

இந்திய நாட்டின் தேசிய விலங்கு காடுகளிலும், மலைக்குகைகளிலும் வாழும் இயல்புடைய விலங்கு இது. மறைந்திருந்து வாழும் தன்மையுடையது. பிற உயிர்களுக்கு கொடுமை செய்து வாழும் புலி கூட தன் துணையிடத்தும், குட்டிகளிடத்தும். அன்புடன் வாழ்கின்றது. பெண்புலி குட்டி ஈன்று பசியுடன் கிடக்கும் காட்சியை கண்ட ஆண்புலி அதற்கான உணவை கொண்டுவரச்செல்கின்றது. இரைதேடும் ஆண்புலிக்கு இருளிலும் கண் தெரியும். அவ்விருளில் பாம்பு தன் மணியை ஓரிடத்தில் உமிழ்ந்து செல்கிறது. அதன் ஒளியும் புலிக்கு துணைசெய்ய இரை தேடுவது சுலபமாகிறது. யானையை வீழ்த்தி கொன்று இழுத்து வந்து பெண்புலிக்கு தருகிறது. இக்காட்சியை

"ஈருயிரப் பிணவின் வயவுப்பசி களைஇய
இருங்களிறு அட்ட பெருஞ்சின உழுவை
நாம நல்லராக் கதிர்பட உமிழ்ந்த
மேய்மணி விளக்கின் புலர ஈர்க்கும்" (அகம்-72)

என்று அகப்பாடல் உணர்த்தும். நம் உலக இயல்பான மனிதவாழ்வில் மிகக்கொடூரமான கடுமையான மனம் கொண்டவர்கள் கூடத் தன்குடும்பத்தை நேசித்துப் பேணுவதை இதோடு ஒத்து நோக்கலாம்.

விலங்கினங்கள் மட்டுமின்றி, புள்ளினங்கள் கூட வாழ்க்கை நெறியை அழகாய் நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

மயில்

இந்திய நாட்டின் தேசியப்பறவையாய் விளங்குவது மயில். அழகின் உருவம் என்று போற்றப்படுவது. மகிழ்ச்சியால் நடனமாடுவது. கார் மேகத்தைக்கண்டு ஆடும் ஆட்டம் அற்புதமானது. பெண்களில் நாட்டியப்பெண்களைப் பார்த்து மயில் போன்ற சாயலாள் எனக் குறிப்பிடுவதுண்டு.

அகநானூற்றுப்பாடலில் வயிரறாற கதிர்களை தின்ற மயில் மரம் ஏறி உறங்காமல், தோகை பரப்பி ஆடுவதுடன் மகளிர் போல கூவி அகவுவதாகவும் பாடப்பட்டுள்ளது.

"கொல்லை உழவர் கூழ்நிழல் ஒழித்த
வல்இலைக் குருந்தின் வாங்குசினை இருந்து,
கிளிகிடி மகளிரின் விளிபடப் பயிரும்" (அகம்-194)

கபிலர் ஓர் இயற்கைக்காட்சியைப் பார்க்கின்றார். மயில் நடனமாடுகிறது. மூங்கிலில் அமர்ந்து பறவைகள் பார்வையிட்டன. இக்காட்சியுடன் பாரி மன்னனின் அரசவையின் நடனஅரங்கை ஒப்பிட்டுப் பார்த்து மகிழ்கின்றார் கபிலர்.

"ஆடமைக்குயின்ற அவிர்துளை மருங்கில்
கோடை அவ்வளி குழல் இசையாகப்" (அகம்-82)

என்ற அகப்பாடல் உணர்த்தும். இதே காட்சியை அழகின் சிரிப்பிலும் நாம் காணலாம். மயிலின் நடை, கொண்டை சிறப்பு, கழுத்தின் நீண்டதன்மை, போன்றவை சிறப்புமிக்கவை. தான் மட்டும் மகிழாமல், தன் ஆட்டத்தைப் பார்த்து பலரையும் மகிழச்செய்வது மயில். கற்றோரின் சிறப்பைக்கூறுமிடத்து

"தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்" (திருக்குறள்-399)

என வள்ளுவர் குறிப்பிடுகிறார். உண்மையான மகிழ்ச்சி என்பது பிறரை சிரிக்க வைப்பது. அதை மயிலும், கற்றோரும் அவனியில் செய்கின்றனர். நாமும் கற்றோரை வாழ்ந்து மகிழ்விப்போம்.

பருந்தும், கழுகும்

பாலைவனத்தின் வறட்சி போல அங்கு வாழும் மக்களின் மனமும் கொடுமை மிக்கதாய் உள்ளது. வழிப்போக்கர்களைப் பதைக்க பதைக்க கொன்று குவித்துப் பொருள் தேடுகின்றனர். அவ்வாறு கொன்று குவித்த பிணங்கள் நிறைந்துள்ள இடத்தில் பருந்தும், கழுகும் இரைதேடுகின்றன.

ஆண்பருந்து தன் பெண் பருந்திற்குப் பிடித்த பிணங்களின் கண்களைத் தோண்டி அதன் வாயில் இடுகின்றது.

"படுபிணப் பைந்தலை தொடுவன குழிஇ
மல்லல் மொசிவிரல் ஒற்றி மணிகொண்டு
வல்வாய்ப் பேடைக்குச் சொரியும்" *(அகம்-215)*

என்ற பாடல் உணர்த்தும் அதே போல கழுகும் தன் இளங்குஞ்சுகளுக்குத் தன் வாயில் செல்லும் அளவிற்கு தேவையான பிணங்களின் கண்களைத் கொத்திக் கவர்ந்து கொண்டு வந்து ஊட்டுகிறது.

"புண் உமிழ் குருதி பரிப்பக் கிடந்தோர்
கண்ணுமிழ் கழுகின் கானம்" *(அகம்-31)*

என்ற அகப்பாடல் உணர்த்தும். பருந்து போலும் கழுகு போலும் வாழும் மக்கள் கூட்டம் உள்ளது. பிறர் துன்பத்தில் தன் தேவையை நிறைவேற்றிக் கொண்டு மகிழ்வது. தன் துணைக்காக எதையும் செய்யத்துணிவது பசிவந்திட அனைத்து மனித நேயமும் மாறுவது என்பவற்றை இக்காட்சி உணர்த்தியது.

முடிவுரை

தன்னுள் புதைந்து இன்பத்தை உணர்வது அகம். ஓவ்வோர் உயிரினமும் இறைவனின் படைப்பில் அற்புதம். அவ்உயிரினங்களின் வாழ்வில் அன்பு நிறைந்து விளங்குகின்றது. நெடுந்தொகைச் செல்வத்தின் உயிரினங்கள் வாழ்வின் அடிப்படையான 'அன்பு கொள்ளுதல்' என்ற பன்பை நமக்கு அறிவுறுத்துவதாய் அமைகிறது.

77. மண்குடிசை புதினம் சுட்டும் வாழ்வியல் அறம்

முனைவர் மா. ஆ. சுகந்தி
உதவிப் பேராசிரியர்
கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி
திருச்செந்தூர்.

முன்னுரை

இலக்கியத்தின் நோக்கம் வாழ்க்கையைப் பிரதிபலிப்பது மட்டுமன்று வாழ்க்கையில் தீவிரப் பங்கெடுப்பதும் அதன் நிறைகுறைகளை எடுத்தியம்புவதும் அதிலிருந்து படிப்பினையைப் பெறுவதும் தேவையானால் தீர்ப்பு வழங்குவதாகும். மு.வ., மண்குடிசை புதினத்தில் தனிமனிதரின் பண்புநலன்களையும், வாழ்க்கைத் தகுதி பற்றிய உண்மைகளையும், வாழ்க்கைத் தரம் ஆகியன குறித்தும் விவரித்துள்ளார். மு.வ. கூறியுள்ள வாழ்வியல் அறங்களை ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

கதைக்கரு

வாழ்வியல் நெறி மு.வவுக்குக் கை வந்த கருவாகும். அவர் இன்றைய சமுதாயத்தை மண்குடிசையாகப் பார்க்கிறார்.

> *"இன்று உள்ள சமுதாயம் மண்குடிசை போன்றது. அதில் எலிகள் வளை தோண்ட முடிகிறது. பெருச்சாளிகள் கடைக்காலையே தோன்றுகின்றன. பலவகைப் பூச்சிகளும் குடிபுகுகின்றன. எல்லாம் சேர்ந்து குடிசையைப் பாழாக்க முடிகிறது. மண்குடிசையாக உள்ள வரையில் இவைகளைத் தடுக்க இயலாது. ஒன்று குடிசையை விட்டு இயற்கையோடு இயற்கையாய்க் குகையில் தங்கி வெட்டவெளியில் திரிய வேண்டும். அப்போது எலிகள் முதலியன தோன்றி வளரமுடியாது" (ப.510)*

என்கிறார். இன்றைய பணவேட்கைச் சமுதாயத்தில் நல்லவர்களுக்குத் தொல்லைகள் மிகுதி. பணமும் பதவியும் உள்ளவர்கள் பகட்டாக வாழ்கிறார்கள். அவர்கள் ஏழைகளை நசுக்குகிறார்கள். அன்பு செலுத்துவதற்குக் கடமைப்பட்ட மனைவியின் அன்பு கிடைக்காவிட்டால் வாழ்க்கை வெறுக்கிறது. மனிதன் இறந்தபின் அவன் உடலை எரிக்கும் சடங்குகளில் கூட ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. எனவே உலகைத் தண்டிக்க வேண்டும் திருத்த வேண்டும் என்ற நோக்கம் ஏற்படுகிறது. எனவே மு.வ உலகைத் திருத்த முயற்சி செய்ய வேண்டும் என்கிறார்.

மனிதர்களின் பண்பு நலன்கள்

மு.வ பல்வேறு வகையான மனிதர்களை மண்குடிசையில் அறிமுகப்படுத்துகிறார். மெய்யப்பன் எளிய வாழ்க்கையும், சமுதாய நலத்தில் நாட்டமும் உடைய உயர்ந்த மனிதன். குமரவேல் மனைவிக்கு இணங்கிப் போகும் சராசரி குடும்பத்தலைவர். கேசவராயன் சமுதாய அமைதிக்கும் ஒழுங்குக்கும் இடையூறு உருவாக்குபவன். மெய்கண்டார் மக்களைத் திருத்தும் முயற்சியில் ஈடுபடும் தெளிந்த சிந்தனையுடைய அறிஞராவார்.

குடும்பம்

மெய்யப்பன், மனைவி மக்களிடம் அளவற்ற அன்பு காட்டுகிறார். தம்மளவில் தூய்மையாக உள்ள மெய்யப்பனை, அவருடைய மனைவி ரேவதி, அன்பு காட்டி ஆதரிக்கவில்லை. ரேவதி - மெய்யப்பன் வாழ்க்கை, ஒருமைப்படாத கணவன் மனைவியர் வகையைச் சாரும்.

குமரவேல் போன்றோர் தம் குடும்பத்தையும் அன்புடன் வைத்துக் கொண்டு, பிரிந்து கிடக்கும் நண்பர்கள் குடும்பத்தையும் இணைப்பதற்கு முயற்சி செய்கிறார்கள்.

குறிக்கோள் வாழ்வு

மெய்யப்பன் கற்று உணர்ந்தபடி வாழ வேண்டும் என்ற குறிக்கோளினால் தான், ஒரு பெண்ணின் கூக்குரல் கேட்டு உதவி செய்ய ஓடுகிறார். அந்தப் பெண்ணைக் கற்பழிக்க முயலும் கோதண்டம் என்ற முரடனோடு மோதுகிறார். பெண்ணைக் காப்பாற்ற முயன்று வீண்பழிக்கு ஆளாகிறார்.

மெய்யப்பன் தான் நல்லவராக இருப்பதாலேயே தீயவர்களைக் கடுமையாக வெறுக்கிறார். கொடியவர்களை ஆங்காங்கே அவ்வப்போதே தண்டிக்க வேண்டும். மனிதர்களிடையே தீயவர்களை ஒழிக்க வேண்டும் என்று எண்ணுகிறார். உருத்தெரியாத நிலையிலும் மெய்யப்பனின் இந்த குறிக்கோளைக் காண முடிகிறது. திருடனைத் தடி கொண்டு அடிப்பது, பொய்ச்சாட்சி சொல்லும் மணியக்காரனைத் தண்டிப்பது, பாண்டியனின் மனைவியுடன் தகாத உறவு கொண்டவனை விரட்டுவது ஆகிய அனைத்து நிகழ்ச்சிகளிலும் மெய்யப்பனின் இந்தக் குறிக்கோளைக் காண முடிகிறது.

பண்பட்ட வாழ்வு

மெய்கண்டாரின் வாழ்க்கை பண்பட்ட வாழ்க்கையாக அமைந்துள்ளது. இவருடைய மனம் கடவுளின் படைப்பில் ஈடுபட்டு,

எந்நேரமும் கடவுளின் ஆட்சியை நினைத்துப் பார்க்கிறது. நல்லது - கெட்டது, எளியது - அரியது, எதைக் கண்டாலும், கேட்டாலும், முகர்ந்தாலும், சுவைத்தாலும், கடவுளை நினைத்து வழிபடும் மனம் மெய்கண்டாருக்கு உள்ளது. வாழ்க்கை என்பதே அவருக்கு வழிபாடாக உள்ளது.

வாழ்க்கைத் தரம்

மண்குடிசையில் பலவகைப்பட்ட வாழ்க்கையைப் படைத்துக் காட்டுகின்றார் மு.வ. பொருளாதாரம் தொழில்களின் வழி அமைகிறது. தொழில்களுக்கு ஏற்ப மனிதர்களின் பண்புகளும் வாழ்க்கைத் தரமும் மாறுபாடடைகின்றது.

மு.வ. பொருளாதார அடிப்படையில் மூவகையான வாழ்க்கை முறையைக் குறிப்பிடுகின்றார். அவை,

1. அன்றாடக் கூலி வாழ்க்கை
2. நடுத்தர வாழ்க்கை
3. மேலாண்மை வாழ்க்கை என்பனவாகும்.

அன்றாடக் கூலி வாழ்க்கையாக, படகு வீடுகளை வாடகைக்கு விடுதல், குதிரைகளை வாடகைக்கு விடுதல், சாணம் பொருக்குதல், உழவுத் தொழில், பிணம் சுடுதல் ஆகியனவற்றைக் குறிப்பிடுகின்றார் ஆசிரியர். மேலும் நடுத்தர வாழ்க்கையாக எழுத்தர் பணி, ஆசிரியர் பணி முதலியவற்றையும் குறிப்பிடுகின்றார். மேலாண்மை வாழ்க்கையாக வழக்கறிஞர், அரசியல் ஆகியவற்றைக் கூறுகின்றார்.

அன்றாடக் கூலி வாழ்க்கை

அன்றாடக் கூலி வாழ்க்கையில் ஒன்றாக கங்கைக் கரையோரம் பிணம் சுடும் தொழிலைக் குறிப்பிடுகின்றார். சிலர் பிணங்களை அரைகுறையாக எரித்து விட்டு, கங்கையில் தள்ளி விடுகின்றனர். இரண்டு ரூபாய்க்காகப் பிணத்தைப் படகில் ஏற்றி கங்கையில் மூழ்கடிக்கின்றனர். இவர்களிடம் மனிதநேயத்தைக் காண முடியவில்லை. பண்பையும் பழக்க வழக்கத்தையும் கூடத் தொழில் மாற்றி விடுகிறது. பிணம் சுடும் தீக்கட்டைகளைக் கொண்டே உணவு சமைக்கவும், நெருப்பு எடுத்துக் கொள்கிறார்கள்.

நடுத்தர வாழ்க்கை

நடுத்தர வாழ்க்கையாக எழுத்தர் பணி, ஆசிரியர் பணி ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றார். எழுத்தர் பணியில் ஈடுபடும் மெய்யப்பனும், ஆசிரியர் பணியில் உள்ள பாண்டியன், மார்த்தாண்டர்

போன்றோரும் நீதி, நேர்மை மிக்கவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் பழிக்கு அஞ்சக் கூடியவர்களாகவும், மற்றவர்களுக்கு உதவி செய்யக்கூடியவர்களாகவும் இருக்கின்றனர். மெய்யப்பனும் பாண்டியனும் நல்ல பழக்க வழக்கங்களை உடையவர்களாகவும், சிறந்த பண்பாளராகவும் திகழ்கின்றனர்.

மேலாண்மை வாழ்க்கை

வழக்கறிஞர்கள் மற்றும் அரசியல்வாதிகளை மேலாண்மை வாழ்க்கை வாழக் கூடியவர்களாகக் குறிப்பிடுகின்றார். சட்டம் படித்தவர்கள் பாமர மக்களையும், நீதியையும் மயக்கமுறச் செய்கிறார்கள். நீதிமன்றத்திற்கு கணவனால் கைவிடப்பட்ட ஒரு பெண்ணும், அவளுடைய பெற்றோரும் வருகின்றனர். வழக்கறிஞர் அந்தப் பெண்ணிடம் பொய் சொன்னால் தான் வெற்றி கிடைக்கும் என்று கூறுகிறார். இதனை ஆசிரியர்,

"நீதிமன்றத்திற்கு அரிச்சந்திரர்கள் வரக்கூடாது அம்மா" (ப.326)

என்றும்

*"இப்படி எல்லாம் உண்மையைத் தராசில் எடை
போட்டுப் பேசினால் இங்கெல்லாம் உங்களுக்கு
வெற்றியே கிடைக்காது" (ப.327)*

என்றும் கூறுகிறார். நீதி கேட்டு வருபவர்களை வழக்கறிஞர்களே பொய் கூறுமாறு தூண்டுகிறார்கள். இவ்வாறு மேலாண்மை வாழ்க்கை வாழக் கூடியவர்களிடம் நீதி, நேர்மை, இரக்கம் ஆகிய பண்புநலன்களை எதிர்பார்க்க முடியாது என்கிறார் ஆசிரியர். வழக்கறிஞர்களும் அரசியல்வாதிகளும் தன்னை நாடி வருபவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும். பணத்திற்காக ஏழை மக்களுடைய வாழ்க்கையை பணயம் வைக்கக் கூடாது என்கிறார் மு.வ.

வாழ்வாங்கு வாழ பயன்படும் அறவுரைகள்

மெய்கண்டார் ஒரு கடிதத்தை எழுதி மெய்யப்பனிடம் கொடுத்து. 'ஊருக்குச் சென்ற பின் முழுநிலவின் போது இதைப் பிரித்துப் படித்துப் பாருங்கள்' என்று கூறுகிறார். கடிதத்தில் அத்தனையும் மணிமொழிகள் வாழ்க்கைத் தத்துவங்கள் இந்த வையத்துள் வாழ்வாங்கு வாழ பயன்படும் அறவுரைகள் ஆகும்.

"மனத்தையும் நல்ல வழியில் காப்பாற்றி உடம்பையும் நோய் இல்லாமல் காப்பாற்றினால், அந்த வாழ்க்கை தான் வெற்றி மிகுந்த வாழ்க்கை" (ப.508)

என்றும்,

"எதிர்கால நன்மையைக் கருதிக் கடமையைச் செய்வோம். அங்கங்கே நல்ல விதைகளைத் தூவிச் செல்வோம். அதுவும் இயலாத நிலையானால், இயன்றவரையில் நிலத்தைப் பண்படுத்தி விட்டுச் செல்வோம். அது நம் கடமை நல்ல கடமையை உணர்ந்து செய்வதே நல்வாழ்க்கை" (ப.511)

என்றும் மெய்கண்டார், மெய்யப்பனுக்கு அறிவுரைகள் கூறுகிறார். இந்த அறிவுரைகளை அனைவரும் பின்பற்றினால் நல்வாழ்வு வாழலாம்.

முடிவுரை

மு.வ., மண்குடிசை புதினத்தில் வாழ்வியலுக்குப் பயன்படும் அறவுரைகளைப் படைத்துக் காட்டுகின்றார். நெஞ்சில் உரத்தோடும், நேர்மைத் திறத்தோடும் வாழ வேண்டும் என்றும், உள்ளும் புறமும் ஒத்துச் செம்மையாக வாழ வேண்டும் என்றும், வீட்டுக்காக வாழாமல் நாட்டுக்காக வாழ வேண்டும் என்றும் கூறுகின்றார். மேலும் வால் பிடித்து வாழாமல் மானத்தோடு வாழ வேண்டும், வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும் என்கிறார் மு.வ. இதுவே மண்குடிசை புதினம் சுட்டும் வாழ்வியல் அறம் ஆகும்.

78. மு. வ. வின் புதினங்களில் தமிழ் உணர்வு

முனைவர் க. தமிழ்ச்செல்வன்
தமிழ்ப்பேராசிரியர்
சமூக அறிவியல் மொழிப்பள்ளி
விஐடி பல்கலைக்கழகம்
வேலூர் - 632 014.

மு.வ. வின் காலம் முழுவதிலும் தமிழர் நலனுக்காக உழைத்தார். இவருடைய படைப்புகளுள் குறிப்பாகப் புதினங்களில் தமிழினம், தமிழ்மொழி உணர்வு இழையோடிக் கிடப்பதைக் காணமுடிகிறது.

இன உணர்வு

"நாவல் எழுதும் போதெல்லாம் யாருக்காக எழுதுகிறேன் என்று எண்ணிப் பார்ப்பதில்லை முதலிலே. எழுதத் தொடங்கிய உடனே உள்ளத்திலே அமைந்த கற்பனைக்குக் கலைவடிவம் கொடுத்து எழுத வேண்டும் என்ற ஒரே நோக்கம்தான் இருக்கும். எழுதி முடித்தபிறகுதான் யாருக்காக எழுதுகிறேன் என்று எண்ணிப் பார்க்கிறேன். தமிழ் மக்களுக்காக எழுதுகிறேன் எனப் பொதுவாகச் சொன்னாலும் சிறப்பாகத் தமிழ்நாட்டிலே சிந்தனை ஆற்றலுடன் கற்பனை வளத்துடன் வளர விரும்புகின்ற இளைஞர்களுக்காக எழுதுகிறேன் என்று சொல்லலாம்"[1] என்பது அவருடைய பேட்டியின் ஒரு பகுதி. அண்ணாவும், மு.கருணாநிதியும் குறிப்பிட்டது போன்றே மு.வ.வும்,

"தமிழர்களுக்கு இனப்பற்றும் இல்லை, மொழிப்பற்றும் இல்லை. அதனால் தான் அவர்கள் இருக்க இருக்கக் கீழே போகிறார்கள்"[2] என்ற கருத்தினர் ஆவர். எனவே அவருடைய புதினங்களில் தமிழின உணர்வினைத் தூண்டும் செய்திகள் பொருத்தமான இடங்களில் பேசப்பட்டுள்ளன.

தமிழர்களின் பெருந்தன்மை

தமிழர்கள் பிறருக்கு உதவி செய்வதில் சற்றும் குறைந்தவர்கள் அல்லர். எந்த நாட்டைச் சேர்ந்தவரானாலும், எவ்வின மக்களாக இருந்தாலும் தமிழர்கள் தம்மால் இயன்ற உதவியைத் தவறாமல் செய்கின்ற மனப்பான்மை உடையவர்கள். 'கள்ளோ? காவியமோ?' என்ற புதினத்தில் தமிழர் ஒருவர் வடநாட்டைச் சேர்ந்த பெண்மணிக்கு உதவி செய்வதைக் கூறுகிறார்.

"அந்தக் காட்டுப்பாடியில் இரண்டு இரவும் ஒரு பகலும் இருந்து உதவி செய்தாராம். அதன் பிறகு தமிழர் என்றால் அவளுக்கு

அன்பு ஏற்பட்டு விட்டது. போன இடத்தில் எல்லாம் தமிழர்கள் அவ்வளவு உதவி செய்துள்ளார்களாம்"[3]

என்கின்றனர். தமிழர்கள் பெருந்தன்மையில் சிறந்தவர்களாக விளங்குகின்றார்கள். அதே நேரத்தில் தம்முடைய உரிமைகள் பறிபோவதைக் கண்டு பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். உரிமைகளை மீட்பதற்குப் பாடுபடாமல் கையாலாகாத தன்மையாலும், கோழைத் தன்மையாலும் ஏமாளிகளாக இருக்கின்றார்கள். இதனைப் பெருந்தன்மை என்று நம்புகிறார்கள். இத்தகைய பெருந்தன்மையே தமிழர்களின் வீழ்ச்சிக்குக் காரணமாகின்றது. இதனை மு.வ.,

"பிறர் உரிமையைப் பறிப்பது எவ்வாறு குற்றமோ, அவ்வாறே நம் உரிமை பறிபோவதைப் பார்த்துக் கொண்டு வாளா இருப்பதும் பெருங்குற்றம். கையாலாகாத் தன்மையையும், கோழைத் தன்மையையும் ஏமாளித் தன்மையையும் விட்டுக் கொடுக்கும் பெருந்தன்மை என்று தமிழர்கள் தவறாக எண்ணிக் கொண்டு கெடுகின்றனர்" [4]

எனக் கரித்துண்டு என்ற புதினத்தின் வாயிலாகத் தன்னுடைய மனப்பதிவைப் புலப்படுத்துகின்றார்.

தமிழர்களின் மான உணர்வு

"தமிழர்கள் மானத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். அதிலும் குறிப்பாகத் தமிழ்ப் பெண்கள் மானம் காக்க உயிரையே விடுமளவிற்குத் துணிவு பெற்றவர்கள் என்பதைக் கள்ளோ காவியமோ? புதினத்தின் வழிப் புலப்படுத்துகின்றார்" [5]

அதே சமயம் அவர்கள் மானவுணர்வை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு ஏமாந்து விடக்கூடாது என்றும் எச்சரிக்கின்றார். இதனை,

"தமிழர்களிடத்தில் ஒரு குறை உண்டு. இன்றையப் போராட்டத்திலே அக்கறை காட்டி உயிரை விடுவார்களே அல்லாமல், நாளைய தற்காப்புக்கு வேண்டிய திட்டம் இட்டு வெற்றி பெறும் வகையில் கடமையைச் செய்யமாட்டார்கள்" [6]

தமிழ் மொழியின் சிறப்பு

தமிழினம் உயர்வடைய வேண்டுமானால் தமிழ் மொழியும் உயர்வடைய வேண்டும். இதனை,

"வடஇந்திய மொழிகளின் உடல், ஐரோப்பிய மொழிச் சொற்கள், வட இந்திய மொழிகளின் உயிர், தமிழ் அமைப்பு முடிவாகக் கொள்வது, இந்தி முதலான மொழிகள் ஐரோப்பிய இனம் அல்ல, தமிழ் இனம்" [7]

என்றும்,

> *"வன்மையும் மென்மையும் குறிலும் நெடிலும் ஒத்து அமைவது ஒலியுறுப்புகளுக்கு அளவான உழைப்புத் தந்து விளங்கும் அருமை தமிழ் போல"* [8]

என்று கூறுவதிலிருந்து தமிழ் மொழியின் எளிமையும் சிறப்புத் தன்மையும் புலனாகின்றது.

தாய்மொழிக் கல்வி

தாய்மொழி வழிக் கல்வி தான் ஒரு மனிதனுக்கு சுய சிந்தனையைத் தரும். அதுவே மெய்யான அறிவு வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும். தாய்மொழிக் கல்விப் பற்றின்மை தற்கொலைக்கு ஒப்பானது என்று காந்தியடிகள் அறிவுறுத்தினர். அயல்மொழிக் கல்வி அறிவு ஊற்றைத் தூர்த்து ஆண்மையை அழித்து விடும் என்றும் எச்சரித்துள்ளார். அயல்மொழிக் கல்வி ஒரு இனத்தாரை அறிவு சூன்யர்களாக்கி அடிமைகளாக்கி விடும். இவ்வுண்மையைக் கள்ளோ? காவியமோ? புதினத்தில் குறிப்பிடுகின்றார்.

> *"தாய்மொழியில் கற்றிருந்தால் இவ்வளவு காலத்தையும் மூளையுழைப்பையும் திரும்பத் திரும்ப உதவாப் பாடல்களுக்குச் செலவாக்கியிருக்க வேண்டியதில்லை"* [9]

என்ற கூற்று மு.வ.விற்குத் தாய்மொழிக் கல்வியின் மீது இருந்த உண்மையான பற்றை வெளிப்படுத்துகின்றது.

பிறமொழித் திணிப்புக்கு எதிர்ப்பு

தாய்மொழிப் பற்றில்லாத இனத்தின்மீது பிறமொழிகள் திணிக்கப் படுகின்றன. இதனைத் தமிழர்கள் அனைவரும் எதிர்க்க வேண்டும். மொழியின் அடிப்படையில் மாநிலங்கள் அமைந்து மொழியின் அடிப்படையில் அரசும் அமைந்தால்தான் ஓர் இன மக்களுக்கு நன்மை ஏற்படும். தாய்மொழியை நன்றாகக் கற்றுக்கொண்ட பிறகு மற்றொரு மொழியைக் கற்றுக் கொள்வதில் தவறில்லை.

தமிழ் மக்களின் விருப்பத்திற்கு எதிராக இந்தியும். ஆங்கிலமும் திணிக்கப்பட்ட பொழுதெல்லாம் கிளர்ச்சிகள் வெடித்துள்ளன. பிறமொழிப் பெயர்ப்பலகைகள் அழிக்கப்பட்டுள்ளன. இச்செயல்களை வரவேற்கு முகத்தான்,

> *"நிலையத்தின் பெயரைத் தெரிந்துகொள்ள எட்டிப் பார்த்தேன், இந்தி எழுத்துக்களுக்கும் ஆங்கில எழுத்துக்களுக்கும் கீழே பாலூர் என்ற தமிழ் எழுத்துக்கள் தெரிந்தன. இங்கும் அங்கும்*

அந்தப் பலகையில் தார் ஒழுகியதும் தெரிந்தது" [10]

இது அவருடைய தமிழ் மொழிப்பற்றைப் புலப்படுத்துகின்றது.

தமிழர்கள் யாவரும் தமிழ்மொழி கற்று நல்ல தமிழில் உரையாட வேண்டும். அதுவே தமிழுக்கு செய்யும் தொண்டாகும். அத்தகைய தொண்டினுக்கு முன்மாதிரி போன்று மு.வ. நல்ல தமிழ்க் கலைச்சொற்களைக் கையாண்டார். தமது கதை மாந்தர்களுக்குத் தமிழ்ப் பெயர்களைச் சூட்டினார்.

அறிவன

தமிழினத்திற்கு இனப்பற்று இல்லை, மொழிப்பற்று இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி இனப்பற்றும் மொழிப்பற்றும் ஏற்படுவதற்கான வழிவகைகளை மு.வ. தமது புதினங்களில் கூறியுள்ளார். தமிழர்கள் பெருந்தன்மை என்று கூறிக்கொண்டு உரிமைகளை விட்டுக் கொடுத்துக்கொண்டு இருக்கக்கூடாது. உரிமைகள் பறிபோனதைக் கண்டு கண்மூடி வாழக்கூடாது. எதிர்த்துப் போராடும் அஞ்சாமை மிக்கவர்களாகத் திகழ வேண்டும் என்று உணர்த்துகின்றார். தமிழ்மொழிக் கல்வியே தமிழனுடைய சுயசிந்தனையை வளர்த்துப் பொருளாதார மேம்பாட்டிற்கு உற்ற துணையாக அமையும் என்பதைப் புதினங்கள் காட்டுகின்றன.

அடிக்குறிப்புகள்

1. ரா. தண்டாயுதம், டாக்டர் மு.வ., பக்.68-69.
2. மு.வ., கள்ளோ? காவியமோ?, ப.197
3. மேலது, ப.195.
4. மு.வ., கரித்துண்டு, ப.54.
5. மு.வ. கள்ளோ? காவியமோ?, ப.189.
6. மு.வ. பெற்றமனம், ப.282.
7. மு.வ., கள்ளோ? காவியமோ?, ப.186.
8. மு.வ., அகல் விளக்கு, ப.243.
9. மு.வ., கள்ளோ? காவியமோ?, ப.50.
10. மு.வ., பழியும் பாவமும், ப.55.

79. மு. வ. பார்வையில் கல்வி

பாபு. கு. இராதாகிருட்டினன்
இணைச் செயலாளர்
திருவண்ணாமலைத் தமிழ்ச் சங்கம்.

புகுமுன்

இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற எழுத்தாளரும், வரலாற்று நாயகராகவும், தமிழ் இலக்கிய வள்ளலாகவும், தமிழ்ப பேராசிரியருமாகிய முனைவர் மு. வரதராசனார் அவர்கள் தம் அறுபத்திரண்டாம் வயது வரையில் வாழ்ந்து 85 புத்தகங்கள் படைத்துள்ள பெருமையினை நாம் என்னென்பது மு.வ. அவர்கள் பதினொரு கட்டுரைப் படைப்புகளைப் படைத்துள்ளார்கள். அதில் "கல்வி" என்ற கட்டுரை நூலில் கல்விப் பார்வை குறித்து இக்கட்டுரையில் நோக்குவோம்.

கல்வியாளர்களும் கல்வியும்

ஆசு + இரியர்கள் மாணவர்களின் குற்றங்களைக் களையும் ஆசிரியர்கள், 'குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை' என்றும் 'நிலம் மலர் நிறைகோல் மலர் நிகர் மாட்சியோடு விளங்குபவர்கள்' என்றும் நன்னூல் ஆசிரியர் கூறுவார். ஆனால் மு.வ. அவர்கள் நகரப் பகுதியில் ஆங்கில முறைக் குழந்தைகளுக்குரிய ஆசிரியர்களைப் போல் இல்லாது,

"ஏழைக் கிராமங்களில் ஆசிரியர்கள் காணும் குழந்தைகள் கந்தல் உடுக்கும் குழந்தைகள் மாட்டை மந்தைக்கு ஓட்டிவிட்டு, அரைவயிற்றுக் கஞ்சி குடித்துவிட்டு வளரும் குழந்தைகள், "நேற்று ஏன் வரவில்லை?" என்றால் "பாவாடையை வெளுப்பதற்குப் போட்டேன்" (கல்வி, பக். 25) என்று காரணம் சொல்லும் ஏழை பெண் குழந்தைகளும் அங்கெல்லாம் உண்டு. இத்தகைய வறுமைச் சூழ்நிலையில் வளரும் குழந்தைகளின் உண்மை நிலையை ஆராய்ந்து பார்த்தால் ஆசிரியர்கள் எவ்வளவு இடர்ப்பாடுகளுக்கு இடையே ஓர் அளவு தொண்டு செய்து வருகிறார்கள் என்பது விளங்கும் என்று மு.வ. அவர்கள் ஆசிரியர்களின் இடர்ப்பாடுகளைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

கலை, அறிவியல், கல்வி, கட்டடம், பொறியியல், மருத்துவம் முதலான பல்வேறு துறைகள் உள்ளன எல்லாவற்றிலும் பொதுத்துறை சிறப்புத்துறை என்று பாகுபாடுகள் உள்ளன என்று கூறும் மு.வ. அவர்கள்,

"கல்வித்துறையிலே பாட முறையை மூன்றாகப் பாகுபாடு செய்ய வேண்டும். அவையாவன : பொது அறிவுப்பாடங்கள், வேண்டும் சிறப்பறிவுப் பாடங்கள், வேண்டா சிறப்பறிவுப் பாடங்கள் என்று மூன்று பாகுபாடுகளாகப்

பிரிக்கின்றார். இதனை மாணவர்களுக்குச் சுமத்துவதும், புகுத்துவதும், புறக்கணிப்பதும் நாட்டுக்கு நல்லது அல்ல" (கல்வி, பக்.68) என்கின்றார்.

கல்வித்துறையில் சீர்திருத்தம் மிகமிக இன்றியமையாதது தான். ஆனால் இளமாணவர்களின் உடல்நலத்தைக் காக்க வேண்டும். உள்ளத்தைப் பண்படுத்த வேண்டும். அவ்வுள்ளத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றார் மு.வ. அவர்கள். "யாருக்கு எது? எப்போது எது? எங்கு எது? என்ற தெளிவோடு பாடத்திட்டங்களை வகுக்குமாறு செய்ய வேண்டும்" (கல்வி, மு.வ.நூல், பக். 69) என்று கூறுகின்றார் இல்லையேல் இளைஞர்களின் உடலும் உள்ளமும் கோணல் வளர்ச்சியால் கொடுமை பெறும் என்கின்றார்.

தேர்வுகள்

வகுப்புத் தேர்வுக்குக் கொடுக்கும் மதிப்பை விட முடிவுத் தேர்வுக்கு அதிக மதிப்பளிக்கப்படுகிறது. வகுப்பில் உழைக்கும் ஆசிரியர்களைவிட திரை மறைவில் இருக்கும் தேர்வர்களுக்கும், வினாத்தாட்களுக்கும் அவர்கள் தரும் மதிப்பெண்களுக்கும் அளவு கடந்த பெருமை ஏற்படுகின்றது. மதிப்பெண்களை அதிகரிக்கவும் வினாத்தாட்களைப் பெறுவதிலும் குறுக்கு வழிகளைத் தேட எண்ணுகின்றார்கள். மந்திரவாதிகளையும் பணம் கொடுத்தாகிலும் திரைமறைவுத் தேர்விலும் போட்டித் தேர்விலும் வெற்றி பெற துடிக்கின்றார்கள். அதனால் வகுப்புத் தேர்வைவிட முடிவுத் தேர்வு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. எடுத்துக்காட்டாக "ஒரு மாணவன் இரண்டு ஆண்டுகள் படித்து வாரந்தோறும் தேர்வுகள் எழுதி இரண்டாம் ஆண்டின் இறுதியில் முடிவுத் தேர்வுக்குச் செல்கின்றான்". (கல்வி, பக்கம் 133) வகுப்புத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் எடுத்திருந்த போதிலும் முடிவுத் (பொதுத்) தேர்வுகளில் ஒரு சில பாடங்களில் தோல்வியென்றால் தோல்வியேதான். வகுப்புத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்றிருப்பினும் அதை இத்துடன் சேர்ப்பது இல்லை என்கிறார் மு.வ. அவர்கள்.

முடிவுத் தேர்வை ஒரு பொருட்டாக எண்ணாமல் தேர்வுக்குச் செல்லாமலே வெற்றி பெற முடியும். வகுப்புத் தேர்விலும் மாதத் தேர்விலும் அதிக மதிப்பெண்கள் பெற்று அதனையே விழுக்காடாகக் கொள்ளலாம் என்கிறார் மு.வ. அவர்கள்.

"வாரத் தேர்வுகள் உணவு போன்றவை. முடிவுத் தேர்வு மருந்து போன்றது. உணவைப் பற்றி வழிகாட்டாமல் மருந்தை மட்டும் வாயிலிட்டுச் செல்லும் மருத்துவர் மக்களுக்கு நன்மை செய்ய முடியாது" (கல்வி, பக்கம் 137).

மருந்தை அளவாகப் பயன்படுத்தி உணவை நன்கு

போற்றுவோமானால் கல்வித்துறை உரமும் பயனும் உள்ளதாக அமைந்து நாட்டுக்கு நன்மை பல செய்யும்.

பொறுத்தல், அருள்மிக்க எளிமை நடுநிலைமை, விட்டுக்கொடுத்தல் போன்ற அகமதிப்பீட்டையும் ஒரு புறம் கண்காணிக்க வேண்டும். முறையே ஒறுத்தல், ஆடம்பரச் செருக்கு ஒருசார்பு, பிடிவாதம் போன்ற நிலைகளில் எளியவை அரியவை காண முடியும்.

எளியவை தரும் இன்பம் போலி இன்பம் அறியவை தரும் இன்பம் உண்மையின்பம், இந்தத் தெளிவு உள்ளத்தில் பிறந்ததா? இது இரண்டாவது தேர்வு என்கின்றார் மு.வ. (கல்வி, பக். 155)

புறத்தேர்வுகளோடு அகத்தேர்வுகளையும் கல்விக் கூடங்கள் நடத்துமானால் அத்தகைய ஆசிரியர்களையும் மாணவர்களையும் பெற்று விளங்குமானால் பள்ளிகள் அறம் விளங்கும் கோயில்களாகப் போற்றப்படும் என்பது உறுதியாகும்.

கல்வி

மழைக்கும் பனிக்கும் தப்புமாறு காப்பு தேடிக் கொள்ளவும் நாளை உணவுக்குச் சேர்த்து வைக்கவும், தலைப்படும்போது மனிதன் அறிவுள்ளவனாகக் கருதினான். நெருப்பின் உபயோகம் அறிந்து சமைக்க அறிந்தவன் ஆனான். அதுவே அவன் முதன்முதலில் கற்ற அறிவியல் (சயின்ஸ்) எனலாம். சமைத்து உண்டபின் கூடிப்பாடி ஆடினதுதான் அவன் பயின்ற முதல் கலை எனலாம்.

"அறிவியல் என்றும் கலையென்றும் இன்று கல்வி பகுக்கப்படுகின்றது. திருவள்ளுவர் அவற்றை எண் என்றும் எழுத்து என்றும் குறிப்பிட்டார் எனக்கொள்ளலாம். எண்ணும் எழுத்தும் ஆகிய இருவகைக் கல்வியும் மக்களுக்கு இருகண்கள் எனத் தக்கவை என்று திருவள்ளுவர் ஓதியுள்ளார்" (கல்வி, பக். 164)

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு

இத்தகைய கல்வியை நூல்கள் வாயிலாகக் கற்று உணரும் நாகரிகம் இந்த உலகத்தில் தோன்றி நாலாயிரம் ஆண்டுகளுக்கு மேல் ஆகியிருக்கும். நூல்கள் வாயிலாகக் கற்கும் கல்வியால் தான் மக்கள் உயர்வடைந்தார்கள் என்பது திருவள்ளுவரின் கருத்து. நூல்களைக் கற்றவர்களே மக்கள் என்றும் நூல்களைக் கல்லாதவர்கள் விலங்குகள் என்றும் கொள்ளத்தக்க அளவிற்கு வேறுபாடு இருப்பதாக அவர் கூறுகிறார். (கல்வி, பக். 164)

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்

விலங்குக்கும் மனிதனுக்கும் குகை வாழ்வில் தோன்றிய சிறு வேறுபாடு, கல்வி நாகரிகம் வளர்ந்த பிறகு தெளிவாக ஏற்பட்டது எனலாம் என்று பட்டியலிடுகிறார்.

"காட்டு மிராண்டிகளாக மனிதர் வாழ்ந்திருந்த காலத்தில் இந்தக் கல்வியின் பயன் இல்லை. இன்றோ கல்வியின் பயனால் பரந்த பெரிய உலகமே ஒரு குடும்பம்போல் ஆகிவிட்டது. யாரும் எங்கும் சென்று பழகுவதற்கு ஏற்ற சூழ்நிலை அமைந்துள்ளது" (கல்வி, ப. 166)

"யாதானும் நாடாமல் ஊராமல் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு"

என்று திருவள்ளுவர் கூறிய கருத்து இன்று நன்றாக விளங்குவதாக உள்ளது என்று மு.வ. அவர்கள் கூறுகின்றார்.

"விலங்கு நிலையிலிருந்து மெல்ல மனிதராக உயர்ந்து மூளை வளர்ந்து நாகரிகம் பெற்ற மக்களினம் இன்று பெற்றுள்ள கல்வியின் பயனும் பெரிது கல்வியைப் பரப்பும் வாய்ப்பு மிகப் பெரிது" (கல்வி, ப.167) என்கின்றார்.

மேலும் மு.வ. அவர்கள், "கண் உள்ளவரையில் நூல்களைக் கற்று செவி உள்ள வரையில் அறிஞர்களின் சொற்களைக் கேட்டு வளர்வது தான் உண்மைக் கல்வியாகும். ஆகவே பள்ளியிலும், கல்லூரிகளிலும் கற்று முடிந்த பின், வீட்டிலும் நூல் நிலையத்திலும் ஒவ்வொருவரும் தாமாகவே பல நூல்களைக் கற்று பயன்பெற வேண்டும்" (கல்வி, ப.167). அதனால் தான் திருவள்ளுவர், "சாந்துணையும் கல்லாதவாறு என்று நாம் நாள் முழுதும் கற்றல் நன்று என்ற உண்மையை வலியுறுத்தியுள்ளார்" என்று கல்வி குறித்து கூறுகிறார்.

மேலும் கல்வி என்பது "உலகத்தை ஒரு குடும்பமாக இணைத்து வாழச் செய்ய வல்லது கல்வி என்ற நம்பிக்கை வேண்டும். உண்மைக் கல்விக்கு உரிய வகையில் இந்தப் பெரிய உலகமே ஒரு பள்ளிக்கூடம் போல ஆகி வருகிறது என்ற பரந்த நோக்கமும் வேண்டும் என்கின்றார் மு.வ. அவர்கள்.

ஆய்வின் பயன்

"கல்வி எனப்படுவது குழந்தையின் உடல் உள்ளம் ஆன்மா ஆகிய அதன் ஆளுமைக் கூறுகளின் சிறந்த பண்புகளைக் கொணரும் செயல்முறையாகும்" என்றும், "கல்வியானது மக்களது வாழ்க்கையுடன் இணைந்ததாகவும் அதனை உயர்த்துவதாகவும் அமைய வேண்டும் என்று காந்திஜி அவர்கள் ஆதாரக்கல்வியினை உயர்த்தியது போல் மு.வ. அவர்கள் நகர்ப்புற ஆங்கில வழிக் கல்விக் கூடங்களையும் கிராமப்புற பொது

கல்விக் கூட்டங்களையும் காண்கின்றார். இரு நிலைகளில் உள்ள ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வியில் பாகுபாட்டைக் காணமுடிந்தது. மேலும் கிராமப்புறப்பகுதிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பல்வேறு இடர்பாட்டுக்கு ஆளாகினாலும் தங்கள் பணியினைக் கருணையோடு செய்ய வேண்டும் என விரும்புகின்றார். அவ்வகை ஆசிரியர்களே வெற்றி பெற்றவர்களாகவும் இருக்க முடியும் என நம்புகின்றார் மு.வ. அவர்கள்.

கல்வி சுமையுடையதாக இல்லாமல் சுவையுடையதாக யாருக்கு எப்போது எங்கு தர வேண்டுமோ? அதனை உடலும் உள்ளமும் செம்மையுறும் வகையில் தருதல் வேண்டும் என்கின்றார்.

இக்காலத் தேர்வு முறையினை விரும்பாத மு.வ. அவர்கள் இரண்டாண்டுக்கு ஒரு முறை (10, 12 வகுப்புகளுக்கு பொது தேர்வுகள்) வைத்துள்ள திரைமறைவு பொதுத்தேர்வுகள் கோடைகாலத்தில் நடத்துவதால் சிலர் தோல்வியைச் சந்திக்கிறார்கள். அதனை எதிர்கொள்ள வகுப்பறைத் தேர்வினை மாதத் தேர்வினையும் ஊக்கப்படுத்துகின்றார் மு.வ. அவர்கள். கல்வி என்னும் சொல் பொதுவாக கற்றல் என்பதுடன் இணைத்துக் கூறப்படுகின்றது. இது அறிவு, மனயெழுச்சி, உடலியக்கம் ஆகியவற்றுடன் சார்ந்ததாகவோ தொடர்புடையதாகவோ இருக்கக்கூடும். பிறப்பு முதல் இறப்பு வரையில் நம் வாழ்க்கையில் கற்றல் தொடர்ந்து தாமாகவே நிகழ்ந்து கொண்டே இருக்க வேண்டும் என வள்ளுவர் விரும்புவதாக மு.வ. அவர்கள் கூறுகின்றார்.

முடிப்பு

பிறந்தது முதல் இறப்பு வரை நாம் ஒவ்வொரு நாளும் கற்கின்றோம். ஐம்புலன்களும் நமக்கு கற்பிக்கின்றன. நாம் சாந்துணையும் கல்வியினைக் கற்று உயர்வோமாக. இதுகாறும் நாம் மு.வ. பார்வையில் கல்வி என்ற தலைப்பில் கல்வியாளர்கள் கல்வியில் பாகுபாடு, தேர்வுகள், கல்வி ஆய்வின் பயன் என்ற தலைப்புகளில் கண்டோம்.

80. மு. வ. உணர்த்தும் பெண்ணடிமை நிலை

தே. வெங்கடேசன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
சமூக அறிவியல் மொழிப்பள்ளி
விஐடி பல்கலைக்கழகம்
வேலூர் -632 014.

பெண்ணியம் என்பது இக்காலச் சமூகத்தில் நிலவுகின்ற, சமூகப் பண்பாட்டிற்கு எதிரான மாற்றுப் பண்பாட்டை உருவாக்கும் முயற்சியாகவே தெரிகிறது. சமூகம் மாற ஒட்டு மொத்த மனிதர்களின் சிந்தனைகள் சமன் பெற வேண்டுமே தவிர மாற்றப்பட வேண்டும் என்பது இயலாதது.

பெண் அடிமை

பெண்கள் மீதான அடக்கு முறையும் அடிமைத் தனமும் காலங்காலமாகத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இந்த அடிமைத் தனத்திலிருந்து மீட்சியுறப் பெண் சமூகம் முயற்சித்துக் கொண்டே உள்ளது. ஆனால் அம்முயற்சி முழு வெற்றிபெறவில்லை என்பது தான் உண்மை. இன்றைய காலகட்டத்தில் பெண்கள் வீட்டை விட்டு வெளியில் வந்து கல்வி அறிவு பெற்று அடிமையில் இருந்து மீள வேண்டும். பெண்மை வாழ்ந்தால் தான் அன்பு, அறம், ஆண்மை எல்லாம் வாழ முடியும் என்று கூறியவர் மு.வ. அவர்கள். மேலும், "உலகில் முன்னேற்றம் பெற்ற நாடுகளில் பெண்மை வாழ்ந்து விளங்குவதும், பிற்போக்கு உள்ள நாடுகளில் பெண்மை வீழ்ந்து அடிமைப்படுவதும் தெளிவாகக் கண்டவை" [1] என்று கூறுவார் மு.வ. வீட்டிலே தொடங்கும் பெண்ணடிமையே நாட்டில் அரசியல், அடிமைத் தன்மைக்கு வழிகோலுகிறது என்னும் நோக்குடையவர்.

சமுதாயத்தில் பெண் மிகப்பெரிய அங்கம். பெண்ணே வருங்கால சந்ததியை நல்ல சந்ததியாக உருவாக்குகிறாள். அப்படிப்பட்ட பெண்ணியத்தைப் பெரும்பாலானோர் அடிமைகளாகவே நோக்குகின்றனர். ஒரு சில பெண்கள் முன்னேறி, உயர்ந்து இருந்தாலும் பெரும்பாலான பெண்கள் அடிமை நிலையிலேயே இருக்கின்றனர். இதனை, "பெண்கள் அடிமைகளாக நடத்தப்படும் கூட்டத்தினரிடையிலும் இரண்டொரு பெண் அறிவாலோ ஆற்றலாலோ சிறந்து விளங்க முடியும். அத்தகையவர் ஒரு சிலரைப் பார்த்து, அதனால் பொதுவாகப் பெண்ணினம் உயர்நிலைப் பெற்றிருப்பதாகக் கூறுவது பொருந்தாது" [2] என்பர்.

இலக்கியங்களில் ஆராயும் போது அவ்வாறே உண்மை அறிய வேண்டும். அங்கு ஓர் அவ்வையும் இங்கு ஒரு கோப்பெருந்தேவியும் கண்டு, இன்ன காலத்தில் இந்த நாடு பெண்ணுரிமையோடு சிறப்புற்றிருந்தது

எனக் கூறாமல் மக்களின் வாழ்க்கையைப் பொதுவாக ஆராய்ந்தே கூற வேண்டும். அங்கும், தாயிடம் மகன் பழகுவது, தமக்கையிடம் தங்கை பழகுவது, அறிந்தோர் ஒருவர் மற்றொருவரிடம் பழகுவது முதலியவற்றை அறிவதால் ஒரு தனி மதிப்பு ஏற்பட்டு, அதனால் இழிந்த மனப்பான்மை மறைந்திருக்கலாம். ஆகையால் முன் பழகாத ஒரு பெண்ணிடம் நடந்து கொள்ளும் முறையைக் கொண்டு, அந்நாட்டின் நிலைமையை அளந்தறிவது பொருத்தம் உடையதாகும்.

கருவிப் பொருளாகமை

பெண்கள் கல்வியறிவினைப் பெற வேண்டும். போராட்ட எண்ணமும் உணர்வும் வேண்டும். கவர்ச்சிப் பொருளாக மாறக் கூடாது. தன்னிலையில் இருந்து விலகக்கூடாது. பெண் தன் உடம்பை விட உள்ளத்தை மற்றவர்க்கு உணர்த்த வேண்டும். உடம்பைக் கருவியாகப் பயன்படுத்திடக் கூடாது. இதனை, "பெண்களைப் பொறுத்தவரையில் கூறத்தக்கது இது, தம் உடம்பைக் கருவியாகக் கொண்டு, ஆண்களை கவர்கின்றவரைக்கும் பெண்கள் அடிமைகளாக வாழ நேரும்" [3] எனப் பெண்மை வாழ்க என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

மேலும், தம் உள்ளத்தைக் கருவியாகக் கொண்டு ஆண்களைக் கவர முடியுமானால் ஒத்த உரிமையோ உயர்வு பெற முடியும். இங்கிலாந்து முதலான நாடுகளில் பெண்கள் தம் உடம்பை அழகு படுத்துவதில், எவ்வளவோ கவலை கொள்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் தம் உள்ளத்தாலும் ஆண்களைக் கவர்கின்றார்கள்.

மூலை வீட்டில், ஆண் மகன் நாடும் கருவிகளாக மட்டும் அங்கே பெண்கள் வாழ்ந்து விடவில்லை. வீட்டிற்கு வெளியே வாழும் வாழ்க்கையிலும் ஆண்களுக்குத் துணையாகவும் வழிகாட்டியாகவும் விளங்குகிறார்கள். அதனால்தான் அந்நாடுகளில் பெண் அடிமை என்னும் பெருங்குறை இல்லை.

ஒழுக்கக்கேடு ஒருபக்கம் காணப்பட்டாலும், மற்றொரு பக்கம் உரிமை வாழ்வு ஒளிவீசுகின்றது. பெண்ணுடம்பைக் கவர்ச்சிப் பொருளாக அந்நாட்டு மக்கள் கருதுவது போலவே, பெண்ணுள்ளத்தையும் கருதுவதால்தான் அந்நாடுகளில் பெண்ணடிமை என்னும் மாசு இல்லை.

பெண்ணுடம்பு மட்டும் கவரும் கவர்ச்சி பெண்களைச் சிறைகாக்கும் காவலுக்கு உட்படுத்துகின்றது. அடிமை விலங்காக நின்று அவர்களை ஆண்களுக்கு அடிமைப்படுத்துகின்றது. இதைத் திருவள்ளுவர் அன்றே உணர்ந்து அறிவுறுத்துகையில்,

"சிறைகாக்குங் காப்புஎவன் செய்யும் மகளிர்

நிறைகாக்குங் காப்பே தலை" [4]

இவ்வாறு உரைப்பர். இதனையொட்டி மு.வ. அவர்கள் 'பெண்மை வாழ்க' என்னும் நூலில், "பெண்ணுள்ளத்தின் கவர்ச்சியோ, பெண்களுக்கு உரிமை வழங்குகின்றது. நிறைகாக்கும் காவலை மேற்கொண்டு தலைநிமிர்ந்து வாழும் வாழ்வை நல்குகின்றது" [5] என்பர்.

பெண்ணுடம்பை மட்டும் நாடுகிறவர்கள் அதைத் தம் அளவில் வைத்து காக்க முயல்கிறார்கள். தான் அரிதில் பெற்ற பணத்தைப் பெட்டியில் பூட்டி வைப்பது போல், தமக்கு உரிமையாகப் பெற்ற பெண்ணுடம்பையும் மூலை வீட்டில் வைத்துக் காக்கின்றார்கள்.

அறிவன

பெண்கள் உரிமையிழப்பதோடு, வெளியுலக வாழ்வு அற்றவர்களாய் அதற்கு ஏற்ற கல்வியும் திறமையும் அற்றவர்களாய், அந்த மூலை வீட்டிலே சிறைகாக்கும் காவலுக்குள் அடிமைகளாய் வாழ நேர்கின்றது. இதுவே பெண்ணடிமை என்னும் சீர்கேடு பிறந்த கதை என்பர் மு.வ. இவ்வாறு தம்முடைய படைப்புக்களில் எல்லாம் மு.வ. பெண்ணடிமையை நிலைநாட்டுகிறார்.

அடிக்குறிப்புகள்

1. வரதராசன்.மு, பெண்மை வாழ்க, ப.17
2. மேற்படி, ப.24.
3. மேற்படி, ப.31.
4. இராமசாமி.மு, திருக்குறள் தெளிவுரை, ப.13.
5. வரதராசன். மு., பெண்மை வாழ்க, ப.33.

81. மு. வ. வின் நடை

எஸ்.வி. பிரபு
முனைவர் பட்ட ஆய்வாளர்
சமூக அறிவியல் மொழிப்பள்ளி
விஐடி பல்கலைக்கழகம்
வேலூர் - 632 014.

மு.வ.வின் மொழி நடை ஆய்வு மேற்கொள்ளும் நிலையில், மொழி நடை பற்றி அவரது தெளிவான சில கருத்துக்களை இங்கு விளக்குவது அவரது மொழி நடை அமைப்பின் சிறப்பு இயல்புகளை விளக்குவதற்குப் பெரிதும் துணைபுரியும். மு.வ. அவர்கள், உரை நடை எவ்வாறெல்லாம் அமைய வேண்டும் என்று சில நடையியல் கோட்பாடுகளைத் தமது படைப்புக்களில் தந்து விளக்கியுள்ளார். முதலில் நடையானது எளிமையாகவும், யாவரும் புரிந்து கொள்ளும் வகையிலும் இருத்தல் வேண்டும் என்பதனைச் சொல்ல வந்தவர் இவர். எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்துக் கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோ்ன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோன் என்பர்.

பேச்சு மொழி நடை

“கூடியவரைப் பேசுவது போலவே எழுதுவதுதான் உத்தமம் என்பது என்னுடைய கட்சி. எந்த விஷயம் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது ஒரு தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிக்கை விஷயம் எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகின்ற மாதிரியாகவே அமைந்து விட்டால் நல்லது” [1] என்னும் பாரதியின் நடையமைப்பினை மு.வ. அவர்களும் பின்பற்றியுள்ளதை இவர் உரைநடையில் காணலாம். குறிப்பாக ‘பெண்மை வாழ்க’ என்னும் நூலில் காணலாம்.

“பெண்களுக்கு இந்த நாட்டில் உரிமை இல்லை என்று குற்றம் சாட்டுவதற்கு முன் தீர எண்ணிப் பார்க்க வேண்டும். இது பொதுவான ஒரு குற்றச்சாட்டாக இருத்தல் கூடாது. படித்த குடும்பங்களில் முற்போக்கான குடும்பங்களில், செல்வாக்கான குடும்பங்களில் உரிமையினைப் பெற்றவர்களாக வாழ்கின்றார்கள்” [2] என்று வார்த்தைச் சொல்லுகிற மாதிரியாகவே, பேச்சுமொழி நடையினைப் பரவலாக நூலெங்கும் இயற்றியுள்ளார்.

சொல்நிலை (திருப்பிக்கூறல்)

மு.வ.தான் சொல்ல வந்த கருத்து மக்களிடம் சென்று சேர வேண்டும் என்பதற்காகவும், கருத்து விளக்கம் பெறுவதற்காகவும்

இவ்வுத்தியைக் கையாண்டுள்ளார்.

எத்தனை காலம்
எத்தனை இடையூறு
எத்தனை கொடுமை
எத்தனை செயல்
எத்தனை பாடம்

என்ற சொற்களையும் இவ்வுத்தியின் மூலம் பயன்படுத்தி உள்ளார்.

மேற்கோள் காட்டல்

ஒரு கருத்தைக் கூறும் போது அதனுடன் தொடர்புடைய மற்றொரு கருத்தையோ, பாட்டையோ, செய்யுளையோ மேற்கோளாகக் காட்டும் முறை மு.வ.வின் 'பெண்மை வாழ்க' என்னும் நூலில் காணப்படுகிறது. உதாரணமாக, திருக்குறள், ஔவையார் இலக்கியங்கள், சங்க இலக்கியங்கள் ஆகியவற்றை அதிகமாகக் கையாண்டுள்ளார். கட்டுரையின் தொடக்கத்திலும், இடையிலும் இறுதியிலும் மேற்கோள்களை எடுத்துக் காட்டுகிறார்.

"சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை" [3]

எளிமையாக்கம்

மு.வ.வின் நடையின் உத்திகளுள் அதிகம் காணப்படுவது எளிமையாக்கமாகும். மு.வ.வின் படைப்புகள் அனைத்தும் மக்களிடம் பரவின. அவர்களது ஆர்வத்தினைத் தூண்டின. அதற்குக் காரணம் அவரது நடையில் காணப்படும் எளிமையேயாகும். "கல்வியும் செல்வமும் இல்லாத ஏழைகள் பலராக உள்ள இந்த நாட்டில் அத்தகைய ஏழைக் குடும்பங்களில் பெண்கள் உரிமை அற்றவர்களாகவும் உரிமை குறைந்தவர்களாகவும் இருப்பது உண்மை. அதற்கு அடிப்படைக் காரணம் அந்த ஏழைக் குடும்பங்கள் நாகரீக நிலையை இன்னும் அடையாததே என்று சொல்ல வேண்டும்" [4]

ஆர்வம் தூண்டுதல்

கட்டுரை எழுதிக்கொண்டே வரும்பொழுது இடையில் கவனி, நிற்க, இனி என்னும் சொற்களைக் கையாள்கிறார் மு.வ., வாசகர்கள் படித்துக் கொண்டு வரும்பொழுது அவர்கள் சோர்வடையாமல் இருப்பதற்காகவும், இன்னும் ஏதோ ஒரு கருத்தை வலியுறுத்த விரும்புகின்றார் ஆசிரியர் என்பதை உணர்ந்து, தொடர்ந்து படிக்க வேண்டும் என்னும் ஆர்வத்தினைப் பெறுவதற்காகவும் இவ்வுத்தியினைக் கையாண்டுள்ளார் மு.வ.

"விலங்கைத் தேடி அம்பும் கையுமாக வரும் வீரனை அந்த மகளிர் காண்பதற்கு முன்னே, வேட்டை நாய்கள் அவர்களை நெருங்குகின்றன. கூரிய பற்களும் சினத்தோடு உருத்து நோக்கும் கண்களும் உடைய பொல்லாத வேட்டை நாய்கள் நெருங்கியதும், இளம் பெண்கள் இருவரும் எழுந்து அஞ்சி நடுங்குகின்றனர்"[5] இவ்வாறு அடுத்து அடுத்து எனத் தூண்டும் ஆர்வத்தை உடையதாக விளங்கும். நடை நயங்களைத் தனது படைப்புக்களில் ஆங்காங்கே கூறியுள்ளதோடு நிற்காமல் அதன்படி தமது படைப்புகளை அமைத்தும் வந்துள்ளார் என்பதை மு.வ.வின் கட்டுரைகளால் அறிய முடிகிறது. இவர் உரிய சொற்களை உரிய இடத்தில் அமைத்துள்ளார். சொற்களை அருமையாகத் தொகுத்துள்ளார். இவருடைய நடை வார்த்தை வீச்சுக்களினால் அமைந்தவை. நிகழிடச் சூழலுக்கேற்ப ஒவ்வொரு சொல்லும் விளக்கம் பெற்றுள்ளது.

சொல் தெரிவோடு பொருள் தெரிவுகளையும் கொண்டுள்ளது. இவருடைய நடையில் எண்ணற்ற உணர்ச்சிக் கூறுகள் உள்ளன. இவருடைய நடை ஒரு குறிப்பிட்ட ஒழுங்குமுறைக்கு உட்பட்டது. இவருடைய படைப்புக்கள் தனித்தன்மை வாய்ந்தது. மொழிப்பிறழ்வு விகிதங்கள் முழுமை நிலையில் உள்ளது. சொற்றொடர் அடிப்படையின்றி முழுபடைப்பிலுமுள்ள மொழியியற் கூறுகளுக்கிடையே காணப்படும் உறவுகளைக் கொண்டுள்ளது. இவருடைய படைப்பில் தனிமைக் கூறுகள் முழுமையாக வெளிப்பட்டுள்ளது. இவர் முடிந்த அளவு, சிறப்பாகத் தன் எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார். இவர் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் சொற்களால் புலனாக்கியுள்ளார். இவருடைய மொழியினூடு எண்ணம் வெளிப்படுகிறது. எண்ணங்களோடு முறையாகச் சில கூறுகளை இணைத்துள்ளார்.

அறிவன

இவருடைய நடை தனிச்சிறப்பினை உடையது. எளிமையான இனிமையான நடை அடியினைக் கொண்டது. இவருடைய படைப்புகள் நடையியல் கோட்பாடுகளைத் தழுவியது. எளிய பதங்கள், எளிதில் அறிந்து கொள்ளும் சந்தம் ஆகியவற்றை இக்கட்டுரை தெள்ளிதின் ஆராய்ந்துள்ளது.

அடிக்குறிப்புகள்

1. சுப்பிரமணிய பாரதி, பாரதியார் கட்டுரைகள், ப.390.
2. வரதராசன். மு, பெண்மை வாழ்க, ப. 34.
3. இராமசாமி .மு, திருக்குறள் தெளிவுரை, ப.63.
4. வரதராசன்.மு, பெண்மை வாழ்க, ப.35.
5. மேற்படி, ப.25.

௪௨. அகல் விளக்கின் மூலமாக மு.வ. உணர்த்தும் நட்பு

மோ. உஷாராணி
முதலாம் ஆண்டு
அரசு கலைக்கல்லூரி
திருவண்ணாமலை.

முன்னுரை

மு.வ. வின் படைப்புகளில் நட்பின் சிறப்பைப் பற்றிக் கூறுவது அகல்விளக்காகும். அகல் விளக்கில் நட்பின் சிறப்பும், எத்தகைய சூழ்நிலைகளிலும் நட்பை வெறுக்காமல் இருத்தலும், ஆணும் பெண்ணும் பழகினால் காதலாகத்தான் இருக்குமா? நட்பாக இருக்க முடியாதா? என்ற வினாவிற்கான விடையும் நமக்குத் தீமையைச் செய்தவனும் நல்முறையில் வாழவேண்டும் என நினைப்பது நட்பு மட்டுமே என்ற உண்மையும் விளக்கப்பட்டுள்ளன. வாழ்க்கை என்பது எந்தப்போக்கில் வேண்டுமானாலும் வாழ்வது அல்ல, வாழ்க்கை என்பது ஆறுபோல ஓரேதிசையில் செல்ல வேண்டும். ஆறு எப்படி சென்ற பாதையில் மீண்டும் வராதோ, அதேபோன்று வாழ்க்கையும் திரும்பி வராது. அகல் விளக்கில் உள்ள சந்திரன் வாழ்க்கையின் மூலம் இதனை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

நட்பு - வரையறை

நட்பிற்கு வரையறை இன்னதென்று வரையறுக்க முடியாது. திருவள்ளுவர்,

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு" *(குறள் 786)*

என்கிறார். அவர் நட்பிற்கு ஒரு அதிகாரமே இயற்றியுள்ளார். பலவகையான நட்பை நம் இலக்கியங்கள் விளக்குகின்றன. பிசிரர்ந்தையார்-கோப்பெருஞ்சோழனின் காணாத நட்பைப் பற்றி அறியாதவர்கள் இவர். அகல்விளக்கிலும் இத்தகைய நட்பின் வடிவம் குறித்த தேடலோடு மு.வ. மாந்தர்களைப் படைத்துள்ளார். தன் நண்பன் இழிவான நிலையை அடைந்த பிறகும் வேலய்யன் அவனை ஒதுக்கவில்லை. சங்க இலக்கியங்களில் காணப்படுவது போலவே இவர்களின் நட்பும் உயர்ந்தது.

அகல் விளக்கின் நட்பின் களங்கள்

வாலாசாப்பேட்டையில் பிறந்த வேலய்யனும், பெருங்காஞ்சியில் பிறந்த சந்திரனும் ஒன்பதாம் வகுப்பிலிருந்து நண்பர்களாகப் பழகிவந்தனர். இருவரின் குணநலன்களும் பண்பு நலன்களும் ஏற்ற இறக்கத்தோடு

காணப்பட்டாலும் உயிர்த்தோழர்களாகவே வலம் வந்தனர். வேலய்யனைவிட, சந்திரன் அழகிலும், அறிவிலும், படிப்பிலும் சிறந்தவனாக இருந்தான். எனினும், வேலய்யன் சிறிதும் பொறாமையின்றி முழு அன்புடனே பழகினான். கல்லூரி நாட்களில் சந்திரன் தன்னைவிட்டுப் பிரிந்தாலும், அவன் தீயவழியில் சென்றாலும் அவனை விட்டு நீங்காத வேலய்யனின் நட்பு ஆழமானது.

வேலய்யன் - மாலன்

பல வகையில் கருத்து ஒற்றுமையுடையவனாக மாலன் இருந்தாலும், மாலன் அறிவொளியை அளிக்கும் கல்வியைப் பயின்றாலும் மூடநம்பிக்கைகள் பலவற்றைத் தன்னுள்ளே வளர்த்துக்கொள்கிறான். அவனது நோக்கமே உழைப்பின்றி வாழ்வில் முன்னேற்றம் அடைவது மட்டுமே. ஆனால் வேலய்யனோ அவனைத் தன் நண்பனாக ஏற்றுக்கொண்டு அவனை நல்வழிப்படுத்த முயற்சி செய்கின்றான். மாலன் தன்மீது பொறாமைப்பட்ட போதிலும், தனக்கு நல்ல வேலை கிடைத்ததை நினைத்து அவன் மனம் புழுங்கியதையும் பொருட்படுத்தாமல் அவனோடு இறுதிவரையிலுர்ம் வேலன் நட்பாகவே பழகுதல் குறிப்பிடத்தக்கது.

சந்திரன் - இமாவதி

இமாவதி சந்திரனின் தோழி சந்திரனைச் சகோதரனாக நினைத்துப் பழகுகிறாள். ஆனால் சந்திரனோ, தன் தீய குணத்தால், பிறரைப் புரிந்துகொள்ளும் தன்மையற்றவனவாக இருப்பதினால் இமாவதியின் நட்பைக் காதல் என தவறாக நினைத்துக் கொள்கிறான். அவன் செய்த தவறை உணர்ந்து கொண்டபிறகும், அவன் ஊரைவிட்ட எங்கோ சென்றதை நினைத்துக் கலக்கமடைகிறாள், கண்ணீரைச் சிந்துகிறாள். திருமணமான பிறகும், நான்கு குர்ந்தைகளுக்குத் தாயான பிறகும், அவள் மனதில் சந்திரனின் நினைவும், அவன்மேல் அவள்கொண்ட நட்பும் நீங்காமலர் நிலைத்திருக்கிறது.

சாந்தலிங்கம் - சந்திரன்

சாந்தலிங்கம் கல்லூரி நாட்களில் சந்திரனால் அவன் அவமானம் அடைகிறான். இருப்பினும், நீலகிரி மலையின் அடிவாரத்தில் அவனைக் கண்டபோது, அவன் செய்த தவறுகளை மறந்து. அவன் சிறப்பான வாழ்க்கை அமைய வேண்டும் என நினைக்கிறான். வேலய்யனிடம் சென்று சந்திரனின் நிலையையும் அவனை எப்படியாவது மீட்க வேண்டும் என்றும் வேண்டுகிறான். இங்கும் ஒரு நட்பு பூத்திருப்பதை மு.வ. வெளிப்படையாகக் கூறாமல் குறிப்பால் உணர்த்துகிறார்.

நட்பாடலின் நிறையும் குறையும்

ஒவ்வொரு மனிதன் செயலிலும் நிறைகளும் குறைகளும் காணப்படுவது இயல்பு. அதேபோன்று வேலய்யன் நட்பை விட்டுக்கொடுக்காதவனாகவும் இருந்தாலும் அவனிடமும் சில குறைகள் காணப்படுகின்றன. சந்திரன் தவறுகளைச் செய்கின்றான். தவறான வழியில் செல்கின்றான் என்பதனை அறிந்தும் வேலய்யன் அவனைத் திருத்த எந்தவொரு முயற்சியும் செய்யவில்லை. சந்திரன் "தமக்குக் கணக்கு சொல்லிக் கொடுத்தான் அவன் மூலமே நான் இந்நிலையை அடைந்தேன்" என்று சொல்லும் வேலய்யன் அவனிடம் நீ போகும் பாதை தவறு என்று சுட்டிக்காட்டவில்லை. அவ்வாறு இல்லையென்றாலும் சந்திரன் தந்தை சாமண்ணாவிடம், இவன் தவறான வழியில் செல்வதை எடுத்துக் கூறியிருக்கலாம். ஆனால் வேலய்யன் அவ்வாறு எதுவும் செய்யவில்லை. மாறாக சந்திரன் தனக்குச் செய்த பழைய உதவிகளை மட்டுமே நினைத்துக் கொண்டிருந்தான்.

ஒரு பெண் நட்பாகப் பழகுகிறாளா, இல்லை காதல் கொள்கிறாளா என்பதனை அவள் வெளிப்படுத்தினால் மட்டுமே தெரியும். இமாவதி சந்திரனோடு அன்பாகப் பழகியதை அவன் காதல் என நினைத்துக் கொண்டதும், அதன் விளைவாக அவன் ஊரைவிட்டு சென்றது தவறாக இருந்தாலும், இமாவதி செய்ததும் தவறே ஆகும். தான் நட்பாகவே பழகுகிறேன் என்று அவள் அன்றே கூறியிருந்தால் சந்திரனுக்கு இத்தகைய நிலை நிகழ்ந்திருக்காது. அவன் தொழுநோயாளியாக இருந்து இருக்கமாட்டான்.

நட்பின் பண்புகள்

நட்பு என்பது மகிழ்ச்சியான காலத்தில் மட்டும் அல்லாமல் துன்பம் ஏற்படும் காலத்திலும் உதவி செய்ய வேண்டும். அதுவே சிறந்த நட்பும் ஆகும். இதனை வள்ளுவர்,

"அழிவினவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு" *(குறள் 787)*

என்கிறார். வேலய்யன் தம் நண்பன் தொழுநோயால் பாதிக்கப்பட்டாலும், அவனை வெறுக்காமல் அவனைத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறான். சந்திரனின் ஆடையில் உள்ள இரத்தக் கறையைக் கண்டு "என் மனம் அருவெறுப்பும் கொண்டது, வருத்தமும் கொண்டது" தொழுநோய் சந்திரனுடைய காதுகளையும் மூக்கையும் அழகிய உதடுகளையும் கெடுத்துப் பாழ்படுத்தி அச்சமான தோற்றத்தை உண்டாக்கியிருந்தது. எத்தகைய தோற்றத்தில் இருந்தாலும் வேலு தம் நண்பனைத் தம் வீட்டில் வைத்து

பணிவிடைகள் செய்தான். வேலய்யனுக்குச் சந்திரனின் நோயின் மீதான அருவெறுப்பைக் காட்டிலும் அவன் இளம்வயதில் செய்த உதவிகளின் மீதான நட்பின் நன்றியே மேலோங்கியுள்ளது.

மு.வ. வின் பார்வையில் நட்பு

மு.வ. அவர்கள் நட்பினை உயர்ந்த போக்கிலேயே காண்கிறார். நட்பு என்பது ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானது. சந்திரனும் வேலய்யனும் நண்பர்களாக இருந்தாலும், இருவரின் வாழ்க்கை முறைகளும் மாறுபட்டுப் போகின்றன. சந்திரனின் வாழ்க்கை கரடு முரடானது, காட்டாறு போன்றது. ஆனால் வேலய்யனின் வாழ்க்கையோ சமவெளியில் ஓடும் ஆற்றைப் போன்றது. அது என்றுமே நிதானமாகவே செல்லும். அதுபோலவே வேலய்யன் அழகில் சிறந்தவனாக இல்லை என்றாலும், படிப்பில் முதல் இடம்பிடிக்கவில்லை என்றாலும், பண்பில் உயர்ந்துள்ளான். ஆனால் சந்திரனோ தன்னிடம் உள்ள அழகு, அறிவு இரண்டும் தனக்கு பயனாகாவண்ணம் புகழில் வீழ்ந்து கெட்டொழிகிறான். மு.வ. சந்திரனின் வாழ்க்கையை அரளிச் செடியோடும், வேலய்யனின் வாழ்க்கையை துளசிச் செடியொடும் ஒப்புமைப்படுத்துகிறார். அரளிச் செடி அழகுடையது, ஆனால் பயனற்றது. துளசி அழகற்றது, ஆனால் பயனுடையது. இவ்வாறு இருவேறு குணங்களைக் கொண்டவர்களை ஒன்றாக இணைக்கும் பாலம் நட்பு மட்டுமே. மற்ற உறவுகளுக்கு இத்தகைய பலம் அமைவது இல்லை.

முடிவுரை

சந்திரன்-வேலய்யன் மாலன்-வேலய்யன் சந்திரன்-இமாவதி இவர்களது நட்பு அனைத்து நிலைகளையும் கடந்தது என அறிந்துகொள்ள வேண்டும். நண்பன் தவறு செய்தால் அவனை எப்படியாவது திருத்தி நல்வழிப்படுத்த வேண்டும். அவனைத் திருத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளாமல் நண்பன் செய்த உதவியை மட்டுமே நினைத்துக கொண்டிருப்பதில் பயன் எதுவும் இல்லை. ஆணுக்கும், பெண்ணுக்கும் வேண்டும் என்பன போன்ற கருத்துகளால் நட்பைச் செம்மையுறச் செய்யும் வகையில் மு.வ. அகல் விளக்கை ஏற்றியுள்ளார்.

83. மு. வ. வின் நல்வாழ்வு உணர்த்தும் வாழ்வியல் கோட்பாடுகள்

க. கோவிந்தம்மாள்
ஆசிரியை
எஸ்.ஆர்.ஜி.டி..எஸ் பள்ளி
திருவண்ணாமலை.

முன்னுரை

மு. வரதராசனார் எண்ணத்தால், செயலால், எழுத்தால், சொல்லால், பலருக்கு 'நல்வாழ்வு' தந்து உலகக் குடிமகனாக உயர்ந்தவர். மு.வ. என்ற செல்லப்பெயர் ஒலிக்காத தமிழ் இல்லங்களும் நல்லுள்ளங்களும் இல்லையெனலாம். அன்பில் நெகிழ்வு, அறிவில் தெளிவு, ஆக்கத்தில் ஊக்கம், வாழ்வில் எளிமை, உண்மையில் உயிர்ப்பு, புலமையில் ஆழம் கொண்டவர் மு.வ. ஆவார். அவர் இயற்றிய 'நல்வாழ்வு' எனும் கட்டுரைத் தொகுப்பில், மதிப்புமிக்க வாழ்வியல் கோட்பாடுகள் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன. அதனை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நல்வாழ்வு - விளக்கம்

பழமையான நம்பிக்கைகளுக்கும் கொள்கைகளுக்கும் இக்காலப் புத்தறிவுக்கும் புதுப்போக்குக்கும் இடையே என்றும் பயன்தரவல்ல அடிப்படை நெறிகளைப் பின்பற்றி வாழ்வில் அமைதியும் காண்பதே நல்வாழ்வு ஆகும்.

தனிமனிதனின் கூட்டமைப்பே சமுதாயம். தனிமனித நல்வாழ்வு சமுதாய மாற்றத்திற்கும், அமைதிக்கும், பொதுமைக்கும் காரணமாய் அமையும் என்பதால் ஒவ்வொரு தனிமனிதனும் பின்பற்ற வேண்டிய வாழ்வியல் கொள்கைகளை அனைவருக்கும் பொருந்தும் வகையில் பத்து கட்டுரைகளாக இத்தொகுப்பை மு.வ. இயற்றியுள்ளார்.

தனிமனித மனவெழுச்சியே சமுதாயத்தில் ஏற்படும் பெரும்பாலான சீர்கேடுகளுக்குக் காரணமாய் அமைவதால் மன அமைதிக்கு வழிபாடு அவசியம் செழிப்பான வாழ்க்கைக்கு நம்பிக்கை அவசியம் உடல்வலிமையே மனவலிமைக்கு அவசியம் என்று உணர்த்தல் அவசியம். புலனடக்கம், எளிமை, பொதுமை போன்றவற்றைப் போற்றல் அவசியம். இக்கருத்தை உணர்த்தி சாதி. மத. இன, சமுதாய ஏற்றத்தாழ்வுகளைத் தாண்டி மனித நெறிகளைக் கடைப்பிடிப்பதன் பயனையும், மீறினால் விளையும் கேடுகளையும் இந்நூல் எடுத்துரைக்கின்றது.

நல்வாழ்வுக்கான தீர்வுகள்

மனித நல்வாழ்வைச் சிதைக்கும் பண்பாட்டுச் சிதைவானது உடல். மனம் எனும் இருகூறுகளில் உள்ளன. இத்தடையை நீக்கி நல்வாழ்வு வாழ உடலளவில் உடம்பைப் போற்றலையும், மனதளவில் புலனடக்கம், நம்பிக்கை, மனவலிமை பெறுதலையும் கடைபிடிக்க வேண்டும். மனித வாழ்க்கை பயனுள்ள வாழ்க்கையாக மாற எளிமை, பொதுமை இரண்டையும் போற்றி உரிமையும் கடமையும் ஆற்ற வேண்டும். சமுதாயத் தடைகளிலிருந்து நீந்தி, மன ஒருமைப்பாட்டுடன் வாழ வழிபாட்டினை மேற்கொள்ள வேண்டும் என்று மு.வ. 'நல்வாழ்வு' நன்னெறி என்னும் மலர்களை மாலையாகக் கட்டி தொகுத்திருக்கின்றது.

நல்வாழ்வுக்கான கூறுகள்

அரிய கருவிகளைப் படைத்துள்ள மனித மூளைக்கும் எட்டாத பலவற்றை உள்ளத்தால் உணர்ந்து, வாழ்க்கையின் முதலும் முடிவும் கடவுளைச் சார்ந்தவை என்று தெளிந்து, உருவ வழிபாடோ, அருவ வழிபாடோ மண ஒருமைப்பாட்டுக்கு உதவும் வழிபாட்டை நம்பி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை வ்ழிபாட்டுக் கட்டுரையிலும் அறநெறியை, வாழ்க்கை நெறியை நம்பி, உலகில் அமைதியாக வாழ்வதற்குத் தேவையானவை அன்பு, உண்மை, நேர்மை என்பதை உணர்ந்து நம்பிக்கையுடன் வாழ்வதே நல்வாழ்வு. நாட்டின் நீதிமன்றங்களிலும், அலுவலங்களிலும், கடைத்தெருக்களிலும் தீயவர்கள் தலைநிமிர்ந்து வாழும் நிலைமையும், நல்லவர்கள் ஒடுங்க நிற்கும் நிலைமையும் மாற வேண்டும். அறநெறியில் - நல்வழியில் - பலர்க்கு நம்பிக்கை ஏற்பட்டதால்தான் இயல்பான நிலைமை ஏற்படும் என்பதனை நம்பிக்கை கட்டுரையிலும் எடுத்துக் காட்டுகிறார்.

உடம்பைப் போற்றல் கட்டுரையில் இயந்திரப் பன்பாட்டைப் போலவே மனித உடலும் அளவறியாமல், நெறியறியாமல், வேகமாக, மனம்போனபோக்கில் வாழ்ந்தால் உடம்பும், மனமும், அறிவும் கெடும். நாம் மேற்கொள்ளும் உணவுப் பழக்கவழக்கங்கள் நாக்கின் அனுமதியோடு நன்கு மென்றும், அளவோடும், சுவை குறைவாகவும் (அதிக அளவு உப்பு, காரம், புளிப்பு அல்லாமல்) இருத்தல் வேண்டும். உழைத்த உடம்பைப் பழுது பார்க்கும் ஏற்பாடே உறக்கம். நன்கு உழைத்தால் உறங்கலாம். உடலைப் பாதுகாத்தல் நமது முதல் கடமை என்றும்

எளிமையும் சிக்கனமும் தொடர்புடையவை. ஆடம்பரமும் திருட்டும் உறவுடையவை. ஆடம்பரத்தைப் பாவம் எனக் கருதி, தன் மேல்சட்டையைக் களைந்து எளிய வாழ்க்கைக்குத் தன் வாழ்க்கையே எடுத்துக்காட்டாக்கியவர் காந்தியடிகள். ஏழைக் குடும்பங்களில் கவலைகள், குழப்பங்கள்,

தற்கொலைகள் நிகழக் காரணம் ஆடம்பர வாழ்க்கைதான். செல்வம் உள்ளவர்கள்கூட ஆடம்பரத்தைத் துறந்து எளிமை என்ற அறத்தைப் போற்றினாலே போதும். செல்வம் என்பது சிந்தையின் நிறைவே எளிமையிலே செம்மையைக் காணமுடியும் என்பதனை எளிமை ஓர் அறம் என்ற கட்டுரையிலும் கூறியுள்ளார்.

உரிமையுடன் வாழ்க்கை அமைய கடமைகளைச் சரிவரச் செய்து கட்டுப்பாட்டுடன் வாழ்வதே நல்வாழ்வு. உரிமை - கடமை - நாணயத்தின் இருபக்கங்கள். இடையேயுள்ள ஏற்றத்தாழ்வை அகற்றுவது அன்பே. அக்கால ஆட்சிமுறை - இக்கால ஆட்சிமுறை, உரிமை - கடமை வேறுவேறானது. பிற்காலத்தில் தொழில்வாரியான வேற்றுமையைக் கடந்து அவரவர் பெறும் உரிமைக்கேற்ற கடமைகளைச் செய்ய வேண்டும் என்பதனை உரிமையும் கடமையும் என்ற கட்டுரை உணர்த்துகிறது.

ஐம்பொறிகளும் மனம் போனபடி இன்பத்தைத் துய்க்காமல் அளவும் நெறியும் அமைத்து வாழ்வதே நல்வாழ்வு. சுவைக்காக, இன்பத்துக்காக ஆசைகளையும், அல்லல்களையும் பெருக்கிக்கொள்ளாமல் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதனைப் புலனடக்கம் கட்டுரையிலும்

சுற்றுப்புறத்தால் அமையும் வாழ்க்கை - உடம்பால் அமையும் வாழ்க்கை - மனத்தால் அமையும் வாழ்க்கை இம்முக்கூறுகளில் மனவலிமையைப் பெருக்க, பேசா நோன்பு, உண்ணாநோன்பு இருத்தல், குடிப்பழக்கம், சூதாட்டப் பழக்கம், வேண்டாப் பழக்கங்களை மனநிலை நிறுத்ததோடு விடுதல் போன்ற பயிற்சியை மேற்கொள்ள வேண்டும் என்பதனை மனவலிமை வேண்டும் கட்டுரையிலும் அறிய முடிகிறது.

நாம் வாழும் சிக்கலான இக்காலத்தில் அன்புடைய பெற்றோர் களும், மக்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பும் குறைந்து, கடமைகள் பெருகியதால், மனங்களைப் பயன்படுத்தும் ஆற்றல் முன்போல் இல்லை.

சமுதாயம் இயந்திர நாகரீகத்தின் பயனாக வேகமாகப் பெற்றுவரும் மாறுதல்களுக்கிடையே, படைப்புத் திறனுக்கு வாய்ப்பு - சிறுதோட்ட உழைப்பு - பொழுதுபோக்கு போன்றவற்றை ஏற்படுத்தி, தனித்தன்மையை மனிதன் இழக்காமல் வாழ நம்பிக்கை வழிகளை நாட வேண்டும். இந்தச் சிறுமுயற்சிகளே மனிதனுடைய மனத்திற்குப் பண்பாடு தரவல்லன என்பதை பண்பாடு கட்டுரையிலும்

பிறப்பால், தொழிலால் உயர்வு தாழ்வு பாராமல் புது உலகம் புகட்டி வரும் பாடம் மனிதர் யாவரும் சமம். இத்தகையபொதுமை உணர்வு ஓர் அறமாகும். உலகம் இப்படி இருக்கிறதே என்று வெறுத்துக் காட்டுக்கு ஓடும் துறவு தேவையில்லை. உலகம் இப்படித் திருந்த வேண்டும் என்ற ஆசையை உள்ளத்தில் கொண்டு பொதுமை உணர்வோடு வாழவேண்டும்

என்பதை பொதுமை ஓர் அறம் என்ற கட்டுரையிலும் தெரிந்து கொள்ளலாம்.

நாம் குவியாடி, குழியாடியால் ஒருபொதுருளைக் காணும்போது, சிறிய பொதுருளைப் பெரிதாகவும், பெரியதைச் சிறியதாகவும் அதன் தன்மைக்கேற்ப காட்டும். ஆனால் சமதள ஆடியே உள்ளதை உள்ளவாறு காட்டும். அதைப்போலவே மக்கள் உள்ளத்தில் இன்ப துன்பங்கள் அவரவர் தன்மைக்கேற்ப மாறுபடுகின்றன. இந்த இருநிலையுமே தான் அல்ல என்றும், கடவுளின் குடும்பத்தில் - தான் ஒரு சிறுபகுதி என்று உணரும் தெளிவுபிறந்தால், அந்தக் கலக்கத்திற்கும், வாட்டத்திற்கும் இடமில்லாமல் போய்விடும். நெறிதெளிந்து மனத்தை உயர்த்த வல்லவர்கள், பிறவிக் கடல் நீந்துவோராய் வாழ்ந்து, அமைதியும் இன்பமும் காண்கிறார்கள். அவர்கள் வாழ்வே மற்றவர்கள் பின்பற்றத்தக்க நல்வாழ்வு என்பதனை நீநதுக கட்டுரையில் அறிய முடிகிறது.

இன்றைய சூழலில் நல்வாழ்வின் சாத்தியப்பாடு

மனிதன் இன்றைய சூழலில் தன் விருப்பத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும். குடும்பம் மற்றும் அலுவலகச் சூழ்நிலைகளில் பணம் சேர்ப்பதைக் குறிக்கோளாய்க் கொண்டு உடல்மேல் அதிகளவு அக்கறையின்றி வாழ்கிறான். தன்னுடைய பிரச்சனைகள். சிக்கல்கள்தான் மிகப்பெரிது எனக்கருதித் தன் மனவலிமையை இழக்கின்றான். தன் வாழ்க்கை தன்கையில் மட்டும்தான் உள்ளது என்ற நம்பிக்கையை இழந்து, விடாமுயற்சியின்றி பலர் தன் வாழ்க்கையை இழக்கின்றார்கள். சிலர் முட்டாள்களாக தற்கொலையும் செய்து கொள்கிறார்கள். இந்நிலை மாறி அமைதியான நல்வாழ்வு வாழ ஒவ்வொரு மனிதனும் கற்றுக்கொள்ள வேண்டும்.

இன்னா செய்யாதீர்கள், பிறர்பொருள் கவராதீர்கள், பொறாமை ஒழியுங்கள், பொய் அகற்றுங்கள், பற்று விடுங்கள், ஆசை நீக்குங்கள் என்றெல்லாம் முன்னோர்கள் அறிவுரை கூறி வந்தார்கள். சிலர் அம்முயற்சியில் ஈடுபட்டார்கள். ஒருசிலர் உலகில், இந்தத் தீமைகள் நாகரிகமான புதுவடிவங்கள் கொண்டு இருந்துவருகின்றன. ஊரெல்லாம் சாக்கடைத் தேக்கங்கள் பெருகவிட்டுவிட்டு, கொசுமருந்து பூசிக்கொள்ளுங்கள். கொசு வலைக்குள் உறங்குங்கள், மலேரியாவுக்கு இடங்கொடுக்காதீர்கள் என்று அறிவுறுத்தி வருவது போன்ற நிலை இது. அதனால் முயற்சி போதிய பயன் ததரவில்லை. வாழ்க்கையின் அடிப்படையான அறமோ, எல்லோரும் கடவுளின் மக்கள், கடவுளின் குடும்பத்தினர் என்று உணர்வதுதான்.

உடல் - மனம் போற்றுதலின் முக்கியத்துவம்

உடலைப் போற்றுதல் நம் இன்றியமையாக் கடமையாகும். இதனையறிந்த வள்ளுவர்,

"இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்"

என்று கூறுகிறார். படைப்பில் அமைந்த வியக்கத்தக்க விந்தைகளுள் மிகச்சிறந்தது மனித உடம்புதான். ஆடம்பரமாய் வாழ்பவர்களாயினும் ஏழ்மையில் சிக்கித் தவிப்பவர்களாயினும் தன் பிறவிக்கடலை நீந்த உடல்வலிமை பெற நாம் உடம்பைப் போற்றிக் காத்தல் அவசியம்.

உலகத்தைத் திருத்துவதைவிட உடம்பைத் திருத்துவது எளியது. எவ்வாறு என்றால், உடம்பு ஓரளவு நம்முடைய கையில் உள்ளது. தகுந்த உணவு, நல்ல பயிற்சி, புலனடக்கம், தக்க மருத்துவம் முதலியவற்றால் ஓரளவு உடம்பு திருந்துவதைக் காண்கிறோம்.

மனத்தைப் பொறுத்தவரையில் பரந்த உலகத்தின் தாக்குதல் குறைவு இயற்கையின் தாக்குதல் மிகக்குறைவு உடம்பின் தாக்குதலும் ஓரளவே உள்ளது. எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும், எப்படிப்பட்ட உடம்பினுள் இருந்தாலும், ஒருவர் விடாமல் முயன்றால் விரும்பியபடி மனத்தை வைத்துக்கொள்ள முடியும்.

உடம்பைப் போற்றி மனத்தை தன் கட்டுப்பாட்டுக்குள் வைக்கும் ஒவ்வொருவரும் நல்வாழ்வின் வாயிலில் இருக்கிறார்கள். மனக்கட்டுப்பாட்டுக்குள் புலனடக்கமும் அடங்கும். உடலாலும், மனதாலும் வலிமைபெற்றவர்கள். எளிமை, பொதுமை ஆகிய குணத்தை இயல்பாகவே பெற்றிருப்பார்கள். நலல்வாழ்வின் வாயிலாய்த் திகழும் உடல்-மனவலிமையைக் காக்க வேண்டியது அவசியம்.

முடிவுரை

உலகப்பொதுமறையாம் திருக்குறள் எக்காலத்திற்கும் பயன்படுவதுபோல நெருக்கடி காலம்போல் வேகமாக இயங்கிக் கொண்டிருக்கும் கணிப்பொறி காலமாகிய இக்காலச் சூழ்நிலையில் மு.வ. வின் நல்வாழ்வுச் சிந்தனைகள் மிகவும் பயனுள்ளதாகவும் மனிதனைப் பண்படுத்தி, உடல், மனம் வலிமைபெற உதவியாகவும் அமைந்துள்ளது எனலாம்.

84. நற்குணங்களை எடுத்தாளும் மு. வ. வின் - கள்ளோ? காவியமோ?

கு. இளவரசு
இளமுறைவர் பட்ட ஆய்வாளர்
தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி
விழுப்புரம்.

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் எல்லாதுறைகளிலும் மாற்றமும், ஏற்றமும் பெற்று விளங்குகிறது. இக்காலத்தைத் தமிழ் இலக்கியத்தின் பொற்காலமாகப் போற்றுகின்றனர். உரைநடை வளர்ச்சியிலும் சரி, கவிதை வளர்ச்சியலும் சரி, நாவல் பெருக்கத்திலும் சரி இந்நூற்றாண்டு தான் அவற்றின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது.

தமிழக வரலாற்றிலும், தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தமிழ் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்களின் சீரிய தமிழ்த் தொண்டானது முதன் இடத்தையே பெறுகின்றது. அவரது பன்முக நோக்கையும் நாம் காண விழைந்துள்ளோம்.

கள்ளோ? காவியமோ? நாவில்ல இடம்பெற்றுள்ள நல் குணங்களின் நற்செயல்கள்

கள்ளோ? - காவியமோ? இந்த நாவலில் இடம்பெற்றுள்ள நம் கதாநாயகியாகத் திகழ்பவள்தான் மங்கை. எதிர்பாராத விதமான நிகழ்ந்த வொன்றுதான் மங்கையின் வாழ்வில் முதல் இன்பவூற்றாகும். மங்கை என்பவர் பெயருக்கு மட்டும்தான் பொருத்தமாக உள்ளதேத் தவிர நடைமுறை வாழ்க்கையில் இன்றளவும் பெயர்பெற்றிருப்பது வேலைக்காரியாகத்தான்.

அத்தையின் கொடுமைகளிலிருந்து விடுபட்டு ரயில் நிலையத்தில் சொல்லமுடியாத பொலிவுடன் இருந்த அன்று மீண்டும் சுமக்கவே ஆரம்பித்தது தலைச்சுமை

அருளப்பனின் - மனித நேயம்

மூட்டைகளைத் தன்தலைமேலே சுமந்து செல்லும் மங்கையை யாரோ ஒரு சிறுமிதானே என்றில்லாமல், மங்கையின் கையில் இருந்த தூக்குப் புட்டியை வாங்கும் அந்த மனிதநேயம் யாருக்கு வரும். எழுதுகிற எனக்கும் கேள்விக்குறியாகத்தான் உள்ளது.

"அந்த படுக்கையை நீ எடுத்துக்கொள் அம்மா!"

சின்னப்பெண், பாவம்! கட்டை வண்டியில் பாரம் போடுவதற்கும் கணக்கு பார்க்கிறார்கள் அம்மா! என்றார். அருளப்பனின் அந்த சிறிய நேயத்தான் மங்கையை வழிபடுத்தும் பாதையாக அமைந்தது.

அருளப்பனின் தந்தை (பெரியவரின்) முற்போக்கு சிந்தனை

வேலைக்காரி ஆனாலும் அவளுக்கு எழுதப்படிக்க தெரிய வேண்டும் என்பதற்காக அவளுக்கு படிப்பு கற்றுகொடுக்கவும் தயாராக இருந்தார். மந்தமான பெண் அல்ல, கூர்மையான அறிவு இருக்கிறது தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசை இருக்கிறது கொஞ்சம் முயற்சி எடுத்துக்கொள். பிறகு உனக்கு நன்மையாக இருக்கும் என்றார்.

பெற்றோருக்கு மதிப்புதரும் - அருளப்பன்

மங்கையை அவன் விரும்பியும், பெற்றோரிடத்தில் மிகுந்த பயத்தோடும், நடுக்கத்தோடும் அவளிடம் பழகாமல் அடங்கி ஒழுகினான். அவன்பால் கொண்ட வேட்கையையும் தன் நெஞ்சின்பாலே புதைத்த பெற்றோரிடத்திலர் காட்டும் மரியாதை குறிப்பிடத்தகுந்தவொன்று.

பெரியவரின் பெருந்தன்மை

அருளப்பன் வேலைக்காரியைத் திருமணம் செய்ய விரும்புகிறான். தன் மகன் கீழ்தர மகளை மணக்கப்போகிறான் என்று எந்த வேறுபாடும் காட்டாமல், உடனே பெங்களுருக்கு தந்தி அடிக்கிறார். பின்பு மங்கையை ரயில் நிலையத்தில் அழைத்துவரும்போது தன் மனதில் எந்த வெறுப்பின்றி, கவலையின்றியும் அவளை சென்டரல் நிலையத்தில் கண்டு, வழக்கம்போல் பெயரிட்டு அழைக்காமல் 'வா அம்மா, வா' என்று அன்பான குரலில் அழைத்து, கையில் பூச்செண்டு ஒன்று கொடுத்தார். மோட்டாரை காட்டி இதில் ஏறு 'அம்மா' என்றார். எக்காலத்திலும் இவரை போன்றோரை காண இயலுமா? என்பது வியக்கத்தக்கதாகும். இன்னும் சொல்லப்போனால் நம்மிடையேயும் இத்தகைய பெருந்தன்மை வாய்க்குமோ என்பது கேள்விக்குறிதான்.

வேலைக்காரியாக இருக்கும் ஒருத்தியை எந்த உறவு முறைகளுக்கு இடம் கொடுக்காமல் தனியே இருக்கும் அவளுக்கு தன் மகனுடன் மணம் முடிப்பதா? என்று எந்தவித ஐயமுமி இன்றி சீக்கிரத்தில் முடிவெடுக்கும் மாண்பு போற்றத்தான். வேண்டும். தாயில்லா மகளுக்குத் தாய் போல் பரிந்துரை செய்கிறார். நீ பழைய மங்கை அல்ல அம்மா! என் மகள் போல, என் மருமகள், அருளப்பனுக்கு வாழ்க்கை துணைவியாக வரவேண்டும் என்று சொல்ல யாருக்கு மனசு வரும்.

அன்னம்மாவின் பெருமை

வேலைக்காரிதானே! என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்றில்லாமல், அவளுக்குத் தக்க நேரத்தில் கல்விக்கு உதவும் மாண்பே பெரியதுதான். இதனையே மு.ஜ. மன்சூர் அஹமத் ஊற்றுக்குள் சில

தூமியில்,

"தாகம் தீர்க்கும்
தண்ணீதேர!" *(பக் : 38)*

என்கிறார்.

"விதி ஒரு கதவை மூடும்போது, நம்பிக்கை இன்னொரு கதவை திறக்கிறது" என்று என். இராஜசேகர் கூறுவார். மங்கையின் ஒரு கதவு வேலையாள் மூடுகிறது, மற்றொரு கதவு அன்னம்மாவால் திறக்கிறது என்பது சுட்டிக்காட்ட தக்கதாகும்.

அருளப்பனின் நீங்கா அன்பு

தன் மனைவியைத் தன் தாய் புண்படுத்தும் வேளையில், இனி இந்த பேச்சை வளரவிடக்கூடாது என வேறு செய்தியைப் பேசத் தொடங்குகிறான். அருளப்பன் அன்பு மனதில் ஏராளமாய் மங்கையைப் பற்றியதே ஆகும். இதனைப் புதுக்கவிஞர் சத்திய மோகன் 'வானம் மட்டும் இருக்கிறது' என்ற கவிதை தொகுபிபில்,

"யாருமிலா இடத்தில்
தன்னை வெளிப்படுத்தும் புல்லும், அதன்
எத்தனை கவனத்திற்குரியது - பூவும்

என்றார். அன்பு ஒரே இடத்தில்தான் அதிகமாயிருக்கும். அவ்வன்பை வெளிப்படுத்தும் விதம்தான் வெவ்வேறு. ஆகையால் மக்களின் நற்பண்பு பலவிதம். அதிலும் தனியொரு விதமாய் இக்கதாபாத்திரங்கள் என்று கூறுவதால் என்றும் மிகையே.

முடிவுரை

"நிலவே! உன்னை
நினைக்காத அன்னை
பார்க்காத குழந்தை
புகழாத கவிஞன்
ரசிக்காத மனிதன்
புவியிலர் இல்லை.

இன்னும் பல மங்கைகளை ஈன்ற தாய்மார்கள் இவ்வுலகில் இல்லையா யினும் கள்ளோ? காவியமோ? ஈன்றதால் என் வளர்ப்புப் பிள்ளைகளாயின.

"தொடர்ந்து எழுத முற்றுப்புள்ளியை தடுக்கிறேன்
தொடரும் என் பேனாமுள"

85. மு. வ. வின் 'நெஞ்சில் ஒரு முள்' காட்டும் பொருளாதார சிந்தனைகள்

முனைவர். சு. சகுந்தலா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
Dr.N.G.P. கலை அறிவியல் கல்லூரி
கோயமுத்தூர்.

முன்னுரை

இலக்கியம் காட்டும் வாழ்க்கை என்பது சமூகத்தில் பன்னெடுங்காலம் மனிதன் வாழ்ந்து மதிப்பீடுகளைத் தேடிக்கொண்ட வாழ்வாகும். தனிமனிதன் குடும்பம், சமூகம் ஆகிய பல்வேறு நிலைகளில் பொருளாதாரம் இயக்கு சக்தியாகவும், இயங்கு சக்தியாகவும் அமைந்து மானுட வாழ்வில் உயர்வையும், தாழ்வையும், ஏற்றத்தையும், இறக்கத்தையும் கற்பித்துக் கொண்டிருக்கின்றது. அவ்வகையில் இலக்கியப்பரப்பில். படைக்கப்படுகின்ற சமகால இலக்கியமாகிய புதின இலக்கியம் பொருளாதாரத்தின் அவசியத்தையும், பொருளாதாரம் புதின மாந்தர்களின் வாழ்வில் ஏற்படும் அளப்பரிய மாற்றத்தையும் பதிவு செய்துள்ளது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ள நெஞ்சில் ஒரு முள் புதினத்தில் வலம் வருகின்ற கதைமாந்தர்களின் பொருளாதாரம், என்னும் நிலையில் சந்திக்கும் பல்வேறு சிக்கல்களையும், அவற்றின் மூலமாக கதைமாந்தர்களின் வாழ்வில் நிகழும் மாற்றங்களையும் கண்டறிந்து வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

உலக வாழ்வு பொருளை ஆதாரமாகக் கொண்டு அமைகின்றது. பொருளின் இன்றியமையாத் தேவையினை மனிதன் நாளும் உணர்கின்றான். இதனால் தான் திருவள்ளுவர், 'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை' என்று மொழிந்தார்.

புதின மாந்தர்களின் பொருந்தாமணங்கள்

வயது முதிர்ந்த ஆணோ, பெண்ணோ வயது குறைந்த ஆணையோ., பெண்ணையோ பணத்திற்காகத் திருமணம் செய்து கொள்வது. பணத்திற்காக மனம் விரும்பாத போதும் திருமணம் செய்து கொள்வது என்னும் இரண்டு நிலைகளில் பொருந்தாத் திருமணங்கள் நிகழ்கின்றன.

ஆண், பெண் இருவரின் மனமும் விரும்பாத இவ்விரு நிலையில் நடைபெறும் இத்திருமணத்தைப் பொருந்தா மணம் எனலாம்.. இத்திருமணம் பெரும்பாலும் குடும்பத்தில் ஏற்படும் வறுமை, பண ஆசை, வரதட்சணை

போன்ற பொருளாதாரக் காரணங்களால் தான் நடைபெறுகிறது.

நெஞ்சில் ஒரு முள் என்னும் புதினம் திருமணச் சிக்கல்களைச் சித்தரித்துக் காட்டுகிறது.

புதின மாந்தரின் பொருந்தா மணம்

இப்புதினத்தின் கதாபாத்திரமான வடிவு, அதிக பொருள் வசதி இல்லாத குடும்பத்துப் பெண். விஜயா பணம் படைத்த பெண்மணியின் வீட்டில் விஜயாவிற்குச் செயலராக பணிபுரிபவர். வடிவு கல்லூரியில் படிக்கும் போது பலராமனைக் காதலிக்கிறாள். இவளின் காதல் வெற்றியில் முடியவில்லை. தோல்வியில் தான் முடிகிறது. இந்நிலையில் இவளைப் பெண் பார்க்க வரும் குடும்பத்தினர் அதிக வரதட்சணைக் கேட்டார்கள். வடிவின் பெற்றோர்களால் அவர்கள் கேட்ட வரதட்சணை கொடுக்க முடியவில்லை. விஜயா வடிவின் திருமண ஏற்பாட்டினைப் பற்றி கேட்கிறாள். வடிவு தன் குடும்ப நிலையை விஜயாவிடம் விளக்கினாள்.

விஜயா வடிவிற்கு ஒரு வாழ்க்கை அமைத்து தர வேண்டும் என்று ஒரு மாப்பிள்ளை பார்க்கிறார். விஜயாவிற்குத் தெரிந்த நண்பர். வடிவிற்கு வயது 28, மாப்பிள்ளை வயது 45 இருக்கும் என்று விஜயா கூறினாள். அவருக்கு இது இரண்டாவது திருமணம் என்றும் கூறினாள். இதனால் வடிவின் அம்மாவிற்கு மனதில்லை. அப்போது விஜயா வடிவுடன் உரையாடும் உரையாடல்.

தனது சொந்த கதையைக் கூறுகிறாள்

“அதனால் தான் இரண்டாம் திருமணம் பலபேருக்குப் பொருத்தமாக அமைந்து விடுகிறது. நான் என் கணவருக்கு இரண்டாவது மனைவிதான். எங்களுக்குத் திருமணம் ஆன பிறகுதான் முதல் மனைவி அவளுடைய ஊரிலேயே இறந்து விட்டாள். உனக்கு ஒரு நன்மையும் இருக்கிறது. இந்த ஆளின் முதல் மனைவி இறந்து இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகின்றன. ஆகையால் உங்கள் திருமணம் இடையூறு இல்லாத திருமணம் ஆகும். நல்ல சொத்து இருக்கிறது. அவ்வளவும் உனக்கே சேரும். இப்பொழுதே வேண்டுமானாலும் உன் பேரில் பாதி எழுதி வைக்கச் சொல்கிறேன். பணம் இருந்தால் தான் உலகத்தில் மதிப்பு உண்டு. பணம் இருந்தால் மற்ற எல்லாம் படிப்படியாக வந்து சேரும். பணம் இருந்தால் கெட்ட கணவனும் நல்லவன் ஆகிவிடுவான். பணம் தான் முதலில் தேட வேண்டிய பொருள். உனக்கு தெரியும் பெர்னாட்ஷா சொல்லியிருக்கிறார், ஏழையாக இருப்பது தான் பெரிய குற்றம் என்று. பணம் வைத்துக் கொண்டு வாழ்வது தான் முதல் கடமை. அந்த குறை இல்லாதபடி நான் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வைத்துப் பிறகு திருமணம் நடத்தச்சொல்கிறேன்.

இப்புதின வரிகளின் மூலம். பொருளாதாரச் சிக்கலின் காரணமாக பொருந்தா மணங்கள் நிகழ்.கிறது என்பதை அறிய முடிகின்றது. பணம் பத்தும் செய்யும் என்கிற உண்மையினைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். புதின ஆசிரியர் என்கிற சமூக நிலையினைக் காணமுடிகின்றது. திருமணத்திற்கு வயது வித்தியாசம் என்பது ஒரு தடையாக நில்லாமல் பொருளாதார வசதி இல்லை என்பது மட்டும் தடையாக கருதி திருமணத்திற்கு ஒப்புதல் அளிக்கின்ற பெண்களின் அவல நிலையின் உண்மை மெய்க்கப்படுகின்றது.

குடும்பத்தின் ஏழ்மை நிலை

இப்புதினத்தின் கதாபாத்திரமான விஜயா, வடிவின் பெற்றோர்களிடம் வடிவிற்கு மாப்பிள்ளை பார்த்த செய்தியைக் கூறினார். அப்பொழுது வடிவின் பெற்றோர்கள்

> "எங்களிடம் பணம் ஏராளமாக இல்லை. அது ஒன்று தான் குறை. எங்களுக்கு ஒரே பெண். எவ்வளவு முடியுமோ அவ்வளவு செய்வேன். கல்யாணம் செய்து வைப்பேன். சாதாரண நகை, சீதனம் இவைதான் முடியும். வைர நகைகள் கேட்டால் எங்களால் முடியாது"

என்றார் அப்பா.

"எல்லாம் எனக்கு தெரியும் எல்லாச்செலவும் பிள்ளை வீட்டாரே செய்வதாகவும், நகைகள் எல்லாம் அவர்களே போடுவதாகவும் உங்களுக்கு ஒரு செலவும் இல்லாதபடி ஏற்பாடு செய்தால் ஒத்துக் கொள்கிறீர்களா?" என்றார் விஜயா. அதற்கு வடிவின் தந்தை "நல்ல பிள்ளையாக இருக்க வேண்டும். பணத்திற்கு ஆசைப்பட்டு எங்கேயாவது தள்ளிவிடக்கூடாது" என்றார் வடிவின் தந்தை. அப்படி யாராவது செய்வார்களா? என்று கூறினாள் விஜயா. அன்னையிடம் பார்த்து ஆனால் இரண்டாம் தாரம் என்று கூறினாள். அதற்கு வடிவின் அன்னைக்கு மனம்ஒப்பாத காரணத்தால் உள்ளேசென்று விட்டாள். விஜயா சொல்வதை கேளுங்கள் என்றாள். சொல்வதை வடிவின் தந்தைக்குச் சொல்லுமாறு சென்றுவிட்டார். விஜயா நிழற்படத்தை எடுத்து வந்து வடிவில் தந்தையின் கையில் கொடுத்தார். அப்பா அதைப் பார்த்தவாறே "வயது நாற்பத்தைந்து இருக்கு போல தெரிகிறதே. படம் எடுத்த போது நாற்பது இப்போது நாற்பந்தைந்துக்கு மேல் இருக்கும்" என்றார் விஜயா.

இப்புதின வரிகளின் மூலமாக பணம் இல்லாத நிலையில் வயது வித்தியாசத்துடன் திருமணம் செய்தல் என்கிற நிலையினை உணர முடிகிறது. பணம் இல்லாத நிலையில் தகுந்த வயதினை உடைய வரனை மணக்க முடியவில்லை என்கின்ற உண்மையினைப் புதின வரிகள் மெய்ப்பிக்கின்றன. திருமணம் என்ற ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு வயதில் மூத்தவர் என்றாலும் மணக்கும் சமுதாய நிலையினை அறியமுடிகின்றது.

பணமும் மதிப்பும்

பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை, பணமில்லையேல் பிணம், பணம் பந்தியிலே குணம் குப்பையிலே எனும் மொழிகளெல்லாம் மனிதனின் மதிப்பு அவனது செல்வத்தை வைத்தே அளவிடப்படுகின்றது என்பதை உணர்த்துகின்றன.

இப்புதினத்தின் கதாபாத்திரமான வடிவு விஜயாவின் வீட்டில் செயலராக பணிபுரிபவள். அவர்கள் வீட்டின் அறையில் திருக்குறள் புத்தகத்தை எடுத்து வாசிக்கத் தொடங்கினாள். முலாவதாக பொருள் செயல் வகை என்ற அதிகாரத்தின் தலைப்பைக் காண்பிக்கிறாள். பொருள் இல்லாதலால் தான் அவள் குடும்பத்தில் துன்பம் வருகின்றது என்ற சிந்தனையைப் பின்வரும் புதின வரிகள் மெய்ப்பிக்கின்றன.

"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்". (751)

"இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லோரும் செய்வர் சிறப்பு". (752)

"பொருள் என்றும் பொய்யாவிளக்கம் இருள் அறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று" (753)

இப்புதின வரிகளின் மூலமாக செல்வம் இருந்தால் தான் மதிப்பு என்கின்ற உண்மையை உணர முடிகின்றது. செல்வம் இல்லாத குடும்பங்கள் துன்பத்திற்கு ஆளாகின்றது என்பதை அறிய முடிகின்றது. எக்காலத்திற்கும் பொருள் இல்லையெனில் இன்பமாக வரி முடியாது.ட துன்பத்தில் தான் துவள முடியும் என்கின்ற உண்மையினை உணர முடிகின்றது.

பொருளாதாரம் இன்றி திருமணம் தடைபடுதல்

இப்புதினத்தின் கதாபாத்திரமான வடிவினைப் பெண்பார்க்க மாப்பிள்ளை வீட்டார்கள் வருகிறார்கள். வடிவிற்கு இரவலாக வாங்கிய வைர நகைகள் எல்லாம் அவளுக்குச் சொந்தமானது என்று நினைத்து மாப்பிள்ளை வீட்டார் வடிவு திருமணத்திற்கு ஒப்புதல் அளிக்கிறார்கள். பொருளின் மேல் கொண்ட பற்றின் காரணம் தான் திருமண ஒப்புதல் என்பதை பின்வரும் புதின வரிகள் மெய்ப்பிக்கின்றன.

"சரி போய் எழுதுகிறோம். நீங்களும் எழுதுங்கள். அடுத்த மாதத்திலேயே திருமணத்திற்கு ஏற்பாடு செய்யலாம் என்று எண்ணியிருக்கிறோம். இப்போது பெண் போட்டுக்கொண்டிருக்கிற இவ்வளவு நகை போட்டு திருமணமும் நீங்களே செய்து வைத்தால் போதும் வேறு எதுவும் நாங்கள் கேட்கவில்லை"

என்று விடை பெற்றார்கள். இப்புதின வரிகளின் மூலமாக பெண்ணின் குணத்தைப் பார்ப்பதை தவிர்த்து பொன்னுக்குத்தான் முக்கியத்துவம்

கொடுத்தார்கள் என்பதை அறிய முடிகின்றது. பொருளாதாரமின்றி பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல மணவாழ்க்கையை அமைத்துக்கொடுக்க முடியாத சமுதாய நிலையினைப் படம் பிடித்துக் காட்டியிருப்பதை அறியமுடிகின்றது. 'பணம் பந்தியிலே குணம் குப்பையிலே' என்கின்ற உண்மையினை உணர முடிகிறது.

புனித மாந்தரின் உரையாடல்

மாதர் சங்கத்தில் பெண்கள் உரையாடும் போது **"அன்றைய திருமணங்கள் ஆணைவிடப் பெண் வயதில் குறைந்தவர்களாக இருக்கும்படி பார்த்து பெண்ணுக்குப் பணிவும் அடக்கமும் இருக்கும் வகையில் திருமணம் செய்து வைத்தார்கள். குடும்ப வாழ்க்கையில் இக்காலத்தை விட அக்காலத்தில் வெற்றி மிகுதி, இப்படிப் பலர் கருதுகிறார்கள்"** என்றாள், ஒரு பெண், **'இல்லை, இல்லை'** என்றாள் இந்திரா. உடனே மற்றொருத்தி எழுந்து **"இது பழங்காலத்துக் கதை. இப்பொழுது யாரும் இப்படி பேசுவதில்லை"** என்றாள். பணம் தான் முக்கியம் என்பதைப் பின்வரும் புதின வரிகளின் மூலம் அறிய முடிகிறது. "பணம் இருந்தால் வயது ஆன பெண்ணையும் கட்டிக்கொள்வார்கள்" என்றாள் இன்னொருத்தி.

இப்புதின வரிகளின் மூலமாக வயது ஒரு காரணம் இல்லை. பணம் தான் முக்கியம் என்கின்ற உண்மை நிலையினைப் புதின வரிகள் மெய்பித்துக் காட்டுகின்றன.

தொகுப்புரை

திருமணச் சிக்கல்கள் தோன்றுவதற்குப் பொருளாதாரமே அடித்தளமாக இருக்கின்றது. குடும்பத்தின் கடன் சுமை, வறுமை நிலை ஆகிய பொருளாதாரக் காரணங்களால் வயது முதிர்ந்த ஆண்மகன் மனம் விரும்பாத பெண்களைத் திருமணம் செய்யக்கூடிய நிலைக்கு தள்ளப்படுகிறார்கள் என்பதைப் புதினத்தில் சுட்டிக் காட்டப்படுகிறது. திருமணப் பருவ காலத்தில் திருமணம் நடைபெறாமல் முதிர் கன்னியர்களாக வாழ்க்கையை நகர்த்திக் கொண்டுள்ள பெண்களின் வாழ்வில் பொருளாதாரக் காரணிகள் பெரும் பங்.கு வகிக்கின்றன. வரதட்சணை, குடும்பச்சுமை, பொருளாதார வேறுபாடு ஆகிய காரணங்களால் பொருளாதாரத்தை முன்னிருத்தி திருமணங்கள் தடைபடுவதை இப்புதினம் வாயிலாக அறிய முடிகிறது.

86. மு. வ. வின் மண் குடிசையில் பண்பாட்டுப் பெண்ணியம்

முனைவர் ஔவை இரா. நிர்மலா
தமிழ் இணைப் பேராசிரியர்
அவ்வையார் அரசினர் மகளிர் கல்லூரி
காரைக்கால் 609 602.

மு. வரதராசன் தமது காலகட்டத்தில் நிலவிய மேலைநாட்டுப் பெண்ணியச் சிந்தனைப் போக்குகளை நன்கு அறிந்தவர். அச் சிந்தனைகள் தமிழகத்தில் மெல்லமெல்ல ஊடுருவத்தொடங்கிய நிலையில் மரபுக்கும் புதுமைக்குமான போக்குகளுக்கிடையில் பெண்கள் நிலையை நுணுகிநோக்கி புதுயுகத்தில் காலடி எடுத்துவைக்கும் பெண்களிடம் தவிர்க்கப்படவேண்டிய குணங்களைச் சமுதாயத்திற்குப் புலப்படுத்த முனைகிறார். அவருடைய மண்குடிசை புதினம் இல்லறவாழ்க்கைக்குரிய பெண்மையின் குணநலன்களைக் கோடிட்டுக் காட்டுவதாக அமைகிறது. இப்புதினத்தின் மூலம் மு.வ. புலப்படுத்த நினைத்த பண்பாட்டுப் பெண்ணியச் சிந்தனைகளைக் காண்பதாக இக்கட்டுரை அமைகிறது.

தாழ்வு மனப்பாமை

சிலா பெண்கள் தாழ்வு மனப்பான்மை மிக்கவர்களாக வாழ்கிறார்கள். அத்தகைய மனப்பாங்கு கொண்டவர்கள் தங்களைவிட செல்வத்தாலும் கல்வியாலும் உயர்ந்தவர்களிடத்துப் பழகுவதை விரும்புவதில்லை.

> *அவளுக்கு ஒரு படி உயர்வாக இருப்பவர்கள் யார் வந்தாலும் நன்றாகப் பழகமாட்டாள். தன்னோடு சமநிலையில் உள்ளவர்களிலும் தான் சொன்னதற்கு எல்லாம் தலையாட்டக் கூடியவர்கள் யாரோ அவர்களோடு மட்டுமே பழகுவாள். (மண்குடிசை, 7ஆம் பதி. சென்னை : பாரி நிலையம், 1999.52)*

என்று மெய்யப்பன் தன் மனைவியின் இயல்பை எடுத்துரைக்கிறான்.

அரட்டை அடித்தல்

சில பெண்கள் எந்நேரமும் கூடி அரட்டை அடிப்பதில் இன்பம் காணுகின்றனர்.

> *தொழிலகத்திலிருந்து வந்தால் எந்த நாளிலும் அவள் என்னை முகம்மலர்ந்து வரவேற்றதே இல்லை. யாரோடாவது பேசிக்கொண்டு மகிழ்ச்சியோடு இருப்பாள். (22)*

என்ற தன் மனைவி ரேவதி எந்நேரமும் வம்பளந்து கொண்டிருப்பதை

எடுத்துரைக்கிறான் மெய்யப்பன். வந்த பெண்களோடெல்லாம் பேசிப் பேசிப் பொழுதைப் போக்குகிறாய் (103) என்று குமரவேலும் தன் மனைவி மங்கைநல்லாரின் குறையாகச் சுட்டிக்காட்டுகிறான்.

விளையாடச்சென்ற தன் மகன் கதிரவனைத் தேடிச்சென்ற ரேவதி எதிர்ப்பட்ட பெண்ணோடு வம்புபேசித் தான் வந்த காரியத்தையே மறந்துவிடுகிறாள்.

> *நான் என்னம்மா செய்வேன்? வெண்ணிலா! உங்கள் அம்மாவுக்குத் தெரியணும். அவள் போனாள். எந்த மகராசியோ எதிரில் அகப்பட்டாள். அவ்வளவுதான் பேச்சுக் கச்சேரி நடந்து கொண்டிருக்கும். குழந்தை பட்டினியாகப் படுக்கிறானே என்று பெற்ற தாய்க்குக் கவலை இருக்கணும். நான் சொன்னால் கோபித்துக் கொள்கிறாள். (271)*

என்ற ரேவதியின் வீட்டிலிருக்கும் கொண்டலேரிக் கிழவி கடிந்துரைக்கிறாள். தன் குழந்தைகள் பட்டினி கிடந்து தூங்கிப்போவதைக்கூட பொருட்படுத்தாத தன்மையை ரேவதியிடம் காண்கிறோம். அரட்டை அடித்துக்கொண்டிருப்பதில் நாட்டம் உடைய பெண்கள் தங்கள் குடும்ப நலனில் அக்கறை இன்றி இருப்பர் என்பதை மு.வ. இதன்மூலம் உணரவைக்கிறார்.

> *கோமளம் முதலான அக்கம் பக்கத்துப் பெண்கள் கூடி விட்டிருந்தார்கள். அந்தக் கச்சேரி அன்றாட நிகழ்ச்சியாக வளர்ந்திருந்ததை உணர்ந்தேன். மேற்கு நாடுகளைப்போல், பெண்களும் பொருள்தேடி வெளிவேலைக்குச் செல்லும் நிலை வந்தால்தான், இந்த வெறும் பேச்சுக் குறையும் என எண்ணினேன். அப்போதும் முடியாது . அந்த நிலை வந்தாலும் தொழில்நேரம் போக மீதி நேரங்களில் பேச்சுக் கூட்டங்கள் நடக்கும் என உணர்ந்தேன். (409)*

என்ற பகுதியில் பெண்கள் வேலைவாய்ப்புப் பெறும்போது ஒருவேளை அவர்களின் இந்தப் பழக்கம் நீங்குதற்கு வாய்ப்பு ஏற்படலாம் என்று மு.வ. கூறுகிறார். அவருடைய காலகட்டத்தில் அலுவலங்களில் வேலை பார்க்கும் பெண்கள் சிலர் வம்பளத்தைப் பாரத்து அலுவலங்களில்கூட வேலையை முடித்துவிட்டு இவர்கள் வெற்றுப்பேச்சு பேசுவதில் ஆர்வம் காட்டக்கூடும் என்று முடிக்கிறார்.

பிடிவாதம்

பெண்கள் பெரும்பாலும் பிடிவாத குணம் உடையவர்கள் என்று மு.வ. குறிப்பிடுகிறார்.

> *ஒன்று சொல்கிறேன், நம்புங்கள். பெண்கள் பொதுவாக உணர்ச்சி மிகுந்தவர்கள். பிடிவாதமும் உள்ளவர்கள்தான். நானும் பெண்தான்.*

எனக்கும் அந்தக் குணங்கள் உண்டு. ஆனால் எந்த உணர்ச்சியும் பிடிவாதமும் காலப்போக்கில் மாறிவிடும். அதுவரையில் பொறுக்க வேண்டும். ஒருவனோடு இருந்துகொண்டு இன்னொருவன் மேல் ஆசைப்படும் திருட்டுப்பெண்கள் தவிர, மற்ற எந்தப் பெண்ணையும் நம்பலாம். நாளடைவில் திருந்துவார்கள். (90)

என்று மங்கைநல்லாள் வாயிலாகப் பெண்களின் பிடிவாத குணத்தை எடுத்துரைக்கிறார் மு.வ. மேலும் அவர்கள் உணர்ச்சிவசப்படுபவர்களாகவும் அமைகின்றனர். ஆனால் இக்குணங்கள் இளமை செல்லச்செல்ல மாறிவிடுகின்ற போக்கையும் எடுத்துரைக்கிறார். எனினும் தீய பெண்டிரிடம் இக்குணங்கள் மாறுவதில்லை என்பதையும் மங்கைநல்லாள் வாயிலாக மு.வ. வெளிபடுத்துகிறார்.

ஏற்றத்தாழ்வு பார்த்தல்

பெண்கள் தம் வீட்டிற்குவரும் உறவினர்களை ஒன்றுபோல் உபசரிப்பதில்லை. ஏழைகளுக்கு ஒருவகையான உபசரிப்பும் பணம் படைத்தவர்களுக்கு வேறொருவகையான உபசரிப்பும் செய்கிறார்கள் என்பதை மு.வ. நுணுக்கமாக வெளிப்படுத்துகிறார்.

ஏழை உறவினர்கள் வந்தால் அவ்வளவு அன்பாகக் கவனிப்பதில்லை. பழையது போட்டு அனுப்புகிறாய். உன்னைப்போல் வளமானவர்கள் பட்டும் பொன்னுமாக வந்தால் பலவகைச் சிற்றுண்டியும் பலவகைக் காய்கறியும் செய்து ஆடம்பர விருந்து அளிக்கிறாய். (102)

என்ற மங்கைநல்லாளின் ஏற்றத்தாழ்வு காணும் மனப்பாங்கைக் குமரவேல் சுட்டிக்காட்டுகிறான். தன்னை நன்றாக கவனிப்பவர்களுக்கு நல்ல உபசரிப்பையும் சுமாராகக் கவனிப்பவர்களுக்குச் சாதாரண உபசரிப்பும் போதுமானது என்று மங்கைநல்லாள் கூறுவதையும் மு.வ. எடுத்துரைக்கிறார்.

இரக்கமும் உறுதியும்

கூலி வேலை செய்பவர்களுக்குரிய ஊதியத்தை அளிக்கும்போது பெண்கள் கறாராக இருக்கிறார்கள். தமது பணம் வீணாகக்கூடாது என்று அக்கறை எடுத்துக்கொள்கிறார்கள். அதே நேரத்தில் ஏமாற்றுபவர்களிடம் எளிதாக ஏமாந்து பொருளை இழந்துவிடுகிறார்கள். பிச்சை எடுப்பவர்களுக்கும் இரக்கமனம் கொண்டு பொருளைத் தாராளமாக வாரி வழங்குகிறார்கள்.

ஒரு வேலையும் செய்யாமல் பிச்சை எடுப்பவர்களுக்கும் ஏமாற்றுகிறவர்களுக்கும் காசு கொடுக்காதே என்று பலமுறை சொல்லியிருக்கிறேன். அதற்கு ஈடாக, கூலி வேலை

செய்கிறவர்களுக்கு இன்னும் ஓர் அணா இரண்டு அணா சேர்த்துக்கொடு என்று சொல்லியிருக்கிறேன். நீ கொடுக்காவிட்டாலும் நானாகக் கொடுத்தாலும் என்னோடு சண்டைபோடுகிறாய். இது ஒரு குறை (103)

என்று தன் மனைவியின் குறையைக் குமரவேல் எடுத்துக்கூறுமிடத்து பெண்களின் மாறுபட்ட மனப்பாங்குகளைக் காணமுடிகிறது. இதனை ஒரு குறையாகவே மு.வ. எடுத்து மொழிகிறார்.

உற்றார் உறவினரைத் தவிர்த்தல்

பெண்கள் தமக்குத் துன்பம் தருகின்ற அக்கம்பக்கத்தாரையும் உறவினரையும் எப்போதும் தள்ளியே வைக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள். அவர்களால் மேலும் மேலும் நேருகின்ற துன்பங்களை வருவித்துக்கொள்ள அவர்கள் விரும்புவதில்லை. தமது பகையை உணர்வை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளவும் அவர்கள் தயங்குவதில்லை. மேலும் இவர்கள் பிறரிடம் உள்ள குற்றம் குறைகளை எளிதாகக் கண்டுபிடித்துவிடுவதுடன் எப்போதும் அதனைச் சொல்லிக்கொண்டே இருப்பார்கள் என மு்.வ. கண்டறிந்த பெண்டிர் குணங்களை,

என் பங்காளிகள், அக்கம் பக்கத்தார் இலர்களால் ஏதாவது தொல்லைவரும். இந்த ஓரகத்தி இப்படி, அந்த ஓரகத்தி அப்படி, எதிர்வீட்டுக்காரி இப்படி என்று அவர்கள் செய்த இடையூறுகளையும் கொடுமைகளையும் சொல்வாள். அவர்களுக்கு அதாவது உதவி செய்ய வேண்டிய நேரம் வரும். நான் உதவிசெய்ய வேண்டும் என்று விரும்புவேன். இவள் அவர்களைப் பொறுத்த வரையிலும் எதிலும் தலையிடக்கூடாது என்று கடமையாகச் சொல்வாள். மற்றவர்கள் எப்படி நடந்து கொண்டாலும் நாம் நீதியாக நடக்க வேண்டும் என்று சொல்வேன். நாய் நம்மைக் கடித்தால் நாம் நாயைக் கடிக்கக் கூடாது என்று ஒருமுறை சொன்னேன். நாயைக் கடிக்கக் கூடாது, அடிக்க வேண்டும் என்றாள். (105)

என்று குமரவேலரின் வாயிலாக வெளிப்படுத்துகிறார்.

மாமியார் - மருமகள் சிக்கல்

மெய்யப்பன் மனைவி ரேவதியும் அக்கம்பக்கத்து வீட்டுப் பெண்களும் அடுத்தவர்களைப் பற்றி வம்பளந்து கொண்டிருந்தபோது ஒரு வீட்டு மாமியார் - மருமகளைப் பற்றிப் பேசுகின்றனர்.

மருமகளின் நகை பற்றியும், போன பொங்கலின்போது அவளுக்குக் கணவன் எடுத்துக்கொடுத்த ஆரணிப் பட்டுச் சேலை பற்றியும் அதனால் மாமியாருக்கு ஏற்பட்ட பொறாமை பற்றியும்

அன்றுமுதல் மாமியார் செய்யத் தொடங்கிய கொடுமை பற்றியும் மாறிமாறிப் பேசினார்கள். (257)

என்று மெய்யப்பன் அவர்கள் உரையாடலின் சுருக்கத்தைக் கூறுகிறார். மனைவியிடம் கணவன் அன்பாய் இருப்பதைப் பார்த்துப் பொறாமை கொள்கிறாள் மாமியார். மருமகளைக் கொடுமைப் படுத்துவதன்மூலம் தன் வஞ்சத்தை அவள் தீர்த்துக்கொள்ளுதல் தமிழகத்தில் நடைமுறையில் இருக்கக் காண்கிறோம்.

செல்வநிலையில் உயர்ந்த இடத்திலிருந்து பெண் எடுக்கும்போது அவள் மாமியாரை மதியாமல் நடக்கும் இயல்பையும் காணமுடிகிறது.

அந்த மருமகளும் பொல்லாதவள் பசுமையான இடத்திலிருந்து வந்தோம் என்ற செருக்கினால் மாமியாரை மதிக்காமல் நடக்கிறாள். அதனால்தான் வம்பு (256)

என்று மாமியாரின் கொடுமைக்குக் காரணம் கூறுகிறாள் ஒருத்தி.

உடனே மற்றவர்கள் தம் தம் மாமியாரிடம் பட்ட துன்பங்களை எடுத்துக் கூறத் தொடங்கினார்கள். (256)

என்று கூறுவதிலிருந்து இச் சிக்கல் எல்லா வீடுகளிலும் மேலோங்கி இருப்பதைக் காணமுடிகிறது. மேலும் மெய்ப்பனுக்கு ரேவதியை மணமுடித்தற்குக் காரணமே மெய்யப்பனுக்குத் தாய் இல்லாமைதான்.

நாள் இளமையிலேயே தாயை இழந்தவன். ரேவதி மாமியாரைக் கண்டறியாதவள். அவளுடைய பெற்றோர் எனக்கு மனைவியாகக் கொடுக்க முன்வந்ததற்கு முதல் காரணம், இந்த வீடு மாமியார் இல்லாத வீடு என்பதுதான். (256-57)

மாமியார் இல்லாத வீடு என்பதாலேயே தன்னை அவர்கள் மருமகனாக்கிக் கொண்டார்கள் என்று கூறும் மேற்காணும் பகுதி, சமுதாயத்தில் மாப்பிள்ளையின் தாய் உயிரோடிருக்கக்கூடாது என்றும் அப்போதுதான் தன் மகள் நிம்மதியாகப் புகுந்தவீட்டில் வாழமுடியும் என்றும் பெண்ணைப் பெற்றோர் நம்புவதை வெளிப்படுத்துகிறது. இத்தகைய மனப்பாங்கு சமூகத்தில் நலமற்ற சூழலை ஏற்படுத்தும் என்பதையம் மறுக்கமுடியாது.

ரேவதிக்கு மாமியார் இல்லாததைக் குறிப்பிடும் ஒருத்தி,

"நீ கேட்டு வந்தவள் மாமியார் இல்லாத வீட்டுக்கு மருமகளாக வந்தவள் நீ. எல்லாருக்கும் உனக்குக் கிடைத்ததுபோல் வீடு கிடைக்குமா?" (257)

என்று கூறுவதிலிருந்து திருமணத்தில் மகளிரின் எதிர்பார்ப்பு புலனாகிறது.

தலையீடு

மகனுடைய வாழ்க்கையில் தாய் தலையிடுவதனால் மாமியார் - மருமகள் சிக்கல் ஏற்படுகிறது. அதேபோன்று மகளுடைய இல்லறத்தில்

தலையிட்டு அவளது வாழ்க்கையைச் சீரழிக்கும் தாயாரும் உள்ளனர். திருமணத்திற்குப்பின் மகளுடைய கணவன் வீட்டில் ஏற்படுகின்ற சிறுசிறு கருத்துவேறுபாடுகளில் தலையிட்டுப் பெரிதாக்கி, தன்விட்டில் வாழ்வதுபோல் மகள் செல்வச்சிறப்புடழன் வாழஇயலவில்லை என்ற காரணத்தைக் காட்டி மகளைத் தன் வீட்டிற்கு அழைத்துவந்துவிடும் தாயாரும் இருக்கிறார்கள். இத்தகைய செயலால் மகளின் இல்லறவாழ்க்கை முற்றிலும் சீர்கெட்டுப்போகும் என்று கருதாமல் தங்களுடைய வீம்பிற்கு மகளைப் பலியாக்குகின்ற அறியாமைமிக்க பெண்கள் இருக்கிறார்கள் என்பதை,

> *மாமியார் எனக்கு மதிப்புக் கொடுத்து நடந்திருந்தால், என் மனைவியும் என்னிடம் அன்புடன் வாழ்ந்திருப்பாள். கடைசியில் தாயின் செருக்கு அடங்கிய பிறகுதான் மகளின் செருக்கும் அடங்கும் நிலைமை வந்தது. எண்ணிப் பார்க்காமலே இப்படி மகளின் வாழ்வுக்குத் தீமை செய்யும் மனமும் தாயின் அன்பில் கலந்து இருக்கிறதே என்று வருந்தினேன். (396)*

என்னும் பாண்டியன் கூற்றாக உரைக்கும் மு.வ. மகளிரின் துன்பத்திற்கு மகளிரே காரணமாய் நிற்றலைப் புலப்படுத்துகிறார்.

புதுமையை ஏற்கத் தயங்குதல்

காலம் மாறும்போது ஏற்கெனவே மக்களிடையே காணப்படுகின்ற சிந்தனைப் போக்குகள் மாற்றம் பெறுகின்றன. ஆண்கள் உடனே ஏற்றுக்கொள்கின்றனர். அந்த அளவிற்குப் பெண்கள் விரைந்து ஏற்பதில்லை.

> *பெண்கள் எப்போதும் வேகமாகத் திருந்தமாட்டார்கள். வயிற்றில் பிறந்த மக்களின் எதிர்காலம் பற்றிக் கவலையும் அச்சமும் உடையவர்கள். அச்சம் உடையவர்கள் புதுவழியில் போகத் தயங்குவார்கள் (229)*

என்று பேராசிரியர் நரேந்திரன் பெண்கள் சீர்திருத்தக் கருத்துகளை எளிதில் ஏற்காததன் காரணத்தைக் கூறுகிறார்.

மேற்கூறியவற்றால் மு.வ. இல்லறவாழ்வில் காணக்கூடிய மகளிர் சார்ந்த பண்புநலன்களின் வன்மை மென்மைகளை எடுத்துரைத்து, அவர்கள் தொடரவேண்டிய பண்புகளையும் களைய வேண்டிய பண்புகளையும் கதைமாந்தர் மூலமாகச் சுட்டிக்காட்டி எதிர்காலச் சமுதாய நலனுக்கு வழிவகுக்கிறார். மேலும் மகளிர் சமுதாயம் மெல்லமெல்லத் திருந்தவேண்டியதின் இன்றியமையாமையையும் சமுதாயத்திற்குத் தெளிவுபடுத்துகிறார். தமிழக மகளிர் தொடர்ந்து கடைபிடித்துவரும் பண்பாட்டின் அடிப்படையில் இத்தகு பெண்ணியச் சிந்தனைகளைத் தம் படைப்பின் மூலம் வெளிப்படுத்துகிறார் மு.வ.

87. மு. வ. வின் மண்குடிசையில் இடம்சார் அனுபவ உத்தி

முனைவர். ந. கிருட்டினமூர்த்தி
தலைவர்
உலகத் தமிழ்ப் பேரசை
நிக்கி சோலை, புதுத்துறை சாலை
காரைக்கால் 609 609.

எழுத்தாளன் தான் கண்ட, கண்டு சுவைத்த, கண்டு அல்லலுற்ற இடங்களைப் பற்றித் தன் வாசகர்களுக்குச் சொல்லவேண்டும் என்ற விழைவே தன் படைழப்புகளில் அவற்றை வெளிப்படுத்தக் காரணமாய் அமைகிறதெனலாம். மு.வரதராசனும் அதனைத் தவறாமல் பயன்படுத்திக் கொள்கிறார்.

இடம்சார் அனுபவம் என்பது நேருணர்வு, நேர்க்காட்சி உணர்வு, நீடுபல் காட்சியுணர்வு, அகக் காட்சியுணர்வு என்னும் நிலைகளில் விரியும் தன்மையதாகும். இடம்சார் அனுபவங்களில் அடங்குகின்ற தொடர்வ்டிப் பயண அனுபவனத்தின் பரிமாணங்கள் எழுத்தாளர் மு.வ.வின் படைப்புகளில் குறிப்பாக மண்குடிசையில் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் மையநோக்கமாகும்

இளமையில் பயணம்

பல்வேறு இடங்களுக்கும் சுற்றுலா செல்ல வேண்டும் என்னும் ஆவல் அனைவருக்கும் எழுவது இயல்பு. இறப்பிற்குமுன் வடநாட்டுத் தலங்களான காசி, ஹரித்துவார் முதலான இடங்களுக்குச் சென்று கடவுளைத் தரிசிக்க வேண்டும் என்று ஆசைகொள்பவர்களும் பலராவர். அத்தகையோர் முதுமைப் பருவத்தையே அதற்கு உகந்ததாக எண்ணுகின்றனர். ஆனால், அத்தகு பயணங்களை இளமைக்காலத்திலேயே மேற்கொள்வது நல்லது வயது முதிர்ந்தபின் மேற்கொள்வது அரிதாகிவிடுகிறது என்னும் நடைமுறைச் சிக்கலை மு.வ. உணர்த்துகிறார்.

தன் நண்பன் குமரவேலும் மனைவி மங்கைநல்லாளும் வடநாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளக் செயிதிருந்த ஏற்பாடுகளைப் பார்த்த மெய்யப்பன், வயது ஆகிவிட்டதோ? கிழவனும் கிழவியும் ஆகிவிட்டீர்களோ? (43) என்று கேட்கிறான். அதற்கு,

> *வயது ஆன பிறகு வெளியூர்களுக்குப் போக முடியாது. போனால் உடம்பு கெடும். தவிர இந்த ஊரில் இருந்தால் இவருக்கு வேலையும் ஓய்வதில்லை. இப்படிக் கட்டாயப்படுத்தி வெளியூர்களுக்கு அழைத்துப் போனால்தான், ஓய்வாகச் சில*

வாரங்களைக் கழிப்பார் (43)

என்று மங்கைநல்லாள் கூறுகிறாள். இதன்மூலம் இளமைக்காலமே பயணம் செய்வதற்கு வாய்ப்பான காலகட்டம் என்பதை மு.வ. அறிவுறுத்துகிறார். மேலும் தங்கள் ஊரில் ஓய்வின்றி எப்பொழுதும் உழைத்துக்கொண்டே இருப்பவர்கள் பயணம் செய்யும் பொழுதுகளில் சற்றே ஓய்வும் எடுத்துக்கொள்ள முடியும் என்பதையும் குறிப்பாகச் சுட்டுகிறார்.

நெரிசல்

தொடர்வண்டிகளில் இருக்கைகளைக் காட்டிலும் பயணிப்போர் எண்ணிக்கை பல மடங்கு அதிகமாக இருப்பதால் எப்போதும் நெரிசல் தவிர்க்க இயலாததாகிறது என்பதனை மு.வ. எடுத்துரைக்கிறார். தொடர்வண்டி புறப்படும் இடத்தில் ஏறுபவர்கள் ஓரளவிற்கு இருக்கைகளைப் பெறுகின்றனர். இதனை,

ரயில் புறப்படும் முனை ஆகையாலும் முன்னமே இடம் ஒதுக்கிக் கொண்டிருந்தபடியாலும் இடம் வசதியாக இருந்தது. (57)

என்று சென்னையில் வண்டி ஏறிய மெய்யப்பன் உரைப்பதாக மு.வ. படைத்துக் காட்டுகிறார். ஆனால் இடையிடையே உள்ள தொடர்வண்டி நிலையங்களில் வண்டி ஏறுபவர்கள் இட நெரிசல் காரணமாக சண்டையிட்டுக் கொள்ளுதல் தொடர்வண்டிப் பயணத்தில் நாம் காணக்கூடிய ஒன்றாகும்.

வண்டி காட்டுப்பாடி நிலையத்தில் நின்றது . . . வண்டியில் நுழையும் இடத்தில் 'இடம் விடு'. 'ஒதுங்கு' என்றும் 'அடுத்த பெட்டிக்குப் போ' என்றும் 'நீ மட்டும்தான் காசுகொடுத்து டிக்கெட் வாங்கினாயா?', 'மனிதனா மிருகமா' என்றும் 'உங்கள் அப்பன் வீட்டு வண்டியா?' என்றும், பல குரல்களும் போராட்டங்களும் ஏற்பட்டன. . . . அதற்குள் வாயிலில் போராட்டம் வலுத்து, வன்புப் பேச்சு மிகுதியாயிற்று. பேச்சு முற்றி, 'உதைக்கிறேன், கொல்கிறேன்' என்ற துணிவுரைகள் கேட்டன. ரயில் அலுவரும் போலீசாருமாகச் சிலர் வந்து தலையிட்டுச் சிலரை அப்புறப்படுத்தி வேறு பெட்டிக்கு அழைத்துச் சென்றனர். (53-54)

என்னும் பகுதியில் இட நெருக்கடியால் தோன்றும் சண்டை சச்சரவுகளைப் படம்பிடித்துக் காட்டுகிறார் மு.வ.

இன்னும் சில பெட்டிகள் இணைக்க வேண்டும் . . . வண்டிகள் இன்னும் ஒன்று, இரண்டு மிகுதியாக விட வேண்டும். (54)

என்று இதற்கான தீர்வையும் எடுத்துரைக்கிறார் மு.வ. போக்குவரத்து வசதிகள் விரிவாக்கப்பட்டுள்ள இன்றைய காலகட்டத்திலும் இத்தகைய

போக்கு மாறாமல் இருப்பதை நாம் காண்கிறோம். மக்களின் தேவை அதிகமாகவும் வசதிகள் குறைவாகவும் இருப்பதாலேயே இத்தகைய சிக்கல்கள் தீர்க்கப்படாதவையாக இருக்கின்றன (54) என்னும் அவரது கருத்தே இதற்குரிய விடையாக அமைகிறது.

தூய்மை

பயணத்தின்போது மக்கள் பரல் தம் இருப்பிடத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்வதில் அக்கறை காட்டுவதில்லை. உணவுப்பொருட்களைச் சிந்துவதுடன் குப்பைக் கூளங்களைக் கண்டபடி கீழேபோடவும் செய்கின்றனர். இத்தகைய செயல்கள் அடுத்தவர்களுக்கு எந்த அளவிற்கு அருவருப்பினை ஏற்படுத்தும் என்பதனையும் அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை.

> *காசிக்குச் செல்லும் ரயிலில் கூட்டம் இல்லை . . . ஆனால் உடன் இருந்த வடநாட்டார் கண்ட இடமெல்லாம் துப்புவதும் பெட்டியிலேயே கைகழுவுவதுமாக இருந்தார்கள். எனக்குப் பிடிக்கவில்லை. சன்னல் ஓரத்தில் உட்கார்ந்த ஒருவர் கையை வெளியே நீட்டிக் கழுவாமல், உட்காரும் இடத்தின் கீழே கழுவினார். அறியாமைதான் காரணம் என்று நானும் நண்பனும் சிரித்துப் பேசிக்கொண்டோம். (109)*

என்று மக்களின் அறியாமையை எடுத்துரைக்கிறார் மு.வ. மேலும் அவர்களுக்கு நாம் எதனையும் எடுத்துச் சொல்லிப் புரியவைக்க இயலாது என்ற நிலையையும் குறிப்பாகப் புலப்படுத்துகிறார்.

உணவு

தொடர்வண்டிப் பயணத்தில் வேறுபட்ட பண்பாடுகளையுடைய மாநிலங்களைக் கடந்துசெல்லவேண்டியுள்ளது. ஒவ்வொரு மாநிலத்திலும் உணவுமுறைகளும் சுவைகளும் மாறுபட்டு அமைகின்றன. எனவே ஒரே வகையான உணவை உண்டு நாவிற்கு அடிமைப்பட்டவர்களி வேறுபட்ட சுவைகளையுடைய உணவைப் புசிக்கும்போது அதனை ஏற்றுக்கொள்ள இயலாமல் தவிக்கின்றனர். அத்துடன், தம் நாட்டு உணவு கிடைக்கவில்லையே என்று ஏங்கவும் ஆரம்பித்துவிடுவார்கள்.

தொடர்வண்டி நிலையங்களில் விற்கப்படும் உணவு தூய்மையாகவும் இருப்பதில்லை என்பதனைப் பயணம் செய்கின்ற அனைவரும் உணர்வர். எவ்வளவு காசு கொடுத்தாலும் தரமான உணவைப் பெறமுடியாத நிலையெ எங்கும் நிலவக் காண்கிறோம்.

> *விளக்கு வைக்கும் நேரத்தில் இட்டார்சி என்னும் பெரிய சந்திப்பு நிலையத்தை அடைந்தோம். அங்குத் தொடங்கி உணவில்*

வேறுபாடு ஏற்பட்டுவிட்டது. தமிழன் நாவிற்கு ஏற்ற உணவு கிடைக்கவில்லை. பூரியும் சப்பாத்தியும் அங்கங்கே கிடைத்தன. ரயில் நிலையத்திலேயே நகரும் வண்டிக்கடைகள் பல இருந்தன. அவற்றுள் சிலவற்றில் அடுப்பும் நெருப்பும் இருந்தன. எண்ணெயில் இட்டுச் சுடச்சுடப் பூரி எடுத்துத் விற்றனர். ஆனால் எண்ணெய் நன்றாக இல்லை பூரிக்குத் துணையாகத் தந்த குழம்பின் சுவை வேறுபட்டிருந்தது. தூய்மையும் குறைவு. அதனால் நண்பனுடைய மனைவிக்குப் பிடிக்கவில்லை. வடநாட்டில் சுற்றுப்பயணம் செய்ய யவேண்டுமானால், இருவகையில் மாறுதல் செய்துகொள்ள வேண்டும் என்றேன். ஒன்று தூய்மை எதிர்பார்க்கக் கூடாது. மற்றொன்று தமிழ்நாட்டு இட்டளி, குழம்பு, மிளகு நீர் முதலியவை எதிர்பார்க்கக் கூடாது(77)

என்னும் பகுதியில் பல இடங்களைச் சுற்றிப்பார்க்க விரும்புவோர் தங்கள் மனப்பாங்கைப் பயணத்திற்கேற்றவாறு மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டியதன் இன்றியமையாமையை எடுத்துரைக்கிறார்.

பொருள் வைப்பறை

தொடர்வண்டிப் பயணம் செய்வோர் இடையிடையே முக்கியமான சந்திப்புகளில் இறங்கி அவ்வூரிலுள்ள சுற்றுலாத் தலங்களைக் காண்பதற்கு விழைவர். அப்போது அவர்கள் கொண்டுவரும் கனமிகுந்த பெட்டிகளைத் தூக்கிச் செல்லுதல் துன்பந் தருவதாகும். தொடர்வண்டி நிலையத்தில் பயணப் பெட்டிகளைப் பூட்டிப் பொருள்வைப்பறையில் வைத்துச் செல்லும் வசதி உள்ளது.

பெரிய சாமான்களை ரயில் நிலையத்திலேயே சாமான் அறையில் வைத்துச் சீட்டுப் பெற்றுக்கொண்டு, சில்லரைச் சாமான்களுடன் கீழ்ப்பாக்கத்துக்குச் சென்றோம். (57)

விடியற்காலம் ஐந்துமணிக்கு ஆக்ரா என்ற பெயரைக் கேட்டு விழித்து எழுந்தோம். உடனே பரபரப்பாகச் சாமான்களை எடுத்துக் கீழே இறக்கினோம். எல்லோரும் வண்டியைவிட்டு இறங்கினோம். பெட்டிகளைச் சாமான் அறையில் வைத்துவிட்டுக் கைப்பைகளுடன் நிலையத்தை விட்டுப் புறப்பட்டோம். (78)

என்னும் பகுதிகள், பொருட்களைப் பாதுகாப்பாக வைத்துச் செல்லும் வசதியை வாசகர்களுக்குத் தெரிவிக்கவேண்டும் என்னும் நோக்கத்தில் மு.வ.வால் குறிப்பிடப்பெற்றுள்ளன.

சமூகப் புரிதல்

தொடர்வண்டிப் பயணம் பலவகையான மக்களைக் காணவும் பழகவுமான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருகிறது.

> *எதிரே இருந்த ஒருவர் எங்கள் முகங்களையே உற்றுப் பார்த்தார். எங்கள் முகங்களின் சிரிப்பு அவர் முகத்திலும் ஒட்டிக்கொண்டது. ஆனால் அவர்க்கு எங்கள் மொழிதெரியாத காரணத்தால் திகைப்பாக இருந்திருக்கும். நான் அவரைப் பார்த்தவுடன், அவர் முகத்தை வேறுபக்கம் திரும்பிக்கொண்டார். (101)*

என்னும் பகுதி பயணங்களின்போது பல்வேறு மொழிபேசும் மக்களைச் சந்திக்கும் வாய்ப்பினை ஏற்படுத்துவதைச் சுட்டிக்காட்டுகிறது. மொழி புரியாவிட்டாலும் முகபாவங்களிலிருந்து மகிழ்ச்சியையும் பிற உணர்வுகளையும் புரிந்துகொள்கின்ற சூழலையும் மு.வ.. எடுத்துக்காட்டுகிறார்.

> *மறுநாள் பகல் பதினொரு மணிக்கு ரயில் நாகபுரியை அடைந்தது. இந்தியாவின் பலவகையான மக்களையும் அந்த ரயில் நிலையத்தில் கண்டேன். வண்டியிலிருந்து இறங்கிச் சொல்வோரைப் பார்ப்பது எனக்கு பொழுதுபோக்காக இருந்தது. பலநிறம், பலவகை நடையுடை, வயது வேறுபாடு முதலியவைகளைப் பற்றில்லாமல் பார்ப்பதும் ஒருவகைக் கல்வியாக இருந்தது. (74)*

என்று பயண அனுபவத்தை எடுத்துரைக்கிறார் மு.வ. . இதன்மூலம் வாழ்க்கையை நன்கு புரிந்துகொள்ள வழி ஏற்படுகிறது. எனவே இதனை வாழ்க்கைக் கலவியாகவே எடுத்துக்கொள்ளலாம் என உரைக்கிறார் மு.வ.

மு.வ. தம் மண்குடிசையில் தொடர்வண்டிப் பயண அனுபவங்களை மிக விரிவாகவே படைத்துக் காட்டுகிறார். அப் பயணத்தின் வசதிகள், வண்டியில் இடம்பிடிக்கப் போராடும் மக்களின் மனநிலை, உணவு முறை, பயணக்காட்சிகள் போன்றவற்றை விரிவாக விளக்கும்போது மக்கள் ம் பயணத்தை எவ்வாறு சிறப்பாக அமைத்துக்கொள்ளலாம் என்பதற்கு வழிகாட்டி அதன்மூலம் சமுதாயத்திற்குப் பயன்விளைக்கும் செயல்களையும் செய்துவிடுகிறார்.

88. மாணவருக்கு எழுதிய கடிதங்கள் வழி மு. வ. வின் சிந்தனைகள்

முனைவர் கி. பாரத்திபராஜா
துணைப்பேராசிரியர்
தூய நெஞ்சக் கல்லூரி
திருப்பத்தூர் - வே.மா.

மு.வரதராசனார் இந்த நூற்றாண்டின் இலட்சிய பேராசிரியர், எழுத்தாளர், விமர்சகர். அவர் பல கற்பனைக் கடிதங்கள் எழுதிப் புகழ் பெற்றார். அந்தக் கடிதங்களின் தொகுப்புகள், 'அன்னைக்கு' (மே *1948*), 'நண்பர்க்கு' (பிப்ரவரி *1949*), 'தம்பிக்கு' (மார்ச், *1949*) தங்கைக்கு (மார்ச் *1950*) என நான்கு சிறு நூல்களாக வெளிவந்துள்ளன. அக்கடிதங்களில், 'தனி ஒருவர் நல்வாழ்வு வாழ்வதற்குத் துணை புரியும் கருத்துக்களும், சமுதாய, அரசியல் வாழ்வு செம்மையாக அமைவதற்கு அடிகோலும் கருத்துக்களும் செறிந்துள்ளதாகக் கூறுவர் (விசுவநாதன். ஈ.ச: *1978:1*).

மு.வ. கடிதங்கள்

பச்சையப்பன் கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகம், மதுரைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் ஆசிரியப்பணியும் நிர்வாகப் பணியுமாற்றியவர் மு.வரதராசனார். அவ்விடங்களில் மாணவர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்றவர். வகுப்பறைகளையும் தாண்டிய நல்லுறவை மேன்மையுடன் பேணியவர். அவர்களின் படிப்பிற்குச் சிந்தனை அளவில் மட்டுமல்லாது, பொருள் உதவியும் செய்தவர். அவரை ஞானகுருவாகக் கொண்ட அவருடைய மாணவர்களும் உள்ளனர். எழுத்து, ஆசிரியப்பணி, நிர்வாகப்பணி என்று ஓயாது உழைத்த மு.வ. படைப்புகளைத் தவிர, சிலருக்குக் கடிதங்க்ளும் எழுதியுள்ளார். 'தம்முடன் நெருங்கிப் பழகிய நண்பர்களுக்கும், அவரிடம் படித்த நெருங்கிய மாணாக்கர் சிலருக்கும், அவர்கள் வாழ்க்கையில் நெருக்கடி ஏற்பட்டுத் தவித்தபோதெல்லாம் ஆறுதல் கூறிக் கடிதங்கள் சில எழுதியிருக்கிறார்' என்பார் ஈ.ச. விசுவநாதன் (*1978:1*). மு.வ.வின் மறைவுக்குப் பிறகு, அவர் தனக்கு எழுதிய கடிதங்களைத் தொகுத்து நூலாக்கியிருக்கிறார் அவர்.

மாணவருக்குக் கடிதங்கள்

மு.வ. தனது மாணவரான ஈ.ச. விசுவநாதனுக்கு எழுதிய கடிதங்கள் ஏப்ரல் *1978* இல் நூலுருவம் பெற்றிருக்கின்றன. (மு.வ.வின் கடிதங்கள், ஈ.ச. விசுவநாதன் பாரிநிலையம், சென்னை *1976*) மலேயாப் பல்கலைக் கழகத்தின் இந்திய மொழித்துறையில் பணியாற்றி வந்த தனது மாணவரின்

வளர்ச்சியில் மு.வ. அக்கறை காட்டியமை அவரது கடிதங்களில் வெளிப்படுகிறது. தனது மாணவரின் தனிப்பட்ட குடும்ப, சமூக பணி வளர்ச்சியில் உணர்வுப்பூர்வமான பங்கெடுக்க விரும்பிய மாமனிதனை இக்கடிதங்கள் அடையாளங்காட்டுகின்றன.

குடும்பத்துடனான உறவு

மு.வ. தனது மாணவருடன் குடும்பத்துடனான உறவைப் பேணி வந்துள்ளார் என்பதைக் கடிதங்கள் வழி அறிய முடிகிறது. மாணவரின் குடும்பம், துணைவியார், குழந்தைகள் ஆகியோரைப் பற்றிய அன்பு விசாரிப்புகளையும் ஆலோசனைகளையும் கடிதமெங்கணும் காண முடிகிறது. அதேபோலத் தனது குடும்பத்தினர், துணைவியார், குழந்தைகள் குறித்தும் கடிதங்களில் தெரிவித்துள்ளனர். அவர்களுடனும் தனது மாணவர் உறவினைப் பேணி வருவது குறித்த தனது மகிழ்ச்சியைக் கடிதங்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

தொடர்ந்து கல்விப்பணி

தன்னிடம் படித்துப் பட்டம் பெற்றுச் சென் மாணவர் மீண்டும் தொடர்பு கொள்ளும்போது அவர்களைத் தொடர்ந்து கற்கச் சொல்லி வற்புறுத்தும் ஆசிரியப்பணியை மு.வ. தொடர்ந்துள்ளார். நூல் பல கற்று வருக. குறிப்புகள் எடுத்து வருக. புலமை வளம் பெறுக. பண்பாடு பெறுகுக (ப.31) என்றெழுதுகிறார். 'ஓய்வுள்ள போதெல்லாம் கற்று வருக. எழுத்துப் பயிற்சி மேற்கொள்க' (ப.34) என்று வற்புறுத்துகிறார். தனது மாணவரைத் தொடர்ந்து கற்கச் செய்ய வற்புறுத்தும் அவரது பணி குறிப்பிடத்தக்கது. தனது மாணவர் எழுதிய ஆராயச்சிக் கட்டுரையைப் படித்துக் கருத்துக் கூறுதலும் அக்கட்டுரையை ஆராய்ச்சி இதழொன்றில் வெளியிட முயற்சிப்பதுமான அக்கறை கொண்டவராக வெளிப்படுத்துகிறார் மு.வ. 'கட்டுரை நன்றாக உள்ளது. Tamil Culture தவிர எனக்குத் தொடர்புடைய ஆங்கில இதழ் இல்லை. எதற்கு அனுப்புவது என்ன்று எண்ணி வருகிறேன். கட்டுரையின் இறுதியில் தருதலால் footnotes எனக் குறிப்பிட வேண்டுவதில்லை. notes எனில் அமையும்' (ப.44). 'Travilian Desabakian ஓரிடத்தில் மற்றோரிடத்தில் ஏன்?(ப-44) என்று மாணவரின் கட்டுரையை ஆழ்ந்து நோக்கிக் கருத்துரைத்தல் காணலாம். இவ்வாறு மாணவரின் தொடர்ந்த கல்வியில் எழுத்துப்பணியில் வழிக்காட்டுபவராக மு.வ. விளங்கியமையை அவரது கடிதங்கள் வெளிப்படுத்துகின்றன.

கருத்துக்கூறல்

மாணவரின் ஆய்வுக்கட்டுரைகளில் சில பிரச்சினைக்குரிய பகுதிகளைச் சுட்டிக்காட்டி அவற்றைத் திருத்த வேண்டும் என்ற

விருப்பத்தையும் மு.வ. வெளிப்படத்தியிருக்கிறார். ஆய்வுக் கருத்துக்களைத் துஓணிச்சலுடன் வெளிப்படுத்தும் அதேவேளை, அக்கருத்து யாருடைய மனத்தையும் புண்படுத்துவதாக இருக்கக்கூடாது என்பது மு.வ.வின் கொள்கை. எனவே விசுவநாதனின் ஆய்வுக்கட்டுரையைப் பற்றிக் கருத்துக்கூறும்போது 'Justice Party ஐ-த் திரு.வி.க. எதிர்த்தது முதலியன பற்றி இவ்வளவு விரிவு வேண்டா. அந்தக் கட்சியின் அழிவுக்கு அவரே பெருங்காரணம் என்பது தேவையற்றது. இங்கு எடுத்துக்கொண்ட பொருகளோடு அவ்வளவு பெரிய தொடர்பு இல்லாதது. இந்தச் சிறு குறைகள் பிறர் கண்ணுக்குத் தோன்றா. எனினும் நாம் விழிப்பாக இருத்தல் நல்லர்து (ப-45) என்கிறார். எனவே ஆய்வுக் கருத்துக்களில் சிறுபிழை நேரிடினும் கவனத்துடன் இருக்க வேண்டும் என்ற மு.வ.வின் கருத்து இக்கடிதங்களின் வழி வெளிப்படுகிறது.

மாணவருக்குத் தவறைச் சுட்டிக்காட்டுவது மட்டுமல்ல. மாணவர் சுட்டிக்காட்டிய தன் தவறையும் ஒப்புக்கொண்டு ஏற்றுக் கொள்ளும் பெருந்தன்மை மு.வ.வுக்கு இருந்தமை வெளிப்படுகிறது. கலீல் கிப்ரானின் நூல்களைத் தொடர்ந்து படிக்கும் விசுவநாதன் முஇ.வ.வின் இலக்கிய மரபில் கலீல் கிப்ரானின் கவிதை பற்றிய மு.வ.வின் தவறான பதப்பிரயோகத்தைச் சுட்டிக்காட்டுகிறார். அதற்கு மறுமொழி எழுதும் மு.வ. தனத கடிதத்தில் 'இலக்கிய மரபில் என்ன குறித்திருந்தேனோ எப்படியோ தவறியது நினைவில்லை. அடுத்த பதிப்பில் 'காதலி' என்று திருத்திடுவேன். எடுத்துக்காட்டியதற்கு நன்றி ஞ(ப.35) என்கிறார். தனது நூலில் முன்னாள் மாணவர் பொருத்தமான பதப்பிரயோகத்தைச் சுட்டிக்காட்டுகிறபோது அவற்றை ஏற்றுக்கொண்டு அதற்கு நன்றியும் பாராட்டும் மு.வ.வின் உள்ளம் கருத்தைக் கவருவதாகும்.

தமிழ்த்துறை நிலைமை

தமிழ்நாட்டில் தமிழ்க்கல்வி படித்தோர் வேலைவாய்ப்புக்கு அவதிப்படும் நிலைமை தோன்றியது. அதனை, 'தமிழ்நாட்டில் தமிழாசிரியர் தொழில் எதிர்பார்த்தல் வரவர அரிதாகி வதுருகிறது. ஆராய்ச்சிப் பட்டம் பெற்றோர் தொகை மிகுந்து வருகிறது. எதற்கும் கமிட்டி உண்டு. துவைேந்தர் விரும்பியவரையும் நியமிக்கமுடியாத நெருக்கடிகள் ஏற்படுகின்றன - ஓர் இடம் காலி எனின், நூறு விண்ணப்பம் வரும் நிலை தமிழ்த்துறையில் வந்துவிட்டது' (ப:46) என்கிறார் அவர். எனவே படித்த பட்டத்திற்குப் பணி கிடைத்தற்காகக் காத்திருத்தலையும் விட, வேறு வகையிலேனும் பொருளீட்டித் தொழில் தொடங்குதல் நன்று என அறிவுறுத்துகிறார்.

சமூக நிலைமை

விசுவநாதனின் ஆங்கிலக்கட்டுரையை வெளியிடமுயன்று இயலாது போன சூழலில்ஈ, பார்ப்பனர் அல்லாதாரின் முயற்சிகள் தடைபடுவதற்கான

காரணிகளை எடுத்துக்காட்டுகிறார். 'நூற்றைம்பது அண்டுகளாக ஆங்கிலம் கற்று முன்னணியில் நின்றவர்கள் செல்வாக்குப் பெற்றிருத்தல் இயல்பு. இங்கு ஒற்றுமை குறைவு? செல்வாக்கு இல்லை. இனகியும் இப்படித்தான் இருக்கும்' (ப.48) என்கிறார். பார்ப்பனர்கள் ஆதிக்கம் செலுத்துவதும் அதற்கு சக்தியாக எழுந்த பார்ப்பனரல்லாதாரிடம் ஒற்றுமை குறைவுபட்டிருத்தலையும் சுட்டிக்காட்டும் மு.வ. இந்நிலை தொடரப்போகிறது என்று கருத்துத் தெரிவிக்கிறார்.

மற்றொரு கடிதத்தில் தமிழகத்தின் நிலைமை பற்றிக் கவலை தெரிவிகிகிறார். 'தமிழகத்தில் வறுமை ஒழிந்தபாடில்லை. பிற பற்றாக்குறைத் தொல்லைகளும் பெருகி வருகின்றன. மக்களாட்சி வலிவற்றதாக ஆகிவருகிறது' (ப.48) என்கிறார். மேடைகளிலோ, அல்லது கட்டுரைகளிலோ மு.வ. தெரிவிக்கத் தயங்கும் கருத்தினைத் தனது மாணவருக்கு எழுதிய கடிதத்தில் வெளிப்படையாகத் தெரிவித்திருப்பது நோக்கத்தக்கது.

முடிவாக

மாணவருடன் குடும்ப அடிப்படையிலான உறவை வளர்த்துக் கொண்டவராக மு.வ.வை அவரது கடிதங்கள் அறிமுகப் படுத்துகின்றன.

மாணவர்களுக்குத் தொடர்ந்து கல்வியளிக்கும் பேராசிரியராக மு.வ. திகழ்ந்தமை அவருடைய கடிதங்களில் வெளிப்படுகிறது. மாணவர்களின் கட்டுரையை படித்துக் கருத்துக்கூறும் பணியினை விருப்புடன் மு.வ. செய்தார் என்பதை அறியமுடிகிறது. குறைகளை நயத்தக்க நாகரிகத்துடன் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

தமிழ்த்துறையின் நிலை, தமிழ்ப்படித்தோரின் அவலம் ஆகியவற்றையும் ஆவணப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே அவருடைய கடிதங்கள் நடைமுறை வாழ்க்கைக்கு மிகுதியும் உதவுவனவாக அமைகின்றன. மு.வ.வின் கடிதங்களைத் தொகுத்துப் பார்க்கிறபோது மாணவர்களை முழுவதுமாக நேசித்த ஒரு மனிதாயப் பண்புமிக்க பேராசிரியரை கண்டு வியக்கவே வேண்டியுள்ளது.

89. வாடாமலர் நாவலின் அறக்கருத்துக்கள்

முனைவர். தீ. ஷீலா
விரிவுரையாளர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை - 30.

முதற்கண் அறம் செய்வதற்கு நல்லெண்ணம் வேண்டும். இரண்டாவதாக அறம் செய்வதற்கு உரிய பொருள் வேண்டும். அறம் செய்வதற்குரிய வழி வகைகளை நாம் தெரிந்திருக்க வேண்டும். பொருள் இருந்தால் மட்டு மே அறம் செய்ய முடியும் என்று பலரும் எண்ணிக் கொள்கிறார்கள். இது தவறான கருத்தாகும்.

*"ஒல்லும் வகையான் அறிவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்"*

என்று அறிந்ததை ஆற்ற வேண்டிய முறை பற்றித் தெரிவிக்கின்றார் வள்ளுவர். முடிந்த அளவு அறம் ஆற்ற வேண்டும் என்று வற்புறுத்துகிறார். அறம் செய்வதற்கு நல்ல மனம் வேண்டும். அதை அடுத்து அறத்தைச் செய்யுமிடம் சூழ்நிலை இவைகளை ஆராய்ந்து செய்யவேண்டும். மாந்தர் அனைவருக்கும் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நியதி கட்டாயம் எல்லைக்கோடு வரையறுக்கப்பட்டுள்ளது. அந்த நேர்கோட்டிலிருந்து பிறழாமல் வாழ்வது தான் சிறப்பு. அதுவே எல்லா வகை அறங்களுக்கும் பெட்டகமாக திகழும்.

டாக்டர் மு.வ. அவர்கள் சூழ்நிலை புயலில் சிக்கி தடுமாறினவர் களையும், கெட்டு திருந்தியவர்களையும், இயல்பிலே நல்ல மனம். படைத்த மனிதர்களையும் நம் கண்முன் உலவ விடுகின்றார். மனிதன் வையத்தில் வாழ்வாங்கு வாழ வழி வகைகளை உணர்த்த எண்ணிய டாக்டர். மு.வ. அவர்கள் தான் படைத்த பாத்திரங்களின் எண்ணத்தாலும், நடத்தையாலும் சொல்லாலும், செயலாலும் அவற்றை உலகிற்கு உணர்த்துகின்றார்.

உண்கின்ற உணவு, உடுக்கின்ற ஆடை, பேணுகின்ற நடத்தை எல்லாவற்றிலும் அறம் நிரம்பிய தன்மைதான் சிறந்த அறமாகப் போற்றப்படுகிறது.

உணவில் அறம்

எதனையும் உண்ணலாம், எப்படியும் உண்ணலாம் என்ற கேள்வி முறையில்லாமல் உண்போர்க்கு டாக்டர் மு.வ. அவர்கள் சொல்லும் கருத்துக்கள் சிறக்காது. சாதாரண 'தேனீர்' 'காப்பி' போன்ற பான வகைகள் கூட உடலுக்கு ஊறு விளைவிக்கும் தன்மை வாய்ந்தவை. எனவே அதனை உண்பது நல்லதன்று என்று தன் எண்ணத்தை முருகையா

என்ற கதை மாந்தரின் மூலம் வெளிக்கொணர்கின்றார் டாக்டர் மு.வ.

சில வகைப் பழக்கங்களை மேற்கொண்டோர்க்கு அப்பழக்கங்களை எளிதில் விட முடியாது. அப்பழக்கங்கள் மனிதனை அடிமைப்படுத்தி விடுகின்றன. உடம்பை நல்ல வகையில் காப்பாற்ற வேண்டும். அதற்கு வேண்டிய உணவு கிடைத்தால் போதும் மற்றவை தேவை இல்லை. தேவைகளை எவ்வளவு குறைத்துக் கொள்கின்றோமோ அவ்வளவுக்கு வாழ்க்கையில் சிக்கல் குறையும் என்று முருகையா என்ற பாத்திரத்தின் மூலம் மு.வ. அறிவுறுத்துகிறார்.

டாக்டர் மு.வ. அவர்களின் நெஞ்சத்தில் உருவான முருகய்யாவும், அவருடைய மனைவி சுடர்விழியும் நாட்டில் தவ வாழ்க்கை வாழ்கின்றார்கள். சுடர் விழி கணவர் வழியைப் பின்பற்றுவது. பூங்கொடிக்கு வினோதமாகத் தென்படுகிறது. காப்பி குடிக்கமாட்டேன் என்கிறாள் வெற்றிலை போட மாட்டேன் என்கின்றாள் என்று சுடர்விழியைப் பற்றித் தன் கணவனிடம் குறை கூறுகின்றாள்.

உடையில் அறம்

தோற்றத்தில் எளிமையாக எண்ணத்தில் இமயமாகச் சிறக்க வேண்டும். காந்தியடிகள் எளிய கைத்தறி ஆடைதான் அணிந்தார். அவர் வழியில் நின்று வாழ விரும்பிய மு.வ. தம் விருப்பத்தை தாம் படைக்கும் பாத்திரங்களில் வெளிப்படுத்துகிறார். எளிய கைத்தறி வகை ஆடைகள் அணிவது தான் சுடர் விழியின் விருப்பம். பிறர் அவளைப் பார்த்து எவ்வளவு இகழ்ந்தாலும் வருந்துவதில்லை.

ஆடம்பரம் கவலை தரும். சமுதாயத்தில். மதிப்பு வேண்டும் என்றால் மற்றவர்களைக் கீழே தாழ்த்தி அதனால் வரும் மதிப்பு வேண்டாம் என்கிறார் என்று சுடர் விழியைப் பற்றிப் பூங்கொடி தன் கணவனிடம் கூறுகின்றார்.

ஆடம்பரமாக வாழவும் உடையணியவும் விரும்பி உள்ளதைச் சிதற விட்டால் மனதில் உள்ள நிம்மதி பறிபோய் விடும். இதற்கு மாறாக எளிமையிலே மனம் நிறைவடைந்தால் வாழ்க்கையில் துன்பம் இல்லை. இயற்கை அழகைக் காப்பாற்றினால் போதும். செயற்கை அழகு வேண்டாம். பிறர் வற்புறுத்திக் கொடுக்கும் பட்டாடையை மறுக்கின்றார். தலையில் பூ முடிக்கவேண்டும் என்று விரும்பிய பூங்கொடியின் ஆசையை நிராசை யாக்குகின்றாள்.

தன்னுடைய கணவனுக்கு ஆடம்பரத்தைப் பிடிக்காது என்பதால் தானும் ஆடம்பரத்தை வெறுக்கின்றாள். அறம் என்பது சொல்லாமல் மட்டும் அமைவதல்ல செயலாலும் காட்டவேண்டும் என்று அறத்தினைத் தன்

வாழ்வியல் முறைகளிலும் கடைப்பிடிக்கின்றாள். தன் கணவன் அருகில் இருக்கும் போதே தவறு செய்தாலும் தவறில்லை ஆனால் அவர் இல்லாதபோது கணவனுக்கு பிடிக்காத செயல்களைச் செய்வது குற்றம் என்று கருதுகின்றாள்.

இவளுடைய கணவர் முருகய்யாவும் ஆடை அணிமணிகள், வகையில் அவ்வாறே கருத்துக் கொண்டவர். தகப்பனின் திருமண நாளன்று சுடர்விழியும், அவள் பெற்ற செல்வமும் எளிய கைத்தறி ஆடை அணிந்திருந்தார்கள். இவர்களின் எளிய கோலத்தைக் கண்ட குழந்தை வேலு "இந்த திருமணத்திலும் இவ்வளவு எளிய ஆடையை உடுத்தி வந்திருக்கிறாளே சுடர்விழி, பையனுக்கு ஒரு பட்டுச் சொக்காய் இல்லையே! எல்லாம் கைத்தறி போல இருக்கிறதே" என்கிறார். ஆடை வகைகள் குழந்தைவேலுவின் மனதில் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தி விட்டதை உணர்ந்த முருகய்யா எளிய கைத்தறி ஆடை வகைளைப் பார்க்கும் போது புத்தர் படத்தையும் காந்தி படத்தையும் பார்த்து மதிப்பது போன்ற மனநிலை வளரவேண்டும் அதுதான் நல்ல ஆதிக்கம் என்கிறார்.

பட்டு நூல் தயாரிக்கும் இடத்திற்கு தன் மனைவியை அழைத்துச் செல்கின்றார். ஆயிரக் கணக்கான பூச்சிகளை வளர்த்து அவை நூல் சுற்றி சுருட்டியிருக்கும் நிலையில் கொதிக்கும் நீரில் கொட்டி வதைத்துக் கொல்லும் காட்சியைக் கண்டு மனம் வருந்துகின்றார். "தனி மனிதனுக்கோ சமுதாயத்திற்கோ இடையூறு செய்யும் வெட்டுக் கிளிகளையும், காட்டுப் பன்றிகளையும், புலி பாம்பு, தேள் முதலியவைகளையும் கொல்லலாம். ஆனால் ஆடம்பரவாழ்வுக்காக நாமே சில உயிர்களை வளர்த்துக் கொலை செய்யலாமா என்று உருகுகிறார்.

இதைப் போன்றே புலால் உண்.ணுவதற்கு இவர்கள் இருவரும் பல காரணங்கள் கூறுகின்றனர். குழந்தைவேலும் புலால் உண்ணுவதில்லை. சிறு வயதில் அவள் வளர்த்த சேவலைக் கொன்றதால் மனம் வருந்துகின்றான். அன்றிலிருந்து புலால் உண்பதில்லை.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி
எல்லா உயிரும் தொழும்"

என்ற வள்ளுவர் கருத்தை இவர்கள் வாழ்க்கையில் கடைபிடித்து ஒழுகு கின்றார்கள். இவர்கள் உண்ணும் உணவில் அறநெறியைக் கடைபிடித்து ஒழுகுவதைக் காட்டி நம்மையும் அவ்வழியைப் பின்பற்ற தூண்டுகிறார்கள்.

இல்வாழ்வில் அறம்

மனைவி என்பவள் தன்னைச் சார்ந்த குடும்பத்தின் வளமைக்கும், வறுமைக்கும் காரணமாகின்றாள். எவ்வளவு தான் பொருள் காரணமாக வறுமையுற்றாலும் அந்த வறுமை ஒரு குடும்பத்தின் எதிர்காலத்தைப்

பாதிக்காது. ஆனால் மனவலிமை இல்லையென்றால் செல்வம் இருந்தாலும் அந்த செல்வத்தினால் பயன் இல்லை.

மனைவி என்பவள் கணவனது அன்புக்குக் கட்டுப்பட்டவள். அவனுக்கு பணி செய்வதில் பணியாளராக, அன்பு காட்டுவதில் தாயாக, வழி காட்டுவதில் குருவாக இருந்து ஒழுக வேண்டும். சுடர்விழி தன் கணவனது வழியிலின்றும் மாறாத வாழ்க்கை வாழ்வதால் அவள் நல்ல மனைவியாக விளங்குகின்றாள்.

தன் கணவர் படித்தவர், பண்பாடு தெரிந்தவர், உலகத்தை அறிந்தவர், உண்மை வழியில் நடப்பவர். அவர் சொல்வதெல்லாம் நன்மைக்காகத் தான் சொல்வார் என்று உறுதியாக நம்பி அவளது கணவர் வழியைப் பின்பற்றி நடக்கின்றாள்.

சமுதாய அறம்

சமுதாயத்தில் கணவன் மனைவி உறவு என்பது மிக சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். மு.வ. அவர்கள் "கனகு" என்ற பாத்திரத்தின் மூலம் சமுதாய அறத்தினை வலியுறுத்துகிறார். கணவன் ஒழுங்காக இல்லையானால் மனைவி அவனை விட்டு விலகவேண்டும் என்றும் ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி என்று நீங்கள் கருதவில்லை. ஆனால் இன்றைய பொருளாதார நிலையில் எத்தனை மனைவியர் இப்படி இருக்கமுடியும். பிறந்த மக்களைக் காப்பதற்காக எத்தனை பெண்கள் தங்கள் கணவன்மாரின் கொடுமைகளைப் பொறுத்துக் கொண்டு வாழ்கிறார்கள் அது சமுதாயத்தின் நீதியாகவும் இருக்கிறது.

ஆண்கள் இளமையில் தவறு செய்யலாம். ஆனால் மனைவி வந்தவுடன் ஒரு ஆண் மகன் தவறு செய்தல் கூடாது என்றும் அதே மாதிரி பெண்கள் கணவன் இருக்கும் பொழுது மற்றொரு ஆண்மகனை நாடுவது என்பது குற்றம் என்று டாக்டர். மு.வ. அவர்கள் 'கனகு' என்ற கதாப்பாத்திரத்தின் மூலம் சமுதாய அறத்தினை வலியுறுத்துகிறார்.

எதிலும் கருத்தொத்து கடமையாற்றுவதில் தான் சிறப்பு இருக்கின்றது. அப்படியில்லாமல் இருந்தால் அது 'கானல்நீர்' போன்றது. குடும்ப வாழ்வில் அமைதி இராது. கணவன் செல்லுகின்ற வழியைப் பின்பற்றி நடந்தால் 'இல்வாழ்க்கை' சிறப்பாக அமையும். இப்படிப் பெண்களின் பெருமைகளுக்கெல்லாம் காரணமான பெண்மணியாக, திகழ்கின்றாள் சுடர்விழியோ வண்ணமலராக அல்லாமல் வானத்துசூரியனாக நின்று எல்லையில்லாத அறக்கருத்துக்களை வாரி வழங்குகின்றாள்.

90. மு. வ. வின் படைப்புகளில் பெண்கள்

மா. தயாநிதி
முனைவர். பட்ட ஆய்வாளர்
சுப்ரமணிய பாரதியார் தமிழியற்புலம்
புதுவை பல்கலைக் கழகம்
புதுவை 605 014.

தொடக்கம்

இலக்கியம் சமுதாயத்தின் பிரதிபலிப்பாக இருக்கின்றதென்றால் இலக்கியப் படைப்பாளன் சமுதாய - பாதிப்புக்குள்ளனவனாக இருப்பான் என்பதும் உண்மையே. இந்த அடிப்படையில் மு.வ.ட அவர்களின் எழுத்து வாழ்க்கையில் ஏற்பட்ட சமுதாய பாதிப்புகளை அக்கால சூழலோடு அணுகுவது பொருத்தமானதாகவும், பொருளாழம் ிிக்கதாகவும் விளங்கும்.

சமயச் சீர்திருத்தமே இந்திய மறுமலர்ச்சி இயக்கத்தின் தோற்றத்திற்கு காரணமானபோதும் அதன் நமடவடிக்கைகளில் முன்னுரிமை வகிப்பது பெண்ணுரிமை அந்த அடிப்படையில் ·

"எதுவும் தன் இஷ்டப்படி செய்து அதனால் ஏற்படக்கூடிய இன்ப நஷ்டங்களுக்கு தான் பொறுப்பாளியாக இருப்பது ஒரு நிலைமை அதுதான் சுதந்திரம். அப்படி இல்லாமல் பிறர் இஷ்டப்படி தன்னிஷ்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மீறி நடக்கக்கூடாதபடி கட்டுப்பட்டு இருத்தல் அடிமை நிலை அந்த ஸ்திதியில் நம்முடைய ஸ்திரீகளை மவைத்திருக்கிறோம்" என்று எழுதிய பாரதி முதல், பெரியார், அண்ணா என பலரும் பெண் விடுதலைக் கோணத்தில் இயங்கியபோதும் பெண்களின் நிலை ஆண்களுக்கு இணையாக வந்துவிட்டதாக தெரியவில்லை.

பல பெண்கள் இன்றும் ஆண்களின் இன்பத்துய்புகளாகவும் குழந்தைப் பெறும் இயந்திரங்களாகவும் மட்டுமே கருதப்படுகின்றனர். கற்புடைமை பெண்ணுக்கு மட்டுமே வலியுறுத்தப்பட்டு-கணவனை தேர்ந்தெடுக்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. பெண்தன்வாழ்நாள் முழுவதும் ஏதாவதொரு ஆணின் அதிகாரத்தின்கீழ் நிறுத்தப்பட்டு வருகிறாள். மனித உரிமையின் சரிபாதியான பெண்ணுலகம் இப்படி அறியாமையில் மூழ்கிக்கிடப்பதை உணர்ந்த பல சீர்திருத்தவாதிகள் பெண்ணுரிமைக்காவும் பெண்ணிய விடுதலைக்காவும் போராடத் தொடங்கினார்.

பெண் எனும் தொடக்கம்

பெண்களின் வரலாறு இப்பொழுதுதான் (இருபதாம் நூற்றாண்டு) தன்னைத்தானே புதிதாகக் கண்டுபிடித்துக்கொள்ள தக்கதாக

தொடங்கியுள்ளது. அதன்கீழ் இன்றளவில் மிகப்பெரிய இனத்தின் வரலாறாக முன்வைக்க இரண்டு நிலை கேத்திரங்களை நாம் ஆராயவேண்டும் என்கிறார் ரோஸலிண்ட் மைல்ஸ். அவை பெண்களை தங்களுக்குக் கீழ்படிந்து போகும்படியாக செய்வதில் ஆண்கள் எப்படி வெற்றி கண்டார்கள்? என்பது ஒன்று பெண்கள் ஏன் அவ்வாறு செய்வதற்கு விட்டுக்கொடுத்தார்கள்? என்பது மற்றொன்று

தொடக்கக்கால பெண் வலிமையின் உச்சமாக இருந்து வேட்டையாடுதலை - தன் வாழ்வில் முக்கியப் பணியாக கருதியிருக்கிறாள். இந்த தொடக்கால பெண்ணின் உணவு சேகரிப்பு குலம் உயிர் வாழ்வதற்கு உதவியதோடு மட்டுமல்லாமல் - நாகரீகத்தை நோக்கி அது தள்ளாடிச் சென்ற பாதையில் மனித இனத்தை முன்னுக்குச் செல்லுவதற்கும் உதவியது என்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் ஆதிகால மனிதன் தன்னைப் பிற்காலத்தில் மனிதனாக நினைப்பதற்கு உதவிய அநேகமான யாவற்றையும் சாதித்திருக்கிறாள் பெண். எனவேதான், மாபெரும் முதல் கடவுளாக பெண்ணை உலக அளவில் நிறுத்தி இருக்கிறார்கள்.. இது ஒரு தனிப்பட்ட அல்லது தற்காலிக காட்சி உண்மையல்ல. மானிட வாழ்க்கையின் உதயகாலத்திலிருந்தே ஆற்றல்மிக்க இன்னை - பெண் தெய்வம் ஓர் அத்தியாவசியமான கூறு என்ற அளவில் முக்கியத்துவம் பெற்று இருந்து வந்துள்ளமைக்கான வரலாற்று சான்றுகள் நிரம்ப இதற்கு துணைநிற்கின்றன.

மேற்படி இருந்த எல்லாநிலைகளினூடான பெண் இருப்பு உண்மையானதாக இருக்க ஆண் ஏதுமற்றவனாகிப் போனதை உணர்ந்த எதிர்நிலை சமூகம் (ஆண் சமூகம்) பெண்ணின் உடல் கூறுகளைக் கண்டு மிரட்சி கொண்டதோடு அதை முன்னிறுத்தியே தன் கட்டுப்பாடுகளை விதிக்கத் தொடங்கின. அதற்கு ஆண் சமூகம் மதம், ஒழுக்கம், கற்பு, கலாச்சாரம் போன்ற கருத்தியல்களை துணை சேர்த்துக்கொண்டது. பெண்ணின் அறிவீனம் இதற்கெதிரான போராட்டத்தை தொடர்ந்து எடுத்துச்செல்ல இயலாமல், தன் உடல் சார்ந்த ஒழுங்கமைவுகளுக்கு ஒப்பு ஏற்கத்தொடங்கி, இன்று நிகழும் ஆணாதிக்க சமூக அரசியலை முன்னிறுத்தியுள்ளது. இந்நிலை மீண்டும் புறட்டிவிக்கப்பட்டு பழைய தாய்வழி சமூக உருவாக்கத்தைப் பெறுவதே இன்றைய பெண்ணியப் போராட்டத்தின் எல்லை எனலாம். இதற்கான மிகமுக்கிய தேவையாக இருப்பது பெண்களுக்கான சுயம் அறியும் அறிவும், சுயம் தேடிய போராட்டமும் தான் அதற்கான தொடக்கமாகத்தான் பெரியார்.

"தன் உரிமை உலகில் பெண்கள் சுதந்திரமாக வேண்டுமானால், பெண்கள் படிக்க வேண்டும். படிக்கவைக்கப்பட வேண்டும். அதற்கான அல்லது அவர்களுக்கான தொழிற்கூறுகளை உருவாக்க வேண்டும்" என்று எழுதியும் பேசியும் வந்தார்.

பொதுவாகவே எந்த சமூகத்தில் பெண்கள் நிலை உயர்த்தப்படுகின்றதோ அந்த சமூகம் நாகரிகமானதாகவும், எந்த சமூகத்தில் தாழ்த்தப்பட்டிருக்கின்றார்களோ அந்த சமூகம் அநாகரீகத்தில் மூழ்கிய சமூகமாகவும் இருப்பது உண்மையே. அதிலும் நம் இந்திய சமூகம் பெண்கள் நிலையை முன்னிறுத்திய ஆணாதிக்க சமூகமாக இருப்பது போலிமையானது. இங்கு தாய் என்னும் கருத்தியல் நாடாகவும், மொழியாகவும், அரசாகவும், தொன்மைக்கூறுகளான மதம் கடவுள் என பலவாகவும் இருந்தும் பெண்ணுக்கான சுதந்திரமோ இட ஒதுக்கீடோ வெறும் சதவீகிதப் பிச்சையாகவே இருந்து வருவதும் அவர்களுக்கான உரிமைகள் சுரண்டப்படுவதும், நம் சமூக இருப்பையே வரும் காலத்தில் மீட்க முடியாத வரலாற்றுப் பிழைக்குள்ளிருத்தும் என்பது வெளிப்படை.

பெண்ணின் தனிநிலை ஏற்பு

நம் நாட்டு வரலாற்றில் இந்த நூற்றாண்டின் இடைப்பகுதியில் கலாச்சார மோதல் தீவிரமடைந்திருந்தாலும் முற்றுப் பெற்றுவிட்டதாகச் சொல்லமுடியாது சில இடங்களில் சில பெண்கள் மாற்றமடைந்துள்ளனர். சில இடங்களில் எந்த மாற்றமும் நடத்துவதும் சில நாகரீகப் பெண்கள் அதைப்புறக்கணித்து வாழ்வதும் - இன்னும் சிலர் தன் உள்ளுணர்வுகளை வெளிக்காட்டிக்கொள்ள முடியாமல் புழங்குவதும் தொடர்ந்து நிகழ்ந்தவண்ணம் இருக்கிறது. இதைத்தான் டாக்டர் மு.வ. தன் புதினங்களின் முறையே பொன்முடி மலர்விழி, இன்பவள்ளி, வடிவு, பாக்கியம் போன்றோர் கணவன் மறைந்த பின்னர் தனித்து வாழ்பவர்களாகவும், அல்லி கணவனைப் பிரிந்து தனித்து வாழ்பவளாகவும் பரமேஸ்வரி, பார்வதி போன்றோர் திருமணம் ஆகாமலேயே தனித்து வாழ்பவர்களாகவும் காட்டியுள்ளார்.

பெண்களுக்கு ஆண்களை அடுத்து வாழும் கொடுநிலை இருக்கும்வரை குடும்ப வாழ்க்கை நாகரீகமானதாக இருக்காது எனும் பெர்னாட்ஷாவின் கருத்துக்கிணங்க டாக்டர் மு.வ.

பெண்ணாய்ப் பிறந்தால் கட்டாயம் திருமணம் ஆகித்தான் தீரவேண்டுமா? ஆண்களில் சிலர் திருமணம் ஆகாமல் வாழ்நாளைக் கழிப்பது போல பெண்களிலும் சிலர் இருந்தால் உலகம் மூழ்கிப் போய்விடுமா? என்று கேட்கிறார்.

அல்லியைப் போல திருமணம் செய்துகொண்டு கணவன் நல்லவனாக இல்லாதபோது சமூக கட்டுதிட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து பெருத்த கவலைகளுக்கு ஆளாவதைவிட திருமணம் ஆகவில்லை என்ற ஒரே கவலையோடு தனித்து வாழ்வதே நல்லது என்பது அவரது கருத்து. நாகரீக வளர்ச்சியின் தாக்கத்தையும் உலக அறிவையும் முழுமையாகப் பெற்ற பெண்கள் இவ்வாறு சிந்திப்பது பொருந்தும். ஆனால்

மணிமேகலையைப் போன்ற சாதாரணப் பெண்களின் நிலை என்னவாகும் என்பதற்கு மு.வ. அவர்கள் கணவனை இழந்த துறந்த பிறகு மறுமணம் செய்துகொள்ளாமல் தங்களது சொந்த முயற்சியில் வாழ்க்கை நடத்துவது அறவழியாகும் என்கிறார். அவர்கள் அவ்வாறு வாழ்ந்து காட்டினால்.

பெண்கள் ஆண்கை அடுத்துத்தான் வாழ முடியும் என்ற நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், பெண்கள் ஆண்களுக்கு தாழ்ந்தவர்கள் அல்ல என்ற நம் பழமரபை நிலைநாட்டவும் முடியும் என்பது அவர்தம் கருத்தியலாகிறது.

பெண் கல்வி

பெண்களுக்கு கல்வி பெறும் உரிமை கிடைத்து நூறு ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்றும் பலா பெண்களுக்கு அவ்வுரிமை புறக்கணிக்கப்பட்டு வருகிறது.

பெண்கள் கல்வி கற்றால் ஆண்களை எதிர்த்துப் பேசத் தொடங்குவார்கள். படித்த பெண்கள் பெற்றோர்களுக்கு அடங்கி நடக்கமாட்டார்கள் என்பது போன்ற கருத்தியல்கள் இன்னும் பெண் கல்விக்கான முழுநிலை எதிர்ப்பை தந்த வண்ணம் இருக்கின்றன. பெண்கள் ஏன் ஆண்களுக்கு அடங்கி நடக்க வேண்டும்? பெண்கள் ஏன் ஒரு கருத்துக்கு மாற்றுக்கருத்து தெரிவிக்கக்கூடாது என்ற கேள்விகள் எப்பொழுது வெகுசன ஆண் சமூகத்துக்குள்ளாக வேர்விடத் தொடங்குமோ அதுதான் முழுமையான பெண்கல்வி சாத்தியமாக்கும். அதன்கீழ் மு..வ.வின் கொள்கையும் கருத்தியலும் பெண்கள் முன்னேற்றத்திற்கு கல்வியின் இன்றியமையாமையை வலியுறுத்துவது குறிப்பிடத்தக்கது.

இன்னும் இரண்டு தலைமுறைகளுக்கு ஆண்களுக்கு பள்ளிக்கூடங்கள் இல்லாமல் மூடிவிட்டாலும் குறை இருக்காது எல்லா பெண்களும் படித்த காலத்தில்தான் இந்த நாட்டில் அறியாமை ஒழியும். என்ற மு.வ.வின் (அருளப்பனின் கூற்று கல்வியறிவு எந்த அளவிற்கு பெண்கள் உயர்த்துகிறது என்பதற்கு டிடுத்துக்காட்டாகிறது அதுபோல்

தாயின் கொடுமைகளில் இருந்து விடுபட்டு வெளியேறிய பின்னர் உலகத்தை புரிந்துகொள்வதற்கு திலகத்திற்கு துணைபுரியும் கல்வு. கணக்குப் பார்த்து காய்கறிகூட வாங்கத்தெரியாத மங்கை கணவனைப் பிரிந்து முன்பின் அறியாத பம்பாய் செல்லும் அளவிற்கு அவளுக்கு உதவிய கல்வி. கணவனால் புறக்கணிக்கப்பட்ட அல்லியும் காதலனால் .துறக்கப்பட்ட பரமேஸ்வரியும் நம்பிக்கை இழந்து மனமொடிந்து போகாமல் சமுதாயத்தில் மதிப்போடு வாழ காரணமான கல்வி என டாக்டர் மு.வ. தன் புதினங்களில் திலகம், செந்தாமரை, மங்கை, அல்லி, பரமேஸ்வதரி மென்மொழி சாவித்திரி பார்வதி, விஜயா என பல பெண் பாத்திரங்களைப்

படைத்து பெண்ணுரிமையில் கல்வியறிவின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

மு.வ.வும் பெண்ணுரிமையும்

பெய்ஜிங் மாநாடு பெண்ணுரிமையை மனித உரிமை என பிரகடனப்படுத்திய பின்பும் பெண்ணை மனித குலத்திற்கு அப்பாற்பட்ட வளாக்கி - பெண்ணுரிமை - என்று பேசுவது தவறானது என்பது ஒரு விதத்தில் நியாயமானாலும் யதார்த்தமானதாக இல்லை நம் நாட்டைப் பொறுத்தமட்டில், ஆண், பெண் என இருபாலருக்கும் உரிமைகள் பிரிக்கப்பட்டு பெண் மனித அந்தஸ்தை இழந்த வரலாற்று உண்மை நாம் அறிந்ததுதான். ஆனால் அதே அளவிற்கு உணராதது இச்சூழ்நிலை மிக ஆழமாக நம் அறியாமைக்குள்ளும், உணர்வுக்குள்ளும் உரைந்துவிட்டதைத் தான் சமூக அமைப்புகளிலூடான பெண் சார்ந்த சில சம்பவங்கள் நம்மிடையே ஏற்படுத்தும் பிரதிபலிபபே நம்டமுடைய இந்த பாராபட்சங்களை உணரச்செய்யும். அவ்வகையில் டாக்டர் மு.வ. அவர்களின் பெண்ணுரிமை அவர்தம் படைப்புகளினூடான பெண் கல்வி, வரதட்சணை ஒழிப்பு, காதல் மணம், மணவிலக்கு, தனிவாழ்க்கை, கற்புடைமை வறுமை, மறுமணம், ஏற்றத்தாழ்வு பொருளாதாரச் சுதந்திரம் என பல கோணங்களில் விரிகிறது. அதிலும் அவர் எழுதிய புதின இலக்கியங்கள் மற்ற இலக்கியங்களைக் காட்டிலும் பெண்ணுரிமைக் கருத்தியலுக்கு முதலிடம் தருவதாக அமைந்திருக்கினறன.

நிறைவுரை

தமிழ் இலக்கிய - இலக்கண வரலாற்றில் மொழி குறித்தக் கருத்தியல்களையும், இலக்கியப் புதுமைகள் - வெளிப்பாட்டு உத்தி முறைமைகள், திறனாய்வுக் கொள்கைகள் என பல இலக்கியத் தளங்களை தமிழில் முதலில் அறிமுகப்படுத்தியவர் டாக்டர் மு.வ. இப்படி பல முதல்களுக்கு உரியவரான மு.வ.வே தான்படைத்த புதினங்கள் அனைத்திலும் பெண்ணிரிமை குறித்த விடுதலையை மானுட விடுதலை நோக்கில் முன்னெடுத்துச் செல்கிறார்

91. மு. வ. நோக்கில் சொல்லின் திரிபுகள்

செல்வி. மு. இரதி
கொன்றைக்காடு கிராமம்
காலகம் அஞ்சல்
பேராவூரணி வட்டம்
தஞ்சை மாவட்டம்.

எழுத்துக்கள் சில சேர்ந்து சொற்களாக அமைகின்றன. அவ்வாறு சொற்கள் அமையும் முறையில் எளிமையும் உண்டு, அருமையும் உண்டு. பல ஒலிகள் சேர்ந்து அமைந்த ஒரு சொல்லில் சில ஒலிகள் ஒலிக்கப்படாமல் விடப்படதலும் உண்டு. இது சொல்லின் திரிபு எனப்படும். இது முயற்சி எளிமை அல்லது முயற்சிச் சுருக்கம் கருதி ஏற்படுவதே ஆகும்.

சொல் திரிபுகள்

முன்னோர்கள் ஒலித்தவாறே நாம் இன்று ொற்களை ஒலிப்பதில்லை. சொற்கள் பலவகை மாறுதலை அடைந்தே இன்று கற்றவர் வழங்கும் சொற்களுக்கும் கல்லாதவர் வழங்கும் சொற்களுக்கும் வேறுபாடு உள்ளது.

(உ.தா) 'இருக்கின்றது' என்ற சொல் 'இருக்குது' என்றும் 'கீது' 'இருக்கு' என்றும் பல்வேறு வகையாக ஒலிக்கப்படுகிறது.

கற்றவர்கள் அதே சொல்லை வெவ்வேறிடத்தில் வெவ்வேறு வகையாக வழங்குகின்றனர்.

(உ.ம்)	மேடையில்	-	'இருக்கின்றது' அல்லது 'இருக்கிறது'
	நண்பர்களுடன்	-	'இருக்குது'
	குழந்தைகளிடம்	-	'இருக்குது'

பேச்சு உறுப்புக்களின் மாற்றம்

பேச்சுக் கருவியாகிய உறுப்புக்கள் வேறு பல தொழில்களுக்கும் உரிய கருவிகளாக உள்ளன. அதனால் சொற்கள் ஒலிக்கப்படும் போது, ஒலி திரிய நேர்கின்றது. இதழ், நா, அண்ணம் முதலியவற்றிற்குப் பலவகை உணர்ச்சிகளை வலுப்படுத்தும் தொழிலும் அமைந்திருக்கின்றது. ஆகவே, ஒரு சொல்லை ஒலிக்கும் போது, உணர்ச்சி அற்று அமைந்திருக்கும் நிலையாயின், உறுப்புக்கள் அந்தச் சொல்லைத் தெளிவுற இயல்பாக ஒலிக்கும். ஆயின் அதே நேரத்தில் உணர்ச்சி ஒன்றைப் புலப்படுத்த நேர்ந்தால் அதற்கு ஏற்றவாறு இதழ், நா முதலியவை மாறி அமைவதால்,

ஒலியில் சிறு மாறுதல் ஏற்படும்.

(உ.தா)

அமைதியாக இருந்து 'இல்லை' என்பதை ஒலிக்கும் போது அதன் இயல்பான ஒலி கேட்கப்படும். சினத்துடன், அல்லது பதற்றத்துடன் ஒலிக்கும் போது அந்த ஒலி ஓரளவு மாறும். வேடிக்கையாக அல்லது எள்ளல் குறிப்புடன் ஒலிக்கும் பொத மற்றொரு வகையான சிறு மாறுதல் நேரும்.

சொல்லின் திரிபு மிகுதல்

உருவம் திரியுமாறு ஒலித்தல் சில வகைச் சொற்களிலேயே மிகுதியாகக் காணப்படுகின்றது. எந்தச் சொற்கள் பேச்சில் அடிக்கடி வழங்குின்றனவோ, அந்தச் சொற்களிலேயே திரிபு மிகுதியாக நேர்கின்றது. அடிக்கடி நாவில் பயில்வதால் பலமுறை ஒலித்துப் பழகிய உறுப்புக்கள் கவலையில்லாமல் ஒலிக்கத் தொடங்குகின்றன. அதனால் அந்தச் சொற்கள் மட்டும் வரவர உருவம் திரிகின்றன.

நாலசை ஐந்தசைச் சொற்களாக இருந்தவை, ஓரசை ஈரசைச் சொற்கள் ஆகின்றன. நான், நாம், யான், யாம், நீ, நீர், தான், தாம் என்னும் மூவிடப் பெயர்கள் தொடக்கத்தில் ஓரசைச் சொற்களாக இருந்தவை அல்ல. மூவிடப் பெயர்கள் அடிக்கடி பேச்சில் வழங்கும் சொற்களாகையால், நாவில் தேய்ந்து தேய்ந்து ஓரசைச் சொற்களாகத் வந்து நின்றுள்ளன.

இன்று ஓரசையாக வழங்கும் சொற்கள் தொடக்கத்தில் பலவகைச் சொற்களாக நீண்டு வழங்கியிருக்க வேண்டும் மறுக்க முடியாத உண்மையே ஆகும்.

(உ.ம்)

'ஆச்சு' என ஓரசையாக வழங்கும் சொல்லின் முன்னைய வடிவம் **'ஆச்சுது'** எனின், அது **ஆய்விட்டது'** என்பதன் திரிபாகல் வேண்டும். **'வந்துவிட்டது'** என்பதை **வந்துடுச்சு, வந்துச்சி, வந்த்சி** என்றெல்லாம் மாற்ற வேண்டும் என்று இந்தக் காலத்திலும் எவரும் நோக்கி எண்ணித் துணிந்து ஒலிப்பதில்லை. ஆனால் ஒலி எளிமையை நோக்கி மாறிக் கொண்டிருதுக்கிறது. அதனால் சொற்களும் குறுகிக் கொண்டிருக்கின்றன. இதுதான் மொழியில் இயல்பான மாறுதல், பிறர் புதியதெனப் புகுதலும், பழையனக் கழிதலுமாகிய செயற்கை முறை இங்கு ஒன்றும் இல்லை. செயற்கை முறையாக ஒருவர் எண்ணி மாறுதல் செய்யத் தொடங்கின் அம் மாறுதல் எதிர்க்கப்படும் ஏற்கப்படாது. மொழியைப் பொறுத்த வரையில் தனி மனிதன் ஆட்சி இல்லை. மக்கள் பலரும் உடன்பட்டு நடத்தும் குடியாட்சி முறையே உள்ளது.

மொழி என்பது ஒருவர் கரத்தையோ உணர்ச்சியையோ மற்றவர்க்கு

எல்லை வரையிலுமே சொற்களின் உருவம் திரியும். பொருளுணர்த்தும் பயன்குறையுமானால் சொற்களின் உருவம் திரிவதில்லை. பேசுவோர்க்கும் கேட்போர்க்கும் இடையே நிகழும் சிறு போராட்டம் என்றே இதைக் குறிப்பிடலாம். பேசுவோர் சொற்களை ஒலிப்பதற்கு எளியனவாகத் திரிக்க முயல்கின்றனர். திரிபு அளவு கடந்து செல்லும் போது, கேட்போர் பொருள் விளங்காமல் இடர்ப்படுகின்றனர். ஆகவே எளிமை கருதித் திரித்தல் ஒரு புறம். தெளிவு கருதிச் சொற்களின் உருவங்களைக் காத்தல் மற்றொரு புறம். இவ்வாறு இருவகை முயற்சிகளுக்கு இடையே சொற்களின் திரிபு ஓரளவில் நிற்க நேர்கின்றது.

மொழியை வளர்த்துக் காப்பது மக்களின் முதல் நோக்கம் அன்று. அனால், மொழியை வளர்த்துக் காப்பதன் வாயிலாகத் தங்கள் வாழ்வைக் காத்துக் கொள்வதே முதல் நோக்கமாகும். ஆதலின் தங்கள் வாழ்க்கைக்கு ஏற்றவாறு மொழியை மாற்றியமைத்துக் கொள்கின்றனர். வேண்டிய ஒலிகளை எளிய ஒலிகளாக மாற்றியமைத்துக் கொள்கின்றனர், வேண்டிய ஒலிகளை விடாமல் காத்து, வேண்டாத ஒலிகளைப் புறக்கணித்து விடுகின்றனர். பலவகைச் சொற்களுள் இன்றியமையாத அசைகளை ஒலித்து ஏனையவற்றை மறந்துவிடுகின்றனர். இவ்வாறு செய்வதால் சொற்கள் குறுகிவிடுகின்றன.

இவ்வாறு சொல்வடிவு குறுகி மாறுவதால் அந்தச் சொல்லின் பிறப்பும் வளர்ச்சியும் அழகும் புலனாகாமல் மறைகின்றன. எழுத்து முறையால் அமைந்த இலக்கியம் இத்தகைய திரிபுகள் நேராதவாறு ஓரளவு காத்து வருகின்றது.

௯௨. தமிழ் இலக்கியத்தில் மு. வரதராசனார்

பேரா.த.மைக்கேல்
தமிழ்த்துறை, ஊரீசு கல்லூரி
வேலூர்.

இருபதாம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு.வரதராசனார் சிறப்பான இடத்தைப் பெற்று விளங்குகிறார். அவரின் சீரியத்தமிழ்த்தொண்டு முதன்மையான இடத்தைப் பெற்று விளங்குகிறது. உலகத்தமிழர்களின் உள்ளங்களைக் கவர்ந்த முதல் தமிழராக அவர் திகழ்கின்றார். 'முவ' என்ற செல்லப்பெயர் ஒலிக்காத தமிழ் இல்லங்களும் நல் உள்ளங்களும் இல்லை எனலாம். சுமார் எண்பதுக்கும் மேலான நூல்களை இயற்றி தமிழ் இலக்கியத்தில் தனக்கென ஒரு சிறப்பினைப் பெற்று விளங்குகிறார். மொழியியல், திறனாய்வு, கட்டுரை, இலக்கிய ஆராய்ச்சி முதலிய துறைகளில் மட்டுமல்லாது நாவல், சிறுகதை, நாடகம் முதலிய படைப்பிழலக்கியத் துறைகளில் முன்னனியில் நிற்பவர். சிந்தனையும் கலையும் கணிந்து இணைந்த ஓர் விந்தை மனிதர். எளிமை, தெளிவு அகிய பண்புகள் அவருடையப் படைப்புகளில் காணலாம். ஆசிரியர் தொழிலால் பெருமை பெற்று, ஆசிரியத் தொழிலுக்காக பெருமை சேர்த்தவர். தமிழ்ச்சான்றோர் திரு.வி.க வைத் தம்முடைய வாழக்கையின் வழிகாட்டியாகக் கொண்டு வாழ்ந்தவர். திருக்குறளிலும், சிலப்பதிகாரத்திலும் தோய்ந்த இவருடைய சான்றாண்மை நிறைந்த நெஞ்சத்தை இவருடைய ஆராய்ச்சி நூல்களும் படைப்பிலக்கியங்களும் எதிரொலித்து நிற்கின்றன எனலாம்.

படைப்பிலக்கியங்கள்

டாக்டர் மு.வ.வினுடைய படைப்பிலக்கியங்களில் நாவல், சிறுகதை, நாடகம் அகியவை அடங்கியுள்ளன. 'பாவை', 'செந்தாமரை', 'அந்த நாள்', கள்ளோ? காவியமோ' அல்லி, 'அகல்விளக்கு', 'கரித்துண்டு', 'மலர்விழி', 'கயமை', 'வாடாமலர், மண்குடிசை', பெற்ற மனம்', 'நெஞ்சில் ஒரு முள்' ஆகியவை அவருடைய நாவல்கள் 'குறட்டை ஒலி'. 'விடுதலையா' ஆகிய இரண்டும் அவருடைய சிறுகதைத் தொகுப்புகள். பச்சையப்பர், 'காதல் எங்கே', 'மூன்று நாடகங்கள்', 'மனச்சான்று' ஆகியவை அவருடைய நாடக நூல்களாகும். இப்படைப்புகள் எல்லாம் அவருடைய வாழ்க்கை அனுபவங்களில் கண்ட, கேட்ட நிகழ்ச்சிகள் என்று கூறுவர் திறனாய்வாளர் இரா.தண்டாயுதம்.

மு.வ.வின் படைப்பிலக்கியங்களை ஒருசேர ஆராயும் எவரும். சான்றாண்மை நிறைந்த அவருடைய தூய வாழக்கையை உணர்ந்துகொள்ள

முடியும் என்று அறிஞர் குறிப்பிடுகின்றார். தம்முடைய படைப்பிலக்கியங்கள் மூலம் இவர் வற்புறுத்தும் வேறு சில சிந்தனைகளும் உண்டு. வாழ்க்கையில் உணர்ச்சிக்கு அதிக இடம் தராமல் நடுநிலைக்கும் உண்மைக்கும் இடம் தந்து வாழ வேண்டும் என்பது ஒன்று. இயற்கையின் நியதிகளை ஆராய்ந்து உணர்ந்து அவற்றிற்கேற்ப நம்முடைய வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது மற்றொன்று. இவையிரண்டையும் தம்முடைய வாழ்க்கையில் கடைபிடித்து, அவர் கண்ட உண்மைகளின் விளக்கங்களே அவருடைய படைப்பிலக்கியங்களாகக் உருவெடுத்துள்ளன என்று கூறுவர்.

கலைவடிவம் சிதறாத படைப்பாளர்

'கலை வாழ்க்கைக்காக' என்பது வேறு. 'கலை வாழ்க்கைக் கருவி' என்பது வேறு. முன்னதில் கலை தன்னளவில் முழுமையாக நின்று பயன்படும். பின்னதிலோ கருத்துக்கள் கலைவடிவை ஓரளவு மங்கச் செய்து விடும். இவைகளில் முன் வழியையே தம்முடைய படைப்பிலககியங்களைப் படைக்க டாக்டர் மு.வ. பின்பற்றியுள்ளார். எந்தக் கலை வடிவத்தைப் படைக்க முற்படுகிறாரோ அது நாவலானாலும் சரி, சிறுகதையானாலும் சரி அல்லது நாடகமானாலும் சரி அந்த கலைவடிவத்திற்குள் நின்றே தம்முடைய கருத்துக்களை வெளிப்படுத்துவார். அந்தக் கலைவடிவம் சிதறாத படிக்கும், கலை வடிவத்தின் முழுமை சிறப்பாக அமையும்படிக்கு எழுதும் ஓர் ஆற்றலை இவரது, படைப்புகளில் காணலாம். சான்றாக நாவல்களில் வரும் 'ஆசிரியர் குறுக்கீடு' பற்றி குறிப்பிடலாம். பிற நாவல்களில் கதை நிகழ்ச்சிகளின் இடையிலும் கதை மாந்தர்களின் செயல்களுக்கு இடையிலும் ஆசிரியர் குறுக்கிட்டுத் தம் கருத்துக்களை வெளிப்படுத்துவதாக இடம் பெறும். ஆனால், மு.வ. நாவல்களில் இத்தகைய நிலையைக் காண இயலாது. அவருடைய சிந்தனைகளும் கருத்துக்களும் தகுதியுடைய கதை மாந்தர் ஒருவர் மூலமே வெளிப்படும். 'அல்லி' நாவலில் வரும் அறவாழி இத்தகைய கதை மாந்தர்களில் ஒருவர், மண்குடிசை நாவலில் வரும் மெய்கண்டார் என்பவரையும் 'நெஞ்சில் ஒரு முள்' நாவலில் வரும் 'அறவாழி' போன்ற கதை மாந்தர்களைச் சான்றாகக் குறிப்பிடலாம்.

குறிக்கோள் நிறைந்த வாழ்க்கை

டாக்டர் மு.வ. குறிக்கோள் நிறைந்த வாழ்க்கை வாழ்வதில் அவர் பெருவிருப்பம் கொண்டவர். ஓயாமல் சிந்திக்கும் தன்மை கொண்டவர். தன்னுடைய படைப்புகளில் சமுதாயத்திற்குத் தாம் தர விரும்பும் செய்திகளுக்குத் தந்து படைத்துள்ளார். தம்முடைய கருத்துக்களுக்கு எத்தகைய முதன்மை தந்தாரோ அதே முறையில் அவரது கருவாகக் கொண்டு அமைக்கப்பட வேண்டிய ஒரு நல்ல கலை. அந்த கலை

உருவம் பெறுவதற்கு அழகிய வடிவம், நல்ல உணர்ச்சிச் செறிவு, கற்பனை வளம் அமைந்து படைக்கப்பட வேண்டும். இவ்வாறு அமைந்து விட்ட பிறகு ஆசிரியர் தம்முடைய கருத்துக்களை அமைக்க இடமுண்டு. ஆனால், அவ்வாறு அமைக்கும்போது அந்த கருத்தை வெளிப்படுத்ததக்கப் பாத்திரங்களைப் படைத்து, கருத்துக்களை வெளிப்படுத்தலாம் என்று ஒரு பேட்டியில் ஆசிரியரே வெளிப்படுத்தியுள்ளார் என்பதை திறனாய்வாளர் கூறுவர். 'அறவாழி, முருகையா முதலியார் முதலிய சில கதைமாந்தர்கள் ஆசிரியரடைய கருத்துக்களை வெளிப்படுத்தி நிற்பதை அவருடைய நாவல்களில் காணலாம்.

சிறந்த ஆசிரியர்

டாக்டர் மு.வ. தம்முடைய இருபத்திரண்டாவது வயதில் ஆசிரியத் தொழிலுக்கு வந்து விட்டார். அதன் பிறகு ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் ஆசிரியர் துறையுடன் தம்மைப் பிணைத்துக்கொண்டார். பல்வேறு வகையான மனிதர்களுடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. குறிப்பாக. பல இளைஞர்களுடன் பழகவும் அவர்களின் உள்ளங்களை அறிந்துக்கொள்ளவும் வாய்ப்பு கிடைத்தது. அவ்வாறு பெற்ற அனுபவங்களை அவருடைய நாவல்களுக்குக் கதைப்பொருளாக்கினார். 'அல்லி'. 'அகல் விளக்கு ஆகிய இரண்டு நாவல்களும் இவ்வகையில் குறிப்பிடத்தக்க நாவல்கள் ஆகும்.

டாக்டர் மு.வ. இலக்கிய அராய்ச்சி எவ்வாறு செய்ய வேண்டும். ஓர் இலக்கியத்தை எப்படி அணுக வேண்டும். படைப்பாளனுக்கு உரிய இடம் என்ன? என்னும் செய்திகளைச் நன்கு ஆராய்ந்து தேர்ந்தவர். குறிப்பாக சங்க இலக்கியங்களில் அவர் பெற்றிருந்த புலமை பலரை வியப்பில் ஆழ்த்தியது. பாடல்களில் சொல்லப்பட்ட கருத்துக்களின் வழி புலவருடைய உள்ளத்தை உணவே முற்படுவர். 'ஓவச் செய்' இவ்வாறு கிடைத்த புதையல் எனலாம். சங்க இலக்கியங்களை ஆராய்பவர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக அந்நூல் திகழ்கின்றது. இலக்கியத்திறன், மொழியியல் முதலிய ஆராய்ச்சிப் பாடங்களையும் இலக்கியத்தைப் போதிக்கும் தனி ஆற்றல் அவரிடமிருந்தது. எனவே தான் ஆசிரியர்களுள் ஒரு ஒளிமிக்க மணியாக அவரால் திகழ முடிந்தது.

நாவலாசிரியர்

டாக்டர் மு.வ. வின் நாவல்களையும் சமுதாயத்தையும் தனித்தனியே பிரித்துப் பார்க்கவே இயலாது. மிக மேலான அறிவு நிலையில் நிற்கும் சான்றோராயினும் சமுதாயத்தை எவ்வளவு கூர்ந்த வழிகளோடு இவர் நோக்குகிறார் என்பதை இவருடைய நாவல்களே தெளிவாகக் காட்டுகின்றன. சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு யார் காரணம் என்பதை விட, எது காரணம்

என்பதையே இவர் பார்க்க விரும்பும் சிந்தனையாளர். நடுத்தரவ ர்க்கத்தினரின் வாழ்க்கைப் போராட்டங்களை மையமாகக் கொண்டும் இளைஞர் சமுதாயத்தின்எண்ணப்போராட்டங்களைப் பிரதிபலிப்பவையாகவும் இவருடைய நாவல்கள் விளங்குகின்றன. பாலுணர்வின் நெளிவுசுளிவுகளை எல்லாம் கதை வடிவில் காட்டும் 'அல்லி', ஓர் ஓவியக்கலைஞனின் வாழ்க்கைப் போராட்டங்களை வெளிப்படுத்தும் 'அகல் விளக்கு' அரசியலி ஊழல்களை அம்பலத்திற்குக் கொண்டுவரும் □கயமை□ முதலிய இவருடைய நாவல்களி தலைசிறந்தன. உணர்ச்சியைக் காட்டிலும் அறிவிற்கே இவருடைய நாவல்களில் முதன்மை இருப்பதுடன், படிப்பவர் சிந்தனைகளைத் தூண்டும் ஆற்றல் வாய்ந்தவை இவருடைய நாவல்கள், நாவல் என்ற கலைவடிவத்தின் கட்டுக்கோப்பிற்குள் இவர் தந்திருக்கும் சிந்தனைகள் தமிழ்நாவலாசிரியர்களில் ஒரு தனியான.டத்தைத் தேடித் தந்துள்ளன எனலாம்.

சமூகப் பற்று

டாக்டர் மு.வ. தமிழ்ச்சமுதாயத்தின்மேல் தனிப்பற்றும் பரிவும் கொண்டவர். பண்பாட்டில் சிறந்து, வரலாறு படைத்த சமூகம் இன்று வரும இன்னல்கள் இவருடைய சிந்தனையைத் தூண்டின. அவருடைய படைப்பிலக்கியங்கள் அ×த்திற்கும் நிலைக்களன் சமுதாயம் தான். 'இளங்கோ', 'வீண் கனவு முதலிய நாடகங்களில் வரலாற்றுப்பின்னணி காணப்பட்டாலும் மறைமுகமாக அவை இன்றைய சமுதாய நிலைகளைச் சுட்டிக்காட்டுகின்றன. இன்றைய சமுதாயம் ஒரு நாகரீகக்காடு, அங்கு ஓநாய்களும், முதலைகளும் வாழ்கின்றன. துப்பாக்கியும் கத்தியும் ஏந்தியவர்கள் தான் இங்கு ஆளுகிறார்கள்' என்று 'வாடாமலர்' நாவலில் வரும் தானப்பன் வழி சமுதாயத்தின் நிலையினை எடுத்துரைக்கின்றார். பெண்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, கற்புள்ள பெண்கள் எவ்வாறு நடந்துக்கொள்ள வேண்டும் என்பதையும் படித்தப் பெண்கள், திருமணம், வரதட்சிணைப் பிரச்சினை போன்றவற்றால் எத்தகைய பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றனர் என்பதை நெஞ்சில் ஒரு முள் நாவலில் விளக்கிக் காட்டியுள்ளார்.

ஒரு 'மண்குடிசை' யாயிருக்கும் வரை அது பலவித தீய சக்திகளால் அழிக்கப்படும். உறுதியான கற்களால் கட்டப்படும் போது அது உறுதியான, பண்பான ஒரு வீடாக அமையும் என்னும் கருத்தை மண்குடிசை நாவலில் குறிப்பிட்டுள்ளார். டாகடர் மு.வ.வின் நாவல்களில் ஒரு தனியிடம் பெற்ற நாவல் 'கயமை'. இன்றுள்ள சமூக அரசியல் சூழ்நிலைகளை பின்னணியாக்கியுள்ளார் மு.வ. மற்ற நாவல்களில் சமுதாயப் பின்னணி இருந்தாலும் அவற்றில் வருகின்ற கதைமாந்தர்கள் சமுதாயத்தின் உறுப்பினர்களாகவே காணப்படுவர். இந்நாவலில் இன்றைய சமுதாயத்தின்

பல்வேறு இயல்புக்களை கதைமாந்தர்களாக உருவகப்படுத்தியுள்ளார். ஆணவர் என்னும் பாத்திரப் படைப்பு இந்த நாவலில் ஒப்பற்றதாக விளங்குகிறது. அதிகாரத் திமிர், கோழைமனம், வஞ்சகம் செய்தல், ஆடம்பரம் ஆகிய பல்வேறு சமுதாயத்தீமைகளை இந்நாவலில் சுட்டிக் காட்டியுள்ளார். எனவே, இவர் ஒரு சிறந்த சமூகச் சிந்தனையாளர் என்றும் குறிக்கோள் உடைய நாவலாசி-ரியர் என்று கூறுதல் பொருந்தும்.

உலகம் சுற்றிய முதல் தமிழ்ப்பேராசிரியர்

தமிழகத்தில் பிறந்து, இந்தியாவில் பல மாநிலங்களில் சுற்றித்திரிந்து உலகம் போற்றும் தமிழ்ப்பெராசிரியராக மு.வ. திகழ்கின்றார். அவர் பல மொழிகளைக் கற்றதனால் பன்மொழிப் புலவர் எனப் போற்றப்படுகின்றனர். தமிழ்ஈ, தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி முதலிய மொழிகளைக் கற்று புலமை மிக்கவராகத் திகழ்ந்தார். அதனால் பல நாடுகளைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பினைப் பெற்றார். ரஷ்யா, மலேசியா, சிங்கப்பூர், பாரீசு, இலங்கை, கிரேக்கம், எகிப்து , ஆப்பரிக்கா முதலிய உலக நாடுகளை எல்லாம் சுற்றிப் பார்த்த முதல் தமிழ்ப்பேராசிரியராக விளங்கினார்.

உலகத்திற்கு நன்மை செய்தவர்களையும் உலகத்திடமிருந்து பெற்று வாழ்ந்தவர்களையும் பற்றி மு.வ. குறிப்பிடும் போது, ஒருவர் உலகத்திலிருந்து எவ்வளவோ நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுகின்றனர். ஆனால், அவ்வுலகத்திற்கு தருவது மிகக்குறைவு. உலக கணக்கில் (பேரேட்டில்) இது எண்ணப்படும்போது, அது ஒரு முறையாகக் கருதப்படும். அந்த கணக்கில் செலவை விட வரவு மிகுதியாகக் காணப்படும்போது உலகம் அவர்களை என்றும் மறவாமல் போற்றும். டாக்டர் மு.வ. வின் வாழ்க்கையும் நூல்களையும் உள்ளபடி உணரும் எவரும் உலகப்பேரேட்டில் அவர் பெறும் இடத்தை உணருவார்கள். பழைய இலக்கியத்திற்கும் புதிய இலக்கியத்திற்கும் ஒரு பாலமாக அமைந்து, ஆராய்ச்சி உலகிற்கும் திறனாய்வு உலகிற்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளார். தமிழரும் தமிழும் வாழக் காலமெல்லாம் உழைத்த சான்றோராகவும் பல துறைகளிலும் இடையறாது உழைத்த அறிஞராகவும் இவர் விளங்குகிறார். அறிந்தவர்க்கும் அறியாதவர்க்கும் நல்லோராகி மாணவர் உள்ளங்களைக் கவர்ந்த ஆசிரியராகி, எண்ணற்ற நூல்களைத் தந்த படைப்பாளரகி தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு சிறந்த .இடத்தைப் பெற்று விளக்குகிறார்.

93. அகல் விளக்கு நாவலில் சமுதாய சிந்தனைகள்

கு. நாகம்மாள்
முதுகலைத் தமிழ்
இரண்டாம் ஆண்டு
நந்திவர்மன் கலை அறிவியல் கல்லூரி
தெள்ளார்.

முன்னுரை

மனிதர்களின் அன்றாட வாழ்க்கை முறையினை தான் இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. "ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை வழியைப் பின்பற்றிக் கூட்டாக மக்கள் தொகுதி சமுதாயம் எனப்படும்". அவ்வகையில் தற்கால இலக்கிய வகையான நாவல்கள் அவ்வவ் வட்டாரச் சூழலோடு பதிவு செய்கின்றன. எனவே இகல்விளக்கு என்னும் நாவல், அதில் குறிப்பிடப்பட்ட சமுதாய கருத்தாக்கங்களை மறுவாசிப்புக்குட்படுத்தி அதில் குறிப்பிட்டுள்ள சமுதாய சிந்தனைகளை வெளிக் கொண்டுணரும் வகையில் இக்கட்டுரை அமைக்கப் பெறுகிறது.

கதைச் சுருக்கம்

வேலய்யன் அழுகும் அறிவும் குறைந்தவனாக இருந்து எளிய வாழ்வை மேற்கொண்ட அகல் விளக்கால் வாழ்வில் பிரகாசிக்கிறான். அழகும் அறிவும் மிக்க சந்திரன் காதல் கல்வியைக் கைவிடுதலி, பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டு கடைசியில் தொழு நோயாளியாக சித்தரிக்கப்படுகிறான். மாலன் படித்த மாணவனாக இருந்தும் பல வகையான மூடநம்பிக்கைகளுக்கு ஆளாகி குடும்ப சிக்கல்களை ஏற்படுத்தி வரதட்சணை கொடுமையினையும் மேற்கொண்டு, அதன் பிறகே திருந்தி வாழ முற்படுகிறான். இவ்வாறு வேலய்யன், சந்திரன், மாலன் என்ற மூன்று நண்பர்களைக் கொண்டு கதைப் புனையப்பட்டுள்ளது. 'பாக்கியம்' ஒரு விதவையாக இருந்தாலும் தன் மனத்தை கல்வி மேல் செலுத்தி வாழ்க்கைக் கடலைக் கடக்கின்றாள். மணிமேகலை, கயற்கண்ணி. இளஞ்சிறார்கள் போன்றோருக்கு வழிகாட்டுபவளாக விளங்குகிறாள். விநாயகம் பாக்கியத்தை அக்கா என்று பாசமில்லாமல் மனைவி தாசனாக உள்ளான். இமாவதி ஆணோடு பழகினாலும் தனக்கென எல்லை வகுத்துக் கொண்டு பழகுகிறாள். ஆனால் சந்திரன் இமாவதி தன்னைக் காதலிப்பதாக தவறாக உணர்கிறான். அதனால் கல்வியையும் வாழ்வையும் இழக்கிறான். சந்திரனின் இந்நிலையைக் கேள்விப்பட்டு இமாவதி தனக்கு திருமணம் ஆனப் பின்பும் அவனுக்காக வருந்துகிறாள். சந்திரன் மனம் திருந்திய நிலையிலும் கூட

பித்தளை விளக்காய் ஒளி மங்கி தொழு நோயினால் இறந்து விடுகிறான்.

கதை மாந்தர்கள்

வேலப்பன், சந்திரன், உடன்பிறந்தோர், 1) மணிமேகலை தங்கை, (2) பொய்யாமொழி (தம்பி), பெற்றோர்கள், மாதவி, (குழந்தை) கயற்கண்ணி, (மனைவி) வள்ளி, (மனைவி) கற்பகம், (தங்கை) சாமண்ணா, (தந்தை) தாய் இன்னும் வேலய்யனின் நண்பன் பாலனும், சந்திரனின் காதலி இமாவதி, வேலய்யனைக் குழந்தைப்பருவத்திலிருந்து வளர்த்தெடுத்த பாக்கியம் மற்றும் சிறுசிறு பாத்திரங்கள் இந்நாவலில் கதை மாந்தர்களாக வருகின்றனர்.

கல்வி

கல்வியால் மனித மனங்கள் பண்படைவது மட்டுமல்லாமல் நாடும் முன்னேற்றம் அடைகிறது. கல்வியே ஒருவனுக்கு அழியாச் செல்வமாகும். கல்வி கற்றபடி வாழவேண்டும் என்ற வள்ளுவரின்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"[2]

குறட்பாவிற்கு இணங்க அகல் விளக்கு புதினத்திலும்

"பாக்கியம் அம்மையார் படித்த புத்தகங்களின் கருத்துக்களை உணர்ந்தார் தெளிவு பெற்றார். எங்கள் கல்விச் சுமை, உடம்பில் தோன்றும் தொந்தியும் வீண் தசைகளும் கட்டிகளும் போன்றது"

என வேலய்யன் என்ற பாத்திரத்தின் மூலம் ஆசிரியர் கல்விச் சிந்தனையைப் பதிவு செய்கிறார்.

பால் கடந்த நட்பு

இன்றைய சமுதாயத்தில் ஆண் பெண் என்ற இருபாலரின் நட்பினைத் தவறாகவே எண்ணுகின்றனர். அதனைக் காதலாகவே எண்ணி காயப்படுத்துகின்றனர்.

"என் உலகம் இது பெண்கள் இருவர் பழகினால் உடம்பைக் கடந்து உள்ளத்தின் உறவு கொண்டு பழகவில்லையா? நீங்கள் ஆண்கள் இருவர் பழகும்போதும் அப்படி உள்ளதால் பழகவில்லையா? ஓர் ஆணும் பெண்ணும் பழகும்போது மட்டும் உள்ளம் இல்லையா"

என்ற இமாவதியின் கேள்விகளின் வாயிலாக பால் கடந்த நட்பும் இந்த சமுதாயத்திற்கு தேவையென உணர்த்தப்படுகிறது.

வரதட்சணைக் கொடுமை

இன்று பெண் பார்ப்பதற்காக வருகின்ற மாப்பிள்ளைகளில் பெரும்பான்மையோர் பெண் பண்புள்ளவனா? என்பதைவிட பணமுள்ளவளா? என்றே எதிர்ப்பார்க்கின்றனர். இந்த வரதட்சணையின் பெயரால் பெண்களுக்கு ஏற்படும் ரொடுமைகளை ஆசிரியர் மு.வ. அவர்கள்

> *அவன்தான் அனுப்பிவிட்டானாம், சோழசிங்கபுரத்தில் நெல் ஆலை வைக்க வேண்டும் என்று முயற்சியாம். அதற்காக மாமனாரிடம் பணம் கேட்கிறான். நீ போய் உட்கார்ந்து பிடிவாதம் செய்து வாங்கிக் கொண்டுவா என்று அனுப்பி விட்டான்*

என வேலய்யனின் அம்மாவின் மூலம் கற்பகத்திற்கு நிகழ்ந்த வரதட்சணைக் கொடுமையினைச் சித்தரித்துள்ளார். இதுபோன்ற சமுதாய அவலங்கள் இன்றும் நம் நாட்டில் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. அதனை வேறோட அழிக்க வேண்டுமென்பதே மு.வ.வின் விழைவாகும்.

கைம்பெண்

பாக்கியம் தான் ஒரு கைம்பெண்ணாகவும், தம்பியால் ஆதரவற்ற நிலையிலும் கூட தன் அன்பினால் வேலய்யனின் வீட்டிலேயே தங்கிஅ அங்கேயே மாணவர்களுக்கு பகுதி நேர வகுப்பு எடுத்து வாயிலாக தன்வாழ்வை செம்மைப்படுத்திக் கொள்கிறாள். எத்தனையோ கைப் பெண்கள் சிலர் காமுகர்களால் சமுதாயத்தில் துன்பப்படுகின்றார். அதனால் அவர்களில் அதிகமானோர் வீட்டிலேயே அடைந்து கிடக்கின்றனர்.

> *"எங்கள் வாழ்க்கை மலைச்சரிவில் பெருங்காற்றில் நடப்பது போன்றது. நாங்கள் நிமிர்ந்து கைவீசி நடக்க ஆசைப்படவே கூடாது"*

என்று மணிமேகலையிடம் பாக்கியம் உரையாடுவதின் வாயிலாக சமுதாயத்தின் கைம்பெண்ணின் அவல நிலை உணர்த்தப்படுகிறது. இப்படிப்பட்ட சமுதாயச் சீர்கேடுகளை மு.வ. சாடுகிறார்.

பெற்றோர்களின் வழிகாட்டுதல்

இன்றைய பரபரப்பான உலகத்தில் குடும்பங்களில் ஒருவரோடு ஒருவர் உள்ளம் கலந்து நெருங்கி பேச முடிவதில்லை. இதனால் பெற்றோர்கள் தன் குழந்தைகளுக்கு அறநெறிகளை எடுத்துச் சொல்வதும் குறைந்து வருகிறது. அப்படிப்பட்ட சரியான வழிகாட்டுதல் இல்லாததால்தான் இன்று அநேக இளைஞர்கள் சமூக விரோத செயல்களில் ஈடுபடுகின்றனர். இதனை இச்சமுதாயத்திற்கு அறிவுறுத்த விரும்பிய மு.வா.

"ஆண் பெண் உறவு என்பது ஒரு நாளில் உங்கள் உணர்ச்சியால் முடிவு செய்யக்கூடியது அல்ல, அது வாழ்க்கை முழுவதையுமே மாற்றக்கூடியது. ஆகையால், அனுபவம் நிறைந்த எங்கள் அறிவுரையும் அதற்கு வேண்டும்"[10]

என இமாவதியின் தாயின் வாயிலாக, இன்றைய தாய்மார்களுக்கு அறைக்கூவல் இடுவது போல் நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நியாயத்தின் குரல்

சாந்தலிங்கம் சந்திரன் சுவரில் சிறுநீர் கழித்து விட்டு நீர் கொட்டாமல் செல்வத்தைக் கண்டு ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என கேட்கிறான். அது பெரிய பிரச்சனையாக மாறி விடுதிச் செயலர் வரை செல்கிறது. பின்பு இருவரையும் விசாரித்ததில் சந்திரன் செய்தது தவறென அறிந்த நிலையிலும் கூட அவனுக்கும் பல குரல்கள் துணை நிற்கின்றன. நியாயத்தினைக் கேட்பவர்கள் கூட மக்களிடையே அலைக்கழிக்கப்படுகின்றனர்.

உண்மையின் சார்பில் நியாயத்தின் சார்பில் தயங்காமல் குரல் கொடுப்பவர்கள் தேவை'

என்ற உயர்ந்த நிலை ஏற்படுதல் வேண்டும் என்ற சமுதாயச் சிந்தனை இங்கு முன் வைக்கப்படுகிறது.

சுய உரிமைகள்

வள்ளி, கணவன் தன்னை ஒரு மனைவியாக சிறிதும் எண்ணாத தருவாயிலும் கூட தன் இல்லற கடமைகளைத் தவறாத இல்லக்கிழத்தியாக வாழ்கிறாள். கணவனின் தகாத நடத்தைகளைக் கண்டும் தட்டிக் கேட்காத பயமுள்ள பெண்ணாக உள்ளாள். பிறகு தன் கணவன் அனைத்து நகைகளையும் பறிமுதல் செய்யும் பொழுது சந்திரனை எதிர்த்துக் கேட்டு அதனால் உதைப்பட்டுகிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்கிறாள். எந்த நிலையிலும் பெண்கள் மனமுறிவினை அடையக்கூடாது. தன் சுய உரிமைகளைப் பெற்று வாழத் தலைப்படுதல் வேண்டுமென்ற கருத்து இங்கு விளக்கப்படுகிறது.

திருமணம்

திருமணம் எனந்பது இருமன இணைவு. அது இப்பொழுதெல்லாம் ஒரு மனதின் விருப்பம் சார்ந்ததாகவே பெரும்பான்மையும் உள்ளது. இதே நிலை தான் கற்பகத்தின் திருமணத்திலும் நிகழ்கின்றன. மாப்பிள்ளைக்குப் பெண்ணைப் பிடித்திருந்தால் போதும் என்ற எண்ணம் உருவாகியுள்ளது. பெண்ணின் தனிப்பட்ட விருப்புகளை யாரும் கேட்டறிய

முன்வருவதில்லை. இவ்வாறின்றி கற்பகத்திடம் கேட்டிருந்தால் ஒரு வேளை அவளது காதலைப் பெற்றோரிடம் சொல்லியிருப்பாள். மாலனை மணந்து அவனால் பல இன்னல்களுக்கும் ஆளாகாமல் இருந்திருப்பாள். மணம் மன நிறைந்ததாக இருக்க வேண்டும். அது காதல் மணமாகவும் இருக்கலாம். அதனை இச்சமுதாயம் வரவேற்க முன்வருதல் வேண்டும். இல்மலையேல் பெண்களின் வாழ்வே பாழ் வாழ்வாக மாறிவிடும் என அறிய முடிகிறது.

இல்லறத்தின் சிறப்பு

தாயம்மாள், தன் கணவன் கொலை செய்து விட்டு சிறையில் இருக்கின்ற வேளையில் சந்திரனுடன் வாழ்கிறாள். ஆனால் சந்திரனோ தாயம்மாளைப் பற்றி சிறிதும் யோசிக்காமல் தன் சொந்த ஊருக்கே திரும்புகிறான்.

> *ஆசிரியரைப் பார்த்து வாங்க போகலாம் என்றான். சாமண்ணாவின் முகத்தில் அப்போதுதான் மலர்ச்சி காணப்பட்டது*

அந்நிலையில் வேலய்யன், சந்திரனின் நிலையில் தானிருந்திருந்தால் மிகவும் வருந்தியிருப்பேன் எனக் கூறுகிறான். கணவனே கண் கண்ட தெய்வம் என்பதில்லாமல் செயல்பட்டதால் தன் தாயம்மாளுக்கு இத்துன்பம் ஏற்படுகிறது என நாவல் அமைக்கப்பட்டிருப்பத்தினைக் கொண்டு இல்லறத்தின் சிறப்பினை நன்கு உணர முடிகிறது.

தொழு நோய் பற்றிய விழிப்புணர்வின்மை

இறந்தவர்களின் பட்டியலைப் பார்க்கும் பொழுது நோயால் இறந்தவர்களின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது. அவ்வகையில் கற்பகத்தின் திருமணத்திற்கு சென்ற வேலய்யன் சந்திரனைப் பார்த்து காதோரமாக கருப்பாக உள்ளது நல்ல டாக்டரை சென்று பார் எனக் கூறிய பொழுதும் சந்திரன் விழிப்புணர்வின்றி இருந்தான். தன் மனைவியாகிய வள்ளி இப்படி உடம்பெல்லாம் வீங்கியிரக்கிறதே மருத்துவரிடம் காட்டக் கூடாதா எனக் கேட்ட நிலையிலும் அவன் அதனைப் பொருட்படுத்த வில்லை. பிறகு ஒரு நாள் வைத்தியரிடம் சென்ற பொழுது சந்திரனுக்கு மேக நோய் உள்ளதாக அவர் கூறுகிறார். ஆனால் அது தொழுநோயாக முற்றும் எனக் கூறவில்லை. அவ்வேளையிலும் அவன் அதனை கண்டுக் கொள்ளவில்லை.

> *யாரோ ஒரு பைத்தியக்காரன் என்னைக் கெடுத்தான் உடம்பில் இந்திரியம் தேங்கிய புளிப்பதால் தான் இப்படி மேகம் ஏற்படுகிறது என்று பொய் சொல்லிக் கெடுத்தான்*

இவ்வாறு சந்திரன் சொல் புத்தியுமின்றி, சுய புத்தியுமின்றி இறுதியில்

தொழு நோயினாலேயே இறந்து விடுகிறான். இங்கு சந்திரனது விழிப்புணர்வின்மையே இச்சமுதாயத்திற்கு ஒரு விழிப்புணர்வு சிந்தனையாக விளக்கப்பட்டுள்ளது.

முடிவுரை

1. வேலய்யனின் மூலம் எளிய வாழ்வின் மேன்மையும் சிறப்பும் உணர்த்தப்படுகிறது.
2. கல்வி கற்றபடி வாழ்கின்ற நிலையில் தான் அதன் மகத்துவம் விளங்கும் என்ற சீரிய கருத்து புலனாகிறது.
3. பெண்கள் தன் சுய உரிமைகளைப் பெற்று வாழ துணிய வேண்டும். ஒருவனுக்கு ஒருத்தி என்ற மனப்போக்கும், கைம்பெண்கள் தன் சிந்தனைகளை நல்வழியில் செலுத்திட வாழ்வதன் தன்மையும் அறிவுறுத்தப்படுகிறது.
4. எழுபதுகளில் வெளியான நாவல்கள் அனைத்தும் தொழு நோய் ஒரு பால்வினை (i) பாவ நோய என்றே விளக்கியுள்ளது. இதில் மு.வ. மட்டும் விதிவிலக்கல்ல. அது அவர் காலத்து சமுதாய நிலையாகும் எனவும், இது போன்ற பல்வேறு சமுதாயச் சிந்தனைகள் இந்நாவலால் உணர முடிகிறது.

94. மு. வ. வின் கரித்துண்டு புதின மையக்கரு

ஜெ. புஷ்பலதா
எம்.ஃ.பில் தமிழ் இலக்கியம்
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
கொடைக்கானல்

முன்னுரை

புதினத் துறையில் டாக்டர்.மு.வ. அவர்கள் வளர்ச்சியும் வளமும் பெற்ற காலக்கட்டத்தில் வெளிவந்த புதினம் கரித்துண்டு, புதினங்களின் கருப்பொருளால் பலரையும் ஈர்த்தது கரித்துண்டு. கற்புப் பற்றிய விளக்கங்களை ஒரு பேராசிரியர் எடுத்து மொழிபெயர்த்துள்ளார் என்ற நிலையில் சிலரது இகழ்ச்சிக்கு காரணமாய் அமைந்தது இந்தப் புதினம்தான்.

மு.வ.வின் படைப்பு

தம் சிந்தனையின் ஒவ்வோர் அசைவையும், தம் பேனாவில் ஊற்றப்பெற்ற மையின் ஒவ்வொரு துளியையும் தமிழ்மொழி, தமிழ் இன உணர்வோடு தமிழகம் வாழ, உலகம் வளரப் பயன்படுத்திய எழுத்தாளர் பேராசிரியர் மு.வ.

நாவல்கள் - 13, சிறுகதைகள் - 2, சிந்தனைக்கதை - 2, நாடகம் -6, கட்டுரைநூல் - 11, இலக்கியம் - 24, சிறுவர் இலக்கியம் - 4, கடித இலக்கியம் - 4, பயண இலக்கியம் -1, இலக்கிய வரலாறு -1, மொழியியல் - 6, வாழ்க்கை வரலாறு - 4, ஆங்கில நூல் - 2, சிறுவர் இலக்கணம் - 3, மொழிபெயர்ப்பு நூல் - 2, என்று படைத்துள்ளார்.

கரித்துண்டு நாவலின் மையக்கரு

ஓவியன் ஒருவரைத் தலைமைக் கதை மாந்தராக வைத்துப் பின்னப்பட்ட புதினம் கரித்துண்டு. ஓவியருடைய இரட்டை வாழ்க்கையும் அவர் மனைவியின் இரட்டை வாழ்க்கையும் இப்புதின வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிகின்றன.

கரித்துண்டு நாவலின் கதைச் சுருக்கம்

ஓவியர் மோகன், தன்னைக் காதலித்த மாதுரியை விட்டு நிர்மலாவைக் கைப்பற்றுகிறான். நிர்மலா ஓவியரின் வாழ்க்கையில் திருப்தி அடையவில்லை. இந்நிலையில் ஓவியர்தான் வரைந்த அழகிய பெண் ஓவியத்திற்கு வனப்பான கால் அமைப்பினைத் தேடி தெருவில் அலைகிறார். சாலையின் எதிர்ப்புறத்தே தன் ஓவியத்திற்குத் தேவையான 'கால்' அமைப்பினை காண்கிறார். இந்த நிலையில் தன்னை மறந்து தெருவின் நடுவில் இறங்க, அவர், தம் கால்களை இழக்கும் படி நேரிடுகிறது. நிர்மலா தன் கணவன் கால்கள் இழந்தமை அறிந்து அவரை விட்டுப் பிரிகிறார். பின் பேராசிரியர் கமலக் கண்ணனைச் சந்திக்க நேர்கிறது.

அவரது சொற்பொழிவில் ஈடுபடுகிறாள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழ்கின்றனர். இதற்கிடையில் ஓவியர் மோகன் முடவனாய் வறுமையுற்றுக் கரித்துண்டால் தரையில் ஓவியம் எழுதிப் பிழைத்து வந்தார். திருவேங்கடம் அவரது ஓவியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு ஓவியரது வாழ்வைப் பற்றி அறியத்துடிக்கிறார். ஒரு சமயம் பொய்க்குற்றம் சுடத்தப்பட்டுச் சிறை செல்ல நேரும் போது ஓவியர் தன் கதையைத் திருவேங்கடத்திடம் கூறுகிறார். திருவேங்கடம் பேராசிரியருக்குக் காட்டிய படங்களுள் ஒரு படம் நிர்மலாவின் சிந்தனையைத் தூண்டுகிறது. பழைய வாக்கை நினைவூட்டப்படுகிறது. ஒரு சமயம் நிர்மலாவே காரிலிருந்தபடி முடமான ஓவியரைக் கண்டும் அவருடைய ஓவியங்களைப் பார்த்தும் சிந்தனை வயப்பட்டுத் தன் பழைய வாழ்க்கையையும் நீண்டதொரு மடல் வழியே எழுதிவிட்டுப் பேராசிரியர் கமலக் கண்ணனைப் பிரிகிறார்.

இப்புதினத்தில் கதையில் வரும் பாத்திரம் கதை கூறுவதாக அமைத்துள்ளார் நிகழ்ச்சி அமைப்பை விடச் செயலுணர்வும் சிந்தனைக் கோவையும் மு.வ புதினத்தின் முற்பகுதியில் உரையாடல் மிகுதி. பிற்பகுதி புதினத்தின் உயிரோட்டமான பகுதி. முற்பகுதி ஏழை, பணக்கார வேறுபாட்டையும் பொருளாதார ஏற்றத் தாழ்வையும் கூறுகிறது.

நாகரிக உலகப் போக்கினைக் கற்பின் வழியே அவர் இப்புதினத்தில் எடுத்துக் கூறியமை பலருக்குக் கசப்பாக இருக்கலாம். உண்மை கசக்கத்தானே செய்யும் என்னோடு வாழும் போது உண்மையானவளாக, ஒழுக்கமுள்ளவளாகக் கற்புள்ளவளாக இருக்கிறேன். அதுபோதும்! ஒருவனை விடாமல் இன்னொருவருடன் வாழ்வது தான் தவறு. எப்போதும் எவனுடன் வாழ்கிறானோ அப்போது அவனுக்கு அவள் துரோகம் செய்யாமலிருந்தால் போதும், அது தான் கற்பு என்ற புதிய கற்பிலக்கணத்தைக் கமலக்கண்ணன் வாயிலாக நாவல் ஆசிரியர் எடுத்தாண்டமை காலப் போக்கினையும் வேக மாற்றத்தினையும் காட்டுவதாக உள்ளது. ஒருவனை விட்டு இன்னொருவருடன் வாழும் படியாக நேரலாம்" என்பதனைச் சூழ்நிலையின் அடிப்படையில் நிர்மலாவின் மேலோட்டமாகக் காணலாம்.

முடிவுரை

கரித்துண்டு புதினம் கூறுகின்ற முறையிலும் எடுத்துக் கொண்ட கருவமைப்பிலும் டாக்டர். மு.வ.வின் புதினங்களுள் தன்னிகரற்று விளங்குகிறதெனலாம். மு.வ.வின் மோகன் உலகில் அறிந்து சிறந்த வழி வகைகளைச் சித்தரிக்கும் கரித்துண்டு மு.வ.வின் கணக்கற்ற வாசகர்களுக்கு மட்டுமின்றி அவருக்குமே மிகப் பிடித்த படைப்பு என்று நூல் கூறுகிறது. எனவே கரித்துண்டு படிப்போர்க்குக் கரித்துண்டு கற்கண்டு.

95. கரித்துண்டு நாவலில் சமுதாய சீர்திருத்தக் கருத்துக்கள்

நீ. சரண்யா
ஆய்வாளர்
தூய நெஞ்சக் கல்லூரி
திருப்பத்தூர்

எண்ணற்ற படைப்புகளுக்கு உரியவரான மு.வ.வின் எழுச்சிக்கு படைப்பு கரித்துண்டாகும். ஒரு நாவல் எதேனும் ஒரு சமுதாயச் சீர்திருத்தக் கருத்தினை மட்டும் மையமாகக் கொண்டிருக்கும். ஆனால் கரித்துண்டு அன்றைய சமுதாயத்தில் எவை எல்லாம் முக்கியப் பிரச்சனைகளாக இருந்தனவோ அவற்றை எல்லாம் இக்கதையின் கருவாக கொண்டுள்ளது.

பொதுவுடமைச் சிந்தனை

பொதுவுடமை சமுதாயம் என்பது எல்லோர்க்கும் எல்லாவற்றையும் கொடுக்கும் சமுதாயம் என்பது பொதுவுடமைவாதிகளின் கருத்தாகும். முதலாளித்துவத்தை ஒழிப்பதுவே பொதுவுடமைச் சிந்தனையின் முக்கியக் குறிக்கோளாகும். மு.வ. தனது நாவலில் ஒரு கதாபாத்திரத்தின் மூலம் பொதுவுடமைச் சமுமதாயத்.தினைப் பற்றியக் கருத்துக்களை மெல்ல பரப்புகின்றனர். குமரேசன் என்ற கதாபாத்திரம் சமுதாயத்தின் ஏற்ற இறக்கத்தினைக் கண்டு பதைக்கிறார். அதற்காக தொழிலாளர்களை ஒன்று திரட்டி பொதுவுடமைச் சமுதாயத்தினைப் பற்றி கருத்துக்களை தொழிலாளர்கள் முன்னிலையில் வைத்து அவர்களின் அறியாமையை போக்க எண்ணுகின்றனர்.

சமுதாயம் முன்னேற வேண்டும். அனைத்தும் கிடைக்க ஒரே வழி பொதுவுடமைச் சமுதாயம் என்பதனை மு.வ. அறிந்திருக்கிறார். அந்த முற்போக்கு சிந்தனையை படிப்பவர்களின் மனதில் ஆழ பதிக்கவே குமரேசன் என்றகதாபாத்திரத்தினைப் படைத்துள்ளார் மு.வ., குமரேசன் பொதுவுடமைவாதியாக இருந்ததால் அவன் பெற்ற எதிர்ப்பினையும் அழகாக காட்டியுள்ளார் ஆசிரியர்..

மனித நேயம்

உலகம் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஒருவருக்கு ஆபத்து என்றால் நின்று அவர்களுக்கு உதவுவதற்கு கூட நேரமில்லை, மனமும் இல்லை. ஆனால் சிலர் விதிவிலக்காக மனிதநேயத்துடனும் செயல்படுகின்றனர். இந்த இரண்டு பிரிவினைப் பற்றிய செய்திகள் இந்நாவலில் அதிகமாக இடம் பெற்றுள்ளது.

1. மனித நேயத்தினைக் கொன்றவர்கள்

மனிதநேயத்தினைக் கொன்றவர்களாக இந்நாவில் கூறப்படுபவர்களில் முதன்மையானவராக நிர்மலாதான் இருக்கிறார். நிர்மலா தன்னுடைய தோழியின் காதலனை தன்னுடையவளாக்கி தோழிக்கு தீங்கு செய்தாள், தன் கணவன் காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார் என்ற செய்தியை அறிந்தும் அவரைச் சென்றுக் காணவில்லை. அவருடைய கால்கள் அகற்றப்பட்ட உள்ளது என்பதை நன்கறிந்தும் அவரைப் பிரிய முடிவெடுக்கின்றாள். தான் இத்தனை நாட்களாய் வாழ்வினைப் பகிர்ந்துக் கொண்டவரின் துன்பத்தினைப் பகிர்ந்துக் கொள்வதற்கு மனம் இல்லை என்பது வருத்தமானது. மனித நேயம் இருந்தால் இத்தகைய செயலை செய்ய துணியமாட்டர்கள். பொதுவுடமைச் சிந்தனையை தொழிலாளர்களிடம் பரப்பி விழிப்புணர்வினை ஏற்படுத்துகிறார் குமரேசன். ஆனால் அதனை காண சகிக்காத முதலாளி வர்க்கம் குமரேசனை ஆட்களைக்கொண்டு தாக்குகின்றது. தன்னுடைய சுயநலத்திற்காக, பொதுநலத்துடன் தொண்டு செய்தவரை இப்படி தாககலாமா. இது மனித நேயமற்ற செயல். இத்தகைய கொடியவர்கள் மனித உருவில் உள்ள விலங்குகளாவர்.

2. மனிதநேயக் காவலர்கள்

எத்தனையோ மனித நேயமற்றவர்களின் நடுவில், மனித நேயத்துடன் தங்களின் பணியை செய்பவர்களும், இருக்கத்தான் செய்கின்றனர். இக்கதையில் மனிதநேயம் கொண்டவர்களாக சிலரை மு.வ. காட்டுகிறார். இவர்களில் முதன்மையானவர் திருவேங்கடம். இவர் சாதாரண குடும்பத்தின் தலைவனாக இருந்தபோதிலும் அற்புதமான ஓவியக்கலை தரையில் விழுந்துக் கிடப்பதனைக் காண சகியாமல் அவர் பின்னே சென்று அவருக்கு தன்னால் முடிந்த அளவு உதவி செய்கிறார். மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தன் வீட்டில் தங்க இடம் கொடுத்து ஆதரவளிக்கின்றார். இவர் மனித நெயத்தின் காவலராக திகழ்கின்றார். மொகன் என்ற ஓவியரின் நண்பர்கள் ஓவியருக்கு விபத்து ஏற்பட்ட போது ஓடிவந்து உதவி செய்தனர். மருத்துவத்திற்கு தேவையான பொருளுதவியைச் செய்தனர். தினமும் சென்று அவரைச் சந்தித்து ஆறுதலாக பேசி வந்தனர். இவை சாதாரண செயல்தான். ஆனால் உறவினரால் கைவிடப்பட்ட நிலையில் உள்ள ஒருவருக்கு இத்தகைய உதவி மிகப்பெரியதாக இருந்திருக்கும். ஆபத்து காலத்தில் தன் காலத்தில் தன் நண்பனுக்கு உதவிய இவர்களும் மனிதநேயக் காவலராவார்கள்.

ஓவியர் தன் வாழ்விழந்து, கால்களையும் இழந்து தமிழ்நாட்டிற்கு வந்து சேர்ந்தபோது அவருக்கு உணவு கொடுத்து ஆதரித்தவள் குந்தம்மாள்.

அவள் தான் பொன்னியை ஓவியருடன் சேர்த்து வைத்தவள். ஓவியரின் வாழ்வில் மிகப்பெரிய திருப்பு முனையினை ஏற்படுத்தியவள் குந்தம்மாள். ஏழ்மை எனிறும் மனிதநேயத்தை சாகடிக்கச் செய்யாது என்பதனை குத்தம்மாவின் கதாபாத்திரம் தெளிவாக்குகின்றது.

முப்பாலின் பெருமை

உலகப்பொதுமறை நூலினைச் சிறப்பித்து இந்நாவலில் கூறியுள்ளார் மு.வ. திருக்குறளைப் படிப்பதென்பது அனைவராலும் மடிந்த செயலே. ஆனால் படித்து அதன் வழி நடப்பதென்பது அனைவராலும் முடியாது. இந்த நாவலில் தவறு செய்த பெண் தனது தவறைக் குறளின் மூலமே உணர்கின்றாள். இந்நாவலில் ஒரு பெரியமாற்றத்தை ஏற்படுத்தியது திருக்குறளே. தான் செய்த பாவம் குறளைப் படிப்பதினால் அவளுக்கு தெளிவாகின்றது. அந்த பாவச் செயல் அவள் மனதினை வாட்டி வதைக்கின்றது. தன் தவறுகளை உணர்ந்த மிகவும் வேதனைப்படுகின்றாள். எத்தனையோ பேர் இத்தகைய தீய பாதையில் சென்றுவிடுகின்றனர். இவர்கள் பெருமை பொருந்திய குறளினைன் கற்பதன் மூலம் நல்வழிப் பாதையில் செல்ல முடியும். இதனை சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார் ஆசிரியர்.

ஓவியக்கலை

இந்நாவல் முழுவதும் ஓவியர் ஒருவரின் வாழ்வினை மையமாகக் கொண்டுள்ளது. ஓவியக்கலையில் சிறந்தவராக உள்ள ஓவியர் முதலில் பல வண்ணங்களில் அழகான ஓவியங்களை வரைகின்றார். கலையுணர்வு அதிகமாகி தன்னை மறந்து தன் காலினை இழந்துவிடுகிறார். தன் வாழ்வையும் இழந்துவிட்டு வறுமைக்கு ஆளாகின்றார். இருந்தபோதிலும் தன்னுடையக் கவலையை அழியாமல் பார்த்துக் கொள்கிறார். வண்ணங்களைக் கொண்டு வரையப்படும் ஓவியம் மட்டும்தான் அழகானது என்பதனை மறுத்துள்ளது இந்நாவல். கரித்துண்டினைக் கொண்டு கரடுமுரடான பாதையில் ஓவியர் வரைந்த வளர்ந்த ஓவியமும் மிகவும் நுட்பமாகவும் அழகாகவும் இருப்பதாக ஆசிரியர் காட்டியிருக்கிறார். இது கலையின் பெருமையை அனைவருக்கும் உணர்த்துவதாக உள்ளது.

ஏழைகளின் பெருமை

இன்றைய நகரங்கள் நாகரிகம் என்ற பெயரில் மனித நேயத்தினையும், பண்பாடு, கலாச்சாரம் போன்றவற்றையும் குழிதோண்டி புதைத்து வைத்துவிட்டனர். ஆனால் கற்பு, ஒழுக்கம், மனிதாபிமானம் போன்றவற்றின் உறைவிடமாக ஏழைகளே திகழ்கின்றனர். அதற்கு சான்றாக சில கதாபாத்திரங்களைப் படைத்துக் காட்டியிருக்கிறார் ஆசிரியர்.

அந்நாவலில் வரும் குத்தம்மாள் வறுமைக்கு ஆளாகி மிகவும் இன்னல்களை அனுபவித்து வருகின்றாள். அத்தகைய சூழ்நிலையிலும் தன்னை தவறான நோக்கத்திற்காக அணுகிய ஓவியரைத் தடுத்து நிறுத்தி கற்பினைக் காத்துக் கொள்கிறாள். ஏழைகள் எதனை இழந்தாலும் ஒழுக்கத்தை தங்கள் உயிராக உண்ணி அதனை இழக்கமாட்டார்கள் என்பதனை இக்கதாபாத்திரத்தின் வழியே உயர்த்துகிறார் ஆசிரியர். வசதியான நிலையில் இருந்து வறுமைக்கு தள்ளப்பட்ட ஓவியர் ஏழ்மையில் இருந்து பல நன்மைகளைக் கற்றுக் கொள்கிறார். ஒரு நாளைக்கு ஒரு ரூபாயை மட்டும் தனது குடும்பத்தின் தேவையாகக் கொண்டுள்ளார். தேவைக்கு அதிகமாக உள்ளப் பொருட்களை இல்லையென்று கேட்பவருக்கு கொடுத்து உதவுகின்றார். ஓவியர் ஏழைகளிடம் பழகியதால்தான் அவர்களைப்போன்று நல்ல உள்ளம் இவருக்கும் தோன்றியிருக்கும்.

நாகரிகமான தோற்றத்தில் உள்ள துரோகிகள்

ஏழைகளைக் கண்டால் அறுவருக்ககின்றனர் சிலர். நாகரிகமானவர்களை கண்டால் அவர்களை விரும்பி இஅவர்களிடம் பேசுகின்றனர். ஏதேனும் தவறு நடக்கின்ற இடதிதில் ஒரு ஏழையும், நாகரிகத்தோற்றம் கொண்டவர்களும் இருக்கும்போது அனைவரும் ஏழையைத்தான் சந்தேகிக்கின்றனர் என்பதனை மு.வ. அழகாக விளக்கியுள்ளார். தோற்றத்தை கொண்டு மனிதனை எடைப்போடும் சமுதாயத்தினை தோலுரித்துக் காட்டியுள்ளார் ஆசிரியர். ஒரு பயணி திருட்டு கொடுத்தப் பணத்தை தேடிக்கொண்டிருக்கிறார். அங்கு வந்த காவலாளி அதனை நம்பாமல் கொடுத்தப் பணத்தைப் பறிக்கொடுத்தவனையே சந்தேகித்து காவல் நிலையத்திற்கு அழைத்து செல்கின்றார். இவை ஏழைகளுக்கு மக்கள் செய்யும் கொடுமை நாகரிகமான தோற்றத்தில் இருப்பவர்கள்தான் பல தீயசெயல்களுக்கு காரணமாக இருக்கின்றனர் என்பதனை யாரும் அறிவதில்லை. நாகரிகமான தோற்றத்துடன் அதிகமாகப் படித்தவர் பேராசிரியர் கமலக்கண்ணன். அவரிடம் பேசினால் பல நூல்களைக் கற்றதன் பயன் கிடைக்கும் என்கிறாள் குமரேசன். ஆனால் அவரோ பெதுவுஇடமைச் சிந்தனையை ஏற்க மறுக்கிறார். முதலாளிகளுடன் இணைந்து குமரேசன் தொழிலாளர்களுக்கு கொடுக்கும் விழிப்புணர்வினைத் தடைச்செய்கிறார். இதுதான் இன்றைக்கு படித்தவர்களின் நிலையாக உள்ளத. தான் மட்டுமே வளமாக வாழ வேண்டும் என்ற எண்ணம்தான் படித்தவர்களிடம் மேலோங்கிக் காணப்படுகிறது.

பெண்களின் நிலை

இந்நாவலில் வரும் பெண் கதாப்பாத்திரங்கள் நாகரிகமான

பெண்கள், சாதாரணமான பெண்கள் என இரண்டு வகையினராக உள்ளனர். திருவேங்கடத்தின் மனைவி நாகு. அவர் வீட்டு வேலைகளை அழகாக சுமக்கும் குடும்பத் தலைவியாக உள்ளார். வீட்டையே தன்னுடைய உலகமாக நினைத்து வாழ்கின்றாள். குந்தம்மாள் எவ்வளவு தான் சோதனையும், வறுமையையும் தன்னை வாட்டி வதைத்தாலும் மானத்துடன் வாழ நினைக்கிறாள். பொன்னி வறுமையால் வாடிக்கொண்டிருந்த சூழலில் ஓவியரை மணந்து தன் கடமையைச் சிறப்பாக செய்கிறார். தன் காதலரை வஞ்சகத்தினால் இழந்து தவிக்கிறாள் மாதூரி. வசதியான வாழ்விற்காக தான் காதலித்த மணந்த தன்னுடைய கணவனைப் பிரிந்து வந்துவிட்டாள் நிர்மலா என்று மு.வ. பெண்கதாபாத்திரங்களை படைத்துள்ளார். மேற்கூறியவற்றில் சிறந்த பண்புகளைக் கொண்ள்ளவர்களை நமது வாழ்வின் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்ற காரணத்தினால் இத்தகைய முரண்பாட்டினை அமைத்துள்ளார் ஆசிரியர்.

கற்பனைக்காகவும், பொழுதுபோக்கிற்காகவும் இலக்கியங்கள் படைக்கப்படுகின்றது. சமுதாய முன்னேற்றத்திற்காகவும், ஏழைகளின் துன்பத்திற்காகவும், சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளை மையப்படுத்தி தங்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தி,. சமுதாய சீர்திருத்தத்தினை உண்டாக்க வேண்டி இத்தனை அருமையான நாவலைப் படைத்துள்ளார் மு.வ. முப்பாலைப் போற்றியுள்ள இந்நூலினைப் படிப்பவர்களும் குறளின் வழியே நமது வாழ்வினை அமைத்துக் கொள்வோம். துன்பத்திலும், வறுமையிலும் தள்ளப்படுபவர்களின் துயரினை துடைப்போம். ஆடம்பரத்தில் சிக்கி தவிக்காமல் அழகான வாழ்வினை அன்போடு வாழ்வோம் வெற்றியடைவோம்.

96. டாக்டர் மு. வ. வின் நாவல் நடை

சு. தீபா
தமிழ்த்துறை விரிவுரையாளர்
ஸ்ரீபாரதி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
குண்ணத்தூர்
ஆரணி 632 314.

முன்னுரை

நாவல் என்பது மனித உறவுகள், எண்ணங்கள், செயல்கள் ஆகியவற்றை விளக்கிக் காட்டும் உரைநடையில் அமைந்த நீண்ட கதை. இது நடைமுறை வாழ்க்கையின் பிரதிபலிப்பாக அமைவது. ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட பாகங்களையோ கொண்டு அமையும் உரைநடைக் கதை வாழ்க்கையோடு பெரிதும் தொடர்புடையதாக அமைத்து எழுதப்படுவது நாவல்.

டாக்டர் மு.வ.வின் கதைத்திட்டம்

ஒரு நிகழ்ச்சியை விளக்கும் கதைத்திட்டத்தை எளிய கதைத்திட்டம் என்றும் ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகளைக் கொண்டவற்றை, பன்னிகழ்ச்சிக்கு கதைத்திட்டம் என்றும் வழங்குவர். இணைக் கதைத் திட்டம் உள்வினைக் கதைத் திட்டம் எனவும் அமைக்கப்படுவது உண்டு மு.வ-வின் நாவல்களில் செந்தாமரை, கள்ளோ? காவிமோ? பாவை, வாடாமலர், மண்குடிசை, மலர்விழி, அல்லி போன்றவை இணை கதைத்திட்டத்தில் அமைந்தவை. நெஞ்சில் ஒரு முள் உள்வினைக் கதைத் திட்டம்.

டாக்டர் மு.வ.வின் பாத்திரப்படைப்பு

டாக்டர் மு.வ-வின் நாவல்களில் பாத்திரப் படைப்பை இரு வகையாகப் பிரிக்கலாம். 1. வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகளை எதிர்கொண்டு, நெறியோடு வாழ்வது. 2. சூழ்நிலை காரணமாகத் தவறு செய்து துன்பங்களுக்கு ஆளாகி நல்லொழுக்க நெறி செல்வது என்ற வகையிலே தான் மு.வரதராசனாரின் நாவல்கள் அமையும்.

செந்தாமரை

செந்தாமரை மு.வரதராசனாரின் முதல் புதினம். இதற்கு ஆசிரியர் இட்ட பெயர் முருங்கைமரம். இதில் திலகம், செந்தாமரை ஆகிய இருவர் கதையும் அடங்கியுள்ளது. இரு கதைப்பாத்திரங்களும் வீட்டை விட்டு வெளியேறுவதும், வேறொருவர் உதவியை நாடுவதும் என்ற வகையில்

எழுதப்பட்டிருக்கும். ஆனால் செந்தாமரை நல்வழி புகட்டுவதாகவும், திலகம் தடுமாறும் மனப்போக்கில் தவறுவதாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

நெஞ்சில் ஒரு முள்

வடிவு என்னும் கதை பாத்திரம் கணவனை விட்டு பிரிவது, கற்பழிப்பது, திரும்பி வந்து கணவனோடு வாழ்வதுஈ, கற்பிழந்த மனப்போராட்டத்தில் தவிப்பது நெஞ்சில் ஒரு முள்ளின் கதையமைப்பு.

கணவனின் ஒழுக்கக் கேட்டால் வடிவு குடும்பத்தை விட்டு பிரிவது, சென்னைக்குச் செல்வது, அங்கு பழைய காதலனால் பாதை மாறுவது, தான் செய்த தவறால் கணவனின் தவறுகளைப் பொறுத்துக் கொள்ளும் மனத்தெளிவு பெற்று கணவனோடு வாழ முற்படுதல், மற்றொரு கதைப்பாத்திரமான நிர்மலாவும் கமலக்கண்ணனோடு பெற்ற மறுவாழ்வில் அமைதியிழந்து அவனைப் பிரிந்து வெளியேறுவதும், அவளது செயலால் கணவனுக்கு ஏற்பட்ட துன்பங்களை எண்ணிப் பார்க்கும் மனச் சான்றாகவே இருப்பது இங்கு அறியத்தக்கது.

இளம் வயதில் நெறி தவறிய விஜயா அம்மையார் தெளிவு பெற்றுத் தன் கைப்பிள்ளையோடு சீர்திருத்தக்காரனான மற்றொருவனைக் காதலித்து மணந்து அவனோடு விட்டுக் கொடுத்து வாழ்ந்து வாழ்வில் வெற்றி பெறுகிறாள். மற்றொரு கதைப்பாத்திரமான கீதாவும் இளமைக் காலத்தில் தவறுகிறாள். குழந்தை பிறந்து விடுகிறது. சீர்திருத்தக்காரனாகிய கண்ணழகனை மணக்கிறாள்.

இப்படி எந்த கதையிலும் மு.-வ-வின் சித்தரிப்பு ஒரே தன்மையில் அமைந்திப்பதை கற்போரால் நிச்சயம் உணர முடியும். மு.வ-வின் செந்தாமரை, கள்ளோ? காவியமோ? பாவை, வாடாமலர், மண்குடிசை, கரித்துண்டு, நெஞ்சில் ஒரு முள். மலர்விழி, அல்லி ஆகிய ஒன்பது நாவல்களும் ஏறக்குறைய ஒரே திட்டத்தின் அடிப்படையில் அமைந்திருப்பதாகவே கொள்ள முடிகிறது.

கள்ளோ ? காவியமோ? மற்றும் அல்லி

கள்ளோ? காவியமோ? கதைத் தலைவி மங்கையும், அல்லியின் கதை தலைவி அல்லியும் ஒரே தன்மையில் சித்தரிக்கப்பட்டிருப்பர். இரு கதை பாத்திரங்களும் தத்தமது கணவிடம் கொண்ட மனக்கசப்பால் பிரிய நேர்வதும், வழி தவறாது வாழ முற்படுவதும் என்ற வகையில் மு.வ. அமைத்திருப்பார். இருவரும் கணவனைப் பிரிந்து வெளியூர் சென்று உரிமையோடு வாழ்ந்தும் ஒழுக்கம் கெடாமல் திரும்பி வருகின்றனர்.

அந்த நாள்

மங்கை, அல்லி கதைப்பாத்திரங்களைப் போலவே, அந்த நாள்

கதாநாயகி பொன்முடியின் பாத்திரப்படைப்பும் அமைத்திருப்பது மு.வ-வின் நாவல் நடை இரங்கூன் ஜப்பானியர் குண்டுவீச்சின் போது பொன்முடி தன் கணவன் ஆறுமுகம் மற்றும் மகளுடன் கால்நடையாகவே தமிழகம் வருகிறாள். வழியில் ஆறுமுகம் மலேரியா காய்ச்சலில் இறக்கிறான். மகளும் பிரிகிறாள். நீலமேகம் என்ற தீயவனுடன் சென்னை வருகிறாள். மகளோ பத்தாண்டுகள் சிறை செல்கிறாள்.

கணவனையும் இழந்து மகளையும் பிரிந்து தத்தளித்த பொன்முடி சோகத்தின் எல்லைக்குச் சென்றவளாய் ஏழைப் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடம் நடத்த திட்டமிடுகிறாள். இவளும் மங்கை, அல்லியைப் போல நெறி தவறாமல் வாழ்ந்து காட்டுகிறாள்.

டாக்டர் மு.வ-வின் பெண்பாற் பாத்திரங்கள்

நெஞ்சில் ஒரு முள் கதாநாயகி வடிவு, மலர்விழி, மண்குடிசையின் கதாநயாகி ரேவதி, மங்கை நல்லாள், பாவை, பெற்றமனத்தின் கதைத்தலைவி முனியம்மா போன்றவர்கள் ஒரு அச்சில் வார்க்கப்பட்டது போல் ஒரே குண இயல்புகளுடன் வெவ்வேறு பெயர்களில் நிகழ்ச்சிகளில் பங்கு பெறுகின்றனர்.

ஆண்பாற் பாத்திரங்களின் படைப்பு

டாக்டர் மு.வ-வின் ஆண்பாற் பாத்திரங்களும் ஒரே இயல்புள்ளவர்களாக அமைத்திருப்பது அறியத்தக்கது. டாக்டர் மு.வ-வின் தலைமைப் பாத்திரங்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் வாடாமலர் கதாநாயகன் தானப்பன். நெஞ்சில் ஒரு முள் கதாநாயகன் அகோர் போன்றோராவர். பொதுவாக இவரது நாவல்களில் தலைமை பாத்திரம், துணைப்பாத்திரம் என்று வேறுபடுத்திக் காண்பது கடினமே.

மொழி நடை

தமிழ் நாவலாசிரியர்களில் டாக்டர் மு.வ. கட்டுரை நூல்களில் பெற்ற வெற்றியை நாவலில் பெற முடியாமைக்குக் காரணம் கட்டுரைக்கும் கதைக்குமான மொழி நடையில் வேறுபாடு உணர்த்தாமையே. டாக்டர் மு.வ-வின் மொழி நடையில் கல்லூரிப் பேராசிரியர் முதல் தோட்டக்காரன் வரை பிச்சைக்காரியிலிருந்து படித்த பெண் வரை, டாக்டராயிருந்தாலும் கல்லூரி மாணவனாயிருந்தாலும், படித்தவனானாலும், படிக்காதவனானாலும் தூய தமிழில் பேசுவது போலவே எழுதியிருப்பார். இது படிப்போருக்கு நெருடலைத் தரும் என்பதில் சந்தேகமே இல்லை.

மண்குடிசையில் வரும் ஒரு பைத்தியக்காரியின் பேச்சை, "எத்தனை நாள் இப்படி என்னைத் தனியே விடுத்து அவள் பின்னே கற்றப்போகிறாய்? நான். கிழவியா? நானா கிழவி? அவள் மட்டும் இப்படியே இருந்து

விடப்போகிறாளா?" என்று அமைத்திருப்பார். இது நாவல் நடையல்ல. கட்டுரை என்பது படிக்கும்போதே புரிந்து விடும். கதைப்பாத்திரத்திற்கும் உரையாடலுக்கும் இடையேயான பொருத்தமின்மை புலப்படும்.

டாக்டர் மு.வ-வின் மொழிநடை நாவலுக்கு ஏற்ற நடை இல்லை என்றாலும் அவரது கதைப் பாத்திரங்கள் சில கொள்கைகளை விளக்குவதற்காக மாறுபட்ட பெயர்களைத் தாங்கிய கற்பனைப் படைப்புகள் எனலாம். வரதராசனாரின் நாவல்களில் பாத்திரங்கள் எலும்பும் தசையும் கொண்டு ஆக்கப்படுவன அல்ல. மனித சிந்தனையின் பிரதிநிதியாகவே உள்ளனர் என்பார் டாக்டர் கைலாசபதி.

வேறுபாடு காண்பது அரிது

டாக்டர் மு.வ. படைத்த பதினைந்து புதினங்களில் இருநூற்.று ஐம்பதுக்கும் மேற்பட்ட கதாபாத்திரங்களைப் படைத்துள்ளார். அவர்களுள் கதை வளர்ச்சிக்குப் பயன்படுபவர் ஒரு சிலரே. பெரும்பாலானவை ஓரிரு இடங்களில் ஒரு சில வார்த்தைகளைப் பேசி வந்து போகும் கதாபாத்திரங்களே. அதிலும் எது தலைமை கதாபாத்திரம், எது துணை கதாபாத்திரம் எனப் பிரித்தறிவதும் கடினமே. சொன்ன கருத்தையே திரும்பத் திரும்பச் சொல்வதாலும் வேறுபாடு அறிவது கடினமாகிறது. இவரது படைப்பில் கதைமாந்தர்கள் இயல்பு வாழ்க்கையில் அமைந்த மனிதர்களைப் போல இருக்க மாட்டார்கள். சில பண்புகளின் தொகுப்பாக வும், சில இலக்கண வரம்புகளுக்குட்பட்டும் அமைக்கப்பட்டிருப்பார்கள். பெயர்களில் தான் வேறுபாடே தவிர, பேச்சிலோ, கதையமைப்பிலோ, பாத்திரப் பண்பிலோ ஒரே தன்மையில் அமைக்கப்பட்டிருப்பதால் டாக்டர் மு.வ-வின் பாத்திரம் படைப்பில் வேறுபாடு காண்பது கடினமே.

முடிவுரை

சிறந்த கதைக்கரு, செறிவான கதைத்திட்டம், அழுத்தமான கதாபாத்திரங்கள், நேர்த்தியான உரையாடல், ஒழுக்கத்தை வலியுறுத்தும் பின்னணி என எல்லா வகையிலும் டாக்டர் மு.வி-வின் நாவல்கள் உணர்வுகளோடும், நாகரிகத்தோடும் வார்க்கப்பட்டிருப்பது நன்குபுலனாகிறது.

97. டாக்டர் மு. வரதராசனார் பெருவாழ்வு

ம. விஜயலட்சுமி
முனைவர் பட்ட ஆய்வாளர்
எத்திராஜ் மகளிர் கல்லூரி
சென்னை.

இருபதாம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்களின் சீரிய தமிழ்த்தொண்டு முதன்மையான இடம் பெறுவதாகும். அவர் ஈடு இணையற்ற பெரும் எழுத்தாளராக விளங்கினார். உலாகத் தமிழர்களின் உள்ளங்களைக் கவர்ந்த முதல் தமிழராக அவர் திகழ்ந்தார். மு.வ. என்ற செல்லப் பெயர் ஒலிக்காத தமிழ் இல்லங்களும் நல்லுள்ளங்களும் இல்லை எனலாம்.

மு.வ. அவர்கள் அருமை அன்னை அம்மாக் கண்ணம்மாளுக்கும் அறிவில் சிறந்த தந்தை முனுசாமி அவர்களுக்கும் செல்லப் பிள்ளையாக 25.04.1912 ஆம் ஆண்டு வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரிலே பிறந்தார். முதலில் அவருக்கு வழங்கிய பெயர் திருவேங்கடமாகும். தாத்தாவின் பெயரை இடுதல் என்னும் குடும்ப மரபுப்படி வழங்கிய பெயர் திருவேங்கடமாகும். தாத்தாவின் பெயரை இடுதல் என்னும் குடும்ப மரபுப்படி வழங்கிய பெயரே வரதராசன் என்பதாகும். 1935ஆம் ஆண்டு தன் மாமா மகளான ராதா அம்மையாரை மணந்தார். அவருக்குத் திருநாவுக்கரசு, நம்பி, பாரி ஆகிய ஆண் மக்கள் உள்ளனர். அம்மூவரும் மருத்துவத்துறையில் மாமணிகளாகத் திகழ்கின்றனர்.

வாலாசாவில் தன் தொடக்கக் கல்வியைக் கற்ற மு.வ. அவர்கள் உயர்நிலைப் பள்ளிப் படிப்பைத் திருப்பத்தூரில் பயின்றனர். முருகய்ய முதலியாரிடம் தமிழ் கற்றுப் புலவர் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சிப் பெற்றார். பின்னர் அவர் 1939ஆம் ஆண்டு தமிழ்ப் புலவர் தேர்வு எழுதிச் சென்னை மாநிலத்திலேயே முதல்வராகத் தேர்ந்து ரூபாய் ஆயிரம் திருப்பனந்தாள் பரிசு பெற்றார். அவர் 1939இல் பி.ஓ.எல் பட்டமும் 1944இல் எம்.ஓ.எல் பட்டமும் பெற்றார். 1972ஆம் ஆண்டின் அமெரிக்காவிலுள்ள ஊஸ்டர் கல்லூரி அவருக்கு இலக்கியப் பேரறிஞர் (டி.லிட்) என்ற சிறப்புப் பட்டத்தை நல்கிப் பெருமைப்படுத்தியது. அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் டி.லிட் என்னும் சிறப்புப் பட்டம் பெற்ற முதல் தமிழறிஞர் மு.வ. அவர்களே ஆவர்.

இவர் 1928இல் முதன் முதலில் தாலுகா அலுவலகத்தில் எழுத்தாளராகப் பணிபுரிந்தார். 1935ஆம் ஆண்டு முதல் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில். தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். 1939 முதல்

1944ஆம் ஆண்டுவரை டாக்டர் அ.லட்சுமணசாமி முதலியார் அவர்களின் நல்லுதவியுடன் தமிழ் விரிவுரையாளராகப் பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றினார். 1945 ஆம் ஆண்டு அக்கல்லூரியிலேயே தமிழ்த்துறைத் தலைவர் ஆனார். இடையே ஓராண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துணைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அறிஞர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் மறைவுக்குப் பிறகு 1961 முதல் 1971 வரை சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றினார். 1971 முதல் 1974ஆம் ஆண்டுவரை மதுரைப் பல்கலைக்கழகத்தின் புகழ்மிக்க இணையற்ற துணைவேந்தராகப் பணிபுரிந்தார்.

சென்னை, திருவேங்கடவன், அண்ணாமலை ஆகிய பல்கலைக்கழகங்களின் பேரவை (செனட்) அங்கத்தினராக இருந்தார். மேலும், அவர் கேரளம், மைசூர், பெங்களூர், ஆந்திரா, டில்லி, கேம்பிரிட்ஜ் மதுரை முதலிய பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டக் குழுவில் இருந்தார். அவர் இலங்கை. மலேயா, காசி, உத்கல் முதலிய பல்கலைக்கழகங்களோடு தொடர்புகொண்டிருந்தார்.

புதுடில்லியில் உள்ள சாகித்திய அகாடெமி ; பாரதிய ஞானபீடம், தேசியப் புத்தகக் குழு, இந்திய மொழிக் குழு, சென்னைப் பல்கலைக்கழகம் தயாரித்த ஆங்கிலம்-தமிழ் அகராதிக் குழு நாட்டுப்புறப்பாடல்கள், நாட்டுப்புற நடனங்கள் பற்றிய குழு முதலியவற்றிலும் அங்கம் வகித்தார்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவிலும், ஆந்திரப் பிரதேசம் அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவிலும் மத்திய அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவிலும், மகாராஷ்டிர சமிதி மண்டலத்திலும் பங்கு கொண்டிருந்தார்.

தமிழ்நாடு புத்தக வெளியிட்டுக்கழகம் ஆட்சி மொழிக்குழு, ஆட்சிமொழிச் சட்டக்குழு, தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழ்க் கலைமன்றம், தமிழிசைக் சங்கம், மாநில வரலாற்றுக் கழகம், தமிழ்க் கலைக்களஞ்சியம், தமிழகப் புலவர் குழு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் முதலியவற்றில் பங்கு கொண்டு சிறந்த தொண்டாற்றினார்.

தமிழ் ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி முதலிய பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தார்.

ரஷ்யா, மலேசியா, சிங்கப்பூர், பாரிஸ், இலங்கை, இங்கிலாந்து, பிரான்சு, ஜப்பான், ஜெர்மனி, கிரேக்கம், எகிப்து, அமெரிகிகா முதலிய உலக நாடுகளை எல்லாம் சுற்றிப் பார்த்த முதல் தமிழ்ப் பேராசிரியரா்க விளங்கினார்.

நாவல்கள் 13, சிறுகதை 2, சிந்தனைக் கதை 2, நாடகம் 6.

கட்டுரை நூல் 11, இலக்கியம் 24, சிறுவர் இலக்கியம் 4, கடித இலக்கியம் 4, பயண இலக்கியம் 1, இலக்கிய வரலாறு 1, மொழி இயல் நூல் 6, வாழ்க்கை வரலாறு 4, ஆங்கில நூல் 2, சிறுவர் இலக்கண நூல் 3, மொழிபெயர்ப்பு நூல் 2 - இவ்வாறு தமிழ்த்தாயின் தலைமகனாக விளங்கிய மு.வ. 62 வயதில் 85 நூல்கள் எழுதி இணையில்லாப் புகழ்பெற்றார். இவற்றுள் அகல் விளக்கு இந்திய ஜனாதிபதியின் சாகித்திய அகாடெழமியின் பரிசினைப் பெற்றது. கள்ளோ? காவியமோ? அரசியல் அலைகள், மொழியியற் கட்டுரைகள் ஆகிய மூன்றும் சென்னை அரசாங்கத்தின் பரிசுகளைப் பெற்றன. திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், மொழி நூல், கள்ளோ? காவியமோ, விடுதலையா? அரசியல் அலைகள், ஓவச் செய்தி ஆகிய ஆறும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப் பத்திரங்களைப் பெற்றன.

தமிழ் இலக்கியத் துறையில் தலையாய தொண்டாற்றியவர் என்று அவருக்குச் சுதந்தரப் போராட்ட நூற்றாண்டு விழாவின்போது சென்னை அரசாங்கம் பாராட்டி, நடராசர் உருவம் பொறித்த ஒரு செப்புக் கேடயத்தினை 15.08.1957 அன்று பரிசளித்தது.

இவரது உயிரோட்டமுள்ள புகழ்மிக்க நூல்கள் மலையாளம், கன்னடம், இந்தி, சிங்களம், ஆங்கிலம் முதலிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

உயிரோவியங்கள் பல படைத்துப் பிறர் உள்ளங்களைக் கவர்ந்த இவரது உடல் 10.10.1974ஆம் ஆண்டு சென்னையில் மறைந்தது. கலைகளுள் எழுத்துக் கலைக்குத் தனி ஆற்றல் உண்டு. காலம் கடந்து வாழும் பண்பு எழுத்துக் கலைக்கே மிகுதியாகும். எனவே, டாக்டர் மு.வ. அவர்களின் புகழ் என்றுமுள தென் தமிழ்போல் விளங்கும். அவரது இன்பத் தமிழ் நூல்களின் வாயிலாக செந்தமிழ்த் தேனைப் பருகும் வாய்ப்பு எங்கும் எவர்க்கும் என்றும் உண்டு. அவை அவரது விளக்குகளாய் மங்கா ஒளி வீசி என்றென்றும் விளங்கும்.

98. முனைவர் மு. வரதராசனாரின் வாழ்வும் படைப்பும் பன்முகப்பார்வை

ம. அன்னலட்சுமி
விரிவுரையாளர்
வித்யா கல்வியியல் கல்லூரி
திருவண்ணாமலை

முன்னுரை

இந்நூற்றாண்டு கண்ட சான்றோர்கள் வரிசையில் முதன்மையாய் வைத்து போற்றப்படும் சமுதாய சிந்தனையாளர் டாக்டர் மு. வரதராசனார் ஆவார். இவர் வேலூர் மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரில் 1912-ம் ஆண்டு பிறந்தார். தந்தை முனுசாமி முதலியார், தாயார் அம்மாக்கண்ணு சங்க இலக்கியம் முதல் இன்றைய இலக்கியம் முடிய தமிழிலக்கியம் முழுவதிலும் ஒரு சேரத் தினைப்பவர்களுள் மு.வ. முதன்மையானவர். உழைப்பாலும், முயற்சியாலும் உயர்ந்த நிலையை அடைந்த அவருடைய வாழ்க்கை, ஒரு நெறியும் குறிக்.கோளும் கொண்டது. திட்டமிட்ட அவருடைய வாழ்க்கை முறையால் தமிழ் நாட்டிற்குப் பெரும் அளவில் சிந்திக்கத் தூண்டும் நூல்கள் பல கிடைத் அவற்றைப் பற்றி இனி வரும் பகுதியில் காண்போம்.

உட்தலைப்புகள்

டாக்டர் மு.வ.வின் புதினங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், கடித இலக்கியம், நாடகம், ஆய்வுத் தடங்கள், கதை மாந்தர்கள், வகுத்த அறம், வாழ்வியல், மொழிப் புலமை, இலக்கிய ஆளுமை போன்ற தலைப்புகளின் மூலம் மு.வ. அவர்களின் சிந்தனை, திறன் மற்றும் செயல்நிலை பயன்பாடுகள் பற்றியும் இனி வரும் பகுதியில் காண்போம்.

மு.வ. புதினங்கள்

டாக்டர். மு.வ. அவர்கள் 13 புதினங்கள் எழுதியுள்ளார். அவற்றில் சில கள்ளோ ? காவியமோ?, அகல் விளக்கு, கரித்துண்டு போன்றவை குறிப்பிடத்தக்கவை. 'மனம் தான் வாழ்க்கை'. மனம் அறிந்து மகிழ்விக்கத் தெரியாத பெண்கள் அழகு, பண்பு, திறமை எல்லாம் இருந்தும் வாழ்க்கையில் ஏமாற்றமடைந்து துன்புறுகிறார்கள். அழகும் பண்பும் திறமையும்? குறைவாக இருந்தாலும் மனம் அறிந்து நடக்கத் தெரிந்த பெண்கள் வெற்றி பெறுகிறார்கள்.

வாழ்க்கை வெறும் விளையாட்டு அல்ல பெரிய கோட்டை கட்டுவது ஆளுமை. இடிப்பது எளிமை. அறுபது ஆண்டு ஒற்றுமையாக வாழ்ந்த

வாழ்க்கையை ஒரு சிறுமனம் பொல்லாத மனம் பிரித்து பாழாக்கி விடும். அன்டைத் துரத்திவிட்டு அறிவை வலாழவிடுகிறார்கள்.

'அன்பெனப்படுவது அறிவு'

சிறு கதைகள்

திருமணத்திற்குப் பிள்ளை வீட்டார் பத்துபேரும், பெண்வீட்டார் பத்துபேரும் இருந்தால் போதும். அல்லது காந்தியடிகள் தம் மகனுடைய திருமணத்தின் போது கூறியது போல் அந்த வீட்டார் முப்பது பேரும் இந்த வீட்டார் முப்பது பேரும் வந்து நடத்தி வைத்தால் போதும். முந்நூறு, நானூறு பேர் வர வேண்டும் என்றும் முயல்வது ஒரு பெரிய ஆடம்பர மூட நம்பிக்கை என்பதை அவனுக்கு எடுத்துச் சொன்னேன்' என்று மு.வ. கூறும் புரட்சிகரமான கருத்துகமளை எண்ணிப்பார்த்தால் நியாயம் விளங்குகிறது அல்லவா? எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும் என்பதை கனவு கண்டு கி.பி. 2000 படைத்தார்.

கட்டுரைகள்

நாட்டில் மக்கள் வாழ்க்கை முறையில் பல மாற்றங்களை ஏற்படுத்தும் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். அறமும் அரசியலும், குழந்தை, மொழிப்பற்று, பற்றியும் மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார். மேலும், மண்ணின் மதிப்பு, நல்வாழ்வு போன்ற கட்டுரைகள் மக்களிடையே பல சீர்திருத்தங்களை ஏற்படுத்தியுள்ளது. இவரின் கட்டுரைப் படைப்பு எத்தனை பேருடைய மனப்பான்மையை திருத்த முடியுமோ அவ்வளவு செய்யும் - இதுவே அடிப்படைத் தொண்டு என்று நம்புவோம்.

கடிதங்கள்

நல்லோர் கூட்டத்திலும் சேர்த்தலும் மட்டும் அறநெறியை போற்றி, மற்ற இடங்களிலும், நேரங்களிலும் பிழைக்கும் வழியே - எப்படியாவது பணம் தேடிப் பிழைக்கும் வழியை நாடுகிறார்கள் என்று மு.வ அவர்கள் நண்பனுக்கு கடிதம் எழுதியுள்ளதை குறிப்பிடுகிறோம்.

நாடகம்

இப்படித்தான் வாழ வேண்டும் எனும் இலட்சிய நோக்கு உடையவர் டாக்டர். அல்லி. எப்படியும் வாழலாம் எனும் எண்ணப்போக்கு உடையவன் பொறியாளர் சுப்புரத்தினம் பெற்றோரால் உறுதி செய்யப்பட்ட இத்தருணத்தில் இவருக்கும் மனம் பொருந்தவில்லை. வேதனைப்படுகிறாள். விம்முகிறாள். 'குரங்கின் கையில் அகப்பட்ட பூ மாலை' போல் அவளின் நிலை மாரினும் மெல்லிது காமம் எனும் வள்ளுவரின் வாய்மொழி. அவர்களுக்குப் புரியாத பொன்மொழி ஆகும் என்பதை மு.வ அவர்கள் அல்லியினுடைய வாழ்க்கையின் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

ஆய்வுத் தடங்கள்

" காவி உடுத்தியவர்கள் எல்லோரும் விவேகானந்தர் - என்று உலகம் எண்ணுகிறதே. கருப்பாய்த் தோன்றி கத்தும் பறவை எல்லாம் குயில் ஆகிவிடுமா?" என்ற இவ்வரிகள் சிந்தனைக்குரியதல்லவா?

நோயை உண்டாக்கியது இயற்கை. நோயைத் தீர்க்கும் ஆற்றல் அதற்கு உண்டு. நல்ல காற்று, நல்ல வெளிச்சம், ஒளி மாறுதல் இவற்றிற்கு இருக்கும் வல்லமை எந்த டாக்டருக்கும் இல்லை என்று ஆங்கிலப் புத்தகத்தில் எழுதியுள்ளார்.

அதனால் தான் நம் முன்னோர்கள் காற்று, ஒளி, நீர் இவற்றை எல்லாம் தெய்வம் என்று போற்றி வணங்கினர் ' என்று இளங்கோவடிகள் எண்ணுவதாக மு.வ. வெளிப்படுத்தும் கருத்து சிந்.தனைக்கு உரியவை ஆகும்.

கதை மாந்தர்கள்

மு. வரதராசனின் புனை கதைகளில் கருத்துக்களும், கலந்துரையாடல்களும் தலைமை இடம் பெறுகின்றன. கதை மாந்தரின் ஆளுமையையே மறையச் செய்யும் அளவிற்குக் கருத்துக்கள் அவரது நாவல்களில் முதன்மை பெறுகின்றன. அவரது பாத்திரங்களை நாம் அவரவர்களின் மனிதப் பண்பால் நினைவில் கொள்ள முடியாது. அவர்களின் கருத்தாலேயே நினைவில் கொள்ள முடியும்.

மு.வ ஒரு கலைஞராகத் தம்மை வெளிப்படுத்திக் கொள்வதை விட சிந்தனையாளராகவே தம்மை மிகுதியும் வெளிப்படுத்திக் கொள்கிறார் என்பது தான் விடை.[11]

வகுத்த அறம்

இரத்த ஓட்டம் எப்படிக் கட்டாயம் வேண்டுமோ அதுபோல் உலக நன்மைக்கு அறத்தின் அடிப்படை கட்டாயம் வேண்டும். அரிசயலில் அல்லல் விளைவிப்பதற்கெல்லாம் முதல் காரணம் அறமாகிய அடிப்படையே புறக்கணிப்பதுதான் என்று உணர வேண்டும் என்கிறார் மு.வ.

வாழ்வியல்

நம்மை வெறுத்தவர்களை நாமும் வெறுக்க வேண்டும். நம்மை புறக்கணித்தவர்களை நாமும் புறக்கணிக்க வேண்டும் என்று உலகம் சொல்கின்றது. அதனால் புறக்கணித்தவர்களையெ மீண்டும் மீண்டும் நாடும் மனத்தால் அன்பு வளரும். மானம் இழந்தாலும் அன்பு வளரும் என்று காதல் வாழ்க்கை கற்பிக்கிறது. அன்பு வளர்ந்த நெஞ்சிற்கு மானம் என ஒன்று இல்லை. வெறுப்பு என்பது முடியாது வெறுப்பாக நெருங்கினாலும் விரும்புவதாகவே முடியும் என்று காதல் வாழ்க்கை கற்பிக்கின்றது.

மொழிப் புலமை

காலத்தின் கண்ணாடி, கருந்தோட்டத்தின் முன்னோடி ஆராய்ச்சிப் பெட்டகம். இலக்கியப் பூங்கொத்து எனத் தரும் நூல்கள் பலவற்றையும் படிப்பதற்கேற்ற எளிய இனிய தீந்தமிழ்ச் சொற்களால் இடையீற்ற தெளிந்த நீரோடை போன்ற நடையில் நற்றமிழ் பண்பும், மனமும் பரவ - அவர் இயற்றியதன் பயன் - தமிழ் நூல்கள் பயில்வோர் எண்ணிக்கையையே பெருக்குவதாயிற்று எனில் வேறு பெருமை வேண்டுமா? என பேராசிரியர் க. அன்பழகனார் குறிப்பிட்டுள்ளார். மு. வரதராசனின் எளிய நடையிலர் அமைந்த அவருடைய சிந்தனை மக்களிடையே வரவேற்பினைப் பெற்றது.

இலக்கிய ஆளுமை

பல ஆண்டுகளுக்கு முன் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படித்த இளைஞர்கள் 'மு.வ.வின் நூல்களை படிக்காதவர்கள் எவரும் இலர்' என்று சொல்லக் கூடிய நிலைமை இருந்தது. எளிய நடையில் அமைந்த அவருடைய சிந்தனை நூல்கள் தமிழ் மக்களின் சிறப்பாகத் தமிழ் இளைஞர்களின் சிந்தனை வளர்ச்சியில் பேருதவியாக இருந்தது அவருடைய சிந்தனைக்கு நல்ல வரவேற்பும் செல்வாக்கும் இருந்தன.

முடிவுரை

உழைப்பால் உயர்ந்தவர். நல்லவராகவும் வல்லவராகவும் வாழ்ந்தவர். விளம்பர வெறிக்கு இரையாகாத புகழாளர், தனித்தன்மையுள்ள எளிய இனிய நடையை கையாளுபவர். புலமையும், புதுமையும் கலந்து இனிமையானவர் நலலாசிரியர் ஆற்றல் மிகுந்த எழுத்தாளர். நுண்ணிய ஆய்வாளர் அமைதியில் நாட்டமுடையவர் குறிக்கோளுடன் வாழ்ந்தவர் எனப் பாராட்டப் பெற்றவர்.

பேராசிரியர் மு.வ. அவர்களின் படைப்புக்கள் நாவல் 13ஈ சிறுகதை 2, சிந்தனைக் கதை 2, நாடகம் 6, கட்டுரை நூல் 11, இலக்கியம் 24, சிறுவர் இலக்கியம் 4, கடித இலக்கியம் 5, பயண இலக்கியம் 6. இலக்கிய வரலாறு 1, மொழியில் 6. வாழக்கை வரலாறு 4, ஆங்கில நூல் 2, சிறுவர் இலக்கணம் 3 எனப் பல படைப்புகள் படைத்துள்ளார்.

பின்னர் உடல் நல பாதிப்பில் 10.10.1974 வியாழக்கிழமை இயற்கை எய்தினார். மு.வ. அவர்கள் மறைந்து பல ஆண்டுகள் கழிந்து விட்டன. ஆனால் அவரின் முத்தோவியங்கள் உலகம் உள்ள வரை நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

99. மு. வரதராசனாரின் தமிழ்ப்பணி

ஜெ. உமா
உதவிப் பேராசிரியர்
ஸ்ரீ வெங்கடேஸ்வரா கலை அறிவியல் கல்லூரி
பேராவூரணி.

20-ஆம் நூற்றாண்டில் தமிழக வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தமிழப் பேராசிரியர் டாக்டர் மு.வ. அவர்களின் தமிழ்ப்பணி முதன்மையான இடம் பெறுகின்றது. அவர் ஈடு இணையற்ற பெரும் தமிழ் எழுத்தாளராக விளங்கினார்.

பிறப்பு, கல்வி

25.04.1912 ஆம் ஆண்டு வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரில் முனுசாமி அவர்களுக்கும், கண்ணம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். அவர் வேலத்திலும், வாலாஜாவிலும் தொடக்கக் கல்வியைப் பயின்றார். உயர்நிலைப் பள்ளிப் படிப்பை அவர் திருப்பத்தூரில் பயின்றார். பின்பு முருகையா முதலியாரிடம் தமிழ்க் கற்று புலவர் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சிப் பெற்றார். பின்னர் 1935-ஆம் ஆண்டு தமிழ்ப் புலவர் தேர்வு எழுதிச் சென்னை மாநிலத்திலேயே முதல் மாணவராகத் தேர்ந்து 1,000.:- பரிசு பெற்றார். பின்பு 1939 இல் பி.ஓ.எல் பட்டமும் 1944-இல் எப்.ஓ.எல் பட்டமும், 1949-இல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதன்முதலாக தமிழில் எழுதி முனைவர் (பி.எச்.டி) பட்டம் பெற்றார். பின்பு 1972-ஆம் ஆண்டில் அமெரிக்காவிலுள்ள ஊஸ்டர் கல்லூரியில் இலக்கியப் பேரறிஞர் (டி.லிட்.,) என்ற சிறப்புப் பட்டம் பெற்றார்.

கல்விப் பணி

1928-ஆம் ஆண்டு முதன் முதலாக தாலுகா அலுவலகத்தில் எழுத்தராகப் பணியைத் தொடங்கினார். பின்பு 1935 ஆம் ஆண்டு நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்தார். 1939 முதல் 1944-ஆம் ஆண்டு வரை டாக்டர் அ.லட்சுமணசாமி முதலியார் அவர்களுடைய நல் உதவியுடன் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் விரைவுரையாளராகப் பணியாற்றினார். 1945-ஆம் ஆண்டு அக்கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக பதவி உயர்வு பெற்றார். அதன் பின்னர் ரா.பி. சேதுப்பிள்ளையின் மறைவிற்குப் பின்பு 1961 முதல் 1971 வரை சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறை தலைவராகப் பணியாற்றினார். 1971 முதல் 1974 ஆம் ஆண்டு வரை மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பணிபுரிந்தார்.

மு.வ.-வின் தமிழ்பணி

சிறந்த தமிழ் அறிஞராக விளங்கிய மு.வ. மொத்தம் 85 நூல்கள் எழுதி தமிழ் இலக்கிய உலகில் இணையில்லாப் புகழ் பெற்றார். பலவகையான முதல் தரமான நூல்களை எழுதி தமிழ் இலக்கிய பொற்களஞ்சியமாக விளங்கினார். மொத்தம் 13 நாவல்களையும், 2 சிறுகதைகளையும், 2 சிந்தனைக் கதைகளையும், 6 நாடகங்களையும், 11 கட்டுரை நூல்களையும், 24 இலக்கிய நூல்களையும், 4 சிறுவர் இலக்கிய நூல்களையும், 4 கடித இலக்கிய நூல்களையும் 1 பயண இலக்கிய நூலையும், 6 மொழி இயல் நூல்களையும், 4 வாழ்க்கை வரலாற்று நூல்களையும், 3 ஆங்கில நூல்களையும், 2 மொழி பெயர்ப்பு நூல்களையும் எழுதி தமிழ் இலக்கிய உலகின் முடிசூடா மன்னராக மு.வ. திகழ்ந்தார்.

மு.வ. அவர்கள் எழுதிய கள்ளோ?, காவியமோ? என்ற அவரது இரண்டாம் நாவல் அவருக்கு மிக்க புகழினைத் தேடித் தந்தது. அவரது அகல்விளக்கு என்னும் நாவல் சாகித்திய அகாடெமி பரிசினைப் பெற்றது.

அவரது உயிரோட்டமுள்ள புகழ்மிக்க நூல்கள் தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, சிங்களம், ஆங்கிலம் முதலிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

மு.வ. அவர்கள் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி முதலிய மொழிகளைக் கற்று பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தார்.

அவர் ரஷ்யா, மலேசியா, சிங்கப்பூர், பாரிஸ், இலங்கை, இங்கிலாந்து, பிரான்சு, ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி, கிரேக்கம், எகிப்பது, ஆப்பிரிக்கா, அமெரிக்கா முதலிய உலக நாடுகளுக்குச் சென்று தமிழ்மொழியின் சிறப்புகள் குறித்து சொற்பொழிவு அற்றியுள்ளார்.

அவர் பங்கேற்ற துறைகள்

அவர் சென்னை, திருவேங்கடவன், அண்ணாமலை ஆகிய பல்கலைக்கழகங்களின் பேரவை (செனட்) உறுப்பினராக இருந்தார். மேலும் கேரளம், மைசூர், உஸ்மானியா, பெங்களூர், ஆந்திரா, டில்லி, கேம்பிரிட்ஜ், மதுரை முதலிய பல்கலைக் கழகங்களின் பாடத்திட்டக் குழுவில் இருந்தார்.

புது தில்லியில் உள்ள சாகித்திய அகாடெமி, பாரதிய ஞானபீடம், தேசியப் புத்தகக்குழு, இந்திய மொழிக்குழு, சென்னை பல்கலைக் கழகம் தயாரித்த ஆங்கிலம் - தமிழ் அகராதி, குழு, நாட்டுப்புறப் பாடல்களும், நாட்டுப்புற நடனங்களும் பற்றிய குழு மதலியவற்றில் அங்கம் வகித்தார்.

மறைவு

சிறந்த உயிரோவியமிக்க தமிழ் நூல்கள் பலபடைத்த மு.வ. அவர்கள் 10.10.1974 ஆம் ஆண்டு சென்னையில் மறைந்தார். காலம் கடந்தும் வாழும் பண்பு எழுத்து கலைக்கே உண்டு. இன்றும் தமிழ் எழுத்துலகின் முடிசூடா மன்னராக விளங்கும் அவரது புகழ் மங்கா ஒளி வீசி என்றென்றைக்கும் விளங்குகிறது.

100. அகல்விளக்கு நாவலில் - பாக்கியம்

க. சங்கர்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தூயநெஞ்சக் கல்லூரி,
திருப்பத்தூர். வே.மா.635601.

முன்னுரை

தமிழ் இலக்கியத்தில் தனக்கான தனிமுத்திரையைப் பதித்தவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள், சிறுகதை, நாவல், கட்டுரை, இலக்கியத் திறனாய்வு, மொழியியல் என இலக்கியத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தன்னை நிருபித்தவர். தமிழாசிரியராக வாழ்க்கையைத் தொடங்கி கல்லூரி பேராசிரியர், பல்கலைக் கழகத் துணைவேந்தராக உயர்ந்து நின்றவர். 62 வயதில் 85க்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்தவர்..

இவர் எழுதிய அகல் விளக்கு என்னும் நாவல் இந்திய அரசின் மிக உயரிய விருதான சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றது. அத்தகைய சிறப்பு வாய்ந்த நாவலில் இடம் பெறும் பாக்கியம் என்னும் பெண் கதாபாத்திரத்தின் தன்மைக்ளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பாக்கியம் - அறிமுகம்

அகல் விளக்கு நாவலில் வேலய்யன் என்னும் கதாபாத்திரம் கதையை நான் என்று கதைசொல்லியாகத் தொடங்கி இறுதிவரை கதையை நகர்த்திச் செல்லும் தன்மையுடையதாய் விளங்குகிறது. அத்தகைய வேலய்யனின் வீட்டிற்கும், அடுத்த மூன்றாம் வீட்டில் பாக்கியம் என்னும் அம்மையார் வசிப்பதைப் பற்றிக் கூறுகிறார். பாக்கியம் இளம் வயதிலேயே கணவரை இழந்து விதவைக் கோலம் பூண்டவர். அவளுக்குக் குழந்தையும் இல்லை. இச்சூழலில் பக்கத்து வீட்டுப் பிள்ளைகளான வேலய்யனிடமும் அவரது தங்கை மணிமேகலை தம்பி பொய்யாமொழி ஆகியோரிடம் மட்டுமில்லாமல் அவள் வீட்டிற்கும் பக்கத்தில் புதிதாய்க் குடிவந்த சந்திரனிடமும் அவனது அத்தை சிவகாமியிடமும் அன்பு செலுத்தும் பெண்ணாகக் காட்டப்படுகிறாள்.

அவ்வாறு அன்பு செலுத்திய பாக்கியம் புதிதாய் வந்த அழகான சிறுபையனான சந்திரனிடம் அதிக அளவில் அன்பு கொண்டிருந்தது தனக்கு வருத்தம் அளித்தது என்று வேலய்யன் மனத்துன்பம் அடைந்ததைக் குறித்து நின்றது.

செவிலித்தாய்

பாக்கியம் குழந்தை பெற்றுத் தாயாக விளங்காவிட்டாலும் தாய்மையுள்ளம் நிறைந்தவர். பல குழந்தைகளைப் பெற்று குடும்பத்தை

நிர்வகிக்கும் திறன் அவருக்கு இருந்தது என்னும் கதை சொல்லியின் கூற்றினை கீழ்க்கண்ட வரிகளின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

பாக்கியம் குழந்தை பெற்றுத் தாயாக விளங்காவிட்டாலும் தாய்மையுள்ளம் கொண்ட அம்மையார். அதனால் எனக்கும் என் தங்கை மணிமேகலைக்கும் மற்றொரு தாயாய் இருந்து வளர்த்து அன்பு காட்டினார். ஆனால், இயற்கை பொல்லாதது! வுளர வளர நாங்கள் இறக்கை வளர்ந்து குஞ்சுகள் போல், பாக்கியத்தின் அன்புக் கூட்டிலிருந்து பறந்து விட்டோம். (ப.47)

ஒரு குடும்பத்தின் தலைவியாக, பல மக்களுக்குத் தாயாக விளங்க வேண்டிய கட்டான உடம்பும் ஈரமான நெஞ்சும் படைத்த ஊழ், அந்த அம்மையாருக்குத் தனிமைத் துன்பத்தையே வாழ்வின் பரிசாக அளித்து விட்டது. (ப.47) குழந்தைப்பேறு இல்லாவிட்டாலும் பிற குழந்தைகளை வளர்ப்பதைக் காணும் போது பாக்கியம் செவிலித்தாய் போன்று விளங்கியது புலனாகின்றது.

விதவைக் கோலம்

வேலய்யன் சிறுவனாக இருக்கும் போது விளையாட்டுக்காக, தன் அம்மாவின் நெற்றியில் இருக்கும் குங்குமத்தை எடுத்து பாக்கியம் நெற்றியில் இட முயற்சி செய்யும் போது பாக்கியம் அதைத்தடுத்து விடுவாராம். இதனை,

வேண்டா கண்ணு! நான் இடக்கூடாது கண்ணு! என்றும் தடுத்து கண்ணீர் விடுவார் என்று கதை சொல்லி கூறியுள்ளது புலனாகிறது. ஒரு நாள் வேலய்யன் பிடிவாதமாக குங்குமத்தை பாக்கியத்தின் நெற்றியில் இடுவதற்கு முயற்சி செய்யும் போது அந்த அம்மா விட்டுக்கொடுத்துள்ளார். அச்சிறுவன் குங்குமத்தை பாக்கியத்தின் நெற்றியில் இட்டு விட்டு, கண்ணாடியைக் கொண்டு வந்து முகத்திற்கு நேரே காட்டியதும், பாக்கியம் கண்ணீர் விட்டு அழுது கொண்டே இவ்வாறு கூறியுள்ளார்.

கண்ணே! உனக்கு இருக்கிற அவ்வளவு கருணை கடவுளுக்கு இல்லையே, கண்ணே! (ப.49) என்று கதறி அழுதாராம்.

கணவனை இழந்த பாக்கியம், அக்காலத்தில் கைம்பெண் மேற்கொள்ள வேண்டிய பழக்க வழக்கங்களை கடைப்பிடித்து விதவைக் கோலத்தைத் தாங்கியே கடைசிவரை வாழ்ந்துள்ளார் என்று ஆசிரியர் பாக்கியம் பாத்திரத்தைப் படைத்துள்ளார். இரண்டாம் திருமணத்திற்கு முயற்சியும் செய்யவில்லை. காரியம் கைமீறிப் போகும்போது எல்லோரும் விதி என்று கூறுவதைப் போலவே பாக்கியமும் சமுதாயக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வாழ்ந்துள்ளது புலனாகின்றது.

நாவல் எழுந்த காலத்தில், கைம்பெண்ணை எதிரில் கண்டு சென்றால் போகிற காரியம் வெற்றி பெறாது என்னும் மூடப்பழக்கமுள்ள காலமாக இருந்தாலும், ஓரிடத்தில் கூட கைம்பெண்ணான பாக்கியத்திற்கு அவ்வாறான இழிபேறு தோன்றாமல் பாக்கியத்தை அனைவரும் விரும்பும் பெண்ணாகவே படைத்துள்ளார் நாவலாசிரியர்.

பெண்ணியச் சிந்தனைகள் தோன்றாத காலமாகவும் நாவல் தோன்றிய காலம் இருந்தமையால், பாக்கியம் பாத்திரத்தை பழையன கைப்பற்றி வாழும் பாத்திரமாகப் படைத்துள்ளார்.

பொறுப்புள்ள பெண்

பாக்கியம் பொறுப்பான அக்காவாக இருந்து தன் தம்பிக்கு ஒரு பெண்ணைப் பார்த்து திருமணம் செய்து வைப்பாள். தாயைச் சிறுவயதிலேயே இழந்து விட்ட பாக்கியம் தன் தந்தைக்கும், தம்பிக்கும் செய்ய வேண்டிய கடமையிலிருந்து தவறாத பெண்ணாக படைக்கப்பட்டுள்ளார்.

பாக்கியத்தின் தந்தை மூப்பின் காரணமாக இறந்து விட, தந்தையின் வீட்டில் கைம்பெண்ணாக இருக்கும் தனக்கு தம்பியின் மனைவியால் இடையூறு வரும் என்று எண்ணிக் கொண்டிருக்காமல் திருமணம் செய்து வைப்பார். நினைத்த மாதிரியே துன்பம் கொடுக்கும் சூழலைப் புரிந்து கொண்டு தனிமையை மேற்கொண்டு வாழும் பாக்கியம் பாத்திரம் மிகுந்த பொறுப்புடைய பாத்திரமாகவே படைக்கப்பட்டுள்ளது எனலாம்.

சமுதாயக் கடமை

பாக்கியம் அம்மையாரின் தம்பி கைவிட்ட பிறகு கிடைப்பதை உண்டு, உறங்கி பொழுதைக் கழிக்காமல் தனக்கு தெரிந்த கருத்துக்களை சிறு பிள்ளைகளுக்கு கற்றுத் தரும் சிறு பள்ளிக்கூடம் போல் ஒன்றைத் தொடங்கி, நடத்தி வரும் போது இரண்டு மூன்று பிள்ளைகள் வருகின்றனர். பிறகு இருபதுக்கும் மேற்பட்ட குழந்தைகள் பயில வருகின்றனர்.

அப்பிள்ளைகளிடம் தான் கற்றுத்தரும் வேலையில் ஈடுபடுவதற்காகப் பணம் எதையும் கேட்டுப் பெறுவதில்லை. அவர்கள் கொடுப்பதை வாங்கிக் கொண்டு சொல்லித் தருவதில் பாக்கியம் ஈடுபடுகிறாள்.

அவ்வாறு பயில வந்த சிறுபெண் ஒருத்தி ஒவ்வொரு நாளும் அங்கிருந்து ஏதாவது ஒரு பொருளைத் திருடிச்சென்று விடுவாள். அதைப் பார்த்துக் கொண்டிருந்த பாக்கியம், ஒரு நாள் அவளது பையிலிருந்து ஒரு பொருளை எடுத்து வைத்துக் கொள்வாள். பையில் தன்னுடைய

பொருளைக் காணாத அச்சிறுமி தடுமாறும்போது, அதனைக் கொடுத்து சிறுமியைத் திருத்தும் வேலையில் ஈடுபடுவாள். சிறுபிள்ளைகளுக்கு கல்வியுடன் நல்லொழுக்கங்களை கற்றுத் தரும் பெண்ணாக பாக்கியம் பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

திருமணமான பெண்களுக்கு வழிகாட்டி

திருமணமாகி புதிய இடத்தில் வாழ்க்கையைத் தொடங்கியிருக்கும் வேலய்யனின் தங்கை மணிமேகலைக்கும், மனைவி கயற்கண்ணிக்கும் வழிகாட்டியாக பாக்கியம் அமைந்துள்ளார்.

மணிமேகலையின் கணவன் சிக்கனமான முறையில் குடும்பத்தை நடத்த அவளை வலியுறுத்துகிறான். அதனைப் பார்த்த மணிமேகலை தாய் வீட்டிற்கு வேறு வேலையாக வந்த அவள் அதனைப் பெரும் குறையாக சொல்லிக் கொண்டிருக்கிறாள். அச்சிறு பெண்ணுக்குப் புரியும் வகையில் விளக்கமளிக்கிறார் பாக்கியம்.

கணவன், மனைவி இருவரும் விட்டுக்கொடுத்து வாழும்போது வாழ்க்கை இனிமையாக இருக்கும் என்று பாக்கியம் கூறும் போது, அதனைத் தவறாகப் புரிந்து கொண்ட மணிமேகலை, கண்ணகி போல பயந்து அடங்கிப் பதில் பேசாமல் வாழ்க்கை நடத்த வேண்டும் என்று சொல்கிறாய் (ப.310) என்று கேட்கிறாள்.

பாக்கியம் அதனை மறுத்து இதுதானா நீ படித்தது? அந்தச் சிலப்பதிகாரக் கதையில் வரும் கண்ணகியா பயந்த பெண்? அவளைப் போல் அஞ்சாமையும் வீரமும் யாருக்கு உண்டு? காந்தி பட்டினி கிடப்பதைப் பார்த்து அவரைக் கோழை என்று ஒரு வெள்ளைக்காரன் சொன்னால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறது உன் பேச்சு! துன்பம் பொறுப்பவர்கள் கோழைகள் அல்ல. கொள்கையோடு அமைதியாய் இருப்பவர்கள் கோழைகள் அல்ல. கண்ணகி பயந்த பெண் அல்ல என்பதற்கு அந்தக் கதையிலேயே பல இடங்கள் வருகின்றனவே (ப.310)

மேற்கூறியபடி பல்வேறு இலக்கியங்களிலிருந்தும் நடைமுறை வாழ்விலிருந்தும் பல்வேறு சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு பாக்கியம் அறிவுரைகளை வழங்கி நல்வழிப்படுத்துகிறார்.

பெண்ணுரிமை, சரிநிகர் சமானம் என்பனவற்றை எடுத்துப் பேசி மணிமேகலையை மேலும் அவளது குற்றங்களுக்கு வழிகாட்டாமல், அவளுக்கு வயதில் மூத்தவளாய் இருந்து வழிகாட்டியாகத் திகழும்படியாக பாக்கியம் பாத்திரத்தைப் படைத்துள்ளார்.

மணிமேகலையின் கணவன் ஆசிரியப் பணி செய்யும் ஏழை.

ஆதலால், அவன் தன் மனைவியிடம் சிக்கனத்தை வலியுறுத்துகிறான். கணவனோடு புதிய வாழ்வு தொடங்கிய அவளுக்கு தனது முந்தைய, தாய்வீட்டு வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பாத்துத் துன்பப்படுகிறாள். பட்டாடை உடுத்த அனுமதி தர மறுக்கிறார் போன்ற பல்வேறு குற்றச் சாட்டுகளைச் சொல்லும்போது, சாதாரண கதர் ஆடையே உயர்ந்தது. பட்டுச்சேலை உடுத்துதல் என்பது ஆடம்பரத்திற்கு வழிகோலும் என்று பாக்கியம் கூறுகிறார்.

வரவுக்கு ஏற்ப செலவு செய்து குடும்பத்தை நடத்தும் போது அந்த வாழ்வானது மிக உன்னதமான, உயர்ந்த வாழ்க்கையாக அமையும் என்னும் அறிவுரையை பாக்கியம் கூறுகிறார்.

முடிவுரை

அகல்விளக்கு நாவலில் பாக்கியம் என்னும் கதாபாத்திரத்தைப் படைத்திருப்பதன் நோக்கம் மணிமேகலை, கயற்கண்ணி போன்ற பெண் பாத்திரங்கள் வாழ்க்கையின் தொடக்கத்தில் அவர்களுக்கு ஏற்படும் புரிதல் இல்லாமையைப் போக்கி வழிகாட்டும் தன்மைக்காகவே என்று கூறலாம்.

வேலய்யன், சந்திரன், கற்பகம், பொய்யாமொழி போன்ற கதாபாத்திரங்கள் அவர்கள் சிறு பிள்ளைகளாக இருக்கும் போது, பாக்கியம் காட்டிய அன்பை நாவலின் பல இடங்களில் நினைத்துப்பார்க்கின்றனர். ஏறக்குறைய ஒரு செவிலித்தாயாய் பாக்கியம் விளங்கியுள்ளார் என்பது புலனாகின்றது.

இளமையில் கணவனை இழந்த பாக்கியம் உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டு, தவறான வழிக்குச் செல்லாத சமுதாயக் கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்கும் பெண்ணாகப் படைத்துள்ளார். இவ்வாறு பல்வேறு வகைகளில் உதவிபுரியும் கதாபாத்திரமாக பாக்கியம் என்னும் கதாபாத்திரத்தை நாவலாசிரியர் மு.வரதராசன் படைத்துள்ளார்.

101. மு. வ. வின் இலக்கியத் திறனில் கற்பனை

சி. பிரபாகரன்
உதவிப் பேராசிரியர்
நேரு நினைவுக் கல்லூரி
புத்தனாம்பட்டி

படைப்பாளர்கள் தம் இலக்கியங்களை உணர்ச்சிப் பெருக்குடையனவாக அமைத்தற்கு மேற்கொள்ளும் நெறி அல்லது உத்தி கற்பனை எனலாம். ஒரு செய்தியை விளக்குவதற்கு கற்பனை எனலாம்.

கற்பனை பற்றி அறிஞர்கள் பலர் பின்வருமாறு கூறுகின்றாள் உள்ளத்தின் பல நிலைகளையும் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது என்பர் வின்செஸ்டர்

கற்பனைத் திறன் என்பது புதிர்நிலைவாய்ந்ததாகவும் விளக்க இயலாததாகவும் உள்ளது. அதனுடைய விளைவுகளைக் கொண்டே அத்திறனை உணர முடிகிறது என்று இரஸ்கின் கூறுகிறார்.

1. வகைகள்
2. கற்பனை தோன்றும் இடம்
3. இயற்கைப்பாட்டில் கற்பனை
4. புனைந்து கூறுதல்
5. வாழ்க்கையும் கற்பனையும்
6. கற்பனையில் கவர்ச்சி
7. போன்றது அன்று
8. வெறுங் கற்பனை
9. உண்மை உடையன

என்ற தலைப்புகளில் அமைந்த செய்திகளில் கற்பனை பற்றிய விளக்கத்தை இக்கட்டுரையில் காண்பது நோக்கம் ஆகும்.

வகைகள்

கற்பனை மூன்று வகைப்படும்

1. படைப்புக் கற்பனை
2. இயைபுக் கற்பனை
3. கருத்து விளக்கக் கற்பனை

படைப்புக் கற்பனை

தனித்தனியே கண்ட வேறு வேறு பகுதிகள் சேர்ந்து ஒரு முழுமை பெற்றதை படைப்புக் கற்பனை எனலாம்.

இயைபுக் கற்பனை

அது போன்றது இது என்று இயைந்து அமைக்கப்படும் கற்பனை இயைபுக் கற்பனை எனப்படும்.

கருத்து விளக்கக் கற்பனை

ஏதாவது ஒரு செய்தியை விளக்கிக் கூறுவது கருத்து விளக்கக் கற்பனை எனப்படும்.

கற்பனை தோன்றும் இடம்

1. குழந்தையின் கற்பனை

குழந்தையின் சிரிப்பில், அழுகையில் அதன் கற்பனை புலப்படுகிறது. கருநிறக்காக்கை குழந்தையின் கண்ணெதிரே, கா,கா,கா என்பன ஒலிக்கும் போது அந்தக் குழந்தை என்னென்ன கற்பனைகள் காணுகிறதோ! சுறுசுறுப்பான சிட்டுக் குருவியின் துள்ளலிலும் ஒலியிலும் குழந்தை காணும் கற்பனைகள் என்னென்னவோ! தாயின் பொருள் விளங்காத தாலாட்டுப் பாட்டு, குழந்தையின் மூளையில் என்னென்ன கற்பனைகள் எழுப்புகிறதோ! இவற்றை ஆய்ந்து உணரும் திறன் எவ(.நக்கும் இல்லை. ஆனால், குழந்தையிடம் கற்பனை வளம் உள்ளது என்பதை மட்டும் மறுத்தல் இயலாது என்கிறார் மு.வ.

2. கற்பனை வித்து

நரி மருட்டல் என்று கூறப்படும் குழந்தைக் கனவுகளில் அவருடைய கற்பனை வித்துக்கள் முளைவிடத் தொடங்கின. இன்றைய குழந்தையின் மழலை நாவில் எதிர்கால நாவன்மையும் சொல்வன்மையும் அடங்கி இருத்தல் போல, குழந்தையின் மெல்லிய கைகளின் தனி நார்களில் நாளைய உழவுத் தொழிலுக்கும், தச்சுத் தொழிலுக்கும் ஏற்ற தசைவன்மை அமைத்திருத்தல் போல் தளர் நடையிட்டுத் தடுமாறும் குழந்தையின் கால்களில் எதிர்கால ஓட்டப் பந்தயத் திறன் அமைந்திருத்தல் போல், இளங்குழந்தையின் நரிமருட்டும் கனவில் அரிய பெரிய கற்பனைகள் எல்லாம் அமைந்து கிடக்கின்றன.

கற்பனை ஒரு சிறகு

சிறகு இருந்தால்தான் பறக்க முடியும், ஆனால், ஒரு சாரார்க்கு

அகச் சிறகு பிடிக்கும். ஒரு சாரார்க்கு புறச் சிறகு பிடிக்கும். அகச்சிறகுதான் கற்பனை என்று சொல்லப்படுகிறது. களைப்பு இல்லாமல், சலிப்பு இல்லாமல் மனம் பறந்து திரிவதற்காக அமைந்த சிறகு அது, இதைக் கதையாகக் கொண்டு உணர்ந்தால் கற்பனையின் சிறப்பு விளங்கும்.

இயற்கைப் பாட்டில் கற்பனை

இயற்கையைத் தீட்டிக் காட்டும் நல்ல ஓவியங்களை நாம் விரும்புகிறோம். அவை இயற்கையை உள்ளவாறு காட்டாமல் வேண்டாத பகுதிகள் பலவற்றை விட்டு, அழகுணர்ச்சிக்கு வேண்டியவற்றை மட்டும் கொண்டு தீட்டப்படுவதால்தான் நாம் விரும்பிப் போற்றுகிறோம். இயற்கையைப் பாடும் பாட்டுகளும் அவ்வாறு அமைந்திருப்பதால் தான் போற்றுகிறோம். முல்லைப்பாட்டில் காட்டில் உள்ள எல்லாவற்றையம் புலவர் விளக்கிக் கூறவில்லை. அது அவர் நோக்கமும் அன்று காட்டு வழியில் கார்கால மழையால் அழகுற்ற சில காட்சிகளை மட்டும் காட்டியுள்ளார்.

உள்ளவாறே அமையும் கற்பனை நிழற்படம் போன்றது எனலாம். ஆயினும், அதிலும் கலைத் தன்மை ஓரளவு அமைய இடம் உண்டு. பொருள்களை அழகுற அமைத்து அதன்பிறகு அவற்றை நிழற்படம் எடுத்தலில் கலைத் தன்மை உண்டு. கண்டவாறு சிதறிக் கிடக்கும் பொருள்களை ஒழுங்குபடுத்தி அழகுற அமைத்தலும் கலையே ஆகும். இயற்கையும் வாழ்க்கையும் உள்ளவாறே அமையும் கற்பனையிலும் ஒழுங்கு உள்ளதெனின் கலை உள்ளது எனலாம்ஸ் ஒழுங்க்குக்கு இயையாதவற்றை ஒதுக்கிய வகையிலேயே அங்குக் கலைப்பகுதி உள்ளது எனலாம்.

கலைஞர்களின் உள்ளம், இட்ட இடத்தில் கிடக்கும் கல் போன்றது அன்றுஸ் ஒளியும் காற்றும் நாடி மேன்மேலும் வளரும் செடிகொடி போன்றது. ஆகவே, பொருள்களை உள்ளவாறு கண்டு அந்த அழகில் அமைதி அடைவதில்லை கலைஞரின் மனம்ஸ் பொருள்களை மேலும் அழகுபடுத்தி இன்னும் சிறந்த உலகத்தைப் படைக்க முயல்கிறது. அம்முயற்சி இடைவிடா முயற்சியாக உள்ளது அதுவே அவர்களின் அகத்தெழுச்சிக்கு காரணம் ஆகிறது உள்ளது போதும் என்ற மனநிறைவு அவர்களுக்கு இல்லை. அம் மனநிலை ஏற்படின், கலையுணர்ச்சி தீர்ந்தது எனலாம்ஸ் புதியன படைக்கும் ஆற்றலும் அற்றது எனலாம்.

ஆகவே, உள்ளவாறு அமையும் கற்பனையில் கலைஞர்க்கு ஆர்வம் இல்லை என்றும், உள்ளம் விரும்புவாறு அமையும் கற்பனையிலேயே அவர்களுக்கு ஆர்வம் மிகுதி என்றும் கூறலாம்.

புனைந்து கூறுதல்

வாழ்வை விட்டு நெடுந்தொலைவு விலகக்கூடிய ஆற்றல், நாடகம், கதை ஆகிய கலைகளுக்கு இல்லை. நாட்டியத்திற்கு உண்டு.

பாட்டுக் கலைக்கும் உண்டு. இரவில் விளக்கு நீங்கிய உடனே இருள் பரவுவது போல் கணவன் தழுவுதல் நீங்கிய உடனே காதலியின் உடம்பில் பசலை பரவுகின்றது என்று திருவள்ளுவர் பாடியுள்ளார்.

விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு

கணவன் தழுவிய கை நெகிழ்ந்த சிறிது விலகிய உடனே காதலியின் உடல் வாட்டம் உற்று நிறம் வேறுபடுகிறது பசலை பரவுகிறது என்ற உரைநடையான கதையின் எழுதினால் அந்தக் கற்பனை அங்குச் சுவை அற்றுப் போகும் ஆனால் கவிதையில் அதுவே சுவை பெறுகின்றது. நாட்டிய அரங்கில் இசையும் தாளமும் நடிப்பும் சேர்ந்த நம்மை அறிவுலகத்திலிருந்து நெடுந்தொலைவு அழைத்துச் செல்வதுபோல் கவிதையிலும் அதன் ஒலிநயமும் அமைப்பும் சேர்ந்து அறிவுலகத்திலிருந்து நெடுந்தொலைவு அழைத்துச் சென்றுவிடுகின்றன. அதனால்தான் கணவன் தழுவ மறந்த உடனே எப்படிப் பசலை பரவமுடியும் என்று ஆராய்ச்சி செய்யாமலே பாட்டின் கற்பனையை அனுபவிக்க முடிகிறது.

கனவு காணும்போது பறப்பதாகக் காணலாம். வாழ்க்கையில் நடக்கமுடியாதன நடப்பதாகக் கனவு காணலாம். ஆனால் அப்போது நம் அறிவு ஏன் என்று காரணம் கேட்பதில்லை, ஆராய்வதில்லை ஐயுறுவதில்லை, அப்போது அறிவு உறங்குகிறது. கற்பனை மட்டும் உள்ளது.

வாழ்க்கையும் கற்பனையும்

உள்ளம் விரும்புமாறு அமையும் கற்பனைக்கும் வாழ்க்கையே அடிப்படையாகும். வாழ்க்கையின் அனுபவமே அத்தகைய கற்பனையைத் தூண்டுவது. ஆயினும் அனுபவம் உடைய எல்லார்க்கும் அவ்வாறு கற்பனை அமைவதிலலை. உணர்ச்சி பண்பட்ட கலைஞர்க்கே அந்த அனுபவம் அத்தகைய பயனை விளைக்கிறது.

கற்பனையால் கவர்ச்சி

சிறப்பு இல்லாதவற்றைத் தள்ளிச் சிறப்பு உள்ளவற்றை மட்டும் கொள்வதால் கலை கவர்ச்சி உடையதாய் அமைகிறது. வரலாற்றிற்கு இல்லாத கவர்ச்சி காவியத்திற்கு அமைந்திருப்பதும், நிழற்படத்தைவிட ஓவியம் கவர்ச்சிமிக்கதாய் இருப்பதும் இதனாலேயே ஆகும். வரலாறு நிழற்படம் முதலியவை, எல்லாப் பொருளும் கொட்டிக் கிடக்கும் சரக்கறை

போன்றவை ஓவியம் காவியம் முதலானவை அலங்காரத்திற்கு உரிய வகையில் அமைக்கப்பட்ட தோரணமும் கொலுவும் போன்றவை அதனால்தான் கலைகள் கவர்ச்சி மிக்கனவாக விளங்குகின்றன.

போன்றது அன்று

ஓவியக் கலைஞனோ சிற்பக் கலைஞனோ பொருளின் உருவத்தையோ வடிவத்தையோ அவ்வாறே வடிப்பது போல் தோன்றினாலும், அந்தப் பொருளுக்கும் ஓவியத்திற்கும் அல்லது சிற்பத்திற்கும் வேறுபாடு இருக்கிறது. கலைஞர் தாம் புறக்கண்ணால் கண்டதைக் கண்டவாறே கலையில் வடித்து நன்றாக எடுத்துக்காட்டிச் சிறப்பு இல்லாப் பகுதிகளை அவ்வாறு காட்டாமல் விடுகிறார். அதனால்தான் கண்ணால் காணும் பொருளுக்கும் கலையில் காணும் பொருளுக்கும் வேறுபாடு ஏற்படுகிறது. ஓவியத்திலும் சிற்பத்திலும் இத்தகைய வேறுபாடு உள்ளது எனின், இலக்கியத்தில் அமையும் வேறுபாட்டைச் சொல்ல வேண்டியது இல்லை. புலவரின் உணர்ச்சி எல்லாம் பாய்ந்து அமைந்த கற்பனையில் எவ்வளவோ வேறுபாடு புகுந்துவிடுகிறது. அதனால்தான் பாட்டு என்பது இயற்கையைப் போலச் செய்தது அன்று, இயற்கையை உள்ளம் உணர்ந்தவாறு செய்தது என்று அரிஸ்டாட்டில் கூறியதை மு.வ. எடுத்துரைக்கிறார்.

வெறுங் கற்பனை

வெறுங் கற்பனை என்பது கலையற்றதும் அன்று: கற்பனைக்கு முரணானதும் அன்று. அதிலிருந்து சிறிது வேறுபட்டது. சிறிது மிகையானது எனலாம். அந்த வேறுபாடும் மனக் கண் காணும் காட்சியால் ஏற்பட்டது அன்றுளூ மனம் உணரும் உணர்ச்சியின் தன்மையால் ஏற்பட்டது எனல் வேண்டும். புலவரின் உணர்ச்சி வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் அமையும்போது, ஆழ்ந்த பண்புகள் அற்ற நிலையற்ற வெறுங் கற்பனைகள் தோன்றும் புலவரின் உணர்ச்சி ஆழமுடையதாகவும் உயர்வுடையதாகவும் அமையும்போது நிலைபெற்ற விழுப்பமுள்ள கற்பனைகள் தோன்றும்.

வெறுங் கற்பனை என்பது மற்ற எல்லா வகையிலும் உயர்ந்த கற்பனைபோல் தோன்றிலும், கற்பனைக்குக் காரணமான உணர்ச்சி விழுப்பம் உடையதாக இராது. வேடிக்கைப் போக்கும் ஆற்றல் குறைந்த உணர்ச்சியும் தான் வெறுங் கற்பனையான பாடல் எழுவதற்குக் காரணம் ஆகும் என்பர்.

உண்மை உடையன:- ஒரு நாட்டை வளம் மிக்க நாடாகக் கண்ட புலவர், அதைக் கற்பனை செய்யும்போது வெறுங்கற்பனை என்னும் அளவிற்குச் செல்லாமல், உள்ளம் விழைந்தவாறு அமைத்துக் கூறுதல் உண்டு எடுத்துக்காட்டு.

எருமை வயல் பகுதியில் நடக்கிறது. அதன் கால்களின் கீழ் கொழுமையான மீன்கள் அகப்பட்டு (நசுங்க வில்லை, பெரிய மீன்களாதலின்) துண்டிக்கப்படுகின்றன. அங்கே உள்ள வளமான இதழ்களை உடைய கழுநீர்ப் பூக்களை எருமை மேய்கிறது. பிறகு மிளகுக் கொடி படர்ந்த ஏறிய பலாமரத்தின் நிழலில் உதிர்ந்த காட்டுமல்லிகைப் பூக்களின் மேல் படுக்கிறது. அருகே உள்ள மஞ்சள் செடியின் மெல்லிய இலைகள் அப்போது எருமையின் மயிர் பொருந்திய முதுகைத் தடவுகின்றன. எருமை அந்த இலைகளின் தடவுதலை இன்புறப் பெற்றவாறே அசை போடுகிறது. அசை போடும் போது, மேய்ந்த கழுநீர்ப் பூக்களின் தேன் மணம் வெளிப்படுதலால் முற்றாத இளங்கள்ளின் மணம் வீசுகிறது.

கொழுமீன் குறைய ஓதுங்க வள்ளிதழ்க்
கழுநீர் மேய்ந்த கயவாய் எருமை
பைங்கறி நிவந்த பலவின் நீழல்
மஞ்சள் மெல்லிலை மயிர்ப்புறம் தைவர
விளையா இளங்கள் நாற மெல்குபு பெயராக்
குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளும். . . .

எருமைக்கு இந்த இன்பங்கள் எல்லாம் ஒரே முறையில் ஒருங்கே கிடைத்திருத்தல் அரிது ஆயினம் காட்டு மல்லிகைப்பூப்படுக்கை முதல் மஞ்சள் இலையின் தடவுதல் வரையில் எல்லாம் எருமைக்குக் கிடைக்கக் கூடிய இன்பங்களே ஆதலின், இது வெறுங் கற்பனை ஆகாமல், உள்ளம் விழைந்த உண்மைக் கற்பனையாகவே கொள்ளத் தக்கதாகும்.

முடிவுரை

இக்கட்டுரையில் கற்பனைப் பற்றித் தெளிவு மு.வ வினால் அறிய முடிகிறது. கற்பனை என்பது வாழ்வின் உயர்விற்கு ஒரு வழிகாட்டியாக செயல்படுகிறது என்றால் சாலப்பொருந்தும். ஆகையால் கற்பனை இல்லாத வாழ்வு ஒரு வாழ்வு ஆகாது. உயர்ந்த நோக்கமாக கனவு இருந்தால் இப்பூவுலகில் தன்னை அடையாளம் படுத்திக்கொள்ள உதவுகிறது என்பதை இக்கட்டுரையில் அறிய முடிகிறது.

௱௨. ஓவச்செய்தியில் மு.வ.வின் இலக்கிய ஆளுமை

மு.ரோஸ்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
தூயநெஞ்சக் கல்லூரி
திருப்பத்தூர். வே.மா.635601.

முன்னுரை

மு.வ. எனச்சுருக்கமாக அனைவராலும் அழைக்கப்படும் மு.வரதராசனார், எளிய குடும்பத்தில் பிறந்து, தமிழ் மனங்களில் நீங்காத இடத்தைப் பிடித்தவர் ஆவார். எழுத்தராக தன் பணியைத் தொடங்கி, பல்கலைக்கழக துணைவேந்தராகப் படிப்படியாக உயர்ந்தவர். தமிழ் வினைச் சொற்களின் தோற்றமும் வளர்ச்சியும், சங்க இலக்கியத்தில் இயற்கை என்ற ஆராய்ச்சி படிப்புகளின் மூலம் இலக்கிய உலகத்தில் உலாவந்தவர். இவர் எழுதிய நூல்கள் உயரிய விருதான சாகித்திய அகாடமி விருது முதல் பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளது. தமிழ்வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப்பெற்ற நூலான ஓவச்செய்தி என்ற இலக்கிய நூலில், மு.வ.வின் இலக்கிய ஆளுமையைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

அகநானூற்று ஐந்தாம் பாடல்

சங்கத் தமிழர்களின் வாழ்வில் விருந்தோம்பல் பண்பு என்பது இல்லறம் நடத்தக் கூடிய கணவனும் மனைவியும் இணைந்து, முகம் மலர்ந்து விருந்தினரை வரவேற்றலும், செல்விருந்து ஓம்பி, வருவிருந்து பார்த்தலும் ஆகும். இத்தகைய அன்பும் அருளும் மிக்க வாழக்கையால், மற்றவர்களுக்கு உதவி செய்வதால் பொருள் வளம் சுருங்கும் நிலை ஏற்படுகிறது. இதனால் தலைவன் பொருள் தேட வெளியூருக்குச் செல்ல நினைத்து அதற்கான ஆயத்தங்களைச் செய்து முடிக்கிறான். பயணம் செய்யும் நாளும் வந்து, மனைவியிடம் கூறி விடைபெற நினைக்கிறான். அவன் எண்ணங்களை ஒருவாறு ஊகித்து அவள் குழந்தையுடன் அருகில் நின்று சோக உருவாய் காட்சியளித்து சிறுது புன்முறுவல் செய்கிறாள். அதைக்காணும் கணவன் பொருள் தேடப்பிரிந்து சென்றால் இவள் உயிர் வாழமாட்டாள் என்று நினைத்து தன் பயணத்தை நிறுத்திவிட நினைக்கின்றான். இக்காட்சியானது எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான அகநானூற்று ஐந்தாவது பாடலில் உள்ளது.

அன்ன ஆக என்னுநாள் போல
முன்னம் காட்டி முகத்தின் உரையா
ஓவச் செய்தியின் ஒன்றுநினைத்து ஒற்றிப்

பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு
ஆகத்து ஒடுக்கிய புதல்வன் புன்றலைத்
- அகம்.5. 18-22

இப்பாடலை வைத்துக்கொண்டு மு.வ.அவர்கள் ஆராய்ந்து அதற்கான காரணங்களை தனக்கே உரிய இலக்கிய ஆளுமையின் மூலம் உணர வைக்கின்றார்.

தலைவன் பயணம் மேற்கொள்ளும் நிலை

இல்லறத்தில் ஈடுபடும் தலைவன் தன்னுடைய குடும்பமும், சுற்றத்தாரும் வறுமையின்றி வாழவும், பிறர்க்கு விருந்தோம்புதல் செய்யவும் பொருள் தேவையாயிருந்தது. எனவே பொருள் தேட வெளிநாடுகளுக்குச் செல்ல நினைக்கிறான். அவர்கள் செல்லும் வழியானது வெப்பம் மிகுந்த பாலைவழியாகும். மழைவளம் காணாது, கதிரவன் கொடுமை மிகுந்து, அவ்வழியே செல்லும் தமிழர்களுக்கு நீரும், நிழலும் இல்லாமல் மிகவும் வருந்தினர். இயற்கையின் கொடுமையல்லாமல், பாலை நிலத்தில் வாழும் மக்களான ஆறலைக் கள்வர்கள் தமிழரின் உயிருக்கும், உடைமைக்கும் பகையாக இருந்து வந்துள்ளனர். இக்கொடிய வழியில் சென்று. பொருள் ஈட்டித்திரும்புபவர் என்பது மிகச்சிலரே.

இக்கொடுமையான பாலைவழியைக் கடந்து பொருள் ஈட்டி, வறுமையைப் போக்குவது தலைவனின் தலையாயக் கடமையாகும். எனவே அத்தலைவன் பொருள் தேட வெளிநாடு செல்ல நினைத்து, பயணம் மேற்கொள்ள முடிவெடுக்கின்றான்.

தலைவியின் நிலை

கணவன் பொருள் தேடுவதற்கான பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்து முடித்து தன் மனைவியை அழைக்கிறான். அவள் வாய் திறந்து எதுவும் பேசாமல் மெல்ல நடந்து வருகிறாள். அவள் முகத்தில் இயல்பாக ஏற்படும் அன்பு இல்லாமல் மாறுபட்ட குறிப்பாக முகமும், அமைதி இழந்து உள்ளமும் கலங்கியது. அவள் நிலம் வடுக்கொள்ள நடந்து வரும் நடையில் குழப்பமும் இருக்கின்றன. கணவனை நெருங்கியதும் கூரியபற்கள் தெரியுமாறு சிறிதளவே பொய்யாக புன்முறுவல் செய்கின்றாள். கண்களில் நீர் அரும்பி, கண்ணீர் கீழே விழாமல் கண்களிலேயே நிரம்பி கண் பாவையை மறைத்துக் கொண்டு நிற்கிறது. நீர் நிரம்பிய கண்களோடு தன் மார்பில் இருந்த மகனை நோக்கினாள். தன் கணவனை எதிர்நோக்க இயலாமல், குழந்தையின் தலையில் செங்கழுநீர் மாலை சூடியிருந்ததை முகர்கிறாள். அப்போது அவள் விட்ட பெருமூச்சின் வெப்பம் மலரை வாடச் செய்தது. இதைக் காணும் கணவன்,

மலர் வாடுமாறு அவ்வளவு வெப்பம் இவளுடைய மூச்சில் இருக்குமாயின், உள்ளத்தின் பெருந்துயரம் எத்தகையது? என உணர்ந்து உருகித் தன் பயணத்தை நிறுத்திவிடுகிறான்.

தலைவன் பொருள்தேட பயணம் மேற்கொள்ளும் அவனை நல்லபடியாக வழியனுப்பி வைக்காமலும், வெளிநாடு செல்ல வேண்டாம் என்று தடுக்காமலும், மனதில் ஒருவித கலக்கத்துடன் ஓவியம் போல் நிற்கின்றாள். தலைவனும் அவளிடம் ஒன்றும் பேச வழி இல்லாமல் திகைத்தான். அவளும் மெல்ல நெருங்கி வந்தபின் ஓவியம் போல் நின்றாள். ஓவியம் உணர்த்தும் செய்தி ஒன்று இருப்பதுபோல், அந்த ஒன்றையே அவள் நினைத்தாள்ளூ துணிந்து நின்றாள். (ப.34). என்று மு.வ. தலைவியின் நிலை குறித்து கூறுகிறார்.

விருந்தோம்பலும் சுற்றமும்

சங்ககால கணவனும் மனைவியும் வாழ்க்கைக் கல்வியைக் கற்பதற்கு விருத்தோம்பல் ஒரு நன்னூலாக இருந்துள்ளது. விருந்து என்பது புதுமை. ஒரு காரணம் பற்றி ஊருக்குப் புதியதாக வந்த வெளியார்க்கு உணவு முதலியன தந்து காப்பது ஆகும். இதனால் நாட்டு மக்களுக்குள், உட்பிணைப்பும், அன்பையும், புதுமொழிகளை கேட்டு இன்சொல் வளர்த்தும், புதிய செய்திகளைக் கேட்டு அறிவு பெற்றுவாழும் பேறும் கிடைத்து வந்தன.

இல்லறத்தாரின் கடமை என்பது விருந்தோம்பல் மட்டுமல்லாமல், சுற்றம் தழுவுதலும் ஆகும். சுற்றம் என்பவர், இக்கால முறைப்படி உறவினரோ அல்லது சாதி முறையால் வரையறுக்கப்பட்டரோ அல்லர். உழவனுக்கு அக்காலத்தில் பெற்றோருடன் பிறந்து வளர்ந்த பிற குடும்பத்தினரும், குடும்ப வாழ்க்கைக்குத் துணை செய்யும் பிற தொழிலாளர்களான கொல்லர், தச்சர், வாணிகர் முதலானவரும் சுற்றமே. இச்சுற்றத்தாரையும், விருந்தினரையம் போற்றி உதவி செய்வதுதான் குடும்பத்தார்க்குச் சிறந்த கடமையாகும். அக்கடமை செய்வதற்கு வெளிநாடுகளுக்குச் சென்று பொருள் தேடுவதே அதற்கான வழியாக இருந்தது. அந்த முயற்சி முதியோர்க்கும், மெலிந்தார்க்கும் இயலாதது. ஆகவே, ஊக்கமும், உரமும் உடைய இளைஞர்க்கே அது கடமையாக அமைந்தது. அவ்வாறு துணிவுடன் செல்வது ஊர்த்தொண்டு என்று நினைத்தனர்.

பிரிவு

தலைவன் பிரிவதைத் தாங்கமுடியாமல் தலைவி வருந்தும் நிலையானது எவ்வாறு என்பதை பின்வரும் உதாரணத்தின் மூலம்

அறியலாம். அக்காலத்தில் தாயும் மகளுமான உறவு என்பது குடும்பத்திற்குள்ளேயே பழகியவர்களாக இருக்கின்றனர். மகள் திருமண வயதை அடைந்து திருமணம் முடித்து புகுந்த வீட்டிற்கு அனுப்பும்போது கண்ணீர் சொறிந்து கலங்கி நிற்றல். ஒருவன் சிறுவனாக இருந்தது முதல் வெளியூர்களுக்குச் செல்லாமல், அவ்வூரிலேயே பலகாலம் இருந்து வேறு ஊருக்குச் சென்றுவாழ நேரும்போது கலங்கி நிற்றல். சிற்றூரில் சொந்த வீட்டில் நெடுங்காலம் வாழ்ந்து, வறுமை காரணமாக அதை விற்க நேரும்போது அக்குடும்பம் கலங்கி நிற்றல். ஒரு பசுவை வளர்த்து, பால் கறந்து பயன்பெற்று முடிந்த பிறகு, அதை விற்க நேரும்போது வளர்த்தவர்கள் கலங்கி நிற்றல் முதலிய பிரிவுகளை நினைத்தால் தலைவி தலைவனைப் பிரியும் போது கலங்கி நிற்பதை நாம் ஓரளவு உணரலாம்.

மேற்காணும் பிரிவுகள் ஆழ்ந்த உணர்வின் மூலம் வெளிப்படும் பிரிவுகளாகும். இவ்வாறு இருப்பதற்கு காரணம் என்ன? ஆழ்ந்த உணர்வு என்பது பரந்து சென்று பல பொருளை அறிந்து நாடும் மனத்தில் வளர்வது அன்று. குவிந்து நின்று ஒரு சில பொருளோடு அமைதியுறும் மனமே ஆழந்த உணர்வின் வாழ்மனை. பழங்காலத்து வாழ்க்கை, மனம் பரந்து பல பொருளை நாடுவதற்கு இடம் இல்லாதது. ஆழ்ந்த உணர்வை வளர்த்தது. இக்காலத்து நகர வாழ்க்கை அதற்கு நேர் மாறானது. (ப.108) என்பதன் மூலம் அக்கால மக்களின் பிரிவுகளை ஒருவாறு அறியலாம். பிரிவைப் பற்றி திருவள்ளுவரும்,

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில் (குறள்.394)

என்ற குறளின் மூலம் இரு புலவர்கள் ஒன்று கூடி பிறகு பிரியும் போது ஏற்படும் கவலையை உணர்த்துகிறார்.

புலவரின் நிலை

அகநானூற்றுப் பாடலைப் பாடியவர் பாலை பாடிய பெருங் கடுங்கோ என்பவர். தொகுத்தவர். மதுரை உருத்திரசன்மர், தொகுப்பித்தோன் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி என்ற மன்னன். இப்பாட்டானது தலைவன் கூற்றாக அமைந்துள்ளது. எனவே ஓவியம் போல் நின்ற தலைவியின் உள்ளத்தை அவனால் உணர முடியவில்லை. தலைவனுக்குத் தெரியாதது புலவர்க்குத் தெரியும். ஏனெனில் தலைவியின் உள்ளமும் தலைவனின் உள்ளமும் உணர்ந்த அவர் என்ன கூற வருகிறார்?

தலைவன் தலைவி நிலை

தலைவனும் தலைவியும் கலங்குவதாக பல காரணங்கள் கூறும் புலவர். சில நல்ல வரையறைகளுக்கு உட்பட்டு எழுதுகிறார். தலைவன் தயங்குவதாக, செலவழுங்குவதாக, தலைவியை நினைத்து வருந்துவதாகப்

பாடியுள்ளார். தவிர, ஒரு பாட்டிலும் பாலைவழியின் கொடுமையை நினைத்து தலைவன் அஞ்சியதாகவோ, தயங்கியதாகவோ, வருந்தியதாகவோ பாடவில்லைஞூ சுற்றத்தார்க்கு உதவும் குறிக்கோளைக் கைவிட்டதில்லை. இதிலிருந்து தலைவனின் பண்புகளை உயர்த்தியே பாடப்பட்டுள்ளது.

தலைவனை உயர்த்திப் பாடிய புலவர் தலைவியிடம் குறைகாண விட்டுச் சென்றிருப்பாரோ? அவள் அறியாக் குழந்தைபோல பிடிவாதம் கொண்டு தலைவனுடைய முயற்சியைத் தடுப்பதாகக் குறை அமைத்திருப்பாரோ? ஆராய்ச்சிக்குப் பொருளாக உள்ள இந்தப் பாட்டில் தலைவன் அழைத்ததுக் கேட்டு உடன்படாமல் வந்தாள், நின்றாள், முன்னம் காட்டினாள் என்று பொருள் கூறல் பொருந்தாது அவளுடைய உயர் பண்புகளுக்கு இழுக்கு நேரா வகையில் அறிவுக்கும் உணர்வுக்கும் நிகழ்ந்த போராட்டத்தை விளக்கி, முடிவில் அறிவு தோல்வியுற உணர்வு வென்றது என்றே தெளிய வேண்டும்.

தலைவியினுடைய அன்பானது, □மகள் புக்ககம் செல்வதற்காக ஏற்பாடுகள் அனைத்தும் செய்த தாய், மகளுக்கு விடை கூற வேண்டிய நேரத்தில் கண்கலங்கி நெகிழ்ந்துருகும் உணர்வு நிலையைக் கொண்டே இப்பாட்டிற்குப் பொருள் கூற வேண்டும். இந்தத் தாயிடம் ஏதேனும் குறைகூற முடியுமோ? அவ்வாறே, தலைவன் முன் தலைவி நின்று கலங்குவதும் குறைகாண முடியாது.

முடிவுரை

ஒரு பாட்டு அதைக் குறித்துப் பல நாள் போராட்டம். இரண்டுநாள் இரவும் பகலும் ஏக்கம்ஞூ மூன்றாம் நாள் மாலையில் வேலத்துமலையை அடுத்த அழகிய ஓடையில் உலவும்போது எதிர்பாராத விளக்கம்ஞூ உள்ளத்தின் தெளிவால் பிறந்த பேருவகை-இவையே இந்நூலாக உருப்பெற்றன என்று ஓவச் செய்தி நூலில் தனது நன்றியுரையில் மு.வ. குறிப்பிடுகிறார்.

ஒரு பாடலைப் படித்து இன்புறுமுன்னர், அதன் உண்மை விளக்கத்தையும், புலவரின் எண்ணம், அக்காலச் சூழல், மக்களின் நிலை முதலியவற்றைக் கற்பனைச் சிறகு கொண்டு உணர்ந்து பயன்பெற வேண்டும் என்று தெளிவுப்படுத்துகிறார். மேலும் ஒரு பாடலை விளக்குவதற்கு திருவள்ளுவர் முதல் பாரதியார், பாரதிதாசன் வரையும், மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர், புத்தர் ஆகிய அருளாளர்கள் பற்றியும் கூறி வியக்கத்தக்க ஆராய்ச்சியை செய்து முடித்திருப்பது, அவருடைய இலக்கிய ஆளுமையைக் காட்டுகிறது.

103. அகல்விளக்கில் மு. வ. உணர்த்தும் நட்பும், மாந்தர்களுடைய சிறப்பும் ஒரு பார்வை

து.பாக்கியராஜ்
தமிழ் இலக்கியம்
முதுகலை முதலாம் ஆண்டு
அரசு கலைக்கல்லூரி
திருவண்ணாமலை.

முன்னுரை

மு.வ.வின் படைப்புகளில் நட்பின் சிறப்பை பற்றியும், மாந்தர்களுடைய பண்பு நலன்களை பற்றியும் கூறுவது அகல்விளக்காகும். அகல் விளக்கில் நட்பின் சிறப்பும், மாந்தர்களுடைய பண்பும் எந்நேரத்திலும் எச்சூழ்நிலையிலும் வெறுக்காமல் இருத்தலும், ஆணும், பெண்ணும் பழகினால் காதலாகத்தான் இருக்குமா? நட்பாக இருக்க முடியாத? என்ற வினாவிற்கு விடையும் நமக்குத் தீங்குச் செய்தவனும் நல்முறையில் வாழ வேண்டும் என நினைப்பது நட்பு மட்டுமே என்ற உண்மையும் விளக்கப்பட்டுள்ளன.

வாழ்க்கை என்பது எப்படி வேண்டுமென்றாலும் வாழ்வது வாழ்க்கையில்லை இப்படி தான் வாழ வேண்டும் என்பது தான் வாழ்க்கை என்பதை அகல் விளக்கில் உள்ள சந்திரனின் வாழ்க்கையின் மூலம் இதனை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

நட்பு - வரையறை

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு (குறள் 786)

என்கிறார் திருவள்ளுவர்.

நட்பை பற்றி நம் தமிழ் இலக்கியங்களும் பல ஆசிரியர்களும் பலவாறு விளக்கியுள்ளனர். அகல் விளக்கில் மாந்தர்கள் வெவ்வேறு குடும்பங்களை சார்ந்தவர்களாக இருந்தாலும் பல ஊர்களை சார்ந்தவர் இருந்தாலும் இவர்களுடைய நட்பும் எண்ணங்களும் செயல்களும், பார்வைகளும் மாசற்ற காற்றுப் போன்றது

மு.வ. அவர்கள் தன் நண்பன் இழிவான நிலையை அடைந்தாலும் வேலய்யன் அவனை ஒரு போதும் ஒதுக்கவில்லை.

பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனின் காணாத நட்பை போலவே இவர்களுடைய நட்பும், பண்பும் சிறந்தது என்று கூறுகிறார்.

அகல் விளக்கில் வரும் மாந்தர்கள்

வாலாசப்பேட்டையில் பிறந்தவன் வேலய்யன் அவனுக்கு என்றும் ஆற்றில் வற்றாத நீர் போன்ற அன்புடைய அம்மாவும், சந்தோஷத்திற்கும், துக்கத்திற்கும் துணையாக இருக்கும் தம்பி பொய்யாமொழியும், பாசத்திற்கு பஞ்சமில்லா மணிமேகலையும், உறவினரான அத்தையும், பிடிவாதமும் நற்குணங்களுடைய அத்தை மகள் கயற்கண்ணி வேலய்யனுடைய உறவினர்கள் ஆவார்கள்.

பெருங்காஞ்சியில் பிறந்தவன் சந்திரன், அவருடைய அப்பா சாமன்னா வசதிப்படைத்தவர் ஊரில் நற்பெயரும் (ம) மதிப்பிற்குரியவர், அழுகும், அமைதியும், அடக்கமும் கொண்ட தங்கை கற்பகம், என்றும் சந்திரனை விட்டு பிரியாத அத்தை சிவகாமி

சந்திரனின் கல்லூரி தோழி இமாவதி சந்திரன் மீது மிக்க பாசமும் அன்பும் வைத்திருக்கிறார். சந்திரனுடன் பயிலும் சாந்தலிங்கம், வேலய்யனுடன் பயிலும் மாலன் இவர்களுடைய நட்பும் பெரும்மிதமாக காட்டுகிறார்.

அகல் விளக்கின் நட்பின் தோற்றம்

வாலாசப்பேட்டையில் பிறந்த வேலய்யனும், பெருங்காஞ்சியில் பிறந்த சந்திரனும் ஒன்பதாம் வகுப்பிலிருந்து நண்பர்களாகப் பழகிவந்தனர். இருவரின் குணநலன்களும், பண்பு நலன்களும் ஏற்ற இறக்கத்தோடு காணப்பட்டாலும், இவர்கள் உயிர்த்தோழர்களாகவே வலம் வந்தனர்.

சந்திரன் அழகிலும், அறிவிலும், படிப்பிலும் சிறந்தவனாக விளங்குகிறான். வேலய்யன் அழகிலும், அறிவிலும், படிப்பிலும் சிறந்த விளங்காவிட்டாலும், நல்ல குணங்களையும், நற்பண்புகளையும் பொறாமையின்றி முழு அன்புடன் பழகி வந்தான்.

படிப்பில் வேலய்யன் பின் தங்கும் காரணத்தால் சந்திரன் கல்லூரிக்கு சென்றபின் அவன் தீய செயல் செய்தாலும் அவனை விட்டு நீங்காமல் அவனுடனே இருக்கிறான். வேலய்யனின் நட்பு சிறப்பாக வெளிப்படுத்துகிறார்.

சந்திரன் - இமாவதி

இமாவதி சந்திரனின் தோழி சந்திரனைச் சகோதாரணமாக எண்ணி பழகுகிறாள். ஆனால் அவனோ அதை தவறாக புரிந்து கொண்டு இமாவதியின் நட்பை காதல் என்று நினைத்துக் கொள்கிறான்.இமாவதிக்கு திருமணம் என்ற செய்தி கேட்டதும் அவன் செய்தது தவறு என்று உணர்ந்து

ஊரை விட்டு செல்கிறான். அவள் திருமணம் ஆன பின்பும், குழந்தை பெற்றப்பின்பும் சந்திரனின் அன்பும், நட்பும் என்றும் இமாவதி விட்டு நீங்காமல் அவனையே நினைத்து மிகவும் வருத்தப்படுகிறாள். இங்கும் நட்பு பெரிதாக காணப்படுகின்றன.

சாந்தலிங்கம் - சந்திரன்

சாந்தலிங்கம் கல்லூரி நாட்களில் சந்திரனால் அவன் பெரும் அவமானம் அடைகிறான். ஆனாலும் காதல் தோல்வியால் ஊரை விட்டுச் சென்ற சந்திரனை நீலகிரி மலையின் அடிவாரத்தில் அவனைக் கண்ட போது, அவன் செய்த தவறுகளை மறந்து சந்திரன் மீண்டும் நல்ல வாழ்வை அடைய வேண்டும் என்றும் எண்ணத்தால் வேலய்யனுக்கு தெரியப்படுத்துகிறான். இங்கும் நட்பு பெரிய அளவில் காணப்படுகின்றன.

பாக்கியம் அம்மையார்

இக்கதையில் வேலய்யனுக்கு அன்பும் பாசத்தை தூற்றிவளர்த்தவள், இவர் யார்?

ஒரு குடும்பத்தில் தலைவியாக பல மக்களுக்காக தாயாக விளங்க வேண்டிய கட்டாண உடம்பும், ஈரமான நெஞ்சும், படைத்த அந்த அம்மையார்க்குத் தணிமைத் துன்பத்தையே வாழ்வின் பரிசாக அளித்துவிட்டது. இவர் ஓர் கணவனை இந்த விதவை, வேலய்யன்னையும், சந்திரனையும் வளர்க்க படிக்க வைக்க இவளும் ஓர் காரணமாக இருந்தவள். (இம்மூவருக்கு எந்த உறவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது) ஒருவர் மீது அன்பும், பாசமும் செலுத்த உறவு முறை தேவையில்லை நல்ல மனம் ஒன்றே போதும். இங்கேயும் நட்பு -பெரிய அளவில் காணப்படுகின்றது.

வேலய்யன் - மாலன்

பல வகையில் கருத்து ஒறறுமையுடையவனாக மாலன் இருந்தாலும், மாலன் அறிவொளியை அளிக்கும் கல்வியைப் பயின்றாலும் மூட நம்பிக்கைகள் பலவற்றை தன்னுள்ளே வளர்த்துக்கொள்கிறான். அவனது நோக்கமே உழைப்பின்றி வாழ்வில் முன்னேறுவது.

வேலய்யன் அவனை தன் நண்பனாக ஏற்றுக்கொண்டு அவனை நல்வழிப்படுத்த முயற்சி செய்கிறான். மாலன் என் மீது பொறாமைப்பட்ட போதிலும் அவனுடன் இறுதி வரையில் அன்போடு பழகுகிறான்.

நட்பினால் விளையும் நன்மையும் தீமையும்

இவ்வுலகில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் நல்ல குழந்தையே சமூகமும், சமூகத்தை சார்ந்தவர்களுமே தீய வழிக்கு

அழைத்து செல்கின்றன. சமூகம் மற்றும் ஆசிரியர், கல்வி அதிகாரி நெல்லிக்கனி விற்பவள், உறவினர்கள் அனைவரும் அழகான தோற்றத்தை மட்டுமே விரும்புகிறார்கள். இதனால் அழகு மிக்க சந்திரன் மிக்க மகிழ்ச்சியையும், அழகற்ற வேலய்யன் மிகவும் வருத்தப்படுகிறான்.

சந்திரனை என்றும் எதிலும் விட்டுக்கொடுக்காதவன் வேலய்யன் ஆனாலும் அவன் மீதும் தவறுகள் உண்டு, சந்திரன் தவறு செய்யும் போதே வேலய்யன் தடுத்து இருந்தால் தவறு செய்து இருக்கமாட்டான். ஆனால் சிறுவயதில் சந்திரன் உதவி செய்ததையே எண்ணி அறிவுரை சொல்லாமல் இருந்து விடுகிறான். வேலய்யன் அறிவுரை கூறி இருந்தால் அவன் தீய வழிக்கு சென்று இருக்கமாட்டான்

வீட்டிலும் ஊரிலும் அவனை அழுகு என்றும் பணக்கார வீட்டுப் பிள்ளை என்றும் அனைவரும் கருதியதால் பல தவறுகளை செய்ய காரணமாக அமைகின்றது.

அன்பிற்கும், ஆசைக்கும் சிறு இடைவெளி என்பதை உணராத சந்திரன், சந்திரனிடம் ஆரம்பத்திலே நான் அன்பாக தான் பழகுகிறேன் என்று சொல்லி இருந்தால் அவன் அவள் மீது காதல் கொண்டு இருக்கமாட்டான். ஆனாலும் இமாவதி செய்தது தவறு என்பதை (உணர்த்துகிறது)

இமாவதி முன்பே அன்பாக நினைத்து பழகுகிறேன் என்று சொல்லியிருந்தால் அவனுக்கு இத்தகையை நிலைமை வந்து இருக்காது. தொழுநோய்க்கு உட்பட்டிருக்கமாட்டான்.

நட்பின் பண்புகள்

நட்பு என்பது மகிழ்ச்சியான காலத்தில் மட்டும் அல்லாமல், துன்பம் ஏற்படும் காலத்திலும் உதவி செய்ய வேண்டும். அது தான் சிறந்த நட்பிற்கு அடையாளமாகும்.

வேலய்யன் தம் நண்பன் தொழுநோயால் பாதிக்கப்பட்டாலும், அவனை வெறுக்காமல் அவனைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று சந்திரனின் ஆடையில் உள்ள இரத்த கரையைக் கண்டு அவன் மனம் அருவெருப்புக் கொண்டது இருந்தும் எவற்றையும் நினைத்து கொள்ளாமல் அவனுக்கு பணிவிடைச் செய்கிறான்.

சந்திரன் தொழுநோயால் மூக்கு, உதடு பிளவு, தொண்டை எல்லாம் பொங்கி சந்திரனின் தோற்றத்தை மாற்றி காட்டுகிறது.

வேலய்யன், சந்திரனின் நோயின் மீதான அருவெருப்பைக் காட்டிலும் அவ்ன் இளம் வயதில் செய்த உதவிகளின் மீதான நட்பின் மீதுள்ள நன்றியே மேலோங்கியுள்ளது.

முடிவுரை

அகல்விளக்கில் இடம் பெற்றிருக்கின்ற நட்பும், மாந்தர்களுடைய உறவும் எந்த நேரத்திலும் எந்த சூழ்நிலையிலும் எவ்வித பிளவு ஏற்பட்டாலும் அதனைப் புரிந்து கொள்வார்கள் என்பதை தெளிவுபடுத்துகிறது.

சந்திரன் - வேலய்யன், மாலன்- வேலய்யன், சாந்தலிங்கம் - சந்திரன், இமாவதி - சந்திரன், வேலய்யன் - கற்பகம், இவர்களது நட்பு அனைத்தும் நிலைகளையும் கடந்தது என்று அறிந்து கொள்ள வேண்டும்.

நண்பன் ஏதேனும் தவறு செய்தால் அவனை திருத்த வேண்டும் ஆணுக்கும், பெண்ணுக்கும் நட்பு என்ற உறவு எல்லா ஆணுக்கும், பெண்ணுக்கும் ஏற்பட வேண்டும். என்பன போன்ற கருத்துக்களால் நட்பை செம்மையுறச் செய்யும் வகையில் மு.வ.அவர்கள் மிகவும் இனிமையாக இயற்றியுள்ளார்.

104. மு. வரதராசனின் எழுத்துக் கொள்கை

முனைவர் ஜோ. பிரின்ஸ்
உதவிப் பேராசிரியர்
ஸ்ரீ வெங்கடேஸ்வரா கலை அறிவியல் கல்லூரி
பேராவூரணி

மொழிகளுக்கு உள்ள சிறப்புக்கெல்லாம் காரணம் அதற்கு அமைந்த எழுத்து வடிவமேயாகும். பேச்சு வடிவில் உள்ள மொழி குறிப்பிட்ட இடத்தில் வாழும் மக்களைக் குறிப்பிட்ட காலத்திற்குப் பிணைத்து வைக்கமுடியும். எழுத்து வடிவில் உள்ள மொழியோ, மக்களினத்தைப் பல நூற்றாண்டுகள் பிணைத்து வாழவைக்கும் ஆற்றலுடையது.

பேச்சு மொழி இல்லையானால் மனிதனுக்கும், விலங்கிற்கும் வேறுபாடு இல்லை எனலாம். எழுத்துமொழி இல்லையானால் காட்டுமிராண்டிக்கும் நாகரிக மனிதனுக்கும் வேறுபாடு இல்லை எனலாம். விலங்கினமிடமிருந்து மனிதனைப் பிரித்து உயர்த்தியது பேச்சுமொழி. உண்பதும், உறங்குவதுமாக வாழ்ந்த பழங்காலக் காட்டு மனிதனை வளர்த்துப் பண்படுத்தி நாகரிகம் பெறச்செய்தது எழுத்து மொழியாகும்.

எழுத்தின் தோற்றம்

மொழியின் தோற்றம் ஆராய்ச்சிக்கு எட்டாததாக உள்ளது. ஆயின் எழுத்தின் தோற்றம் அத்தகையது அன்று மொழியின் தோற்றம் மனிதனின் தோற்றத்தோடு இயைந்தது. இன்னகாலத்தில் தோன்றியது என்று ஆராய்வதற்கு எட்டாத தொன்மையுடையது. அதன் தொன்மையோடு ஒப்பிட்டு நோக்கினால் எழுத்தின் தோற்றம் மிகப் பிந்தியது. நேற்றுத் தோன்.றிய நாகரிகக் கருவிகளைப் போன்றது.

இன்று உலகில் நாகரிகம் பெற்ற மக்கள் வழங்கும் எழுத்துக்கள் நூற்றுத் தொண்ணூற்றெட்டு (198) வகையானவையாகும். இந்தியாவில் முப்பது வகை (30) எழுத்து முறைகள் (லிபிகள்) உள்ளன என்பர்.

ஓவிய எழுத்து

முதலில் பேசத்தொடங்கிய மக்கள் சிறு சிறு ஒலிகளை ஒலிக்கவில்லை. சிறு சொற்களையும் ஒலிக்கவில்லை. முழுக்கருத்து அமைந்த வாக்கியங்களையே ஒலித்தனர். அதுபோலவே முதலில் எழுதத் தொடங்கிய மக்களும் எழுத்துக்களை எழுதவில்லை. சொற்களையும் எழுதவில்லை. கருத்துக்களையே எழுதினர். ஓவியங்கள் எழுதி அவற்றின் வாயிலாக கருத்துக்களைப் புலப்படுத்தினர். இவற்றையே ஓவிய எழுத்துக்கள் என்பர்.

தமிழில் எழுத்து என்பதற்கு ஓவியம் என்ற பொருள் உண்டு. சீன மொழியிலும் எழுத்துக்களை உருவங்கள் என்று குறிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சீன எழுத்து

நாகரிக மொழிகளுள் சீனமொழி எழுத்துக்கள் தோன்றிய வரலாற்றை விளக்க வல்லனவாய் உள்ளன. சீனமொழியில் மலை என்னும் பொருளைக் குறிக்க மலையின் உருவமே எழுத்தாக எழுதப்பட்டது. இவ்வாறு ஏறக்குறைய 40000 அடையாள உருவங்கள் எழுத்துக்களாக சீனமொழியில் உள்ளன.

ஓவிய எழுத்தின் சிறப்பு

ஓவிய எழுத்து குறிப்பிட்ட ஒரு பொருளையோ, கருத்தையோ உணர்த்தப் பயன்படுமே தவிர பொருளின் பலவகை வேறுபாடுகளையோ கருத்து நுட்பங்களையோ உணர்த்தப் பயன்படாது. ஆனால் அதில் ஒரு சிறப்பு உண்டு. அதை இன்ன மொழியாளர் மட்டுமே தெரிந்து கொள்ள முடியும் என்ற வரையறை இல்லை.

அடையாள எழுத்துக்கள்

ஓவிய எழுத்துக்கள் ஒருவாறு திரியத் தொடங்கிய காலத்தில் அவை அடையாள எழுத்துக்களாக மாறத் தொடங்கின. பொருளின் வடிவம் மறைந்து அடையாளம் என்றும் கருதும் எழுத்.துக்கள் வளரத் தொடங்கிய போது அடையாள எழுத்துக்கள் தோன்றலாயின. தாமரையை எழுத அதன் வடிவத்தை எழுதாமல் 'பு' என்ற எழுத்துப்போல் ஒன்றைக் குறித்தலும் தாமரையை உணர்ந்து கொள்ள முடிந்திருக்கும் நாளடைவில் தொடர்பு இல்லாத ஒன்றும் ஒரு பொருளுக்கு அடையாளமாகக் கொள்ளும் நிலை வந்திருக்கும்.

ஓவிய எழுத்திலிருந்து அடையாள எழுத்து வளர்ந்த வளர்ச்சியைப் பின்வருமாறு குறிக்கலாம். அ·.தாவது தொடக்கத்தில் எழுத்துக்களை பொருள்களின் உருவங்களைக் காட்டின. வளர்ந்து அமைந்த போது பெயர்களான ஒலிகளின் அறிகுறிகளாக நின்றன. இவ்வாறு மாறியமைவதற்கு முன் இடைக்காலத்தில் ஓவியங்களே ஒலிகளின் அடையாளங்களாகப் பயன்பட்டு ஒரு வகைத் தடுமாற்ற நிலைமை இருந்து வந்தது எனலாம். பேச்சுமொழி வளர்ந்த நிலையில் பொருள்கள் இருந்தன. அவற்றிற்கு மக்கள் இட்ட ஒலிக் குறியீடுகள். எழுத்துக்கள் இவற்றிற்குப் பின் தோன்றியவை. தொடக்கத்தில் அன்று பொருள்களை ஒட்டியவைகளாக இருந்தன. வளர வளர ஒலிகளை ஒட்டி மாறி அமைந்தன.

ஒலி எழுத்துக்கள்

அடையாள எழுத்துக்களுக்குப் பின்னர் பிற்காலத்தில் ஒலி எழுத்துக்கள் தோன்றின. அதனால்தான் இன்றும் சில மொழிகளின் எழுத்துக்களின் பெயர்கள் முழு முழுச் சொற்காக உள்ளது. ஏ. பி எழுத்துக்கள் ஆல்பா, பீட்டா என்று சில மொழியினர் வழங்குதல் காணலாம். செமிட்டிக் மொழிகளிலும் எழுத்துக்களின் பெயர்கள் குறிப்பிட்ட பொருள்களின் பெயர்களாக உள்ளன.

ஆப்பு வடிவ எழுத்துக்கள்

சுமேரியர் எழதிப் பழகிய எழுத்துக்கள் ஆப்பு வடிவ எழுத்துக்கள் எனப்படும். இந்த எழுத்துக்கள் அழியாமல் விளங்குவதற்காக அவற்றைப் பொறித்த களிமண் தட்டுகளை வெயிலில் காய வைத்தும், நெருப்பில் வேகவைத்தும் உறுதிபெறச் செய்தார்கள். இத்தகைய எழுத்துக்களைச் சித்திரங்கள் போல அமைக்க முடியவில்லை. குறுக்கும், நெடுக்குமான கோடுகளே தோன்றின. பழங்காலத்தில் 'நினிவே' என்ற பழைய நகரத்தில் வடிவ எழுத்துக்களால் அமைந்த புத்தகங்கள் இருந்தன என்றும் கூறுகின்றனர். புத்தகங்கள் என்றால் அவை களிமண் தட்டுக்களாகும்.

எழுதும் முறைகள்

எழுத்துக்களை எழுதும் முறை மொழிக்கு மொழி வேறுபடுகிறது. செமிட்டிக் மொழியில் வலமிருந்து இடம் நோக்கி எழுதும் வழடக்கம் இரந்தது. தமிழ் மொழி இடமிருந்து வலமாக எழுதும் முறையைக் கொண்டது.

சைனாவிலும் ஜப்பானிலும் மேலிருந்து கீழ் நோக்கி எழுதும் முறை இருந்தது. மெக்சிகோ மொழி கீழிருந்து மேல்நோக்கி எழுதப்பட்டது.

தமிழ்மொழி ஆரம்பகாலத்தில் வட்டெழுத்தாகவும் பின்னர் பௌத்தர் புகுத்திய பிராமி எழுத்தாகவும். பின்னர் வடமொழியாளர் பரப்பிய கிரந்த எழுத்தாகவும் எழுதப்பட்டது.

எழுத்தின் தொடக்கக் காலத்தில் ஓவிய எழுத்துக்களாகவும், இடைக்காலத்தில் அடையாள எழுத்துக்களாகவும், பிற்காலத்தில் ஒலி எழுத்துக்களாகவும் தான் உலக மொழி எழுத்துக்கள் எழுதப்பட்டன என்கிறார் மு. வரதராசனார்.

105. முனைவர் மு. வ. வின் நெஞ்சில் ஒரு முள் புதினத்தில் பெண் மாந்தர் படைப்பு ஓர் ஆய்வு

இரா. பிரசன்னாதேவி
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
சன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
திருவண்ணாமலை.

முன்னுரை

19-ஆம் நூற்றாண்டின் இலக்கிய உலகில் புதினம் ஓர் சிறப்பான இடத்தைப் பிடித்ததிருந்தது. ஒருவரின் தனிப்பட்ட வாழ்வின் நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு அதனை ஒரு பரந்துபட்ட சமூகத்தின் இயக்கத்தில் ஒரு பகுதியாகத் தொகுத்துத் தருவதே புதினமாகும். தமிழ்புதின உலகில் தனக்கென ஓர் தனி நடையினை வகுத்துக்கொண்டு நல்ல புதினங்களை அளித்தவர் மு.வ. அவார். அவரின் படைப்பில் ஒன்றான நெஞ்சில் ஒரு முள் என்ற புதினத்தில் படைப்பு பற்றி இங்குக். காண்போம்.

கதைச் சுருக்கம்

நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்த பெண் தன்னுடன் கல்லூரியில் பயிலும் ஒருவனைக் காதலிக்கின்றாள். அவன் அவளை விட்டு பிரிந்து செல்கின்றான். பிறகு அவள் பணிக்குச் செல்லும் இடத்தில் முதலாளி அம்மாவின் நன்மதிப்பைப் பெறுகிறாள். வாழ்க்கைக்குச் செல்வம் மட்டுமே அவசியம் என்ற அவள் கருத்தை ஏற்றுக்கொண்டு அவள் கூறும் வயதுமுதிர்ந்த செல்வந்தருக்கு இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்படுகிறாள். தன் கணவனின் தீய பழக்கவழக்கங்கள் பிடிக்காமல் பிரிந்து தன் வீட்டிற்குச் செல்கிறாள். அப்பொழுது தன் முன்னாள் காதலனைக் காண்கின்றாள். சூழ்நிலை காரணமாக இருவருக்கும் உறவு ஏற்படுகிறது. பிறகு தன் தவறை உணர்ந்து மீண்டும் கணவனுடன் வாழ்கிறாள். சில மாதங்கள் கடந்த பின்பு ஒரு குழந்தைக்குத் தாயாகின்றாள். அவள் மனதில் தன் கணவனுக்கு பிறந்த குழந்தை இது இல்லையோ என்ற எண்ணம் தோன்றுகிறது.

தன் கணவனின் முகச்சாயல் இல்லாமல் இருப்பதைக் கண்டு தன் தவறின் விளைபயனே என்று உருகுகின்றாள். கால ஓட்டத்தின் இடையே அவள் மகன் கல்லூரி செல்கின்றான். அங்கு தன்னுடன் பயிலும் ஒரு பெண்ணை நேசிக்கின்றான். அவளை தன் வீட்டிற்கு அழைத்து வருகின்றான். தன் மகன் வீட்டிற்கு அழைத்து வந்த பெண்ணையே

அவனுக்கு மணமுடிக்க வேண்டும் என்று மனதில் எண்ணிக் கொள்கிறாள். சிலமாதங்களுக்குப் பிறகு தன் கணவனை இழக்கின்றாள். தன் பிறந்த வீட்டிற்கு வருகின்றாள். அப்பொழுது தன் மகனின் காதலி தன் முன்னாள் காதலனின் மகள் என்று தெரியவருகிறது. பேரிடி அவளைத் தாக்கியதுபோல உணர்கின்றாள். மன அமைதி பெற அறவாழி என்னும் நண்பரின் உபதேசங்களைக் கேட்டு, வாழ்வின் போக்கினை உணர்ந்து அனாதைக் குழந்தைகளுக்குத் தாயாக தன்னை இணைத்துக் கொள்கிளறாள். தன் மனத்துயரைப் போக்க பல செயல்களில் ஈடுபட்டாலும் முன்பு ஒரு காலத்தில் அவள் செய்த தவறு வாழ்நாள் முழுவதும் நெஞ்சில் முள்ளாய் குத்துகிறது.

பெண் மாந்தரின் பாத்திரப் படைப்புகள்

சமூகத்தில் பெண்களின் நிலையும், அவர்களின் வாழ்வில் ஏற்படக்கூடிய நிகழ்வுகளையும் காட்சியாக வடிவம் பெறும் வகையில் மு.வ. அவர்களின் பெண் மாந்தர் படைப்புகள் உருவாக்கப்படுகின்றன. சமுதாயத்தில் ஏற்படும் ஒரு சில நிகழ்வுகளாலோ அல்லது சூழ்நிலைக் காரணமாகவோ ஒரு பெண் சில ஆண்களுடன் தங்களுடைய வாழ்வை பகிர்ந்துகொள்ள நேர்கிறது. ஆனால் இறுதியில் ஒரு ஆணுடன் மட்டுமே உள்ளத்தூய்மையோடு வாழ்வியலைக் கடப்பதாகப் படைக்கப்பட்டுள்ளது. மேலும் நற்பண்புகள் வாய்ந்த ஒரு பெண்ணின் வாழ்வில் படிப்படியே ஏற்படும் சில நிகழ்வுகளால் அவள் வாழ்வின் போக்கு பல மாற்றங்களுக்கு உட்படுகிறது. நதியின் போக்காகத் தன் வாழ்வை உணரும்போது மீண்டும் இயல்பு மனநிலை உருவாகிறது. இப்படிப்பட்ட பெண் மாந்தர் படைப்பின் சிறப்பு இப்புதினத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

வடிவு

ஆணையும் பெண்ணையும் இருசக்கரங்களாகக் கொண்டு சமுதாய வாழ்க்கை என்ற வண்டி இயங்குகிறது. இருசக்கரங்களும் சமமாக இருத்தல் வேண்டும் என்பது விதி. ஆனால் நாம் வாழும் சமுதாயமோ ஆணைத் தலைமை நிலையிலும் பெண்ணைச் சார்பு நிலையிலுமே வைத்து எண்ணுகிறது. ஒருவனுக்கு ஒருத்தி என்று வரையறை வகுத்துள்ள சமூகம். அந்த வரையறைக்குள் நிற்கப் பெண்கள் போராடுவதையும். வரையறை சூழ்நிலையில் மாறும்போது வாழ்க்கை திசை தவறிப் போவதையும் நடைமுறையாக்கியுள்ளது. இத்தகைய வாழ்க்கைச் சிக்கல்களில் பெண்களின் நிலையைப் படம் பிடிக்கும் வகையில் மு.வ. வின் 'நெஞ்சில் ஒரு முள்' அமைந்துள்ளது. இப்படித்தான் வாழ வேண்டும் என்று வாழ்வதே முறையான வாழ்வாக அமையும் என்ற கொள்கையுடையவர் மு.வ. அதிலிருந்து மீறும் பெண்களுக்கு நேரும் துயரின் நிகழ்வை 'வடிவு'

என்னும் பாத்திரத்தின் மூலம் வெளிப்படுத்துகிறார். ஒருவனை மனதில் நினைத்துப் பிறகு பணத்திற்காக வேறு ஒருவனை மணக்கின்ற மாந்தராக வடிவு விளங்குகிறாள். அதனால் அவள் படுகின்ற இன்னல்களை மையமாக்கி அவளைப் போன்றே வாழ்க்கைகாகப் போராடுகின்ற பெண்களைத் துணைமாந்தர்களாகக் கொண்டு நெஞ்சில் ஒரு முள் அமைந்துள்ளது.

விஜயா

செல்வச் சீமாட்டியான இவள் பணமே பிரதானம் என்ற எண்ணம் கொண்டவள். வடிவினை ஆடம்பரவ ாழ்விற்குத் தூண்டுபவள். அன்பின் பாதையிலிருந்து விலகச்செய்து செல்வத்தின் பாதைக்குச் செல்ல திசைத்திருப்பியவள். தன் இரண்டு பெண்பிள்ளைகளை அவர்களின் விருப்பத்திற்கேற்ப வாழ்வினை வாழச் செய்தவள். கதைக்குத் திருப்புமுனையாக இருப்பவள்.

இந்திரா

விஜயாவின் மூத்தமகள் ஆடம்பரவாழ்வினை விரும்புபவள். சேகர் என்பவனைக் காதலித்து அவனைவிடுத்து பணத்திற்காக கோபால் என்பவனைத் திருமணம் செய்துகொள்கிறாள். தன் செல்வங்களை எல்லாம் தீயபழக்கத்தினால் இழந்து பைத்தியக்காரியாக மாறி இறந்துவிடுகின்றாள்.

சந்திரா

விஜயாவின் இளையமகள் எளிய வாழ்க்கையைப் பின்பற்றுபவள். தான் செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தாலும் ஆடம்பரவாழ்வினை விரும்பாதவள். அறவாழியின் கருத்துக்களைப் பின்பற்றுபவள். எளிய குடும்பத்தில் இருந்த ஆசிரியனைத் திருமணம் செய்துகொண்டவள் கல்வி போதிப்பது சிறந்த அறம் என்று கருதி தன் கணவனின் வழியிலே தன்னையும் இணைத்துக் கொள்கின்றனள்.

பார்வதி

சந்திராவின் தோழியானவள். நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவள். எளிமையான வாழ்வினை விரும்புபவள் செல்வந்தர் வீட்டுப்பெண்ணின் நட்பு கிடைத்தாலும் தானும் அவ்வாறு வாழ வேண்டும் என்ற எண்ணம் இல்லாதவள். அறவாழியின் நற்சிந்தனைகளைக் கேட்டு அதன் வழி நடப்பவள். யாருக்கும் சுமையாக இல்லாமல் தன்னியல்பில் தன் வாழ்வினை வாழ்பவள்.

பார்வதி

சந்திராவின் தோழியானவள். நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவள். எளிமையான வாழ்வினை விரும்புபவள். செல்வந்தர் வீட்டுப்பெண்ணின் நட்பு கிடைத்தாலும் தானும் அவ்வாறு வாழ வேண்டும் என்ற எண்ணம் இல்லாதவள். அறவாழியின் நற்சிந்தனைகளைக் கேட்டு அதன் வழி நடப்பவள். யாருக்கும் சுமையாக இல்லாமல் தன்னியல்பில் தன் வாழ்வினை வாழ்பவள்.

அன்பரசி

பார்வதியின் அக்கா மகள். வடிவின் மகனைக் காதலிப்பவள். அறிவு நிறைந்து காணப்பட்டாலும் ஆணவம் காணப்படாத பெண். தன்னுடன் கல்லூரியில் பயிலும் ஆண்களுடன் அன்பாகப் பழகினாலும் எல்லைமீறாமல் நட்பைக் கடைபிடிப்பவள். வடிவின் அன்பிற்கு பாத்திரமானவள். வடிவு தன் காதலை ஏற்க மறுத்தபோது தன் மனத்திற்குள்ளே துன்பப்படுபவள். அறவாழியின் நன்மதிப்பைப் பெற்றவள்.

தாமரை

இந்திராவின் மகள். ஒருவனை நம்பி தன்னை இழந்து ஒரு கைக்குழந்தைக்கு தாயானவள். தானும், தன் குழந்தையும் தனிமையில் இருந்தாலும் வேறொரு ஆணிடம் தன் வாழ்வை இணைத்துக் கொள்ளதவள். இறுதியில் தன் குழந்தை வடிவிடம் ஒப்படைத்துவிடுபவள்.

மு.வ. வின் பெண்மாந்தர்களின் நிலை

ஆடம்பர வாழ்வு செல்வத்தின் மீதான பற்று காரணமாக பெண்களில் சிலர் தங்களின் வாழ்வினை திசைத்திருப்பிக் கொள்கின்றனர். இன்றையத் தமிழ்ச் சமுதாயத்தில் புறவுலகில் பெண்கள் பல ஆடவருடன் பழக நேர்கிறது. சில சந்தர்ப்பங்களில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற இயல்பை மீறி ஒன்றுக்கு மேற்பட்ட ஆடவர்கள் அவர்கள் வாழ்வில் ஊடாட நோக்கிறத. அப்பொழுது உணர்ச்சி வசப்பட்டு தாம் எடுக்கும் முடிவுகளில் தவறுசெய்து வடிவு, விஜயா போன்றோர் தங்களின் வாழ்வினை அமைத்துக் கொள்கின்றனர். இந்திரா போன்ற பெண்கள் தங்களின் வாழ்வினை தாங்களே அமைத்துக் கொள்பவர்களும் இருக்கின்றனர். சந்திரா போன்று தூய வாழ்வு வாழும் பெண்களும் இருக்கின்றனர்.

தன் மனத்துயரைப் பிறரிடம் சுமத்தாதப் பெண்ணாக அன்பரசி போன்றும் இருக்கின்றனர். தன்னை ஒருவருடன் இழந்தாலும் வேறு ஒரு ஆணிடம் செல்லாத, ஒருவனுக்கு ஒருத்தி என்ற கற்பு வாழ்வை மேற்கொள்ளும் தாமரை என்ற பெண்ணைப் போலவும் இருக்கின்றனர்.

இவற்றையெல்லாம் கடந்து சமுதாயத்தில் ஆண் துணையின்றி நல்ல வாழ்வினை வாழமுடியும் என்று தன் குடும்பத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட பார்வதியைப் போலவும் ஒருசில பெண்கள் இருந்துகொண்டுதான் இருக்கின்றனர். ஆனால் உடலளவில் தவறுசெயிது உள்ளத்தால் ஒருவனுக்கு கற்பு வாழ்வினை வாழும் பெண் தான் செய்த தவறு வாழ்நாள் முழுவதும் நெஞ்சில் முளிளாய் குத்துகின்ற உணர்வினை இங்கு வடிவு என்னும் பாத்திரத்தின் மூலமாக நமக்கு சுட்டுகிறார். அப்படிப்பட்ட பாத்திரத்தின் படைப்பே நெஞ்சில் ஒரு முள் என்ற புதினமாகும்.

இத்தகைய நிலையில், பெண்கள் தமது வாழ்வை கொள்கைப் பிடிப்போடு ஒழுக்க நெறிக்குட்பட்டு வாழ்வதே அமைதிக்கு வழியாகும். அன்றேல், வாழ்க்கையின் போக்கு திசைமாறி பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக நேரிடும் என்ற உண்மையை உணர்த்துவதற்காக மு.வ. படைத்த மாந்தர்களாக வடிவு, இந்திரா, தாமரை ஆகியோர் விளங்குகின்றனர். வடிவு 'இப்படித்தான் வாழ வேண்டும்' என்ற கொள்கையிலிருந்து விஜயாவின் பேச்சைக்கேட்டு தடம் மாறுவதால் தொடர்ந்த தவறுகளால் நிம்மதியிழக்கின்றான். இந்திரா ஆடம்பரத்திற்கு ஆசைப்பட்டதால் வாழ்க்கை திசைமாறி முடிவில் பைத்தியமாகின்றாள். தாமரை திருமணத்திற்கு முன்னே நெறி மீறியதால் துயரத்திற்கு ஆளாகிறாள். ஆனால், ஆடவரோடு பழகினாலும் தமது நெறியை இழக்காத சந்திரா, பார்வதி, அன்பரசி ஆகியோர் அமைதியான வாழ்வை பெறுகிறார்கள்.

முடிவுரை

உணர்ச்சிச் சூழ்நிலையில் ஒருபெண் கொள்கைளைக் கைவிடும்போதும் ஒழுக்கத்திலிருந்து மீறும்போதும் வாழ்க்கைத் தடம் மாறுவதும் அதனால் ஏற்படும் மனசாட்சித் துயர் நெஞ்சில் முள்ளால் குத்திக்கொண்டே இருக்கும். எனவே எந்தச் சூழலிலும் ஆடவர்களோடு பழகுவது தவறல்ல. தன் ஒழுக்கத்திலிருந்து தவறாமையே அவர்களைக் காக்கும் அறம் என்பதை பெண்மாந்தர்கள் வழியே மு.வ. உணர்த்துகிறார்.

106. வரதராசனார் ஓர் அறிவு களஞ்சியம்

பேராசிரியர் நாஞ்சில நீல மாதவன்
தமிழ்த்துறைத் தலைவர்
ஸ்ரீ சங்கரா கலை அறிவியல் கல்லூரி
ஏனாத்தூர், காஞ்சிபுரம் - 631 561.

முன்னுரை

சென்னை இந்தியா தொழில் எழுத்தாளர் தமிழ் பேராசிரியர் மு.வ எனச் சுருக்கமாக அழைக்கப்பட்ட மு. வரதராசன். 20-ம் நூற்றாண்டின் புகழ் பெற்ற தமிழ் அறிஞர்களுள் ஒருவர். இலக்கியக் கட்டுரைகள் ஆராய்ச்சி நூல்கள் போன்றவை மட்டுமின்றிப் பல சிறுகதை புதினங்கள் போன்றவற்றையும் எழுதியுள்ளார். இவர் சென்னை பச்சையப்பன் கல்லூரி சென்னை பல்கலைக் கழகம் ஆகியவற்றில் தமிழ்த்துறைத் தலைமைப் பொறுப்பில் இருந்ததுடன் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணியாற்றினார்.

வாழ்க்கைச் சுருக்கம்

மு. வரதராசனார் தமிழ்நாடு வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் வேலம் என்னும் சிறிய கிராமத்தில் முனுசாமி முதலியார் - அம்மாக்கண்ணு தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். திருவேங்கடம் என்று பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டாலும் தாத்தாவின் பெயரான வரதராசன் என்ற பெயரே அவருக்கு நிலைத்துவிட்டது. மு.வ.வின் இளமை வாழ்வும் தொடக்கக் கல்வியும் வேலம் என்னும் சிறிய கிராமத்துடன் வளர்ந்தது.

உயர்நிலைக் கல்வியைத் திருப்பத்தூரில் கற்றுத் தேர்ந்தார். பதினாறு வயதில் பள்ளி இறுதிதேர்வில் வெற்றி பெற்றார். 1928-ம் ஆண்டில் திருப்பத்தூர் தாலுகா அலுவலகத்தில் சில காலம் எழுத்தராகப் பணியாற்றினார். எழுத்தராகப் பணியாற்றிய போது உடல் நலம் குன்றியதால் அந்தப் பணியிலிருந்து விடுபட்டு ஓய்வுக்காக கிராமத்துக்குச் சென்று அங்கு திருப்பத்தூர் முருகைய முதலியார் என்பவரிடம் தமிழ் கற்கத் தொடங்கினார். தமிழின் மீதிருந்த பற்றால் 1931 இல் வித்வான் முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றார். பின்னர் தாமே பயின்று 1935 இல் வித்வான் தேர்வு எழுதி அதில் மாநிலத்திலேயே முதல் மாணாக்கராகத் தேர்ச்சி பெற்றார். இதற்காக திருப்பனந்தாள் மடம் ரூ. 1000 பரிசளித்தது. 1935 ஆம் ஆண்டு தம் மாமன் மகளான ராதா அம்மையாரை மணந்தார். இவர்களுக்கு திருநாவுக்கரசு, நம்பி, பாரி ஆகிய ஆண் மக்கள் பிறந்தனர். 1935 முதல் 1938 வரை திருப்பத்தூர் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். 1939ல் பி.ஓ.எல். தேர்ச்சி பெற்றார்.

பேராசிரியராகப் பணி புரிதல்

1939 ஆம் ஆண்டில் பச்சையப்பன் கல்லூரி விரிவுரையாளர் பணி நிமித்தம் சென்னை சென்ற மு.வ. அக்கல்லூரியின் கீழ்த்திசை மொழிகளில் விரிவுரையாளர் என்ற பொறுப்பை ஏற்றார். 1944 இல் தமிழ் வினைச் சொற்களின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற தலைப்பில் ஆராய்ந்து எம்.ஓ.எல். பட்டம் பெற்றார்..

1948 இல் சென்னை பல்கலைக்கழகத்தின் மூலம் சங்க இலக்கியத்தில் இயற்கை என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற்றார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் மூலம் முதல் முதலாக தமிழில் முனைவர் பட்டம் பெற்ற பெருமைக்குரியவர் மு.வ. என்பது குறிப்பிடத்தக்கது.

1939 இல் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்த மு.வ. 1961 வரை அங்கு பணியாற்றினார். 1945 இல் அக்கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவர் ஆனார். இடையே ஓராண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைப் பேராசிரியராகப் பணியாற்றினார். 1961 முதல் 1971 வரை சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றினார்.

பின்னர் 1971 இல் மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பொறுப்பேற்று 1971 வரை சிறப்புப் பணியாற்றினார்.

மு.வ. சென்னை திருப்பதி அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களின் செனட் உறுப்பினர் பதவி வகித்துள்ளார். கேரள மைசூர் உஸ்மானியா பெங்களூர் ஆந்திரதில்லை மதுரை கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களின் கல்வி வாரிய உறுப்பினர் பதவிகளையும் வகித்துள்ளார்.

1972 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஊரஸ்.டர் கல்லூரி இவருக்கு இலக்கியப் பேரறிஞர் (டி.லிட்) என்ற சிறப்புப் பட்டத்தை நல்கிப் பெருமைப்படுத்தியது. அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் டி..லிட் என்னும் சிறப்புப் பட்டம் பெற்ற முதல் தமிழறிஞர் மு.வ. அவர்களே.

சாகித்ய அகாதெமி பாரதிய ஞானபீடம் தேசியப் புத்தகக் குழு இந்திய மொழிக் குழு சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலம் - தமிழ் அகராதிக் குழு நாட்டுப்புறப் பாடல்களும் நடனங்களும் பற்றிய குழு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழு ஆந்திரப்பிரதேச அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு மத்திய அரசுப் பணியாளர்.

தேர்வாணைக் குழு தமிழ்நாடு புத்தக வெளியீட்டுக் கழகம் ஆட்சிமொழிக் குழு ஆட்சி மொழி சட்டக் குழு தமிழ் வளர்ச்சிக் கழகம்

தமிழ்க்கலை மன்றம் தமிழிசைச் சங்கம் மாநில வரலாற்றுக் கழகம் தமிழ் கலைக் களஞ்சியம் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றில் அங்கம் வகித்ததோடு அனைத்திலும் தன்னுடைய பணி முத்திரைகளைப் பதித்த தனிச்சிறப்புகளுக்குச் சொந்தக்காரர் மு.வ. அவர்கள்.

தமிழ் ஆங்கிலம் தெலுங்கு மலையாளம் கன்னடம் இந்தி ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார்.

எழுத்துப் பணி

நாவல்கள் சிறுகதைகள் சிறுவர் நூல்கள் நாடகங்கள் கட்டுரைகள் தமிழ் இலக்கிய நூல்கள் பயணக் கட்டுரை என 85 நூல்கள் தமிழுக்குத் தந்துள்ளார். பெர்னாட்ஷா திரு.வி.க, காந்தியடிகள், இரவீந்திரநாத் தாகூர் ஆகியோரது வாழ்க்கை வரலாறுகளை நூல்களாக வடித்துள்ளார். இவரது திருக்குறள் தெளிவுரையை சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நூறுக்கும் மேற்பட்ட பதிப்புகள் வெளியிட்டுள்ளது.

1944ம் ஆண்டு மு.வ. எழுதிய செந்தாமரை நாவலை வெளியிட யாரும் முன்வராததால் அந்நாவலை அவரே வெளியிட்டார். மு.வ. எழுதிய நூல்களில் கி.பி. 2000 (சிந்தனைக் கதை) ஒரு தனிச் சிறப்புடையது. இதில் மு.வ.வின் இன்றைய நினைவும் நாளைய கனவும் உள்ளன. சிந்தனையும் கற்பனையும் இயைந்து இந்நூலை நடத்திச் செல்வதால் இதனைச் சிந்தனைக்கதை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மு. வரதராசனார் பெற்ற விருதுகள்

மு.வ.வின் அகல்விளக்கு எனும் நாவலுக்கு ஸாகித்ய அகாதெமி விருது கிடைத்தது.

கள்ளோ காவியமோ, அரசியல் அலைகள், மொழியியல் கட்டுரைகள் ஆகிய மூன்று நூல்களுக்குத் தமிழக அரசின் விருது கிடைத்தது. திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், மொழிநூல், கள்ளோ காவியமோ, அரசியல் அலைகள், விடுதலையா ஓவச் செய்தி ஆகிய ஆறு நூல்கள் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப் பத்திரங்களைப் பெற்றன. பல நூல்கள் ஆங்கிலம், இந்தி, மராத்தி, ரஷ்ய மொழி சிங்கள மொழி தெலுங்கு மலையாளம் கன்னடம் போன்ற பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இறப்பு: அக்டோபர் 10 : 1974 அன்று மரணம் நேர்ந்தது. (அகவை 62)

107. மு. வ. வின் புதினங்களில் பெண் சமூகம்

இரா. ராஜேஷ்
முனைவர் பட்ட ஆய்வாளர்
சமூக அறிவியல் மொழிப்பள்ளி
விஐடி பல்கலைக்கழகம் வேலூர் - 632014.

திருமணம்

பெற்றோர் இசைவுடன் தலைமகனும் தலைமகளும் மணந்து வாழும் கற்பு வாழ்க்கையைச் சங்கம் தொட்டே உணர்த்துள்ளனர் என்றாலும் அடிகோலியவர் தொல்காப்பியரே, உறவுடைய ஆணும் பெண்ணும் மணந்து வாழ்வதே அக்காலப் பொது வழக்கு. காதல் கொண்டு பின் கற்பு ஈடுபடும் தலைமக்கள் குறித்த பாட்டோவியங்கள் பலவும் இலக்கியங்களில் உள. கற்பு வாழ்வைத் தொல்காப்பியர்,

"கற் பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள்வதுமே"[1]

என்று பெண் கொடுப்பதற்குரிய, மரபினர் அளிக்கக் கொளற்குரிய மரபின் தலைவன் கரணம் எனும் திருமணச் சடங்கோடு பெறுவது என வரையறுக்கின்றது.

தலைமக்கள் ஊரார் அறியாமல் உடன் போக்கில் ஈடுபட்டபோது, கொடுப்போர் இன்றியும் காரணம் உண்டு எனத் தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது. முன்காலத்தில் மணப்பெண்ணுக்கு மணமகள் பரிசளிக்கும் வழக்கம் நிலவி வந்துள்ளது. அக்காலத்தில் இது முலைவிலை, சிறு விலை, விலை, பரியம் எனக் குறிக்கப்பட்டது. பரிசிழை விலை யென்றும் இது குறிப்பிடப்பட்டது.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"[2]

என்னும் தொல்காப்பிய நூற்பா மணவினைச் சடங்கு உருவானக் காரணத்தைக் குறிக்கிறது. மேலும், பொய்யும் வழுவும் புகாமல் காத்த பொருட்டுச் சான்றோர் சூழ்ந்து கண்ட உடன்பாட்டு முறையே திருமணம் என்பதை உணர்த்துகிறார் இதனை, "திருமணம் என்பது இருவர் வாழ்க்கையை உறுதிப்படுத்தும் முறை என்பதை விட இருவர் வாழ்க்கைக்கு உலகம் உடன்படும் முறை என்பதே பொருந்தும்"[3] என்று புதிய இலக்கணம் வகுக்கிறார். திருமணம் உலகத்தின் உடன்பாட்டைப் பெறும் முறை என்பதே பொருத்தமாகும். திருமணம் உறுதிப்பாடு தருவது என்னும் கருத்து ஏம்ாற்றமே ஆகும்.

கல்வி

பெண்களுக்குக் கல்வி நெடுங்காலமாக மறுக்கப்பட்டு வந்துள்ளது.. ஆண்களுக்கு நிகரான உரிமைகள் பெண்களுக்கு வழங்க வேண்டும் என்று பாரதி பெரிதும் குரல் கொடுத்தார்.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி"[4]

என்று பெண்ணின் வலிமையைத் தம் கவிதை வரிகளின் மூலம் காட்டுகிறார். ஒழுக்கத்திற்கு உரிய கல்வியே வேண்டற்படுவது. குறிப்பாகப் பெண்களுக்குக் கல்வியறிவு மிகவும் அவசியம். அதனைத் தடுப்பது மிகவும் இழிவானது. இதமனை மு.வ. அவர்கள் கூறுகையில்,

> "பெண்கள் எழுத்தறியக் கூடாது என்று தலைமுறைகள் பல கழிந்தன. பெண்கள் ஆங்கிலம் கற்கக் கூடாது என்று தலை முறைகள் சில கழிந்தன. பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கக் கூடாது என்று இன்னும் பலர் அஞ்சிக் கழிக்கின்றனர். பெண்கள் கல்லூரியை எட்டிப்பார்க்கக் கூடாது என்று நடுங்குவோர் தொகையோ மிகுதி. இவ்வளவும், படிப்பதற்கும் படிக்கச் செய்வதற்கும் வாய்ப்பும் வளமும் அடைந்த குடும்பங்களைப் பொறுத்த உண்மைகள். மானத்தை மறைக்கும் அடைக்கே வழியற்றுக் கந்தல் உடுத்தித் திரியும் பெண்களே நாட்டுப் புறங்களில் பெரும்பாலோர். அவர்களுக்கு எழுத்தறிவு, உயர் நிலைப்பள்ளி, கல்லூரி, நூல் நிலையக் கல்வி என்பவற்றைப் பற்றித் தெரியவே தெரிவிக்கவும் முடியாது"[5]

என்று மனம் வருந்துகிறார்.

இந்நிலைக்குக் காரணம் உரிமையற்ற வாழ்க்கை. உரிமையற்ற வாழ்க்கையில் புதுமை வேட்கை என்பதையும் முன்னேற்றம் என்பதையும் காணமுடியாது. பழைய கோட்டை விட்டு அணுவளவும் பிறழவோ விலகவோ கண்மூடிப் போற்றும் குருட்டுத் தன்மையே வாழ்வதாலும் ஆகும்.

"கற்பது பெண்கட்கு ஆபரணம் - கெம்புக்
கல்வைத்த நகை தீராத ரணம்"[6]

என்றும் பாரதிதாசனின் பாடல் கல்வியின் அவசியத்தையும் சிறப்பினையும் உரைக்கிறது.

கன்னிகா தானம்

பெண்ணுரிமையைப் பற்றி ஆராயாமல் சடங்குகளையும் சில

பழக்க வழக்கங்களையும் கண்டு பெண்களை உரிமை இல்லாமல் ஆக்கிவிடுகின்றனர். இதற்கு மு.வ. அவர்கள் சிறந்த உமாரணத்தைக் கூறுவர்.

> கன்னிகாதானம் என்னும் சொல் இருப்பதை எடுத்துக் கூறிப் பெண்ணை ஒருவனுக்குத் தானம் செய்யப்படும் பொருளாக - உரிமை அற்ற பொருளாக ஆக்கி விடுகின்றனர்[7]

இவற்றை சமுதாயத்தில் நிலவும் மாசுக்கள் என்பர்.

பெண் நிலை

இன்றைய காலகட்டத்தில் பெண்கள் வீட்டை விட்டு வெளியில் வந்து கல்வி அறிவு பெற்று அடிமையில் இருந்து மீள வேண்டும். பெண்மை வாழ்ந்தால் தான் அன்பு, அறம், ஆண்மை வாழ முடியும் என்று கூறியவர் மு.வ. அவர்கள். மேலும்,

> *உலகில் முன்னேற்றம் பெற்ற நாடுகளில் பெண்மை வாழ்ந்து விளங்குவதும், பிற்போக்கு உற்ற நாடுகளில் பெண்மை வீழ்ந்து அடிமைப்படுவதும் தெளிவாகக் கண்டவை[8]*

என்று கூறுவர் மு.வ. வீட்டிலே தொடங்கும் பெண்ணடிமமையே நாட்டில் அரசியல், அடிமைத் தன்மைக்கு வழிகோலுகிறது என்னும் நோக்குடையவர். பெண்ணே வருங்கால சந்ததியை நல்ல சந்ததியாக உருவாக்குகிறாள். அப்படிப்பட்ட பெண்ணியத்தைப் பெரும் பாலானோர் அடிமைகளாகவே நோக்குகின்றனர்.

அடிக்குறிப்புகள்

1. சுப்பிரமணியம். ச.வே., தொல்காப்பியம் தெளிவுரை, ப.432
2. மேற்படி, ப.432
3. வரதராசன். மு., பெண்மை வாழ்க, ப.68
4. பாரதியார், பாரதியார் கவிதைகள், ப.211
5. வரதராசன். மு, பெண்மை வாழ்க, ப.19
6. மேற்படி, ப.19
7. மேற்படி, ப.37
8. வரதராசன், மு. பெண்மை வாழ்க, ப.17

108. மு. வரதராசனாரின் கடிதங்களில் கருத்துவளம்

ச.விஜயலெட்சுமி
முனைவர்பட்ட ஆய்வாளர்
திராவிடன் பல்கலைக் கழகம்
12/124, சின்னகடைத் தெரு
திருவண்ணாமலை - 1.

முன்னுரை

'தோன்றின் புகழொடு தோன்றுக' என்ற குறளுக்கு ஏற்றவாறு இப்பூமியில் அவதரித்தவர் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர்.மு.வரதராசனர். தாய்மொழியாம் தமிழ்மீது தணியாத பற்றுடையவராகிய இவர் ஈடு இணையற்ற பெரும் எழுத்தாளராக திகழ்ந்தவர். உலகத் தமிழர்களின் உள்ளங்ளைத் கவர்ந்த மிகச் சிறந்த தமிழராக விளங்கியவர். ஏனென்றால் அவர் சொல்லாத கருத்துகளே இல்லையெனலாம். மொழியைத் தம் இருகண்களாகக் கருதி நம் தமிழன்னைக்கு உயர்வைக் கொடுத்தவர். மொழிப்பற்று, நாட்டுப்பற்று, இலக்கியப்பற்று ஆகியவற்றோடு சமுதாயக் பற்றும் உடையவராக திகழ்ந்தவர். வாழ்க்கையில் தெளிவும் நம்பிக்கையும் இருந்தால், நாம் வாழ்வைக் காத்துக்கொள்ள முடியும் என்பதை தம் எழுத்துகளில் வெளிப்படுத்தியவர். 'வையத்துள் வாழ்வாங்கு வாழ முடியும்' என்பதைத் தம் கடிதங்களின் மூலம் அறிவுறுத்தியவர். இவரது கடிதங்களில் உள்ள கருத்துவளத்தை ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

கருத்துவளம்

மு. வரதராசனார் புன்னகை பூத்த முகத்தோடு அனைவரையும் கவரும் தோற்றம் உடையவர். இவர் தன்னுடைய எண்ணங்களை எல்லாம் எழுத்தாக்கியவர். பரந்த பண்பட்ட நெஞ்சம் உடையவராய், மனத்தால்கூடப் பிறருக்கு தீங்கு செய்யாமல் சான்றோராய் வாழ்ந்தவர். தமிழ்த்தாயின் தலைமகனாக விளங்கிய இவர் 62 வயதில் 85 நூல்கள் எழுதி இணையில்லாப் புகழ்ப்பெற்றவர். தனக்கென ஒரு தனிநெறிமுறையை அமைத்துக்கொண்டு, நடப்பியலை எதார்த்தமாக எடுத்துக் கூறியவர். இவரது கடிதங்களில் கருத்துவளம் மிகுதியாகக் காணப்படுகிறது. அத்தகைய கருத்துவளத்தைப் பற்றிக் காண்போம்.

தமிழர்களின் கடமை

திருக்குறள் ஓதியே திருமணம் நடக்க வேண்டும்: தமிழ்நாட்டுக் கோவில்களில் உத்தமர்களின் தமிழ்ப்பாட்டு முழங்க வேண்டும்: கவர்னர் தமிழிலேயே கையெழுத்திட வேண்டும் போன்ற செயல்களைச் சொன்னால்

மட்டும் போதாது: அதை செயல்திறனில் வளர்க்க வேண்டும். இவற்றை தமிழர்கள் தம் கடமையாகக் கொண்டு வளர்க்க வேண்டும் என்கிறார் மு.வ. இதனையே,

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல் (திருக்குறள் 664)

என்கிறார் திருவள்ளுவர்.

உரைசெயற் கெளிதுமாகதி அரிதுமாம் ஒழுக்கில்
(இராமாயணம் - அரசியற் படலம் 44)

என்கிறார் கம்பர். சிலர் இச்செயல்களை வீண் கனவு என்று சொல்லி குறுக்கிடுவார்கள், அவனைப் பகைவன் என்று ஒதுக்குவதே கடமையாகக் கொள்ள வேண்டும். இதனையே,

கொடுத்தும் கொளல் வேண்டும் மன்றஅடுத்திருந்து
மாணாத செய்வான் பகை (திருக்குறள் 867)

என்று ஆணையிட்டார் திருவள்ளுவர்.

மொழியின் செல்வாக்கு

"தன்னைப் பழித்தவனைத் தாய்தடுத்தால் விட்டுவிடு
தமிழைப பழித்தவனைத் தாய்தடுத்தாலும் விடாதே"

என்று தாய்மொழிப்பற்றுடன் பாடியவர் பாரதிதாசன்.

மொழி மனிதனுடைய உடலில் ஊறாததாக இருந்தாலும், அவனுடைய மூளையை உருவாக்கியது மொழியேயாகும். மனிதன் எண்ணும் எண்ணம், பேசும், எழுத்து மூன்றிலும் மொழியின் செல்வாக்கு உள்ளது. மொழி வேறுபாடு குழந்தையின் தொட்டிலில் தொடங்கி மரணப்படுக்கை வரை தொடர்ந்து வருகிறது. மனிதன் கற்ற எத்தனையோ பழக்கவழக்கங்கள் மாறிவிடுகின்றன. ஆனால் மொழி மாறுவதில்லை. வைதீக குடும்பத்தில் பிறந்த பண்டிததேரு இருபதாம் நூற்றாண்டில் புதுப்புது பழக்கவழக்கங்களில் மூழ்கிவிடுகிறார். தான் செல்லும் நாடுகளின் கலாச்சாரத்திற்கேற்றபடி நடையுடைகளை மாற்றிக் கொள்கிறார். ஆனால் மொழியின் தொடர்பு அவரை விட்டதா? லண்டன் பாராளுமன்றத்தில் பேசும்பொழுது முதலில் பத்து நிமிடங்கள் தம் தாய்மொழியில் தான் பேசினார். 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற கணியன் பூங்குன்றனாரின் வாக்கிற்கேற்ப, தாகூர், காந்தியடிகளைப் போல உலக ஒற்றுமையை நாடியவர்கள் இருக்கிறார்களா?

மொழியுரிமைக் கிளர்ச்சி

'வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வன்மொழி' என்று

பாரதியால் போற்றப்பட்ட தமிழ்மொழி மனிதன் முதன்முதலில் பேசிய பழம்பெரும் மொழியாகும். தமிழ்மொழியானது நாலாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சிமொழியாகத் தமிழகத்தில் இருந்துவருகின்றது. மூவேந்தர் ஆட்சிக்காலம் முதல் பல்லவர், நாயக்கர், நவாபுகள் காலம் வரையில் தொடர்ந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நமிழ்நாட்டின் ஆட்சிமொழியாக தமிழ் இருந்துவருகின்றது. இநதப் பெருமை உலகில் வேறெந்த மொழிக்கும் இல்லை எனலாம். ஆந்திராவின் ஆட்சிமொழியான தெலுங்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. அதனாலதான் தமிழரும் ஆந்திரரும் மட்டும் மொழிப்பற்றுக் கொண்டு போராடுகின்றனர். பழம்பெருமை தான் மொழியுரிமை பற்றிய உணர்ச்சியை மேன்மேலும் ஊட்டுவதால் மொழிப் போராட்டம் நடைபெறுகின்றது. கன்னடம், மலையாளம், குஜராத்தி, மராட்டி போன்ற மொழி பேசுவோர் நாட்டை ஆண்டாலும் இம்மொழியானது ஆட்சி மொழியாக இல்லாததாலும், பழம்பெருமை பெறாததாலும் தான் மொழியுரிமை கிளர்ச்சியைக் செய்யவில்லை என்கிறார் மு.வ.

ஒற்றுமைப்படுத்தவல்லது தமிழ்ழொன்றே

'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை', 'கூட்டுறவே நாட்டுயர்வு' போன்ற பழமொழிகளும், 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற பாரதியாரின் வரிகளும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்ததுகின்றன. இதனையே மு.வ. அவர்களும் தனித்தனியே தமிழர்கள உயர்ந்தார்கள் என்று சொல்லவதைவிட பலர் ஒன்றுசேர்ந்து உயர்ந்தார்கள் என்று சொல்லும் நற்சொல்லே இனி வேண்டும் என்கிறார். 'தனிமரம் தோப்பாகாது' என்ற பழமொழிக்கேற்ப, தனிதரங்களாகத்த தமிழர் உயர்வதைவட தோப்பாகக்கூடிய உயர வேண்டும் என்கிறார். தமிழர்கள் கூடிவாழாமல் தனியாக வாழ்வது பெருங்குறையாக உள்ளதே, இவர்களிடம் ஒற்றுமையில்லையே என்று நினைத்து வருந்துகிறார். தமிழரிடம் பிரிக்கும் ஆற்றல் உள்ளது: பிணைக்கும் ஆற்றல் இல்லையே என ஏங்குகிறர். தமிழ் ஒன்றே தமிழரைப பிணைத்து ஒற்றுமைப்படுத்துவல்லது என்பதை மு.வ. ஆணித்தரமாக விரும்புகிறார்.

தமிழர்களிடம் தன்னலமே மிகுதி

'பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற'

என்கிறார் திருவள்ளுவர். சமுதாயமாகக் கூடிவாழ்வதற்கு பணிவும் இன்சொல்லும் கட்டாயம் தேவை. இப்பண்பிரண்டும் உள்ள குடும்பங்களை ஆராய்ந்தால் அக்குடும்பங்கள் முன்னேறுகின்றன. இப்பண்புகள் இல்லாத

உள்ள குடும்பங்கள் ஒரு தலைமுறையில் மேலே ஏறினாலும் அடுத்த தலைமுறையில் கீழே விழுகின்றனர். தமிழர் பெரும்பாலோர்க்கு இந்த இரு பண்புகளும் இல்லை. தமிழ்நாட்டில் காவல்புரியும் தொழிலுக்கு கூர்க்காவையே பலரும் வைத்திருக்கிறார்கள். தமிழர்கள் பலர் தொழில்லாமல் பிச்சை எடுக்கும் நிலையில் இருக்கும்பொழுது இப்படி ஏன்? பிற நாட்டாரை இங்கு வேலைக்கு வைத்துச் சம்பளம் தர வேண்டும் என பல நாள் நான் எண்ணியது உண்டு. இவ்வளவு பொறுமையாகவும், பணிவாகவும் இந்த வேலையைச் செய்ய தமிழர்கள் முன்வருவதில்லை என்பதே பிறகு நான் அறிந்த உண்மை என்கிறார் மு.வ. இவ்வாறு கூர்க்கர்கள் பணிவுடன் நடந்துகொண்டது அந்த இனத்திற்குப் பெருமை தேடிக்கொடுக்கின்றதே தவிர இழிவைத் தேடித் தருவதில்லை. ஆங்கிலேயர், ஜப்பானியர் முதலானோர் பணிவாக நடக்கின்றனர்: இன்சொல் பேசுகின்றது. ஒற்றுமையாக வாழ்கின்றனர். தமிழர்களிடம் பொதுநலத்தைவிட தன்னலமே மிகுதியாக இருக்கின்றது. முன்னோர்கள் நெடுங்காலமாக அறநெறியில் வாழ்ந்து அளித்த பண்பாடே இன்றும் நாம் அழியாமல் வாழ்கின்றோம்.

காலமாற்றம்

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்"

செயலாற்றுவதற்குரிய இடத்தையும் காலத்தையும் அறிந்து செயலாற்ற வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். காலம் அறிந்து, இடமறிந்து, சூழல் அறிந்து வாழத் தெரியாத காரணத்தால் அன்னப்பறவையின் இனம் அழிந்துவிட்டது: யானையின் இனம் அழிந்து கொண்டிருக்கிறது. தமிழன் அப்படிப்பட்ட கண்மூடி வாழ்வு வாழாமல், தன் வாழ்வை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும். அதாவது எறும்பைப் போலவும், காக்கையைப் போலவும் எந்த இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்றபடி வாழ்ந்து அழியா வாழ்வைப் பெற்று வெற்றி பெறுகிறதே: அதைப்போல தமிழன் காலத்தை உணர்ந்து மாறுதல்களை உணர்ந்து வாழ்ந்தால் போதும் வாழ்கையில் வெற்றி பெறலாம்.

நட்பையும், கணவன்-மனைவி வாழ்க்கையையும் பொருத்திக் காட்டுதல்

'வளர்பிறை போல வழிவழிப் பெருகி' என்று குறுந்தொகையும்,

'பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்'

என்று நாலடியாரும்.

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னர் பேதையார் நட்பு

என்று திருக்குறளும் கூறுகிறது. அதாவது நல்லவர் நட்பு வளர்பிறை போல நாளும் வளர்ந்து முழுமைபெறும் என்பர். அன்பான இல்வாழ்க்கையும் வளர்பிறைபோன்று வளர வேண்டுமென விரும்புகிறார் மு.வ. அத்துடன் நட்புக்காகப் பெரியோர் கூறிய அத்தனையும் கணவன் மனைவி வாழ்க்கைக்குப் பொருந்தும் என்கிறார்.

"கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்றும்
குருத்திற் கரும்புதின் றற்றே - குருத்திற்
கெதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ என்றும்
மதுர மிலாளர் தொடர்பு' *(நாலடியார் 211)*

தக்கர் நட்பு ஒரு கரும்பை நுனியில் இருந்து அடிவரை தின்பது போன்றது என்கிறது நாலடியார். தொடக்கத்தில் சுவையற்று இருந்து இறுதியில் இனிமை மிகுந்து சிறக்கும்.

'நண்பொன்றித் தம்மாலே நட்டப் பட்டார்களைக்
கண்கண்ட குற்றம் உளவெனினும் காய்ந்தீயரர்' (பழமொழி 15)

என்று பழமொழியும்,

'அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்' (திருக்குறள் 807)

என்று திருக்குறளும் கூறுகிறது. இத்தகைய நட்பை 'அன்பின் வழிவந்த கேண்மை' என்று அழகுபடுத்துகிறார் திருவள்ளுவர். இல்வாழ்வைத் தொடங்குவோர் ஒருவர் மீது ஒருவர் அன்பு காட்டுவர். அது புதுமையால் வந்த இயற்கைப் பண்பு நாள் செல்லச்செல்ல எவ்வளவு பழமையாயினும் சிறப்புற விளங்கும் வாழ்வே பெருமையுடையது. பழமையான நட்புபோல, வளர்பிறை போல, கரும்பை நுனியில் இருந்து உண்பதுபோல, கோலெடுத்தூன்றும் முதுமையிலும் அன்பின் சிறப்பு வளர்ந்துகொண்டே வாழவேண்டும் என்கிறார். இவ்வாறாக நட்பையும் கணவன் மனைவி வாழ்க்கையையும் மு.வ. பொருத்திக் காட்டுகிறார்.

இல்வாழ்க்கைக்குரிய மந்திரம்

'காலம் பொன் போன்றது
கடமை கண் போன்றது'

என்பர். கடமைகளை ஒழுங்காகச் செய்கின்றவர்கள் மட்டுமே உரிமையை அனுபவிக்க முடியும். மற்றவர்கள் பிறர் உரிமையில் தலையிட்டுக் கெடுத்து, இறுதியில் தம் உரிமையையும் இழந்துவிடுகிறார்கள். ஆகையால்

உரிமையை முதலில் வைத்து நடக்கும் நெறி இடர்ப்பாடானது என்கிறார். அன்பை முதலில் வைத்து உரிமையை இரண்டாவதாக வைத்து நடப்பது எளிய நெறியாகும். அன்புக்காக விட்டுக்கொடுத்து இணங்கி நடக்கவும், உரிமைக்காகப் போராடி காலம் கழிக்கவும் கூடாது என்கிறார். அது பெண்களுக்கு மட்டும் சொல்லும் அறிவுரை அல்ல, ஆண்களும் இதைப் பின்பற்ற வேண்டும். 'ஒருவர் பொறை இருவர் நட்பு' என்னும் நாலடியாரின் பொன்மொழியை இல்வாழ்க்கையின் மந்திரமாக ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டும் என்கிறார் மு.வ..

வெற்றிக்குக் காரணம்

புத்தர், சாக்ரடீஸ், முகமது நபி, இயேசு போன்றோர் இலட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலை விளைவித்தவர்கள். ஆனால் வாழ்நாளிலேயே கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் மாறுதலை உண்டாக்கியவர் காந்தியடிகள். அரசியலில் அவர் பெருந்தலைவர் என்பதே நாம் அறிந்தது. அவருடைய அரசியல் கொள்கைக்கு செல்வாக்கிருந்தாலும், உடன்படாமல் புறக்கணித்த தலைவர்களும் அறிஞர்களும் தொண்டர்களும் இருந்தனர். ஆனாலும் அவருடைய அரசியல் நெறியே இன்றுவரையில் பெற்றுள்ள வெற்றிக்கெல்லாம் காரணம். அவருடைய அறிவுரையே இன்று பல தலைவர்களின் உயர்வுக்கும், அறிஞர்களின் பெருமைக்கும், இந்தியாவின் தலை நிமிர்ந்த வாழ்வுக்கும் காரணம் ஆகும். இதனையே,

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்கிறார் திருவள்ளுவர்.

விருந்தோம்பலின் நிலை

அயலூரார் கிராமத்திற்கு வந்து, வீட்டு திண்ணையின் மேல் படுப்பாரானால் அவரை யார் என்று விசாரித்து விருந்து படைப்பர். இந்த வழக்கம் பல வருடங்களுக்கு முன் இருந்தது. இதை இலக்கியம் விருந்தோம்பல் என்கிறது. இன்று விருந்தோம்புகின்றவர்களைப் பார்ப்பது அரிதாக உள்ளது. அக்காலத்தில் கேட்கக்கூட கூசும் நா உடையவர்களாக இருந்தார்கள். இன்று அயலூருக்கு கூட்டம் கூட்டமாக சென்று பிச்சை எடுக்கிறார்கள். மக்களுக்கும் கொடுப்பதற்கு மனமில்லை.

"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று"

என்ற குறளை மனமார நம்புகின்ற மக்கள் இன்று கிராமங்களில் இல்லை.

*"அற்றால் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"*

என்ற குறளில் ஒருவன் தன் பொருள்களைச் சேர்த்து வைப்பதற்குரிய சிறந்த இடம் எதுவென்றால் வறியவனின் கொடிய பசியைத் தீர்க்கும் அறச்செயலேயாகும் என்கிறார் திருவள்ளுவர். இத்திருக்குறளை நம்பாமல் இன்று மக்கள் பணமாக்கிச் சேர்ப்பதையே குறிக்கோளாய்க் கொண்டுள்ளனர் என்கிறார் மு.வ..

முடிவுரை

டாக்டர் மு.வ. வின் கடிதங்களில் அவர் தமிழ் மொழியின்மீது கொண்டிருந்த பற்றும் தமிழ்ச் சமுதாயத்தின் மீது கொண்டிந்த அக்கறையும் வெளிப்படுவது மட்டுமல்லாமல் அவர் பிறமொழிகளைத் தூற்றாமல் பிற சமுதாயத்தின்மீது கொண்டிருந்த மதிப்பும் வெளிப்படுவதைக் காணலாம். இவருடைய இத்தகைய பண்புகளை இளைய தலைமுறையினர் பின்பற்றினால் மொழிப்பூசலும், இனப்பூசலும் ஏற்படுவதைத் தடுக்கலாம் என்பதில் ஐயமில்லை.

109. மு. வ. வின் - 'பாவை' நாவல் காட்டும் அகப்பொருள்

இரா. கவிதா
தமிழ்த்துறைத் தலைவர்
அருணவித்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கண்ணக்குருக்கை
செங்கம், திருவண்ணாமலை.

முன்னுரை

தமிழில் உள்ள அகப்பொருள் இலக்கணத்தில் பேசப்பட்ட களவொழுக்கம் என்றாலே பகற்குறி, இரவுக்குறி ஒருவழித்தணத்தல், அம்பல், அலர், இற்செறிப்பு, பசலை, தோழி, உடன்போக்கு போன்றவை. இக்காலத்தில் வழக்கில் இல்லாத சொற்கள் என்று வேண்டுமானால் சொல்லலாம். இன்றும் காதல் வாழ்க்கையின் தொடக்கம் பெரும்பாலும் அந்த நிலையில்தான் இருக்கிறது. களவொழுக்கத்தின் தினைப்புனம் முதலிய சூழல் மட்டுமே மாறியிருக்கிறது. உள்ளத்து உணர்வு நகரங்களில் மாறிவிட்டாலும் நாட்டுப்புறங்களில் பெரும்பாலும் அப்படியேதான் இருக்கிறது. காலப்போக்கால் நேர்ந்துள்ள சிற்சில வேறுபாடுகளை மு.வரதராசனார் அவர்கள் தன் பாவை என்னும் நாவலில் சுட்டிக் காட்டியுள்ளார். அதனை ஆய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கம்.

மு.வ. வின் வாழ்க்கை கண்ணோட்டம்

வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூரில், 1912-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் நாள் முனுசாமி-அம்மாக்கண்ணு தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பதுபோல மு.வ. தொடக்கக் கல்வியிலே ஆர்வத்தோடு எல்லாவற்றையும் நன்குபடித்து, ஆசிரியர் பாராட்டும் சிறந்த மாணவானாய் விளங்கி வந்தார். மு.வ. வின் அபாரத்திறமையினைக் கண்டதமிழாசிரியர் முருகையா முதலியார், தமது ஓய்வுநேரங்களில் தமிழ்க் கற்றுக்கொடுத்து வந்தார். திருவேங்கடத்து அய்யங்கார் கணிதத்தினை கற்றுக்கொடுத்தார். இருப்பினும் வரதராசனாரின் நோக்கம் விருப்பமும் தமிழ்ப் பாடத்தின் மீதே இருந்தது. படித்து முடிந்து எழுந்தர் வேலையில் சேர்ந்தார். அதில் கையூட்டு வாங்காத காரணத்தால் மேலதிகாரிகளின் பாராட்டினைப் பெற்றார்.

பிறகு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் எழுத்தர் பணியினை விட்டுவிட நேர்ந்தது. உடல்நிலை சரியான பிறகு திருப்பத்தூர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் பணியில் சேர்ந்து பணிபுரிந்தார். பணி

கிடைத்துவிட்டது. இனி ஏன் படிக்க வேண்டும் என்று இல்லாமல் மேலும் நிறைய படித்துக்கொண்டே இருந்தால் பல இலக்கியக் கூட்டங்களுக்குச் சென்று உரையாற்றி வந்தார். அப்பொழுது திரு.வி.க. அவர்களின் நட்பு கிடைத்தது. சென்னைப பல்கலைக்கழகம் நடத்திய பி.ஓ.எல் பட்டத்தேர்வில் முதல் வகுப்பில் வெற்றிபெற்றார். நேரம் கிடைக்கும்போது எல்லாம் குழந்தைப் பாடல்கள் எழுதினார். அதனை 1939-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சுப்பையா அவர்கள் நூலாக்கினார். பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவரானார். சென்னைப் பல்கலைக்கழகம் இவரை நன்கு பயன்படுத்திக் கொள்ள எண்ணியது, எனவே விரிவுரையாளராகப் பணி ஏற்குமாறு இவருக்கு ஆணைப் பிறப்பித்தது. யாருக்கும் தெரியாது நிறைய மாணவர்களுக்கு உதவிகள் செய்தார்.

மத்திய அரசு இலக்கியத்துறையில் மு.வ. அவர்கள் செய்த தொண்டிற்காக 'பத்மஸ்ரீ' (தாமரைச்செல்வம்) என்னும் பட்டத்தை வழங்கியது. ஆனால் மு.வ. அப்பட்டத்தை ஏற்க விரும்பவில்லை. ஏனெனில் 1965-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது மாணவர்களுக்கும் மக்களுக்கும் கொடுமைகள் செய்த அரசு தரும் பட்டத்தை ஏற்க மறுத்தார். முதன் முதலில் சென்னை பல்கலைக்கழகத்தில் தமிழில் முனைவர் பட்டம் பெற்ற பெருமை இவரையே சேரும். 1961-ல் அகல்விளக்கு என்ற நாவலுக்கு சாகித்ய அகாடமி விருது பெற்றார். எந்த காலத்திலும் பட்டங்களையும், பதிவிகளையும் மு.வ.தேடிச் சென்றதில்லை. பிறகு மதுரை காமராசர் பல்கலைக்கழக துணைவேந்தராக நன்முறையில் பணியாற்றி வந்தார். அமெரிக்காவிலுள்ள சான்பிரான்சிஸ்கோ-சிகாகோ போன்ற பல்கலைக்கழகங்களின் மூலம் போதிக்கப்படும் கல்விமுறைகளை ஆய்வுசெய்தற் பொருட்டு 1973-ல் அமெரிக்காவிற்கு சென்றுவந்தார். இப்படி அனைவருக்காவும் பாடுபட்ட மு.வ. விற்கு உடல்நிலை சரியில்லாத போது சென்னை பொது மருத்துவமனை மருத்துவர்கள், வேலூர் மருத்துவமனை மருத்துவர்களுடன் தொடர்புகொண்டு சிறந்தமுறையில் மருத்துவம் அளித்தனர். இவற்றையெல்லாம் நன்கு கவனிக்க மு.வ. மருத்துவர்களைப் பார்த்து 'மருத்துவர்களே உங்களுடைய அயராத அரும்பணிகளை நீண்டநேரமாக கவனித்து வருகிறேன்' என்று கூறியதுதான் மு.வ.வின் கடைசி வார்த்தைகள் மருத்துவர்கள் எவ்வளவோ முயன்றும் முடியாமல் 1974-ஆம் ஆண்டு அக்டோபர் 10ஆம் நாளன்று மாலை 5.30 மணியளவில் வரதாராசனாரின் உயிர் பிரிந்தது. வரதராசனாரின் உடல் மறைந்தாலும், அவர் எழுதிய நூலின் மூலம் உயிர் வாழ்ந்கொண்டிருக்கிறார்.

காதல் வாழ்க்கையில் பல்வேறு சுவையான நிகழ்வுகள் உண்டு. மு.வ. வின் பாவை நாவலில் குறிப்பிட்டுள்ள அகப்பொருள் பற்றிய பல்வேறு உயர்வுகளை நாம் காணமுடிகிறது.

இயற்கைப் புணர்ச்சி

தலைவன் வருந்துவது கண்ட தலைவிஅவனை ஏற்றுக்கொள்வான். அதற்கு அடையாளமாகச் சிறிது புன்முறுவல் தோன்றுவாள். தலைவி செய்த புன்முறுவல் கொண்டு அவளது உடன்பாட்டுக் குறிப்பினைத் தலைவன் அறிவான் என்பதனையே திருக்குறள் அழகாகக் குறிப்பிடுகிறது.

முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதுஒன்று உண்டு (குறள் 1274)

பழனி இரும்புக் கம்பிகளுக்கு அப்பால் ஒருநாள் பாவையைனக் கண்டு சிறிது நிற்க முயன்றான்: ஆனால் பார்த்துக்கொண்டே நடந்தான். ஆற்றங்கரை வழியே அவன் கண்களைத் தொடர்ந்து பாவையின் கண்களும் செலுத்திப் புன்னகைப் பூத்தன. அந்த பார்வைக்கான அர்த்தம் கண்டு மகிழ்ந்தான் என்கிறார் பாவை நாவலில் மு.வ,

களவு

தலைவன் தலைவியை அவருடைய பெற்றோரும் உற்றாரும் அறியாவண்ணம் சந்தித்து அவளோடு கூடி மகிழ்வதே களவு என்கிறது அகப்பொருள்.

இரும்புக் கம்பிகளை நோக்கி நின்ற பழனிக்கு தன்முகத்தைக் காட்டிவிட்டு உள்ளே செல்கிறாள் பாவை. பின்பு பழனி தோட்டத்து வேலியோரம் வந்து நிற்கின்றான். பாவையும் வந்து நிற்கிறாள். யாவரும் இல்லையான? என்றான். இன்னும் அப்பா வரவில்லை என்றான். இருவருக்கும் அச்சமும் நடுக்கமும் இருக்க, சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு பாவை என்றான். பதில் பேசவில்லை. வேப்பம்பழத்தை எடுத்துக் கைகளில் வைத்துக் கொண்டாள். அவள் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுப் பாவையின் கண்களையேப் பார்த்துக் கொண்டிருக்க பாவையின் முகத்தில் புன்முறுவல் தோன்றியது. வேப்பம் பழம் மீண்டும் கீழே விழ பழனி அதனை தன் எடுத்துப் பாவையின் கையில் கொடுத்துவிட்டு எப்பொது உனக்கு திருமணம் என்று கேட்டான். அதற்குள் அவளின் தந்தையின் குரல் கேட்க, பழனியைப் பார்த்தபடியே ஓடிவிடுகிறாள்.

பகற்குறி

களவொழுக்கத்தில் பகற்காலத்தே தலைவனும் தலைவியும் சந்திக்கக் குறிக்கப்படும் இடம். இது தலைவியின் ஊரின் எல்லைக்குள் இருத்தல் வேண்டும் என்கிறது நம்பியகப்பொருள்.

பாவை வீடும் பழனியப்பன் வீடும் ஆற்றங்கரை ஓரமாக அமைந்திருந்த காரணத்தால் பழனியப்பன் ஆற்றிற்குப் போகும்போது

அந்த வீட்டை ஒரு கண்ணால் பார்த்துக்கொண்டு போவான். பகலில் பலநாள் இருப்புக் கம்பிகளுக்கு அப்பால் ஒரு அழகான முகத்தைப் பார்த்து செல்வான். பாவை சிலமுறை வெளியில் வந்து தெருவை நோக்கி நின்றான். ஆனால் நேற்றுக் கண்டதுபோல இன்று மழனியைப் பார்க்க முடியாமல் சோர்ந்துபோனான். அடிக்கடிதெருப்பக்கம் போகும் பாவையை அரளுடையத் தாய் கவனித்தாள். இருந்தும் அன்வின் காரணமாக, அவள் அறியாதக் குழந்தை என்ற எண்ணம்.

இரவுக்குறி

களவொழுக்கத்தில் இரவிலே தலைவனும், தலைவியும் சேரும்படி தோழியால் குறிக்கப்படும் இடம். இது தலைவியின் இல்ல எல்லைக்குள் இருத்தல் வேண்டும்.

110. மு. வ. வின் விடுதலையா சிறுகதையில் பள்ளிச்சிறுவர் மனவியல்பு

ரெ.இராமாதேவி
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி
சென்னை-600 605.

இருபதாம் நூற்றாண்டு இலக்கிய உலகில் பரிணமித்த பல்லோருள், தமிழ் இலக்கிய வரலாற்றில் அழியாச் சுவடு பதித்த செம்மலாகத் திகழ்பவர் முனைவர் மு.வரதராசனார் ஆவார். புதினம், சிறுகதை, நாடகம், கட்டுரை, சிறுவர் இலக்கியம், திறனாய்வு, மொழியியல், இலக்கிய வரலாறு எனப் பல்துறைச் சிந்தனையாளராகத் திகழ்ந்தவர். அவருடைய விடுதலையா? சிறுகதையில் குழந்தை மனவியல்பைச் சித்திரித்துள்ள பாங்கினை இக்கட்டுரை ஆராய்கிறத.

விடுதலையா?

ம்.வ அவர்கள் தமது குழந்தைமை நினைவுகளிலிருந்து உருவாக்கிய சிறுகதை விடுதலையா? ஆகும். ஆசிரியரே கதை சொல்லும் போக்கில் இது அமைக்கப்பட்டுள்ளது. மூன்று குடும்பத்திற்கு ஒரே ஆண் வாரிசாகப் பிறந்த குழந்தை திருவேங்கடம். ஒன்றாம் வகுப்புப் படிக்கும் சிறுவனான அவன் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும் சுகாதார விழிப்புணர்வுப் பேரணியில் கலந்துகொள்வதற்காக அவனைப் பாட்டியார் அனுப்பிவைக்கும்போது, மிகுந்த கவனமாகப் பார்த்துக்கொள்ளுமாறு தலைமையாசிரியரிடம் வற்புறுத்திச் சொல்லி அனுப்புகிறார். ஆனால், திருவேங்கடமோ, பொழுது போவதற்குள் வந்துவிட வேண்டும் என்று பாட்டி சொன்னதை மனதிற்கொண்டு, தமது தலைமையாசிரிடம் சொல்லாமலேயே புறப்பட்டு விடுகிறான். வழி தெரியாமல் இருட்டில் வேறு ஊருக்குச் சென்றுவிட, அவன் பாட்டி அவனைக் காணாமல் பதறிப்போகிறார். தலைமையாசிரியர் தவித்துப்போகிறார். நாய்க்கன் பட்டி என்ற ஊரின் பெரியோர், வழிதப்பி வந்த அச்சிறுவனை ஒருவழியாகக் கொண்டுபோய் வீட்டில் சேர்க்கின்றனர்.

சிறுவயதில் நிகழ்ந்த இச்சம்பவத்தால், பள்ளியில் தலைமையாசிரியர் அவனை நாய்க்கன் பட்டியான் என்றே அழைத்துக்கொண்டிருந்தார், வீட்டிலும் அம்மா, பாட்டி ஆகியோர் கேலி செய்தவாறு இருந்தனர். வளர்பருவச் சூழலில் தம்மை இந்தப் பகடி எந்த அளவு பாதித்தது என்பதை முன்பகுதியாக்கி, தமது பாட்டியார் பைத்தியம் பிடித்த சூழலில் அவரது முன் நினைவுப் பிதற்றல்களில் ஒன்றாக,

குழந்தையைக் காணலியே என்று தலைமையாசிரியரிடம் பதறிப்புலம்புவதும் ஒன்றாக உள்ளது என்பதைக் கூறிக் கதையை முடிக்கிறார். தான் சிறுவயதில் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதற்குக் கூடப் பாட்டி எப்படி பயந்தாரோ, அவரைத் தனியே அனுப்புவது நினைத்துக் கவலைப் பட்டாரோ, அதைப்போலவே, இளைஞன் ஆன பிறகு வேலைக்கு அனுப்பிய நிலையிலும் கூட, மாலை வருவதற்குத் தாமதமாகி விட்டால் தேடி எதிரே வருவது என அன்பின் மயமாய் அலைந்து அதனாலேயே பித்துப்பிடித்து அப்பாட்டியே குழந்தை மனவியல்புக்கு ஆளானதைப் பதிவு செய்வதாய் விடுதலையா? அமைகிறது. பித்துப்பிடித்துத் தவிப்பவர்கள் மனதால் இறந்தவர்கள். அவர்களைக் கருணைக்கொலை செய்வது ஒருவகையில் விடுதலையே, என ஒரு நண்பர் கூறிய கருத்தின் மீதான மனஅசைவுகளே கதைக்களம். பாட்டியாரின் பாசத்தை உணர்ந்து மதிக்கின்ற மனித விழுமியமே கதைக்கரு.

சிறார்தம் பள்ளிச்சூழல்

பள்ளியில் ஒரு விழா என்றால், மாணவர்களின் முகங்களில் மகிழ்ச்சி வழக்கத்திற்கு மாறாகப் பெருகி அமைவதும், பள்ளிக்குச் சீக்கிரமாகவே வந்துவிடுதலும், அலங்காரத் தோரணங்களை மாணவர்களே உருவாக்கிக் கட்டுவதும் ஆகிய செயல்களைப் பதிவு செய்கிறார். இவற்றையெல்லாம் ரசிக்கின்ற தலைமைஆசிரியர் படிப்பில் மட்டும் இவ்வளவு ஈடுபாடும் கவனமும் இருப்பதில்லையே என்று கூற, மாணவர்கள் சிரித்துக்கொண்டே, இன்றைக்குக் கூட படிப்பாண்டா? என்று பேசிக்கொள்வதன் மூலம் மாணவர்கள் இயல்பான படைப்பாற்றலுக்கு இடங்கொடுக்காத சூழலில் படிப்புச் சூழல் அமையாததால் மாணவர் உள்ளத்தில் இதுபோன்ற விழாக்காலமே மகிழ்ச்சிக்குரியதாக அமைவதை உணர்த்துகிறார்.

பள்ளியில் ஒரு சிறப்பு நிகழ்ச்சி என்றால், மாணவர்கள் வகுப்பறைக்குள் செல்லாமல் பள்ளியிலேயே மைதானத்தில் கூட்டமாகக் கும்மாளமிட்டு மகிழ்வதையும், தாமதமாக வரும் மாணவர்கள் விரைந்து ஓடி வருவதோடு, அய்யோ வாத்தியார் அடிப்பாரே என்று பதறிவருவதையும் கூடவே பதிவு செய்கிறார். விழா எதற்கு என்று தெரியாமலேயே, மாணவர்கள் மகிழ்ச்சியே குறிக்கோளாக அதனை எதிர்கொள்வது குறிப்பிடத்தக்க குழந்தை இயல்பாகும். எதற்காக விழா என்று அறியாத மாணவன் அறிந்த மாணவனைக் கேட்டால் அவனும் தவறாகச் சொல்வதும், உடனே மற்றொருவர் இடையீடு செய்து சரியான காரணத்தைச் சொல்வதும் ஆகிய இளஞ்சிறார் உரையாடல் இயல்பாக உணர்த்தப்பட்டுள்ளது.

குழந்தைகள் மனதில் சில சொற்கள் வேறு விதமான படிமத்திற்கு

உரியதாக அமைந்து விடுவதை,

இன்றைக்கு இன்ஸ்பெக்டர்தானடா வராரு?

டேய், இன்ஸ்பெக்டர் வருவதற்கு யாராவது தோரணம் கட்டுவாங்களா?

இன்றைக்கு சுகாதார தினம் என்று தலைமையாசிரியர் சொன்னது கேக்கலையா? சுகாதாரம்னா என்னடா, யானையா?

என்னும் உரையாடலில், ஆறு வயதுச் சிறுவன் மனத்திற்கு அவன் பார்க்க விரும்பிய யானையில் பிம்பத்திற்கான பெயரீடாக, சுகாதாரம் என்ற சொல் பொருள்படுவதை உளவியல் பார்வையில் பதிவு செய்துள்ளார் மு.வ. அவ்வாறே, ஆசிரியர்கள் கேட்கும் கேள்விகளுக்குச் சிறுவர்கள் சட்டென்று தம்முடைய பதிலை மாணவர்கள் தைரியமாகக் கூறுவர் என்பதை, ஒரு மாணவனை ஆசிரியர் அழுக்குச்சட்டையோடு வந்ததைச் சுட்டிக்காட்டி, நேற்றே சொல்லியனுப்பியும் அழுக்குச் சட்டையோடு வந்திருக்கிறாயே என வினவும்போது அவன் தனக்குத் தெரியாது எனவும், மற்ற மாணவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதுதானே எனக் கேட்க, யாரும் என்னோட பேசமாட்டாங்க என்று பதிலிறுப்பதுமாகிய உரையாடலில் சமுதாய ஏற்றத்தாழ்வு உருவாக்கியுள்ள மாணவமனங்களின் இடைவெளியை மதிப்புகுறையாமலும் மனதிலிருப்பதை மறைக்காமலும் வெளிப்படுத்தும் உளப்பாங்கை வெளிப்படுத்துகிறது.

வழிபாட்டுக் கூட்டத்தின் போதோ, அணிவகுப்பாக இருக்கும்போதோ, மாணவர்கள் ஒவ்வொருவரும் தன்னியல்பாக ஏதேனும் குறும்பு செய்துகொண்டிருக்கும் இயல்பாம் சூழலும் நன்கு உருவாக்கப்பட்டுள்ளது, சிலர் கைகள் வெறுங்கைகளாக இருந்தனர், சிலர் கைகள் கைக்குட்டைகளை அசைந்தன. சில கைகள் குண்டுசியையும் கொடியையும் தடவிக்கொண்டிருந்தன. சிலர் கைகள் குல்லாயின் சரிகைக் கரையையே தடவிக்கொண்டிருந்தன. சிலர் கைகள் பொத்தான் பொருத்தத் தெரியாமல் அலைந்துகொண்டிருந்தன. சிலர் கைகள் ஆடையில் சரிகைக் கரையை நேரே நீட்டி, ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தனர். சிலருடைய கைகளோ முன்னே இருந்த சிறுவர்களின் குல்லாயில் காகிதத் துண்டுகளை அவர்கள் அறியாமல் செருகிக்கொண்டிருந்தன என, சிறுவர்கள் புதிய ஆடை அணிவதற்கான சூழலில் தங்கள் ஆடைகளின் மீதான பெருமிதத்தில் திளைக்கும் மனநிலையும், வரிசையில் நிற்கும்போது முதுகுக்குப் பின் நிற்கும் மாணவர்களின் அறியாது செய்யும் குறும்பும் அழகுறப் படம்பிடிக்கப்பட்டுள்ளன.

பள்ளி விழாக்களின்போது வளர்ந்த சிறுவர்களுக்குப் பொறுப்புகள் வழங்கப்படும். இங்குச் சிறுவர்கள் ஐந்து ஐந்து பேராகப் பிரிக்கப்பட்டு, பெரிய பையன்களிடம் ஒப்படைக்கப்பட்டனர் பெரிய பையன் ‘கை’ எனச்

சுட்டப்படுகிறான். அவனிடம் ஒப்படைக்கப்படுகிற ஐந்து பேர் ஐந்து விரல்களாகச் சுட்டப்படுகின்றனர். அந்த ஐவர் பெயரும் தெரிய வேண்டும் என்பதற்கு, சுண்டுவிரல் திருமால் , மோதிரவிரல்-முருகேசன், நடுவிரல்-பாரத்தசாரதி, சுட்டுவிரல்-வேலப்பன், கட்டைவிரல்-அப்துல்ரசாக் எனத் தனக்குக் கொடுக்கப்பட்ட பெயர்களை ஒருவன் கைவிரல் விட்டு மனப்பாடம் செய்யும் காட்சியல் ஆசிரியர் விளக்கியுள்ளார். அவ்வாறே, அரை மணி நேரத்திற்கு மேல சிறுவர்கள் ஓரிடத்தில் உட்கார இயலாத மனவியல்பும், ஒன்றுக்கு, தண்ணீர் என்று அனுமதி கேட்பதும், தொடர்ச்சியாக இருவர் வெளியே செல்வதும் பேரணிக்கு அழைத்துச் செல்லும் ஆசிரியர்கள் முன்னெச்சரிக்கையாக அவை குறித்து மிரட்டல் விடுப்பதும் ஆகிய இயல்புகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. மேலும், சிறப்பு விருந்தினர் பேசுவது புரியாத சூழலில், மாணவர்கள் தங்களுக்குள் பேசத் தொடங்குதல், சிலர் தூங்குதல் ஆகிய காட்சிகளும் காட்டப்பட்டுள்ளன. அவ்வாறே, கூட்டத்தில் பெரியவர்கள் கைத்தட்டினால் சிறுவர்க்ள கைத்தட்டுவதும், அரசு நடத்தும் பல ஊர்வலங்களுக்குப் பள்ளிச் சிறுவர்களே பயன்படுத்தப்படுவதும் ஆகியன பள்ளிகளின் சமுதாய நிலைப்பாட்டை எடுத்துரைக்கின்றன.

பள்ளிச்சிறுவன், வழிதவறித் தொலைந்து போன சிறுவயதில் அம்மா அப்பா ஊர் பற்றி எதுவுமே சொல்லத் தெரியாமல் அழுகையை மட்டுமே பதிலாக்குவதும், அவனே வளர்ந்த சூழலில் அந்தத் தொலைந்துபோன சூழலில் தன் ஆசிரியர் அப்பெயராலேயே தன்னை அழைக்கும்போது எரிச்சல் அடைவதும், பத்தாவது படிக்கும் சூழலில், தன்னைப் பார்த்த தொடக்கப்பள்ளி ஆசிரியர் நாயக்கன் பட்டியான் என்று அழைக்கும்போது தன் சக மாணவர்கள் ஏன்அப்படி அழைக்கிறார் என்று வினவும்போது அவருக்கு மனத்திரிபு என்று சொல்லுவதுமாகிய தன்முனைப்பு மனவியல்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தம் இளமைக்காலத்துப் பள்ளிச் சூழலைத் தம் முதுமைக்காலத்து முன்னேறிய பள்ளிச்சூழலோடு ஒப்பிட்டு மாணவர் இயல்பைப் பதிவு செய்கிறார். நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு சிறுவர் உலகம் இப்படி இருந்தது. வீட்டை விட்டுப் பெற்றோர் அனுப்புவது அருமை, பெற்றோர் அனுப்பினாலும் சிறுவர்கள் துணிந்து திரிவதும் அருமை. இந்தக் காலத்தில் அந்த வயது ஸைக்கிள் உருட்டிக் கற்கும் வயதாகும். ஆடை வகையிலும் இப்போது அவ்வளவு தொல்லை இல்லை.

அரைக்கால் சட்டை அணியாத சிறுவன் இப்போது நாட்டுப்புறத்திலும் காண்பது அரிது. குடுமியும், குல்லாவும் இந்தக் காலத்துச் சிறுவர்கள் பைத்தியக்காரன், பட்டிக்காட்டான் என்று எள்ளி நகையாடும் கோலங்கள், ஆசிரியர் கைப்பிடித்துக்கொண்டு கொண்டாட்டத்திற்குச்

செல்லும் சிறுவர்கள் இந்தக் காலத்திலும் வெறும் கற்பனை. ஆசிரியர்கள் துணையும் தூண்டுகோலும் இல்லாமலேயே இந்தக் காலத்துச் சிறுவர்கள் ஊர்க்கொண்டாட்டங்கள் எல்லாவற்றிலும் கலந்து கொள்வர். அங்கே அமைந்துள்ள நாற்காலிகளை நிரப்பி, கொண்டாட்டத்திற்கு வரும் பெரியோர்களுக்கு இடமில்லாமல் திகைக்கச் செய்கின்றனர். இது உலக முன்னேற்றத்தின் விளைவு என்று குறிப்பிடுகிறார்.

நிறைவுரை

மு.வ. தமது விடுதலையா சிறுகதையில் விடுதலைக்கு முந்தையதான - தம் காலத்திய - பள்ளிச் சூழலையும் மாணவர் மன இயல்புகளையும் நன்கு உற்று நோக்கித் தமது நினைவாழத்திலிருந்து எடுத்துரைக்கிறார். அன்றையப் பள்ளிகளின் இடச்சூழல், ஆசிரியர் நிலையும் செயலும் ஆகியவற்றினூடே மாணவர்களாகிய சிறுவர்தம் மனவியல்புகள் அவற்றின் வெளிப்பாடான செயல்பாடும் அவற்றின் வழி உணரலாகும் அன்றைய மாணவர்க்கான கல்விச்சூழல் ஆகியவற்றை எடுத்துரைத்து இன்றைய போக்கில் ஒப்பிடுவதன் வழி, நம் கல்வித்துறை சார்ந்த வளர்ச்சியில் மாணவர்தம் நாகரிகம் சார்ந்த புறநிலை வளர்ச்சியும் மனவியல்பு சார்ந்த நிலையில் பெரிதும் மாற்றமில்லாத நிலையையும் எடுத்துரைக்கிறார்.

III. தமிழ் இலக்கியச் செம்மல் டாக்டர் மு. வ.

சி.கோவிந்தசாமி
ஆய்வாளர், தமிழ்த் துறை
திருவேங்கடவன் பல்கலைக் கழகம்
திருப்பதி 517 502.

இருபதாம் நூற்றாண்டு, தமிழ் இலக்கிய வரலாற்றில் தனக்கெனத் தனியிடத்தைப் பெற்றவர் டாக்டர்.மு.வரதராசனார். அவருடைய பிறப்பும் வாழ்வும் எளிமையாக இருந்தபோதிலும் மனவளம் மிக்க மாமனிதராய்த் திகழ்ந்தார். அவருடைய படைப்புகள் இலக்கியவாதிகளுக்கு மட்டுமல்லாது ஓரளவிற்குக் கல்விப் பயிற்சி உடையவரும் எளிதில் கற்று உணரத்தக்க வகையில் அமைந்துள்ளன எனலாம். இத்திறனே அவரை ஒரு சிறந்த எழுத்தாளராகவும், சிந்தனைச் சிற்பியாகவும், சமூக நல ஆர்வலராகவும், அறவோராகவும், அறிஞராகவும். அன்பராகவும், நண்பராகவம் தமிழக மக்களுக்கு அடையாளம் காட்ட அடிப்படை காரணமாக அமைந்தது. மு.வ. அவர்கள் பலதுறைகளில் பணியாற்றியபோதிலும் அவர் தன்னை ஓர் எழுத்தாளனாக அறிமுகப்படுத்திக் கொள்ளவும், ஓர் எழுத்தாளனாகவே வாழவும் விரும்பினார்.

> *"நான் இப்பொழுது வகித்துவரும் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவியிலிருந்து சில ஆண்டுகளில் ஓய்வு பெற்று விடலாம். அதற்குப் பின்னர் சில ஆண்டுகள் ஆராய்ச்சி பேராசிரியராக என்னுடைய வாழ்க்கையின் கடைசி மூச்சு உள்ளவரை நான் ஓய்வு பெற முடியாத - ஓய்வு பெற - விரும்பாத ஒரு துறை உள்ளது. அதுதான் எழுத்துத்துறை. அது என்னுடைய உயிருடன் கலந்துவிட்ட ஒன்று. என் உடலிலே சக்தி இருக்கும்வரை எழுதிக் கொண்டே இருப்பேன். எழுத முடியாத ஒரு நிலை வந்தால் மற்றவர்களை எழுதச் சொல்லி நான் கூறிக் கொண்டே இருப்பேன்"*

என்னும் இக்கூற்று மு.வ.அவர்களின் எண்ணத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

புதினம் கண்ட புதுமை

டாக்டர்.மு.வரதராசனார் அவர்களின் புதினங்கள் 1945 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொன்றாய் வெளிவரத் தொடங்கின. இப்புதினங்கள் அக்காலத்து இலக்கியப் போக்கிற்கு வேறு பட்டவையாய் இருந்தன. அவர் தனக்கெனத் தமிழ் நடையொன்றை தனி நடையாக்கிக் கொண்டார். இருப்பினும், அவர் படைப்புக்களை அக்கால நாவலாசிரியர் பலரும் ஏற்க மறுத்தனர். சிலர் பழிக்கவும் செய்தனர். மு.வ. அவர்களின் சமுதாயச் சீர்திருத்தச்

சிந்தனைகளை நாத்திகவாதமாகக் கொண்டவர்களும் உண்டு. இவ்வாறு இருந்தும், தாம் கொண்ட நெறியிலிருந்தும், எழுத்துப் போக்கிலிருந்தும் சிறிதும் மாறாமல், திண்மையாகவும் திறமையாகவும் தொடர்ந்து எழுதி வெற்றி பெற்றார்.

இவர் புதினங்கள் புதுப் பொலிவோடும் தெளிவோடும் ஏதேனும் ஒரு சிறந்த கருத்தினை சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்லும் பாங்கோடும் வெளிவந்தன. கலை கலைக்காக மட்டுமன்று, வாழ்க்கைக்காகவும் என்னும் கொள்கைக் கொண்டவராய் விளங்கினார். டாக்டர்.மு.வ.அவர்கள் தாம் கண்ட வாழ்க்கை உண்மைகளை உணரவும் பிறர்க்கு உணர்த்தவும் செய்தார். அதற்குக் கருவியாக அவர் கைக்கொண்ட இலக்கிய வடிவங்களே நாவல், சிறுகதை, நாடகம், கடித இலக்கியம் முதலானவையாகும்.

டாக்டர்.மு.வரதராசனார் அவர்களுக்கு இயற்கையாகவே படைப்பிலக்கியத் திறன் அமைந்திருந்தது. அதோடு ஆராய்ச்சி திறன் உடையவராயும் விளங்கினார். ஒருவரே படைப்பாளராகவும் ஆராய்ச்சியாளராகவும் திகழ்வது அரிது. இவ்விரு திறமைகளும் ஒருங்கே மு.வ.அவர்களுக்கு வாய்த்திருந்தது அவர் பெற்ற பேறே எனலாம்.

நடைநலம்

மு.வ.அவர்களின் எளிமைக்கு ஏற்றார் போலவே அவர் எழுத்திலும் மொழிநடையிலும் எளிமையும் இனிமையும் அமைந்திருந்தன. இவருடைய நடையை எளிய நடையென அனைவராலும் ஏற்றுக்கொள்வதற்கு காரணம். ஒரு கருத்தை யாரோ ஒருவர் நமக்கு எடுத்துச் சொல்வதுபோல் உணரவைக்கும் உத்தியும் எல்லோரும் அறிந்து கொள்ளும் எளிய பழகு தமிழ் சொற்களைக் கையாண்டதுமேயாகும்.

படைப்பிலக்கியத்தின் உயிர்நிலை உணர்த்தும் திறனேயாகும். தான் கூறவந்த கருத்தைப் படிப்பவர் உணர்ந்து புரிந்து கொள்ளும் வகையில் அழகிய செஞ்சொற்களாலும், சொல் நயத்தாலும். உவமை உருவகங்களின் வாயிலாகவும் எடுத்துரைப்பதே சிறந்த நடையெனப் போற்றுவர். இக்கலை கைவரப் பெற்றவர் டாக்டர்.மு,வ.

மேலும், பிறமொழிச் சொற்கள் கலவாமல் எழுதுதல் அவரது தூய தமிழ் நடைக்குச் சான்றாகும் பாரீஸ் கார்னர்,அமிஞ்சிக்கரை, மார்கெட் என்றெல்லாம் எழுதிவந்த காலத்தில் பாரிமுனை, அமைந்தகரை, காய்கறிக்கடை எனத்தூயத் தமிழில் மாற்றியும் திருத்தியும் எழுதியமை அவர் தமிழ்மீது கொண்டிருந்த பற்றினை எடுத்துக் காட்டுகிறது.

“காலந்தோறும் ஏற்படும் புதிய வளர்ச்சிகளையெல்லாம் ஏற்றுத் தனதாக்கிக் கொண்டு வளர்ந்து வரும் தமிழ் மொழிக்கு இருபதாம்

நூற்றாண்டில் முற்பகுதியில் ஏற்பட்ட தேக்கத்தைத் தம் படைப்பு முயற்சியாலும் பயிற்றும் முறையில் காட்டிய ஊக்கத்தாலும் தகர்த்து, நம் தாய்மொழி தனது இயற்கை வழியில் வளர்ச்சியுற உதவிய டாக்டர். மு.வ.அவர்களைத் தமிழுக்கு விடுதலை தந்தவர் என்று போற்றுவது முற்றிலும் பொருத்தமேயாகும்”[2]

என்னும் கண.முத்தையன் கூற்று மேற்கூறிய கருத்திற்கு அரண்செய்வதாக அமைந்துள்ளது. டாக்டர் மு.வ.அவர்கள், சிறுசிறு தொடர் அமைப்பைக் கொண்டும், பழகு தமிழ்ச் சொற்களை மிகுதியாகப் பயன்படுத்தியும், தேவைக்கு மிகுதியான சொற்கள் இடம் பெறாத வகையில் தெளிவாகவும் அழகாகவும் எழுதுவதென்பது அவர் நடையின் சிறப்பம்சமாகும். எடுத்துக்காட்டாக,

“இன்பத்திற்குத் துணையாக யாராலும் முடியும் ஈ, எறும்பாலும் முடியும் தேவையானது கிடைக்கும்போது ஈயும், எறும்பும் நம்மைக் கேளாமலே மொய்க்கின்றன. அதுபோல் இன்பம் உள்ளபோது யார் வேண்டுமானாலும் வந்து மொய்த்துக் கொள்வார்கள். ஆகையால் இன்பத்திற்குத் துணையாக வல்லவரை நம்பாதே. துன்பத்திற்குத் துணையாக இருக்க வல்லவரைத்தேடு. உறவானாலும் நட்பானாலும் காதலானாலும் இப்படித்தான் தேட வேண்டும்.”[3]

மேற்கண்ட இவ்வரிகளின் வாயிலாக மு.வ.அவர்கள் ஒரு கருத்துக்கு ஒரு தொடர் என்னும் உத்தியை கையாண்டுள்ளமை புலனாகின்றது.

சமுதாயச் சிந்தனை

டாக்டர்.மு.வ.அவர்கள் சிறந்த சமுதாயச் சிந்தனையாளர் எனலாம். அவர் படைப்புகள் பலவும் சமூகச் சிக்கல்களைத் தீர்த்துவைக்கும் நோக்கத்தோடு எழுதப் பெற்றனவே ஆகும். பொழுது போக்கிற்காகப் புதினங்கள் படைத்துக் கொண்டிருந்த காலத்தில், வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் வகையில் கருத்து விளக்கப் புதினங்களைத் தமிழில் முதன்முதலாகப் படைத்தளித்தார். புதினங்கள் படைத்துக் கொண்டிருந்த காலத்தில், வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் வகையில் கருத்து விளக்கப் புதினங்களைத் தமிழில் முதன்முதலாகப் படைத்தளித்தார். புதினங்கள் படைப்பதில் இவர் காட்டிய ‘நோக்கு நிலை’ உத்தியையும், கதையைச் சொல்லும் முறையையும் அதுவரையில் வேறு எந்த புதின ஆசிரியரும் பயன்படுத்தவில்லை எனக் கூறலாம்.

மு.வ.வின் புதினங்களில் காணப்படும் கதாபாத்திரங்கள் யாவும் கற்பனை பாத்திரங்கள் அல்ல. இந்த சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவரின் வாழ்க்கையையும் கூர்ந்து நோக்கி, அவர்களின் வாழ்க்கையில் எழுகின்ற

சிக்கல்களுக்கு விடிவு தேட விழைந்து அதற்காக முற்படும்போது அச்சிக்கலுக்குரியோர்களே அப்புதினத்திற்குக் காதாபாத்திரங்களாகின்றனர். இவ்வாறாக உருவாகும் இவர் புதினங்கள் பலருடைய வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்கின்றன.

'மலர்விழி' என்னும் புதினம் நல்லவராக வாழ்ந்தால் மட்டும் போதாது. வல்லவராகவும் வாழவேண்டும் என்னும் உண்மையை அடிப்படையாகக் கொண்ட சமுதாயச் சிந்தனை உடைய புதினமாகப் படைக்கப்பட்டுள்ளது. அதேபோல் 'கரித்துண்டு', 'கயமை', 'நெஞ்சில் ஒரு முள்', 'அகல்விளக்கு', 'வாடாமலர்', 'மண் குடிசை', போன்ற சமுதாயச் சிந்தனைக்ள உடைய பல புதினங்களைப் படைத்துள்ளார்.

டாக்டர் மு.வ. அவர்கள் ஒரு சமூகச் சிந்தனையாளர் என்பதை எடுத்துக் கூறும் டாக்டர்.இரா.தண்டாயுதம் அவர்கள்,

"தம்முடைய நாடித் துடிப்பை மட்டுமன்றித் தமிழ்ச் சமுதாயத்தின் நாடித்துடிப்பையும் அவர் நன்கு உணர்ந்தவர். இது இயற்கையாக இயங்காததற்குச் சமுதாய நோய்களே காரணம் எனத் தெளிந்து, நோயைக் கண்டறிந்து அவர் தந்த மருந்துச் சீட்டுகளே **(Prescriptions)** *அவர் எழுதிய நாவல்களாகக் காணப்படுகின்றன."*[1]

எனக் கருதுகிறார். மேலும், அவர் டாக்டர் மு.வ.அவர்கள் சமுதாய ‹ிந்தனை உடையவர் என்பதற்கு டாக்டர் மு.வ.வின் நாவல்களையும் சமுதாயத்தையும் தனித்தனியே பிரித்துப் பார்க்கவே இயலாது என்கிறார்.

கடித இலக்கியம்

மு.வ. அவர்களின் படைப்பிலக்கியங்களில் கடித இலக்கியமும் ஒன்று. தமிழுக்குக் கடித இலக்கிய மரபை முதன் முதலாக அறிமுகம் செய்து வைத்தவர் டாக்டர் மு.வ.அவர்களே ஆவர். இக்கடித இலக்கியத்தின் வாயிலாக படிப்போருடன் நெருக்கமாக நின்றும், பரிவோடு சிக்கல்களை அலசி ஆராயவும் இயலுகிறது.

மு.வ. அவர்களைத் தொடர்ந்து, எழுத்தாளர்கள் பலரும் இக்கடித இலக்கிய வகையைப் பின்பற்றலாயினர். எனவே, இக்கடித இலக்கியத்தின் முன்னோடி டாக்டர் மு.வ. என்றால் அது மிகையாகாது.

திறனாய்வு

தமிழில் பல்வேறு வகையான திறனாய்வு நூல்கள் எழுதியவர் டாக்டர் மு.வ. தமிழ் இலக்கியங்களை நன்கு ஆராய்ந்து அதன் பெற்றியை அனைவரும் சரியாக அறியும் வண்ணம் தமிழின் பெருமையை உயர்த்திய சிறப்பு மு.வ.வையே சாரும்.

சங்க இலக்கியங்களை மக்களிடம். பரப்புவதற்கு அதன் சாற்றைப் பிழிந்து விருந்தும், 'செல்வமும்', ஆக முதன்முதல் தமிழர்க்கு வழங்கியவர் டாக்டர் மு.வ. அவர்களே ஆவர். இவர் தமிழ்த் தாயின் தவப்புதல்வன் எனினும் பொருந்தும்.

இதுகாறும் மேற்கூறியவற்றைக் கொண்டு படைப்பிலக்கிய எழுத்தாளராகவும், சமுதாயச் சிந்தனையாளராகவும், சிந்தனைப் பொதிந்த கட்டுரையாளராகவும், புதுமை புலப்படுத்தும் ஆராய்ச்சியாளராகவும் விளங்கி, இதனால் இவர் பலருக்கும் முன்னோடியாகத் திகழ்ந்தார் என்பது புலனாகின்றது.

அடிக்குறிப்புகள்

1. இரா.தண்டாயுதம், மு.வ. நினைவு மலர், ப.66
2. கண.முத்தையா, மு.வ. நினைவு மலர், ப.170
3. மு.வரதராசனார், அல்லி, ப.127
4. இரா.தண்டாயுதம், மு.வ.வின் இலக்கியங்கள், ப.23
5. இரா.தண்டாயுதம், தற்காலத் தமிழ் இலக்கியம், ப.39

112. மு. வ. வின் அறவாழி

முனைவர்.மேர.ஜான் ஜெபராஜ்
தமிழ்த்துறை
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
திருப்பதி - 517502.

ஒரு படைப்பாளனுக்குரிய வாழ்வனுபவங்களே இலக்கியம் படைக்க பாடுபொருளாக அமைகிறது. தன்னுடைய பட்டறிவையும்.. படிப்பறிவையும் வெளிப்படுத்த நாவலிலக்கியம் படைப்பாளிக்குப் பெரும் துணை புரிகிறது. தான் கூறவிழைந்ததெதுவோ அதை எவ்வித தடையுமின்றி கதைபாத்திரங்களின் வழியாகவோ அல்லது காட்சிகளின் வழியாகவோ முழுகதந்திரத்துடன் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள ஆசிரியனுக்குப் பேருதவியாய் இருப்பதும் இந்நாவலிலக்கியமே ஆகும்.

தமிழிலக்கியம் ஈன்றெடுத்த தவப் புதல்வர் பலருள் மு.வ. என்பவர் தனித்தன்மை வாய்ந்தவர். இவரின் நாவல்கள் அனைத்தும் சமுதாயத்தை அடியொற்றி இயற்றப்பெற்றவை. இவர் சமுதாயத்தை நுட்பமாக அணுகி குறை நிறைகளைக் கண்டறிந்து, அவற்றைப் பொதுவாக பட்டியலிட்டு செல்லாமல், காரணத்தை அறிந்து குறைகளையும் வகையில் தம் எழுத்துக்களில் தீர்வுகளைத் தீட்டியவர். அவ்வாறு குறைகளைக் கண்டறியும் போதுகூட ஒரு சமூகத்தையோ, ஒரு சமூக நிறுவனத்தையோ, சமயத்தையே, மக்களையோ சாடி நாவலை முடித்துவிடாமல், ஒவ்வொரு மனிதனும் குறைகளுக்கும் தீமைகளுக்கும் காரணமாக இருப்பதை உணர்த்துகிறார். மேலும், குறை காண்பதே கொள்கை எனும் நிலையிலும் அமையாமல், தீர்வுகளைத் தெள்ளிதின் எடுத்துச் சொல்லும் பாங்கு இவரின் தனித்திறமாகும்.

இங்கு இவரின் 'நெஞ்சில் ஒரு முள்', 'அல்லி', எனும் இரு நாவல்கள் இக்கட்டுரைக்குப் பின்புலமாக அமைகின்றன. இந்நாவல்கள் ஒன்றொடொன்று நெருங்கிய தொடர்புடையவை. டாக்டர் அல்லி, அறவாழி போன்ற பாத்திரங்கள் இரு நாவல்களிலும் ஒரே பெயரில் குறிப்பிடப்பெறுகின்றனர். அவர்களின் பாத்திரங்களும் ஒரே இயல்பு பெற்றதாகவும் அமைக்கப்பட்டுள்ளன. இதில் அறவாழி என்பவர், ஆசிரியர் கூற விழைவதை வலியுறுத்த எண்ணியதை எடுத்து செல்லும் கருவியாகச் செயல்படுகிறார். வெளிப்படையாகக் கூறினால், மு.வ.வே கதையில் நுழைந்து அறமுணர்த்துவதற்காக அறவாழி எனும் பாத்திரமாக மாறிவிடுகிறார் எனலாம். இக்கட்டுரையில் அறவாழியைக் கொண்டு ஆசிரியர் எடுத்துரைக்கும் முற்போக்குக் கருத்துகள் இங்கு சிந்திக்கப் பெறுகின்றன.

அறவாழி அறிமுகம்

இவர் ஒரு பள்ளிக்கூட ஆசிரியர். பி.ஏ.,பி.டி. படித்தவர், திருமணமானவர், மனைவியைப் பறிகொடுத்தவர். (அல்லி, ப.51) மறுமணம் ஏற்க மறுத்து வாழும் போக்குடையவர். ஒழுக்கம் தவறி வாழ்பவரைத் திருத்தவும், கதைத் தலைவியின் குடும்பத்தில் வரும் இன்னலைக் களைய பாடுபடும் பாத்திரமாக அல்லியில் குறிப்பிடப்பெறும் அறவாழியின் பாத்திரமேற்பு அமைகிறது. அல்லியின் தொடர் நாவலைப் போல நெஞ்சில் ஒரு முள் காணப்பெறுவதால், அல்லியில் வரும் அறவாழி இளைஞராகவும், நெஞ்சில் ஒரு முள்ளில் வரும் அறவாழி சற்று வயது முதிர்ந்தவராகவும் அமைக்கப்பெறுகிறார்.

'நெஞ்சில் ஒரு முள்', இல் அறவாழி எனும் பாத்திரமேற்பு, அறத்தில் பற்றும் ஒழுக்கத்தில் உறுதியும் உடையவராக வலம் வருகிறார். மேலும் தெளிவு உடையவராக, பெரிய சீர்திருத்த மனப்பான்மை உடையவராக, தூய சிந்தனையாளராக, மிக முற்போக்கான அறிஞராக, வாழ்க்கையைப் பற்றி உண்மைகளறிந்து அமைதி கொண்டவராகப் படைக்கப்பெறுகிறார். பொதுவாக அறவாழியின் பாத்திரத்தைக் கூறினால், அவர் ஒரு சாதாரணப் பள்ளிக்கூட ஆசிரியர். பேராசிரியரும் அல்ல, எழுத்தாளரும் அல்ல. பெரிய பட்டதாரியும் அல்ல, செல்வாக்கு உள்ளவரும் அல்ல. ஆயினும் அவரிடம் உள்ள அறிவுத் தெளிவுக்காக அவரைச் சுற்றி ஓர் இளைஞர் கூட்டமே வளர்வதாகச் சித்திரித்துள்ளார்.

சமயம் பற்றி அறவாழி

சமயமும், கடவுளும் பற்றி குறிப்பிடும் அறவாழி, 'உடலுக்கு உயிர் எப்படியோ அப்படிப் படைப்புக்குக் கடவுள் உடல் முழுதும் உயிர் இருப்பது போல் உலகமெங்கும் கடவுளின் சக்கி உள்ளது,' (நெஞ்சில் ஒரு முள், ப.413)

'மோட்சம், நரகம், சுவர்க்கம் இவைகளைப் பற்றிக் கவலைப்படாமல் வாழ வேண்டிய , முறைப்படி வாழ்ந்து அமைதியான இன்பம் பெற்று நரைதிரை மூப்பு வந்து உடலை விட்டு மறைவதே வாழ்க்கை' (நெஞ்சில் ஒரு முள், பக்.332 - 333)

நெஞ்சில் ஒரு முள் நாவலில் இடம்பெறும் அறவாழி, ஒவ்வொருவருக்கும் கடவுள் நம்பிக்கை இன்றியமையாததெனினும், அவரின் வழிபாட்டு முறைமைகள் மூடநம்பிக்கைகளாக மாறிவிடக் கூடாது என்பவர். மேலும் இம்மை மறுமை என்று கவலைப்படுவது. தவிர்த்து, வாழ்வாங்கு வாழும், வாழ்க்கையை வாழ ஒவ்வொருவரும் முயற்சித்தல் வேண்டும் என்பர், சமயம், கடவுள் பற்றிய கருத்தினை அல்லியில் இடம்பெறும்

அறவாழி வெளிப்படுத்தவில்லை. இதற்கு அவரின் இளவயதே காராணமாக இருக்கலாம்.

நல்லோர் நட்பின் சிறப்பு

"நாம் பொதுவாக எல்லாரையும் கடவுளின் மக்களாக, உடன்பிறந்தவர்களாகக் கருதி அன்பு காட்ட வேண்டியது கடமையே. ஆனாலும் உள்ளத்தின் அன்பைக் காட்டுவது வேறே, நடைமுறையில் கலந்து பழகுவத வேறே, பணம், மதிப்பு, புகழ், உயர்வு தாழ்வு, பழக்க வழக்கம், கட்டுப்பாடுகள் என்று எத்தனையோ மக்களிடையே புகுந்து என்னென்னவோ தீமைகளை வளர்த்திருக்கின்றன. அவைகள் இருக்கும் வரையில் நாமும் அளவறிந்து பழக வேண்டும். இவற்றை எல்லாம் கடந்து அன்புக்காகவே அன்பு செலுத்தி, அறநெறியைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ வல்ல நல்லவர்கள் எந்த நாட்டிலும் எந்த ஊரிலும் ஒரு சிலர் இருப்பார்க்ள, அவர்களுடைய உறவு கிடைத்தால் விடக்கூடாது. அவர்கள் நாலைந்து பேர் கிடைத்தாலும் போதும். அந்தச் சிலருடைய சூழலில் நாமும் வாழ்ந்து செத்துப் போவது தான் மகிழ்ச்சி. ஆகையால் பலருடைய பழக்கத்தையும் பரந்த அறிமுகத்தையும் நாடிக் காலத்தை வீணாக்க வேண்டாம்". *(அல்லி, பக்.185-186)*

நல்லினஞ்சேர்தலும், பெரியாரைத் துணைகோடலும் ஒருவருக்கு நல்வாழ்வு வாழ இன்றியமையாத வழியாக அறவாழி இங்கு வலியுறுத்தவர். பலரின் நட்பை நாடி காலம் வீணாக்குதல் கூடாது. நல்லவரின் நட்பை முயன்றாவது பெறுதல் வேண்டும் என்பர். தான் அவ்வாறு முயன்று பெற்ற பெரியோரையும் அவரின் பொன்மொழிகளையும் பற்றி பின்வருமாறு கூறுவர்.

"நான் அறத்தை உயிராக, தெய்வமாகப் போற்றுகிறவன் திருவள்ளுவர் வகுத்த நெறியை விட்டு அப்பால் செல்வதென்றால், உயிர் போகும் போராட்டமாக இருக்கும். இப்படியே புத்தர், ஏசு, இராமலிங்கர், விவேகாநந்தர் போன்ற தலைவர்களை நம்பி அவர்கள் காட்டிய வழியில் இம்மியும் பிறழாமல் நடப்பவர்கள் பலர் உண்டு" (அல்லி, ப.284)

இங்கு குறிப்பிடப்பெறும் பெரியோரும் அவரின் பொன்மொழிகளும் ஒருவரின் வாழ்வைச் செம்மையுறுவதற்கு வழிகாட்டியாக அமைகிறது. அவ்வாழிகாட்டுதலின் அடிப்படையில் ஒவ்வொருவரும் தம் வாழ்வை அமைத்துக்கொண்டால், நல்வாழ்வு பெறுவர் என்பது அறவாழியின் உள்ளக்கிடக்கையாகும்.

நல்வாழ்வுக்கு வழி

நல்லோர் நட்பினால் நல்வாழ்வு அமைவதுபோல், நல்ல

பழக்கங்களும் நல்வாழ்வுக்கு உறுதுணையாக அமைகிறது என அறவாழி கருதுவர். இதை,

"நாள்தோறும் தன் முகத்தையும் தலையையும் ஒழுங்குபடுத்திக் கொள்வதுபோல், தன் உள்ளத்தையும் ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும். தலை வாரி அமைத்துக்கொள்ளக் கண்ணாடி வேண்டும். அதுபோல் உள்ளத்தை ஒழுங்குபடுத்த நாட்குறிப்பு எழுதும் வழக்கம் வேண்டும். அல்லது ஏசு, புத்தர், திருநாவுக்கரசர் போன்ற அறத்தின் வீரர்களைத் தியானம் செய்து கொண்டு, நேற்றைய இன்றைய செயல்களையும் சிந்தனைகளையும் எண்ணிப் பார்க்க வேண்டும்" (அல்லி, ப.130) என்பர்.

இதில் அறவாழி குறிப்பிடும் நாட்குறிப்பு எழுதும் பழக்கத்தால், ஒவ்வொரு நாளுக்குரிய குறை நிறைகளை ஒரு மனிதன் அசைபோட்டுப் பார்த்து உணர்ந்து கொள்ள உதவுகிறது. இதேபோல் இறைத்தியானமும், நல்ல மாகான்களின் பொன்மொழிகளும் நல்வாழ்வுக்கு இன்றியமையாததாகும் எனும் அறவாழி கூறும் கருத்து இங்கு பெறப்படுகிறது.

இல்லறமும் நல்லறமும்

இல்லறம் நல்லறமாவது எப்போது? இல்லறத்தின் உறுப்பினர், கொள்கை உள்ளவராகவும், ஒத்த அன்புள்ளவராகவும், ஒருவருக்கொருவர் இணங்கி வாழ்பவராகவும் அமையப்பெறும்போது, அங்கு இல்லறம் நல்லறமாக மாறுகிறது. இதை டின்வரும் கருத்துக்களில் அறவாழி விளங்குவர்.

உன் சாதிப் பெண்ணாகப் பார்த்து மணந்துகொள். முதலில் நீ என்ன சாதி என்று எண்ணிப்பார். இப்படித் தான் வாழவேண்டும் என்ற சாதியா எப்படியாவது வாழவேண்டும் என்ற சாதியா என்று தெரிந்து கொள், பிறகு அதே சாதியான பெண்ணைத் தேடு (அல்லி, ப.287)

அறவாழி இங்கு கூறும் சாதி புதிய சாதி, அரசாங்க குறிப்பில் இல்லாத சாதி. இது கொள்கையின்அடிப்படையில் வரும் சாதியாகும். வாழ்க்கைத் துணைதேடும்போதும் கொள்கை அடிப்படையில் தேடுவதே ஒவ்வொருவருக்கும் நலம் பயக்கும் என்பர். அக்கொள்கையும் இப்படித்தான் வாழவேண்டும் எனும் கொள்கையாக இருக்கவேண்டுமென்பது அறவாழியின் உள்ளக்கிடக்கை. மேலும் நல்லறத்திற்கு ஒத்த அன்பு வேண்டும் என்று கூறும்போது,

"எனக்கு ஆணும் பெண்ணுமாகக் குடும்பங்கள் அன்பாக வாழ வேண்டும் என்பதில் ஆசை உண்டு. ஏன் என்றால் கணவனும் மனைவியுமாக அன்பாக வாழும் வாழ்க்கை இல்லை என்றால் காட்டில் உள்ளதைவிட

நாட்டில் கொடுமையான விலங்குத்தன்மை இருக்கும் அதாவது உலகத்தில் பாதிப்பேர் பைத்தியக்காரர்களாக இருப்பார்கள். ஆகையால் எப்போதுமே நான் காதல் வாழ்க்கையை ஆதரித்து வருகின்றேன். தோட்டத்தில் ஒரு முல்லைக்கொடி செழித்து வளர்ந்து பூத்தால் எப்படி மகிழ்ச்சி அடைவேனோ அப்படி எந்தக் குடும்பத்திலாவது அன்பாக வாழ்க்கை நடத்துவதைப் பார்த்தால் மகிழ்ச்சி அடைவேன். (நெஞ்சில் ஒரு முள், ப.389) என அதை விளக்குவர். ஒத்த அன்பு உள்ள காதல் வாழ்வே, விலங்கு தன்மையிலிருந்து மனிதரைப் பிரித்து காட்டுவதற்கு அடையாளமாக அமைகிறது. எனவே அன்பு நிறைந்த மனவாழ்வு சிறந்ததாகும் என அறவாழி கருதுகிறார்.

"நெருக்கடி நேரும்போது இரண்டு வழி உண்டு. ஒன்று அச்சத்தால் அடங்குதல் இதுவே மற்ற உயிர்களிடத்தில் காணப்படுவது, மனிதரிடத்திலும் பெரும்பாலும் காணப்படுவது. மற்றொன்று, அன்பால் இணங்குதல், இதுவே அறவோரிடம் காணப்படுவது, அன்பு மிகுந்த தாய்மையில் காணப்படுவதும் இதுவே. மற்ற விலங்குகளை நடுங்கவைக்கும் புலி தன் குட்டியின் அன்புக்கு இணங்கித் தனக்குக் கிடைக்கும் இரையையும் குட்டிக்குக் கொடுத்து மகிழ்கிறது. (நெஞ்சில் ஒரு முள், ப. 478) என ஒருவருக்கொருவர் இணங்கி வாழ்தலைப் பற்றி எடுத்துரைப்பர்.

இங்கு இருவகை இணங்குதலை∴ அடங்குதலை அறவாழி குறிப்பர். ஒன்று அதிகாரத்திற்கு இணங்குதல் மற்றொன்று அன்புக்குக் கட்டுப்படல். இதில் இரண்டாம் வகை பொதுவானது எல்லா மனிதரிடத்தும் உறைந்திருப்பது. அன்புக்குக் கட்டுப்படுதலை மனம் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கிறது. தாயிடமிருந்துதான் முதன்முதலில் இவ்வகை கட்டுப்படுதல் ஆரம்பிக்கிறது. ஆக, குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் இதுவே அடிப்படையாகவும் அமைகிறது என்றும் கருத்தின் மூலம் நல்லறத்திற்கு வழிகோலும் இவ்விணங்கி வாழும் தன்மையை அறவாழி விளக்கிக்காட்டுவர்.

மனம் பேணும் முறை

மனம் செம்மையுறுவதற்கு குறிக்கோளும், நெறிமுறைகளும் இன்றியமையாதது. தன்னிலை மறந்து செயல்படும் செயல்பாடு பயனளிக்காது. எனவே, ஒரு குறிப்பிட்ட நெறி, கொள்கை, கருத்து மனதின் ஆளுமைக்கு தேவை. அப்போதுதான் மனம் செம்மையாகும் பயனளிப்பதாகவும் மாறும் என அறவாழி கருதுவர். இதை,

"மனம் ஒரே இடத்தில் வேரூன்றி வளர்ந்து செழித்திடும் மரம்போல் ஒரு நெறியைப் பற்றி உறுதியாக நின்றால் நல்லதுதான், அல்லது எங்கெங்குச் சென்றாலும் மாலையில் குறித்த இடத்திற்கு வந்து சேர்ந்திடும் மாடு போல் எத்தொழிலைச் செய்தாலும் குறிக்கோளை மறக்காத மனமாக

இருந்தாலும் நல்லதுதான். ஆனால் இன்ன போக்கு இன்ன கூடு என்று வரையறை இல்லாமல் இயன்றவரையில் பறந்து அலையும் பறவையாக இருந்தால் பயன் என்ன? (நெஞ்சில் ஒரு முள், ப.5) என்பர், மேலும்,

"நம் மனம் தூய்மையாக, மாசில்லாததாக இருக்கும்படியாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். நம் பகைவர்களைப் பற்றியும்அன்பாகவே எண்ணிப் பழகிக் கொள்ள வேண்டும். அதனால் மற்றவர்களும் திருத்த முடியும். மற்றவர் திருந்தினாலும் திருந்தாவிட்டாலும், நாம் நன்மை அடைவது மட்டும் உறுதி. மற்றவர்களுக்காகப் பார்த்து நம் மனத்தை ஏன பாலையாக்கிக் கொள்ளவேண்டும்? ஏன் கல்லும் முள்ளும் நிறைந்ததாக்கிக் கொள்ளவேண்டும்? எப்போதும் நம் மனம் பூங்காவாக, பூம் பொய்கையாகக் குளிர்ந்திருக்கும்படியாக வைத்துக் கொள்ள வேண்டும். வாழ்க்கையில் வெற்றி பெற்ற அறவோர் எல்லாரும் இப்படி இருந்திருக்கிறார்கள்" (அல்லி, ப.172) எனும் கூற்றில் மனத்தூய்மையும், நற்சிந்தனையும் வேண்டுமென்பார் அறவாழி. தன் பகைமை நீங்கியபின், அடுத்தவரைத் திருத்தி வாழ முயல வேண்டும். திருத்தும் முயற்சி பயனற்று போனால், அங்கு அடுத்தவரைத் திருத்தும் முயற்சியைக் கைவிடுவது தான் சிறந்ததெனும் முற்போக்குக் கருத்தை முன்வைக்கிறார்.

அறியாமை எனும் ஒளி

அறியாமையை எல்லோரும் இருள் என்பர். ஆனால் அறவாழி அதை ஒளிபெற்ற வாழ்வாகக் கருதுவர். இதை,

> *"நம் வாழ்க்கை இந்த உலகத்தை நோக்கக் கடலில் ஒரு துளி போன்றது. இந்தச் சிறு வாழ்க்கையில் எல்லாவற்றையும் அறிய முடியாது. எண்ணியவற்றையெல்லாம் செய்யவும் முடியாது. வாய்ப்பும் குறைவு. வாழ்நாளும் குறைவு. ஆகையால் நம் பங்கு மிகமிகச் சிறியது. வாழ்க்கையில் எல்லாம் பெற முடியாது. எல்லாம் அறிய முடியாது. எவ்வளவோ பெறாமல் அமைதி அடைய வேண்டும். எவ்வளவோ அறியாமல் அமைதி அடைய வேண்டும்" (அல்லி, ப.113)*

இங்கு அறவாழி கூறும் அறியாமை என்பது பேதமையை, கல்வியறிவின்மையைப் பற்றியதல்ல. மாறாக வாழ்வுக்கு ஒவ்வாத வேண்டாதவற்றை அறியாமலேயே வாழ்தலைப் பற்றியது. ஒருவேளை சிறிதே அறிந்தாலும், மனதில் அமைதி கொண்டு வாழ்தலைக் குறிப்பிடுவர். இதை,

"மனம் பொல்லாதது. புதுமையைத் தேடுகிறது. புதுமையில் என்ன இருக்குமோ என்று ஆசை கொண்டு அலைகிறது. கிடைத்ததை விட்டுக் கிடைக்காததை நாடி அலைகிறது. அலைச்சல்தான் கண்ட பயன்?

அமைதியும் இல்லை. ஆறுதலும் இல்லை. மனம் சீர்பட்டால் தான் சீர்பட முடியும். மற்றபடி ஒன்றும் இல்லை ஏமாற்றம் தான்" (அல்லி, ப.328) என்பர்.

இங்கு இவர் விளக்கும் அறியாமை என்பது ஒரு பேறு போன்றது. ஒன்றை அறிந்தால் அதில் என்ன இருக்கிறதோ என்ற ஏக்கம் மனிதரை அலைக்கிறது. அழிக்கிறது. எனவே அறியாமை, அடைந்தது போதும், அறிந்தது போதும் எனும் மனப்பாங்கு ஒளிபெற்ற வாழ்வென அறவாழி கருத்து பகர்வர். மேலும், இக்கருத்தை பின்வரும் பகுதி தெளிவாக விளக்கும்.

அவாவின்மை எனும் பெற்றி

"கள்ளின் போதை, மற்ற பெண்ணின் இன்பம் இவை எப்படி இருக்கும் என்று அறிய, அடைய ஆவல் பிறக்கும். அறிந்தால் போதும். அடைந்தால் போதும். பிறகு விடுதலை இல்லாத வேட்கை தான், இவற்றை அறியாமல் அடையாமல் வாழ்வோம் என்று அமையும் மனம் எவ்வளவோ பெரிய தியாகம் செய்யும் மனமாகும். அதுவே வாழ்க்கையில் பெரிய வெற்றி" (அல்லி, ப.132)

இதில் கள்ளின் சுவையை, பெண் இன்பத்தை அடையாமல், அறியாமல் வாழும் நிலையே தியாகமுள்ள வாழ்வாகக் கருதுகிறார். இது சமுதாயத்தினரால் எளிதில் ஏற்றுக் கொள்ளமுடியாத ஒன்றாக இருப்பினும், அடைய வேண்டியவற்றை அடையாமல் அறிய வேண்டியவற்றை அறியாமல் வாழும் வாழ்வு, வெற்றியுள்ள வாழ்வாக அறவாழி கூறுவர். மேலும், பெண்ணின்பம், பிற இன்பம் போன்றவற்றை அறிந்தும் அடைந்தும் வாழும் போது மனிதன் சில சிக்கல்களுக்கு உட்படுவான். இதையெண்ணியே,

"ஆசை தீர என்று தொடங்கும் வாழ்க்கை அல்லல்படும் வாழ்க்கை. ஆசை தீர்வது ஒருநாளும் இல்லை. இரத்தம் குன்றினாலும் எண்ணம் குன்றுவதில்லை. நோய் வந்தபின் ஆசை வளர்கின்றது. இடம் கொடுத்தால் எந்த நேரமும் வேட்கை ஏற்படுகிறது" (அல்லி, ப.328) என அறிந்து கொண்ட, அடைந்த ஆசையின் தீவிரத்தை விளக்கும் அறவாழி பின்வருமாறு அதற்கு தீர்வும் கூறுவர்.

"இளைஞர்களின் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும். ஒரு வெறி - கட்சி வெறி அல்லது சமயவெறி இருந்தாலும் மேலானதே. வெளியுலகத்தில் ஒரு போராட்டம் இருக்க வேண்டும். இல்லையானால் இளமை எண்ணங்கள் சும்மா இருக்க முடியாது. நாடி நரம்புகளின் ஆசையைப் பற்றி அலைந்து உடலைக் கெடுத்து விடும்.

அந்த ஆசைக்கு இடம் இல்லாமல் இருபது இருபத்தைந்து வயது இளைஞன் இருக்க வேண்டுமானால் ஒரு குறிக்கோள், ஒரு வெறி இருந்து வெளியுலகம் அவனைக் கவர வேண்டும். இவற்றுள் ஒன்றிலும் மனம் பற்றாத இளைஞனாக இருந்தால், பேசாமல் பெற்றோரே பார்த்துத் திருமணம் செய்துவிட வேண்டும்" (அல்லி, ப. 139)

இங்கு சிற்றின்பத்தை அறியாது வாழ்தல் நன்மை பயக்குமென்பர். அறிந்தபின் அது ஒருவருக்கு வேட்கையை மேலும் மேலும் கொடுத்து அழிக்கிறது. அலைக்கிறது என்பர். அவ்வேட்கை அழிய வேண்டுமெனில் ஏதேனும் ஒரு கொள்கையில் மனம் ஈடுபாடு வேண்டும். கொள்கையில் ஈடுபடும் மனம், பிற புறக்காரணிகளால் கெடுவதற்கு வாய்ப்பில்லை. எனவே, கொள்கையுள்ள மனமும், நெறி பற்றும் வாழ்வும் என்றும் துன்பமடைவதில்லை. அமைதியிழப்பதில்லை என்பது அறவாழியின் கருத்தாகும்.

அழித்தல் எனும் ஆக்கம்

"ஆக்கமும் அழிவும் பிறப்பும் இறப்பும் இயற்கையாக அமைந்திருக்கின்றன. எல்லா உயிரையும் காக்க நம்மால் முடியாது. மனிதன் பாம்பு இரண்டையும் வாழ வைக்க முடியவில்லை என்றால், பாம்பைக் கொன்று மனிதனை வாழ வைக்க வேண்டும். நன்மை தீமை இரண்டும் கலந்ததாய்ப் படைப்பு அமைந்திருக்கின்றது. பெரும்பாலான உயிர்கள் வாழ வேண்டுமெனில் தீமையே நோக்கமாக உள்ள சில உயிர்களை அழிப்பது கடமை. முழு சீவகாருணியம் பேசுவது எல்லைக்கும் ஓடும் பேச்சு. மலேரியா கிருமிகளையும் அழிப்பது தானே கடமை? அந்த அழிவு வேலைதான் உலக ஆக்கத்திற்கு அடிப்படையாக உள்ளது. இது படைப்பு உணர்த்தும் உண்மை. இதை உணர்ந்து நடக்க வேண்டும்" (நெஞ்சில் ஒரு முள், ப.478)

இங்கு அறவாழி அழித்தல் எனும் கடமை ஒன்று இருப்பதாக வலியுறுத்துவர். அழிக்க வேண்டியவற்றை அழித்தால் தான் சமூகம் அமைதியுறும். எனில் அழிக்க வேண்டி எது எனும் போது, தீமையை அழித்தல், நோய்க்கிருமியை அழித்தல் கடமை என்று விளக்குவர். தீமை செய்யும் உயிரியை அழித்தால்தான் பிற உயிர் வாழ்தல் சாத்தியமாகும். எனவே, தீமை செய்யும் எதையும் அழிக்க வேண்டுமென எடுத்துரைப்பர். இங்கு தீமை செய்யும் மனிதரானாலும் அழிப்பது தான் கடமை எனும் போக்கில் சமூக நீதியை அறவாழி பேசுகிறார். மேலும் இதையே இறைவனின் படைப்பு இரகசியமாகவும் குறிப்பிடுவர். அடுத்து,

"கெட்டது வாழாமலே அழிய வேண்டும் என்றும், நல்லது வாழ்ந்து அழிய வேண்டும் என்றும், படைப்பு உணர்த்துகிறது. நல்ல பயிர்கள்

அழிவது, மலர் மலர்ந்து மணம் கமழ்ந்த பிறகு வாடி உதிர்ந்து அழிவதைப் போன்றது. அதற்காக வருந்த வேண்டியதில்லை. வாடி உதிர்ந்த மலர் அழுகி மண்ணாகி மறுபடியும் ஒரு செடிக்கு உரமாகும். அதுபோல் நல்லார் வாழ்ந்து அழிந்த பிறகு, நன்மை மறுபடியும் தழைப்பதற்கே பயன்படுவர்" (நெருஞ்சி முள், ப.478) இது மேற்கூறிய கருத்திலிருந்து வேறுபட்டிருப்பினும், நல்லவர் மாண்டாலும் நன்மை விளையவே பயன்படுவர் எனும் கருத்தை சுட்டுவதைக் காணலாம். இதில் அறவாழி கூறும் அழிவென்பது துன்பமல்ல. அது ஒரு ஆக்கத்தின் மறு உருவமாக எடுத்துக்காட்டுவர்.

இவ்வாறு அறவாழியின் கருத்துக்கள் முற்போக்கும் ஆழ்சிந்தனையும் கொண்டதாக அல்லி, நெஞ்சில் ஒரு முள் எனும் நாவல்களில் மு.வ. படைத்திருக்கிறார். இக்கருத்துக்கள் சமுதாயமும், தனி மனிதனும் செம்மையுடன் வாழ வழிகாட்டுவதாக அமையப் பெறுகிறது. மேலும் குறைகளைத் தீர்க்கும் தீர்வுகளையும் குறிப்பிடுவதாகவும் உள்ளது. இல்லறம் நல்லறமாக மாற ஒத்த அன்பு குடும்பத்தில் வேண்டுமென்பர். நல்லோர் நட்பும், நல்லொழுக்கங்களும் சீர் பொருந்திய வாழ்வுக்கு இன்றியமையாததென்பர். மனதிற்கு நற்சிந்தனையும், மனத்தூய்மையும் தேவையென்பர். வேண்டாதனவற்றை அறியாமல் வாழும் வாழ்வு, ஒளி பெற்ற வாழ்வாகக் கருதுவர். அவாவின்மையே பேறு. அடையாமையே தியாகம் என்பர். தீமையை அழித்தல் கடமை என்பர். இவ்வாறு மனித வாழ்வுக்கு நலம் பயப்பனவாகக் கருத்து பல மொழிவர் மு.வ.வின் அறவாழி.

113 மு.வ.வின் நிலவியல் சிந்தனைகள் - குறிஞ்சி

முனைவர் கோ. குணசேகர்
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி
விழுப்புரம்.

பண்டைத் தமிழ் இலக்கியங்களான சங்க இலக்கியங்கள் தமிழ் மக்களின் வாழ்வியல் சிறப்புகளையும் அவர்களின் உயரிய சிந்தனைகளையும் எடுத்துக் கூறும் தன்மையன. எக்கால இலக்கிய வகைக்கும் சங்க இலக்கியமே ஊற்றுக் கண்ணாக இருந்தமையினைத் தமிழ் இலக்கியங்களைக் கற்றார் உணர இயலும். அத்தகைய சிறப்புமிக்க சங்க இலக்கியங்களில் ஆழ்ந்த புலமையும் நுட்பமான ஆய்வுச் சிந்தனைகளையும் கொண்டவர் மு.வ. ஆவார். மு.வ.வின் நிலவியல் சிந்தனைகளைச் சங்க இலக்கியத்தில் கூறப்பட்டிருக்கும் பாடல்களுக்கு அவர் வழங்கிய ஆய்வு நூலின் வழி காணலாம்.

மு.வ. தான் படைத்த பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை என்னும் நூலில் பண்டைத் தமிழகத்தில் நில அமைப்பினை எடுத்துக் கொண்டு அதனை நுட்பமான சிந்தனைகளால் எடுத்துக் காட்டியிருக்கின்றார். சங்க இலக்கியங்களில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் நிலவியல் பாகுபாடு எங்ஙனம் காணப்படுகின்றது என்பதை,

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேயமைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே (தொல்.பொருள்.5)

என்னும் நூற்பா உணர்த்தும்.

தமிழக நிலவியலில் பாலை நிலம் இல்லை. குறிஞ்சியும் முல்லையும் கோடைக் காலத்தில் தன் இயல்பு திரிந்து காணப்படுவது பாலை எனக் கொள்ளப்படுகின்றது. சிலம்பில் காடுகாண் காதை,

முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்
(சிலம்பு.காடுகாண்.64-66)

என்று பாலை நிலத்திற்கு விளக்கம் தருகிறது. தமிழக, நிலவியலில்

பேசப்பட்ட ஐந்து நிலங்களையும் சங்க இலக்கியங்களின் துணைக் கொண்டு நுட்பமான சிந்தனைகளின் மூலம் மு.வ. விளக்கியிருக்கின்றார். குறிஞ்சி நிலம் குறித்துக் கூறவரும்போது,

> *தமிழகத்தின் எந்தப் பகுதியிலும் ஏதேனும் ஒரு திசையிலாயினும் மலைக் காட்சி இருப்பது உண்டு. மலை தோன்றாப் பகுதியே பெரும்பாலும் தமிழகத்தில் இல்லை எனலாம். புலவர்கள் ஏனைய காட்சிகளைத் தீட்டுவதிலும் குறிஞ்சிக் காட்சிகளைத் தீட்டுவதில் சிறப்பான ஆர்வம் காட்டுகின்றனர்*
> *(பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை. ப.213)*

என்று பண்டைய புலவர்களின் ஆர்வத்தை வெளிக்காட்டுகிறார். மேலும், வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் மலைக்காட்சிகளையும் பல மலைகளையும் அறிமுகம் செய்வதில் அவர்கள் சிறந்து விளங்கியமையினை, இமயம், கொல்லி, நவிரம், முள்ளூர் மலை, பொதியில், பறம்பு, வேங்கடம், பரங்குன்றம் ஆகியவற்றை எடுத்துக் காட்டித் தெளிவுபடுத்துகின்றார். சங்கப் புலவர்கள் நுட்பமாகக் கண்டு கூறிய சிகரங்களைத் தழுவிக் கிடக்கும் மேகம், மலைச் சாரல் காட்சி, அருவிக் காட்சி இரவுக் காலத்தில் மலை அழகு, மலைகளின் தன்மை, வழிகளின் இயல்பு, மரங்கள், விலங்குகள், சங்கக் கவிகளில் தலைவன் தலைவியின் காதலுக்கு இயற்கை அரணாகவும் இயற்கைப் பின்னணியாக விளங்கிய தன்மை ஆகியவற்றைத் தெளிவுப்படுத்தியிருக்கின்றார். எடுத்துக்காட்டாக,

> *மலையின் கொடு முடியில் மேகங்கள் தவழ்வதாகவும்*
> *அங்கு அவை ஆடுவதாகவும் மலைகளின்*
> *சாரலில் தங்கி ஓய்வு கொள்வதாகவும் கூறுகின்றனர்.*
> *அவரைப் பூவினைப் போன்ற வெண்மேகத்தை*
> *அழகுபெறச் சூடி எழில் மிக்க பெருமலை தோன்று*
> *வதாக ஐங்குறு நூற்றுப் பாடல் விளக்குகிறது. (மேலது: ப.214)*

என்று பல பாடல்களையும் சான்றாக எடுத்துக்காட்டி மு.வ. கூறும் கருத்து அவரின் ஆழ்ந்த புலமையை, தேடலை, ஆய்வு நுட்பத்தை எடுத்துக் காட்டுகிறது. மேற்கண்ட கருத்துக்கு அவர் பதிற்றுப்பத்து, நற்றிணை, புறநானூறு ஆகிய இலக்கியங்களை நுட்பமாக நோக்கியுள்ளமையும் புலனாகிறது. மலைக் காட்சியைப் புலவர்கள் காணும்போது மனத்தில் பல கற்பனைகளைக் கொண்டிருந்தனர். மலைகளையும் யானைகளையும் இணைத்து உவமையாக்கல், மதநீர் வழியும் யானைக்கு அருவி வழியும் மலை உச்சியை உவமையாகக் கூறல் முதலியன குறிப்பிடத்தக்கன. குறிஞ்சித் திணையைக் கற்பவர்கள் எல்லாம் பகல்நேர மலைக் காட்சியினையும் மலைச் சாரல்களையும் அருவிகள் மலையில் இருந்து இறங்குவதையும் அங்கிருக்கும் இயற்கை எழிலையுமே

முக்கியத்துவப்படுத்துவர். ஆனால் மு.வ. இரவில் மலை எவ்வாறு காட்சியளித்தது என்பதை இரு சான்றுகளால் தெளிவாக்குகிறார்.

இருளில் மின்னலால் தோன்றித் தோன்றி மறைகிறது
மலை. அந்த மலையேகண் சிமிட்டுவது போல்
உள்ளது அக்காட்சி. மாலை வேளை இருள்
மலையை மறைத்தது. அக்காட்சி ஆழ்கடலில் சிறிது
சிறிதாய் மூழ்கிடும் கப்பல்போல் காணப்படுகிறது

என (நற்.112) (குறுந். 240) ஆகிய பாக்களில் இடம்பெறும் காட்சிகளை எடுத்துக் காட்டித் தெளிவுபடுத்துகிறார்.

சங்க இலக்கியத்தில் குறிஞ்சி நிலக்காட்சிகள் குறிப்பாக, பத்துப்பாட்டின் குறிஞ்சிப் பாட்டிலும் மலைபடு கடாத்திலும் நுட்பமாகப் புனையப்பட்டுள்ளமையை விளக்குகின்றார். மலை என்றதும் உயர்ந்த தோற்றமே மனக் கண்ணில் எழும். ஆனால் மு.வ. மலைகள் பல்வேறு தோற்றம் கொண்டவை என்னும் நுட்பமான செய்திகளை,

பிடிமடிந் தன்ன குறும்பொறை (அகம்.269)
பிடி. துஞ்சு அன்ன அறை (கலி.108)

மழை கழூஉ மறந்த மாயிருந் துறுகல்
துகள் சூழ் யானையின் பொலியத் தோன்றும் (குறுந்.297)

மாசறக் கழீஇய யானை போலப்
பெரும்பெயல் உழந்த இரும்பிணர்த் துறுகல் (குறுந்.13)

கண்ணகல் சிலம்பின்
படுத்துவைத் தன்ன பாறை மருங்கின்
எடுத்து நிறுத்தன்ன இட்டருஞ் சிறுநெறி (மலைபடு. 14 - 16)
பிடிமடிந் தன்ன குறும்பொறை மருங்கின்
நட்ட போலும் நடாசு நெடுங்கல் (அகம்.269)

என்னும் சான்றுகளால் எடுத்துக்காட்டி, மலையில் உள்ள பாறைகள் தூங்கும் பெண்யானைகள் போல் காணப்படுகின்றன. தூசுபடிந்திருக்கும் பாறை தூசி படிந்த யானை போல் உள்ளது. மழை பொழிந்து தூசு விலகிய பாறை கழுவப்பட்ட யானை போல் காட்சியளிக்கிறது. பாறைகள் படுக்கையாகக் கிடத்தியன போலச்சிலவும், செங்குத்தாக நட்டு வைத்தன போலச் சிலவும் காட்சியளிக்கின்றன என்னும் விளக்கங்களைத் தருகின்றார்.

மலைகளில் நீராதாரமாக விளங்கும் சுனைகள் தேன் ஊற்றி வைத்த கலம் போலவும், ரவட்டி வைத்து நுங்கு போலவும், முரசின் மேற்பகுதி போலவும் இருந்தமையைப் புலவர் பாடியுள்ள முறைமை மாறாது கற்பார் சங்க இலக்கியச் சுவையை உணருமாறு எடுத்துக் காட்டியிருக்கிறார். புலவர்கள் குறிஞ்சி நில அருவிகளை வருணித்த

முறைமையினையும் அருவிக்கு வழங்கிய பல்வேறு பெயர்களையும்,

வெள்ளருவி, துறுவள்ளருவி, வயங்கு வெள்ளருவி,
ஒன்றியங் கடுவி, வாநிலங்கருவி, விட்டொளிர்
அருவி எழுந்து வீழ் அருவி

(பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை ப.219)

என்னும் சான்றுகளால் எடுத்துக் காட்டுகின்றார். அருவிக் காட்சி குறித்து. திருமுருகாற்றுப்படையை எடுத்துக் காட்டி மு.வ. விளக்குவது அவர் குறிஞ்சி நிலக் காட்சிகளைத் தன் மனத்தில் வரிந்து கொண்டு ஆய்வைப் படைத்த நுட்பத்தை எடுத்துக் காட்டுகின்றது. இதனை,

வெறிகொண்ட வேகத்தில் விரைந்து இறங்கியும்
துள்ளிக் குதித்தும் தாவியும் திருவிளையாடல்கள்
புரியும் அருவிகளை மிக உன்னிப்பாகக் கவனித்
திருக்கிறார் நக்கீரனார். வியப்புடன் விராவிய
ஆர்வத்துடன் இக்காட்சிகளை அவர் கண்டிருக்கிறார்.
பரந்து தோன்றும் நீர்ப்பரப்பின் அசைவுகளிலே கொடி
களின் அசைவுகள் அவருக்குக் காட்சி அளித்துள்ளன.

(மேலது. ப.223)

என்றவாறு எடுத்துக் காட்டுகிறார்.

மு.வ. சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே சிதறியிருக்கும் குறிஞ்சி நிலம் குறித்த செய்திகளை எல்லாம் ஒன்று திரட்டி அவற்றை எல்லாம் வகை தொகை செய்து ஒரு பனுவல் போல் கொடுத்திருக்கும் பாங்கு சங்க இலக்கியங்களில் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த அறிவையும் தேடுதல் நுட்பத்தையும் எடுத்துக் காட்டுவதாக அமைகிறது.

114. மு. வ. வின் 'வான்' குறித்த சிந்தனைகள்

முனைவர் கதி. முருகேசன் (கதிர்முருகு)
உதவிப் பேராசிரியர், மொழிகள் பள்ளி
வி.ஐ.டி. பல்கலைக்கழகம்
சென்னை வளாகம்
சென்னை - 600 048.

நிலம், நீர், தீ, காற்று, வான் என்னும் ஐம்பூதங்களுள் மாற்றங்கள் பலவற்றுக்கும் காரணியாய் இருப்பது வான். சங்க இலக்கியங்களில் வானக் காட்சிகள் பலவற்றையும் சங்கப் புலவர்கள் சொல்லோவியங்களாக வடித்துத் தந்திருக்கின்றனர். மு.வ. பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை என்னும் நூலில் சங்கப் புலவர்கள் வானம் குறித்துக் கூறியுள்ள செய்திகளைத் தொகுத்துச் சங்கப் புலவர்களின் நுட்பமான நோக்கினை ஆய்வு உலகம் அறிந்து கொள்ளுமாறு விளக்கிக் கூறியிருக்கின்றார்.

வானில் விளங்கும் கோள்களுள் சூரியன் தலையாயது. சூரியனின் செயல்கள் பலவும் சங்க இலக்கியங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அவை குறித்து மு.வ.

உருகெழு மண்டிலம், உருப்பவிர் மண்டிலம், காய்ந்து செலல் கனலி, காய்கதிர், கடுங்கதிர் எனக் கதிரவனின் வெம்மை இயல்பினையும், பல்கதிர் ஞாயிறு, அகன் சுடர், இலங்குகதிர், வயங்கு ஒளி மண்டிலம், அலங்குகதிர் மண்டிலம், செழுங்கதிர் மண்டிலம், விரிகதிர் மண்டிலம் என்று அதன் கதிர்கள் ஒளிதரும் பாங்கினையும் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

(பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை ப.263)

சூரியனின் இயக்கம் வானில் இயல்பாக நடைபெறுகிறது எனினும் பண்டைய புலவர்கள் சூரியனே உலக இயக்கத்திற்கு மூலமானது என்னும் கருத்தையும், அது அளவற்ற சக்தி கொண்டது என்பதையும் உணர்ந்திருந்தனர். அதற்கு அரண் சேர்க்கும் முகமாக மு.வ.

பயங்கெழு திருவின் பல்கதிர் ஞாயிறு
வயங்கு தொழில் தரீஇயல் வலனேர்பு விளங்கி (அகம்.298)

பல்கதிர் மண்டிலம் பகல்செய்து ஆற்றி (நற்.69)

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு (திருமுருகு. 1 - 2)

எல்லை செல்ல ஏழுர்பு இறைஞ்சிப்
பல்கதிர் மண்டிலம் கல்சேர்பு மறைய (குறிஞ்சில் : 215 - 16)

என்றவாறாகப் பல்வேறு சங்கச் சான்றுகளை எடுத்துக்காட்டி,

அனைத்துச் செல்வங்களையும் வழங்குவது ஞாயிறு.
அதுவே ஒளிக்கு மையமாக விளங்குகிறது. தகடுபோன்ற
தோற்றமுடன் விளங்குகிறது.
(பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை ப.262)

என்று சூரியனின் முக்கியத்துவத்தைப் பண்டைய புலவர்கள் அறிந்திருந்த பாங்கினைக் குறிப்பிடுகின்றார்.

பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பெரும்பான்மையும் சூரிய உதயம் கடலில் நிகழ்ந்ததையும் மறைதல் செயல் மலையின் பின்னும் நிகழ்ந்ததாகக் காட்டியுள்ளமையைப் பல இடங்களைக் காட்டாகச் சுட்டிக்காட்டி விளக்குகின்றார். இதனை,

பல்கதிர் ஞாயிறு
வயங்கு தொழில் தரீஇயர் வலனேர்பு விளங்கி
மல்குகடல் தோன்றும் (அகம்.298)
பல்கதிர் மண்டிலம் பகல்செய் தாற்றிச்
சேயுயர் பெருவரைச் சென்றவண் மறைய (நற்.69)

என்னும் சான்றுகளான் அறியலாம்.

பகல் பொழுதில் சூரியனையும் அதன் செயல்களையும் எடுத்துக் கூறிய புலவர்கள் இரவு வானத்தைக் கூறவரும் போது பெரும்பான்மையும் இருள் சூழ்ந்த நிலையில் கரிய மேகங்கள் வானில் பரவி இடியும் மின்னலும் மழையுமான சூழல் நிலவியதைச் சங்கச் சான்றுகள் கொண்டு மு.வ. விளக்கியிருக்கின்றார். இதனை,

கடல் கண் டன்ன மாக விசும்பின்
அழற்கொடி அன்ன மின்னுவசியு நுடங்கக்
கடிதிடி உருமொடு கதழுறை சிதறி
விளிவிடன் அறியா வானுமிழ் நடுநாள் (அகம். 162)

. . . . . வேய்பயில் அடுக்கத்து
யானைச் செல்லினம் கடுப்ப வானத்து
வயங்குகதிர் மழுங்கப் பாஅய்ப் பாம்பின்
பைபட இடிக்கும் கடுங்குரல் ஏற்றொடு
சூலி அழிதுளி தலைஇக்
கால்வீழ்ந் தன்றுநின் கதுப்புறழ் புயலே (அகம்.323)

வியலிடு விசும்பகம் புதையப் பாஅய்ப்
பெயல் தொடங் கினவே பெய்யா வானம் (நற்.371)

என்னும் சான்றுகள் தெளிவாக்கும். கார்காலத்தில் மழை பொழியும் போது

வானும் மண்ணும் ஒன்றாகக் காணப்படும் காட்சி (அகம் - 43) எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. மு.வ. மேகக் காட்சி, மின்னல் காட்சி ஆகியவற்றை.

நிலனும் விசும்பும் நீரியைந்து ஒன்றிக்
குறுநீர்க் கன்னல் எண்ணுநர் அல்லது
கதிர்மருங்கு அறியாது அஞ்சுவரப் பாஅய்த்
தளிமயங் கின்றே தண்குரல் எழிலி (அகம்.43)

கடல்கண் டன்ன மாக விசும்பின்
அழற்கொடி அன்ன மின்னுவசிபு நுடங்க (அகம்.162)

என்னும் சங்கச் சான்றுகளால் காட்டியுள்ளார்.

கார்காலத்தின் முடிவும் பனிக்காலத்தின் தொடக்கமுமான காலத்தில் மழை ஆய்ந்து மழை ஓய்ந்து பனிசெய்யும் காலத்தில் வாடைக் காற்றும் மேக மூட்டமும் நிலவுகிறது. காற்று வடக்கில் இருந்து தெற்காக மேகத்தைக் கொண்டு சேர்க்கிறது. இக்காட்சி வானம் தோலுரிப்பது போல் விளங்குவதாக (அகம் - 24) குறிப்பிடுவதையும் முசுண்டைப் பூக்கள் பூத்திருப்பது தெளிவான வானின் பின்னணியில் தூய வானில் விண்மீன்கள் விளங்குவது போல் உள்ளது (அகம் - 264) எனக் கூறியுள்ள சங்கப் புலவர்களின் கருத்துகளை எடுத்துக்கொண்டு பல காட்சிகளையும் ஒருங்கிணைத்து இயற்கை ஓவியத்தை மு.வ. ஆக்கித் தந்திருக்கிறார்.

சங்கப் புலவர்களின் வழி நின்று வானக் காட்சிகளையும் சூரியனையும் மேகத்தையும் மின்னலையும் எடுத்துக்காட்டிய மு.வ. நிலவு, அதன் இயக்கம், தேய்ந்து வளரும் அதன் நிலைகள் நிலவைக் கண்டு புலவர்கள் பாடியுள்ள விதம் முதலானவற்றை எடுத்துக் காட்டியிருக்கின்றார். பண்டைய புலவர்கள் வானியலில் சிறந்து விளங்கியிருக்கின்றனர். எத்தகைய அறிவியல் வளர்ச்சியும் இல்லாத பண்டை நாளிலேயே கண்களால் வானை உற்று நோக்கி, கோள்கள் அவற்றின் நிலைகள், கோள்களின் இயக்கம் முதலானவற்றை ஆராய்ந்து கூறியுள்ளனர் மு.வ.

நீல வானத்துப் பின்னணியிலே மிளிர்ந்து விளங்கும் எழுமீன் தோற்றத்தினை நீலக் கடற்பரப்பிலே சிறுபறவைகள் விளையாடும் காட்சிக்கு உவமையாகப் பாடுகிறார் இளநாகனார் என்னும் புலவர் கார்த்திகைப் பெரு விழாவினை வருணிக்கும் வகையாய், நக்கீரனால் அறுமீன் சிறப்பாகப் பாடப்படுகின்றது. அத்திருநாளில் அறுமீன் அருகில் முழுமதி நெருங்கியுள்ளதை அக்காட்சியில் காணலாம். உரோகிணிமீன் ஒருபாடலில் குறிப்பாகச் சுட்டப்படுகிறது. மற்றொரு பாடலில் உரோகிணிமீன் சகடம் என்னும் பெயரால் சுட்டப்படுகிறது. நெடுநல் வாடையுள் மேட ராசியும் உரோகிணியும் பேசப்படுகின்றன (பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை (பக்.272 - 273)

என்று பண்டைய புலவர்களின் வானியல் அறிவுக்குத்தக்க சான்றுகளை வெளிப்படுத்துகின்றார்.

சங்க இலக்கியம் முழுமைக்கும் வான், சூரியன், நிலவு, கோள்கள், நட்சத்திரங்கள், மேகம், இடி, மின்னல், மேகம் முதலியன குறித்த தகவல்கள் நிறைந்திருக்கின்றன. அவற்றைச் சரியான அணுகுமுறையுடன் அணுகி சங்க இலக்கியங்களைப் புரிந்து கொள்ளவும், சங்கப் புலவர்களின் நுட்பமான அறிவினைப் புரிந்து கொள்ளவும் வாய்ப்பாக 'வான்' குறித்த சிந்தனைகளை மு.வ. பதிவு செய்திருக்கிறார்.

115. மு. வரதராசனாரின் சமூகச் சிந்தனையும் உயிரிரக்கக் கோட்பாடும்

முனைவர் இரா. ஜோதிமணி
துணைப் பேராசிரியர்
பூ.சா.கோ.அர.கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி
பீளமேடு, கோவை-04.

அறிமுகம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் மு.வரதராசனாரின் இலக்கிய பங்களிப்பு அளவிடற்கரியது. இவர் சிறுகதை, புதினம், ஆராய்ச்சி, கடித இலக்கியம், திறனாய்வு நூல்கள், இலக்கிய வரலாறு எனப் பல்வேறு வடிவங்களில் தடம் பதித்தவர். தமிழ்நாட்டில் மட்டுமன்றி அயல்நாட்டிலும் கற்றறிந்தோர் பலரால் நன்கு அறியப்பட்டவர். இவரது படைப்புக்கள் பிற இந்தியமொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இத்தகு சிறப்புமிக்க மு. வரதராசனாரின் குறட்டை ஒலி பன்முகப் பார்வையில் எவ்வாறு படைத்தளிக்கப்பட்டது என்பது இவண் குறிப்பிடத்தக்கது. இக்கட்டுரையில் கதைச்சுருக்கம், கதைக்கரு, பொருளாதாரக் கட்டமைப்பு, சமூகப்பார்வை, உயிரிரக்க சிந்தனை ஆகிய தலைப்புகளின் கீழ் ஆராயப்பட்டு ஆசிரியரின் சமூகப்பார்வையும் இலக்கிய புலமையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆய்வின் எல்லை கருதி குறட்டை ஒலி என்னும் சிறுகதை மட்டும் ஆராயப்பட்டு கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

கதைச்சுருக்கம்

ஒரே கட்டடத்தில் மூன்று வீடுகள் உள்ளன. தரை தளத்தில் இரண்டு வீடுகளும், மேல் தளத்தில் ஒரு வீடும் இருந்தன. தரைதளத்தில் வடபுறம் உள்ள வீட்டில் ஒரு குடும்பமும் தென்புறமுள்ள வீட்டில் ஒரு குடும்பமும் குடியிருந்தனர். வடபகுதி வீட்டினர் செல்வந்தர்கள். ஆனால் திருமணமாகி இருபது ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லை. அவர்களுடைய வீடு தூய்மையாகவும் அழகாகவும் இருந்தது. தென்பகுதி வீட்டார் வறுமையானவர்கள். அவ்வீட்டில் ஆறு குழந்தைகளும் கணவன் மனைவி மற்றும் பாட்டியும் சேர்ந்து ஒன்பது பேர் வசித்து வந்தனர். வீட்டு விலங்காக விளங்கும் நாய் ஒன்று ஐந்து குட்டிகளை ஈன்றது. அதனால் வீடு எந்த நேரமும் ஆரவாரமாய் இருந்தன. பிள்ளைகள் சிறுவர்களாக இருந்ததனால் வீடு காவல் நிலையங்களாகவும், நீதிமன்றமாகவும் விளங்கும் இவ்விரண்டு வீட்டினருக்கும் இடையே பொருளாதார ஏற்றத்தாழ்வினால் கருத்து வேறுபாடுகள் நிறைந்திருந்தன.

இவ்விரு குடும்பத்தினரின் வாழ்க்கையை கதையாசிரியர் மேல் வீட்டிலிருந்தவாறே கவனித்து வந்ததாகத் தெரிகிறது. தென்பகுதி வீட்டிலுள்ள நாய், தன் குட்டிகளை விட்டுச் சென்று திரும்பி வரவில்லை. அதனால் நாய்க்குட்டிகள் பசியால் கத்திக் கொண்டு ஆரவாரம் செய்தன. குட்டிகளின் சத்தத்தைக் கேட்ட வசதியான வடபகுதி வீட்டுப் பெண், மேல் வீட்டாரிடம் குறைகூறிச் சென்றாள். தென்பகுதி வீட்டில் வசித்த பெண் நாயைத் தேடி கண்டுபிடிக்க முடியாமலும், நாய்க்குட்டிகளின் பசியைப் போக்க முடியாமலும் அல்லள் பட்டாள். இறுதியில் தன் மார்பகங்களிலுள்ள பாலைப் பஞ்சினால் துடைத்து குட்டிகளுக்குப் பசியைப் போக்கினாள். அங்குள்ள வயதானக் கிழவி வருவோர் போவோரிடம் தன் மருமகளைக் குறைக் கூறிக் கொண்டிருந்தாள். வடபகுதி வீட்டினர் குங்குமப்பூக் கலந்த பாலைக்குடித்து விட்டு கதவைச் சாத்திக் கொண்டு குறட்டை ஒலி வரும்படித் தூங்கினர் என்பது சுருக்கம்.

கதைக்கரு

மு.வ. அவர்கள் தன் சிறுகதைக்கு வலுசேர்க்கும் விதமாய், வறுமை நிலையிலிருந்த தென்பகுதி வீட்டுப்பெண் தன் வீட்டில் கத்திக் கொண்டிருக்கும் நாய்க்குட்டிகளின் பசியைப் போக்குவதற்குத் தன் பாலைக் கொடுத்துப் பசிப்போக்கினாள். இந்நிகழ்வு உயிரிரக்கம் மிக்கப் பண்பைப் பதிவு செய்துள்ளது.

கதைக்களம்

மூன்று வீடுகளை மையமாகக் கொண்டு கதை நிகழ்கிறது. மேல் மாடியில் குடியிருக்கும் ஒருவர் கீழ்வீடுகள் இரண்டிலும் நடக்கும் அன்றாட நிகழ்வுகளை சமுதாயப் பார்வையுடன் பதிவு செய்துள்ளார். கதை ஒருவர் சொல்வதாகவே அமைந்துள்ளது. இக்கூற்றை ஆராய்ந்து பார்த்தால் கதையாசிரியராகிய மு.வ. அவர்கள் சொல்வதைப் போன்றே அமைந்துள்ளது.

கதைத் தலைப்பு - சிறுகதையின் பெயர்ப்பொருத்தம்

வட பகுதியில் நிம்மதியாக உண்டு நிம்மதியாக உறங்கும் செல்வந்தரின் வீட்டில் குறட்டை ஒலி கேட்கிறது. தென்பகுதியிலுள்ள வீட்டில் தாயைப் பிரிந்த நாய்க்குட்டியின் பசியொலியும், குட்டிகளின் பசியைப் போக்குவதற்குப் போராடும் மனிதர்களின் ஒலியும் இங்கு மாறி மாறி ஒலிக்கின்றது. நிம்மதியாக உறங்குவோருக்கு நடுவில் பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டு நிம்மதியின்றி வாழ்வாரும் இச்சமூகத்தில் வாழ்கின்றனர் என்பதை குறட்டைஒலி என்ற பெயரின் மூலம் மு.வ. பதிவு செய்துள்ளார்.

பொருளாதார கட்டமைப்பு

ஒரே இடத்தில் வாழும் இரண்டு வீட்டாரின் வாழ்க்கையைக் கதையில் பதிவு செய்யும் ஆசிரியர் வடபகுதி வீட்டில் வசிப்போர் செல்வந்தர்கள் எனவும் தென்பகுதி வீட்டில் வசிப்போர் வறுமையில் வாடுவோர் எனவும் பதிவு செய்துள்ளார். மனிதர்களின் வாழ்க்கைத் தரத்தையும் செல்வ நிலையையும் அறிவதற்கு அம்மனிதர்கள் வாழும் வீடு, உடுத்தும் உடை, உண்ணும் உணவு ஆகியவை எடுத்துரைக்கும் சான்றுகளாய் அமைகின்றன. சான்றாக செல்வந்தரின் வீட்டில் குங்குமப்பூவும் சர்க்கரையும் கலந்து சுண்டக் காய்ச்சின பாலை வயிறாரப் பருகிவிட்டுக் கதவைச் சாத்திக் கொண்டார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வறுமையில் வாடுவோரின் வீட்டில் பாலுக்கு நாம் எங்கே போவது? என்று மருமகள் மாமியாரிடம் கேட்பதிலிருந்து பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இச்சிறுகதையில் உணவுமுறை மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சமூகப்பார்வை

இலக்கிய படைப்பாளிகள் தான் படைக்கும் இலக்கியம் (சிறுகதை, நாவல், கவிதை) எதுவாக இருப்பினும் அப்படையில் சமூக இடர்பாடுகளைக் களைந்து சமூகத் தேவையைப் பதிவு செய்யும் நோக்குடையவர்கள். அவ்வகையில் மு.வ.வும் தனது இலக்கியங்களின் இலக்குகளை சமூக முன்னேற்றம் நோக்கிய நிர்ணயித்துக் கொண்டு இலக்கியம் படைப்பார். பெண்கள் நாட்டின் கண்கள் என்பதற்கு ஏற்ப குறட்டை ஒலியில் இடம்பெறும் கதாபாத்திரங்களுள் பெரும்பான்மையும் பெண்களே. பெண்கள் எதையும் எடுத்துரைப்பவர்கள் என்பதை இச்சிறுகதையில் இடம்பெறும் மாமியார் மருகளைப் பற்றி வசைபாடிக் கொண்டிருந்தாள் என ஆசிரியர் பதிவு செய்துள்ளார். வசதியான வீட்டுப் பெண்மணி தன் பக்கத்துவீட்டுப் பெண்ணைப் பற்றி மேல்வீட்டாரிடம் குறைகூறிக் கொண்டிருந்தாள் எனவும் தென்பகுதி வீட்டுப் பெண் இரக்க உணர்வுமிக்கவளாகப் படைக்கப்பட்டிருப்பது இவண் உளங்கொளத் தக்கது. இவை மட்டுமன்றி இருவேறு நிலைப்பட்ட பொருளாதாரக் கட்டமைப்புகள் ஆகியன சமூகப் பார்வையின் அடங்கும்.

உயிரிரக்கக் கோட்பாடு

“வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்” என்றார் வள்ளலார். இத்தகு சிறந்த தமிழ் மரபில் தோன்றியவர் மு. வரதராசனார். அதனால் தான் தானியற்றிய சிறுகதையில் அஃறிணையாக இருந்தாலும் அவற்றிற்கும் பசி, பாசம் என்ற உணர்வுகள் உண்டு என்பதை நாய்க் குட்டிகளின் குரலில் எதிரொலிக்கச் செய்துள்ளாரோ? என நினைக்கத் தோன்றுகின்றது. பொருளாதார நிலையில் செழித்து நின்றாலும் சக

மனிதர்களுடன் பழகுவதற்குக் கூட விரும்பாதவர்களை வடபகுதி வீட்டிலும், என்னதான் பொருளின்றி வறுமையில் வாடினாலும் பிற உயிர்களின் அழுகுரலைப் போக்குவதற்கு தன் பாலை அளித்துப் பசிபோக்கிய சிறந்த குணவதியை தென்பகுதி வீட்டிலும் படைத்துக் காட்டியிருப்பதன் மு.வ. அவர்கள் இருவேறுபட்ட சமுதாயச்சூழல் மட்டுமன்றி உயிரிரக்கச் சிந்தனையையும் பதிவு செய்துள்ளார்.

நிறைவுரை

குறட்டை ஒலி என்னும் சிறுகதையை ஆராயும் பொழுது மு.வ. அவர்களின் இலக்கியப் படைப்பாற்றல் வெளிப்பட்டு நிற்கின்றது.

நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதிய மு.வ. அவர்கள் தன் சிறுகதை இலக்கியத்தில் பல சமூகச் சிக்கல்களைப் பதிவு செய்துள்ளார்.

குறட்டை ஒலி என்னும் சிறுகதையில் இருவேறுபட்ட குடும்ப அமைப்பையும் மனநிலையையும் மறுவாசிப்பு செய்துள்ளார். பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் மிகுந்த சமூகத்தில் மனிதர்களைக் கூட நிராகரிக்கும் மனிதர்களைப் படம்பிடித்துக் காட்டியுள்ளார். வறுமையான நிலையிலும் பிற உயிர்களைப் பேணும் பெருந்தன்மைமிக்க மனிதர்களைப் பெருமிதத்துடன் போற்றியுள்ளார்.

மருமகளை மற்றவரிடம் குறைக்கூறும் மாமியார், பக்கத்து வீட்டாரைக் குறை சொல்லும் செல்வந்தரின் மனைவி, இருவரையும் சரி செய்யும் மேல் வீட்டுப் பெண் ஆகியோரின் குணநலன்களை எடுத்துக்காட்டி யதார்த்தப் போக்குடன் கதையை அமைத்துள்ளார். இவ்வாறு குறட்டை ஒலி என்னும் சிறுகதையில் தன் படைப்பாற்றலையும் சமூகப் பொறுப்புணர்வையும் பதிவு செய்துள்ளார்.

116. மு. வ. வின் 'நல்வாழ்வு' - ஓர் ஆய்வு

பெ. செல்வி
தமிழ்த்துறை
தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி
பெரம்பலூர் - 621 212.

முன்னுரை

மு.வ. அவர்களின் கட்டுரையில் நல்வாழ்வில் பழங்கால நம்பிக்கைகளும் கொள்கைகளும் ஒரு புறம், இக்காலப் புத்தறிவும் புதுப்போக்கும் ஒருபுறம், இவற்றிடையே போராட்டம் உள்ளது. பழமைக்கு எதிர்ப்பு வளர்ந்து வருகிறது. ஆயினும் புதுமையும் ஆக்கம் தருவதாக இல்லை. ஆதலின் பலர் உள்ளம் தடுமாற்றம் உற்றுத் தளரக் காண்கிறோம். பழமை புதுமை இவற்றிடையே என்றும் பயன்தரவல்ல அடிப்படையில் வழிபாடு, நம்பிக்கை, உடம்பைப் போற்றல், எளிமை, ஓர் அறம், உரிமையும் கடமையும், புலனடக்கம், மனவலிமை வேண்டும். பண்பாடு பொதுமை அறம் நீந்துக என்ற தலைப்பில் நெறிகள் சில உள்ளன. அவற்றைப் போற்றினால் வாழ்வில் அமைதியும் இன்பமும் வாய்ப்பதை ஒவ்வொருவரும் உணரலாம் என்பதை இந்தக் கட்டுரையின் மூலம் அறிவுறுத்துகிறார் என்பதை ஆராயப்படுகிறது.

வழிபாடு

வழிபாடு என்பது இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுகிறது. கடவுள் நம்பிக்கை தோன்றிய காலம் முதல் இவ்வழிபாடும் உடன் தோன்றிற்று. காலத்திற்குக் காலம் வழிபாட்டு முறைகளும், சடங்கு முறைகளும் மாறினாலும் வழிபாட்டு முறைகள் மாறுவதில்லை. தொன்று தொட்டு நடந்து வருகிறது. கடவுள் நம்பிக்கை தோன்றிய காலத்தில் அச்சம் உணர்வு அடிப்படையாக இருந்தால், வழிபாடும் உணர்வு அடிப்படையிலேயே அமைந்தது. அச்சத்திற்குரிய பொருள்களைக் கடவுள்களாகக் கொண்டு வழிபட்டதால் அவ்வழிபாடு முதன் முதலில் இயற்கை வழிபாடாக அமைந்தது.

இந்த இயற்கை வழிபாடு சிறுகச் சிறுக வளர்ந்து முழுமுதற் கடவுளை உருவ வழிபாட்டில் வழிபடத் தொடங்கிய பிறகு வழிபாட்டு முறைமைகளும், விழாக்களும், சிறப்புப் பூசைகளும் தோன்றின. வழிபாட்டில் பூசை என்ற சடங்கு, அன்றாடப்பூசை என்றும் சிறப்புப் பூசை என்றும் வகுத்துச் செய்யப்பட்டது. இதனைத் திருக்குறள் மழை இல்லை என்றால் வழிபாட்டில் சிறப்புப் பூசை நடக்காது என்று குறிப்பிடுகிறது.

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு (திருக்குறள், வான்சிறப்பு)

வழிபாடு என்றால் என்ன?

வாழ்க்கை என்பது முதலும் முடிவும் கடவுளைச் சார்ந்தவை என்று தெளிந்து அந்த வழியில் சிந்தையைச் செலுத்துதலே வழிபாடு ஆகும்.

"ஒவ்வொரு நாளும் கடவுள் வழிபாடு செய்தல் நன்மை பயக்கும், உள்ளத்தை உயர்த்தும், அமைதி நல்கும், நாள்தோறும் காலையில் கடமைகளைத் தொடங்குவதற்கு முன்பும் இரவில் கடமைகளை முடித்த பிறகும் அமைதியாக உட்கார்ந்து கண்மூடி மனத்தை ஒருமைப்படுத்தி வழிபடல் வேண்டும். கடவுள் எங்கும் என்றும் உள்ள பெருஞ்சக்தியாய் எல்லாப் பொருளுமாய் எல்லா உயிருமாய் விளங்குதலை எண்ண வேண்டும்.

எங்கெங்கு அன்பு உள்ளதோ அறிவு ஒளிர்கின்றதோ ஆற்றல் விளங்குகின்றதோ அங்கெல்லாம் கடவுளின் சக்தி வெளிப்படுதலை உணர வேண்டும். வான்வெளியின் அண்டங்களை நோக்க இந்தப் பரந்த பெரிய உலகம் சிறியது. இதில் சிறிய ஒரு மூலை நாம் வாழ்வது. இந்த உடலும் இதற்காக ஒரு சிறு குடும்பமும் ஒரு தொழிலகமும் சிறிய அளவில் உறவும் நட்பும் பங்கிட்டு அருளிய கடவுளின் அருளைக் கருத வேண்டும். ஆற்ற இருக்கின்ற கடமைகளுக்கு வழிகாட்டி அறிவும் ஆற்றலும் தருமாறு வேண்டிக் கொள்ள வேண்டும்.

நம்பிக்கை

மனிதனின் பலம் நம்பிக்கையிலே
யானையின் பலம் தும்பிக்கையிலே

என்ற பழமொழிக்கேற்ப நம்பிக்கையானது மனிதனோடு பிறந்து மனிதனோடு அழிவதாகும். மனித வாழ்க்கையே நம்பிக்கைகளின் அடிப்படையில் தானே இயங்குகிறது? நம்பிக்கைகள் தானே மனிதனை இயக்குகின்றன. இந்நம்பிக்கைகள் மனித மனத்தின் வெளிப்பாடுகளாகும். மனிதனின் அச்ச உணர்வே இந்நம்பிக்கைகளின் தோற்றத்திற்குக் காரணம் எனலாம். இந்த நம்பிக்கை மக்களின் வாழ்வில் தொடர்ந்து இருந்து வருவனவாகும். தெய்வங்கள், தெய்வங்களின் தோற்றம், அருள், சக்தி, வழிபாடு, சடங்குகள், சாத்திரங்கள் இவை எல்லாமே நம்பிக்கைகளின் விளைவில் தோன்றியவையாகும்.

"நம்பிக்கை என்பதை அறநெறியால் தான் இன்பம் பெற முடியும்

என்று புத்தர் திருவள்ளுவர் முதலான சான்றோர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் தம் வாழ்க்கை அனுபவத்தால் கற்ற உண்மைகளை நம் நன்மைக்காகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் கண்மூடி வாழ்ந்தவர்கள் அல்லர், எவ்வளவோ எண்ணிப் பார்த்து, வாழ்ந்து பார்த்து, அவற்றால் தெளிந்த உண்மைகளை உணர்ந்து நடக்க வேண்டும் என்று சிறந்த சான்றோர்களின் கருத்தை எடுத்துக்காட்டாக இவர் கூறுகிறார்.

பண்பாடு

பண்பாடு என்பது பரந்த பொருளுடன் பயன்படுத்தப்படும் ஒரு சொல். இதனை ஆங்கிலத்தில் culture என்னும் சொல்லுக்கு இணையான பொருளில் இச்சொல் தமிழில் பயன்படுத்தப்படுகிறது. கலாச்சாரம் என்ற சொல்லும் பண்பாட்டுக்கு ஒத்த சொல்லாகப் பயன்படுகிறது. இது பொதுவாக மனித செயற்பாட்டுச் சிறப்புத் தன்மைகளையும், முக்கியத்துவத்தையும் கொடுக்கும் குறியீட்டு அமைப்புகளையும் குறிக்கின்றது.

பண்பாடு என்பது உண்மையில் மானுடவியல், சமூகவியல் நிலைப்பட்ட ஒரு வாழ்வியற் களம், அன்றாட வாழ்க்கை, உறவு முறைகள், பிள்ளை வளர்ப்பு, மரணம், உணவு வகைகள், சடங்குகள் என இவற்றின் அடிப்படையாக வருகின்ற வாழ்க்கை முறையே பண்பாடு.

"ஒரு சில இயந்திரங்கள் உலகையே அழித்து விட முடியும். ஒரு சிலரின் ஆணவம் மனித இனத்தையே ஆட்டிப் படைக்க முடியும். அமைப்புகளைக் கைப்பற்றுவோர்க்கே ஆற்றல் திரள்கிறது. பண்பாட்டைப் போற்றுவோர்க்கு ஒரு சிறு மூலையே கிடைக்கிறது. அமைப்புகளைக் கைப்பற்ற உதவும் தேர்தல் முதலியவைகளையும் அவற்றிற்கு உதவி புரியும் செய்தித்தாள் முதலிய விளம்பரக் கருவிகளையும் இளைஞர்களின் உள்ளங்கள் நாடுகின்றன. பண்பாட்டை வளர்க்க உதவும் நூல்கள் சிலவற்றையும் மனிதர் சிலரையும் அந்த உள்ளங்கள் நாடுவது குறைகிறது" என்று இவர் கூறுகிறார்.

புலனடக்கம்

புலனடக்கம் என்பது வெறும் புலன்களை மட்டும் சார்ந்தது அல்ல. மனம், மொழி, மெய் ஆகிய மூன்றையும் அடக்கி வாழ்வதே புலனடக்கம் ஆகும். இதனை, நல்வழியிற் செலுத்தலே என்று இதன்கண் அறிவுறுத்தப்பட்டமை கருத்திற்குரியது. ஐம்புலன்களும் (கண், மூக்கு, வாய், செவி, மனம்) அடக்கா அறிவறிந்தேன்.

"மதுவின் போதையும், காமத்தின் போதையும் குளிர் நாட்டில்

குறைவு. ஆகையால் அங்கெல்லாம் மதுவை ஒழிக்க வேண்டும் என்றும், பிற மங்கையருடன் பழகக் கூடாது என்றும் ஒழுக்க விதிகள் வகுக்கவில்லை. ஆயினும் அந்த நாட்டிலும் அறிவு மயங்குமாறு குடிக்கின்றவர்களைக் குடிகாரர் என்று பழிக்கிறார். கண், காது முதலிய ஐம்பொறிகளுக்கும் இன்பம் வேண்டும். அவ்வாறு இன்பத்தை நாடுவதிலும் நுகர்வதிலம் அளவு வேண்டும். முறை வேண்டும். மனம் போனபடி இன்பத்தை நாடுவது, சுவைகளைப் பெருக்கி அளவு கடந்து உண்பதைப் போல தீமையாய் முடியும் என்பது" இவரது கட்டுரையில் குறிப்பிடப்படுகிறது.

முடிவுரை

மு.வ. அவர்களின் கட்டுரையில் வழிபாடு செய்வதனால் ஏற்படும் நன்மைகளைப் பற்றியும், நம்பிக்கையில் வாழ்க்கையைப் பற்றிய செய்திகளையும், பண்பாட்டு முறைகளை பின்பற்றும் முறைப்பற்றியும், புலனடக்கம் பற்றியும், எளிமையான வாழ்வு வாழ்வது பற்றியும் இவருடைய கட்டுரையின் மூலம் அறிவுறுத்தப்படுகிறது என்பது ஆராயப்பட்டது.

117. மு. வ. வின் அல்லியில் சிலம்பின் தாக்கம்

முனைவர் வே. நெடுஞ்செழியன்
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு கலைக்கல்லூரி
திருவண்ணாமலை.

முன்னுரை

ஈராயிரம் ஆண்டுகாலத் தமிழ் இலக்கிய வரலாற்றில் சூழல் மாற்றத்திலும், புதுப்புது நாகரிக வளர்ச்சியிலும், வாழ்வியல் அறமும் பண்பாடும் சிதையாது காக்கும் முயற்சியைக் காலந்தோறும் இலக்கியங்கள் மேற்கொண்டு வந்துள்ளன. இருபதாம் நூற்றாண்டில், தமிழரின் வாழ்வை அறம் பிறழாது புதுமை நோக்கி வழிநடத்தும் பணியைத் தம் எழுத்துவழி மேற்கொண்டவர் அறிஞர் முனைவர் மு. வரதராசனார் ஆவார். அவருடைய அல்லி என்ற புதினம் அகவாழ்க்கைச் சிக்கலை மையமிட்டது. எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்பது வாழ்வன்று. இப்படித் தான் வாழ வேண்டும் என்று வகுத்துக் கொண்டு வாழ்வதே வாழ்வு என்னும் மு.வ.வின் வாழ்வியல் கோட்பாட்டினை அவர்தம் படைப்புகள் எடுத்து மொழிகின்றன. அதே போன்று அகத்திலும் புறத்திலும் அறத்தின் வலிமையைத் தமிழ்கூறு நல்லுலகிற்கு உணர்த்துவதற்காக இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் இயற்றினார். அவ்வகையில் இருவேறு காலச்சூழல்களில் தோன்றியனவாயினும், தமிழ்மரபில் அறத்திற்கும் ஆடம்பர வாழ்விற்கும் இடையேயான ஊடாட்டத்தையும், அதனால் விளையும் தடுமாற்றத்தையும், வாழ்வின் திசைமாற்றத்தையும் பதிவு செய்யும் வகையில் இளங்கோவடிகளின் சிலம்பினைப் போலவே மு.வ. எழுதியுள்ள புதினமாகிய அல்லியும் விளங்குகிறது.

அல்லி - களமும் கட்டமைப்பும்

அல்லி மருத்துவக் கல்லூரி மாணவி. கல்வி முடிவதற்கு முன்னேயே தந்தையார் அவளுக்கு மணம் பேசி முடிக்கிறார். சுப்புரத்தினம் ஆடம்பர மோகம் கொண்டு, பிற பெண்களுடன் அவன் பழகுவதை அல்லி விரும்பவில்லையாயினும் தட்டிக் கேட்கவில்லை. அவன் படிப்படியே குடும்பம் என்ற வரையறையை விட்டு விலகிக் காமுகனாகத் திரிகிறான். அல்லி, அவனைப் பிரிந்து தந்தை வீட்டிற்கு வந்து விடுகிறாள். மருத்துவப் படிப்பை முடித்த அல்லி, தன் தோழியின் அழைப்பை ஏற்று, தன் தந்தையுடன் பெங்களூர் சென்று, மருத்துவத் தொழில் மேற்கொள்கிறான். கணவன் மனைவியின் பொருந்தாத வாழ்க்கைக்கும், பெண்களின் நோய்களுக்கும் அடிப்படையாக மனப்பொருத்தப்பாடும், உடல்

பொருத்தப்பாடும் ஒருசேரப் பொருந்தாமையே என உணர்ந்து, அதனை நெறிப்படுத்தி அன்புடைய வாழ்க்கை அமைவதற்கு வழிகூறும் வகையில் எது குற்றம் என்ற நூல் ஒன்றை எழுதிச் சமுதாயத்திற்கு முறையாக வாழ வழிகாட்டுகிறாள்.

அல்லியின் கணவனோ, அல்லியைப் பிரிந்த பின் நாளடைவில் வீண் ஆடம்பரத்தால் செல்வத்தை இழந்ததோடு, காசோலை மோசடியால் சிறை சென்று மீண்டு, திருந்தி, ஒரு சீருந்து தொழில்நுட்பத் தொழிலாளியாகச் சிறிது காலம் பணியாற்றி நோயினால் மரணமடைகிறான். அல்லி சமுதாய வழிகாட்டியாகத் தன் பணியைத் தொடர்கிறாள். அல்லி எனும் பெண் தற்கூற்றாகச் சொல்லிச் செல்லும் நடையில் இப்புதினம் அமைந்துள்ளது.

ஒப்பீட்டு நோக்கில் அல்லியும் சிலம்பும்

அல்லி உருவாக்கத்திற்கான சூழல் பின்புலத்தை ஆராய்ந்தால், தொழில் புரட்சியும் அறிவியல் வளர்ச்சியும் இணைந்து சமுதாய வாழ்க்கையை நிலவுடைமையிலிருந்து சந்தைப் பொருளாதார வாழ்வியல் நோக்கி, வெளியே கொண்டு வந்து விட்டன. பெண் ஆணுக்கான நுகர்வுப் பொருள் என்ற கட்டுருவாக்கம் உடைந்து அவளும் ஆணைப் போலவே அனைத்து உரிமைகளோடும் வாழப்பிறந்தவள் என்ற உண்மை உணரப் படுகிறது. இங்கு புறமாற்றங்கள் அகவாழ்வில் ஆண் - பெண் - குடும்பம் குறித்த கேள்விகளை உருவாக்கின. இத்தகு வினாக்களை - உடலையும் மனத்தையும் ஒரு சேர மதித்து - நலமான பார்வையில் எதிர்கொண்டாலொழிய விடை காண முடியாது என்ற சிந்தனை வெளிப்பாடே அல்லியாக உருவாகியுள்ளது.

போரையும் உழைப்பையும் முன்னிறுத்திய இனக்குழு வாழ்க்கையிலிருந்து உற்பத்தி பிகர்வு நோக்கிய நகர நாகரிகம் சந்தைப் பொருளாதாரத்திற்குள் நுழைந்த சூழலே சிலப்பதிகாரமாகும். புதிய நுகர்வுப் பண்பாட்டில் பெண்ணும் நுகர்வுப் பொருளாக்கப்பட்டமையால், பெண் வீட்டிற்குள் ஆணின் தேவைக்கான நுகர்வாக நிறுத்தப்பட்டாள். ஆண், வீடு மட்டுமின்றிப் புற உலகின் அனைத்து நுகர்வுகளுக்கும் உரியவனாக அங்கீகரிக்கப்பட்டான். எனவே, நகர நாகரிகத்தின் தொடக்கம் உருவாக்கிய குடும்ப அமைப்பு, சந்தைப் பொருளாதாரச் சூழலில் பெண்ணுக்கு இறுகிய வேலியாகவும் ஆணுக்கு மிகைச் சுதந்திரமாகவும் அமைந்தது. அதனால், குடும்ப அமைப்பு கேள்விக்குள்ளானதைப் பதிவு செய்யும் வகையிலேயே சிலப்பதிகாரம் உருப்பெற்றுள்ளது.

திருமணம்

கோவலன் கண்ணகி திருமணம் குறித்து இளங்கோவடிகள், ‘மாநகர்க்கீந்தார் மணம்’ என்று கூறுவது குறிப்பிடத்தக்கது. கோவலன் ஈரெட்டாண்டு அகவையான், கண்ணகி ஈராறாண்டு அகவையாள், பருவத்தின் தொடக்கத்தில் நிற்பவர்கள், வாழ்க்கை குறித்த தெளிவு அற்றவர்கள். இருவரையும் திருமணத்தில் இணைப்பது குறித்து அவர்தம் பெற்றோர்கள் தீர்மானிக்கின்றனர். இருவரின் மனப்பொருத்தம் பற்றி ஏதும் ஆராயவில்லை. எனவே கண்ணகி கோவலன் திருமணத்தை அவர்களைப் பொய் மெய்களாக நிறுத்தி, சமுதாயத்தின் முன்னே தங்களது செல்வச் செழிப்பை மரபை எடுத்துரைக்கும், ஆடம்பரத் திருமணமாகவே அவர்கள் நடத்துகின்றனர். அவ்விருவரிலிருந்து அந்நியப்பட்ட - ஊருக்காக - தமது பெருமைக்காக நடத்தப்பெற்ற திருமணம் என்ற குறிப்புத் தோன்ற மாநகர்க்கு ஈந்தார் மணம் என்று இளங்கோவடிகள் கூறினார் என்பது பொருந்தும். அவ்வாறே, அல்லி புதினத்தில், அல்லி படித்த பெண் என்பதால் மனத்துக்குள் தன் திருமணம் குறித்து, எத்துனையோ கேள்விகள் பிறந்தாலும், தந்தையின் தியாகத்தை எண்ணியும், சமுதாயம் போற்றும் பெண் என்ற மதிப்பீட்டில் தன்னை நிலைநிறுத்தற்பொருட்டும். அவர் சொற்படி சுப்புரத்தினம் என்ற பொறியாளரைத் திருமணம் செய்து கொள்கிறாள். அவள் தந்தையும் ஊராரின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமலேயே - சமுதாயம் தரும்கேள்வி நெருக்கடியின் பொருட்டே அவள் படிப்பு முடியும் முன்னரே தனது கடமையை முடிப்பதற்காக அவளுக்குத் திருமணம் செய்கிறார். எனவே, அல்லி - சுப்புரத்தினம் திருமணமும் இளங்கோவடிகள் கூறுவது போன்றே பெண்ணைப் பெற்றவர், ஊராருக்கு அவர்கள் வாயை அடைப்பதற்காக நடத்தப் பெறுவதாக அமைந்து, மாநகர்க்கு ஈந்த மணமாகவே விளங்குகிறது.

அல்லியில் கண்ணகி படிமம்

மு.வ. அல்லியைப் படைக்கும் போது, சமுதாயம் போற்றுகின்ற பண்புகளை உடையவளாகப் படைக்கின்றார். புதுமைப்பெண் காலமாதலால் அதற்கேற்ப, கல்வியறிவும் ஆளுமையும் பெற்றவளாக அல்லியைப் படைக்கிறார். அதே நேரம், அத்தகு புதுமைகள் நம் மரபார்ந்த அறவாழ்வை மேலும் செம்மையுறக் காக்கப் பயன்பட வேண்டும் என்ற கொள்கை உடையவளாகத் திகழ்கிறாள். அதன்பொருட்டு மாறிவரும் சமுதாயச் சூழலில் பெண் குறித்த மதிப்பைச் சரிந்து விடாமல் கட்டிக்காக்கும் பொறுப்புமிக்கவளாக அல்லி திகழ்கிறாள். போதிலாளர் திருவினாள் அழகும் தீதிலா வடமீனின் கற்பும் கொண்ட கண்ணகி வண்ணச் சீறடி மண்மகள் அறியாதவாளகக் காட்டப்பெற்றாலும், வழக்குரைக் காதையில் அவளது

உரையில் அவளின் கூரிய மதிநுட்பமும் செயலாற்றலும் அவையஞ்சாமையும் துணிவும் அவள் கல்வியறிவு பெற்றமைக்கு இணையான மதிப்புண்மையை உணர்த்துகிறது.

அல்லி ஒரு பெண்ணின் கடமை என்பது இல்லத்தைப் பேணுதலும் தன் கணவன் குறையுடையவனாக இருந்தாலும் பொறுத்துக் கொண்டு, ஏற்றுப் பேணுதலும் என்ற நெறியைக் கடைப்பிடித்து வாழ்கிறாள். கணவன் பிற பெண்களைத் தேடித்திரிவதும், அத்தகைய பெண்களோடு கூடித் திரிவதும் ஆகிய செயல்களில் தன் கண்ணெதிரேயே ஈடுபடும்போதும், அவனைத் தட்டிக் கேட்கவோ இடித்துரைக்கவோ செய்யாமல் என்றாவது அவன் திருந்தி வருவான் என்ற நம்பிக்கையோடு அவனோடு வாழ்கிறாள். மொத்தத்தில் இருபதாம் நூற்றாண்டுப் புதுமை வாழ்வில் இரண்டாம் நூற்றாண்டின் பழமைப் பெண்ணாக வாழ்கிறாள். எனவே, அல்லியின் பண்பிலும் செயலிலம் கண்ணகியின் படிமம் காட்சியளிக்கிறது. மேலும், இல்லறத்தில் தன் கடமையை உணர்ந்து அதனைச் சமூகப் பொதுமையில் வைத்துச் சிந்தித்த கண்ணகி தெய்வமாய் உயர்ந்தது போலவே, அல்லியும் தனது அகச்சிக்கலைச் சமுதாயப் பொதுவாகச் சிந்தித்து விடைகண்டு, தன் கணவன் உட்பட பலர் வாழ்க்கையைச் செம்மை செய்யும் உயர்தூய நிலைக்கு உயர்த்தப்படுகிறாள்.

சுப்புரத்தினத்தில் கோவலன் படிமம்

சுப்புரத்தினமும் அல்லியினுடைய குடிப்பிறப்பு மற்றும் கல்வித் தகுதி அதனால் கிடைக்கும் சமுதாய உயர்மதிப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அவளைத் தனக்கு இணையாய் எண்ணி, அவளை மணந்து கொள்கிறான். அவளுடைய பண்புகளையோ அவளுடைய எதிர்பார்ப்பு களையோ அவன் அறியவில்லை. அல்லியை விடுத்து, பிறபிற பெண்களுடன் உறவு கொண்டு திரிகிறான். இறுதியில் திருடனாய் சிறைசென்று மீண்டு திருந்துகிறான். ஆனாலும், நோயுற்று உயிர்துறக்கிறான். கோவலன் படைப்பினை நோக்க கோவலன் தனக்கிணையான குடிப்பெருமை உடையவள் அழகியள் இளமையள் என்பன தவிர கண்ணகி குறித்த வேறு எண்ணங்கள் ஏதுமின்றி மணக்கிறான். இல்லறப் பண்பும் எளிமையுமே கொண்ட கண்ணகியை விட, தன் ஆடம்பர மோகத்தின் அடையாளமாக அரசன் அளித்த மாலையை விலைகொடுத்து வாங்கியமையால் துணையான மாதவியை நாடிச் செல்கிறான். அவ்வாறே, கோவலன் கள்வனெனக் கொலைக்களப்படுவதற்கு இணையாக சுப்புரத்தினம் திருடனாகிச் சிறைசென்று, பின்னர் நோயுற்று இறக்கிறான். எனவே, காலமாறுபாடு சார்ந்த சுப்புரத்தினம் படைப்பை, கோவலனின் இணையான படைப்பாகச் சொல்லமுடியாது. எனினும் ஓரளவு கட்டமைப்பில் கோவலனின் படிமம் காணப்படுகிறது என்பது மறுப்பதற்கில்லை.

தொகுப்புரை

இரு இலக்கியங்களின் சூழல் பின்புலம், பொருந்தாமணம், மாந்தர் படைப்பு ஆகியனவற்றை ஒப்பீட்டு நோக்கில் ஆராயுமிடத்து, மு.வ. அல்லி படைப்பில் அறத்தை முன்னிறுத்திக் காக்கும் சிலப்பதிகாரத்தை முன்னிறுத்தி, கண்ணகி கோவலன் வாழ்க்கையின் பாதிப்பை உள்ளூற அமைத்தே படைத்துள்ளார் என்பது புலப்படுகிறது.

118. சமூகப் பார்வையில் மு. வரதராசனாரின் கரித்துண்டு

ஏ. சுதாகர்
ஆய்வியல் நிறைஞர்
தூய நெஞ்சக் கல்லூரி
திருப்பத்தூர்

டாக்டர் மு.வ.வின் வாழ்க்கைக் குறிப்பு

இருபதாம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தமிழ்ப்பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்களின் தமிழ்த்தொண்டு முதன்மையான இடம் பெறுவதாகும். அவர் ஈடு இணையற்ற பெரும் எழுத்தாளராக விளங்குகிறார். உலகத் தமிழர்களின் உள்ளங்களைக் கவர்ந்த முதல் தமிழராகத் திகழ்ந்தவர்.

பெற்றோர்கள்

தாயின் பெயர் அம்மாக்கண்ணம்மாள், தந்தையின் பெயர் முனுசாமி இவர்களுக்கு மகனாக 25-04-1912ஆம் ஆண்டில் வடார்க்காடு மாவட்டம் திருப்பத்தூரில் பிறந்தார். குடும்ப மரபுப்படி தாத்தாவின் பெயரையே இவருக்கு சூட்டினார்கள். 1935ஆம் ஆண்டு ராதா அம்மையாரை மணந்தார்.

கல்வி

இவர் வேலத்திலும், வாலாசாவிலும் தொடக்கக்கல்வியைக் கற்றார். உயர்நிலைப்பள்ளிப் படிப்பைத் திருப்பத்தூரில் பயின்றார். முருகய்யா முதலியாரிடம் தமிழ் கற்று புலவர் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றார்.

1935ஆம் ஆண்டு தமிழ்ப்புலவர் தேர்வு எழுதி சென்னை மாநிலத்திலேயே முதல்வராகத் தேர்ந்து ரூ.1,000 திருப்பனந்தாள் பரிசு பெற்றார். 1939 பி.ஓ.எல். பட்டமும், 1944இல் அமெரிக்காவிலுள்ள ஊஸ்டர் கல்லூரி இவருக்கு இலக்கியப் பேரறிஞர் (டி.லிட்) என்னும் பட்டமும் அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் (டி.லிட்.) என்னும் சிறப்புப் பட்டமும் பெற்ற முதல் தமிழ் அறிஞர் இவர்.

தொழில்

1928-ல் முதன் முதலாக தாலுக்கா அலுவலகத்தில் எழுத்தாளராகப் பணிபுரிந்தார். 1935-ல் நகராட்சி உயர்நிலைப்பள்ளியிலும், 1944-ல் பச்சையப்பன் கல்லூரியில் விரிவுரையாளராகவும், 1945-ல் அக்கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவரானார். இடையில் ஓராண்டு சென்னைப் பல்கலைக்

கழகத்தில் தமிழ்த்துணைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

1961 முதல் 1971 வரை சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை தலைவராகப் பணியாற்றினார். 1971 முதல் 1974 வரை மதுரைப் பல்கலைக் கழகத்தின் புகழ்மிக்க இணையற்ற துணை வேந்தாகப் பணிபுரிந்தார்.

பன்மொழிப் புலமை

இவர் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி முதலிய மொழிகளைக் கற்றுப் பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தார்.

உலகம் சுற்றிய முதல் பேராசிரியர்

ரஷ்யா, மலேசியா, சிங்கப்பூர், பாரிஸ், இலங்கை, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி, கிரேக்கம், எகிப்து, அமெரிக்கா போன்ற உலக நாடுகளை சுற்றிப் பார்த்த முதல் தமிழ் பேராசிரியர் ஆவார்.

உலகக் குடிமகனின் பெருவாழ்வு

எண்ணத்தால், எழுத்தால், செயலால், சொல்லால், நல்வாழ்வு தந்த உலகக் குடிமகனாக உயர்ந்தார்.

உயிருள்ள படைப்புகள்

தமிழ்த்தாயின் தலைமகனாகத் திகழ்ந்த இவர் 62 வயதில் 82 நூல்களை எழுதி இணையில்லாப் புகழ்ப்பெற்றார்.

இவர் எழுதிய கரித்துண்டு நாவலில் இவர் காட்டிய சமூக அக்கறையைப் பற்றியதே இக்கட்டுரையின் நோக்கம்.

முன்னுரை

இனி எதற்கும் உதவாது என்று எண்ணி வீதியில் தூக்கி வீசப்படும் கரித்துண்டினைக் கொண்டு, ஆடம்பர வாழ்க்கையைக் கொடுக்க முடியாததால் அனாதையாக்கப்படும் முடவரையும் யாரும் இல்லாமல் குழந்தைகளுடன் வீதியில் நிற்கும் பெண், ஏழைகளாகப் பிறந்தால் அவர்கள் படும் இன்னல்கள், ஏழைகளையும், அனாதைகளையும் இச்சமூகம் காட்டும் தீண்டப்படாதவர்கள் போன்ற பாகுபாடும் குடிசைகளையும் அங்கு மக்கள் நீர்ப்பெருக்கும் போது நிற்க இடமில்லாமல் தவிக்கும் நிலையும், தொழிலின் பெருமையும், ஓவியத்தை நம்பி தனது வாழ்வை வீணாக்கியவர்களையும், பிச்சைக்காரர்களைப் பார்த்து பரிதாபப்படாமல் போனாலும், அவர்களின் மனம் புண்படும்படி நடந்துகொள்ளும் மனசாட்சி இல்லா மனிதர்களும்,

குழந்தைகளை வெயிலிலும் வீதியிலும் போட்டு மனசாட்சியில்லாமல் பிச்சை எடுக்கும் பெண்களும், உலகம் ஒரு அரசாங்கமாக அமையும் காலம் வரும் என்றும், மொழியின் பிரிவினை ஆதரித்தும், ஒட்டுமொத்த சமூகப் பார்வையும் சுட்டிக்காட்டுகிறார்.

தொழில் அவசியம் என்பதனையும் அதற்கான தொழிற்புரட்சியினையும், ஏழைகளைக் கரித்துண்டென எடுத்து எரிய வேண்டாம் என இந்நாவலில் கரித்துண்டினைக் கொண்டு சமூகப் புரட்சி செய்கிறார் திரு. மு. வரதராசனார்.

தனது கரித்துண்டு என்ற நாவலின் தலைப்பினை விளக்கவும் அந்த ஓவியனை அறிமுகம் செய்யவும் ஆசிரியர் பச்சையப்பன் கல்லூரியிலிருந்து பாரிமுனை வரை நடந்து சென்றால் சென்னையைப் புரிந்து கொள்ளலாம் என்று கூறி கதாப் பாத்திரத்தினையும் வழியில் காணும் காட்சிகளையும் அழகாக கண்முன் காட்டுகிறார்.

ஒவ்வொரு நாளும் வீட்டிற்குச் செல்லும் போது செவியிலும், கண்களிலும் பலவிதமான புதிய புதிய செய்திகளையும் காட்சிகளையும் சுமந்து செல்வதாகக் கூறுகிறார்.

சாலையோரத்தில் சில வெட்டிக் கூட்டங்கள் வானத்தைப் பார்த்து பேசிக்கொள்ளும் கூட்டம், இன்று தரையைப் பார்த்துப் பேசுகிறது என்ன காரணம் என்று கேள்வியுடன் அங்கு நடக்கும் நிகழ்வினை கூறுகிறார்.

ஒரு ஓவியர் தரையில் கரித்துண்டால், பெண்ணையும், குழந்தையையும் உருவம் எழுதியிருந்தது. உ.வ.சிதம்பரனாரின் தலையையும், மீசையுடன் கொண்ட முகம் வரையப்பட்டிருப்பதையும், அவ்ஓவியர் கரித்துண்டினை கையில் வைத்திருப்பதனை குழந்தை விரல் போல் காணப்பட்டது என்று பெயர் காரணத்தினை ஆசிரியர் காட்டுகிறார். ஓவியரையும் கதைத் துண்டினையும் இவ்வாறு அறிமுகம் செய்கிறார்.

ஊனமுற்றவர்களுக்கு ஏற்படும் இன்னல்கள்

ஊனமாக உள்ளவர்களின் உன்னதமான செயல்களைப் பாராட்டுபவர்களும் உண்டு. அதனை ஏளனம் செய்பவர்களும் உண்டு. இவர் படைத்த கதாபாத்திரம் ஒரு முடவர். அவர் ஓவியர் அவருக்கு ஏற்படும் இன்னல்களை கூறுகிறார். முடவர் பயணச்சீட்டு வாங்குமிடத்தில் அவரைக் காணும் பயணிகள் பிச்சைக்காரர்களின் தொல்லை என முணங்குவதையும் பயணிகளிடம் பயணச்சீட்டு வாங்க காசு தந்தால் வாங்க மறுத்து விட்டு ஏளனமாகப் பார்ப்பவர்களும், பயணச்சீட்டு வாங்கப் பைசா தந்தால் அதனைத் திரும்ப தராமல் எடுத்துச் செல்பவர்களும், பாக்கி சில்லறையைத் தராமல் செல்பவர்களையும், காசினைத் தொடக்கூட

விரும்பாத மனிதர்களையும் கண்டு மனம் நோகும் ஊனமுற்றவர்களின் மனவலியினை கூறுகிறார் ஆசிரியர்.

தொடர் வண்டியில் பயணம் செய்யும் போது அவன் பொலிவற்ற முகமும், அழுக்கான உடையையும் கண்ட பயணிகள் அவனைப் பிச்சைக்காரர் என்றும் நடைபாதையில் அமர்வதை மனச்சாட்சியில்லாமல் ஊனம் எனத் தெரிந்தும், பிச்சை கேட்காத போது பிச்சைக்காரன் என்றும், எழுந்து போ ! என்று கூறும் பயணிகளைப் பற்றியும் கூறுகிறார் ஆசிரியர்.

மனசாட்சியுள்ளவர்கள்

மனசாட்சியுள்ளவர்கள் சிலர் தன் பைசாவில் பயணச்சீட்டு வாங்கி தருபவர்களும் உண்டு. தொடர் வண்டியில் பயணம் செய்பவர் சிலர் எழுந்து ஊனமுற்றவர்களை அமரச் செய்பவர்களும் உண்டு என நல்ல மனிதர்களையும் காட்டுகிறார்.

சென்னை குடிசை வாழ் மக்களின் நிலை

சென்னை போன்ற பெரும் நகரக்குடிசைகளில் வாழும் மக்களும் அவர்களின் வாழ்க்கை முறையையும் வறுமையும், பசியும், பட்டினியுமாகவும், ஒரு வேலை உணவுண்டு உயிர் வாழும் மக்களையும் இவர்களிடம் அன்பும், பாசமும் நிறைந்தவர்கள் என்றும் இவர்கள் துன்ப நிலையினையும் கூறுகிறார்.

ஏழ்மையும் வறுமை'யும்

குடிசையில் வாழும் மக்கள் தினம் சோற்றுக்கு படும் பாடு மிகவும் கொடுமையானது. வேலையின்மையும் வேலைக்குச் சென்றால் முதலாளிகள் கூலி என்றால் நாளை வா ! என்று அனுப்புவார்கள். வெறும் கையுடன் வரும் கூலிகள் உணவிற்காக சண்டைபோடும் வறுமையும் ஒரு வேலை உணவு இருவேளை நீர் எனத் தங்கள் வாழ்நாளினை கடத்துகிறார்கள் என்றும் குடிசையில் வாழும் மக்களுக்கு உட்கார நாற்காலி தேவையில்லை. ஆனால் படுக்க பாயும் இல்லை. உடுக்க உடை ஒன்று, அதுவும் கந்தல் எனவும் அக்குடிசையில் இரவில் நிலவும், பகலில் சூரியனும் வரும் போகும் என்று குடிசையின் நிலையைக் கூறுகிறார்.

மக்கள் பாசமும் அன்பும் கூடிவாழும் கூட்டுக்குடும்ப பண்பாடும் உள்ளவர்கள்.

ஏழைகளுக்குள் போகாதவை எவை, கலை, கற்பு, அறம், கொலை, விபசாரம், கொடுமை எல்லாம் அங்கு உண்டு. செல்வர்கள் வீட்டிலும் உண்டு என கூறுகிறார் மு. வரதராசன்.

மக்கள் பிறப்பில் இரண்டு இனம் இல்லை. இருந்திருந்தால் ஒரு இனத்தை அழித்து விட்டு மற்றொரு இனத்தை மட்டும் காப்பாற்றலாம். அதற்காகச் சட்டத்தையும் போட்டு அணுகுண்டை அவர்களுக்காகப் பயன்படுத்தலாம்.

நாய்களில் உயர்ந்த சாதி நாய்களை மற்றும் காப்பாற்றி மற்றவைகளை இரக்கம் இல்லாமல் கொல்லச் சட்டம் இல்லையா? மனம் இல்லையா? அது போல் மக்களில் ஏழைகளைக் கொன்று விட்டால் அரசியல் போராட்டமே இல்லாமல் செய்யலாம். ஆனால் ஏழைகளில் நல்லவர்கள், வல்லவர்கள், கலைஞர்கள், தலைவர், விஞ்ஞானிகள், ஞானிகள் எல்லோரும் பிறக்கிறார்கள். அதனால் தான் அந்த இனத்தை அழித்து ஒழிக்காமல் இருக்க முடிகிறது என்று அறைகூவல் விடுக்கிறார் மு. வரதராசன்.

சமூகத்தின் அவலம்

ஏழைகளையும் கையேந்துபவர்களையும் ஏளனமாகப் பார்க்கும் பார்வையும், எண்ணமும் கொண்ட நாகரிக வளர்ச்சிகளுடைய பணக்காரர்கள் 'ஏழைகளையும் மனிதராக எண்ணத் தவறிய மனிதர்களைக் கண்ட மு.வ. சமூகம் அவலமானது எனக் கூறுகிறார்.

குருடன் ஒருவன் ஒரு மங்கையின் தோள்பிடித்து நடந்து செல்கிறான். அதனைக் கண்ட ஒருவர் இந்த ஆணுக்கும் உனக்கும் என்ன உறவு? பிறகு இந்தக் குழந்தை யாருக்குப் பிறந்தது? உண்மையைச் சொல் என்று கேட்கிறார்?

உடனேக் குருடன் மனம் வருந்தி ஏன் சாமி பிச்சைக்காரனை இப்படிப் புண்படுத்துகிறீர்கள் என்றான்.

சமூகத்தில் இப்படி அவலமான பார்வையும் நல்ல உள்ளம் இல்லாத மனிதர்களும் இந்தச் சமூகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

மூடநம்பிக்கை உடையவர்கள் தமிழ்நாட்டு ஆண்கள்

தமிழ்நாட்டு ஆண்கள் சீர்திருத்தம் பேசினாலும் முற்போக்கு வாதிகளாக காணப்பட்டாலும் தனக்கு வரும் பெண் மட்டும் கற்புடையவளாக இருக்க வேண்டும் என்பது தமிழ் மண்ணின் பண்பாடு. மற்ற நாட்டு ஆண்களைப் போல எண்ணிவிடக் கூடாது. இது ஒரு மூடநம்பிக்கை என்றும் ஒரு பெண்ணை அயலான் விரும்பினாள். அவள் குற்றம் செய்யாதவளாக இருந்தாலும், அவளுடைய கற்பு குறைவுடையது என்று எங்கள் இலக்கியங்கள் சொல்கிறது. பிறர் மனம் நோகாக் கற்பு வேண்டும் என்று நம்மவர் போற்றுவது வழக்கம்.

தமிழ்நாட்டு ஆண்கள் இதுபோன்ற மூடநம்பிக்கைகளக் கூறிப் பெண்களை இப்படிப் பார்க்கும் பார்வைகள் உடைய தமிழ் பண்பாட்டில் ஒரு சீர்திருத்தம் வேண்டும் என்று அறைகூவல் விடுகிறார் மு.வ.

முடிவுரை

கீழே தூக்கி எறியும் கரித்துண்டினைக் கொண்டு சமூகத்தில் நடக்கும் முறையில்லா சமுதாயத்தையும் ஏழைகள், பணக்காரர்கள் என்ற வேற்றுமை ஒழியவும், தொழிற்சாலைகள் பெருக வேண்டும் என்ற கொள்கையும். அதன் மூலம் அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கும் என்ற ஓங்கிய பார்வையும், முடவர் மூலம் தேவையில்லை என்று தூக்கி எறியும் கரித்துண்டினைக் கொண்டு சமூகத்தின் சீர்கேட்டையும், முன்னேற்றப் பார்வையும் சமூக சீர்கேட்டினையும் ஒழிக்கவே இவர் எழுத்துக்களைக் கருவியாகப் பயன்படுத்துகிறார்.

சமுதாயம் சிறக்கவே இவர் தமது தமிழ் மொழியைப் பயன்படுத்தினார் என்பதில் ஐயமில்லை. இவர் ஒரு சமூகப் புரட்சியாளரே!

119. மு. வரதராசனாரின் பார்வையில் கண்ணகி

முனைவர் ம. மகாதேவி
அவலூர்பேட்டை
விழுப்புரம் மாவட்டம்

தமிழின் முதல் காப்பியமான சிலப்பதிகாரம் உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துதலும் என்னும் கருதுகோளை மையமிட்டதாக அமைகிறது. காப்பியத் தலைவி 'கண்ணகி'யின் பண்பு நலன்களை மு.வரதராசனாரின் பார்வையில் ஆராயுமுகமாக இக்கட்டுரை அமைகிறது.

கற்பு என்னும் திண்மை

கற்புடைய மகளிர் தெய்வம் தொழுதல் பண்டைக்காலத்துத் தமிழ் மரபு அன்று கணவன் தொழுதால் அவனுடன் இருந்து தொழுதல் உண்டு தனியே இருந்து தனக்காகத் தெய்வம் தொழும் வழக்கம் இல்லை.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்"
(திருக்குறள்)

என்று திருவள்ளுவர் கூறியதும் இந்த மரபை ஒட்டியதே ஆகும். கணவனை விட்டு வேறு எவரையும் எந்தத் தெய்வத்தையும் வழிபடாத வாழ்வே கற்புடைய வாழ்வு என்பதே அக்காலத்தாரின் கொள்கை. ஒரு சிலர் அக்கொள்கையை மெல்லக் கைவிட தெய்வம் தொழும் வழக்கமும் அதனால் பயன் பெறும் நம்பிக்கையும் மெல்ல நுழைந்தன. அதனாலேயே தேவந்தி சாத்தன் கோயிலை வழிபட்டு வந்தாள். கண்ணகியும் தன்னைப் போல் துயருறுவதை அறிந்து அவளையும் வருமாறு அழைத்தாள். கண்ணகியோ,

"நமக்குத் தகாது என்று நிலையில் திரியாது அடங்கிய
சான்றோர் போல் அமைதியாகக் கூறி மறுத்துவிட்டாள்"
(பக்.96-97)

"யாவதும் மாற்றாஉள்ள வாழ்க்கையேன்"
(சிலப்பதிகாரம் கொலை 81-82)

என்று தன் நிலையான வாழ்க்கையைப் பற்றிக் கண்ணகியே கோவலனுக்குக் கூறியிருக்கிறாள் என மு.வ. குறிப்பிடுகிறார்.

தன்னலம் இழந்த தூய்மை

"தன்னலம் அறவே இல்லாமல் வாழ்ந்த காரணத்தினால் தான் கோவலன் தொலைத்த பொருளைப் பற்றி அவள் கவலைப்படவில்லை. கோவலன் தன் வாயாலேயே,

"குலம்தரு வான் பொருள் குன்றம் தொலைத்த
இலம்பாடு நாணுத் தரும் எனக்கு. "

(சிலப்பதிகாரம், கனாத். 70-71)

என்று செல்வம் எல்லாம் தொலைந்து தான் வறுமையுற்று நாணுவதைக் கூறும் போது கண்ணகி அதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. அதற்கு மாறாக கணவனுடைய கவலையைப் போக்கக் கருதி "சிலம்புகள் உள்ளன. கொள்ளும்" என்றாள். அவ்வாறு வாய்சொல்லால் கூறியது மட்டும் அல்லாமல் மனம் மகிழ்ந்து நின்றாள் புன்முறுவலுடன் மலர்ந்த முகமாய் நின்றாள்.

"நலம் கேழ் முறுவல் நகைமுகம் காட்டி
சிலம்பு உள கொணம் எம. . " (சிலப்பதிகாரம், கனாத், 72-73)

கண்ணகியின் மாறாத மனப்பான்மைக்குக் காரணமான திண்மையையே இதுவும் தெளிவிக்கிறது." (பக். 99-100)

தவ வாழ்வு

"இயல்பால் மென்மையும் கொள்கையால் திண்மையும் கொண்டு துன்பம் பொறுத்துக் கண்ணகி வாழ்ந்த தவ வாழ்வு பெரியது. மிகப் பெரியது.

கணவனுக்காகவே வாழ்ந்த வாழ்வில் அவள் மேற்கொண்ட இல்லறத்தவம் கணவன் திருந்துமாறு செய்தது. கண்ணகியின் தவம் பலித்தது. கோவலன் திருந்தினான். ஆனால் ஒரு வாள் இடையூறு செய்தது. கொலையாளியை வெட்டும் வாள் கோவலனை வெட்டியது. அந்த இருப்புக் கருவிக்கு கொலையாளியின் உடலுக்கும் கோவலனுடைய உடலுக்கும் உள்ள வேறுபாடு தெரியவில்லை. பல ஆண்டுகளாய்க் கண்ணகி செய்த தவத்தையும் அந்த வாள் அறியவில்லை. தவப்பயனாய்த் திருந்திய கோவலனுடைய பண்பாட்டையும் அந்த வாள் அறியவில்லை. பட்டை மூடிய மரத்திற்கும் பண்பாடு மிக்க மனத்திற்கும் வேறுபாடு அறியாத சிறு கருவி கயவன் உடலுக்கும் காந்தி உடலுக்கும் வேறுபாடு அறியாத சிறு கருவி பல நாள் தவப்பயனை ஒரு நொடியில் பாழாக்குவது உலகத்தின் இயற்கை.

ஆயின் எது அழிந்தாலும் என்ன அழிந்தாலும் வீரவாழ்வு அழியாப் புகழ் பெறுகிறது. கண்ணகியின் வீரம் தவவாழ்வின் பயனாக வளைத்துக் கொல்லத் துணிந்த கயவரின் வீரம் அன்று. துன்பம் பொறுத்து சாகத் துணிந்த சான்றோரின் வீரம்" (ப. 109)

சீற்றம்

"தன் துன்பத்திற்குக் காரணமாக இருந்து கோவலனைப் பிரிந்து

மாதவியையும் பழிக்காமல் வாழ்ந்த கண்ணகி, மதுரைநகரில் கோவலன் கொலையைப் பற்றி அறிந்த பின்பு மாறினாள். முதலில் அழுது புலம்பிய கண்ணகி, கணவனைக் கள்வன் என்று பழி கூறிக் கொன்ற கொடுமையை நினைத்ததும் சீற்றம் கொண்டாள்.

"பொங்கி எழுந்தாள் விழுந்தாள் பொழிகதிர்த்
திங்கள் முகிலோடு சேண்நிலம் கொண்டென
செங்கண் சிவப்ப அழுதாள் கேள்வனை
எங்கணா என்னா இணைந் தேங்கி மாழ்குவாள்"

(சிலப்பதிகாரம், துன்ப. 30-33)

இதுவே அவள் துயரத்தில் அழுது ஏங்கிய நிலை. மக்கள் எல்லோரும் கோவலனைக் கள்வன் என்று பழிப்பதை எண்ணியதும் மன்னவன் செய்த தவறு அவளுடைய நெஞ்சில் கொதிப்பு எழச் செய்தது.

"மன்பதை அலர் தூற்ற மன்னவன் தவறு இழைப்ப
அன்பனை இழந்தேன்யான் அவலம் கொண்டு அழிவலோ
மறனொடு திரியும்கோல் மன்னவன் தவறு இழைப்ப
அறனெனும் மடவோய்யான் அவலங்கொண்டு அழிவலோ?
செம்மையின் இகந்தகோல் தென்னவள் தவறு இழைப்ப
இம்மையும் இசைஒரீய் இணைந்தேங்கி அழிவலோ?"

என்று படிப்படியாக அவளுடைய அழுகை சீற்றமாக மாறத் தொடங்கியது. மன்னவன் தவறு செய்ததைக் கண்டும், கைம்மை (விதவை) மகளிரைப் போல் பொறுமையோடு அழுது அழிவது தகுமா என்று எண்ணிக் கொதித்தாள்.

"புகழ் நிறைந்த குடும்பத்துப் பெண்ணாக இருந்தும் அந்தப் புகழைப் பறிகொடுத்து விட்டு, பழியைக் சூடிக்கொண்டு அழிவேனா" என்று அவள் எண்ணிய எண்ணமே அவளுடைய பொறுமையை அடியோடு மாற்றிவிட்டது. தகைசான்ற சொல்லைக்காக்கும் கடமைப்பொறுப்பு அவளுடைய தவத்தைக் கலைத்தது. பிற உயிர்க்குத் துன்பம் செய்யாத தவப்பகுதியைக் கைவிட செய்தது.

"கதிரவனே ! என் கணவன் கள்வனா? எல்லாம் பார்த்துக் கொண்டு செல்லும் நீயே சொல்" என்று முறையிட்டபோது அவளுடைய செவியில் விழுந்த ஒரு குரல் அந்த மாறுதலுக்குத் தூண்டுகோல் ஆயிற்று. "இந்த ஊர் நெருப்புக்கு இரையாகும்" என்றது ஒரு குரல். ஊரெல்லாம் சுற்றி அரற்றிய பிறகும் கணவனுடம்பைக் கண்டு அழுது புலம்பிய பிறகும்.

பாண்டியனிடம் சென்று வழக்குரைத்து வென்ற பிறகும், அந்தக் குரல் அவளுடைய நினைவை விட்டு நீங்காமல் நின்றது. அதனால் கோப்பெருந்தேவியைப் பார்த்து வஞ்சினம் கூறியபோது, அந்தக் குரலை மறவாமல் "யான் பத்தினியே ஆனால் அரசரோடு மதுரையையும் அழிப்பேன்" என்றாள்.

"பட்டாங்கு யானும் ஓர் பத்தினியே யாமாகில்
ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையையும்"

(சிலப். வஞ்சின. 36-37)

இவ்வாறு சீற்றம் கொண்ட நிலையில் தான் பிற உயிர்க்குத் துன்பம் செய்யாத நோன்பைக் கைவிட்டவள் ஆனாள். மதுரையையும் அழிக்க வஞ்சினம் பூண்டாள் (பக். 103-104)

தவக்கோலம்

"வாழ்க்கையின் தொடக்கத்தில் ஒருயிராய் ஒன்றுபட்டு வாழ்ந்த போது ஆடம்பரமும் செல்வச் செருக்கும் இல்லாத வகையில் இளங்கோவடிகள் கண்ணகியை வருணித்த காரணம் அவருடைய நெஞ்சில் குடிகொண்ட வழிபாட்டு உணர்வே ஆகும். அதனால் தான் கண்ணகியின் பிறந்த குடும்பமும், புகுந்த குடும்பமும் மிகப் பெருஞ்செல்வம் வாய்ந்த போது தன் அரண்மனைச் செல்வ வாழ்வின் அனுபவத்தையும் பயன்படுத்தாமல் விட்டுத்துறந்தார். ஆயின் அலங்காரம் துறந்த கண்ணகியின் தவக்கோலத்தை வருணிப்பதில் அவருடைய ஆர்வம் விளங்குகிறது.

"அஞ்செஞ் சீறடி அணிசிலம்பு ஒழிய
மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்
கொங்கை முன்றி குங்குமம் எழுதான்
கொடுங்குழை துறந்து வழந்துவீழ்காதினள்
திங்கள் வண்முகம் சிறுவியர் பிரிய
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்
பவள வாள் நுதல் திலகம் இழப்பத்
தவள வாள்நகை கோவலன், இழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி. . ."

(சிலப்பதிகாரம், அந்தி, 47-57)

இவ்வாறு அணிகலன்களைத் துறந்து அலங்காரங்களையும் இழந்து கண்ணகி விளங்கிய தவக்கோலத்தை எடுத்துரைப்பதில் இளங்கோவடிகள் ஆர்வம் கொள்கிறார்". எளிமையும் தூய்மையும் விளங்க இவ்வாறு கண்ணகியைப் பற்றிக் கூறும்போது சேரர் அரண்மனையின் செல்வ வாழ்வை விட்டு வெறுத்துக் குணவாயில் கோட்டத்துத் தவ நெறியை

விரும்பி வாழும் அவருடைய அருள் நெஞ்சமே விளங்குகிறது. அந்தத் துறவு நெஞ்சமே வழிபாட்டு உயர்வோடு கண்ணகியின் தவக்கோலத்தை எடுத்துரைப்பதில் ஆர்வம் கொள்கிறது. தாம் எழுதிய நூலுக்குப் பெயர் வைக்கும் போதும் கண்ணகியின் காலில் விளங்கிய சிலம்பைக் கண்டு வழிபடும் உணர்வு விளங்க சிலப்பதிகாரம் என்று பெயர் அமைத்தார்" (பக். 118-119)

கலைக்கோயில்

கற்பின் ஞாயிறு கண்ணகி தமிழகத்தின் கீழ்த்திசையில் தோன்றிக் கற்பொளி பரப்பி விளங்கியது. சோழ நாட்டின் தலைநகராகிய காவிரிபூம்பட்டினம் திருமண வாழ்த்தொலியைக் கேட்டது. தமிழகத்தின் நடுவே அந்த ஞாயிறு கடுமையாய்க் காய்ந்தது. பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரை சீற்றம் மிக்க வீரவுரையைக் கேட்டது கண்ணகியின் புகழைச் செங்குட்டுவன் கல்லிலே நாட்டிக் கொயில் எழுப்பினார். இளங்கோவடிகள் கலையிலே அமைத்துக் காவியம் இயற்றினார். தமிழ் மக்கள் அரசன் எழுப்பிய கற்கோயிலை மறந்தாலும் அடிகள் இயற்றிய காவியக் கோயிலை மறவாமல் போற்றி வருகின்றனர். (119)

120. மு. வ. வின் வழிபாட்டு நிலை

ஜி.பி. தாட்சாயிணி
முனைவர் பட்ட ஆய்வாளர்
சமூக அறிவியல் மொழிப்பள்ளி
விஜடி பல்கலைக் கழகம்
வேலூர் - 6322014.

மு.வ எழுதிய மண்குடிசை நாவல் இவ்வாய்வுக் கட்டுரையின் எல்லையாக எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்நாவலில் வரும் மெய்யப்பன், மெய்கண்டார், நரேந்திரர், குமரவேல் முதலானப் பாத்திரங்கள் வாயிலாக வழிபாட்டுச் செய்திகளை உணர்த்தியுள்ளார் இந்நால்வருள். மெய்கண்டார், நரேந்திரர் மூலம் ஆன்மீகச் சிந்தனைகள் வெளிப்படுகின்றன. பேராசிரியர் நரேந்திரர் மூலம் வழிபாட்டின் பயன்பாடு குறித்துப் பின்வருமாறு விளக்குகிறார்.

> *"மனிதன் உடம்போடு வாழ வேண்டும், மனத்தோடு வாழ வேண்டும். மின்சாரம் முதலிய சக்திகளைக் கண்டுபிடித்து வசதிகளைப் பெருக்குவது மட்டும் போதாது. நோய் குறைந்த உடம்பும், கவலை குறைந்த மனமும் பெறுவதற்கு வழியினைத் தேட வேண்டும். முன்னதற்காகவே ஆராய்ச்சி, பின்னதற்காகவே வழிபாடு. வழிபாட்டால் பயன் உண்டு. மனம் அமைதி பெறுகின்றது. வலிமை பெறுகின்றது"*[1]

என்பது மு.வ.வின் கருத்து.

மனமும் வழிபாடும்

மனத்திற்கும் வழிபாட்டிற்கும் உள்ள உறவை மு.வ. மெய்கண்டார் மூலம் விளக்கியுள்ளார். அவை வருமாறு,

> மனம் ஒரு நல்ல குதிரை. குதிரை படுத்திருக்கப் பிறந்தது அல்ல. நிற்கும் ஓடும். ஓடுவது தான் அதற்கு இயற்கை. அதைப் படுத்திருக்கக் காணமுடியாது. எப்போதேனும் ஒரு வேளை முதுகை மண்ணில் சாய்க்கும். அது சில நொடிப்பொழுதுதான் மண்ணில் சில முறை புரண்டு உடனே எழுந்து விடும். மனமும் ஒரு நொடிப்பொழுது நிற்கும். அது போதும். அதற்கு நல்ல ஓட்டம் வேண்டும். நல்ல வழியில். செலுத்துங்கள். நன்றாக ஓட்டும். மூலையில் கண்களை மூடி உட்காரும் போதும் நல்ல எண்ணங்களை எண்ணிக் கொண்டிருக்கட்டும். நிற்க வேண்டாம். கடவுளின் ஆணை அது என்று எழுதினார்[2]

கேசவராயன் மூலம் வழிபாடு

இந்நாவலில் வரும் மெய்யப்பனால் தம்மைச் சிறைக்கு அனுப்பிய கேசவராயனின் பகை உணர்வை மறக்க முடியவில்லை. இதனை மெய்கண்டார் உணர்ந்தார். மெய்ப்பனார் ஊருக்குத் திரும்பியதும் தான் கொடுக்கும் கடிதத்தை ஒரு நாள் முழுமதி அன்று பிரித்துப் படிக்குமாறு சொல்கிறார். அதில் இடம் பெற்றுள்ள செய்திகள் வழிபாடு குறித்து அமையப் பெற்றுள்ளன. அவை வருமாறு,

> "எல்லோரும் உலகத்தைத் திருத்த முயல்கிறார்கள். உள்ளத்தைத் திருத்த அவ்வளவு முயல்வதில்லை. செய்ய முடிந்ததைச் செய்யாமல் முடியாததற்காக உழைத்துச் சலிப்பும் வெறுப்பும் அடைகிறார்கள் நீ மனைவி மக்களைத் திருத்த வேண்டாம் என்று சொல்லவில்லை. அதற்காக முயற்சி செய் ஆனால், தோல்வி கண்ட போது அவர்களை வெறுக்காதே. உலகத்தில் ஒரு பகுதி அவர்கள் புத்தர் எவ்வளவு திருத்தினார்? மற்றப் பெரியவர்கள் எவ்வளவு திருத்தினார்கள்? நாம் எவ்வளவு திருந்த முடியும்".

திருந்தக் கூடியவர்களைத் தான் திருத்த முடியும். வீட்டினுள் மனைவியைத் திருத்த முடியாமல் பாகலாம். திருந்தக் கூடியவர்களே மட்டுமே திருத்த முடியும். கிளிக்குத் தான் பேசக் கற்பிக்க முடியும். குருவிக்குக் கற்பிக்க முடியுமா?

அதனால் குருவியை வெறுக்கக்கூடாது. திருத்த முடியாதவர்களும் கடவுளின் படைப்பே, அவரே அப்படி படைத்தாரோ? அவர் நோக்கத்தை உணர முடியாவிட்டாலும், பணிவது கடமை. சட்டத்திற்குப் பொருள் தெரியாவிட்டாலும், அதற்குப் பணிந்து நடப்பது கடமை.

> *"கடவுளின் நோக்கத்தை உணர்ந்து, அதற்கேற்ப நடப்பதுதான் உண்மையான ஆத்திகம், உண்மையான வழிபாடு. அதற்கு மாறாக நடப்பது தான் உண்மையான நாத்திகம். ஆற்றின் வழியே செல்லும் படகு நன்மை பெறும். எதிர்த்துச் செல்லும் படகு துன்பம் பெறும், போராடும் என்கிறார் மு.வ."* [3]

மனத்தை நல்வழிப்படுத்தி உள்ளன்புடன் வணங்குவதுதான் வழிபாடாகும். இங்கு ஆத்திகம், வழிபாடு, நாத்திகம், மனம் இவற்றிற்குள்ள உறவினை மு.வ. தெளிவாக்கியுள்ளார்.

செபமாலை வழிபாடு

வழிபாட்டில் செபமாலை 'குறித்து மு.வ. கூறியுள்ள கருத்தினை,

மெய்கண்டார் பாத்திரப் படைப்பின் வாயிலாகப் பின்வருமாறு வெளிப்படுத்துகிறார்.

> *"ரயிலில் போகும் போது சிறு பிள்ளைகளுக்கு ஏதாவது வேலை வேண்டும். இல்லையானால் பெற்றோரைத் தொல்லைப் படுத்துவார்கள். அதற்காக, ரயில் பாதையை அடுத்த கம்பங்களை எண்ணச் சொல்வார்கள், அப்படி மனத்துக்கு ஏதாவது வேலை கொடுப்பதுதான் செபம். அதனால் மனம் திருந்திவிடாது, உயர்ந்து விடாது. அதையே கடவுள் வழிபாடு நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வது தவறு"* [4]

மக்களை ஏமாற்றும் கண்மூடித்தனமான வழிபாட்டில் மெய்கண்டாருக்கு நம்பிக்கை இல்லை. உண்மையான அன்பு நெறிதான், கடவுள் விரும்பி ஏற்றுக்கொள்ளும் வழிபாடு எற்பது மு.வ.வின் கருத்தாகும்.

தொகுப்புரை

இக்கட்டுரையில் வழிபாடு குறித்த மு.வ.வின் கருத்து மண்குடிசை என்னும் நாவலில் வழிபாடு மனமும் வழிபாடும், கேசவராயன் மூலம் வழிபாடு, செபமாலை வழிபாடு ஆகியன விளக்கப்பட்டுள்ளன.

அடிக்குறிப்புகள்

1. மு.வ. மண்குடிசை, ப.459
2. மேற்படி, ப.226
3. மேற்படி, பக். 505-506
4. மேற்படி, ப.224

௰௨. மு. வ. வின் வாழ்க்கை வரலாறு

பி.சி. ஜெசுதா
தமிழ்ப் பேராசிரியர்
த.கி.மு. மகளிர் கல்லூரி (மாலை)
சாய்நாதபுரம்
வேலூர்.

மு.வ. அறிமுகம்

முனைவர் மு.வ. நிறையப் படித்தவர், படைத்தவர். தமிழ் மொழியில் வளர்ச்சிக் கூறுபாடுகளுக்கு இவரது சிந்தனை வழிகாட்டியது. இன்றைய இலக்கிய உலகில் மு.வ. என்னும் பெயர் முதலில் உச்சரிக்கப்பட வேண்டிய முவ மந்திரம். எல்லோரும் எழுதுகிறார்கள். ஆனால், எழுத்தாளர்கள் சிலரே தம் கொள்கைகளையும் கருத்துக்களையும் தெரிவிக்கும் பலமானப் 'எழுத்து' என்று திடமாக நம்புகிறவர்கள். இந்த வரிசையில் மு.வ. தம்மைச் சேர்த்துக் கொள்ள விரும்பினார்.

பேசுவது என்பது நீரில் எழுதுவது போல, எழுதுவது என்பது நேரில் பேசுவது போல, எனவேதான் மு.வ. அதிகம் பேசாமல் எழுதினார். தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் 'குரல்' கொடுத்தார் என்பதை விட 'விரல்' கொடுத்தார் என்பதே பொருந்தும். இலக்கணம் மீறாத - இலக்கிய மரபு மாறாதத் தமிழ் அறிஞர்கள் தமிழைத் தனி உடைமையாக்கிய காலம் ஒன்றிருந்தது. அது 'பண்டிதர் தமிழ்' என்றே ஒரு காலத்தில் பரவலாகப் பேசப்பட்டு வந்தது. புதுமையைப் பாராட்டும் முறையையும் தமிழைக் குறுகிய எல்லைக்குள் வளைத்து விட்டிருந்தன. அந்தப் 'பண்டிதர் தமிழைப்' படி இறங்கி வரச்செய்த பெருமை மு.வ.விற்கும் உரியது.

> *"தமிழ்ப் பேராசியர்களெல்லாம் புதிய இலக்கிய வகைகளை மாற்றாந்தாய்க் குழந்தைகளாகக் கருதிப் புறக்கணித்த வேளையில், அவற்றைப் பரிவுடன் அணுகி அன்பு காட்டியவர் பேராசிரியர் டாக்டர் மு.வ."* [1] *என்பர்.*

குடும்ப வாழ்வு

அவர், அருமை அன்னை அம்மாக் கண்ணம்மாளுக்கும் அறிவில் சிறந்த தந்தை முனுசாமி அவர்களுக்கும் செல்லப் பிள்ளையாக 25-04-1912 ஆம் ஆண்டு வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரிலே பிறந்தார். அவரது தாய்வழிப்பாட்டி அவரை அன்புடன் வளர்த்தார். முதலில் அவருக்கு வழங்கிய பெயர் திருவேங்கடமாகும். தாத்தாவின் பெயரை இடுதல் என்னும் குடும்ப மரபுப்படி வழங்கிய பெயரே வரதராசன் என்பதாகும். அவர் 1935 ஆம் ஆண்டு தம் மாமன் மகள் இராதா

அம்மையாரை மணந்தார். அவருக்கு ஆண் மக்கள் மூவர் உள்ளனர். அவர்கள் முறையே திருநாவுக்கரசு, நம்பி, பாரி ஆகியோர் ஆவர்.

கல்வி

அவர் வேலத்திலும், வாலாசாவிலும் தொடக்கக் கல்வியைக் கற்றார். உயர்நிலைப்பள்ளிப் படிப்பை அவர் திருப்பத்தூரில் பயின்றார். அவர் முதுருகைய முதலியாரிடம் தமிழ்க் கற்றுப் புலவர் படிப்பை முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சிப் பெற்றார். பின்னர், அவர் 1935 ஆம் ஆண்டு தமிழ்ப் புலவர் தேர்வு எழுதிச் சென்னை மாநிலத்திலேயே முதலாவதாக வந்து, திருப்பனந்தாள் பரிசான ரூ. 1.000.:.- த்தைப் பெற்றார். அவர் 1939ல் பி.ஓ.எல், 1944ல் எம்.ஓ.எல்., பட்டமும் பெற்றார். 1972 ஆம் ஆண்டில் அமெரிக்காவிலுள்ள ஊஸ்டர் கல்லூரி அவருக்கு இலக்கியப் பேரறிஞர் (டி.லிட்) என்ற சிறப்புப் பட்டத்தை நல்கிப் பெருமைப்படுத்தியது. அமெரிக்கப் பல்கலைக் கழகம் ஒன்றில் டி.லிட்., என்னும் சிறப்புப் பட்டம் பெற்ற முதல் தமிழறிஞர் மு.வ.வே. ஆவார்.

கல்விப்பணி

இவர் 1928ல் முதன் முதலாகத் தாலுக்கா அலுவலகத்தில் எழுத்தாளராகப் பணிபுரிந்தார். 1935ஆம் ஆண்டு முதல் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். 1939 முதல் 1944ம் ஆண்டு வரை தமிழ் விரிவுரையாளராகப் பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றினார். 1945ம் ஆண்டு அக்கல்லூரியிலேயே தமிழ்த்துறைத் தலைவர் ஆனார். இடையே ஓராண்டு சென்னைப்பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துணைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அறிஞர் ரா.பி சேதுப்பிள்ளை அவர்களின் மறைவுக்குப்பிறகு 1961 முதல் 1971 வரை சென்னைப்பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றினார். 1971 முதல் 1974ம் ஆண்டு வரை மதுரைப்பல்கலைக் கழகத்தில் புகழ்மிக்க, இணையற்ற துணை வேந்தராகப் பணிபுரிந்தார்.

மு.வ. பங்கேற்ற துறைகள்

மு.வ. பல்வேறு துறைகளில் ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் சென்னை, வெங்கடேசுவரா, அண்ணாமலை ஆகிய பல்கலைக்கழகங்களின் பேரவை (செனட்) அங்கத்தினராக இருந்தார். மேலும், கேரளம், மைசூர், உஸ்மானியா, பெங்களூர், ஆந்திரா, டில்லி, கேம்பிரிட்ஜ், மதுரை முதலிய பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டக் குழுவில் இருந்தார். இலங்கை, மலாயா, காசி, உத்கல் முதலிய பல்கலைக்கழகங்களோடு தொடர்பு கொண்டிருந்தார். இவர் புதுடில்லியில் உள்ள சாகித்திய அகாதமி, பாரதிய ஞானபீடம், தேசியப் புத்தகக்குழு, இந்திய மொழிக்குழு,

சென்னைப்பல்கலைக்கழகம் தயாரித்த ஆங்கிலம் தமிழ் அகராதிக் குழு, நாட்டுப்புறப் பாடல்களும் நாட்டுப்புற நடனங்களும் பற்றிக் குழு முதலியவற்றில் அங்கம் வகித்தார்.

தோற்றப்பொலிவு

எழில் மிக்க எடுப்பானத் தோற்றம், புன்னகை பூத்.தப் பொலிவோடு விளங்கிய முகம், அறிவு முதிர்ச்சிக்கு அடையாளமான அகன்ற நெற்றி, அன்பும் அறிவும் சுழல் விளக்குப்போல் சுடர்விட்டுப் பொங்கும் கண்கள், எடுப்பான கூரிய மூக்கு, உடல் நலம் காட்டும் அழகானப் பற்கள், நீண்ட மெல்லிய கைகள், எண்ணங்களை எல்லாம் எழுத்தாக்கிய பரந்த பண்பட்ட நெஞ்சம் உடையவராக இவர் விளங்கினார்.

பன்மொழிப் புலமை

இவர் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி முதலிய மொழிகளைக் கற்றுப் பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தார்.

உலகம் சுற்றிய முதல் தமிழ்ப் பேராசிரியர்

இவர் ரஷ்யா, மலேசியா, சிங்கப்பூர், பாரீஸ், இலங்கை, இங்கிலாந்து, பிரான்சு, ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி, கிரேக்கம், எகிப்து, அமெரிக்கா முதலிய நாடுகளை எல்லாம் சுற்றிப்பார்த்த முதல் தமிழ்ப் பேராசிரியராகத் திகழ்ந்தார்.

மு.வ.வின் இலக்கிய வகை

மு.வ. வாழ்க்கை வரலாறும் எழுதியவர். அவ்வகையான நூல்களிலும் தம்முடைய நோக்கத்தை மாற்றிக் கொள்ளாமல் குறிப்பிட்டவரின் வாழ்க்கைச் செய்திகளைச் சுவையாகச் சொல்லிச் செல்லுகிறார். "இதோ இந்தக் கல்லை எறிகிறேன் எவ்வளவு உயரத்தில் போகிறது பார், நல்ல வலுவோடு எறிந்தால் அந்தக் கல் திரும்பியே வராது அப்படியே உயரத்தில் ஆகாயத்தில் போய் விடும். நான் எறியட்டுமா"[3] இதுபோல அமைந்த அந்நூல்களும் ஒரு கதைக்கு அழைத்துச் செல்வது போல் நம்மை உணரச் செய்கின்றன. தவறானக் கருத்து மாற்றப்பட வேண்டியது. தாழ்ந்த சமுதாயம் மாற்றம் பெற வேண்டியது என்ற சிந்தனையில் மு.வ. தம் எழுதுகோலைத் தொட்டார். அவர் எண்ணங்கள் உலகத்தில் எல்லைக் கோட்டைத் தொட்டன. அவ்வடிப்படையில் நாவல், சிறுகதை, நாடகம், ஆராய்ச்சி, வாழ்க்கை வரலாறு போன்ற துறைகளில் ஈடுபட்டு வெற்றி ஈட்டிய இவர் முயன்று விட்டுவிட்டது கவிதையே. 'கைவராத முறையாக, மு.வ.வே கருதியது கவிதையைத்தான்"[4] தமிழ்

இலக்கிய வரலாற்றில மு.வ.வின் நூல்களுககு மறக்க முடியா காலக் களிப்பு உண்டு. மு.வ.வின் ‘பெண்மை வாழ்க’ என்னும் இந்நூல் ஒரு வரையறைக்கு உட்பட்டது. இவரது படைப்புகளை நாடுவோர் பலர். கட்டுரைகளில் கவனம் செலுத்துவோர் பலர். இந்நூலை உளநூல் தத்துவம் கொண்டு அணுகியுள்ளார். அவர்தம் கருத்து வெளியீடு பல்வேறு இலக்கிய வகைகளில் அமைந்ததற்கு இதுவே காரணம். மு.வ. ஓர் சமுதாய பற்றாளர். பெண்களுக்கு உரிமை குரல் கொடுத்தவர்.

அறிவன

தமிழ் மீது பற்று கொண்டவர். தமிழ் இலக்கியத் துறையில் தலையாய தொண்டாற்றியவர் என்று அவருக்குச் சுதந்திரப் பத்தாவது ஆண்டு விழாவின் போது சென்னை அரசாங்கம பாராட்டி நடராசர் உருவம் பொறித்த ஒரு செப்புக் கேடயத்தினை 15.08.1957 அன்று பரிசளித்தது. அவருடைய நூல்கள் உயிரோட்டமும் புகழும் கொண்டவை. தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, சிங்களம், ஆங்கிலம் முதலிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டன. உயிரோவியங்கள் பல படைத்துப் பிறர். உள்ளங்களைக் கவர்ந்த இவரது உயிர் 10-10-1974ம் ஆண்டு சென்னையில் மறைந்தது.

அடிக்குறிப்புகள்

1. தண்டாயுதம், இரா, மு.வ.வின் இலக்கியங்கள், ப.24
2. மு.வ. மொழியியல் கட்டுரைகள், ப.106
3. மு.வ. காந்தியண்ணல், ப.5
4. செல்வராசன்.ம, மு..வ.வின் கடித இலக்கியம், ப.263

௨௨. மு. வ. வின் படைப்புகளில் புரட்சிப் பொறிகள்

மோ. உமாமகேஸ்வரி
உதவிப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அரசு கலைக் கல்லூரி
திருவண்ணாமலை - 606 603.

முன்னுரை

தமிழ் இலக்கிய உலகில் மு.வ. என்னும் பெயர் ஈரெழுத்து ஒரு மொழியால் நிலைத்து விளங்குகிறது. அவரது அறிவொளி வீசும் முகத்தில் அமைதியும் பூத்துக் குலுங்கும். மு.வ. என்ற அறிஞரின் தோற்றத்தைக் கண்டவர்கள் அவரை ஒரு புரட்சியாளராய்க் கற்பனையும் செய்திட மாட்டார்கள். சோழர் வரதராசனார் ஒரு கலைக்கழகம் பொறுமைக்கு உறையுள். அமைதிக்கு நிலைக்களன் புரட்சி அவர் நெஞ்சில் பொங்குகிறது வாயில் வழிகிறது கையில் நிகழ்கிறது' என்பார் திரு.வி.க. மு.வ. தலைசிறந்த சிந்தனையாளர். அவரது சிந்தனைகளில் உலகளாகிய புரட்சிப் பொறிகள் புனலாய்ப் பாய்ந்து ஓடுவதை அவரது நூல்களைப் படிப்போர் உணரலாம். மு.வ. படைப்பாளராய் அறிமுகமான காலத்தில் நாடு விடுதலை பெற்று விட்ட போதும் மக்கள் பல்வேறு சிக்கல்களைச் சந்திக்க வேண்டிய நிலையில் இருந்தனர். இந்த நிலையில் சமூகத்தைப் பற்றி சிந்தித்த அவரது மனதில் உருவான எண்ணங்களில் புரட்சி பல வடிவங்களில் வெளிப்பட்டன. ஆனால் புரட்சி என்பது மனிதனில் புறத்தோற்றத்தில் வெளிப்படுவதில்லை. அவர்தம் நூல்களில் புரட்சிகரமான கருத்துக்கள் கனல்களைத் தெரிப்பதை இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.

கல்வி, தேர்வு முறைகளின் மாற்றம்

மு.வ. கல்வியிற் சிறந்த பேரறிவாளர். தமது வாழ்க்கையின் பெரும்பகுதியை மாணவர்களிடையே கழித்த பேராசிரியர் எனவே, மாணவர்களின் கல்விச் சிக்கல்களையும் வாழ்க்கைச் சிக்கல்களையும் அவர் நன்கு உணாந்திருந்தார். இன்றைய கல்வி இளைஞர்களின் உள்ளத்தையும் உடலையும் கெடுப்பதாக கருதினார். இந்தக் காலத்தில் இளைஞர்கள் கற்கும் கல்வி ஏழைகளிடம் இரக்கத்தை உண்டாக்குவதும் இல்லை, சமுதாயம் இவர்களை இந்த நிலையில் வைத்திருக்கிறதே என்ற ஆத்திரத்தை உண்டாக்குவதும் இல்லை. மற்றவர்கள் எந்த நிலையில் இருந்தாலும் தான் மட்டும் நன்றாக வாழவேண்டும் என்று தன்னலத்தையே இக்காலத்து கல்வி கற்பிக்கிறது[2] என்கிறார். கல்வியின் பயன் ஏற்றத் தாழ்வுகள் இல்லா சமத்துவ சமுதாயம் உருவாக்குவதாக அமைய வேண்டும்

என்று எதிர்பார்க்கின்ற புரட்சி உள்ளம் மு.வ. விடம் வெளிப்படுவதை உணரமுடிகிறது.

அதிக மதிப்பெண் அறுவடை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை மட்டுமே இன்றைய கல்விமுறை விதைக்கிறது. அதனால் தேர்வுக்கு முதன்மை இடம் தரப்படுகிறது. தேர்வுதான் கல்வியின் அளவுகோளாக விளங்குகிறது. அத்தேர்வு முறையில் உள்ள குறைபாட்டை நன்கு ஆராய்ந்த மு.வ. "வாழ்க்கைக்கு நேர்முகமாகவோ மறைமுகமாகவோ பயன்படாமல் றினைவுக்குச் சுமையாக உள்ளவற்றை ஏன் இப்படித் தேர்வுக்கு வைத்து வற்புறுத்துகிறார்களோ?"[3] என்ற வினாவினை எழுப்பி சிந்தனையைத் தூண்டுகிறார்.

வாழ்க்கைக்குப் பயன்படும் வகையில் கல்வி முறையில் மாற்றம் ஏற்பட விரும்பிய மு.வ. "இந்தக்கல்வி முறையை மாற்ற வேண்டும். தேர்வு முறையையே மாற்ற வேண்டும்˙ வாழ்க்கையோடு ஒட்டி கல்வி வேண்டும்˙ நூல்களைப் பக்கம் பக்கமாகப் புரட்டும் கல்விக்கு மதிப்புக் குறைய வேண்டும்"[4] எனக் கருத்தளிக்கிறார். கல்வித் துறையில் மாணவர்களுக்குத் தேர்வு வேண்டுமா வேண்டாமா என்பது இன்றைய சிக்கல். தேர்வைப் பொறுத்த வரையில் இன்றுள்ள முறையில் மாற்றம் தேவை என்பது மு.வ. வின் கருத்து.

சமூக - அரசியல் மாற்றம்

சமுதாய பொருளியலார் அரசியல் துறைகளில் முழுமையான மாற்றம் வேண்டும் எனக் கருதிய மு.வ. தமது எழுத்தாற்றலை அவற்றிற்குரிய கருவியாகப் பயன்படுத்தியுள்ளனர். கோபம் அறிவைக் கொல்லும் என்பதால் அதைத் தவிர்ப்பதில் கவனமாக இருந்த மு.வ இச்சமூகத்தில் நடைபெறும் ஊழல்களையும் கொடுமைகளையும் கண்டு கொதித்துப் போய்

"பச்சைப் பிணங்கள் தெருவில் தொங்க வேண்டும்
அப்போது தான் இந்த நாடு உருப்படும்"[5]

என பொங்கியெழுகிறார். இதை வெறும் கோப உணர்ச்சியாக மட்டும் கருதாமல் அறிவின் முதிர்ச்சியில் வெடித்த அறம் எனக் கருதலாம்.

"தனிவாழ்க்கையில் பெரும்பாலும் பழைய நெறி நல்லது என்று அனுபவத்தால் அறிந்து போற்றுகிறேன். அதுவும் பெரும்பாலும் தான் முழுமையும் அல்ல. ஆனால் சமுதாய, பொருளாதார, அரசியல் வகைகளில் பெரும் சீர்த்திருத்தம் வேண்டும் இவ்வகைகளில் முன்னோர்களின் வழியில் பல முறைகள் உண்டு. அதுவும் விஞ்ஞான வளர்ச்சிக்குப் பிறகு முன்னோர்களினி வழி நமக்கு உதவாததாகி விட்டது. அதை மாற்றி

அமைக்க முடியாத காரணத்தால் தான் இந்தத் துறையில் ஊழல்கள் பெருகிக் கொண்டு போகின்றன".[6] என்று கூறுவதன் மூலம் அரசியல், பொருளியல், சமுதாயத் துறைகள் உடனே மாற்றம் நிகழ வேண்டும் எனச் சுட்டிக்காட்டுகிறார்.

மக்களாட்சி முறையில் மாற்றம்

அரசியலில் மக்களாட்.சி முறையே சிறந்தது எனக் கருதுபவர் மு.வ. உண்மையான மக்களாட்சி முறை இன்று நடைமுறையில் நாம் அனுபவிக்கும் ஒன்று அல்ல என்கிறார். இன்றைய அரசியல் உலகில் நடைபெறும் அளவற்ற ஊழல்களை வன்மையாகக் கண்டிக்கிறேன் கட்சி ஆட்சியும் தேர்தல் முறையும் உண்மையான மக்களாட்சிக்கு எதிரிகள். இந்தக் கருத்து நமக்கு வியப்பை வழங்கலாம். "இன்று கட்சியின் பெயரால் தனிமனித உரிமையைப் பறித்துப் பெரும்பாலோரைக் கைகாட்டி மரங்களாக்கி அவர்களுடைய மனச்சான்றைக் கொல்வதால் வல்லர்கள் மேல்நிலை பெறலாம. ஆனால் மக்களின் பொது வாழ்க்கை குலைகின்றது. நாடுகள் வாழவில்லை கட்சிகளை வாழமுடிகின்றது"[7] என குற்றம் சாட்டும் மு.வ நல்லவர்கள் இந்தத் தேர்தல் முறையிலர் வெற்றிபெற முடியவில்லை என வருந்துகிறார். நல்லவர்கள் அரசியலில் ஓங்கிட,

> *"மனச்சான்றை வளர்த்து ஆக்க வேலையை வளர்க்கும்*
> *தகுதித் தேர்தல் உலகமெலாம் ஓங்க வேண்டும்"*[8]

என விரும்புகிறார்.

> *"ஒரு முறை தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு தேர்ந்தெடுத்த*
> *மக்கள் விரும்பாவிட்டால் அவரை அப்பதவியிலிருந்து '*
> *திரும்பி வருமாறு செய்யும் உரிமையும்"*[9]

மக்கள் பெறவேண்டும். இந்நாட்டில் முழுமையான புரட்சி ஒன்று ஏற்பட்டால் ஒழியச் சிக்கல்கள் தீர வழியில்லை. இந்தத் தெளிவான உரிமை மக்களுக்குத் தரப்பட்டால் தான் "கூலி ஆட்களை மாற்றுவது போல் அரசியல் தலைவர்களை எளிதில் மாற்றிக்கொள்ளும் முற்போக்கு மக்களுக்கு அமைந்திருக்கும்"[10] என்று மு.வ. கருதுகிறார். மக்களை ஏமாற்றித் தலைவர் ஆனவர்களெல்லாம் வெளிச்சத்தில் வெளுத்திடும் வழியினை மு.வ. காட்டியுள்ளார்.

சமயச் சிந்தனைகள்

சமயங்கள் மனித வாழ்க்கைக்குத் துணை நிற்கின்றனவா என வினா இன்று எழுந்துள்ளது. உண்மையான சமயம் வாழ்க்கைக்குப் பயன்படும் என்னும் கருத்துள்ளவர் மு.வ. மக்களோ சடங்குகளே சமயம் என மயங்குகின்றனர். புறவேடங்களை நம்பி ஏமாந்து போதல் கூடாது

என்பது இவர் கருத்து. "இது கடவுளின் குடும்பம் என்று எண்ணித் தன்னைச் சிறிதளவாவும் மறந்து மற்றவர்களுக்கு உதவத் தெரிந்தவன் ஆத்திகனாம். எந்நேரமும் தன்னைப் பற்றியே எண்ணித் தற்பெருமையுடன் வாழ்கிறவன் நாத்திகனாம்"[11] ஆத்திகன், நாத்திகன் என்பதற்கு இவர்தரும் விளக்கம் சிந்திக்கத் தக்கதாக அமைகிறது.

"புராணங்களில் உள்ளவை உண்மையாக நடந்தவை அல்ல"[12]

"விஞ்ஞான உண்மைகள் கதைகளால் பரவி
விளங்கவில்லை. அதுபோல சமய உண்மைகள்
அற்புதங்களில் விளங்க வேண்டியதில்லை"[13]

"பூசை வழிபாடு எல்லாம் உயர்ந்த நெறிகளுக்குப்
படிகட்டுகளாக ஏற்படுத்தப்பட்டவை"[14]

முதலான புரட்சிச் சிந்தனைகளைச் சமயத்துறையில் கொண்டவர் மு.வ.

திருமணம் - மனமுறிவு !

எதிலும் எளிமையை விரும்பும் மு.வ. திருமணம் எளிமையாக நிகழ்த்தப்பட வேண்டும் என்ற எண்ணம் உடையவர்.

"திருமணத்திற்குப் பிள்ளை வீட்டார் பத்துப் பேரும்
பெண் வீட்டார் பத்துப் பேரும் இருந்தால் போதும்"[15]

"எந்த மாதத்திலும் எந்த நாளிலும் திருமணம் செய்யலாம்
என்று ஏற்பட வேண்டும்"[16]

"திருமணத்திற்கு வருமாறு எல்லோருக்கும் அழைப்பு
அனுப்பி வற்புறுத்தும் மூட வழக்கம் தொலைய வேண்டும்"[17]

இந்தக் கருத்துக்கள் நம்நாட்டு வாழ்க்கை முறையில் பெரும் புரட்சி ஏற்படுத்தக் கூடியவை. திருமணம் முதலியவைகளுக்கு உரியவர்கள் மட்டும் சென்று நடத்தி வைக்கும் பழக்கம் வேண்டும். பெருங்கூட்டம் சேர்ப்பது குற்றமாக, பழியாக, அநாகரிகமாகக் கருத வேண்டும். மு.வ. தம் சொந்த வாழ்க்கையில் பெரும்பாலும் இக்கொள்கையை கடைபிடிக்க முயன்றார்.

திருமணம் செய்து கொள்ளாமல் கணவன் மனைவியாக வாழும் அன்பு வாழ்க்கையை மு.வ. வரவேற்றுள்ளார்.

'திருமணம் செய்து கொள்ளாமலும் வாழலாம்
புதுவழி காட்டலாம்"[18]

பிற்காலத்தில் இந்த நிலைமை உறுதியாக ஏற்படும் என்ற நம்பிக்கையை அவர் கொண்டிருந்தார்.

"பிற்காலத்தார் திருமணம் என்றாலோ தயங்குவார்கள் போராட்டம் இல்லாமல் வாழ வழி ஏற்படும். காலப் போக்கில் திருமணங்கள் குறைந்து போகும். ஆண் பெண் நட்புறவு பெருகும்" [19]

என்பதால் இதை அறியலாம்.

தமிழ்பண்பாட்டை உலகுக்கு எடுத்துப் பரப்பியவர் மு.வ. ஆனால் மணமுறிவு செய்து கொள்ளுவதையும் தம் புதினம் ஒன்றில் காட்டியுள்ளார். குடும்ப வாழ்க்கையில் முடிந்தவரை விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் என வலியுறுத்திய அவர் இவ்வாறு கூறியிருப்பது பெரும் புரட்சியாகும்.

"எனக்கு விருப்பம் இல்லாத ஒரு நண்பனோ: பழகித்தான் தீர வேண்டும் என்று வெளியார் வற்புறுத்தினால் எனக்கு எப்படி இருக்கும் ? மாறுபட்ட மனம் உடைய கணவனும் மனைவியும் ஒன்றாகவே அதைவிடக் கொடுமையானது"[20]

மனம் முறிந்த பிறகு மணமுறிவை பெற்றுக் கொள்ளாமல் இருப்பதில் பொருள் இல்லை என வலியுறுத்தும் மு.வ. "அதற்குச் சமுதாயமும் சட்டமும் அவ்வளவு எளிதில் இடம் தரவில்லையே" [21] எனச் சாடுகிறார். மனமுறிவை அவர் முறைப்படுத்துவது ஏற்றுக் கொள்ளத்தக்கதாக உள்ளது.

முடிவுரை

மு.வ. அமைதியான மனிதராகத் தோற்றமளிக்கலாம். அவருடைய எழுத்துக்கள் கோபத்தையும் வேகத்தையும் கிளப்பாமல் இருக்கலாம். ஆனால் அவை சமுதாய அழுகலைப் பற்றிச் சரியாகச் சிந்திக்கும் ஆற்றல் மிக்கவை. பழமை காரணமாகப் பயன்படாததைப் பற்றி நிற்கும் பான்மையை அவர் பாராட்டுவதில்லை. அதனால் தான் திருமணம் பற்றியும் புரட்சிக் கருத்தை புகன்றார். களத்திலே நின்று கருவியை ஏற்றிக் காணப்பட வில்லையே அவர் எனக் கருதலாம். களம் செல்லத் தூண்டும் கருத்துக்களை வழங்குவதும் புரட்சிதான்! மு.வ. அமைதியான மனிதராயினும் அவனுடைய எண்ணங்கள் புரட்சியானரை என்பது வெள்ளிடைமலை.

அடிக்குறிப்புகள்

1. மு.வ. அணிந்துரை, திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், ப.11
2. மு.வ. பழியும் பாவமும், ப.16
3. மு.வ. மண்குடிசை, ப.315

4. மு.வ. அந்தநாள், ப.123
5. மா. செல்வராசன், இலக்கியத்தில் குறுக்கும் நெடுக்கும், ப.51
6. மு.வ. தங்கைக்கு, ப.48
7. மு.வ.. அறமும் அரசியலும், ப.117
8. மு.வ. அறமும் அரசியலும், ப.137
9. மு.வ. உலகப் பேரேடு, ப.38
10. மு.வ. மண்ணின் மதிப்பு,நு ப.199
11. மு.வ. நெஞ்சில் ஒரு முள், ப.322
12. மு.வ. நெஞ்சில் ஒரு முள், ப.336
13. மு.வ. நெஞ்சில் ஒரு முள், ப. 323
14. மு.வ. நெஞ்சில் ஒரு முள், ப.412
15. மு.வ. பழியும் பாவமும், ப.5
16. மு.வ. பழியும் பாவமுமः. ப.12
17. மு.வ. பழியும் பாவமும், ப.12
18. மு.வ. மலர்விழி, ப.158
19. மு.வ. மண்குடிசை, ப.220
20. மு.வ. நெஞ்சில் ஒரு முள், ப.478
21. மு.வ. நெஞ்சில் ஒரு முள், ப.477

௧௨௩. முனைவர் மு.வ.வின் தேங்காய்த் துண்டு சிறுகதையில் நகரத்து வாழ்வியல்

இரா. ஸ்ரீதர்
முதுகலைத் தமிழிலக்கியம் முதலாமாண்டு
அரசு கலைக்கல்லூரி, திருவண்ணாமலை.

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கிய வரலாற்றில், முனைவர் மு.வரதராசனார் அவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டு குறிப்பிடத்தக்கது. மாறுகின்ற வாழ்க்கைச் சூழலில், அறம் காக்கப்படவேண்டும். அப்போதுதான் மனித வாழ்க்கை அமைதியுடனும் மதிப்புடனும் திகழும் என்பது மு.வ.வின் கொள்கை. எனவே, பொருளுக்கு முதன்மை கொடுத்து, மனிதத்தை இழக்கின்ற இன்றைய வாழ்வை எடுத்துக்காட்டி, அதனுள் உள்ள பொய்மைகளைச் சுட்டிக்காட்டுவது மு.வ.வின் எழுத்தியல்பு. அவரது 'விடுதலையா' என்னும் சிறுகதைத் தொகுப்பில் தேங்காய்த்துண்டு என்ற சிறுகதையின் கண் மு.வ. காட்டும் நகரத்து வாழ்வியல் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

தேங்காய்த்துண்டு - கதையும் களமும்

தேங்காய்த்துண்டு சிறுகதை சென்னை நகரத்தின் மையப்பகுதியில் உள்ள ஒரு குப்பத்தில் நடப்பதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மாரியம்மன் கோயிலர் என்பது குப்பத்தின் குறியீடாக உள்ளது. தேங்காயை உடைத்தாற்போல், நகரத்தை நாடிவந்த மூன்று நண்பர்களின் வாழ்க்கை தேங்காய்த் துண்டுபோல் சிதறிக்கிடப்பதை உணர்த்துவதாகக் கதைத்தலைப்பு அமைந்துள்ளது. இக்கதை, ஆசிரியர் தானே கூறுவது போன்ற நடையில் அமைக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் நகரத்தின் சாலையில் நடந்து செல்லும்போது காணும் காட்சிகளின் விரிவாக்க் கதைப்போக்கு அமைந்துள்ளது. சாலையில் குடித்துவிட்டு மயங்கி விழுந்துகிடக்கும் ஒருவன் மதியநேரத்தின் உருகும் தார்ச்சாலையின் வெப்பத்தையும் உணராது கிடப்பதும்' சிலர் குடித்துவிட்டு தண்டவாளத்தில் அறியாமல் சென்று பலியாவதுமான காட்சிகள் அந்நகரத்தின் இயல்பான காட்சிகளாகும். எனவே, யாராவது சாலையில் மயங்கிக்கிடந்தால், அது அவனது குடிகாரத்திமிர் அல்லது தலைவிதி என்று கருதி, பாராமல் செல்வது நகரத்து மக்களின் இயல்பாக உள்ளது. இந்நிலையில், வழக்கம்போலச் சாலையில் ஒருவன் விழுந்துகிடக்கிறான். அவனை வழக்கம்போலவே குடித்துவிட்டு விழுந்துகிடப்பதாக கருதிக்

கடக்க முயல்கிறார்கள். அவன் வாய் வேலா, வேலா என்று முணுமுணுக்கிறது. எனவே, அவனருகில் சென்று சிலர் கவனிக்கையில், அவன் பசியினால் மயங்கிக்கிடக்கிறான் என்று உணரப்படுகிறது. உடனே மனிதநேயத்துடன் சிலர் அவனுக்கு உதவுகின்றனர். அவன் மயக்கம் நீங்கிய நிலையில், ஆசிரியர் அவனை வீட்டிற்கு அழைத்துச்சென்று உண்ணச்செய்கிறார். அவன் களைப்பு நீங்கிய நிலையில், அவனுடன் உரையாடுகிறார். அவன் தானும் மற்ற இரு நண்பர்களுமாக மதுரையிலிருந்து பிழைப்புத் தேடி நகரத்துக்கு வந்த கதையை எடுத்துரைத்தான்.

நகரம் அவர்களுக்கு நேர்மையாக உழைத்துப் பிழைக்க எந்த வேலையும் வழங்க வில்லை. மாறாக வறுமையையும் பட்டினியையுமே வழங்குகிறது. ஒருவன் மட்டும் அறியாமல் பிக்பாக்கெட் கும்பலிடம் சிக்கித் திருடனாக மாறுகிறான். தான் சம்பாதித்த பணத்தில் தேங்காயும் பழங்களும் வாங்கி வந்த மாரியம்மனுக்குப் படைத்துவிட்டுப் பின், தன் தோழர்களுக்கு பன்னும் பழமும் வாங்கித் தருகிறான். ஒரு தோழன், தீயவழியில் வந்த உணவை உண்ண மாட்டேன் என்று கூறி அவனை வெறுப்பதோடு, நட்பின் காரணமாக, அவனைக் காட்டிக்கொடுக்காமல் பட்டினியாக இருந்து ரயிலின்முன் விழுந்து உயிர்விடுகிறான். தான் மட்டுமே வயிற்றுப்பாட்டுக்காக அவன் கொடுக்கும் பன்னையும் பழத்தையும், கிடைக்டகும்போது தின்பதாகக் கூறுகிறான். ஒருவாரமாகத் தன் நண்பன் வராததால் அவனைக் காண மாரியம்மன் கோயிலருகே வந்ததாகவும், அப்போதுதான் பசிமயக்கத்தில் தான் மயங்கி வீழ்ந்ததாகவும் கூறுகிறான்.

தன் நண்பனுக்கு என்ன ஆயிற்றோ. போலீசில் சிக்கிக்கொண்டானோ? பிக்பாக்கெட் கும்பலே அவனை அடித்துப் போட்டுவிட்டதோ? அல்லது அவனுக்கு உடல்நிலை சரியில்லையோ? எனக் கவலைப்பட்டுத் தவிப்பதை ஆசிரியரிடம் கூறுகிறான். ஆசிரியர் அவனை வீட்டுத் திண்ணையிலேயே இருக்கச் செய்துவிட்டுத் தன் நண்பருடன் உள்ளேசென்று உரையாடுகிறார். மறுபடியும் வந்து பார்க்கும்போது அந்த மனிதன் அங்கு இல்லை. ஆசிரியரி கோயிலருகே செல்கிறார். அங்கே, அவனால் கூறப்பட்ட அடையாளத்தில் பிக்பாக்கெட் திருடனான அந்த வேலன் என்பவன் கோயிலுக்குள் சென்று தேங்காய் பழம் படைத்துவிட்டு, தேங்காயை உடைத்து அங்கிருந்த சிறுவர்களுக்கு வழங்குவதை பார்க்கிறார். பிறகு அவன் பாதி தேங்காயை மூடியைத் தன் நண்பனுக்காக வைக்குமிடத்தில் பார்க்கும்போது, ஏற்கெனவே வைத்தது காய்ந்து போயிருப்பது கண்டு அவன் கண்கலங்குகிறான் என்று அவனது உள்ளத்திலும் உயிரூற்றாக நட்பை அடையாளப் படுத்துகிறார்.

நகரத்து வாழ்வியல்

சென்னை நகரம் பொருளாதாரச் சிறப்பு வாய்ந்தது. வளம் மிக்கது. ஆனால், சுயநலமும் ஏமாற்றும் தலைமை வகிப்பது. உண்மையும் உழைப்புக் கொண்ட மக்கள் வாழ்வதற்கு நகரத்தில் வழியில்லை. மூன்று நண்பர்கள் பிழைப்புக்காக நகரத்தை நாடி வந்த நிலையில் அவர்கள் நேர்மையோடு உழைத்து வாழவே விரும்புகின்றனர். ஆனால், அதற்கேற்ற வேலை ஏதும் கிடைக்காமல் சாலையோரம் வருந்திக் கிடக்கின்றனர். ஒருவன் மட்டும் எதிர்பாராமல் பிக்பாக்கெட் கும்பலில் சிக்கித் திருடனாக மாறுகிறான். மற்ற இருவரும் நேர்மையாக வாழ்வதையே விரும்புகின்றனர். பிக்பாக்கெட் திருடனாக மாறும் வேலனும் வயிற்றுப் பிழைப்புக்காகவே அதனைச் செய்வதோடு, அந்த உழைப்பில் வந்த பணத்தில் தன் நண்பர்களுக்கு உண்ண வாங்கித்தந்து நட்பைப் போற்றுகிறான். ஒருவன் தீயவழியில் வந்த உணவை உண்ண மறுத்து மனம்நொற்து உயிர் துறக்கிறான். மற்றொருவன் வேறு வழியின்றி நண்பன் தருவதை உண்டாலும், நேர்மையாகவே வாழ்கிறான். கிடைத்தபோது மட்டுமே உண்பதால், பலநேரங்களிலில் பசியோடு தவிக்கிறான். நகரம், இவ்வாறு நர்மையானவர்களுக்கு வறுமையையும் ஏமாற்றிப் பிழைப்போருக்கு வளத்தையும் வழங்குவதாக உள்ளது. போலியும் ஆடம்பரமுமே அங்கு மகிழ்ச்சியாக வாழமுடிகிறது. உண்மையை விரும்புவர்களுக்கு பட்டினியும் மரணமுமே பரிசாகக் கிடைக்கிறது.

நகரத்து மாந்தர்கள்

சென்னை, நகரத்தில் வாழ்கின்ற மனிதர்கள் விரைந்து செல்லும் வாழ்க்கையில் தாமும் ஓடியாடி வாழ்பவர்கள். தம்மைப்பற்றிச் சிந்திப்பதற்கே இயலாத விரைவுநிலையில், வழியில் யாரேனும் துன்புற்றால் அதற்காக வருந்தி நிற்கவும் தயங்குவர். ஒருவன் மயங்கி விழுந்முகிடந்தால் உதவ நினைக்காமல், அவன் ஏமாற்றுகிறானா? நடிக்கிறானா? குடித்துவிட்டுக் கிடக்கிறானா? என்ற கேள்விகளோடு ஏதும் உதவி செய்யாமல எச்சரிக்கையோடு கடந்து செல்பவர்கள். பசியில் மயங்கிக் கிடக்கின்றன என்ற உண்மை தெரிந்த நிலையில், அவனுக்கு உதவ முன்வருகிறார்கள். கல்லூரி மாணவர் இருவர், அவனுக்கு தேனீரும் பன்னும், பழமும் ரொட்டியும் வாங்கித்தந்து உதவுகின்றனர். மேற்கொண்டு நிற்க நேரமில்லாமல் விரைகின்றனர். ஆசிரியர் மட்டுமே அவனுக்கு உதவுவதோடு தன்வீட்டிற்கு அழைத்துச் சென்று உணவு கொடுத்தப் பின் இளைப்பாறச் செய்கிறார். எனவே, நகரத்து மாந்தர்கள் விரைந்த வாழ்க்கைப் போக்கில், சுயநலத்தோடு இருப்பவர்களாகக் காட்டப்படுகிறார்கள். உதவும் எண்ணம் தோன்றும்போதும் பல ஐயங்களைக் கடந்து, உண்மையை உணர்ந்த பின்பே உதவுகின்றனர்.

ஆசிரியர் போன்ற ஒருசிலர் அவனுக்கு உதவும் பண்பினராக அடையாளப்படுகின்றனர்.

மனிதப் பண்புகளும் அவலமும்

நற்பண்புகள் நிறைந்த இரு நண்பர்கள் இறுதிவரை நேர்மையாகவே வாழவிரும்புகின்றனர். அவர்களில் ஒருவன் மரணமடைகிறான். மற்றொருவன் பட்டினியில் மயங்கிக்கிடக்கிறான். எனவே, நேர்மைப் பண்பிற்குப் பட்டினத்தில் வாழ வழியில்லை. மற்றொரு நண்பன் பிக்பாக்கெட் காரனாக மாறியவுடன், வாழ வழிகிடைக்கிறது. எனவேஈ நேர்மையை விட்டுவிட்டு எப்படியாவது வாழலாம் என்று சிந்திப்பவர்க்கு நகரம் வரவேற்பு கொடுக்கிறது. நகரத்து இயல்பில் ஒட்ட முடியாது வாழும் பலர் அந்த முரண்பாட்டில். குடிகாரர்களாக மாறித் தெருவில் விழுந்து கிடக்கின்றனர். சிலர், ரெயில் தண்டவாளத்தில் உயிரை விடுகின்றனர். எனவே, நல்லவர்கள் மனமொன்றி வாழ்வதற்கு அவர்தம் நற்பண்புகளே நகரத்தில் தடைகளாக உள்ளன.

முடிவுரை

மு.வ.வின் தேங்காய்த்துண்டு சிறுகதை நகர வாழ்வின் அவலத்தை மூன்று நண்பர்களின் வாழ்வியல் பின்புலத்தில் வைத்து விளக்குகிறது. போலித்தனம், ஆடம்பரம், சுயநலம், பாதிக்கப்பட்டோரைப் புறக்கணித்தல் ஆகியவற்றைத் தனது இலக்கணமாகப் பெற்றுள்ளது. எனவே, நேர்மையும் உழைப்பும் மதிக்கப்படுவதற்கு மாறாக மிதிக்கப்படுகின்றன என்பதை தேங்காய்த்துண்டு சிறுகதை நன்கு உணர்த்துகிறது.

ஐடி. மு. வ. வின் கல்வி பார்வை

மா. கவிதா
முதுகலைத் தமிழ்
முதலாமாண்டு
அரசு கலைக் கல்லூரி
திருவண்ணாமலை

கல்வி என்பதன் பொருள்

குறிக்கோளினை வழங்கி அதனை நடைமுறைப்படுத்துகிறது

தனகென்று பாதையை காட்டி பயணத்தை தொடர்கிறது.

நடத்தை மாற்றங்களில் புதுமைகளினை கொண்டு வருகிறது

முடிவுகளை அடைவதற்கான நோக்கங்களை நிர்ணயம் செய்கின்றது.

கல்வி என்னும் சொல் இலத்தீன் சொல்லான Educare என்ற சொல்லிருந்து பிறந்ததாகும். இதற்கு பொருள் 'வெளிக் கொணர்வது' என்பதாகும். அதாவது மனிதனில் உள் திறமைகளை வெளிக்கொண்டு வரும் பயிற்சி முறையாகும். கல்வி என்பது அறிவை மட்டும் வளர்ப்பதற்குப் பயிற்சியளிக்கக் கூடாது. மாறாக உன்னதமான மனிதப் பண்புகளைப் பயிற்றுவிப்பதாகவும் மனம் ஒழுக்கம், வாய்மை இவற்றை உருவாக்குவதற்காகவும் இருக்க வேண்டும் என டாக்டர் எஸ். இராதா கிருஷ்ணன் கூறுகிறார்.

சந்திரனின் பள்ளி வாழ்க்கை

சந்திரனுடைய வாழ்வு மேடு பள்ளம் நிறைந்தது. சந்திரன் இளங்கன்று போல் இருந்தான். தக்க வயதுக்கு ஏற்றவாறு அளவான வளர்ச்சியோடு இருந்தான். அவன் சுறுசுறுப்பு மிகுந்தவனாக இருந்தான். சந்திரனுடைய ஊர் பெருங்காஞ்சி அவன் அந்த ஊரில் எட்டாம் வகுப்பு வரை படித்து முடித்தான். அவன் எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போது ஆண்டு இறுதியில் பள்ளியின் திறமையை ஆராய்வதற்காக பள்ளிக் கூடத்திற்கு இன்ஸ்பெக்டர் வந்திருந்தார். அவர் மாணவர்களின் திறனை ஆராய்வதில் மிக வல்லவர். அப்போது மிகத் திறமையானவன் என்பதினை ஆராய்ந்தார். அதனை கண்டு வியந்தார். தலைமையாசிரிடம் சந்திரனைப் பற்றியும் அவனது மேற்படிப்பு பற்றியும் விசாரித்தார். ஆண்டு தோறும் இப்படிச் சில பிள்ளைகள் தேர்ச்சி பெற்று வெளியூருக்கு சென்று மேற்படிப்புப் படித்து உயர்ந்தால்தான் ஒரு கிராமம் முன்னுக்கு வரமுடியும்

என்பது அவருடைய நம்பிக்கை. சந்திரனுடைய தந்தை பெயர் சாமண்ணா. அவரைப் பார்த்து சந்திரனுடைய மேற்படிப்பிற்காக வெளியூர் அனுப்பி வைக்கும் படியும் அது உங்கள் குடும்பத்தின் நன்மைக்காகவும் என எடுத்துரைக்கிறார். உங்கள் மகனுடைய நாக்கில் கலைமகள் இருக்கிறாள். அவன் படித்து பட்டம் பெற்று ஒரு கலெக்டராக வந்தால் உங்களுக்கு எவ்வளவு பெருமை! எவ்வளவு பணம் இருந்தாலும் ஈடு ஆகுமா? என்று சாமண்ணாவின் நெஞ்சைதொடும்படி கூறினார். சாமண்ணாவின் உடம்பில் புத்துணர்ச்சி பிறந்தது. உடனே சாமண்ணா சிலக் குறிப்புகளை பார்த்து இன்ஸ்பெக்டரை நோக்கி சென்று உங்களைப் போல் பெரியவர்கள் கூறினால் அதனை ஏறிறுக் கொண்டு நடக்க வேண்டியது தான் என்றார். சந்திரன் கிராமப் பள்ளிக் கூடத்தை விட்டு நகரப்பள்ளிக் கூடத்து மாணவன் ஆனான். சந்திரன் அவனது அத்தை மற்றும் ஒரு வேலையாள் இவர்கள் மூவரும் வாலாசாப்பேட்டைக்கு வந்தனர்.

வாலாசாப்பேட்டையில் வேலய்யனின் வீட்டு எண் 20. சந்திரனின் வீட்டு எண் 23 இவர்கள் இருவருமே ஒரே பள்ளியில் ஒரே வகுப்பில் படித்துவந்தனர். சந்திரன் ஆங்கிலப் பாடத்தில் தவிர மற்ற அனைத்து பாடங்களிலும் வகுப்பில் முதன்மை மாணவனாக திகழ்ந்தான். இதே போல் மூன்று வருடங்கள் சந்திரனும் வேலய்யனும் ஒரே வகுப்பில் படித்து வந்தனர். எஸ்.எஸ்.எல.சி வகுப்பில் படிக்கும் போது வேலப்பனுக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அந்த வருடம் வேறு தேர்ச்சிப் பெற வில்லை. ஆனால் சந்திரன் அப்படி இல்லை. அவன் நல்லப்படியாக எஸ்.எஸ்.எல்.சி தேர்ச்சிப் பெற்று சென்னையில் படிப்பதற்காக தயார் நிலையில் இருந்தான். வேலுவிற்கு மீண்டும் அதே வகுப்பில் படிப்பதற்கு கொஞ்சம் தயக்கமாக இருந்தது. சந்திரன் உடன் இல்லாவிட்டாலும் அவன் எப்பொழுதுமே சந்திரனின் நினைவாகவே இருந்தான். சந்திரன் சொல்லிக் கொடுத்த கணிதப்பாடங்கள் அடிக்கடி வேலுவின் நினைவிற்கு வந்தது. சந்திரன் பக்கத்தில் இல்லாதது ஒரு குறையாகவே இருந்தது. சந்திரன் ஏதேனும் கடிதம் எழுவானா என எண்ணினான். அவன் எண்ணியப் படியே சென்னையிலிருந்து வேலுவிற்கு கடிதம் வந்தது. அக்கடிதத்தில் தான் சென்னைக்கு வந்து கல்லூரியில் சேர்ந்து விட்டதாகவும், நீயும் அடுத்த ஆண்டு சோந்துவிட வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தான். அதே போல் வேலனும் தேர்ச்சி பெற்றான்.

இருவரின் கல்லூரி வாழ்க்கை

சந்திரனும் வேலனும் ஒரே கல்லூரியில் படித்து வந்தனர். இருவரும் பக்கத்து அறையில் வசித்தனர். ஆனால் ஒரே வகுப்பில் வசிக்க வில்லை. சந்திரன் வாலாசாவில் இருந்தது போல் இல்லை. வேலனிடம் சரியாக பேசுவதும் இல்லை. ஏதேனும் கேட்டால் எனக்கு வேற வேலை உள்ளது என்று தட்டி கழித்து சென்றான்.

சந்திரன் பள்ளியில் படித்தது போல் இப்போது படிப்பதில்லை என்பதனையும் அவனை நீ தான் பார்த்து கொள்ள வேண்டும் என்றும் சந்திரனின் தந்தை சாமண்ணா வேலுவிடம் கூறினார். சந்திரனோ, நாடகம், பெண்கள் என்றவாறு புகழை நோக்கிய பாதையில் சென்று படிப்பிலிருந்து விலகுகிறான்.

முடிவுரை

மு.வ. அகல் விளக்கு புதினத்தைக் கல்வி என்னும் தணத்தின் மீது அமைத்துள்ளார். பள்ளி, கல்லூரி என்ற இரு தளங்களில் சந்திரன் தன் அழகு, திறமை. அறிவுக்கூர்மை ஆகியவற்றின் மீதான வியப்பார்வத்திலும் செருக்கிலும் வாழ்க்கையிலிருந்து விலகுகிறான். வேலப்பனோ, ஓரளவே படிப்பவனாயினும் முறையாகப் படிப்பை மதிப்பதின் வழித் தனக்கான வாழ்க்கையில் வெற்றி பெறுகிறான். எனவே, கல்வியை மதிப்பவர்க்கு வெற்றியும் கல்வியை இரண்டாவதாக விலக்கித் தற்பெருமையில் திளைப்பவர்க்கு வீழ்ச்சியும் விளையும் என்பதை அகல் விளக்கு உணர்த்துகிறது.

125. மு. வ. வின் அகல் விளக்கு உணர்த்தும் பள்ளிக் கல்விச் சூழ லும் கல்லூரி சூழலும்

ம. பிரபு
முதுகலைத்தமிழ்
அரசு கலைக்கல்லூரி, திருவண்ணாமலை

ஆசிரியர் குறிப்புகள்

மு. வரதராசன் அருமை அன்னை அம்மாக் கண்ணம்மாளுக்கும் அறிவின் சிறந்த தந்தை முனுசாமி அவர்களுக்கும் செல்லப் பிள்ளை. 25.4.1912 ஆம் ஆண்டு வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரில் பிறந்தார். அவரது தாய் வழிப் பாட்டி அவரை அன்புடன் வளர்த்தார். அவருக்கு வழங்கிய பெயர் திருவேங்கடமாகும். தாத்தாவின் பெயரை இடுதல் என்னும் குடும்ப மரபுப்படி வழங்கிய பெயரே 'வரதராசன்' என்பதாகும். அவர் 1935-ஆம் ஆண்டு தம் மாமா மகளான இராதா அம்மையாரை மணந்தார். அவருக்கு ஆண் பிள்ளை மூவர், திருநாவுக்கரசு, நம்பி, பாரி ஆகியோர் ஆவர்.

பள்ளி கல்விச் சூழல்

சந்திரனும் வேலய்யனும் இளமையில் நண்பர்கள். இருவரும் ஒரே வகுப்பில் பயின்று ஒன்றாகவே படித்து விளையாடி ஒன்றாகவே வளர்ந்தவர்கள். பள்ளிக் கூடத்தில் ஆசிரியர்களோ அவனிடம் தனி நோக்கம் செலுத்தினர். அவனுடைய கையெழுத்தும் மிகவும் நன்றாக அச்சு போல் அழகாக ஒழுங்காக இருந்தது.

பள்ளி கூடத்துக்கு இன்ஸ்பெக்டர் வந்திருந்தார். அவர் மாணவர்களின் திறமையைக் கண்டு ஆரய்ந்தவதில் மிகவும் வல்லவர். எட்டாம் வகுப்பு மாணவர்களில் சந்திரன் மிகத் திறமையான விடைகள் எழுதியதைக் கண்டு வியந்தார். சிறப்பாகக் கணக்குத் தேர்வில் சந்திரன் ஒன்று விடாமல் போட்டு முடித்து நூற்றுக்கு நூறு எண்கள் வாங்கும் வகையில் எழுதியிருந்ததைக் கண்டு வியந்தார். சந்திரனைப் போல் ஒருவன் இல்லை நாக்கில் கலைமகள் வாழ்கிறாள்.

சந்திரன் படிப்பை தவிர கவனித்துக் கொள்ள வேண்டும் என்று சாமண்ணா சொன்னார். அந்த நிலையில் அவன் இல்லை. ஆங்கிலம் தவிர, எல்லாப் பாடங்களிலும் அவனே முதன்மையாக இருந்தான். அங்கிலத்தில் மட்டும் வரலாற்று ஆசிரியருடைய மகன் சந்திரகுப்தன் என்பவன் வல்லவனாக இருந்தான். அந்த ஒரு பாடத்தில் சந்திரன் அவனோடு போட்டி போட முடியவில்லை. ஒரு நாள் ஆங்கில ஆசிரியர் சந்திரனைப் பார்த்து, நீ கிராமத்திலிருந்து வந்ததால் உனக்கு ஆங்கிலம் கொஞ்சம் கடினமாக இருக்கிறது. முயற்சியோடு படி என்றார் அந்த

சொற்கள் சந்திரனுக்கு ஊக்கம் கொடுத்தன. சந்திரன் காலையில் நேரத்தோடு எழாவிட்டாலும் படிக்க தவறுவதில்லை பாடங்களை மிகவும் ஒழுங்காகப் படித்துவந்தான்.

சித்திரை பிறந்ததும் பள்ளிக்கூட முடிவுத் தேர்வு வந்தது, சந்திரனும் நானும் நன்றாகப் படித்து எழுதினோம். கணக்குத் தவிர மற்றப் பாடங்களில் நான் நம்பிக்கையோடு இருந்தேன். ஆங்கிலத்தில் தனக்கே முதன்மை கிடைக்க வேண்டும் என்றும் சந்திரன் பெருமைப்பட்டுக் கொண்டான்.

விடுமுறைக்கு பின் பள்ளிக்கூடம் திறந்தவுடன் நானும் சந்தரனும் மேல் வகுப்பில் உட்கார்ந்தோம். அங்கே தலைமையாசிரியர் வந்து முதுகை தட்டிக் கொடுத்தார். எல்லாப் பாடத்திலும் இவன் தான் முதன்மையான எண்கள் வாங்கியிருக்கிறான். இவன் எதிர்காலத்தில் மிகச் சிறந்து விளங்குவான் நம் பள்ளிக் கூடத்துக்கு அவனால் நல்ல பெயர் கிடைக்கும். இப்படியே படித்து வந்தால் அடுத்த ஆண்டில் எஸ்.எஸ்.எல்.சி-யில் மாநிலத்திலேயே முல்வனாகத் தேறமுடியும். மற்ற மாணவர்கள் இவனைப் போல் பாடுபட்டுக் கற்க வேண்டும் என்று பாராட்டி விட்டுச் சென்றார். அந்தப் பாராட்டில் எனக்குக் கிடைத்தது போல் நானும் மகிழ்ந்தேன் சந்திரன் மகிழ்ந்தான்.

அந்த வகுப்பில் வரலாறு விஞ்ஞானம் கணக்கு ஆகிய மூன்றில் ஒரு பாடத்தைச் சிறப்புப் பாடமாக எடுத்துக் கொள்ள வேண்டு என்றும் ஒரு வாரத்திற்குள் அதை முடிவு செய்ய வேண்டும் என்று தலைமையாசிரியர் கூறி விட்டுச் சென்றார்

அடுத்த ஆண்டில் இருவரும் தேறி மேல் வகுப்பிற்கு வந்தோம் முன்போலவே சந்திரனைத் தலைமையாசிரியர் பாராட்டினார். ஆனால் இந்த முறை ஆங்கிலத்தில் மட்டுமே முதற்மையாக வர முடியவில்லை. அதையும் தலைமையாசிரியர் குறிப்பிட்டு சென்றார். சந்திரன் ஆங்கிலத்தில் இரண்டாம் தரமாக இருந்தான்.

அரைத் தேர்வில் இருவரும் நன்றாக எழுதினோம். வரலாறு தவிர மற்றப் பாடங்களில் முழுமையான எண்கள் பெற்றிருந்தான். வரலாற்று ஆசிரியர் வேண்டும் என்றே கொடுத்தாகச் சொல்லி அவனே மனத்தைத் தேற்றிக் கொண்டான்.

நிமோனியாக் காய்ச்சல் வந்துவிட்டது. இருபது நாள் படுக்கையில் கிடந்து வருந்தினேன்.அந்த நோயால் என் முடிவுத் தேர்வு என்ன ஆகுமோ என்று கவலைப்பட்டேன் உடம்பு தேறிய பிறகும் அளவுக்கு மேல் படிக்கக் கூடாது. நன்றாக படிக்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு நிறைய இருந்தது. ஆனதால் படிக்க உடம்பு இடம் தரவில்லை. சோர்வு மிகுதியாக இருந்தது. மறுபடியும் காய்ச்சல் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அதற்கு நேர்மாறாக சந்திரன் முன்போல் படிக்க வில்லை என்று அத்தை குறை சொன்னார். அவனும் அடிக்கடி சோர்ந்து போவதாகவும் போன ஆண்டில் படித்த அளவும் இந்த ஆண்டில் படிக்கவில்லை. தேர்வு வந்தது. இருவரும் எழுதினோம் சந்திரன் அதற்கு முந்திய ஆண்டுகளில் வெற்றிக் களிப்போடு ருந்து போல் இல்லை. சோர்வோடு வாடியிருந்தான் என் நிலைமை எனக்கே நம்பிக்கை இல்லாமல் இருந்தது. அந்த ஆண்டில் எங்கள் ஊர்ப் பங்குனித் திருவிழா எஸ்.எஸ்.எல்.சி தேர்வு முடிந்த பிறகுதான் வந்தது, வைகாசி முடிவில் தேர்வின் முடிவுகள் வந்தன. தான் தேர்ச்சி பெறவில்லை இன்னும் ஓர் அண்டு அதே வகுப்பில் படிக்க வேண்டும் என்று எண்ணி மிக வருந்தினேன். நீ நோயிலிருந்து தப்பை மிழைத்ததே போதும் என்று தேற்றிக் கொண்டிருந்தார்கள்.

சந்திரன் தேர்ச்சி பெற்றான். ஆனால் ஒரு பாடத்திலும் முதன்மையான எண்கள் வாங்கவில்லை. ஆசிரியர்கள் எல்லோருக்கும் உடன் படித்த மாணவர்களுக்கும் இது பெரிய வாய்ப்பாக இருந்தது. வரலாற்று ஆசிரியரின் மகன் 'சந்திரகுப்தன்' நான்கு பாடங்களில் முதன்மையாக இருந்தான். ஆனாலும் சந்தரனிடத்தில் எனக்கு நன்றியுணர்ச்சி இருந்தது. ஏன் என்றால் அவன் சொல்லிக் கொடுத்த கணக்கில் தான் நிறைய எண்க்ள் வாங்கியிருந்தேன் தமிழ்ப்பாடத்திலும் அதற்கு அடுத்த நிலைதான் இருந்தது. ஆங்கிலத்திலும் விஞ்ஞானத்திலும் எண்கள் குறைந்து பொயிருந்தன. அந்தப் பாடங்களில இன்னும் மூன்று மூன்று எண்கள் பெற்றிரந்தால் தேர்ச்சி கிடைத்திருக்கும் என்றும் தலைமையாசிரியர் சொன்னார். சந்திரனுடைய தப்பனார் ஊரிலிருந்து வந்தார் அவனைச் சென்னையிலுள்ள ஒரு கல்லூரியில் சேர்க்கப் போவதாகவும் சென்னையில் உறவினர் ஒருவர் அதற்கு வேண்டிய முயற்சி செய்வதாகவும் கூறினார்.

கல்லூரியின் கல்வி சூழல்

எனக்குத் துணையாக ஒருவரும் இல்லா விட்டாலும் தனியாகவே எல்லாப் படங்களையும் ஒன்றாகப் படித்து வந்தேன். அரைத் தேர்வில் கணக்கில் முதன்மையான எண்களுடன் மற்றவற்றில் ஒவ்வொன்றிலும் முதன்மையாக நின்றதற்குக் காரணமாக இருந்த சந்திரனுடைய உதவியை நினைத்தும் கொண்டேன். உடனே அவனுக்கு ஒரு நன்றிக் கடிதம் எழுதினேன் வழக்கத்துக்கு மாறாக அவன் உடனே மறுமொழி எழுதினான். ஊக்கமூட்டி எழுதியிருந்தான். இந்த முறை எஸ்.எஸ.எல்.சி தேர்ச்சி பெற்று அடுத்த ஆண்டில் தான் படிக்கும் கல்லூரியிலே வந்து சேர்ந்திடுமாறு எழுதியிருந்தான். கல்லூரியின் புது வாழ்வில் பழகுவதற்கு எனக்கு ஒரு மாத காலம் ஆயிற்று. சந்திரன் அவ்வப்போது எனக்கு துணையாக வந்து உதவினான். ஆனால் அவன் வகுப்பு வேறு. என் வகுப்பு வேறு பாடங்களும் வேறு வேறு ஆகையால் வாலாசாவில் இணைப்பிரியாமல் இருந்தது போல் அங்கே இருக்க முடியவில்லை. ஒவ்வொரு நாளில் ஒருவரை ஒருவர் பார்க்காமலே இருந்ததும் உண்டு. உணவுக் கூடத்திற்குச் செல்லும்

வேளையில் ஒவ்வொரு நாள் என் அறையில் நுழைந்து குரல் கொடுத்து அழைத்துச் செல்வான். பெரும்பாலான நாட்களில் என்னை அழைக்காமலே சென்று விடுவான் நாளடைவில் எங்கள் தொடர்பு குறைந்து கொண்டே வந்தது. ஒரே வகுப்பில் பக்கத்தில் உட்கார்ந்து படிக்க வாய்ப்பு இல்லாத குறையால் நட்பும் தேய்ந்து போகிறதே என்று வருந்தினேன்.

சென்னைக்கு வந்த முதல் வாரத்தின் ஞாயிற்றுக்கிழமையன்று சந்திரன் என்னைக் கடற்கரைக்கு அழைத்துக் கொண்டு போனான். கடற்கரை எனக்கு விருப்பமாக இருந்தது பெருங்காஞ்சி ஏலி முதலியவை கடலில் இயற்கையை உணர்ந்தேன். அதனால் என் வகுப்பு மாணவர்கள் யாரேனும் அழைத்து போது அந்த அழைப்பை மறுக்காமல் சில வாரங்கள் கழித்து பிறகு அவர்களோடு செல்வதற்கு தயங்கினேன் காரணம் அவர்கள் தீய பழக்கங்கள் இருப்பதைக் கண்டு கொண்டேன். அவர்கள் பெண்களைப் பாரத்துப் காமக் கிளர்ச்சியான பேச்சில் பேசுவது எனக்குப் பிடிக்கவில்லை.

வாலாசாவில் இருந்த போது சந்திரனிடத்தில் ஏற்பட்ட மாறுதலைக் கண்டு என் உள்ளம் நொந்தது சிலவற்றைக் கடிந்து திருத்த வேண்டும் சந்திரன் ஏதோ ஒரு பகுதி நாடகத்தில் நடிக்கலாம் என்று போனேன் ஏதோ ஒன்று கொடுத்தார்கள் சரி என்றேன். சந்திரன் நாடக வேடமிட்டு நடிக்க தொடங்கினான் அவன் பார்ப்பதற்கு அசல் பெண் போன்று இருந்தது. இதனால் கல்லூரியிலுள்ள மாணவிகள் அனைவரையும் கிண்டலும் கேலியும் செய்தவாறு இருந்தன. நாடகத்தின் தலைவன் அன்டநுறு வரவில்லை. அந்த கதாபாத்திரத்தை சந்திரன் நடித்தான் இதனால் அனைவரையும் அவனை பாராட்டினர். அவனை வாழ்த்துவதற்கு வேலலும் மாலலும் காத்து இருந்தன. பக்கத்தில் சில பெண்கள் ரம்ப நேரம் காத்து இருந்தனர். பின்னர் சந்திரன் வந்து அவர் இருவரையும் கவனிக்கவில்லை. பரவாவில்லை என்று சொல்லிக் கொண்டு இருந்தனர்.

சந்திரன் இமாவதி என்ற பெண்ணின் புகைப்படம் ஒன்றை வைத்து கொண்டு அருகில் அவருடைய திருமணம் அழைப்பிதழ் கிழிக்கப்பட்டு இருந்தன. அதனை வைத்துக் கொண்டு அழுது அழுது கண்கள் சிவந்தன தேர்வுக்கு படிக்காமல் இப்படி அழுதுக் கொண்டு இருக்குறா என்று கூறிவிட்டு தேர்வினை நன்றாக எழுது பின் உள்ளவற்றை என்று கூறினாள் வேலு ! மோசம் செய்து விட்டாளே என்று கூறினான்.

ஆனால் அந்த பெண் இமாவதி தனக்கு அண்ணன் இல்லை என்று சந்திரனை அண்ணாகவும் நினைத்தாகவும் என்று கூறி சந்திரனுக்கு திருமணம் அழைப்பிதழ் என்று கூறினால் பின்னர் சந்திரன் யாருக்கும் தெரியாமல்

வேப்பிலை விளையும் தோட்டத்தில் கணக்காளராக இருக்கிறான். இதனை அறிந்த தந்தை, ஆசிரியர் நண்பன் மூன்று பேரும் அழைத்துக் கொண்டு வந்த பின்னர் திருமணம் செய்து வைத்தார்.

126. மு. வ. வின் 'வாய்திறக்க மாட்டேன்' சிறுகதையில் சமூக மாற்றம்

ஏ. சரவணன்
முதுகலை முதலாமாண்டு
தமிழ்த்துறை
அரசு கலைக் கல்லூரி
திருவண்ணாமலை.

தமிழ் நூல்களின் வரலாற்றை அறிய தம் சீரிய தொண்டுகளினால், தமிழ் புத்துயிர் பெற தம் எழுத்துகளினால், வழி செய்த தமிழ்த்தாயின் புதல்வர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் மு. வரதராசனார். உரைநடை, நாடகம், புதினம், சிறுகதை, ஆராய்ச்சி கட்டுரை எனவும் இலக்கியம், மொழியியல், திறனாய்வு எனப் பல்வேறு தடங்களில் தன்னுடைய இடத்தைத் தமிழில் பதித்துச் சென்றவர். இத்தகைய மு.வ.வின் சிறுகதையான வாய் திறக்க மாட்டேன் என்ற படைப்பின் மூலம் சமூகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை எவ்வாறு படம் பிடித்துக் காட்டுகின்றார் என்பதை இங்குக் காண்போம்.

வாய்திறக்க மாட்டேன் சிறுகதையின் சுதந்திரமும் அதன் முரண்பாடும்

சுதந்திரம் என்பது ஒரு மனிதனின் அடிப்படை தேவைகளான உணவு, உடை, உறைவிடம் மற்ற தேவைகளான எழுத்துரிமை, பேச்சுரிமை, சட்ட உரிமை, வாழும் உரிமை, சட்டப்பாதுகாப்பு உரிமை என அனைத்தும் சார்ந்ததாகும். ஆனால் இவற்றிற்கெல்லாம் மாறுதலாக பணம் பொருள் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகளை சமூகம் சந்தித்து வருகிறது. இந்த சுதந்திர இந்தியாவில் இது மிகவும் வருத்தத்திற்கு உரிய செயல்பாடாகும். நாடு சுதந்திரம் பெறாத நிலையில் அன்னியருக்கு அடிமைப்பட்டுக்கிடந்தது. ஆனால் தற்போது சட்டம் பணம் படைத்தவனுடைய ஆயுதமாகவும் சட்டத்தைக் கையாளும் காவல்களும் அரசு ஊழியர்களும் பணத்திற்கு ஏவல்புரியும் ஏவலாளிகளாகவும் செயல்பட்டு வறுமையில் வாழும் மக்களை மேலும் துன்பப்பட வைக்கும் முறை சமூக ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கச் செய்யும் செயலாகும். இதன் மூலம் மு.வ. அவர்கள் தன்னுடைய கருத்தினை சிறுகதையில் முன்வைக்கின்றார்.

காந்தியவாதியான் கனவு

அவர் ஒரு காந்தியவாதி ஆகையால் அவர் நிச்சயம் விடுதலை போராட்டத்தியாகித்தான் இருக்கவேண்டும். அதனால்தான் அவரால்

கண்ணெதிரே கண்ட தவறை காவலர் (ம) அதிகாரி என்று பாராமல் செய்த தவறுகளைத் தட்டிக்கேட்க துணிந்துள்ளார். அன்னியரை விரட்டியடித்த வீரம்தான் அவரை அந்த அதிகாரிகள் சிறையில் இட்டபோதிலும் கலங்காமல் இருந்தார் என மு.வ. காட்சி கோலாக சிறுகதையில் அறிவிக்கின்றார்.

ஏற்றத்தாழ்விற்கான காரணம்

ஒவ்வொரு மனிதனுக்கும் கல்வி என்பது அவசியம். அதனை பெற முடியாதநிலையில் அவன் தன்னுடைய அறிவையும் அதன் மூலம் அறிவு சார்ந்த உரிமைகளையும் இழக்கின்றான். சிறுகதையில் வரும் பாத்திரங்களில் ஒருவன் சிறையில் பாரதியார் பாடல் பாடியவன் சிறை அதிகாரியின் காலடி ஓசையை கேட்டவுடன் நிறுத்தி விடுகிறான் பணக்காரன் வீட்டு வேலைக்காரன் செய்யாத குற்றத்திற்கு தண்டனை பெறுகிறான் ஒருவன். ஒருவன் இரயில் வண்டியில் ஒருபடி அரிசி கொண்டு வந்தவன் கடத்தல் குற்றம் சுமத்டதப்படுகிறான். இவர்கள் முற்றிலும் கல்லாதவர்கள். எனவே அவர்கள் தங்களுடைய உரிமைகளை அறியாமையால் இழந்து துன்பத்தில் தங்களை விழித்துக்கொர்கிறார்கள்.

அரசியால்வாதிகளும், பெரும்பணக்காரர்களும், தங்களின் பொருளாதாரம் மற்றும் அரசியல் செல்வாக்கினால் நாட்டின் ஒட்டுமொத்த பொருட்செல்வங்களையும் சுரண்டி விடுகின்றனர். இதனால் நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதாரமும் ஒருவரிடமே குவிந்துவிடுகின்றன.

"உழுபவன் கணக்கு பார்த்தால்
உழவுகோலும் மிஞ்சாது"

என்ற பழமொழிக்கினங்க உழைக்கும் மக்களின் உழைப்புடன் அவர்கள் பொருளாதாரமும் சுரண்டப்படுகிறது. இதனால் மக்களின் இயல்பான வாழ்வும் நாளுக்கு நாள் தாழ்ந்து தேய்ந்து வருகிறது. இன்னும் சில ஆண்டுகளில் கீழ்தட்டு மற்றும் நடுத்தரமக்களின் வாழ்வு ஆதிக்கக்காரர்களால் அடிமைப்படக் கூடிய சூழல் வரும் எனவும் நடைமுறையில் சில இடங்களில் அவை அரங்கேறி வருவதை மு.வ. அவர்கள் வடித்து தமது சிறுகதையில் உணர்த்தியுள்ளார்.

சமூக நியதிகள்

'தனிமரம் தோப்பாகாது' என்பது போல பல மனிதர்களின் தொகுப்பே சமுதாயம். சமூகம் வளம்பெற ஒவ்வொரு மனிதனும் மதிக்கத்தக்கவன். அத்தகைய மனிதன் பொருளாதார அடிப்படையில் தரம்பிரித்து பொருள் படைத்தவன் செய்தத்தவறை பொருள் இல்லாதவன் அறியாமையைப் பயன்படுத்தி அவனுக்கு தண்டனை விதிப்பது

பொருந்தாது. தண்டனை பெற்றாலும் அவனுக்குப் பாதுகாப்பு இல்லாமல் போகாது. அவன் அடிமைப்படவும் முடியாது. எனவேதான் தவறு செய்பவர்கள் திருந்த வாய்ப்பாக சட்டப்பாதுகாப்புடன் கூடிய தண்டனை விதிக்கின்றார்கள்.

"தனிமனிதனுக்கு
உணவு இல்லையெனில்
ஜகத்தையே அழி"

என்ற பாரதியார் கூறிய மொழி மறந்துபோகவில்லை. வறுமையின் பிடியில் உள்ள ஒருவன் தன் தேவைக்காக ஒருபடி அரிசியைக் கையில் கொண்டுபோனால் திருடனாக மாட்டான். இதனால்தான் அரசு உணவுப்பாதுகாப்பு துறையின் மூலம் சட்டம் இயற்றியுள்ளது. மனிதன் உண்ணும் உணவு அவனது தேவை மற்றும் விருப்பத்தைச் சார்ந்தது என மு.வ. அவர்கள் மறைமுகமாக காட்டியுள்ளார்.

ஏற்றத்தாழ்வு அகல்வது

ஒவ்வொருமனிதனும் கல்வி பெற வேண்டும். இது அரசின் கடமை மற்றும் அடிப்படை உரிமைச்சட்டமாகும். இதன் மூலம் தன் அறியாமை அகழ்ந்துபோய் கடமை என்ன என்பதையும் உரிமை என்ன என்பதையும் அறிய வழிசெய்யும்.

ஒருபுறம் குடிசைகள் மறுபுறம் அடுக்குமாடி வீடுகள், ஒருபுறம் பணக்காரர்கள் வரிசைப்படுத்தப்படுகிறார்கள் மறுபுறம் வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழும் மக்கள் வரிசைப்படுத்தப்படுகிறார்கள். இந்த ஏற்றத்தாழ்வுகளை முறைபடுத்த இன்னொரு மகாத்தமாவோ, நேதாஜியோ வரப்போவதில்லை. நமக்கு நாமேதான் தீர்வுகான வேண்டும் சரியான சுயநலமற்று நேர்மையான தலைமையை ஜனாநாயக முறைப்படி உஙருவாக்குவது மட்டுமே ஏற்றத்தாழ்வுகளை அகற்ற வழி என பேராசிரியர் மறைமுகமாக கதை காட்சியின் மூலம் விளக்கியுள்ளார்.

முடிவுரை

சமுதாய ஏற்றத்தாழ்வு என்ற செருக்கினைக்களைய மனிதன் மனித நேயப்பண்புகளையும், சட்டத்தினைச் சரியான முறையில் மக்கள் அனைவருக்கும் முறையான வகையில் உயர்ந்தவர், தாழ்ந்தவர், செல்வந்தர், ஏழை என பாகுபாடில்லாமல் அனைவரையும் ஒன்றிணைத்து ஒரே சமூகப்பார்வையில் உறுதியானதொரு சட்டப்பாதுகாப்பினை மக்களுக்கு வழங்கி அனைவருக்கும் சமமான நீதியினை வழங்க வேண்டும் என பேராசிரியர் அதமது வாய்திறக்க மாட்டேன் என்ற சிறுகதையின் மூலம் விளக்கிக்கூறியுள்ளார்.

127. மு. வ. வின் 'வாய்திறக்கமாட்டேன்' சிறுகதையில் கதைமாந்தர்கள்

இரா. குமரன்
முதுகலை முதலாம் ஆண்டு
தமிழ்த்துறை
அரசுக்கலைக் கல்லூரி
திருவண்ணாமலை

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கிய வரலாற்றில் தமிழ் பேராசிரியர் டாக்டர் மு.வரதராசனார் தமிழ்த்தாயின் தலைமகனாக விளங்கிய அவர் 52-வயதில் உயிருள்ள படைப்புகளாக 85-நூல்களை எழுதி இணையில்லா புகழ்பெற்றவர். பல்வகையான முதல் தரமான நூல்களை தந்த தமிழ்ச் சுரங்கமாக அவர் இயற்றிய சிறுகதையில் கதைமாந்தர்களின் நிலைகளையும் மு.வ. குறிப்பிடும் கருத்துக்களையும் இங்கு காண்போம்.

கதையின் கருத்து

ஏழைகள் எவ்வளவு உழைத்தாலும் கோழையாக இருப்பதால் ஏழையாகவே இருக்கிறார்கள் குற்றவாளியாக்கப்படுகிறார்கள். பணக்காரர்கள் ஏழைகளின் கோழை தனத்தை பயன்படுத்திக் கொண்டு தான் செய்த தவறை மறைத்து ஏழைகளை குற்றவாலியாக்குகின்றனர். சட்டத்தையும் தன்கடமையையும் ஏழை பணக்காரன் என்ற பாகுபாடுயின்றி சமமாக செய்யக்கூடிய அதிகாரிகள் பணக்காரர்களுக்கு சாதமாகவே சட்டத்தை பயன்படுத்துகின்றனர் இதை தட்டிக் கேட்கும் நபர்களையும் குற்றவாளியாக்கி தண்டிக்கப்படுகிறார்கள். சுதந்திரம் என்பது அனைவருக்குமே என்று காந்தியடிகள் விடுதலை வாங்கித்தந்தார். ஆனால் இங்கு சுதந்திரம் பணக்காரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் மட்டுமே பயன்படுத்துகின்றது மு.வ. சிறுகதையில் ஏழை மாந்தர்கள் பணக்கார மாந்தர்கள் என்று மாந்தர்களை வகைபடுத்தியுள்ளார்.

அதிகாரிகளின் பணிகள் மற்றும் முரண்பாடான செயல்கள்

சட்டம் என்பது அனைவருக்கும் சமமானது. ஆனால் இங்கு சட்டம் பணக்காரர்களுக்கு மட்டுமே பயன் அளிக்கிறது. இச்சட்டத்தை சரியாக பயன்படுத்தக் கூடிய் காவலர் ஸ்டேசன் மாஸ்டர். நியாயவிலை கடை அலுவலர் போன்ற அதிகாரிகள் பணக்காரர்களுக்கு மட்டுமே உதவியாக இருக்கின்றனர். இதனால் ஏழை தொழிலாளி ஏனி குடும்பத்தார்கள் தவறை தட்டிக்கேட்கும் சுதந்திர போராட்ட வீரர் போன்றவர்கள் அதிகாரிகளின்

முரண்பாடான செயல்களால் குற்றவாளியாக்கப்பட்டு தண்டனை பெறுகின்றனர்.

அதிகாரிகள் தன்கடமையையும் பணியையும் ஏழை பணக்காரர் என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் சமமான முறையில் வழங்குவதே ஆகும். ஆனால் தன்கடமையை சரியாக செய்யாததனால் ஏழைகள் அனைவரும் குற்றவாளி ஆக்கப்படுகின்றனர். பணக்காரர்.கள் மேலும் மேலும் அதன்குற்றத்தை செய்துகொண்டே இருக்கின்றனர். இதற்கு அதிகாரிகள் துணையாக இருக்கின்றனர்.

இதுபோன்ற அதிகாரிகளால் காந்தியடிகள் வாங்கி கொடுத்த இந்த சுதந்திரம் ஏழை மக்களிடம் சென்றடையாமலே உள்ளது.

ஏழை மாந்தர்கள்

உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காமல் கடன் வாங்கிக்கொண்டு இரண்டுபடி அரிசி வாங்கி வரும் ஏழை தன்குடும்ப பசியைபோக்க இரயிலில் எடுத்துவருகிறான் அதே இரயிலில் அரிசி மூட்டை மூட்டையாக எடுத்துவரப்படுகிறது. அந்த ஏழை அரிசி எடுத்துவருவதை ஸ்டேசன் மாஸ்டர் பார்த்து அவனிடம் உள்ள அரிசியை பிடுங்கிக்கொண்டு அவனை குற்றவாளியாக்குகிறார். அதற்கு காவலர் துணை நிற்கிறார் கள்ளத்தனமாக மூட்டை மூட்டையாக வரும் அரிசிக்கு பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

தொழிலாளி தன் கடமையை நேர்மையாகவும் உண்மையாகவும் செய்பவன். கல்வி அறிவு இல்லாதவன் இவன் இவன் கோழைதனத்தை கண்ட பணக்காதர முதலாளி தான் செய்த திருட்டை மறைத்து அந்த ஏழை தொழிலாளியை குற்றவாளியாக்குகின்றாள். அந்த தொழிலாளியிடம் உனக்கு நிலம் வாங்கி தருகிறேன். குடும்பத்தை நான் பார்த்துக்கொள்கிறேன். எல்லாக் கடனையும் தீர்த்துவிடுகிறேன் மூன்று நான்கு மாதம் தண்டனை தருவார்கள் என்று பொய் கூறி அவனை குற்றவாளியாக்குகின்றனர். ஆனால் அவனுக்கு பதினைந்து மாதம் சிறை தண்டனை கிடைக்கிறாது. தமது குடும்ப சூழ்நிலைக்காக ஏமழை தொழிலாளி குற்றம் தான் செய்ததாக ஒப்புக்கொண்டு தண்டனை பெறுகிறான்.

இவ்வாறு தன் குடும்பத்தில் உள்ள மனைவி பிள்மளைகளின் பட்டினியை போக்க ஏழைகள் பணக்காரர்களால் தண்டனை பெறுகின்றனர். இதற்கு அதிகாரிகள் குற்றம் செய்தவர்கள் யார் என்று ஆராயாமல் பணக்காரர்களுக்கு துணையாக நின்று ஏழைகளை குற்றாவாளி யாக்குகின்றனர்

பணக்கார மாந்தர்கள்

தனது பெண் திருமணம் செய்த போது அன்று ஒருநாள் கல்யாணப் பந்தலில் ஐந்தாயிரம் பேருக்கு உணவு அளிக்கப்பட்டது. தனது

சுயநலத்திற்காகவும் தற்பெருமைக்காகவும் திருட்டு வழியில் அரிசி கொண்டு வந்து உணவு சமைத்துப்போட்டாகள். அவர் செய்த இந்த தவறை மறைத்து கல்வி அறிவு இல்லாத நேர்மையாக வேலை செய்யும் எழை தொழிலாளி பலிகடவாக்கி அவனிடம் உனக்கு அனைத்து உதவிகளும் செய்கிறேன். நீ திருடியதாக ஒப்புக்கொள் இல்லையானால் உனக்கு ஆயுள் தண்டனை கிடைக்கும் என்றெல்லாம் கூறி தொழிலாளியை குற்ளவாளியாக்குகின்றனர். இங்கு உண்மையை ஆராயாமல் நியாயவிலைக்கடை அலுவலரும் காவலரும் பணக்கார முதலாளிக்கு துணை நின்று தொழிலாளியை குற்றவாளியாக்கி தண்டனை அடையச் செய்கின்றனர் தவறு செய்த பணக்கார முதலாளி மகிழ்ச்சியாக இருக்கிறார். சட்டம் பணக்கார்களுக்கு பணி செய்கிறது தவறு செய்யாதவனை தண்டிக்கிறது.

தலைமை மாந்தர்

தலைமை மாந்தர் நேர்மையானவர் குற்றத்தை தட்டிக்கேட்பவர் ஒரு காந்தியவாதி இரக்கபண்பு கொண்டவர் சுகந்திர போராட்டத்தில் பங்குபெற்று சிறை தண்டனை பெற்றவர்.

ஏழை மாந்தர் காவலரும் ஸ்டேசன் மாஸ்டரும் அந்த ஏழையின் ஏழ்மையைக்கூட பாராமல் அவனிடம் உள்ள ஒருபடி அரசியை பிடுங்கி கொண்டு அவனை குற்றவாளியாக்கினர்.. அவன் நான் சிறைக்குச் சென்றுவிட்டால் எனது குடும்பம் பட்டினியாக இருக்கும். இந்த அரிசியை எடுத்துக்கொள்ளுங்கள் அபாரதம் வேண்டும் என்றாலும் கட்டிவிடுவேன் என்று ஒரு ரூபாய் எடுத்துக் கொடுத்தான். இதை பொருட்படுத்தாத அதிகாரிகள் அவனை குற்றவாளியாக்கினர். இதை பார்த்துக்கொண்டிருந்த தலைமை மாந்தர் ஸ்டேசன் மாஸ்டரிடம் சென்று பணக்காரர்கள் எல்லாம் மூட்டை மூட்டையாக அரிசி எடுத்து செல்கின்றனர். அது உங்கள் கண்ணுக்கு தெரியவில்லையா இந்த ஏழையின் ஒரு படி அரிசி மட்டும் உங்கள் கண்ணுக்கு தெரிகிறதா என்ற காவலர் தலைமை மாந்தரை கீழே தள்ளினார். அவர் உடனே எழுந்து ஒரு அரைக்கொடுத்தார் இங்கு பணக்காதரர்களுக்கு பாதுகாப்பாகவும் ஏழைகளுக்கு திருடனாகவும் அதை தட்டிக்கேட்டவரை குற்றவாளியாக்கி சிறை தண்டனைக்குட்படுத்தினர்.

சுதந்திரம்

காந்தியடிகள் இந்தியாவிற்கு சுதந்திரம் வாங்கி தந்தார். அனைவருமே சுதந்திரமாக பேச, பழக, நடக்க என அனைவருக்கும் சமமான சட்டத்திட்டங்களை வகுத்தனர்.

பணக்காரன் எடுத்து வரும் அரிசி சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும்

எடுத்துவரப்படுகிறது. ஏழை எடுத்துவரும் அரிசி பாதிவழியில் திருடன் ஒருவன் ஒருபடி அரிசியை பிடிங்கி செல்கிறான். அவனுக்கு பாதுகாப்பு அளிக்கப்படாமல் பணக்காரன் எடுத்துவரும் அரிசிக்கு பாதுகாப்பாய் நிக்கின்றனர். ஏழை அரிசியை சுதந்திரமாய் எடுத்துவர முடியவில்லை.

ஒரு மாந்தர் சிறையில் பாரதியார் பாடலை பாடிக் கொண்டிருந்தான். அச்சிறையில் பூட்ஸ் சத்தம் கேட்டவுடன் பாடலை நிறுத்திவிடுகிறான். சுதந்திரமாய் ஒரு பாடலைக்கூட பாடமுடியவில்லை.

சுதந்திரம் என்பது பணகாரார்களுக்கும் அதிகாரிகளுக்கும் மட்டும்தான் கிடைக்கின்றது ஏழை குடும்பத்தினருக்கோ ஏழை தொழிலாளிக்கோ ஏழைக்காக குரல்கொடுத்தவர்கோ சுதந்திரம் கிடைக்கப்படுவதில்லை. அப்படி அவன் சுதந்திரமாக இருந்தன் என்றால் அவன் குற்றவாளியாக்கப்பட்டு தண்டனை அனுபவிக்கின்றான்.

முடிவுரை

மு.வ. அவர்கள். வாய்திறக்கமாட்டேன் சிறுகதையில் ஏழை மாந்தர்கள் பணக்கார மாந்தர்கள் என்று பிரித்து சட்டங்கள் அனைத்தும் பணக்காரர்களுக்கு மட்டுமே துணையாக நிக்கிறது. அதிகாரிகளும் அவர்களுக்கு மட்டுமே துணையாக செல்கின்றனர். இதனால் காந்தி வாங்கி கொடுத்மத சுதந்திரம் ஏழை மக்களுக்கும் தவறை தட்டிக்கேட்பவர்களுக்கும் சென்று அடையவில்லை. சுதந்திரமாக பணக்காரர்களும் அதிகாரிகளும் மட்டுமே உள்ளனர் என்று இச்சிறுகதையின் மாந்தர்களாக எடுத்துதுரைக்கின்றார்.

௧௨௮. மு. வ. புதினங்களில் தமிழ் இலக்கியச் செல்வாக்கு

முனைவர். பெ. ஆறுமுகம்
உதவிப் பேராசிரியர் - தமிழ்த்துறை
சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
பெரம்பலூர்.

தமிழின் மறுமலர்ச்சி வளர்ச்சிக் காலம் கி.பி. 1947-இல் தொடங்கியது எனலாம். அரசியல் விடுதலை, சமுதாயச் சீர்திருத்தம், பண்டைய இலக்கிய பண்பாட்டு உணர்வு, மொழிப்பற்று, நாட்டுப்பற்று முதலானவை இலக்கியத்தில் இடம் பெற்ற காலம். இந்தக் காலம், இந்தப் பொற்காலத்தில் தம் எழுத்தால் கால் நூற்றாண்டுக் காலம் தமிழகத்து மக்கள் நெஞ்சில் ஆட்சி செலுத்தியவர் மு. வரதராசன் ஆவார். இவர் தமிழில் இருவேறு நோக்கில் பாராட்டுதற்கு உரியவர். இலக்கியப் படைப்பாளர் நோக்கு ஒன்று, இலக்கியத் திறனாய்வாளர் நோக்கு மற்றது. இவற்றில் படைப்பிலக்கிய நோக்கில் பார்த்தால் அவர் இயற்றிய புதினங்கள், சிறுகதைகள், நாடகங்கள், சிறுவர் இலக்கியங்கள், கடித நூல்கள் ஆகியன இடம் பெறும் மற்ற நூல் யாவற்றிலும் அவர் எழுதிய புதினங்களே அவரைத் தமிழக மக்கள் அனைவர்க்கும் சிறப்பாக அறிமுகப்படுத்தியதாலும், பெருமைபடுத்தியுள்ளதாலும் மு.வ. புதினங்கள் இங்குச் சிறப்பாக நோக்கப் பெறுகின்றன.

மு.வ. புதினங்களில் சமூகச் சிந்தனை

சமுதாய பொருளாதாரச் சிந்தனைகளை மக்களிடம் வழங்குவதற்குத் தம் காலத்தில் வாய்த்த எளிய இனிய சாதனமாக நாவல் இலக்கிய வகைமையை அவர் கருதியதும், நாவல் எழுதுவதன் வழி இவர் மூன்று பணிகளைச் செய்து வந்தார். முதலாவது, தம் சிந்தனைகளை மக்களிடையே பரப்பியது. இரண்டாவது, ஒரு குறிப்பிட்ட சிலருக்காக ஒன்றில்லாமல் நாவல் என்பது அனைவருக்கும் உரியது. கல்விக்கழகங்களில் பாடமாகப் பயிலத்தக்கது என்றும் தகுதிப்பாடு நாவல்களுக்குக் கிடைக்குமாறு செய்தமை, மூன்றாவது, ஓர் இனமொழி, ஓர் இடமொழி என்றில்லாமல் செறிந்த புலவர்மொழி, மரபு கடந்த, மரபை மறந்த, மரபை மதிக்காத பாமரர்மொழி என்றில்லாமல் அனைவரும் ஏற்கத்தக்க பொதுத் தமிழ்மொழி நடை ஒன்றை உருவாக்கியது என தம் புதினங்களில் சமூக சிந்தனைக் கருத்துக்களை முன்னிலைப்படுத்தியுள்ளார்..

புதினங்களில் புதுநெறி

தாம் வாழ்ந்த சமுதாயத்தைப் படைத்துக் காட்டும் போது தனிமனிதனை அன்போடும் அருளோடும் பரிவோடும் படைத்த ஒரு பாங்கினை மு.வ.விடம் காணமுடிகிறது. தமிழர்கள் பின்பற்றி வந்த

பண்பாட்டில் - வாழ்வு நெறியில் பயனிழந்த கூறுகளை அவன் வளர்ச்சிக்குத் தடையாக இருந்த கருத்துக்களை - செயல்களை - மூடப்பழக்க வழக்கங்களைத் தெளிவாக, விரிவாகத் தாம் படைக்கும் பாத்திரங்கள் வழி பேச்சாகவும், செயலாகவும் புதினங்களின் வழி எடுத்துரைத்துள்ளார். இத்தகைய படைப்பாளர் மு.வ.வை அவர் காலத்தில் வாழ்ந்த நாவல் ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதே நேரத்தில் தமிழ் ஆசிரியர்கள் இவர் படைப்பில் போக்கை ஒத்துக்கொள்ளத் தயங்கினார்கள், பழிக்கவும் செய்தனர். இப்படியே மிகப் பிற்போக்குவாதிகள் இவர்தம் சீர்திருத்த சிந்தனைகளை நாத்திக வாதமாகக் கொண்டனர்.

திருக்குறளும், சிலப்பதிகாரமும்

மு.வ. தம் பாத்திரங்களின் வழி சமுதாய பிரச்சினை பலவற்றை அலசி ஆராய்ந்து தீர்வு காண்பதற்குத் திருக்குறள், சிலப்பதிகாரக் கருத்துக்களையும், காப்பிய மாந்தர்களையும் பயன்படுத்திக் கொள்கிறார். அவ்வகையில் திருக்குறளின் சிறப்பும், சிலப்பதிகாரத்தின் பெருமையும் துலக்க முறுகின்றன. அவற்றின் செல்வாக்கும் நமக்குத் தெளிவாகின்றது. கள்ளோ காவியத்தில் திருக்குறள் வழி மங்கை அருளப்பன் திருமணம் நிகழ்கிறது. ஆசிரியர் முருகப்பா, ஓர் அதிகாரம் படி அம்மா, எங்கள் காது கேட்டு மகிழட்டும் என்றார். மங்கை வழக்கமான அமைதியோடு அன்புடைமையில் பத்துக் குறளும் படித்தாள். இறுதியில் தாயுமானவரின் கிளிக்கன்னி பாடி முடித்தார். இவ்வாறு திருக்குறள் தமிழர் திருமணகளில் முறையாகச் செயல்படுத்தப் பெற வேண்டும் என்னும் தம் எண்ணத்தைப் புலப்படுத்துகிறார்.

செந்தாமரையில் கதைத் தலைவன் இளங்கோ என் திருமணத்தில் அந்தக் காமத்துப்பாலையும் மந்திரமாக ஓத வைக்க வேண்டும். மந்திரக்காரனும் தந்திதரக்காரனும் வேண்டா, ஆடம்பரமும் ஆரவாரமும் வேண்டா மருதப்பன் போதும், திருக்குறள் ஓதுவான் என்று வலியுறுத்துவதாகக் குறிப்பிடுகிறார்.

சங்க இலக்கியம்

'தமிழ்நாட்டில் சிந்தனை ஆற்றலுடன் கற்பனை வளத்துடன் வளர விரும்புகின்ற இளைஞர்களுக்காக எழுதுகிறேன்' என்பது மு.வ. உரை, கலை வாழ்க்கைக்காகத்தான் என்பதில் உறுதியான கொள்கை உடையவர். 'விருந்து' என்றும் 'ஆராய்ச்சி' என்றும் சங்க இலக்கியத்தை அறிமுகப் படுத்தியதோடு அமையாமல் தம் புதினங்களிலும் அவற்றைத் தக்கவாறு பயன்படுத்திக் தமிழர்க்குத் தம் பண்டைத் தமிழ்ப் பண்பாட்டை, காதல் உணர்வை புதின அமைப்பின் வழி, கதைமாந்தர் படைப்பின் வழி, அவர்கள் உரையாடல் வழி காட்சிப் புனைதல் வழி எல்லாம் புலப்படுத்தியுள்ளார்.

அவருடைய புதினம் 'பாவை' சங்க இலக்கிய அகப்பொருள்,

களவொழுக்கத் துறைகளாகிய பகற்குறி, இரவுக்குறி ஒரு வழித்தணத்தல், அம்பல், அலர், இச்செறிப்பு, பசலை, தோழி உடன்போக்கு முதலியவற்றின் பின்னணியில் காலத்திற்கேற்பச் சூழ்நிலை மாற்றப் புனைவோடு தம் புதினங்களில் சங்க இலக்கியங்களை சான்றுகாட்டியுள்ளார்.

திருவாசகம்

தமிழ்ச் சமய நூல்களில் திருவாசகம், தாயுமானவர் பாடல் இரண்டும் அவர் இளமையிலிருந்து இறுதிக் காலம் வரை போற்றிப் பாராட்டிய நூல்கள். வேலம் தாழை ஓடைக்கரையில் தொடங்கிச் சென்னை அரசினர் மருத்துவ நிலைய சிறப்பு இதயப்பிரிவு அறையில் உயிர் பிரியும். வரை அவர் நெஞ்சில் நிலைத்தன - வாயில் தவழ்ந்தன திருவாசக, தாயுமானவர் பாடல்களே.

மு.வ.வின் ஒன்பதாவது புதினம் கயமையில் *(1956)* இல் திருவாசகம் அறிமுகப்படுத்தப் பெறுகிறது. காலத்திற்கு ஏற்ப அதன் பாடல் சில புதிய நோக்கில் கருத்தரைக்கப் பெறுகின்றது. மண்குடிசையில் மெய்கண்டார் கண்ட அறிவியல் வழிபாட்டுக்கு உரிய பாடல் பல திருவாசகத்தில் அடங்கியுள்ளமை எடுத்துரைக்கப் பெறுகிறது.

திருவாசகம் சைவசமயச் சான்றோர் இறந்தபோது பலர் படிக்கிறார்கள். அதனால் பொதுவாக, தமிழ் இலாக்கியம், திருவாசகம் பற்றி அறியாத பலர் திருவாசகம் என்றால் சாவுப்பாட்டு என்றே நினைக்கும் நிலை தமிழகத்துப் பாமர மக்களிடையே நிலவலாயிற்று. இது மு.வ. உள்ளத்தை உறுத்தியது. தம் புதினம் கயமையில் கயவன் கேசவராய நண்பர் தங்கசாமி மேடைச் சொற்பொழிவாற்ற உதவியாக சேர்ந்த ஒரு புலவர் காலையில் திருவாசகத்திலிருந்து சில பாடல்களை அவனுக்குப் பாடி உரைக்கிறார். திருவாசகம் என்ற பயர் கேட்ட உடனேயே,

'அடடா எங்கள் அப்பா இறந்து போனபோது இதைத்தான் தேடினார்கள்' என கூற அந்தக் தவறான கருத்தை தனது புதினங்களின் வழியாற்றுகிறார்.

நிறைவாக

மு.வ. அவர்கள் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாய்த் திகழ்ந்தார். பழந்தமிழ் இலக்கியங்களைப் போற்றுவதிலும், தொன்று தொட்டு வரும் தமிழ்ப் பண்பாடுகளை, நெறிகளைக் காப்பதிலும் அவர் தலைசிறந்து நின்றார். அதே சமயத்தில் இன்றைய உலகப் போக்கை ஒட்டி அறிவுக்கு ஒத்த முறையில் நம் மொழியை வளர்க்க வேண்டும், நம் பழக்க வழக்கங்களைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டும் என்பனவற்றிலும் அவர் முன்னோடியாக விளங்கி தனது புதினங்களில் தமிழ் இலக்கிய செல்வாக்கினை உயர்வடைய செய்துள்ளார்.

129. பாவை நாவலில் பெண்களின் தனித்தன்மைகள்

மா. சத்தியா
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு
தூய நெஞ்சக் கல்லூரி
திருப்பத்தூர்.

மு.வ.-வின் குறிப்புகள்

அன்னை அம்மாக்கண்ணம்மாளுக்கும் அறிவில் சிறந்த தந்தை முனுசாமிக்கும் செல்லப் பிள்ளையாக 25.4.1912 ஆம் ஆண்டு வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரியில் பிறந்தார். இயற்பெயர் திருவேங்கடம். தாத்தாவின்பெயரை இடுதல் என்னும் குடும்ப மரபுப்படி வழங்கிய பெயரே 'வரதராசன்' என்பதாகும். அவர் 1935 ஆம் ஆண்டு தம் மாமன் மகளான ராதா அம்மையாரை மணந்தார். அவருக்குத் திருநாவுக்கரசு, நம்பி, பாரி எனும் ஆண் மக்கள் மூவர் உள்ளனர்.

பெண்ணியம் பற்றிய சிறு விளக்கம்

பெண்களுக்கு எதிரான கொடுமை உலகம் முழுவதிலும் இருந்தது பின்னர் பெண்ணிய இயக்கம் உருப்பெற்றது. இதை தொடர்ந்து அமெரிக்காவில் பின் தமிழகத்தில் சென்னையில் உருவானது. ஆனால் பெண்கொடுமைகள் முழுமையாக ஒழியவில்லை. இன்றைய சூழ்நிலையில் பெண்களுக்கு ஏற்படும் கொடுமைகள் நிகழ்ந்துக் கொண்டுதான் இருக்கிறது. மு.வ. அவர்கள் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே தமிழக சமூகக் கட்டமைப்பை உள்வாங்கி, பெண்களின் நிலை உயர பாடுபட்டார் என்பது அறியமுடிகிறது. மு.வ. அவர்களின் பெண்ணிய கதாபாத்திரச் சித்தரிப்புகள் இங்குப் பாடுபொருளாக அமைகின்றன.

மு.வ. வின் பாவை நாவல் வாயிலாக வெளிப்படுத்தும் பெண் கதாபாத்திரங்கள்

பாவை
சின்னம்மா
கமலம்

இவர்களின் பாத்திர படைப்பை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பாவையின் குணநலன்கள்

பாவை வீட்டில் அதிகமான பாசமுடன் வளர்ந்தாள். இளம் வயதில் தனது படிப்பை நிறுத்திவிட்டாள். பாவை சிறுமியாக இருந்த போது தெருவெல்லாம் அவளுடைய ஆடலும் பாடலும் நிரம்பியிருந்தன.

பள்ளிக்கூடச் சிறுமியாக இருந்தபோது பறந்து பாடும் பறவையாகவும் விளங்கினாள். தனது தம்பியுடன் விளையாடுகின்றபோத சிறுசிறு சண்டைகள் போடுவாள். சிறிதுநேரம் கழித்து ஒன்றாக இருப்பாள். பருவம் அடைந்த பின்பு வீட்டில் அடைபட்டாள். அவளுடைய உள்ளம் உணர்ந்ததை அறிந்தாரும் இல்லை அவளுடைய கண் விடுத்த செய்திகளைக் கற்றாரும் இல்லை.

ஆளுமை

பாவை தனக்கு சின்னம்மா வீட்டில் நடந்த கொடுமையில் தன்னை பாதுகாத்துக்கொள்வதற்காக வீட்டைவிட்டு வெளியேறுகின்றாள். சின்னம்மாளின் தவறான எண்ணங்களை உடைத்தெறிந்தாள். பாவை இச்சமூக இன்னல்களுக்கு அஞ்சி ஆண்வேடம் பூண்டு வாழ்கிறாள்.

தன்னை யாரும் அடையாளம் கண்டுபிடிக்ககூடாது என்று தனது 'அழகான தலைமயிரை அறுத்துக் கொண்டாள். தனக்கு நடந்த கொடுமைகளை எண்ணி வருந்தாமல்,இச்சமூகத்தை எதிர்த்து தனது ஆளுமையின் மூலம் வாழ்ந்து காட்டுவதை அறியமுடிகிறது.

கதைப் போக்கு

பாவை என்னும் நாவலில் பாவையின் வாழ்க்கை நிகழ்வுகளை எடுத்துக்காட்டியுள்ளார். பெண்களின் குணநலன்களையும் இதில் சித்தரித்துகாட்டியுள்ளார்.

சில சமயங்களில் சாதியினை தலைத்துக்கி காட்டியுள்ளார். பாவை தாழ்ந்த சாதியுடையவள். பழனி உயர்ந்தசாதியுடையவன் என்று சாதியினை வெளிக்காட்டியுள்ளார் மு.வ.

காதல் சுதந்திரம்

இருவீட்டாரும் நல்ல முறையில் பழக்கமுடையவர்கள் பழனி. பாவையின் காதல் இருவீட்டாருக்கும் தெரிந்தபின் மனவருத்தடடைகின்றனர். பாவை, பழனியும் ஊரைவிட்டு வெளியேறுகின்றனர். கொஞ்ச நாள் இருவீட்டாரும் அவர்களுக்கு சம்மதம் தெரிவித்தனர்.

சின்னம்மா

பாவையின் அம்மாவின் தங்கை சின்னம்மா இவளுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். இவளுக்கெள கொஞ்சம் கழனி உள்ளது. ஏதோ கவலையில் உள்ளாள் என்பதைத் தெரிந்துகொண்டான்.

புாவையினைப் பார்ப்பதற்கு வேலுப்பிள்ளை ஒரு சமயம் வந்தான். அப்பொழுது பாவையின் முகத்தை பார்த்தான் ஏதோ கவலையில் உள்ளாள்

என்பதைத் தெரிந்துகொண்டான்.

அப்பொழுது சின்னம்மா கழனிவேலையினை முடிந்துவிட்டு வீட்டில் நுழைந்தாள் வேலப்பிள்ளை நான் பாவையினை அழைத்துபோகிறேன் என்று கூறியதும் இவள் சம்மதிக்கவில்லை.

சின்னம்மா மனதில் பாவை இங்கு இருந்தால்தான் தனது தம்பிக்குத் திருமணம் செய்ய முடியும் என்று எண்ணிக்கொண்டு இருந்தாள். வேலுப்பிள்ளையிடம் தனது தம்பியைப் பற்றி உயர்வாகக் கூறினாள்.

தனது தம்பி அண்ணனிடம் சண்டைப் போட்டுக் கொண்டு கோபத்தில் ஊருக்கு வந்திருப்பதாகக் கூறுகிறாள். ஊரில் கடைவைக்க இருக்கிறான். பக்கத்து வீட்டுக்காரர், ஏரிக் கான்ட்ராக்ட் எடுத்திருக்கிறதர். இவனை 80ரூபாய் சம்பளத்துக்குக் கூப்பிடுகிறார்கள். இனிமேல் சும்மா இருக்க முடியாது 9 வகுப்பு வரை படித்திருக்கிறான். அவன் படிப்பு அவனை காப்பாற்றும் என்று வேலுவிடம் உயர்வாகச் சின்னம்மாள் பேசினாள்.

வேலுவும் தனது மைத்துனன் நல்லவனாக இருக்கிறான் என்று எண்ணி அங்கிருந்து செல்கிறான். அவன் சென்றான் ஆனால் உண்மை அதுவல்ல சின்னம்மாவின் தம்பி தீய எண்ணம் கொண்டவன்.

பாவையினைத் தனது தம்பிக்குத் திருமணம் செய்துவிட வேண்டும் செய்த முயற்சியே கொடுமையானது அண்ணனிடம் சண்டையிட்டு வருமாறு கூறினாள். கடைவைத்துக் கொடுப்பதாக ஊக்கம் கொடுத்தாள் பக்கத்து விட்டுக்குச் சென்று தனது தம்பியை வீரன் தீரன் என்று பேசி வேலையை கேட்டாள் அவர்கள் நம்பிகை இல்லை என்று கூறினார்கள்.

பெண்களே எதிரிகளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர்

மு.வ தனது நாவலில் பெண்களே பெண்ணுக்கு எதிரிகளாகச் சித்தரித்து காட்டியுள்ளார்.

சின்னம்மா பாவையினைத் தனது தம்பிக்குத் திருமணம் செய்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணத்துடன் ஒரு தவறான செயலை செய்ய முயற்சி செய்தாள் அனால் அச்செயல் ஈடேறவில்லை.

இன்றைய காலக்கட்டத்திலுள்ள இவ்எண்ணம் கொண்ட பெண்கள் சமுதாயத்தில் வாழ்ந்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

பெண்களுக்கு எதிரான வன்கொடுமை

பாவைக்குத் திருமணம் செய்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணத்தில் சின்னம்மாவும் பழனியும் செயல்படுகின்றனர்.

யாரும் இல்லாசமயம் பார்த்து அண்ணாமலை வீட்டிற்கு வந்தான் - பாவையிடம் அக்கா உன்னை சோறு போடச் சொன்னாள் என்று கூறினான். ஆனால் அவன் கூறுவதைச் சற்றும் காதில் வாங்காதவாறு ஏதோ பிரம்மை பிடித்தவள் போல இருந்தாள் அவன் கூறியதும் சிறிது நேரம் கழித்து சோறு போட்டார்,அப்போது பழனி அவளிடம் தவறாக நடந்துக்கொள்வதற்கு முயற்சிசெய்தான் - ஆனால் முடியவில்லை.

சின்னம்மா அன்றிரவு அனைவருக்கும் தனித்தனியாக படுக்கையினை போட்டாள். ஆனால் சில மணிநேரம் கழித்து பாவையின் படுக்கையில் அண்ணாமலையிருந்தான் அதை பாவை உணர்ந்தால் இனிமேல் இங்கு இருக்கக்கூடாது என்று நினைத்து அங்கிருந்து வெளியேறினாள்.

இன்றைய காலக்கட்டத்திலும் பாவைக்கு ஏற்பட்ட கொடுமை போல பல பெண்களுக்கும் நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

கமலம்

கமலம் சாமிநாதன் இவர்கள் ஆர்காட்டில் வசிப்பவர்கள். சாமிநாதன் ஆசிரியர் வேலையினைச் செய்பவர். இவர்களுக்கு 3 குழந்தைகள் உள்ளனர்.

சின்னம்மா வீட்டிலிருந்து வெளியேறி பர்வை ஆற்காட்டில் உள்ள கமலம் வீட்டில் தஞ்சம் அடைந்தாள். கமலம் பாவையினை பார்த்து வீட்டினுள் அழைத்தாள். பாவை உள்ளே சென்றவுடன் அவளை யாரென்று கேட்கிறாள். பின்னர் பாவையின் துன்பத்தை ணர்ந்த கமலம் அவதைத் தன் வீட்டிலேயே தங்க அனுமதிக்கிறாள். தன்னுடைய குழந்தைகளையும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கமலம் கூறுகிறாள்.

கமலம் பாவையிடம் அன்புடனும் பாசத்துடனும் நடந்துகொண்டதால் பாவைக்குக் கமலத்தைப் பிடித்துவிட்டது. அவர்களிடம் தனது வாழ்க்கையில் நடந்த சம்பவங்களைக் கூறுவோம் என்று நினைப்பாள். அவளை பார்த்து தீரம்பி வந்துவிடுவாள். ஒரு சமயம் அவளிடம் தனது வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சியைக் கூறினாள். அதைக் கேட்டதும் கமலம் நெஞ்சம் கலங்கினாள்.

இச்செய்தியினைக் கமலம் தனது கணவனிடம் கூறினாள். அதைக் கேட்டதும் சாமிநாதன் எந்த தவறும் செய்யாத பெண்ணுக்கு இவ்வாறு துன்பமா என்று கலங்கினாள்.

இருவரிடமும் தனது காதலைப் பற்றி தெரிவித்தாள். அவர்கள் நீ இங்கு இருப்பது உனது அப்பா, அம்மாவுக்குத் தெரிவிக்க வேண்டுமா என்று கேட்டால் அதற்கு அவள் மௌனமாக இருந்தாள். யாருக்குத்

தெரிவிக்க வேண்டும் என்று நினைக்கிறாய் என்று கேட்டார்கள். அதற்கு பழனிக்குத் தெரிவிக்க வேண்டும் என்று அவர்களிடம் கூறினாள். அவர்களும் சம்மதம் கொடுத்தனர். அவள் பழனிக்குக் கடிதம் அனுப்டபினாள். அக்கடிதம் பழனிக்குக் கிடைத்தது.

பழனி பாவையிருக்கும் இடத்தினைக் கண்டுபிடித்தான். கமலம் பழனியைப் பார்த்து அவனை வீட்டினுள் அழைக்கிறாள். பாவையும் பழனியும் கமலமும் பேசிக்கொண்டு இருந்தனர். கமலம்பழனி வந்திருப்பதைத் தனது கணவருக்குத் தெரிவிக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டு இருக்கின்றபோது, சாமிநாதன் அங்கு வந்தான் - பழனியிடம் அவன் பேசினான். நீங்கள் இனிமேல் இங்கு இருக்கக்கூடாது என்று கூறினாள். இன்று இரவு 3 மணிக்கு சென்னைக்கு போக வேண்டும் என்று கூறினாள் அதற்கான ஏற்பாட்டினை நான் செய்துள்ளேன் என்று அவர்களுக்கு தெரிவித்தான். கமலம் சென்னையில் இவர்களை யார் வீட்டில் தங்கவைப்பது என்று கேட்டாள். அவன் தனது நண்பன் வீடான கண்ணப்பா எழுத்தாளர் வீட்டில் தங்குவதற்காக அவர்களை ஒரு கவரில் 80ரூபாய் வைத்துக் கொடுத்தனர். பின் அவர்களை இரயிலில் அனுப்பிவைத்தான்.

இன்றைய காலத்திலும் மற்றவர்களுக்கு உதவி செய்யும் எண்ணம் கொண்டவர்கள் வாழ்ந்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்..

130. மு. வ. வின் நல்வாழ்வு சிந்தனைகள்

பேராசிரியர் வெ. இராமு
தமிழ்த்துறைத் தலைவர்
சண்முகா தொழிற்சாலை
கலை அறிவியல் கல்லூரி
திருவண்ணாமலை.

மு.வ. அவர்கள் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்.வம் என்ற பழமொழிக்கு இலக்கணமாய்த் திகழந்ததோடு, பிறரும் இன்பியல் வாழ்வு வாழ வேண்டும் என்று விரும்பியவர். அவ்விருப்ப வேகம் பிரவாகமாகப் பொங்கி எழுந்ததின் காரணமாக நல்வாழ்வு (1973) எனும் நன்னூலை நாட்டிற்கு நல்கினார். மு.வ. அவர்கள் இலக்கணம், இலக்கியம், மொழியியல், நாவல், சிறுகதை, நாடகம், கட்டுரை , வாழ்க்கைவரலாறு, ஆங்கில நூல்கள் மற்றும் மொழிபெயர்ப்பு என தாம் பயணித்த தமிழ்சார் தடய அனுபவங்களை 85 நூல்களாக பதிவு செய்துள்ளார்.

உலகம் சுற்றிய முதல் தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய மு.வ. 62 அகவை மட்டுமே வாழ்ந்து அரும்பணியாற்றி பெரும்புகழ் ஈட்டி இறைநிழலில் கலந்தவராவார். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என்ற பழமொழி, உடல்நலத்தை சரியாகவைத்துக் கொண்டால்தான் உளநலம் சரியாக இருக்கும் என்பதை பூடகமாக தெரிவிக்கிறது. வாழ்வு நலமாக அமைய விரும்பின் உளநலம் (Mentally), உடல்நலம் (Physically) இரண்டையும் பாதுகாக்கவேண்டும். குறிப்பாக, மலச்சிக்கல், மனச்சிக்கல் ஏற்படாது காக்க வேண்டும். இவ்விரு நலம்சாாந்த சிந்தனைகளை பத்து கட்டுரைகளின் வழி தமது நல்வாழ்வு என்ற நூலில் மானுட சமுதாயத்திற்குச் சுட்டிச்செல்கிறார்.

வழிபாடு

நலம் சார்ந்த வாழ்விற்கு பலம் கொடுக்கும் நூலாக விளங்கும் திருக்குறள் கடவுள் வாழ்த்தினை முதல் அதிகாரமாகக் கொண்டு தொடங்குகிறது. தமிழில் தோன்றிய பெரும்பான்மை இலக்கிய நூல்களும் இலக்கண நூல்களும் கடவுள் வாழ்த்தோடு தொடங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது மு.வ.வின் நல்வாழ்வு நூல் வழிபாடு என்ற கட்டுரையை முதலாக் கொண்டு தொடங்குகிறது.

'கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழார் எனின்' என்ற குறட்பா வெற்றிவை வெளிச்சம் போட்டு காட்டுகிறது. அறிவால் ஞானத்தை பெற முடியாது. இறை உணர்வால் பெறமுடியும் என்பதை அறிதல் நலம். அறிவியல்துறை முதலான பல்வேறு துறைகளால்

விண்ணில் பறக்கவும் கடலினுள் இறங்கவும், அழிவுக்கருவிகளை ஆக்கவும், சந்திரமண்டலம் சென்று வரவும் முடிகிறது. ஆனால் அறிவியலைக் கொண்டு வாழ்வின் அடிப்படை உண்மைகளை தெளிவாக உணர முடியவில்லையே என்கிறார் மு.வ. எப்படி என்ற வினாவிற்கு விடை காண ஆராய்ச்சி உதவுகிறது. ஆனால் ஏன் என்ற வினாவிற்குப் பல இடங்களில் விடைகாண முடியவில்லை என்கிறார்.

சான்றோர் பலர் வாழ்வின் அடிப்படையை உணரத்தலைப்பட்டு ஏன் பிறந்தோம்? ஏன் வாழவேண்டும்? முடிவு என்ன? அப்பால் உள்ளது என்ன? என ஆராயத் தலைப்பட்டு தம் உணர்வுக்கு எட்டியவற்றை கதைகளாக, தத்துவங்களாக, பாடல்களாக வெளிப்படுத்தியுள்ளனர். அவற்றின் வழியாக உள்ள உண்மை, பரம்பொருள் ஒன்று உண்டு என்பதும் அந்த கடவுளின் நெறியில் அன்பும் உண்மையும் ஒளிர்கின்றன. வாழ்க்கையை அந்த நெறியில் அமைத்து நடத்தினால் எளிதாக அமையும் என்று கூறி வாழ்க்கையின் முதலும் முடிவும் கடவுளைச் சார்ந்தவை என்று தெளிந்து அந்த வழியில் சி-ந்தையைச் செலுத்துதலே வழிபாடு ஆகும் என்கிறார். உருவ வழிபாடா? அருவ வழிபாடா? எது சிறந்தது என்று போராட வேண்டாம், அவரவர் மன ஒருமைப்பாட்டிற்கு எது உதவி புரிகிறது என்று நம்புகிறார்களோ அதைப் போற்றலாம் என்று கூறும் மு.வ. மதச்சார்பின்மையை வலியுறுத்துகிறார் என்பதனை அறியலாம். காஞ்சிபுரத்தில் உள்ள யானைக்கு பட்டைப் போடுவதா? நாமம் போடவதா? என்ற பிரச்சினை என்று வந்தபோது அது சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடியது. ஆம், அது மதம் பிடித்து ஓடவில்லை. அவர்களது மதம் பிடிக்காது ஓடியது என்ற வாலியின் வரிகள் இங்கு நினைவுகூறத்தக்கது.

ஒரு பரம்பொருள் உண்டே தவிர, வெவ்வேறு தெய்வங்கள் இல்லை என்ற தெளிவு வேண்டும். நாம் எந்தக் கடவுளை வழிபடுகிறோமோ அவரே மற்ற சமயத்தாரையும் படைத்தும் காத்து வருகிறார் என்ற இந்தத் தெளிவு இல்லையானால் ஆத்திகம் என்று கூறப்படும் கடவுள் நெறியில் முதல்படியையும் அடையவில்லை என்றே கருதவேண்டும். சடங்குகளே முதன்மையானவை என்று நம்பிவிடக்கூடாது.ட சடங்குகளை வற்புறுத்தினால் நாத்திகம் பெருகுமே தவிர வேறு பயன் விளையாது. பணம், பொருள், சடங்குகள் இவைகளாலி கடவுளின் அருளைப்பெறமுடியாது என்ற கருத்துக்களையெல்லாம் வழிபாட்டில் பதிவு செய்கிறார்.

நம்பிக்கை

இக்கட்டுரையில் மனிதனின் முன்னோர்களைப்போல அமைதியாக வாழ முடியவில்லை. பல வகையிலும் உதவி வருகிற அறிவியல் வாழ்க்கையின் அமைதிக்கு அவ்வளவாக உதவிச்செய்ய முடியவில்லை. நன்றாக வாழக் கற்றுக்கொள்ளவில்லை இதற்கான காரணம், முன்னோர்

சொன்னவழிகள், அவர்கள் நடந்து பயன் கண்டவழிகள், தேய்ந்த ஒற்றையடிப் பாதைகள் போன்றவற்றை நம்ப மனமில்லை. புதிய வழிகளைச் செம்மையாக வகுத்துகி கொள்ளவும் முடியவில்லை என்கிறார். அறிவியல் தரும் விளக்கங்களை மனம் நம்புவது போல், அன்பு, அருள், உண்மை, நன்றியுணர்ச்சி வேண்டும் என்று சான்றோர் அறிவுறுத்தியவைகளை திருக்குறள் முதலான நீதிநூல்கள் தெளிவாக உணர்த்தியும் அறநெறியை - வாழ்க்கைநெறியை நாம் நம்பவில்லை என்று வருந்தும் மு.வ.மனமானது அறிவியலுக்குப் பணிவதுபோல் அறநெறிக்குப் பணிவதில்லை என்கிறார்.

ஒருசிலர் நீதியாக வாழாமல், அறநெறியில் நடக்காமல், பெருஞ்செல்வராகவும், பெரிய பதவியில் உள்ளவராகவும் மாறிவிடுகிறார்கள். அவாகளைப் பார்க்கும் இளைஞர்கள் நாளடைவில் நீதியினும் அநநெறியினும் நம்பிக்கை அற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள். மனம் போனபடி வாழமுற்படுகிறார்கள். அது தவறு என்கிறார். தூயவர் துன்பப்படுவதும் தீயவர் இன்பப்படுவதும் உண்டு. ஆனால் மேற்கண்டவை நிலையில்லை, மாற்றத்திற்குரியது என்பதனை நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும் என்ற குறளைக் காட்டி விளக்குறிர். காட்டிலுள்ள தீங்கு செய்யும் சிங்கம் புலி முதலியன பகலில் மறைந்து இரவில் திரிகின்றன. தீங்கறியா மான், முயல் முதலியன பகலில் நல்ல ஒளியில் காட்டின் வெட்டவெளியில் திரிந்து வாழ்கின்றன. கெட்ட விலங்குகள் ஒன்று சேராமல் பிரிந்து வாழ்கின்றன. நல்ல உயிர்கள் கூட்டம் ட்டமாக ஒற்றுமையாய் வாழ்கின்றன. காட்டில் உள்ள இந்த நிலைமை நாட்டில் வேண்டும். நாட்டின் நீதிமன்றங்களிலும் அலுவலகங்களிலும் கடைத்தெருக்களிலும் தீயவர்கள் தலைநிமிர்ந்து திரிகிறார்கள், நல்லவர்கள் அஞ்சிவ ாழ்கிறார்கள். அது மறைய வேண்டும். அறநெறியில், நல்வழியில் பலர்க்கு நம்பிக்கை ஏற்பட்டால் இது நிகழும் என்கிறார்.

உடம்பைப்போற்றல்

இக்கட்டுரையில் உடல்நலம் ஓம்பலை வற்புறுத்துகிறார். ஒரு காரினை வாங்கி அளவறிந்து நெறியறிந்து ஓட்டினால் அந்தக்கார் நெடுங்காலம் பயன்படும், இன்பம் தரும். இல்லையானால் அது விரைவில் கெடும். கவலையும் இடையூறும் பெருகும். மனித உடம்பும் அப்படிப்பட்டதுதான். உண்ணும் உணவில், உழைக்கும் உழைப்பில், உறக்கத்தில் என எதிலும் ஓர் அளவு, நெறி வேண்டும் என்கிறார் மு.வ. நாக்கு வெறுப்பனவற்றை குடலுக்குள் தள்ளக்கூடாது. மிகுசுவை நாக்கிற்கு இலஞ்சம் போன்றது. பரபரப்பாக உழைத்த காந்தியடிகள், உண்ணும்போது மட்டும் அமைதியாக, குறைந்தது அரைமணி நேரத்தையாவது செலவிட்டுள்ளார் என்கிறார் மு.வ.

அளவான உணவு நிறைவான வாழ்வு சுவைகளைக் கட்டுப் படுத்துதல் சத்துணவை உட்கொள்ளல், காய்கறிகளை அரைவேக்காட்டுடன் உண்ணல் வேண்டும். உழைத்த உடம்பை பழுதுபார்ப்பதற்கு உரிய ஏற்பாடு உறக்கம் என்று கூறி அதிலும் அளவையும் முறையையும் அமைத்துக் கொள்ளவேண்டும். காற்றோட்டமுள்ள இடத்தில் ஒளியும்-ஒலியும் குறைந்த இடத்தில் - ஏழு அல்லது எட்டு மணிநேரம் ஆழ்ந்த உறக்கத்தில இருப்பது நல்லது என்று கூறி படைப்பில் அமைந்த வியக்கத்தக்க விந்தைகளுள் மிகச் சிறந்தது உடம்புதான், அதனை திருமூலர், திருவள்ளுவர் கூறியபடி பாதுகாக்கவேண்டும் என்கிறார் மு.வ. அவர்கள்.

எளிமை ஓர் அறம்

இல்லற வாழ்வோ! துறவற வாழ்வோ! எதுவாயினும் எளிமையோடு, தன்னிடம் இருப்பதை பிறர்க்கு உதவி செய்து, ஆடம்பரச் செலவு செய்யாது எளிய வாழ்க்கை நடத்துவோர் துறவிகளுக்கு நிகரானவர்கள். எளிமையும் சிக்கனமும் தொடர்பு உள்ளவை. ஆடம்பரமும் திருட்டும் உறவு உடையவை. அளவறிந்து வாழ்க்கை நடத்தாதவர்களே திருட்டில் ஈடுபடுபவர்கள் என்ற குறள் கருத்தை மு.வ. ஆமோதிக்கிறார். இன்சொல், ஈகை முதலியவற்றை எப்படி அறம் என்று போற்றுகின்றோமோ அப்படியே எளிமை, சிக்கனத்தை போற்ற வேண்டும். உண்மையான கடவுள் நெறி உடையவனாக இருந்தாலும், உண்மையான சமுதாயக்கொள்கை உடையவனாக இருந்தாலும் ஒருவன் ஈடம்பரத்தை நாடவேமாட்டான் என்று கூறி சமுதாயத்திற்கு தொண்டு செய்யும் வகையில் நடப்பதே உண்மையான கடவுள் பூசை, ஆடம்பரத்தை துறந்து வாழ்வது இக்காலத்துக்கு வேண்டிய அறமாகும் என்கிறார்.

உரிமையும் கடமையும் : உரிமை இல்லாத வாழ்வு உயிரற்ற வாழ்வு. நாம் உலகத்திற்கு செலுத்தவேண்டிய வரி ஒன்று உண்டு. அது தான் கடமை. கடமையைச் செய்யத் தவறுகிறவர்களுக்கு உரிமை கிடையாது. உரிமையும், கடமையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை. உரிமையை மட்டும் விரும்பி கடமையை புறக்ககணித்தால், குழப்பம்தான் மிஞ்சும் என்கிறார் மு.வ. கடமை தவறும்பட்சத்தில் குடும்பப்போராட்டம், நாட்டுக்கலகம், உலகப்போர் முதலியவற்றைக் தவிர்க்கமுடியாது என்கிறார். 1973-ல் இவர் சொன்னவை உலக அரங்கில் நர்த்தனம் புரிவதை நம்மால் தற்போது அறியமுடிகிறதல்லவா? உரிமையைவிடக் கடமையைப் பெரிதாகப் போற்றி வாழ்ந்தால் இது போன்ற நிகழ்வுகள் நிகழாது என்கிறார். எந்த உழைக்கும் வேலைகளும் இழிவானவை என்ற எண்ணம் நம் மனதைவிட்டுப் போக வேண்டும் என்கிறார். நம் வேலையை நாம் செய்தால் நாடும் வீடும் நலம்பெறும் என்பது அவர்தம் கொள்கையாகும்.

புலனடக்கம்

ஐம்பொறிகளுக்கும் இன்பம் வேண்டும். அதை நாடுவதிலும் நுகர்வதிலும் அளவு, முறை வேண்டும். மனம்போனபடி இன்பத்தை நாடுவது, சுவைகளை பெருக்கி அளவுகடந்து உண்பதைப்போல் தீமையில் முடியும். உடலி நலத்திற்கு கெடுதி ஆகாத வகையில் புலனின்பங்களை அமைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார். மேலும் புலனொடுக்கமோ அல்லது புலனலைவோ தேவையில்லை. வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் தேவையான தீமையற்ற சில இன்பங்களைத் தந்து புலன்களை தன்வசமாக ஆளுதல்தான் புலனடக்கம். புலன்கள் நமக்கு குற்றேவல் செய்யவேண்டும். அவற்றிற்கு நாம் 'உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான் வரன் என்னும் வைப்பிற்க்கோர் வித்து' என்ற குறளைச் சிறப்பு செய்கிறார் என்பது தெளிவே..

மனவலிமை வேண்டும்

இக்கட்டுரையின்வழி உலகத்தைத் திருத்துவதைவிட உடம்பைத் திருத்துவது எளிது. உலகத்தைத் திருத்த வரிந்துகட்டி ஓடுகின்றவர்களும் உடம்பைத் திருத்த முயல்வதில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக மனதை செம்மைப்படுத்திக் கொள்வோர் மிகமிகக் குறைவு என்கிறார். மனதை செம்மைப்படுத்தும் துறையில்தான் பலரும் முயலவும் முன்னேறவும் வேண்டும். காந்தியடிகள் இளம்வயதில் பயங்கொள்ளியாக இருந்து பிறகு அஞ்சாமையின் திருவுருவாக மாறினார். கண்டபடி அலைந்த மனம் புத்தர்மனம் போல அமைதிபெறமுடியும். இவ்விருவர்தம் மனமும் எண்ணிய எண்ணியாங்கு எய்தியதை எடுத்துக் கூறும் மு.வ. சோம்பலுக்கு இடம்தரும் மனம் விடாமுயற்சியைப் போற்றும் மனமாக முடியும் என்றும் வாதிடுகிறார். மனம் சொர்க்க நரகத்தைப் படைக்கும் ஆற்றல் உடையது. மனம் போலவே வாழ்வு அமையும். இவற்றிற்கெல்லாம் மனம் அடிப்படையாக இருந்தும் மனத்தை மக்கள் பண்படுத்துவதற்கு முயல்வதில்லை. மனம் பண்பட வேண்டுமானால் பண்பட்ட வாழ்க்கை வாழ்ந்தவர்களின் வரலாறுகளைப் படிக்கவேண்டும். அவர்கள் சொன்ன சொற்களை அல்லது எழுதி வைத்த எழுத்துக்களைத் திரும்பத்திரும்பப் படித்து உணரவேண்டும். அங்ஙனம் செய்தால் நாம் எண்ணியது கைகூடும் என்கிறார் மு.வ. பரிபாடல் புலவர் இறைவனிடம் யான் வேண்ளுடுவது பொன்னும் பொருளும் போகமும் அல்ல. அன்பும் அருளும் அறமுமே என்பதைச் சுட்டி, முதல் மூன்றும் உலகத் தொடர்பானது, இவற்றை நாம் நினைத்தபடி அடையமுடியாது. மனத்தின் தொடர்பான பின் மூன்றையும் விரும்பி முயன்றால் முயற்சிக்கு ஏற்ப அடைய முடியும் என்ற உண்மையை உணர்ந்தே அப்புலவர் வேண்டினார் என்கிறார் மு.வ. பொய்சொல்ல மனவலிமை தேவையில்லை.

உண்மையை பேசுவதற்குத்தான் மனவலிமை வேண்டும். மனவலிமை ஏற்பட ஆத்திரமும் அலைச்சலும் குறைந்து, தெளிவு வளரும். முன்னோர்கள் ஏற்படுத்திய நோன்புகள் மனவலிமை பெறுவதற்கு உதவியாக ஏற்படுத்தப்பட்டவைகளே. இக்கருத்துகளெல்லாம் 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்' என்ற குறட்கருத்தையும் 'இமனதில் உறுதி வேண்டும், உறுதிகொண்ட நெஞ்சினாய் வாவாவா' என்ற பாரதியின் வரிகளையும் பறைசாற்றுகின்றன. எண்ணியபடி தன்னிலையில் உயர்ந்து தரணியை உயர்வடையச் செய்த மு.வ. மனவலிமை உடையவரேத.

பண்பாடு : சமன்படு-சமன்பாடு, உடன்படு-உடன்பாடு, பண்படு-பண்பாடு, பொல்லாத சூழ்நிலையில் சிக்குண்டிருந்தாலும் நல்ல நூல்களின் துணை இருந்தால் நாம் பண்பாட்டோடு விளங்கமுடியும் என்று சொல்லும் மு.வ. சிறந்த நூல்களே எனது நல்ல நண்பர்கள் என்ற கதேவின் கருத்தை பண்பாட்டிற்காக கையாளுகிறார் என்பது வெள்ளிடைமலை.

பொதுமை அறம் : உலகம் பெரிய குடும்பம். அதிலும் எல்லோரும் உழைக்க வேண்டும். உழைக்காமல் உயிர்வாழ எவருக்கும் உரிமை இருக்கக்கூடாது. அப்படி இருப்பவன் உலகத்தாரால் எதிர்காலத்தில் வெறுக்கப்படுவான். உழைப்பதில் என் பங்கைச் செய்கிறேன். சமுதாயம் தரும் பயனைப்பெற்று வாழ்கிறேன் என்று ஒவ்வொருவரும் உணர்வதற்கு மட்டுமே எதிர்காலத்தில் இடம் இருக்கும். அப்படிப்பட்ட மாறுதலை வரவேற்கும் மனப்பான்மையை வளர்த்தால் பொதுமை அறம் புலப்படும் என்கிறார் மு.வ. புது உலகம் புகட்டிவரும் பாடம், மனிதர் யாவரும் சமம் என்பதே. சமய நோக்கின்படி ஆய்ந்தாலும், மக்கள் எல்லாரும் ஒரு கடவுளின் ஆட்சிக்கு உட்பட்ட குடும்பத்தினர் என்பதே முடிந்த முடிபு. விரும்பியது கிடைக்காவிட்டால் கிடைத்ததை விரும்பி அமைதி அடையும் மனநிறைவு வேண்டும். கூடியவரையில் அறிவைப் பயன்படுத்திப் கடவுளின் நெறியில் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு பல கருத்துக்களை பொதுமை அறத்தில் வலியுறுத்துகிறார்.

நீந்துக

ஒரு தாய் மழலைக்கு வந்த நோயைக் கண்டு துடிக்கிறாள். அதே நோய் எதிர்வீட்டுக் குழந்தைக்கு வந்தபோது வருந்துவதில்லை. ஒருவனுக்கு காதலியின் குறைகள் புலப்படுவதில்லை. வேறொருவனுகக்குத் தன் மனைவியின் சிறுகுறைகளும் பெருங்குறைகளாகத் தோன்றுகின்றன. இவ்விருவேறுபட்ட நிலையை மனிதன் நீந்திக் கடக்கவேண்டும். குவிந்தும் குழிந்தும் நோக்காமல் நேரே உண்மையை உணரும் பான்மை வந்தால் நல்லதோர் உயர்வு வாய்க்கும் என்று வழிகாட்டுகிறார். மு.வ. குறுகி நிற்பது மனத்தின் இயற்கை அன்று பரந்த நோக்கம் கொண்டு உயர்வதே

மனத்தின் இயற்கை. அந்தத் தன்மையை உணர்ந்து வாழ்வது, நீந்தக் கற்றுக் கொண்டு குளத்திலும் ஆற்றிலும் நீந்திச் செல்வது போன்றது. குடும்பத்திலும் உலகத்திலும் அவ்வாறு நீந்தி வாழ வேண்டும். மேற்கூறியவற்றால் டாக்டா. மு.வ. அவர்கள் மனித நல்வாழ்விற்கு பல்வேறு படிநிலைகளை அமைத்து மானுடம் உயரப் பாடுபடுகிறார். அவர்தம் வழிகளை நாமும் பின்பற்றி நலமடைவோம். நல்வாழ்வே இல்வாழ்வு.

131. விடுதலையா-சிறுகதையில் மு. வ. வின் பன்முகப்பார்வை

கு.ம. வெங்கடேசன்
உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை
சண்முகா தொழிற்சாலை கலை & அறிவியல் கல்லூரி
திருவண்ணாமலை.

முன்னுரை

தமிழ்ச் சமூகத்தில் கதை சொல்லுதலும் கேட்டலும் காலம் காலமாக நடந்து வருகிறது. காலப்போக்கில் ஒரு பண்பு, சிறு நிகழ்ச்சி, சிக்கல், வெற்றி போன்ற அனுபவத்தைக் கருவாகக் கொண்டு சிறுகதையாக வளர்ச்சி பெற்றது. சிறுகதை என்பது ஒரே தடவையில் படித்து முடிக்கக் கூடியதாகவும், அரைமணி நேரம் முதல் இரண்டரை மணிநேரத்திற்குள் படித்து முடிக்க கூடியதாகவும் இருக்க வேண்டும் என்கிறார். சிறுகதையின் முன்னோடியான எட்கர் ஆலன்போ சிறுகதை படைப்புக்காக நோபல் பரிசு பெற்ற செகாவிப் என்பவர் சிறுகதை உலகின் தந்தை எனப் போற்றப்படுகிறார். இந்நிலைவில் பக்கிம் சந்திரரும், தாகூரும் சிறுகதையின் முன்னோடி எனலாம். தமிழில் 1910 இல் வ.வே.சு.ஐயரின் குலத்தங்கதைர அரசமரம் என்ற கதை சிறுகதைக்கான சிறப்புகளோடு வெளிவந்தது. அனுபவம் நிறைந்த ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்நாளில் ஒரு சிறுகதையாவது எழுத முடியும் எ ன்று கூறியுள்ள டாக்டர். மு.வ. அவர்கள் குறட்டை ஒலி, விடுதலையா ஆகிய இரண்டு சிறுகதைகளை எழுதியுள்ளார். அவற்றுள் விடுதலையா என்ற சிறுகதையில் மு.வ.வின் பன்முகப் பார்வையைக் இக்கட்டுரையில் காண்போம்.

ஆசிரியரும் சமூகமும்

சமுதாயத்தை வளப்படுத்துவதிலும், மாற்றியமைப்பதிலும் முதன்மைப் பெற்ற ஆசிரியர்கள் பெற்றோர்களுடன் சமூகத்தோடு இணைந்து ஆட்சியாளர்களையும், அதிகாரிகளையும், அரசியல்வாதிகளையும் , சமூக சேவகர்களையும் உருவாக்கி வருகின்ற ஆசிரியர்கள் மீது சமூகத்தில் உள்ள மரியாதையும் நம்பிக்கையும் இச்சிறுகதையின் பாத்திரப்படைப்பின் வழி அறியலாம்.

சுகாதார தின கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காக மாவட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாணவர்களை அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை ஆசிரியர்ள் செய்து கொண்டிருந்தனர். அப்போது ஆறு வயதுடைய திருவேங்கடம் என்ற சிறுவன் தன் பாட்டி நரசம்மாவிடம் தானும் செல்ல வேண்டுமென அடம்பிடித்து பாட்டியை பள்ளிக்கு அழைத்து

வருகிறான். மூன்று குடும்பத்திற்கும் ஒரே ஆண் மகனாக விளங்கும் திருவேங்கடத்தை தலைமையாசிரியர் மீது கொண்ட நம்பிக்கையால் அனுப்பி வைத்தாள் பாட்டி அதைப் போன்றே பல பெற்றோர்களும் வீடு சுற்றி வந்த பிள்ளைகளை நாடு தெரிய செய்த ஆசிரியாகளை நம்பி விட்டுச் செல்வதாக போக்கு அமைகிறது. இங்கு தம் பிள்ளைகள் படித்தால் போதும் . எனவே கண்ணை மட்டும் விட்டு உடம்புத்தோலை உரித்தாலும் பரவாயில்லை. அவர்களது எதிர்காலமும் நல்லொழுக்கமும் தான் முக்கியம் என்று பெற்றோர்கள் ஆசிரியாகளுக்கு உரிமை வழங்குவதன் மூலம சமூகத்தில் ஆசிரியர்களுக்குள்ள முக்கியத்துவத்தை அறியலாம்.

மாணவர்களும் உளவியலும்

குழந்தைகளின் மனநிலையின் தன்மையை கதையின் போக்கில் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளன. கதையின் முதன்மை பாத்திரமான திருவேங்கடம் சிறு வயதில் தொலைந்து போனதாக ஒரு கதையைக் கூறி அவனை கேலி செய்வதும் அதனால் கோபமும் வருத்தமும், வெட்கமும் ஏற்பட்டு சில நாட்கள் தனது பாட்டியிடமும் அம்மாவிடமும் பேசமாலிருந்து வருகிறான். அதைப் போன்றே பள்ளி ஆசிரியர் கேலி செய்யும் போது வெளிப்படும் சினத்தை ஆசிரியர் மீது காட்ட முடியாமல் வீட்டிற்கு வந்து தன்னுடைய பாட்டியின் மீது கோபத்தை வெளிப்படுத்துவதோடு இனிமேல் பள்ளிக்குச் செல்ல மாட்டேன் என்று கூறுவதாகவும் கதையின் போக்கு செல்கிறது.

பொதுவாக சிறுவர்களிடம் பேய், பிசாசு, பயங்கரமான காடு என்ற பயமுறுத்தும் வகையில் கதைச்சொல்வதால் அவர்களின் மனதில் பயம் கலந்த வெறுப்பு ஏற்படுகிறது. பள்ளிகளிலும், விளையாடும் இடங்களிலும் குழந்தைகளுக்குள் திட்டினால் ஆசிரியர்களிடம் சொல்ல முற்படும் போது, ஆசிரியர்களே படிப்பைத் தவிர மற்றதையெல்லாம் செய் என்று முகம் கலித்து சிறுவர்கள் சொல்வதைக் கேட்காமல் விட்டுவிடுகிறார்கள். அவ்வாறு சக மாணவர்ள் செய்த கேலிகளையும், ஆசிரியர் திட்டியதையும் தம் பெறடறோர்களிடம் சொல்ல சென்றால் அவர்களோ டியூசனுக்கு நேரமாச்சிப் போ உன் கதையைக் கேட்க நேரமில்லை என்று தட்டிக் கழிக்கின்றனர். இந்நிலையில் சிறுவர்கள் தமக்கு ஆதரவாக யாருமே இல்லையே என்ற கவலையோடு மன அழுத்தத்திற்கு ஆளாகி பள்ளிக்கும் செல்லாமல் வீட்டிற்கும் செல்லாமல் மனம் போன போக்கில் போகின்றனர். இச்சிறுகதைகளிலும் திருவேங்கடத்தின் சோர்விற்குக் காரணம் மனநிலை பாதிப்பு என்பதை அறியாமல் தினமும் பாலை கொடுத்து தெம்பூட்ட நினைப்பதும் வாம் தோறும் எண்ணெய் தலையில் தேய்த்த குளிக்கச் செய்வதுமாக கதை அமைந்துள்ளது. எனவே மாணவர்களின் மன அழுத்திற்கு காரணத்தை அறிந்து உளவியலின்

துணையோடு வழிநடத்த வேண்டியது அவசியமாகும்.

திருவேங்கடம் பள்ளி படிப்பை முடித்து தொழில் நிலையம் சேர்ந்த பிறகும் அவனை பொறுப்புணர்ந்த மனிதனாக கருதாமல் சிறிய குழந்தையாக நினைத்து நண்பர்களுடன் கவனமாக பழகச் செய்வதும், வேலை முடித்து பொழுதோடு வீட்டிற்கு வரச் சொல்வதும் தாமதமாக வரும் போது தெருமுனைவரை சென்று வருகையை எதிர் பார்ப்பதுமாக பாட்டியின் செயல்பாடுகள் அமைந்துள்ளது. அதனால் பாட்டியின் மீது திருவேங்கடத்திற்கு கோபமும், வெறுப்பும் ஏற்படுகிறது. தான் வளர்ந்த பிறகும் சமூகத்தில் கவுரமாகவும், மரியாதையாகவும், தன்னம்பிக்கையோடும் செயல்பட முடியவில்லையே என வருத்தப்படுவதாக கதாபத்திரம் அமைந்துள்ளது. கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதால் மாணவர் தன்னுடைய வளர்ச்சிக் கேற்ப சுயமாக சந்திக்க முடியாமல் சமூகத்தையும் தன்னையும் புரிந்து கொள்ள முடியாமல் வளருகின்றனர். இதன் விளைவே ஒரு சிலர் மாணவர்கள் தேர்வில் தோல்வியடைந்து விட்டால் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர். இதற்கு காரணம் பெற்றோர்கள் விதிக்கின்ற கட்டுப்பாடும், சுயசிந்தனையும், தன்னம்பிகையும் உருவாக்காத கல்வி முறையும் ஆகும், என்பதை இச்சிறுகதை உணர்த்துகிறது.

மூடநம்பிக்கை

சுகாதார தின கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள விரும்பும் தனது பேரனை பள்ளிக்கு அழைத்துச் செல்லும் போது பூனை குறுக்கு வராமையாலும், கல்தடுக்காமையாலும் பேரனுக்கு எந்த பிரச்சினையும் வராது என்ற நம்பிக்கையோடு ஙஆசிரியரிடம் ஒப்படைத்துவிட்டு வீடு திரும்புகின்றாள். பாட்டி நாசேம்மா இறுதியில் பேரன் தொலைந்து விடுவதால் நிமிர்த்தங்கள் மூடநம்பிக்கையானவை என்பது உணர்த்தப்படுகிறது.

திருவேங்கடத்தின் பாட்டி நாசேம்மா பைத்தியமானதற்கு காரணம் முற்பிறவியில் செய்த பாவம் தான். அதனால் இப்பிறவியில் கடவுளால் தண்டிக்கப்படுகின்றார் என்று ஊர்மக்கள் பேசும்போது கடவுள் பழிவாங்கும் போக்குடையவராக காட்டப்படுவதோடு நோய்க்கு காரணமான புகையிலையை மக்கள் மறந்து விடுகின்றனர். மேலும் ஆண் குழந்தை வேண்டி திருப்பதியில் பிரார்த்தனை செய்து கொண்டார் என்றும் ஆனால் குழந்தை பிறந்த பின்னர் அவற்றை நிறைவேற்றவில்லை. எனவே ஏழுமலையான் சினம் கொண்டு பாட்டியின் அறிவை கெடுத்து பைத்தியமாக்கி விட்டார், என்றும் கூறினார். இங்கு உண்மையான அன்பிற்கு கடவுள் மகிழாமல் சடங்கிற்கே மகிழ்வதாக கடவுளின் மீது குற்றம் சுமத்தவதும் மக்களின் அறியாமையை வெளிப்படுத்துகிறது.

பொதுவுடைமை சித்தாந்தம்

வயதான மூதாட்டியின் பைத்தியத்திற்கு பலரும் பல காரணங்கள் சொல்லி கொண்டிருந்தனர். அப்போது பொதுவுடமைக் கொள்கையாளர் ஒருவர் திருவேங்கடத்திடம் சில உண்மைகளைக் கூறி பொதுவுடமையின் சிறப்பை விளக்குவதாகவும் அமைகப்பட்டுள்ளது.

பாட்டி நரசம்மா புகையிலை அபின் போன்ற துண்டுப் பொருள்களை உட்கொண்டிருக்கலாம். அதன் விளைவாக பைத்தியமாகி இருக்ககூடும். இன்று புகையிலை உட்கொள்ளாதவர் எவரமில்லை. றாம் புகை வண்டியில் பயணிக்கும் போதும். திரையைரங்குகளில் கூடும் போதும் அருகில் நின்று பலர் புகை பிடிக்கிறார்கள், அப்புகையில் ஒரு பங்கு நாம் சுவாசித்து விடுகிறோம். அவை நம் இரத்தத்திலும் கலந்து விடுகிறது. புகை பிடிப்பவர்கள் தங்களுடைய பொருட்செலவையும் பொருட்படுத்தாமல் புகையிலை அனைவருகிகும் பரப்பி பொதுவுடமை கொள்கையை போற்றுகிறார்கள் மேலும் புகையிலை உட்கொள்வதாலும் காப்பி குடிப்பதாலும் நமக்கு சுறுசுறுப்பும் ஊக்கமும் தருவதாக உணர்கிறோம்

அவையே மூளையை பாதித்து பைத்தியமாக்கி விடுகிறது

பைத்தியம் பிடித்தவர்களுக்கு கவலையும். துன்பமும் இல்லை. அனால் அவர்களை பாதுகாக்கின்றவர்களுக்கும் அக்கம் பக்கத்தில் குடியிருப்பவர்களுக்கு பைத்தியத்தின் செயல்பாடுகளால் கொபமும், கொதிப்பும் எற்பட்டு மூளையும் உடம்பும் கெடுகிறது. எனவே கோமா நிலையில் உள்ள இவர்களை கருணை கொலை செய்து விடுவது சமூகத்திற்கு நலமாக இருக்கும். பொதுவுடைமை அரசாங்கமானால் பைத்தியங்களை சமூகத்தில் விட்டு வைக்காது. திருவள்ளுவனும் அன்பில்லாதவரை பிணம் என்றும் பண்பில்லாதவரை மரம் என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே பிணத்தையும். மரத்தையும் உயிர் வாழும் மக்களுக்கு இடையூராக வைத்திருக்கக் கூடாது. அவ்வாறு வைத்திருப்பதால் பயன் ஒன்றும் இல்லை. மரத்திற்கும் பிணத்திற்கும் ஒப்பான பைத்தியத்ாத இனிமெல் காப்பாற்ற நினைப்பதும் உங்களுடைய மூடநம்பிக்கையாகும். மூடநம்பிக்கையை தொத்து நோய் என்கிறார் வள்ளுவர்.

ஏவவும் செய்கவான் தான் தேறான் அவ்வுயிர்
போதம் அளவுமோர் நோய் (848)

எனவே எதிர்காலத்தில் பைத்தியங்களை குணப்படுத்த வழி தேடுவார்கள் வாய்ப்பில்லையென்றால் அமைதியாக உயிரை போக்கிவிடுவார்கள். குணப்படுத்த முடியாத கொடிய நோய்களுக்கு ஆட்பட்ட நீண்ட காலம் வேதனை அனுபவித்து வரும் நோயாளிகள் சட்டத்திற்குட்பட்டு கருணை கொலை மூலம் நிவாரணம் தேடிக் கொள்ள அருணா சான்பாக் வழககில்

உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதும் குறிப்பிடத்தக்கம. எனவே பொதுவுடமை கொள்கை மூலம் யாருக்கும் இடையூறு இல்லாமல் சமூகத்தையும் மனிதவளத்தையும் பாதுகாக்க முடியும் என்று கருத்து பதிவு செய்யப்படுகிறது.

முடிவுரை

விடுதலையா? என்ற இச்சிறுகதையில் சமூகத்தில் ஆசிரியர், மாணவர் பெற்றோர்கள் ஆகியோரின் உணர்வுகளைப் பற்றியும். சமதாயத்தில் கேலி, கிண்டல், நோய், பாசம், பந்தம், மூடநம்பிக்கை, பொதுவுடமை ஆகியவற்றோடு மனிதனின் விடுதலை வேட்கையே இக்கதையின் மையமாக அமைந்துள்ளது. மனிதன் சுதந்திரமான பிக்கிறான். பின்னர் சங்கிலியால் சுற்றிப் பிணைக்கப்படுகிறான் என்ற ரூசோ கூற்றுப்படி உறவுகளாலும் சமூகத்தாலும் பிணைக்கப்பட்ட மனிதன் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அதிலிருந்து விடுபட முடியாமல் விடுதலை வேட்கையோடு எப்படி போராடுகிறான் என்பதை இச்சிறுகதை புலப்படுத்துகின்றது.

ISஉ. மு. வ. வின் தங்கைக்கு - வாழ்வியல் நெறிமுறைகள்

முனைவர். சி. ஆனந்தி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
சண்முகா தொழிற்சாலை கலை மற்றும் அறிவியல் கல்லூரி
திருவண்ணாமலை.

தமிழ் இலக்கிய உலகம் பரந்து விரிந்த படைப்புகள் பலவற்றைக் கொண்டு விளங்குகின்றது. சங்க இலக்கியங்கள் முதல் தற்கால இலகிகியம் வரை ஆராய்ந்து பார்த்தால் இலக்கிய வகைகளும், இலக்கிய வடிவங்களும் எண்ணிலடங்கா, இலக்கிய படைப்பாளர்களும் அவ்வாறே. எண்ணற்ற படைப்பாளர்களுக்கு மத்தியில் படைப்புக் கடவுளாய் தன் படைப்புகளை உலவ விட்ட இலக்கிய உலகில் தனி இடம் பிடித்தவர் டாக்டர் மு.வ.

நாவல், சிறுகதை, நாடகம், இலக்கிய ஆராய்ச்சி, மொழி ஆராய்ச்சி, சிறுவர் இலக்கியம், கடித இலக்கியம், பயண இலக்கியம் என்று பலவற்றிலும் தன் புலமையை வெளிப்படுத்தியுள்ளார் மு.வ.. மு.வ.வின் படைப்புகள் இலக்கியப் பதிவுகளாக மட்டுமின்றி சமூக அக்கறையுடன் கூடிய பதிவுகளாகவும் அமைகின்றன. அவ்வகையில் மு.வ.வின் 'தங்கைக்கு' என்ற கடித இலக்கியம் பெண்களுக்கு கூறும் அறிவுரையாக அமைந்துள்ளது. இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ள வாழ்வியல் நெறிமுறைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வாழ்வியல் நெறிமுறைகள்

உலக இலக்கியங்கள் எல்லாம் வாழ்க்கையை மையப்பொருளாக வைத்தே படைக்கப்பட்டிருக்கின்றன. மனித வாழ்க்கையைப் பற்றியும், மனித வாழ்விற்குத் தேவையான வாழ்வியல் நெறிமுறைகளைப் பற்றியும், வாழ்விற்கு அவசியமாகக் கருதப்படும் அறிவுரைகளையும் எடுத்துரைப்பதே இலக்கியங்களின் நோக்கமாகவும் இருந்திருக்கின்றன.

ஒத்த தலைவனும் தலைவியும் விரும்பி இணையும் காதல் வாழ்க்கை, கல்வியின் சிறப்பு, ஈகையின் சிறப்பு, கற்புடைமை, பெண்மையின் மாண்புகள் போன்றவற்றை சங்க இலக்கியங்களும், வாழ்க்கைக்குரிய அறிவுரைகளை நீதி நூல்களும், ஒருவனுக்கு ஒருத்தி என்ற ஒப்பற்ற கொள்கையை கம்பராமாயணமும், சான்றோர்களின் வாழ்க்கை வரலாற்றையும் அவர்களின் லட்சிய வாழ்க்கையையும் வலியுறுத்தும் தற்கால இலக்கியங்களும் வாழ்க்கை வாழ்வதற்கே என்ற உயர்ந்த நெறிமுறைகளை அழகுற எடுத்துரைக்கின்றன.

மு.வ. அவர்களும் தங்கைக்கு அண்ணன் கூறும் அறிவுரைகளாக நூலைப் படைத்திருந்தாலும் நூலில் உள்ள எட்டு கடிதங்களை ஆராயின் மக்கள் அனைவருக்கும் பயன்படக்கூடிய வாழ்வியல் நெறிமுறைகளையே எடுத்துரைத்துள்ளார் என்பது விளங்குகின்றது.

அன்பு மனமும், விட்டுக்கொடுத்தலும்

ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்துவதும், நம்பிக்கை வைப்பதும், பிறருக்காக விட்டுக்கொடுத்தும் வாழ்வதே சமூக உறவு ஏற்பட அடிப்.படைக் கூறுகளாகும். குடும்பத்தில் சமூக உறவுக்கு வழிவகுக்க இத்தகைய கூறுகள் அவசியமாகிறது. அன்பு செலுத்துவது குறைந்து போனால் அங்கே ஏமாற்றம் உண்டாகிறது. சந்தேகம் உண்டானால் நம்பிக்கை அற்றுப்போகின்றது விட்டுக்கொடுத்து வாழ்வதை மேற்கொண்டால் கசப்புணர்வு மறைந்து வாழ்க்கை இனிதாகிறத.

உரிமை மிகுந்த பெண்ணாக இருந்தாலும் படிப்பும் பணமும் மிகுதியாக இருந்தாலும் வாழ்வில் கணவன் மனைவியாக இருவர் இணைந்த பிறகு, பெண். விட்டுக்கொடுத்து வாழ்வது இல்லற வாழ்விற்கு இனிமை பயக்கும் என்பதை எடுத்துரைக்கின்றார் மு.வ. பெண் விட்டுக்கொடுக்காத குணம் உடையவள் என்பது தெரிய வந்தால். ஆண் விட்டுக்கொடுத்துச் செல்ல வேண்டும். இதுவே இல்லற வாழ்வில் சமூக உறவினை வளர்க்க உதவும். அவ்வாறு விட்டுக்கொடுத்தல் இல்லையெனில் கணவன் மனைவியிடையே பிளவு ஏற்பட்டு பிரிவினையும் ஏற்பட்டுவிடும் என்கிறார்.

"அழகு, அறிவு, முற்போக்கு, திறமை எல்லாம் இருக்கின்றன, விட்டுக்கொடுத்தல் என்ற ஒன்று மட்டும் இல்லை". அவனும் அறிவு, திறமை எல்லாம் உடையவனாம். ஆளைப் பார்த்திருக்கிறேன், அழகான தோற்றமும் உண்டு. இவ்வாறு இரந்தும் வாழத்தெரியாதவர்கள் ஆகிவிட்டார்கள். இனிமேல் இவர்களின் மனத்தில் அன்பும் காதலும் வளர்வது அருமை. மனம் அப்படிப்பட்டது ஒருமுறை பிளந்து நின்ற பிறகு, வெறுப்பையும் பகைமையுமே மனம் வளர்த்துக் கொள்ளும் (ப.24) என்று மனதின் நிலையை எடுத்துக்கூறி அறிவுரை வழங்குகிறார் மு.வ.

மனம் ஒத்துப்போகாமல் இணைந்து வாழும் இருவர் பிரிந்து வாழ நேரிடுகிறது என்றாலும் மனம் ஒத்த இருவர் இல்வாழ்க்கை மேற்கொண்டு செலுத்தும் நெறியிலும் அன்பு நெறியும், விட்டுக்கொடுக்கும் கலையும் இருந்தால் மட்டுமே வாழ்க்கை நடத்தலாம் என்பதையும் அறிவுறுத்துகின்றார். இதனை "எல்லா வகையிலும் ஒத்திருப்பவர் இருவர் மணம் செய்து கொண்டாலும், அவர்கள் இறுதிவரையில் அவ்வாறே இருக்கமுடியாது. அந்நிலையில் அவர்கள் ஒத்த உரிமை பற்றி வெறும்

பேச்சுப் பேசுவதால் பயன் என்ன? தொடக்கத்திலேயே மாறாத அன்பு நெறியைப் போற்றி, விட்டுக்கொடுக்கும் கலையைக் கற்கலாமே!" (ப.34) என்று கூறுவதிலிருந்து அறியலாம். விட்டுக்கொடுத்து வாழ்ந்தால் மட்டுமே இல்லற வாழ்வில் கமுக உறவு நீடிக்கும் என்ற உயர்ந்த வாழ்வியல் நெறிமுறையை எடுத்துரைப்பதாக உள்ளது மு.வ.வின் மேற்கூறிய கடித வரிகள்.

மேலும், இத்தகைய அன்பு மனமும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் இல்வாழ்விற்கு மட்டுமின்றி சமூகத்தோடு ஓடடி வாழ்வதற்கும் இன்றியமையாததாகின்றது. மகிழ்ச்சியான சமுதாயம் உருவாவதற்குரிய வேர்கள் இல்லறத்திலிருந்து முளைக்கின்றன. எனவே, சமுதாயத்தோடு மக்கள் இணங்கியும், இணைந்தும் வாழ்வதற்கும் அன்பு மனம். விட்டுக்கொடுத்தல் அவசியமாகின்றது என்பதும் இதன் மூலம் தெளிவாகிறது.

முன்னோர்களின் வாழ்வியல் நெறிமுறைகள்

சமுதாயம் வளர்ச்சியும் மலர்ச்சியும் அடைந்த காலகட்டம் இது. இக்கர்லத்தில் மக்களின் வாழ்க்கை முறை, நம் மன்னோர்களின் வாழ்க்கை மறையிலிருந்து பலவகையிலும் வேறுபட்டு நிற்கிறது. கால மாறுதலும், கால மாறுதலுக்கேற்டற சூழலும் வாழ்க்கை மாற்றத்திற்குக் கார்ணமாகின்றன. இயற்கையின் படைப்பில் ஆண் வலிமையுள்ளவனாகவும் பெண் வலிமை குறைந்தவளாகவும் இருப்பதால் வெளியுலக உழைப்பு ஆண்களுக்கும், இல்லறக் கடமைப் பெண்களுக்கும் வகுக்கப்பட்டது.

வினையே ஆடவர்க்கு உயிரே
மனையுரை மகளிர்க்கு ஆடவர் உயிரே
(குறுந்தொகை 138: 1, 2)

என்ற குறுந்தொகைப் பாடல் நம் முன்னோர்கள் வாழ்வியல் நெறிக்கு தகுந்த சான்றாக விளங்குகிறது.

"ஆண் உடல் வலிமை மிகுந்தவன் ஆகையால் அவன் வெளியுலகில் அலைந்து பொருள் தேடுக என்று அமைத்தனர். பெண் உடல் வலிமை குறைந்தவள் ஆக்க வேலையில் ஆர்வம் நிறைந்தவள் ஆதலால் வீட்டிலிருந்து அமைதியைக் காத்து வருக என்று அமைத்தனர்" (ப.32) என்று மு.வ. வும் முன்னோர்கள் வகுத்த வாழ்வியல் மறையை எடுத்துரைக்கினறார்.

மேலும், இக்கால விஞ்ஞான முன்னேற்றத்தின் பயனாக உடல் வலி மிகுதியாக இல்லாமலே பொருள் தேட எந்திரங்களைக் கொண்டே தொழில்களைச் செய்து முடிக்க இயலும். ஆதலின் இன்றைய நிலையில்

பெண்ணும் வெளியுலகக் கடமைகளுக்கு ஏற்றவளாக இருக்கிறாள். பழைய குறை மாறுவதற்கு இடம் உள்ளது. எப்படி மாறினாலும் மாறட்டும் ' வீட்டுக்கு வெளியே சென்று தொழில் செய்துவிட்டுத் திரும்பும் நிலையே ஆனாலும் சரி' அல்லது வீட்டுக்குள்ளே இருந்து குடும்பப் பொறுப்பை மெற்கொள்ளும் நிலையே. ஆனாலும் சரி. கணவனோடு ஒரு வீட்டில் நெடுங்காலம் வாழ்வதனால். முன்னோர்களின் அறிவுரையே வாழ்வை வளப்படுத்தும் என்கிறார்.

காலப்போக்கில் சமூக மாற்றங்கள் குடும்ப உறவிலும் மாறறங்களை ஏற்படத்தலாம். அதாவது திருமணம் செய்து கொள்ளாமலே நட்புக் கொண்டு வாழும் ஆண் பெண் வாழ்க்கை மிகுதியாகும் பொல் தெரிகிறது என்பதையும் எடுத்துக்கூறும் மு.வ. "பெண்கள் எவ்வளவு முற்போக்கு எய்தினாலும். அன்புரவான தாய்மை என்பது ஒன்று அழியாமல் இருந்து வருகிறது அல்லவா? அவை போல் இல்வாழ்க்கையில் எவ்வளவு மாறுதல் ஏற்பட்ட போதிலும், கற்பு என்பது ஒன்று சிலரிடையே இருந்து வரம், முன்னோர்களின் பழக்கவழக்கங்கள் அடியொடு மாறிப்போகலாம் மாறுவது இயற்கையாகும். ஆனால் நெறி என்றும் உள்ளது மாறாதது".(ப.33) என்று கூறுவதிலிருந்த சமுதாய மாற்றங்களை மாற்ற முடியாது என்றாலும், வாழ்வியல் மாற்றங்கள் இன்றியமையாதது என்றாலும் முன்னோர்களின் வாழ்வியல் நெறிமுறைகளை மாற்றாமல் இருப்பதே நல்வாழ்க்கையின் அடிப்படைக்கு ஆதாரமாகும் என்பதை அறியலாம்.

இல்வாழ்க்கையில் தியாகம் வேண்டும். ஒருவருக்கு ஒருவர்விட்டுக்கொடுத்து வாழ வேண்டும். ஒருவரிடத்தில் குறை இருக்கலாம். அந்தக் குறையைக் கடந்து மற்றவர் அன்பு செலுத்த வேண்டும். வாய்ப்புக் கிடைக்கும்போது எடுத்துக்கூறி திருத்த முயலலாம் உரிமையோடும் போராடலாம். அப்போதும் அன்பு மாறக்கூடாது (ப.33) என்பதே நம் முன்னோர்களின் வாழ்வியல் நெறிமுறைகளாக இருந்தன என்று மு.வ. எடுத்துரைக்கின்றார். விஞ்ஞான வளர்ச்சிக்குப் பிறகு முன்னோர்களின் வழி நமக்கு உதவாததாகிவிட்டது ப.550. ஆனால் தனிவாழ்க்கையில் விஞ்ஞானம் பெரிய மாறுதல் ஒன்றும் செய்யவில்லை. மனம் பழையபடியே உள்ள (ப.56). இல்வாழ்க்கைக்கு மனநிலையெ இன்றியமையாதது. சிறந்த மனநிலையோடு கூடிய வாழ்விற்கு முன்னோர்களின் வாழ்வியல் நெறியே சரியானது என்பதை மு.வ.வின் அறிவுரையால் உணரமுடிகிறது.

சான்றோர்களின் வாழ்க்கை வரலாறு

வாழ்க்கை செம்மையாக அமைய முன்னோர்களின் வாழ்வியல் நெறிமுறைகள் எவ்வாறு உதவுகின்றதோ அதே அளவு இவ்வுலகில் வாழ்ந்து மறைந்த, வாழ்ந்த கொண்டிருக்கின்ற சான்றோர்களின் வாழ்க்கை வரலாறும் நமக்குப் பாடமாகின்றது. சான்றோர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படித்து

அவற்றின் வழி வாழ்க்கையை அமைத்துக்கொள்வது உயர்ந் வாழ்விற்கு வழிவகுக்கும். மு.வ. அவர்களும் தங்கைக்கு அறிவுரை கூறும்போது, பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படி. உயர்ந்த புலவர்களின் காவியங்களைப் படி. உயர்ந்த உணர்வினர் எழுதிய கதைகளைப் ப. உயர்ந்த புலவர்களின் காவியங்கரளைப் படி, உயர்ந்த உயர்வினர் எழதிய கதைகளைப் படி, என்று வற்புறுத்துகிறேன் என்கிறார். மற்றவர்கள் வாழ்க்கையில் உள்ள குறைகளையும் அவற்றின் காரணங்களையம் எண்ணிப் பார்ப்பது நம்மை நாம் காத்துக்கொள்வதற்கு மிகவும் பயன்படும். உண்மையாக ஆராய்ந்தால், உண்மையாக ஆராய்ந்தால், இப்படி நேரே வாழ்க்கையைக் கற்பதுதான் உயர்ந்த கல்வி (ப.18) என்று சான்றோர்களின் வாழ்க்கை வரலாற்றை படிப்பதன் அவசியத்தையும், தன்மையையும் எடுத்துரைக்கின்றார். மேலும் நம்மை அறியாமலே நம் மனம் செம்மையடையவும், வாழ்க்கை நன்னெறியில் நடக்கவும் உயர்ந்தோரின் வாழ்க்கைக் கல்வியே சிறந்தது என்றும் எடுத்துரைத்துள்ளார். இதனை,

இளங்கோ எழுதிய கண்ணகியின் காவியத்தைப் படி. பலமுறை படி குயூரி அம்மையாரின் வரலாற்றையும், கஸ்தூரிபா காந்தியின் வரலாற்றையும் திரும்பத் திரும்பப் படி (ப. 18, 19). மேற்கு நாட்டு அறிஞர்களின் வரலாறுகளைப் படித்துப் பார். அவர்கள் எழுதியுள்ள கதைகளையும் நாடகங்களையும் ஆராய்ந்து பார்(ப..23) என்று அவர் வலியுறுத்துவதிலிருந்தும் அறியலாம்.

ஆடம்பர பொருட்களும் ஆடம்பர மனமும் வாழ்க்கையை திசைதிருப்பக்கூடியது. லட்சிய வாழ்விற்கும் தடையாக இருக்கக்கூடியது. எளிமை மனதை பண்படுத்தக்கூடியது. வாழ்வை வளப்படுத்தக்கூடியது. மு.வ. வலியுறுத்தும் வாழ்வியல் நெறியிலும் எளிமையையே பெரிதும் எடுத்துரைக்கின்றார். சான்றோர்களின் வாழ்வினை எடுத்துக்காட்டும் போதும் எளிமையாகவாழ்ந்து மறைந்தவர்களின் வரலாற்றை உதாரணமாக்குகின்றார்.

“இந்த அம்மாவின் கணவர் காந்தியடிகள் உலகத் தலைவர். இந்த அம்மாவைப் போல் எளிய வாழ்க்கை வாழ எந்தப் பெண்ணாலும் முடியாது. கணவர் உலகத் தலைவர். உலகத் தலைவரின் மனைவி. பருத்திப் புடவையும் சங்கு வளையலும் தாலியும் தவிர, எந்த ஆடம்பரமும் அறியாமல் வாழ்ந்து விட்டு மறைந்தார்“ (ப.43) என்று அன்னை கஸ்தூரிபாவின் வாழ்க்கை முறையை மேற்கோளாக்கியிருப்பது போற்றுதற்குரியதாக உள்ளது.

நீதி நூல்களின் வழி நடத்தல்

நீதி நூல்கள் அனைத்தும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குவகை உறுதிப் பொருள்களையும் விளக்கியுரைக்கின்றன. இந்நான்குவகை உறுதிப் பொருள்களும் வாழ்க்கைக்குரிய நெறிமுறைகள்தான் என்று கூறுவதில் ஐயமில்லை. டாக்டர் மு.வ.வும்,

திருக்குறள், நாலடியார் போன்ற நீதி நூல்களில் கூறப்பட்டுள்ள வாழ்வியல் நெறிமுறைகளை விளக்கி அதன் வழி நடக்க அறிவுறுத்துகின்றார்.

இல்வாழ்க்கையில் இருவர் அன்புற்று வாழ்வதற்கு மனம் ஒற்றுமையாக இருத்தல் அவசியம் நல்லோர் இருவர் இணையுமிடத்தில்தான் இத்தகைய ஒற்றுமை உறவு வளரும்.

“நல்லவர் நட்பு வளர்பிறை போல் வளரும் என்கிறார் திருவள்ளுவர். உங்கள் அன்பான இல்வாழ்க்கை வளர்பிறை போல் வளர வேண்டும் என்று விரும்புகிறேன்”. நட்புக்காகப் பெரியோர் சொன்ன அத்தனையும் கணவன் மனைவி வாழ்க்கைக்கும் பொருந்தும். நாலடியாரில் ஒரு பாட்டுப் படித்திருக்கிறேன் அதில் தக்காரின் நட்பு கரும்பைக் குருத்திலிருந்து அடிவரையில் தின்றாற் போன்றது என்று கூறப்பட்டிருக்கின்றது. அதாவது வரவர இனிமை மிகுந்துகொண்டு போகுமாம். ஆனால், தகாதவரின் நட்பு நேர்மாறாக இனிமை குறைந்து கொண்டு போகுமாம். அடிக்கரும்பை முதலில் கடித்து தின்று குருத்து வரையில் தின்பது போன்றதாம் (ப.19) என்று திருக்குறள் கருத்தையும் நாலடியார் கருத்தையும் விளக்கி, வாழ்வில் நல்லவர்களோடு இணைந்து வாழ்வயையே லட்சியமாகக் கொள்ளவேண்டும் என்கிறார்.

நற்பண்பு உடையவர்களே நற்பண்பு உடைவர்ளோடு இணையமுடியும். பண்பட்ட இருவர் இணைந்து வாழும்போது வாழ்வு சிறப்புறும் என்பதில் ஐயமில்லை என்கிறார் மு.வ. மேலும் ‘ஒருவர் பொறை இவர் நட்பு’ என்னும் நாலடியாரின் பொன்மொழி இல்வாழ்க்கையின் மந்திரமாக விளங்கவேண்டும் (ப.23) என்றும் ‘ஊடலில் தோற்றவர் வென்றார்’ என்னும் திருவள்ளுவருடைய கருத்து உயர்ந்த ப்பாட்டின் அடிப்படையாகப் பிறந்திருக்கின்றது (ப.30) என்றும் கூறுகிறார் மு.வ. எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் நம்முடன் வாழ்பவர்களின் மனம் புண்படும்படி பேசக்கூடாது. வேடிக்கையாகவோ, விளையாட்டாவோ பேசும் கேலிப்பேச்சு கூட உறவினை சிதைக்கும் ஆற்றல் கொண்டதாக மாறிவிடும். எனவே, கணவன் மனைவியாக இருந்தாலும் வாழ்க்கையில் நம்முடன் வாழ்பவர்களானாலும் பேசும் முறை அறிந்து பேசவேண்டும் என்பதை விளக்க வந்த மு.வ. ‘யாகாவா ராயினும் நாகாக்க’ (ப.76) என்ற திருவள்ளுவரின் நீதியை எடுத்துரைக்கின்றார். இதன்மூலம் நற்பண்பு. பொறுமை, விட்டுக்கொடுத்தல் அகிய உயர்ந்த ஒழுக்கங்களே நல்வாழ்விற்கு வழிகாட்டும் நெறிமுறைகளாகும் என்பதை விளங்க வைக்கின்றார்.

வாழ்வும், உரிமையும்

ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் வாழ்கின்ற வாழ்க்கையில் தனக்கென்று ஓர் உரிமை வேண்டும் என்று எதிர்பார்த்தல் இயற்கை. ஆனால் அவ்வாறு கோரும் உரிமையில் ஒருவரை ஒருவர் தாழ்த்துவதாகவோ, தாக்குவதாகவோ இருந்தால் உறவு பிளவுபடும் வாழ்க்கை சிதைவுறும். எனவே உறவு பிளவுபடாமல் வாழ்க்கை

சிதைவுறாமல் அன்பால் இணைந்து அமைதியாக வாழ்வில் விட்டுக்கொடுத்து வாழ்வதே உரிமையுடன் கூடிய வாழ்வியல் நெறியாகும்.

மு.வ. அவர்களும் 'அடங்கி நடக்கின்றவர்கள்தான், உரிமையின நன்மையை அனுபவிக்க முடியும்' (ப.22) என்றார். அவ்வாறு அடங்கி நடத்தலிலும் நாம் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும். இல்லையென்றால் அடக்குமுறைக்கு ஆளாகி அடிமை வாழ்வு வாழ நேரிடும் என்ற வாழ்க்கையின் போக்கை எடுத்துரைக்க விழையும் மு.வ. அடங்கி நடக்கலாம். ஆனால் பிறருடைய அடக்குமுறைக்கு ஆளாகி அடிமை வாழ்வு வாழ நேரிடும் என்ற வாழ்க்கையின் போக்கை எடுத்துரைக்க விழையும் ம.வ., "அடங்கி நடக்கலாம். ஆனால் பிறருடைய அடக்குமுறைக்கு அஞ்சி இரையாகக் கூடாது: நாமே அன்புள்ளவர்களின் அன்புக்கு அடங்கி நடக்கலாம். உரிமை வாழ்க்கை நடத்தலாம்." (ப.22) என்று கூறுகிறார். அவே, 'அன்பை முதலில் வைத்து உரிமையை. இரண்டாவதாக வைத்து நடப்பது எளிய நெறியாகும்'. ப.23) என்று கூறுவதிலிருந்து எந்நாளும் உரிமையுடன் வாழ்வதற்கு அன்பு நெறியே சிறந்தது ன்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

நிறைவுரை

அன்பு மனம் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் வாழ்க்கையின் அடிப்படைக்கூறுகளாக இருக்கின்றன. படித்துப் பட்டம் பெற்று லட்சிய வாழ்வு வாழ்ந்த ம.வ. அவர்களும் வாழ்க்கை என்று வரும்போது முன்னோர்களின் பழைய நெறிமுறை களையே வலியுறுத்துகின்றார். அதுவே சிறந்தது என்றும் எடுத்துரைக்கின்றார்.

நம் நாட்டில் வாழ்ந்த சான்றோர்கள் பலர் எளிமையான வாழ்க்கை வாழ்ந்து வெற்றி கண்டவர்கள் என்பதால், அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைப் படித்து அதன்வழி நடத்தல் சிறந்தது என்கிறார்.

உரிமை மீறலும், உரிமையைத் தவறாகப் பயன்படுத்துதலும் வாழ்வின் அழிவிற்கு வழி வகுக்கும். எனவே, அன்பால் இணைந்து விட்டுக் கொடுத்து வாழ்வதே இருபாலர்க்கும் உரிய உரிமை வாழ்வு என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். மு.வ. அவர்கள் 'தங்கைக்கு' என்று தலைப்பிட்ட பெண்களின் வாழ்க்கைக்கான அறிவுரைகளைக் கூறி இருப்பதாகத் தோன்றினாலும். ஆண், பெண் இருபாலரும் சேர்ந்து வாழ்கின்ற இச்சமுதாயத்தில் மக்கள். அனைவருக்கும் பயன்படக்கூடிய பொதுவான வாழ்வியல் நெறிமுறைகளை எடுத்தியம்பியுள்ளார் என்பது நூலின் வழி அறிய முடிகின்றது.

133. மு. வ. போற்றிய குழந்தைகள்

கி. துரை
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
சண்முக கலை அறிவியல் கல்லூரி
திருவண்ணாமலை.

தமிழ் கூறும் நல்லுலகால் - 'மு.வ.' என்ற இரண்டு எழுத்துக்களால் மதிப்போடும் மரியாதையோடும் அழைக்கப்பட்டவர் மு. வரதராசனார். ஒரு தமிழ்ப்பேராசிரியராக இருந்து கொண்டு நாவல்கள் எழுதி அவற்றை எந்தப்பத்திரிக்கையிலும் தொடர்கதைகளாக பெற்றவர். ஒரே சமயத்தில் படைப்பாளராகவும், திறனாய்வாளராகவும் விளங்கி, படைப்புத்துறை, திறனாய்வுத்துறை என்னும் இரண்டு துறைகளிலும் நூற்கள் பற்பல படைத்துத் தந்து முத்திரை பதித்தவர். தமிழ்த்தாயின் தலைமகனாக விளங்கிய அவர் 52 வயதில் 85 நூல்கள் எழுதி இணையில்லாப் புகழ் பெற்றார். இவை போல் மு. வரதராசனாரைப் பற்றி நமக்குத் தெரிந்த செய்திகள் பற்பல உண்டு. இருந்தாலும், அவர் ஒரு குழந்தைகளைப் போற்றிய கவிஞராகவும் இதுருந்திருக்கிறார். குழந்தைப்பாடல்கள் எனும் தலைப்பில் ஒரு தனி நூலே வெளியிட்டிருக்கிறார். இக்கட்டுரை போற்றிய விதத்தினை எடுத்தியம்புவதாக அமைகிறது.

அறம் வலியுறுத்தும் பாடல்

வாழ்வில் குழந்தைகள் என்றென்றும் பின்பற்றக்கூடிய உயர் நெறிகளையும் நல்வழிகளையும் அருங்கருத்துக்களையும் புலப்படுத்தும் வகையில் பாடல்கள் பாடுவது என்பது குழந்தைக் கவிஞர்கள் அனைவரிடமும் காணப்படும் ஒரு பொதுப்பண்பு ஆகும். இப்பண்பு மு.வ. விடமும் மேலோங்கி நிற்கக் காண்கிறொம். 'கிளிப்பாட்டு' என்னும்தலைப்பில் அமைந்த அவரது குழந்தைப் பாடல் இவ்வகையில் நினைவு கூறத்தக்கதாகும்.

பொதுவாக சொன்னதைச் சொல்லும் இயல்பு படைத்தது கிளி. கிளியின் இந்த இயல்பினைப் பயன்படுத்திகொண்டு கிளியின் மூலமாகக் குழந்தைகளுக்குச் சில நல்ல கருத்துக்களை - நீதிகளை உணர்த்த முற்படுகின்றார் மு. வரதராசனார்.

பேசு கிளியே பேசு கிளியே ! 'பேதம் ஒன்றும் இல்லை' என்று!
பேசு கிளியே
சொல்லு கிளியே சொல்லு கிளியே ! 'சோம்பல் தான் வேண்டாம்' என்று
சொல்லு கிளியே
கூறு கிளியே கூறு கிளியே ! 'கூர் அறிவு வேண்டும்' என்று

கூறு கிளியே
கொஞ்சு கிளியே கொஞ்சு கிளியே ! 'கோயில் சென்று வணங்கு' என்று !
கொஞ்சு கிளியே
செப்பு கிளியே செப்பு கிளியே! செம்மையாகவழ்க' என்று !
செப்பு கிளியே" (ப. 9)

இப்பாடலை ஆழ்ந்தும் கூர்ந்தும் படித்தால் வேறொரு கருத்தினையும் பொருளினையும் கண்ட மகிழலாம். ஒரே சொல்லையெ திரம்பத் திரும்பக் கையாளாமல், ஒரே பொருள் உணர்த்தும் பெசு. சொல்லு. கூறு, கொஞ்சு. செப்பு என்னும் ஐந்து வேறுபட்ட சொற்களைத் தெரிந்து கொள்ளவும். சொல் அட்டவணையை வளர்த்துக் கொள்ளவும் மிக்க துணை புரியும். மேலும் 'பேதம் ஒன்றும் இல்லை' 'சோம்பல்தான் வேண்டாம்' 'கூர் அறிவு வேண்டும்' கோயில் சென்று வணங்கு, 'செம்மையா வாழ்க' என்று ஒரே பாடலில் ஐந்து வேறுபட்ட கருத்துக்களையும் ஆசிரியர் குறிப்பிட்டிருப்பது படித்துப் படித்து இன்புறக்கூயதும் போற்றுதற்கு உரியதுமாக அமைகிறது.

இது போன்ற பாடல்களை குழந்தைகள் படித்தால் மனதில் உறுதியும் தன்னம்பிக்கையும் பெற்று நலம் பயப்பார்கள் என்பதும் வெளிப்படை.

வாடாத பூ

குழந்தைகளுக்குப் படிப்பின் அருமையையும் பெருமையையும் பசுமரத்தாணி போல் பதிய வைக்க வேண்டும் என விரும்பும் மு. வரதராசனார் 'பூ' என்ற ஒரு சொல்லைக் கொண்டு சொல் விளையாட்டையே நடத்துகின்.றார். ரோஜாப்பூ, சண்பகப்பூ, மல்லிகைப்பூ முல்லைப்பூ என எத்தனையோ பூக்கள் இவ்வுலகில் உள்ளன ' ஆனால், அவையெல்லாம் காலை அரும்பி பகல் எல்லாம் போதாகி, மாலை மலர்ந்து இரவில் வாடிவிடும் இயல்பு படைத்தவையாகும். மு.வ.வின் வழியில் வாடாத பூவும் அது வளரும் இடமும் அவரது பாடலில் பார்ப்போம்.

ரோஜாப்பூ வாடிவிடும் சண்பகப் பூ வாடிவிடும்
மல்லிகைப் பூ வாடிவிடும் முல்லைப் பூ வாடிவிடும்
வாடாத பூ எதுவோ வளருகின்ற இடம் எதுவோ?
வாடாத பூ படிப்பூ (படிப்பு) வளரும் இடம் பள்ளிக் கூடம்
(ப. 21)

இது போன்ற பாடல்களைப் படிக்கும் பொழுதும், கேட்கும் பொழுதும் குழந்தைகளின் மனதில் ஆர்வமும், நம்பிக்கையும் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

வினா - விடைப் பாங்கில் அமைந்த பாடல்

குழந்தைகளுக்குக் கதைகள் கேட்பதிலும் அடுக்கடுக்காக கேள்விகளைக் கேட்பதிலும் இயற்கையாகவே ஆர்வம் மிகுதி. இக்குழந்தைகளின் மன இயல்பை - மனநிலையை நன்கு உணர்ந்த மு.வரதராசனார் வினா - விடைப் பாங்கில் சில நல்ல பாடல்களை இயற்றியுள்ளர். நிலாப்பாடல் என்ற தலைப்பில் அமைந்துள்ளதை இவ்வகைக்குச் சான்றாக கூறலாம். அப்பாடல்,

நிலா நிலா எங்கே போகிறாய்
மலைக்குப் போகிறேன்
மலைக்கு எதற்கு? மரம் வெட்ட
மரம் எதற்கு? செப்புச் சய்ய
செப்பு எதற்கு? காசு போட
காசு எதற்கு? மாடு வாங்க
மாடு எதற்கு? பால் கறக்க
பால் எதற்கு? நீ குடிக்க (ப.5)

நிலா - மலை - மரம் - செப்பு - காசு - பால் இது போன்ற சொற்களைத் தெரிந்து கொள்வதற்கும் உணர்ந்து கொள்வதற்கும் ஏதவாக அமைந்துள்ளது. ஒரு சொல்லோடு மற்ற சொல் பின்னிப் பிணைந்துள்ள நிலை அழகு வாய்ந்ததாக அமைகிறது. இதோடு மட்டுமில்லாமல் குழந்தைகளின் நெஞ்சங்களில் பகமரத்தாணிபோல் பதியும் என்பது திண்ணம்.

பழமொழி தொடர்பாக அமைந்த பாடல்

நாம் மற்றவர்களுக்கு நல்லது செய்யாவிட்டாலும் பரவாயில்லை. தீமையைச் செய்யாமல் இருந்தால், அதுவே போதும் என்பது குழந்தைகள் தெரிந்து கொள்ள வேண்டிய செய்தியாகும். புறநானூறு பாடல் ஒன்றில் கூட நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின் - என்று வலியுறுத்தும்.

இவ்வுண்மையை எடுத்துக் கூறுவது போல், ஒரு சிறுவனின் குறும்பான செயலையும், 'ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்' என்ற நாட்டுப்புறப் பழமொழியையும் அடிப்படையாகக் கொண்டு கதை வடிவில் ஒரு குழந்தைப் பாடலை உருவாக்கித் தந்துள்ளார் மு. வரதராசனார்.

ஆயிரம் காக்கை ஒரு மாலை ஆலமரத்தில் கூடினவே
பலவகைப்பாடம் படித்தனவே பாங்காய்ப் பாட்டுப் பாடினவே
வழியில் சென்ற ஒரு பையன் வந்து ஒருகல் எறிந்தானே
உடனே காக்கை எல்லாமே ஒன்றாய்க் கரைந்து பறந்தனவே
காக்கை ஆயிரம் ஆனாலும் கல்தான் ஒன்றே போதுமே (ப.27)

ஒரு மாலைப் பொழுதில் ஆலமரத்தின் கீழ் ஆயிரம் காக்கைகள் ஒன்று கூடுகின்றன. பாங்காய் பாட்டுப் பாடிக்கொண்டும் பலவகைப் பாடம் படித்துக் கொண்டும் மகிழ்ச்சியாக இருக்கின்றன. இந்த ஒற்றுமைக்கும்

மகிழ்ச்சிக்கும் இடையூறு விளைவிக்கும் வண்ணம் செயல்படுகின்றான் ஒரு சிறுவன். அவன் ஒரே ஒரு கல்லை விட்டு எறிந்ததுதான் தாமதம்! எல்லாக் காக்கைளும் உடனே ஒன்றாய்க் கரைந்தவாறே பறந்து சென்று விடுகின்றன. நடந்ததை நடந்தவாறே செய்திகளை எடுத்துக்கூறி, முடிவில் முத்தாய்ப்பாக அந்தச் சிறுவனின் தீய செயல் மூலமாக மற்ற சிறுவர்களுக்கும் காக்கை ஆயிரம் ஆனாலும் கல்தான் ஒன்றே போதுமே! என்ற நீதியை உணர்த்துகின்றார் குழந்தைக் கவிஞர் மு.வ. மேலும் அவர், இப்பாடலின் வெளிப்பாடாக ஒன்றே செய்க - ஒன்றும் நன்றே செய்க! என்றும் குழந்தைகளுக்கு அறத்தை உணர்த்துகிறார்.

எண்ணும் எழுத்தும் கற்றுத் தரும் பாடல்

குழந்தைகளுக்கு எண்ணும் எழுத்தும் கற்றுத் தரும் வண்ணம் மு.வ. சில இனிமையான அருமையாக குழந்தைப் பாடல்களை இயற்றியுள்ளார். எண்ணல், எழுத்தல், தீட்டல், முகத்தல்' என்னும் பாடலை இங்குப் பார்க்கலாம்.

ஒரு நாள் சிறுவன் ஒருவன் தந்தையுடன் கடைக்கு செல்கிறான். கடையில் அவர் வாங்கும் பொருட்களைக் கொண்டே சிறுவன் பல்வேறு அளவைகளைப் பற்றித் தெரிந்து கொள்கிறான்.

ஒருநாள் அப்பாவுடனே
ஒழுங்காய்க் கடைக்குப் போனேன்
எலுமிச்சம் பழம் வாங்கினார்
எண்ணி எண்ணி கொடுத்துவிட்டான்
உருளைக் கிழங்கு வாங்கினார்
ஒரு தராசில் எடை போட்டான்
பச்சை அரிசி வாங்கினார்
படியால் அளந்து கொடுத்திட்டான்
முழுத்துணி தான் வாங்கினார்
முழக்கோல் கொண்டு அளந்திட்டான்
பலவகையால் வியாபாரம்
பலரும் செய்யக் கண்டானே (ப.11)

கடை வீதிக்குச் சென்ற தந்தையார் எலுமிச்சம் பழத்தை எண்ணி எண்ணி வாங்கினார். உருளை கிழங்கை எடுத்து ஒரு தராசில் எடை போட்டு வாங்கினார். பச்சை அரிசியைப் படியால் அளந்து வாங்குகிறார். துணியை முழக்கோல் கொண்டு அளந்து தமக்கு வேண்டியதை வாங்கினார். இப்படிப் பலவகையிலும் அவர் கண்ட கடை வீதியில் வாங்கும் பலவகையான பொருள்களைக் கொண்டே, எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் அளவைகளை முறையே மகனுக்கு கற்றுத் தருகின்றார். இங்ஙனம் ஒரு பாடலில் குழந்தைகளுக்குத் தமிழ் எண்ணுப் பெயர்களையும், தீட்டல் பெயர்களையும் அழகான தெளிவான முறையில் அறிமுகப்படுத்தி யிருக்கிறார் மு. வரதராசனார்.

மற்றொரு பாடலில் தமிழ் எழுத்தை ஔ - என்ற எழுத்துக்கு என்றென்றும் உயிருள்ள உதாரணமாய் விளங்கும் ஔவையாரை நயமுடனும் விருப்பத்துடனும் அறிமுகம் செய்கின்றார். 'ஔவையாரும் நெல்லிக்கனியும்' என்னும் தலைப்பில் அமைந்த அப்பாடலில் அமைந்த அப்பாடலில் கடையெழு வள்ளல்களுள் ஒருவனான அதியமான், ஔவையாருக்கு அரு நெல்லிக்கனி தந்த வரலாற்றை ரத்தினச் சுருக்கமாக எடுத்துரைக்கின்றார். எட்டு வரிகளில் வரலாற்றில் புகழும் பெருமையும் மிக்க ஒரு சீரிய உயரிய நிகழ்ச்சியை கூறும் பாடல்.

காய்காய் நெல்லிக்காய் கனியானால் நெல்லிக்கனி
அதியமான் பெற்றிட்டான் ஔவைக்கு கொடுத்திட்டான்
ஔவையார் அதை உண்டார்
அதிக நாள் வாழ்ந்திட்டார்
தமிழ்ப் பாட்டுப் பாடினார்
தமிழ் நாட்டை வாழ்த்தினார் **(ப.31)**

அரிய பெரிய ஆற்றல் படைத்த நெல்லிக்கனி ஒன்று அதியமானுக்குக் கிடைத்தது. அதை, உண்டால் நீண்ட நாட்கள் வாழலாம். அப்படிப்பட்ட உயர்ந்த அரிய அந்த நெல்லிக்கனியை அவன் உண்ணாமலும், தன் குடும்பத்தினருக்கு கொடுக்காமவுலும் அரிதினும் அரிய உயர்ந்த அந்த நெல்லிக்கனியைத், தமிழ் முதாட்டி ஔவையாருக்குத் தந்தான்இ. ஔவையாரும் அக்கனியை உண்டு நீண்ட நாள் வாழ்ந்து தமிழுக்கு அரிய பெரிய தொண்டாற்றினார். தமிழ்நாட்டை வாழ்த்திப் பாடினார். அருநெல்லியை ஔவையாருக்கு ஈந்த அதியமானோ தன் கொடைதிறத்தால் என்றென்றும் தமிழக மக்களின் உள்ளங்களில் வாழ்ந்து வருகிறான். நம் நாட்டுச் சிறார்கள் இந்த அரிய போற்றற்குரிய வரலாற்று நிகழ்ச்சியை - இதன் அருமையை உணர வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் இப்பாடலை இயற்றியுள்ளார் மு. வரதராசனார்.

இதே போல் 'தமிழ்நாடு' என்ற தலைப்பில் சேர, சோழ, பாண்டியநாடு என எல்லாம் சேர்ந்த செந்தமிழ்நாட்டின் சீர்மையையும், செந்தமிழ் மொழியின் பெருமையும் குழந்தைக்கு எடுத்துக்காட்டியுள்ள விதம், குழந்தைகளுக்கும் இந்த அரிய செய்தி தெரிய வேண்டும் தெளிய வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளுடன் எடுத்து காட்டியுள்ளார். இங்ஙனம்,

"பாட்டுத் திறத்தாலே இவ்வையம்
பாலித்திட வேண்டும்"

என்ற பாரதியாரின் பாடலுக்கு இணங்க பாட்டுத்தரத்தாலும் பாடும் திறமையாலும் நம் நாட்டுச் சிறுவர்களுக்கு நெஞ்சை அள்ளும் வண்ணம் பல பாடல்களை இயற்றியுள்ள மு. வரதராசனாரை குழந்தைகள் போற்றிய கவிஞர் வரிசையில் சேர்ப்பது எள்ளளவும் வியப்பில்லை. வாழ்க தமிழ் ! வளர்க மு.வ!!

134. மு. வ. வின் கல்வியில் கற்றல் கற்பித்தல் சிந்தனைகள்

இரா. சங்கர்
உதவிப்பேராசிரியர்
சண்முகா கலை அறிவியல் கல்லூரி
திருவண்ணாமலை.

குவளயத்தைக் குடும்பமாக இணைக்கவல்லது கல்வி. சமுதாயம் வளர வேண்டுமெனில் தரமான கல்வியில் உயர்வுபெற்றோர் எண்ணிக்கையும் அதிகரித்தல் வேண்டும். ஒவ்வொரு நாளும் வேகமாக வளர்ந்து வருகிற அறிவுசார்துறையான கல்வித்துறையில் கற்போரும் அறிவும் ஒழுக்கமும் நிறைந்தவராக இருத்தலே நலம் பயக்கும். ஒருவன் பெற்றுள்ள அனைத்து செல்வங்களைக் காட்டிலும் கேடில்விழுச்செல்வம் கல்வியே எனத் திருக்குறளும், நம்மிடத்திலே உள்ள அழகானவற்றுள் அழகானது கல்வியே என நாலடியாரும், கற்றல் நலம் அதை யாசித்தாவது பெறுதல் வேண்டும் என்பதைத் கற்கை நன்றே கற்கை நன்றே, பிச்சைப் புகினும் கற்கை நன்றே என ஆத்திச்சூடியும், அன்னசத்திரம் கட்டுவதைவிட, ஆலயம் எழுப்புவதைவிட, புண்ணியத்தையும் மனநிறைவையும் மிகுதியாய் பெற்றுத்தருவது எழுத்தறிவித்தலே எனப் பாரதியும் கல்வியைப் பற்றிச் சிறப்பித்துள்ளமை, கல்விக்கும் கற்பித்தலுக்கும் இச்சமூகம் காலந்தோறும் உயர்விடம் வழங்கியுள்ளதைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

மு.வ.வும் கல்வித்துறையும்

இத்தகைய சிறப்புமிகுந்த கல்வியைக் கற்கின்ற ஒருவர் உளவியல் பூர்வமாக மாணவர்களின் கேட்கும் திறன் அறிந்து வழங்க வேண்டும் என்பதற்காக எதைக் கற்பிப்பது, எப்படிக் கற்பிப்பது. கற்பதற்கரிய வயது போன்ற ஆய்வுகள் ஆழமாகச் செய்யப்பட்டு, கல்வித்துறையில் பல மாறுதல்கள் அவ்வ்போது அரசு அமைக்கின்ற கல்விக்குழுக்களின் பங்குபெற்றத் தமது கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். பலர் நூல்கள், இதழ்களின் வாயிலாகக் கல்வி குறித்த கட்டுரைகளை எழுதித் தங்கள் கருத்துக்களை அரசுக்கும் பொதுமக்களுக்கும் தெரிவிக்கின்றனர். அந்தவகையில் டாக்டர் மு.வ. அவர்கள் தமது கல்வி முறையை ஆய்வுசெய்து தாம் கண்டறிந்தவற்றையும், ஏற்படுத்தப்படவேண்டிய மாற்றங்களையும் கலைக்கதிர், ஆனந்தவிகடன் போன்ற இதழ்களில் அவ்வப்போது எழுதியவற்றை ‘கல்வி என்னும் நூலில் இருபத்திஏழு கட்டுரைகளாக வழங்கியுள்ளர். இதனை அடிப்படையாகக் கொண்டு மு.வ. அவர்களின் கல்விக் கோட்பாடுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

எழுத்தராகப் பணிபுரிந்து, தமிழாசிரியராக உயர்ந்து, விரிவுரையாளராகிப் பின்னர் மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணிபுரிந்து, கல்வித்துறைக்கே பெருமை சேர்ந்தவர். பல்வேறு மாநிலப் பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டக் குழு, தேசிய புத்தகக்குழு, இந்திய மொழிக்குழு, அகராதிக் குழு, ஆட்சிமொழிக் குழு, தமிழ்வளர்ச்சிக் கழகம். தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சாதித்யஅகாதெமி, ஞானபிடம் எனப் பல்வேறு அமைப்புகளில் பங்குபெற்றுத் தனது ஆழமான சிந்தனையை வெளிப்படுத்தியவர். இந்நூலில் ஆசிரியப் பணியின் சிறப்பு, ஆசிரியர்கள் தங்களை உயர்த்திக்கொள்ள வேண்டியதன் தேவை, கற்பிப்போர் தகுதிகள், கல்வியின் நிலை, கல்வியில் சமய ஒழுக்கங்கள், தேர்வுகள், தாய்மொழிக் கல்வி, ஆண்பெண் கல்வி இப்படிப் பல்வேறு கருத்துக்களை கட்டுரைகளின் வழியாக எளியநடையில் விளக்கிச் செல்கிறார்.

ஒழுக்கம் நிறைந்த கலை அறிவியல் கல்வி

கல்வி கலைக்கல்வி, அறிவியல் கல்வி என இரண்டு வகைப்படும். இக்காலத்தில் அறிவியல் கல்வியின் செல்வாக்கும் போட்டியும் மிகுதியாகி வருகிறது. மனிதன் உணர்வின் வழியிலும் அறிவின் வழியிலும் செயல்பட்டால் மட்டுமே செம்மையாகச் செயல்பட முடியும் என்பதை உணர்ந்த மு.வ. அவர்கள் இரண்டுமே இரண்டு கண்கள் போன்றவை என்கிறார். கலைகள் கற்பவர்கள் அறிவியலிலும், அறிவியல் கற்பவர்கள் கலைகளிலும் ஓரளவேனும் கற்க வேண்டும். ஒன்று குறைந்தால் வாழ்க்கையே குறையாகிவிடும். அறிவியலினால் மூளைக்கூர்மை ஏற்படும். கலையினால் உள்ளப் பண்பாடு ஏற்படம். ஆனால் இன்றைய கல்வி இளைஞரிடையே ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் வளர்க்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

ஒவ்வொரு மனிதனும் உயர்வு பெறுவது, பெரும்பாலும் சூழல் அடிப்படையிலேயே அமையும். கல்வி நிலையங்களை நடத்துவோர் உயர்ந்த நோக்கம்கொண்ட உத்தமர்களாக இருக்க வேண்டும். அவர்கள் தேர்ந்தெடுக்கும் ஆசிரியர்கள் ஒழுக்கம் பண்பாட்டை கல்விநிலையங்களில் அகமும் புறமும் திருந்தி அமைந்தால் கற்போர் நல்லவர்களாகவும், அறிவுடன் பண்பாடுள்ளர்களாகவும் அமைவர் எனக் சுட்டுரைக்கிறார்.

அறம் விளங்கும் கோயில்கள்

'கல் பின்னர் கற்பி' என்பதாகவே அமைக்கப்பட்டுள்ள 'கல்வி' எனும் சொல் உயர்வுமிக்கது. ஒவ்வொருநாளும் வகுப்பறையில் ஆசிரியர்களைக் காண்பது மாணவர்களுக்கும், மாணவர்களைக் காண்பது ஆசிரியர்களுக்கும் விழைவை ஏற்படுத்துவதாக அமைதல் வேண்டும்.

அன்றாட நிகழ்வுகளையும், மாணவர்களுக்குத் தேவையான கருத்துக்களை அறிந்து வழிகாட்டநராகவும், அவர்களிடத்லுள்ள பொருள் மயக்கத்தைப் போக்குபவராகவும் இருக்க வேண்டும். உண்மையைப் போலவே போலிகளும் இம்மண்ணில் மலிந்து காணப்படுகின்றன. இம்மயக்கத்தைப் போக்குவதற்கு நல்ல கல்வி கல்வியாளரின் துணை அவசியம் வேண்டும் என்பதை எளிய எடுத்துக்காடடின் வழி விளக்குகிறார்.

கல்வி கற்பிப்போர் தெளிவாக விளக்கும் வண்ணமும், கற்போர் ஆர்வம் அமைந்தவராகவும் இருக்க வேண்டும். புகைவண்டியில் பயணம் செய்யும்போது மரங்கள் ஓடுவது போல் தோன்றும். ஆனால் அவை ஓடுவதில்லை. வானத்தில் மேகங்களுக்கிடையே அவற்றைப் பார்க்கும் குழந்தைகள் மயங்குகின்றன. அறிவின்துணை இருப்பதால் வளர்ந்தவர்கள் மயங்குவதில்லை. ஆனாலும் வளர்ந்தவர்களும் பண்புகளைப் பொருத்தவரையில் மயங்குகிறார்கள். எளியதை அரியது என்றும் அரியதை எளியது என்றும், சிறந்ததை சிறப்பில்லாதது என்றும், இன்பம் குறைந்ததை இன்பம் மிகுந்தது என்றும் மயங்குகிறார்கள். இத்தன்மையை நுட்பமாக அறிதல் வயதுத் தன்மையை ஒத்ததாக அமையாது என்றும் கற்றலின் அடிப்படையிலேயே இருள் விலகும் என்பதையும் விளக்குகிறார்.

தேர்வு முறைகள்

சிறந்த கல்விக் கூடமாகப் பெற்றோரும், மக்களும் கருதுவது இன்றைய தேர்வுமறையின் அடிப்படையில் அதிக மதிப்பெண்கள் பெற்றுத் தரக்கூடிய தொழிற்சாலையாக எது விளங்குகிறதோ அதுவேயாகும். மாணவர்களின் அறிவு வளர்ச்சியில் சுவலைகொள்ளாமல் விாைவிடைகளில் வல்லவர்களாக ஆக்கித் தர வேண்டும் என்பதாக உள்ளது. அறிவு வளர்ச்சி வேறு. நினைவுத்திறன் வேறு என்ற தெளிவு ஏற்பட்டால்தான் கல்வியில் உள்ள குறைபாடுகள் நீங்கும். படித்தவன் பாவம் செய்தால், போவான் போவான் ஐயோ! என்று போவான் எனப் பாரதி குறிப்பிடுவது போல, விருப்பு வெறுப்பு கொண்டு மதிப்பெண்களைக் கூட்டவோ குறைக்கவோ கூடாது என்கிறார். அறிவுத்துறை கருத்து வேறுபாட்டிற்கு இடம் தருவது தன் கருத்தை மதிப்பதுபோலவே மற்றவரின். கருத்தையும் மதிக்கும் மனப்பான்மை இருந்தால்தான் அறிவை உயர்த்த முடியும். தேர்வு எழுதும் மாணவர்கள் எந்தக் கருத்தை எழுதினாலும் அவர்களுக்குத் தெளிவு உள்ளதா, அறிவு உள்ளதா என ஆராய்ந்து பார்க்க வேண்டும். அறிவின் தெளிவிற்காக மதிப்பெண்கள் தர வேண்டும். தற்கொள்கைகளை எழுதியுள்ளார்களா என எதிர்பார்ப்பது நலம் பயத்தலாக அமையாது. ஆசிரியர்களும், அரசும் வெறும் மதிப்பெண்களுக்காக மாணவர்களை உருவாக்காமல் வாழ்க்கைமுறைக்கு ஆகாத வயிலாகத் தேர்வுமுறைகள் அமையாமல் தேவைப்படும் மாற்றங்களைச் செய்து கற்றலில் இனிமைப் பயப்பதாகத் தேர்வுகள் இளவெயிலாக அமைய வேண்டும் என்கிறார்"

இருபாலர் கல்வி

அறிவாயுதம் ஒவ்வொருவரையும் காக்கும் தலையாய ஆயுதமாகும். தன் அறிவைக் கொண்டே தன்னைக் காத்துக்கொள்ளும் திறன் உடையவரே உண்மையான கல்வியைப் பெற்றவராகக் கருதப்படுவர் எனக் கல்வியின் உயர்வை விவேகானந்தர் குறிப்பிடுவது போல, ஆணுக்கும் பெண்ணுக்கும் இன்றியமையாதது கல்வி. கல்வி இல்லாப் பெண்கள் களர் நிலம் என்பார் பாரதிதாசன். ஒருபெண்ணுக்குக் கற்புத் தேவையைப்போல் கல்வி தேவை என்கிறார். மு.வ.. அடுப்பூதும் பெண்ளுக்குப் படிப்பெதற்கு என்பது நாகரீகக்கேடான மொழி, பெண்ணறிவு என்பது பேதமைத்தே என்பதையம் வன்மையாகக் கண்டிக்கிறார்.

பெண்கல்வி தேவையென்றாலும், இருவருக்கும் எல்லாத்துறைகளிலும் பொதுவாகவே இருக்க வேண்டும் என்பதில் அவருக்கு உடன்பாடு இல்லை. உடலமைப்பு, மனநிலை, இயற்கை அமைப்பு அடிப்படையில் கல்வி அமையவேண்டும். அதுவே அறிவுடைமை யாகும் ன்கிறார். கல்வி, கற்பு இரண்டும் ஒன்றையொன்று அடுத்து விளங்கின. கல்வி என்பது சான்றோர் உணர்ந்து எழுதிய அறிவுச் செல்வத்தைக் கற்பது. கற்பு என்பது பெற்றோரும் உற்றாரும் வாழ்ந்துகாட்டி உணர்த்தும் ஒழுக்கநெறியைக் கற்பது. கல்வி நூல்களைக் கற்று அறிவது, கற்பு வாழ்க்கையைப் பார்த்துக் கற்பது இரண்டும் அணுக்கும் பெண்ணுக்கும் வேண்டும் என்பதை வலியுறுத்திக் குறிப்பிடுகிறார்.

தாய்மொழிக் கல்வி

தொடக்கக் கல்வி முதல் கல்லூரிக் கல்வி வரை, தாய்மொழிக் கல்வியாகவே அமைதல் வேண்டும் என 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மாதவையாவும், தாய்மொழிக் கல்வி ஒருவனை சிந்தனை வளமுள்ளவனாக மாற்றும் என குழந்தைகள் நல அமைப்புகளும். அவ்வப்போது ஆலோசனைகளையும் வழிகாட்டுதலையும் வழங்கிவந்தாலும் பிறமொழி மாயை நம்மண்ணில் வேர்ஊன்றிய ஒன்றாக அமைந்துவிட்டது. இந்தநிலை மாற வேண்டும் என வலியுறுத்துகிறார். மு.வ. தமிழில் பாடங்களைக் கற்பித்தலே கடமையாகும். அதுவே, நாட்டுமக்களின் அறிவை வளர்க்க உண்மையான வழி. அறிவியல் பாடங்களுக்கு உரிய கலைச்சொற்கள் தமிழில் இல்லாத - போதியனவாக இல்லாத காரணத்தால், ஆங்கிலத்திலேயே கற்பிக்க வேண்டும் எனச் சிலர் கூறுகின்றனர். கலைச்சொற்கள் எல்லாம் ஆங்கிலச் சொற்கள் அல்ல. ஆங்கிலமும் அவற்றுள் பெரும்பாலானவற்றைக் கடன் வாங்கியே பயன்படுத்துகிறது. நாமும் இப்போது அவ்வாறே செசய்யலாம். கலைச்சொற்கள் என்றும் கூடாது என்று நீட்டிக்கக்கூடாது. இதுவரையில் பாடப்புத்தகங்கள் இல்லை

என்ற காரணத்தாலும் நிலை நீட்டிக்கக்கூடாது. இதுவரையில் பாடப்புத்தகங்கள் தமிழில் இயற்றப்படாததற்கு காரணம் இரண்டு. தேவையில்லை. திறமை இல்லை. இரண்டும மாறினால்தான் பாடப்புத்தகங்கள் ஏற்படும். கல்லூரிகளில் தமிழில் கற்பித்தலை இன்று தொடங்கினால்தான் தேவையை ஏற்படுத்தினவர் ஆவோம். என்கிறார். ஒரு மொழியைத் தொடர்பு மொழியாக மட்டுமின்றி அறிவுமொழியாகவும் மாற்ற வேண்டும் அப்போதுதான் நிலைத்துவாழும் தன்மையினைப் பெற்றதாக அமையும் என்கிறார்.

நிறைவான கல்வி

கல்வி என்பது பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மட்டுமே வழங்கப்படுகின்ற ஒன்றல்ல ன்பதை விளக்குவதற்கு, பள்ளிக்கூடத்தில் தொடங்குவது உண்மை. ஆனால் கல்வி அந்த அளவில் நிற்பதன்று. அப்படி நின்றாலும் பயனில்லை கண் உள்ளவரையில் அறிஞர்களின் சொற்களைக் கேட்டு வளர்வதுதான் உண்மைக் கல்வியாகும். ஆகவே பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கற்றுமுடித்த பின்னர் வீட்டிலும் நூல் நிலையத்திலும் ஒவ்வொருவரும் தாமாகவே முன்வந்து பலநூல்களைக் கற்றுப் பயன்பெற வேண்டும். எனவேதான் திருவள்ளுவர் 'சாந்துணையும் கல்லாதவாறு' என்று வாழ்நாள் முழுவதும் கற்றல் நன்று என்ற உண்மையைக் கல்வி என்னும் கட்டுரையில் விளக்கிக் காட்டுகிறார்.

மாண்பமை சமுதாயம்

தொடக்க முன் கல்வி, தொடக்கக் கல்வி, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை, உயர்கல்வி, பட்டமேற்படிப்பு, ஆராய்ச்சிக் கல்வி எனப் பல நிலைகளில் கல்வி வழங்கப்பட்டாலும் கேட்கும் திறன், விருப்பம், நினைவாற்றல் பொருளாதாரம் போன்றவற்றைக் கண்டறிந்து வழங்குதலே சிறந்த சமுதாயத்தை உருவாக்கும் கல்வியாக அமையும். அனைவருக்.கும் நடுநிலையுடனும் வழங்குதல் வேண்டும். அக்கல்வி மாண்புகளை கற்றுத்தருவதாக இருக்க வேண்டும். இதனை உணர்ந்த மு.வ. இருவகைக் கல்வியைக் காட்டுகிறார். மனிதர் சமுதாயமாய் அமைய இருவகைப் பண்புகள் கட்டாயமாக வேண்டும். ஒன்று தன் நன்மையைவிடச் சமுதய நன்மையைப் பெரிதாகக் கருதி, பொதுவிதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் பண்பு. இந்த இரண்டு பண்பும் வளர வேண்டுமானால், மனிதன் வல்லவனாக இருப்பதோடு மட்டுமல்லாமல் நல்லவனாகவும் வாழக் கற்றல் வேண்டும். ஆகவே சமயக்கல்வி, ஒழுக்கக் கல்வி ஆகியவை தேவையாகின்றன. நில நூல், வானநூல், பயிர்நூல், பொருள்நூல் முதலியன சமுதாயத்தின் புறவாழ்வுக்குத் தேவையாதல் போல, அறநூல் முதலியன சமுதாய அகவாழ்வுக்கு அடிப்படை அமைப்புக்குத் தேவையாக அமைகின்றன.

வெறும் கல்வியில் சிறந்து நிற்றல் மட்டுமே சமூகம் செழிப்படைதற்கு வாய்ப்பாக அமையாது ன்பதனைக் குறிப்பிட்டு, தன்நூலின் வழியாக வளம் நிறைந்த மானுடம் மலர்வதற்கு வழிகாட்டுகிறார்.

நிறைவுரை

கல்வி தனிமனிதனின் வாழ்க்கைக்குத் தேவையான, அறிவையும் பொருளாதாரத்தையும், அறச்சிந்தனைகளையும், வழங்குவதாக அமைய வேண்டும். கற்றலும் கற்பித்தலும் இன்றியமையாத ஒன்றாக அமைந்துள்ளமையால் கல்வி நிலையங்கள் அறிவுக்கோயிலாக விளங்க வேண்டும் என்பதை இக்கட்டுரைகளின் வழி அறியலாகிறது. 'கல்விக் கரையில கற்பவர் நாள் சில' என்பதுபோல எல்லாத் துறையிலும் ஒருவன் கற்றுத் தெளிதல் இயலாது. கல்வி நிலையங்களில் கற்ற அறிவினைக் கொண்டு சான்றோர் காட்டிய வழியில் நுண்ணிய நூல்பல கற்றுச் சமூக வளர்ச்சிக்கு ஒவ்வொருவரும் வித்தாக அமைதல் வேண்டும் என்பதையும் இக்கட்டுரைகள் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளன.

135. கள்ளோ? காவியமோ? புதினத்தில் பன்னூலாட்சி

இளங்கோவன்
உதவிப்பேராசிரியர்
சண்முகா கலை அறிவியல் கல்லூரி
திருவண்ணாமலை.

பன்மொழிப் புலவராக விளங்கிய டாக்டர் மு.வ. அவர்கள், தமிழ் இலக்கிய வரலாற்றில் தனக்கெனத் தனி முத்திரையைப் பதித்தவர். காந்தியடிகள், திரு.வி.க.., கவிஞர் தாகூர், பெர்னாட்ஷா, சோமர்செட் முதலிய சான்றோர் பெருமக்களைப் பெரிதும் விரும்பியவர். பல பல்கலைக் கழகங்களோடு தொடர்பு கொண்டிருந்த அவர் தாமே ஒரு பல்கலைக்கழகமாக விளங்கியவர். எழுத்துப்பணியில் மட்டுமல்லாமல் பல கல்விசார் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். செந்தாமரை என்னும் நாவல் மூலம் நாவலுலகில் அறிமுகமாகி இருந்தாலும் கள்ளோ? காவியமோ? என்னும் நாவலே அவருக்கு மிகப் புகழினைத் தேடித்தந்தது. மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்தது. அவர் மனதிலும் நிலையாக நின்றது. வாழ்வில் அறிவைவிட அன்பே நன்மை விளைவிக்கும் என்னும் பேருண்மையை இவ்வுலகில் நிலைநாட்டி பலருக்கும் நல்வாழ்வு அளித்த நாவல் தான் கள்ளோ? காவியமோ? இதற்கு சிறப்புடைய இந்நாவலில் பல நூல்களில் உள்ள விழுமியங்களைக் கையாண்டுள்ளார். அவற்றைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

கதைச்சுருக்கம்

'பொறுப்பில்லாத் தந்தை' 'உலகம் அறியாத் தாய்' இவர்களால் தன் அத்தையிடம் வளர்கின்றாள் மங்கை. சிறுமி என்றும் பாராமல் இகழ்கிறாள். அரக்கோணம் இரயில் நிலையத்திற்குக் காய்கறி கூடையைச் சுமக்க வைக்கிறாள். இவ்வாறு வாழ்நாள் நகர்ந்து கொண்ருக்கின்றன. ஒருநாள் அந்த இரயில் நிலையத்தில் அருளப்பன் குடும்பம் வந்திறங்க, அவர்களுடைய உடைமைகளைச் சுமக்க ஆள்தேட, கடைசியில் தங்கை சுமக்க உடன்படுகிறாள். இந்நிலையில் அருளப்பனின் தாய் அன்னம்மா வீட்டு வேலைக்கு இவள் வருவாளா? என்று கேட்க, இங்கு படும்பாட்டைவிட அந்த வீட்டுவேலையே மேல் என்று நினைக்கிறாள். அக்குடும்பத்தின் வேலைக்காரியாகச் சென்னைக்கு வந்தடைகிறாள். அருளப்பனின் தந்தை முயற்சியால் கீழ்வீட்டு கனகத்தின் உதவியால் கல்விறிவில்லாக் களர்நிலமாக இருந்த மங்கை கற்றுத் தேர்கிறாள்.

அருளப்பன், மங்கையிடையே இனங்கானாக் காதல் மலர்கிறது. நண்பன் வேங்கடசாமியின் வெண்மனப்பேச்சால் அருளப்பனின் காதல்

வெளிப்படுகிறது. இதனை உணர்ந்த தந்தை பெங்களூரில் தன் மகள் கோதை வீட்டில் வேலைக்காரியாக அனுப்பியிருந்த மங்கையை வரவழைத்துத் திருமணம் முடித்து தனிக்குடித்தனம் வைக்கின்றார். இல்லறம் நல்லறமாக விளங்கியது. பெண்குழந்தை பிறந்தது. ஆதன்மொழி என்று பெயர்வைத்து, மகிழ்கின்றனர். நாட்கள் நகர்ந்தன. ஒருநாள் உடற்கோளறால் வருத்தப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் தன் கணவர் நண்பருடன் வந்ததை மங்கை அறியவில்லை. இதனால் கோபமடைந்த அருளப்பன், ஆசிரியர் முருகையா எவ்வளவோ, சமாதானம் செய்தும் அவள் உணர்ந்து, தாள் பணிந்து மன்னிப்பு கேட்டும் சினம் தணியவில்லை.

மனமுடைந்த மங்கை, பிஞ்சு மகளையும் நெஞ்சில் நினையாமல், எங்குச் செல்வதென அறியாமல் இறுதியில் பம்பாய் சென்றடைகிறாள். அங்கு குமார்வால் என்பவரின் கவுரிபாய் சத்திரத்தில் தங்கி, அவருடைய வழிகாட்டுதலுடன் 'மாங்பாய்' எனப்பெயர் மாற்றிக்கொண்டு பங்குதாராக உணவு விடுதி நடத்துகிறாள். மங்கை பிரிவால் மனம் வாடியிருந்த அருளப்பன் ஒருநாள் சொற்பொழிவாற்ற பம்பாய்க்குச் செல்ல, மங்கை இருக்கும் உணவுவிடுதியில் உணவு உண்கிறான். பணியாள் மூலம் முகவரி வாங்கி, அவனை வரவழைத்து, நடந்த எல்லவற்றையும் கூறினாள். பின் இருவரும் சென்னைக்கு வருகிறார்கள். தாயின் நினைவாக இருந்த குழந்தை தேன்மொழி, தாயை மறந்து சிறுமியாக மாறியிருக்கிறாள். இதனால் மங்கையின் உடல்நலம் குன்றுகிறது. தேன்மொழிக்குத் தாய்ப்பாசம் வரும் வேளையில், அம்மா என்றழைக்கும்போது கண்கள் நன்றாகத் திறந்து பார்த்த மங்கை மண்ணுலகைவிட்டு விண்ணுலகம் சென்றாள்.

கள்ளோ? காவியமோ? புதினத்தில் பன்னூலாட்சி

மூதுரை, புறநானூறு, திருக்குறள் முதலிய பல நூல்களிலிருந்து மேற்கோள்களை உரிய இடத்தில் தன் சிந்தனையோடு செலுத்தியுள்ளார். இப்புதினத்தில் யைாண்டிருக்கின்ற விதம் அவரின் ஆழ்ந்த பன்னூல் புலமையைக் காட்டுகிறது.

மூதுரை (அ) வாக்குண்டாம்

"இப்படிப்பட்டவர்களுக்கு அடங்கி நடந்துவந்தாள் அம்மா. அப்படி அடங்கி நடந்தும் அவளுடைய கவலை தீரவில்லை. வயிறாரக் கஞ்சி குடிக்கவில்லை. அது எப்படி முடியும்? கொக்கு எந்த மீனுக்காவது உரிமை கொடுக்குமா? கொடுத்தாலும் அதைக் கொத்தித் திண்பதற்குத் தானே? அந்த மீனும் அந்தக் கொக்கை நம்பி அடங்கி வாழலாமா?" (ப.18)

தாய்மீனைக் குத்தித் தின்ற கொக்கு, மறுபடியும் குஞ்சுகளையும் எதிர்பார்த்து இருந்தது. பாவம் ஏமாந்தது! (ப.19)

இங்கு மங்கையின் அத்தை, அவள் தாயின் உழைப்பை உறிஞ்சியதோடு மட்டுமல்லாமல் அவளுடைய பிள்ளைகளின் உழைப்பையும் உறியக் காத்திருப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. அத்தை கொக்காகவும், மங்கை, அவள் அண்ணன் குஞ்சு மீன்களாகவும், தாய் பெரிய மீனாகவும் கூறப்பட்டுள்ளது. இக்கருத்து ஔமவையார் எழுதிய மூதுரையில் வருகின்ற,

அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடுமீ னோட வுறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு

என்ற பாடலோடு ஒப்பிடலாம். கொக்கானது, மடைத்தலையில் நீர் மடையினடத்து ஓடும் சிறுமீன்கள் எல்லாம் ஓடவிட்டு பெருமீன் வரும்வரையும் அடங்கியிருக்கும். அதுபோல தமக்கு எதிரிகளாகத் தக்கவர் எதிர்ப்படும்வரை அடங்கியிருக்கும் குணமுடையவரை அறிவில்லாத வனென்று கருதி வெல்லுதற்கு நினைக்கவும் வேண்டுவதில்லை. ஔவையார் கொக்கு சிறுமீனை ஓடவிட்டு பெருமீனுக்காகக் காத்திருப்பதாகக் கூறுகிறார். டாக்டர் மு.வ. பெருமீனாகிய மங்கையின் தாயை உண்டுவிட்டு, அவள் பிள்ளைகளாகிய சிறுமீன் எப்போது பெருமீனாகும் அதையும் உண்ணலாம் என்று காத்திருப்பதாகக் கூறுகிறார். கொக்கு சிறுமீனை ஓடவிடுதல், மங்கை, அவள் அண்ணன் ஆகியோரின் வயதை ஓட விடுதலாகக் கொள்ளலாம். பெருமீனுக்காகக் காத்திருத்தல் ஏற்கனவே தாயின் உழைப்பை உண்டவள், இப்பிள்ளைகள் பெரியவர்கள் ஆனப் பிறகு உண்ணலாம் எனக் கருதுவதாகக் கொள்ளலாம்.

சிறுபணாற்றுப்படை

பேகனும் ஆடும் மயிலைக் கண்டபோது வலைபோட்டுப் பிடிக்க எண்ணவில்லை. அதைத் துரத்திப் பிடித்து அதன் பீலியைக் கவர எண்ணவில்லை. அசையும் கொடிக்கு அழகிய தேரை விட்டுக் காலால் நடக்கத் தணிந்தது ஒரு மனம்' ஆடும் பறவைக்குச் சிறந்த போர்வையை விட்டுக் குளிரால் நடுங்கிச் செல்லத் துணிந்தது ஒருமனம். இந்த நல்ல மனத்திற்குத் தன் இன்பதுன்ப நினைவே அல்லவா?

இதுதான் உலகம். இங்கே பலர்க்குக் கடமைப்பட்டு வாழ்கின்றோம், பாரியும் பேகனும் கடமைகளை மறந்து சிலபொழுது வாழ்க்கையின் எல்லையைக் கண்டார்கள். அந்த முல்லைக் கொடியைக் கண்டதும் பாரி அதன் அசைவு தவிர, எல்லாவற்றையும் மறந்தான். அந்த மயிலைக் கண்டதும் பேகன் அதன் நடுக்கம் - ஆடல் தவிர மற்றெல்லாவற்றையும் மறந்தான். (பக். 68, 69)

நண்பன் வேங்கடசாமியிடம் அருளப்பனின் திருமணம் பற்றிக்

கூற, அவன் அவனிடம் காதலைப் பற்றி வினவுகிறான். பேகன் மயிலிடத்தும் பாரி முல்லையிடத்தும் எதையும் எதிர்பார்க்கவில்லை. அவற்றின் துயரைப் போக்கவே எண்ணினார்கள். அதுபோல மங்கையிடம் நான் எதையும் எதிர்பார்க்கவில்லை. மயில், முல்லைக்கு நல்வாழ்வு அவர்கள் கொடுத்தது போல நான் அவளுக்கு நல்வாழ்க்கையை அளிகவே விரும்புகிறேன் என்கிறான். இக்கூற்றுகள் ஒய்யா நாட்டு நல்லியக்கோடனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு நல்லூர் நத்தத்தனார் பாடிய சிறுபாணாற்றுப்படையில்,

கான மஞ்ஞைக்குக் கலிங்க நல்கிய
அருந்திற லணங்கு னாவியர் பெருமகன்
பெருங்க னாடன் பேகனுஞ் சுரும்புரை
நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழுஞ் சாரற்
பறம்பிற் கோமான் பாரியுங் (சிறுபாணாற்றுப்படை அடி.85-92)

என்னும் அடிகளின் கரத்தை அருளப்பனின் வாயிலாக டாக்டர் மு.வ. பயன்படுத்தியுள்ளார்.

சிலப்பதிகாரம்

செட்டி நாட்டில் பார்த்திருக்கிறேன். மகனுக்குத் திருமணமான பிறகு அவனைத் தனியே வாழ வைத்திருக்கிறார்கள். அந்த வீட்டின் தந்தை தங்கி வாழ்ந்தால் மருமகள் கையில் சோறு வாங்கித்தின்றான் என்று அந்தத் தந்தையை இகழ்கிறார்கள். தவிர சிலப்பதிகாரத்தில் கோவலனும் கண்ணகியும் இப்படித்தான் வாழ்க்கை நடத்தியதாகத் தெரிகிறது (ப. 92)

அருளப்பனின் தந்தை, தன் மகனுக்கும் மங்கைக்கும் திருமணம் செய்து வைத்ததுடன், தனிக்குடினத்திற்கம் ஏற்பாடு செய்கிறார். இதனை ஆசிரியர் முருகையா கோவலன், கண்ணகியின் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் கூறுகிறார்.

கயமலர்க் கண்ணியும் காதற் கொழுநனும்
மயன்விதித் தன்ன மணிக்கால் அமளிமிசை
நெடுநிலை மாடத்து, இடைநிலத்து இருந்துழி

என்ற அடிகள் கோவலன், கண்ணகி ஆகியோரின் திருமணம் முடிந்தவுடன், கோவலனின் பெற்றோர், மயனே நேரிற் சமைத்து வைத்தாற் போன்ற மாணிக்கக்கால் கட்டிலின்மேல், தம் மாளிகையின் ஏழடுக்கு மாடிகளுள், இடைப்பட்ட நான்கவாது மாடியிலே, அவர்கள் ஒருசமயம் காதல் வாழ்விற்கே வழிகாட்டிகளாக இன்பமுடன் வீற்றிருக்க தனிக்குடித்தனம் வைத்தனர்.

பெரியபுராணம்

பெரியபுராணத்தில் காரைக்காலம்மையார் வாழ்க்கையிலும் இது தெரிகிறது ஆனால் என்றார் முருகையா (ப.92)

அருளப்பனின் தனிக்குடித்தனத்தைப் பற்றிக் குறிப்பிட்ட முருகையா மேற்குறிப்பிட்ட கோவலன், கண்ணகியின் வாழ்க்கையினைக் கூறும்போது, இக்கருத்தையும் கூறுகிறார். தனதத்தன் என்னும் வணிகன் தன் மகன் பரமதத்தனுக்கும் புனிதவதியார் (எ) காரைக்கால் அம்மையாருக்கும் திருமணம் செய்துவைத்துத் தனிக்குடித்தனம் வைக்கிறார். அருளப்பன், மங்கை திருமணம் முடிந்தவுடன் தனியாகக் குடும்பம் நடத்த ஏற்பாடு செய்ததை சிலப்பதிகாரம், பெரியபுராணம் நூலில் உள்ள கோவலன்-கண்ணகி பரமதத்தன்-காரைக்கால் அம்மையார் வாழ்க்கையோடு ஒப்பிட்டுக் கூறுகிறார்.

திருக்குறள்

"சிறிதுநேரத்தில் விளக்கு அணைக்கப்பட்டது. எனக்கோ உறக்கம் வரவில்லை. சிலமுறை புரண்டேன். குடிசையில் பாம்போடு உடன் வாழும் வாழ்க்கையைத் திருவள்ளுவர் உவமையாகக் கூறியது நினைவுக்கு வந்தது". (ப.107)

மங்கை மீது சினங்கொண்ட அருளப்பன், ஆசிரியர் முருகையா வீட்டிற்குச் சென்றான். அவர் சமாதானம் செய்தும், வீட்டில் விட்டுச்சென்றும் சினம் அடங்காமல் தாழ்வாரத்தில் படுத்தான். விளக்கு அணைத்தும் உறக்கம் வரவில்லை. அப்போது உட்பகை அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறிய இந்த உவமை நினைவுக்கு வந்ததாகக் கூறுகிறான்.

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந்து அற்று -அதிகாரம் 89, குறள் : 890

அதாவது கருத்தொற்றுமை இலாதவரொடு கூடிவாழ்தல் ஒரே குடிசையுடன் பாம்போடு கூடி வாழ்பவர் போன்று ஆபத்து உறுதி. கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பமாகும். மங்கையைப் பாம்பாகவும் வீட்டைக் குடிசையாகவும் அவனோடு வாழும் வாழ்க்கை ஆபத்தாக முடியும் என நினைத்து இக்குறட்பா உவமையைக் கூறுகிறான். மேலும், டாக்டர் மு.வ. குறட்பா செய்திகளை அறன் வலியுறுத்தல், இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், அறிவுடைமை, அன்புடமை, குடிமை ஆகிய அதிகாரப் பெயர்களையும், உடம்பாடு இலாதவர், பெண்ணிற் பெருந்தக்க, இரந்தும் உயிர்வாழ்தல், தினைத்துணை, குழலினிது எனத் தொடங்கும் குறட்பாக்களையும் உரிய இடங்களில் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

பாரதியார் பாடல்கள்

"காலமெல்லாம் உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில் உஉண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம் என்று இலக்கிய மேடைகளிலும் சமயமேடைகளிலும் முழங்கினேன். ஆனால் அறிவு கலங்கிய ஒருநாளில் அத்தனையும் மறந்தேன், உழைத்துத் தொழில்செய்து மானத்தோடு வயிறு வளர்த்த ஒரு கையைப் பழித்தேன், உண்டு களித்திருப்பவரின் கைபோல் மென்மையாக இல்லையே என்று பழித்தேன், முரட்டுக் கை எனப் பழித்தேன்" (ப.146)

அருளப்பனின் கோபம் தணியாததைக் கண்ட மங்கை வீட்டை விட்டு வெளியேறி பம்பாய் அடைந்தாள். அவர் எங்குச் சென்றாள் என்று அறியாமலும், அவனைப் பிரிந்த சோகத்தாலும் புலம்பினான். அப்போது அவன் அகத்திரையில் மங்கையோடு சண்டைப் போட்ட நினைவுகள் அலை அலையாக எழுகிறது. அவற்றில் ஒன்று தான் மேற்கூறியது. அதாவது அவளுடைய கைகள் மென்மையாக இல்லை, முரட்டுக்கைகள் எனப் பழித்தான். அதனைத்தான் இப்போது நினைவுகூர்கிறென். இலக்கிய மேடை, சமய மேடைகளில் பாரதியாரின் சமூக சீர்திருத்தக் கருத்துக்களை மேடைகளில் முழங்கினேன். என் வாழ்வில் கடைபிடிக்கவில்லையே மானத்தோடு உழைத்து வாழ்ந்த மங்கையினடத்துப் பழித்துப் பேசி அவனைப் புண்படுத்தி பெருங்குற்றம் இழைத்துவிட்டேனே எனப் புலம்புகிறான்.

சுந்தரர் தேவாரம்

மங்கை வீட்டைவிட்டுப் பிரிவதற்கு ஒரு வாரத்துக்கு முன்புதான் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் நானும் அவளும் தேன்மொழியை அழைத்துக்கொண்டு திருவொற்றியூர் கோயிலுக்குப் போயிருந்தோம். அப்போது மங்கை, அழுக்கு மெய்கொடு என்ற சுந்தரர் பாடலை அழகாகப் பாடினாள். தேன்மொழியும் அமைதியாகக் கேட்டுக்கொண்டு தன் தாயின் வாயை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தாள். (ப.156)

அருளப்பன் தன் மனைவி, மகள் தேன்மொழியுடன் திருவெற்றியூர் கோயிலுக்குச் சென்றிருந்தான். அப்போது சுந்தரர் இயற்றிய, அழுக்கு மெய்கொடு என்னும் சுந்தரர் பாடிய தேவாரப் பாடலைப் பாடியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவுரை

டாக்டர் மு.வ. அவர்கள் 'கள்ளோ? காவியமோ? புதினத்தில் சமுதாயத்தில் உறவுகள் உறிஞ்சுவதை மூதுரையிலும், உலகம் தவறாகப்

பேசக்கூடாது என்பதற்காகத் திருமணம் முடிந்ததும் தனிக்குடித்தனம் வைப்பதை சிலம்பு. பெரியபுராணத்திலும், கருத்தொற்றுமை இல்லாதவர் வாழ்க்கை பாம்போடு வாழும் வாழ்க்கை போலாகும் என்பமதையும் இன்னும் பல்வேறு கருத்துக்களை திருக்குறளிலும், உழவுக்கு வணக்கம் செலுத்துவோம், உண்டு களிப்போரை நிந்தனைச் செய்வோம் என்னும் சீர்த்திருக்கக் கருத்துக்களை பாரதியார் பாடல்களிலும், மகிழ்ச்சியாக இருக்கும்போது தேவாரப் பாடல்களைப் பாடுவதும், எதையும் எதிர்பாராமல் செய்ய வேண்டும் என்பதைச் சிறுபாணாற்றுப்படையிலும் உள்ள கருத்துக்களை பயன்படுத்தியுள்ளமை அவரது ஆழ்ந்த பன்னூல் புலமையைக் காட்டுவதாகும்.

136. மு. வ. காட்டும் மனிதர்கள்

கு. சுமதி
தமிழார்வலர்
பாலப்பாடி-அஞ்சல்
செஞ்சி வட்டம்
விழுப்புரம் மாவட்டம்.

உலகில் மனிதர்கள் பல நிலைகளில் தாம் தான் எல்லாம் என்று உள்ளனர். மனித வாழ்வு என்பது துன்பப் படுகுழிகளும் இன்ப மேடுகளும் விரவிக்காணப்படும் என்பதை பலர் அறியாமலேயே உள்ளனர். உலகம் தொடங்கிய நாள் தொட்டு மனித குலத்தில் பல்கிப் பெருகி வருகின்ற வேற்றுமையுணர்வுகளும் வேறுபாடுகளும் வருத்தத்தைத் தரக்கூடியனவாக உள்ளன. இவ்வாறு இருக்கும் மனிதர்கள் சிலரை நம் மனக்கண்முன் காண்பிக்கின்றார் மு.வ.

குறட்டை ஒலி

'குறட்டை ஒலி' எனும் சிறுகதைத் தொகுப்பின் மூலம் மு.வ. அவர்கள் மனித மனங்கள் பற்றிய புதிய சிந்தனையை குறிப்பிடுகின்றனர். மனிதர் தாம் வாழும் காலத்திலும் இறந்த பின்னரும் சமுதாயத்திற்கு எந்த வகையில் பயன் உடையவராக இருக்கின்றனர் மற்றவர்கள் மனம் பற்றிய எந்த வித எண்ணமும் இல்லாமல் மற்றவர்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளாமல் சிலர் உள்ளனர் என்ற கருத்தினை எடுத்துரைத்த குறட்டை ஒலி என்ற சிறுகதைத் தொகுப்பில் உள்ள சில சிந்தனைகளைக் காண்போம்.

அந்த மனம் வருமா?

உண்மையில் யாருக்கும் அந்த மனம் வராது. தனக்கென்று எதுவும் வைக்காமல் மற்றவர்களுக்கு உதவும் அந்த மனம் யாருக்கும் வராது. இரண்டு சொக்காய் இரண்டு வேட்டி தவிர எதும் வைத்திருக்காத அந்த மனிதர் பற்றி குறிப்பிடும் போது மலைக்கும் அவருக்குமான ஒரு ஒற்றுமையைக் குறிப்பிடுகின்றார். எளிமை ஆனால் பெருமை, வறுமை ஆனால் வன்மை. முதுமை ஆனால் சலியாமை.இப்படியான மனம் கொண்ட அந்த மனம் யாருக்காவது வருமா? என்று குறிப்பிடும் மு.வவிற்கு உண்மையில் இன்றைய நிலையில் யாருக்கும் அந்த மனம் வராது என்பதே பதில்..

சுடரின் நகைப்பு

சூரியனை தெற்கு வடக்காக மாற்றினாலும் மாற்றலாம். பெண்களின்

சாத்திர நம்பிக்கையை மாற்ற முடியாது. பெண்களின் உள்மனது பற்றி குறிப்பிடம் போது வயதில் முதிர்ந்த பெரியவர்கள் கூட பெண்களின் சாத்திரத்தை வெல்ல முடியாமல் போவதம் இறந்த குழந்தைகளின் வீட்டில் சில பெ்கள் சனிப்பிணம் தணைதேடும் என்று பிடிவாதம் பிடிக்க ஆண்களும் அதனை ஏற்று ஒரு கோழிக்குஞ்சு கொண்டு போனால் தான் மற்றொரு சாவு இல்லாமல் தடுக்க முடியும் என்று கூறுகின்றனர். பின் இறப்பு பற்றிய மனிதர்களின் மனதைக் கர்டுகின்றார். மு.வ. இயற்கை கொடமையால் பொகும் உயிர் ஒன்று மனிதன் கொடுமையால் போகும் உயிர் ஒன்று என்றும் சாவை நினைத்து மக்களின் மனம் எவ்வளவு பயப்படுகின்றது என்றும் குறிப்பிடுகின்றார் மு.வ. காலம் காலமாக இதுபோன்ற நிலையில் பல பெரியவர்களும் வீட்டில் உள்ள பெண்களின் சாத்திரப்படி நடப்பது நம் கண்முன்னே நடக்கும் நிகழ்வில்லையா?

இறந்த சிற்றப்பா?

மனித உறவுகள் பற்றிய சிந்தனையைக் குறிப்பிடுகின்றார். மாற்றாந்தாய் தன் மகளுக்கு தரும் துன்பங்களையும் இதே நேரத்தில் தன் குழந்தையைக் கூட கவனிக்காமல் தன் கணவரின் தம்பியின் குழந்தையினை கவனிக்கும் அந்த உயர்ந்த உள்ளத்தினை குறிப்பிடுகின்றார். உயர்ந்த உள்ளம் கொண்ட அந்த பெண் ஊராரின் தவறான சொல் கேட்டு தாம் படும் அவமானங்கள் பற்றியும் குறிப்பிடுகின்றார். இன்றும் பலர் இப்படித்தான் உள்ளனர். சந்தேகம் என்னும் நோய் மனிதனை ஆட்டிபடைக்கும் வரை இவ்வாறு தான் நிகழும் என்பதில் ஐயமில்லை.

அமாவாசையார்

கிராமங்களில் வயது முதிர்ந்வர்களை அந்தந்த நினைவுச் சின்னங்கள் என்றே கூறலாம். கால மாற்றத்தால் ஏற்படும் மாற்றங்களை தன் தலைமுறையினருக்கும் அடுத்த தலைமுறையினருக்கும் தெரிவிக்கும் அற்றல் கொண்டவர்கள். இவர்கள் இருக்கும் இடத்தினை ஊர் செய்தி நிலையம் என்றும் இவர்களே தினசரி பத்திரிக்கை வார இதழ். எல்லாம் என்று குறிப்பிடுகின்றனர் மு.வ. இன்றைக்கு கிராமங்களில் இது போன்ற நிலை இல்லையென்றே கூறலாம்.

எல்லோரும் சமம்

உலகில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் ஏழை பணக்காரன் என்ற வேறுபாடு இருக்கக்கூடாது என்பதில் யாருக்கும் ஐயமில்லை. கருப்பர் வெள்ளையர் நிறபேதம் பற்றி குறிப்பிடும் மு.வ. வறுமையில் உள்ள ஆங்கிலோ இந்திய மங்கைக்கு காட்டும் இயக்கம் வறுமையில் உள்ள இந்தியப் பெண்ணிடமும் கன்னங் கரெலென்று உள்ள அவளது

குழந்தையிடமும் ஏன் இரக்கம் வரவில்லை என்று கேட்கும பேது இன்றும் கூட பலர் இவ்வாறுதான் உள்ளனர் என்று கூறுவதைத் தவிர வேறென்ன சொல்வது.

எங்கும் சுதந்திரம் பேச்சு - நாம்
எல்லோரும் சமம் என்பது உறுதியாக்கு

என்ற பாரதியாரின் பள்ளுப்பாடல் தான் நினைவிற்கு வருகின்றது.

யாரோ தெரியாது?

யாருக்குமே தெரியாது அவர் யார் என்று. அவரைப்பற்றிய அனைவரின் கருத்துமே தவறாக இருந்தது. ஆனால் மு.வ. காட்டும் அவர் மட்டும் சற்றே வித்தியாசமானவர். யார் என்று தெரியாத மங்கை ஒருத்திக்காக உதவுகின்றார். அந்த உள்ளம் யாருக்கும் வராது. இரவில் பயணம் நம்நாட்டிலும் மற்ற நாடுகளிலும் உள்ள அவல நிலையினை எடுத்துரைக்கின்றார். மற்ற நாடுகளின் பயண முறையினை மட்டும் குறிப்பிடாது நம் நாட்டில் இரயில் பயணங்களில் உயர் வகுப்பினர் பயணம் செய்தால் அவர்களை நாம் எதுவும் கேட்க முடியாது. இரண்டாம் தர மக்கள் தங்களுக்குள்ளாகவே சண்டையிட்டுக்கொள்ள வேண்டும். இதனை எதிர்த்தவர்தான் அந்த மனிதர். 21-ம் நூற்றாண்டு வந்தும் நமது இரயில் பயணமும் மாறவில்லை. இரயில் பயணிகளின் மனமும் மாறவில்லை. காலமாற்றம் நிச்சயம் வேண்டும். விரைவில் மாறும்.

உலகப் பொய்

ஆம், உண்மையில் உலகமே ஒரு பொய்தான். ஆனால் பாரதியார் உலகினை மித்தை பொய் என்று மறுக்கின்றார். ஏனென்றால் தங்க சிலைபோல் எதிரே மனைவி நிற்கும் போது அவளை எப்படி பொய் என்று சொல்வது என்கின்றார். இதனை சற்று சிந்திக்க வேண்டும். பலரும் உலகினை மாயை பொய் என்று கூறும் போது பாரதி இவ்வாறு கூறுவது சிந்தனைக்குரியது. எல்லாவற்றையும் பொய் பொய் என்று தள்ளிவிட்டால் கடைசியில் பொது மக்கள் எதிலும் ஊக்கம் இல்லாதவர்களாய் கடமையைச் செய்யாமல் கெட்டுப்போவார்கள் என்று பாரதியார் குறிப்பிடுகின்றார். அவ்வண்ணமே இருப்பினும் அவரும் ஏதோ ஒன்றை நோக்கமாக வைத்துக்கொண்டு தான் இதனைக் கூறுகின்றார். அப்படியென்றால் பாரதியாரும் மக்களுக்கா பொய்தானே சொல்கிறார். பாதியாரும் பொய் தானே? என்கின்றார் மு.வ. எது எப்படியோ உலகமே ஒரு பொய். அதில் மக்கள் எல்லாம் பொய்யர்களாக மாறிவருகின்றனர். உண்மை பெயரளவிலும் பெயர் முழு அளவிலும் செயல்பட்டு வருவது மட்டும் இன்றைய உலக உண்மை.

குறட்டை ஒலி

இந்த உலகில் ஏழைகளுக்கு அதிகமான குழந்தைச் செல்வமும் பணக்காரர்களுக்கு மிகுந்த பணம் நகை முதலிய செல்வங்களும் உள்ளது. ஏழைகளின் வீட்டில் உள்ள குழந்தைகளின் சத்தமும் அவர்களின் வீட்டில் வளர்க்கும் நாய்க் குட்டிகளின் சத்தமும் பிடிக்காத பணக்கார வீட்டில் குழந்தை இல்லாத கணவன் மனைவி மட்டும் உள்ள வீட்டின் பெண் பற்றி குறிப்பிடுகின்றார் மு.வ. தினமும் பணக்கார வீட்டில் இருந்து வரும் கணவரின் குறட்டை ஒலி பற்றி குறிப்பிடுகின்றார். அது மட்டும் எந்த விதத்தில் பிடித்துள்ளது என்ற வினாவினை எழுப்பி மனிதர்களின் மனம் பற்றி எடுத்துரைக்கின்றார். இன்னும் பலர் இவர் கூறும் எண்ணங்களுடன் தான் வாழ்ந்து வருகின்றனர்.

வாழும் வழி

வாழும் வழி அனைவருக்கும் தெரிவதில்லை. தெரிந்தவர்கள் எவருக்கும் சொல்வதில்லை. சொன்னால் மனித சமூகம் வளர்ந்து விடும் அல்லவா? தவறு செய்தவர்களை மன்னிக்கும் மனம் இந்த உலகில் எவருக்கும் இருப்பதில்லை. அப்படி தவறு செய்த மனிதனை அவருக்கு என்ன வேண்டும். எதற்காக இத்தவறைச் செய்தீர்கள் என கேட்கும் மனப்பக்குவம் இருந்தால் உலகம் வாழ வழிக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறு செய்பவரை சிலர் வாழ வழி தெரியாத ஆளாக இருக்கிறாரே? என்றும் சிலர் வாழ வழித் தெரிந்தவர் இவர்தான் என்றும் குறிப்பிடுகின்றார் மு.வ. நாமும் அவரையே பின்பற்றி தவறு செய்தவனுக்கும் உதவும் மனப்பக்குவம் பெறுவோம்.

இயற்கை பொல்லாதது

இயற்கை அன்றும் இன்றும் என்றும் நன்மையைத் தான் விளைவிக்கும். சில நேரங்களில் அது தீவினையையும் விளைவிக்கும். அதற்கு மனிதர்கின் சிறு சிறு குற்றங்களே காரணம். முருங்கை மரத்தினை கார்த்திகை மார்கழியில் வெட்டி மொட்டை ஆக்கினால் அடுத்த காய்ப்பு நன்றாக இருக்கும் மீண்டும் உயிர் பெறுகிறது. உயிர் இல்லாத கடி'காரம் பழுதானால் பழுதுநீக்கி மீண்டும் இயக்க மடிகிறது. ஆனால் மனித உயிர் மட்டும் போனால் மிண்டுவருவதில்லை. ஒரு சிறிய குற்றத்திற்கு ஆயுள்தண்டனை விதிக்கும் இயற்கை எப்போதும் பொல்லாதது தான்.

அக்கரை பச்சை

இடமாறுதல் என்பது நமக்கு நாமே அல்லது மற்றவர்களின் வற்புறுத்தலுக்காக நடைபெறுகிறது. இதை விட அது நல்லது என்ற

மனப்பான்மை மனிதர்களின் மனத்தில் குடியிருக்கின்றது. மற்றவர்கள் மகிழ்ச்சியோடு வாழ்கின்றனர் என்றும் தமக்கு மட்டும் ஏதோ பெரிய பிரச்சனைகள் இருப்பதாகவும் சிலர் எண்ணுகின்றனர். இவர்களின் அறியாமையைக் காட்டும் மு.வ. இக்கருத்தானது எந்த காலத்திலும் எவர்பாலும் மாற்ற இயலாததாக அமைந்துள்ளது என்கின்றார். எவருக்கும் எங்கும் மன நிறைவு அடையாத நிலையில் மற்றதனை தேடி அலைகின்றனர். அங்கும் மன நிறைவு அடையாமல் மேலும் மேலும் தேடி அலைந்து கொண்டு இருக்கின்றனர். எப்பொழுதும் இக்கரைகு அக்கரைப்பச்சை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

முடிவுரை

குறட்டை ஒலி எனும் தலைப்பில் பல தரப்பட்ட மனிதர்களின் மனங்களைக் காண்பித்து புதிய சிந்தனையை உருவாக்குகின்றார் மு.வ. இவர் கூறும் சமுதாய மக்கள் இந்த 21-ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்து வருகின்றனர் என்பது தான் வேதனைக்குரியது. மற்றவர்களின் மனதை புரிந்து கொள்ளும் மனப்பக்குவம் பெரும்பாலோர் பெறவில்லை என்ற கருத்தினையும் முன் வைக்கின்றார் மு.வ. மனிதர்கள் சிந்திக்க வேண்டும். உயர்வு தாழ்வு கருதாது, நிற பேதம் பார்க்காது மனிதர்களை மனிதர்களாக நினைக்கும் எண்ணம் வரவேண்டும்.

வாழ்வாவது மாயம் - இது
மண்ணாவது திண்ணம்.

எனவே வாழும் காலங்களில் மனிதர்களாக வாழ முயற்சி செய்வோம்.

137. பன்முக நோக்கில் மு. வ.

ம. பரிமளா தேவி
தமிழ்த்துறை
தூய நெஞ்சக் கல்லூரி
திருப்பத்தூர்.

கற்பனை

கற்பனை மனத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிறது என்பது உளவியலாளரின் கருத்து ஆகும். பல பொருள்களைப் பற்றிய அறிவு பெறுகிறது. அந்த அறிவு திட்பமும் தெளிவும் வரையறையும் வளமும் உடையதாக வளர்ச்சிக்கு கற்பனை துணை செய்கிறது. உண்மையை முழுதுமாய் உணர்வதற்கு அறிதல், விழைதல், துணிதல், என்பனவற்றால் முற்றிலும் உணர்வதற்கு கற்பனை தணையாகிறது. மு.வ. வின் கற்பனை குறித்த புரிதல்கள் கற்பனை பாகுபாடு செய்திருக்கிற விதம் இலக்கியத்தில் கற்பனையின் வகைகள் குறித்து பன்முக நோக்கில் காண்போம்.

குழந்தையின் கற்பனை

சிறு குழந்தையாக இருக்கும்போதே அதனுடைய முகத்தில் தோன்றும் மகிழ்ச்சியிலும் கற்பனையிலும் இன்ப துன்ப கற்பனைகளை உணர முடியும் என்கிறார். கபிலர், அவ்வை, காளிதாசர், கம்பர், பாரதி போன்றவர்களின் கற்பனைகளுக்கு உரிய வித்து அவர்கள் குழந்தையாய் இருந்தபோதே வளர்ந்தது.

மூவகை கனவுகள்

மனிதன் கனவுகளை மூன்று வகையாக வகைப்படுத்தலாம். உறக்க கனவு, பகற்கனவு, கற்பனை கனவு ஆகும். பகற்கனவுக்கும் கலைஞனின் கற்பனைக்கும் பெரியதொரு வேறுபாடு இல்லை. முன்னது கலைவடிவம் பெறுவதில்லை. ஆதலால் நிலைபெறாமல் அழிகின்றது பின்னது கலைவடிவம் பெறுதலால் அழியாமல் நிற்கின்றது இரண்டிற்கும் வேறுபாடு இவ்வளவே ஆகும்.

மனிதனின் கற்பனை சிறகுபோல் பறந்து இருக்கின்றது. அதற்கு முடிவு என்பது கிடையாது. என்கின்றார். கலைஞரின் உள்ளம் கனவு காணவே விரும்புகின்றது. உள்ளம் விரும்புமாறு படைக்கும் உணர்ச்சியே கதை, கவிதை, பாட்டு, ஓவியம், நாடகம் முதலிய கலைகளுக்கு அடிப்படையாகும் என்கின்றார்.

இயற்கை

மனிதனின் கற்பனையானது இயற்கையை கண்டவுடன் ஆரம்பமாகிறது. இயற்கையை பாடும் புலவர்கள் உள்ளதை உள்ளவாறே பாடுவதில்லை. சிறிது குறைத்தும் கூட்டியுமே பாடுகிறார்கள். அதனால்தான் பாட்டு என்பது கலையாகிறது.

ரிச்சர்ட்ஸ் என்ற அறிஞர் கற்பனையை ணர்ததும் அங்கில சொல்லுக்கு ஆறுவகைப் பொருள் தருகின்றார்.

1. மனக்கண்ணில் பொருளை காணுதல்
2. உவமை உருவகம் முதலியவற்றின் பொருள்களை உருவாக்கி காணுதல்
3. பிறருடைய மனநிலையை இன்ப துன்பங்களை உணர்தல்
4. வெவ்வேறாக உள்ளபொருள்களை இயைத்துக்காணுதல்
5. வாழ்க்கையின் அனுபவத்தை வெவ்வேறு வகையில் அமைத்து கூறுதல்
6. பொருள்களை உள்ளவாறே உணரும்போது மாறுப்பட்ட பொருள்களை நிறுத்திக்காணுதல்.

மனிதன் தான் விரும்பிய ஒன்றை கற்பனையாக படைக்கின்றான். தன் உள்ளம் விரும்பிய காட்சிக்கு பலவற்றை சேர்த்தலும் சிலவற்றை நீக்கியும் ஒரு அழகிய கற்பனையை அமைத்துக்கொள்கிறேன்.

உணர்ச்சியின் இயல்பு

உள்ளத்தை உணர்ச்சியுடன் கூறும்போது சிலவற்றை கூட்டலும் கழித்தலும் குறைத்தலும் திரிதலும் ஏற்படவது இயல்பான ஒன்றாகும். அறிவு அளந்து அறிவது உணர்ச்சி குறித்த ஒன்றை ஆழ்ந்த உணர்வத. குறித்த ஒன்று மட்டும் ஆழ்ந்து உணரப்படுவதால். மற்றவை அவ்வளவு தெளிவாக நிற்பது இல்லை. ஒன்றை எடுத்தக்காட்டுவதற்காக மற்றொன்றை வேண்டும் என்றே திரையிட்டு மறைப்பது இல்லை உணர்ச்சியின் காரணமாக ஒன்று சிறப்பு இழந்து மறைகின்றன என்கிறார்.

வாழ்க்கையும் கற்பனையும்

உள்ளம் விரும்புமாறு அமையும் கற்பனைக்கு வாழ்க்கையே அடிப்படையாகும். வாழ்க்கையின் அனுபவமே அத்தகைய கற்பனையைத் தூண்டுகின்றது. ஆயினும் அனுபவம் உடைய எல்லோருக்கும் அவ்வாறு கற்பனை அமைவதில்லை. உணர்ச்சி பண்பட்ட கலைஞர்க்கே அனுபவம் கற்பனையாக மாறுகின்றது.

காலம் கடத்தல்

துன்பம் வரும்போது வருந்துவதும் இன்பம்வரும்போது மகிழ்வதும் எல்லா உயிர்களுக்கு பொதுவானவை. மனித வாழ்க்கையில் மட்டும் பழைய உணர்ச்சிகளின் நினைவுகள் மீண்டும் கற்பனையாக மாறுகின்றது. ஒரு காலத்து அனுபவத்தை மற்றொரு காலத்தில் மீண்டும் சிறப்பியல்புகளாக உள்ளது என்கின்றார். இத்தகைய சிறப்பியல்புகளே கலைத்துறையில் வளர்ந்து பயன்படும்போது கற்பனைத்திறனாக மாறுகிறது. கலைத்திறனின் வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல் அறிவுத்துறையின் வளர்ச்சிக்கும் பேருதவி புரிகின்றது.

இல்லன படைத்தல்

ஒரு காலத்தில் நிகழ்ந்ததை மற்றொரு காலத்திலும் ஓர் இடத்தில் நிகழுந்ததை மற்றோர் இடத்திலும் படைத்துக் கொள்ளும் கற்பனைத்திறம் போலவே எக்காலத்திலும் எவ்விடத்திலும் இல்லாததைப் படைத்துக் கொள்ளும் கற்பனைத்திறனும் ண்டு. முற்றிலும் இல்லாத ஒன்றைப் கற்பனையாக படைக்கலாம். உள்ளதை நேரே அடிப்படையாக கொள்ளாமல் அதைத் திரிந்து அமைத்துகொண்ட கற்பனை எனலாம் முற்றிலும் இல்லாததை படைக்கும் ஆற்றல் மனத்திற்கு இல்லை.

எ.கா

'கொழுகுஞ்சுனைப் பலவின் பயம்கெழு கவாஅன்
செழுங்கோள் வாங்கிய மாச்சினை கொக்கினம்

மீன்குடை, நாற்றம் தாங்கல் செல்லாது
துய்த்தலை மந்தி தும்மும்' *(நற்றினை 326)*

பலாப்பழம் நறுமணம் உள்ளது. மீன்நாற்றம் உள்ளது. ஆனால் மீன்நாற்றம் அதற்கு மாறுபட்டது பலாப்பழத்தின் மணத்தை மூக்கு விரும்பும். ஆனால் மீன் நாற்றத்தை விரும்பாது. மீன் நாற்றம் நெடியாகித் தும்மலையும் உண்டாக்குவதாகப் புலவர் ஒருவர் கற்பனை செய்துள்ளார்.

பலா மரத்தில் குரங்குகள் இருந்தனவாம். பலாப்பழங்களும் பல இருந்தனவாம். எங்கோ சென்று மீன் தேடித் தின்று வந்த கொக்குகள் அந்த நாற்றம் தாங்க மடியாமல் பெண்குரங்குகள் தும்மியதாகப் புலவர்கள் பாடியுள்ளது இல்லாத ஒன்றைப்படைப்பதாகும்.

போன்றது அன்று (விரும்பியவாறு அமைத்தல்)

இயற்கையைப் போல் அமைக்காமல் இயற்கையை உள்ளம் உணர்ந்ததுபோல் அமைப்பது பாட்டு என்று அரிஸ்டாட்டில் கூறுகின்றார். ஓவியனோ, கலைஞனோ பொருளின் உருவத்தையோ வடிவத்தையோ

அவ்வாறே வடிப்பதுபோல் தோன்றினாலும், பொருளுக்கும் ஓவியத்திற்கும் வேறுபாடு உண்டு. கலைஞன் தான் கண்டதை கண்டவாறே படைப்பது இல்லை புலவரின் உணர்ச்சி எல்லாம் பாய்ந்து அமைந்த கற்பனையில் எவ்வளவோ வேறுபாட புகுந்துவிடுகிறது.

வெறுங்கற்பனை

உள்ளம் கற்பனையை விரும்பும். வாழ்க்கையோடு தொடர்புற்று இருக்க விரும்புவது இயற்கை,

'நீர்வார் நிகர்மலர் கருப்ப
அழுதல் மேவல ஆகிப்
பழிநீர் கண்ணும்' (அகனானூறு 11)

ஒருத்தி தன் காதலனை நினைத்து கலங்குகிறாள் கண்ணீர் வடிக்கிறாள். மலர்போன்ற அவளுடைய கணக்களில் உள்ள நீர்த்துளிகள் மழைத் துளிகளை நினைவூட்டுகின்றன. நாள்தோறும். அழுது அழுது நீர் வடிதல் நிற்கவே இல்லை. நீரற்ற குளத்தை நிறைப்பதற்காக முயலும் முயற்சி போல் உள்ளது என்கிறார். உயர்வு நவிற்சியாக வருவனவற்றை உண்மை என்பது இல்லாத காரணத்தால் வெறுங்கற்பனை என்று வேறுபடுத்துகின்றன.

மாற்றலும் திரிதலும்

மலையில் வாழ்ந்த குன்றவர் பெண் ஒருத்தி பிறைச்சந்திரனைக் கையால் எட்டிப் பிடித்தாளாம். கண்ணாடிமேல் ஒளிவீசிய அந்தப் பிறைக்கு களங்கம் இருப்பதைப் பார்த்து அதற்கு அது பொருந்தாது என்று அந்த களங்கத்தை துடைக்க முயன்றானாம்.

'ஆறைக முற்சிலைக் குன்றவர் அகன்புனம் காவற்
புறையெ டுத்தொரு கடுவன்நின் றடிப்பதுபாராய்
பிறையை எட்டினள் பிடித்தற் கிதுபிழை என்னாக்
கறைது டைக்குறு பேதையோர் கொடிச்சியைக் காணாய்'

கம்பராமாயணம் அயோத்தியா காண்டம். சித்திரகூடப் படலம் 22

குன்றவர் பெண்ணின் கைக்கு வானத்தில் உள்ள பிறைச்சந்திரன் எட்டியது ஒரு வித்தை. கண்ணாடியின் மாசைத்துடைப்பது போல் களங்கத்தை துடைத்தது மற்றொரு வித்தை அந்த இரண்டும் உண்மை மிகத்திரிந்த கற்பனை என்கிறார்.

பாடுவோர் தம்உணர்ச்சிக்கும் கற்பனைக்கும் ஏற்றவாறு பொருள்களைப் புனைந்து கூறுவது. இயற்கை ஆயினும் பொருள்களின் உண்மைத்தன்மையே மாறித் திரியும் அளவிற்கு பொருந்த அவ்வாறு மாற்றியும் தரித்தும் கூறுதல் சிறந்த கற்பனையாகாது என்பார் ஹட்சன்.

அறிவியல் வளர்ச்சி

கனவு காணும்போது அறிவின் குறுக்கீடு இல்லை என்பது உண்மை. அதுபோலவே கற்பனையின் படைப்பிலும் நுகர்விலும் அறிவு குறுக்கிடாதிருத்தல் நன்மை பயக்கும். எனினும் அறிவு அமைந்த அடிப்படையில் மேல்தான் நல்ல கற்பனை எழ வேண்டியுள்ளது. அறிவியல் வளர்ச்சியால் கற்பனை வளம் குறைந்துவிடுமோ என்றும் பாட்டு என்னும் கலை வளர்ச்சி குன்றுமோ என்றும் ஹாஸ்லட் மெக்காலே முலான அறிஞர்கள் கவலையுற்றது போல் கவலையுற வேண்டியதில்லை. அறிவியல் எவ்வளவு வளர்ச்சியுற்றாலும் அறிவின் வளர்ச்சிக்கு உட்படாத துறைகள் இருந்தே தீரும் அவற்றை எட்டுவதற்காகக் கற்பனை இருந்துவரும். ஒழுங்கற்ற காட்சிகளை ஒழுங்குபடுத்தி அழகுபெறச் செய்யும் வகையிலும் காலத்தாலும் இடத்தாலும் சேய்மையில் சென்றுள்ளவற்றை அண்மையனவாகப் படைத்துக்காட்டும் வகையிலும் கற்பனையை நாடும் நாட்டம் விளங்கிவருவனவற்றுள் சிலவற்றை கூட்டிப்படைக்கும் கற்பனைப்படைப்பும் இருந்தே வரும்.

முடிவுரை

கற்பனை என்பது குழந்தை பருவத்திலிருந்தே இருக்கின்ற ஒன்றாகும். கற்பனையின் மூலம் அறிவு வளர்கின்றது.

மக்கள் அனைவரும் கனவை விரும்புகின்றனர். கனவுகளில் கற்பனையை விரும்புகின்றனர்.

விரும்பியதை மட்டும் பாடுவதாக கவிஞனின் கற்பனை அமைகிறது.

கற்பனைகளில் வேண்டாத பகுதிகளை விலக்கிவிட்டு வேண்டியவற்றை மட்டும் எடுத்துக்கொள்கின்றனர்.

கற்பனைககு புனைவு அதிக அளவில் தேவைப்படுகின்றது.

ஒவ்வொருவருக்கும் வாழ்க்கை அனுபவமே கற்பனையாக மாறுகின்றது.

ஒவ்வொருவனுடைய துன்பம் மற்றொருவருடைய துன்பமாக மாறுமபோது கற்பனை வளர்கிறது.

கற்பனைக்கு மனமும் கண்ணும் செவியும் கருவிகளாய் உள்ளது.

கற்பனை என்பது போலச் செய்தல் அன்று உள்ளம் உணர்ந்தவாறு செய்தல் என்கின்றார்.

உண்மையாக இல்லாத ஒன்றை படைத்தல் வெறுங்கற்பனை என்கிறார்.

பொருள்களின் வன்மைத்தன்மை மாறாமல் மாற்றியும் திரிந்தும் கற்பனையை உண்டாக்கலாம்.

அறிவியல் வளர்ச்சியின் துணைக்கொண்டு கற்பனை அமைக்க வேண்டும் என்கிறார்.

கற்பனையை மூன்று வகையாகப் பிரிகின்றனர். படைப்புக் கற்பனை இயைபுக் கற்பனை கருத்து விளக்க கற்பனை ஆகும்.

138. டாக்டர் மு. வ. வின் நல்வாழ்வு காட்டும் வாழ்வியல் விழு மியங்கள்

த. சண்முகசுந்தரம்
தமிழ்த்துறைத் தலைவர்
இந்தோ அமெரிக்கன் கல்லூரி
செய்யாறு - 604 407.

முன்னுரை

ஒவ்வொரு தனிமனிதனும் வாழ்வியல் தனக்கென சில கடமைகளையும், கட்டுப்பாடுகளையும் விதித்துக்கொள்ள வேண்டும். இந்தக் கடமைகள் அல்லது கட்டுப்பாடுகளே மதிப்புகள் அல்லது விழுமியங்கள் என்று அழைக்கப்படுகின்றன. விழுமியங்கள் என்பதற்கு சிறந்த, மேன்மையான, மதிப்பு (VALUE) என்பனப் போன்ற வரையறைகளை, அகராதிகள் வரையறுக்கின்றன. மதிப்புகளை நாம் மதிக்கின்ற அளவே நம் வாழ்க்கையின் உயர்வு அமைகின்றது எனலாம். இக்கருத்தையே டாக்டர் மு.வரதராசனார் நல்வாழ்வு என்ற வாழ்வியல் கட்டுரை இலக்கியத்தில் வலியுறுத்துகின்றார்.

உடம்பைப் போற்றல்

'உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்'

என திருமூலர் உடம்பை ஆலயமாக உருவகிக்கின்றார். நாம் நலமாக வாழ உடல் பாதுகாப்பு என்பது மிக முக்கியம். இதையே மு.வ. அவர்கள்,

மனம் போனப் போக்கில் வாழ்ந்தால் பெற்ற உடம்பும், விரைவில் கெடும். புலன்களும் பாழ்ப்படும் மனமும் கலங்கும், அறிவும் தடுமாறும் என்று உடல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றார். உடல் பாதுகாப்பில் உணவு ஒரு முக்கியப்பங்கை வகிக்கிறது நாம் உட்கொண்ட உணவிலே உடல் ஏற்றுக்கொண்டது போக, எஞ்சியது வயிற்றிலேயே நீண்ட நேரம் இருக்குமானால் உணவு புளித்துவிடும். இதைத்தான் உப்புசம் என்கிறோம். இதனால் உடம்பை வாட்டும் பிற நோய்கள் தலையெடுக்கும் ஆதலால் உணவிலே அளவு வேண்டும் அளவு உணவில் மட்டுமல்ல உறக்கம், புலனின்பம், இவற்றிலும் வேண்டும மனம் போனபடி உண்டு, உறங்கி இன்பம் நுகர்ந்தால், சிலகாலம் உடம்பு நல்லபடியே இருப்பதுபோல தோன்றும். பிறகு நோய்கள் தலையெடுக்கும். உடம்பை வாட்டும் உள்ளத்தையும் வாட்டும். இதைத் தான் வள்ளுவரும்,

ஆற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு (குறள். 943)

என்கிறார்.

உறக்கம் என்பது என்ன? உழைத்.த உடம்பைப் பழுது பார்ப்பதற்குரிய ஏற்பாடு இந்த உறக்கத்திலும் அளவையும் முறையையும் அமைந்துக்கொள்ள வேண்டும். அதற்கு உடல் உழைப்பு, உடற்பயிற்சி, விளையாட்டு, தோட்டக்கலை முதலியவற்றை அன்றாடம் நாம் கடைபிடிக்க வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் இரவு ஏழு அல்லது எட்டு மணி நேரம் அழ்ந்த உறக்கம் தேவை. ஆக உணவு, உறக்கம், இன்பம் நுகர்தல் போன்றவை அளவோடு இருத்தல் வேண்டும் என்கின்ற உயர்ந்த வாழ்வியல் விழுமியங்களை மக்களுக்கு டாக்டர் மு.வ. உணர்த்துகிறார்.

உரிமையும் கடமையும்

உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இரண்டுப் பக்கங்கள் போன்றவை. உரிமையை மட்டும் மிகுதியாக விரும்பி, கடமையைப் புறக்கணித்தால் குழப்பம்தான் மிஞ்சும். உரிமை நிலைக்காது என்கிறார் மு.வ. உரிமைக்கும் கடமைக்கும் இடையேயுள்ள ஏற்றத்தாழ்வை நீக்குவதற்காக இயற்கை அமைத்த ஓர் அருமையான பாதுகாப்பே அன்பு இவை எங்கே உயர்ந்து விளங்குகின்றதோ அங்கே உரிமைப் போராட்டமில்லை என்ற மு.வ.வின் கருத்தைத்தான் வள்ளுவரும்.

அன்பின் வழியது உயிர்நிலை அ∴திலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு (குறள் 80)

என்கிறார். ஆதலால் குடும்பத்தில் தாய் செலுத்தும் அன்பைத் தவறாக பயன்படத்திக்கொண்ட தந்தையோ, மக்களோ தன்னலம் உடையவர்களாக இருந்தால் தீமை நேரும் அன்பானது வறண்டுபோகும். பிறகு உரிமைக்கும் கடமைக்கும் போராட்டம்தான் இதேநிலைமைதான் சமூகத்திலும் ஏற்படும் ஏனெனில் ஒவ்வொரு மனிதனும் தத்தம் கடமைகளைச் சரிவர ஆற்றுதலே மிகச்சிறந்த வாழ்வியல் விழுமியமாகும். இக்கருத்தையே

ஈன்று புறந்தருதல் எந்தலைக் கடனே
சான்றோன் அக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ் சமம் முருக்கி
களிறு எரித்து பெயர்தல் காளைக்குக் கடனே (புறம் .312)

என்னும் பாடல்வழி பொன்முடியார் விளக்குகிறார். ஆக உரிமையும் கடமையும் ஒன்றையொன்று ஏற்றத்.தாழ்வில்லாமல் சமமாக பாவித்துக் கொள்ளுதலே மிகச் சிறந்த விழுமியங்கள் எனலாம்.

புலனடக்கம்

மெய், வாய், கண், மூக்கு, செவி என புலன்கள் ஐந்தினையும்

அளவோடு பயன்படுத்தி அடக்க வேண்டும். உலகம் ஒரு மண் உருண்டைதான். உலக மக்கள் எல்லோரும் ஒரே குடும்பம்தான். ஆனால் அவர்களுக்கான சுற்றச் சூழலும் தட்பவெட்ப நிலைகளுக்கு ஏற்ற அடை, உணவுமுறைகள், பழக்கவழக்கங்கள். ஆகியன நடைமுறையில் வேறுவேறாக உள்ளன. அதற்கேற்றவாறே அந்தந்த நாட்டுப் பழக்கவழக்கங்களும் உள்ளன. ஆக ஒரு நாட்டார் பிற நாட்டாரின் பழக்கவழக்கங்களைக் கண்மூடித்தனமாகக் கடைபிடிக்க வேண்டியதில்லை. உதாரணமாக அயல்நாட்டவர் பலர். பெரும்பாலும் உணவு உண்ணும் சூழலில்கூட, குடிதண்ணீரை அதிகமாக அருந்துவதில்லை. மாறாக மதுக்குடிக்கும் பழக்கத்தை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அதிலும் சோடா போன்ற நீர்மங்களைச் சேர்த்து சிறுகச்சிறுக அருத்துபவர்களாக இருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு பெருந்தீங்கு ஏற்படப்போவதில்லை. ஆனால் அதேப் பழக்கத்தை நம் நாட்டினர் - சாதாரண நீரைப்போல மதுபானங்களை அருந்துவதால் இவர்கள் அறிவு மயங்கி, பெற்றதாயும் பழிக்கும் விதமாக நடந்துகொள்ளுவதைக் குறிப்பிடலாம். ஏனெனில் இது வெப்பம் மிகுந்த நாடு. ஆகவே இங்கு ஐம்புலச்சுவைக்கும் அளவு தேவை.

மனம்போனபடி இன்பத்தை நாடுவது, சுவைகளைப் பெருக்கி அளவுகடந்து உண்பமதைப்போல் தீமையாய் முடியும். இங்கு உடல் நலத்திற்கு கெடுதல் நேராத வகையில் புலன் இன்பங்களை அமைத்துக்கொள்ள வெண்டும் என்று வலியுறுத்துவதே மிகச் சிறந்த விழுமியப்பண்பெனக் கொள்ளலாம்.

பொதுமை அறம்

உலகில் வாழும் மக்கள் அனைவரும் சமம். மக்களிடையே எக்காரணம் கொண்டும் உயர்வு தாழ்வு கற்பிக்கும் மனப்பான்மையை ஒழிப்பது நல்லது. இதையே,

எத்துனையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்

என்று இராமலிங்க அடிகளார் பொதுவுடைமைக்கு நல்லதொரு வடிவம் தருகின்றார். மேலும் சாதிச் சண்டைகளிலும். சாத்திரப் பேர்களிலும் வெறிகொண்டு அதைல் கூடாது என்று அறிவுரை பகர்கின்றார். இதை கடைபிடித்தாலே பொதுவுடைமை தோன்றி மக்கள் சமுதாயம் மேன்மையடையும். இதன்படி சமுதாயம் நல்வழியில் அமைந்து விட்டால் தனிமனிதனுக்கு எவ்வளவோ நன்மை உண்டாகும். இதைவிடுத்து பகையும் பூசலும் உண்டாயின் சமுதாயச் சீர்கேடு ஏற்படும் என்று பொதுமை என்கின்ற ஒப்பற்ற வாழ்வியல் விழுமியத்தை உணர்த்துகிறார் டாக்டர் மு.வ.

வழிபாடு

வழிபாடு என்பது என்ன? என்ற கேள்விக்கு மக்களிடையே வேறுவேறு விதமான பதில்கள் கிடைக்கிறது. ஆனால்

வாழ்க்கையின் முதலும் முடிவும் கடவுளைச் சார்ந்தவை என்று தெளிந்து அந்த வழியில் சிந்தையைச் செலுத்துதலே வழிபாடு ஆகும் என்கிறார் மு.வ. இதைத்தான் திருமூலரும் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற ஒருமைப்பாட்டின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாம் எந்தக் கடவுளை வழிபடுகின்றோமோ அந்தக் கடவுளே மற்ற சமயத்தவரையும் படைத்துக் காத்து வாழ்பவர் என்ற உண்மையை ஒவ்வொரு சமயத்தவரும் தெரிதல் வேண்டும்இ. ஏனெனில் சமயங்களின் பெயரால் கோயில்களிலும் வீடுகளிலும் நடத்தப்பெறும் சடங்குகளெல்லாம் வெறும் சடங்குகளே என்று உணரவேண்டும். அதோடு மட்டுமல்லாமல் கடவுள் என்பவன் எல்லா உயிர்களின் வாழ்வுக்கும் பொதுவான திட்டங்களை வகுத்து பொதுப்பட ஆட்சிப்புரியும் ஒரு மகாசக்திழ என்பதையும் நாம் உணரவேண்டும்..

நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம், அன்பே
மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராமரமே. . .

என்கிறார் தாயுமானவர். அன்புதான் வழிபாடு, அன்புதான் பெரும் சக்தி, அன்புதான் கடவுள், அன்பின் வயப்பட்டதுதான் மனித இனம் ஆக அன்பை ஆதாரமாகக் கொண்டே - கடவுளின் ஆட்சிமுறை இயக்கிவருகின்றது என்பதையே வழிபாடு என்னும் தலைப்பின் கீழான வாழ்வியல் அறமாக மு.வ. சொல்லவிழைகிறார்.

நிறைவுரை

மனிதன் சக மனிதனை மறந்துபோகின்ற இக்காலக் கட்டத்தில், மனிதன் நலமாக வாழ சக மனிதனிடம் நேசம் கொண்டு நடப்பதே டிகச்சிறந்த விழுமியப்பண்பாக உள்ளது. அதற்கு மனிதன் முதலில் தன்னிடமுள்ள நல்ல குணங்களைப் பிறருக்குக்காட்ட முற்பட வேண்டும். அத்தகைய நல்ல செயல்களான உடம்பைப் பாதுகாக்கின்ற நன்முறைகளையும் அதன் அவசியத்தையும் உணர்தல், தனக்குள்ள உரிமைகளையும் கடமைகளையும் தெளிவுறுதல். இதற்கெல்லாம் நிலைக்களன்களாக உள்ள புலனடக்கத்தை அறிதலே நல்லறம் என்பதைத் தெளிதல் அவ்வாறு தெளிந்தபின் இச்சமுதாயத்துடன் ஒட்ட ஒழுகுதலால் ஏற்படும் நன்மையினைப் புரிதல் இதையெல்லாம் நன்கு உணர்ந்த பின் வழிபாட்டின் அவசியத்தை வலியிறுத்தி மனிதன் - மனிதனாக வாழ இத்தகைய விழுமியப்பண்புகள் தேவை என்பதை நன்கு உணர - நல்வாழ்வு என்னும் ஒப்பற்ற இலக்கியத்தைப் படைத்துள்ளார் டாக்டர் மு.வ. என்பது உண்மையே.

139. டாக்டர் முவவின் சமூக - ஒழுக்கலாறுகள்

ச. அன்பு
இனநிலை விரிவுரையாளர்
தமிழ்த்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி
செய்யாறு - 604 407.

நினைப்பதைச் சொல்லிவிடுவதற்கு அறிவு தேவையில்லை. அதற்கான காரணங்களை தேடி தொகுப்பதற்குத்தான் அறிவுநெறி தேவை - டாக்டர் மு.வ.

டாக்டர் மு. வரதராசனார் 1912 ஏப்ரல் மாதம் 12 ஆம் நாள் முனுசாமி - அம்மாக்கண்ணு தம்பதியினருக்கு மூன்றாவது குழந்தையாகப் பிறந்த - பன்மொழிக் கற்றறிந்த தமிழறிஞர். இவரது இயற்பெயர் திருவேங்.கடம் என்னும் குலமரபைப் போற்றும்படியிலான. அவரது பாட்டானாரின் பெயராகும். மு.வ.வின் தாய்வழிப்பாட்டரின் பெயர் நரசம்மா என்பதாகும். அவருக்கு இவர் மீதிருந்த தீராத அன்பு காரணமாக டாக்டர். இளமைப்பருவத்தில் மூன்று வீட்டார்க்குமான ஒரே அண்மகன் என்ற அடிப்படையில், அவரது சுற்றாதார்களின் அளவுகடந்த அன்போடு ஆர்க்காட்டிலிருந்து ஆறாவது மைலில் சோளிங்கபுரம் போகும் சாலையில் அமைந்துள்ள வேலம் என்னும் ஊரில் வாழ்ந்துள்ளார். அதைத்தொடர்ந்து அவருக்குக் கிடைத்த நல்லுறவுகள் காரணமாகவும், அறிவுநெறியில் ஒழுகும் சுற்றத்தார் மற்றும் நண்பர்கள் காரணமாகவும் நல்லறிவாளராக நல்லொழுங்க சீடராகச் சிறுவயது முதலே தமிழ்மீதும் தமிழர்கள் என்று அழைக்கப்படும் தமிழ்ச்சமூகத்தின் அடிப்படைக் கூறுகளான பண்பாடு, பழக்கவழக்கங்கள், ஒழுக்கலாறுகள், மீதும் மிகுந்த விருப்பமும் விழைவும் கொண்டவராக டாக்டர் மு.வ. திகழ்ந்துள்ளார். அதன் வெளிப்பாடுகளாகத்தான் அவரது படைப்பிலக்கியங்கள் அனைத்தும் அவரது வாழ்வியல் தருணங்களை மையமிட்டதாகவும், அல்லது அவர்பார்த்து, உள்வாங்கிய சமூகமக்கள் அமைப்பை மையமிட்டதாகவும் அமைந்திருக்கின்றன. அவ்வகையில் இக்கட்டுரை டாக்டர் மு.வ. அவர்களின் படைப்பிலக்கியங்களான அவரது 13 நாவல்கள் (1946 1961), இரண்டு கதைத் தொகுப்புகள் (1948 - 1952) மற்றும் 6 நாடகநூல்கள் (1951 - 1959) ஆகியவற்றில் பரவலாகக் காணலாகும் சமூக ஒழுக்கலாறுகளை ஆராய்வதாக அமைக்கப்படுகிறது.

சமூகம் மற்றும் சமுதாயம்

தனிமனிதர்களையும் (Individuals) பல்வேறு அமைப்புகளையும்,

குழுக்களையும் துணைக் குழுக்களையும் தன்னகத்தே கொண்ட ஒரு அமைப்பு சமுதாயமாகும். பொதுவாக சமுதாயம் என்பதைத் தற்போது ஒரு குழுமம் - கூட்டம் என்னும் நிலையில்தான் பேசுவர். ஆனால் சமுதாயம் என்றால் என்ன என்பதைப் பற்றிச் சமுதாய தத்துவ வாதிகள் பலவிளக்கங்களைத் தருகின்றனர்.

பழக்கமரபு, செயலாற்றும் முறை, அதிகார வலிமை, ஒருவருக்கொருவர் உதவுதல் ஆகியவற்றின் ஓர் அமைப்பு முறையாகவும் பல குழுமங்கள், பிரிவுகள் ஆகியவற்றுடன் மனிதனின் சுதந்திரம் நடத்தை (ஒழுக்கம்) ஆகியவற்றை நெறிப்படுத்தும் ஒழுங்கு முறையாகவும் இருப்பது எதுவோ அதுவே சமுதாயம் (க. பாஸ்கரன் சமுதாயத்தத்துவம். ப.26) என்று மெக்ஸியர் மற்றும் பேஜ் என்போர் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதையே கிட்டிங்ஸ் என்பவர்

"சமுதாயம். என்பது தன்னுள்ளே ஒரு பேரவைப் போன்ற முறையான உறவுகளைக் கொண்டமையும் ஓர் அமைப்பு அவ்வுறவால் மனிதர்கள் ஒருவருக்கொருவர் இணைந்து வாழ முடியும்" (மேலது, ப.27) என்று கூறுகிறார். சமுதாயத்தைப் பற்றிய இவ்விளக்கங்கள் பொதுவாக சமூக அமைப்பு நிலையினை வலியுறுத்துவனவாக அமைந்திருக்கின்றன. அப்படியானால் சமுதாயத்தத்துவம் என்பது என்ன? என்ற கேள்வி மேலெழுகிறது.

சமுதாயத் தத்துவம்

சமுதாயத்தைப் பற்றிய சிறப்பான மனிதர்களைப் பற்றிய ஆயடவைத் தத்துவ நோக்குடன் மேற்கொள்வதே சமுதாயத்தத்துவம். மனிதர்களின் சமூக உறவுகளை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தைப் பற்றியே இதன் கோட்பாடுகள் அமைகின்றன. இந்த சமுதாயத்தில் அல்லது சமூகத்தில் நாம் பார்க்கின்ற சமூக உறவுகள் பலவகைப்பட்டவனாக அமைகின்றன. ஏனெனில் மனிதர்களும் அவர்களின் மனநிலைகளும் பலவிதம் அவர்கள் தங்களுக்குள் கொண்டிருக்கும் உறவுகளும் பலவகைப்பட்டவை. ஆனால் அவர்கள் எல்லோரும் ஒரு சமுதாயத்தில் சமூக உறவு கொண்டு ஒன்றாக வாழ்ந்து வருகின்றார்கள். ஆக சமூக உறவுதான் சமுதாயத்தின் அடி ப்படையாகிறது. இங்கு சேர்ந்து வாழ்வது மட்டும் சமூக உறவாகி விடுவதில்லை. பல வேற்றுமைகள் இருந்தும் மனிதர்களை ஒன்றாக வாழச்செய்வதுதான் சமூக உறவின் நோக்கமாக இருப்பதையும் கவனிக்கவேண்டியுள்ளது. இதைத்தான் வேற்றுமையில் ஒற்றுமை என்பார்கள். இது நிலையானது ஆக வாழ்க்கையில் உண்மையான உறுதிப்பொருள்களை உள்ளவாறே பிரதிபலிக்கும் ஒரு துறையாக சமுதாயத் தத்துவம் விளங்குகிறது. இங்கு மனிதன் இருக்கின்றான்

என்பதைப் பற்றிக் கூறாமல் அவன் எப்படி இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவதே சமுதாயத் தத்துவத்தின் பணியாகின்றன. அவ்வகையில் சமூக படைப்பாளி என்ற அந்தஸ்தை தன் படைப்புகள் ஒவ்வொன்றின் மூலம் தக்கவைத்துக் கொண்டனர். டாக்டர் மு. வரதராசனார் என்று அசொன்னால் அது மிகையாகாது. ஏனெனில் சமுதாயத்தின் மீதான பார்வையினை அவரது இலக்கியப்படைப்புகள் அனைத்திலும் அவர் கையாண்டிருக்கும் படைப்பாளுகைகள் (பாத்திரங்கள்), வெளிப்பாடுகள் (உத்திகள்) என அனைத்துக் கூறுகளும் மையப்படுத்தியதாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். உதாரணமாக,

சட்டமும் பணமும் சேர்ந்து நீதி மன்றத்தைக் கைப்பற்றி ஒரு கட்சியாகக் கூட்டு அமைத்து (இன்று) உண்மைக்குப் பகையாக்கியுள்ளன. (சுயமை - 1969, ப.384).

மானம் இருந்தால் மகராசன் ஆகமுடியாது இரக்கம் இருந்தாலும் இருப்பதும் போய்விடும். உண்மை இருந்தால் உழைத்தாலும் பயனில்லை ஒழுக்கம் இருந்தால் ஒரு காசுக்கும் பயனில்லை (பெற்றமனம் - 1970, ப. 197).

பெரியது உலகில் பணம் (மலர்விழி - 1969, ப.90)

மேற்கண்ட மு.வ.வின் படைபாளிகைகள் கூறும் கருத்தாக்கங்களைக் கூறலாம். பொதுவாக நல்லவர்களை நல்லவர்களாகவே தொடர்ந்து வாழவைக்க உதவி புரியாத சமுதாயமாக நம் சமதாய அமைப்பும், அதன் ஒழுக்கலாறுக்கும் மாறியும் மருவியும் இருப்பதை டாக்டர். மு.வ. தன் படைப்புகள் ஒவ்வொன்றிலும் வெளிப்படுத்துபவராக இருந்திருக்கிறார்.

தனிமனிதனும் சமுதாயமும்

மனிதனே சமுதாயத்தை உருவாக்குகிறான். தனிமனிதனும் சமுதாயத்தை அமைக்க முடியும். அதை இயக்க முடியும். ஆனால் சமுதாயம் தான் தனிமனிதனைப் பண்படுத்துகிறது. ஒரு குழந்தையின் தனித்தன்மை சமுதாயத்தில் காணப்படும் சமூகச் சூழ்நிலைகளைப் பொருத்தே அமைகிறது. எனவேதான் மு.வ.வின் கல்விக் குறித்துச் சுந்தனைகள் யாவும் குழந்தைகளையும், பெண்களையும் மையமிட்டவை களாக இருக்கின்றன. சமுதாயத்திலிருந்துதான் எல்லாவற்றையும் மனிதன் கற்றக் கொள்கிறான். அறிவும், ஆற்றலும் என்பது அவனைச் சார்ந்தது. சமுதாயத்தின் அவனது அன்மாவோ அல்லது நான் என்னும் எண்ணமும் வளர, அவனும் ஒரு மனிதன் என்ற நிலையை அடைகிறான். இதைத்தான் டாக்டர் மு.வ.

தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்குமான உறவாகக் குறிப்பிடுகிறார்.

இவர் கருத்துப்படி சமுதாயம்தான் தனிமனிதனை மிகுதியாக பாதிக்கிறது. சமுதாய தீமைகள்தான் ஒரு தனிமனிதனை தீயவனாக்குகின்றது. எனவே அச்சமுாயத்தால் தான் ஒருதனிதனுக்கான தன்மையினையும் முழுமையாக வழங்க முடியும் என்பதாகிறது. (மனிதனின் வாழ்க்கையில் ஒரு நல்ல அமைப்பு இல்லாமல் போவதற்கு யார் பொறுப்பு? தனிமனிதனா? இல்லை அரசியல் தான் - மு.வ. செந்தாமரை - 1946, முன்னுரையிலிருந்து). மேலும் ஒவ்வொரு சமுதாயத்திலும் தனி அமைப்புகள் இருக்கும். அஃது ஒவ்வொரு மனிதனையும் தன் வழிகளிலே இயக்கமுயலும். இம்முறையில் பார்த்தால் தனிமனிதனும் சமுதாயமும் வெவ்வேறான - சார்பற்ற தொகுதிகளாகத் தெரியும். ஆனால் இவற்றின் இருப்பும் வளர்ச்சியும் ஒன்றையொன்று சார்ந்திருக்கும் என்பதுதான் உண்மை அதனடிப்படையில் தான் தனிமனிதனால் படைக்கப்படும் இலக்கியங்கள் சமுதாயத்தைப் பிரதிபலிக்கின்றன அவ்வகையில் டாக்டர் மு.வ.வின் படைப்புகள்.

காதலின் பல்வேறு நிலைகளையும் செழுமைகளையும் கூறுகிறது (செந்தாமரை - 1946).

காதலுக்கு தடையாக நிற்கும் பொருளாதார ஏற்றத்தாழ்வு .(பாவை - 1948)

குடும்பச் சூழலில் பொருளாதார வேறுப்பாடு - பெண்ணின் வாழ்வைப் பாதிக்கும் சூழலைக் குறிப்பது (கள்ளோ காவியமோ? - 1947).

போரால் விளையும் கொடுமைகள் (அந்தநாள் - 1948)

பண ஆசையும் ஆடம்பரமும் என்ன செய்யும் என்பதை விளக்குதல் (மலர்விழி - 1950)

தாய்மையைப் பேசுவதாக - (பெற்ற மனம் - 1951)

திருமணத்திற்கு முன்பின்னான பாலியலிலால் ஏற்படும் பிரச்சனைகள் (அல்லி - 1952)

கலைஞரின் உணர்ச்சியை மேலாகக் காட்டுவது (கரித்துண்டு - 1953)

யாருக்கும் தெரியாமல் செய்துவிடும் பிழைகளால் மனத்திற்கு ஏற்படும் பிரச்சனைகளைப் பேசுதல் (நெஞ்சில் ஒரு முள் - 1956)

இருமாதிரியான இளைஞர்களைப் பற்றியது (அகல் விளக்கு வாடாமலர் - 1960)

குறிக்கோளுடன் வாழும் மனிதர்களுக்கான சமூகப் பிரச்சனைகள்

(மண்குடிசை - 1961)

சமூக தளத்தில் காணப்படும் அரசியல் மற்றும் ஊழல்கள் (கயமை - 1956)

என பொதுவுடைமை, புரட்சி, கலப்புமணம், மணவிலக்கு, பொருளாதார சுதந்திரம், பெண்கல்வி, வரத்சனை ஒழிப்பு, காதல்மணம், வறுமை ஒழிப்பு மற்றும் பொதுமையில் ஏற்றத்தாழ்வு நீங்கல் முதலான சமூக ஒழுக்கலாறுகளை தொடர்ந்தே தன் கதையாக்கங்களை எடுத்துச்செல்கிறார்.

படைப்பாளனும் சமுதாயமும்

தனிமனிதனின் படைப்பாகக ஆற்றலே அவனைப் படைப்பாளியாகுவன. அதன்கீழ் தனிமனிதனின் செயலாக்கங்களில் ஒன்றாக இலக்கியம் விளங்குகிறத. ஆனால் அதில் இயங்கும் தனிமனிதனுக்கான இயக்கம் அவன் வாழம் சுற்றம் சார்ந்த சமூதாயத்தை மையமிட்டதாகத்தான் இருக்கின்றது. பொதுவாக சமுதாயத்தால் படைப்பாளன் (எழுத்தாளன்) பாதிப்புக்குள்ளாகின்றான். அதேபோல் சமதாயம் எழுத்தாளனால் பாதிப்புக்குள்ளாகிறது. இங்கு புதிய சமதாய மனநிலைகளை உருவாக்குவதில் எழுத்தாளனின் பங்கு குறிப்பிடத்தக்கது. அதனடிப்படையில் இலக்கியங்கள் நாட்டுப்பற்றை எழுப்புவதில் பங்கெடுக்கின்றன. அப்படித்தான் மகாகவி பாரதியின் எழுத்துக்கள் தமிழகத்தில் நாட்டுப்பற்றை வளர்த்தன. வால்டர் ஸகாட்டின் புதினங்கள் இங்கிலாந்தில் நடுத்தரவர்க்க மக்களின் மனநிலையில், பலப்புதிய மாற்றங்களை விளைவித்தன. இம்மாதிரியான இலக்கியங்களின் செயல்முறை ஆக்கங்களால் அவைகள் மறைமுகமாக மக்கள் மனப்போக்கை எந்த அளவுக்கு மாற்ற முயற்சித்து - வெற்றிக் கண்டுள்ளன என்பதை அறியலாம். அதன் கீழாகத்தான் நாம் டாக்டர் மு.வ.வின் நாடக இலக்கியங்களையும் பார்க்க வேண்டியுள்ளது. அதில் அவர் தம்மை எங்கே? கடமை எங்கே? காதல் எங்கே? (1954) என்பது மாதிரியான கேள்விகளைத் தொடர்ந்து எழுப்பிச் செல்கிறார். மனச்சான்று (1952) என்றும் ஏமாற்றம் என்றும் அவர் எழுதிய நாடகங்கள் சமுதாய அவலங்களைச் சுட்டிக்காட்டி அதன் ஒழுக்கக் கோட்பாடுகளை வலியுறுத்துவனவாக அமைந்திருக்கின்றன.

நிறைவுரை

எழுத்தாளன் அல்லது படைப்பாளன் என்பவன் சமுதாயத்தின் ஒரு அங்கம். அவன் சமுதாயத்தை ஒதுக்கி வாழ முடியாது. அதேநேரத்தில் சமுதாயத்தில் இருந்து ஒதுங்கியும் வாழ முடியாது. அத்தகையச் சூழலில் தான் அவன் சமுதாயத்தை ஏற்று வாழ்கிறான். அவ்வாறு அவன் சமுதாயத்தை ஏற்றுக்கொள்ளும் பொழுது அதன் ஒழுக்கவிதிகளையும்

ஏற்க வேண்டியுள்ளது. அப்படி ஏற்றுவாழ முற்படும்பொழுது சமுதாயத்தின் முரண்பட்ட போக்கை அவன் பல நிலைகளில் எதிர்நோக்கி - எதிர்ப்பட்டு - சமுதாயத்தின் மேல் எரிச்சல் அடைகிறான். இதனால் எழுகின்ற அவனது படைப்புகள் சமுதாய சிந்தனைகளையுடையவைகளாக வெளிப்படுகின்றன. அதில் பெருவாரியாக இடம்பெறும் சிந்தனையாக்கங்கள் ஒழுக்கம் சார்ந்த முறைகைளாக இருப்பது கவனிக்கத்தாக்கதாகிறது. அதன்கீழ் டாக்டர் மு.வ.வின் இலக்கியங்கள், சமூகத்தின் நன்றியில்லாமல் ஒரு குடும்பமும் தனி ஒருவனும் வாழ முடியாது. (விடுதலையா - 1948) என்று சமூக ஒழுக்கத்தின் மீதான நன்றியை வலியுறுத்துகின்றன. மேலும் அவரது இலக்கியங்களின் மீதான - முறையான சமூதாய தாக்குதல்கள். சமூக ஒழுக்கலாறுகளை தொடர்ந்து வலியுறுத்து வண்ணம் அமைந்திருப்பதைக் காணலாம். அதன் ஒரு உச்சக்கட்டமாக டாக்டர் மு.வ. தன் கற்பனைகளுக்குக் கூட ஒரு திறவுகோல் (கடித இலக்கியம்) காண்கிறார் எனலாம்.

140. மு. வ. வின் நாவல்களில் பண்பாடு

சு. முரளி
எண்.2, மெயின் ரோடு
பென்னாத்தூர்
வேலூர் 632058.

களவும் கற்பும்

மண நிகழ்வுக்கு முந்தித் தலைவனும் தலைவியும் கொள்ளும் காதல் களவு என்றும், மணத்திற்குப் பின்னர் நிகழும் வாழ்க்கையானது கற்பு என்றும் பிரிக்கப்படுகின்றன. களவு என்பது இல்லற வாழ்க்கைக்கு ஒரு படி ஆகும். ஆனால், வாழ்க்கைப் படிகளில் ஒவ்வொன்றாக மேலேறிச் செல்ல வேண்டுமேயன்றி விட்ட படியை நினைத்து நினைத்துத் தயங்கக் கூடாது. இதனை, களவு என்னும் காதல்படி, மறக்க வேண்டியவ வாழ்க்கைப் படியே ஆகும். ஆனால், மற்றப்படி களவில் - இதற்குத் தனிச் சிறப்பு உண்டு. மற்றப் படிகள் உடம்பை வளர்த்தன. இந்தக் களவு என்னும் படியே உயிரின் உணர்வை வளர்க்கம் மரபை உடையது. ஒருவனும் ஒருத்தியுமாக வாழ்ந்து உலகத்தில் சிறப்பை அடைவதற்கு அடிப்படையான நல்ல உணர்வை வளர்க்கும் பெருமை உடையது[1] என்று களவு வாழ்க்கையின் அடிப்படை உண்மையை எடுத்துக் காட்டுகிறார். இவ்வளவு பெருமையும் அருமையும் உடையது களவு என்பது புலனாகிறது. இக்களைப் பற்றி ஔவையார், களவையும்[2] என்று உம் கொடுத்து வலியுறுத்துகிறார். வாழ்க்கையில் மிகச் சிறந்த படி இது. மறப்பதற்கு அரிய ஒரு படி இது. உண்மைதான் ஆனாலும் இதையும் மறக்க ஆவேண்டும் என்கிறார்.

'களவும் மற' என்று கூறியிருந்தால், கள், கொலை, பொய் முதலிய குற்றங்களைக் கூறுவது போல் அகியிருக்கும். கள் முதலியக் குற்றங்கள் அடியோடு நீங்க வேண்டும் தவிர, நினைப்பதும் கூடாது. ஒன்றை ஒரு முறை எண்ணி நினைந்த பிறகுதான் மறக்க முடியும். கள் முதலியவற்றை எண்ணுவது குற்றம், நினைப்பது குற்றம். ஆகையால், மற என்று சொல்லுவதில் பயன் இல்லை என்பது மு.வ.வின் எண்ணம். திருடு என்னும் களவைப்பற்றித் திருவள்ளுவர் சொல்லும் போது இவ்வுண்மையைத் தெளிவாக்குகிறார். பிறருடைய பொருளைத் திருடலாம் என்று எண்ணுவதே குற்றம் என்கிறார். ஆதலால், ண்ணி மறப்பதும் குற்றமே ஆகும்.

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்

எனவே திருடு முதலியவற்றையும் மற என்று சொல்வது பொருந்தாது. எண்ணவும் கூடாது என்பதே உண்மையானது. ஆனால், ஔவையார்

கூறும் களவோ உயர்ந்த வாழ்க்கைப் படி. ஒருவனும் ஒருத்தியும் அதை எண்ணி உயர வேண்டும். களவொழுக்கத்தில் வாழ்ந்து உயர வேண்டும். ஆகவே, வாழ்க்கையில் ஒரு முறை வேண்டியுள்ள படி அது அதனால் தான் களவு மற என்று அடியோடு ஒதுக்காமல், களவும் என்று சிறப்பும்மை கொடுத்து, கற்று மற என்று வரையறை செய்துள்ளார். களவு காதலை வளர்ப்பது ஆகையால், வாழ்க்கையை வளப்படுத்துவது அவ்வளவு சிறப்பு இருந்தும் அது வாழ்க்கையில் ஒரே முறை கற்பதற்கு உரியது. ஒருவன் ஒருத்தி என்று தொடங்கிய தோடு அந்தக் கல்வி முடிந்து போக வேண்டும். அவளோ அவனோ இரண்டாம் முறை வாழ்க்கையில் பிறரிடம் கையாள்வது கூடாது என்பது இக்கட்டுரையில் கண்டறியப்பட்ட உண்மையாகும்.

விழாவும் சடங்குகளும்

விழாக்கள், தெய்வ வணக்கத்தின் பொருட்டும், அனைத்து மக்களும் ஒன்று கூடி உறவினைக் கொண்டு மகிழும் பொருட்டும் உணர்வுகளால் புதுப்பித்து எழுச்சி கொள்ளும் பொருட்டும் சமுதாயத்தில் நிகழ்கின்றன. ஆனால், மு.வ. கூறுகையில், பண்டிகை, நோன்பு, திருவிழா முதலியவைகளோ எல்லோருக்கும் தெரிந்தவை, எல்லோருக்கும் விரப்பமானவை. இப்பண்டிகை முதலானவை மிகச் சிறந்த நோக்கங்களோடு ஏற்பட்டுத்தப்பட்டிருக்கலாம். ஆனால், அறிவும் ஆராய்ச்சியும் அற்ற பொதுமக்களின் பொழுது போக்காகவே மாறியுள்ளன' என்பதை எவரும் மறுக்க முடியாது.

இவற்றால் உண்மைப்பயனை எதிர்பார்க்கவே முடியவில்லை. ஒருவகையில் உலகப் போக்கு அறிந்த சுற்றுப்புறம் அறிந்து, வாழ்க்கை நிலையினை உயர்த்திச் செய்வதற்கு இவை முட்டுக் கட்டையாகவே உள்ளன. புதுமையில் வேட்டையும் முன்னேற்றத்தில் ஆவலும் தோன்றாத படி தடுப்பற்குக் கருவியாகவும் உள்ளன. வாழ்க்கையைப் பண்படுத்தத் தோன்றிய விழா முதலியன இன்று வாழ்க்கையைக் கெடுக்காமல் விட்டுச் செல்லுமா என்று கலங்க வேண்டியுள்ளது. பெண்மைக்கு உரிமையும் சிறப்பும் தேடித்தர அமைந்த பழக்க வழக்கங்கள், விழாக்கள் இன்று கண்மூடி வாழ்க்கைக்குக் கருவிகளாயினவே என்று வருந்த வெண்டியுள்ளது. சுருங்கக் கூறினால், வாழ்க்கைக்குத் துணையாகத் தெடிய கருவிகள் இன்றி வாழ்க்கையைக் கெடுக்க வந்தனவா என்று எண்ண வேணடியுள்ளது.

சடங்குகள்

தமிழர் வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை பல கட்டங்களில் சடங்குகள் இடம் பெறுகின்றன. பிறந்த குழந்தையைத் தொட்டிலில் போடுவது முதல், நீத்தார் நினைவுக்கடன் அற்றுதல் என வாழ்வின் பல நிலைகளில் சடங்குகள் நிகழ்த்தப்படுகின்றன. இத்தகைய சடங்குகளை.

வாழ்க்கைக்காகச் சடங்குகள் இதுதான் உண்மை சடங்குகளுக்காக வாழ்க்கை என்பது நமக்கு வேண்டா' என்பர் மு.வ. அன்பும் அறிவும் வளர்வதற்காக உடலும் உயிரும் வேண்டும். வளர்ப்பவை நெறியினைத் தவறாமல் அமைத்து பயன்தரும் பொருட்டுச் சில சடங்குகள் வேண்டும். ஆனால், அச்சடங்குகளுக்குக் கட்டுப்பட்டு, அவைகளே பெரியவை என்று எண்ணிவிட்டு, உடலும் ஓம்பாமல், உயிரும் ஓம்பாமல், அன்பும் வளர்க்காமல், அறிவும் பெருக்காமல் வாழும் நிலைமையை இன்று அதிகம் காணலாம்.

அறிவன

இவ்வாறு மு.வ. அவர்கள் தன்னுடைய நாவல்களின் பண்பாட்டை உணர்த்தியுள்ளார். இது தமிழ்ச்சமூகத்தின் மீது அவர் கொண்ட பற்றினைப் புலப்படுத்துகிறது. இக்கட்டுரையின் மூலம் சடங்குகள், விழாக்கள், களவு மற்றும் கற்புநிலை போன்றன புலனாகிறது.

அடிக்குறிப்புகள்

1. வரதராசன்.மு, பெண்மை வாழ்க, ப.53
2. ஜனகா சுந்தரம், ஔவையார் அறநெறி தெளிவுரை, ப.17
3. ராமசாமி, மு. திருக்குறள் தெளிவுரை, குறள் 262
4. வரதராசன், மு, பெண்மை வாழ்க, ப.20
5. பாரதியார், பாரதியார் கவிதைகள், ப.337

டி. மு. வ. வின் சிறுகதை உத்திகள்

தே. இதயாள் பாவைச்செல்வி
துணைத்தலைவர்
திருவண்ணாமலைத் தமிழ்ச் சங்கம்.

முன்னுரை

சிறுகதைக் கலை, உலகச் சிறுகதை வரலாற்றின் பிற்பகுதியிலேலேயே தமிழகத்தில் வளர்ச்சியுறத் தொடங்கியது. வ.வே.சு ஐயரில் தொடங்கி, பி.எஸ். இராமையா, புதுமைப்பித்தன், கு.ப. இராசகோபாலன், கல்கி, தி. ஜானகிராமன், சி.க. செல்லப்பா, விந்தன், மௌனி, பெ.கோ. சுந்தரராசன், லா.ச. இராமாமிர்தம், ரகுநாதன், கு. அழகிரிசாமி, சுந்தர ராமசாமி, அறிஞர் அண்ணா, டி.கே.ீ.சீனிவாசன், கலைஞர் மு.கருணாநிதி, ஜெயகாந்தன், என வளர்ந்த சிறுகதை ஆசிரியர்களின் வரிசையில் டாக்டர் மு.வ.வும் தனக்கென ஒரு தனி இடம்பெற்று விளங்குகிறார்.

மு.வ.வின் சிறுகதைகள்

பத்துக்கும் மேற்பட்ட புதினங்களை டாக்டர் மு.வ., எண்ணிக்கையில் மிகக் குறைந்த சிறுகதைகளையே எழுதியுள்ளார். 1943 - ஆம் ஆண்டில் வெளிவந்த 'விடுதலையா' '1952 - ஆம் ஆண்டு வெளிவந்த , 'குறட்டை ஒலி' ஆகிய இரண்டு தொகுதிகளில் அடங்கும். 'விடுதலையா? ஆறு கதைகளையும், 'குறட்டை ஒலி' பதினொரு கதைகளையும் கொண்ட தொகுப்புகளாகும். மு.வ.வின் சிறுகதைகள் எண்ணிக்கையில் குறைந்திருப்பினும் தரத்திலும், படைப்பாற்றலிலும் தனித்தன்மைகளைக் காண்டவை. இச்சிறுகதைகளின் தொடக்க உத்திபற்றி ஆய்வதே இக்கட்டுரை நோக்கமாகும்.

தொடக்க உத்தி

கதையின் தொடக்கம் கவர்ச்சியுடன் இருப்பது மிகவும் இன்றியமையாதது ஆகும். 'சிறுகதையின் முதல் வாக்கியம் படிப்பவரின் கவனத்தை இழுத்துப் பிடிக்கவில்லையாயின் அக்கதை பயனற்றது' என்கிறார் எட்கார் ஆலன்போ. ஒரு நிகழ்ச்சி, கதை மாந்தரது ஓர் உணர்ச்சி, ஒரு பண்பு, இவற்றால் கதையில் சிக்கல் உருவாகும். சிக்கலின் தோற்றமே கதையின் தொடக்கம் ஆகிறது. சிக்கலின் வளர்ச்சியும், உச்சநிலையும், வீழ்ச்சியும் கதைக்கு ஒரு சட்டமாகவே உருவாகிவிடுகின்றன. எனவே, கதை தொடக்கம் கதையின் வடிவத்திற்கும் வழிவகுக்கிறது.

கதையின் முதல் வாக்கியம் சிறப்புடையதாகும். நாடகத்தின் தோற்றுவாயில் அந்நாடகக் கதையில் ஏற்பட இருக்கும் வளர்ச்சியும் சிக்கலும் காட்டப்படுவது போல, சிறுகதையின் முதல் வாக்கியம் அந்தக் கதையின் போக்கையும் முடிவையும் பற்றிய ஒரு சிக்கலான கொந்தளிப்பை படிப்பவரின் மனத்தில் தோற்றுவிக்கிறது. பொதுவாகக் கதையில் முதல் வாக்கியம் கதை தலைப்பின் மதிப்பைக் குறைந்துவிடுவதில்லை. அதையும் தன்னோடு இணைத்துக்கொண்டே தனது கடமையைச் செய்கின்றது பெரும்பாலான சிறந்த கதைகளில் கதைப் போக்கும் மடிவும் பற்றிய சிக்கல், தலைப்பும் முதல் வாக்கியமும் சேரும்போது தோன்ற விடுகிறது, என்னும் சாலை இளந்திரையனாரின் கருத்து இங்கு கருதத்தக்கது.

மு.வ. சிறுகதைகளில் தொடக்கம்

மு.வ. தன் சிறுகதைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு முறையில் தொடங்குகிறார். அவற்றை உரையாடலில் தொடங்குவன, நிகழ்ச்சிகளில் தொடங்குவன, எண்ணங்களில் தொடங்குவன, உரையாடலிலும் நிகழ்ச்சியிலும் தொடங்குவது என வகைப்படுத்தலாம்.

1. உரையாடலில் தொடங்குவன

'நீங்கள் எப்ப சாமி, இங்கே வந்து சேர்ந்தீர்கள்?'' என்று திகைப்போடு கேட்டான் அவன். (வாய்திறக்க மாட்டேன் - விடுதலையா? ப.67)

"சூரியனை வடக்குத் தெற்காக மாற்றினாலும் மாற்றலாம் பெண்களின் நகையாசையை மாற்ற முடியாது என்றேன்".(சுடரின் தலைப்பு -குறட்டை ஒலி ப.16).

'இந்த பாரதியார் நல்ல வேதாந்தி என்று எல்லோரும் சொல்கிறார்கள். ஆனால் இவர் என்னவென்றால் இந்த உலகம் மித்த பொய் என்று ஒத்துக் கொள்ள மாட்டேன் என்கிறாரே என்று என்னை ஒரு முறை பார்த்து. எதிரே மேசை மேல் இருந்த பாரதியார் புத்தகத்தையும் பார்த்து வெற்றிலையை மடித்து வாயில் வைத்தார்". (உலகம் பொய் குறட்டை ஒலி ப.89)

2. நிகழ்ச்சிகளில் தொடங்குவன

"காலை எட்டு மணிக்கு முன்னமே தலைமையாசிரியர் வந்து பள்ளிக்கூட வாயில் நின்று கொண்டிருந்தார்." ('விடுதலையா? விடதலையா ப. 5)

"வேதாந்த நெறிக்கும் மற்றச் சமய நெறிகளுக்கும் உள்ள

வேறுபாட்டை ஆராய்ந்து குறிப்பெழுதிக்கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பினேன்" ('எதையோ பேசினார்' - விடுதலையா? ப.85)

"பூந்தமல்லி சாலையில் பகல் பன்னிரண்ட மணிக்குப் பதினைந்தாம் எண்ணுள்ள பஸ் ஏறிச் சென்ட்ரல் நிலையதிதை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன்." ('எல்லோரும் சமம்' - குறட்டை ஒலி, ப. 51)

நான் ஏறி வந்த மெயில் வண்டி அரக்கோணத்தில் நின்றது
('யாரோ தெரியாது' - குறட்டை ஒலி, ப. 58)
நாங்கள் மேல் மாடியில் குடியிருந்தோம்
(குறட்டை ஒலி' - குறட்டை ஒலி, ப.79)

வையாபுரிக் குளத்தின் கரையில் யாரோ உரத்தக் குரலில் கத்துகிற சத்தம கேட்டுச் சாலையில் போயிக் கொண்டிருந்தவர்கள் ஓடினார்கள். ('வாழும் வழி' - குறட்டை ஒலி. ப. 87)

பிற்பகல் ஐந்து மணிக்கு வழக்கம் போல் ஆலமரச் சாலையில் நடந்து போய்க் கொண்டிருந்தேன் ('இயற்கை பொல்லாதது' - குறட்டை ஒலி, ப.94)

எவ்வளவோ பாடுபட்டு யார் யாருக்கோ சொல்லி, எவர் எவரையோ காக்கைப் பிடித்து கொடுப்பதும் கொடுப்பதும் கொடுத்துத் திருப்பத்தூர் சப் கலெக்டர் ஆபிசிலிருந்து வேலையை மாற்றிக்கொண்டுடு சென்னை செக்ரடரியேட் ஆபிசுக்கு வந்து சேர்ந்தேன். ('அக்கரைப் பச்சை' - குறட்டை ஒலி. ப.94)

2. எண்ணங்களில் தொடங்குவன

வாழ்க்கையில் எத்னையோ ஏமாற்றங்கள் வந்து வந்து போகின்றன. ஆனால் கொடிய ஏமாற்றத்தை எதிர்த்து நின்று என்னோடு போராடும் ஏமாற்றத்தை இதுவரையில் கண்டதில்லை. ('எவர் குற்றம்' - விடுதலையா? ப.89) ஒரு நாள் விடுமுறையாக இருந்தால் சென்னையை விட்டு வெளியூர் போய் வர மனம் வராது.('அந்த மனம் வருமா?' - குறட்டை ஒலி. ப. 5) முன்னமே ஒரு முறை போக வேண்டும் என்று எண்ணியதுண்டு. ஆனால் முயற்சி செய்யவில்லை ('இறந்த சிற்றப்பா' - குறட்டை ஒலி, ப.22)

அமாவாசையார் என்று நாங்கள் குறிப்பிடுவது வழக்கம்
('அமாவாசையார்' - குறட்டை ஒலி, ப. 32)

3. உரையாடலிலும் நிகழ்ச்சியிலும் தொடங்குவது

"மாலை நேரத்தில் குடித்து விட்டுச் சாலை ஓரத்தில் விழுந்து கிடப்பவர்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இது என்ன கொடுமை ! பகல் ஒரு மணிக்கு நல்ல வெயிலில் தார் வெந்து உருகும் வெப்பத்தில் இந்தச் சாலை ஓரத்தில் இப்படி ஒருவன் விழுந்து கிடக்கிறானே' என்று

எண்ணிக்கொண்டே அந்த மாரியம்மன் கோயிலை அணுகி நடந்து கொண்டிருந்தேன். (தேங்காய்த் துண்டுகள் - விடுதலையா : ப. 52)

முடிவு உத்தி

சதையின் முடிவு இன்பியலாகவும் இருக்கலாம், துன்பியலாகவும் இருக்கலாம். கதையில் அது வரும் இடம் உச்ச நிலையோடு அமைந்தும் இருக்கலாம். ஆனால் அது படிப்போரின் உள்ளத்தை முற்றும் கவர்ந்து அதன் வழியிலே இழுத்துக் கொண்டு போய்ச் சிந்திக்கச் செய்யும் பேராற்றலைப் பெற்றிருக்க வேண்டும் என்பார் சாலை இளந்திரையனார்.

டாக்டர் மு.வ.வின் சிறுகதைகளும் சிறந்த முடிவுகளையே பெற்றுள்ளன. ஒவ்வொரு கதையிலும் ஒரு நிறைவு ஏற்படுகிறது. உணஉ்மையில் கதை போக்கில் முடிவைக் குறித்து ஏதும் அறிந்து கொள்ள இயலாது. முடிந்த பிறகு இதைத் தவிர வேறு சிறப்பான முறையில் கதையை முடித்திருக்கவே முடியாது என்று சொல்லத்தோன்றும். ஆனால் சில கதைகளின் முடிவில் ஆசிரியர் கூற்றாக வருவது போல் முடித்திருப்பார்..

வீட்டிற்குச் சென்ற பிறகும் அந்த முகத்தின் அழகு - அறிவும் அமைதியும் அன்பும் கலந்த அழகு - என்னை விடாது தொடர்ந்தது. என் மேசையின் மேல் இருந்த திருக்குறளைப் படித்து அந்த முகத்தை மறக்க முயன்றேன் ஒரு குறள் நினைவுக்கு வந்தது.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற் றியான்

அந்தோ ! இரந்து வாழ எண்ணவிலையே அந்தத் தமிழன், கூலி வேலை வேண்டும், கட்டாயம் வெண்டும் என்று தானே கேட்டாள்? (கட்டாயம் வேண்டும் - விடுதலைய்யா? ப. 88)

மிகச் சிறந்த சொற்றொடர்களை முடிவாகக் கொண்ட கதைகள் என்று ‘தேங்காய்த் துண்டுகள்’, ‘யாரோ தெரியாது’, குறட்டை ஒலி’, ‘அக்கரை பச்சை’ ஆகிய கதைகளைச் சொல்லலாம். ஏதாவது ஒரு பாட்டுடன் கதையை முடிக்கும் வழக்கமும் மு.வ.விடம் உள்ளது.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற் றியான் (கட்டாயம் வேண்டும்)
எப்படிக் குச்சிக்குள்ளே முருகா
எத்தனை நாள் இருப்பேன் (அமாவாசையார்) போல்வன சான்றாகும்.

முடிவுரை

டாக்டர் மு.வ.வின் சிறுகதைகள் அனைத்தும் மிகச்சிறப்பான தொடக்கத்துடன் தொடங்குகின்றன. விரைவாகவும் தெளிவாகவும் இயல்பாகவும் அமைந்துள்ளன. அதைப்போன்றே இவரது சிறுகதைகளின் முடிவுகள் படிப்போரைச் சிந்திக்கத் தூண்டுவனவான அமைந்து, அந்த க்தைக்குள்ளேயே நெடுநேரம் ஆழ்த்தி விடுகின்றனவாக அமைந்துள்ளன.

142. மு. வ. வின் தங்கைக்கு கடித இலக்கியத்தில் திருக்குறள் நெறி

அருள்வேந்தன் பாவைச்செல்வி
தலைவர், திருவண்ணாமலைத் தமிழ்ச் சங்கம்.

முன்னுரை

தமிழ் இலக்கிய உலகில் புதினம், சிறுகதை, பயண இலக்கியம், சிறுவர் இலக்கியம், வாழ்க்கை வரலாற்று இலக்கியம், கட்டுரை, இலக்கிய வரலாறு கடித இலக்கியம் என பல துறைகளிலும் சிறப்பிடம் பெற்றவர் அறிஞர் மு.வ. அவர்கள் அவர்தம் கடித இலக்கியமான 'தங்கைக்கு' எனும் நுஸலில் காணும் திருக்குறள் கருத்துக்களை - திருக்குறள் நெறியை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மு.வ.வும் கடித இலக்கியமும்

கடித இலக்கியம், செய்யுள் இலக்கியங்களில் ஓர் உத்தியாகவே பயன்படுத்தப்பட்டது. கவிதை வடிவில் விளங்கிய கடிதம், மறைமலை அடிகள் எழுதிய 'கோகிலாம்பாள் சரித்திரம்' என்னும் புதின இலக்கியத்தில் உரைநடை வடிவில் வெளியிடப்பட்டது. அவரைத் தொடர்ந்து தமது புதினங்கள் சிலவற்றில் கடிதத்தைப் புகுத்திய மு.வ., தமிழ் இலக்கியத்தில் 'கடிதம்', தனியொரு இலக்கிய வகையாக உருப்பெற அடிகோலினார். கடிதம் எழுதுதல் என்னும் துறையின் மூலம் பல்லாயிரக்கணக்கானவர்க்கும், தாம் கூற நினைப்பதை கூற முடியும். யாரோ ஒருவருக்கு எழுதப்பட்டதாயினும் படிப்பவர் அனைவருக்கும் அது பொதுவாக விளங்குதல் கூடும். இதனை நன்கறிந்த அறஞர் மு.வ. அவர்கள், அன்னைக்கு தங்கைக்கு, தம்பிக்கு, நண்பர்க்கு என நான்கு நூல்களைப் படைத்துள்ளார்.

மு.வ. கடிதங்களில் இலக்கிய ஆட்சி

கடிதம் இலக்கியம் என்பது ஒரு மனிதனுடைய உள்ளத்தில் உதிக்கும் எண்ணங்களையும் எழுச்சிமிக்க உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தும் ஒரு சாதனமாக விளங்குகிறது. எனஆவ, கடிதங்களில் வெறும் செய்திகள் மட்டுமின்றி கடிதம் எழுதுவோரின் இலக்கிய ஈடுபாடும் புலமையும் வெளிப்பட வாய்ப்புண்டாகின்றது. ஆகவேதான் மு.வ., தம்முடைய கற்பனைக் கடித நூல்களில் சங்க இலக்கியம், திருக்குறள் ஆகிய இலக்கியங்களில் தாம் கொண்டிருந்த ஆழமான ஈடுபாடு புலப்படுமாறு பல்வேறு இடங்களில் சங்க இலக்கியச் செய்திகளையும்

திருக்குறட்பாக்களையும் - கருத்துக்களையும் மேற்கோள் காட்டி, தான் கூற வந்த கருத்தைத் தெளிவாகக் கூறுகிறார்.

'தங்கைக்கு'. கடித இலக்கியத்தில் திருக்குறள் நெறி

'தங்கைக்கு' இக்கடித இலக்கிய நூலில் எட்டு கடிதங்கள் இடம் பெற்றுள்ளன. அவை, வளவன் தன் தங்கைக்கு எழுதுவதாக எழுதப்பட்டுள்ளன. இக்கடிதங்களில் இடம் பெறும் வளவன், தங்கை என்போர் மு.வ.வின் கற்பனை மாந்தரே அயினும் வளவன் வழி கூறும் கருத்துக்கள். தமிழினம், திருக்குறள் நெறியில் வாழ வேண்டும் என்ற மு.வ. அவர்களின் ஆவலை வெளிப்படுத்துவனவாகவே அமைந்துள்ளன.

வளர் பிறை வாழ்வு

நல்லவர் நட்பு வளர்பிறை போல் வளரும் என்கிறார் திருவள்ளுவர். உங்கள் அன்பான இல்வாழ்க்கை வளர் பிறை போல் வளர வேண்டும் என்று விரும்புகிறேன். அது என் வாழ்த்துதலில் இல்லை. நீங்கள் வாழும் முறையில் இருக்கிறது. (ப 18,19) இதில்

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீரப் பேதையார் நட்பு (குறள் - 782)

என்னும் குறள் கருத்தைக் கூறக் காணலாம்.

அன்பின் வழி வந்த கேண்மை

பழமைப்பட்ட பிறகும் விளங்குவதன் சிறந்த நட்பு என்னும் கருத்தோடு திருவள்ளுவர் நட்பைப் பற்றியும் நட்பாராய்தலைப் பற்றியும் பத்துப் பத்துக் குறளால் விளங்கியப் பிறகு பழமை என்று தனியே ஒரு பகுதி கூறுவதை நீ போற்றிக் கவனிக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் சிறப்பில்லாத தீ நட்பு, கூடா நட்பு என்பவைகளைப் பற்றியும் விளக்குகிறார். பழமைப்பட்ட பிறகும் மாசின்றி விளங்கும் நட்பை அவர், 'அன்பின் வழிவந்த கேண்மை' என்று அழகானத் தொடரால் குறிப்பிடுகிறார். அந்தத் தொடரை நினைக்கும் போதும் சொல்லும் போதும் கேட்கும் போதும் திருவள்ளுவரின் தமிழ் - அனுபவ அறவிலிருந்து மலர்ந்த அறிவுரைத் தமிழ் என் நெஞ்சில் இனிக்கின்றது (ப. 20)

உன் கணவரைப் போதிய அளவு எனக்குத் தெரியாது. உன்னைப் பற்றி நன்றாகத் தெரியும். ஆகையால் உனக்குத்தான் அறிவுரை சொல்ல என்னால் முடியும். என் அறிவுரை வாழ்த்துரை இரண்டும் ஒன்றுதான். உங்கள் வாழ்க்கை 'அன்பின் வழிவந்த கேண்மை' யாக விளங்குவதாக. (ப.20)

அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர் (குறள் 807)

என்று குறள் வழி நடக்க வலியுறுத்துகிறார்.

ஊடலில் தோற்றவர் வென்றார்

'ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலிற் காணப் படும்' (குறள் 1027)

எனும் குறள் கருத்தைப் பின்பற்றக் கூறும் மு.வ. இதனைப் பின்பற்ற அறியாதார் மக்கட் பண்பு இல்லாதவர் (குறள் 997) எனச்சுட்டுகிறார்.

எந்த வாழ்க்கையிலும் சிறு சிறு பூசல் வரலாம், போகலாம் அவைகளுக்கு நிலையான இடம் தரக்கூடாது. சிறு பூசல் காரணமாக கணவனும் மனைவியும் பேசாமல் பல மணி நேரம் இருக்க நெரலாம். ஆனால் அடுத்தபடி அன்போடு பேசுவதற்கு வாய்ப்பை எதிர்பார்த்திருக்க வேண்டும். வலிய சென்று பேசுவதற்கு நல்ல மனம் தூண்டவேண்டும். அவ்வாறு வலியப் பேசி விட்டுக் கொடுத்தவர் தோற்று விட்டவர் அல்லர். அவர் தான் அனபு வாழ்க்கையில் வெற்ற பெற்றவர் என்கிறார் திருவள்ளுவர். 'ஊடலில் தோற்றவர் வென்றார்' என்னும் அவருடைய கருத்து எவ்வளவு உயர்ந்த பண்பாட்டின் அடிப்படையில் பிறந்திருக்கிறது அத்தகைய பண்பாடு இல்லா பொது அறிவு எவ்வளவு கூர்மையாக இருந்த போதிலும் என்ன பயன் ? பண்பாடு இல்லாத அறிவு நமக்கு உதவாது நம்மைக் கெடுக்கவும் கெடுக்கும், அது எதற்கும் காரணம் சொல்லும் சிறிய குற்றத்தைப் பெரிய குறையாக்கிக் காட்டும் பெரிய குணத்தையும் சிறிதாக்கி மறக்கச் செய்யும் பண்பாடு இல்லாதபோது அத்தகை அறிவால் பயன் என்ன? அது நம்பத்தகாதது.

'அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்'

என்று திருவள்ளுவர் சொன்னது நினைவிருக்கட்டும். (ப.30)

மனநல மருத்துவர் திருவள்ளுவர்

'சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல்' (குறள் 938)

இக்குறள் கருத்துப்படி தனக்கு ஒப்பில்லாவரித்திலும் தோல்வியுறுவதே சான்றாண்மை. அப்படியானால் ஒத்த உரிமை உடையவரிடம் தோற்பது பெருமை தானே என வினவுகிறார் மு.வ.

அன்புக்காகத் தோற்று போவதில் பயிற்சிப் பெற்றால் என்ன ?

எததனையோ புட்டி மருந்துகளைச் சாப்பிட்டுப் பார்ப்பவர், நெடுங்காலமாக அனுபவத்தில் இருந்து வந்த பழைய மருந்து ஒன்றை உட்கொண்டு பார்த்தால் என்ன ? அல்லது உலகமெல்லாம் போற்றும் மருத்துவர் - மனநோய் மருத்துவர் - திருவள்ளுவர் அவர் செல்கிறார் : ஒப்பு அல்லாதவர்களிடத்தும் தோற்றுப்போவதே சான்றோரின் தன்மை என்கிறார். அவருடைய அறிவுரையைக் கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்வதில் தீமை ஒன்.றும் இல்லை. பல தலைமுறைகளாக உலகம் பின்பற்றி நன்மை கண்டு நற்சான்று அளித்துப் போற்றிய முறை அது. ஆகையால் முன்னும் பின்னும் எண்ணாமல் அந்த முறையைப் போற்றுவது நல்லது. ஒப்பு அல்லாதவரிடத்தும் தோற்றுப் போவது நல்லதானால் அன்பான வாழ்க்கையில் ஒத்த உரிமை உள்ள ஒருவரிடம் தோற்றுப் போவது மேலும் பெருமை அல்லவா? இதை உலகம் நம்பத் தயங்குகிறது. அதனால் அல்லல் படுகிறது. (பக் 37, 38).

'வேண்டாமை அன்ன விழுச்செல்வம்

ஆடம்பரமற்ற எளிய வாழ்வை மேற்கொள்ள வேண்டும். அதற்குத் திருவள்ளுவர்,

வேண்டாமை என்ன விழுச்சல்வம் ஈண்டில்லை
மாண்டும் அ:.தொப்ப தில் (குறள் 383)

என்னும் குறளை மந்திரமாகக் கொண்டு வாழ வேண்டும் என்கிறார் மு.வ.

திருவள்ளுரின் அறத்துப்பால் நெறி - அதாவது காந்தியடிகளின் எளிய தூய நெறி - இதை நம்பினால் எவ்வளவோ தொல்லைகளை எளிதில் தீர்த்துக்கொள்ளலாம். தனி வாழ்க்கையைப் பொறுத்த மட்டில்தான் இதைச் சொல்கிறேன். நெறியை முழுவதுமாக நம்பாவிட்டாலும் ஆடம்பரமற்ற ஆணவமற்ற அமைதியான வாழ்க்கை நல்லது என்பதையாவது நம்புவர்களானால் போதும். (ப.43)

குறள் நெறியில் ஆணும் பெண்ணும்

வைர நகைகள் போட்டுக்கொண்டிருப்பவளைப் பார்த்து இல்லா பெண் ஏங்குகிறான் கணவனிடம் போராடுகிறாள் கணவனுடன் பிணங்.குகிறாள். அது மணமுறிவு வரையில் வளராமல் போராட்டத்தோடு நிறுத்தி விட்டால் புண்ணியம் என்றுதான் சொல்ல வேண்டும். கணவன். இதைச் சுருக்கி அதைச் சுருக்கிப் பணம் சேர்த்து ழவைர நகை வாங்கிப் போடுகிறான். அல்லது திருவள்ளுவரின் அறத்தில் நம்பிக்கை கொஞ்சம் தளர்ந்தவனாக இருந்தால், இதில் கொஞ்சம் திருடி சிறிது திருடிப் பணம் சேர்த்து வாங்கி தருகிறாள். வள்ளுவர் குறளை வாயளவுக்கு வைத்துவிடத் துணிந்தவனாக இருந்தால் இவரை இங்கே ஏமாற்றி அவரை அங்கே

ஏமாற்றி லஞ்சம் பெற்று மனைவி கேட்டதை வாங்கித் தருகிறான். (ப.47)

"ஏழைப் பெண்கள் தான் வறுமையின் குறைவால் எளிய ஆகோலத்தோடு காணப்படுகிறார்கள். வறுமை இல்லாத பெண்கள் எளிய வாழ்வு மேற்கொள்கிறார்களா? 'வேண்டின் உண்டாகத் துறக்க' (குறள் : 342) என்னும் கொள்கையை ஆண்கள் பலரிடம் உடை முதலியவற்றில் காண்கிறேன். எல்லாம் இருந்தும் எளிய வெள்ளையாடை - பருத்தியுடை - உடுத்துப் பெருமையோடு திரிகின்றார்கள் ஆண்கள் பலர்". (தங்கை.ப.49)

விதி விலக்குகளை விலக்குக

வாழ்க்கையில் பலர் கெடுவதற்குக் காரணம் விதிகளைப் பற்றி எண்ணாமல் விதி விலக்கானவைகளைப் பற்றி எண்ணுவதேயாம். கணவனும் மனைவியும் ஒருவர் மற்றவர் துறையும் ஆர்வமும் அறிந்து கொள்ளவும் வேண்டும் என்று குறிப்பிட்டேன் அல்லவா ? அது பொது விதி, நீவிதி விலக்கான ஒரு குடும்பத்தைப் பார்த்துவிட்டு அங்கே இசை இன்னது என்று அறியாத கணவனும் இசையில் தேர்ந்த மனைவியும் கூடி ஒற்றுமையாக வாழ்வதைக் காட்டாதே! அளவறிந்து உண்க குறள் 943) என்று திருவள்ளுவர் கூறுகின்றார். பெருந்தீனி தின்கின்ற ஒருவன் நோய் இல்லாமல், மருந்து தேடாமல் வாழ்வதை எடுத்துக்காட்டி அந்தக் குறள் பொருந்தாது உன மறுக்க முடியுமா ? ஆகையால் வாழ வழி நாடுகின்றவர்கள் எப்போதும் விதிவிலக்குகளை எடுக்காட்டாகக் கொள்ளக் கூடாது. (பக். 73, 74).

யாகாவாராயினும் நாகாக்க

"சிறு குறைகள் நம்மோடு பழகுவோரிடம் இருந்தால், இவை இயற்கை என்பது போல் விட்டு விட வேண்டும். விட்டுவி.ட வேண்டும் என்றெ சொல்கின்றேன். அவற்றைப் பற்றி வேடிக்கைப் பேசுதலும் கூடாது. குறைகளைப் பற்றி வேடிக்கையாகப் பேசுதலும் தீமை விளைவிக்கின்றது. 'யாகாவா ராயினும் நாகாக்க' (குறள் 127) என்ற திருவள்ளுவரின் பொய்யா மொழி நினைவுக்கு வருகின்றது. பிறர் உடம்பைப் புண்படுத்துவதற்கு டல் வலிமை வேண்டும் பிறர் மனத்தைப் புண்படுத்துவதற்கு ஒருவகை வலிமையும் தேவையில்லை. கோழையிலும் கோழையான ஒருவன் - மனவலிமையும் சொல்திறனும் இல்லாத ஒருவன்- மற்றவர்களின் மனத்தைப் புண்படுத்த முடிகின்றது. ஆகையால் நாவால் பிறர் குறையைப் பேசுவதில் விழிப்பாக இருக்க வேண்டும். ஒருவரைப் பற்றி குறைசொல்ல வேண்டியிருந்தால், அன்பான சில சொற்களால் அவரிடமே தனியாக இருருக்கும் நேரத்தில் மட்டுமே சொல்லலாம்". (பக். 77, 78).

முடிவுரை

"ஆராய்ச்சி ! விஞ்ஞானத்துறையில் யாராவது ஒருவர் இருவர் ஆராய்ச்சி செய்தால் போதும். அதைப் பற்றி மேலும் ஆராயாமல் அந்த ஆராய்ச்சியின் பயனை அனைவரம் பெறுகிறோம். வானொலிப் பெட்டியை அனைவரும் பயன் படுத்துகிறோம். ஆனால் மார்க்கோணி செய்த அந்த ஆராய்ச்சியையே நாம் செய்து காலம் கழிக்கிறோமா இல்லை. வாழ்க்கையைப் பற்றி ஆராய்ச்சியை மட்டும் தனியே ஒவ்வொருவரும் செய்ய விரும்புகிறோம். திருவள்ளுவர் ஆராய்ச்சி செய்து முடிவுகளை எழுதி வைத்திருக்கின்றார். திருக்குறளை வீடு தோறும் பயன்படுத்தினால் போதும் என்று அமைவதில்லையே, ஒவ்வொருவரும் தனியாராய்ச்சிகள் நடத்திய பிறகே முடிவுக்கு வர வேண்டுமா ? விஞ்ஞானத்துறையில் கண்மூடி நம்பிக்கை ! அறநெறியில் அவ்வப்போது ஆராய்ச்சிகள் !" (ப. 62) எனச்சாடும் மு.வ. திருக்குறள் நெறியைப் பின்பற்றுவதில் அராய்ச்சி செய்யக் கூடாது என தங்கைக்கு கூறுவது போல் தமிழ் இனத்திற்கு வேண்டுகோள் விடுகிறார்.

143. மு. வ. வின் மண்குடிசை புதினம் வழங்கும் வாழ்வியல் சிந்தனைகள்

திருமதி பெ. வனிதா
உதவிப் பேராசிரியை
தமிழ்த்துறை
பூம்புகார்க் கல்லூரி (தன்னாட்சி)
மேலையூர் - 609 107.

முன்னுரை

தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

என்னும் வள்ளுவரின் வாக்கிற்கேற்ப தமிழ் இலக்கிய வரலாற்றில் தன்னிகரற்ற இடத்தைப் பெற்றவர் மு.வ. ஆவார். இவரது புதினங்கள் வாழ்வியலுக்கு வளம் சேர்க்கும் உன்னத படைப்புகளாகும். அவரின் வாழ்வையும், பண்பையும், இவர் எழுதிய நாவல்களின் தன்மையையும் தான் படைத்த பாத்திரப்படைப்புகளின் வழியாக படிப்போர்க்கு உணர்த்துகின்றார். இவருடைய புதினங்கள் பல விருதுகளை பெற்றுள்ளன. அவர் சமுதாயத்தை பின்னணியாகக் கொண்டு புதினங்களை படைத்துள்ளார்.

வாழ்வியல் சிந்தனைகள்

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

என்னும் வள்ளுவரின் வாக்கிற்கேற்ப நெறிப்படுத்தப்பட்டு சில வரையறைக்கு உட்படுத்தப்படுவதே வாழ்வியலாகும். மு.வ. அவர்கள் தன்து நாவலில் கண்ட மற்றும் உணர்ந்த சூழல்களை தன்னுடைய புதினத்தில் தேவையான இடத்தில் பயன்படுத்தி படிப்போர்க்கு நற்கருத்துக்களை உணர்த்துவார். அவ்வகையில் மு.வ. வின் மண்குடிசை வாழ்க்கைக்கு தேவையான இன்றியமையாத இல்லறக் கருத்துக்களை கூறியுள்ளார்.

வாழ்வின் பண்பாடு

மனிதன் வாழ்க்கையை ஒரு கலையாகக் காணவேண்டும். திட்டமிட்ட வாழ்க்கையை நடத்தும் மனிதன் பழைய பகைகளை அமறந்து வாழவேண்டும். வாழ்க்கையின் அனுபவமானது உலகம் இப்டிதான் இருக்கும். நாம் இப்படிதான் வாழ வேண்டும் என்னும் வாழ்வின் பயன்பாட்டை ஒரு கலையாகக் கொண்டு வாழவேண்டும் என்பதை மு.வ.

தன் புதினத்தில் கூறியுள்ளார்.

"எல்லோருக்கும் தான் வாழ்க்கை கசப்பாக உள்ளது". யாருக்கு இனிப்பாக உள்ளது? கசப்பையே சுவையாக மாற்றிக் கொள்ள வேண்டியது நம் கடமை' என்று கூறி மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்றும் தன் புதினத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வாழ்க்கை சீர்திருத்தத்தைக் கூறல்

தானே கனியாததை தடி எடுத்துக் கனியவைக்க முடியாது. அதுபோல் ஒருவர் உணரமுடியாத சீர்திருத்தங்களை மற்றவர்கள் வற்புறுத்தியும் பயன் ஆகாது. சுற்றுப்புறத்தில் உள்ளவர்கள் மூடப் பழக்கவழக்கங்களில் சூழந்திருக்கும் போது ஒருவரை மட்டும் பழித்து பயன் என்ன ஆக போகிறது. மூடப்பழக்க வழக்கங்களை நம்புவதால் வாழ்க்கையை வெறுக்க முடியாது. அதே நேரத்தில் சீர்திருத்தம் வாழ்க்கைக்காகத் தான் என எண்ணிக்கொண்டு வாழ்க்கையே முறிந்து போகும்படி சீர்திருத்தத்தை வற்புறுத்தவும கூடாது. இது எது போன்றது என்றால் மருந்தைத் திணிக்குமாறு அல்ல[2]. ஒருவரிடம் உள்ள மூடப்பழக்க வழக்கம் எல்லாரிடமும். கண்மூடிப்பழக்கமாகக் காணப்படுவதைக் கடிந்துரைக்கும் மு.வ. அதே நேரத்தில் புரட்சிகரமான சீர்திருத்தத்தை விரும்பவில்லை. எதுவாயினும் அளவோடு இருத்தல் வேண்டும் என குறிப்பிடுகின்றார்.

எளிய வாழ்வு

ஒரு மனிதன் எளிய வாழ்வு வாழவேண்டும் என்றால் ஏக்கத்தை உண்டாக்கிக் கொண்டு மனத்தைக் கெடுக்காமல் இருக்க வேண்டும். ஏனென்றால் தேவைகளைக் குறைத்துக்கொண்டு எளிய வாழ்க்கை வாழ்வது என்றைக்கும் நல்லது என, தானும் வாழ்ந்து காட்டி பிறர்க்கும் வலியுறுத்துகின்றார்.

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு[3]

என்ற திருவள்ளுவரின் கூற்று மு.வ. வின் கூற்றோடு ஒப்பு நோக்கத்தக்கது. நம்மைச் சுற்றிலும் ஏழைகள் உணவுக்கும் உடைக்கும் வழி இல்லாமல் வாடும் போது, நாம் ஆடம்பரத்தைத் தேடுவது பாவம்[4] என்ற காந்தியின் கொள்கையை மு.வ. தன் நாவலில் சுட்டிக்காட்டியுள்ளார். எளிய வாழ்க்கை யார் மனத்து இன்பம் என்றால் உண்மையை உணர்ந்தவர்களுக்குதான் எளிய வாழ்க்கை இன்பம் தரும்[5] என்று எளிய வாழ்வைக் காட்டியுள்ளார்.

குணத்தைக்கண்டு வாழ்தல்

குணத்தைக்கண்டு வாழ்தல் எவ்வாறென்றால் குறை இல்லாதவர்கள் உலகில் இல்லை குறைகளுக்கு இடையே குணத்தைக்கண்டு வாழ வேண்டும். முள்ளுக்கு இடையே முரட்டு இலைகளுக்கு இடையே மெல்லிய மலரைக் கண்டு தேனைத் தேடுகிறது. இது போன்றுதான் ஒரு குடும்பத்தில் பலகுறைகள் காணப்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாது. அன்பு வளர்ந்து விட்டால் அதனை ஒன்றும் செய்ய இயலாது. இது எதைப் போன்றது என்றால் மரம் வேருன்றிவிட்ட பிறகு பெருங்காற்று என்ன செய்தாலும் அசையாது:.[7] அது போல் தான் வளர்ந்து காணப்படும் என்றும், அந்த அன்பை குணத்தைக்கொண்டு அறியலாம் என்றும் மு.வ. மனிதனின் குணத்தைக் கூறுகின்றார்.

உறவின் மாண்பு

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓப்பா
மடமை மடவார்கண் உண்டு[8]

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப ஏழை உறவினர்களைக் கண்டால் அன்பாக கவனி-ப்பதில்லை. பழையது போட்டு அனுப்புகின்றனர். பட்டும் பொன்னுமாக வளமானவர்கள் போல் வந்தால், பலவகைச் சிற்றுண்டியும் பலவகைக் காய்கறியும் செயது ஆடம்பர விருந்து அளிக்கின்றனர்[9] என்று கூறியுள்ளதன் வழி ஆடம்பர வாழ்வுக்குக் கொடுக்கப்படும் இன்றியமையாமை. எளிய வாழ்வுக்குத் தரப்படுவதில்லை என மனம் வருந்துகின்றார்.

மனிதன் வாழ்வும் சாவும்

கங்கைக் கரையில் ஒரு பிணத்தை எரித் விட்டுக் கட்டைகளைச் சேர்த்து வைத்தார்கள். இங்கே ஒருவன் அதில் இருந்து இரண்டு நெருப்புக் கட்டைகளைக் கொண்டு சென்றான் அடுப்பு எரிப்பற்காக[10] நெருப்புக்கு இந்த வேறுபாடு இல்லை. கங்கையாறு போல வாழ்வுக்கும் தேவை. சாவுக்கும் உதவும். சாவு என்பது வாழ்வுக்குத் தேவையானது சாவும் வாழ்வும் சேர்ந்தால் வட்டம். இது இலலையானால் அது இல்லை. இலை பழுத்து உதிர்ந்தால்தான் தளிர் பசுமையாகத் தோன்றுகிறது. பழுப்பதும் தழைப்பதும், போல்தான் சாவும் வாழ்வும்[11] என்று மனிதனின் வாழ்வை விளக்கி கூறுகின்றார்.

வாழ்க்கையும் தெப்பமும்

ஆற்றில் வெள்ளம் போகிறது. அந்தப் போக்கில் தெப்பம் சென்றால் அதற்கு துன்பம் இல்லை. எதிர்த்துச் சென்றால் இங்கும் அங்கும் ஓதுக்கிச்

சென்றால் தெப்பம் அமைதியாகச் செல்ல முடியாது போராட்டம் நேரும். துன்பம் ஏற்படும்[12] அதுபோல்தான் வாழ்க்ழகை. வாழ்க்கையில் அமைதியும் இன்பமும் இருக்கும். மாறாகச் சென்றால் கலக்கமும் துன்பமும் ஏற்படும். மனிதன் வாழ்க்கையைத் தெப்பம்போல் செலுத்த வேண்டும் என்று மிகவும் தெளிவாகச் சுடடிக் காட்டுகின்றார்.

அன்பே அறம் அதுவே இல்லறம்

இந்த காலத்துக் குடும்பங்களில் லாப நட்டக்கணக்குப் பார்க்கிறார்கள். கணவனால் நமக்கு வரும் லாபம் என்ன? நட்டம் என்ன? மனைவியால் நமக்கு வரும் லாபம் என்ன? நட்டம் என்ன? இப்படி இருபாலரும் கணக்குப் பார்க்கின்றார்கள். இது காலப்போக்கு[13] என்று கணவன் மனைவியர்களின் எண்ணத்தையும் மனநிலையையும் கூறுகின்றார்.

மின் விளக்குகள் வந்த பிறகு குத்துவிளக்குகள் என்ன ஆகும்? கலை விழாக்களில் அழகுக்காகக் கொண்டுவந்து வைக்கப்படும். வியாபார முறையான குடும்பங்கள் வந்தபோது அன்பு நெறிக்கு குடும்பங்கள் தொகையில் குறையும். மதிப்பில் பெருகும். இது இயற்கை என்று குடும்பங்களின் குறை நிறையைக் கூறுகின்றார்.

மனித வாழ்வில் ஏற்படும் இன்னல்கள்

ஒரு மண்குடிசையை இயற்கை என்று எண்ணுகிறீர்கள். ஆனால் உண்மை அதுவல்ல. இதில் வாழ்வதில் எவ்வளவு இடையூறு, பெருச்சாலிகள், எலிகள், பூரான், கரையான் முதலிய பூச்சிகள் எல்லாம் இப்படிப்பட்ட மண் குடிசைகளை விட், பழைய குகைகளிலேயே வாழலாம். அல்லது சுண்ணாம்பும் சிமெண்டும் கொண்டு நன்றாகக் கட்டிய கல்வீட்டில் வாழலாம் இரண்டும் கெட்ட இடர்பாடான நீலை இது. இன்றைய சமுதாய வாழ்விலம் இப்படிப்பட்ட இடற்பாடுகள் உள்ளன. பலருடைய வாழ்க்கை மண்குடிசை வாழ்வாகதான் இருகிகிறத. அதனால் பிறருடைய துன்பங்களும், வஞ்சகங்களும் மனிதனை பாதிக்கின்றன. பலவகையில் ஏற்றத்தாழ்வுகளைப் பெருக்கிவிட்டு கெட்டவர்கள் வாழ்வதற்கும், வளர்வதற்கும் நல்லவர்கள் துன்புறுவதற்கும், சமுதாயம் இடம் தருகிறது என்று மு.வ. தன் நாவலின் மூலம் மனித வாழ்வில் பல இன்னல்களை அஃறிணை பெயர்களைக் கொண்டு விளக்கியுள்ளார்.

முடிவுரை

மண்குடிசை நாவலில் மனிதனின் வாழ்வியல் சிந்தனைகளை மு.வ. கண்டும் உணர்ந்தும் மக்கள் உணரும் வகையிலும் தனது நாவலின்வழி படிப்போர்க்கு உதவும் வகையிலும் அமைத்திருக்கின்றார் என்பதை இக்கட்டுரை சுட்டிக் காட்டியுள்ளது.

சான்றெண் விளக்கம்

1. மு.வ. மண்குடிசை, ப.36
2. பரிமேலழகர் உரை திருக்குறள் கு. 261
3. மு.வ. மண்குடிசை ப. 62
4. மேலது, பக். 62-63
5. மேலது, ப. 105
6. மேலது, ப. 106
7. பரிமேலழகர் உரை திருக்குறள் கு.9
8. மு.வ. மண்குடிசை, ப.102
9. மேலது, ப.114

10 மேலர்து ப. 114

144. நற்றிணைச் செல்வத்தில் மு.வ.வின் இலக்கிய ஆளுமை

முனைவர். அர. கண்ணன்
உதவிப் பேராசிரியர்
ஆர்.வி.எஸ் கலை, அறிவியல் கல்லூரி
சூலூர்.

வாழ்க்கை என்பது ஒரு நெடிய பயணம். அப்பயணம் இனிது நிறைவேற பாதை இன்றியமையாதது. பாதைகள் பல திறமுடையன. அப்பாதைகளுள் மு.வ. நடந்து வந்த பாதை இலக்கியப்பாதை. இலக்கியப்பாதையில் எண்ணற்ற கவினுறு சாலைகளையும் மலர்ப் பந்தல்களையும் அமைத்தவர். சங்க இலக்கியப் பொழிலில் புகுந்து, தேனுறு மலர்களை ஆய்ந்தெடுத்து இலக்கியச் செல்வத்தை வாரிக் கொடுத்தவர். மு.வ. வின் இலக்கிய ஆளுமையை வெளிப்படுத்தும் நோக்கில் நற்றிணைச் செல்வத்தில் மு.வ.வின் இலக்கிய ஆளுமை என்னும் கட்டுரை அமைகிறது.

நற்றிணைச் செல்வம்

மு.வ. அவர்கள் சங்க இலக்கிய நூல்களை ஆழ்ந்து கற்ற பெருந்தகை ஆவார். அவருடைய சங்க இலக்கியக் கட்டுரைகள் படிப்பவர்களுக்கு சொல் இன்பத்தையும், பொருள் இன்பத்தையும் அளிக்கவல்லன. 'நற்றிணைச் செல்வம்', 'குறுந்தொகைச் செல்வம்', 'நெடுந்தொகைச் செல்வம்' என்று சங்க இலக்கியங்களைச் செல்வங்களாகப் போற்றியுள்ளார்.

'செல்வம்' என்பதற்கு இன்பம், ஐசுவரியம், கல்வி, செழிப்பு, நுகர்ச்சி, வீறு, சீர், பேறு, சுவர்க்கம் என்னும் பொருள்களை அகராதி தருகிறது. பெருந்தகை மு.வ. அவர்கள் நற்றிணையின் ஒவ்வொரு அடியினையும் நுகர்ந்து 'நற்றிணையைச் செல்வமெனப் போற்றியுள்ளார். நற்றிணையினைப் பாடிய புலவர்களின் சொல்லோவியத்தைத் தமது எளிமையான நடையினால் விளக்கியுள்ளார் மு.வ. 'நற்றிணைச் செல்வம்' என்னும் நூலில் மலை, முகில், காடு, பாலை, மருதம், கடல், உவமை, பேசாதன, இயற்யையின் இரக்கம், பின்னணி, காதல், தோழி, இல்லறம், வரலாறு, நம்பிக்கை, நீதி, பண்பு ஆகிய பதினாறு தலைப்புகளும் பதினாறு செல்வங்களையுடையதாக அமைத்துள்ளார்.

மலையும் விலங்குகள் இயல்பும்

சங்க கால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை நடத்தினர். அதற்கேற்பவே புலவர்களும் இயற்கையின் மீது அளவில்லாத பற்று

கொண்டிருந்தனர். ஐந்திணையுள் ஒன்றாகிய குறிஞ்சித் திணையைப் பாடிய புலவர்களின் சொல்லோவியத்தைப் படைப்போவியமாக்கியுள்ளார் மு.வ. மலையில் வாழ்கின்ற விலங்குகளின் இயல்பை இயற்கையோடு அணைத்து நின்று வருணித்துள்ளார்.

மலையில் ஆடியும் குரங்குகள் தினைக் கதிர்களைப் பறித்துத் திருடி வாழும் காட்சி ஒன்று அழகாகப் பாடப்பட்டுள்ளது. திருடும் குரங்குகள் உள்ளத்தில் அச்சம் இருத்தலால் தினைப்புனத்தைக் காக்கும் காவலர்க்குசினம் இருக்கலாம். ஆனால் இந்த காட்சியைப் புலவர் ஒரு பற்றும் இல்லாமல், படைப்பில் உள்ள வியப்பான அழகை மட்டும் போற்றுகிறார். குரங்கு தன் கையால் தினையை நெமிடி வாய்க்குள் கொண்டு கன்னத்தில் நிறையச் சேர்த்து வைத்துக் கொள்ளும் காட்சி, மார்கழியில் பட்டினி நோன்பு கிடந்தவர் தை முதல் நாளில் நிறைய தின்பதை அவர்க்கு நினைவூட்டுகிறது.

பெண் குரங்கு தினைக் கதிரைப் பறித்துக் கொண்டு ஆண் குரங்கோடு மலைமேல் ஏறி உள்ளங்கை நிறைய ஞெமிடி, தன் வளைந்த கவுள் நிறையத் தின்கின்றது. அந்நிலையில் மழை பெய்ய அதனால் நனைகின்றது. அப்போது அதன் தோற்றம், நோன்பு உடையவர்கள் நீராடித் தைத் திங்களின் முதல் நாளில் நனைந்த உடையோடு இருந்து நிறையத் தின்பதுபோல் உள்ளது என்று குரங்கின் செயற்பாட்டினை வருணித்துள்ளார். (ந.செ.ப.16).

மேலும்,

கரும்புண விரிந்த கருங்கால் வேங்கைப்
பெருஞ்சினைத் தொடுத்த கொழுங்கண் இறாலில்
புள்ளுற்றுக் கசிந்த தீந்தேன் கல்அளைக்
குறக்குறு மாக்கள் உண்ட மிச்சிலைப்
புன்தலைா மந்து வன்பறழ் நக்கும்

என்னும் நற்றிணைப் பாடலுக்கு வண்டுகள் மொய்த்து உண்ண மலர்ந்த வேங்கையின் பெரிய கிளையில் தொடுத்த இனியதேனைக் குறச் சிறுவர் உண்டு செல்ல அவர்கள் உண்ட மீதியைக் கரங்குக் குட்டி நக்கும்' என்று நடைமுறை வாழ்க்கையோடு எழுதியுள்ளார்.

காந்தளும் ஈன்ற மகளிரும்

மு.வ. அவர்கள் தான் படித்த நற்றிணைப் பாடலைப் பொருள் ஆழம் விளங்குமாறு எழுதியுள்ளார். இதற்குச் சான்றாக நற்றிணையில் 355 ஆம் பாடமலைச் சுட்டலாம்.

புதல்வன் ஈகன்ற பூங்கண் மடந்தை
முலைவாய் உறுக்கம் கைபோல் காந்தள்

குலைவாய் தோயும் கொழுமடல் வாழை
அம்மடல் பட்டே அருவித் தீநீர்
செம்முக மந்தி ஆடும்

என்னும் பாடலுக்கு 'காந்தளின் பூங்கொத்தில் கொழுமையான மடலையுடைய வாழையின் பூ தோய்கின்றது. அதிலிருந்மு மடலில் ஒழுகிய இனிய நங்ரைப் பெண் குரங்கு பருகுகின்றது. அந்தக் காட்சி தாய் தன் கொங்கையைக் கையால் பற்றித் தன் புதல்வனுடைய வாயில் வைத்துப் பாலைப் பருகச் செய்வது போல் உள்ளது. காந்தள் தாயின் கைபோலும், வாழைப்பூ கொங்கை போலவும் உள்ளன' என்று உரை எழுதியுள்ளார்.

இவ்வுரையின் வாயிலாக மு.வ. வின் எளிமை நடையும் உவமையொ உரைக்கும் மாண்பும் தெற்றென விளங்குகிறது.

கற்பனைக் காட்சி

இவ்.வுலக வாழ்வு நிலைத்திருக்க உயிராகத் திகழ்வது மழை, மழை பொழிவதற்கு மேகம் இன்றியமையாதது. மேகத்தின் இயல்பைப் புலவர்கள் பலவாறு கற்பனை செய்து படியுள்ளனர். நற்றிணையில் வரும் மேகக் கூட்டங்களின் இயல்பை 'முகில்' என்னும் தலைப்பின் கீழ் எழுதியுள்ளார். பெருந்தகை மு.வ. முகில் பற்றிய மு.வ. வின் உரைநடை கற்பனைக் காட்சியையும் சொல்லின்பத்தையும் அளிப்பதாக உள்ளது.

'கருநிற மழைமேகம் இடிந்து முழங்கிப் பெய்யும் காட்சியும்' வெண்ணிற மேகம் மெல்ல அசைந்து மலையிலி கூடித் தவழும் காட்சியும், புலவர்களின் கற்பனையைத் தூண்ப் பாடச் செய்கின்றன. கதிரவன் மறையுமாறு மூடிப்பிறகு விட்டுவிட்டுத் தோன்றுமாறு மேகங்கள் ஓடும் காட்சியைக் கண்ட புலவன், கதிரவன் விழித்து விழித்து இமைப்பதாகக் கற்டபனை செய்கிறான். மழை பெய்யும் மேகங்கள் மகளிர் கூந்தல் போல் தோன்ற மின்னல் அம்மகளிரின் அணிகலன்கள் வீசும் ஒளிபோல் உள்ளது. மலையில் தவழும் மழை மேகங்கள் மதில்மேல் செல்லும் போர் வீரர்கள் கேடயங்கள் போல் தோன்ற, அவற்றின் இடி முழக்கம் மதிலைக் காக்கும் மன்னனுடைய முரசொலிபோல் புலவரின் கற்பனையை செவிகளில் கேட்கிறது' என்னும் உரைநடைப் பகுதியால் உணர முடிகிறது.

மேலும் கடற்கமரையோரத்தில் நாவற்பழம், வண்டு, நண்டு, நாரை இவற்றினைக் கொண்டு ஓர் அழகிய சிறுநாடகம் நடைபெறுகிறது. ஒன்றை ஒன்றாக மயங்கும் மயக்கத்தில் ஏற்படும் சிக்கல்களும், அவை தீரும் வகையும் சுவையாகக் கூறப்படுகின்றன. அலைகள் மோதிய மணற்கரையில் நாவல்பழம் விழுந்திருக்க, அதைத் தன் சுற்றம் எனக் கருதி வண்டு மொய்த்தது. அந்த வண்டை நாவற்பழம் என்று கருதி நண்டு வந்து

பற்றியது. நண்டின் நகங்களில் அகப்பட்டு வருந்திய வண்டு பொருந்தி அமையாத யாழ்போல் ஒலித்தது.. அந்த ஒலியைக் கேட்டு இருகே இருந்த நாரை அதைப்பற்ற நெரங்கி, நண்டு விட்டு நீங்குமாறு அந்த பூசலைத் தீர்த்தது' எனறு கடற்கரையில் நடந்த நாடகத்தைச் சுவைபட எழுதியுள்ளார்.

இயற்கையின் இறக்கம்

வாழ்க்கையில் எண்ணற்ற உயிர்களை மக்கள் காணுகின்றனர். அவ்வுயிர்கள் அனைத்தும் அவர்களுக்குப் பயன்படுவதில்லை. ஆனால் அஃறிணை உயிராகிய குயிலின் நிலையை, காதலரின் வாழ்வோடு ஒப்பிட்டுப் பாடியுள்ளனர் புலவர்கள். குயிலைப் பற்றிய பாடலின் கருத்துக்களை மு.வ. அவர்கள் 'இயற்கையின் இரக்கம்' என்னும் தலைப்பின் கீழ் எழதியுள்ளார்.

இளவேனில் காலத்தில் குயில் கூவுகின்றது. தலைவனைப் பிரியாமல் வாழ வேண்டும் என்று விரும்பும் தலைவியின் செவியில் அது பொருளடைய ஒலியாகக்கேட்கின்றது. சேர்ந்து வாழும் காதலரே! பிரியாதீர்கள் சேர்ந்தே வாழுங்கள் என்று சேவலும், பெடையும் எதிர் எதிரே ஒன்றுக்கு ஒன்று பதில் கூரலாகக்) கூவுகின்றனவாம்.(ந.செ.ப. 115)

சூதாடு கருவி எதிர்பாராமல் மாறி விழுவது போல் வாழ்க்கை நிலையில்லாது என்றும், அத்தகைய நிலையற்ற வாழ்க்கைக்காகப் பொருள்தேடக் கருதிக் காதலியரைப் பிரிந்து செல்ல வேண்டாம் என்றும் பொதுவாக ஆண்மக்களுக்கு அறிவுறுத்தி பிரிந்து செல்வோரை இடித்துரைப்பது குயில் போல் கூவுகின்றதாம். இதனை,

பூங்கண் இருங்குயில்
கவறுபெயர்த் தன்ன நில்லா வாழ்க்கையிட்டு
அகறல் ஓம்புமின் அறிவுடை யிர்எனக்
கையறத் துறப்போர்க் கழறுவ போல
மெய்யுற இருந்து மேவர நுவல (ந. செ. ப.243)

என்னும் நற்றிணையின் பாடல்கள் வாயிலாக உணரமுடிகிறது.

'தலைவன் திருமண முயற்சி செய்யாமலே சிலநாள் பிரிந்து நின்று வரத் தொடங்கினான். அந்நிலையில் தலைவி துன்புற்று வருந்தினாள். அப்போது தோழி, பின்வருமாறு கூறலானாள்.

நீ இவ்வாறு துயரத்தில் உருகிக் கெடுவதற்காக யான் அஞ்சுகிறேன். அதோபார்,

தலைவனுடைய மலையை அது நம்மவன் நமக்குச் செய்யும் கொடுமையை நினைத்து நம்மிடம் மிக்க அன்புடைமையால்

தாங்கமுடியாமல் அழுகின்றது. அந்த அருவிதன் மழையின் கண்ணீர் என்று தோழியின் சொல்நுட்பத்தை அழகாகப் பதிவு செய்துள்ளார் மு.வ. அவர்கள்.

கடலின் மாட்சி

கடற்கரையின் அழகில் மயங்குவார் எவருமிலர். அக்கடற்கரையின் அழகிய காட்சி நற்றிணையில் புலவர்களால் புனைந்துரைக்கப்பட்டுள்ளது. 'கடல்' என்னும் தலைப்பில் கடலின் மாட்சியினை மு.வ. அவர்கள் எடுத்துரைத்துள்ளார்

யாண்டு பல கழிந்தென
பார்த்துறைப் புணரி அலைத்தலின் புடைகொண்டு
முத்துவினை போகிய முரிவாய் அம்பி
நல்லெருது நடைவளம் வாய்ந்த்தென உழவர்
புல்லுடைக் காவின் தொழில் விட்டாங்கு
நறுவிரை நன்புகை தெராஅர் சிறுவீ
ஞாழலொடு கெழுஇிய புன்னையங் கொழுநிழல்
முழவுமுதல் பிணிக்கும்

என்னும் நற்றிணைப் பாடலுக்கு பல ஆண்டுகளாகப பயன்பட்டு, துறையிலே அலைகள் அலைத்ததால் மோதப்பட்டு, பழமைப்பட்டு,தொழில் செய்ய உதவாமற் போனது முரிந்த வாயை உடைய தோணி. அது நல்ல மணமும். நல்ல புகையும் கொடுக்கப் பெறாமல் ஞாழலோடு சேர்ந்த புன்னைமரத்தின் வளமான நிழலிலே முழவு போன்ற அதன் அடிமரத்திலே கட்டப்பட்டிருக்கிறது. அதன் நிலைமை நன்றாக உழைத்த ஏருது நடக்க முடியாமற் போனதால் புல் நிறைந்த தோட்டத்தில் தொழில் இல்லாமல் விட்டு வைக்கப்பட்டதைப் போன்றது' என்று சுவைபட எழுதியுள்ளார்.

முடிவுரை

தமிழ் இலக்கிய உலகில் தனக்கெனத் தனித்த இடத்தைப் பெற்றவர் மு.வ. அவருடைய சங்க இலக்கியக் கட்டுரைகளும், நூல்களும் கற்பவர்களுக்கு கழிபேருவகையைத் தர வல்லன, என்றும் வாழும் செல்வ நூல்களை தனது ஒப்பற்ற சொல்லாற்றலாலும். படைப்பாற்றலாலும் வெளிப்படுத்துவதில் ஈடில்லாதவர். நற்றிணைச் செல்வத்தைப் போன்ற பிற இலக்கிய செல்வங்களையும் கற்போர் அனைவரும் பின்பற்ற வேண்டும் என்பது கற்றறிந்த வல்லாரின் மெய்ப்பாடாகும்.

14.5. மு. வ. உடன் எனது நட்பு

பொறியாளர். கு. வெங்கடாசலம்
வளையாம்பட்டு கிராமம்
செங்கம் - 606 701
திருவண்ணாமலை மாவட்டம்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்து ஆறாம் ஆண்டு நான் கோவையில் தபால் தந்தித் துறையில் பொறியாளராகப் பணிபுரிந்த பொழுது எனது உதவியாளர் வரதராஜன் அவர்களுடன் மூன்று நாட்கள் அலுவலக வேலை நிமித்தம் உதகமண்டலத்திற்குச் செல்ல மேட்டுப்பாளையம் புகைவண்டி நிலையத்தில் காத்திருந்தோம். சென்னை நீலகிரி விரைவுப் புகைவண்டி. புகைவண்டி நிலையத்திற்கு வந்து நின்றது. உதகமண்டலம் செல்ல மேட்டுப்பாளையத்தில் உதகை மலைப்பெட்டி வண்டியில் மாறிச்செல்ல வேண்டும். நாங்கள் இருவரும் அப்பெட்டி வண்டியில் முன்பே ஏறி அமர்ந்து கொண்டோம். சென்னையிலிருந்து வந்த பெரிய புகைவண்டியிலிருந்து உதகமண்டலம் செல்ல மு.வ. அவர்கள் தமது குடும்பத்தினருடன் மேட்டுப்பாளையம் புகைவண்டி நிலையத்தில் பெட்டி வண்டியில் மாற முயற்சித்தனர். வேறு பெட்டிகளில் இடம் இன்மையால், எனது நண்பர் வரதராஜன் மு.வ. அவர்களை அழைத்து அனைவரையும் வண்டியில் அமர இடம் அளித்தும் அவர்கள் கொண்டு வந்த பொருட்களை வண்டியில் ஏற்றவும் உதவி செய்தார். மு.வ. அவர்கள் நன்றி கூறி எங்களுடன் அமர்ந்து உதகமண்டலம் செல்லும் வரை பல்வேறு செய்திகளைக் குறித்துப் பேசினோம். நாங்கள் இருவரும் தமிழில் ஆர்வம் கொண்டவர்கள் என உணர்ந்த விரிவாக உரையாடி மகிழ்ச்சிடன் பயணம் செய்தோம். உதகை புகைவண்டி நிலையம் வந்ததும் நாங்கள் இருவரும் அன்னாருக்கு உதவிசெய்து அவர்கள் தங்கும் விடுதிக்கு அனுப்பி வைத்தோம். நாங்கள் எங்கள் அலுவலக ஓய்வு விடுதிக்குச் சென்று தங்கினோம். அம்மூன்று நாட்களிலும் எங்களுக்கு ஓய்வு கிடைக்கும் பொழுது அவரை மீண்டும் அங்கு சந்தித்து உரையாடினோம். எங்கள் இருவரின் வாழ்க்கையிலும் இந்நாட்கள் உன்னதமான நாட்கள் என்று கருதினோம்.

பல ஆண்டுகள் கழித்து நான் சென்னைக்கு மாற்றலாகி சென்னையில் குடி இருந்த பொழுது மு.வ. அவர்களை அவர்கள் அலுவலகத்திலும் வீட்டிலும் பல முறை சந்திக்கும் வாய்ப்புக்கள் கிடைத்தன. உறவினர் ஒருவருக்கு அவர் முன்னேற்றத்திற்குப் பரிந்துரை செய்த பொழுது உவகையுடன் ஏற்றுக் கொண்டு அன்னாருக்கு உதவி புரிந்தார்.

நான் சென்னையில் இருந்த பொழுது எனது அலுவலகத்தில் எழுத்தாளராகப் பணிபுரிந்தவரும் தமிழில் புலமை பெற்றவருமான

மார்க்கபந்து (வழித்துணைவன்) என்ற நண்பர் 'திருவள்ளுவர் நாடகம்' என்ற புத்தகம் ஒன்றை எீதினார். அதன் கையெழுத்துப் பிரதியினை எனது அத்தை மகனும் உரையாசிரியர்கள் என்ற புத்தகத்தை எழுதியவரும், மு.வ. வின் மாணவருமான மு.வை-அறவிந்தன் அவர்களிடம் அளித்து திருத்தங்கள் செய்து கொடுத்தேன். அந்தக் கை எழுத்துப் பிரதியினை நண்பர் மார்க்க பந்து என்னிடம் கொடுத்து மு.வ. அவர்களிடம் கேட்டு, அந்நாடக நூலுக்கு முன்னுரை வழங்கப் பரிந்துரைக்குமாறு கேட்டுக் கொண்டார். இருவரும் மு.வ. அவர்கள் இல்லத்திற்குச் சென்று அவரிடம் கையெழுத்துப் பிதியினைக் காட்டினோம். அதை மு.வ. அவர்கள் அப்பொழுதே படித்துப் பார்த்தார். இதற்குள் நாங்கள் இருவரும் மு.வ. அவர்கள் உணவருந்தினோம் முடிவில் மு.வ. அவர்கள் அந்நூலைப் பாராட்டிப் பின்பு நான் அளிக்கும் முன்னுரை ஒன்றை மட்டுமே அப்புத்தத்தில் இடம் பெற வேண்டும் என்றும், பிறர் முன்னுரைகளை உடன் சேர்க்கக் கூடாதென்றும் கண்டிப்பாகக் கூறிவிட்டார். நண்பர் இதற்கு இசைவு அளிக்காததால், நான் எனக்.குக் குருவாக இருந்து தெபால்காப்பியத்தை எனக்குக் கற்றுக் கொடுத்தவரும் எனது மாமா பாலசுப்ரமணியன் அவர்களின் உற்ற நண்பருமான பெரும்புலவர் இராமநாத அடிகளார் அவர்களிடம் முன்னுரை வாங்கிக் கொடுத்தேன்.. அந்நூலுக்கு மேலும் பலர் முன்.னுரை வழங்கியுள்ளனர்.

மு.வ. வின் அனைத்துப் படைப்புகளையும் இளமையிலிருந்தே படிக்கும் பழக்கம் எனக்கு உண்டு நாவல் இலக்கியங்களை கள்ளோ காவியமோ, அகல்விளக்கு போன்றவற்றையும் தம்பிக்கு தங்கைக்கு போன்ற அறிவுரை கட்டுரைகளையும் மொழிநூல், மொழிநூல் கட்டுரைகள், ஓவச்செய்தி போன்ற ஆழ்ந்து சிந்தித்து எழுதின அறிய நூல்களையும் படிக்க என்க்கு மிகுந்த ஆர்வம் உண்டு. அவரது படைப்புகள் அனைத்தையும் நான் எனது குடும்ப நூலகத்தில் சேர்த்து வைத்துள்ளேன்.

மு.வ. வின் நூல்களில் பட்டறிவால் பெற்ற மொழிகளான உலகம். பொல்லாதவை யார் நல்லவராக இருந்தாலும் உலகம் பொல்லாதது தான் நீ எங்கிருந்தாலும் அங்கு நான்கு பேர் நல்லவர்கள் இப்பார்கள். அவருடன் உறவாடக் கற்றுக் கொண்டால் உனது வாழ்வு செம்மைப்படும் என்பன போன்ற வாசகங்கள் எனது மனதில் ஆழமாகப் பதிந்துள்ளன. வரலாற்றுப் புற்கென்ற கண்ணும் அவர் சென்ற நாளொற்றித் தெய்ந்த விரல் (குறள் 1261) என்ற குறளுக்கு ஒப்ப சங்ககாலக் குடும்பவாழ்க்கையால் பொருள் வயிற் பிரிந்து செல்ல தலைவியின் முன்பு விடை பெற எதிரில் வந்து நிற்கும் தலைவனைக் கண்ணுற்று இன்று செல்பவர், என்று வருவாரோ என்ற எண்ணி ஓவச் செய்தியின் ஒன்று நினைத்தாள் என்று கற்பனைச் சித்திரம் நம்மை சங்காலத்திற்கு அழைத்துச் அசெல்லுகின்றது என்றால் அது மிகையாகாது. இது மு.வ.வின் அற்புதப் படைப்புகளில்

ஒன்று.

மொழி இயல் கட்டுரைகள் என்ற நூலில் மு.வ. அவர்கள் பெரியோர் சிறுபிழை என்ற கட்டுரையில் தொல்காப்பியர் கணித வாய்ப்பாட்டிற்கு இலக்கணம் கூறும்பொழுது தொண்டு. தொண்ணூறு. தொள்ளாயிரம் என்னும் எண்களுக்கு இலக்கணம் அளித்துள்ளார். மேலும் பத்து. பதின் ஒன்று - பதின் இரண்டு (பன்னிரண்டு), பதின மூன்று . பதின் எட்டு பத்தொன்பது என்னும் எண்வரிசை சீராக அமையவில்லை என்று கருத்தைக் கூறுகின்றார். ஒருபது, இருபது இருபத்தொன்று இருபத்திரண்டு என்று இல்லாமல் பத்து, பதினொன்று, பன்னிரண்டு, பதின் மூன்று.. பத்தொன்பது ஆகிய எண்வரிசையில் பத்தொன்பது மட்டும் முறையாக உள்ளது என்றும் பதினொன்று, பன்னிரண்டு, பதின் மூன்று. பத்தொன்பது ஆகிய எண்வரிசையிலர் பத்தொன்பது மட்டும் முறையாக உள்ளது என்றும் இவற்றிற்கு இலக்கணம் கூற வந்த தொல்காப்பியர்ட தவறிவிட்டாரோ என்ற கருத்துடன் தொல்காப்பியர் காலத்திலேயே இவ்வழக்கு ஒழிந்துவிட்டதோ என்று கூறினது தமிழ்ப் புலமையை உள்ளது உள்ளபடியே கூறியிருப்பது எனக்கு மு.வ.வின். மேலிருக்கும் அன்பு மேலும் அதிகமாயிற்று ஒன்பது என்னும் எண்வரிசைக்குப் பிறகு ஒருபது. ஒருபத்தொன்று, ஒருபத்திரண்டு.. ஒருபத்தொன்பது என்ற வரிசையில் பத்து முதல் இருபது வரையிலான எண்கள் அமைந்திருக்க வேண்டும் ஆனால் இவ்வழக்கு இன்று ஏட்டில் இல்லை. இன்றும் தமிழ் நாட்டில் பாமர மக்கள் எண்வரிசைகளைக் கூறும் பொழுது ஒன்பது என்னும் எண்ணுக்குப் பின் ஒருபது ஒரு பத்தொன்று ஒரு பத்தொன்பது என்று எண்ணும் வழக்கம் உண்டு என்பதை நாம் உணர வேண்டும்.

தமிழர்தம் எண் குறியீடே இன்றைய அரேபிய எண் குறியீடுகளான 1, 2, 3... 9, 0 (W) வரையிலான பத்தின் அடுக்கு முறைக்கு வித்திட்டுள்ளது என்று மு.வ அவர்கள் கூறியுள்ளார். இக்கருத்து மிக ஆழமானதும் தமிழர்கள் சிந்திக்க வேண்டிய ஒன்று என்றும் நான் எண்ணுகின்றேன்.

மு.வ. அவர்கள். தமிழை முறையாகக் கற்காதவர்.கள் கூட தமிழின் மேன்மையை உணர வேண்டும் என்று எண்ணியவர் பலருடன் பழகித் தமிழ் உணர்வை ஊட்டி வளர்த்துள்ளார் எனப் பெருமிதத்துடன் கூறிக் கொள்ளுகின்றேன். நல்லாரைக் காண்பதூஉம் ஒன்று என்ற மூததோர். தம் அறிவுரை என்றும் போற்றுதற்கு உரியது.

146. மு. வ. வின் இலக்கிய ஆட்சி

கா. கிரிஜா
தலைமையாசிரியை
ஊ.ஒ.தொடக்கப்பள்ளி
தூரிஞ்சாபுரம்
திருவண்ணாமலை மாவட்டம்

முன்னுரை

இலக்கியம் என்பது காலக்கண்ணாடி. பண்பாடு சார்ந்த வாழ்வின் குறிக்கோளை எடுத்துக் கூறுவதுதான் இலக்கியம். இலக்கியங்கள் தமிழ் இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், இக்கால இலக்கியங்கள், வாய்மொழி இலக்கியங்கள் எனப் பலவாறு பிரிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் அறம், பொருள், இன்பம், வீடு பற்றி உரைப்பது மட்டுமே இலக்கியமாகும்.

மனித வாழ்வின் அடிப்படை நெறிகளைப் போற்றி வாழ்வதே நல்வாழ்வு ஆகும். அதை வழிபாடு, நம்பிக்கை, உடம்பைப் போற்றல், எளிமை ஓர் அறம், உரிமையும் கடமையும், புலனடக்கம், மனவலிமை வேண்டும், பண்பாடு, பொதுமை அறம், நீந்துதல் போன்ற நெறிமுறைகளை மனித வாழ்வு சிறப்பாக அமைய வகுத்துக் காட்டியதோடு அல்லாமல் அதைப் போற்றவும் அதன்படி நடக்கவும் வேண்டும். அப்படிச் செய்தால் வாழ்வில் அமைதியும் இன்பமும் நிலவுவதை ஒவ்வொருவரும் உணரலாம் என்று சொல்லியிரப்பதோடு அல்லாமல் முன்னோர்களின் கருத்துக்களை,

*"முன்னோர் மொழி பொருளே யன்றி யவர்மொழியும்
பொன்னேபோற் றுவ மென்பதற்கும் - முன்னோரின்
வேறுநூல் செய்து மெனு மேற்கோவில் இலன்பதற்கும்
கூறு புகழ் சூத்திரத்தின் கோள்"*

என்று நன்னூல் நூற்பாவின்படி, முன்னோர்களின் மொழியையும், அவரது கருத்துக்களையும், சொல்லையும் பொன்னைப் போல போற்றுவோம். போற்றுவதோடு நிற்காமல் நாங்கள் செய்யும் வேறு நூல்களிலும் மேற்கோள்களாகக் கொள்வோம் என்பதற்கேற்ப மு.வ. அவர்கள் பல்வேறு இலக்கியங்களில் முன்னோர்கள் சொல்லிய செய்திகளை மக்களுக்குப் புரியும் வகையில் மேற்கோளாகக் கொண்டு எப்படி வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நல்வாழ்வில் வழிபாடு

கடவுளின் அருளை பொருள் செலவிட்டு விலைக்கு வாங்கிட முடியும் என்ற மூடநம்பிக்கை கொண்டு செய்வது பொருந்தாது, கடவுள்

நாம் கொடுக்கும் கைப்பொருளை (லஞ்சத்தை) வாங்கிக் கொண்டு அதற்குக் கைமாறாக நமக்கு உதவுவார் என்று எண்ணுவது அறியாமை, வழக்கில் வெற்றி பெற தேர்வில் தேர்ச்சி பெற, நோயிலிருந்து காப்பாற்ற, வியாபாரத்தில் மிக்க ஊதியம் பெற, தொழில் உயர்வு பெற என்று இவ்வாறெல்லாம் நாம் விரும்பும் உதவியைச் செய்வதற்காக நாம் தரும் பொருளை ஏற்றுக் கொள்வார் என நம்புவது கடவுளைப் பற்றிய தவறான கொள்கையாகும். அவ்வாறு பிரார்த்தனைகள் பொருள் தரும் வேண்டுதல்கள் செய்வோர் சில வேளைகளில் வெற்றி பெறுதல் உண்டு. அந்த வெற்றிகள் இயல்பாக ஏற்படுகின்றன. அவை செலவான பொருளுக்குக் கைமாறாகக் கடவுள் தந்தவை என்று எண்ணக்கூடாது. கடவுள் எல்லா உயிர்களின் வாழ்வுக்கும் பொதுவான திட்டங்கள் வகுத்து பொதுமையான ஆட்சிபுரியும் ஒரு பெருஞ்சக்தி என்று உணர வேண்டும் என்கிறார் மு.வ.

"நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாது ஒருபோதும் இருந்தறியேன்"

என்று திருநாவுக்கரசரும்,

"நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சனநீர் பூசை கொள்ள வாராய் பராபரமே"

என்று தாயுமானவரும்

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே"

என்று இராமலிங்க வள்ளலாரும் பாடிய பாடல்களை உணாந்து அன்பை வளர்த்து வழிபட வேண்டும் என்று கூறுகிறார். உடம்பு உயிருக்கு ஒரு சட்டை, மனமனமும் ஒரு சட்டடை இந்தப் புறச்சட்டை அகச்சட்டைகளைக் கொண்டு உள்ளே விளங்கும் உயிர் அழிவல்லாதது என்று தெளிய வேண்டும். உடம்பை நான் என்றும், உடம்பைச் சார்ந்த பொருள்களை என்னுடையவை என்றும் தவறாகக் கருதுதல் செருக்கு என்று திருவள்ளுவரால் கடியப்பட்டது.

"யான்எனது என்னும் செருக்கறுப்போன் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்"

என்று அவர்கூறும் கருத்து கடவுள்நெறிக்கு உரியதாகும் என்கிறார் மு.வ. நன்மை தீமை நமக்குத் தெரியும். நாம் அறிவு கொண்டு தெளிந்த வழியில் நம் கட்டளைப்படி மனம் இயங்க வேண்டும். உடல் உழைக்க வேண்டும், மனதிற்கும் உடலுக்கும் தலைமை தாங்குவது உயிர் (ஆன்மா) ஆகவே அவற்றிற்குத் தலைமை தாங்கி வாழ்வை நடத்த வேண்டும்.

நம்பிக்கை

புயல் போன்ற நிலையில் உள்ள சமுதாயத்தில், நல்லவர் சிலர் வாடுவதும் உண்டு. தீயவர் முன்னேறுவதும் உண்டு. ஆனால் அவை நிலையாக நடப்பவை அல்ல. புயல் மாறியே தீரும். இயல்பான தன்மைகள் வெற்றிபெற்றே தீரும். நல்லொழுக்கம் நன்மை தரும் என்றும், தீயொழுக்கம் தீமையே விளைவிக்கும் என்றும் திருவள்ளுவர் சொன்னது நிலையான உண்மையாகும்.

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்"

என்றுரைக்கிறார்

உடம்பைப் போற்றல்

நம் உடம்பின் உறுப்புகளைக் கெடுத்துப் பெறும் இன்பம் வேண்டா என்று ஒதுக்கும் துணிவு வேண்டும். நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம். ஆனால் இன்ப அலைச்சலை குறைத்துக் கொண்டு உடம்பை துன்புறாத வகையில் காப்பதே அறிவான வாழ்க்கையாகும் என்கிறார் மு.வ. எவ்வளவு மிகுதியாகச் சாப்பிட முடியுமோ, அந்த அளவிற்குச் சாப்பிடக் கூடாது. அளவுக்கு குறைவாக இருப்பதே நல்லது. அளவறிந்து உண்க என்கிறார் திருவள்ளுவர். நிறைய உண்பதால் நோய் வரும் என்றும், குறைய உண்பதால் இன்பம் (சுகம்) நிலைக்கும் என்றும் அவர் கூறுகிறார்.

"இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்"

இன்னொரு விதியும் போற்ற வேண்டும்.

படைப்பில் அமைந்த வியக்கத்தக்க விந்தைகளுள் மிகச்சிறந்தது மனித உடம்புதான். அறிவியல் முன்னேற்றம் கொண்டு வியக்கத்தக்க கருவிகளைக் கண்டது எது? மனித மூளையே. அந்த மூளையைத் தன்னுள் பெற்றிருக்கும் மனித உடம்பு கடவுள் தந்த அருமையான கருவி. அத்தகைய உயர்ந்த கருவியாக மனித உடம்பை நல்ல வகையில் காத்துக் கொள்வது முதல் கடமையாகும். சமயத்துறையில் தேர்ந்த திருமூலர் என்ற சான்றோர்,

"உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பினுள் உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புரிகின்றேனே"

என்று உடம்பினைக் காப்பாற்ற வேண்டிய கடமையை வற்புறுத்துகிறார்.

எளிமை ஓர் அறம்

செல்வம் என்பது சிந்தையின் நிறைவே என்றார் பழங்காலத் தமிழ்ப்புலவர் ஒருவர். ஆடம்பரம் தராத இந்த மனநிறைவே எளிமை தருகிறது. அதுவே உயர்ந்த செல்வம் ஆகும்.

உரிமையும் கடமையும்

உரிமைக்கும் கடமைக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வை நீக்குவதற்காக இயற்கை அமைத்த ஓர் அருமையான பாதுகாப்பே அன்பு எனப்படுவது. அன்பு எங்கே உயர்ந்து விளங்குகிறதோ அங்கே உரிமைப் போராட்டம் இல்லை. கடமைக் குறைவு இல்லை. அதனால் அன்பின் வழியது உயர்நிலை என்கிறார் திருவள்ளுவர். முன்னேறிவரும் அரசியல் நோக்கோடு சமுதாய நோக்கோடு பார்த்தாலும் சரி. சமயநோக்கோடு பார்த்தாலும் சரி. மனிதர்க்கு மனிதர் எந்தவகையான வேறுபாடும் கருதக்கூடாது, ஏழையென்றும் அடிமையென்றும் எவரும் இல்லை என்றார் பாரதியார். இவரின் கருத்தினைக் கையாண்டு மக்களின் மனதில் எளிதில் பதிய வைக்கிறார் மு.வ.

புலனடக்கம்

உடம்பும் மனமும் நன்றாக இருந்தால் தான் இன்ப வாழ்க்கை உண்டு. ஆகவே உடம்புக்கோ மனத்துக்கோ தீங்காக உள்ள எந்த இன்பத்தையும் ஒதுக்க வேண்டும். தீமை இல்லாத இன்பம் எவ்வளவோ இந்த உலகில் உண்டு. எத்தனை கோடி இன்பங்கள் வைத்தாய் இறைவா இறைவா இறைவா என்று பாரதியார் வியந்து பாடுவதை புலனடக்கத்தின் வழி மிகச்சிறப்பாக எடுத்துக்கூறுகிறார்.

மனவலிமை வேண்டும்

பரிபாடல் என்ற பழைய நூலில் ஒரு புலவர் கடவுளிடம் தன் வேண்டுகோளைச் சொல்லி முடிக்கும்போது, ஐயனே! உன்னிடம் யான் வேண்டிக் கேட்பவை பொன்னும் பொருளும் போகமும் அல்ல. அன்பும் அருளும் அறமுமாகிய இந்த மூன்றையுமே கேட்கின்றேன் என்கிறார்.

"யாம் அம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயே"

இவ்வாறு அவர் வேண்டிக் கொண்டதன் அடிப்படையில் மேற்சொன்ன உண்மையுள்ளது.

உலகத் தொடர்பான பொன், பொருள், போகம் இவற்றை நாம் நினைத்தபடி அடைய முடியாது. ஆனால் மனத்தின் தொடர்பான அன்பு,

அருள், அறஉணர்வு இவற்றை விரும்பி முயன்றால் முயற்சிக்கு ஏற்ப அடையமுடியும் என்ற உண்மையை உணர்ந்தே அவ்வாறு வேண்டினார். திருவள்ளுவர் இதை எவ்வளவு அழகாகச் சொல்கிறார்.

"ஒறுத்தார்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"

பழிக்குப் பழி என்று ஒறுத்தவர்களுக்கு உடனடியாகக் கிடைப்பது ஒரு நாள் இன்பம் தானாம். அவ்வாறு அன்றிப் பொறுமையுடன் இருப்பதற்கு எவ்வளவோ மனவலிமை வேண்டும். அந்த மனவலிமை பாடுபட்டால் பெறக்கூடியது. துறவிகளின் மனவலிமையைவிட இந்த மனவலிமை சிறந்தது என்பது திருவள்ளுவரின் கருத்து. உணவு உண்ணாமல் நோன்பு நோற்பவர்களைவிட பிறருடைய கடுஞ்சொற்களைப் பொறுத்திருப்பவர்கள் பெரியவர்கள் என்கிறார் அவர்,

உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்

அவ்வாறு கோபம் கொள்வதற்கு மனவலிமை தேவையில்லை. கோபம் வராமல் தடுத்துக் கொள்வதற்கே மனவலிமை வேண்டும். யார் வேண்டுமானாலும் எப்போதும் பொய் சொல்ல முடியும். ஆனால் எந்தக் காரணத்திற்காகவும் பொய் சொல்லாமல் உண்மையே பெசி உண்மையாக நடப்பதற்கு மனவலிமை வேண்டும்.

உலகச் செல்வாக்கை விட உடம்பின் ஆட்சியை விட, மனவலிமைதான் முயற்சியால் பெறக்கூடியது என்று உணர வேண்டும். முயற்சிக்கு ஏற்ற கூலிதரும் ஒரு துறையை வாழ்வுக்கு அடிப்படையான ஒரு துறையை அருமையானது என்று விட்டுவிடக்கூடாது.

பண்பாடு

சான்றோர்களுடன் நெருங்கிப் பழகி பண்படும் வாய்ப்பு இன்றைக்கு குறைவாகவே உள்ளது. அவர்களுக்கும் கடமைகள் பல உண்டு. பழகிப் பண்பட தேவையான அமைதியும் ஓய்வும் கிடைப்பதில்லை.

"இழுக்க லுடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல்"

என்ற திருவள்ளுவர் போற்றிய ஒழுக்கமுடையவர் கிடைப்பது அரியராக உள்ளனர் என்கிறார் மு.வ. அவர்கள்.

பொதுமை அறம்

பொதுமை அறம்பற்றிக் கூறுகையில் எந்தக் காரணத்தாலும் உயர்வு தாழ்வு கற்பிக்கும் மனப்பான்மையை ஒழிப்பது நல்லது. உலகம் இதையேற்று நடப்பதால் தான் முன்னேறி வருகிறது.

"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உறுக்கின்றார்
யாவரவர் உளம்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம் என நான் தெரிந்தேன் அந்த
வித்தகர் தம் ஆடிக்கேவல் செய்திடஎன்
சிந்தை மிக விழைந்த தாலோ

என்று இராமலிங்க அடிகளார் இந்தச் சமய நோக்கிற்கு தெளிவான வடிவம் தந்துள்ளார். மேலும்,

சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே

என வேறுபாடுகளைப் பெருக்கி சாதிச் சண்டைகளிலும் மதச்சண்டைகளிலும் சாதிப் போர்களிலும் வெறிகொண்டு அலைதல் கூடாது. இராமலிங்க அடிகளாரின் பாடல் வரிகள் மூலம் எடுத்துப் பொதுமை அறம் பற்றிக் கூறுகிறார் மு.வ.

நீந்துக

மனிதர்கள் தனக்கு துன்பம் வரும்போது கலங்குகிறார்கள். அதே மற்றவர்க்கு துன்பம் ஏற்படும்போது அத்தகைய பாதிப்பு அவனுக்கு ஏற்படுவதில்லை என்றும், கிணற்றுக்குள் தவளை போலவே வெளியுலகம் என்று தெரியாமல் மனிதர்கள் இன்றும் சிலர் வாழ்ந்துகொண்டு இருக்கின்றார்கள் எனவும், புகழ்ச்சிக்கு மயங்கி இகழ்ச்சி வரும்போது மனம் கலங்கி இரண்டுமே தான்தான் என்று மயங்கிவிடுகிறார்கள். அப்படியில்லாமல் இறைவன் படைப்பில் அவனது குடும்பத்தில் நான் ஒரு சிறுபகுதி என்று உணரும் தெளிவு வேண்டும் என்கிறார். அந்தத் தெளிவு வந்தால் கலக்கத்திற்கு இடமிருக்காது என்று சான்றோர்கள் பலர் மெய்யுணர்வோடு அறிவுறுத்தினார்கள். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கணியன் பூங்குன்றனார்,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன
சாதலும் புதுர்வதென்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்ன தென்றலும் இலமே மாட்சியின்
பெரியாரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதினினும் இலமே"

என்று பரந்த மனப்பான்மை ஒருசிலர்க்கு மட்டும் இருந்தது என்று அவரின் கருத்தை மேற்கோள் காட்டி மக்களுக்கு எளிதில் புரிய வைக்கின்றார் மு.வ.

முடிவுரை

இவ்வுலகில் வாழும் மக்கள் அனைவரும் ஏதாவது ஒரு தருணத்தில் வாழ்கின்ற வாழ்க்கையில் தடுமாற்றத்திற்கு உள்ளாகும் நிலையில் உள்ளனர். அதற்குக் காரணம் தான் என்ன? அதனைத் தவிர்த்து அமைதியான ஒரு வாழ்க்கையை மக்கள் வாழ வேண்டுமென்றால் அதற்கான வழிமுறைகள் என்னென்ன என்பதை நல்வாழ்வு நூலிலே டாக்டர் மு.வ. அவர்கள் பல இலக்கியங்களை எடுத்துக்காட்டாக கூறி படம்பிடித்துக் காட்டுகின்றார். பழங்கால மூடநம்பிக்கைகளும், கொள்கைகளும் ஒருபுறம் இக்கால புத்தறிவும் புதுநோக்கும் ஒருபுறம், இதற்கிடையே மக்களின் வாழ்க்கைப் போராட்டம், பழமை-புதுமை இதனிடையே என்றும் பயன்தரவல்ல அடிப்படை நெறிகள் சில உள்ளன. அவற்றைப் போற்றினால் வாழ்வில் அமைதி ஏற்படும் என்பதைரயும், இன்ப துன்பங்கள் மனதை ஒட்டிய பெரும்பாலும் அமைகின்றன என்று கூறும் அவர், பிறவிப் பெருங்கடலை நீந்துபவர்களால் மட்டுமே வாழ்க்கையில் இன்பமும், அமைதியும் பெறமுடியும் என்பதை விளக்கி திருக்குறள் வாயிலாகவும், திருமூலரின் வாயிலாகவும், இராமலிங்க அடிகளாரின் திருஅருட்பா வாயிலாகவும் கணியன் பூங்குன்றனார் பாடல்களின் மூலமும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் இருந்தும் எடுத்து இலக்கியங்களைக் கையாண்டிருப்பது கிறப்பாக உள்ளது.

147. மு. வரதராசனாரின் கி. பி. 2000 புதிய கண்ணோட்டம்

திருமதி ரஜனி ரஜத்
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 046

முன்னுரை

மு.வ. என்று சுருக்கமாக அழைக்கப்பட்ட மு. வரதராசனார் 20ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற தமிழ் அறிஞர்களுள் ஒருவர். இலக்கியக் கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள் மட்டுமின்றி பல சிறுகதைகள், புதினங்கள் போன்றவற்றையும் எழுதியுள்ளார். அவர் எழுதியுள்ள நூல்கள் மொத்தம் 85. இவரது திருக்குறள் தெளிவுரையை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நூற்றுக்கும் மேற்பட்ட பதிப்புகள் வெளியிட்டுள்ளது. தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி போன்ற இந்திய மொழிகள் பலவற்றையும் நன்கறிந்தவர். இவரது நூல்களில் சிறுவயதிலிருந்தே எனக்கு மிகவும் பிடித்த "கி.பி.2000" என்ற சிறிய நூலின் சிறப்பினைக் குறித்த ஆய்வுக் கட்டுரை இது.

நோக்கம்

எனது தாயாரின் திருமணத்திற்கு அன்புப் பரிசாக குடும்ப நண்பர் வபபரிசளித்த (முதற்பதிப்பு 1947) நூலை பலமுறை ரசித்து படித்துள்ளேன். இதில் இன்றைய நனவும் நாளைய கனவும் உள்ளது. இது ஒரு சிந்தனைக் கதை. தினச்சிறப்புடையது. சிந்தனையும் கற்பனையும் இணைந்து இந்நூலை நடத்திச் செல்வதால் இதை சிந்தனைக் கதை என்று மு.வ. குறிப்பிட்டுள்ளார். இதன் சிறப்புகளை எளிய நடை, தீர்க்க தரிசனம், தமிழ்ப்பற்று, உணவு விடுதிகள். சமூக விழிப்புணர்வு, கல்வி முறைகள், மாணவர் குறித்த சிந்தனை, நூலகங்கள், மனித சமுதாயம் எய்த வேண்டிய உயர்நிலை குறித்த நோக்கம், அது குறித்த தேடல் போன்ற பல்வேறு கோணங்களில் பார்க்கலாம்.

சிந்தனையும் கற்பனையும்

சிந்தனை என்பது மனிதனுக்கு மட்டும் உரியதாகக் கருதப்படும் அறிவைப் பயன்படுத்தி பகுத்துப் பார்க்கும் திறன். மனிதனின் சிந்தனை இயற்கையை வெல்ல உதவியது. பகுத்தறியும் திறனால் பெறும் எண்ணம். தீவிரமாகச் சிந்தித்துக் கருத்துக்களை வெளிப்படுத்துவது சிந்தனையாகும்.

கற்பனை என்பது உண்மையாக நடந்திராதது அல்லது இருந்திராதது. இல்லாததை மனத்தில் கொண்டு வருவது அல்லது மனத்தில் உருவாக்கி வெளிப்படுத்துவது கற்பனை ஆகும். மனிதனால் எதைக் கற்பனை செய்ய முடியாததோ அதை அடையவே முடியாது. ஆனால் கற்பனை சரியாக வாருவதற்கு கான்ஸென்ட்ரேஷன் எனப்படும் மன ஒருமை தேவை. கற்பனை என்பதே இறைவன் நமக்குக் கொடுத்த ஒரு வரம் தான். நாம்தான் பல நேரங்களில் அதை சாபமாக மாற்றிக் கொண்டு இருக்கிறோம்.

கி.பி. 2000

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியராகப் பெறின் - குறள் 666

என்பது தெய்வப் புலவர் வாக்கன்றோ. சமுதாய ஏற்றத்தாழ்வுகள், கல்வி முறை, மாணவர் சமுதாயம், பெண்ணுரிமை, பொது உடைமைக் கருத்து இவை குறித்து கண்முன் நடக்கும் நிகழ்வுகளைக் கண்டு மனம் நொந்து மு.வ. அவர்கள் உன்னதமான சமுதாயம் அமைய மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளை சிந்தித்து புதிய கோணத்தில் இந்நூலை எழுதியுள்ளார். புதிய உலகுக்கு கனவில் செல்வதாக நிகழ்வுகளைத் தீட்டியுள்ளார். ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்குப் பின் எத்தகைய முன்னேற்றம் ஏற்பட வேண்டும். மனித சமுதாயம் நல்ல முறையில் வளர்ச்சி பெற மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் பற்றி அருமையாக விளக்கியுள்ளார். கி.பி. 2000த்தில் அவர் எதிர்பார்த்த கணிப்புகள் (2012ல்) இந்தக் காலகட்டத்தில் நிறைவேறியுள்ளனவா இல்லையா, இல்லை எனில் அதற்கான காரணங்கள் என்ன என்றும் பார்க்கலாம்.

எளிய நடை

நூல் முழுவதும் மிகவும் எளிய நடையில் சிறுவர்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் அழகு தமிழில் அமைந்துள்ளது. சொல்ல வந்த கருத்துக்களைத் தெளிவாகக் கோர்வையாகக் கூறியுள்ளார்.

தமிழ்ப்பற்று

புதிய உலகில் விருந்துமனைக்குச் செல்லும் போது "நாமார்க்கும் குடியல்லோம் எமனை அஞ்சோம் நரகத்திலிடர்பாவோம்" என ஒருவர் மேடை மீது அமர்ந்து தேவாரத்தைப் பாடிக் கொண்டிருப்பதைக் கண்டாராம். என்னே தமிழ்ப்பற்று

தீர்க்கதரிசனம்

50 ஆண்டுகள் கழித்து இப்படி நடக்கும் அல்லது நடக்காது

என்று துல்லியமாகக் கணிப்பதும் அதே போல் அட்சரம் பிசகாமல் நடப்பது என்பதும் தீர்க்கதரிசிகளுக்கே உரித்தான திறமை. அந்தத் திறமை மு.வ. அவர்களிடம் நிரம்ப இருப்பது பல இடங்களில் வெளிப்படுகிறது. இப்போது நாம் காணும் "3ஜி கைபேசி" வெகுதூரத்தில் இருப்பவரைக் காணவும் அவருடன் உரையாடவும் உதவுகிறது. இதுபோன்ற ஒரு கருவிளை அளவளாவி என்று பெயரிட்டு அக்கருவியை உபயோகிக்கும்போது ஏற்படும் அனுபவங்களை விளக்குகிறார். புதிய உலகத்தில் (கனவுலகில், கற்பனையில்) இறங்கியவுடன் நண்பர் அக்கருவியை இவருக்கு அணிவித்து. தமிழர் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டதால் தமிழில் பெயரிட்டார்கள் என்றும் கூறுகிறார். மு.வ.வின் தீர்க்கதரிசனமும், அறிவியல் துறையில் தனிழும் முன்னேற வேண்டும் என்ற ஆவலும் அழகாக வெளிப்படுகிறது.

இதே போல் ஏப்ரல் 2001ல் நாவலாசிரியர் ராஜேஷ்குமாரை எழுத்தாளர் திரு. ரஜத் தினமலர் வாரமலருக்காக பேட்டி கண்டடர். அப்போது உங்களுக்கு பிடித்த விஞ்ஞானக் கருவி எது எனக் கேட்டதற்கு 2010ல் ஒவ்வொரு சராசரி இந்நதியனும் பாக்கெட்டில் செல்போன் வைத்துக் கொள்ளுவான் பால்பாயிண்ட் பேனா மாதிரி என்று தீர்க்கதரிசி போல் எழுத்தாளர் ராஜேஷ்குமார் கூறினார். செல்போன் சர்வீஸ் கொடுக்கும் கம்பெனிகள், செல்போன் தயாரிக்கும் நிறுவனங்கள் கூட ராஜேஷ்குமாரைப் போல குறிப்பிட்ட ஆண்டை அடித்துச் சொல்லவில்லை. தற்போது செல்போன் உபயோகம் பற்றி கூற வேண்டியதில்லை.

உணவு விடுதிகள்

வீடுதோறும் இருந்த சமையலறையும், அதற்கான தொல்லைகளும் தீர்ந்து ஊருக்குப் பொதுவான உணவு விடுதிகள் புது உலகில் ஏற்பட்டிருந்தன. எந்த மூலையிலும், கரியோ, புகையோ காணப்படவில்லை. அங்கிருந்த தொழிலாளர்களும் தூய்மையாகக் காணப்பட்டனர். உயிரற்ற யந்திரங்களோடும், அறிவற்ற பயிர்களோடும், விலங்குகளோடும் பழகும் தொழில்களை விட மக்களோடு பழகும் தொழில்களான ஆசிரியர் தொழிலையும், உணவு விடுதித் தொழிலையும் எல்லோரும் விரும்புகின்றனராம். தற்போது எங்கு நோக்கினும் உணவு விடுதிகள். பல்வேறு மாநிலங்கள், நாடுகளில் கிடைக்கும் உணவு வகைகளை நமது ஊரிலேயே ருசிக்க முடிகிறது. இவ்வாறு உணவு முறையில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய மாற்றத்தை சிந்தித்து அனைவருக்கும் உணவு கிடைக்கவும் செய்ய வேண்டும் என்று கூறுகிறார்.

கல்வி முறை

புதிய உலகில் படிப்பு என்றால் குறித்த நேரத்தில் போய்க் குறித்த நேரத்தில் திரும்பி வருவது இல்லையாம். அங்கே பல

மாணவர்களுடனும் ஆசிரியர்களும் சேர்ந்து பழகிப்பல நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொண்டு அவர்களோடு உண்டு உறங்கி ஒற்றுமையாக வாழ்ந்து வர வேண்டும். விடுமுறை நாட்களில் மாணவர்கள் வீட்டிற்குச் சென்றும், பெற்றோர்கள் விடுதிக்குச் சென்றும் பார்க்கலாம். ஊரில் உள்ள உயர்ந்த கட்டிடங்களுள் பேர்போனவை பள்ளிக்கூடம், கல்லூரி முதலானவை. பள்ளிகள் மூன்றடுக்கும், கல்லூரிகள் ஐந்தடுக்கும் கொண்டிருந்தன என்கிறார். நம் நாட்டின் பாரம்பரியமான குருகுலக்கல்வி முறை ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பின் ஒழிக்கப்பட்டுவிட்டது. குருகுலக்கல்வியின் சிறப்பம்சங்களால் நம்நாடு பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கியது. நாட்டை அடிமைப்படுவதற்கும் ஒரு கருவியாக கல்வி முறையை மாற்றி அமைத்த பெருமை ஆங்கிலேயரை சாரும். பொறியியல் மருத்துவம் போன்ற உயர்படிப்பு படித்தவர்களும், மனப்பாட முறையில் படித்தவற்றைக் கடைபிடிக்கின்றனர். தொழிற்கூலிகளாக செயற்படுகின்றனர். சுயமாக சிந்தித்து புதிதாகக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதையே மறந்து விட்டனர். இந்தக் குறை தீர இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் செல்ல வேண்டுமோ, கல்வி முறை மாற்றம் குறித்த தன் எதிர்பார்ப்பை கனவுலகின் கற்பனையாகக் கூறுகிறார்.

நூல் நிலையங்கள்

புத்தகங்கள் உருவாக்கும் தலைமுறைதான் உலகை மேம்படுத்தும். மைனராக இருந்த மானுடம் புத்தகங்களின் அறிமுகத்துக்குப் பிறகுதான் மேஜரானது - வலம்புரிஜான். வாசிப்புதான் ஒரு வரலாற்றை உருவாக்குகிறது. அரசியலை நிர்ணயிக்கிறது. கனவுகளைக் கொண்டு வருகிறது. புத்தகங்களும் வாசிப்புதான் நல்ல மனதை, கனவை, தேசத்தை உருவாக்கும். ஈழ எழுத்தாளர் எஸ்பொ யாழ் நூலகம் சிங்கள ராணுவத்தால் எரிக்கப்பட்டது குறித்து "கண்முன்னால் எங்கள் வரலாறு எரிக்கப்பட்டதைப் பார்த்தவர்கள் நாங்கள்" என்று வருத்தத்துடன் கூறினார். மு.வ.வின் புதிய கற்பனை உலகில் கோடிக்கணக்கான நூல்கள் கலைகளுக்கு ஏற்ப பகுதி பகுதியாகப் பிரித்து அழகு பெற அடுக்கி இருந்தார்கள். ஒவ்வொரு கலைப் பகுதியிலும் இருவர் வட்ட மேசைக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் அந்தந்தக் கலையில் தேர்ந்த ஆசிரியர்கள். அந்த நூல் நிலையங்களில் பொதுமக்களும், கல்லூரி மாணவர்களும் படிக்கும் போது எழும் ஐயங்களை அந்த ஆசிரியர்களிடம் கேட்டால் அவர்கள் உடனே நூல்களைப் பார்த்தோ பார்க்காமலோ ஐயங்களைத் தீர்ப்பார்களாம்.

நவில்தோறும் நூல் நயம் போலும் பயில்தோறும்
பண்புடையாளர் தொடர்பு - குறள் 783.

என்பது பொய்யமொழிப் புலவரின் விளக்கமல்லவா.

இப்படி நூல் நிலையங்களில் சில ஆண்டுகள் ஆசிரியராக இருந்தவர்களே பிறக் கல்லூரி ஆசிரியராகும் தகுதி பெறுகின்றார்களாம். மாணவர்கள் எழுதும் நூல்களை ஆசிரியர்கள் திருத்தி உதவுகின்றார்கள். ஆசிரியர்கள் நூல் எழுத விரும்பினால் அவர்களுக்குக் கல்லூரி நூல் நிலையத்தில் இடம் கொடுத்து ஓய்வும் கொடுக்கின்றார்கள். என்ன ஒரு அற்புதமான சிந்தனை. நல்ல நூல்கள் பிறக்கவும், அவற்றைப் படித்து இன்புறவும் அருமையான ஏற்பாடு.

விலங்கொடு மக்கள் அனைவர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர் - குறள் 410

என திருவள்ளுவர் கூறுகிறார். இப்போது நூலகங்கள் பெருகி அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. நூல்களும் அதிகமாக வெளிவருகின்றன. ஆண்டுதோறும் புத்தகக் கண்காட்சிகளும் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. ஆனால் இளைஞர்களின் கவனம் கணினி, அலைபேசியில் பதிந்து நூல்களை வாசிப்பதற்கு நேரம் ஒதுக்குவதற்கான மனநிலையில் இல்லை.

மாணவர் குறித்த சிந்தனை

நல்ல மாணவர்களை உருவாக்கினால் தான் நாட்டின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும். குறிப்பிட்ட பாடத்திட்டங்களில் உள்ள பாடங்களைப் படித்து, மனனம் செய்து பரிட்சை எழுதி, தேர்வு பெற்று சான்றிதழ் பெறுவது மட்டும் கல்வியல்ல.

கற்க கசடறக் கற்பவைக் கற்றபின்
நிற்க அதற்குத் தக - குறள் 391

என்கிறார் செந்நாப்புலவர். தான் பங்கேற்காமல் தனக்குப் பங்களிக்கும் உறவுகள் நிரம்பிய ஒரு உலகத்தை இன்றைய இளைஞர்கள் எதிர்பார்க்கிறார்கள். பணமும், தொழில்நுட்பமும் அந்த மாய உலகத்தை அவர்களுக்கு சாத்தியமாக்குகின்றன. திடீரென்று ஒருநாள் நிஜ உலகம் தன் தாக்கத்தைக் கொடுக்கும் போது அதை எதிர்கொள்ள முடியாதவர்களாகி விடுகிறார்கள். தனிமையைப் பகிர்ந்து கெள்ள முடியாத சோகம் தற்கொலையை நோக்கி அவர்களைத் தள்ளுகின்றது.

சின்ன வயதில் இருந்தே நீ மட்டும் அல்ல உலகம் உலகம் என்பதை உணர்த்தி வளர்க்க வேண்டும். வாழ்வின் எல்லாத் தருணங்களையும் எதிர்கொள்ளக் கற்றுத்தர வேண்டும். குடும்ப அமைப்போ, பள்ளிக் கூடங்களோ இந்தப் பணியைக் கையில் எடுக்க வேண்டும். (சி.ஜி.கீதா, மனநலநிபுணர்)

இந்தக் குறைகளையெல்லாம் களைந்து வளமான மாணவர் சமுதாயம் உருவாக நாம் கி.பி. இரண்டாயிரம் காட்டும் கல்வி முறையைப்

பார்க்க வேண்டும். கல்வி நிலையங்களில் கற்றல் என்பது வாரத்தில் சில நாட்கள் மட்டுமே. மற்ற நாட்களில் ஐந்து ஆராய்ச்சிகள் செய்ய வேண்டும். முதலில் தொழிற்சாலைகளில் வேலை செய்து தொழிற்கல்வி கற்க வேண்டும். அடுத்த ஆராய்ச்சி உடல்நிலைபற்றியது. மூன்றாவதாக உலகம் சுற்றி பயணம் செய்து பல இடங்களுக்குச் சென்று பூகோளம், வரலாறு, சமூக இயல் பற்றி ஆராய வேண்டும். நான்காவதாக இசை நாடக அரங்குகளுக்கும், இலக்கியக் கூட்டங்களுக்கும் சென்று நுண்கலைகளை ஆராய்ந்து குறிப்பெடுக்க வேண்டும். ஐந்தாவது ஆராய்ச்சி உளநூல் ஆராய்ச்சி இதற்காக சிறியவர், பெரியவர், புதியவர், பழகியவர் என அனைவருடனும் பேசிப் பழக வேண்டும்.

இந்த மாதிரி ஆராய்ச்சிகளின் அடிப்படையில் அமைந்த கல்வி வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் மாணவர்களின் மனத்தைச் செம்மைப்படுத்த உதவும். குறிப்பிட்ட துறை என்றில்லாமல் எல்லாத் துறைகளிலும் பரிச்சயம் ஏற்பட வழிவகுக்கும். அதனால் வாழ்க்கை குறித்த பயம் விலகும். தன்னம்பிக்கையும் தைரியமும் ஏற்படும் முதலில் கூறிய குறைகள் அனைத்தும் களையப்பட்டு ஒளிமயமான எதிர்காலம் புலப்படும்.

கனவுகளும் தமிழும்

ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் கண்ணனை மணம் முடிப்பதாகக் கனவு கண்டாள். திருமணத்தின் பல்வேறு நிகழ்வுகளை கனவில் கண்டதாக பத்துப்பாடல்களில் அருமையாக வர்ணிக்கிறாள். வாரணமாயிரம் சூழவலம் செய்து என்று தொடங்கும் பாடல்களை அறியாதார் தமிழுலகில் உண்டா?

முன்னாள் குடியரசுத் தலைவர் கனாக் காணுங்கள் என்று இளைஞர்களிடம் கூறினார்.

மு.வ.வின் கனவே கி.பி. 2000. மு. வரதராசனாரோ தமிழறிஞர் என்றாலும் அறிவியல், உளவியல் சார்ந்த கனவின் மூலம் அற்புதமான திட்டங்களைக் கூறி நாடு முன்னேற வழி வகுக்கிறார்.

முடிவுரை

காலம், இடம் கருதி எளிய நடை, தீர்க்க தரிசனம், கல்விமுறை, நூல் நிலையங்கள், மாணவர் குறித்த சிந்தனை இவற்றின் மூலம் சமூக விழிப்புணர்வு, சமுதாய உயர்நிலை குறித்த நோக்கம் பற்றி மட்டுமே ஆராய்ந்து நூலின் சிறப்புகளைக் காண முடிந்துள்ளது. நூல் முழுவதும் நிரம்பியுள்ள சிந்தனைப் பெட்டகத்தை ஆராய்ந்தால் அமுதசுரபி போல் மேலும் மேலும் கிடைக்கும் சிறப்பான செய்திகள் வியக்க வைக்கின்றன. ஒரு தனிமனிதனின் கற்பனையில் தோன்றிய திட்டங்கள் என எதையும் ஒதுக்கிவிட முடியாது. சமுதாய முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்டு நாடு உயர்நிலை அடைய மக்களை விழிப்புணர்வு கொள்ளச் செய்து உலக அரங்கில் நம்நாடு தலைசிறந்து விளங்க இறைவனே அளித்த வரம் அல்லவா.

148. மு. வ. வின் தமிழ் நெஞ்சத்தில் வறுமை

பேரா. வெ. சாக்கன்
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
தூய நெஞ்சக்கல்லூரி
திருப்பத்தூர் வே.மா.

பண்பாளர், திறனாய்வாளர், மொழி ஆய்வாளர், சிறந்த எழுத்தாளராகிய மு. வரதராசனார் படைத்த இலக்கிய நூல்கள் பெரும்பாலும் சமூகத்திற்கும் இலக்கியத்திற்கும் மொழி வளர்ச்சிக்கும் பயன்படும் நோக்கிலே அமைந்திருக்கிறது. அவரது படைப்புக்களில் ஒன்றான தமிழ் நெஞ்சம் என்கிற நூலில் வறுமை என்கிற பகுதியை இக்கட்டுரை முன்வைக்கிறது.

வறுமையென்பது நாட்டிலுள்ள உழைக்கும் மக்கள் மத்தியிலும், சாதி, இடம், தொழில், பொருளாதாரம் இவற்றை மையப்படுத்தியும் பண்டு தொட்டு நிலவி வருகிறது. அந்த வகையில் புலவர்களும் பொதுமக்களும் வறுமையுற்று வாழ்ந்திருந்த நிலையினை இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது.

பழந்தமிழ்நாடு புலவரின் வறுமையைக் கண்ட நாடு. ஆயினும் புலவரின் வன்மையையும் அந்நாடு கண்டது. அதுவே நாகரிகம் வாழக் காரணமாக இருந்தது. புலவரின் வறுமை புரவலரின் நெஞ்சைக் கொல்லும் அளவுக்கு நாகரிகம் வளர்ந்திருந்தது. புரவலர்கள் செல்வர்களாகவும் அரசர்களாகவும் இருந்த காரணத்தினால் அவர்கள் தன் புகழைப் பறைசாற்றும் புலவர்களுக்கு உதவி செய்வதும் அவர்களுக்கு மரியாதை செய்வதும் மேலோட்டமாகப் பார்க்கும் போது வறுமை நிலையை ஒழிக்கும் நோக்கில் உதவி செய்வதாகத் தோன்றலாம். ஆனால் சற்று நுணுகி பார்ப்போமேயானால் வறுமையை வாழ வைத்தப் பெருமைக்குரியவர்களாக செல்வர்களையும் அரசர்களையும் கூற இடமுண்டு.

தனக்கு மிஞ்சியதே தானம்

குமணனைப் பாடிப் பெரும் பரிசில் பெற்றுக் கொணர்ந்த பெருஞ்சித்திரனார் தம் துணைவியிடம் உன்னை விரும்புவோர்க்கும் பொருள் கொடு. நீ விரும்புவோர்க்கும் பொருள் கொடு. உன் சுற்றத்தார்க்கும் கொடு. நம் பசி தீரப் பலநாள் கடனாகப் பொருள் கொடுத்தோர்க்கும் கொடு. என்னைக் கேளாமல் கொடு. யானும் கொடுப்பேன் நீயும் கொடுப்பாயாக. எல்லாக்கும் கொடு. வல்லவாறு திறம்பட வாழ்தலைப் பற்றி எண்ணாதே என்கிறார்.

"நின்நலத் துறைநர்க்கும் நீ நயந்துறைநர்க்கும்

பன்மாண் கற்பின்நின் கிளைமுதலோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பபை நல்கி யோர்க்கும்
இன்னோர்க்(கு) என்னாது என்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் பொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவெல் குமணன் நல்கிய வளனே" (புறம் 163)

இத்தகைய புலவர்க்கு எத்துணைச் செல்வம் நல்கினும் வறுமை தொலையுமோ? புலவரின் தாராள மனமும், பொதுமைப் பண்பும் வெளிப்பட்டாலும் வாழ்வை மேம்படுத்தவும், தொடர்ந்து வறுமையின் பிடியில் தன்னை உட்படுத்திக் கொண்டும் இருந்தமை வெளிப்படை. மற்றொரு நோக்கில், ஒரு அரசன் செய்ய வேண்டிய வறுமை ஒழிப்பு வேலைகளைத் தனது கவித்திறத்தாலும் நாவண்மையாலும் பெற்ற பொருட்களை இன்னார் என்று வரையறை செய்யாமல் கொடுக்கும் மனைவியையும் புலவர்கள் பெற்றிருந்தமையும், பெண்களுக்கு அத்தகைய உரிமைகளையம் பகிர்ந்து கொண்டவர்கள் புலவர்கள் என்பதும் வெளிப்படை.

கலை உள்ளம்

சுற்றிலும் உள்ளவர்கள் வயிறு காய தம் வயிறு மட்டும் குளிரும் நிலையைப் புலவர் விரும்புதலில்லை என்கிற நோக்கில் பார்க்கும் போது கலை உள்ளமென்பது இளகிய உள்ளமாகவும், தன் இன்பம் உலக இன்பம் என்ற பொதுநோக்கிற்குச் சொந்தக்காரர்களாகவும் புலவர்கள் திகழ்ந்துள்ளனர். ஆதலால் பெருஞ்சித்தரனார் வறுமையென்பதை வரவேற்றபடியே வாழ்தலில் இன்புற்றார் என்றும், வறுமை ஒரு பொதுநோய் அதனை விரட்டுவது நம் அனைவரின் பொறுப்பு என்பதை உணர்ந்தவராகவே பார்க்க முடிகிறது. பெருஞ்சித்திரனார் தனது வறுமை நிலை மாற பொருள் பெற்றுவந்தாரா அல்லது ஊரிலுள்ள பொதுமக்களின் வறுமைநிலை மாற பொருள் பெற்று வந்தாரா என்ற உணர்வும் எழுகிறது.

அறிவுநிலை

அறிவு என்னும் ஒன்றே மக்கட் பிறப்பின் சிறப்பியல்பு. மக்களாய்ப பிறந்தவர் அறிவைத் தேடி உழைத்தல் வேண்டும். பெற்ற அறிவைப் பிறர்க்கு அளித்தல் வேண்டும். அறிவின் பயனால் இன்புற வேண்டும். இதுவே மக்களின் வாழ்வு. இல்வாழ்வில் சீர்பெற்று வாழ்பவரே புலவர் பெருமக்கள். உலகம் திருந்திய அரசியல் பெறுமாகில் மக்கள் அனைவரும் இத்தகைய அறிவு வாழ்க்கை வாழ வல்லவர் ஆவர்.

அறிவு நிலை உழைப்பு, மூளை நிலை உழைப்பு என்கிற நோக்கில் உழைப்பைப் பார்த்தாலும் உடலுழைப்பைக் காட்டிலும் மூளையுழைப்பினர், செல்வாக்குப் பெற்றிருந்தனர். உடலுழைப்பினர் காலங்காலமாக கையேந்தி நின்றமையும், உழைப்பை மதிக்கும் அரசின்மையும் திருந்திய அரசு வாய்க்காமையும் உடலுழைப்பு பின்னுக்குத் தள்ளப்பட்டதின் காரணிகளாகப் பார்க்க இடமுண்டு

பசி வந்திட பத்தும் பறந்து போகும்

பலருக்கு புளி ஏப்பம், மற்றவருக்கு பசி ஏப்பம். பலர் உணவுண்டே சாகின்றனர். பலர் உணவின்றியே சாகின்றனர். இக்கருத்துக்களை ஆழமாக நோக்கின், பசி வந்தபின் உண்கிற அறிவுநிலையின்மையும், பசித்தவனுக்குப் பகிர்ந்தளிக்கும் தன்மையின்மையும் புலப்படும்.

அறிவுக்கலையை வளர்க்காமலும் பசிக் கொடுமையை அழிக்காமலும் மக்கள்தொகைக் கேற்றாற்படியே வயிற்றுக் கவலை உடைய மக்களின் எண்ணிக்கையும் வளர்ந்து கொண்டேதானிருக்கிறது. எதிர்காலத்தை நினைத்து பொருள் சேர்ப்பவர்கள் அவையன்றிப் பொருள் மீது பற்று வைப்பதனால் அதனைக் காக்க முற்படுகின்றனர். இவ்வாறு நூறு ஆண்டுகளுக்கும் மேலாக வாழ வகைசெய்யும் பொருள் சேகரிப்பும் ஒரு வேளை உணவின்றி வாடும் துன்ப நிலையும் ஒரே சமூகத்தில், ஒரே நாட்டில், ஒரே ஊரில் நடைபெற்றுக் கொண்டு தான் வருகிறது. இவற்றிற்கெல்லாம் காரணங்களாகக் கொடைப்பண்பு இல்லாமையும், சுயநலப் போக்கும் பொதுப் பண்பின்மையுமே ஆகும்.

உலகம் கொள்ளல் கொடுத்தலால் அமைந்தது. கொல்லன் கருவிகள் செய்து தருதலால் உழவன் அவனுக்கு நெல்லும் வரகும் விளைத்துத் தருகிறான். நாட்டில் குழப்பம் விளைவிக்காமல் ஆள்வான் என்று குடிமக்கள் அரசனுக்கு இறை செலுத்துகின்றனர். குடிகள் ஆறில் ஒன்று தருவர் என்று தலைவன் ஆளும் பொறுப்பை ஏற்று நடத்துகிறான். இதுவே உலகில் உள்ள உழைக்கும் மக்களிடமிருந்து ஆறிலொன்றை இறையாகப் பெறுகிற வழக்கம் உலகம் முழுவதும் இருந்தமை தெரிகிறது. இந்த கொள்கையை ஏற்றுக் கொண்ட மு.வ. ஆளும் அரசுக்கும், உலக முதலாளி வர்க்கச் சமூகத்திற்கு ஆதரவாகவும், ஏழை விவசாய தொழிலாளர்க்கும், உழைப்பாளர்களுக்கும் ஆதரவளிக்காதவராகவும் தெரிகிறார்.

இங்கே ஒரு கொள்கை புலப்படுகிறது. உழைப்பவன் உழைத்துக் கொண்டே இருத்தல் வேண்டும் என்கிற நிலையை நிலைப்படுத்தும் போக்கு தெரிகிறது. மேலும் யாரெல்லாம் உழைத்தார்கள், யாரெல்லாம் உழைக்காமல் இருந்தார்கள் என்கிற நிலையும் [illegible] மாறாக சாதி

அடிப்படையிலும், தொழிலடிப்படையிலும், மக்களைப் பிரித்தாண்ட அரசுகளுக்கு ஆதரவாகவே மு.வ.வின் எண்ணவோட்டங்கள் தென்படுகிறது.

உலக வளர்ச்சி

உலக வளர்ச்சிப் பரப்பானது முறையும் ஒழுங்கும் பெற்றது. இயற்கையன்னை தந்தருளும் வளம் அனைவருக்கும் பொது என்று உணரும் உணர்வு அரும்புவதற்கு முன் உழைப்பின் பயனெனக் கிடைத்ததை உரிமையுடையவரும் சேர்த்து வைத்தனர். உரிமையில்லாதவரும் சேர்த்து வைத்தனர். முன்னவர் காலமெல்லாம் உழைப்பில் கழிக்க பின்னவரோ சேர்த்து வைக்கும் முயற்சியில் காலம் போக்கித் திறமும் பெற்று வென்றனர். அவர் தம் தன்னலம் பலவகையால் வளர்ந்தது அவர் பெட்டியும் பேழையும் செய்து பூட்டும் தாழும் கொண்டனர். காவல் முறைகண்டு கூலியாள் அமைத்தனர். சட்டம் இயற்றி நிதி முறை கண்டனர். படையும் முடியும் படைத்து அரசைக் கைப்பற்றினர்.

உழைப்பவன் ஓரங்கட்டப்படுவதும், உழைப்பைச் சுரண்டுபவன் ஆட்சியமைப்பதும் பண்டைக் காலந்தொட்டே இருந்ததைப் பதிவு செய்கிறார். மு.வ. இவற்றை நோக்குங்கால் உழைப்பு என்கிற நிலை உலகை இயங்க வைத்துக் கொண்டு வந்தமை தெரிகிறது. மாறாக உழைப்பை ஏமாற்றும் கயமை அறிவு பெற்றவர்கள் சமூகத்தில் உயர்ந்த நிலையடைந்தனர் என்பதும் புலப்படுகிறது.

சோழன் குலமுற்றத்து துஞ்சிய கிள்ளி வளவன் தன் காலத்தில் புகழ்பெற்று விளங்கிய கொடையாளி - பசிப்பிணி மருத்துவன் - பண்ணன் என்பவனைக் காணச்சென்றான். தனக்கென வாழாப் பிறருக்குரியாளன் என்ற அழகிய தொடரால் கொற்றங்கொற்றனார் என்ற புலவரால் பாராட்டப் பெற்றவன் இப்பண்ணன் பண்ணனது இருப்பிடத்திற்கு நெடுந்தொலைவில் இருந்தபோதே பழம்மிக்க மரத்தில் பல்வகைப் பறவைகளும் இருந்து ஒலித்தார் போன்று உணவு பெறுவார் செய்யும் ஆரவாரவொலி கேட்டது. சிறிது அப்பால் சென்றதும் சிறுவர் பலர் சோற்றுத்திறளைக் கையில் ஏந்தி வேறுவேறாக நிரல் நிரலாகச் செல்லும் காட்சியைக் கண்டான்.

சோழன் கிள்ளிவளவன் பசி நோய்ககு மருந்து நல்கும் பண்ணன் இல்லம் எங்கு உள்ளது எனக் கேட்டான். பசித்துன்பத்தால் வயிறே வயிறே என்று வயிற்றுக் கவலையால் வாடும் மக்களின் நிலை அவனது உள்ளம் கசிந்துருகச் செய்தது. ஆதலின் அந்நிலையில் வாடும் மக்களிடையே இருந்து அவர்தம் துன்பம் தீர்க்கும் பசிப்பிணி மருத்துவனை நினைத்து நினைத்து வாழ்த்தலாயினான்.

தன் வாழ்நாளில் எஞ்சிய பகுதி எல்லாம் பண்ணனே கொண்டு

நெடிது வாழ்ந்து நாட்டிற்கு நலம் செய்ய வேண்டும் என வாழ்த்தினான்.

"யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ செய்த்தோ கூறுமின் எமக்கே" (புறம். 173)

சிறியவர் முதல் பெரியவர் வரை மன்னனிடம் சென்று சோற்றுத்திரலோடு வந்தனர் எனும் போது வயிற்றுக் கவலையால் இளம் வயதினரும் அரசனின் கையையோ (அல்லது) செல்வர்களின் கையையோ நம்பி எதிர்பார்த்து வாழ்ந்தமையும், அச்சிறுவர்கள் எதிர்காலத்தில் சுயமாக உழைத்து வாழும் போக்கிற்கு இடம் தராத வகையிலும் சங்க காலச் சமுதாய மக்கள் நிலை இருந்துள்ளது.

ஒரு சமூகத்திற்கு உழைப்போ, கல்வியோ, வேலையோ தராமல் அச்சமூகத்தை ஆளும் அரசன் தன்னைச் சூழும் படியே வைத்திருத்தலும் அவர்களுக்கு எசமானனாகவே தன்னை நிலை நிறுத்திக் கொள்ள மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகவே மேற்குறித்தவை தெரிகிறது.

எனவே ஒரு சமூகத்தை ஆளும் அரசன் குடிமக்களுக்கு ஒரு வேளை உணவளிப்பதும் பரிசுப் பொருட்கள் வழங்குவதும் மேலோட்டமாகப் பார்க்கும் போது சமூகத்தைக் காப்பாற்றுவதாகத் தெரியலாம். ஆனால் ஒருவனுக்கு உணவு அளிப்பதை விட அவ்வுணவை அவனே உழைத்து உண்ணுகிற நிலைக்கு கொண்டுச் செல்கிற அரசனே சமூக முன்னேற்றத்திற்குப் பாடுபடும் அரசனாவான். நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களையும் பேணி காக்கிற அரசியல் கட்டமைப்பு சங்க காலந்தொட்டே இல்லையென்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

149. மு. வ. வின் அகல்விளக்கு நாவலில் மொழிநடை உத்திகள்

த. ராஜன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி
பெரம்பலூர்

புதின இலக்கியத்தில் படைப்பாளரின் திறமையை வெளிப்படுத்தும் தன்மைகளில் மொழிநடை உத்திகளுக்குச் சிறப்பான இடம் உண்டு. ஒருசில பக்கங்களைப் படித்தவுடன் இது இவருடைய படைப்பெனும் அடையாளத்தைக் காண்பித்து இனங்கண்டுகொள்ளச் செய்வது இதன் தனிப்பண்பாகும். சின்னஞ்சிறு வாக்கியங்கள், உள்ளத்தில் இருக்கும் சிந்தனைத் தெளிவை அப்படியே பிரதிபலிக்கும் தொடரமைப்புகள் , சிக்கலான செய்திகளைப் போகிற போக்கில் எளிமையாகப் புரியவைத்துவிடும் பண்பு இவையே மு. வரதராசனாரின் இலக்கியப் படைப்புகளின் பண்பாகும்.

தனிப்பட்ட உணர்வும், பார்வையும் ஒரு தனிப்பட்ட மொழிநடையைத் தோற்றுவிக்கும். அப்படித் தோன்றும் தூய்மையான நடை றுதியாகத் தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கும்.

"ஒரு ஆசிரியனின் தனித்தன்மையை அழகுற வெளிப்படுத்த வல்லது நடை'' ஒரு நல்ல ஆசிரியரை நடைவாயிலாக நாம் இனங்கண்டுகொள்ளலாம்.

"நடை என்பதற்கு எழுத்தில் ஒருவர் தனக்கென்று ஏற்படுத்திக் கொண்ட பாணி என்பது எல்லோரும் அறிந்த பொருளாகும்".

நடை என்பது தனித்தன்மையை, அடையாளத்தைத் தீர்மானிக்கக் கூடியதாகும் ஆளுக்கு ஆள் மாறுபடக்கூடியது. படைப்பாளன் கதையை அல்லது கட்டுரையை எப்படிக் கூறிச் செல்கிறான் என்பதை உற்று நோக்கினால், அவனது நடை புலப்படும்.

"உரை வகை நடையே நான்கென மொழி
விருத்தியாகும் விகற்ப நடைபெறுமே''

என்பதிலிருந்து செய்யுளுக்கும், உரைநடைக்கும் மொழிநடை இன்றியமையாததாகிறது என்பது புலப்படும்.

"இடைதெரிந்து நன்குணர்ந்த சொல்லுக சொல்லின்
நடை தெரிந்தன்மை யவர்''

என்று வள்ளுவப் பெருந்தகை நடையைப் பற்றிக் கூறுகிறார்.

"நடையென்பது ஒவ்வொருவனுடைய இலக்கியப் பயிற்சிக்கும், சிந்தனைத் திறனுக்கும், கற்பனை வளத்திற்கும் ஏற்ப அமைந்திருக்கும்" ன்று கைலாசபதி கூறுவதிலிருந்து நடை அவரவர் கற்பனைக்கும், சிந்தனைக்கும் ஏற்ப மாறுபடும் என்பது தெளிவாகிறது.

மு.வ. உவமைகள் வாயிலாகத் தாம் கூற நினைக்கும் கருத்தை வாசகனுக்கு உணர்த்துவதில் வல்லவர். செய்திகைக் கூறும்போது கதைமாந்தர்களின் வாயிலாக நல்ல கருத்துக்களையும், வாழக்கைக்குப் பயன்படக்கூடிய அறங்களையும், மானுட, சமுதாய மதிப்பீடுகள் பற்றிய உணர்வுகளையும் வெளிப்படுத்தக்கூடியவர். நாவலிலும் உத்திமுறைகளிலே மரபு வழிகளை மதிப்பவர். இவரது நாவலில் பொருள், உத்தி, அணுகுமுறை முதலியவற்றைக காணலாம்.

"மாலன் மூன்று ஆண்டுகளாகப் பழக்கமானவன் என்றும், ஒரு கெட்ட பழக்கமும் இல்லாதவன் என்றும், எப்படியாவது முன்னேற வேண்டுமென்ற ஆசை உடையவன் என்றும், ஆனால், பலவகை மூட நம்பிக்கைகள் உடையவன் என்றும், சோதிடத்தில் பற்று மிகுந்தவன் என்றும் எழுதினேன்".

மால் என்றாலே மயக்கம் என்று பொருள். மூட நம்பிக்கைகளுக்கு இறையாகிச் சமயத்துறையில் மயக்கமே வடிவாக அமைந்தவன் மாலன்.. ஒன்றைப் பிறிதொன்றாக நினைப்பதே மயக்கம், பல்லி சொற்பலனையும் நம்பி, பிரார்த்தனை உண்டியல்களை நிரப்பி, மாய மந்திரவாதிகள் பின்னாலோ அலைந்து இவையெல்லாம் கடவுள் பக்தி என்று மயங்குவது பொருந்தாது. கடவுளின் அருளை இந்த வழிகளில் பெற முடியும் என்று நம்புவது வீண் என்று கூறியுள்ள மு.வ., எது வழிபாடு, எதற்கு வழிபாடு, எப்படி வழிபாடு என்பதையும் வலியுறுத்தியிருக்கிறார்.

உத்திகளின் வகைகள்

படைப்பாளன் தமது படைப்பிலக்கியத்தைத் தொடங்கும்போது பலவகையான உத்திகளைக் கையாளுகிறான். இலக்கியத்தில் நிகழ்ச்சியை முதலில் இருந்து தொடங்குதல், இடையில் உள்ள நிகழ்ச்சியைக் கொண்டு வந்து தொடக்கமாக அமைத்தல், இறுதி நிகழ்ச்சிகளைத் தொடக்கமாக அமைத்து எழுதுதல் போன்றவை உத்தி எனப்படும். முன்னோக்கு உத்தியை இன்று பெரும்பான்மையான நவலின் தொடக்கத்திற்கு நாவலாசிரியர்கள் கையாளுகின்றனர்.

"உத்தி என்பது படைப்பான் தாம் கூற வந்த செய்தியான உள்ளடக்கத்தை வெளிப்படுத்தும் முறையே எனலாம்".

"ஒரு கலைஞன் தன் கதையில் சொல்லிய வெளியீட்டிற்கும்

பயன்கொள்ளும் ஆற்றலும் மெய்ப்படுத்தும் முறையே எனலாம் என்பர் ச.வே. சுப்பிரமணியன்".

உத்தியை ஆசிரியர் வெளிப்படுத்தும் முறையை வைத்து வகைப்படுத்தலாம். உவமை, உருவகம், படிமம், குறியீடு, இருண்மை, நனவோடை, கடிதம், அங்கதம் என அது பலவகைப்படும். உத்திகளின் வகையும், தொகையும், நிலையும் காலந்தோறும் மாறுபடுவன. படைப்போருக்கு ஏற்பவும், பாடலின் நோக்கம் போன்றவற்றிற்கு ஏற்பவும் வேறுபடக்கூடியது. கலைஞனின் ஆற்றலும் தனித்தன்மையும் புதிய உத்திப் பெற்ற பயன்பாட்டைத் தரக்கூடியது என்று டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் கூறுகிறார்.

நனவோடை உத்தி

நனவோடை என்பது ஆங்கிலச் சொற்றொடரின் நேர்சொற்பொருள் ஆகும். ஒரு ஆணும், பெண்ணும் பருவகாலத்தில் வெளிப்படையாக அளவளாவிப் பழகுவது நம்நாட்டில் குறைவுதான் எனினும் நகர வாழ்விலும், கல்லூரிச் சூழல்களிலும் இத்தகைய வாய்ப்பை இன்றைய சமுதாயம் உருவாக்கி வைத்திருக்கிறது.

"இமாவதி உண்மையாக நல்ல பெண்ணாகவே இருக்க வேண்டும். சந்திரனிடத்தில் அன்பு மிகுந்த பெண்ணே தான்" என்று கூறுவதிலிருந்து குமரப்பருவத்து ஆண்களும் பெண்களும் இப்படி பழக நேரிடும்போது 'காதல்' ஏற்பட இடமுண்டு என்பது உண்மைதான். எனினும், பழகுதலையும், அளவாளவுதலையுமே காதலாக எண்ணி வீணாகும் வாழ்க்கைகளும் உண்டு. இதனைத் சந்திரன் - இமாவதி பழக்கத்தைக் காட்டி விளக்குகிறார்.

"ஆண் பிள்ளைகளோடு பழகுவதில் மிக மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் உன் வாழ்வோ, தாழ்வோ அதை ஒட்டித்தான் இருக்கிறது, பருவ உணர்ச்சி பொல்லாதது".

வாழ்க்கைக்கு அடிப்படையான காதலில் திருமணப் பேச்சில் மட்டும் வெளிப்படையாய் பேசி விளக்குவதில்லை என்பதை இமாவதியின் அனுபவம் விளக்குகிறது.

உவமை

எங்கோ, என்றோ, எந்நிலையிலோ கண்ட ஒரு பொருளின அழகு படைப்பாளரின் உள்ளத்தில் ஆழப்பதிந்துள்ள நிலையில் பிறிதொரு நாளில் மற்றொரு சூழ்நிலையில் இன்னொரு அழகைக் காணும்போது அதன் அழகு முன் ககண்டு பதிந்துள்ள அழகை நினைவூட்டுகிறது. அழகின் ஒப்புமையால், அந்த இருவேறு பொருளும் படைப்பாளனின் உள்ளத்தில்

அதிலிருந்து உறவுகொள்கின்றன. இதுவே உவமையின் பிறப்பாகும்.

"சிறப்பே நலனே காதல் வலியோடு
அந்நாற்பண்பு நிலைக்களன் என்ப"

என்று தொல்காப்பியர் உவமையின் நன்மையைக் குறிப்பிட்டுள்ளார். சிறப்பு, நலன், காதல், வலி என்னும் நான்கின் அடிப்படையில் உவமை தோன்றும். மேலும்,

"எக்காலத்து இலக்கியமாயினும் அதனுடைய அழகை உணர்த்துவது உவமையாகும்" என்னும் கூற்றுக்கேற்ப புதின ஆசிரியர்கள் தங்களது படைப்பிற்கு ஏற்றவாறு கதை, கருப்பின்னல்களை அமைத்து தன் உள்ளத்து எழுச்சிகளுக்கு உணர்வூட்டி கற்பனை உணர்ச்சி வடிவம் போன்றவற்றை நயத்தோடு படைத்துக் காட்டுவர்.

'அகல்விளக்கு' நாவலில் மு.வ. அவர்கள் சில இடங்களில உவமையைக் கையாண்டு தான் சொல்லவந்த கருத்தினை நயம்படக் கூறியுள்ளார். சந்திரனும், வேலயனும் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பியபோது, வழியில் நெல்லிக்காய் விற்பதைக் கண்டார்கள், சந்திரன் கையில் கொடுத்து, சந்திரனுடைய முகத்தைப் பார்த்து புன்முறுவல் செய்தான், இச்செய்தியை நாவலாசிரியர்,

"உன்னைப்போல் எவ்வளவு அழகாய் இருக்கிறது
பார் இந்த நெல்லி"

என்னும் வரிகளில் சந்திரனுடைய அழகை நெல்லிகாய் விற்கும் பெண் கூறுகிறார். சந்திரனுக்கும், நெல்லிக்காயின் அழகுக்கும் இடையில் உள்ள 'போல' என்ற உவமைச் சொல்லைப் பயன்படுத்திக் கூறியுள்ளார்

கற்பனை

கற்பனை இல்லையேல் புதினம் சிறக்காது. படிப்போருக்குச் சலிப்பூட்டும் தன்மை ஏற்படாமலிருக்க ஆசிரியரின் கற்பனை வளம் மிகவும் இன்றியமையாததாகிறது. புதினத்தின் இன்றியமையாத கூறுகளுள் கற்பனையும் ஒன்றாகும். ஆசிரியர் தான் அனுபவித்த நிகழ்ச்சியையோ, கண்டு கேட்ட சுவையான அனுபவத்தையோ தனது கற்பனைக்கு உணர்வூட்டிப் படைத்துக் காட்டுவர். கற்பனையின் உச்சமே படிப்பவரின் எண்ணங்களை நெகிழச் செய்து மகிழ்ச்சியூட்டும்.

"உயர்ந்த கலைஞர் தம் கற்பனையில் உயர்வான
மக்களையெ சிறப்புறப் படைத்துக் காட்ட முயல்வார்கள்"

என்று கூறுவதிலிருந்து சிறந்த பாத்திரப் பண்பாளர்களின் மூலம், சொல்ல நினைத்த எண்ணங்களுக்கு உயிர் கொடுத்த நல்ல கருத்துக்களையும்

வெளிப்படுத்தி இருப்பதை,

“சந்திரனுக்கும், மாலனுக்கும் ஒரு வகையில் வேறுபாடு கண்டேன், சந்திரன் புறம்பான வழிகளில் ஈடுபட்டுப் படிப்புக்கு உரிய கடமைகளால் புறக்கணித்தான் மாலனோ படிப்புக்காகவே பல குறுக்கு வழிகளை நாடினான். ஆகவே, மாலனோடு பழகுவதால் படிப்புக் கெடாது என்ற நம்பிக்கை ஏற்பட்டது”.

என்று கூறுவதிலிருந்து மு.வ. தான் எண்ணிய சிந்தனைகளை உணர்ச்சியுடனும், கற்பனை கலந்தும் கூறியுள்ளார் என்பது தெளிவாகிறது.

வருணனை

படைப்பாளி இடத்தை, சூழலை விளக்குவதற்கும், வாசகர்கள் கதையோடு ஒன்றுவதற்கும் வருணனை உதவுகிறது. இயற்கைப் பொருட்கள், செயற்கைப் பொருட்கள், கதைமாந்தர்களின் செயல்கள், உணர்வுகள், ஆகிய குறித்து வருணனை இடம் பெறுகிறது.

“புலன்களால் உணர்வனவற்றை அல்லது
புலன்களின் வாயிலாக உணரும்
புறக்காட்சிகளைச் சொற்களின் மொழி
பெயர்த்துத் தருவதே வருணனை ஆகும்”

என்ற கருத்து வருணனை குறித்து விளக்கமளிக்கிறது.

“கடல் வளம் முதல் மலை வளம் வரையில். சிந்திரையிடை வேளில் முதல், மார்கழியின் பனி வரையில், தொண்டை நாட்டின் சிறு வறட்சி முதல் நீலகிரியின் பெருவளம் வரையில் எல்லாம் கலந்து மனித வாழ்வை இனிக்கச் செய்யும் பெருமை தமிழ்நாட்டுக்கு இருப்பதை எண்ணிப் பெருமிதம் உற்றேன்”.

மேலேகண்ட கருத்துக்களின் மூலம் மு.வ. அவர்கள் தாம் சொல்ல வந்த கருத்தை மிகத் தெளிவாகச் சொல்ல அவரது மொழிநடை அமைப்புப் பெரிதும் உதவியுள்ளதைக் காணமுடிகின்றது. இந்நடை அமைப்பே மற்ற படைப்பாளர்களிடம் இருந்து மு.வ. வினை தனித்து அடையாளம் காட்டும் தன்மையுடையதாகவும் விளங்குவதாக அறியமுடிகின்றது.

150. முனைவர் மு. வ. வின் 'நல்வாழ்வு' - சிந்தனைகள்

கு. சபரிமலை
தமிழ்த்துறை
மௌண்ட் செயின்ட் ஜோசப் மெட்ரிக் மேனிலைப்பள்ளி
திருவண்ணாமலை.

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர். மு. வரதராசனாரின் சீரிய தொண்டு முதன்மையான இடம் பெற்றதாகும். அவர் ஈடு இணையற்ற பெரும் எழுத்தாளராக விளங்கினார். உலகத் தமிழர்களின் உள்ளங்களைக் கவர்ந்த முதல் தமிழராக அவர் திகழந்தார் மு.வ என்ற செல்லப் பெயர் ஒலிக்காத தமிழ் இல்லங்களும் நல் உள்ளங்களும் இல்லை எனலாம்.

தமிழ் இலக்கியத் துறையில் தலையாய தொண்டாற்றிய மு..வ.வின் நல்வாழ்வு' - என்ற கட்டுரைத் தொகுப்பிலிருந்து பின்வரும் சிந்தனைகளை காண்போம்.

பொருளுரை

1. வழிபாடு

வாழ்க்கையின் முதலும் முடிவும் கடவுளைச் சார்ந்தவை என்று தெளிந்து அந்த வழியில் சிந்தையைச் செலுத்துதலே வழிபாடு ஆகும் என்கிறார் மு.வ. ஒரு பரம்பொருள் உண்டே தவிர வெவ்வேறு தெய்வங்கள் இல்லை என்ற தெளிவு வேண்டும். இரண்டு. மூன்று. ஏழு, எட்டு என்ற அளவில் தெய்வங்கள் பல இல்லை என்றும் வெவ்வேறு வடிவங்கள் கூறப்படும் நிலையிலும் அவை எல்லாம் ஒரே பரம்பொருளுக்குக் கூறப்பட்ட பல வடிவங்களே என்றும் உணர வேண்டும் என உணர்த்துகிறார்.

கடவுள் எல்லா உயிர்களின் வாழ்வுக்கும் பொதுவான திட்டங்கள் வகுத்தும் பொதுமையான ஆட்சிபுரியும் ஒரு பெரும் சக்தி என்று உணர வேண்டும் என்கிறார்.

"நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாது ஒருபோதும் இருந்தறியேன்"

என்று திருநாவுக்கரசரும்

"நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம அன்பே
மஞ்சன நீர் பூசை கொள்ள வாராய் பராபரமே"

மஞ்சன நீர் பூசை கொள்ள வாராய் பராபரமே"

என்று தாயுமானவரும்

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில் புகும் அரசே"

என்று இராமலிங்க அடிகள் பாடிய பாடல்களை உணர்ந்து அன்பை வளர்த்த வழிபடவேண்டும் என்று கூறி உண்மை தெளிந்த சான்றோர்களின் வழியில் கடவுளின் ஆட்சி முறையை உணர்வதே மெய்யுணர்வாகும் எனக்கூறி நாள்தோறும் காலையில் கடமைகளைத் தொடங்குவதற்கு முன்பும் இரவில் கடமைகளை முடித்த பிறகும் அமைதியாக உட்கார்ந்து கண்மூடி மனத்தை ஒருமைப்படுத்தி வழிபடல் வேண்டும். அவ்வாறு செய்தால் மனசிற்கு அமைதியும் ஆற்றலும் கிடைக்கும் என்று மு.வ. அவர்கள் எடுத்துரைக்கின்றார்.

இதன் மூலம் 'இறைவன் ஒருவனே' எனும் கொள்கையும், 'ஒன்றேயென்னின் ஒன்றெயாம்' என்ற கம்பனின் கடவுள் வாழ்த்தும், ஒன்று ஒன்று தெய்வம் ஒன்று, உலகின் தெய்வம் ஒன்று என்ற கவியரசரின் கூற்றும் பொருந்து'தை உணரலாம்.

2. நம்பிக்கை

பல வகையிலும் முன்னேறியுள்ள இந்தக் காலத்தில் வாழும் வழி மட்டும் இல்லாமல் அலைகிறான் மனிதன். சயன்ஸ் என்னும் அறிவியல் துறையின் வளர்ச்சியால் கருவிகளைப் பெருக்கிக் கொண்டோம். வேகத்தை வளர்த்துக்கொண்டோம். ஆனால், நன்றாக வாழக் கற்றுக் கொள்ளவில்லை என்று வேதனைப்படுகின்றார் டாக்டர் மு.வ.

அன்பு இல்லாத ஒரு குடும்பத் தலைவரை மனைவி மக்கள் நம்பி வாழ்க்கை நடத்த முடியுமா?

நாட்டினிடத்திலும் மொழியினிடத்திலும் அன்பு இல்லாத மக்களைக் கொண்டு நல்ல ஆட்சி நடத்த முடியுமா?

உண்மை இல்லாத தொழிலாளிகளைக் கொண்டு ஒரு தொழிற்சாலையை வளம்பெற நடத்த முடியுமா?

நேர்மை இல்லாத அறிவாளிகளைக் கொண்டு ஓர் அலுவலகத்தைச் செம்மையாக நடத்த முடியுமா?

ஆகவே, அன்பு, உண்மை நேர்மை முதலியவை இந்த வாழ்க்கைக்குத் தேவையானவை என்பதை எல்லோரும் உணரவேண்டும் என்பதை அறிவுறுத்துகிறார். அறநெறியில் - நல்வழியில் - பலர்க்கு நம்பிக்கை ஏற்பட்டால் தான் இயல்பான நிலைமை ஏற்படும் என்று விடையும் கூறுகிறார்.

நம்பிக்கை வைத்து அவரவர் செயல்பாடுகளை முறையாக செய்தால் நம்பிக்கையொடு மனித ஆற்றல் வளரும் என்பது இக்கட்டுரை மூலம் உணரமுடிகிறது.

3. உடம்பைப் போற்றல்

கடவுள் ஒவ்வொருவருக்கும் ஓர் உடம்பைத தந்து உடம்புக்குள் நல்ல பண்புகளைப் படைத்து மனத்தையும் படைத்திருக்கிறார்.

உண்ணும் உணவில் அளவு வேண்டும்.

உழைக்கும் உழைப்பில் அளவு வேண்டும். நெறிவேண்டும் உறக்கத்திலும் அளவு வேண்டும்.

புலன்களைக் கொண்டு இன்பம் நுகர்வதிலும்

அளவு வேண்டும், நெறி வேண்டும்.

மனம் போனபடி உண்டு உறங்கி இன்பம் நுகர்ந்தால் சில காலம் உடம்பு. நல்லபடியே இருப்பதுபோல் தோன்றும். பிறகு நோய்கள் தலைபெ டுககும். அதனால் உடம்பை வாட்டும் உள்ளத்தை வாட்டும் என எச்சரிக்கிறார் டாக்டர் மு.வ.

'நோயற்ற வாழ்வே - குறைவற்ற செல்வம்' - ஆகையால இன்ப அலைச்சலைக் குறைத்துக்கொண்டு உடம்பு துனபுறாத வகையில் காப்பதே அறிவான வாழ்க்கை ஆகும். உடலுக்கு ஏற்ற வகையான உணவினை உண்டு வாழ வேண்டும் திருவள்ளுவர் நிறைய உண்பதால் நோய் வரும் என்றும், குறைய உண்பதால் இன்பம் பெருகும் என்றும் கூறி

"இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்"

என்று வள்ளுவரின் குறள் மூலமாக அறிவுறுத்துகிறார் மு.வ. அவர்கள்.

இதன் மூலம் இறைவன் கொடுத்த உடம்பிற்கு மனிதர்கள் நோய்க்கு இடம் தராத வகையில் அதை முறையாகப் பயன்படுத்தி வாழ்ந்தால் நல்வாழ்வோடு வாழலாம் என்ற உறுதிப்பாட்டை டாக்டர். மு.வ. விளக்குகிறார் என்பது புலப்படுகிறது.

4. எளிமை ஓர் அறம்

குடும்பத்தில் வாழ்ந்துகொண்டே செல்வத்திற்கு இடையில் இருந்தபடியே பற்றுக் குறைந்தவர்களாக வாழந்தால் போதும். அவ்வாறு எளிய வாழ்க்கை நடத்துவோர் துறவிகளுக்கு நிகரானவர்கள்.

எளிமையும், சிக்கனமும் தொடர்பு உள்ளவை. ஆடம்பரமும்

திருட்டும் உறவு உடையவை. காந்தியடிகள் மிக எளிய வாழ்க்கை வாழ்ந்த சான்றோர் என்பது உலகறிந்த செய்தி. அவர் எளிமையை ஓர் அறமாகப் போற்றிய அவருடைய மனம் அதற்குச் சிறிதும் இடம் தரவில்லை ஆடம்பரத்தைப் பாவம் என்று கருதியவர் அவர்.

இலங்கையைக் கடக்க முயன்றபோது ஓர் அணில் கடல் நீரில் நனைந்து மணலி-ல் புரண்டு உடலில் ஒட்டிய அந்த மணலைக் கடலில் விட்டு மறுபடியும் மறுபடியும் அவ்வாறு செய்து இராமனுக்கு உதவ முயன்றதாகக் கூறுவார்கள். அது கதைதான். அணில் அவ்வாறு உணர்ந்து செய்ய முடியாது. அது கற்பனையே. ஆனால் அந்தக் கதையில் ஓர நீதி உள்ளது. ஒவ்வொருவரும் அவரவரால் இயலும் அளவுக்கு நல்வழியில் தொண்டு செய்து உலகத்திற்கு உதவ வேண்டும் என்பதே அந்த நீதி ஆகவே பொருனை உதவித் தருமம் செய்ய இயலாவில்டாலும் எளிய வாழ்க்கை ஆடம்பரத்தைக் குறைக்க முயல வேண்டும்.

'வேண்டின் உண்டாகத் துறக்க' என்கிறார் வள்ளுவர். துறவு என்றஅளவுக்குப் போக வேண்டாம். எளிமை என்ற அறத்தைப் போற்றினாலும் போதும். ருஷ்ய ஞானி டால்ஸ்டாய் காட்டிய வழி அது என்று எளிமையை எளிமையாகக் கூறி வியக்க வைக்கிறார் டாக்டர் மு.வ.

5. மன வலிமை வேண்டும்

நம் வாழ்க்கையில் மூன்று கூறுகள் உள்ளன. ஒன்று உலகத்தால், சுற்றுப்புறத்தால், அமையும் வாழ்க்கைப் பகுதி. மற்றொன்று உடம்பால் அமையும் பகுதி இன்னொன்று மனத்தால் அமையும் பகுதி.

பெரும்பாலோர் உலகத்தை, சுற்றுப்புறத்தை திருத்துவதில் முனைந்து இருக்கிறார்கள். உடம்பைத் திருத்துவதில் சிறு முயற்சியே செய்கிறார்கள். மனைத்தைத் திருத்துவதற்கு முயற்சி செய்வதில்லை. இது தலைகீழான நிலை. உலகத்தைத் திருத்த முயலக் கூடாது என்று சொல்லவில்லை. அது எளியது என்று தப்புக் கணக்கு இட்டு ஏமாறக் கூடாது என்பதே கருத்து. உலகத்தையும் உடம்பையும் திருத்துவதை விட இவ்வாறு மனத்தைப் பண்படுத்துவதுதான் கருதியபடி மகைமுடுவது என்பதை உணரவேண்டும் என்கிறார் டாக்டர் மு.வ.

பரிபாடல் என்ற பழைய நூலில் ஒரு புலவர் கடவுளிடம் தம் வேண்டுகோளைச் சொல்லி முடிக்கும்போது "ஐயனே! உன்னிடம் யான் வேண்டிக் கேட்பவை பொன்னும் பொருளும் போகமும் அல்ல. அன்பும் அருளும் அறமுமாகிய இந்த மூன்றையுமே கேட்கின்றேன்" என்கின்றார்

'யா அம் இரப்பவை
பொருளுமன் பொன்னும் போகமும் அல்ல

அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருகுளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே'

இவ்வாறு அவர் வேண்டிக் கொண்டதன் அடிப்படையை மு.வ. எடுத்துரைக்கின்றார். நம் ஆத்திரம், கோபம் முதலிய தீய இயல்புகளைப் பற்றிக் காலையில் வழிபாட்டின்போது நினைத்து உறுதிகொள்ளும் அன்றாடப் பயிற்சியும் பயன்தரும். செய்த தவறுகளுக்காக மனம் வருந்தி நாட்குறிப்பு எழுதும் பயிற்சியும் பயன்தரும். இவை எல்லாம் படிப்படியே மனவலிமை வளர்வதற்கு உதவி புரிவன என்கிறார் டாக்டர் மு.வ.

முடிவுரை

உலகம் சுற்றிய முதல் தமிழப் பேராசிரியரும். பன்மொழிப் புலவருமான டாக்டர் மு.வ. கூறும் நல்வழி செய்திகள்.

1. இறைவன் அவரவர் பார்வையில் பல வடிவங்களாக இருந்தாலும் 'ஒருவனே' - அவன் எனக் கூறி, வழிபாட்டில் ஆடம்பரங்கள் கூடாது என அறிவுறுத்துகிறார். மனிதன் மாண்புற வாழ வழிபாடு அவசியம் என தெளிவாக உள்த்துகிறார்.
2. மனிதர்கள் தனக்குரிய உடமைகளை முறையறிந்து நம்பிக்கையோடு செய்தால் மனித ஆற்றல் சிறந்தோங்கும் என்பத டாக்டர். மு.வ. அவர்களின் நம்பிக்கையான கருத்தாகும்.
3. உடல்நலம் பேண வேண்டும் என்பதில் அளவறிந்து உண்ணுதல் வேண்டும் எனவும் உடலுக்கேற்ற உணவினை உண்ண வேண்டும் எனவும் மருத்துவர் கூறும் ஆலோசனை போல நமக்கு அறிவுறுத்துகிறார்.
4. எளிமையான மனிதரை அனைவரும் போற்றுவர் என்பதற்கு டாக்டர் மு.வ. காந்தியடிகளை உதாரணம் காட்டி விளக்குகிறார். ஆடம்பரம் மனிதனை முகவரி இழக்கச் செய்திடும் என்று உணர்த்தும் விதம் அழகானது.
5. மன வலிமை மனிதனுக்கு அவசியமான நிலைகளில் ஒன்றாகும். 'மனமே சகல சக்தியும்' என்பது மனோன்மணீயம் சுந்தரனார் வாக்கு எண்ணியது முடிய, நன்மை நிலைத்திட, உறுதி கொண்ட மன வலிமை வேண்டும் என்று உறுதிபட கூறுகின்றார்.

'தமிழால் மு.வ. தகுதி பெற்றதும்
மு.வ.வால் தமிழ் தகுதி பெற்றதும்'

எப்படி சொல்ல முடியும்? தமிழுலகின் தன்னகரில்லா தலைமகனைப் பெற தமிழுலகம் என்ன தவம் செய்தோ! என்று எண்ணினால் பெருமை நமக்குத்தான். வாழ்க டாக்டர் மு.வ.

திருவண்ணாமலைத் தமிழ்ச்சங்கம்
வாழ்நாள் உறுப்பினர்கள்

1. புலவர் த. அருள்தாசனார்
அருளகம், ந.வ.பி. 104/125
த.நா.வீ.வாரியம், தாமரைநகர்
திருவண்ணாமலை - 606 603

2. புலவர் இரா. அருணாசலம்
871 வானவில் நகர்
வேங்கிகால்
திருவண்ணாமலை - 606 604

3. அருள்வேந்தன் பாவைச்செல்வி
641/4 இடுக்குப்பிள்ளையார் நகர்
இரண்டாவது தெரு,
காஞ்சிசாலை, வேங்கிக்கால்
திருவண்ணாமலை - 606 604

4. செல்வி அல்லி ராணி
70 நாவக்கரை
திருவண்ணாமலை - 606 601

5. திரு.பொன். அன்பழகன்
66/1 அண்ணாநகர் 3ஆம் தெரு
திருவண்ணாமலை - 606 603

6. திரு. அ.க.ஆறுமுகம்
27/22 பேகாபுரத்தெரு
திருவண்ணாமலை - 606 601

7. திரு.அ.கண்ணன்
282/172 எம்.ஐ.ஜி. தாமரைநகர்
எட்டாவது தெரு
திருவண்ணாமலை - 606 601

8. திரு.புலவர் மு.கண்ணன்
12, திருக்கோயிலூர் சாலை
திருவண்ணாமலை - 606 601

9. திரு.இரா.கமலக்கண்ணன்
208, வேட்டவலம் சாலை
திருவண்ணாமலை - 606 601

10. புலவர் அ. கருணாநிதி
தமிழ்ச்சங்கப் புரவலர்
பழங்கோயில் கிராமம்
கலசபாக்கம் வழி
போளூர் வட்டம் - 606 751

11. திரு. சீனி. கார்த்திகேயன்
102எ/259 சேசாத்திரி மடம் தெரு
திருவண்ணாமலை - 606 603

12. குறள்பணிச்செம்மல் ப. குப்பன்
திருக்குறள் தொண்டு மையம்
9ஆ/43 இராசராசன் தெரு
திருவண்ணாமலை - 606 601

13. திரு.நா. குப்புசாமி
1240 தென்றல் நகர்
வேங்கிக்கால்
திருவண்ணாமலை - 606 604

14. முனைவர் சொ. குமார்
883 ஏ, மயூரம் கோகுல் நகர்
வானவில் நகர், வேங்கிக்கால்
திருவண்ணாமலை - 606 604

15. திரு.ந. சந்திரசேகர்
27, வளையல்காரத் தெரு
திருவண்ணாமலை - 606 601

16. திரு. ஜெ. சம்பத்குமார்
27, வடமாத்தாதி தெரு
திருவண்ணாமலை - 606 601

17. திரு. சவுந்தரராசன்
626/26 ஐந்தாவது தெரு
இடுக்குப்பிள்ளையார் நகர்
வேங்கிக்கால்
திருவண்ணாமலை - 606 604

18. திரு.மா.க.சிவக்குமார்
முனியந்தல் கிராமம்
இனாம் காரியந்தல் - 606 604.

19. திரு. அருள் சின்னப்பராசன்
83, சோமவாரக்குளத்தெரு
திருவண்ணாமலை - 606 601

20. திரு. கி. சுப்பிரமணியன்
95, அசலியம்மன் கோயில் தெரு
திருவண்ணாமலை - 606 601

21. பாவலர் சொ. சேகர்
927 டி, தென்றல் நகர்
(பானு அரிசி ஆலை பின்புறம்)
வேங்கிக்கால்
திருவண்ணாமலை - 606 604

22. திரு. ஜே. ஞானசிகாமணி
121, பல்லவன் நகர்
திருவண்ணாமலை - 606 601

23. திரு. வே. தங்கவேல்
619, இடுக்குப்பிள்ளையார் நகர்
மூன்றாவது தெரு
வேங்கிக்கால்
திருவண்ணாமலை - 606 604

24. திரு. சி. தண்டபாணி
635, இடுக்குப்பிள்ளையார் நகர்
4 தெரு, வேங்கிக்கால்
திருவண்ணாமலை - 606 604

25. திரு. புலவர் ஜோ.தெய்வநீதி
நிறைமதி நிலையம்
நேதாசி நகர், வேங்கிக்கால்
திருவண்ணாமலை - 606 604

26. திரு. இரா. தேவன்பு ஆசிரியர்
மாதாகோயில் தெரு
நாயுடுமங்கலம் - 606 751

27. திரு. புலவர். ஆ. பழனி
அரவிந்த் டிரேடர்ஸ்
77/79 அசலியம்மன் கோயில் தெரு
திருவண்ணாமலை - 606 601

28. பாவைச்செல்வி அருள்வேந்தன்
641/4 இடுக்குப்பிள்ளையார் நகர்
இரண்டாவது தெரு
காஞ்சி சாலை, வேங்கிக்கால்
திருவண்ணாமலை - 606 604

29. திரு. கா. பிச்சாண்டி
நல்லவன்பாளையம் அஞ்சல்
திருவண்ணாமலை - 606 603

30. திரு. ம. பிரபாகரன்
432, அன்பகம், பெரியார் சாலை
மங்கலம் - 606 752.

31. திரு. மு. மண்ணுலிங்கம்
கணேசு பன்னாட்டு உணவகம்
111எ, பெரிய தெரு
திருவண்ணாமலை - 606 601

32. திரு. சுப்பராய மணி
அன்பகம், 163/32 எம்.ஜ.ஜி
த.நா.வீ.வாரியம், தாமரை நகர்
திருவண்ணாமலை - 606 603

33. திரு. டாக்டர் வே. முத்துக்குமரன்
தமிழ்ச்சங்கப் புரவலர்
செல்லநெறித் தெரு
திருவண்ணாமலை - 606 602

34. திரு.சொ.செ. முருகன் ஆசிரியர்
22பி/1எ2 விவேகானந்தர் தெரு
தமிழ்மின்நகர்
திருவண்ணாமலை - 606 601

35. தேசிய நல்லாசிரியர் இரா. மூர்த்தி
112/59-1 வடமாத்தாதி தெரு
திருவண்ணாமலை - 606 601

36. திரு. பாபு.கு. இராதாகிருட்டினன்
215/1 பெருமாள் நகர்
திருவண்ணாமலை - 606 602

37. திரு. நா. இராசேசுகுமார்
புதுமை மாதா நகர்
சோமாசிப்பாடி கிராமம்
திருவண்ணாமலை - 606 611.

38. திரு. அ. வாசுதேவன்
187, பாரதிதாசன் தெரு
திருக்கோயிலூர் சாலை
திருவண்ணாமலை - 606 601

39. திரு. ச. விசயகுமார்
4/84ஏ, செங்குந்தர் வீதி
கலசபாக்கம் - 606 751

40. முனைவர் ம.விபீடணபாகவதர்
அல்அமீன் மேல்நிலைப்பள்ளி
சோமாசிப்பாடி -606 611

41. திரு. இரா. வினோத் பாபு
பொற்குணம் கிராமம்
நாயுடு மங்கலம் வழி - 606 802.

திருவண்ணாமலைத் தமிழச் சங்கப் பதிவுகள்



அண்ணல்தங்கோ
அறக்கட்டளை விழா



தொல்காப்பியர் விழா



வேர்கள்



அறிஞர் அண்ணா
நூற்றாண்டு விழா

Semmoodhai Pathipagam

செம்மூதாய்ப் பதிப்பகம்
என் 17, தாகூர் தெரு
எம்.எம்.டி.ஏ நகர், சிட்லபாக்கம்
சென்னை - 600 064.
செல் : 9444200369/9444327963
E-mail : avvaisivam@yahoo.in

ISBN : 978-93-81006-20-7

9 789381 006207

Rs. 400/=